கி.பி. 988...

சோழப் பெருவேந்தராக முதலாம் இராஜராஜ சோழர் முடிசூடி மூன்றாண்டுகளே முடிவடைந்துள்ள நிலை. அதற்குள் சில அரசியல் சக்திகள் அணிதிரண்டு அவரை எதிர்க்க ஆயத்தமாகி வருகின்றன.

அந்தச் சக்திகளின் ஆணிவேர்.. காந்தளூர்ச்சாலை எனும் கல்வி நிறுவனம். சாத்திரங்கள் நுண்கலைகள் தவிரத் தற்காப்புப் பயிற்சி முறைகளையும் பயிற்றுவித்த பண்டைய பல்கலைக்கழகம்.

சோழநாட்டு வேந்தருக்கும் சேரநாட்டில் எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ள காந்தளூருக்கும் என்ன தொடர்பு? சாலையின் ஆச்சாரியாருக்கு இராஜராஜர் மேல் அப்படியென்ன பகை? இந்த இருவரின் விரோதத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் அரசியல் சக்திகள் யார் யார்?

எண்ணற்ற கேள்விகளை எழுப்பும் சரித்திரக் களத்தின் வழி நம்மைக் கைப்பிடித்து ஒரு வசீகர உலகிற்குள் அழைத்துச் செல்கிறார் கதாசிரியர். சோழர்கள், பாண்டியர்கள், வேளிர், சேரமான்கள், கேரளத்து நாடுவாழிகள் என்று அந்நாளைய அரசியல் சக்திகள் அனைவரும் முட்டி மோதும் இந்த விறுவிறுப்பான புதினத்தில் இதுவரை கண்டிராத வகையில் சேரதேசத்தின் பண்டைய களரிக் கலையும் பண்பாட்டுக் கூறுகளும் பாங்குற வெளிப்படுகின்றன.

பல்வேறு சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்கள் இப்படைப்பை வேறொரு தளத்தில் நிறுத்துகின்றன. இளமை துள்ளும் நடையில் கற்பனைச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ள இப்புதினம் தமிழுலகம் தவறவிட்டுவிட முடியாத தரமான ஆக்கம்.



கோகுல் சேஷாத்ரி [http://www.gokulseshadri.in]

பொறியியல் மற்றும் மேலாண்மையில் பட்டம் பெற்றுக் கணினி மென்பொருள் துறையில் பணியாற்றி வரும் இந்த இளைஞர், வரலாற்றில் ஆர்வம் கொண்டு முதுகலை மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பை முடித்துள்ளவர். இரண்டு வரலாற்றுப் புதினங்கள் (இராஜகேசரி, பைசாசம்), ஒரு பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு (மதுரகவி), எண்ணற்ற கட்டுரைகள் என்று பரந்து விரியும் இவரது படைப்புலகம் பரவலானதோர் வாசிப்புத் தளத்தை உருவாக்கித் தந்துள்ளது.


சேர் கோட்டை

பாகம்-2

கோகுல் சேஷாத்ரி

சேரர் கோட்டை

பாகம்-2



கோகுல் சேஷாத்ரி

சேரர் கோட்டை

இரண்டாம் பாகம்

கோகுல் சேஷாத்ரி

கமலம் புக்ஸ்
2108–3, ஆற்றங்கரைச் சாலை, கோடையன் தோட்டம்
உள்ளூர், கும்பகோணம், தமிழ்நாடு – 612 001. இந்தியா.
Phone: 9443324665 / Email : kamalambooks@yahoo.com

Title : Serar Kottai (Volume-2)

Subject : Historic Fiction

Author : Gokul Seshadri

Publisher : Kamalam Books
2108-3, Atrangarai Salai
Kodayan Thottam, Ullur,
Kumbakonam,
TamilNadu – 612001.
India.

First Edition : June 2012

Copyright : Gokul Seshadri

Language : Tamil

Size of the book : Demmy

Paper : 18.6Kg Natural Shade Paper

Font size : 11 Pt.

No of Pages : 608 (Excluding Cover)

Price : Rs. 400/=

Printers : Udayam Offset Printers, Sivakasi.

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without permission in writing from the publishers.

Correspondence : kamalambooks@yahoo.com

காணிக்கை

அன்புக்குரிய பாட்டனார்– பாட்டியார்

திரு. பி.கே. ரெங்கய்யங்கார்

திருமதி. கமலம்மாள் ரெங்கய்யங்கார்

இருவரின் நினைவாக..

கதாசிரியரின் படைப்புலகம்

வரலாற்றுப் புதினங்கள்

- இராஜகேசரி *(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை)* [2008]
- பைசாசம் *(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை)* [2009]
- சேரர் கோட்டை *(கமலம் புக்ஸ், கும்பகோணம்)* [2012]

சிறுகதைத் தொகுதிகள்

- மதுரகவி *(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை)* [2010]

ஆய்வுக் கட்டுரைகள் – பொழிவுகள்

- தொல்லோவியங்கள் மீட்டுருவாக்கம் சிக்கல்களும் தீர்வுகளும் *(முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று மையப் பொழிவு, தஞ்சை)* [2005]
- New Perspectives on Nagappattinam [Nagappattinam to Suvarnadwipa: Reflections on Chola Navel Expetitioins to Southeast Asia, Institute of Southeast Asian Studies, Singapore] [2007]
- முதலாம் பராந்தகர் காலம் காட்டும் சோழர் சிற்பக்கலைக் கூறுகள் *(செம்மொழி மாநாடு, கோவை)* [2010]
- Narrative Ramayana Panels from Early Chola Temples : A Comparitive Study (under publication)
- Narrative Ramayana Panels at Tirumangalam Samavediswara Temple: A Study (Arpitam: Recent Studies in South Asian Archaeology, British Archaeological Review) [2012]

தொழில்நுட்ப நூல்கள்

- Multimedia Magic [BPB Publications, New Delhi] [2003]

விருதுகள்

- திருப்பூர் தமிழ்ச்சங்க இலக்கிய விருது-2010 [2012]

தொடர்புக்கு

Website: http://www.gokulseshadri.in
Email: gokul.seshadri@yahoo.com

பொருளடக்கம்


1. பிரதியுபகாரம் 3
2. ஆய்வேளிர் முத்திரை 11
3. பொக்கிஷம் கிடைத்தது 16
4. படைகள் குவிந்தன 21
5. நீராப் பாபம் 28
6. பட்டாபிஷேகம் 36
7. மாமுனிவன் வரம் 43
8. மந்திராலோசனை 52
9. தூதர் திரும்பினார் 61
10. குரு ஸ்துதி 69
11. தம்புராட்டியார் கதை 78
12. நிகும்பசூதனி 85
13. வெற்றிவேல்! வீரவேல்! 93
14. பாண்டியர் சிந்தனை 101
15. கோட்டாற்றுக் கோநகர் 108
16. அரண்மனை விஜயம் 116
17. திருமூல சாக்கியர் 124
18. ஆலவாயன் திருநகர் 137
19. சுந்தரச் சோழப் பெருமருத்துவர் 143
20. பாண்டியர் வியூகம் 150
21. துருப்புச் சீட்டு 158

22. பெருஞ்சாலைப் பிதாமகர் 165
23. அப்யாச கர்மணம் 172
24. அரசியல் சதுரங்கம் 181
25. பயந்தான் பலதேவன் 192
26. ஐந்தறிவும் ஆறறிவும் 200
27. காரியம் முடிந்தது 210
28. பிரம்ம முகூர்த்தம் 217
29. தூது ஓலை 224
30. சோழர் பாசறை 230
31. சேரர் கோட்டை 238
32. வேள் நாட்டு வீரர்கள் 250
33. குருதேவர் வருகை 261
34. சரஸ்வதி பண்டாரம் 276
35. அருவிக்கரை 288
36. கோட்டை முற்றுகை 299
37. வரவேற்பு 315
38. இராஜராஜப் பெருஞ்சாலை 325
39. பழங்கணக்கு 337
40. வாழ்வெலும் களரி 346
41. பிரயோக நிலகம் 357
42. கூர்ம பீடம் 375
43. காலன் வந்தான்! 384
44. பலமா? சுமையா? 394
45. மஹாசாலை ஆசான்கள் 405
46. ஆதியாய் உறைந்த அனந்தம் 416
47. கொடியேற்றம் 429
48. நால்வைகைத் திறன்கள் 436
49. மெய்யே கண்ணாகுக! 449
50. வியானன் விழிப்பு 458
51. மரண எச்சரிக்கை! 467
52. சுழல்வாள் பயட்டு 475
53. பிராணாப்பியாசம் 484
54. நள்ளிரவில் 493
55. வாட்கள் மோதின! 504
56. குருக்ஷேத்திரம் 517
57. காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி 530
58. இரத்தக்களரி 563
59. அன்புப் பரிசு 568
60. பின்கதை 574
பின்னிணைப்பு 1 - மூலபாடம் 585
பின்னிணைப்பு 2 - வரலாற்றுச் சான்றுகள் 588
மேற்கோள் நூல்கள் 599

கதைக்களம்


கர்நாடகம்
மாமல்லை
காஞ்சி
பழையூர்
குடந்தை
தஞ்சை
நாகை
தமிழகம்
மகோதயபுரம்
கேரளம்
ஆலவாய்
தொண்டி
இராமேஸ்வரம்
சுந்தரபாண்டியபுரம்
கொல்லம்
நெல்வேலி
கொற்கை
திருவனந்தபுரம்
விழிஞம்
ஆரைவாய்மொழி
கோட்டாறு
கழிக்குடி
இ ந் து ம ா க ட ல்

காலக்களம்



1. பிரதியுபகாரம்



கழிக்குடி ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் ஓங்கி உயர்ந்து நின்ற மரக் கட்டுமானங்களுக்குத் தெற்கே விரிந்து கிடந்தது ஒரு பெருநிலப் பரப்பு. அந்தப் பரப்பினூடே அடர்த்தியாகச் செடிகளும் கொடிகளும் புல் பூண்டுகளும் கருவேல மரங்களும் ஏராளமாக வளர்ந்து கிடக்க, அவற்றுக்கிடையே ஆங்காங்கே இடிந்த மண் சுவர்களும் செங்கற்களும் கறையான் அரித்த மரச்சட்டங்களும் நீண்ட தேக்குத் தூண்களும் சுட்ட மண் ஓடுகளும் பானை ஓடுகளும் சம்மந்தமில்லாமல் அங்கு மிங்கும் இறைந்து கிடந்தன.

சாலை நன்கு பராமரிக்கப்பட்டதொரு காலத்தில் அந்த இடத்தில்தான் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தங்கிச் சாலைப் படிப்பை மேற்கொண்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். நம்புவதற்குச் சற்றுக் கடினமாகத்தான் உள்ளது. கல்வி கற்பிக்கும் ஆசான்களுக்குத் தனி இருப்பிடம், மாணவர்களான சட்டர்களுள் ஒவ்வொரு கலத்தாருக்கும் தனித்தனி விடுதிகள், சாலையைச் சேர்ந்த மருத்துவர்களும் பிற பணியாளர்களும் தங்கிக் கொள்வதற்கென்று தனித்தனி இருப்பிடங்கள் என்று தொகுதி தொகுதியாகப் பலப்பல கட்டிடங்களை அந்தப் பகுதி உள்ளடக்கியிருந்ததாம். அப்படிச் சீரும் சிறப்புமாக வளர்ந்து செழித்த நிலப்பகுதி இந்த அறுபது எழுபது ஆண்டுகளில் அடையாளமே தெரியாத அளவிற்கு மண் மேடுகளாகவும் கறையான் புற்றுக்களாகவும் அழிந்து கிடப்பதைப் பார்க்கும் எவருக்குமே கண்களில் சொட்டு நீராவது துளிர்த்து விடும்.

இவ்வாறு முற்றிலும் பாழடைந்து கிடந்த அந்நிலப் பரப்பினூடே ஒரு சிறு பகுதி மாத்திரம் களை பிடுங்கப்பட்டு மண் கொத்தப்பட்டு மிகச் சுத்தமாகக் காட்சியளித்தது. அப்பகுதியின் ஒரு ஓரத்தில் நமது நண்பர்களிருவரும் வேடிக்கையான தோற்றத்தில் வித்தியாசமான கைக்கருவிகளுடன் அந்த நண்பகல் நேரத்தில் காட்சியளித்தார்கள்.

நிலப்பரப்பின் கிழக்கே விறைப்பாக நின்றிருந்த மழபாடியாரின் கரங்களில் மிக நீண்ட பிடியுடன் கூடியதொரு மண்வெட்டி திகழ்ந்தது. அவருக்குச் சிறிது தூரத்தில் நின்றிருந்த மணியனாரின் கரங்களிலோ பெரிய கடப்பாரை காணப்பட்டது. இருவருமே உழுகுடியான வர்களைப்போல் இடையாடை மட்டும் தரித்து வெற்று மேனியர்களாய் உடல் முழுவதும் வியர்வை பொங்கக் காட்சியளித்தார்கள். கதிரவன் அவர்களின் உச்சந்தலைக்கு மேல் நெருப்புக் கோளமாய்த் தகதகத்துக் கொண்டிருந்தான். அவன் சுக்கிய அனலானது வஞ்சனையில்லாமல் அவர்களின் தலை வழியே உடலில் இறங்கிக் கொண்டிருந்தது. அச்சூட்டைத் தணிக்கும் வண்ணம் அவ்வப்போது மருந்து வாழ் மலையிலிருந்து புறப்பட்ட மூலிகைக் காற்று அவர்களின் மேனியை மெல்ல வருடிக் கொண்டு வீசிச் சென்றதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

"என்ன, இன்று இந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கலாமா?"

"ம்... துவங்குங்கள்!"

மணியனார் கடப்பாறையை ஓங்கி நிலத்தில் பாய்ச்சினார். மண் லேசாகப் பிளந்து கொடுக்க, மீண்டும் அதே இடத்தில் இன்னொரு பாய்ச்சல். இந்த முறை பிளவு அதிகரித்தது. மழபாடியார் அப்படிப் பிளக்கப்பட்ட இடத்தை மண்வெட்டியால் தோண்டி ஈர மண்ணை மேற்பரப்பிற்குக் கொத்திக்கொண்டு வந்து பதப்படுத்தினார். சகட்டு மேனிக்கு வளர்ந்து கிடந்த செடி கொடிகளை இருவரும் வேருடன் பிடுங்கி அப்புறப்படுத்தினார்கள். ஆழமாக வேரூன்றி வளர்ந்திருந்த முள் மரங்களை அரிவாட்களால் வெட்டி வீழ்த்தினார்கள். மணியனார் அவற்றின் வேர்களில் தன்னுடைய கடப்பாரையைப் பாய்ச்சி மீண்டும் அவை முளைத்தெழா வண்ணம் முற்றிலுமாக அழித்தொழித்தார். ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று நாழிகை நேரம் இடைவிடாமல் பாடுபட்டபின் கணிசமான நிலப்பகுதிகளை பிடுங்கப்பட்டுச் சுத்தமாகக் காட்சியளித்தது. இருவரும் ஓய்வாகக் களரியின் குடிசை நிழலில் ஒதுங்கி நீர் பருகினார்கள்.

"மழபாடியாரே! எனக்கு நினைவு தெரிந்த வரையில் இத்தனை உற்சாகமாக நான் ஒரு போதும் இருந்ததில்லை. சலியாமல் உழைத்தாலும் சிறு அலுப்போ சலிப்போகூட

உடலில் தோன்றுவதில்லை. பொங்கிப் பெருகும் வியர்வையைத் துடைத்துக் கொள்வதற்காகத்தான் அவ்வப்போது நிழலில் ஒதுங்க வேண்டியிருக்கிறது. ஆச்சரியம்தான்!"

"அது மட்டுமா? முன்பெல்லாம் நீண்ட நேரம் நிலத்தில் பாடுபட்டால் எனக்கு இடுப்பு எங்காவது ஒரு ஓரத்தில் பிடித்துக்கொண்டு விடும். வலி பிராணன் போய்விடும். இப்போதோ காற்றில் பறப்பதைப் போல் உடல் அத்தனை இளக்கமானதாக இருக்கிறது. எல்லாம் தம்புராட்டியாரின் மெய் உழிச்சல் கைவண்ணத்தின் பலன் போலும்."

"கால் வண்ணம் என்று சொல்லுங்கள்! ஒவ்வொரு நாளும் அந்தத் தைலத்தை நமது உடல் முழுவதும் தடவி அவர் மிதிக்கும் வாகு இருக்கிறதே.. அடடா! சுகமோ சுகம். முதல் நாள் அவருடைய உழிச்சல் வைத்தியம் என்னைப் படாதபாடு படுத்திவிட்டது. அத்தனை எலும்புகளும் நொறுங்கிப் போய்விடப் போகின்றன என்று பயந்தே போனேன். ஆனால் இந்த இரண்டு வாரங்களில் உடல் அந்த வைத்தியமுறைக்கு நன்கு பழகிவிட்டது. மூட்டுக்கள் இயல்பாக வளைகின்றன. உடலே பெரிதும் இளக்கமாகி விட்டதுபோல் தோன்றுகிறது. நினைத்த திசையில் நினைத்த விதத்தில் சிரமமில்லாமல் வளைய முடிகிறது. மருந்துவாழ் மலையின் மூலிகைகளைக்கொண்டு உருவாக்கப்பட்ட அந்தத் தைலம் நிச்சயம் மந்திர சக்தி வாய்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். அதில் சந்தேகமேயில்லை. ஒருவேளை அனுமன் கொண்டுவந்த சஞ்சீவினி பர்வதத்தின் ஒரு துகள் இங்கு விழுந்து விட்டதாகச் சொல்கிறார்களே.. அது கூட உண்மைதானோ என்னவோ? இரண்டு வாரங்களில் எத்தனையெத்தனை அனுபவங்கள்?"

"இங்கு வந்து இரண்டு வாரங்கள் மட்டும்தானா ஆகின்றன? இரண்டு ஆண்டுகள்... இல்லையில்லை, இரண்டு யுகங்களே கழிந்துவிட்டன என்றல்லவா நினைத்தேன்?"

"அழகாகச் சொன்னீர்கள். இந்த குருகுலத்திற்குப் பல நாட்களுக்கு முன்னரே வந்திருக்கக்கூடாதா என்று தோன்றுகிறது. வாழ்வின் எத்தனை நாட்களை வீணே கழித்து விட்டோம்?"

"ஒரு சில அபூர்வமான அனுபவங்களெல்லாம் வாழ்வில் நடக்க வேண்டிய தருணத்தில்தான் நடைபெறும்.

இப்போதாவது இங்கு வந்து சேர்ந்தோமே, அதை நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொள்ளுங்கள்."

"நம்மை இத்தனை தூரம் வேலை மெனக்கெட்டு நாகப்பட்டினத்திலிருந்து விரட்டிக் கொண்டு வந்து சேர்த்த அந்த மகானுபாவர் ஓரிரு நாட்கள்கூடத் தங்காமல் மகோதயபுரத்திற்குக் கிளம்பிவிட்டாரே? அதனை நினைத்தால்தான் சற்று வருத்தமாக இருக்கிறது. நிதானமாக நன்றி தெரிவிக்கக்கூட அவகாசமில்லை."

"காந்தளூரைப் பற்றிய அருள்மொழிவர்மரின் ஓலையைச் சேரமான் பெருமாளான பாஸ்கரர் இரவிவர்மன் திருவடியிடம் உடனடியாகச் சேர்ப்பித்தாக வேண்டிய அவசரம் அவருக்கு. அது மட்டுமல்ல. ஓலையில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைத் தவிர நாடுவாழிகளைப் பற்றிய வேறு சில விவகாரங்களை நேரில் தெரிவிக்கச் சொல்லியும் உத்தரவாகியிருக்கிறதாம். மலைநாட்டின் இராஜவம்சத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பிஷ் தற்போது அருள்மொழிவர்மரின் சோழ இராஜாங்கத் தூதராகத்தான் திருவடியைச் சந்திக்கிறாராம். எப்படியிருக்கிறது கதை?"

"ஒருவகையில் வாழ்வின் சுழற்சி முழுமையடைந்து விட்டது என்று வைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஒரு காலத்தில் மாளிக்கைப்புரத்து வீட்டின் ஒவ்வொரு அங்குலமும் சேரமான் வம்சத்தாருக்குத் தோள் கொடுத்துப் பக்கபலமாக நின்றன. சுந்தரியம்மை விவகாரத்தால் இருவருக்கும் விரிசல் உண்டாயிற்று. காந்தளூரில் சோழ வீரர்கள் தோற்றதும் அந்த விரிசல் நிரந்தர ஊனமாக நிலைபெற்று விடவே அந்த வம்சத்தார் தங்களின் பண்டைய நில புலன்களையும் மாட மாளிகைகளையும் ஆள் அம்பு சேனைகளையும்கூடப் பறிகொடுத்து மிகவும் ஷீணநிலையை அடைய நேர்ந்து விட்டது.

ஆனால் காற்று எப்போதும் ஒரே திசையில் வீசிக் கொண்டிருப்பதில்லையே? காலப்போக்கில் அது தனது போக்கை மாற்றிக் கொள்ளத்தானே செய்யும்? அதைப் போலவே மாளிகைப்புரத்து வீட்டாரும் தங்களின் மலைநாட்டுப் பின் புலத்தைப் புறத்தே ஒதுக்கி வைத்து விட்டுப் பகிரங்கமாகத் தங்களைச் சோழர்களின் பக்கம் நிலை நிறுத்திக்கொண்டு விட்டனர். அந்த உறவின்

வெளிப்பாடாகத்தான் இன்று பேரரசர் அந்த வம்சத்தைச் சேர்ந்தவரைப் பெருமாளுக்கே தூதனுப்புகிறார்!"

"மகோதகையில் அமர்ந்து கோலோச்சும் சேரமான் பெருமாள் மாளிகைப்புரத்து வம்சத்தாரையெல்லாம் ஒரு பொருட்டாக மதித்துப் பல காலமாகின்றது என்றுதான் தம்புராட்டியார் குறிப்பிட்டார். பணபலமோ, படைபலமோ அற்ற இந்தப் பழைய நாடுவாழிக் குடும்பத்தாரிடம் அவருக்கென்ன அக்கறை?"

"உண்மைதான். சரி, நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்து விட்டோமே...மீண்டும் பணிக்குத் திரும்பலாமா?"

"தாராளமாக. நான்கு நாட்களில் கணிசமான நிலப்பகுதியைப் பண்படுத்திவிட்டோம். கூடிய விரைவில் விடுதிக் கட்டிடம் எழுப்பும் பணியைத் துவக்கிவிட வேண்டியதுதான்."

"நாம் நிலத்தில் இறங்கிப் பாடுபடுவது சாலையின் மற்ற மாணவர்களின் மனதை மெல்ல மாற்றத் துவங்கியிருக்கிறது. கழிக்குடியிலும் இந்தச் செய்தி இந்நேரம் பரவியிருக்கும். விரைவில் நமது பணிக்குத் தோள்கொடுக்கச் சில ஆட்களாவது முன்வருவார்களென்று நம்புவோம். வாருங்கள்!"

சில நிமிடங்களில் மீண்டும் களை பிடுங்கி நிலத்தைப் பண்படுத்தும் பணி உற்சாகமாகத் தொடர்ந்தது. இரண்டு வாரங்களுக்குமுன் ஏனடா இங்கு வந்து சேர்ந்தோம் என்று மலைத்த மணியனாரா இத்தனை உற்சாகமாகப் பேசுகிறார்? என்று வாசகர்கள் வியப்பது நமக்குப் புரிகிறது. என்ன செய்வது? அந்தப் பண்டைய கலையின் மேன்மை அத்தகையதாக இருக்கிறதே! முதல் ஓரிரண்டு நாட்கள் இடைவிடாது மேற்கொண்ட பயிற்சிகள் அவர்களை வாட்டி வதைத்தாலும் அவற்றின் நோக்கங்கள் மெல்ல மெல்லப் புரிந்து போக உடலும் மனமும் சிறிது சிறிதாக ஒத்துழைப்பு நல்க ஆரம்பித்தன.

பயிற்சிகள் துவங்கிய முதல் வாரத்திலேயே இருவரும் பலவிதமான அடவுகளையும் வடிவுகளையும் ஆர்வத்துடன் பயின்றார்கள். ஒவ்வொரு வடிவிற்குப் பின்னாலும் அமைந்துள்ள தத்துவத்தைத் தம்புராட்டியார் அவர்களிடம் தெளிவாகப் புரியும்படி விளக்கினார்.

"புரவியைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? சக்தி முழுவதையும் ஒருமையில் தேக்கி ஆவேசத்துடன் முன் பக்கம் பாய்வதற்குத் தயாராக நிற்கும். அவ்வாறு முன்புறம் பாய்ந்து தாக்குவதற்கு ஏதுவாக நிற்கும் நிலைக்குத்தான் அஸ்வ வடிவு அல்லது குதிரை வடிவு என்று பெயர்".

இதே முறையில் எதிரியை எந்தத் திசையிலும் திரும்பித்தாக்கும் சர்ப்ப (பாம்பு) வடிவு, ஒற்றைக்காலில் கரங்களை விரித்துக்கொண்டு நிற்கும் மயூர (மயில்) வடிவு மற்றும் கஜ (யானை) வடிவு, ஸிம்ஹ (சிங்கம்) வடிவு, குக்கூக (கோழி) வடிவு, மத்ஸ்ய (மீன்) வடிவு என்று பலவித வடிவுகளிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

உச்சக்கட்டமாக, ஒரு வடிவிலிருந்து இன்னொரு வடிவுக்கு அசுரவேகத்தில் மாறும் கைக்குத்திப்பயட்டு எனும் சிரமமான பயிற்சியும் இரண்டு நாட்களுக்கு முன்னர் துவங்கி விட்டிருந்தன. இதனால் எதிராளியின் தாக்குதலுக்கு ஏற்ப விரைவில் வடிவை மாற்றிக்கொள்ளும் சாதுர்யம் ஏற்படும். உதாரணமாக, அசுவ வடிவில் நின்று முன்சென்று தாக்குவதற்குத் தயாராக நிற்கும் ஒருவர் சட்டென்று வலப்புறத்தில் ஆபத்து தோன்றினால் கண நேரத்தில் தனது வடிவை சர்ப்பத்தினுடையதாக மாற்றி அந்த வலப்புறத் தாக்குதலை எதிர்கொள்ளலாம். இந்த அடவுகளையும் வடிவுகளையும் தவிர குறிப்பிட்ட சில அங்கைத் (வெறும் கை) தாக்குதல்களைப் பதினெட்டு ஈடுகளாகச் சேர்க்கும் சுமட்டடி எனப்படும் பயிற்சியும் அடுத்ததாகக் கற்றுக் கொடுக்கப்படுமாம்.

அவர்களுடைய அன்றாட அட்டவணை ஏறக்குறைய இவ்வாறு அமைந்திருந்தது: விடியற்காலையில் எழுந்தவுடன் குரு வணக்கம். பின் உடல் முழுவதும் தைலத்தைத் தடவிக்கொண்டு இரண்டு நாழிகைகளுக்கும் குறையாமல் உழிச்சில் வைத்தியம். பின் காலை உணவு மற்றும் முதல் கட்டப் பயிற்சிகள், சிறிது நேர ஓய்வுக்குப்பின் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் என்று நண்பகல் வரை பல வேலைகள். அதற்குப் பின் மாலை நேரம் வரை கணிசமான ஓய்வு. அந்தி வேளை நெருங்கியதும் மீண்டும் சந்தியாகாலப் பயிற்சிகள். வழிபாடுகள். இரவில் பண்டைய நூல்களையும் கிரந்தங்களையும் தம்புராட்டியாருடன் சேர்ந்து நெய் விளக்கின் ஒளியில் படித்தல்.



அரியதொரு வடிவு நிலையில் நிற்கும் வாள்வீரர், தாங்குதளக் குறுஞ்சிற்பம், புள்ளமங்கை திருவாலந்துறையார் திருக்கோயில், முற்சோழர் காலம்.

இவ்வாறாக ஒவ்வொரு நாளும் ஓய்வு ஒழிவின்றிப் பல பணிகளோடு கழிந்தாலும் இருவருக்குமே சிறிதளவும் மனச்சோர்வு தோன்றவில்லை. அதற்கு மாறாக 'உடலையும்

மனதையும் புனிதமாக்கும் உன்னதமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்' எனும் எண்ணம் ஆழமாக மனதில் வேரூன்றி இடைவிடாத உற்சாகத்தையளித்தது. நாள் முழுவதும் வேலை செய்தாலும் உடல் சோர்வடையாமல் காணப்படுவதற்குக் காலை வேளையில் மேற்கொள்ளும் பூரக - கும்பக - ரேசகப் பிராணாயாமப் பயிற்சிகளே முக்கியக் காரணம் என்பதாகத் தம்புராட்டியார் தெரிவித்தார். இத்தனை வேலைகள் போதாதென்று மதிய நேரத்தில் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தைக்கூட சாலையின் கட்டிடங்களையும் நிலப்பகுதிகளையும் மேம்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இருவரும் சில நாட்களுக்கு முன்னர் முடிவு செய்து அதனை உடனடியாகச் செயல்படுத்தவும் துணிந்துவிட்டார்கள். அந்தப் பண்டைய சாலைக்கும் தம்புராட்டியாருக்கும் அவர்களாலான சிறு கைம்மாறு. பிரதியுபகாரம். அவ்வளவே.

ஓங்கிக் கடப்பாறையால் இரண்டு முறை குத்தியும் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் மண் பிளவுறாதது கண்டு மணியனார் சிறிது வியப்பெய்தினார். "என்ன? சிறிது கூடப் பிளக்க மாட்டேன் என்கிறதே? மண் அத்தனை தூரமா கெட்டிப்பட்டிருக்கிறது?"

"ம்ஹூம். இல்லை. இந்த இடத்தில் பெரியதொரு பாறை இருக்கிறது போலும். கொஞ்சம் பொறுங்கள்."

மழபாடியார் மண்வெட்டியால் அந்த இடத்தைச் சுற்றிலும் மெல்ல வெட்டி அந்தப் பாறையில் எல்லைகளைக் கண்டறிந்தார். "பெரிய பாறைதான். இந்த இடத்தில் எப்படிச் சம்மந்தமில்லாமல் இந்த ஒற்றைப் பாறை மட்டும் முளைத்து நிற்கிறது? அந்தக் காலத்தில் கட்டிடங்களை எழுப்புவதற்கு முன் நன்றாக உழுதிருப்பார்களே?"

"எனக்கும் சிறிது வியப்பாகத்தான் இருக்கிறது. மருந்து வாழ் மலை கூடச் சாலையின் வடபகுதியிலல்லவா அமைந்திருக்கிறது? இந்தத் தெற்கு முகத்தில் பாறைக்கு வேலையேயில்லையே? அப்பப்பா.. எத்தனை பெரிய பாறை?"

"இந்தப் பாறையை அகற்றித்தான் ஆகவேண்டும். இல்லையா?"

"முயன்று பார்ப்போம். நகர்த்தவே முடியவில்லை யென்றால் நாளை வேறு சில ஆட்களைக் கொண்டு வந்து புரட்டிப் போட்டு விடுவோம்..."

கடப்பாரையையே நெம்புகோலாகப் பயன்படுத்தி இருவரும் பாறையைப் புரட்ட ஒருசேர முயற்சித்தார்கள். நீண்ட முயற்சிக்குப் பின் பாறை சிறிதளவு அசைந்து கொடுத்தது. சிறிய மண்குழி வெட்டி அதில் பாதங்களைப் புதைத்துக் கொண்டு இருவரும் சேர்ந்து அழுத்தித் தள்ளியதில் மெல்ல மெல்ல அப்பெரும்பாறை விலகலாயிற்று. பாறை விலக விலக, கீழே தென்பட்ட காட்சியோ அவர்களிருவரையும் உச்சக்கட்ட அதிர்ச்சிக்குக் கொண்டு சென்றது!

2. ஆய்வேளிர் முத்திரை



நண்பர்களிருவரும் பெருமுயற்சியால் விலக்கிய பெரும் பாறையின் கீழ் சதுரமாக வெட்டப்பட்டிருந்த குழியொன்று தெரிந்தது. பாறை விலகிய அடுத்த கணமே அந்தக் குழியிலிருந்து ஆயிரக்கணக்கான... இல்லையில்லை, இலட்சக்கணக்கான கறையான்களும் கட்டெறும்புகளும் பிற உயிரினங்களும் நாலா திசைகளிலும் ஆவேசத்துடன் படையெடுத்தன. ஆண்டாண்டு காலமாக நிம்மதியாகத் தன் உற்றார் உறவினர்களுடன் வசித்து வந்த பரம்பரை நிலம் பறி போகிறதென்றால் யாருக்குத்தான் ஆவேசம் வராது?

கோபத்துடன் அவை பாய்ந்து வருவதைக் கண்டு இருவரும் வேறு வழியின்றிச் சிறிது தூரம் விலகி நின்று கொண்டார்கள். களரியிலிருந்த தென்னந் துடப்பங்களை மழபாடியார் கொண்டு வர, இருவரும் நீண்ட நேரம் அவற்றுடன் போராடி அந்தப் பகுதியை ஓரளவிற்குச் சுத்தம் செய்த பிறகுதான் குழியில் இருக்கும் பொருள் இன்னது என்பதே தெளிவானது.

அந்தச் சதுரக் குழியில் புதைக்கப்பட்டிருந்தது அளவில் சற்றே பெரிதான ஒரு மரப்பெட்டி. நல்ல ஜாதி மரத்தினால் செய்யப்பட்டு நாற்புறங்களிலும் மருந்துத் தைலம் தோய்ந்த அரக்குத் துணியால் சுற்றப்பட்டு சுற்றிலும் மணலால்

மூடப்பட்டு மிக மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த போதிலும் காலப்போக்கில் கறையான்கள் அந்தப் பாதுகாப்பு வளையத்தையெல்லாம் உடைத்தெறிந்து பெட்டியை பதம் பார்த்திருந்தன. நிலத்தின் அளவுக் கதிகமான ஈரப்பதமும் கணிசமான சேதாரத்தை விளைவித்து விட்டிருந்தது.

"நண்பரே! என்ன இது? உள்ளே புதையல் ஏதாவது பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்ன?"

மழபாடியார் சிரித்தார். "பண்டைய மலைநாட்டுப் பொற்காசுகளுடனும் நகைகளுடனும் ஏதாவது புதையல் கிடைத்தால் நன்றாகத்தான் இருக்கும். விடுதிக் கட்டிடங்களைச் சிரமமேயில்லாமல் எழுப்பிவிடலாம். நீங்களும் நானும் அன்றாடம் படபடக்கும் வெய்யிலில் பாடுபட வேண்டியதேயில்லை. ஆனால் இது பெருஞ்சாலை வளாகமாயிற்றே... இங்கு வாழ்ந்து மறைந்த சட்டர்களிடம் பொருட்செல்வத்தை விடக் கல்விச் செல்வமும் செருக்கும் தான் மிகுதியாக இருந்திருக்கும். பொறுங்கள்! பார்ப்போம்."

எங்களுடைய சுற்றத்தார் விலகிப்போய் விட்டாலும் நாங்கள் விலக மாட்டோம்! எனும் பிடிவாதத்துடன் அந்தப் பெட்டியின் மேல் இன்னமும்கூட ஆயிரக்கணக்கான கறையான்கள் அலைபாய்ந்து கொண்டிருந்தன. மழபாடியார் துடைப்பத்தால் வருட, அந்தப் பெட்டியின் மேற்பகுதி உளுத்துப் போய் பொலபொலவென்று கொட்டியது.

"அடடா.. கறையான்களைத் தவிர மண்ணின் ஈரப் பதத்தாலும் பெட்டி பலமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் போலிருக்கிறதே?"

"ஆம். நாற்புறங்களில் மணலால் மூடியும் கூட இந்த நிலை ஏற்பட்டிருப்பது துரதிருஷ்டம்தான். பெட்டியை உடைக்காமல் வெளியே எடுக்க வேண்டுமானால் சுற்றிலும் குழியை வெட்டி, அடிப்புறத்தில் முட்டுக் கொடுத்துத்தான் எடுக்க வேண்டும். மிகப் பொறுமையாகச் செய்ய வேண்டிய காரியம் இது."

அடுத்த இரண்டு நாழிகை நேரம் இந்த முயற்சியில் கழிந்தது. இந்தச் சிறிய இடைவெளிக்குள் சூரிய பகவானின் நேரடியான கருணையைத் தாளமாட்டாமல் பெட்டியை மொய்த்துக் கொண்டிந்த பெரும்பாலான உயிரினங்கள் பாதுகாப்பான இடம் தேடி பல்வேறு திசைகளிலும் ஓடி

மறைந்தன. ஒரு வழியாகப் பெட்டியின் சிதைந்து போன மேற்பகுதியை பித்தளைப் பூண்களின் உதவியுடன் இருவரும் நெம்பித் திறந்தார்கள்.

மணியனாரின் நம்பிக்கை வீண்போகவில்லை. உள்ளே தெரிந்தது ஒரு புதையல்தான். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த புதையலல்ல. வேறொரு வித்தியாசமான செல்வத்துடன் கூடியதொரு புதையல்!

* * * * * * * *

தஞ்சையின் திருபுவனமாதேவிப் பேரங்காடிக்குப் பின்புறம் அமைந்துள்ள சந்து வீடுகளிலொன்றில் புகுந்து மறைந்த அந்த ஜடாமகுட பைராகியாரை நாம் சந்தித்துச் சில காலமாகின்றது. அவரை விடாமல் பின்தொடர வேண்டிய நமது ஒற்றன் ஐங்கரனோ துரதிருஷ்டவசமாகத் தலையில் பலமான தாக்குதலுக்குட்பட்டு சுந்தரச் சோழர் ஆதூலர் சாலையின் பிரதான வைத்தியரின் கருணையினால் மெல்ல மெல்லத் தேறி வருகிறான். அவன் உடல் நிலை தேறி மீண்டும் கதைக்குத் திரும்பும்வரை பைராகியாரை நாம் அந்தரத்தில் விட்டுவிட முடியுமா என்ன? இனி நடைபெறப் போகும் சம்பவங்களில் மிக முக்கியமான அங்கம் வகிக்கப் போகிறவராயிற்றே அவர்? ஆகையால் மேற்கொண்டு ஐங்கரனை நம்பாமல் நாமே அவரை இரகசியமாகப் பின் தொடர்வோமாக.

தானைத்தலைவரை சந்தித்த கையோடு தஞ்சையிலிருந்து புறப்பட்டு விட்ட பைராகியார், புறம்படியில் நல்லதொரு புரவியைச் சம்பாதித்துக்கொண்டு தெற்கு நோக்கிப் பயணப் படலானார். தேவையான இடங்களில் தேவையான நேரங்களில் மட்டும் புரவியை நிறுத்தி நீரோ, உணவோ காட்டிக்கொண்டு மற்ற நேரங்களில் வாயுவேக மனோவேகமாகப் பயணப்பட்டுக் கொடும்பாளூர் மற்றும் பூங்குன்ற நாடுகளின் வழியே பாண்டி மண்டலத்தின் தலைநகரான மதுராபுரியை மறுநாள் மதியம் அடைந்தார். ஓரிரவு மட்டும் அங்கே ஒரு விடுதியில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டவர், மீண்டும் தெற்கே மேற்குத்தொடர்ச்சி மலைகளையொட்டிய பகுதிகளின் வழியாகப் பயணத்தைத் தொடரலானார்.

அவர் பயணப்பட்ட திசையை வைத்துப் பார்க்கும்போது முதலில் பாண்டிப் படைகள்

தண்டீன்றியிருக்கும் சுந்தரபாண்டியபுரத்தை நோக்கித்தான் செல்கிறாரோ என்று நமக்கு ஐயமேற்பட்டது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவர் இன்னும் தெற்கே ஆரைவாய்மொழிக் கணவாய்ப் பகுதிகளை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிவிட்டது.

வழியில் எவரிடமும் நிதானமாக நின்று பேசாமல் எல்லோரையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதிலிருந்து அவரது மனம் ஒரு நிலையில் இல்லை என்பதைப் புரிந்து கொள்கிறோம். ஒரு வேளை தானைத்தலைவர் ஒப்படைத்துள்ள பொக்கிஷத்தினால்தான் அவர் இத்தனை பரபரப்புடன் இயங்குகிறாரா? அல்லது மாறிக் கொண்டிருக்கும் அரசியல் சூழலில் தாம் நீண்டகாலமாகத் திட்டமிட்டு வந்துள்ள காரியங்கள் நல்லபடிதாக நிறைவேறுமா? இல்லையா? என்கிற மனக்கிலேசத்தினால் அவரது எண்ணங்கள் அடிக்கடி அலைபாய்ந்து கொண்டிருக்கின்றனவா? என்பதை அறிய முடியவில்லை.

தஞ்சையிலிருந்து கிளம்பிய ஏழாம் நாள் மாலை அவருக்கு ஆரைவாய்மொழிக் கோட்டையின் வெளிமதிற் சுவர்கள் தூரத்தில் புலனாகத் துவங்கின. இடைவிடாமல் பயணப்பட்டதினால் மிகவும் சோர்ந்திருந்த அவரது புரவியை நிதானமாக நடத்தியே செலுத்திக் கொண்டு போனார். கோட்டையின் கிழக்கு வாயில் அமைந்திருந்த இடத்திற்குப் பல காத தூரங்களுக்கு முன்னால் அமைக்கப் பட்டிருந்த சுங்கச் சாவடிக்கருகில் நாஞ்சில் நாட்டுக் கோட்டைக்காவல் வீரர்கள் அவரைத் தடுத்து நிறுத்தினார்கள்.

"ஐயா! யார் நீங்கள்? எங்கே பயணப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?"

பைராகியார் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இடுப்பில் பத்திரமாக முடிந்து வைத்திருந்த இலச்சினையை எடுத்துக் காண்பித்தார். அதுவரை நாம் கண்டிராத வித்தியாசமான இலச்சனை அது. அதில் கடலும் பெருங் கலமும் நடுவே காட்டப்பட்டிருக்க, அவற்றைச் சுற்றிலும் சில நாகிரி எழுத்துக்கள் காணப்பட்டன. பைராகியாரைத் தடுத்து நிறுத்திய அந்த வயதான வீரன் அந்த முத்திரையால் சற்றே குழப்பமடைந்தான்.

"ஐயா... இது..... இந்த முத்திரை...."

"முன்னொரு காலத்தில் யாருடைய ஆட்சிக்கு இந்தப் பகுதிகளெல்லாம் உட்பட்டிருந்தனவோ அவர்களுடைய முத்திரை மோதிரம் இது!" - என்னவொரு கம்பீரமான ஆழமான குரல் இந்தப் பைராகியாருக்கு!

அந்த வீரனின் முகம் சட்டெனப் பிரகாசமாயிற்று. "ஆஹா! இது... இது... பண்டைய ஆய்வேளிர் குலத்தின் முத்திரையல்லவா? அப்படியானால்... தாங்கள்....?".

"ஆம்" என்பதுபோல் பைராகியாரின் தலை மெல்ல அசைந்தது. மறுகணமே அந்த வீரன் யோசியாமல் சடாலென்று தரையில் வீழ்ந்து வணங்கினான்.

"இப்போது நான் மேற்கொண்டு செல்லலாமா?"

"அரசே! இந்த அடிமையை மன்னிக்க வேண்டும். தாங்கள் வருவீர்களென்று முன்னரே செய்தி வந்துவிட்டது. என்றாலும் இந்தத் தோற்றத்தில் தங்களை எதிர் பார்க்கவில்லை. அதனால் தவறிழைத்து விட்டேன்."

"வீரரே, வருந்தவேண்டாம். நீங்கள் உங்கள் கடமையைத்தானே செய்தீர்கள்? வருகிறேன்..."

பைராகியார் குதிரையை மேற்கொண்டு செலுத்திக் கொண்டு போக, அந்த வீரன் தன்னுடைய இடுப்பிலிருந்த கொம்பு என்றழைக்கப்படும் சிறிய வளைந்த கருவியை வாயில் பொருத்தி "பூ...ம்" என்றொரு ஓசையெழுப்பினான்.

அவனது எச்சரிக்கை ஒலிக்கு பதில் கொடுப்பதைப்போல் அடுத்தடுத்து பல கொம்போசைகள் சில வினாடிகளிலேயே கோட்டை வாயிலிலிருந்தும் கோட்டைக்கரைக்குப் பின்னால் மலைமேல் அமைந்திருந்த பல காவல் அரண்களிலிருந்தும் அடுத்தடுத்து எழுந்தன. "பூ...ம்" "பூ...ம்"மென்று அடுத்தடுத்து எழுந்த ஒலிகளால் அந்தப் பிராந்தியமே சில வினாடிகள் கிடுகிடுத்துப் போயிற்று. மலையுச்சியில் அவரது வரவை எதிர்நோக்கிக் கூடியிருந்த பல பெரிய மனிதர்களும் தங்களின் முக்கிய விருந்தினரை வரவேற்கத் தயாரானார்கள்.

கோட்டை வாயில் வழியாக அவரது புரவி மெல்ல மெல்ல அசைந்தபடி ஆரைவாய்மொழிக் கணவாய்க்குள் புகுந்தது. கணவாயின் இரு மருங்கிலும் சரேல் சரேலென மேலெழும் மலைச்சிகரங்களில் ஆங்காங்கே தெரிந்த வீரர் தலைகளை ஆர்வத்துடன் கவனித்தார். கணவாயின்

சிக்கலான அமைப்பும் வீரர்கள் மலைச்சிகரங்களின் மேல் நிலைகொண்டிருக்கும் தோதான இடங்களும் நாஞ்சில் நாட்டுக் காவலின் செறிவும் அவருக்குப் பரம திருப்தியளித்தன போலும். அவரது கடுகடுப்பான முகத்தில் மெல்லிய முறுவல் விரிந்தது. இப்போது இருப்பதைப்போல் இரண்டு மடங்கு படை திரட்டிக்கொண்டு வந்தாலும் சோழனால் இந்தக் கணவாயை உயிருடன் தாண்டவே முடியாது என்பதைச் சர்வநிச்சயமாக உணர்ந்ததினால் உண்டான முறுவல் அது.

3. பொக்கிஷம் கிடைத்தது



கழிக்குடியில் பல்வேறு பணிகளையும் முடித்துக் கொண்டு நண்பகலுக்கு மேல் சாலைக்குத் திரும்பிய தம்புராட்டியாரின் பல்லக்கு வாயிலுக்குள் நுழைவதைக் கண்ட நண்பர்கள் இருவரும் அந்தத் தருணத்திற்காகவே காத்திருந்தவர்களாய் ஆர்வத்துடன் அதனை நோக்கி ஓடினார்கள். நடந்த விஷயங்களை யார் முதலில் தம்புராட்டியாரிடம் விளக்கிச் சொல்வது என்பதில் இருவருக்குமிடையில் போட்டா போட்டியே உண்டாகிவிட்டது.

"அம்மா! அம்மா! இன்று நாங்கள் மண்ணை வெட்டிக் கொண்டிருக்கும் போது..."

"இல்லையில்லை. நிலத்தை உழுது கொண்டிருக்கும் பொழுது..."

"எப்படிச் சொன்னால் என்ன? இப்போது அதுவா முக்கியம்? நிலத்தை உழுது கொண்டிருக்கும் போது..."

"ஒரு பெரிய பாறை மண்ணில் புதைந்திருந்தது!"

"கடவுளே! மண்ணும் கல்லும் பாறையும் நிலத்தில் கிடக்கத்தான் செய்யும்? அதுவா முக்கியம்?"

"சரி, சரி. நான் இனிக் குறுக்கிடவே மாட்டேன். போதுமா? நீங்களே விஷயத்தைச் சொல்லுங்கள்."

"இல்லை. நீங்கள்தான் முதலில் தம்புராட்டியாரிடம் விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று மனதில் கங்கணம்

கட்டிக்கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது. அதனால்தான் என்னைப் பேசவே விடாமல் குறுக்கீடு செய்து..."

சிறு குழந்தைகளைப்போல இருவரும் சண்டையிட்டுக் கொள்வதைக் கண்டு தம்புராட்டியார் கலகலவென்று சிரித்தார். இருவரையும் அருகில் வரவழைத்து மெல்ல அணைத்துக் கொண்டார்.

"உள்ளிகளா! அமைதி. அமைதி. கொஞ்சம் பொறுமையாகப் பேசினால் இருவருமே சேர்ந்து விஷயத்தைக் கூறி முடித்து விடலாம். அதனை விட்டுவிட்டு இருவரும் ஏன் சண்டையிட்டுக் கொள்கிறீர்கள்? ஏதேது.. நான் கழிக்குடிக்குச் சென்று வருவதற்குள் என்னென்னவோ சுவாரஸ்யமான விவகாரங்கள் நடந்து முடித்துள்ளன போலிருக்கிறதே?"

"சுவாரஸ்யமா? நம்பவே முடியாத விஷயங்களென்று கூறுங்கள்!"

"அப்படியா?"

"ஆமாம். நாங்களிருவரும் சாலையின் பழைய விடுதி நிலங்களை உழுது கொண்டிருந்தோமில்லையா? அந்த நிலத்திற்கு நடுவே பெரியதொரு பாறை புதைந்திருக்கக் கண்டோம். அதனைப் பெரிதும் முயன்று விலக்கிப் பார்த்ததில்..."

"இலட்சக்கணக்கான எறும்புகளும் கறையான்களும் நாலாபுறங்களிலும் பாய்ந்தோடின. உள்ளே மிகவும் சிதலமான மரப்பெட்டியொன்று அங்கே புதைந்திருந்தது!"

"அடேயப்பா! வந்து சேர்ந்த சில நாட்களிலேயே வளாகத்தின் புதைந்து கிடக்கும் இரகசியங்களைத் தோண்டியெடுத்து விட்டீர்களே? பெட்டியினுள் ஏதேனும் புதையல் கிடைத்ததா என்ன?" என்றார் தம்புராட்டியார் புன்னகை மாறாமல்.

"விஷயத்தை முழுவதுமாய்க் கேளுங்கள். அந்தப் பெட்டியை மேலே எடுப்பதற்குள் உயிர் போய்விட்டது. கடைசியில் பெரிதும் முயன்று கறையான்களையெல்லாம் விரட்டி விட்டுவிட்டு பெட்டியைத் திறந்து விட்டோம்."

"உள்ளே என்ன இருக்கிறதென்பதே முதலில் தெரியவில்லை. ஒரே புற்று மண்ணாக இருந்தது. எல்லாவற்றையும் கடைசியில் விலக்கிவிட்டுப் பார்த்ததில்..."

"இதோ! இது கிடைத்தது."

தம்புராட்டியார் இளையவர் தன் கரங்களில் திணித்த பொருளை மெல்ல மெல்லத் தடவிப் பார்த்தார். வழவழவென்று மிகக் கனமாக ஏதோ கல்லினால் செய்யப்பட்ட பெட்டி போலல்லவா தெரிகிறது?

"உன்னிகளா! என்ன இது?"

"அதைத் தெரிந்து கொள்ள முடியாமல்தானே நான்கு நாழிகைகளாக மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறோம்?"

"ஏதோ கல் பெட்டி மாதிரியல்லவா தெரிகிறது?"

"பெட்டியேதான். பவழப் பாறையில் செய்யப்பட்ட மிக அழகான கரும்பச்சை நிறப் பெட்டி. நாற்புறங்களிலும் தங்கத்தில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் பெட்டியை மட்டும் திறக்கவே முடியவில்லை. மிக அழுத்தமாக மூடப்பட்டிருக்கிறது. எப்படியெல்லாமோ முயன்று பார்த்து விட்டோம்... முடியவேயில்லை. சரி, பெட்டியை உடைக்கலாமென்றால் இத்தனை அழகான பெட்டியை உடைப்பதற்கும் மனம் வரவில்லை."

"இதன் மேற்பகுதியில் ஏதேனும் எழுத்துக்கள் எழுதப் பட்டுள்ளனவா?"

"மேற்பகுதியில் மட்டுமல்ல. பெட்டியின் நாற் புறங்களிலுமே தங்க முலாமிட்ட எழுத்துக்கள் மிக அழகாகத் தெரிகின்றன."

"என்ன மாதிரியான எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன என்பதைக் கவனித்தீர்களா? அவற்றைப் படிக்க முயற்சித்தீர்களா?" - இப்போது தம்புராட்டியாரின் குரலிலும் பரபரப்பு தொற்றிக்கொண்டு விட்டது.

"படிக்க முயன்றோம். முடியவில்லை. எழுத்துக்கள் நாகிரி லிபி எழுத்துக்களாகத்தான் தெரிகின்றன. என்றாலும் வடிவம் சற்றே வேறுபட்டிருப்பதால் படிக்க முடியவில்லை. பெட்டியின் மேற்புறத்தில் எழுதப்பட்டுள்ளது ஏதோ சுலோகம் போலத் தெரிகிறது. இரண்டே இரண்டு வரிகள் மட்டும் மிக அழகாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் சுற்றிலும் தெரியும் எழுத்துக்களோ வாக்கியங்கள் போல இல்லை. தனித்தனி எழுத்துக்களாக - அதே லிபியில் அமைந்த உயிர் மற்றும் மெய்யெழுத்துக்களாகத் தோன்றுகின்றன. எதற்காக

இம்மாதிரிச் செதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை..."

"இது... இதனைப் பற்றி என்னுடைய சிறு பிராயத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். மறந்து போய்விட்டது. கொஞ்சம் பொறுங்கள். காந்தளூரில்...ம்ஹூம். மூழிக்குளம்? இல்லையில்லை. என் பாட்டியார் சுந்தரியம்மை நாஞ்சில் நாட்டு ஆசான் தெரிவித்ததாகச் சொன்ன செய்தி... ஆஹா! தேவி கன்னியாபகவதி! கடைசியில் கண் திறந்து விட்டாயா? உன் கருணையே கருணை. கிடைத்துவிட்டது பொக்கிஷம்! அதுவும் எப்பேர்ப்பட்ட பொக்கிஷம்?"

பெருங்குரலெடுத்து ஆனந்தப் பரவசத்தில் கூக்குரலிட்ட தம்புராட்டியார் தங்களிருவரையும் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுப்பதைக் கண்டு நண்பர்களிருவரும் திகைத்துப் போனார்கள். "உன்னிகளா... உன்னிகளா! என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் உங்களுக்கு?"

"என்ன அம்மா இது? பெட்டியை இன்னமும் திறக்கவே முடியவில்லையே என்கிற வருத்தத்தில் இருக்கிறோம் நாங்கள். நீங்களோ அதற்குள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து விட்டீர்களே?"

"உன்னிகளா! உங்கள் கரங்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய பொருள் என்ன என்பது உத்தேசமாக எனக்கு விளங்கி விட்டது. நூறு - நூற்றைம்பது வருடங்களுக்கும் மேலாகக் காணாமற் போய்விட்ட பொக்கிஷம் இது. வாருங்கள், சாலைக்குள் செல்வோம். குருதாரையில் உடனடியாக இது வைக்கப்பட வேண்டும்."

"என்ன? குருதாரையில் வைக்கப்பட வேண்டுமா?"

"ஆமாம். தாரைதான் இதன் உண்மையான இருப்பிடம். அங்குதான் இது பல காலத்திற்கு முன் இருந்திருக்க வேண்டும். சாலையின் பழைய மாணவர்கள் அன்றாடம் இதனை வணங்கி வழிபட்டிருக்க வேண்டும். பின் சாலைக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டு, அந்த நேரத்தில் எவராலோ பாதுகாப்பாகப் புதைக்கப்பட்டிருக்க வேண்டும். உரிய திறவுகோல் சூத்திரம் உங்களுக்குத் தெரிந்தாலன்றி இந்தப் பெட்டியைத் திறக்கவே முடியாது. நல்லவேளை. நான் வருவதற்குள் பெட்டியை உடைக்காமலிருந்தீர்களே!"

"இத்தனை அழகான பெட்டியை உடைக்க யாருக்கு மனம் வரும்?"

"அதுதான். அதேதான். அந்தக் காரணத்திற்காகத்தான் இந்தப் பெட்டியை இத்தனை வேலைப்பாடுகளுடன் சூட்சுமமாக அமைத்திருக்கிறார்கள் . இது எவர் கையில் கிடைத்தாலும் பெட்டி இத்தனை அழகாக இருக்கிறதே? இதனைப் பாதுகாத்து வைத்து எப்படியாவது பின்னால் திறந்து பார்த்து விடலாமே என்று நினைத்து பத்திரப் படுத்துவார்களேயொழிய உடைக்க மாட்டார்கள். அதற்கு மனம் வராது. அப்படியே ஒரு வேளை உடைத்துத் திறந்தாலும் அதில் உள்ள பொருட்கள் முற்றிலும் சிதலமாகிவிடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஆகத் திறவுகோல் சூத்திரம் இல்லாமல் இதனைத் திறக்கவே முடியாது!"

"இத்தனை தூரம் இதனைப் பத்திரப் படுத்தியிருக்கிறார்களென்றால் இதில் மிக மிக முக்கியமான பொருட்கள் இருக்கின்றன என்றுதானே அர்த்தம்?"

"ஆம். என்னுடைய அனுமானம் மட்டும் சரியாக இருந்ததென்றால் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையை ஸ்தாபித்த நான்கு பிதாமகர்களுள் ஏதோ ஒருவருடைய பூர்வானுபவக் கிரந்தமும் இரகசிய சங்கிராமப் பொருட்களும் அடங்கியுள்ள பெட்டி இது!"

பூர்வானுபவக் கிரந்தம்! பூர்வானுபவக் கிரந்தம்!

அதுவரை கேள்விப்பட்டிராத அந்த மந்திர வார்த்தைகள் மழபாடியாரை என்னவோ செய்தன. நெற்றியில் புருவங்களுக்கு மத்தியில் சுரீரென்று வலி போன்று ஏதோ ஒரு உணர்வு உண்டானது. சில நாட்களாகவே பயிற்சியின்போது அடிக்கடி இவ்வாறு தோன்றிக் கொண்டிருக்கிறது. அந்த உணர்வு அவரை ஆட்கொள்ளும்போது தோன்றும் சில வித்தியாசமான காட்சிகள்... உருவங்கள்..... இவற்றையெல்லாம் யாரிடம் சொல்வது?

"இந்தா உன்னி! நேராக இதனைக் களரியில் சென்று வைத்துவிடு. நான் குளித்துவிட்டு வந்து பூஜை செய்து இதனைத் தாரையில் ஏற்றி வைக்கிறேன்..."

கையில் ஏந்தியிருந்த பெட்டியை அருகில் நின்ற மழபாடியாரிடம் கொடுப்பதற்காகத் தம்புராட்டியாரின் கரங்கள் நீண்டன. அதனைப் பெறுவதற்காக நீண்ட

மழபாடியாரின் கரங்களில் ஒரு நடுக்கம் பரவியிருப்பதை அவர் உணர்ந்தார்.

"உன்னி! உன்னி.... என்ன..... ஆயிற்று... உனக்கு?"

"ஒ...ஒன்றுமில்லை..." என்றபடியே பெட்டியை ஸ்பரிசித்த மழபாடியாரை வினோதமானதொரு மயக்கம் சூழ ஆரம்பித்தது. 'அடேய்! எங்களுக்குக் கிடைக்காத பூர்வானுபவக் கிரந்தம் உனக்கு கிடைத்திருக்கிறதடா!' - புகை நடுவே ஆஜானுபாகுவாக ஒரு உருவம் தோன்றி கைதட்டி எக்காளமிட்டது. சிரித்தது.

நிற்க முயன்று.. தோற்று... அப்படியே மண்ணில் சரிந்தார் மழபாடியார்.

"உன்னி! உன்னி...." எனும் குரல் ஏதோ அந்தகாரத்தில்.. பாதாள இருள் உலகத்தில்... வெகு தூரத்தில்... மெல்ல மெல்ல எதிரொலித்து மறைந்தது.

4. படைகள் குவிந்தன



நமது கதை நடக்கும் காலத்திற்குச் சற்றொப்ப நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெருவீரர் விஜயாலயச் சோழரால் சோழநாட்டின் தலைநகரமாக நிர்மாணிக்கப்பட்ட தஞ்சாபுரியானது, நாளடைவில் குடியேற்றங்களும் போக்கு வரத்தும் அதிகரித்ததால் கோட்டைக்கு வெளியிலும் விரிவடையத் தொடங்கியது. குறிப்பாகக் கண்டராதித்த சோழரின் காலத்திற்குப் பிறகு பெருவளர்ச்சியடையத் துவங்கிய கீழ்த்திசை நாட்டு வாணிபம் இந்த விரிவாக்கத்திற்கான முக்கியமான காரணியாகவும் ஊக்கியாக அமைந்தது. இதனால் கோட்டைக்குள் அமைந்திருந்த உள்ளாலை எனும் பகுதிக்கு வெளியே நாற்திசைகளிலும் கோட்டைவாயில் அமைந்திருந்த பகுதிகளையொட்டிப் புறம்படி எனும் புதிய நகரப்பகுதிகள் உருவாகலாயின.

தஞ்சாபுரியை நோக்கிப் பயணப்பட்டு வரும் வணிகர்களும் பொதுமக்களும் இரவு முதல் ஜாமத்திற்கு முன் கோட்டையினுள் நுழைந்தாக வேண்டும். இல்லையேல் கோட்டை வாயிலானது ஒரு இராட்சத நாவைப்போல்

அமைந்திருக்கும் அகழிப்பாலத்தை உள்ளிழுத்துக் கொண்டுள்ளும். வெள்ளாறு மற்றும் வடவாற்று மீன்களைத் தின்று கொழுத்து வளர்ந்திருக்கும் அகழியின் முரட்டு முதலைகளைத் தாண்டி எவரும் கோட்டைக்குள் புகுந்துவிட முடியாது. அதனால் இரவு நேரம் கழித்துக் கோட்டைக்கு வந்து சேருவோர் கோட்டை வாயிலுக்கருகில் அமைந்திருந்த புறம்படிச் சத்திரங்களில் தங்கிக்கொள்வது எனும் வழக்கம் ஏற்படலாயிற்று. நாளடைவில் அங்கே கடை கண்ணிகளும் சிறு அல்லங்காடிகளும் உருவாகலாயின.

கோட்டைக்குள் சிறு சந்து பொந்துகளில் வசித்து வந்த அடிமட்டத்து அரசாங்க அலுவலர்களும் காவல் வீரர்களும் கோட்டைக்கு வெளியே புறம்படியில் நிலம் வாங்கிக் கொண்டு தனி இல்லம் அமைத்துக் கொண்டனர். இவ்வாறாகப் புறம்படிகளில் பல்வேறு வகையான குடியேற்றங்களும் மெல்லப் பெருகலாயின. பின்னாளில் அருள்மொழிவர்மரின் தலைமையில் சோழ இராஜாங்கம் பிரம்மாண்டமான வளர்ச்சி கண்டபோது இந்தப் புறம்படிப் பகுதிகளின் பயன்பாடும் முக்கியத்துவமும் மிக அதிகமாகி தஞ்சையின் ஒரு பகுதியாகவே இவை அங்கீகரிக்கப்பட்டு விட்டன. புறம்படியில் அமைக்கப்பட்ட பேரரசரின் இராஜஸ்ரயன் எனும் திருமாளிகையொன்று இதனைச் சூசகமாக நமக்கு உணர்த்தும். இம்மாளிகை கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சைக்கருகே தோன்றிய புறம்படிப் பகுதிகளுள் கரந்தை எனும் கருந்திட்டைக்குடிப் பகுதிகள் முக்கியமானவை. இங்கே அமைந்துள்ள வசிட்டேஸ்வரர் திருக்கோயில் சரித்திரப் புகழ் பெற்றது. இராஜராஜருக்கு முன்பு சோழச்சக்ரவர்த்தியாகப் பதவியிலிருந்த மதுராந்தக உத்தமச் சோழர் மற்றும் செம்பியன் மாதேவியாரின் ஆதரவைப் பூரணமாகப் பெற்ற திருக்கோயில்களுள் இதுவுமொன்று.

கரந்தை, கரந்தைக்கு வடகிழக்கே இன்று தனியூராகத் திகழும் திட்டை, கரந்தைக்கு வட மேற்கே அமைந்துள்ள திருப்பதியங்களில்[1] பாடப்பெற்ற தலமான திருப்பூந்துருத்தி ஆகிய மூன்று ஊர்களுக்கும் நடுவே அமைந்துள்ள நிலப்பகுதிகள் காவிரியின் கிளைநதிகளின் கருணையினால்

[1] தேவாரம் எனும் சொல் வழக்கு பின்னாளில்தான் உருவானது.

பகுமையில் செழித்தவை. வளப்பமானவை. அந்நாளில் இந்நஞ்சை நிலப்பகுதிகள் பலவற்றில் நெல் பயிரிடப் பட்டிருந்தன என்றாலும் கணிசமான அளவு நிலப்பகுதிகள் - குறிப்பாகக் கரந்தையை ஒட்டிய பகுதிகள் - தென்னந் தோப்புக்களாகவும் தரிசு நிலங்களாகவுமே காட்சியளித்தன. சோழ அரசாங்கம் ஒரு முக்கியக் காரணத்தின் பாற்பட்டுத் தான் இந்நிலங்களை இவ்வாறு விட்டு வைத்திருந்தது.

புதிதாகப் பிறந்துள்ள விரோதி வருடத்தின் ஆனி மாத நல்லாளான அன்று காலை பொழுது புலரும் நேரத்தில் அப்பகுதிகளில் சில விசித்திரமான காட்சிகள் அரங்கேறலாயின. வழக்கமாகப் பச்சைப் பசும்பட்டாடை போர்த்திக் கீச் கீச்சென்ற சிறு பறவைகளின் அழகிய கீச்சொலிகள் மட்டும் செவிகளை நிறைக்க, அமைதி பொங்கும் இடமாகக் காட்சியளிக்கும் தோப்புப் பகுதிகளில் பல வினோதமான சப்தங்கள் கேட்டன. தோப்பின் தென்னை மரங்களினூடே ஆங்காங்கே வட்ட வட்ட வடிவங்களில் மஞ்சள், வெள்ளை, நீலம் மற்றும் செக்கர் நிறத்தில் படைவீரர் தங்கும் கூடாரங்கள் எழும்பியிருந்தன. அக்கூடாரங்களுக்கிடையே நூற்றுக்கணக்கான வீரர்கள் சுறுசுறுப்பாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

வீரர்களில் ஒரு சிலர் தென்னை மரங்களின் மீதேறித் தத்தம் படைக்குரிய கொடிகளை உயரே கட்டுவதில் ஆர்வம் காட்டினார்கள். இந்தப் படைகளுள் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி வண்ணங்கள் உண்டு போலும். அதனால்தான் கூடாரங்களும் வெவ்வேறு வண்ணங்களில் மிளிர்கின்றன. அதோ! அந்த வீரன் உயர்த்திப் பிடித்திருக்கும் கொடியின் மஞ்சள் நிறப் பின்னணியில் சோழரின் சின்னமான வேங்கை எத்தனை வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது? சற்று அசந்தால் கொடிக்கு வெளியிலேயே பாய்ந்தோடிவிடும் போலத் தெரிகிறதே? அவ்வேங்கையின் கீழ் நீண்ட வாள், கொன்றை மாலை, முருகப் பெருமானின் ஆயுதமான வேல் மற்றும் வெண்சங்கம் ஆகிய நான்கும் வரையப்பட்டுள்ளன. இவையெல்லாம் அப்படையின் பிரத்யேகச் சின்னங்கள் அல்லது குறியீடுகள் போலும்.

தோப்பு நிலங்களைத் தாண்டி ஆற்றங்கரை அமைந்திருக்கும் பகுதிகளில் படைகளுக்கான உணவு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. கூடியிருக்கும் இத்தனை வீரர்களுக்கும் மூன்று வேளை உணவளித்தாக வேண்டு மென்றால் அது சாதாரணமான பணியா என்ன?

கொதித்துக் கொண்டிருக்கும் பானைகளில் சிலர் வகைவகையான காய்கறிகளைக் கொட்டிக் கூட்டாஞ்சோறு வடித்துக் கொண்டிருந்தார்கள். வேறு சிலரோ மலை மலையாகக் குவிந்து கிடக்கும் மாமிசத் துண்டங்களை சிறு துண்டங்களாக நறுக்கிப் பெரும் பாத்திரங்களிலிட்டு வதக்கிக் கொண்டிருந்தார்கள். இறைச்சியின் கவித்த வாசமும் காய்கறிகளின் நறுமணமும் காற்றில் கலந்து எழுந்தன. அவ்வாசத்தைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் பலரும் ஆர்வத்துடன் முகர்ந்து பார்த்து நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆற்றின் மறுபக்கக் கரையில் ஊர்ப்பகுதிகளும் வயல்களும் துவங்கும் நிலப்பரப்பில் சில சிறுவர்கள் நின்று கொண்டு அக்கரையில் தெரியும் வீரர் நடமாட்டங்களை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள். காலைக் கடன்களை முடித்துக் கொள்வதற்காக அந்தப் பக்கம் ஒதுங்கிய பெரியவர்கள் சிறுவர்களைத் தேவையில்லாமல் விரட்டவே, அவர்கள் முணுமுணுத்தபடி ஊருக்குத் திரும்புவதைப்போல் போக்குக் காட்டிவிட்டு மீண்டும் தங்களின் பழைய இடத்திற்கே திரும்பி வந்து நோட்டத்தைத் தொடரலானார்கள்.

"அடேய் சோழியா! சென்ற முறை இரணமுக இராமன் தோப்பில் மஞ்சள் நிறத்துப் படைதானே தங்கியது? இப்போது சிவப்பு நிறக் கொடியல்லவா அங்கே பறந்து கொண்டிருக்கிறது?"

"முட்டாள்! சிவப்பு நிறக்கொடி இரணமுக இராமன் தோப்பைத் தாண்டி அமைந்துள்ள தெரிஞ்ச கைக்கோளர் தோப்பில் உள்ள மிக உயரமான தென்னை மரத்தில் கட்டப்பட்டுள்ளது. நன்றாகப் பார். உத்தமச் சோழத் தெரிஞ்ச கைக்கோளர் படைதான் அங்கே தங்கியிருக்க வேண்டும்!"

"நீ சொல்வது சரிதான். சற்று உற்றுப் பார்த்தால் தெரிகிறது."

"இவர்களெல்லாம் யார் அண்ணா? எதற்காக நாம் விளையாடும் தோப்பிற்கு வந்திருக்கிறார்கள்?" என்றான் அந்தக் குழுவிலிருந்த அப்பாவிப் பொடியன் ஒருவன்.

"அடேய் வேலா! இவர்களெல்லாம் எதிரி நாட்டு வீரர்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் நமது ஊரைப்

படையெடுத்துச் சூறையாடப் போகிறார்கள். உன் விளையாட்டு சாமான்களை பத்திரமாக எங்காவது எடுத்து வை!"

"உஸ்... சோழியா! சற்று சும்மா இருக்கிறாயா? நீ ஏதோ வேடிக்கையாகச் சொல்லப்போக இவன் கண்தெரியாத என் பாட்டியிடம் சென்று விபரம் புரியாமல் எதையாவது உளறி வைப்பான். தம்பி! இவர்களெல்லாம் சோழ சாம்ராஜ்ஜியத்தின் பல சைனியங்களைச் சேர்ந்தவர்கள். அதோ! ஆற்றங்கரை யோரத்தில் நமக்கு நேரெதிராக முகாமிட்டிருப்பதுதான் பழுவூரைச் சேர்ந்த இரணமுக இராமன் படை[2]. அதற்கப்பால் சிவப்புக் கொடியுடன் தெரிவது உத்தமச் சோழத் தெரிஞ்ச கைக்கோளர் படை. சற்று வட கிழக்கே இராமந்தோப்பில் தெரிவது கோதண்ட இராமன்[3] படை. அதற்கும் அப்பால் வெண்கொடியுடன் தெரிவது வீரநாராயணன் படை. வழக்கமாக கருநிறக் கொடியுடன் காணப்படும் ஒற்றியூர்க்[4] குமரன் படைகள் எங்கே தங்கியிருக்கின்றன என்பது தெரியவில்லை.

நமது அரசர் எதிரி நாட்டை நோக்கிப் படையெடுத்துச் செல்லும் நேரங்களிலெல்லாம் தஞ்சைக்கு அருகில் பல்வேறு ஊர்களிலும் குவித்து வைக்கப்பட்டுள்ள இது போன்ற தனிப் படைகள், ஆற்றங்கரைத் தோப்பில் சில நாட்கள் தங்கிவிட்டுத் தமக்குத் தேவையான ஆயுதங்களையும் சாமக்கிரியைகளையும் அரண்மனையிலிருந்து சேகரித்துக் கொண்டு கோட்டை வாயிலுக்கருகில் அமைந்துள்ள நிகும்பசூதனியை வழிபட்டு விட்டுக் கிளம்புவது வழக்கம். இந்த முறை படையெடுப்பு தெற்கே நிகழப்போகிறதென்று கேள்விப்பட்டேன்."

"தெற்கே என்றால்? தெற்கு என்றொரு ஊர் இருக்கிறதா என்ன?"

---

[2] இரணமுக இராமன் படை பழுவேட்டரையர்களின் படையாகும். பழுவூரில் இதனைக் குறிப்பிடும் கல்வெட்டு உண்டு.
[3] முதலாம் ஆதித்தருக்குக் கோதண்ட இராமன் எனும் பெயருண்டு. காளஹஸ்திக்கருகில் அமைந்துள்ள இவரது பள்ளிப்படைக்குக் கோதண்ட இராமேஸ்வரம் என்றுதான் பெயர்.
[4] சோழர் விஜயாலயருக்கு முன்னவராக ஒற்றியூரன் எனும் அரசரின் பெயரை திருத்தணி வேலங்குடிச் செப்பேடுகள் குறிப்பிடும். இச்செப்பேடுகள் பராந்தகரால் வெளியிடப்பட்டவை.

சோழியன் என்றழைக்கப்பட்டவன் இந்தக் கேள்வியைக் கேட்டு பகபகவென்று சிரிக்கத் துவங்கிவிட்டான்.

"இங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை உன் தம்பிக்கு விளக்கி முடிப்பதற்குள் படைகளே கிளம்பிப் போய்விடுமென்று நினைக்கிறேன். அடப்பாவி வேலா! கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு திசைகள் இருப்பதைக்கூட அந்த சொக்க மேட்டு வாத்தி உனக்குச் சொல்லித் தரவில்லையா என்ன?"

"கிழக்கு எனக்குத் தெரியும்! அங்குதான் சூரியன் உதிக்கும். சரியா?"

"ஆமாம் வேலா. கிழக்கிற்கு எதிர்ப் பக்கம் இருப்பது..."

"உஸ்... உங்கள் வெட்டிப் பேச்சை சற்று நிறுத்திக் கொண்டு அங்கே பாருங்கள். தோப்பின் முன்பகுதியில் கொடிகளும் சாமரங்களும் உயரப் பறக்கின்றன. வீரர்கள் எல்லோரும் அந்தத் திசையை நோக்கி நிற்கின்றனர். பேரரசரே படைகளை நேரில் சந்திப்பதற்காக வந்திருக்கிறாரா என்ன?"

"ம்ஹூம். அரசர் நேரில் இங்கு வரவே மாட்டார். படைகள் கிளம்புமுன் அன்னை நிசும்பசூதனி கோயிலுக் கருகில்தான் அவர்களைச் சந்திப்பார். இது வேறு யாராவது பெருந்தரத்து அதிகாரியாக இருக்கும்."

அந்தச் சிறுவனின் யூகம் சரியாகத்தான் இருந்தது. படைகளை நேரில் பார்வையிட வந்திருந்தவர் சோழ சைனியத்தின் பிரதம சேனாபதியான குரவன் இராஜராஜ மாராயர்.

* * * * * * * *

"வரவேண்டும் வரவேண்டும்! சோழ சாம்ராஜ்ஜியத்தின் சேனாபதியான குரவன் இராஜராஜ மாராயருக்கு அடியேனின் பணிவான வணக்கங்கள்!"

"யாரது, அபிமானதொங்கப் பேரரையரா? வணக்கம், வணக்கம். என்ன, தஞ்சையின் சுற்றுப்புறமெங்கிலும் உள்ள காவற்பகுதிகளிலிருந்து ஒரே நாளில் படைகளைக் குவித்து விட்டீர்கள் போலிருக்கிறதே?"

"ஆமாம். ஏறக்குறைய இரண்டு திங்களுக்கு முன்னரே பேரரசரின் எச்சரிக்கை ஓலை வந்துவிட்டது. தெற்கே எந்நேரமும் தாக்குதல் நிகழலாம் என்பதால் எங்களை ஆயத்த நிலையில் இருக்கும்படி அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. அதனால் கடந்த இரு வாரங்களாகவே உங்களின் கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்."

"எத்தனை படைகள் தற்போது இங்கே கூடியிருக்கின்றன? வீரர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? என்றைக்கு நீங்கள் கோட்டைக்குள் வந்து ஆயுதங்களையும் சாமக்கிரியைகளையும் சேகரிக்கப் போகிறீர்கள்?"

"குடந்தையிலிருந்து கண்டராதித்த வில்லியர் படை மற்றும் அரிஞ்சயர் மூன்று கை மஹாசேனை, வல்லத்திலிருந்து கரிகாலப் பெரும்படை, பழுவூரிலிருந்து இரணமுக இராமன் படை, உறையூரிலிருந்து மதுராந்தகர் அந்தளகப் படை மற்றும் இராஜகேசரி தெரிஞ்ச[5] வேளக்காரர் படை, எறும்பியூரிலிருந்து உத்தமச் சோழத் தெரிஞ்ச கைக்கோளப் படை, வீரநாராயண புரத்திலிருந்து வீரநாராயணப் பெரும்படை மற்றும் இராஜாதித்த ஆனையாட்கள்[6] சேனை, திருநாவலூரிலிருந்து கோதண்ட இராம வில்லியர் படை...."

பேரரையர் குறிப்பிட்டுக்கொண்டே செல்லச் செல்ல நமது சைனியத்தில் இத்தனை சேனைப் பிரிவுகளா? என்று சேனாபதிக்கே சற்று வியப்புத் தட்டியது. இத்தனை வீரர்களையும் உற்சாகம் குன்றாமல் பாண்டி தேசம் வரை தலைமையேற்று அழைத்துச் சென்றாக வேண்டுமே? இது சாதாரண காரியமே அல்ல.

"இவற்றையெல்லாம் தவிர வீரசோழ நாடகப் படை என்று புதிய பிரிவு வேறு சேர்ந்து கொண்டிருக்கிறது. பேரரசரின் நேரடி மேற்பார்வையில் இயங்கும் படைகளுள் இதுவுமொன்று."

---

[5] கல்வெட்டுக்களிலும் தெரிந்த என்பது தெரிஞ்ச என்று திரிந்தே குறிப்பிடப்பட்டுள்ளது.

[6] இராஜாதித்தர் யானை மேல் துஞ்சியதால் (அதாவது இறந்து பட்டதால்) அவரது பெயரிலேயே சோழ யானை வீரர்கள் சேனை அமையப்பெற்றிருந்ததாகக் கொள்க.

"என்ன, நாடகப்படையா?"

"ஆமாம். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் அனைத்துப் படைத்தலைவர்களுக்கும் பேரரசரிடமிருந்து ஒரு ஸ்ரீமுகம் வந்தது. தத்தம் படையிலிருக்கும் வீரர்களுள் இசையிலும் நாடகக் கலையிலும் சிறந்தோரை இப்படைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று அதில் ஆணையிருந்தது. இப்படை பேரரசரின் நேரடித் தலைமையின் கீழ் இயங்கும் என்றும் கூறப்பட்டது. நாங்களும் பல்வேறு பிரிவுகளிலிருந்து நூறு வீரர்களைத் திரட்டி அனுப்பி வைத்தோம். ஆனால் எதற்காக இந்தப் படை உருவாக்கப் பட்டது என்பது இன்று வரை எனக்குப் புரியவில்லை."

பேரரசர் தம்மிடம் இரண்டு வருடங்களுக்கு முன் இந்த நாடகப்படையைப் பற்றிப் பிரஸ்தாபித்தது மாராயருக்கு ஞாபகம் வந்தது. அப்போதிருந்த பல பணிகளுக்கிடையே அவர் அதனை அத்தனை முக்கியமான விஷயமாக நினைக்க வில்லை. பல நாட்கள் காத்திருந்து விட்டு ஒரு கட்டத்தில் பேரரசர் நானே இந்தப் பணியை நேரில் கவனித்துக் கொள்கிறேன் என்று அப்போது சொல்லியிருந்தார். சப்தமே செய்யாமல் சொன்னதைச் செயல்படுத்தியும் விட்டார் போலிருக்கிறது. வீரசோழ நாடகப் படை! பெயரே வேடிக்கையாக இருக்கிறது. வீரர்களுக்குத் தெரிந்தால் கைகொட்டிச் சிரிப்பார்கள் என்று நினைத்துக்கொண்டார் மாராயர். எத்தனை பெரிய நோக்கத்துடன் அந்தப் படை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர் அப்போது உணரவில்லை.

5. தீராப் பாபம்



அனந்தபுரத்திலிருந்து ஆரைவாய் மொழிக்குச் செல்லும் இராஜபாட்டையில் மூன்று புரவிகள் துரிதகதியில் நடை போட்டுக் கொண்டிருந்தன. முன்னால் சென்று கொண்டிருந்த புரவியில் காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியர் காட்சியளித்தார். அவரது புரவியை யொட்டி இருபுறங்களிலும் வாமனரும் அச்சுதரும் காட்சி அளித்தார்கள். சாலையில் போக்குவரத்து அதிகம் தென்படாததால் பல நாழிகைகளாகத் தடையின்றிச் சீராக அவர்களால்

பயணப்பட முடிந்தது. புரவிகளின் வாயில் தள்ளியிருக்கும் நுரையைக் கவனிக்கும்போது அதிகாலையிலேயே அவர்களது பயணம் துவங்கிவிட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

முதற்புரவியில் பயணித்துக் கொண்டிருந்த பட்டதிரி, தமக்கென்று தனித்ததொரு சிந்தனா உலகத்தைப் படைத்துக் கொண்டு அதிலேயே ஆழ்ந்திருந்தவராகக் காணப்பட்டார். அவரது எண்ண ஓட்டங்களைக் கலைக்க விரும்பா தவர்களாய் இளவல்கள் இருவரும் மௌனமாகவே புரவிகளைச் செலுத்திக்கொண்டு வந்தார்கள்.

ஒரு கட்டத்தில் புரவிகள் மிகுந்த களைப்படைந்து விட்டதை உணர்ந்த வாமனர், அச்சுதருக்குக் கண்களால் சைகை செய்ய அவர் மெல்லக் கனைத்தபடியே தமது புரவியின் வேகத்தை மட்டுப்படுத்தினார். அச்சுதரை தொடர்ந்து வாமனரும் புரவியைக் கட்டுப்படுத்த, தமது செவிகளின் இருபுறங்களிலும் ஒலித்துக் கொண்டிருந்த குளம்படிகள் தேய்ந்து வருவதை பட்டதிரி உணர்ந்து சிந்தனை கலைந்தார்.

"என்ன, ஏன் புரவிகளின் வேகத்தை மட்டுப்படுத்துகிறீர்கள்?"

"இயற்கை உபாதை அண்ணா. புரவிகளும் மிகுந்த சோர்வாய்த் தெரிகின்றன. அதோ! சற்று தூரத்தில் காட்டாறு ஓடிக் கொண்டிருக்கிறது. இறங்கி நீர் காட்டுவோமா?"

"அட, ஆமாம். எனது புரவியின் வாயில்கூட ஏகத்துக்கு நுரை தள்ளியிருக்கிறதே? பாவம். வாயில்லா ஜீவன். என்ன நினைத்திருக்குமோ? வாருங்கள். காட்டாற்றின் பக்கமாக ஒதுங்குவோம்."

மூவரும் தத்தம் புரவிகளிலிருந்து இறங்கி இராஜபாட்டையிலிருந்து விலகிக் காட்டாற்றை நோக்கிச் செல்லும் சிறுவழியில் நடந்தார்கள்.

"காந்தளூரிலிருந்து கிளம்பியது முதலே உங்களின் முகம் மிகத் தீவிரமான சிந்தனையைக் காட்டிக் கொண்டிருக்கிறதே அண்ணா? ஆரைவாய்மொழியில் நாம் எதிர்பார்க்கின்ற காரியங்கள் நடவாது என்று நினைக்கிறீர்களா?"

"அவ்வாறெல்லாம் கிடையாது தம்பி. சொல்லப் போனால் நான் எதிர்பார்த்ததை விட மிக நன்றாகவே நமது திட்டங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. கலமறுக்கும் போட்டிகளை அறிவித்து விட்டோம். போட்டிகளின் முடிவில் உன்னைச் சாலையின் ஆச்சாரியனாகவும் அச்சுதனைப் பிரதான கலநாயகமாகவும் ஆக்கிவிட்டேனானால் என்னுடைய பணி நிறைவடைந்துவிடும். சாலையையும் என் பெண்களையும் உங்களிருவரிடமும் ஒப்படைத்துவிட்டு வடக்கே திரிவேணி சங்கமம் வாரணாசி பிரயாகை என்று ஸ்தலயாத்திரைக்குக் கிளம்பி விடுவேன்."

"ஏன் அண்ணா இவ்வாறெல்லாம் பிடிப்பில்லாமல் பேசுகிறீர்கள்? இறுதிவரை நீங்கள் காந்தளூர் ஆச்சாரியர் ஸ்தானத்தில் இருந்து எங்களையெல்லாம் வழிநடத்துவீர்கள் என்றல்லவா எதிர்பார்த்தோம்?"

"இல்லை. அது நடவாது. ஹூம்..." என்று பெருமூச் செறிந்த பட்டதிரி, ஒரு சிறிய இடைவெளி விட்டுத் தொடர்ந்து பேசிக்கொண்டு சென்றார்.

"மூத்தவர் பார்த்திவசேகரபுரத்தில் இறைவனடி சேர்ந்ததிலிருந்தே என் மனம் ஒரு நிலையில் இல்லை தம்பிகளா. மனதில் இனம் புரியாத கவலைகளும் வேதனைகளும் சூழ்ந்துள்ளன. இரவு வேளைகளில் அடிக்கடி துர்சொப்பனங்கள் தோன்றி உறக்கத்தைக் கலைக்கின்றன. சகுனங்களும் நிமித்தங்களும் சரியாக இல்லை. நான்கு நாட்களுக்கு முன் சிவபுரத்திலிருந்து கணியர்களை வரவழைத்துச் சோழி போட்டுப் பார்த்ததில் நமக்கும் நமது குடும்பத்திற்கும் கடுமையான துர்திசை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்றும் குறைந்த பட்சம் ஒரு உயிரையாவது அது காவு கொள்ளாமல் போகாதென்றும் பிரஸ்னம் வந்தது. அப்படிப் போகப் போகிற உயிர் என்னுடையதாக இருக்க வேண்டும் என்று அன்றாடம் நான் காந்தளூர் மஹாதேவரைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்."

"ஐயோ அண்ணா! ஏன் இப்படித் தொடர்ந்து அமங்கலமாகவே பேசிக்கொண்டு செல்கிறீர்கள்? உங்களின் திருவாயில் இத்தனை அவநம்பிக்கையான வார்த்தைகள் ஒரு போதும் வரமாட்டாவே? மங்களகரமான பட்டாபிஷேகக் காரியத்திற்குச் செல்கிறோம் என்று சொல்லிவிட்டுத்தானே காந்தளூரிலிருந்து கிளம்பினீர்கள்?"

வாமனர் பதற்றத்துடன் பேசிக்கொண்டே செல்ல, பட்டதிரி அவரது பேச்சைப் பொருட்படுத்தாதவராய் வானத்தில் எங்கோ இலக்கற்று தொலைதூரத்தை வெறித்து நோக்கியபடி நின்றார். கலைந்து செல்லும் மேகங்களினூடே என்னென்ன காட்சிகளையெல்லாம் அவர் கண்டாரோ? நாமறியோம். "அவள் விடமாட்டாள். பழிவாங்காமல் அவள் விடவே மாட்டாள்..." என்று அவரது வாய் மெல்ல முணுமுணுத்தது.

"அ அண்ணா?"

"நீண்ட காலமாகப் பெரிதும் முயன்று யாரை நான் முற்றிலுமாக மறந்திருந்தேனோ அவளைப் பற்றிய நினைவுகளை மூத்தவரின் இறுதி வார்த்தைகள் கிளறிவிட்டு விட்டன. எத்தனை முறை முயன்றாலும் அவர் கூறிவிட்டுச் சென்ற வாக்கியங்கள்தான் கனவிலும் நினைவிலும் எதிரொலித்தபடி இருக்கின்றன.

அவள் உங்கள் பேரில் கோபமாக இருக்கிறாளடா.. மிக மிகக் கோபமாக இருக்கிறாள்! என்று எச்சரித்தார் அண்ணன். இறுதிவரை அவளுடன் தொடர்பில் இருந்தவர் தன்னுடைய உயிர் பிரியப் போகும் தருணத்தில் இத்தனை தூரம் நம்மை எச்சரிக்கை செய்ய நினைத்திருக்கிறார் என்றால்... அதனை எவ்வாறு மறப்பது? எவ்வாறு அலட்சியப்படுத்துவது? அவளின் கோப நெருப்பு என்னைக் காவு கொள்ளட்டும். அணு அணுவாக என் தசைகளையும் நாடி நரம்புகளையும் சுட்டுப் பொசுக்கட்டும். கவலையே யில்லை. நான் செய்த தவறுகளுக்குச் சரியான தண்டனைதான் அது. ஆனால் அவளது கோப ஜ்வாலை உங்களிருவரையும் அணுவளவும் தீண்டிவிடக்கூடாது. அதனை என்னால் தாங்க முடியாது. அதனை நினைத்துத் தான் கவலை கொள்கிறேன்...."

தன்னுடைய இரு கரங்களாலும் அவர்களை அணைத்த படி மெல்லக் கண்ணீர் உகுத்தார் பட்டதிரி. எப்போதும் இறுகிய முகத்துடனும் சொல்லவொண்ணா வித்யா கர்வத்துடனும் ஒருபோதும் மனக்கிலேசமடையாத திடசித்த முடையவராக வலைய வரும் அண்ணனா தங்களின் முன் சம்மந்தமேயில்லாமல் மனம் உடைந்து அழுகிறார்? என்ன நேர்ந்து விட்டது இவருக்கு? என்றெண்ணித் தம்பியர் இருவரும் வியந்து விக்கித்துப்போய் நின்றார்கள்.

"இத்தனை தூரம் நீங்கள் உணர்ச்சி வயப்பட்டு நான் பார்த்ததே இல்லையண்ணா..." - என்றார் அச்சுதர். அவரது குரலும் பெரிதும் கம்மிப்போய்த் தழுதழுத்தது.

இப்படி இவர்களிருவரும் உணர்ச்சிக்கடலில் கொந்தளித்துக் கிடப்பதைக் கண்ட வாமனர், பேச்சை திசை மாற்ற விரும்பியதுபோல் "எத்தனையோ முறை தனிமையில் யோசித்துப் பார்த்தும் மூத்தவர் என்ன சொல்ல நினைத்தார் என்பதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லையண்ணா. அண்ணியார் நம் மீது கோபமாய் இருக்கிறார் என்றார். பின்.. ஏதோ நமக்குத் தெரியாதது அவருக்குத் தெரியும் என்றார். அதற்குப்பின் சம்மந்தமேயில்லாமல் ச..ர.... என்று எதையோ எழுதிக் காட்டினார். என்னதான் சொல்ல நினைத்தாரோ?"

"அது இறுதிவரை நமக்குப் புரியப்போவதில்லை வாமனா. அதுதான் நமது விதி. அவர் நமக்கு மரண எச்சரிக்கை விடுக்க நினைத்திருக்கிறார். கடைசி நொடியிலும் நமது குடும்பத்தைப் பாடாய்ப்படுத்தும் துர்தசையை மாற்றப் பார்த்திருக்கிறார். ஆனால் காலன் முந்திக்கொண்டு விட்டான்."

"அவரது வாக்கியங்களுக்கான முகாந்திரம் தேடி நமது காந்தளூர்ச்சாலையின் மூத்த ஆச்சாரியர்கள் சிலரின் பூர்வானுபவப் படிகளை நான் புரட்டிக் கொண்டிருக்கிறேன். ஏதாவது பிடி கிடைக்குமா என்று பார்க்கிறேன்... இதுவரை வெற்றி கிடைத்த பாடில்லை."

"அண்ணா! நீங்கள் தவறாக நினைக்கவில்லையென்றால் நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?" என்று இடைமறித்தார் அச்சுதன். "அண்ணியார் இப்போது எங்கே இருக்கிறார் என்பதைக் கண்டறிந்து அவரை நாங்களிருவரும் சந்தித்துவிட்டு வரட்டுமா? பல்லாண்டு காலத்திற்கு முன்பு அவருக்கு நீங்கள் இழைத்த துரோகத்திற்காக எத்தனை தூரம் இன்றுவரை வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை எடுத்துச் சொன்னால் அவர் உங்களை மன்னித்துவிட மாட்டாரா?"

அடடா! மிகுந்த சிரமப்பட்டு நாம் பேச்சைத் திசை மாற்ற விரும்பினால் இவன் மீண்டும் பழைய குருடி கதவைத் திறடி என்பதைப்போல பழைய பல்லவிக்கே திரும்புகிறானே? என்று வாமனருக்குக் கோபம் வந்தது. ஒரு கணம் நிதானித்து அவன் சொன்ன யோசனையை அசை

போட்டுப் பார்க்கையில், அட? இது கூட நல்ல அணுகு முறையாக இருக்கிறதே? என்று தோன்றியது.

"வாழ்வில் ஒரு முறை பெண் பாபத்தைச் சம்பாதித்துக் கொண்டு விட்டவன் அதிலிருந்து தப்பிக்கவே முடியாது அச்சுதா. இறுதிவரை அணுஅணுவாக அந்தத் தீராத பாபத்தின் கொடிய பலனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். அதிலிருந்து விடுதலையே கிடைக்காது. அவளை மீண்டும் சந்திக்கும் எண்ணத்தை மறந்து விடுங்கள்."

"மன்னிக்க வேண்டும் அண்ணா. இப்படி உங்களை நீங்களே வருத்திக் கொள்வதைப் பார்க்கச் சகிக்க முடியாமல்தான் அப்படிக் கூறினேன். நீங்கள் குறிப்பிட்ட பழைய நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கும் போது அப்படியொன்றும் தீராத பாபத்தை நீங்கள் புரியவில்லை என்றுதான் எனக்குப் பட்டது. பண்டைய கலமறுக்கும் போட்டியில் அண்ணியார் கலந்துகொண்டு வெற்றி பெற, அவருக்கு வித்தை கற்பித்தது நீங்கள்தான் எனும் உண்மையை அனைவருக்கும் முன்னிலையில் நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு பாபமுமறியாத மூத்தவர் அந்தப் பழியை ஏற்றுக்கொண்டார். அந்தக் கணத்திலிருந்து உங்களுக்கும் அவருக்குமான உறவு முடிந்துவிட்டது. அவ்வளவுதானே?

இளம் வயதில் தந்தையாரை எதிர்த்து நிற்கும் துணிவு உங்களுக்கு இல்லாமலிருந்திருக்கலாம். அல்லது அத்தனை பேர் முன்னிலையில் துணிந்து முன்வந்து இவளுக்கு வித்தை கற்பித்தது நான்தான் என்று கூறும் தைரியம் உங்களுக்கு இல்லாமலிருந்திருக்கலாம். நீங்கள் மட்டுமல்ல. அண்ணியாரும் தாம் மாளிகைப்புரத்து வீட்டைச் சேர்ந்தவர் எனும் உண்மையை மறைத்துத்தானே உங்களிடம் வித்தை கற்றுக் கொண்டார்? சொல்லப் போனால் இந்தப் பிரச்சனைகள் இத்தனை தூரம் வளர்வதற்கான மூல காரணமே அவர் இரகசியமாகச் சாலையின் தனுர் வித்தையைப் படித்தறிய முயன்றதுதானே? ஆக முழுத் தவறும் உங்களுடையது இல்லை அல்லவா? இவையெல்லாம் நடந்திருக்கக்கூடாத நிகழ்வுகள்தான். என்றாலும் தீராத பாபமாக எனக்குத் தெரியவில்லையே?"

தைரியமாகத் தன் முன் ஒரு போதும் பேச முனையாத அச்சுதன் நம்பூதிரி, தயக்கமேயில்லாமல் மளமளவென்று பேசிக்கொண்டே செல்வதைக் கண்டு பட்டதிரியின் முகம்

சொல்லிவொண்ணா விகாரத்தையடைந்தது. அவரது கண்கள் இளவலை நேரில் சந்திக்கத் தயங்கி பூமியை நோக்கி நின்றன.

"தவறாக ஏதாவது நான் பேசியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். மனதில் பட்டதைச் சொன்னேன்" என்றார் அச்சுதர் தாம் பேசியதற்கு வருத்தம் தெரிவிக்கும் குரலில்.

"அச்சுதா! என் மீதுள்ள அக்கறையினால்தான் நீ இவ்வாறெல்லாம் பேசுகிறாய் என்பது தெரிகிறது. நான் தீராப்பாபமென்று குறிப்பிட்டது நீ குறிப்பிட்ட விவகாரங்களை அல்ல. இது... வேறு....." - வாக்கியத்தை முடிக்காமல் மென்று முழுங்கும் பட்டதிரியை இருவரும் ஆச்சரியத்துடன் நோக்கினார்கள். இத்தனை தூரம் தங்களிடமே அவர் தயங்குகிறாரெனில்?

"தம்பிகளா! நான் அன்று உங்களிடம் நடந்த நிகழ்வுகள் பலவற்றையும் ஒளிக்காமல் மறைக்காமல் கூறினேன் என்பது உண்மைதான். ஆனால் ஒரே ஒரு தகவலை மட்டும் உங்களிடம் கூறவில்லை. அதனைப் பகிர்ந்து கொள்வதற்கு இன்னமும்கூட என் மனதில் துணிவு ஏற்படவில்லை. நமது குடும்பத்திலேயே தந்தையாரைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாத பரம இரகசியம் அது. அந்த உண்மை உங்களுக்குத் தெரிந்தால் எங்கே என் மீது வைத்திருக்கும் மரியாதையையும் அன்பையும் நீங்கள் முற்றிலுமாக இழந்து விடுவீர்களோ என்று பயந்தே அதனைச் சொல்லாமல் மறைத்தேன். தம்பிகளா! உங்களின் முன் நிற்கும் மனிதன் ஒரு கொடிய பாபகாரியத்தைச் செய்திருக்கிறான். தீர்க்கவே முடியாத பெரும் பாபத்தைச் செய்திருக்கிறான்...!" என்று தழுதழுத்த குரலில் பட்டதிரி பேசிக்கொண்டே செல்லச் செல்ல, அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தது.

"என்ன அண்ணா இது? எங்கள் இருவரின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை இவ்வளவுதானா? ஏதோ சந்தர்ப்ப வசத்தால் அல்லது விதி வசத்தால் நடந்துபோன பழைய நிகழ்வுகளுக்காக உங்களை வெறுக்க முடியுமா? எங்களுக்கு நினைவு தெரிந்த நாள்முதல் அன்னைக்கு அன்னையாய்த் தந்தைக்குத் தந்தையாய் ஆசானாய் - ஏன் தெய்வமாகவும் கூட விளங்கும் தங்களின் மீதா நாங்கள் மரியாதை இழப்போம் என்று நினைத்தீர்கள்?" என்றபடி

வாயனர் அவரை நெருங்க, இருவரையும் கட்டியணைத்து உச்சி முகந்தார் பட்டதிரி.

"உண்மைதான் தம்பிகளா. நீங்கள் என்மீது கொண்டிருக்கும் பக்தியையும் பாசத்தையும் எதுவும் கலைத்துவிட முடியாது. சொல்லப்போனால் என்னுடைய வாழ்க்கைக்கே புதிய அர்த்தத்தைக் கொடுத்தவர்கள் நீங்கள்தான். சொந்த வாழ்வில் நேர்ந்த துயரங்களினாலும் பிரிந்தவர் என் மீது கோபம் கொண்டு என்னை விட்டுப் பிரிந்து சென்றதினாலும் பிடிப்பற்று சுற்றித் திரிந்து கொண்டிருந்த எனக்கு மீண்டும் வாழ்வில் பிடிப்பை உண்டாக்கியவர்கள் நீங்கள்தான். அதனால்தான் நீங்கள் சிறுவர்களாக இருக்கும்போதே சாலைக்குக் கொண்டு வந்து விட்டேன். தனுர்வித்தையில் ஈடிணையற்ற சட்டர்களாக உங்களை உருவாக்க வேண்டும் என்பதே என் வாழ்வின் இலட்சியமாகிப் போனது. அதனால்தான் என்னுடைய தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில்கூட நான் அத்தனை தூரம் அக்கறை செலுத்தவில்லை. அதில் என் பெண்கள் இருவருக்குமே சற்று வருத்தம்தான்.

இத்தனை காலம் மறைத்து வைத்திருந்த உண்மையை உங்களிருவருடனும் பகிர்ந்து கொள்ளும் துணிவை நீங்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கை கொடுத்து விட்டது. வாருங்கள், புரவியில் சென்றுகொண்டே பேசுவோம். மாலைக்குள்ளாகவாவது ஆரைவாய்மொழிக் கணவாயை அடைந்தாக வேண்டும். நூற்றிப் பன்னிரண்டாவது ஆண்டாக இரண்டாம் விக்கிரமாதித்ய வரகுணர் எனும் அபிஷேக நாமத்துடன் தென்மலைநாட்டின் மணிமுடியை ஏற்கப்போகும் மலையனூரருக்கு நாளை மறுநாள் பட்டாபிஷேக வைபவமல்லவா?"

6. பட்டாபிஷேகம்



பொழுது விடிந்து விட்டது. என்றாலும் ஆதவன் இன்னமும் கிழக்கில் உதய மாகாமல் ஏதோ சோம்பலின் பாற்பட்டுப் படுத்துக் கிடந்தான். அந்த விடியல் நேரத்தில் ஆரை வாய்மொழிக் கணவாயின் கிழக்குப் பகுதியில் மலை முகடுகளினூடே ஒரு மலைப்பாம்பைப் போல் நெளிந்து வளைந்து கிடக்கும் கோட்டை மதிலைப் பிளந்து கொண்டு கம்பீரமாக எழுந்து நின்றது பகவதியம்மன் பெருவாயில். கோட்டையின் காவல் தேவதையாக நீண்ட காலமாக அருள் பாலித்து வரும் அன்னையின் சிறு குடிசைக் கோயில்[7] அந்த வாயிலுக்கருகிலேயே அமைந்திருந்ததால் அந்தக் கோட்டை வாயிலுக்கும் அந்தப் பெயரே நிலைத்து விட்டது. வாயிலின் உச்சியில் தெரிந்த காவல் அரண்களில் இரண்டு நாஞ்சில் நாட்டுக் காவல் வீரர்கள் எக்காளம் என்றழைக்கப்பட்ட மிக நீண்ட ஊது குழல்களை தூக்கமாட்டாமல் தூக்கிக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

இருவரில் ஒருவன் தன்னுடைய இதழ்களை எக்காளத்தில் சிரமப்பட்டுப் பொருத்தித் தன்னுடைய மூச்சுக்காற்றையெல்லாம் உள்ளிழுத்து அதன் சிறிய முனை வழியே செலுத்தினான். "பூம்...." என்று மிக ஆழமான ஆனால் மிக மெல்லிய சப்தம் எழுந்தது. "ம்ஹூம். இப்படி ஊதக்கூடாது. நீ இதழ்களை எக்காளத்தில் பொருத்தியிருக்கும் விதமே தவறானது. இப்போது பார்..."

அந்த இரண்டாவது வீரன் அனாயசமாக எக்காளத்தின் முனையைப் பிடித்து சிறிது நேரம் மூச்சுப்பிடித்து ஊத, மிகப் பெரிதாக அந்தப் பிராந்தியமே கிடுகிடுக்கும் வண்ணம் "பூஊஊஊஊம்....!" என்றொரு பேரோசை எழுந்தது. எக்காளத்தின் ஓசை எழுந்த மறுநொடியே நாலா

---

[7] ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், மாடக்கோயில் என்று எழுவகையான திருக்கோயில் வகைகளை அப்பர் பெருமான் அறிமுகம் செய்கிறார். அதில் குடிசைக்கோயிலும் ஒன்று. குடிசைக் கோயிலின் மாதிரி பல்லவர் காலச் சிற்பிகளால் மாமல்லபுரத்தில் படைக்கப்பட்டு இன்று திரௌபதி இரதம் எனும் பெயரால் வழங்கப்படுகிறது.

திசைகளிலும் "பூம்...." "பூம்...." என்று கொம்போசைகள் எழுவாயின.

அடுத்த கணமே மந்திரம் போட்டதுபோல் அந்த மலைச்சிகரங்களின் மீது அமைக்கப்பட்டிருந்த அத்தனை காவல் அரண்களிலும் ஒரே மாதிரியான இலச்சினைக் கொடிகள் சரசரவென்று மேலேறலாயின. அவை மேலே ஏற்றப் படுவதற்கும் கிழக்கில் ஆதவன் உதிப்பதற்கும் நேரம் சரியாக இருந்ததால் வானளாவிய அக்கொடிகளின் மீது சூரிய கிரணங்கள் பளீரென்று பளிச்சிடலாயின. குறிப்பாக மலைச்சிகரங்களுக்கு நடுவே உயரமானதொரு பீடத்தின் உச்சியில் அமைந்திருந்த கம்பீரமான அரண்மனையின் சிகரத்திற்கு மேல் ஏற்றப்பட்டிருந்த மிகப் பெரிய அளவிலான கொடி, கம்பத்தின் உச்சியில் செருக்குடன் மேலேறி நின்று அடிக்கும் காற்றில் சட படவென்று ஏராளமாக அலட்டிக் கொண்டது. மிக நீண்ட காலத்திற்குப் பிறகு மேலேறி வந்துள்ள கொடியல்லவா? அதனால்தான் அலட்டல் சற்று அதிகமாகவே இருக்கிறது போலும்.

அக்கொடியில் எழுதப்பட்டிருந்த இலச்சினையில் பொங்கும் அலைகடலும் அக்கடலினூடே கம்பீரமாகப் பாய்மரம் விரித்துப் பாயும் பெருங்கலமொன்றும் சுற்றிலும் சில நாகிரி எழுத்துக்களும் வரையப்பட்டிருந்தன. அன்றொருநாள் பைராகியார் நீட்டிய முத்திரை மோதிரத்தில் காட்டப்பட்டிருந்த இலச்சினையை அந்தக் கொடி ஓவியம் பெரிதும் ஒத்திருந்தது. அப்படியானால் இது பண்டைய ஆய்வேளிர் குலத்தின் இராஜமுத்திரை என்பதில் சந்தேகமில்லை.

இன்றுதான் புதிய நூற்றிப் பதினெட்டாவது ஆய்வேளாக விக்கிரமாதித்ய வரகுணரின் வழித் தோன்றலான அந்த ஜடாமகுட பைராகியார் முடிசூடப் போகிறார். அடடா, என்ன இது? பழைய ஞாபகத்தில் ஜடாமகுடமென்றும் பைராகியார் என்றும் நாம் இன்னமும் அவரைக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்? அந்தச் சடையையெல்லாம் விட்டொழித்துப் பண்டைய அரச குலத்தின் இளவலுக்கேயுரிய கம்பீரமான தோற்றத்துடனும் நீண்ட மீசையுடனுமல்லவா இப்போது அவர் காட்சியளிக்கிறார்?

பெரும்பாறை அரண்மனை என்று பொதுமக்களால் குறிப்பிடப்பட்ட அம்மாளிகையின் வெளிப்பகுதிகளில்

காவல் வீரர்களின் நடமாட்டம் நாலாபுறங்களிலும் மிகுதியாகவே தெரிந்தது. தென்பகுதியைச் சேர்ந்த பல அரசாங்கப் பிரதிநிதிகளும் இராஜ்ஜிய பரிபாலகர்களும் நாடுவாழிகளும் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒன்றாகக் கலந்துகொள்ளும் வைபவமல்லவா? அதனால்தான் பாதுகாவலும் மிகுதியாகவே உள்ளது. காவல் வீரர்களின் நடுவே நாஞ்சில் நாட்டின் பொதுமக்களும் ஆங்காங்கே தெரியத்தான் செய்தார்கள். ஆனால் அவர்களின் முகத்தில் உற்சாகத்திற்கு பதில் ஒரு விதத் தயக்கமும் பயமுமே தெரிந்தன. மிகுதியான காவல் கட்டுப்பாடுகளினால் அவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது போலும்.

அதிகாலை முதல் முகூர்த்தத்திலேயே பட்டாபிஷேக வைபவம் நடந்து முடியவேண்டுமென்று திட்டமிடப் பட்டிருந்ததால் எக்காளம் ஊதப்பட்ட ஒரு நாழிகை நேரத்திலேயே பெரும்பாறை அரண்மனை வளாகம் மிகுந்த பரபரப்பை எட்டிவிட்டது. அரண்மனையில் நடுநாயகமாக அமைந்திருந்த பெரிய இராஜ சபையில் விருந்தினர்கள் அனைவரும் மெல்லக் கூடலானார்கள். அவர்களில் பலரையும் நாம் முன்பே சந்தித்திருந்தாலும் ஓரிரு முகங்களை அடையாளம் காண முடியவில்லை. குறிப்பாகக் காந்தளூர் ஆச்சாரியாருக்கு அருகே அவருக்குச் சமமான ஆசனத்தில் வீற்றிருக்கும் வயதான பெரியவரை நாம் இதற்கு முன் சந்தித்ததில்லை. இருவரும் அடிக்கடி தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டார்கள். இவ்விருவருக்குப் பின்னால் தனி ஆசனங்களில் பட்டதிரியின் தம்பியர் இருவரும் அமர்ந்திருந்தார்கள்.

காந்தளூர்க் குழுமத்திற்கு நேரெதிரே பாதையையொட்டி அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் மூத்த பாண்டியர் அமரபுஜங்கதேவரும் அவரருகே இளைய பாண்டியரான சடையமாறரும் இவ்விருவருக்கும் பின்னால் தென்னவன் உத்தரமந்திரியாரும் இராஜ குலத்திற்குரிய அணிமணிகளும் பாண்டிநாட்டுப் பெருமுத்துக்களும் தரித்துக் காட்சியளித்தார்கள். அம்மூவரையும் சுற்றிப் பாண்டிநாட்டு மெய்க்காவற் படையும் காணப்பட்டது. அவர்களுக்கு முன்னால் அமைந்திருந்த ஆசனங்களில் இருபுறங்களிலும் அமர்ந்திருப்பவர்கள் மலைநாட்டின் பண்டைய நாடுவாழிகள். அவர்களில் ஒரு சிலரை இக்கதையின் முதல் அத்தியாயத்தில் விழிஞம் கோட்டையில் சந்தித்திருக்கிறோம்.

அனைத்து நாடுவாழிகளுக்கும் முன்னதாக வீற்றிருந்த வள்ளுவநாடுவாழியார் பரபரப்புடன் நிலைகொள்ளாமல் அங்குமிங்கும் பார்வையை ஓட்டியவராய்க் காணப்பட்டார். சபையெங்கிலும் காணப்பட்ட அவரது வீரர்களும் அதிகாரிகளும் அவ்வப்போது அவரை நெருங்கி பணிவுடன் ஏதோ புகன்று மேல் ஆணைகளை வாங்கிக்கொண்டார்கள்.

முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டதால் பட்டாபிஷேகம் நடைபெறப்போகும் மண்டபத்தில் முன்குடுமி தரித்த சோழிய அந்தணர் நால்வர் வேத மந்திரங்கள் சொல்லியபடி ஹோமகுண்டத்தில் பரப்பப்பட்டிருந்த மணலில் மேல் புரசங் குச்சிகளை சரிசமமாகப் பரப்பி மூங்கில் கழிகளை உரசித் தீப்பொறியை உருவாக்கினர். சிறிது நேரத்திலேயே தீப்பற்றிக் கொள்ள, தென்னை நாரால் அந்தத் தீயைப் பிடித்து ஹோமகுண்டத்தில் இட்டனர். புரசங்குச்சிகள் பற்றிக் கொள்ள, நெருப்பு சடசடவென்று மேலெழலாயிற்று. குழுவில் மூத்தவராகத் தெரிந்த வயதான அந்தணர் மரத்தினால் செய்யப்பட்ட நீண்ட ஹோமக் கரண்டியினால் நெய் வார்க்க, வேள்வித் தீ வானளாவ எழுந்தது. யஜுர்வேத மந்திரங்கள் மளமளவென உச்சஸ்தாயியில் உச்சரிக்கப் பட்டன. அந்தப் பட்டாபிஷேக வைபவத்திற்கு வருகை தந்து அவர்கள் அளிக்கப்போகும் அவிர்பாகங்களை உரிய தேவர்களிடம் சேர்ப்பித்து விடுமாறு அவர்கள் அக்னி தேவனை மந்திரங்களின் வாயிலாக வேண்டிக் கொண்டார்கள்.

அந்தணர்களின் உதவியாளர்களைப்போல் தெரிந்த இருவர், பட்டு நூல் சுற்றப்பட்டிருந்த நூற்றியெட்டு பெரும் தங்கக் குடங்களில் தேங்காய் மற்றும் மாவிலைகளை இட்டு சந்தனக் குங்குமப் பொட்டிட்டு அவற்றைத் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு வந்து வேள்வித் தீயின் அருகே வரிசையாக அடுக்கினர். அக்குடங்களில் கங்கை, யமுனை, பிரம்மபுத்திரை, கிருஷ்ணை, பம்பை, பரதப்புழா, காவிரி, தென்பெண்ணை, பாலாறு, தாமிரவருணி முதலான புனித நதிகளினின்றும் சேகரிக்கப்பட்ட நீர் நிரப்பப் பட்டிருந்தது.

வேள்வி மந்திரங்களை தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருந்த அந்தணர்கள், முதலில் அந்த வேள்வி பூரிவதற்குரிய அனுமதியை திருமாலின் சேனை முதலியாரான விஷ்வக்ஸேனரிடம் வேண்டிப் பெற்றார்கள். பின்னர் வரிசையாக கணபதி, முருகன், கொற்றவை,

திருமகள், திருமால், ஈசன், நவகிரகங்கள், அஸ்வினி தேவர்கள் என்று பல்வேறு தெய்வங்களையும் அவரவருக்குரிய மந்திரங்களைச் சொல்லி அப்புனிதக் குடங்களில் ஆவிர்பவித்தார்கள். தெய்வங்கள் வந்து அமர்ந்ததால் அந்தக் குடங்களும் அவற்றின் நீரும் புனிதத் தன்மை பெற்றன. தெய்வங்கள் வந்தமர்ந்தபின் அவ்வத் தெய்வங்களுக்குரிய பூசனைகளைச் செய்து அவர்கள் விரும்பும் பொருட்களை ஆஹுதிகளாய்த் தீயில் வார்த்தார்கள். இவ்வாறு அங்கு வந்தருளியிருக்கும் தெய்வங்களைத் திருப்தி செய்தால் அவை மகிழ்ச்சியடைந்து வேண்டிய நற்பலன்களைக் கொடுக்கும் என்பது நம்பிக்கை.

வேள்வி துவங்கிய சிறிது நேரத்திலேயே மலையனூரனான விக்கிரமாதித்ய வரகுணர் வாழ்த்தொலிகளும் வாத்திய கோஷங்களும் முழங்க, தன் பரிவாரங்களுடன் மண்டபத்திற்கு எழுந்தருளினார். பண்டைய ஆய்வேளிருக்கேயுரிய பட்டாடையும் தங்கக் கவசங்களும் தரித்து இதுவரை நாம் கண்டிராத மிக வித்தியாசமான கோலத்தில் காணப்படும் அவரை அந்தச் சபையில் கூடியுள்ள பலரும் வாய் பிளந்தபடி நோக்கினார்கள். குறிப்பாகக் காந்தளூர் ஆச்சாரியாரின் அருகில் அமர்ந்திருந்த அந்த வயதான பெரியவரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. "தம்பி.... தம்பி...." என்று அவரது உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

வேள்வி உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் காற்று வந்து வேள்வித் தீயை அலைக்கழித்தது. நெருப்பு சிறிது நேரத்திற்கு நெருப்பு அவிந்து போக, ஹோமகுண்டத்திலிருந்து குப்பென்று எழுந்த புகை நாலாபுறங்களிலும் சூழ்ந்தது. அங்கு கூடியிருந்த அத்தனை பெருமக்களின் கண்களும் சிறிது நேரம் படாதபாடு பட்டன. முதிய அந்தணர் மிகவும் முயன்று ஊதுகுழலால் ஊதி ஊதி மீண்டும் நெருப்பைப் பற்ற வைத்தார். வேள்வி தொடர்ந்து நடைபெறலாயிற்று.

இறுதியாக, தெய்வங்களின் சாந்நித்தியத்தினால் புனிதமான நீர்க்குடங்களை ஒவ்வொன்றாக வரகுணரின் மீது பொழிந்தார்கள். மலையனூரனான வரகுணர் வணக்கத்துடன் அப்புனித நீராட்டை ஏற்றார்.

"பண்டைய ஆய்வேள் குலத்துதித்த தோன்றல்.. வாழ்க! வாழ்க!"

"தென்மலைநாட்டு நாடுவாழிகளின் தலைவர்.. வாழ்க! வாழ்க!"

"நூற்றிப் பதினெட்டாவது ஆய்வேளிர் ஸ்ரீ ஸ்ரீ விஜயதுங்க விக்கிரமாதித்ய வரகுணர்.. வாழ்க! வாழ்க!"

இவ்வாறு பல்வேறு வகைகளிலும் எழுந்த வாழ்த்தொலிகள் அங்கு கூடியிருந்த பெரியவர்களின் முகங்களில் விதவிதமான உணர்ச்சிகளை உண்டாக்கின. குறிப்பாக வள்ளுவ நாடுவாழியாரின் முகத்தில் தோன்றிய வறட்டுப் புன்னகையை நம்மால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இந்த வைபவத்தை முன்னின்று நடத்துபவரைப்போல் காணப்பட்டாலும் உள்ளூர இந்த ஏற்பாடுகளில் அவருக்கு எந்த அளவிற்குத் திருப்தி நிலவுகிறது என்பது கேள்விக்குறிதான்.

புனித நீராட்டு முடிந்ததும் கட்டியக்காரனொருவன் மண்டபத்திற்கு முன்வந்து உரத்த குரலில் கீழ்க்கண்டவாறு முழங்கினான்.

"கையிலயங்கிரியில் வீற்றிருக்கும் புரமெரித்த பரமன் வாழ்க. பாற்கடலில் பள்ளிகொண்ட திருமகள் கேள்வன் வாழ்க. தாமரையில் வீற்றிருக்கும் படைப்புக் கடவுள் வெல்க. பழையோள் தேவி கொற்றவை வாழ்க. தென்மலை நாட்டு பகவதி வாழ்க. பார்க்கவ இராமனின் பரசு வெல்க. நாகர் வாழ்க. தேவர் வாழ்க.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இப்புண்ணிய பூமியில் காற்றுக்கும் மழைக்கும் தெய்வமாக விளங்கும் வருணனின் அம்சமாக முதல் ஆய்வேள் மன்னர் பராங்குச தேவர் தோன்றினார். பராங்குசரிலிருந்து பரதுர்க்கன் தோன்றினார். அவருக்குப் பின் சந்திராதித்தன், பில்வமங்களன், சத்ருக்னன், கார்த்தவீர்யன் என்று பல பேரரசர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராகத் தோன்றி ஆய்வேள் குலத்தை அலங்கரித்தனர். இவர்களின் வம்சத்தில் கடையெழு வள்ளல்களுள் ஒருவராகப் புகழ்பெற்ற ஆய்வேள் தோன்றினார்.

அத்தகைய பழமையான வம்சத்தில்தான் வீரத்தில் நிகரற்றவரும் திருமகளை எப்போதும் வெற்றி கொள்ளும் திருமாலுக்கு நிகரானவருமான ஸ்ரீ வல்லபராஜனாம்

கோக்கருந்தடக்கன் தோன்றினார். பார்த்திவசேகரபுரத்தில் விஷ்ணு பட்டாரகர்க்குக் கோயிலமைத்துக் காந்தளூர் மரியாதையால் சட்டர்கள் தொண்ணூற்றைவர்க்குச் சாலை அமைத்தார். இவருடைய மகனான ஸ்ரீ விக்கிரமாதித்ய வரகுணர் வீரத்தில் குமரனையும் அழகில் அருச்சுனனையும் ஒத்தவர். ஸ்ரீமூலவாச விஹாரைக்குப்[8] பள்ளிச் சந்தமளிப்பித்து அதனைப் பழைய நிலைக்கு உயர்த்தியவர். இந்த வம்சத்தில் அவதரித்த நூற்றிப் பதினெட்டாவது ஆய்வேள் மன்னராம் ஸ்ரீ ஸ்ரீ விஜயதுங்க விக்கிரமாதித்ய வரகுண மகாராஜர் பராக்! பராக்! பராக்!"

இந்தச் சிறிய இடைவெளிக்குள் தனது ஈர உடைகளை மாற்றிப் புதுப்பட்டாடைகள் புனைந்து கொண்டுவிட்ட வரகுணர், நேராக நடந்து வந்து காந்தளூர் பட்டதிரிக்கு அருகில் வீற்றிருந்த பெரியவரை நெருங்கி "அண்ணா!" என்றபடி காலில் வீழ்ந்தார். அவரைத் தடுத்து நிறுத்திய அந்தப் பெரியவர் வரகுணரை அப்படியே கட்டிப் பிடித்து உச்சி முகர்ந்தார்.

"தம்பி! தம்பி! என் மனோரதம் நிறைவேறி விட்டது. என் மனோரதம் நிறைவேறி விட்டது. இனி நிம்மதியாகக் கிளம்பி விடுவேன். எந்தக் குறையுமில்லை."

"அண்ணா! மணிமுடியை தாங்கள்தான் தங்களது திருக்கரங்களால் என் சிரசில் சூட்ட வேண்டும்."

"இல்லை தம்பி. அந்தத் தகுதியும் உரிமையும் இந்த உலகில் தானைத்தலைவர் ஒருவருக்கு மட்டும்தான் உண்டு. கைக்குழந்தையான உன்னை என் மடியில் கொண்டு வந்து கிடத்தியவர் அவர்தான்...."

"அவரால்தான் இந்த வைபவத்திற்கு வர முடியவில்லையே அண்ணா? அவருக்கு பதிலாகத் தாங்களே...."

"தம்பி. நான் சொல்வதைக் கேள். இங்கு கூடியிருப்பவர்களில் வள்ளுவ நாடுவாழியாரே வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர். அவரது திருக்கரங்களாலேயே

---

[8] ஸ்ரீமூலவாசம் என்பது மலைநாட்டில் அமைந்திருந்த பண்டைய பௌத்த விஹாரை. விக்கிரமாதித்ய வரகுணர் இவ்விஹாரைக்குப் பள்ளிச்சந்தம் கொடுத்திருப்பதற்குச் சான்றுகள் உள.

இந்த முடிசூட்டு விழா நடைபெற வேண்டும். அதுதான் முறையாக இருக்கும்."

மெல்லிய குரலில் அடுத்தவர்களுக்குக் கேட்காத வகையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த உரையாடலில் குறுக்கிட்ட பட்டதிரி அவசர அவசரமாக "ஆம் தம்பி. அண்ணன் சொல்வதுதான் சரி. வள்ளுவனாரே தங்களது திருமுடியில் அந்த மகுடத்தைச் சூட்டட்டும்."

"சரி. நீங்கள் சொல்வதைப் போலவே நடக்கட்டும். வள்ளுவனாரை நீங்களே சபை மேடைக்கு அழைத்து வாருங்கள்..."

முகத்தில் பலவிதமான உணர்ச்சிகளும் தோன்ற, வள்ளுவர் வேலைப்பாடுகள் நிறைந்த அந்த மணிமுடியை வரகுணரின் முடியில் சூடினார். "ஜெயவிஜயீபவ!" எனும் ஜெயகோஷம் வானளாவ எழுந்து ஆரைவாய்மொழி மலைமுகடுகளிலெல்லாம் எதிரொலித்துக் கரைந்தது.

7. மாமுனிவன் வரம்



ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் பழைய பூர்வானுபவக் கிரந்தத்தையும் இரகசிய சங்கிராமப் பொருட்களையும் நூறாண்டுகளுக்கும் மேலாகப் பாதுகாத்து வந்த அந்தப் பவழப்பாறைப் பெட்டி தங்களின் கைகளுக்குக் கிடைத்த கணம் முதலே நண்பர்களிருவரும் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தவிப்புக்குக் காரணம் பவழப்பாறைப் பெட்டியின் மேல் எழுதப்பட்டிருந்த திறவுகோல் சூத்திரங்களைப் படிக்க முடியாமைதான்.

அவர்களிருவருக்கும் சம்ஸ்கிருதம் தெரியாது. அதனைத் தெரிந்து வைத்திருந்த தம்புராட்டியாருக்கோ கண்பார்வை தெரியாது! சரி, வேறு எவரிடமாவது எடுத்துக் கொண்டு சென்று அவற்றைப் படிக்க முயலலாம் என்றால் அதையும் தம்புராட்டியார் தடுத்து விட்டார். பெருஞ்சாலைக்கே உரிய இரகசிய கிரந்தங்கள் அடங்கிய அந்தப் பெட்டியை பற்றி செய்தி வெளியுலகிற்குத் தெரியாமலிருப்பதுதான் நல்லதாம். இந்த விஷயம் வெளியில் கசிந்தால் பெட்டி

அவர்களிடமிருந்து பறிக்கப்படுவதுடன் சாலைக்கும் பேராபத்து நேரும் வாய்ப்புள்ளதாம்.

சரி, எழுத்துக்களை தம்புராட்டியாருக்குப் புரியும் வகையில் சொற்களால் விளக்கலாம் என்றால் அதுவும் நடக்கவில்லை. "நீண்ட கோடு. அதற்குப் பிறகு ஒரு சிறிய சுழி. அதனுடன் இயைந்த பெரிய சுழி. அப்புறம் அதனை ஒட்டி இரண்டு புள்ளிகள்..." என்று நண்பர்களின் வினோதமான சொற்பிரயோகங்களைப் புரிந்து கொள்வதற்குள் தம்புராட்டியாருக்கு மண்டையே இரண்டாகப் பிளந்துவிடும்போல் ஆகிவிட்டது. ஓரிரு நாழிகைகளே நீடித்த இந்த முயற்சியும் விரைவில் கைவிடப் பட்டது.

ஆக, வேறு வழியின்றி இருவருக்கும் அடிப்படை சம்ஸ்கிருத எழுத்துக்களைக் கற்றுக் கொடுப்பதுதான் ஒரே வழி என்று தம்புராட்டியார் முடிவெடுத்தார். பெட்டியைத் தோண்டி எடுத்த மறுநாளே இந்தக் கர்ண கடூரமான எழுத்துப் பயிற்சி களரிக்கு வெளியே அமைந்திருந்த மணல் திடலில் துவங்கி விட்டது.

"இதோ... இவை தான் உயிரெழுத்துக்கள். அ, ஆ, இ, ஈ, உ, ஊ. க்ரூ[9]..... என்ன, உன்னிகளா... நான் எழுதுவதைக் கவனிக்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?"

பார்வையற்ற இவரால் எப்படி நாம் வேறெங்கோ பார்த்துக் கொண்டிருப்பதை உணர முடிகிறது? என்று நண்பர்கள் வியந்தார்கள். இருவரும் அந்தக் காலத் திண்ணைப் பள்ளித் தொந்தரவுகளிலிருந்தும் வாத்திகளின் அடி உதைகளிலிருந்தும் விட்டு விடுதலையாகிப் பலப்பல வருடங்கள் ஆகிவிட்டன. இத்தனை காலம் கழித்து அந்தப் பழைய பள்ளிப் பருவத்திற்குத் திரும்பப் போய் புதிய மொழியை எழுத்து எழுத்தாக எழுதிக் கற்பதென்பது பெரிய தொந்தரவாக இருந்தது. அதிலும் களரிப் பயிற்சி முடித்த கையோடு உடலும் மனமும் சுறுசுறுப்பாக இதைச் செய்வோமா அதைச் செய்வோமா என்று அலையும் வேளையில் ஓரிடத்தில் நிலையாக ஐந்து நிமிடங்கள் சும்மா அமர்ந்திருப்பதென்பதே பெரிய காரியம். இந்த

[9] க்ரூ சம்ஸ்கிருதத்தில் உயிரெழுத்துக்களுள் ஒன்று.

இலட்சணத்தில் எழுத்துப் பயிற்சி வேறா? தாங்க முடியவில்லை ஐயா....

எல்லாவற்றுக்கும் மேலாக மொழிப்பயிற்சியில் தம்புராட்டியார் காட்டும் கண்டிப்பு வேறு. வெகு விரைவில் இருவருக்கும் வடமொழி கற்றுக் கொடுத்து அந்த ஸ்லோகத்தைப் படித்து விடும் அவசரத்தில் அவர் இருந்தார். நண்பர்களின் பள்ளிக்கூடப் புலம்பல்களெல்லாம் அவரிடம் எடுபடவில்லை.

"ஓரிடத்தில் நிலையாக அமர்ந்து எழுதுவதற்கே இத்தனை சிரமமாக இருக்கிறதென்றால் மனம் அத்தனை பரபரப்பில் இருக்கிறது என்றுதானே பொருள்? பரபரப்பான மனதினால் எதையுமே சரியாக உள் வாங்கிக்கொள்ள முடியாதென்பது தெரியுமல்லவா?" என்றார் சூடாக.

ஏற்கனவே இவரிடம் களரிப் பயிற்சியின்போது அனுபவிக்கும் கொடுமைகள் போதாதென்று இந்தப் புதிய சித்திரவதைகள் வேறா? இந்தப் பெட்டியை எடுத்து அப்படியே மறைத்து வைத்திருக்கலாம் போலிருக்கிறதே? என்று இருவரும் தமக்குள் பேசிக்கொண்டார்கள். விட்டால் இப்படியே திரும்பிப் பார்க்காமல் தலைதெறிக்க ஓடி உறையூருக்கோ தொண்டை மண்டலத்திற்கோ போய்ச் சேர்ந்துவிடலாம் என்றுகூட ஒரு கட்டத்தில் தோன்றி விட்டது.

"உன்னிகளா! என்ன யோசனை? நான் கோயிலுக்குக் கிளம்பியாக வேண்டும். சீக்கிரம் எழுதிப் பழகுங்கள்."

கெட்டது குடி. முன்பு பழகிய எழுத்துக்களுக்கும் இப்போது இவர் மணலில் எழுதிய எழுத்துக்களுக்கும் சம்மந்தமில்லாமல் இருக்கிறதே?

"இ...இது என்ன எழுத்து?"

"இதற்கும் பெயர் அனுஸ்வரம். அம் - அஹ. எழுத்துக்கு மேலே புள்ளியிருந்தால் அம். எழுத்துக்கு அருகில் இரண்டு புள்ளிகள் இருந்தால் அஹ. எங்கே, எழுதுங்கள்? காகஹ. கா... அதற்குப் பின் க..... க வின் முடிவில் ஹவுக்கு பதில் இரண்டு புள்ளிகள். அவ்வளவுதான்."

"காகஹ. அப்படியென்றால் என்ன அர்த்தம்?"

"காகஹ என்றால் காக்கை என்று பொருள்."

சொல்லி வைத்தாற்போல அந்தக் கணத்தில் ஒரு அண்டங்காக்கை மணியனாரின் தலைக்கு மேல் பறந்து எச்சமிட்டுவிட்டுச் சென்றது. அடச்சீ.....சனியனே! என்று வைதபடி அதனைத் துரத்தினார் மணியர்.

"உனக்கு அதிருஷ்டம் தரப்போகும் அப்பாவி ஜீவனை ஏன் துரத்துகிறாய்?"

"இந்தக் காக்கையினால் என்ன பாழாய்ப்போன அதிர்ஷ்டம் எனக்கு வந்துவிடப் போகிறது?"

"அப்படிச் சொல்லாதே. இந்தப் பகுதிகளில் ஒரு நம்பிக்கை உண்டு. நண்பகல் வேளையில் காக்கை உச்சந்தலைக்கு நேர் மேலே எச்சமிட்டுவிட்டுச் சென்றால் பல்லாண்டு காலமாகக் காணாமற் போன உறவு மீண்டும் திரும்பத் துளிர்க்குமாம்."

"பூர்வஜென்மக் காதலி எவளாவது கழிக்குடியில் என் நண்பருக்குக் கிடைப்பாள் என்கிறீர்களா?" என்றார் மழபாடியார்.

"கிடைக்கலாம். யார் கண்டது? நாஞ்சில் நாட்டுக் கன்னிகளின் கட்டழகில் மயங்காதவர் யார்?" என்றபடி கண்களைச் சிமிட்டினார் தம்புராட்டியார். ஆனால் அடுத்த கணமே தனது கடமையை ஞாபகப்படுத்திக் கொண்டவராக "சரி, சரி. இந்த எழுத்துக்களையெல்லாம் நான் உச்சி காலப் பூஜையை முடித்துக்கொண்டு வரும் வரை எழுதிப் பழகுங்கள். அத்தனை எழுத்துக்களையும் ஸ்பஷ்டமாக உச்சரித்தால்தான் நண்பகல் உணவு. இல்லையேல் திருக்கோயில் பிரசாதம் மட்டும்தான்!" என்று எச்சரித்த படியே அவ்விடம் விட்டு அகன்றார்.

"எனக்கு ஏற்படும் கடுங்கோபத்தில் அந்தப் பதரதிட்ட விஹாரையின் கிழட்டு பிஷுவையும் காம்போஜத்திலிருந்து வந்து நம் கழுத்தை அறுத்துவிட்ட கள்ள பிஷுவையும் ஒரே எண்ணைக் கொப்பரையில் சீராக வறுத்தெடுத்து காக்கைகளுக்கும் கழுகுகளுக்கும் உணவாய்ப் போட்டு விடுவேன்."

"ஏன் மற்ற மூவரையும் விட்டுவிட்டீர்கள்? எண்ணைக் கொப்பரையில் பேரரசருக்கும் பல்லவராயருக்கும் மாராயருக்குக் கூட இடம் உண்டுதானே?"

"அவர்களுக்கு அத்தனை கடுமையான தண்டனை தேவையில்லை. கொதிக்கும் வெந்நீரில் வேகவைத்துத் தோலை மட்டும் உரித்தால் போதும்."

"ஏன் இத்தனை கோபப்படுகிறீர்கள்? அவர்கள் செய்த செயல்கள் எல்லாம் நமது நன்மையை உத்தேசித்துத்தானே? இங்கு வந்து சேர்ந்த மூன்று வாரங்களில் எத்தனையெத்தனை அரிய பயிற்சிகளைக் கற்று முடித்து விட்டோம்?"

"எல்லாம் எதற்காக? கழுத்தறுக்கும் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு அந்தப் பாழாய்ப்போன காந்தளூர் ஆச்சாரியாரின் கைகளினால் வர்மத் தாக்குதலுக்குள்ளாகி நிரந்தரமாய் முடமாவதற்காக. எங்கே அடிபடப் போகிறதோ? எந்த அவயத்தை இழக்கப் போகிறோமோ? தெரியவில்லை. அந்தப் பழைய பரசுபெறு மாமுனிவன்[10] பெருஞ்சாபம் குறுக்கிட்டு நம்மைக் காப்பாற்றினால்தான் உண்டு."

"அதென்ன பழைய பெருஞ்சாபம்? எனக்குத் தெரியாதே? என்னென்னவோ இரகசியங்களையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே? பரமன் மழபாடி மற்றும் கம்பன் அரையன் என்கிற பெயரில் இளைஞர்கள் எவராவது கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொண்டால் காந்தளூர் ஆச்சாரியார் தோற்றுப்போய் விடுவாரென்று அந்தக் காலத்திலேயே பரசுராமன் சாபம் கொடுத்து விட்டாரா என்ன?"

"ம்ஹூம். அதெல்லாம் ஒன்றுமில்லை. இது வேறு கதை. நாம் சாலைக்கு வந்து சேர்ந்த மறுநாள் களைப்பு அதிகமாகி விட்டதால் நீங்கள் தம்புராட்டியாரின் மடியிலேயே தலையை வைத்துச் சுகமாக உறங்கி விட்டீர்களல்லவா? அதற்குப் பின் காந்தளூர் இரவிநீலி ஆச்சாரியாரின் கதையைத் தம்புராட்டியார் தொடர்ந்து சொல்லிக்கொண்டு போனார். அதில்தான் வருகிறது இந்தப் பழைய சாபம்...."

"இரவிநீலிக்குப் பரசுராமன் சாபம் கொடுத்து விட்டாரா?"

---

[10] "பரசுபெறு மாமுனிவன் பெறுநாடு" என்கிற சொற்பிரயோகத்தை சேக்கிழார் கையாள்கிறார். பார்க்க திருத்தொண்டர் புராணம் – கழற்றறிவார் நாயனார் சருக்கம்.

"உஸ்.... பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் குறுக்கிட்டுக் குறுக்கிட்டுக் கழுத்தறுப்பதென்பது உங்களுக்கு ஒரு தொழிலாகவே ஆகிவிட்டது. ஏதாவது சொன்னால் கோபித்துக்கொண்டு விடுகிறீர்கள். பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் பூமியில் தோன்றிய பரசுராமர் எப்படி இரவிலிநீலி ஆச்சாரியாருக்குச் சாபம் கொடுத்திருக்க முடியும்?"

"சரி, சரி. இந்த ஒரு முறை மட்டும் கோபித்துக் கொள்ளவில்லை. அந்தப் பழைய சாபம் என்னவென்று அறியும் ஆர்வம் கோபத்தை புறந்தள்ளி விட்டது. நீங்கள் தொடர்ந்து அந்த வரலாற்றைச் சொல்லுங்கள்..." என்றார் மழபாடியார் புன்னகையுடன்.

"வடபுலத்து அரசர்களின் தொல்லை தாங்கமுடியாமல் கங்கைக் கரையிலிருந்து இடம் பெயர்ந்த அந்தணர்களுக்காக வேண்டித்தான் பரசுராமர் கடலில் மூழ்கியிருந்த பூமியை வெளிக்கொணர்ந்து அதில் அறுபத்திநான்கு கிராம ஷேத்திரங்களை தட்ஷிண தேசத்தின் மேற்குப் பகுதியில் உருவாக்கினாராம். அக்கிராமங்களை உரிய முறையில் பாதுகாக்க வேண்டி அவர்களில் ஒரு சிலருக்கு ஷத்திரிய தர்மத்தைக் கடைபிடிக்கும் உரிமையையும் வழங்க முன்வந்தாராம்.

ஆனால் வேள்வி புரியும் கரங்களால் வாள் பிடிப்பதா? என்று அந்தணர்களில் பலருக்குத் தயக்கமும் பயமும் உண்டாகி விட்டதாம். அந்தத் தயக்கங்களையெல்லாம் உதறிவிட்டு தைரியமாக வாளேற்க முன்வந்த முதல் அந்தணர் அனந்தபுரத்தின் வலியசாலைக் குடும்பத்தைச் சேர்ந்த திரிவிக்கிரம நம்பூதிரியாம். அவரைத் தொடர்ந்து மேலும் மூவர் ஷத்திரிய தர்மத்தை ஏற்றார்களாம். இந்த நால்வரே பரசுராமன் மலைநாட்டில் ஸ்தாபித்த முதல் நான்கு களரிகளின் மூத்த வாள் பெற்ற ஆச்சாரியர்களென்று தம்புராட்டியார் குறிப்பிட்டார். இவர்களுள் திரிவிக்கிரம நம்பூதிரியே காந்தளூரில் உருவாக்கப்பட்ட களரியின் முதல்வர்.

கூடியிருந்த அத்தனை அந்தணர்களுக்கு மத்தியில் ஆண்மையுடன் முன்வந்து போர்த் தர்மத்தை ஏற்ற முதல் நம்பூதிரியான திரிவிக்கிரமரின்பால் பெரிதும் மகிழ்ந்து போன பார்க்கவ இராமன், அவரைத் தனியாக அழைத்துப் போய் உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்! என்றாராம்.

அதற்குத் திரிவிக்கிரமர் 'உங்களது முந்தைய அவதாரங்களுள் ஒன்றான நரசிம்மாவதாரத்தில் எவ்வாறு கருங்கல் தூணைப் பிளந்து கொண்டு வெளியில் வந்தீர்கள்? அந்தப் பிரயோகத்தை எனக்குக் கற்றுத் தர முடியுமா?' என்று வேண்டினாராம்.

அதற்குப் பதிலளித்த பரசுராமர் 'நிச்சயமாக அந்த வித்தையை உனக்குக் கற்றுத்தர முடியும். அதனை உள்வாங்கிக் கொள்வதற்கான தகுதியும் ஆற்றலும் உனக்கு உள்ளது. ஆனால் உனக்குப் பின் வரப்போகிறவர்களால் இந்தப் பிரயோகம் ஒருபோதும் தவறான வழிகளில் சென்று விடக் கூடாது. அது நான் உருவாக்கிய களரி வித்தைக்கே கறையாக முடியும். அதனால் நீ எனக்கொரு பிரதிக்ஞை அளிக்க வேண்டும்.

உனக்கோ உன் மிக நெருங்கிய பந்துக்களுக்கோ பிராணாபாயம் நேர்ந்தாலொழிய இந்தப் பிரயோகத்தைப் பயன்படுத்தவே கூடாது. அப்படிப் பயன்படுத்தினால் உன் குடும்பம் அடுத்த தலைமுறையோடு நசித்துவிடும் என்பதைத் தெரிந்து கொள். பின்னாளில் நீ உன் சீடர்களுள் தகுதியானவர்களுக்கு இந்தப் பிரயோகத்தை ஒருவேளை கற்றுக் கொடுத்தாயானால் இதே பிரதிக்ஞையை அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டுதான் கற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே நம்முடைய ஆக்ஞை. இக்கட்டளை எப்போதாவது மீறப்பட்டால் பேரழிவு உண்டாகிவிடும். அதனைத் தடுக்கவே முடியாது!' என்று எச்சரித்தாராம்.

இந்தப் பிரதிக்ஞையை ஏற்பதாகத் திரிவிக்கிரமர் ஒப்புக் கொள்ளவே, வடக்கே நைமிசாரண்ய வனத்தில் அமைந்துள்ள தன்னுடைய ஆசிரமத்திற்கே அவரை அழைத்துப் போய் ஒரு மண்டலகாலம் விரதமிருக்கச் செய்து மிக அபூர்வமான அந்த நரசிம்மப் பிரயோகத்தைக் கற்றுக் கொடுத்தாராம். பிரபஞ்சத்தில் பரவியிருக்கும் மூன்று விதமான சக்திகளான இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய மூன்றையும் குறிப்பிட்ட விதத்தில் கலந்து எதிராளிக்கு எதிராகப் பிரயோகிப்பதுதான் நரசிம்மப் பிரயோகம். இச்சக்தியை உருவாக்கி விட்டால் பின்னால் அதனைப் பிரயோகிக்காமல் இருக்கவே முடியாது. அதனால் இடம் பொருள் ஏவல் எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக் கொண்டுதான் அதனை உபயோகிக்கவேண்டும். இந்த முக்கியமான பிரதிக்ஞையின் காரணமாகத்தான் வழி வழியாக வலியசாலைக் குடும்பத்தாருக்கு மட்டும் அந்தப்

பிரயோகம் கற்றுக்கொடுக்கப்பட்டதாம். ஏனெனில் காலப் போக்கில் வேறு பல குடும்பத்தாரையும் இது சென்றடைந்து எவராவது தவறான வழிகளில் இதனைப் பயன்படுத்தி அத்தனை குடும்பங்களும் அழிந்துவிடக் கூடாதல்லவா? அதனால்தான்.

ஆயிரக்கணக்கான வருடங்களாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த இந்தக் குலக்கட்டுப்பாடு முதல் முறையாக எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன் சோழ வீரர்கள் பங்கு கொண்ட கலமறுக்கும் போட்டிகளின்போது மீறப்பட்டது. போட்டியின் முதல் நாளிரவு இந்தப் பிரயோகத்தை இரவிநீலிக்குப் போதித்த ஆச்சாரியார் பத்மநாபர், இந்தப் பழைய சாபத்தைப் பற்றியும் குலப் பிரதிக்ஞை பற்றியும் ஒன்றுமே கூறாமல் விட்டுவிட்டாராம். யோக்யதாம்சங்கள் நிறைந்த இளைஞரான இரவிநீலி மரபை மீறி ஜெயிக்க முயல மாட்டார் என்பதால்தான் அந்த விஷயம் மறைக்கப்பட்டதாம். மறுநாள் போட்டியில் வென்று கோலாகலங்களெல்லாம் முடிந்த பின்தான் நீலிக்கு இந்த விஷயமே தெரிந்திருக்கிறது. அனலிலிட்ட புழுவாகத் துடிதுடித்திருக்கிறார் அவர். ஆனாலும் காரியம் கைமீறிப் போய்விட்டபடியால் அவரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

விபரம் புரியாமல் செய்த தவறுதான் என்றாலும் அந்தப் பழைய சாபம் பலிக்கத்தான் செய்ததாம். இரவிநீலியின் மூன்று பிள்ளைகளில் ஒருவருக்குக்கூட புத்திர பாக்கியம் ஏற்படவில்லை. இத்தனைக்கும் சோழநாட்டில் மூத்த அதிகாரிகளாக இருந்த சோமனும் தாஸனும் தலைக்குப் பத்து பெண்களைத் திருமணம் செய்து கொண்டும் நேரடி வாரிசுகள் உருவாகவேயில்லை. அந்த இருபது குடும்பங்களும் தங்கள் உற்றார் உறவினருடன் உடையார் குடியில் சௌகரியமாகக் குடியேறி மூன்று வேளைகளும் உண்டு உடல் பெருத்ததுதான் மிச்சம். வேறு வழியின்றித் தமது வம்சம் தழைக்க வேண்டுமென்பதற்காக நான்காவதாக ஒரு பிள்ளையை இரவிநீலியார் தத்தெடுத்துக் கொண்டாராம். அந்த நான்காவது பிள்ளை...."

"நான்காவது பிள்ளை.. ஏன் நிறுத்தி விட்டீர்கள்?"

"அதோ பாருங்கள்! திருக்கோயிலுக்குக் கிளம்பிய தம்புராட்டியார் பாதிவழியிலேயே சாலைக்குத் திரும்பி

விட்டார் போலிருக்கிறதே? ஒரு போதும் தேவி தரிசனத்தைத் தவற விடமாட்டாரே அவர்?"

ஆம். மணியனார் குறிப்பிட்டதைப்போல் தம்புராட்டியார் பரபரப்புடன் திரும்பிக் கொண்டிருந்தார். அவரது முகத்தில் கலவரம் தெரிந்தது.

"உன்னிகளா! உன்னிகளா! எங்கேயிருக்கிறீர்கள்?"

"இதோ! இங்கிருக்கிறோம் அம்மா. ஏன் இத்தனை பரபரப்புடன் ஓடி வருகிறீர்கள்? தேவியின் திருக்கோயிலுக்குத் தாங்கள் செல்லவில்லையா என்ன?"

"கோயிலுக்குத்தான் சென்று கொண்டிருந்தேன். பூவந்தித் தோப்பைத் தாண்டும்போதே ஒரு முக்கியமான செய்தி காதில் வந்து விழுந்தது. அதனை உடனே உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் திரும்பி வந்தேன்."

"அப்படியென்ன முக்கியமான செய்தி?"

"பண்டைய ஆய்வேள் அரசகுலத்தில் உதித்த வாரிசு எவரையோ பிடித்துகொண்டு வந்து வள்ளுவனாரும் பாண்டியர்களும் மற்ற நாடுவாழிகளும் தென்மலை நாட்டின் பேரரசராக இன்று முடிசூடப் போகிறார்களென்று வதந்தி பரவியிருக்கிறது. பட்டாபிஷேக விழா அதிக ஆரவாரங்களின்றி அமைதியாக ஆரைவாய் மொழிக் கோட்டையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம். இன்னும் நான்கு நாட்களில் கோட்டாறு, கழிக்குடி, பூத பாண்டியபுரம், விழிஞம் என்று தென்பகுதிகள் அனைத்திற்கும் ஆய்வேளரசர் விஜயம் செய்யப் போகிறாராம். உன்னிகளா! அருள்மொழி திட்டமிட்டுக் கொண்டிருக்கும் சோழப்படையெடுப்பிற்கு இது ஒரு மோசமான செய்தி. தலைக்குத் தலை நாட்டாமை செய்து கொண்டிருந்த நாடுடையவர்கள் ஓரணியாகத் திரண்டு நின்றால் ஆரைவாய்மொழிக் கோட்டையைத் தாண்டி ஒரு சோழ வீரன் வருவதுகூட துர்லபமாகிவிடும். ஆனால் என்னைப் பொறுத்தவரை இதையெல்லாம் விடப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது அந்தப் பண்டைய குலத்து வாரிசு யார் என்பதுதான்."

"யார் அவர்?"

"இயற்பெயர் குறிப்பிடப்படாமல் மலையனூரன் என்ற பெயரில் இரவிநீலி ஆச்சாரியாரின் நான்காவது மகனாக தத்துப் புத்திரனாக வளர்ந்து வந்தவர்தான் இந்த வாரிசாம்! இப்போதுதான் எனக்குச் சில விஷயங்கள் தெளிவாகின்றன. புரியாத சில விஷயங்கள் புரியத் துவங்குகின்றன...." என்றார் தம்புராட்டியார்.

8. மந்திராலோசனை



சோழ நாட்டு ஒற்றர் படையின் தலை சிறந்த ஒற்றர்களுள் ஒருவனும் மாராயரின் நம்பிக்கைக்குரிய தனிச்சேவகனும் நமது நெருங்கிய நண்பனுமான ஐங்கரனை நாம் சந்தித்து மூன்று வாரங்களுக்கு மேலாகி விட்டன. இந்த நீண்ட இடைவெளியில் சுந்தரச் சோழர் ஆதுலர் சாலையில் அரண்மனையின் பிரதான வைத்தியரான சோழப் பெரு மருத்துவரின்[11] நேரடிக் கண்காணிப்பில் அவன் மெல்ல மெல்ல உடல்நிலை தேறிவந்தான். நேற்றுத்தான் கண்கள் முதல் முறையாகத் திறந்தன. என்றாலும் பேச்சு எழவில்லை. கைகால்களில் அசைவுகள் இல்லை. அவயங்கள் அதிகம் பாதிக்கப்படவில்லையென்றாலும் அவற்றைக் கட்டுப் படுத்தும் மூளையின் நரம்பு மண்டலம் பாதிப்படைந் திருக்கலாமென்று வைத்தியர் சந்தேகப்பட்டார். பாவிகள்! அவன் நிஜத் திருடனாகவே இருந்திருந்தாலும் இப்படியா அடித்துப் போடுவார்கள்?

அவன் ஆதுலர் சாலைக்கு வந்து சேர்ந்த முதல் இரண்டு வாரங்களுக்கு மாராயர் அனுதினம் நேரில் வந்து உடல்நிலையை விசாரித்து விட்டுப் போனார். பெரும்பாலும் காலை வேளைகளில் கூட்டம் அவ்வளவாகச் சேர்ந்திராத பொழுதுகளில்தான் அவரது விஜயம் அமைந்திருக்கும். ஒருவேளை அலுவல்கள் காரணமாகக் காலையில் வரமுடியவில்லையென்றால் மாலை நேரத்தில் வந்துவிட்டுச்

---

[11] வைத்தியர்களுக்குப் பெருமருத்துவன் என்று பட்டமளிப்பது வழக்கம். அண்மைக்காலத்தில் கண்டறியப்பட்ட மகேந்திர பல்லவர் காலக கல்வெட்டொன்று மகேந்திரப் பெருமருத்துவர் என்று ஒரு வைத்தியரைச் சிறப்பிப்பது கருதத்தக்கது.

செல்வார். ஆனால் இந்தப் பழக்கம் கடந்த சில நாட்களாக வழக்கொழிந்து விட்டது. நேரில் வராமல் தனது சேவகர்களை விட்டுத்தான் விசாரிக்கிறார். சோழப் பெரும் படைகள் தஞ்சையின் புறம்படியில் தண்டுன்றித் தங்கியுள்ளதும் தெற்கே போருக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்கள் துரிதமடைந்துள்ளதும்தான் அதற்குக் காரணமாக இருக்க வேண்டுமென்று வைத்தியர் நினைத்துக் கொண்டார்.

ஆனால் அன்றைய காலை வேளையில் ஆதுலர் சாலையின் வாயிலில் வழக்கத்திற்கு மாறான சில காட்சிகள் அரங்கேறலாயின. திடீரென்று எங்கிருந்தோ தோன்றிய சோழ வீரர்கள் நால்வர் வாயிலில் வந்து விறைப்பாக நின்றார்கள். மேலும் இருவர் சாலைக்குள் தடாலடியாகப் புகுந்து அவசர அவசரமாக எல்லா அறைகளைச் சோதித்தார்கள். வைத்தியர் என்ன? ஏது? என்று கேள்விகள் கேட்பதைக்கூட அவர்கள் அனுமதிக்கவில்லை. இந்தக் கூத்துக்களெல்லாம் நடந்து முடிந்த சில நிமிடங்களிலேயே சோழப்பேரரசர் அருள்மொழிவர்மர், மாராயருடன் ஆதுலர் சாலைக்குள் பரபரவென்று நுழைந்து நேராக ஐங்கரன் படுக்க வைக்கப்பட்டிருந்த கட்டிலை அடைந்தார். பேரரசரே நேரில் வந்திருக்கிறார் என்பதைச் சற்றே தாமதமாக உணர்ந்த வைத்தியர் அடித்துப் பிடித்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். ஏதேது, நமது நோயாளி பார்ப்பதற்குச் சாதாரணமாகத் தெரிந்தாலும் பெரிய ஆள் போலிருக்கிறதே? பேரரசரே இவனது உடல்நிலையை விசாரிக்க வருகிறாரே?

"சோழச் சக்ரவர்த்திகளுக்கு அடியனின் பணிவான வணக்கங்கள்!"

"வணக்கம் வைத்தியரே! எங்கே சில நாட்களாக அரண்மனைப் பக்கமே உமது தலை தெரியவில்லையே என்று யோசித்துக்கொண்டிருந்தேன். எனது மனைவியரும் மக்களும்கூட வைத்தியரைக் காணவில்லை வைத்தியரைக் காணவில்லையென்று சதா சர்வகாலமும் புலம்பல் புராணம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நீர் என்னவென்றால் ஒருவரிடமும் சொல்லாமல் இந்தச் சுந்தரச் சோழ ஆதுலர் சாலையில் ஒளிந்து கொண்டிருக்கிறீர்!"

வைத்தியர் கலகலவென்று சிரித்தார். "சூழ்நிலை அவ்வாறு அமைந்து விட்டது பிரபோ. இதோ! படுக்கையில்

கிடத்தப்பட்டிருக்கும் இந்தப் பிள்ளையை எப்படியாவது காப்பாறியே ஆகவேண்டுமென்று மாராயர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்து விட்டார். அதற்காகத்தான் இரவு பகலாக உழைத்து எந்நேரமும் எனது நேரடிக் கண்காணிப்பிலேயே வைத்திருந்து மெல்ல மெல்ல உடல் நிலையைத் தேற்ற முயன்று கொண்டிருக்கிறேன்."

"நிலைமை இப்போது எப்படி இருக்கிறது?"

"பிராணாபாயம் நேரும் கட்டத்தைத் தாண்டி விட்டோமென்று நினைக்கிறேன். என்றாலும் முழுப் பிரக்ஞை எப்போது வரும் என்பதைச் சொல்வதற்கில்லை. அவயங்கள் இன்னமும் சுய உணர்வு பெறவில்லை."

"இன்னும் சில நாட்களிலாவது அவனால் பேச முடியுமா?" என்றார் மாராயர் அவசரமாக. ஐங்கரன் எழுதிக் காட்டிய அந்த இரகசியக் குறிப்பு இன்னது என்று தெரிந்து கொள்ளாமல் மூன்று வாரங்களாக அவருக்கு மண்டையே வெடித்துவிடும் போலிருந்தது. படைகள் கிளம்பு முன்னதாக வாவது அந்த இரகசியக் குறிப்பை புரிந்துகொள்ள முடியுமாவென்று தவியாய்த் தவித்தார் அவர். தானைத்தலைவர்... ஒரு..... யார்? கொலையாளியா? எதிரியா? ஒரு வேளை ஒரு சோழவீரனா? நபும்சகனா...?????

ஒரு.....

நாசமாய்ப்போகிற அந்தத் தானைத் தலைவர் ஒரு.....

"மாராயரே! வைத்தியர்தான் இன்னும் அவனுக்குப் பிரஞ்ஞையே வரவில்லையென்கிறாரே? அதற்குள் எதற்காக அவசரப்படுகிறீர்? அவனுக்கு முழுச் சுயநினைவு வந்து, தான் யார், தனக்கு என்ன நேர்ந்தது என்பதையெல்லாம் புரிந்து கொண்டு நடந்த விஷயங்களையெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டு.. அதெல்லாம் நடப்பதற்குப் பல நாட்களாகும் என்று தோன்றுகிறது."

"நாசமாய்ப் போயிற்று..." என்று முணுமுணுத்தார் மாராயர்.

"என்ன சொன்னீர்கள்?"

"ஒன்றுமில்லை. நமக்குக் கிடைத்த ஒரே பிடியும் இப்படி துரதிருஷ்டமாக நழுவிப் போய்விட்டதேயென்று வருத்தப்படுகிறேன்..." அருள்மொழிவர்மரின் செவிகளில் மட்டும் கேட்கும்படி மெல்லப் புகன்றார் மாராயர்.

"நாம் மேற்கொள்ளப்போகும் படையெடுப்புக்கு அந்தத் தகவல் தேவையில்லையென்று ஈசன் நினைத்து விட்டான் என்று வைத்துக்கொள்ளுங்களேன்?" என்று அதே மெல்லிய குரலில் பதிலிறுத்த பேரரசர், "வைத்தியரே! ஒரு முக்கியமான விஷயம். வழக்கம்போல இந்த முறையும் தாங்கள் தமது உதவியாளர்களுடனும் மருத்துவப் பொருட்களுடனும் எம்முடன் தெற்கே படையெடுப்பில் வந்து சேர்ந்து கொள்ள வேண்டும். போரில் காயமடையும் வீரர்களுக்கு வேண்டிய முதலுதவிகளை புரிவதில் தங்களுக்கு நிகர் தாங்கள்தான்."

"அதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து விட்டேன் பிரபோ. என்னுடன் வருவதற்கு ஐந்து உதவியாளர்கள் தயாராக இருக்கிறார்கள்."

"ஐந்து பேர் போதாது. பழையாறையிலிருந்தும் திருவாரூரிலிருந்தும் ஏன், தில்லையிலிருந்தும் கூடப் பல்வேறு மருத்துவப் படைகளை வரச்சொல்லியிருக்கிறேன். அனைவரும் உமது தலைமையின் கீழ் செயல்படுவார்கள்."

"மிக்க நன்றி."

"அது சரி. நீர் எம்முடன் கிளம்பி வந்துவிட்டால் இந்தப் பிள்ளையைக் கவனித்துக்கொள்ளப் போவது யார்?"

"அதுதான் சற்று கவலையாக இருக்கிறது. நானும் எனது சீடர்களும் படைகளுடன் கிளம்பி விட்டால் இவனைக் கவனித்துக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் அதிகம் பேர் கிடையாது. கிளையூர் வைத்தியர் என்று ஒருவர் நமது சாலையில் என்னுடன் பணிபுரிகிறார். ஆனால் அவரால் எளிமையான வியாதிகளைத்தான் கையாள முடியும்.."

"வேறு ஏதாவது வழி உள்ளதா?"

"ஒரு வழி உள்ளது. பேரரசர் அனுமதித்தால்..."

"சொல்லுங்கள்...."

"நமது படைகளுக்கு வேண்டிய தளவாடங்கள் மற்றும் சாமக்கிரியைகளை மாட்டு வண்டிகளிலும் குதிரை வண்டிகளிலும் ஏற்றிச் செல்லுவோமல்லவா? அவற்றில் ஏதாவது ஒன்றில் இந்தப் பிள்ளையை நல்ல பஞ்சு மெத்தையிட்டுப் படுக்க வைத்து விடுவோம். எப்படியும் என்னால் புரவியில் பிரயாணம் செய்ய முடியாது.

ஆகையால் நானும் இவருடன் அதே வண்டியில் பிரயாணம் செய்கிறேன். இவ்வாறாகப் பயணத்தின்போதே வைத்தியத்தையும் மேற்கொள்ளலாம்."

"இவர் இப்போது பிரயாணம் மேற்கொள்ளும் நிலையில் இருக்கிறாரா என்ன?"

"இல்லைதான். என்றாலும் இங்கு விட்டுவிட்டுப் போவதைவிட அது மேலானது. மேலும், இவருக்கு அடிபட்டிருப்பது மூளையின் நரம்பு மண்டலத்தில்தான். அவயங்கள் பெரும்பாலும் நல்ல நிலையில்தான் இருக்கின்றன. அதனால் பிரயாணத்தின் அசைவுகள் இவரை அதிகம் பாதிக்கமாட்டா என்பது என் கணிப்பு. மேலும் இது போன்று மூளையில் அடிபட்டவர்கள் ஒரே இடத்தில் படுத்துக் கொண்டிருப்பதைவிட சிறிதளவு வித்தியாசமான காட்சிகளை அன்றாடம் காண்பது நல்லது. அது மூளையின் செயல்பாட்டை அதிகரிக்கும்."

"தாங்கள் சொல்லிவிட்டால் அதற்கு மறுப்பேது? மாராயரே! ஆதுலர் சாலைக்கு இரண்டு வண்டிகளை அனுப்பி வைக்கும்படி உடனே அபிமானதொங்கப் பேரரையருக்கு ஓலையனுப்பி விடுங்கள். வைத்தியரே! உம்மை நாளை மறுநாள் கோட்டைக்காவல் தேவியின் கோயிலுக்கருகில் சந்திக்கிறேன்..." - பதிலுக்குக் காத்திராமல் விறுவிறுவென்று புறப்பட்டு விட்டார் பேரரசர்.

கோட்டைக்காவல் தேவியின் கோயிலுக்கு அருகிலென்றால்.....??? கிழக்குக் கோட்டைக் காவல் தேவியான அன்னை நிசும்பசூதனியின் திருக்கோயிலல்லவா? அப்படியானால் நாளை மறுநாள் படைகள் கிளம்பப் போகின்றன என்று பொருள் அல்லவா? அவற்றுடன் தாமும் கிளம்பியாக வேண்டுமே? வைத்தியருக்குப் பரபரப்பு தொற்றிக்கொண்டது. உதவியாளர்களைச் சந்திப்பதற்காக அவசர அவசரமாக உள்ளே சென்றார் அவர்.

விறுவிறுவென்று ஆதுலர் சாலையிலிருந்து வெளியே வந்துவிட்ட பேரரசர் புரவியில் ஆரோகணிக்கும் முன் மாராயரை நோக்கி ஒரு முறை திரும்பினார். "மாராயரே! அந்த ஐங்கர இரகசியத்தை அறிய வேண்டுமென்று ஏன் இப்படித் துடியாய்த் துடிக்கிறீர்? நான்தான் அந்த வாசகத்தின் பொருள் எனக்கு விளங்கி விட்டதென்று அப்போதே கூறினேனே?"

"வாசகம் விளங்கிவிட்டதென்றீர். அத்துடன் வேறு பல விஷயங்களுக்கும் கூடத் தொடர்பிருக்கின்றன என்றெல்லாம் புகன்றீர். ஆனால் அவன் குறிப்பிட்ட அந்த செய்தி இன்னது தான் என்று பளிச்சென்று கூற மறுக்கிறீர். உண்மையில் உமக்கு அந்த இரகசியம் தெரியுமா அல்லது வேண்டுமென்றே எங்களிடம் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறீர்களா என்பதே எனக்குத் தெரியவில்லை."

"ஒரே நொடியில் அந்த இரகசியம் இன்னதுதான் என்று சொல்லிவிடுவேன். ஆனால் நீங்கள் ஒருக்காலும் என்னை நம்பமாட்டீர்கள். சேச்சே! அப்படியெல்லாம் இருக்காது. அவன் எழுதிக்காட்ட முயன்ற சங்கதி வேறு! என்று மறுத்தலிப்பீர்கள். ஐங்கரன் உடல்நிலை தேறி வந்து தாங்கள் கூறியதை உறுதி செய்யட்டும். பின் நம்புகிறேன் என்றுகூடச் சொன்னாலும் சொல்வீர்கள். இந்த அவமானங்களெல்லாம் எனக்குத் தேவைதானா? அதனால் தான் பல்லைக் கடித்துக்கொண்டு அந்த இரகசியத்தை ஒருவருக்கும் கூறாமல் மௌனம் காத்து வருகிறேன்."

கடுமையான குரலில் பேசினாலும் அருள்மொழி வர்மரின் கண்களில் மறைக்க முடியாமல் பரவியிருக்கும் வேடிக்கைக் களையை மாராயர் முழுவதுமாக உணர்ந்தார். தன்னுடைய இறுக்கங்களையெல்லாம் உதறிவிட்டுக் கலகல வென்று சிரித்தார் அவர்.

"உங்களுக்கு மட்டுமல்ல. எனக்கும் இப்போது அந்த இரகசியம் என்னவென்று விளங்கிவிட்டது. தானைத்தலைவர் ஒரு சாமியார்! ஜெயபீமதளியின் வடக்கு வாசலில் அமர்ந்துகொண்டு வருவோர் போவோரிடம் பிச்சையெடுத்துப் பிழைக்கும் சாமியார். பிச்சைக்கு நடுவே கிடைக்கும் நேரத்தில் பாண்டியர்களையும் சேரர்களையும் தென்மலைநாட்டு நாடுவாழிகளையும் நமக்கெதிராகத் திருப்பி விட்டுக் கொண்டிருக்கிறார் அவர்..."

"ஹா! ஹா! ஹா! ஹா! அதுதான். அதேதான். உங்களது யூகம் முற்றிலும் சரியானது மாராயரே!" என்றபடி புரவியில் ஏறி அதனைத் தட்டிக்கொடுத்தார் அருள்மொழிவர்மர்.

"ஐங்கரனுக்கு மட்டும் உணர்வு திரும்பட்டும். உம்மைப் பிற்பாடு வைத்துக்கொள்கிறேன்..." என்று மாராயர் முணுமுணுத்தது அவருக்குக் கேட்கவேயில்லை.

* * * * * * * *

அந்தப் பெரிய அறைக்கு நடுவே வட்ட வடிவமாகப் பலரும் கூடியிருக்க, கூட்டத்திற்கு நடுவே மாட்டுத்தோலில் எழுதப்பட்ட பெரியதொரு வரைபடம் விரிக்கப் பட்டிருந்தது. வரைபடத்திற்கு அருகில் ஏற்றி வைக்கப் பட்டிருந்த குத்துவிளக்கு தன்னுடைய ஐந்து முகங்களிலும் தீச்சுடர்களை ஏந்தி அறையெங்கிலும் ஒளியைப் பரவவிட்டுக் கொண்டிருந்தது. அறையின் ஒரு ஓரத்தில் ஏற்றப்பட்டிருந்த சந்தனம் மற்றும் அகிற் புகை காற்றில் மெல்லியதாகப் பரவியிருக்க, அந்த இனிய சுகந்தத்துடன் விளக்கில் விடப்பட்டிருந்த பசுநெய்யின் மணமும் சேர்ந்து ஒரு மாதிரி அடர்த்தியான நறுமணம் அறையில் திகழ்ந்தது.

ஆனால் அவ்வறையில் கூடியிருந்த பெருமக்கள் அனைவரும் அந்த வித்தியாசமான நறுமணத்தையோ குறைவான வெளிச்சத்தையோ பொருட்படுத்தாமல் அந்தப் படத்திலேயே மூழ்கியிருந்தனர். அந்த வரைபடம் முன்பொரு நாள் ஆரைவாய்மொழிச் சிகரங்களின் மீது வீற்றிருந்து வள்ளுவ நாடுவாழியார் கோவர்தனருக்கு மண்ணில் வரைந்து காண்பித்த படத்தையொட்டி வரையப் பட்டிருந்தது. ஆனால் வித்தியாசமான சில புள்ளிகளும் ஆயுதங்களும் இதில் தென்பட்டன.

மற்ற பெருந்தலைகளுடன் அந்தப் படத்தில் மூழ்கியிருந்த ஆய்வேளரசர் வரகுணர் தலையை மெல்ல நிமிர்த்தினார். "நண்பர்களே! இதுதான் நமது கோட்டைக் காவல் மற்றும் படை நிலைகளை விளக்கும் படம். கோட்டைக் கரையில் தண்டூன்றியிருக்கும் வள்ளுவனாரின் நாடுவாழிப் படைகளும் கோவர்தனரின் வேணாடுடைய படைகளும் இதில் மஞ்சள்நிற மணிகளாகக் காண்பிக்கப் பட்டிருக்கின்றன. பச்சைநிற மணிகளாகக் குறிக்கப் பட்டிருப்பவை இரகசியமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பாண்டிப் படைகள். சிவப்பு மணிகள் நம்மை நோக்கிப் படையெடுத்து வரும் சோழப்படைகளைக் குறிக்கும்.

சோழர்படைகள் தஞ்சையிலும் நாகையிலும் பழையாரையிலும் தொகுதி தொகுதியாகக் குவிக்கப் பட்டுள்ளன. ஆடி மாதம் துவங்குவதற்கு முன்பாகப் படைகள் கிளம்பியாக வேண்டுமாதலால் இன்னும் ஒரு சில நாட்களில் படையெடுப்பு துவங்கிவிடுமென்று எதிர்பார்க்கலாம். அவர்களைப் பொறுத்தவரையில் இது தட்ஷிண தேசத்தின் தென்பகுதியை ஆக்கிரமித்து சோழரின் ஆதிக்கத்தைத் தென்பாண்டி நாட்டில் நிலை நிறுத்தவும்

காந்தளூரைக் கைப்பற்றிச் சட்டர்களை ஒடுக்கிப் பழிவாங்குவதற்காகவும் நடைபெறும் போர். இந்தப் போரில் மட்டும் அவர்கள் வென்றுவிட்டால் பின் பலகாலத்திற்கு நம்மால் தலையெடுக்கவே முடியாது. அதனால், நண்பர்களே! நமது உடல் பொருள் ஆவி ஆகிய அனைத்தையும் ஈன்று நமது தாய்நாட்டைக் காக்க உறுதி பூணுவோம். ஆதிக்க மனோபாவத்துடனும் அகங்காரத்துடனும் நம்மை நோக்கி வரும் சோழனுக்குத் தகுந்த பாடம் கற்பிப்போம்!"

"ஆம்! சோழர்களை ஒடுக்குவோம்! தென்னாட்டைப் பழையபடி ஆய்வேள் நாடாக்குவோம்!"

"படையெடுத்து வரும் சோழனுக்குச் சரியான பதிலடி கொடுப்போம்!"

"வாழ்க பாண்டியர்! வாழ்க ஆய்வேளிர்! வாழ்க நாடுடையவர்! வாழ்க மலைநாடு!"

"எங்கே சேரமான் பெருமாள் நம்முடன் சேர்ந்து கொண்டு விடுவாரோ எனும் அச்சத்தில் அவருக்குத் தனியாகத் தூதனுப்பியிருக்கிறான் சோழன். ஆனால் பெருமாள் அவன் நினைப்பதைப்போல் அத்தனை முட்டாளில்லை. சோழர்களை எதிர்க்கப்போகும் நமது படைகளுடன் பெருமாளின் ஆயிரத்தவர் படையும் சேர்ந்து கொள்ளுமென்றுதான் எதிர்பார்க்கிறேன்."

அதுவரை அங்கே எழுந்த கோஷங்கள் எதிலும் பங்கு பெறாமல் நிதானமாய்க் காட்சியளித்த பாண்டித்தேவர் அமரபுஜங்கர் நிதானமாக வரகுணரை ஏறிட்டு நோக்கினார்.

"வரகுணரே! பாண்டி நாட்டையும் மலைநாட்டையும் விடச் சோழ நாட்டில் அதிகக் காலத்தைக் கழித்தவர் தாங்கள். அதனால் சோழர்களின் பலம் மற்றும் பலவீனம் மற்றவர்களைவிட உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்களின் முக்கியமான பலங்களையும் பலவீனங்களையும் விளக்குவீர்களா?"

"பலவீனங்கள் பல. பலங்கள் கொஞ்சம்தான். அவற்றை விரிவாக விளக்குவதற்கு இது சமயமில்லை என்றாலும் தாங்கள் வினவியதால் கோடிட்டுக் காட்டுகிறேன். அருள்மொழிக்கு முன்பாகச் சோழசிங்காதனத்திலிருந்த மதுராந்தகரின் நீண்ட ஆட்சி காலத்தில் சோழப்படைகள்

பெரிதும் பலவீனமடைந்து விட்டன. வீரர்கள் உற்சாகமிழந்து தத்தம் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள்.

அவர்களை மீண்டும் வரவழைத்துப் படை திரட்டியிருக்கிறான் அருள்மொழி. அவர்களின் வீரத்தில் குறைவில்லை. என்றாலும் பழைய தெம்பும் உற்சாகமும் அவர்களிடமில்லை. போர் புரியச் செல்லும் படைகள் உற்சாகத்துடன்.. குறிப்பாகச் சொல்லப்போனால் ஒரு விதமான போர்வெறியுடன் ஆஹாகாரத்துடன் காணப்பட வேண்டும். அந்த வெறி அவர்களது கண்களில் ஒரு நெருப்பாகச், சுடராக ஒளிர வேண்டும்.

ஒரு காலத்தில் அதனைப் பெற்றிருந்த சோழர் படைகள் தற்போது அதனை முற்றிலுமாக இழந்து நிற்கின்றன. தஞ்சையிலிருந்து ஆரைவாய்மொழி வரை பயணப் படுவதலால் அந்தப் பயணக் களைப்பும் சேர்ந்துகொண்டு மேலும் உற்சாகத்தைக் குறைக்கும். அத்தனை தூரம் சோர்வுற்றிருக்கும் படைகளை எதிர்ப்பது மிக எளிது. இதுதான் அவர்களது முக்கியமான முதல் பலவீனம்.

இரண்டாவது, இம்மலைப்பகுதிகளின் புவியியல் அமைப்பை அவர்கள் இன்னமும் சரிவர விளங்கிக் கொள்ளவில்லை என்றுதான் தோன்றுகிறது. பராந்தகர் ஒருவேளை மலைநாட்டிற்குப் படையெடுத்திருந்தாரானால் அந்த அனுபவம் அவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்திருக்கும். அவ்வாறு நடைபெறாதது நமக்குச் சாதகமே.

இயற்கை இந்தப் பகுதிகளைப் பொறுத்தவரை மேற்கில் மலைமுகடுகளுக்குப்பின் நிற்பவர்களுக்கே சாதகமானது. கிழக்கிலிருந்து படையெடுப்பவர்கள் மிகக் கடுமையான விலை கொடுத்துத்தான் கணவாய்க்குள் நுழையவே முடியும். சேதாரமும் உயிர்ச்சேதமும் அதிகமாகிவிட்டால் படைகள் பயந்து பின்வாங்குவதை ஒருவராலும் தடுக்க முடியாது. அதனால்தான் பொறுமையாக எலி வளைக்குள் வரும்வரை காத்திருப்பதைப்போல் நாமும் இந்தக் கணவாய்ப் பகுதிகளில் காத்திருக்கிறோம். இல்லையேல் நமது படைகளை அழைத்துப் போய்ச் சோணாட்டு எல்லையிலேயே அவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பித்திருக்க மாட்டோமா? இந்த இரண்டு பலவீனங்களையும் தகுந்த முறையில் நாம் பயன்படுத்திக் கொண்டோமானால் வெற்றி நிச்சயம்!"

"பலவீனங்களைக் குறிப்பிட்டீர்கள். அவர்களுடைய முக்கிய பலங்களாலத் தாங்கள் கருதுவது என்னவோ?"

வரகுணர் அந்தக் கேள்விக்கு உடனடியாகப் பதில் கூறாமல் ஒரிரு கணங்கள் மௌனம் சாதித்தார். பின் மெல்லத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசத் துவங்கினார்.

"அவர்களுடைய மிகப்பெரிய பலம் அருள்மொழி வர்மன்தான். நாம் ஒப்புக்கொள்கிறோமோ இல்லையோ - சோணாட்டு மக்களுக்கு அவன்மேல் அளவு கடந்த அபிமானம் இருக்கிறது. அது ஒரு விதமான ஆபத்தான கவர்ச்சி. நானே அதனை அனுபவித்திருக்கிருறேன். அவனைப் பரம எதிரியாக பாவிப்பவன் கூட நேரில் ஒரு முறை சந்தித்தால் மனம் இளகி விடுவான். படையெடுப்பிற்கு அவனே நேரில் தலைமை தாங்கினால் மடிந்திருக்கும் சோழ வீரர்களின் உற்சாகம் மீண்டும் திரும்பிவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆக, அருள்மொழிவர்மன்தான் அவர்களது மிகப் பெரிய பலம். நமது மிகப்பெரிய பலவீனம்" என்று முடித்தார் வரகுணர். அந்த இருள் அறையில் மெல்லிய அமைதி சூழ்ந்தது. குத்துவிளக்கின் சுடர்களையே உற்று நோக்கிக்கொண்டிருந்த அமரபுஜங்கரின் முகத்தில் எங்கிருந்தோ வந்து சேர்ந்த ஒரு வறட்சிப் புன்னகை வந்து படிந்தது.

9. தூதர் திரும்பினர்



"அருள்மொழிவர்மன்தான் சோழர்களது மிகப் பெரிய பலம்!" என்று தாம் பகிரங்கமாக அறிவித்ததை அங்கு கூடியிருந்த பெருமக்கள் இரசிக்கவில்லை என்பதை மலையனூரனான விக்கிரமாதித்ய வரகுணர் உணர்ந்தார். அதன் மூலம் தாம் உண்மையில் சொல்லவரும் செய்தி என்ன என்பதை இவர்களில் ஒருவரும் விளங்கிக் கொள்ளவில்லை என்பதும் நிச்சயம். அதனால்தான் இவர்கள் தம்மைப் பார்க்கும் பார்வையில் இத்தனை அலட்சியம் தெரிகிறது.

மக்களே! ஏதோ நேற்று முளைத்த காளானைப்போல் திடீரென்று ஆரைவாய்மொழிக்கு வந்து சேர்ந்து பிறப்புரிமையைக் காட்டித் தென்னாட்டின் மணிமுடியை அபகரித்துக் கொண்டுவிட்டேன் என்றா நினைக்கிறீர்கள்? இது எத்தனை மனிதர்களின் கனவு... எத்தனை வருடக் கனவு என்பது உங்களுக்குத் தெரியுமா? இதற்குப் பின்னால் எத்தனையெத்தனை திட்டங்கள் செயல்பாடுகள். அடிமட்டத் தொடர்புகள் இருக்கின்றன என்பது தெரியுமா?

வருடக்கணக்கான உழைப்பையும் அலைச்சலையும் ஈந்துதான் இந்த மணிமுடியைப் பெற்றிருக்கிறேன் என்பது உங்களில் ஒருவருக்காவது தெரியுமா? எளிதில் எவருக்கும் மயங்காத தானைத்தலைவரே "இவரைத் தென்மலை நாட்டின் அரசராகப் பகிரங்கமாக அறிவித்தேயாகவேண்டும். அதற்குப் பிறகுதான் பாண்டிப்படை நாடுவாழிப் படைகளுடன் சேர்ந்து சோழரை எதிர்க்கும்" என்று கண்டிப்பாகத் தெரிவித்த பிறகுதானே இந்த வள்ளுவ நாட்டுக் கிழவன் பட்டாபிஷேகத்திற்கே ஒப்புக் கொண்டான்?

அடேய்! இந்த மலையனூரனை என்னவென்று நினைத்து விட்டீர்கள்? இந்த மணிமுடி என் சிரசில் வந்து அமர்ந்த பிறகே நான் ஆய்வேளானதாகவா நினைக்கிறீர்கள்? இல்லை. இல்லவேயில்லை. பலப்பல காலங்களுக்கு முன்னர் ஒரு இருட்டு இரவில் பாழடைந்ததொரு மண்டபத்தில் மழைத்தூறல்களின் நடுவே தலைவர் சிறுவனாயிருந்த என் சிரசில் கரத்தை வைத்து 'அடுத்த தென்மலைநாட்டு ஆய்வேள் நீதான்!' என்று ஆசீர்வதித்தாரே? அன்றே அந்தக் கணமே நான் இப்பகுதிகளின் ஏகபோக அரசனாகி விட்டேன். அவரது பொற்கரத்தைவிட இந்த மணிமுடி எனக்கு உயர்ந்ததல்ல. அனாதையாய்த் திரிந்து கொண்டிருந்த என்னுடைய பிறப்புரிமை அன்றே அவரால் நிலைநாட்டப்பட்டுவிட்டது. அதனை நீங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் இத்தனை வைபவங்களுக்கும் நான் ஒப்புக்கொள்கிறேனேயொழிய என்னைப் பொறுத்தவரையில் நான் என்றுமே ஆய்வேள் தான். என்றுமே அரசன்தான்.

வெளிப்படையாக இவன் எதிரியைக் கொண்டாடுகிறானே என்றா மலைத்துப்போய் நிற்கிறீர்கள்? அப்படி நான் கூறியதன் உள்ளார்ந்த அர்த்தம் என்ன தெரியுமா? "அவன்தான் அவர்களது மிகப்பெரிய பலம்.

அதனால் அந்த பலத்தை அதிக காலம் உயிரோடு விட்டு வைக்கக்கூடாது. நேரம் பார்த்து வேலையைத் தீர்த்துவிட வேண்டும்" என்பதுதான்! உங்களைப் போல் அரண்மனையின் ஆடம்பரங்களில் மூழ்கி ஆறு வேளை அறுசுவை உணவுண்டு உடல் பெருத்து அந்தப்புரத்து அழகிகளின் மடியில் உருண்டு கிடப்பவன் நான் என்றா நினைத்தீர்கள்? நான் அன்றாடம் மண்தரையில் படுப்பவனடா! மக்களோடு மக்களாகச் சாணம் பூசிய தரையின் புழுதியில் படுத்துப் புரண்டவன். அவர்களோடே இருந்தவன். அவர்களுடனேயே வாழ்ந்தவன். என்னுடைய தொடர்புகள் அருள்மொழிவர்மனின் அந்தப்புரம் வரை - ஏன், தேவைப்பட்டால் அவனது அந்தரங்கப் பள்ளியறை வரைகூட நீளுமடா....

வரகுணர் இவ்வாறான தமது எண்ணங்களில் மூழ்கி விட்டதால் அந்த அறையில் சிறிது நேரம் நிசப்தம் குடி கொள்ளலாயிற்று. அந்த நிசப்தத்தைக் கலைக்க முற்பட்ட வள்ளுவனார், ஆரைவாய்மொழிக் கோட்டையின் பாது காவலையும் பலத்தையும் படையெடுப்பைத் தாங்கும் திறனையும் கூடியிருந்தவர்களுக்குப் படத்தைக் காட்டி விளக்க முற்பட்டார்.

"நமது கணவாய்க் கோட்டையின் முக்கிய நுழை வாயிலாக விளங்குவது இதோ! இங்கே தெரியும் கிழக்கு வாயிலான பகவதியம்மன் திருவாயில். இவ்வாயிலுக்கு ஏறக்குறைய எட்டு அல்லது பத்து கல் தூரத்திலிருந்து - குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் அம்புக் குறியிடப்பட்ட இந்த இடத்திலிருந்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வாயிலுக்கு அகழியின் பாதுகாவல் கிடையாதுதான். என்றாலும் வாயிலை நெருங்கும் வழியில் இரண்டு பக்கங்களிலும் மலை ஏற்றங்கள் உண்டு. அவற்றில் நமது வீரர்கள் எந்நேரமும் நடமாடிக் கொண்டிருப்பார்கள்."

"சோழரின் பெரும்படை இந்த எட்டுக் கல் தொலைவுக்குள் நெருக்கமாக வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்?"

"அவர்கள் இந்தப் பகுதிக்குள் தைரியமாகக் கால் வைத்து விட்டால் அவர்களுக்குத்தான் ஆபத்து. மலையேற்றங்களில் காத்திருக்கும் நமது வீரர்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மலைப்பாறைகளை வரிசையாக

இருபுறங்களிலிருந்து உருட்டி விடுவார்கள். அத்துடன் மேலிருந்து அம்பு மழையும் பொழியும். இந்த ஏற்பாட்டைத்தான் வரைபடத்தில் சிறு அம்புக் குறிகளாகக் காட்டியிருக்கிறோம். குறிப்பாகக் கோட்டை வாயிற் கதவத்தைத் தகர்த்து விடலாம் எனும் நோக்கத்துடன் யானைப்படைகளை முன்னிறுத்தினால் அதோகதிதான்! கூரம்புகளாலும் பாறைகளாலும் காயமடைந்திருக்கும் யானைகள் கோபத்துடன் அவர்களையே நாசம் செய்யத் துவங்கிவிடும்."

"நாம் பாறைகளை உருட்டுவதற்குமுன் சோழர் படைகள் மலையேற்றங்களில் ஏறி நமது வீரர்களைத் தாக்கத் துவங்கி விட்டால்?"

"அது நடவாது. அந்தப் பகுதிகளில் மலை ஏற்றங்களில் கீழிருந்து ஏறமுடியாதுவாறு ஏராளமான முள்பொறிகளை அமைத்திருக்கிறோம். அது மனிதர்களானாலும் சரி, யானை குதிரைகளானாலும் சரி. புதர்களில் ஒளித்து வைக்கப்பட்டுள்ள முட்பொறிகளில் அகப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான். மேலும் அங்கு வளர்க்கப்பட்டிருக்கும் புதர்ச் செடிகள் பல உடலில் பட்டாலே கடுமையான அரிப்பையும் தடிப்பையும் தோற்றுவிப்பன. இந்தத் தொல்லைகளையெல்லாம் ஒருவாறு தாண்டுவதற்குள் மேலிருந்து பாறைகள் உருளத் துவங்கிவிடும்."

"சரி, சேதாரம் சற்று அதிகமாக இருந்தாலும் சமாளித்து ஒருவழியாகக் கோட்டைவாயிலை நெருங்கி விடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்."

"அங்குதான் அடுத்த தொந்தரவுகள் காத்திருக்கின்றன. கோட்டை வாயிலின் மேற்பகுதியை வாயிலின் பின் பக்கத்திலிருந்துதான் - அதாவது, வரைபடத்தில் வளைந்து செல்லும் இந்தப் பாதையின் வழியாகத்தான் - அடைய முடியுமே தவிர முன் பக்கத்திலிருந்து அடைய முடியாது. எதையாவது பிடித்துக்கொண்டு வாயிலுக்குமேல் ஏறுவோ மென்றால் ஒரு பிடிமானமும் கிடையாது. வேண்டுமென்றே அந்தப் பகுதிகளைச் சற்று பாசி பிடிக்க வைத்துள்ளோம். இவ்வாறாக, வாயிலின் முன்பகுதியிலிருந்து மேலேறுவது மிகக் கடினம். சுற்றி வளைத்து வரலாமென்றாலோ இரு புறங்களிலும் கோட்டை நீண்டிருக்கும். கோட்டை மதிலின் மீது நமது வீரர்கள் வில் அம்புகளுடன் தயாராக இருப்பார்கள். சுருக்கமாகச் சொன்னால் கோட்டை

வாயிலை அடைந்தாலும் அதனை உடைத்துக் கொண்டு உள்ளே புகுவது கடினம்.

கோட்டை வாயிலுக்கு மூன்று முக்கியப் பெருங் கதவங்கள் உண்டு. முதலாவது வெறும் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டுள்ள கதவம். இது கோட்டை வாயிலை அழகாகக் காட்டுகிறதேயன்றிப் பாதுகாவலுக்குச் சிறந்ததல்ல. எதிரிகள் தமது யானைப்படைகளுடன் இதனை உடைக்க முற்பட்டால் இது எளிதில் உடைந்து போகும். ஆவேசத்துடன் மோதும் யானைகளின் தலையை அடுத்த பலமான கதவத்தில் சொருகப்பட்டிருக்கும் கூர் ஈட்டிகள் பதம் பார்க்கும். குத்துப்பட்டுச் சாக வேண்டியதுதான். அப்படியே அதனைத் தாண்டிவிட்டாலும் அதற்கடுத்த ஈட்டிக்கதவம் அவர்களைத் தடுத்து நிறுத்தும். சோழப் படைகள் இந்த உடைப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் போதுதான் பாண்டிப் படைகள் முன் பக்கத்திலிருந்தும் நமது படைகள் பின் பக்கத்திலிருந்தும் ஏககாலத்தில் அவர்களைத்தாக்கும். மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப்போல் சோழர்படை இரண்டு பக்கங்களிலும் மாட்டிக் கொள்ளும். வேறு வழியின்றிப் பணியும்."

"ஆக, பாண்டிப் படைகளும் நாடுவாழிப் படைகளும் சோழர் படைகளை ஒன்று சேர்ந்து தாக்கும் தருணம் மிக மிக முக்கியமானதாகின்றது. அவர்கள் கணவாய்க்குள் புகும் முயற்சியில் பெரிதும் சோர்வுற்றிருக்கும் நேரத்தை நாம் இருவரும் துல்லியமாக உணர்ந்து செயலாற்ற வேண்டும். அல்லவா?" என்றார் அரையன் மானாபரணர்.

"ஆம். இதற்கென்றே சில புறாக்கள் பிரத்யேகமாகப் பழக்கப்பட்டிருக்கின்றன. அவை மாற்று வழிகளில் உங்களை வந்தடைந்து செய்தி சொல்லும்."

"வள்ளுவனாரே! உமது பாதுகாவல் ஏற்பாடுகள் மெச்சும்படியாகத்தான் இருக்கின்றன. இக்கோட்டையின் பலத்தை அடுக்கியதைப்போல் பலவீனங்களையும் கூற முடியுமா?"

"பலவீனங்கள் என்று குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மேற்கு வாயிலைக் குறிப்பிடலாம். அந்தப் பகுதியின் நிலப்பரப்பு நமக்கு அத்தனை சாதகமாக இல்லை. என்றாலும் மேற்கு வாயிலுக்கப்பால் அமைந்துள்ள நிலப் பகுதிகள் மொத்தமும் நமது கட்டுப்பாட்டில் வருவதால்

அது அத்தனை பெரிய ஆபத்தாக இல்லை. அதனைத் தாண்டி அமைந்திருப்பது ஆய்வேள் நாடு, தெற்கே நாஞ்சில் நாடு..."

"ஆகக் கிழக்குப் பகுதிகளின் வழியே படையெடுத்து வருபவர்கள் கோட்டை வழியாகத்தான் வள்ளுவ நாட்டிற்குள் நுழைந்தாக வேண்டும். அல்லவா?"

"ஆம். வேறு வழியேயில்லை. கணவாயை விட்டால் மலைகளின் மீது ஏறித்தான் மேற்குப்பகுதியை அடைந்தாக வேண்டும். அத்தனை பெரிய படை, ஆள் அம்பு சேனைகளுடன் இந்த அடர்த்தியான மலைக்காடுகளைக் கடப்பது நடக்காத காரியம்."

"எப்படியாவது கோட்டை வாயிலை உடைத்து உள்ளே புகுந்து விட்டால்?"

"அப்படிப் புகும் கூட்டத்தாரை மிக எளிதில் வேட்டையாடி விடலாம். ஆனால் அதற்குள் பாண்டிப்படைகள் நம்முடன் சேர்ந்துகொண்டு அவர்களை மறுபுறத்திலிருந்து தாக்கத் துவங்கிவிட வேண்டும். அதுதான் முக்கியம்."

அமரபுஜங்கர் எதுவும் பேசாமல் பலத்த யோசனையில் இருந்தார். அந்தக் கோட்டையின் அமைப்பும் வள்ளுவனாரின் பாதுகாவலும் அசைக்க முடியாத ஏற்பாடுகளாகவே தெரிந்தன. அதுதான் அவருக்கு மிகுந்த கவலையையும் கொடுத்தது. எல்லாவிதமான கோட்டைகளுக்கும் ஏதேனும் ஒரு பலகினம் இருக்கும். ஆனால் ஆரைவாய்மொழிக் கோட்டையைப் பொறுத்த வரை அனைத்துமே பலங்களாகவே தெரிந்தன. தமது அணியினர் இதில் பார்க்கத் தவறும் விஷயங்கள் ஏதேனும் உண்டா? எந்த நம்பிக்கையில் அருள்மொழிவர்மன் அத்தனை தூரம் படையெடுத்து வருகிறான்? வரகுணர் கூறுவதைப்போல் நிஜமாகவே அவர்கள் இந்தப் பகுதிகளின் சாதுர்யமான புவியியல் அமைப்பைச் சரிவர விளங்கிக் கொள்ளவில்லையா என்ன? நம்பவே முடியவில்லையே? நாளை காலை கோட்டைக்காவல் ஏற்பாடுகளைத் தாமே நேரில் சென்று கண்டாலன்றி இதனைப் பற்றி மேற் கொண்டு முடிவு செய்வதற்கில்லை என்று தமக்குள் சொல்லிக் கொண்டார் அவர்.

* * * * * * * *

கழிக்குடியின் பெருஞ்சாலை வளாகம் அந்தக் காலை நேரத்திலேயே மிகுந்த பரபரப்புக்குள்ளாகிவிட்டது. அந்தப் பரபரப்பிற்கான முக்கியக் காரணம் சோழநாட்டின் தூதுவராக மூன்று வாரங்களுக்கு முன் கழிக்குடியிலிருந்து மகோதயபுரத்திற்குக் கிளம்பிச் சென்ற பிஷு ஆனந்த தேரர் மீண்டும் சாலைக்கு வந்து சேர்ந்திருந்ததுதான். நீண்ட நாட்கள் கழித்துத் தம்பியைச் சந்தித்த மகிழ்ச்சியில் தம்புராட்டியார் களரிப் பயிற்சிகளுக்கு அன்று மட்டும் விடுதலையளித்து விட்டார். அதில் மணியனாருக்குப் பரம திருப்தி.

பிஷுவை சரிவரச் சிரமபரிகாரம் கூடச் செய்துகொள்ள விடாமல் நண்பர்கள் கேள்விகளால் துளைத்தெடுத்தார்கள்.

"என்றைக்கு மகோதயபுரத்தை அடைந்தீர்கள்?"

"அங்கே எங்கு தங்கினீர்கள்?"

"மகோதயபுரம் பெருநகரா என்ன? தஞ்சையை விடக் கச்சியை விடப் பெரியதாக இருக்குமா?"

"அங்கே நமது ஊரைப்போல் திருக்கோயில்களுண்டா? புத்த விகாரங்களும் சேதியங்களும் உண்டா?"

"சேரமான் பெருமாள் பாஸ்கரர் இரவிவர்மன் திருவடி தங்களை முறைப்படி வரவேற்றாரா? சோழப் பேரரசரின் ஓலைக்குச் சரியான மறுமொழியளித்தாரா? அது நமக்குச் சாதகமாக இருந்ததா?"

"மகோதகைக்குச் செல்லும் வழியில் கொல்ல நாட்டைக் கடந்தீர்களா?"

இப்படி ஏராளமான கேள்விகளை நண்பர்கள் அடுக்கவே திக்குமுக்காடிப்போனார் பிஷு. அவரது முகத்தில் பயணச் சோர்வும் அதைவிட ஏராளமான மனச்சோர்வும் தெளிவாகத் தெரிந்தன. இருந்தாலும் தம்முடைய உற்ற நண்பர்களின் உற்சாகத்தைக் குறைக்க விரும்பாமல் சுருக்கமாக அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். அவரது பதில்களின் சாராம்சம் பின்வருமாறு:

கழிக்குடியிலிருந்து கிளம்பிய பிஷு கடற்கரை யோரமாகவே பயணம் செய்து ஆறு நாட்களில் மகோதய புரத்தை அடைந்து விட்டார். வழியில் ஸ்ரீமூலவாச விஹாரையில் மட்டும் ஓரிரவு தங்க நேர்ந்துள்ளது. ஆகவே கொல்லம் முதலான நாடுகளில் கால் பதிக்க முடியவில்லை.

'சோழநாட்டின் தூதுவராகக் கடைசியில் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புரானா வந்திருக்கிறார்? ம்??' என்று பெருமாளின் புருவங்கள் மேலே உயர்ந்திருக்கின்றன. என்றாலும் பிரதான அரண்மனையிலேயே தங்க வைக்கப் பட்டிருக்கிறார். கவனிப்புக்களும் இராஜ உபச்சாரங்களும் குறைவில்லாமல் நடந்திருக்கின்றன.

வள்ளுவனாரும் பாண்டியர்களும் புதிதாக எவரையோ பிடித்துக்கொண்டு வந்து தென்மலைநாட்டு ஆய்வேளாக நிறுத்தியதில் பெருமாள் கடுங்கோபத்தில் இருக்கிறாராம். விழிஞம் சார்ந்த பகுதிகள் பல காலமாகவே தமது ஆதிக்கத்தில் இருப்பதாகவும் இப்போது புதிதாக முளைத்துள்ள இந்தக் குழப்பம் ஒட்டுமொத்த மலை நாட்டையும் மேலும் பலவீனமாக்கிவிடும் என்று அவர் கருதுகிறாராம்.

ஆனால் இதையெல்லாம் வைத்துக்கொண்டு அவர் சோழர்களின் நண்பர் என்று எடைபோட்டுவிடக் கூடாதாம். ஏனெனில் காந்தளூர் விவகாரத்தை அருள்மொழிவர்மர் தேவையேயில்லாமல் பெரிது படுத்துவதாக அவர் நினைக்கிறாராம். காந்தளூர் பட்டதிரிக்கு அந்தக் கொலையில் நேரடித் தொடர்பிருப்பதை நாம் அறிவோம். ஆனால் இரவிநீலி குடும்பத்துக் கொலைகாரர்களை நாட்டை விட்டுத் துரத்தியதுடன் அந்தப் பிரச்சனை முடிந்தது. மேற்கொண்டு அதனை வளர்ப்பது அனாவசியமானது என்று பகிரங்கமாகவே குறிப்பிட்டாராம். இறுதியாக எங்களுக்குள் பல்வேறு உள்நாட்டுப் பிரச்சனைகள் உண்டென்றாலும் அந்நிய சக்திகளான சோழர்கள் எங்கள் எல்லைக்குள் படையெடுப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. சேரர்களுக்கும் சோழர்களுக்குமான உறவு பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. அதனை ஒரேயடியாக முறித்துக்கொள்வது இருவருக்குமே நல்லதல்ல! என்று உறுதியாகச் சொல்லிவிட்டாராம்.

தென்மலைநாட்டுப் படையெடுப்பில் பெருமாளின் ஒன்று குறை ஆயிரத்தவரும் கலந்துகொண்டால் சோழர் படை ஜெயிப்பது மிகவும் கடினம்! என்று பெருமூச்செறிந்த படியே களைப்பில் கீழே சாய்ந்தார் பிஷு ஆனந்த தேரர்.

10. குரு ஸ்துதி



ஆனந்த தேரர் கழிக்குடிக்கு வந்து சேர்ந்த மறுநாளே அவரை நண்பர்களுடன் பிடித்து உட்கார வைத்துத் திறவுகோல் சூத்திரங்களில் உள்ள சொற்களைத் தனித் தனியே எழுத்து எழுத்தாக எழுதிக் காட்டச் சொல்லிப் பழக்கிவிட்டு, அந்தப் பெட்டியின் மேல் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களை ஒருவாறு சிரமப்பட்டுப் படித்துவிட்டார் தம்புராட்டியார். நேரடியாகப் பிஷுவை விட்டு அந்தச் சூத்திரங்களை அவர் படிக்க முயலவில்லை என்பதுதான் வேடிக்கை! என்னதான் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புரானாகவும் தனது உடன்பிறந்த தம்பியுமாகவே இருந்தாலும் பிஷு ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலையின் மாணவரில்லையாம். அதனால் அவர் அந்த சம்ஸ்கிருத ஸ்லோகங்களைப் படிக்கக் கூடாதாம். எப்படி இருக்கிறது கதை?

திறவுகோல் சூத்திரங்கள் இன்னதாம் என்று அடையாளம் கண்டுகொண்ட மறுகணமே அவர் எல்லையில்லா மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பார் என்று எதிர்பார்த்திருந்த நண்பர்களுக்கு அவரது முகத்தில் தோன்றிய சோர்வுக்களை மிகுந்த வியப்பை அளித்தது. களரியில் அமைந்துள்ள குருதாரைக்கு அவர்களிருவரையும் தனியே அழைத்துச் சென்று தமது நிலைமையை விளக்கினார் தம்புராட்டியார்.

"உன்னிகளா! இது நான் நினைத்ததைப்போல் அத்தனை எளிதாக முடிகிற விஷயமாக இல்லை. இந்தப் பெட்டியில் எழுதப்பட்டிருப்பது சாலையில் பல காலத்திற்கு முன்பு புழக்கத்திலிருந்த பழைய குரு ஸ்துதி. அதாவது துதிப்பாடலின் ஒரு பகுதி என்பதுபோலத் தெரிகிறது. அந்தப் பண்டைய துதி முழுவதும் தெரிந்தாலொழியத் திறவுகோல் சூத்திரத்தை முடிக்கும் சொற்களைக் கண்டு பிடித்துப் பெட்டியைத் திறப்பது கடினம்."

"குரு ஸ்துதியா? அப்படியென்றால் என்ன?"

"அந்தக் காலத்தில் ஒவ்வொரு சாலையைச் சேர்ந்த சட்டர்களும் தினமும் காலை-மாலை ஆகிய இரு

வேளைகளிலும் குருதாரையில் நின்று தமது சாலைக்கேயுரிய குரு வணக்கத் துதியை மௌனமாகப் பாடுவார்கள். அதாவது வாய்விட்டுப் பாடாமல் மனதால் நினைப்பார்கள். இது ஒருவகையான வழிபாடு. தியானம். இதில் அந்தச் சாலையின் பண்டைய குருக்களைப் பற்றிய பல இரகசியக் குறிப்புக்கள் வரும். சாலையில் புதிதாகச் சேரும் மாணவருக்கு ஒரு முறைதான் இந்த குருஸ்துதி கற்றுக் கொடுக்கப்படும். அதுவும்கூட மணலில் எழுதித்தான் கற்பிப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

பலமுறை மாணவர்கள் அதனை எழுதிப் பழகிய பிறகு மனனம் செய்து வைத்துக் கொண்டு தினமும் பாடுவார்கள். சாலைக்குச் சாலை இந்த குருஸ்துதி வேறுபடும். ஒரு சிலர் இதனை குரு ஸ்லோகம் அல்லது குரு ஸத்யம் என்றுகூடக் குறிப்பிடுவர். ஒருபோதும் ஓலையிலோ கல்வெட்டுக்களிலோ செப்பேடுகளிலோ இந்த குரு ஸ்துதியைப் பொறித்து வைக்கக்கூடாது என்று விதி உண்டு. ஒவ்வொரு சாலைக்கும் உரிய ஒரு வகையான பிரத்யேகத் துதிப்பாடல் என்பதாலும் அதைப் பாடினால் பண்டைய குருமார்களெல்லோரும் களரிக்கு ஆன்ம வடிவில் எழுந்தருளி விடுவார்கள் என்கிற நம்பிக்கை நிலவியதாலும்தான் அந்த விதி காலகாலமாகக் கடைபிடிக்கப்பட்டது.

துரதிருஷ்டவசமாக நான் பெருஞ்சாலைக்கு வந்து சேரும் பொழுது இந்தப் பண்டைய பழக்கங்களெல்லாம் வழக்கொழிந்து விட்டிருந்தன. எத்தனையோ முயன்றும் நமது சாலையின் பழைய துதிப்பாடலை என்னால் கண்டறிய முடியவேயில்லை. ஒரு கட்டத்தில் நானும் என்னுடைய முயற்சியைக் கைவிட்டு விட்டேன். ஹூம்..!"

தம்புராட்டியாரின் உஷ்ணப் பெருமூச்சைக் கண்டு மழபாடியார் அசந்தே போய்விட்டார். ஏதேது, நமது பிழைப்பே இப்படிச் சோதனைகளுக்கு மேல் சோதனை என்றாகிவிட்டதே? நாகையிலிருந்து கிளம்பும் அவசரத்தில் வழிக்கோட்டைக் கணவதியாருக்குத் தேங்காய் உடைக்காமல் கிளம்பி விட்டதனால்தான் இத்தனை விக்கினங்கள் வருகின்றனவா? அட ஆண்டவா!

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால் அந்தப் பெட்டியின் மீது எழுதப்பட்டிருக்கும் சூத்திரமே நமது ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையைச் சேர்ந்த துதிதானா அல்லது வேறு ஏதாவது சாலையைச் சேர்ந்த துதியா என்பதைக் கூடக் கண்டறிய முடியாது போலிருக்கிறதே?" என்று வினவினார் மணியர்.

"புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்கிறாய். ஆனால் அந்தச் சந்தேகமே உனக்கு வேண்டாம். அந்தச் சூத்திரங்கள் நிச்சயம் நமது சாலையைச் சேர்ந்தவைதான் என்பதற்கு அவையே சான்று பகர்கின்றன. மீண்டும் அந்தப் பெட்டியை எடுத்து அவற்றை ஒரு முறை படி."

பயபக்தியுடன் தமது கரங்களில் வைக்கப்பட்ட அந்தப் பவழப்பாறைப் பெட்டியின் எழுத்துக்களை மீண்டும் ஒருமுறை சிரமப்பட்டுப் மணியனார் படிக்கத் துவங்கினார்.

"முளிக்கள குர...ரோ... பௌத்....ர....."

"முளிக்கள அல்ல. மூழிக்குள. ழி திராவிடச் சிறப்பெழுத்து. சம்ஸ்கிருதத்தில் கிடையாது. அதனால் மூளிக்குள என்றெழுதியிருப்பார்கள். மூழிக்குள குரோஹோ 'பௌத்ரஹ. சரிதானா? மேற்கொண்டு படி."

"ஸ்ரீக்ருஷ்ண தனுஜோ...மகன்...."

பகபகவென்று தம்புராட்டியார் மனம் விட்டுச் சிரித்தார். "மகன் அல்ல - மஹான். மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ. ஸ்ரீகிருஷ்ண தனுஜோ மஹான். இதற்கு அர்த்தம் 'மூழிக்குள குருவின் பெயரனும் ஸ்ரீ கிருஷ்ணன் என்பவரின் மகனும் பெருமை வாய்ந்தவனுமான' என்பதுதான். இந்தத் துதியில் முதல் வரி ஏனோ எழுதப்படவில்லை. அதில்தான் இவரது கோத்திரமும் பிறந்த குடும்பமும் குறிக்கப் பட்டிருக்கும். மேற்கொண்டு படி..."

"தஸ்ய... ஈயம் பலராமஸ்ய குஸ்தி.... ம்...இல்லையில்லை, புஸ்திகா..."

"ஈயம் பித்தளையெல்லாம் கிடையாது. இயம். ம், படி..."

"அப்யாஸ கர்மணஹ..."

"ம்... இதுதான் முக்கியமான வார்த்தை. பூர்வானுபவக் கிரந்தங்களில் பலவகை உண்டு. அதில் இது அப்யாஸ கர்மணம். அதாவது பயிற்சி ஏடு எனும் வகையைச் சார்ந்தது."

"ஸ்ரீவல்லப மஹாசாலோ குர..."

"ஸ்ரீவல்லப மஹாசாலோ - இதில் நமது சாலையின் பெயர் தெளிவாக வந்து விடுகிறது பார்த்தாயா? ஆக நிச்சயம் இது ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் கிரந்தம்தான். எதற்கும் ஒருமுறை நீங்கள் படித்ததை அப்படியே எழுதிக் காட்டுகிறேன். சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்...."

மளமளவென்று மணலில் தம்புராட்டியார் கீழ்க்கண்ட வாக்கியங்களை எழுதலானார்.

मूळकिकुळगुरोःपौत्रःश्रीकृष्णतनुजोमहान्।।
तस्ययंबलरामस्यपुस्तकिाभ्यासकर्मणः।
श्रीवल्लभमहाशालागुरोः

"நிச்சயம் இது பெரிய துதிப்பாடலின் ஒரு பகுதிதான். மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ. ஸ்ரீகிருஷ்ண தனுஜோ மஹான். தஸ்ய இயம் பலராமஸ்ய புஸ்திகா அப்யாஸ-கர்மணஹ. ஸ்ரீவல்லப மஹாசாலோ குரோஹோ... ஆஹா! நமது சாலையே மஹாசாலை என்று அவரே குறிப்பிடுகிறாரென்றால்! எத்தனை புண்ணிய ஆத்மாக்கள் புழங்கிய பூமியில் நாம் நடமாடிக் கொண்டிருக்கிறோம்?"

"இதன் பொருள் விளங்கவில்லையம்மா."

"பெரிதாக ஒன்றுமில்லை. மூழிக்குள குருவின் பெயரனும் ஸ்ரீகிருஷ்ணன் என்பவரின் மகனுமான அறிவிற் சிறந்த பலராமனின் பயிற்சி ஏடு இது. இந்த பலராமன் ஸ்ரீவல்லப மஹாசாலையின் குருக்களில் ஒருவர். இத்துடன் முழுமையடையாமல் இந்தச் சூத்திரம் நின்று விடுகிறது. இதனைப் பூர்த்தி செய்ய இன்னும் இரண்டு சொற்கள் தேவை. அந்த இரண்டு சொற்களும் இவர் இன்னவாறு சிறப்பு மிக்கவர் என்பதைக் குறிப்பிடும். உன்னிகளா! எப்பேர்ப்பட்ட பொக்கிஷம் தெரியுமா இது? நமது பெருஞ் சாலையின் குருக்களுள் மிக மிக உயர்வானவராக மதிக்கப்படும் பலராம நம்பூதிரியின் கிரந்தம் இது. அவர் பழைய கோட்டைத்தளி வீட்டு வம்சத்தில் வந்தவர். தன்னை மூழிக்குளத்து குருவின் பெயரனாகச் சொல்லிக் கொள்கிறார் பாருங்கள்! ஆக, ஒரு வகையில் நமது சாலை மூழிக்குளத்தின் பாரம்பரியத்தை ஒட்டித்தான் ஏற்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஆஹா! இந்தப் பெட்டியை மட்டும் கலமறுக்கும் போட்டிகளுக்கு முன்பாக நம்மால் திறக்க முடிந்தால்?"

"நிச்சயம் திறந்து விடலாமம்மா..." என்றார் மழபாடியார் நம்பிக்கையுடன். ஆனால் எப்படித் திறக்கப் போகிறோம்? பல வருடங்களுக்கு முன் தொலைந்து போனதொரு துதிப்பாடலை எவ்வாறு மீட்கப் போகிறோம்? அந்தத் திறவுகோல் சூத்திரத்தை என்னவாறு பூர்த்தி செய்யப் போகிறோம்? என்பதெல்லாம் அவருக்குத் தெரியவில்லை.

வானத்தை வெறித்து நோக்கி நின்றார் அவர். எனக்கு உதவி செய்ய மாட்டாயா? கைக்கெட்டும் தூரத்தில் வந்து விட்ட பொக்கிஷத்தை வாய்க்கெட்டும்படி செய்ய மாட்டாயா? என்றெல்லாம் கண்ணுக்குத் தெரியாத பரம் பொருளை நோக்கி இறைஞ்சிற்று அவரது மனம்.

பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து - ஊடறுத்து - இணைக்கும் அந்தப் பெருஞ்சக்தி மழபாடியாரையே முறைத்துப் பார்த்தபடி மௌனமாக நின்றது.

வானில் மேகக்கூட்டங்கள் கூடின. கலைந்தன. ஓரிடத்தில் நிலை கொள்ளாமல் அங்குமிங்கும் தவித்தன.

* * * * * * * *

ஆரைவாய்மொழிக்கோட்டை அமைந்திருந்த மலை முகடுகளையொட்டி அடர்த்தியான காடு இரு புறங்களிலும் செழித்து வளர்ந்திருந்தது.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்

எனும் குறள்மொழியைப் பின்பற்றிச் சுற்றிலும் பாதுகாவல் மிக்கக் காட்டரணால் அக்கோட்டை இருபுறங்களிலும் பாதுகாக்கப்பட்டிருந்தது. முன் பின் பழக்கமில்லாதவர்கள் அக்காட்டுக்குள் புகுந்துவிட்டால் பின்னர் வழி கண்டு பிடித்து வெளியேறுவதற்குள் உன்பாடு என்பாடு என்றாகி விடும்.

மலைமேல் அமர்ந்திருந்த அரண்மனைக்கும் மலையின் கீழ் அமைந்திருந்த பகவதியம்மன் பெருவாயிலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் காட்டிலிருந்து கிளம்பிய சிற்றாறு ஒன்று தன் போக்கில் போய்க்கொண்டிருந்தது. அவ்வாற்றின் தீரத்தில் ஒதுக்குப்புறமானதொரு இடத்தில் பெரும் பாறையொன்றின் இருபுறங்களிலும் காந்தளூர்

ஆச்சாரியாரின் தம்பியரான வாமனரும் அச்சுதரும் அமர்ந்திருந்தார்கள். வாமனர் ஏதோ ஒரு யோசனையில் மிக ஆழ்ந்தவராகச் சிற்றாறின் சலசலப்பையும் மீன்களையும் நோக்கி நிற்க, அச்சுதர் இருப்புக் கொள்ளாமல் அவரையும் ஆற்றையும் மாறி மாறி நோக்கி நின்றார். யுகயுகாந்திரங்கள் என்று சொல்லத்தக்க பல நிமிடங்கள் இவ்வாறு மௌனமாகவே கழிந்தன.

"அண்ணா...."

"தம்பி...."

"என்ன அண்ணா? பலத்த யோசனை போலிருக்கிறது? ஏதோ என்னுடன் தனியாகப் பேசவேண்டும் என்று சொன்னீர்களே?"

"ஆமாம் அச்சுதா. பேசத்தான் வேண்டும். ஆனால் எங்கு எப்படித் துவக்குவது என்பதுதான் தெரியவில்லை."

"என்னிடம் என்ன தயக்கம் தங்களுக்கு?"

"வேறு எந்த விஷயமாக இருந்தாலும் தயக்கம் இராதுதான். ஆனால் நமது அன்னையும் தந்தையும் ஆசானுமாய் விளங்கும் அண்ணனார் பற்றிய பேச்சு என்றாலே சிறிது தயக்கம் ஏற்பட்டுவிடுகிறது."

"பரவாயில்லையண்ணா. எதுவாயினும் சொல்லுங்கள். நீங்கள் சொல்லப்போவது எதுவாக இருந்தாலும் அவற்றை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்."

"சரியானபடி யூகித்துவிட்டாய் அச்சுதா. என்னைவிட உனக்கு நுண்ணறிவு மிகுதி. அதில் சந்தேகமில்லை."

"கிடக்கட்டும் அண்ணா. சொல்ல நினைத்ததைச் சொல்லுங்கள்."

"இரண்டு நாட்கள் முன்பு பட்டாபிஷேக வைபவம் நடந்து முடிந்ததல்லவா? அதில் நமது அண்ணனுக்கு அருகில் வீற்றிருந்த பெரியவர் யார் என்பது உனக்குத் தெரியுமா? அபிஷேகம் நடந்த கையோடு நேராக அவரிடம் வரகுணர் ஆசிகள் பெறுவதற்காக வந்தாரே...?"

"உறுதியாகத் தெரியவில்லையண்ணா. ஆனாலும் யூகிக்க முடிந்தது."

"என்னவென்று யூகித்தாய்?"

"அவர் அநேகமாக இரவிநீலியின் புதல்வர்களுள் ஒருவராக இருக்கக்கூடுமென்று யூகித்தேன்."

வாமனரின் முகத்தில் வியப்புக்குறிகள் தோன்றின.

"அவர் குறிப்பாக யாராக இருக்கக்கூடும் என்று யூகிக்க முடிந்ததா?"

"தோராயமாக யூகிக்க முடிந்தது. இரவிநீலி ஆச்சாரியாருக்கு நேரடியாகப் பிறந்தவர்கள் மூவர்தான். தன்தாமவர் பிற்காலத்தல் தத்தெடுக்கப்பட்ட மலையனூரானான விக்கிரமாதித்ய வரகுணர். இம்மூவருள் முதலிவரான சோமன் இறந்துவிட்டார். இரண்டாமவரான இரவிதாசனுக்கு இப்போது பிராயம் எண்பதிற்கு மேல் இருக்கும். மிகவும் வயதானவராதலால் இத்தனை தூரம் பிரயாணப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆகவே பட்டாபிஷேக வைபவத்திற்கு வருகை தந்தவர் மூன்றாமவரான பரமேஸ்வரராகத்தான் இருக்க வேண்டும்."

"அற்புதம் தம்பி! மிகச் சரியாகச் சொல்லிவிட்டாய். அந்தப் பெரியவர் பரமேஸ்வரர்தான். வரகுணர் அவரிடம் ஆசிகள் பெற்று நகர்ந்து சென்றபின் அந்தப் பெரியவர் தன்னை மூத்தவரின் கரங்களைப் பிடித்துக்கொண்டு மிகவும் உணர்ச்சிவசப்பட்டு 'இதெல்லாமே உங்களால்தான் சாத்தியமாயிற்று. இன்றைய நிலைமை வேண்டுமானால் தற்சமயம் சாதகமாக இல்லாமலிருக்கலாம். ஆனால் என்றாவது ஒருநாள் தங்களது எண்ணம் ஈடேறும்' என்றார். என்னை அருகே வைத்துக்கொண்டு அவர் அந்த வார்த்தைகளைப் புகன்றதை அண்ணன் அவ்வளவாக ரசிக்கவில்லையென்பதைக் கவனித்தேன். ஆகவே பரமேஸ்வரரைத் தனியாகச் சந்தித்தேன்."

தாம் பேசிக் கொண்டே செல்லச் செல்ல, உணர்ச்சிகள் ஏதுமற்றுத் தன்னை வெறித்து நோக்கி நிற்கும் அச்சுதரின் கண்களைப் பார்த்தார் வாமனர். அவருக்குள் ஏதேதோ எண்ணங்கள் அலை மோதின. அவற்றைக் கட்டுப்படுத்திக் கொண்டு தொடர்ந்து பேசுவதே சிரமமாக இருந்தது. ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்.

"அண்ணன் நம் இருவரிடமும் பகிர்ந்துகொண்ட செய்திகள் அனைத்தும் உண்மைதான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால் ஒரு சில விஷயங்களின்

முக்கியத்துவத்தைக் கூட்டியும் குறைத்தும் மழுப்பியும் சொல்லியிருக்கிறார் என்பதுபோல் தோன்றுகிறது. உதாரணமாக, ஆதித்த சோழரின் கொலையைப் பற்றி நம்மிடன் அன்றொருநாள் குறிப்பிட்டுப் பேசும்போது அந்தப் படுகொலையைப் பற்றித் தமக்கு ஒன்றுமே தெரியாதென்றும் மிகக் கேவலமான துர்ச்செயலாக அது இருந்ததென்றும் வீராதி வீரனான ஆதித்தனுக்கு அப்படிப்பட்ட மரணம் நேர்ந்திருக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டாரே, ஞாபகம் இருக்கிறதா? அது ஏன் அத்தனை தூரம் கேவலமான துர்ச்செயலாக அவரால் வர்ணிக்கப் பட்டது என்பதை அன்று நம்மால் புரிந்து கொள்ளவே முடியவில்லையல்லவா?

ஆனால் பரமேஸ்வரரின் கூற்றுப்படி ஆதித்தனின் கொலையில் அண்ணனுக்கு மிக முக்கியமான பங்கிருந்திருக்கிறது. அது என்ன பங்கு என்பது அவருக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அல்லது அதனை என்னிடம் சொல்ல அவர் பிரியப்படவில்லை. அது மட்டுமல்ல, தாஸனும் நமது அண்ணனும் சேர்ந்து கொண்டு சோழ நாட்டின் அரசியல் அமைப்பையே சேரநாட்டின் முறையையொட்டி மாற்ற முயன்றிருக்கிறார்கள் என்பதைப் பரமேஸ்வரர் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்தார். இது சோழ அரசனின் அதிகாரத்தைக் குறைக்கும் நேரடி முயற்சி என்று கொள்ள வேண்டியதுதான். அது மட்டும் நிகழ்ந்திருந்தால் நாமெல்லோரும் இது போல இருப்போமா? என்று ஏக்கப் பெருமூச்சே அவரிடமிருந்து எழுந்தது.

அண்ணன் எதற்காக இப்படியெல்லாம் செய்தார் என்பதற்கான காரண காரியங்களைப் புரிந்துகொள்ள நாம் அதிகம் அலசி ஆராய வேண்டியதில்லை. அந்தக் கால கட்டத்தில் அண்ணியார் சம்மந்தப்பட்ட நிகழ்வுகளின் காரணமாக சோழர்களின் மீது தாம் கடுமையான கோபத்தில் இருந்ததாக அவரே நம்மிடம் தெரிவித்திருக்கிறார். அந்தக் கோபம் பல்வேறு வகைகளிலும் அப்போது வெளிப்பட்டிருக்கிறது."

அச்சுதரின் முகபாவத்தில் எள்ளளவும் மாற்றங்கள் ஏற்படவில்லை. அதே உணர்ச்சிகளற்ற வெற்றுப்பார்வை. எதற்காக இதையெல்லாம் என்னிடம் தெரிவிக்கிறாய்? என்பதைப்போல...

"நீ என்ன நினைக்கிறாய் அச்சுதா?"

"இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது? மூத்தவர் சரியான முடிவையே எடுத்திருக்கிறார். ஆதித்தன் பிழைத்திருந்தானானால் அது நமக்குச் சாதகமாக இருந்திருக்காது. தாஸயேட்டன் குடும்பத்தினரை அவன் ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்டியிருப்பான். அதனால் அவனுக்கு முன் அண்ணன் முந்திக் கொண்டார். அரசியல் அமைப்பில் அவர் புகுத்த முயன்ற மாற்றமும் நல்லதிற்காகத் தானே? அத்தனை அதிகாரங்களும் அரசன் என்கிற ஒரே மனிதனிடம் குவித்து வைக்கப்பட்டிருப்பதும் தவறல்லவா?"

"தம்பி.... தம்பி... வழிவழியாக வந்துகொண்டிருக்கும் பாரம்பரியங்களையும் பழக்கவழக்கங்களையும் மாற்றுவதற்கு நாம் யார்? ஈசன் சிருஷ்டித்த ஒரு உயிரைப் பறிக்கும் உரிமையை யார் நமக்குக் கொடுத்தது?"

"வழிவழியாக வந்துகொண்டிருக்கிறது என்பதனால் அதனை மாற்றக்கூடாதா என்ன? ஒருவன் உயிரோடிருந்தால் எல்லுடைய நிலைமைக்கு ஆபத்து எனும் கட்டம் ஏற்படும்போது அவனை நாம் அப்புறப்படுத்த நினைப்பது நியாயம்தானே?"

சர்வசகஜமாகப் பேசிக்கொண்டே செல்லும் அச்சுதன் நம்பூதிரியை வாமனர் வியப்புடன் நோக்கினார். ஒரு வகையில் பார்த்தால் இவனும் அண்ணனும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகச் சிந்திப்பவர்கள். செயல்படுபவர்கள் என்று அவருக்கு அந்தக் கணத்தில் தோன்றியது. அச்சுதன் மூத்தவரின் சிந்தனைகளைக் கேள்வி கேட்காமல் முழுமையாக ஏற்றுக்கொண்டவன். அவரது அடி பின்பற்றி நடப்பவன். அதனால்தான் அவர்களுக்கிடையே எந்தவிதமான பிரச்சனையும் ஒரு போதும் எழுந்ததில்லை.

ஆனால் நான் அச்சுதன் அல்ல. வாமனன். வேறு பட்டவன். நடுநிலையில் நின்று சிந்திப்பவன். ஆச்சாரியர் இரவிநீலியின் அடிச்சுவடைப் பின்பற்றி நடப்பவன். ஆனால் தமக்கும் அண்ணனுக்கும் சிறு சிறு விஷயங்களில் எப்போதும் கருத்து வேறுபாடுகள் வந்து சேரும். "அச்சுதனைப் பார்! எந்தக் கேள்வியும் கேட்காமல் நான் சொன்னதைச் செய்து முடித்துவிட்டு வந்து நிற்கிறான். நீயோ வீணாகப் பல விஷயங்களை யோசித்துக் கொண்டிருக்கிறாய்..." என்று பலமுறை மூத்தவர் தம்மிடம் கடிந்து கொண்டதுண்டு. அவர்மீது கொண்டிருந்த

அபரிமிதமான மரியாதையின் காரணமாகவே இன்றுவரை நாம் அவருக்கு அடங்கி நடந்து கொண்டிருக்கிறோமே யொழிய அவருடைய போதனைகளை ஏற்றுக்கொண்டதால் அல்ல.

நாம் அண்ணன் மீது வைத்திருப்பது மரியாதை. ஆனால் இவன் வைத்திருப்பதோ கண்மூடித்தனமான பக்தி. இரண்டிற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. சோழர்களின் இன்றைய படையெடுப்பிற்கான முழுமுதற் காரணம் அண்ணனும் சோமனும் தாஸனும் சேர்ந்துகொண்டு சோணாட்டில் ஆடிய ஆட்டங்கள்தான் என்கிற எளிய உண்மையை அச்சுதன் உட்பட அத்தனை பேருமே மறைக்கப் பார்க்கிறார்கள். அல்லது மறக்கப் பார்க்கிறார்கள்.

இவர்களிடம் மேற்கொண்டு இதனைப் புரிய் வைக்க முயல்வது வீண்முயற்சி. காலம் கடந்துவிட்டது. மேற் கொண்டு எதைப்பற்றியும் யோசிக்காமல் களத்தில் வாளேந்தி நிற்க வேண்டிய தருணம் இது.

11. தம்புராட்டியார் கதை



திறவுகோல் சூத்திரங்கள் படித்து முடிக்கப் பட்ட அன்று மாலை வேளையில் பெருஞ் சாலையின் மேற்தளத்தில் தம்புராட்டியார் மட்டும் தனியாக நின்று நீண்டநேரமாக நிலை குத்திய விழிகளால் மருந்துவாழ் மலையின் சிகரத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருப்பதை நண்பர்கள் கண்டார்கள். முதலில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார் என்றுதான் தோன்றியது. ஆனால் நாழிகைகள் பல கடந்தும் அவர் கீழே இறங்கி வாராததால் மீண்டும் தளத்திற்குச் சென்று பார்த்ததில் அதே நிலையில் அசையாமல் அமர்ந்திருக்கிறார் என்று புரிந்தது.

இம்முறை சற்று நெருங்கிப் பார்க்கையில் அவருடைய பார்வையற்ற விழிகளிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகிக் கொண்டிருந்ததைக் கண்டு நண்பர்களிருவரும் பதறிப் போனார்கள். அவரை மேலும் நெருங்கி என்ன ஏதேன்று விசாரிக்கலாம் என்று முடிவெடுத்து முன்னேறத் துவங்குகையில் இருவரையும் தடுத்து நிறுத்திய பிஷு "வேண்டாம்! இப்போதைக்கு அக்காவை நெருங்காதீர்கள்"

[illegible] மெதுவாக. அவரது குரலில் மிகுந்த வேதனையுடன் [illegible]

"ஏன்ன? என்ன நடந்தது? தம்புராட்டியார் ஏன் இத்தனை வருத்தத்திலிருக்கிறார்?"

"இப்போது ஒன்றும் நடந்து விடவில்லை. பலப்பல [illegible] முன் நடந்து முடிந்ததொரு துக்ககரமான [illegible] மீண்டும் மனதில் நிறுத்தி வருடா வருடம் துக்க தினமாக அனுஷ்டித்து வருகிறார் அக்கா. நாளை ஆனி [illegible] நாள் அல்லவா?"

"ஆம்."

"நாளை ஒரு நாள் முழுவதும் பச்சைத் தண்ணீர்கூடக் குடிக்க மாட்டார் அவர். நாள் முழுவதும் மௌன விரதம்தான். குழிக்களரியில் அமர்ந்து தியானம் செய்வார். அல்லது எங்காவது ஒரு மூலையில் அமர்ந்து பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருப்பார். நாளை ஒரு நாள் மட்டும் அவரைத் தொந்தரவு செய்யாமல் இருப்பது நல்லது. நேரத்தைக் கொண்டு இங்கே பேச வேண்டாம். வாருங்கள், குளக்கரைக்குச் செல்வோம்."

மூவரும் முடிந்தவரை சப்தம் செய்யாமல் [illegible] தளத்திலிருந்து வெளியேறினார்கள்.

* * * * * * * *

அடுத்து வரப்போகும் ஆடிமாதத்தில் வீசப்போவதற்கு [illegible] ஆயத்தமாகக் காற்று சலசலவென்று குளக்கரையின் நாற்புறங்களிலும் வீசிக்கொண்டிருந்தது. அப்பகுதியில் இருந்திருந்த ஏராளமான காய்ந்த இலைகளும் சருகுகளும் அவசர அவசரமாக இடம் பெயர்ந்தன. வானம் மப்பும் மந்தாரமுமாகக் காட்சியளித்தது. அந்தக் கருநீலப் பின்னணியில் மருந்துவாழ் மலை பெரியதொரு துக்கத்தில் தலைகுனிந்து அமர்ந்திருக்கும் மூதாட்டியைப் போல் காட்சியளித்தது.

பிஷு தன் கரங்களிரண்டையும் பிணைத்துத் தொடைகளின் மேல் இருத்தி பூமியைப் பார்த்தவாறு நின்றார். அவரது அகக் கண்ணில் பலப்பல வருடங்களுக்கு முன் நடந்து முடிந்த நினைவுகளெல்லாம் வரிசையாகப் படையெடுத்து வந்து வதைத்தன. சித்தத்தை எப்போதும்

புத்தத்தில் நிறுத்திய மனிதருக்கே மனநிலை இத்தனை தூரம் தடுமாறுகிறதென்றால் அது மிகுந்த துக்ககரமான நிகழ்வாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

ஏறக்குறைய அரை நாழிகை நேரம் மௌன விரதத்திலிருந்தவர், மெல்லத் தன்னைத் தேற்றிக்கொண்டு பேசத் துவங்கினார்.

"நண்பர்களே! தம்புராட்டியார் காந்தளூர்க் கலமறுக்கும் போட்டிகள் பற்றியும் அதில் சோழர்கள் ஈடுபட்ட வரலாற்றையும் மாளிகைப்புரத்து வீட்டின் சம்மந்தத்தையும் உங்களுக்கு விரிவாக எடுத்துரைத்தாரே தவிர அதில் தாம் பின்னாளில் சம்மந்தப்பட்ட விதத்தைச் சரிவர விளக்கவில்லையென்றே நினைக்கிறேன். ஒருவகையில் அந்த வரலாற்றை அவரால் சொல்லவும் முடியாது. இந்தப் பின்னணியை நீங்கள் தெரிந்து வைத்திருந்தால்தான் மாறிக்கொண்டிருக்கும் அவரது மனநிலையை ஒருவாறு புரிந்துகொண்டு தக்கபடி நடக்கவியலும். நீங்கள் இருவரும் இங்கு வந்து சேர்ந்ததிலிருந்து வாழ்வில் மீண்டும் அவருக்கு ஒரு பிடிப்பு அல்லது நம்பிக்கை உண்டாகியிருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. அதனை ஒருபோதும் கெடுக்கும் வகையில் நடந்துகொண்டு விடாதீர்கள். இது என்னுடைய முக்கியமான வேண்டுகோள்." - பிஷு கைகூப்பினார்.

"அபச்சாரம்! அபச்சாரம்! தேரரே - வேண்டுகோள் அது இதுவென்றெல்லாம் ஏதேதோ சொல்கிறீர்களே? எங்களுக்கு ஆணையிடவேண்டிய நிலையில் உள்ளவர் அல்லவா தாங்கள்?"

"இல்லை. இது வேண்டுகோளாகத்தான் வைக்கப்பட வேண்டும். நண்பர்களே! உங்களை இங்கு நான் அழைத்து வந்தது களரிப்பயிற்சிக்காக மட்டும்தான். ஆனால் நீங்களோ அக்காவின் பெறாத பிள்ளைகளாகவே நடந்து கொண்டிருக்கிறீர்கள். உன்னிகளா.. என்று அவர் வெறும் வாய்வார்த்தையாக உங்களை அழைக்கவில்லை. அதில் உண்மையான தாய்மையுணர்வு பரிபூரணமாகப் பரிமளிக்கிறது. அதற்குக் காரணம் நீங்களிருவரும்தான். வாழ்வில் ஒரு சுகத்தையும் அனுபவித்தறியாதவர் என் அக்கா. சிறுவயது முதல் அவருக்கு நெருங்கிய துணையாக இருந்த நானும் ஒரு கட்டத்தில் அவர் படும் துன்பங்களைச் சகிக்க முடியாமல் வீட்டை விட்டு ஓடிப்போய் விட்டேன்.

அன்று முதல் இன்று வரை கொழுகொம்பற்ற கொடியாகவே அவர் தனது வாழ்நாளைக் கழித்திருக்கிறார். அந்த நிலைமை தற்போது வெகுவாக மாறியிருக்கிறது. அவரது முகத்தில் பழைய ஒளி திரும்பிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் நீங்களிருவரும்தான். அதனால்தான் அவரது பழைய வாழ்க்கையை மனம் விட்டு உங்களுடன் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

முன்பு குறிப்பிட்டதுபோல் நாங்கள் இருவருமே எங்கள் பாட்டியார் சுந்தரியம்மையின் அன்பாகிய நிழலில்தான் வளர்ந்தோம். சிறு வயது முதலே களரி பற்றியும் சண்டைப் பயிற்சிகள் பற்றியும் அவர் சொல்லிக்கொண்டேயிருந்ததால் நாங்களும் ஒரு காலத்தில் சாலையில் சேர்ந்து சட்டர்கள் ஆக வேண்டுமென்று பேசிக்கொள்வோம். குறிப்பாக அக்காவிற்கு இது ஒரு இலட்சியமாகவே ஆகிவிட்டது. எங்கள் இருவரையும் அணைத்துப் பிடித்தபடி "என்றைக்காவது ஒருநாள் நீங்கள் அந்தக் காந்தளூரின் வீரக்களைத் தோற்கடிக்க வேண்டும்!" என்று அடிக்கடி சொல்வார் பாட்டியார்.

ஆம். கலமறுக்கும் போட்டிகளில் எத்தனையோ முறைகளும் சோழ வீரர்கள் தோற்றுப்போனது ஒரு அழியாத வடுவாகவே அவரது மனதில் பதிந்து விட்டது. ஏனெனில் அதற்குப் பிறகு பராந்தகரே அடிக்கடி எங்கள் வீட்டுப் பக்கம் வருவதை நிறுத்திவிட்டார். பாட்டியாரைத் தஞ்சைக்கு வந்துவிடும்படி வற்புறுத்தி ஓரிரு ஓலைகள் வந்தன. பின் அவையும் நின்றுவிட்டன. ஆக, ஒரு வகையில் அந்தப் போட்டிகளினால்தான் தமது கணவர் சேரநாட்டில் பரிபூரணத்துடன் கால்பதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது என்று பாட்டியாருக்கு மனதில் பட்டுவிட்டது. ஆனால் ஒரு முறை மட்டும் கழிக்குடி வரை வந்து எங்கள் அனைவரையும் அழைத்துச்சென்று பகவதியம்மன் கோயிலில் அனைவருக்கும் முன்பாகத் தனக்குப் பட்டாபிஷேக ஸ்தானத்தில் பாட்டியாரை அமர வைத்துக் கௌரவித்தார் பராந்தகர். ஒரு வகையில் அவர் எங்களுக்கும் பாட்டனார்தானே?

பெண்கள் சாதாரணமாகச் சாலைகளில் சட்டர்களாகச் சேரவே முடியாது. இருந்தாலும் எப்படியாவது அந்த விதியைக் கற்காமல் திரும்பி வருவதில்லை என்று தீர்மானித்துவிட்டு ஒரு நாள் மூத்த தம்புரானிடம் கூடச் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிவிட்டார் அக்கா.

முதலில் நாங்கள் எல்லோரும் பயந்து போனாம். ஆனால் சிறிது நாட்களிலேயே அவரிடமிருந்து நலமாய் இருப்பதாக ஓலைகள் வரவே மனம் நிம்மதியாயிற்று.

ஆனால் எங்கள் குடும்பத்தின் மிக மூத்தவரான மாளிகைப்புரத்துத் தம்புரானால் அக்காவை மன்னிக்கவே முடியவில்லை. "நமது குடும்ப மானத்தையே விற்றுவிட்ட அந்த ஓடுகாலி மீண்டும் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாளானால் கொன்று விடுவேன்!" என்று அடிக்கடி உறுமிக்கொண்டிருந்தார்.

பல்வேறு முயற்சிகளுக்குப் பின் அக்கா காந்தளூர்ச் சாலையில் எப்படியோ வெள்ளாட்டியாகச் சேர்ந்து விட்டார். பாவம்! பிறந்த நாளிலிருந்து பணிப்பெண்கள் சூழ இராணியைப் போலப் பவனி வந்தவர் பாத்திரங்கள் தேய்த்தும் சாணம் கொண்டு மெழுகியும் சமையல் செய்தும் காலத்தைக் கழித்தார். எப்படியாகிலும் காந்தளூர்ச் சாலையின் வித்தையைக் கற்றே தீரவேண்டுமென்கிற வெறி அவரை ஆட்டிப் படைத்திருக்க வேண்டும்.

வலியசாலைக் குடும்பத்தைச் சேர்ந்த பத்மநாப ஆச்சாரியாரின் மகனும் காந்தளூர்ச் சாலையின் தற்போதைய ஆச்சாரியாருமான திருநாராயண பட்டதிரியின் பார்வை எவ்வாறோ அக்காவின் மீது விழுந்திருக்கிறது. அப்போது அவர் இருபது இருபத்தைந்து வயதே நிரம்பிய இளைஞர். அக்காவிற்குப் பதினேழு பதினெட்டு வயது இருக்கும். பாட்டியாரைப் போன்றே வளப்பமான மேனியழகோடும் செழுமையான ஆரோக்கியமான வதனத்தோடும் திகழ்ந்தார். அக்காளின் அழகோ அறிவோ அல்லது இரண்டும் சேர்ந்தோ இளைஞரான பட்டதிரியை அடிமைப்படுத்தி விட்டன. இரவு நேரங்களில் அக்காவிற்கு மட்டும் இரகசியப் சங்கிராமப் பயிற்சிகளைப் பயிற்றுவிக்கலானார் அவர்.

பல நாள் திருடனும் ஒரு நாள் அகப்பட்டுக்கொள்ளும் காலம் வருமல்லவா? காந்தளூரில் கலமறுக்கும் போட்டிகள் அந்த வருடம் நடைபெற்றன. போட்டிகளுக்கிடையே ஒரு கட்டத்தில் பட்டதிரியிடம் பயின்ற மாணவர்களும் கலந்து கொள்ள வேண்டும் எனும் சூழல் உருவாகவே வேறு வழியின்றி அக்கா சட்டனாக மாறுவேடத்தில் கலந்து கொண்டு அவரது அணியை வெற்றிபெறச் செய்தார். விதி பார்த்துக்கொண்டு சும்மாயிருக்குமா? அது அக்காவின்

[illegible] தைக் கலைத்துப் போட்டது. அனைவரும் ஒரு [illegible] சட்டனாக வேடமிட்டு ஜெயித்திருக்கிறாள்? [illegible] சாத்தியமாயிற்று இது? என்று வியப்பில் சிலையாகி [illegible]

[illegible] பழைய கலமறுக்கும் போட்டியில் [illegible] வீரர்களை ஆதரித்தவர்கள் என்கிற முறையில் [illegible] வீட்டின்மேல் கடுமையான [illegible] பத்மநாப நம்பூதிரி, அந்த வீட்டைச் [illegible] பெண்ணொருத்தி இரகசியமாகச் சாலையில் [illegible] தனுர்வேத நுணுக்கங்களையெல்லாம் கற்றறிந்து [illegible] என்பதையறிந்து கடுங்கோபம் எய்தியிருக்கிறார். [illegible] பாராமல் பலருக்கும் முன்னிலையில் [illegible] அடித்து அவமானப் படுத்தியிருக்கிறார்.

[illegible] அனுமதியின்றி இவளுக்கு இரகசியமாக வித்தை [illegible] யார்?" என்று பல முறை கூட்டத்தை வினவியும் [illegible] பொறுப்பை ஏற்றுக்கொள்ள திருநாராயண [illegible] திரி முன்வரவில்லை. ஏதோ ஒரு பயம்.. தயக்கம்.. [illegible] சுயநலம் அவரை ஆட்கொண்டிருக்க வேண்டும். [illegible] வழியின்றி அக்காளைக் காப்பாற்றுவதற்காகப் [illegible] திரியின் அண்ணன் முன்வந்து "நான்தான் அவளுக்கு [illegible] கற்பித்தேன். என்னை மன்னித்துவிடுங்கள்.." [illegible] இறைஞ்சியிருக்கிறார்.

[illegible] தான். பத்மநாபரின் கோபம் அந்தக் கணத்தில் [illegible] சுடர்விட்டது. எங்களின் சாலைக்குரிய பிரத்யேக [illegible] தையை என் வாரிசைக் கொண்டே அபகரித்து [illegible] தா? உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று [illegible] உயிரைப் பறிக்காமல் அவயங்களை மட்டும் [illegible] வகையில் ஏதோ ஒரு வர்மத்தாக்குதலை ஒரே [illegible] அக்காளின் மீது யோசிக்காமல் நிகழ்த்திவிட்டார்.

[illegible] அத்தனை மனிதர்களுக்கு மத்தியில் [illegible] ஒரு பெண்ணின் மீது சிக்கலான ஒரு [illegible] பிரயோகத்தை நிகழ்த்தத் துணிகிறாரென்றால் அவர் [illegible] ஈவிரக்கமற்ற அரக்கனாய் அந்தக் கணத்தில் [illegible] வேண்டுமென்று நீங்களே யூகித்தறிந்து [illegible] அந்த நிலையில்கூடத் திருநாராயண [illegible] திரி அக்காளைக் காப்பாற்ற முன்வரவில்லை என்பது [illegible] வேதனை.

அக்காவிற்கு அனுமதியின்றி வித்தை சொல்லிக் கொடுத்த குற்றத்திற்காக பட்டதிரியின் அண்ணன் சாலையிலிருந்து நிரந்தரமாக விலக்கி வைக்கப்பட்டார். காந்தளூரிலேயே இருந்து சாலையில் மிக உயர்ந்த நிலைக்கு வளர்ந்திருக்க வேண்டிய அவரது எதிர்காலமே இந்த ஒரு நிகழ்வால் பாழாகிவிட்டது. அது மட்டுமல்ல. அவருக்கும் பட்டதிரிக்கும் இடையிலான உறவிலும் ஒரு நிரந்தர விரிசல் விழுந்து விட்டது.

குற்றுயிரும் குலையுயிருமாகக் கோட்டாற்றில் அமைந்திருந்த எங்களின் அரண்மனைக்கு வந்து சேர்ந்த அக்காவைக் கண்டு பாட்டியார் துடிதுடித்துப் போய் விட்டார். தன்னால்தானே குழந்தை தன்னுடைய எதிர்காலத்தையே பாழாக்கிக் கொண்டுவிட்டாள்? என்று நினைத்து நினைத்து அவரது மனது மிகவும் புண்பட்டுப் போய்விட்டது. அந்தக் குற்ற உணர்வைத் தாங்க முடியாமல் சில காலத்திலேயே இயற்கையெய்திவிட்டார் அவர்.

அக்காவை காப்பாற்ற வேறு வழி வகை தெரியாமல் இதே கழிக்குடி ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் வசித்து வந்த வயது முதிர்ந்த நாஞ்சில் நாட்டு ஆசானின் கால்களில் சென்று வீழ்ந்தோம். பராந்தகர் காலத்தில் சோழ வீரர்களைக் கலமறுக்கும் போட்டிகளுக்காகப் பயிற்றுவித்த அதே ஆசான்தான் அவர். எங்கள் குடும்பத்திற்கு மிகவும் பழக்கமான அந்தப் பெரிய மனிதர்தான் பல கிரந்தங்களையும் கலந்தாலோசித்து பெருமுயற்சி செய்து மெய்உழிச்சல் வைத்தியமும் வேறு பல சிக்கலான சிகிச்சைகளையும் கையாண்டு முடிந்தவரையில் மெல்ல மெல்ல அக்காவைத் தேற்றினார். ஆனால் எத்தனையோ முயன்றும் பார்வை அளிப்பதற்குரிய மிக முக்கியமான நரம்பில் ஏற்பட்டுவிட்ட பாதிப்பை மட்டும் அவரால் சரி செய்யவே முடியவில்லை. எங்களின் கண்களுக்கு முன்னால் அக்காவின் பார்வை மெல்ல மெல்லப் பறிபோய்க் கொண்டிருந்ததைப் பார்த்தும் ஒன்றும் செய்ய முடியாத துர்பாக்கியமான நிலையில் இருந்தோம்.

சரி, இந்த வேதனைமிக்க நிகழ்வுகளெல்லாம் அவரது பார்வை பறிபோவதோடு முடியட்டும். இனி நடப்பவை நல்லவையாக நடக்கட்டும் என்று நாங்களெல்லோரும் எங்களின் மனதைத் தேற்றிக்கொண்டிருந்த வேளையில்தான் வேறொரு பயங்கரம் வெளிப்படலாயிற்று. அதுதான் மூத்த

தம்பிரான் அக்காளின் மீது கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச [illegible] அடியோடு துடைத்துப் போட்டு விட்டது."

"ஏ... என்ன பயங்கரம் அது?"

[illegible]" சிறிது தயங்கினார். பின்னர் மெல்லிய குரலில் [illegible] திரும்பும்போதே அக்கா கர்ப்பவதியாகி [illegible]. ஆனால் எவரிடமும் அந்த உண்மையைச் [illegible]. சில காலம் கழித்துத்தான் அது [illegible] தெரிந்தது!" என்றார்.

12. நிசும்பசூதனி



தஞ்சை உள்ளாலைக் கோட்டையின் காவல் அரணாக அமைந்திருந்த பெருமதிலுக்கு நான்கு திசைகளிலும் திருவாயில்கள் அமைந்திருந்தன. அவற்றுள் பிரதான வாயிலாகத் திகழ்ந்தது கிழக்கு திசையில் அமைந்திருந்த கரிகாற் பெரு வளத்தான் திருவாயிலேயாகும்.

அதன் மிகுதியான முக்கியத்துவத்திற்கும் [illegible] போக்குவரத்திற்கும் பல காரணங்கள் கூறப்பட்டன.

முதலாவதாகச் சொல்லப்பட்ட காரணம் தஞ்சையின் முக்கிய வாணிப மையமாகத் திகழ்ந்த திருபுவனமாதேவிப் [illegible] இந்த வாயிலையொட்டி அமைந்திருந்தது [illegible]தான். தஞ்சையின் அத்தனை முக்கிய வாணிபப் [illegible] போக்குவரத்தும் சாத்து வண்டிகளும் தவிர்க்கவே [illegible] முடியாமல் அந்தத் திருவாயிலையே பயன்படுத்தின. நெரிசல் [illegible] அதிகமாக இருந்தாலும் சரக்குகளை அங்காடிக் [illegible] களிலோ பராமரிப்பு நிலையங்களிலோ மொத்த [illegible] பாரிகளிடமோ இறக்கி விட்டுவிட்டு உடனடியாகக் [illegible] யிலிருந்து மீண்டுவிடலாம் எனும் நம்பிக்கை [illegible] களிடையே நிலவி வந்தது. காலகாலமாக [illegible] பெற்றுக் கொண்டிருந்த இந்தப் போக்குவரத்தினால் [illegible] வாயிலையொட்டிய புறம்படிப் பகுதிகள் நன்கு [illegible] யடைந்து அங்கே பலப்பல சத்திரங்களும் [illegible]களும், ஏன், சிறு அங்காடிகளும் கூடத் தோன்றி [illegible].

இரண்டாவது காரணமாகச் சுட்டப்பட்டது தஞ்சையிலிருந்து நேராகக் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளையும் துறைமுகப்பட்டினமான நாகையையும் திருவாரூரின் வழி இணைக்கும் மிக நீண்ட முக்கியமான இராஜபாட்டையான அரிஞ்சயச் சோழப் பெருவழி தஞ்சையின் கிழக்கு வாயிலிலிருந்து துவங்கியது என்பதாம். அக்காலத்தில் மிகப் பரபரப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான ஏற்றுமதி இறக்குமதி சரக்குகளைச் சுமந்து செல்லும் முக்கிய நரம்புப் பாதையாக அரிஞ்சயச் சோழப் பெருவழி திகழ்ந்தது.

இவ்வாறு நாளாவட்டத்தில் போக்குவரத்தும் நெரிசலும் மிகுந்து போய்த் தஞ்சைவாழ்ப் பெருமக்களின் அபிமானங்களையும் வசவுகளையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்த பெருவளத்தான் திருவாயிலுக்கு அருகில்தான் முன்னொரு காலத்தில் விஜயாலயச் சோழரால் நிர்மாணிக்கப்பட்ட அன்னை நிசும்பசூதனியின் ஆலயம் அமைந்திருந்தது[12]. தஞ்சையின் நான்கு திசைகளிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த எல்லைக் காளியருள் இவ்வாலயத்தில் குடிகொண்டிருந்த தேவியே தலைமையிடம் பெற்றுத் திகழ்ந்தாள்.

சிறிய ஆலயமாக - செங்கற்தளியாக - கருவறை மற்றும் முகமண்டபத்துடன் மட்டும் கூடிய எளிய கட்டுமானமாகத் திகழ்ந்தாலும் சோழ இராஜாங்கப் பிரஜைகள் மத்தியில் குறிப்பாகப் படைவீரர்களின் மத்தியில் வெற்றியை அள்ளித்தரும் சோழத்தொல்குடியின் காவல் தெய்வமாகவே அன்னை அறியப்பட்டாள். கிழக்கு வாயில் தேவியான அவளை வணங்கிவிட்டு அல்லது அவளிடம் வெற்றிக்காகத் தகுந்த காணிக்கை செலுத்துவதாக நேர்ந்து கொண்டு விட்டுப் போருக்குக் கிளம்பினால் வெற்றி நிச்சயம் எனும் நம்பிக்கை வீரர்கள் மத்தியில் பலமாக உறுதிப்பட்டிருந்தது.

---

[12] தஞ்சை குயவர் தெருவில் உள்ள மாகாளி ஆலயத்தில் காணப்படும் தேவியே விஜயாலயர் ஸ்தாபித்த நிசும்பசூதனி என்றொரு கருத்து நிலவுகிறது. என்றாலும் சோழர்காலச் சிற்றுருவங்களில் வடிக்கப் பட்டுள்ள நிசும்பசூதனியின் உருவ அமைப்பிலிருந்து இத்திருவுருவம் பல வகைகளிலும் வேறுபட்டு விளங்குவதால இக்கருத்து சந்தேகத்திற் கிடமாகின்றது.

* * * * * * * *

அந்த ஆனி மாதத்தின் காலை வேளையில் ஆயிரக் கணக்கான சோழ வீரர்கள் அன்னையின் ஆலயத்திற்கு முன் குழுமி நின்றார்கள். அதிகாலை வேளையில் குளித்தெழுந்து தத்தம் படைகளுக்குரிய வண்ணத்தில் புத்தாடை புனைந்து நெற்றியில் வீரத் திலகமிட்டு ஆயுதங்களில் பளபளப்பாக எண்ணை தடவி நெஞ்சு நிமிர்ந்தி நின்று "இது என் தேசம்! இது என் நாடு! இவர் எம் மன்னர்! இவரது சேனையில் இன்று போர் புரிவது எம் கடமை! இப்போரில் இன்னுயிரை ஈத்து வீரசொர்க்கம் புகுவது எமக்கும் எம் குலத்துக்கும் பெருமை!" எனும் எண்ணங்களுடன் அவர்தம் கண்கள் ஒரே சேருக்குடன் மிளிர்ந்தன.

தமிழகத்தின் எல்லைகள் தாண்டி ஆந்திர தேசம் தாண்டி கருநாடக வடுகரை வென்று வடக்கே இமயமலை வரை படை நடத்திச் சென்று அச்சிகரங்களில் புலிச் சின்னத்தைப் பொறித்துவிட்டு வந்த கரிலாற் பெருவளத்தார் வழி வந்ததல்லவா இந்தச் சேனை? சங்ககாலச் சோழ மன்னர்களான நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் தமிழகத்தாலும் பகையரசருக்கெதிராகப் படைநடத்திச் சென்றபோது அவர்களைப் பின்தொடந்து பீடு நடை போட்டுச் சென்ற சேனையல்லவா இந்தச் சேனை?

இதே போன்றதொரு சோழ சைனியத்தைக் கொண்டல்லவா நூற்றியைம்பது ஆண்டுகளுக்கு முன் வீரரான விஜயாலயர் தஞ்சாபுரியில் மீண்டும் சோழ இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தார்? இதே சோழ சைனியத்தைக் கொண்டல்லவா ஆதித்தர் தொண்டை மண்டலம் வரை அந்த இராஜ்ஜியத்தை விஸ்தரித்தார்? அந்த முன்னோரின் வலியும் மூத்தோரின் வீரமும் இந்த வீரர்களின் உதிரத்திலும் பொங்கி எழுத்தானே செய்யும்?

அந்தப் படைகளுள் தரைப்படை, தூசிப்படை, தெரிஞ்ச கைக்கோளர் படை, அந்தளகப் படை, அசுவப் படை, யானைவாட்கள் படை, வேளக்காரர் படை, வில்லியர் படை என்று எத்தனையெத்தனை படைகள்! ஒவ்வொரு படைகளிலும் எத்தனையெத்தனை பிரிவுகள்! தெரிஞ்ச கைக்கோளர் படைகளுக்குள் மட்டும் பதினைந்து பதினாறு பிரிவுகள் உள்ளன போலிருக்கிறதே?

அந்த வீரர்களின் கண்களைப் பாருங்கள்! அந்தக் கண்களின் கருவிழிகளில் மின்னும் ஒளியைப் பாருங்கள்! அந்த ஒளியில் பட்டுத் தெறிக்கும் பண்டைய வீர நெறியைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்பெய்துங்கள்.

வீரர்கள் அனைவருமே அன்னை நிசும்பசூதனியின் ஆலயத்தை ஆர்வத்துடன் நோக்கி நிற்கின்றனர். அங்கே ஏதோ முக்கியமான நிகழ்வு நடந்தேறிக் கொண்டிருக்கிறது போலும்.

அன்னையின் வாயிலில் முக்கியஸ்தர்கள் பலரும் கூடியிருக்கின்றனர். அவர்களுள் நடுநாயகமாகத் திகழ்ந்தவர் சோழ சைனியத்தின் முக்கியத் தளபதியான மாராயர். உடலெங்கும் கவசம் தரித்து நெற்றியில் திருநீறிட்டு கைகளில் பெருவாளுடனும் வேலுடனும் திகழ்ந்த அவரது வீரத்தோற்றம் காண்பவர் மத்தியில் பரவசத்தைத் தோற்றுவித்தது. தமது தோற்றப்பொலிவைப் பற்றி அதிகம் பொருட்படுத்தாதவராய்க் கண்கள் மூடி உளமுருக தேவியைத் தியானித்துக்கொண்டிருந்தார் மாராயர்.

"அம்மா தேவி! காளி! நீலி! திரிசூலி... எங்கள் காவல் தெய்வமே! உன் பெயரைச் சொல்லி உன் அடிமலர் தூவித் தொழுது சோழசைனியத்தின் தெற்கு நோக்கிய படையெடுப்பை இந்த நன்னாளில் துவங்குகிறோம். தாயே! நூறாண்டுகளுக்கும் மேலாகச் சோழர்க்கு வெற்றியை அள்ளித் தந்த தெய்வமே... இந்தப் படையெடுப்பில் நாங்கள் பெருவெற்றி பெறவேண்டும். பேரரசர் அருள்மொழிவர்மர் சேனானி நாயகமாகத் தலைமையேற்று நடத்தப்போகும் இந்தப் போரில் எதிரிகள் சர்வநாசம் அடையவேண்டும். அதற்கு நீதான் அருள் புரிய வேண்டும்!"

டாண்! டாண்! டாண்! என்று ஆலயமணி மூன்று முறை அடித்து ஓய, அதே நேரத்தில் "பேரரசர் வந்து கொண்டிருக்கிறார்.. பேரரசர் வந்துகொண்டிருக்கிறார். விலகுங்கள்! விலகுங்கள்!" என்றொரு பெருங்கூச்சல் திருவாயிலினருகே கேட்கலாயிற்று. அக்கூச்சல் கிளம்பிய சில கணங்களிலேயே அயிரவாரணம் என்று சொல்லத்தக்க சகல இலட்சணங்களும் பொருந்திய இராஜ கஜத்தில் கம்பீரமாக அமர்ந்த தோற்றத்தில் அருள்மொழிவர்மர் வாயிலினருகே காட்சி தந்தார். அவரது தலைக்கு மேல் தங்க வேலைப்பாடுகள் கொண்ட வெண்ணிறக் கொற்றக்குடை பளபளத்தது. பேரரசரின் பின்புறம் நின்றிருந்த பணியாளன்

அடிக்கடி அப்புறமும் இப்புறமும் மாற்றி மாற்றி [illegible] கொண்டிருந்ததால் குடையின் குஞ்சரங்கள் [illegible] காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

[illegible] குடையின் கீழ் வீர மகுடம் தரித்து நெற்றியில் [illegible] அதன் நடுவே நேர்க்கோடாக இழுக்கப்பட்ட [illegible] வீரத் திலகமும் துலங்க மிகக் கம்பீரமான [illegible] காட்சி தந்தார் அருள்மொழிவர்மர். அவரது [illegible] மெல்லிய புன்னகைக் கீற்று எழுதப் [illegible] முகமெங்கிலும் ஒரு இறுக்கமும் [illegible] படர்ந்திருப்பதை மறுப்பதற்கில்லை. அவரது [illegible] தங்க முலாம் பூசப்பட்ட அந்தளகங்கள் [illegible] திகழ்ந்தன. தோள்களுக்குக் கீழே அணிந்திருந்த [illegible] நீண்ட தோள் கவசங்கள் மறைத்தன. [illegible] தாண்டியும் நீண்ட அவரது வலுவான [illegible] சோழ பரம்பரையின் வீரவாள் பளபளத்தது. [illegible] வேடிக்கையும் விளையாட்டும் நிரம்பியவராகவே [illegible] அருள்மொழிவர்மர், அன்று வீரசோழப் [illegible] பிறந்த மகாவீரராக - அத்தனை பெரிய [illegible] தலைமை வகித்து நடத்துவதிற்குரிய முழுத் [illegible] உள்ள மாமன்னராகக் காட்சியளித்தார்.

[illegible] கஜம், பெருவளத்தான் திருவாயிலிலிருந்து [illegible] வருவதற்கும், கீழ்த்திசையில் உதயமான ஆதவனின் [illegible] கிரணங்கள் அதன் மீது பட்டுத் தெறிப்பதற்கும் [illegible] இருந்தது. கதிரவனின் மஞ்சள் ஒளி உடலெங்கிலும் [illegible] தகதகக்க வீராதி வீரராகக் காட்சியளித்த [illegible] போர்க்கோலம் கூடியிருந்த [illegible] மத்தியில் இரோமாஞ்சனத்தை உண்டு [illegible] தலைக்குத் தலை ஆஹாகாரம் செய்தும் தத்தம் [illegible] மற்றும் வேல்களைப் பூமியில் தட்டி [illegible] "வெற்றிவேல்! வீரவேல்!" என்று [illegible] செய்தும் வீரர்கள் தமது மகிழ்ச்சியை [illegible] கொண்டார்கள்.

[illegible] திருவாயிலைக் கடந்து சில [illegible] கஜத்தை விட்டு இறங்கிய பேரரசர், [illegible] அன்னையின் ஆலயத்தை நோக்கி [illegible] போடலானார். அவருடன் நடந்து வந்து [illegible] பரிவாரத்தார், அவரது வேக நடைக்கு [illegible] முடியாமல் ஏறக்குறைய அவரைப் பின்பற்றி [illegible].



இடக்கரத்தில் தர்ஜனி முத்திரை காட்டியபடி சும்ப நிசும்பர்களைத் துரத்தும் அன்னை நிசும்பசூதனி, கண்டபாதக் குறுஞ்சிற்பம், புள்ளமங்கை திருவாலந்துறையார் திருக்கோயில், முற்சோழர் காலம்.

சில நொடிகளிலேயே முகமண்டப வாயிலை அடைந்து விட்டவரை மாராயர் எதிர்கொண்டு அழைத்துச் சென்று அன்னையின் சன்னிதானத்தில் நிறுத்தினார்.

உடலெங்கும் செவ்வாடை தழுவியோட, கபால மாலையுடன் போர்க்கோலம் பூண்டு எட்டு திருக் கரங்களிலும் ஆயுதங்கள் ஏந்திக் கண்களில் அனல் பொங்கச் சும்பர்-நிசும்பர் எனும் அசுரர்களை அடுத்த ஷணமே துவம்சம் செய்துவிடும் பேராவேசத்துடன் கோபமே உருவாய்க் காணப்பட்ட தேவியின் தோற்றத்தில் பேரரசரின்

எண்ணங்களும் பதிந்தன. அடுத்த கணமே அன்னையுடன் ஐக்கியமாகிவிட்டார் அவர்.

இவள்தான். இவளேதான். இவள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களனைத்திற்கும் மூலமாய் நிற்கும் சக்தி. ஆக்குபவளும் இவளே. அழிப்பவளும் இவளே.

அதிகார் பெருவளத்தாருக்குப் பின் தேன்றாத் துணையாய் நின்ற வல்லத்து மாகாளி இவளே. முத்தரையர்களை வீழ்த்தி அவர்களிடமிருந்து தஞ்சாபுரி தலைக் கைப்பற்றிய விஜயாலயச் சோழர் வேண்டி விரும்பித் தனது தலைநகருக்குக் காவல் தெய்வமாய் பிரதிஷ்டை செய்துகொண்ட வெற்றித் திருமகள் இவளே. ஆதித்தர் தஞ்சாவூர் அரண்மனைக்குள் வாளெடுத்துச் சுழற்ற, அவர் சுழற்றிய திசையெல்லாம் பணிய வைத்த மகாசக்தி இவளே!

இவளைத்தான் என் முப்பாட்டனாரான மதுரை கொண்ட பராந்தக தேவர் ஒவ்வொரு வெற்றியின் போதும் தொழுது நின்றார். இவளைத்தான் என் பாட்டனாரான கங்கைகொண்ட அரிஞ்சயர் ஒவ்வொரு போருக்கு முன்னரும் சென்னியும் துதித்தார். இவள்தான் என் தகப்பனாரான முதல் சோழருக்குப் பாண்டி தேசத்தை மீட்டுக் கொடுத்தாள். இவள்தான் என் தமையன் ஆதித்த கரிகாலனுக்கு ஈழப்போரில் வெற்றியை ஈட்டிக் கொடுத்தாள்.

இதோ! கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டு கண் வெளுத்துப் குழிவயிற்றோடு பங்கி சிவந்து இரு பற்கள் நீண்டு தொங்கியபடியும் இவளே சோழத் தொல்குடியின் ஜெயமகள். எத்திசைகளிலும் பரந்து விரிந்துள்ள இந்த சோழ சாம்ராஜ்ஜியத்தைப் பகைவர்களிடமிருந்து காத்து நிற்கும் சக்தி இவளே. இவளுடைய பாதார விந்தங்களைப் பணிந்து பரவித்தான் இந்தப் போரைத் தொடங்கப் போகிறோம்.

அம்மா! இது என் தலைமையில் நடைபெறப் போகும் முதற்போர். முக்கியமான போர். சூட்சும் மிக்க எதிரிகளுடன் நேருக்குநேராக மோதப் போகும் போர். இதில் எங்களுக்கு வெறும் வெற்றி கிட்டினால் போதாது. பெருவெற்றி கிட்ட வேண்டும். மிகப் பெரிய வெற்றி கிட்ட வேண்டும். அதுதான்தொழிவர்மனா? சோழ அரியாசனத்திலா? அரசனாகவா? என்று கைகொட்டிச் சிரித்தவர்க ளனைவரும் வாய்மூடி மௌனமாகும்படி இந்த வெற்றி அமைய வேண்டும்.

அம்மா! தெற்கத்திச் சேரர்களுடனான இந்தப் போர் என்றோ எப்போதோ எவராலோ ஆரம்பிக்கப் பட்டது. இதனைத் துவக்கியவன் நானல்ல. ஆனால் இதனை முடித்து வைக்க வேண்டியவன் நானாக இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். எந்த வித்தையின் மீதான செருக்கு ஒரு காலத்தில் சோழ வீரர்களைத் தோற்கடித்ததோ அந்த வித்தை தோற்கடிக்கப்பட வேண்டும். எந்த வித்தை வெல்லவே முடியாத மகாவீரரான எனது தமையனை வீழ்த்தியதோ அந்த வித்தை வீழ்த்தப்பட வேண்டும். அந்த வித்தையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் இயக்கத்தின் இறுமாப்பு அழியவேண்டும். அதன் இருப்புக்குப் பக்க பலமாக விளங்கும் நாஞ்சில் நாட்டு சக்திகளும் இந்தக் குழப்பத்தில் குளிர்காய நினைக்கும் பாண்டி நாட்டுச் சக்திகளும் தோற்றோட வேண்டும். அம்மா! இந்த வெற்றியின் மீதுதான் சோழ இராஜ்ஜியத்தை ஒரு மஹா சாம்ராஜ்ஜியமாக விஸ்திரக்கும் எனது கனவு மெய்ப்பட துவங்கும். இந்த வெற்றிக்குப் பின்தான் தென்னகம் கண்டிராத வகையில் மகோன்னதமான பலம் மிக்க ஒரு சக்தி தட்ஷிண தேசத்தில் எழும்பும்.

தாயே! என்னுடைய அத்தனை ஆசைகளையும் அபிலாஷைகளையும் இலட்சியங்களையும் அஹங்காரங் களையும் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுமில்லாதவனாக உன்னைப் பணிகிறேன். என்னில் நீ நிரம்புவாயாக. இந்தக் கணத்திலிருந்து உன்னுடைய உடலிலிருந்து பொங்கிப் பெருகும் அந்த தேஜோமயமான மகாசக்தி என்னிலிருந்தும் பெருகட்டும். உன் கண்களில் கொப்பளிக்கும் அனல் என் கண்களுக்கு வரட்டும். வஜ்ரம் போன்ற உனது கரங்களின் சக்தி என் கரங்களில் பரவட்டும். ஓங்கிய திரிசூலத்தால் சும்ப நிசும்பரை வதம் செய்த தாயே! என்னைக் கொண்டு உன்னில் வைத்தேன். உன்னையும் என்னிலிட்டேன். இனி நீயே கதி.

பளிச்சென்று வாளையும் மகுடத்தையும் கழற்றி அருகிலிருந்த வீரனிடம் கொடுத்துவிட்டு அந்தத் தரையில் பரவியிருந்த அழுக்கைப் பொருட்படுத்தாமல் எட்டு அங்கங்களும் நிலத்தில் பட அன்னையின் சன்னிதிக்கு முன் வீழ்ந்து வணங்கினார் அருள்மொழிவர்மர்.

அனல் கக்கும் விழிகளால் தன் முன் விழுந்து கிடக்கும் அந்த விஜயாலய குலத்து வீரனை முறைத்தவாறு நின்றாள் அன்னை நிசும்பசூதனி.

13. வெற்றிவேல்! வீரவேல்!



தஞ்சைக் கோட்டையின் உள்ளலை வாயிலுக்குள் புகுந்து புறம்படி வழியாக வெளியேறிய காலைக் காற்றில் படபட வென்று அடித்துக் கொண்டது ஒரு செங்கொடி. அக்கொடியில் பாயும் வேங்கையும் அதன் கீழ் வெட்டப்பட்ட வீரனொருவனின் மாலையணிந்த தலையும் அத்தலையின் கீழ் உதிரம் படிந்த வாளும் வேலும் காட்சியளித்தன. அன்னை நிசும்பசூதனி ஆலயத்தின் திருவாயிலுக்கு முன் காலை நேரத்தில் கூடியிருந்த பல்வேறு படைகளுமே தத்தம் கொடிகளை உயர்த்திப் பிடித்திருந்தன என்றாலும் அக்கொடிகளின் நடுவே சற்று பயங்கரமாகக் காட்சியளித்தது அந்தக் கொடி மட்டும்தான். அடித்துக் கொண்டிருந்த காற்றில் கொடியில் வரையப்பட்டிருந்த வேங்கை அங்குமிங்கும் அசைந்தாடிய காட்சி, என்றோ வெட்டப்பட்ட தலை இன்னமும் கூடத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறதோ? என்பதைப் போன்றதொரு அச்சத்தைப் பார்ப்பவர்கள் மனதில் தோற்றுவித்தது.

இது மேடையின் மீது நின்றபடி கொடிக்கொம்பைப் பிடித்திருந்த உத்தமச் சோழத் தெரிஞ்ச கைக்கோளப் படை வீரன் நிசும்பசூதனி ஆலயத்தின் வாயிலையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். அவனது அருகில் நின்றிருந்த வீரர்கள் கணத்திற்கொருமுறை "இன்னுமா பழுவேட்டரையர் வரவில்லை? இன்னுமா அவர் வெளியில் வரவில்லை? ஆலயத்திற்குள் சென்று நீண்ட நேரம் ஆகின்றதே? மாராயர் கூட வெளியில் வந்து விட்டார் இருக்கிறதே?" என்றெல்லாம் கேள்விகள் மேல் கேள்விகள் கேட்டு அவனைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது நச்சரிப்புக்களைச் சிறிதும் பொருட்படுத்தாதவனாய் ஆலயத்தின் வாயிலையே பதித்திருந்த அவ்வீரனின் முகம் சிறிது நேரத்திலேயே மலர்ந்தது. "அரசர் வந்துகொண்டிருக்கிறார்! அரசர் வந்து கொண்டிருக்கிறார்!" என்று பேய்க் கூச்சலிட்டாள் அவள். அதனைத் தொடர்ந்து ஹோ!

வென்று பெருங்கூச்சல் கூடியிருந்த வீரர்களின் மத்தியிலிருந்து எழுந்தது.

அன்னையின் பூரண ஆசிகளைப் பெற்றுக்கொண்டு வாயிலில் நின்றிருந்த மாராயருடன் இணைந்துகொண்ட அருள்மொழிவர்மர், மளமளவென்று வீரர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு படைகளினூடே புகுந்தார். இதனைக் கண்ட வீரர்களின் உற்சாகம் கரைபுரண்டோடத் துவங்கி விட்டது. ஆஹா! ஊஹூ! என்றெல்லாம் கூச்சல்கள் நாலாபுறங்களிலிருந்தும் எழுந்தன.

"இதெல்லாம் நமது பண்டைய பழக்கங்களுக்கு மிகவும் மாறானது அரசே! ஏதேனும் சொல்லவேண்டுமென்றால் இங்கேயே நின்று கொண்டு சொல்ல வேண்டியதுதானே? எதற்காக வேலை மெனக்கெட்டுக் கூடியிருக்கும் படைவீரர்களைப் பிளந்துகொண்டு உள்ளே செல்கிறீர்கள்?" என்று மாராயர் வியப்புடன் எழுப்பிய கேள்வி, சுற்றிலும் எழுந்த ஆஹாகாரங்கில் அவருக்கே சரிவரக் கேட்கவில்லை.

மளமளவென்று வீரர்களின் மத்தியில் புகுந்தவர், செந்நிறக் கொடியைப் பிடித்திருந்த வீரன் நின்றிருந்த சிறு மேடையை நோக்கிக் குறிவைத்து நடந்து கொண்டிருந்தார். ஓரிரு நிமிடங்களில் அம்மேடையை அடைந்து பளிச் சென்று அதில் ஏறி நின்று அமைதி! அமைதி! என்று கூறுவதைப் போன்று அவர் இரு கரங்களையும் மேலே உயர்த்த, அதுவரை நாற்புறங்களிலும் இடைவிடாது எழுந்து கொண்டிருந்த பேய்க்கூச்சல் மந்திரம் போட்டது போல அவிந்து அடங்கிவிட்டது.

அங்கு கூடியிருந்த வீரர்கள் பலரும் அவரை அத்தனை அண்மையில் பார்த்ததேயில்லை. ஆதவனின் மஞ்சள் நிற ஒளி பட்டுத் தகதகக்கும் சோழ மகுடத்துடனும் தங்கக் கவசங்களுடனும் ஒரு கரத்தில் வாள் உயர்த்திக் கம்பீரமே உருவாய் இதிகாசங்களிலும் புராணங்களிலும் வர்ணிக்கப்படும் இராமனையும் கிருஷ்ணனையும் பீமனையும் அருச்சுனனையும் ஒத்த ஒளிபொங்கும் முகத்துடன் காணப்படும் பேரரசரின் தோற்றம் அவர்களை ஏதேதோ உணர்வுகளுக்கு ஆட்படுத்தியது. அவர் வாளெடுத்துச் சுழற்ற வேண்டிய அவசியமேயில்லை. வெறுமனே போர்க்களத்திற்கு வந்து நின்றாலே போதும் அந்தச் சைனியத்தின் ஒவ்வொரு வீரனும் அவருக்காகத்

தனது இன்னுயிரையும் கொடுக்கத் தயாராகி விடுவான் என்று தோன்றியது.

வாளை உயர்த்திப் பிடித்திருந்த பேரரசர் தன் முன்னிருந்த வீரர்களிலும் தனது பார்வையை வீசியபடி கம்பீரமான குரலில் கீழ்க்கண்டவாறு மொழியலானார் :

"சோழ சைனியத்தின் வீரமிகு பரம்பரையில் வந்துதித்த வீரமிகு வீரர்களே! இந்த விரோதி வருட[13] நந்நாளில் வெற்றியைக் கொடுக்கும் கொற்றவையாகிய நமது காவல் தெய்வ அன்னை நிசும்பசூதனியைத் துதித்து அவள் பாதங்களில் பணிந்து பரவி அவளது வீரத்தை நெஞ்சிலும் நினைவத்தை எண்ணத்திலும் ஏந்தித் தெற்கு நோக்கிச் செல்லும் நமது படையெடுப்பைத் துவக்குகிறோம்.

வீரர்களே! தோல்வியையே அறியாத சோழ சாம்ராஜ்ஜியத்தின் வீரவரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை எழுதப்போகும் இந்தப் போர் நமக்கு மிகவும் முக்கியமானது. இதில் கிடைக்கப்போகும் வெற்றிதான் நமது எதிர்கால வளர்ச்சிக்கே ஆணிவேராக இருக்கப் போகிறது. ஒவ்வொரு முறையும் நாம் மதுரையை நோக்கிப் படை யெடுப்பதும் பாண்டியர்களும் அவர்களோடு இயைந்த சக்திகளும் தென்பாண்டி நாட்டில் பதுங்கிக்கொள்வதும் சிறிது காலம் கழித்து மீண்டும் தலை தூக்குவதும் இனியும் தொடரக்கூடாது. இந்த வெற்றிக்குப் பிறகு நமது பாதங்களை மிக அழுத்தமாகத் தென்பாண்டி நாட்டில் ஊன்ற உத்தேசித்திருக்கிறோம். தெற்கில் நமது வலிமை ஸ்திரப் பட்டபிறகொழிய வடக்கே நம்மால் கவனம் செலுத்த முடியாது.

வீரர்களே! நமது முன்னோர்கள் தெற்கே இராமேஸ்வரம் வழியாக ஈழத்தை நோக்கிப் படை யெடுத்துச் சென்றிருக்கிறார்கள். சிறிது காலத்திற்கு முன் எனது தந்தையாரான சுந்தரச்சோழதேவரின் ஆணைக்கிணங்க நானே ஒரு படைக்குத் தலைமை தாங்கி ஈழம் வரை சென்றிருக்கிறேன். ஆனால் நாஞ்சில் நாட்டையோ புறத்தாய நாட்டையோ அனந்தபுரம்

---

[13] இந்திய காலக்கணிதத்தின்படி (Indian Ephimertis) நமது கதை நடக்கும் காலகட்டத்தில் விரோதி வருடம் வருகிறது. தற்செயலாக, இந்தக் கதையின் அத்தியாயம் எழுதப்படும் இந்த வருடமும் (2009) விரோதி வருடம்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

பகுதிகளையோ நாம் ஒருபோதும் தீண்டியதில்லை. ஆதித்த சோழர் காலத்திலிருந்து தழைத்து வந்த சேர-சோழ உறவை மனதில் கருதியே நாம் இப்பண்டைய ஆய்வேள் நாட்டுப் பகுதிகளிலும் சேரநாட்டுப் பகுதிகளிலும் கால்பதிக்காமல் இருந்து வந்துள்ளோம்.

ஆனால் அவர்களோ நமது பெருந்தன்மையை மதித்தாரில்லை. அவர்களில் ஒரு கூட்டத்தார் நமது தேசத்தில் வந்து வசித்தபடி - நமது மண்ணில் காலூன்றி நின்று - நமக்கு எதிராகவே துரோகம் செய்யத் துணிந்தார்கள். சோழ இராஜ்ஜியத்தின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரையே அவர்களுக்காக நாம் பலிகொடுக்க நேர்ந்தது.

அவ்வாறான அசம்பாவிதம் இனியொருமுறை இம்மண்ணில் நடைபெறாமலிருக்க வேண்டுமெனில் இந்தச் சக்திகளின் ஆணிவேர் அழிக்கப்பட வேண்டும். அல்லது முற்றிலுமாக அடக்கி ஒடுக்கப்படவேண்டும். இந்த ஒரே நோக்கத்தை முன்னிறுத்தித்தான் நமது படையெடுப்பு நிகழ்கின்றது. வீரர்களே! நமக்கெதிரான சக்திகளின் ஆணி வேர் இருக்கும் இடம் அனந்தபுரத்தின் காந்தளூர்ச்சாலை. அங்கே நம்மைச் செல்லவிடாமல் தடுப்பதற்காக நாஞ்சில் நாட்டைச் சூழ்ந்துள்ள நாடுவாழிப் படைகள் ஆரல்வாய் மொழிக் கணவாயருகில் அணி திரண்டுள்ளன. சிதறிக் கிடக்கும் அப்படைகளுக்குத் தலைமையேற்பதற்காகவே புதிதாக ஒரு ஆய்வேள் மன்னர் முளைத்துள்ளதாக அறிகிறோம். இந்நாடுவாழிப் படைகளுடன் நமது நிரந்தர எதிரிகளான பாண்டிப் படைகளும் சேர்ந்து கொண்டுள்ளன. கணவாயின் அமைப்பு தங்களுக்கு எல்லா வகைகளிலும் சாதகமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு இறுமாப்பில் திரிகிறார்கள் எதிரிகள்.

சோழவீர சைனியத்தின் வீராதி வீரர்களே! ஒரு காலத்தில் எவராலும் கடக்க முடியாதது என்று எண்ணப்பட்ட இமாலயத்தின் புலிக்கணவாயையே நமது சைனியம் வெற்றி கொண்டு அதில் சோழ இலச்சினையையும் பதித்துவிட்டு வந்தது. பனிசூழ்ந்த அக்கணவாயே நமது வீரத்திற்குப் பணிந்ததெனில் இந்த ஆரைவாய்மொழி எம்மாத்திரம்? வீரர்களே! ஆரைவாய் மொழியென்ன? அதனைப்போல ஆயிரமாயிரம் கணவாய்கள் எதிரில் வந்தாலும் அவற்றை வென்று நாம் நம் இலக்கை அடைவோம். அதற்குத் தேவையான வலுவையும்

தேவி நிசும்பசூதனி இன்று நமக்கு அளித்து

வானிலிருந்து நமது முன்னோர்கள் வெற்றி
டுமென்று நம்மை ஆசீர்வதிக்கிறார்கள். அதோ!
மாந்தாதாவும் சிபியும் கரிகாலரும் நலங்கிள்ளியும்
கோச்செங்கணரும் கரங்களை உயர்த்திச்
வாழ்க! சோழப் படைகள் வெல்க! வென்று
கிறார்கள். இதுதான் தருணம். இதுதான் சரியான
கிளம்புவோம். வெற்றிவேல்! வீரவேல்!"

அவ்வளவுதான்! அடுத்த கணம் மண்ணும் விண்ணும்
போகும்படியாக "வெற்றிவேல்! வீரவேல்!
வீரவேல்!" எனும் ஆவேச கோஷம்
களிலும் எழுந்தது. மளமளவென்று வீரர்கள் தத்தம்
களுடன் இணைந்து வரிசையில் நின்றார்கள்.
ண்டுகளுக்கும் மேலாகத் தங்களைத் தங்களது
ம் அந்த மண்ணில் விளைந்த வீரத்துடனும்
பிணைத்துக் கொண்டிருந்த அந்தச் சோழ
தம் தலைவனைப் பின்தொடர்ந்து வீறு கொண்டு
புறப்பட்டது.

* * * * * * * *

களுக்கும் பிஷு ஆனந்த தேரருக்குமான
உரையாடல்கள் நடந்து முடிந்த மறுநாள்
வழக்கமாக நடைபெறும் களரிப் பயிற்சிகள்
பெறவில்லை. பிஷு குறிப்பிட்டதைப் போல்
லையிலேயே தம்புராட்டியார் குளித்தெழுந்து விட்டு
களரியில் அமைந்திருந்த குருதாரையின்
பீடமாசனத்தில் அமர்ந்துவிட்டார். அவரது நீட்டிய
தியான முத்திரையில் முடிந்தன. துயரம் படிந்த
எண்ணங்களைக் கலைக்க விரும்பாத
வருவரும் உடலில் மெய்உழிச்சல் எண்ணையைத்
தாமே பயிற்சிகளில் ஈடுபடலானார்கள்.

நான்கு வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட
பயிற்சிகளினால் உடல் நன்கு
டிருந்தது. நினைத்த வேகத்தில் நினைத்த திசையில்
முடிந்தது. அடவுகளும் வடிவுகளும் நன்கு
டிருந்தன. ஒரு வடிவிலிருந்து மற்றொரு வடிவிற்கு
கைக்குத்திப் பயட்டு எனப்படும் பயிற்சிகளிலும்

நண்பர்கள் தேறியிருந்தார்கள். ஒருவர் அஸ்வ வடிவிலிருந்து கஜ வடிவிற்கு மாறித் தாக்கினால் மற்றவர் அதனை மின்னல் வேகத்தில் ஸிம்ஹ வடிவெடுத்து எதிர் கொள்வார்.

இன்னின்ன வடிவுகளை இன்னின்ன வடிவுகள் கொண்டுதான் எதிர்கொள்ள வேண்டும் என்கிற வரைமுறைகள் பண்டைய சூத்திரங்களில் இருந்தன. சற்றே கூர்ந்து நோக்குங்கால், அடவுகளையும் வடிவுகளையும்போல் இந்த எதிர் வடிவுகளும்கூட இயற்கை படைத்திருக்கும் பல்வேறு பட்சிகள் மற்றும் விலங்கினங்களின் செயல்பாடுகளை ஒட்டித்தான் அமைக்கப்பட்டிருந்தன எனும் அரிய உண்மை புலனாகும்.

குறிப்பிட்ட விலங்கினம் என்ன வடிவத்தில் நின்று எதிராளியைத் தாக்குகிறது? எவ்வாறெல்லாம் தனது உடலைத் திருப்புகிறது? கால்கள் எந்த நிலையில் நிற்கின்றன? எவ்வாறு நின்று எப்படித் தாக்கினால் அவை சாதகமாக இருக்கின்றன? எவை பாதகமாக முடிகின்றன? என்பதையெல்லாம் நன்கு ஆராய்ந்து அதன் பின்னணியில்தான் எதிர் வடிவுகள் அமைக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, ஒருவர் சர்ப்ப வடிவெடுத்துத் தாக்க வருகிறாரெனில் அவரை மயூர வடிவெடுத்து எதிர்த் தாக்குதல் நிகழ்த்தலாம். அல்லது குறைந்த பட்சம் குக்கூக வடிவெடுத்துத் தாக்குதலிலிருந்து தப்பிக்க முயலலாம்.

ஆகவே, ஒருவர் குறிப்பிட்ட வடிவெடுத்து நம்மைத் தாக்க வரும்போது அதனைச் சரியான வடிவில் எதிர்கொள்ளவில்லையென்றால் தவிர்க்க முடியாமல் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டி வரும். அதனால், ஒருவரைத் தாக்கும் முன் கணமேனும் நிதானித்து அவர் நிற்கும் வடிவை உள்வாங்கிக்கொண்டு அதற்கான எதிர் வடிவு என்ன என்பதை அவதானித்து அதன் பிறகே தாக்குதலை நிகழ்த்த வேண்டும் என்பதைத் தம்புராட்டியார் படித்துப் படித்துக் கூறியிருந்தார்.

ஆரம்ப கட்டங்களில் எதிராளி தற்போது இருக்கும் நிலை என்ன? சிம்ஹ வடிவா அசுவ வடிவா? அதனை எந்த வடிவெடுத்து எதிர்கொள்ளலாம்? சூத்திரங்களில் சொல்லியிருப்பது என்ன? என்றெல்லாம் பலமுறை நின்று நிதானித்து யோசிக்க வேண்டி வந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல உடலும் மனமும் இயல்பாகத் தத்தமக்குரிய வடிவுகளைக் கைக்கொண்டன. ம்... வராஹ வடிவெடுத்தா

சித்தீரா? இதோ பார்! ஒரே கணத்தில் அதற்கான எதிர் வடிவெடுத்து உன்னைத் தாக்குகிறேன் என்று அடுத்த கணம் செயலாற்ற முடிந்தது. இவ்வாறு வடிவுகளை மாற்றிக் கொண்டே தாக்குதல் நிகழ்த்தும் கைக்குத்திப் பாதங்களைத் தவிர உடலின் சூட்சுமமான நரம்புகளையும் முக்கிய பிரதேசங்களையும் தாக்கி எதிராளியைச் சோர்வடையச் செய்யும் வர்ம அடிகளை உள்ளடக்கிய தாக்குதல்களும் சுமட்டடியும் கூடப் பரிந்துரைக்கப்பட்டன.

இருவரும் களரிப் பயிற்சிகளை ஒன்றாகவே மேற்கொண்டார்கள். எனினும் நாளடைவில் அக்கலை ஒவ்வொருவரிடமும் பிரத்யேக வேறுபாடுகளுடன் வெளிப்படலாயிற்று. இத்தனைக்கும் தம்புராட்டியார் இருவருக்கும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியாகத்தான் தாக்குதல்களைப் பயிற்றுவித்தார். உழிச்சல் வைத்தியத்திலும் எந்த வேறுபாடுகளும் இல்லை. என்றாலும் இக்கலையை மனதால் நன்கு உள்வாங்கிக் கொண்டு உடல் மொழியாக பாவங்களாக வெளிப்படுத்துவதில் இருவருக்கும் இயல்பிலேயே வேறுபாடுகள் தோன்றின.

களரிப் பயிற்சிகளின் ஒவ்வொரு அசைவையும் நன்கு புரிந்து கொண்டு அதனைத் தமது அங்கங்களின் வழியே வெளிப்படுத்துவதற்குப் பரமன் மழபாடியாருக்குப் பெருமுயற்சி தேவைப்பட்டது. பல்வேறு விதிமுறைகளையும் சூத்திரங்களையும் அடிக்கடி மனனம் செய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு சில விஷயங்கள் சிறிதளவாவது மறந்து போய்விட்டால் அடுத்த கணமே தம்புராட்டியார் அவரைத் தாக்கி வீழ்த்துவதற்குத் தயாராக இருந்தார். பலப்பல விதிமுறைகளையும் நான்கைந்து முறை பரிசீலித்த தாக்குதல்களுக்கு உட்பட்ட பிறகே அவர் இயல்பாகக் கைக்கொண்டாரெனில் மிகையில்லை. எனினும் முயற்சித் திருவினையாக்கும் எனும் பண்டைய தமிழ்மொழியில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்த மழபாடியார், ஒவ்வொரு நாளும் மிகுந்த கவனத்துடனும் உற்சாகத்துடனும் பயிற்சிகளை மேற்கொண்டு படிப்படியாக முன்னேறி வந்தார்.

இளையவர் கம்பன் மணியனாரின் அனுபவமோ இதற்கு நேர்மாறாக இருந்தது. அவருக்குப் பல்வேறு பயிற்சிகளும் மிக இயல்பாக அதிக முயற்சியின்றியே கைவந்தன. உண்மையிலேயே அக்கலை இளையவருக்கு இயல்பாக

வசப்பட்டதா? அல்லது தமக்குத்தான் அவ்வாறான பிரமை தோன்றுகிறதா? என்பதை மழபாடியாரால் நிச்சயம் செய்து கொள்ள முடியவில்லை. விடியற்காலையில் எழுந்து நெய்விளக்கொளியில் முதல்நாள் பயிற்றுவிக்கப்பட்ட பலப்பல சூத்திரங்களையும் அவர் மிகுந்த முனைப்புடன் மனனம் செய்துகொண்டிருக்க, இளையவரோ நிம்மதியாக உறங்கிவிட்டு நிதானமாகத்தான் எழுந்திருப்பார். ஆனால் பயிற்சிகளின்போது தம்மைவிட அவரே அந்த விதிமுறைகளை இயல்பாக வெளிப்படுத்தியதைப்போல் தோன்றும். தம்புராட்டியாரும் சொல்லி வைத்ததைப் போல் இளையவரை விட அவரைத்தான் அதிகம் கண்டிப்பார்.

இவ்வாறான வேறுபாடுகளை எப்படியோ ஜீரணித்துக் கொண்டு தொடர்ந்து உற்சாகமிழக்காமல் செயல்பட்டு வந்த மழபாடியாரின் மனதில் சில நாட்களாக வேறொரு மனக்குமைச்சலும் முளைவிடலாயிற்று. அது என்னவெனில், தம்புராட்டியார் தன்னைவிட இளையவரையே அதிகம் நேசிக்கிறாரோ? தன்னினும் அவரிடமே அக்கறை கொண்டுள்ளாரோ? எனும் சந்தேகம்தான். ஆரம்ப கட்டங்களில் சிறு சிறு செயல்பாடுகளில் தென்பட்ட தம்புராட்டியாரின் அக்கறை, சில நாட்களாக மிகப் பகிரங்கமாகவே வெளிப்படலாயிற்று.

முதலில் மழபாடியார் இதனைக் கண்டுகொள்ளாமல் புறக்கணிக்க நினைத்தாலும் நாள் செல்லச் செல்ல அதுவே ஒரு மெல்லிய மனவேதனையாக வடிவெடுக்கத் துவங்கி விட்டது. எவரிடமாவது தமது ஆதங்கங்களைக் கொட்டித் தீர்த்தாலாவது சிறிது ஆறுதல் பிறக்கும். ஆனால் யாரிடம் கொட்டுவது என்பதுதான் அவருக்குத் தெரியவில்லை. நிச்சயம் தம்புராட்டியாரோ இளையவரோ அதற்கு ஏற்றவர்களல்லர். பிஷுவிடம் கூறிப் பார்க்கலாமா? அவர் இதனை எவ்வாறு எடுத்துக் கொள்வார்? பாவம்! பலப்பல வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் அக்காளின் முகத்தில் புன்னகையையே பார்க்கிறார் அவர். அந்தச் சிறிய இன்பத்தையும் நாம் பறிக்க வேண்டுமா என்ன? வேண்டாம். இதனை அவரிடமும் தெரிவிக்க வேண்டாம்.

வேறு எவரிடம் அவரது ஆதங்கங்களைக் கொட்டித் தீர்ப்பது என்று யோசித்தபோது தவிர்க்க முடியாமல் ஒரே ஒருவர்தான் மிச்சமிருந்தார். அவ்வப்போது மழபாடியாரின் மனக்கண்ணில் தோன்றி மறையும் பாட்டனாரான குருகாடி செல்லக்கிழார்தான் அந்த ஒரே மனிதர்.

மறைந்து போய்விட்ட அந்தக் கிழவர் தமது கண்ணெதிரே இருப்பது போன்று மனதில் வரித்து அவரிடம் தனிமையில் தனது மனப் புழுக்கங்களை யெல்லாம் ஒளிவு மறைவின்றி எடுத்து வைத்தார் மழபாடியார்.

கிழார் ஒரு மெல்லிய புன்னகையுடன் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். "இது அவன் காலம்! அனுபவித்துவிட்டுப் போகட்டும். உனக்கும் ஒரு காலம் வரும்! அதுவரை பொறுமையுடன் இரு" என்று கை உயர்த்தி உபதேசித்தார்.

14. பாண்டியர் சிந்தனை



தாமிரவருணி ஆற்றின் கரையில் அந்த மாலை நேரத்து அமைதி முற்றிலுமாகக் குலைந்து போகும் வண்ணம் "சளாங்" "சளாங்" என்று வாட்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும் சப்தமும் "டணார்" "டணார்" என்று வேல்கள் கேடயங்களில் மோதி விழும் சப்தமும் நாலாபுறங்களிலும் எழுந்தன. அந்தச் சப்தங்களினால் அதிகம் பாதிக்கப்படாதவராக பாண்டித்தேவர் அமரபுஜங்க நெடுஞ்செழியர் ஆற்றின் கரையில் அமர்ந்த வண்ணம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தார். அவரது புருவங்கள் சிக்கல் மிகுந்த சிந்தனைகளின் தாக்கத்தினால் அவ்வப்போது நெறிந்து விரிந்தன.

அவருக்குச் சிறிது தொலைவில் வாட்பயிற்சி நடை பெற்றுக் கொண்டிருந்த இடத்தில் தென்னவன் பிரம்மராயரும் பாண்டிய இளவல் சடையமாறரும் பாண்டி நாட்டு வீரர்களுடன் காணப்பட்டார்கள். போர்க் களத்தில் நான்கைந்து பேராகச் சேர்ந்து ஒரு வீரனைச் சூழ்ந்து கொண்டு தாக்கினால் மற்றவர்கள் எவ்வாறு உதவிக்கு வருவது என்பது பற்றிய பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாண்டி நாட்டு வீரர்கள் நான்கு பேரைச் சோழ வீரர்களாக பாவித்து, அரையனார் அவர்களுடன் பயிற்சி செய்து கொண்டிருந்தார். அவரது மேனியெங்கிலும் வியர்வை வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவருக்கு உதவும் பொருட்டு இளவல் அந்தக் கூட்டத்தின் நடுவே பாய

முயல்வதும் அதற்கு இடங்கொடாமல் அந்த வீரர்கள் அவரை விலக்கி விடுவதுமாகப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் தனக்கருகில் நின்று கொண்டிருந்த வேறொரு வீரனுக்கு இளவல் கண்ஜாடை காட்டவே, இருவருமாகச் சேர்ந்து அந்த நால்வர் வியூகத்தைச் சடாரென்று உடைத்து வீழ்த்தினார்கள்.

"சபாஷ்! இளவரசே, நீங்கள் எடுத்ததுதான் சரியான முடிவு. வீரர்களே, இதனை நன்கு கவனித்துக் கொண்டீர்களல்லவா? நாளையும் இதே போன்று வியூகங்களை உடைக்கும் பயிற்சியில் ஈடுபட வேண்டும். நமது பக்கத்திலிருக்கும் தீவிரமான வீரர்களைத் தனிமைப் படுத்தி நான்கு அல்லது ஐந்து வீரர்களைக் கொண்ட வியூகம் அமைத்துத் தாக்கும் பழக்கம் சோழர்களிடம் எப்போதும் உண்டு. இம்மாதிரியான தாக்குதல்களினால் நாம் பலமுறை தலைசிறந்த வீரர்களை இழந்திருக்கிறோம். இம்முறை அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. தெரிந்ததா?"

"நாம் வியூகத்தை உடைப்பதில் தீவிரமாக இருக்கையில் வேறு எவராவது பின்புறம் வந்து தாக்கினால்?"

"வியூகத்தை உடைக்கப்புகும் அனைவருக்குமே பின்னணியில் ஒரு பாதுகாவல் தேவை. ஒருவர் முன்சென்று வியூகத்தை உடைக்க முற்படுகையில் மற்றவர் அவரைக் காப்பாற்ற வேண்டும்."

"ஒரே ஒரு வீரனைக் காப்பாற்ற இத்தனை முயற்சி தேவையா?"

"ஆம். நிச்சயம் தேவைதான். உங்களில் ஒருவன் இவ்வாறு தன்னுடைய சக வீரர்களால் காப்பாற்றப்பட்டால் எத்தனை உற்சாகம் அடைவான் தெரியுமா? அது மட்டுமல்ல. வியூகத்தில் ஈடுபட்டிருக்கும் நால்வரையுமே நீங்கள் அடுத்தபடியாக வீழ்த்தியாக வேண்டும். இவ்வாறு நான்கைந்து முறை வியூகங்கள் உடைக்கப்பட்டால் சோழ வீரர்கள் பெரிதும் மனச்சோர்வெய்தி விடுவார்கள்."

கூடிநின்ற வீரர்களின் முகம் மெல்ல மலர்ந்தது. "நீங்கள் கூறுவது உண்மைதான். இனி நாங்களே பயிற்சி செய்கிறோம். நீங்கள் சென்று சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் ஐயா..."

"இந்தப் பயிற்சியை நாளை முழுவதும் நமது வீரர்கள் அனைவரும் பயின்றாக வேண்டும். தெரிந்ததா? நமக்கு அதிக

அவகாசமில்லை.." என்று கூறியபடி தனது அங்க வஸ்திரத்தினால் வழிந்தோடிய வியர்வையை ஒற்றியெடுத்த அரையனார், இளவலுடன் மெல்ல ஆற்றங்கரையை நோக்கி நடக்கலானார்.

அவசர அவசரமாக நடத்தி முடிக்கப்பட்ட பட்டாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டு விட்டு முதல் நாள் மாலையில்தான் அவர்கள் ஆரைவாய்மொழிக் கோட்டையிலிருந்து சுந்தரபாண்டியபுரத்திற்கு வந்து சேர்ந்திருந்தார்கள். பயணக் களைப்பு மிகுதியாக இருந்தாலும் வீரர்கள் உற்சாகத்துடன் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட வேண்டுமென்பதற்காக மந்திரியார் இளவலுடன் சேர்ந்துகொண்டு காலை முதலே களத்தில் பொழுதைச் செலவழித்துக் கொண்டிருந்தார்.

அதற்குத் தக்க பலன் இருக்கத்தான் செய்தது. பேற்கொண்டு தாமதிக்காமல் போர் வியூகங்களை முறைப்படி வகுத்து அவற்றைப் பல்வேறு சேனானி நாயகங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்கிற முடிவை அவரும் நெடுஞ்செழியரும் கோட்டைக் கரையிலேயே எடுத்திருந்தார்கள். அது குறித்துத்தான் பாண்டித்தேவர் பலத்த யோசனையில் ஈடுபட்டிருக்கிறாரோ என்னவோ? என்று எண்ணமிட்டபடி மந்திரியார் அவரை நெருங்கினார்.

"என்ன பலத்த யோசனை தேவருக்கு? பயிற்சிக் களத்திற்கு வருவீர்கள் வருவீர்கள் என்று பலமுறை எதிர்பார்த்திருந்தேன்."

"உங்களது பயிற்சியின் அழகை இங்கிருந்தே அனுபவிக்க முடிகிறதே? சோழ வீரர்களின் வியூகமுறைத் தாக்குதலை உடைக்கும் முறையை நீங்கள் இருவரும் வீரர்களுக்குக் கற்றுக் கொடுத்தது சரியானதாகவே இருந்தது. ஆனால் அவர்களது இந்த வியூகமுறை சரிப்பட்டு வரவில்லையென்றால் சடாரென்று வேறொரு பாணிக்குத் தாவிவிடுவது வழக்கம். இம்முறை அவ்வாறு தாக்குதலை மாற்றியமைக்கும் முன் கணிசமான தாக்குதலை அவர்கள் பக்கத்தில் ஏற்படுத்திவிட வேண்டும்..." - ஏதோ இலக்கற்ற வெளியிடத்தை நோக்கி நின்றபடித் தம்மிடம் பேசிக் கொண்டிருக்கும் தேவரின் எண்ணங்கள் முழுமையாக அவரிடத்தில் இல்லை என்பதை அரையனார் உணர்ந்தார்.

"என்ன, ஏதாவது புதிய சிக்கல் முளைத்துள்ளதா? தங்களின் முகம் அத்தனை உற்சாகமாக இல்லையே?"

"புதிதாக ஒன்றும் முளைத்துவிடவில்லை. பழைய முடிச்சுதான். என்றாலும் நான் நினைத்த முறையில் அவிழவில்லை. அதன் தாக்கம் என்ன என்பதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"அது என்ன சிற்றப்பா பழைய முடிச்சு?" - அதுவரை உரையாடலில் கலந்துகொள்ளாத இளவலிடமிருந்து புறப்பட்டது அந்த வினா.

"சோழ நாட்டு வீரர்களிருவர் வள்ளுவ நாடுவாழியாருக்கும் காந்தளூர்ச்சாலையின் பட்டதிரிக்கும் ஓலைகள் கொண்டு சென்றார்களல்லவா? அந்த ஓலைகள் இருவருக்குமே சென்று சேரவில்லை. சரி, ஏதோ தாமதமாகின்றது என்று முதலில் நினைத்தேன். ஆனால் கடைசிவரை அந்த ஓலைகள் வரவேயில்லை. ஆக, அந்த வீரர்கள் என்ன ஆனார்கள்? அவர்கள் கொண்டு வந்த ஓலைகள் எங்கே?"

"அந்தச் சோழ வீரர்களுக்காகவா தாங்கள் இத்தனை தூரம் யோசிக்கிறீர்கள்? நம்மைத் திசை திருப்புவதற்காகவே சோழன் அவர்களை அனுப்பி வைத்திருக்கலாம் அல்லவா? நமது மந்திரியார்கூட இதே சந்தேகத்தை முன்பு நம்முடன் பகிர்ந்து கொண்டிருக்கிறாரே?"

"மாறா, நம்மைத் திசை திருப்புவதற்காக மட்டும் இத்தனை தூரம் மெனக்கெட வேண்டியதேயில்லை. இன்னாருக்கு இன்னவிதமாக ஓலைகள் அனுப்பப்படப் போகின்றன என்கிற செய்தியை மெல்லத் தஞ்சையில் கசிய விட்டாலே போதுமே? நமது ஒற்றர்கள் மூலமாகச் செய்தி வந்து விடுமே? இது வேறு விவகாரம் போலத் தெரிகிறது. அது மட்டுமல்ல. பட்டதிரிக்கும் நாடுவாழியாருக்கும் ஓலையனுப்பாத சோழன் பெருமாளுக்கு ஓலையனுப்பி யிருக்கிறான். அதையும் ஒரு புத்த பிஷுவின் மூலமாகக் கொடுத்திருக்கிறான்!"

அதுவரை தெளிவாக இருந்த மந்திரியாரின் முகத்திலும் இப்போது குழப்ப இரேகைகள் படிந்தன. "என்ன, புத்த பிஷுவா? மீண்டும் நாகை விஹாரையின் மூத்த ஆச்சாரியர் இந்த விவகாரத்தில் சம்மந்தப்பட்டிருக்கிறாரா என்ன? அவருக்கும் சேர-சோழ அரசியலுக்கும் என்ன சம்மந்தம்? அப்படியெனில் அந்த இளைஞர்கள் உண்மையில் என்னதான் ஆனார்கள்?"

"இல்லையில்லை. நீங்கள் குறிப்பிடும் துறவி மிகவும் வயதானவர். பௌத்த உலகில் மிகவும் பிரசித்தி பெற்றவர். பதர திட்ட விஹாரையின் மூத்த ஆச்சாரியரான மஹா காசியப தேரர். அவரைச் சிறுவயது முதலே நான் நன்றாக அறிவேன். அன்று பார்த்த மேனியராகவே இன்றும் காட்சியளிக்கிறார். அவரது பிராயம் தொண்ணூறுக்கு மேல் கூட இருக்கலாம் என்று வதந்தி. தற்சமயம் அவர் நாகையில் இல்லை. கீழ்த்திசை நாடுகளில் நடக்கவிருக்கும் பௌத்த சங்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சைலேந்திர விஜயம் எனும் பெருங்கலத்திலேறி காம்போஜம் சென்று விட்டதாகக் கேள்வி.

சேரமானுக்கு ஓலையெடுத்துச் சென்ற பிஷு பிராயத்தில் மிகவும் இளையவர். சோழனுக்கு நெருக்கமானவர். அவருடைய பூர்வோத்திரங்களைப் பற்றி விசாரித்ததில் மாளிகைப்புரத்து வீடு எனும் பண்டைய நாடுவாழிக் குடும்பத்தின் பெயர் அடிபட்டது. அந்தக் குடும்பத்தார் காந்தளூர் பட்டதிரிக்கும் வலியசாலைக் குடும்பத்தினருக்கும் ஜென்ம வைரிகளாவார்கள். 'எதிரியின் எதிரி எனது நண்பன்' எனும் தத்துவத்தையொட்டிச் சோழன் செயல்படுகிறான் போலிருக்கிறது. அந்தப் பிஷு மலைநாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் பலகாலம் காம்போஜ தேசத்தில் இருந்தவராம். திடீரென்று அவர் இந்த விவகாரத்தில் எதற்காக முளைத்தார்? சோழன் அவரை எங்கே எவ்வாறு தேடிப் பிடித்தான்? அவரை இந்த விவகாரத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் என்ன சாதிக்க நினைக்கிறான்? ஒன்றும் புரியவேயில்லை."

"நமது குறிக்கோள் சோழருடனான போரில் வெல்வது தானே சிற்றப்பா? எதற்காக அருள்மொழிக்கும் காந்தளூருக்குமான தனிப்பட்ட பகையைப் பற்றியும் அந்த புத்தத் துறவியைப் பற்றியும் நாம் இத்தனை தூரம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்?"

கலகலவென்று சிரித்தார் தேவர்.

"சடையா! தெய்வப்புலவர் திருவள்ளுவர் மருத்துவம் பற்றிய அதிகாரத்தில் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? 'நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்று கூறியிருக்கிறார். உடல்

நோய்களுக்கு மட்டுமல்ல, அரசியல் நோய்களுக்கும் அது பொருந்தும். தென்பாண்டி நாட்டில் ஒரு படையெடுப்பு நிகழ இருக்கிறது. இது வெளிப்படையாகத் தெரியும் விஷயம். நோய். இதன் முதல் நாடி - அதாவது இதன் உண்மையான நோக்கத்தை நாடிச் சென்றோமானால் அது நேராகக் காந்தளூரில்தான் சென்று முடியும். இந்தப் படையெடுப்பைப் பொறுத்தவரைச் சோழனின் உண்மையான இலக்கு காந்தளூர்ச் சாலையே தவிர நாஞ்சில் நாடோ, பாண்டி நாடோ அல்ல.

'என்னுடைய பகுதியின் வழியாகச் சென்று என்னுடைய நாட்டின் சாலையையேவா தாக்குகிறாய்? அது நடவாது!' என்று அதற்கு இடங்கொடாமல் வள்ளுவனாரும் மற்ற நாடுவாழிகளும் வழிமறித்து நிற்கிறார்கள். எதனால்? அவர்கள் அனைவருமே பரம்பரை பரம்பரையாக ஒரு காலத்தில் ஆய்வேளரசருக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள். அவரால் நிர்மாணிக்கப்பட்டு அவரது வம்சத்தவரால் புரக்கப்பட்ட மலைநாட்டின் சாலையை அந்நியர் தாக்குவதைப் பார்த்துக் கொண்டு அவர்களால் சும்மாயிருக்க முடியாது. இருக்கக்கூடாது.

மேலும் நாஞ்சில் நாட்டின் வழியாகச் சோழப் படைகள் அமைதியாகப் படை நடத்திச் சென்றன என்றால் அந்த நாடு சோழர்களுக்கு அடங்கிய நாடு - அல்லது அவர்களுடன் நட்புடன் திகழும் நாடு - என்று பொருள் கொள்ள நேரும். மலைநாட்டு மக்களைக் கடுங்கோபத்தில் ஆழ்த்தியிருக்கிற காந்தளூர்ச்சாலைப் படையெடுப்பிற்குத் தென்மலைநாட்டு நாடுவாழிகளும் உறுதுணை எனும் அவச் சொல்லை ஒருபோதும் நாடுவாழிப் பெருமக்கள் விரும்ப மாட்டார்கள். அது அவர்களின் எதிர்காலத்திற்கே ஆபத்தானது.

'எதிரியின் எதிரி எனது நண்பன்' எனும் அதே தத்துவத்தைப் பின்பற்றித்தான் நாமும் இந்தப் போரில் கலந்து கொள்கிறோம். தனியாகச் சோழனை எதிர்க்குமளவிற்கு நம்மிடம் இப்போது வலிமை இல்லை. ஆகவே வலுவில் ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நமக்கேற்றவாறு பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறோம். ஒரு வேளை நாளையே நாடுவாழிகளுக்கும் சோழனுக்குமான பகை முடிந்து உறவு ஏற்பட்டு விடுகிறது என்று வைத்துக் கொள். அப்போது நமது நிலை என்ன, நமது படைகளின் கதி என்ன என்றெல்லாம் நாம் யோசிக்க வேண்டாமா?"

"என்ன சிற்றப்பா சொல்கிறீர்கள்? அப்படியெல்லாம் கூட நடக்குமா என்ன?"

"அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கும் சடையா. ஆதாயம் அதிகம் என்று தோன்றிவிட்டால் யார் வேண்டுமானாலும் யாருடன் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் கைகோர்த்துக் கொள்வார்கள். மாளிகைப்புரத்து வீட்டாரும் ஒரு காலத்தில் நாடு வாழிகளாக இருந்தவர்கள்தான் என்பதை மறந்துவிடாதே. அவர்களுக்கும் வள்ளுவ நாடுவாழிக்கும் ஏதோ ஒரு வகையில் நெருக்கமான உறவு இருக்கிறதென்று வைத்துக் கொள். பின் சோழன் அவர்களுடன் சம்மந்தப்படுவதற்குப் புதியதொரு அர்த்தம் கிடைத்துவிடுகிறது அல்லவா? அதனால்தான் மிக எச்சரிக்கையாக நடந்து கொண்டிருக்கும் அனைத்து விவகாரங்களையுமே உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும். அவற்றில் நமக்கு நேரடியாகச் சம்மந்தம் உள்ளதா இல்லையா என்றெல்லாம் யோசிக்கவே கூடாது.

எதிரியின் அனைத்து நோக்கங்களையும் நடமாட்டங் களையும் துல்லியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நாளை யாருக்குப் பின்னால் யார் நிற்கப் போகிறார்கள்? எவர் எவருடன் கைகோர்த்துக் கொள்ளப் போகிறார்கள்? என்பதையெல்லாம் உத்தேசமாகக் கணிக்க முடியும். ஆகவே, அந்தச் சோழ வீரர்களிருவரும் என்ன ஆனார்கள்? அவர்கள் கொண்டு சென்ற ஓலைகள் என்ன ஆயின? அந்தப் புத்த பிஷு இந்த விவகாரத்தில் சம்மந்தப் படுத்தப்படுவதற்கான காரணமென்ன? என்கிற கேள்விகள் முக்கியமாகின்றன.

இத்தனை பிரச்சனைகளுக்கும் மத்தியில் காந்தளூரின் தலையறுக்கும் போட்டிகளை வேறு அறிவித்திருக்கிறார் [illegible] திரி. மலைநாட்டின் நான்கு சாலைகளுமே பங்கேற்கும் முக்கியமான நிகழ்ச்சி அது. போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் இந்த நேரத்திலும் அதனை நடத்தியே ஆகவேண்டும் என்று [illegible]வாதம் பிடிக்கிறார் அவர். இருபது வருடங்களுக்கு ஒரு முறை குறிப்பிட்ட சதுர் மாதத்தில் குறிப்பிட்ட தேதியில் அது நடந்தேயாக வேண்டுமாம். நூறு நூறு ஆண்டுகளாகப் பழக்கத்திலிருக்கும் மரபாம் அது. அவரது காலத்தில் அந்த மரபு பிறப்பட்டது எனும் அவச்சொல் வரக்கூடாதாம்.

இந்தப் போட்டிகள் குறிப்பிட்ட திங்களில் குறிப்பிட்ட தேதியில் நடைபெறப் போகின்றன என்பது முன்கூட்டியே

சோழனுக்குத் தெரியுமா? அதனையொட்டித்தான் இந்தப் படையெடுப்பே திட்டமிடப்பட்டதா? அல்லது இரண்டு நிகழ்வுகளுக்கும் சம்மந்தமேயில்லையா? இந்தக் கேள்விகளுக் கெல்லாம் தெளிவான விடைகளை ஆராய்ந்து அறிவதற்காக வேண்டித் தென்மலை நாட்டிற்கு நமது தலை சிறந்த ஒற்றர்கள் சிலரை அனுப்பியிருக்கிறேன். அவர்கள் என்ன செய்தி கொண்டு வருகிறார்களென்று பார்ப்போம்..."

பாண்டித்தேவர் குறிப்பிட்ட அந்த ஒற்றர்களுள் ஒருவன் அந்த நேரத்தில் கழிக்குடியில் புதிதாக வந்து சேர்ந்துள்ள இரண்டு சோழநாட்டு இளைஞர்களைப் பற்றி மிகத் தீவிரமாக விசாரித்துக் கொண்டிருந்தான்.

15. கோட்டாற்றுக் கோநகர்



இன்றைய தேதியில் நாகர்கோயில் என்றழைக்கப்படும் பெருநகரானது அந்நாளில் கோட்டாறு என்றும் திருக் கொட்டாறு[14] என்றும் அழைக்கப்பட்டது. நகருக்கு அண்மையில் அதே பெயரில் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் பெயரே அக்கோநகருக்கும் நிலைத்து விட்டது. இன்றும் நாகர்கோயிலின் ஒரு முக்கிய நகர்ப் பகுதி கோட்டாறு என்றே அறியப்படுவது கவனிக்கத் தக்கது.

நாஞ்சில் நாட்டின்[15] புகழ்பெற்ற நகரங்களுள் ஒன்றாக விளங்கிய கோட்டாற்றின் மீது வரலாற்று வெளிச்சம் பல்லவர் - முத்தரையர் காலத்திலேயே படியத் துவங்கி விடுகிறது. இந்நாளில் தஞ்சைக்கருகில் அமைந்துள்ள வல்லம் எனும் சிற்றூரில் காணப்படும் முத்தரையர் கல்வெட்டொன்று கோட்டாற்று இளம்பெருமானார் எனும் புலவர் பெருமகனைக் குறிப்பிடுகிறது.

ஆய்வேள் அரசரின் ஆட்சிக்குட்பட்ட நாஞ்சில் நாட்டின் முக்கிய வாணிபக் கேந்திரமாகவும் படைத்

---

[14] பார்க்க Travancore Archaeological Series Volume VI Page 9. நாகர்கோயில் சோழபுரத்தில் அமைந்துள்ள சுந்தரச் சோழ பாண்டியர் கல்வெட்டு.
[15] பெரும்பாலான கல்வெட்டுக்களில் நாஞ்சில் நாடு "நாஞ்சி நாடு" என்று திரிந்தே அழைக்கப்பட்டுள்ளது.

தளமாகவும் கோட்டாறு விளங்கியதால் அந்நகரை அந்நியர் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க வேண்டி கோட்டைப் பெருமதிலொன்று அக்காலத்தில் எழுப்பப்பட்டிருந்தது. இம்மதிலும் கோநகரும் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பாண்டிய வேந்தர் நெடுமாறனால் தாக்கி அழிக்கப்பட்டன என்பதைக்

குருமா நெடுமதிற் கோட்டாற்றரண்கொண்ட
தென்னவன் கன்னிப் பெருமான்

எனும் பாண்டிக்கோவை வரிகள் உணர்த்தும்.

இவ்வாறு பல்லவர்-முத்தரையர் காலத்திலும் அதனைத் தொடர்ந்த இடைக்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்திலும் சிறப்புற விளங்கிய இந்நகரானது நமது கதை நடக்கும் காலத்திலும் மிகுந்த முக்கியத்துவம் பெற்ற நகரமாகவே விளங்கியது. மலைநாட்டில் விளையும் முக்கியப் பொருட்களான மிளகு, தேன், அகில், சந்தனம், ஏலக்காய், இலவங்கம் முதலானவை இங்கே மொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்டன. மலைநாட்டில் விளைந்த பொருட்களைக் கீழ்த்திசை நாடுகளுக்கும் மேற்திசை நாடுகளுக்கும் கலம் கலமாக ஏற்றுமதி செய்துகொண்டிருந்த திசையாயிரத்து ஐந்நூற்றுவர்களும் பதினெண்பூமி நாட்டாரும் அஞ்சு வண்ணத்தாரும் இதர வணிகர் குழுமங்களும் தத்தம் பிரத்யேக வாணிபப் பிரதிநிதிக்களைக் கோட்டாற்றில் குடியமர்த்தியிருந்தார்கள்.

அந்த மிகுதியான வாணிபப் போக்குவரத்தினால் சேரிகள் என்றழைக்கப்படும் குடியிருப்புப் பகுதிகள் நகரில் உருவாகலாயின. அவற்றுள் கோட்டாற்றின் தெற்கே நின்றருளியபிரான் திருக்கோயிலையொட்டி உருவான தென் சேரியும், மத்தியப் பகுதியில் நாகராஜர் திருக்கோயிலை யொட்டி உருவான உலகமுழுதுடையாள் சேரியும் நகரின் வடபகுதியில் உருவாக்கப்பட்ட வடசேரியும் முக்கிய மானவை. இன்றைய தேதியிலும் நாகர்கோயிலின் வடக்குப் பகுதி வடசேரியென்றே அழைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. உலகமுழுதுடையாள் சேரி இந்நாளில் ஒழுகினசேரி எனும் திரிந்த பெயருடன் புழக்கத்திலிருக்கிறது. பெயரளவில் மாத்திரம் இவ்விரண்டு "சேரி"களாவது பிழைத்துள்ளனவே என்று ஆறுதல் கொள்ள வேண்டியதுதான்!

கோட்டாற்றிலிருந்து திருச்சிவீந்திரம் (சுசீந்திரம்) வழியாகத் தெற்கே கழிக்குடி வரை சென்ற அந்நாளையச் சகடப் பெருவழி[16], மருந்துவாழ் மலையையும் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையையும் கடந்துதான் சென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

* * * * * * * *

ஆதவன் புலர்ந்து ஓரிரு நாழிகைகள் கழிந்துவிட்ட அந்தக் காலைப் பொழுதில் ஒரு பல்லக்கும் மூன்று புரவிகளும் மேற்குறிப்பிட்ட பெருவழியில் கோட்டாற்றை நோக்கித் துரிதப் பயணம் மேற்கொண்டிருந்தன. பல்லக்கில் தம்புராட்டியாரும் புரவிகளில் பிஷுவும் நண்பர்களும் ஆரோகணித்திருந்தார்கள்.

அன்றைய பொழுது முழுவதுமாகப் புலர்வதற்கு முன்னரே நண்பர்கள் இருவரையும் துயிலெழுப்பிவிட்டு வெளியே கிளம்புவதற்கு ஆயத்தமாகும்படி கூறிவிட்டார் தம்புராட்டியார். அவர்களுடன் தாமும் ஒரு அவசரக்குளியல் போட்டுவிட்டு முழு வெண்பட்டு வஸ்திரம் தரித்துக் கங்கணங்களும் காசுமாலைகளும் அணிந்து மிதமான அலங்காரத்துடன் புறப்படுவதற்குத் தயாராக நின்றார். நண்பர்களிருவரும் காலை நேரப் பயிற்சிகளைக் கூடச் சரிவர முடித்துக்கொள்ள முடியாமல் அவசரத்துடன் கிளம்பத் தலைப்பட்டார்கள்.

சாலை வளாகத்தின் வாயிலை நோக்கியபோது அங்கே மாளிகைப்புரத்து வீட்டின் பல்லக்கு பயணத்திற்கு நின்றிருப்பது தெரிந்தது. விடிந்தபின் நிதானமாக வந்து சேரும் பல்லக்குத் தூக்கிகளையும்கூட விரைவாகவே வரச்சொல்லி ஆணை பிறப்பித்திருக்கிறார் போலும். ஆகவே அது முன்பே தீர்மானிக்கப்பட்டுவிட்ட பயணம்தான் என்பதில் சந்தேகமில்லை.

பிஷுவைத் தம்முடன் அழைத்துப் போவதில் தம்புராட்டியார் அதிக ஆர்வம் காட்டவில்லை என்பது வியப்பளித்தது. என்றாலும் நண்பர்களிருவரும் கடுமையாக

[16] சகடம் என்றால் சக்கரம். இரதங்கள் ஊர்ந்து செல்லுமளவிற்குப் பெரியதாக இருந்த வழிகள் சகடப் பெருவழிகள் என்றழைக்கப்பட்டன.

வற்புறுத்தியதன் பேரில்தான் அவரும் பயணத்தில் கலந்து கொள்ள முன்வந்தார்.

"ஓ! உதயனும் நம்முடன் வருகிறானா? சரி. அப்படியென்றால் நீங்கள் மூவரும் பல்லக்கின் பின்புறம் மெதுவாகப் புரவியை விட்டுக்கொண்டு வாருங்கள். நான் முன்னால் செல்கிறேன்" என்றபடி தம்புராட்டியார் கிளம்பி விடவே, வேறு வழியின்றி மூவரும் அவரைத் தத்தம் புரவிகளில் பின்தொடர்ந்தார்கள்.

"எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்பதைக்கூடச் சொல்லாமல் விடுவிடுவென்று முன்னால் போய்க் கொண்டிருக்கிறாரே தம்புராட்டியார்? உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று பிஷுவை நோக்கி வினாவொன்றை வீசினார் மணியர்.

"இல்லை. என்னிடம் ஒன்றும் கூறவில்லை. ஆனால் நாம் போய்க்கொண்டிருக்கும் பாதை திருச்சிவீந்திரம் வழியாகக் கோட்டாற்றுக்குச் செல்லும் சகடப் பெருவழி. அதனால் நாம் அநேகமாகக் கோட்டாற்றுக்குத்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன்" என்றார் பிஷு ஆனந்தர். அவரது குரல் சுரத்தில்லாமல் ஒலித்தது.

"எப்போதும் தம்பி தம்பி என்று தங்களைப் பாசத்தோடு அணைத்துக் கொள்பவர் இன்றைய பயணத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே? இன்னும் சொல்லப்போனால் தாங்கள் இந்தப் பயணத்தில் கலந்து கொள்வதே அவருக்கு அத்தனை பிடித்தமான காரியமாக இல்லை போலிருக்கிறதே?"

"அதைப் பற்றித்தான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறேன். கோட்டாற்றில் அக்காள் என்னை அழைத்துக்கொண்டு போகத் தயங்கும் இடம் என்று ஒன்று இருக்கிறதென்றால் அது ஒரே ஒரு இடம்தான்!"

"என்ன இடம் அது?"

"வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்தில்[17] அமைந்துள்ள மாளிகைப்புரத்து வீட்டின் பண்டைய பூர்வீக அரண்மனை."

"என்ன, வீரநாராயணச் சதுர்வேதி மங்கலமா? அது உடையார்குடிக்கு அருகில்லலவா இருக்கிறது?"

"அதே பெயரில் கோட்டாற்றின் வடசேரிப் பகுதியைத் தாண்டி வடகிழக்கு திசையில் ஒரு குடியிருப்புப் பகுதி உண்டு. பராந்தகர் தம்முடைய இறுதிக் காலத்தில் கழிக்குடிக்கு வந்து என்னுடைய பாட்டியாருடன் பகவதியம்மன் திருக்கோயிலில் இரணிய கர்ப்பம் செய்தார் என்று குறிப்பிட்டேனல்லவா? அந்த நேரத்தில் எங்கள் வீட்டின் தம்புரான் அவரது வருகையின் நினைவாக எங்கள் மாளிகையின் மேற்குப்பகுதியில் பத்து வீடுகள் கொண்ட ஒரு சிறிய சதுர்வேதி மங்கலத்தை[18] அமைத்தார். இன்றைக்கு அது பலப்பல வீடுகளாகப் பல்கிப் பெருகிவிட்டது..."

"தங்களுக்குச் சொந்தமான பூர்வீக அரண்மனைக்குத் தங்களை அழைத்துச் செல்வதில் தம்புராட்டியாருக்கு என்ன தயக்கம்?"

"அங்கு எங்களின் உற்றார் உறவினரெல்லாம் இன்னமும் வசித்து வருகின்றனர். குறிப்பாக எங்களது வயதான தாய்மாமன் அங்கே இன்னமும் இருக்கிறார். அவர்தான் தற்போது குடும்பத்தில் மூத்தவர். ஒரு காலத்தில் அவரது பெண்ணை நான் மணம் செய்து கொள்வதாக நிச்சயிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அந்தத் திருமணம் நடைபெறவில்லை. அதனால் என் மீது அவருக்கு இன்னமும் கோபம் மிச்சமிருக்கிறதோ என்னவோ? மேலும் இக்கட்டான நேரத்தில் குடும்ப பாரத்தை ஏற்காமல் நான் இல்லறத்தை விட்டு விலகி ஓடிவிட்டதாகத்தான் இன்னமும் எங்களின் உறவினர் கருதிக் கொண்டிருக்கின்றனர். அதனால் தான் அவர்களின் முன்னிலையில் என்னைக் கொண்டு போய் நிறுத்துவதில் அக்காளுக்குத் தயக்கங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்."

---

[17] இப்பகுதி இன்றைய தேதியிலும் வீரநாராயண மங்கலம் என்றே அழைக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

[18] இதற்கான வரலாற்றுச் சான்றுகள் எதுவுமில்லை. இப்பகுதி பாண்டிய மன்னரான பராந்தக வீரநாராயணரின் பெயராலும் அமைக்கப் பட்டிருக்கலாம்.

"என்ன, இக்கட்டான நேரத்தில் குடும்பத்தைத் துறந்து ஓடினீர்களா? எதற்காக அப்படிச் செய்தீர்கள்?"

"ஆம். எங்களின் குடும்பத்திற்கு வந்த மிகப்பெரிய சோதனையான நேரம் அது. காந்தளூருக்குச் சென்று திரும்பிய அக்காள் கர்ப்பவதியாகத் திரும்ப வந்தார் என்று குறிப்பிட்டேனல்லவா? அதனைத் தொடர்ந்து எல்லையில்லாத குழப்பங்கள் மாளிகையில் நீடித்தன. முறை தவறிக் குழந்தை பெற்றுக்கொள்வதென்பது எங்களின் வம்சத்திலேயே நடந்திராத காரியம் என்று வீட்டின் மூத்த தம்புரான் துடியாய்த் துடித்தார். கடைசியில் பாட்டியாரின் பலமான வற்புறுத்தல்களுக்குப் பிறகு வலியசாலைக் குடும்பத்தாருக்கு முறையாகத் திருமணம் செய்து வைக்கும்படி ஓலையனுப்புவது என்று முடிவெடுத்தார். பரஸ்பர நண்பர் ஒருவரின் மூலம் ஓலையும் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் வலியசாலைக் குடும்பத்தின் மூத்த ஆச்சாரியரான பத்மநாப நம்பூதிரியோ தனது மகனுக்கும் அக்காளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லையென்று ஒரேயடியாக மறுத்ததோடு மட்டுமல்லாமல் எங்களின் குடும்பத்துப் பெண்ணைப் பற்றியும் மாளிகைப்புரத்து வீட்டைப் பற்றியும் தகாத வார்த்தைகள் பேசி அனுப்பி விட்டார். அக்காளின் கர்ப்பத்திற்குக் காரணமான திருநாராயண பட்டதிரி, தனது தந்தையை எதிர்த்துப் பேசத் திராணியில்லாதவராக மௌனமாக இருந்துவிட்டார். இவ்வாறாக, நல்லபடியாகத் திருமணத்தில் நடந்து முடிந்திருக்க வேண்டிய ஒரே சமரச முயற்சியும் தோற்றுப் போனது. அக்காளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி நின்றது.

உற்றார் உறவினரின் ஏசல்களைத் தாங்க முடியாமல் உச்சக்கட்டக் கோபத்தில் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் தன்னுடைய இறுதி முயற்சியில் தம்புரான் திடீரென்று ஈடுபட்டார். எங்கள் வீட்டில் வைத்தியம் செய்து கொண்டிருந்த மருத்துவச்சியின் உதவியுடன் தகாத மருந்துகளையெல்லாம் அக்காளை உட்கொள்ள வைத்தார். ஏற்கனவே பத்மநாபரால் தாக்கப்பட்டு மெல்ல மீண்டு வந்து கொண்டிருந்த அக்காளின் உடல்நிலை மீண்டும் இதனால் மோசமடைந்து பிரசவத்தின்போது உதிரப் போக்கு மிக அதிகமாகி அவர் உயிர் பிழைப்பதே துர்லபமாகி விட்டது. தன் மகளின் நாஞ்சில் நாட்டு ஆசானின் பெருமுயற்சியுடன் அக்காளின் உயிரைக் காப்பாற்றினோம். ஆனால் சேயைக்

காப்பாற்ற இயலவில்லை. அந்தப் பரிதாபத்திற்குரிய குழந்தை பிறந்த ஒரு நாழிகையிலேயே இறந்துவிட்டதாக மருத்துவச்சி தெரிவித்தாள்....”

மெல்ல நடைபயின்றுகொண்டிருந்த ஆனந்த தேரரின் புரவி ஒரு கணம் நிறுத்தப்பட்டது. அந்தப் புனிதரின் கண்களிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் கீழே விழுந்து மண்ணை நனைத்தது.

“உலக பந்தங்களையெல்லாம் துறந்து விட்டதாகச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் உண்மையில் நான் எதையுமே துறக்கவில்லையென்பது பழைய நிகழ்ச்சிகளை மீண்டும் நினைத்துப் பார்க்கும் போதுதான் தெரிகிறது. தனது குழந்தை இறந்து விட்டதைக் கேள்விப்பட்டு அக்காள் அலறிய அலறல் இன்னமும்கூட எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆசானின் மிரட்டல்களைத் தாங்க முடியாமல் மருத்துவச்சி குழந்தையைத் தான் கொல்ல முயன்றதையும் அதற்காகத் தம்புரான் தனக்குப் பிரத்யேகமாகப் பொற்காசுகள் கொடுத்ததையும் ஒப்புக் கொண்டாள். இதனால் அக்காளின் மனவேதனை பன் மடங்கு அதிகமாகிவிட்டது. அரண்மனை வீட்டில் இருக்கப் பிடிக்காமல் வெளியேறி இந்தப் பெருஞ்சாலைக்கு அவர் வந்து சேர்ந்தது அப்போதுதான்.

அக்காளின் மீது உயிரையே வைத்திருந்த நான், நடந்த நிகழ்ச்சிகளால் முற்றிலும் மனமுடைந்து போனேன். இளைய பிராயமாதலால் முதலில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவரைப் பின்பற்றி நானும் வீட்டை விட்டு வெளியேறினேன். மனம்போன போக்கில் எங்கெல்லாமோ சுற்றினேன். இறுதியில் நாகையை வந்தடைந்தேன். அங்குதான் விஹாரையின் மூத்த ஆச்சாரியாரான மஹா காசியப தேரரைச் சந்தித்தேன். புண்பட்ட மனதிற்கு பௌத்த விஹார சூழல் ஆறுதலளித்தது. “ஆசையும் பற்றுதலுமே அழிவிற்கான காரணங்கள்” எனும் புத்தபிரானின் உபதேசம் புதிய பரிமாணத்தில் புலப்பட துவங்கியது. மெல்ல மெல்ல என் மனம் பௌத்தத்தை நோக்கித் திரும்பத் துவங்கியது.

நான் நாகையில் இருக்கிறேன் என்பதைக் கேள்விப் பட்டு வீட்டார் மீண்டும் என்னைக் கோட்டாற்றுக்கு வரும்படி வற்புறுத்தினர். மருத்துவச்சி வீட்டை விட்டே விரட்டப்பட்டு விட்டதாகவும் அவச்சொல் தாங்காமல்

தம்புரான் படுத்த படுக்கையாகி விட்டதாகவும் கண்ணை மூடுவதற்கு முன் ஒரே ஒரு முறை என்னையும் அக்காளையும் பார்க்கப் பிரியப்படுவதாகவும் ஓலைகள் வந்தன. எனக்கோ மீண்டும் அந்தச் சூழலுக்குள் நுழைவது பிடித்தமானதாக இல்லை. சொல்லப்போனால் அவருக்கு அடுத்தபடியாக மாளிகைப்புரத்து அரியாசனத்தில் அமர வேண்டியவன் நான்தான் என்பதையே முற்றிலுமாக மறந்து புத்தபிரானின் பாதார விந்தங்களில் எனது மனதைச் செலுத்திக் கொண்டிருந்தேன். அக்காளும் கடைசிவரை அவரைப் பார்க்கப் பிரியப்படவில்லை.

தம்புரான் காலமானார். அவரது இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காகக் கோட்டாற்று அரண்மனைக்கு வந்தேன். வீட்டார் எங்களிருவரையும் மனமாறச் சபித்தார்கள். தம்புரான் அகால மரணமடைந்ததற்குக் காரணமே நாங்கள்தான் என்றார்கள். இனி இந்த ஜென்மத்தில் இவர்களின் முகத்தில் மீண்டும் ஒருமுறை விழிக்கக்கூடாது எனும் முடிவுடன் வெளியேறினேன்.

ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் சூழல் அக்காளின் மனநிலைக்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. நாஞ்சல் நாட்டு ஆசானுடன் தீவிரமான களரிப் பயிற்சியில் அவர் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளத் துவங்கினார். அவரிடம் மட்டும் எனது எதிர்காலத் திட்டங்களைத் தெரிவித்துவிட்டு மீண்டும் நாகைக்கு வந்தேன். அப்போது ஆச்சாரியார் ஒரு பௌத்த சங்க விழாவில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீவிஜய தேசத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடன் நானும் இணைந்து கொண்டேன். சொர்ணத்வீபம், ஜம்புத்வீபம், இலங்கா சோகம், கடாரம், மாப்பளம், சீனம் என்று பல்வேறு இடங்களுக்கும் பயணித்தேன். இறுதியில் தாம்போஜத்தில் என் மனம் நிலை கொண்டது. அங்கேயே இத்தனை வருட காலம் தங்கி விட்டேன்....”

“இத்தனை வருடங்கள் கழித்து இப்போது திடீரென்று தாய்நாட்டு தேசத்திற்குத் தாங்கள் வர முடிவெடுத்தது ஏனோ?” என்றொரு வினோதமான கேள்வியை எழுப்பினார் மொழிபெயர்ப்பாடியார். அவருக்குள் ஏதேதோ எண்ணங்கள் முளைத்து விட்டிருந்தன. ஆரம்பம் முதல் தற்செயலாக நடை பெற்றுக் கொண்டிருப்பவை போன்று தோன்றமளித்த நிகழ்ச்சிகள் அனைத்துமே உண்மையில் தற்செயலானவை அல்ல எனும் அதிர்ச்சிகரமான உண்மை அவருக்கு மெல்ல மெல்லப் புலப்பட துவங்கியிருந்தது.

பிஷு அவரது கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறத் தயங்கினாற்போலத் தெரிந்தது.

"நண்பா! எவரிடமும் எப்போதும் பொய் பேசக்கூடாது எனும் விரதத்தை ஏற்றிருக்கிறேன். அதனால் உங்களின் கேள்விக்குத் தற்போது விடையளிப்பதைத் தவிர்க்கிறேன். இதனால் உங்களின் மனதில் பல சந்தேகங்களும் எழலாம். அவை அனைத்திற்கும் விரைவில் விடை கிடைக்க புத்தபிரான் அருள்புரிவாராக. அதோ! திருச்சிவீந்திரம் திருக்கோயில் ஸ்ரீ விமானம் சற்று தூரத்தில் புலனாகின்றது. இன்னும் ஓரிரு நாழிகைகளில் கோட்டாற்று மதில் புலப்படத் துவங்கிவிடும். வாருங்கள் செல்வோம்" என்றபடி புரவியை முன்விட்டுக் கொண்டு சென்றார் ஆனந்த தேரர்.

16. அரண்மனை விஜயம்



திருச்சிவீந்திரம் ஸ்தாணு-மால்-அயன் திருக் கோயிலில் ஒரு அவசர தரிசனத்தை முடித்துக் கொண்ட நமது பிரயாணிகள், உடனடியாகக் கோட்டாற்றை நோக்கிய தங்களது பயணத்தைத் தொடரலானார்கள். அக்கோநகரின் தெற்கு வாயிலை நெருங்க நெருங்கத்தான் அங்கே படை வீரர்களின் போக்குவரத்தும் இராணுவக் கெடு பிடிகளும் மிகுதிப்பட்டிருப்பதை உணர முடிந்தது.

பொது மக்களிடம் விசாரித்ததில் சோழர் படைகள் தென்பாண்டி நாட்டை நோக்கி வேகவேகமாகப் படையெடுத்து வந்து கொண்டிருப்பதாகவும் ஆரைவாய் மொழிக் கோட்டை ஒரு வேளை அவர்களுக்குப் பணிந்து விட்டால் அடுத்த ஆபத்து கோட்டாற்றுக்குத்தான் என்பதால் கோட்டையைச் சுற்றிய பாதுகாவல் ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்தன. "கோட்டைக்கரையின் கட்டுக்காவலைக் கடந்து சோழன் வருவதென்பது நடக்காத காரியம்தான். என்றாலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லதல்லவா?" என்று அவர்களில் சிலர் பகிரங்க இறுமாப்புடன் குறிப்பிட்டது நண்பர்களைச் சஞ்சலப்படுத்தியது.

அத்துடன், புதிதாகப் பட்டமேற்றிருக்கும் ஆய்வேள் மன்னர் அன்று மாலை கோட்டாற்றுக்கு விஜயம் செய்யப்

போவதாகவும் பாதுகாவல் ஏற்பாடுகளைத் தாமே நேரில் வந்து பார்வையிடப் போவதாகவும் அதன் காரணமாகவே நகரில் போக்குவரத்து மிகுந்து விட்டதென்றும் பல்வேறு வகையான வதந்திகள் காதுகளில் வந்து விழுந்தன. அவற்றுள் எது உண்மை, எது பொய் என்பதை உய்த்துணர முடியவில்லை.

எது எப்படியோ, கோட்டாற்றில் இப்போது நிலவும் பரபரப்பான சூழ்நிலையில் தெற்கு வாயிலுக்குள் நுழைந்து நகரினுடாகப் பயணிப்பதைவிடக் கோட்டைப் பெருமதிலை ஒட்டிச் சென்று நகரைச் சுற்றி வளைத்துக் கொண்டு வடகிழக்கே அமைந்துள்ள வீரநாராயண மங்கலத்தை அடைவதுதான் நல்லதென்று அனைவருக்கும் தோன்றியது. ஆகவே, பல்லக்கும் புரவிகளும் பாதை மாறிக் கிழக்கே திரும்பின.

"பரவாயில்லையே? புதிதாய்ப் பட்டமேற்றுள்ள ஆய்வேளரசர் வரகுணர் மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்படுகிறார் போலிருக்கிறதே?" என்று வியந்தார் பிஷு.

"ஆமாம். சுறுசுறுப்புக்கொன்றும் குறைவில்லைதான். கோட்டாறே இத்தனை அமர்க்களப்படுகிறதென்றால் ஆரைவாய்மொழி என்ன பாடுபட்டுக்கொண்டிருக்கிறதோ?" என்று அலுத்துக்கொண்ட மணியனாரின் குரலில் கவலை தோய்ந்திருந்தது.

"கவலைப்படாதீர்கள். எப்பேர்ப்பட்ட கட்டுக் காவலையும் முறியடிப்பதற்கு அருள்மொழிவர்மர் ஏதேனும் உபாயங்கள் வைத்திருப்பார்..." என்றார் பிஷு ஆறுதலளிக்கும் தொனியில்.

"உபாயமோ அபாயமோ, ஏதேனும் தந்திர மந்திரங்கள் செய்து கணவாயைக் கடந்தால் சரி..." என்று முடித்துக் கொண்டார் மணியனார்.

அதற்கு மேல் அவர்களின் சம்பாஷணை பெரிதாக வளரவில்லை. மூவரின் எண்ணங்களும் வெவ்வேறு திசைகளில் சூறாவளியாய்ச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. அருள்மொழிவர்மரின் ஆரைவாய்மொழிப் படையெடுப்பு நினைத்த வெற்றியைக் கொடுக்குமா? அப்படியே ஒரு வேளை வெற்றி கிட்டுகிறது என்று வைத்துக்கொண்டாலும் அதன் பிறகு என்ன நடக்கும்? நேராகச் சோழர் படைகள் நாஞ்சில் நாட்டின் வழியே பயணித்துக் காந்தளூரை

நோக்கித் திரும்புமா? அப்படித் திரும்பினால் காந்தளூர் ஆச்சாரியார் என்ன செய்வார்? மலைநாட்டின் பேரரசரான சேரமான் பெருமாள் என்ன செய்வார்? தமது ஒன்று குறை ஆயிரத்தவர் படைகளைச் சோழருக்கெதிராக ஏவி விடுவாரா? மலைநாடே இரத்தக் களரியாகப் போகிறதா?

இத்தனை குழப்பமானதொரு சூழ்நிலையில் கலமறுக்கும் போட்டிகள் நடைபெறுவது சாத்தியம்தானா? ஒரு வேளை போட்டிகளே நடைபெறவியலாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டால்? இத்தனை காலமாக உயிரைக் கொடுத்து மேற்கொண்ட பயிற்சிகளெல்லாம் வீணாகி விடுமல்லவா? எந்த நம்பிக்கையில் தம்புராட்டியார் தொடர்ந்து உற்சாகமாக நமக்குப் பல்வேறு பயிற்சிகளைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்? இத்தகைய குழப்பமானதொரு சூழலில் திடீரென்று நிகழும் இந்தக் கோட்டாற்றுப் பயணம் வேறு...

இவ்வாறு அவர்களின் மனதில் இடைவிடாமல் எழுந்த பலப்பல கேள்விகளுக்குமான விடைகள் ஒரு ஓலையில் இருந்தன. சேரமான் பெருமாள் பாஸ்கர இரவிவர்மன் திருவடியினால் பழைய வட்டெழுத்தில் எழுதப்பட்டிருந்த ஓலை அது. அதனைக் கையில் பிடித்திருந்த திருநாராயண பட்டதிரியின் முகம் கவலையாலும் சிந்தனைகளாலும் இறுகிப்போய்க் காணப்பட்டது. சிறிது நேரம் ஒன்றும் செய்யத் தோன்றாமல் மோட்டுவளையை நோக்கியபடி திகைத்து நின்றார் அவர்.

* * * * * * * *

கோட்டை மதிலைச் சுற்றி நடந்து நகரின் வடகிழக்கே அமைந்திருந்த சதுர்வேதி மங்கலத்தை அவர்கள் அடைவதற்குள் நண்பகல் நேரமாகிவிட்டது. பசி மிகுதியாக இருந்ததினால் பகல் உணவை வழியிலேயே முடித்துக் கொள்ள நேர்ந்தது. சதுர்வேதி மங்கலப் பகுதிகளுக்குச் சிறிது மேற்கே ஏறக்குறய அரைக்கல் தொலைவில் அரண்மனை வளாகம் அவர்களின் கண்களுக்குப் புலனானது.

மலைநாட்டின் மற்ற பல அரண்மனைகளைப் போல் முழுக்க முழுக்க செந்நிற ஓடுகளாலும் வேலைப்பாடுகள் மிகுந்த மரச்சட்டங்களாலும் வனையப்பட்டிருந்த மாளிகைப்புரத்து அரண்மனையின் அழகில் நண்பர்கள்

மயங்கி நின்றார்கள். வளாகத்தின் பிரதான நுழைவாயிலாகத் திகழ்ந்த கிழக்கு வாயிலின் கீழ் பெரிய அளவில் வட்ட வடிவ இராஜ இலச்சினை செதுக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் ஒரு காலத்தில் எவராலோ கட்டப்பட்ட மாவிலைத் தோரணம் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. காய்ந்து சருகாகிக் கிடந்த அம்மாவிலைகள் காற்றின் ஏடுகளில் அந்த இராஜ குடும்பத்தின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் ஒரு காவியமாகப் புனைந்து கொண்டிருந்தன போலும்.

அரண்மனை வளாகத்தினுள்ளும் நடமாட்டங்கள் அதிகம் தென்படவில்லை. வெள்ளாட்டிகள் ஒரிருவர் மட்டும் குனிந்ததலை நிமிராமல் குடங்களில் நீர் சேந்திச் சென்று கொண்டிருந்தார்கள். நமது பிரயாணிகள் தமது படை பரிவாரங்கள் புடைசூழ மாளிகைக்குள் நுழைவதைக் கூட அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அடித்துக் கொண்டு போவதற்கு இங்கே அப்படியென்ன செல்வம் கொட்டிக் கிடக்கிறது? எனும் அலட்சியமாக இருக்கலாம். வாயிலைக் கடந்து சிறுவீதியின் வழியாக விருந்தினர்களை வரவேற்கும் முக்கியப் பகுதியாகத் திகழ்ந்த திருமாமணியம்பலம் எனும் மாளிகை மண்டபத்தை நெருங்கிய பின்னர்தான் தம்புராட்டியார் பல்லக்கை விட்டுக் கீழே இறங்கினார்.

"உதயா!"

"அக்கா?"

"எப்படி இருக்கிறதடா நமது அரண்மனை?"

"சற்றே பழமையானதாகக் கவனிப்பாரற்றதாகத் தோன்றுகிறது அக்கா. சுவர்களெல்லாம் வண்ணங்களைக் கண்டு பலப்பல ஆண்டுகளாகிவிட்டன. ஆங்காங்கே ஏராளமான தூசியும் தும்பும் படிந்திருக்கின்றன. அதோ! திருமாமணியம்பலத்தில் நம் கண்களுக்கு முன்னால் விரியும் தம்புரானின் ஓவியத்தின் மீது மட்டும் அடை அடையாய் எத்தனை ஒட்டடை? அவற்றைத் துடைப்பதற்குக்கூட நாதியில்லை. கொடுமையான காட்சியக்கா!"

தம்புராட்டியாரின் நிலைகுத்திய விழிகள் ஈரமாயின. "எப்படி இருந்த குடும்பம் எத்தனை தூரம் நசித்து விட்டது பார்த்தாயா உதயா? எல்லாம் என்னால் தானே?"

"இல்லையக்கா. நடந்த நிகழ்வுகளுக்கு நீங்களோ நானோ பாட்டியாரோ தம்புரானோ அல்லது மற்றவர்களோ

காரணமல்லர். விதி நடத்திய நாடகத்தில் நாம் அனைவருமே பகடைக்காய்கள். அவ்வளவுதான். இது நமது கர்ம வினை. முற்பிறவிகளில் செய்த பாப புண்ணியங்களின் விளைவு. அவற்றை அனுபவித்துத்தான் ஆகவேண்டுமென்று பௌத்தம் போதிக்கிறது."

"இந்த ஜென்மத்தில் இனியொருமுறை இந்த அரண்மனை மண்ணில் கால் பதிக்கக்கூடாது என்கிற உறுதியான முடிவுடன்தான் இருந்தேன். ஹூம்... இந்தக் குழந்தைகளுக்காக அதையும் விட்டுக்கொடுக்க வேண்டியதாகிவிட்டது."

"என்ன, இவர்களுக்காக விட்டுக்கொடுத்தீர்களா?" என்று வினவினார் பிஷு ஆச்சரியத்துடன். அந்தக் கேள்விக்குத் தம்புராட்டியார் விடைகூறத் துவங்குமுன் மாளிகையில் ஆளரவங்கள் கேட்கத் துவங்கின. "ஆரது மோளே?" என்று வினவியபடி ஒரு வயதான கிழவர் தம் பிராயத்திற்கேயுரிய தள்ளாட்டங்களுடன் வாயிலில் தோன்றினார். வாயிலில் நிற்கும் உருவங்களை இன்னார் என்று அவரால் சரியாக அவதானிக்க முடியவில்லை. கண்களை இடுக்கிக் கொண்டு புருவங்களை நெறித்து வலக்கரத்தை நெற்றியில் ஊன்றி ஒருவாறு அவர்களை அடையாளம் காண முயன்றார் அவர்.

"அம்மாவன்[19]..." என்று தயக்கத்துடன் குரல் கொடுத்தார் தம்புராட்டியார். கிழவரின் குரலை வைத்தே அவரை இன்னார் என்று ஊகித்தறிந்து விட்டார் போலும் இவர்.

அவ்வளவுதான். அந்தக் குரலைக் கேட்ட மறுகணமே கிழவரின் முகத்தில் பல்வேறு உணர்ச்சிகள் தாண்டவமாடலாயின. "மோளே... மோளே ரேணுகா... நீயா? நீயா வந்திருக்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கூவியவர், கரங்களை இருபுறங்களிலும் நீட்டி ஓடிவராத குறையாக அவர்களை நோக்கி வேகவேகமாக நடந்து வந்து தம்புராட்டியாரைக் கட்டியணைத்துக் கொண்டார். இருவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டிற்று.

---

[19] தாய்மாமன்.

"மோளே! எங்கே கடைசிவரையில் உன்னைப் பார்க்காமலே கண்ணை மூடிவிடுவேனோ என்று பயந்தேன். நல்லவேளை. கன்னியாபகவதி ஒரு வழியாக மனது வைத்தாள்..." என்றார் கிழவர். அவரது பேச்சில் மலை நாட்டின் தாக்கம் அதிகமாக இருப்பதை நண்பர்கள் கவனித்தார்கள்.

"அம்மாவன்! என்னுடன் உதயனும் வந்திருக்கிறான்..." என்று தம்புராட்டியார் மெல்லக் காதருகே சென்று மொழிந்த பிறகுதான் கிழவர் பல்லக்கின் பின்புறம் நின்றிருந்த பிஷுவையும் நண்பர்களையும் கவனிக்கவே செய்தார். "என்ன.. உதயனா? உதயனுமா உன்னுடன் வந்திருக்கிறான்?" என்றபடி தன் பழுதுபட்ட பார்வையால் மூவரையும் துழாவியவர், ஒரு வழியாகச் சற்று சிரமத்தின் பேரில் பிஷுவை அடையாளம் கண்டு கொண்டார். பண்டைய மாளிகைப்புரத்து வீட்டின் இளவரசனை ஒரு துறவியின் தோற்றத்தில் காணும் அதிர்ச்சி அவரது முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. "உதயா! நீ... நீ நிஜமாகவே துறவறம் மேற்கொண்டு விட்டாயா?" என்று நம்ப முடியாமல் வினவிய அவரது குரலில் துக்கமும் ஆதூரமும் கலந்திருந்தன.

"ஆம் அம்மாவன். நான் பல வருடங்களுக்கு முன்னரே துறவறம் பூண்டுவிட்டேன்" என்று மிகத் தெளிவாக வருத்தம் தொனிக்காத குரலில் அவருக்கு பதில் புகன்ற பிஷு, தொடர்ந்து "குடும்பத்தார் அனைவரும் நலந்தானே?" என்று வினவினார்.

"இங்கே என்ன நலம் வேண்டிக்கிடக்கிறது? ஏதோ உயிரோடு இருக்கிறோம். அவ்வளவுதான். உள்ளே வாருங்கள். வாசலிலேயே நிற்க வைத்துப் பேசிக் கொண்டிருக்கிறேன்.." என்று அலுத்துக் கொண்டபடி தம்புராட்டியாரைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார் பெரியவர்.

மாளிகையினுள் நான்கைந்து குடும்பங்கள் ஒன்றாக வசித்து வந்தன. வருமானம் பெரிதாக இல்லாத நிலையில் மூன்று வேளை அத்தனை பேருக்கும் உணவிடுவதே பிரச்சனையாக இருந்ததைத் தம்புராட்டியார் அறிந்து கொண்டார். எல்லாவற்றையும்விடத் தமது ஒரே பெண்ணின் வாழ்வு தாம் எதிர்பார்த்த அளவிற்குச் சிறப்பானதாக அமையவில்லை என்பதே கிழவரது

பெருந்துக்கமாக இருந்தது. அதற்கு முழுப்பொறுப்பேற்க வேண்டியது உதயன்தான். அவன்தான் மிக முக்கியமானதொரு தருணத்தில் குடும்பத்தை விட்டு விலகிச் சென்றுவிட்டான் என்று அவர் பகிரங்கமாகப் பிஷுவின் மீது குற்றம் சாட்டவும் தயங்கவில்லை.

இவ்வாறாகப் பலப்பல வார்த்தைகளில் தமது ஆதங்கங்களை யெல்லாம் கிழவர் கொட்டித் தீர்க்கும்வரை பொறுமையுடன் காத்திருந்த தம்புராட்டியார் மெல்லத் தாம் அங்கு வந்த நோக்கத்தைத் தெளிவாக்குவதில் முனைந்தார்.

"அம்மாவன்! முன்பு கோட்டாற்றில் நமது குடும்பத்திற்கு மிகவும் நெருக்கமான ஒரு நாடகாசிரியன் வசித்து வந்தாரே - ஞாபகம் இருக்கிறதா? ஒவ்வொரு சித்ரா பௌர்ணமியின் போதும் அவரை அழைத்து வந்து மூத்த தம்புரான் நாலாம் வெளியில் கூத்துக் கட்டச் சொல்வாரே?"

கிழவருக்குள் பழைய நினைவுகள் பல அலைமோதி அவரை ஒரேயடியாகக் குழப்பியடித்தன போலும். "அந்நாளில் பல கூத்துக்காரர்கள் நமது மாளிகையில் கூத்துக் கட்டுவார்களே அம்மா? அவர்களுள் யாரை நீ குறிப்பிடுகிறாயென்று தெரியவில்லையே?"

"பல கூத்துக்காரர்கள் நமது மாளிகைக்கு வந்து போவார்களென்பது உண்மைதான். ஆனால் அவர்களுள் ஒருவருக்கு மட்டும்தான் தம்புரானோடு நெருக்கமான தொடர்பிருந்தது. அதனால்தான் நாலாம் வெளியில் கூத்துக் கட்டும் உரிமையும் அவருக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்தது. நல்ல சிவந்த மேனியராக நெகுநெகுவென்று ஆறடி உயரத்திற்கு இருப்பார்."

"நீ குறிப்பிட்ட பிறகு கொஞ்சம்போல ஞாபகம் வருகிறது. அவருக்கென்ன இப்பொழுது?"

"அவர் இப்போது எங்கிருக்கிறார்? கோட்டாற்றில்தான் வசித்து வருகிறாரா? அல்லது வேறு இடத்திற்குக் குடி பெயர்ந்து விட்டாரா என்பதைக் குறித்த தகவல்கள் தேவை."

"அவரா? அவர் நமது மாளிகைக்கு வந்தே பலப்பல வருடங்கள் ஆகின்றனவே? இப்போது எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லையே? பிராயத்தில் என்னை விடப் பெரியவராயிற்றே? இப்போது ஜீவித்திருக்கிறாரா இல்லையா என்பதே தெரியவில்லையே?" என்றெல்லாம் இழுத்தார் பெரியவர். தம்புராட்டியாரின் முகத்தில் முன் காணப்பட்ட உற்சாகம் மறைந்து போய் ஏமாற்றத்தின் நிழல் படிந்தது.

திருமாமணியம்பலத்தில் அதுவரை நடைபெற்றுக் கொண்டிருந்த உரையாடல்களை மௌனமாக உள்ளிருந்து செவிமடுத்துக் கொண்டிருந்த பெரியவரின் மனையாட்டி "கொஞ்சம் அகத்தே வருகிறீர்களா?" என்று குரல் கொடுத்தார். அவர் உள்ளே நுழைந்ததுதான் தாமதம். அடுத்த கணமே பலமான அர்ச்சனைகள் ஆரம்பமாயின.

"உங்களுக்கு நிஜமாகவே எல்லாமே மறந்துபோய் விடுகிறதா என்ன? அவர்கள் நாலாம்வெளியில் கூத்துக் கட்டிக் கொண்டிருந்த திருமூல சாக்கியரைப் பற்றித்தானே விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்? நமது தோவாளைப் பரஞ்சோதி தமது ஒரே பெண்ணை அவரது பெயரனுக்குத் தானே கட்டிக் கொடுத்திருக்கிறார்? அந்தப் பெண்கூட ஒரிரு நிங்களுக்கு முன்பு இங்கே வந்திருந்ததே? பாட்டனுக்கு உடல்நிலை சரியில்லை என்றும் வைத்தியத்திற்காகத் திருவெண்பரிசாரத்தில் தளிக்கருகில் வீடெடுத்துத் தங்கியிருப்பதாகவும் தெரிவித்ததே? ஏன் சாக்கியர் உயிரோடிருக்கிறாரா இல்லையா என்பதே தெரியவில்லை என்றெல்லாம் அச்சான்னியமாக உளறுகிறீர்கள்?"

"அட ஆமாம், பார்வதி! பரஞ்சோதியின் பெண்ணை நான் மறந்துதான் போய்விட்டேன். வயதாகி விட்டதல்லவா?" என்றபடி அசடு வழிய வெளியே வந்தார் கிழவர். அவரிடம் சாக்கியர் தங்கியிருக்கும் இடம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்டு அவரது சம்பிரதாய விருந்து மரியாதைகளையெல்லாம் மறுத்தலித்து இதர உற்றார் உறவினர்களிடமும் கூடச் சரிவர உரையாடாமல் கருமமே கண்ணாயினாராக அங்கிருந்து கிளம்பத் தலைப்பட்டார் தம்புராட்டியார்.

அரண்மனை வளாகத்தை விட்டு அவர்கள் வெளியே வந்ததும் பிஷு பொறுக்க மாட்டாதவராய் "ஏன் அக்கா இப்படியொரு அனல் பறக்கும் அவசரத்திலிருக்கிறாய்? எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு நமது அரண்மனைக்கு வந்திருக்கிறோம். நின்று நிதானமாக ஒரு நாழிகைப் பொழுதையாவது அவர்களுடன் கழித்திருக்கக் கூடாதா? நாம் சிறு வயதில் ஓடி விளையாடிய இடங்களையெல்லாம் நண்பர்களுக்குக் காட்டியிருக்கக் கூடாதா? இப்படி அவசர

அவசரமாகக் கிளம்பிவிட்டோமே?" என்றார் வருத்தம் தொனிக்கும் குரலில்.

"அதற்கான சமய சந்தர்ப்பம் இது அல்ல உதயா. நாம் அந்தச் சாக்கியரை உடனடியாகச் சந்திக்க வேண்டியிருக்கிறது."

"அந்தப் பழைய சாக்கியரைத் தரிசிப்பதற்கு அப்படியென்ன தலைபோகிற அவசரம் வந்துவிட்டது?"

"அந்தத் திருமூல சாக்கியர் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் பழைய தலைமுறையைச் சேர்ந்த மாணாக்கர். அந்தப் பரம்பரையில் அவரைத் தவிர வேறு எவரும் தற்போது உயிருடன் இல்லை. திறவுகோல் சூத்திரங்களான பண்டைய குருஸ்துதியைத் தெரிந்து கொள்ள நமக்கிருக்கும் ஒரே வாய்ப்பு அவர்தான். உடனடியாக அவரைச் சந்தித்தேயாக வேண்டும்!"

சாக்கிரை அன்றே சந்தித்தாக வேண்டுமென்று தம்புராட்டியாரின் உள்மனதில் ஒரு அவசரம் உருவானதற்குக் காரணம் இருந்தது. திருவெண்பரிசாரத்தில் திருமூல சாக்கியர் தமது வாழ்நாளின் கடைசித் தருணங்களை அப்போது ஒவ்வொன்றாக எண்ணிக் கொண்டிருந்தார்.

17. திருமூல சாக்கியர்



"அம்மா! திருமூல சாக்கியர் வசித்து வரும் வீடு இதுதானா?"

"இல்லை. அதோ, நான்கு வீடுகள் தள்ளி முன்புறம் தட்டோடு புனைந்து வாயிலில் ஒரு தென்னைமரம் காணப்படுகிறதே? அந்த வீடுதான்."

அந்த எளிமையான வீடு சாக்கியரின் சொந்த வீடல்ல, ஒரு உறவுக்காரரின் இல்லம் என்பதையும் வைத்தியத்திற்காகவே அங்கு தங்கியிருக்கிறார் என்பதையும் விசாரித்துத் தெரிந்துகொண்டார்கள். சாக்கியர் சிறிது காலமாக நரம்புத் தளர்ச்சியினாலும் சித்த சுவாதீன மின்மையினாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாராம். வெண்பரிசாரத்தில் அமைந்துள்ளதொரு வைத்தியசாலையில் இது போன்ற வியாதிகளுக்குச் சிறந்த முறையில்

சிகிச்சையளிப்பதைக் கேள்விப்பட்டு இரண்டு மண்டலங்களாக அங்கேயே தங்கிச் சிகிச்சை மேற்கொண்டு வருகிறாராம். பிராயம் அதிகமாகி விட்டதால் உடல் மருத்துவத்தை ஏற்க மறுப்பதாகவும் இதுவரை அளிக்கப்பட்ட சிகிச்சையில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட வில்லையென்றும் கேள்வி.

பல்லக்கு மற்றும் பரிவாரங்களை வாயிலிலேயே நிறுத்தி வைத்து விட்டு நால்வர் மட்டும் அந்த இல்லத்தினுள் நுழைந்தார்கள்.

"அம்மா.." என்று குரல் கொடுத்தார் பிஷு.

"யாரது.. வைத்தியரா? அதற்குள் புறப்பட்டு வந்து விட்டீர்களா என்ன?" என்று உள்ளிருந்து ஒரு மத்திம வயதுப் பெண்ணின் குரல் வந்தது. அதனைத் தொடர்ந்து முற்றத்தின் வாயிலில் ஒரு மூன்றடிச் சிற்றுருவம் அவர்களை எட்டிப் பார்த்தது.

அந்தச் சிறுமியைப் பார்த்து ஆனந்த தேரர் மெலிதாகப் புன்னகை பூத்தார். அவ்வளவுதான். "அம்மா! அம்மா! இது வைத்தியர் தாத்தா இல்லை. வேறு யாரோ.." என்று அலறியபடி அது உள்ளே சென்று மறைந்தது.

அதனைத் தொடர்ந்து "யாரது? ஆண்பிள்ளை எவருமில்லாத இந்த நேரத்தில்?" என்கிற கேள்வியுடன் வெளிப்பட்டது ஒரு பெண்டு. இவள்தான் அந்தத் தோவாளைப் பரஞ்சோதியாரின் பெண் போலும். வீட்டில் இருப்பது பெண் பிள்ளை மட்டும்தான் என்பதையறிந்ததும் பிஷுவை விலக்கிக்கொண்டு தம்புராட்டியார் தட்டுத் தடுமாறி முன்வந்தார்.

"அம்மா! நாங்கள் மாளிகைப்புரத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். நாலாம் வெளியில் கூத்துக்கட்டும் திருமூல சாக்கியரைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம்."

"மாளிகைப்புரத்து வீடா? அந்த அரண்மனைக்கு நான் பலமுறை வந்திருக்கிறேனே? தங்களை ஒருமுறை கூடச் சந்தித்ததே இல்லையே? "

"நான்தானம்மா அந்த வீட்டின் தற்போதையத் தம்புராட்டி. சிற்சில காரணங்களால் மாளிகையில் வசிப்பதில்லை."

அந்தப் பெண்ணின் முகத்தில் ஒரு வியப்புக் கலந்த மகிழ்ச்சியும் மரியாதையும் தென்பட்டன. "அடடா! தாங்கள்தான் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியாரா? வாயிலிலேயே நிற்க வைத்துப் பேசிக் கொண்டிருந்து விட்டேனே? வரவேண்டும், வரவேண்டும். நான் அந்தக் குடும்பத்திற்கு மிகவும் வேண்டப்பட்ட பரஞ்சோதியாரின் பெண் மாணிக்கம். உள்ளே வாருங்கள்.." என்று இரு கரங்கள் கூப்பிப் பணிவுடன் வரவேற்றாள் அந்தப் பெண். அவளைத் தொடர்ந்து அனைவரும் அந்த வீட்டினுள் நுழைந்தார்கள்.

மங்கிவரும் மாலைநேர வெளிச்சத்தில் அந்த வீட்டினுள் விரிந்த காட்சி அவர்களின் இதயங்களை உருக்குவதாக அமைந்திருந்தது. முற்றத்தில் விரிக்கப்பட்டிருந்த கட்டிலொன்றில் சாக்கியர் படுத்துக் கொண்டிருந்தார். படுக்க வைக்கப்பட்டிருந்தார் என்று கூற வேண்டுமோ? அவரது உதடுகள் இடைவிடாமல் எதோ பொருளற்ற வார்த்தைகளை உச்சரித்த வண்ணம் இருந்தன. விழிகள் உத்திரத்தில் நிலைபெற்று நின்றன. தம்மைச் சூழ்ந்திருக்கும் பொருளற்ற உலகிலிருந்து நெடுதூரம் விலகி நிற்பவர்போல் காணப்பட்டார் சாக்கியர்.

"என் கணவருக்கு இன்று கூத்துக்கட்டச் சொல்லிக் கோயிலாரிடமிருந்து அழைப்பு வந்தது. அதனால் அங்கே சென்றிருக்கிறார். இந்த நேரம் பார்த்துப் பாட்டன் திடீரென்று ஏதேதோ பிதற்றத் துவங்கிவிட்டார். அதனால் பயந்துபோய் வைத்தியருக்கு ஆள் அனுப்பினேன். நல்ல வேளை. இப்போதுதான் பிதற்றல் சற்று நின்றிருக்கிறது."

மற்றவர்களை விலக்கிக்கொண்டு முன்னேறிய தம்புராட்டியார், சாக்கியரை நெருங்கி அவரது தலைமாட்டினருகே அமர்ந்து கொண்டார். அவரது கரங்களைப் பற்றி மணிக்கட்டைப் பிடித்து நாடி பார்த்தார். கழுத்து, மார்பு, நெற்றி, புஜங்கள் என உடலின் பல பாகங்களையும் தொட்டுத் தடவிச் சோதித்தார்.

"எலுமிச்சைப் பழம் வீட்டில் இருக்கிறதா அம்மா?"

"இதோ, கொண்டு வருகிறேன்."

பழத்தைக் கசக்கி அதன் மணத்தை நாசிக்கருகே கொண்டு செல்ல, சில வினாடிகளில் சாக்கியரின் முகத்தில்

தெளிவு பிறந்தது. ஆனால் உதடுகள் மீண்டும் துடிக்க ஆரம்பித்து விட்டன.

"பல சமயங்களில் பாட்டன் பேசுவது இன்னது என்பதைக்கூட அறிய முடிவதில்லை. சிற்சில சமயங்களில் மொழியே மாறி விடுகிறது. சம்ஸ்கிருதம் - தமிழ் - மலையாளம் என்று மாறி மாறிப் பிதற்றல்கள். சம்ஸ்கிருத்ததில் இவருக்கு இத்தனை பரிச்சயம் உண்டு என்பதே எங்களுக்குத் தெரியாது. என் கணவருக்கு அதில் அத்தனை தூரம் பரிச்சயமில்லை..." என்றாள் மாணிக்கம்.

தம்புராட்டியாரின் முகபாவம் தீவிரமான யோசனையைக் காட்டிக் கொண்டிருந்தது. உதட்டளவில் ஒரு முறுவல் அவரது வதனத்தில் ஒட்டியிருந்தாலும் அது அவரது சிந்தனையின் தீவிரத்தை மறைத்துக் காட்டும் முயற்சியே என்று மழபாடியாருக்குத் தோன்றியது. ஒரு கதவம் அடைபட்டால் வேறொரு கதவம் திறக்குமென்பார்கள். நமக்கோ ஒரு கதவம் திறந்தால் மற்றொன்று முகத்திலடித்தாற்போல மூடிக் கொள்கிறது. ஹூம்..!. எல்லாம் விதி.

"அவரது நினைவுகள் பழைய காலகட்டத்திற்குச் சென்றுவிட்டதுபோல் காண்கிறதம்மா. அவ்வப்போது நமது உலகிற்கு அவர் வந்து போவதோடு சரி. மற்றபடி பெரும்பான்மையான சமயங்களில் தமது பழைய கூட்டாளிகளுடன்தான் அவர் நேரத்தைக் கழித்து வருகிறார். தண்டு வடம் வழியாக மூளைக்குச் செல்லும் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டால் இம்மாதிரியான பக்க விளைவுகள் நேர்வதுண்டு" என்றார் தம்புராட்டியார்.

"பழைய காலகட்டமென்றால்? ஏறக்குறய முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னாலா?"

"ம்ஹூம். அதற்கும் முன்னால். சம்ஸ்கிருதமும் மலைமொழியும் சரளமாகப் புழங்கிய காலகட்டம். சாக்கியருக்குப் பிராயம் எண்பது இருக்குமா?"

"தை பிறந்தால் எண்பத்தி ஐந்து முடிந்து.." - அவள் தனது பதிலைச் சொல்லி முடிக்கும் முன் ஒரு முறை சாக்கியர் புரண்டு படுத்து "நிஷ்ஷிமம் நிகிலேஷ்வழம்..." என்று பிழறினார்.

அந்த இரண்டு வார்த்தைகளைக் கேட்டதும் தம்புராட்டியாரின் முகத்தில் அபூர்வமானதொரு பிரகாசம்

தோன்றி மறைந்தது. அடுத்த கணம் சாக்கியரை நெருங்கிச் சென்று அவரது காதுகளில் அவர் கூறிய வார்த்தைகளையே திரும்ப உச்சரிக்கலானார் தம்புராட்டியார்.

"நிஷ்ஷிமம் நிகிலேஷ்வழம்..."

"ம்ஹூம்..." - சாக்கியரின் தலை இடமும் வலமுமாக ஆடியது. "நிஷ்ஷிமம் நிகிலேஷ்வழம்..."

"நிஷ்ஷிமம் நிகிலே....."

ம்ஹூம். இந்த முறை துவங்குவதற்குள்ளாகவே மீண்டும் பலமான மறுத்தலிப்பு.

தம்புராட்டியார் சற்றே நிதானித்து அவர் கூற முயலும் ஸ்லோகத்தை வாய்விட்டுக் கூறாமல் கவனமாக மனதிற்குள் ஒருமுறை உச்சரித்துப் பார்க்க முற்படும்போதுதான் கிழவரின் எதிர்பார்ப்பு என்னவென்பதை அவரால் உணர முடிந்தது. பாவம்! சாக்கியரால் தான் சொல்ல வரும் ஸ்லோகத்தைச் சரிவர உச்சரிக்க முடியாமல் நாவு மேலே சென்று இழுத்துக்கொண்டு விடுகிறது. அதனால், கேட்பவர்களாவது அந்தச் சொற்களின் பொருளை உணர்ந்து பிழையில்லாமல் சரியாக உச்சரிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

சம்மந்தமேயில்லாமல் திடீரென்று ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலையின் பழைய நாஞ்சில் நாட்டு ஆசான் ஒரு கணம் மனதில் அவசரமாக வந்து போனார். சம்ஸ்கிருத உச்சரிப்பிற்கு பிரத்யேக முக்கியத்துவம் கொடுத்தவர் அவர்தான். அப்படியானால்?

"நிஷ்ஷிமம் நிகிலேஷ்வழம்..." என்றார் கிழவர் மீண்டுமொரு முறை. சந்தேகமேயில்லை. நமது சம்சயம் சரியானதுதான். கிழவர் உண்மையில் கூறவருவது என்னவென்பது புரிந்துவிட்டது.

"நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரம்..." என்று அவரது காதுகளுக்கு அருகில் சென்று புகன்றார் தம்புராட்டியார்.

கிழவரின் முகம் கணநேரம் பிரகாசமானது. "நிஷ்ஷிமம் நிகிலேஷ்வழஹ... பழஷிவஹ.."

"நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ பரசிவஹ... யாராவது நான் சொல்லிக்கொண்டு வருவதைக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்."

"ரஷேத் ஷகத் ஷர்வஷா.."

"ரஷேத் ஜகத் ஸர்வதா?"

"ரஷேத் வாழிஷி ஷேகழாம்.."

"ரஷேத்....???"

"ரஷேத் வாழிஷி மேகழாம்.." என்று தனது பிழறலை முடிந்தவரை திருத்திக்கொண்டார் கிழவர்.

"ஓ! ரஷேத் வாரிதி மேகலாம்.."

"ஸ்வஷயிஷா ஷீவல்லபோ மேஷியீம்.."

பளீரென்று ஓராயிரம் மின்னல்கள் தம்புராட்டியாரை ஒருசேரத் தாக்கின. "ஷீவல்லபோ.." என்று கிழவரால் உச்சரிக்கப்படும் வார்த்தை உண்மையில் "ஸ்ரீவல்லபோ" என்பதாகும். அப்படியானால்? நிஜமாகவே சாக்கியர் முனகிக்கொண்டிக்கும் சூத்திரம் தாம் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மறைந்துபோய் விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கும் துதிப்பாடல்தானா? அல்லது வேறு ஏதாவது ஸ்தோத்திரமா? எப்படி இருந்தாலும் இதனைப் பிழையில்லாமல் எழுதிக்கொள்ள வேண்டியது முக்கியமாயிற்றே?

"உங்களில் யார் நான் சொல்லிக்கொண்டு வருவதைக் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"நான்தானக்கா எழுதிக்கொண்டு வருகிறேன்.." என்று பதில் புகன்றார் பிஷு. பரவாயில்லை. உதயன் எழுதினால் பிழையில்லாமல் எழுதுவான். அவன் சாலையின் மாணாக்கனல்ல என்பது சற்று உறுத்துகிறதுதான். என்றாலும் ஆபத்துக்குப் பாவமில்லை.

"ஸ்வஷயிஷா ஷீவல்லபோ மேஷியீம்.." என்றார் கிழவர் பொறுமையிழந்து.

"ஸ்வதயிதா ஸ்ரீவல்லபோ மேதினீம்.."

"நிஷ்ஷிமம் நிகிலேஷ்வழஹ..."

ஓ! ஒவ்வொரு ஈறடியையும் இரண்டிரண்டு முறை உச்சரித்தாக வேண்டுமல்லவா? அதனால்தான் மீண்டும் முதலிலிருந்து துவங்குகிறார் போலிருக்கிறது. எங்கே. ஒரு முறை உச்சரித்துப் பார்ப்போமா?

'நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ. பரசிவஹ. ரக்ஷேத் ஜகத் ஸர்வதா. ரக்ஷேத் வாரிதி மேகலாம். ஸ்வதயிதா ஸ்ரீவல்லபோ மேதினீம்.'

'எல்லையில்லாது விரிந்து பரவும் இப்பிரபஞ்சத்தை அனைத்திற்கும் ஈஸ்வரனாக விளங்கும் பரமசிவன் காக்கட்டும். கடலைத் தனது இடையணியாகக் கொண்ட நிலமகளை அவளது காதலனான திருமகள் கேள்வன் காக்கட்டும்.'

நிச்சயம் இவை ஒரு பெரிய துதிப்பாடலின் முதலிரண்டு அடிகள் போலத்தான் தோன்றுகின்றன. ஆனால் அதனை எவ்வாறு நிச்சயப்படுத்திக் கொள்வது? சாக்கியர் இருக்கும் நிலையில் மற்ற அடிகளனைத்தையும் அவரால் ஞாபகத்திற்குக் கொண்டுவர இயலுமா?

இயலாது என்பது அவரைப் பார்க்கும்போதே தெரிந்தது. அந்தப் பாடலின் மற்ற அடிகளை மறந்து போனவராகப் பரிதாபமாக விட்டத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார் அவர். வாய் மட்டும் விட்டுப்போன அடிகளைத் தொட்டுப் பிடித்துவிடும் ஆசையில் தொடர்ந்து முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

தலையைத்திருப்பி வைத்துகொண்டு ஓரிரு கணங்களுக்கு யோசனையில் ஆழ்ந்த தம்புராட்டியார், ஒரு முடிவுக்கு வந்தவராக மீண்டும் கிழவரை நெருங்கினார். ஒரு முயற்சி. ஒரேயொரு கடைசி முயற்சி. செய்து பார்த்துவிட வேண்டியதுதான்.

"மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ.."

தமது செவிப் புலன்களுக்கு அருகே ஓதப்பட்ட அந்த வார்த்தைகளைக் கிழவரின் காதுகள் கவனமாக உள்வாங்கிக் கொண்டன. அவரது புருவங்கள் தீவிர சிந்தனையின் காரணமாக நெறிபட்டன.

"ஸ்ரீகிருஷ்ண தனுஜோ மஹான்.."

இம்முறை கிழவரின் தலை அப்புறமும் இப்புறமும் ஆடி மறுப்புக்கான அறிகுறியைக் காட்டவே தம்புராட்டியார் துணுக்குற்றார். இது தவறான சுலோகமா என்ன? அல்லவே? பெட்டியில் எழுதப்பட்டிருந்ததைத் தானே சொன்னோம்? ஒரு வேளை... நாம் நினைத்ததைப் போல் அது பண்டைய குரு ஸ்துதியின் பகுதியில்லையோ? வேறு ஏதாவது தனிஸ்லோகமோ? அடடா...

கிழவரின் முகத்தில் சில மாற்றங்கள் தெரிந்தன. கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார். "மாணிக்கம்! கொஞ்சம் தண்ணீர் எடுத்து வா.. இவர்களெல்லாம் யார்?" - அவரது குரல் மிகவும் பலகீனமாக ஒலித்தது.

"பாட்டா! கொஞ்ச நேரத்தில் எங்களையெல்லாம் என்ன பாடுபடுத்தி விட்டீர்கள்? அப்பாடா! கடைசியில் ஒரு வழியாக உங்களுக்கு நினைப்பு இப்போதாவது திரும்பியதே? அதனை நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். பாட்டா, இவர்தான் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியார். இவர்களெல்லோரும் அவருடன் வந்திருப்பவர்கள். நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான் உள்ளே சென்று தண்ணீரும் கஞ்சியும் கொண்டு வருகிறேன்."

"தாங்கள்தான் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியாரா? வரவேண்டும்... வரவேண்டும்..." - உடலின் தொய்வை மீறிக்கொண்டு உயர்ந்த கிழவரின் கரங்கள் இயல்பாகக் குவிந்தன.

"தங்களை மிகச்சிறிய பிராயத்தில் மூத்த தம்புரான் மடியில் நாலாம்வெளியில் கூத்துக்கட்டும் நேரத்தில் பார்த்ததுண்டு. அடடா! பார்த்து எத்தனை வருடங்களாகின்றன? அந்தச் சிறு பிராயத்திலேயே எத்தனை களையாக அம்சமாக இருப்பீர்கள் தாயே?"

"ஐயா! தங்களைச் சந்தித்ததில் எங்களுக்கு மெத்த மகிழ்ச்சி. தாங்கள் அந்தக் காலத்தில் கட்டிய கூத்துக்களும் வேடங்களும் இன்னமும்கூடக் கண்களிலேயே நிற்கின்றன. அடடா! அல்லி அருச்சுன்னையும் இராவணன் கர்வபங்கத்தையும் இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது. என்னவொரு இராஸபாவம்! எப்படியொரு அவிநயம்!"

"அதெல்லாம் ஒரு காலம் அம்மா. பழங்காலம். போகட்டும். தாங்கள் இந்த ஏழையைச் சந்திக்க வீடு தேடி வரவேண்டுமா என்ன? ஒரு வார்த்தை சொல்லியனுப்பி யிருந்தால் நானே..."

"இல்லை ஐயா. வயதிலும் அறிவிலும் பெரியவரான தங்களைத் தேடி நாங்கள் வந்ததே முறை. தங்களிடம்

முக்கியமானதொரு உதவி கோரி இத்தனை தூரம் வந்திருக்கிறோம்."

"உதவியா? என்னிடமா?"

"ஆமாம். தற்போது நான்தான் பண்டைய ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையைப் பராமரித்து வருகிறேன். இந்தக் குழந்தைகளிருவரும் என்னிடம் களரி அப்யசித்து வருகின்றனர்."

"மிக்க சந்தோஷம் தாயே! மிக்க சந்தோஷம். என் காலம் முடிவதற்குள்ளாக அந்தப் பெருஞ்சாலை ஷீணித்து அழிந்து போய்விடுமோ என்று பயந்து கொண்டிருந்தேன். நல்லவேளை. என் வயிற்றில் பாலை வார்த்தாய். சீக்கிரம் கேட்கவேண்டியதைக் கேட்டுவிடு. மீண்டும் மயக்கம் வரும் போலத் தெரிகிறது..."

"சாலை வளாகத்தில் இந்த மாணவர்களால் வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு பெட்டி கண்டறியப்பட்டது. அதன் மேல் ஒரு சுலோகம் முழுமையில்லாமல் எழுதப் பட்டிருந்தது. அந்த சுலோகத்தின் கடைசி அடி தெரிந்தால் தான் பெட்டியைத் திறக்க முடியும். சாலையின் பழைய மாணாக்கரான தங்களுக்கு அது தெரிந்திருக்க வாய்ப்புள்ளது என்று நம்பித்தான் உங்களிடம் வந்தோம்."

"எங்கே, அந்த சுலோகத்தைச் சொல் பார்க்கலாம்?"

'மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ. ஸ்ரீகிருஷ்ண தனுஜோ மஹான். தஸ்ய இயம் பலராமஸ்ய புஸதிகா அய்யாஸ—காமணஹ. ஸ்ரீவல்லப மஹாசாலோ குரோஹோ...'

மளமளவென்று தயக்கமேயில்லாமல் மனப்பாடமாகத் தம்புராட்டியார் ஒப்பிப்பதைக் கண்டு நண்பர்களிருவரும் தலையைக் குனிந்து கொண்டார்கள். ஏனெனில் இருவருக்குமே அந்த சுலோகங்கள் அப்போது சுத்தமாக மறந்து விட்டிருந்தன.

"இது மஹாசாலையின் பழைய குரு ஸ்தோத்திரமாயிற்றே அம்மா? நாஞ்சில் நாட்டு ஆசான் புதிய குருக்களின் பெயர்களையெல்லாம் இதில் சேர்த்துத் திருத்தி அமைத்தாரே?"

"அப்படியா? அவ்வாறெனில் இதன் கடைசி அடி என்னவென்பது தங்களுக்கு ஞாபகம் வருகிறதா?"

"அதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். எங்கே? மீண்டும் ஒரு முறை கூறு?"

"மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ..."

"ம்ஹூம். அவ்வாறு துவங்காது. இது சுலோகத்தின் இரண்டாவது அடியாக இருக்க வேண்டும். மூழிக்குளத்து குருவின் பெயரனெனில்..."

"பலராம ஆசான்தான்!"

"அவரது பெயர்தான் மூன்றாவது அடியில் வந்து விடுகிறதே? அவர் எந்த வீட்டைச் சேர்ந்தவர் என்று வினவினேன்."

"அது தெரியாதே ஐயா?"

"அது இந்த சுலோகத்தின் முதல் அடியில் குறிக்கப் பட்டிருக்கும். அது தெரியாமல் மற்ற அடிகளை அனுமானிப்பது கடினமாயிற்றே அம்மா? ஆஹ். எனக்கு மீண்டும் மயக்கம் வரும்போலத் தெரிகிறதே..."

"தயவு செய்து சற்று முயற்சி செய்து பாருங்களேன்?"

கிழவரின் கண்கள் அரை மயக்கத்தில் சொருகிக் கொண்டன. அவர் பழையபடி தன்னுடைய சொப்பன உலகத்திற்குச் சென்றுவிட்டார் போலும். தேவி! இதென்ன சோதனை? என்று தம்புராட்டியாரின் மனம் அரற்றியது. கண்களில் நீருடன் கிழவரை நெருங்கி அந்த சுலோகத்தை மீண்டுமொருமுறை உச்சரிக்கத் துவங்கினார்.

"மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ... ஸ்ரீகிருஷ்ண தனுஜோ மஹான்..."

கிழவரின் உதடுகள் துடித்தன. பின் கீழ்க்கண்ட வார்த்தைகள் திக்கித்திணறி அவரது வாயினின்றும் வெளிப்பட்டன. "கௌண்டின்ய கோத்யஜ்ய ஷீமான் கோட்டைத்தழிஹி க்ஷுஹாழ்ஷிஷஹ..."

"கௌண்டின்ய கோத்ரஜ்ய தீமான் கோட்டைத்தளிஹி திருஹார்கிதஹ..." என்று தம்புராட்டியார் திருத்திச் சொன்னார். ஆஹா! இவைதாம் சற்று நேரத்திற்கு முன் நினைவிற்கு வரவில்லை எனக் கிழவர் குறிப்பிட்ட முதலிரண்டு அடிகள்! நனவுலகில் ஞாபகத்திலில்லாத விஷயம் கனவுலகில் அகப்பட்டு விட்டதா என்ன? மனித

மனதின் விசித்திரங்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே?

கிழவர் தொடர்ந்து நடுங்கும் குரலில் மனப்பாடமாக அனைத்தையும் சொல்லிக்கொண்டு போனார். இறுதி அடி வந்தது.

"ஷீவல்லப மஹாசாஹோ குஹோஹோ.."

தம்புராட்டியாருக்கு மூச்சே நின்றுவிட்டது.

"தன்ழிப் பிழஷாபதே.." என்று முடித்தார் கிழவர்.

தன்விப் பிரஜாபதே! பெட்டியைத் திறக்கப்போகும் மந்திரச் சொற்கள் இவைதான். தன்விப் பிரஜாபதே! வில்லாளி உலகின் பிரம்மன். அவ்வளவுதான்.

தம்புராட்டியாரால் தமது கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. சே! முன்னரே இதனை யூகித்திருக்கலாமோ? மஹாசாலையின் குருமார்களுள் பலராம நம்பூதிரியே வில்வித்தையில் தலைசிறந்து விளங்கினார். வில்வித்தை தொடர்பான பல சூத்திரங்களையும் எழுதி வைத்தார் என்று நாஞ்சில் நாட்டு ஆசான் தம்மிடம் எத்தனை முறை கூறியிருக்கிறார்?

வாயிலில் ஏதோ ஆள் ஆரவம் கேட்டது. மாணிக்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த வைத்தியர் வந்து விட்டார் போலும்.

"அப்போது நாங்கள் கிளம்புகிறோமம்மா. சாக்கியர் உடல் நலம் தேறியபின் எனக்குச் செய்தியனுப்பு. வந்து பார்க்கிறேன்." என்றபடி எழுந்து நின்றார் தம்புராட்டியார்.

"இத்தனை தூரம் வந்துவிட்டு உணவு உட்கொள்ளாமல் செல்கிறீர்களே அக்கா? அவர் வந்தால் என்னை நிச்சயம் கோபித்துக் கொள்வார்."

"பரவாயில்லையம்மா. நான் தேடி வந்த துதிப்பாடலின் இறுதி வரிகள் கிடைத்ததே எனக்குப் பெரிய விருந்துண்ட திருப்தியைத் தந்துவிட்டது. வேறொரு சந்தர்ப்பத்தில் நிதானமாக வந்து உன்னுடைய சமையலை ருசி பார்க்கிறேன். வரட்டுமா?"

நண்பர்களிருவருக்கும் பசி காதை அடைத்தது. இருவரும் ஒன்றும் சொல்லாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அவர் வீடு திரும்ப நேரமாகிவிடும் போலிருக்கிறது. இத்தனை தூரம் வீடு தேடி வந்திருக்கும் உங்களைச் சந்திக்க வில்லையென்றால் அவர் மிகவும் வருத்தப்படுவார் அக்கா. வேண்டுமானால் நீங்களனைவரும் கோயிலுக்குச் சென்று அவரது கூத்தைப் பார்த்து விட்டு அவரையும் சந்தித்துவிட்டு வருகிறீர்களா? மிகவும் அருமையாக ஆடுவார்."

தன்னை மறந்து கணவரின் ஆடலைப் புகழ்ந்து கொண்டே சென்ற மாணிக்கம் ஒரு கணம் நிதானித்து மிக அழகாக வெட்கப்பட்டாள்.

"இல்லையம்மா. அதற்கெல்லாம் நேரமில்லை.. " என்று தம்புராட்டியார் சொல்ல வருவதற்குள் அவரை முந்திக் கொண்டு "என்ன நாடகம் அது?" என்று ஆர்வத்துடன் வினவினார் மணியனார்.

"இரணிய வதம் அல்லது பிரஹ்லாத தரிசனம். பாட்டனுடைய பெயர் சொல்லும் நாடகங்களுள் அதுவுமொன்று. பழைய கூத்து மரபில் பாட்டன் பல புதுமைகளைப் புகுத்தி மாற்றியமைத்ததாகக் கூறுவார்கள். இன்று அவர் கட்டப்போகும் கூத்தும் பாட்டனின் பாணியை ஒட்டித்தான் அமைந்திருக்கும்." என்றாள் மாணிக்கம் ஆர்வத்துடன்.

நண்பர்களின் மூளை அதிவேகமாகச் செயல்பட்டது. எப்படியாவது தம்புராட்டியாரைச் சம்மதிக்க வைத்துக் கோயிலுக்குக் கூட்டிச் சென்றுவிட்டால் நிச்சம் வயிற்றுக்கு உணவு கிடைக்கும். கூத்து நடைபெறப் போவதால் கண்களுக்கும் காதுகளுக்கும்கூட அருமையான விருந்து கிடைக்கும். இதையெல்லாம் விட்டுவிட்டு அவசர அவசரமாகப் பசியுடன் பெருஞ்சாலைக்குச் சென்றுதான் ஆகவேண்டுமா என்ன? இத்தனை காலம் பொறுமையுடன் காத்திருந்த அந்தப் பெட்டி இன்னும் ஒரு நாள் காத்திருந்துவிட்டுப் போகிறது?

கிழவர் முகம் திடீரென்று பிரகாசமானது.

"பிழஹல்லத தழிசனம்... பிழஹல்லாத தரிசனம் கூத்தைப் பாருங்கள். அதில்... அதில்... ஒரு முக்கிய.. " அதற்குப் பின் அவரது வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளின் பொருளை இன்னதென்று விளங்கிக் கொள்ள முடியவில்லை.

தம்புராட்டியார் துணுக்குற்றார். கிழவர் எதற்காக நம்மைக் கூத்துப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்? சுயநினைவுடன் தான் பேசுகிறாரா? அல்லது...

"அவஷியம் கூத்தைப் பாருங்கள். அதில்... அதில்... " என்றார் கிழவர் மீண்டும்.

"பாட்டனே இத்தனை தூரம் சொல்கிறாரே அக்கா? இன்னும் என்ன தயக்கம்? வேண்டுமானால் என் மகளை உங்களுடன் கோயிலுக்கு அனுப்பி வைக்கவா?" என்று வினவினாள் மாணிக்கம். அவளது குரலில் பகிரங்கமான கெஞ்சல் இருந்தது.

"சரி. சரி. நீங்கள் அனைவரும் இத்தனை தூரம் வற்புறுத்துவதால் கூத்தைப் பார்த்துவிட்டே செல்கிறேன். ஆனால் கூத்தை என்னால் பார்த்து இரசிக்க முடியாது. கேட்டு இரசிக்க மட்டும்தான் முடியும்..." என்று விரக்தியுடன் கூறியபடி விடைபெற்றார் தம்புராட்டியார்.

வாயில்வரை வந்து நின்று அவர்களை அன்புடன் வழியனுப்பி வைத்தாள் மாணிக்கம். தம்புராட்டியாரின் நிலைமை அவளுக்குச் சொல்லவொண்ணாத துன்பத்தை அளித்தது. இறைவன் ஏன் சில சமயங்களில் இத்தனை தூரம் இரக்கமற்றவனாக நடந்து கொள்கிறானோ? என்று அவளுக்குத் தோன்றியது.

கோயிலில் பின்னிரவு வரை நீண்ட பிரஹ்லாத தரிசனம் நாடகத்தை நால்வரும் முழுவதுமாகக் கண்டு கேட்டு மகிழ்ந்தார்கள். எனினும் அங்கு ஒரு துரதிருஷ்டமான சூழல் நிலவியதை நால்வருமே அறியவில்லை.

அந்நாடகத்தில் அவர்களுக்கு மிகவும் தேவையான மிக அவசியமான மிக மிக இரகசியமான ஒரு முக்கியச் செய்தி பொதிந்திருந்தது. ஆனால் நாடகத்தைப் பார்க்க முடிந்த மூவரில் ஒருவர்கூட அந்தச் செய்தியை உணருமளவிற்குத் திறன் பெற்றிருக்கவில்லை. செய்தியை உய்த்துணரக்கூடிய நுண்ணறிவு பெற்றிருந்த தம்புராட்டியாராலோ நாடகத்தை பார்க்க முடியவில்லை! இவ்வாறாக விதி அன்று சதி செய்து அந்த இரகசியத்தை அவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் தடுத்தது.

அன்றிரவு வெகுநேரம்வரை தம்புராட்டியாருக்கு உறக்கம் வரவில்லை. கிழவர் எதற்காக அந்த நாடகத்தைப்

பார்க்கும்படித் தங்களை அத்தனை தூரம் வற்புறுத்தினார்? எனும் கேள்வி அவரை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது.

18. ஆலவாயன் திருநகர்



தஞ்சையிலிருந்து கிளம்பித் தெற்கே பாண்டிநாட்டிற்குச் செல்லும் பெரு வழிகளுள்[20] பிரதானமானவை இரண்டு. அவற்றுள் முதலாவது தஞ்சையிலிருந்து கொடும்பாளூர் இருக்குவேளிர் நாட்டின் வழியாக மதுரைக்குச் சென்று அங்கிருந்து நெல்வேலி வரை நீளும் சுந்தர பாண்டியன் பெருவழி. இரண்டாவது தஞ்சையிலிருந்து நாகை சென்று கடற்கரைச் சாலை வழியே கிழக்குத் துறை முகங்களைத் தொட்டுச் செல்லும் சடையம் பெருவழி. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட சடையம் பெருவழியில்தான் சில காலத்திற்கு முன் நமது நண்பர்கள் தேவநாக பண்டிதருடன் பயணித்தார்கள் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இவ்விரண்டு வழிகளையும் விட்டுவிட்டால் சிற்றூர்கள், கிராமங்கள் மற்றும் சதுர்வேதி மங்கலங்களின் வழியேதான் பயணப்பட்டாக வேண்டும்.

சோழப் பெரும்படைகள் தென்பாண்டி நாட்டிற்குச் செல்வதற்குப் பாண்டியன் பெருவழியைப் பயன்படுத்துவதில் பேரரசருக்கு முதலில் அவ்வளவாக விருப்பமில்லாமல் இருந்தது. அதனால் பொதுமக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாவார்கள் என்று அவர் கருதினார். ஆனால், படைவீரர்களைத்தவிர பல்வேறு ஆயுதங்களையும் தளவாடங்களையும் சாமக்கிரியைகளையுமல்லவா கூடவே சுமந்து சென்றாக வேண்டும்? அதற்கு முறையான பாதையில் செல்வதுதான் சிறந்தது. இல்லையேல் திட்டமிட்டபடி ஆய்வேள் நாட்டை அடையமுடியாது. பல வாரங்கள் கால தாமதமாகிவிடும் என்று நயந்தும் பயந்தும் பேசி அவரைச் சம்மதிக்க வைத்தார் மாராயர்.

தஞ்சையிலிருந்து புறப்பட்ட மூன்றாம் நாள் மாலை ஆலவாயன் திருநகரான மதுரையை அடைந்துவிட்ட

---

[20] வழி என்பதை வதி என்றே பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

சோழர் படை, நகருக்கு வெளியே தண்டூன்றிக் கொண்டன[21]. அன்றிரவு அங்கேயே தங்கி ஓய்வெடுத்துக் கொண்டுவிட்டு மறுநாள் விடியல் நேரத்தில் அதிக மக்கள் கூட்டம் சேர்வதற்கு முன்பாகப் பாண்டியன் பெருவழியைப் பிடித்து விடுவதுதான் மாராயரின் திட்டம்.

வந்து சேர்ந்த ஓரிரு நாழிகைகளிலேயே ஆங்காங்கே மளமளவென்று கூடாரம் அமைத்துவிட்ட படைவீரர்கள், இரவுச் சமையலுக்கான பணிகளையும் தாமதமின்றித் துவக்கிவிட்டார்கள். வழக்கமாக இம்மாதிரியான சமயங்களில் யவன[22] நாட்டுப் பிழி ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும். வீரர்கள் வயிறுமுட்டக் குடித்துவிட்டுப் பிதற்றியபடி இருப்பார்கள். நாளை இவர்கள் களத்திலிருந்து திரும்பு வார்களோ மாட்டார்களோ? இருக்கும்வரை அனுபவித்து விட்டுப் போகட்டும் எனும் நினைப்பில் சேனானி நாயகங்களும் அவர்களைக் கண்டும் காணாமலிருந்து விடுவார்கள். ஆனால் அருள்மொழிவர்மர்தான் அனைத்திலும் புதுமையைப் புகுத்தும் எண்ணமுடையவர் ஆயிற்றே? அதனால் இரவு உணவுடன் பிழி குறிப்பிட்ட அளவிற்குத்தான் வினியோகிக்கப்பட்டது. உணவை முடித்துக் கொண்டு அனைவரும் பேரரசரின் கூடாரத்தைச் சுற்றி அமர்ந்துகொள்ள வேண்டும் எனும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

வழக்கமாகக் கொடுக்கப்படும் பிழியின் அளவு குறைக்கப்பட்டதால் வீரர்களுக்கு உண்டான ஆத்திரம் கொஞ்ச நஞ்சமல்ல. என்றாலும் பேரரசரின் மேல் அவர்கள் வைத்திருந்த பெருமரியாதையும் ஏதோ ஒரு காரணத்தின் பாற்பட்டுத்தான் அவர் இவ்வாறு செய்கிறார் எனும் நம்பிக்கையும் கோபத்தை ஒரு கட்டுக்குள் வைத்திருந்தன. மாராயருக்கே இந்த நடவடிக்கைகள் வினோதமாகத்தான் தெரிந்தன. என்னதான் நடக்கப் போகிறதென்று பொறுத்துப் பார்ப்போமே? என்று தனக்குத்தானே மொழிந்து கொண்டார் அவர்.

உத்தரவுப்படி இரவு உணவை முடித்துக்கொண்டு பேரரசரின் கூடாரத்தைச் சுற்றியமர்ந்து கொண்ட வீரர்கள்,

---

[21] சோழர்களின் முதற்படையெடுப்பினால் பாண்டிப்படைகள் மதுரையிலிருந்து முற்றிலுமாக நீங்கிவிட்டிருந்தன.

[22] பண்டைய கிரீஸ் மற்றும் ரோம் நாடுகள்.

அங்கே அதிக அளவில் தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். கூடாரத்தின் முன்பக்கத்திலும் பெருநெருப்பொன்று எரிந்து கொண்டிருந்த்து.

சிறிது நேரத்தில் கூடாரத்தை விட்டு வெளியே வந்து நின்ற அருள்மொழிவர்மர், அவர்களை நோக்கிப் பின்வருமாறு மொழிந்தார்:

"சோழப் பெருவீரர்களே! சிறிது காலங்களுக்கு முன் உங்களில் கலையார்வம் மிக்க சில வீரர்களைத் தேர்ந்தெடுத்துப் புதிதாக ஒரு படை அமைக்கப் போவதாகக் கூறினேனே.. ஞாபகம் உள்ளதா? அப்படையினர் உருவாக்கியுள்ள முதலாவது கலை நிகழ்ச்சி தற்போது நடைபெற உள்ளது. அதனை நீங்களனைவரும் தத்தம் சுய நினைவோடு கண்டு களிக்க வேண்டும் என்று நாம் விரும்பியதால்தான் பிழி குறைந்த அளவில் கொடுக்கப் பட்டது. நிகழ்ச்சி இன்னும் சில நிமிடங்களில் துவங்கும்."

வீரர் குழாம் மத்தியில் சிறு சலசலப்பு உண்டானது. "கலை நிகழ்ச்சியா? இந்தப் பொட்டல் வெளியிலா? அரசருக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டதா என்ன?"

"இல்லை அப்பனே. இதுதான் வீ..ர சோ..ழ நா..டகப் படை! எதிரிகளை வாளெடுத்துச் சென்று சந்திக்காமல் கலை காட்சி என்று காட்டிச் சித்திரவதை செய்து கொல்லும் உபாயம். இந்த அதியற்புதமான படையில் சேர்வதற்காகத்தான் பாவம்! நமது படைப்பிரிவைச் சேர்ந்த சூரசேனன் ஆர்வமாகச் சென்றான் போலும். அவன் மட்டும் அவிழ்த்துப் போட்டுக் கூத்தாடினால் நான் இறந்து படுவது உறுதி. வாழ்க சோழம்!" - என்று முழங்கியபடி அந்த வாயாடி வீரன் மயங்கிவிழ அந்தப் பகுதியிலிருந்து "கொல்"லென்று சிரிப்பு எழுந்தது. இந்த நையாண்டிப் பேச்சுக்கள் சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த மாராயரின் காதுகளில் பட்டும் படாமலும் விழவே, எதற்காக இம்மாதிரி விழப்பரிட்சைகளெல்லாம் செய்து பெயரைக் கெடுத்துக் கொள்கிறாரோ பேரரசர்? என்று ஆதங்கம் ஏற்பட்டது.

பேரரசர் தமது அறிவிப்பை வெளியிட்டுவிட்டு அமர்ந்த சில கணங்களிலேயே நாடகப்படையின் வீரர்கள் தமது நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மளமளவென்று துவங்கி விட்டார்கள். அந்த மைதானத்தில் மேடையோ பின்னணித்

திரையோ கிடையாதாதலால் கட்டியக்காரனொருவன் பெரியதொரு தடியுடன் முன் வந்து கம்பீரமான குரலில் கீழ்க்கண்டவாறு முழங்கினான்.

"பழம் பெருமை மிக்க சோணாட்டின் வீராதி வீரர்களே! இன்றிரவு இம்மைதானத்தில் நமது பண்டைய கலாச்சாரத்தையும் வீரத்தையும் பண்பாட்டையும் சுட்டிக்காட்டும் வகையில் சோழவீரன் எனும் புதிய நாடகத்தைக் கட்டவிருக்கிறோம். இங்கே இந்நாடகம் கட்டுவதற்கு அனுமதியளித்த நமது பேரரசர் அருள்மொழிவர்மருக்கும் சேனாபதி இராஜராஜ மாராயருக்கும் நமது ஆயிரம் கோடி தண்டங்களைச் சமர்ப்பிக்கிறோம். வீரர்கள் அனைவரும் நிகழ்ச்சியைக் கண்டு களிக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறாம்!"

இந்த முன்னொட்டு கொடுக்கப்பட்ட அடுத்த நொடியிலேயே பறையும் தப்பும் பின்னணியில் முழங்க ஆரம்பித்துவிட்டன. குளிரில் தோய்ந்த அந்த முன்னிரவின் பின்னணியில் பகபகவென்று எரிந்து கொண்டிருந்த பெருநெருப்பின் செந்நிற வெளிச்சத்தில் எழுந்த வீரமிகு பறையிசையானது கூடியிருந்த வீரர்களின் மனதில் சொல்லில் வடிக்கவொண்ணாத பல்வேறு உணர்ச்சிகளைத் தோற்றுவித்தது.

தாளக்கட்டின் பின்னணியில் தனது முழக்கத்தைத் தொடர்ந்த கட்டியக்காரன், காவிரிப் படுகைகளில் முதன் முதலில் மக்கள் குடியேற்றம் நிகழ்ந்த காலத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டு போனான். அவர்கள்தாம் நமது மூதாதையர்களுக்கும் மூதாதை என்றான். மெல்ல மெல்ல அக்குடியேற்றங்கள் பெருகுகின்றன. அம்மக்கள் இரவு பகலாகப் பாடுபட்டு நிலத்தைச் செம்மைப்படுத்துகின்றனர். விவசாயமும் அதனையொட்டிய தொழில்களும் வளர்கின்றன.

இதனிடையே அம்மக்களின் தானியங்களையும் கால்நடைச் செல்வங்களையும் அண்டை ஊராரும் கள்வர்களும் திருடிச் செல்கின்றனர். வழிப்பறியும் கொள்ளையும் அதிகரிக்கின்றன. மக்கள் தமது துயர் தீர்க்குமாறு இறைவனை இறைஞ்சுகின்றனர். அவ்வூரின் பூசாரி வேலன் சன்னதம் சொல்கிறார். அந்த இனத்திற்குத் தலைமை ஏற்க சூரியதேவன் அருளால் புதிதாக ஒரு குழந்தை பிறக்கப் போகிறதாம். அவனும் அவனது

வம்சத்தாரும்தான் வழிவழியாக அப்பூமியின் பாதுகாவலர்களாக விளங்குவார்களாம். அவனுக்குச் சோழன் என்று பெயரிட வேண்டுமென்பது தேவ ஆக்ஞையாம்.

சன்னதத்தின்படியே அவ்வூரில் ஒழுக்கம் நிறைந்த தம்பதியொருவருக்கு சகலவித லட்ஷணங்களோடும் குழந்தையொன்று பிறக்கிறது. அவனுக்குச் சோழனென்று பெயரிட்டு சீரும் சிறப்புமாய் வளர்க்கிறார்கள். அவன் வளர வளர அந்தப் பகுதிகளில் குடியேற்றங்களும் பெருகுகின்றன. சிற்றூர் சிறு இராஜ்ஜியமாக உருப்பெருகின்றது. அந்த இராஜ்ஜியத்திற்குச் சோழன் தலைவனாகிறான். அவனது தலைமையில் நாடுகாப்பதற்கும் வீடுகாப்பதற்கும் முறைப் படுத்த படையொன்று தயாராகின்றது. இதுதான் முதன் முதலில் அமைக்கப்பட்ட சோழப்படை.

இவ்வாறு மெல்ல மெல்ல அவன் தகவல்களை விவரித்துக் கொண்டே செல்லச் செல்ல, அத்தகவல்களுக்கு ஏற்றாற்போல ஆடலும் பாடலும் இசையும் அமைந்திருந்தன. குறிப்பாக சோழப்படை முதன்முதலாக உருவாக்கப்பட்டதை விவரிக்கும் காட்சியில் உச்ச கதியில் எழுந்த பறையிசையானது கூடியிருந்த வீரர்களின் நாடி நரம்புகளையெல்லாம் ஊடுருவிக்கொண்டு சென்றதெனில் மிகையில்லை. பிரமை பிடித்தவர்களைப்போல் நாடகக் காட்சிகளில் உறைந்துபோய்க் காணப்பட்டார்கள் அவர்கள். எத்தனை மகத்தான வீர வரலாறுகொண்ட சேனை நம்முடையது! எனும் பெருமிதமும் உற்சாகமும் அவர்களது முகத்தில் அப்பட்டமாக விரிந்தன. அவ்வித உணர்ச்சிகளை ஊட்டுவதே நாடகத்தின் தலையாயக் குறிக்கோள் என்பதுபோல் தோன்றியது.

பின்னணியையோ ஒப்பனைகளையோ நம்பாமல் தமது நடிப்பாலும் பாவங்களாலுமே உரிய காட்சிகளையும் உணர்ச்சிகளையும் அந்த மைதானத்தில் உருவாக்கிக் காட்டிய நாடகப்படை வீரர்களின் திறமையை உள்ளூர நினைத்து வியந்து போனார் மாராயர். அவர்கள் அனைவருமே முறையாகப் பயிற்சிபெற்ற போர் வீரர்கள்தாம். ஒவ்வொருவருமே வாளும் வில்லும் ஏந்திக் களத்தில் சுழலக்கூடியவர்கள்தாம். ஆனால் அவர்களுக்குள் ஒரு கலைஞனும் ஒளிந்து கொண்டிருந்திருக்கிறான். அதனை எப்படியோ இனங்கண்டு தக்கபடி பயன்படுத்தியும் விட்டார் பேரரசர்.

வழக்கமாக வயிறுமுட்டப் பிழியருந்தி விட்டு இரவு முழுவதும் பிதற்றிக் கொண்டிருந்திருப்பவர்களுக்கு வீர வெறியூட்டிவிட்டார் பேரரசர். என்னவொரு மதியூகம் அவருடையது! அதுவரை அடையாளம் காணப்படாத தத்தம் கலைத்திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைத்து விட்டதால் அந்த நாடகப்படை வீரர்களின் கண்களில்தான் எத்தனை மகிழ்ச்சி!

இப்படி அந்த மைதானத்தில் கூடியிருந்த பலரும் நாடகத்தில் மூழ்கியிருக்க, கடைசி வரிசையில் அமர்ந்திருந்த ஒரு வீரன் மட்டும் மெல்லச் சந்தடி செய்யாமல் எழுந்து நடந்து மைதானத்தின் வடகோடியில் புரவிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தை அடைந்தான். அங்கே புரவிகளின் பாதுகாவலுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேறொரு வீரன் இவனைப் பார்த்துக் கையசைக்க, அவனை நோக்கி நடந்தான்.

"என்ன பலதேவா! இத்தனை காலதாமதம் செய்து விட்டாயே? நாடகம் இன்னேரம் முடிந்திருக்குமே?" என்று வினவினான் அந்த இரண்டாவது வீரன். ஆஹா! பலதேவனா? இந்தப் பெயர் நமக்குள் ஏதேதோ பயங்கர எண்ணங்களைத் தோற்றுவிக்கிறதே? தஞ்சையின் புரவி இலாயத்திலிருந்தவன் சோழர் படைகளுடன் ஒட்டிக் கொண்டுவிட்டானா என்ன? இது ஆபத்தானதாயிற்றே?

"இல்லையப்பனே. இன்னும் முடியவில்லை. நீ கிளம்பு. பின்னிரவு வரை இரதங்களையும் புரவிகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன். புரவிகளைச் சேணத்திலிருந்து அவிழ்ப்பதற்கு மட்டும் உதவிசெய்.. நீரும் கொள்ளும் காட்ட வேண்டும்."

சந்தேகமேயில்லை. இது நமக்கு மிகவும் பரிச்சயமான குரல்தான். ஜடாமகுட பைராகியாகத் தஞ்சை நகரைச் சுற்றிக் கொண்டிருந்த விக்கிரமாதித்ய வரகுணரின் விசுவாசிதான் இவன். இவன் வலுக்கட்டாயமாகத் தெற்கே சென்றுகொண்டிருக்கும் சோழப் படைகளுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறானென்றால்? அதன் பின்னணியில் படு பயங்கரமான காரணம் ஏதாவது இருக்க வேண்டுமே? அடடா..

அன்றொருநாள் பௌர்ணமி இரவில் ஐங்கரன் ஒட்டுக் கேட்ட உரையாடல்கள் இன்னமும் மறக்க முடியாமல் நமது மனதில் பதிந்திருக்கின்றன.

"சுருக்கமான மிக நிச்சயமான வழியைக் கையாண்டு அவர்களை வீழ்த்த வேண்டும்!"

"ஐயோ! நீங்கள் கூறுவது மிக மிக ஆபத்தான காரியமாயிற்றே? மாட்டிக்கொண்டால்? யோசிக்காமல் சுழுவிலேற்றி விடுவார்களே ஐயா?"

பைராகி குறிப்பிட்ட அந்த ஆபத்தான காரியம் என்ன என்பதையோ அதில் பலதேவனின் பங்கு என்ன என்பதையோ துரதிருஷ்டவசமாக அன்று நம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு வேளை... அந்த ஆபத்தான பணியை நிறைவேற்றும் பொருட்டுத்தான் இவன் இப்போது சைனியத்தில் சேர்ந்து கொண்டுள்ளானா என்ன? அடக் கடவுளே!

பைராகியைப் பற்றியும் பலதேவனைப் பற்றியும் நாம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் தவிர்க்கவே முடியாமல் நமது அத்யந்த நண்பன் ஐங்கரனைப் பற்றிய நினைவுகளும் கூடவே எழுகின்றன. அவனைச் சந்தித்து நீண்ட காலமாகிறதே? இரணசாலை வைத்தியர் தமது பரிவாரங்களுடன் அவனையும் அழைத்து வருவதாகக் கூறினாரே? நமது நண்பன் இப்போது எங்கிருக்கிறான்? என்ன செய்து கொண்டிருக்கிறான்? உடனடியாக அவனைச் சந்தித்து இந்தப் பலதேவன் சோழர் படைகளுடன் எப்படியோ ஒட்டிக்கொண்டு விட்டதைச் சொல்லவேண்டுமென்று நமது மனம் கிடந்து அடித்துக் கொள்கிறதே?

நண்பா! நீ எங்கிருக்கிறாய்?

19. சுந்தரச் சோழப் பெருமருத்துவர்



தெற்கே ஆய்வேள் நாட்டை நோக்கிக் குறி வைத்து நடந்து கொண்டிருந்த சோழர் படைகளுக்குத் தேவைப்படும் முக்கியத் தள வாடங்களையும் ஆயுதங்களையும் சுமந்து கொண்டு வந்த பத்திருபது புரவி வண்டிகளும் அவற்றின் பரிவாரங்களும் மதுராபுரியின் எல்லையில் படைகள் தண்டூன்றியிருந்த மைதானத்திற்குச் சிறிது மேற்கே ஒரு மாந்தோப்பில் இளைபாறிக் கொண்டிருந்தன. தளவாடங்களுக்குப் பாதுகாவலாக ஒரு சிறு படையும்

நிறுத்தப்பட்டிருந்தது. இத்தளவாட வண்டிகளுடன்தான் சோழ இரணவைத்தியர் குழுவும் பயணப்பட்டுக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தியர் குழுவிற்குத் தலைமை ஏற்றிருந்தவர் நாட்டிலேயே மிகவும் அனுபவம் வாய்ந்த மருத்துவராக மதிக்கப்பட்ட சுந்தரச் சோழப் பெருமருத்துவராவார். இவரது தலைமையில்தான் தஞ்சையின் புகழ் பெற்ற சுந்தரச் சோழ ஆதுலர் சாலை செயல்பட்டு வந்ததென்பதை முன்னொரு அத்தியாயத்தில் கண்டோம். இரண்டாம் பராந்தகரான சுந்தரச் சோழர் காலந்தொட்டுக் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக மருத்துவத் தொழிலை மிகச் சீரிய முறையில் மேற்கொண்டிருந்த வைத்தியர், போருக்குப் படையெடுத்துச் செல்லும் சோழ சைனியத்தின் ஒரு பிரிவான இரணவைத்தியக் குழுவிற்குத் தலைமை வகித்துச் செல்லும் தைரியமும் மனத்திண்மையும் வாய்த்தவராக இருந்தது ஆச்சரியம்தான்.

ஒவ்வொரு நாளும் களத்திலிருந்து அடிபட்டுத் திரும்பும் வீரர்களுக்கு முதலுதவியும் சிகிச்சையும் அளிக்கும் மிகக் கடினமான பணி வைத்தியக் குழுவினுடையதாகும். இரத்த சேதாரம் அதிகமாகி உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில் வந்து சேரும் வீரர்களின் உயிர்களைக்கூட எப்பாடு பட்டாகிலும் காப்பாற்றி மீட்டாக வேண்டிய பெரும் பொறுப்பு இக்குழுவிற்கு இருந்தது. இந்த ஒரு காரணத்தினாலேயே வீரர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் இவர்களுக்குப் பெருத்த மரியாதையும் செல்வாக்கும் இருந்து வந்தன. "என் மகன் வைத்திய சாஸ்திரம் படித்துவிட்டு இரண வைத்தியக்குழுவுடன் போர்க்களத்திற்குச் சென்றிருக்கிறான்" என்று கூறிக் கொள்வதைத் தாய்மார்கள் பெருமையாகக் கருதிய காலம் அது.

பலவிதமான தளவாடங்களைச் சுமந்து செல்லும் வண்டிகளால் படைவீரர்களின் வேகத்திற்கு ஈடுகொடுத்து நடக்க முடியாதாகையினால் கணிசமானதொரு இடைவெளி விட்டு அவர்களைப் பின்தொடர்வது வழக்கம். அதனால் தான் வண்டிகளுக்குப் பிரத்யேக பாதுகாவல் தேவைப் பட்டது.

சோழப்படைகள் மதுரை மைதானத்தை அடைந்து தண்டூன்றி முடித்து இரவுச் சமையலையும் துவக்கிவிட்ட

பிறகுதான் தளவாட வண்டிகளால் மதுரையின் எல்லையையே நெருங்க முடிந்தது. அதனால் படைகளின் களியாட்டங்களில் அவர்களால் பங்குகொள்ள இயல வில்லை. பயணக்களைப்பு அதிகமாக இருந்ததனால் மைதானத்தையொட்டிய மாந்தோப்பில் தனியே ஓய்வாக இருந்து கொள்வதென்று தீர்மானித்தார் வைத்தியர். அவரது ஆணையின்படி அனைத்து புரவிகளும் வண்டியிலிருந்து கழற்றி விடப்பட்டு நீரும் கொள்ளும் காட்டப்பட்டன.

சமையல் வேலைகளைக் கவனிப்பதற்காகச் சிலர் தனியே பிரிந்து சென்றார்கள். வேறு சிலர் கூடாரங்கள் அமைக்கும் பணியில் ஈடுபடலானார்கள். இப்பணிகள் ஒன்றிலும் பங்கு பெறாமல் விட்டால் போதுமென்று ஒதுங்கி நிற்கும் வண்டிகளுக்குள் தமது எண் சாண் உடலைப் பொட்டலமாக மடித்து உறக்கத்தில் ஆழத் தலைப்பட்டவர்களும் உண்டு. இன்று இரவே நன்கு உறங்கி ஓய்வெடுத்துக் கொண்டால்தான் ஆயிற்று. நாளை இரவு எங்கே எந்த நிலையில் தங்க வேண்டி வருமோ.. யார் கண்டது?

பெருமருத்துவருக்கே வழக்கத்தை விடப் பிரயாணக் களைப்பு மிகுதியாகத்தான் தோன்றியது. குறிப்பாகக் கொடும்பாளூரிலிருந்து மதுரைக்கு வரும் வழி பல இடங்களில் குண்டுங்குழியுமாகக் காணப்பட்டதால் உடலை ஒரு பிரட்டு பிரட்டியெடுத்து விட்டது. விரைவில் இரவு உணவை முடித்துக் கொண்டு கட்டையைச் சாய்ப்பதுதான் நல்லது. இந்த நினைப்புடன் உணவு தயாரிப்பு வேலைகளை மேம்போக்காகப் பார்வையிட்டவர், மெல்ல நடந்து வண்டிகளுள் கடைசியாக நிறுத்தப்பட்டிருந்த பெரியதோர் ஊர்தியை அடைந்தார்.

முதற்பார்வைக்கு அவ்வூர்தி மற்ற தளவாட வண்டிகளைப்போல் தோன்றினாலும் அதன் நீள அகலங்களை ஊன்றி நோக்கும்போது அது மற்றவற்றை விடப் பெரியது என்பது புலனாகும். அதன் அளவுக்கேற்றவாறு சக்கரங்களும் பெரிதாகவே அமைக்கப் பட்டிருந்தன. அத்தனை பெரிய வண்டி நகராமலிருக்கும் பொருட்டு நாற்புறங்களிலும் வண்டிக்கால்கள் ஊன்றப் பட்டுச் சக்கரங்களின் கீழ் கருங்கற்களும் முட்டுக்கொடுக்கப் பட்டிருந்தன.

சுற்றுமுற்றும் பார்வையை நிதானமாகப் படரவிட்ட மருத்துவர் இருள்சூழத் தொடங்கிவிட்டதால் கையிலிருந்த சிறு தீபத்தைப் பற்றவைத்துக்கொண்டு வண்டியின் பின்பக்கத்தில் அமைந்திருந்த படிகளின் வழி மெல்ல மேலேறலானார். மறைப்புக்காகப் பின்தொங்கிக் கொண்டிருந்த மூங்கில் தட்டிகளை அவரது கரங்கள் விலக்கிப் பார்க்க, உள்ளே ஏராளமான சாமான்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. தீபத்தை ஒரு கையால் ஏந்தியபடி அவற்றின் நடுவே எச்சரிக்கையுடன் கால்வைத்து நடந்தவர் வண்டியின் நடுப்பகுதியை அடைந்து அங்கே தொங்கிக் கொண்டிருந்த அடுத்த மூங்கில் தடுப்பை விலக்க...

ஆச்சரியம்! வண்டியின் முன்பகுதி ஒரு சிறு அறையாகவே காட்சியளித்தது. அவ்வறையின் நடுவே அமைந்திருந்த மஞ்சத்தில் ஐங்கரன் தலையில் பெரியதொரு கட்டுடன் கிடத்தப்பட்டிருந்தான். அவன் நாசியிலிருந்து ஹூம்.. ஹூம்.. எனும் வேதனை முனகல்கள் அவ்வப்போது எழுந்த வண்ணம் இருந்தன. மஞ்சத்தினருகே வைத்தியரின் உதவியாளனைப் போன்று காணப்பட்ட ஒருவன் பனை விசிறியினால் மெல்ல விசிறிக் கொண்டிருந்தான்.

"என்ன கங்காளா! முனகல்களைத்தவிர ஏதேனும் முன்னேற்றங்களுண்டா?" என்று வினவினார் பெரியவர் மிக மெல்லிய குரலில்.

"ஒரே ஒரு முறை இமை திறந்து மலங்க மலங்க விழித்தார். வாய் ஏதோ குழறியது. மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்..."

"நல்லது. ஒருவழியாக அந்த உஜ்ஜயினத்துப் பசுந்தளிர் மூலிகைக் குளிகை நான் எதிர்பார்த்தது போலவே செயல்படத் துவங்கிவிட்டது. இனி மெல்ல மெல்ல இவருக்குச் சுயநினைவு திரும்பும். மடங்கும். மீண்டும் திரும்பும். கங்காளா! நீ எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். இவர் வாய் திறந்து எதையாவது கேட்டால் பதில் பேசாதே. உடனடியாக என்னைக் கூப்பிடு. என்ன.. புரிந்ததா? இவர் அரசாங்கத்தின் அந்தரங்கப் பணியாளர். சேனாபதி இராஜராஜ மாராயரின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளவர். இந்த விவகாரத்தில் எந்தத் தவறும் நேர்ந்து விடக்கூடாது என்பதால்தான் எனது நம்பிக்கைக்குரியவனான உன்னைப் பணியிலமர்த்தியிருக்கிறேன். எச்சரிக்கையுடன் நடந்து கொள்!"

உறுதியான குரலில் கங்காளன் என்றழைக்கப்பட்ட தனது உதவியாளனை எச்சரித்துவிட்டு வண்டியிலிருந்து இறங்கியவர், சுருக்கமான முறியொன்றில் ஐங்கரனின் நிலைமை சீரடைந்து வருவதை எழுதி ஒரு சேவகன் மூலம் மாராயருக்கு அனுப்பி வைத்தார்.

* * * * * * * *

ஐங்கரனுக்குச் சில நாட்களாகவே பிரக்ஞை எனும் உணர்வு மாறி மாறி எழுந்து அடங்கி அவனை இடைவிடாத அவஸ்தையில் ஆழ்த்தியது. தான் யார் என்பதைப் பற்றியும் எங்கே இருக்கிறோம் என்பதைப் பற்றியும் தன்னைச் சுற்றிலும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் பலப்பல கேள்விகள் அவனது மனதில் எழுந்தவண்ணமிருந்தன. ஆனால் வாயைத் திறந்து அவற்றைக் கேட்க முடியவில்லை. அவ்வளவு ஏன்? பல சமயங்களில் இமைகளைக்கூடத் திறக்க முடியவில்லை. அப்படியொரு பாழும் மயக்கம்.

அவனது தலையில் ஏற்பட்டிருந்த பலத்த காயம் இடம், பொருள், ஏவல், காலம் போன்ற அடிப்படைப் புரிந்துணர்வுகளைச் சிதைத்து அந்தரத்தில் பொட்டல் வெளியில் பிரபஞ்சத்தின் இருளுக்கும் ஒளிக்கும் மத்தியில் ஒன்றும் புரியாத மயக்க இருளில் அவனைப் புதைத்து விட்டிருந்தது. அடையாளம் தெரியாத அந்த இருளோகத்திலிருந்து நனவுலகிற்குத் திரும்பும் அரிதான கணங்களில் ஏதோ அந்தரத்தில் கனவில் தோன்றுவதைப் போல் சம்மந்தமில்லாத பல காட்சிகள் தோன்றி அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தின.

அதோ! வானுக்கும் பூமிக்குமாய் விசுவரூபமெடுக்கும் ஜடாமகுட பைராகியின் பயங்கர உருவம்.. அதன் கையில் காணப்படும் அகலமான பெருவாள்...

"கொல்! கொல்! அவனேதான். ஒரே வெட்டு!" - பின்னணியில் ஆங்காரமாய் ஒலிக்கும் அந்தக் குரல் பலதேவனுடைது அல்லவா???

அதோ! பைராகியின் கை உயர்ந்துவிட்டது.. இன்னும் ஒரே நொடியில்..

பயத்தில் வியர்வை சொட்டச் சட்டென்று கண்விழிக்க, மண்டைக்குள் சுரீர்.. சுரீர்.. என்று அவ்வப்போது எழும்

தீவிரமான வலி. ஒரு கூரான சிறு கத்தியை எவரோ எடுத்து மண்டையைச் சுற்றிலும் கிழித்துக் கோடு போடுவதைப் போல் அப்படியொரு நரக வேதனை!

சற்று பொறு. எங்கே இருக்கிறோம்? என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஒரே இருள் மண்டிக் கிடக்கிறதே? என்ன இடம் இது? நாவு ஏகத்துக்கு உலர்ந்து கிடக்கிறது. எவராவது சிறிதளவு பாலோ நீரோ கொடுத்தால் எத்தனை நன்றாக இருக்கும்?

ஐங்கரனின் மெல்லிய அங்க அசைவுகளைக் கவனித்து விட்ட கங்காளன், வைத்தியர் வைத்துவிட்டுப் போன விளக்கின் உதவியுடன் மருந்து தயாரித்துப் புகட்ட... மீண்டும் அவனை அந்தகாரம் வாஞ்சையுடன் சூழ்ந்து கொண்டது. அவனது பரபரத்த கண்கள் மீண்டும் சோர்வுடன் மூடிக் கொள்வதைக் கண்டு பெருமூச்செறிந்தான் கங்காளன்.

* * * * * * * *

ஐங்கரன் சோர்வுடன் கண்களை மூடிக்கொண்ட அதே நேரத்தில் பைராகியின் நம்பிக்கைக்குரிய கையாளான பலதேவன் இருளில் சுற்றும் முற்றும் பார்த்தபடி புரவிகள் பலவற்றைக் கடந்து முன்னேறிக் கொண்டிருந்தான். அவன் மனம் எல்லையில்லாத பரபரப்பிலிருப்பதை அவனது அங்க அசைவுகள் தெளிவாக எடுத்துக் காட்டின. வேகவேகமாக முன்னேறியவன் மைதானத்தின் வடமேற்கு மூலையில் பேரரசரும் மற்ற உயர் அதிகாரிகளும் பயணம் செய்யும் பிரத்யேக இரதங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பகுதியை அடைந்தான். அந்த இரதங்களில் வழக்கமாகப் பூட்டப்படும் இராஜபோகப் புரவிகளும் தனியாகக் கட்டிவைக்கப் பட்டிருந்தன. அவற்றுக்கு காவல் நின்ற வீரனொருவன் நீரும் கொள்ளும் காட்டிக்கொண்டிருந்தான்.

சந்தடி செய்யாமல் இரதங்களை அணுகிய பலதேவன் ஒவ்வொரு இரதத்தின் நிழலிலும் ஒண்டியபடி தாவித்தாவிச் சென்று இரதங்களுள் இறுதியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேரரசரின் இரதத்தை அடைந்தான். அந்த இரதத்தை அவன் அணுகும்போது கண நேரம் அவன் மீது நிலா வெளிச்சம் படிந்ததில் அந்த இரதத்தினருகே கட்டி வைக்கப்பட்டிருந்த வெண்புரவியொன்று அவனைக் கவனித்துவிட்டது. மிருகங்களுக்கே உரிய உள்ளுணர்வால் அவன் நல்ல நோக்கத்தில் வரவில்லை என்பதை அறிந்து கொண்ட அந்தப் பிராணி, மிகுந்த சங்கடத்துடன்

'பிளீ..ஹிஹி..' என்று கால் மாறி மாறி நின்று பல முறை கனைத்தது. பலதேவன் மெய்நடுங்க சட்டென்று இரதத்தின் கீழ் படுத்துக் கொண்டு விட்டான்.

புரவியின் இந்தத் திடீர்க் கனைப்பு நீர் காட்டிக் கொண்டிருந்த காவல் வீரனின் கவனத்தைக் கலைத்தது. அடடா... பேரரசரின் பிரியத்திற்குரிய பஞ்ச லட்ஷணப் புரவியல்லவா கனைக்கிறது? என்ன நேர்ந்து விட்டது அதற்கு? பூச்சி பொட்டு ஏதாவது அண்டுகிறதா என்ன? உடனடியாக நாலே எட்டில் புரவி கட்டப்பட்டிருந்த இடத்தை அடைந்தவன் அடர்ந்து படர்ந்திருந்த இருளைக் கிழித்துக் கொண்டு பார்ப்பவன் போல் சுற்றுமுற்றும் நோக்கினான். சந்தேகத்திற்குரியதாக எதுவும் தென்பட வில்லை. புரவியோ விடாமல் சங்கடத்துடன் கனைத்துக் கொண்டேயிருந்தது.

அதனை ஆதூரத்துடன் பலமுறை தடவி விட்ட வீரன் "அடடா! என்ன இம்சை ஏற்பட்டுவிட்டது உனக்கு? எதற்காக இப்படிக் கனைத்துக் கொண்டிருக்கிறாய்? மிகவும் புத்திசாலியாயிற்றே நீ? காரணமின்றி இப்படியெல்லாம் நடந்துகொள்ள மாட்டாயே?" என்று கரிசனத்துடன் விசாரித்தான். அவனுடைய அண்மை புரவியைச் சற்று சாந்தப்படுத்தியது எனலாம். என்றாலும் அதன் நடுக்கம் சிறிதும் குறையவில்லை.

"சரி.. சரி. எதையோ பார்த்து பயந்து விட்டாய் போலிருக்கிறது. அதுதான் நான் வந்துவிட்டேனே? வா! என்னுடன் வா. காலாறச் சற்று நடந்து போய்விட்டு வருவோம்..." என்றபடி புரவியைக் கடிவாளத்திலிருந்து பிரித்துத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போனான்.

இரதத்தின் கீழ் படுத்திருந்த பலதேவனுக்குப் போன உயிர் திரும்ப வந்தது போல் இருந்தது. சனியன்! கொஞ்சம் ஏமாந்திருந்தால் நம்மையே காட்டிக் கொடுத்திருக்கும் போலிருக்கிறதே? ஏய்! உன்னைப்போல் எத்தனை திருட்டுக் கழுதைகளை இந்தப் பத்து வருடப் பணியில் பார்த்திருக்கிறேன்? சோழனின் அபிமானத்திற்குரிய புரவியாக இருக்கிறோம் என்கிற திமிரா? இரு இரு. தக்க சமயத்தில் நீரில் விஷத்தைக் கலந்து கொடுத்து உன்னைப் பரலோகத்திற்குப் பத்திரமாக அனுப்பி வைக்கவில்லையேல் என் பெயர் பலதேவன் இல்லை! என்றெல்லாம் கருவியவன் அவசர அவசரமாக வந்த காரியத்தைக் கவனிக்கலானான்.

20. பாண்டியர் வியூகம்



ஆரைவாய்மொழிக் கோட்டையின் பகவதியம்மன் பெருவாயிலுக்கு நேர் மேலே அமைந்திருந்த காவல் அரண் ஒன்றில் உச்சக்கட்டப் பரபரப்பில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார் விக்கிரமாதித்ய வரகுணர். அவரது முகத்தில் தீவிரமான சிந்தனைகள் படிந்திருந்தன.

சோழ தேசத்திலிருந்து மிக முக்கியமான செய்தியொன்றினைக் கடந்த பல நாட்களாக எதிர்பார்த்து எதிர்பார்த்து அவர் மனம் பொறுமையிழந்து போயிருந்தது. "இருக்கட்டும், இருக்கட்டும். இந்தப் போர் மட்டும் நான் நினைப்பதைப் போல ஒரு முடிவுக்கு வரட்டும். அப்புறம் இவர்களையெல்லாம் கவனித்துக் கொள்கிறேன்.." என்று தனக்கு மட்டும் கேட்கும் குரலில் கறுவிக் கொண்டிருந்தார் அவர். எரிகிற நெருப்பில் எண்ணையூற்ற வந்தவர்போல் சிறிது நேரத்திலேயே அங்கு வந்து சேர்ந்தார் வள்ளுவனார்.

"சோழப்படைகள் நேற்றிரவு மதுராபுரியைத் தாண்டி விட்டனவாம். இதே வேகத்தில் தொடர்ந்து வந்தார்களானால் இன்றிலிருந்து நான்காம் நாள் ஆரைவாய் மொழி எல்லையைப் பிடித்து விடுவார்களென்று ஒற்றர்கள் தெரிவிக்கிறார்கள். அதனால்தான் அதிகாலையிலிருந்து இந்தக் கணம்வரை ஒரு நொடி கூட ஓய்வெடுக்காமல் கோட்டையின் அனைத்துக் காவல் அரண்களையும் நானே நேரில் பார்வையிட்டு வருகிறேன். நீங்கள் கூட கவனித்திருப்பீர்களே?"

"ஆமாம்... ஆமாம். கவனித்தேன்.." என்றார் வரகுணர் சுருக்கமாக. நான் இந்த வயதில் போர் ஏற்பாடுகளைப் பரபரப்பாகக் கவனித்துக் கொண்டிருக்க, நீயோ இருந்த இடத்தில் இருந்தபடி அங்குமிங்கும் உலாத்திக் கொண்டிருக்கிறாய்! என்று நாடாழ்வார் சொல்லாமல் சொல்வது அவருக்குப் புரிந்துதானிருந்தது. இருந்தாலும் தமது கோபத்தைக் காண்பிக்க இது தருணமல்ல என்பதை அவர் உணர்ந்திருந்தார். கோட்டை வீரர்களுள் கணிசமான பகுதியினர் இன்னமும் இவருக்குத்தான் விசுவாசமாக இருக்கிறார்கள். போர் முடிந்ததும் முதல் வேலையாக

அவர்களை நம் பக்கம் இழுத்தாக வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்தக் கிழவன் மேல் கைவைக்க முடியும். இருக்கட்டும்.. இருக்கட்டும்...

"பாண்டியர் நமது ஓலைக்குப் பதில் அனுப்பி விட்டார். சோழப் படைகள் ஆரைவாய்மொழிக் கோட்டையைத் தாக்கி வலுவிழந்து கிடக்கும் சமயத்தில் பாண்டிப் படைகள் மறு பக்கத்திலிருந்து அவர்களைத் தாக்கும். இரண்டு மத்தகங்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்ட சோழப்படை சின்னா பின்னமாகும்!"

"சுந்தரபாண்டியபுரத்திலிருந்து எப்போது பாண்டியர் கிளம்ப உத்தேசித்திருக்கிறார்?"

"சோழர்படை தென்பாண்டி நாட்டில் கால் பதித்த மறு கணமே அவர்கள் கிளம்பிவிடுவார்கள். குளத்துப்புழை அகத்தியமலைக் காடுகளையொட்டி இரகசியமாகப் பயணப்பட்டு நடந்து மகேந்திரகிரிக்குப்[23] பின்புறம் தண்டூன்றி நிற்பார்கள். சோழப்படைகள் நமது கோட்டையைத் தாக்க வரும் சமயத்தில் சீறிவரும் சிங்கங்களெனப் புறப்பட்டு வந்து பின்புறமாகத் தாக்குவார்கள்."

"பாண்டிப் படைகளிடம் அதிக அளவில் புரவிகளோ யானைகளோ இல்லையென்று கேள்வி."

"ஆமாம். யானை புரவியெல்லாம் கொண்டுவந்தால் இரகசியமாகக் காடுகளின் வழி பயணப்படுவதும் மகேந்திரகிரி மலையில் ஒளிந்திருப்பதும் நடவாதல்லவா? அதனால்தான் வில் வீரர்கள் மற்றும் வாள் வீரர்களுடன் மட்டும் வருவதாகத் தேவர் தெரிவித்துள்ளார்."

"சோழர்களின் நூற்றுக்கணக்கான யானைகளை அவர்களால் சமாளிக்க முடியுமா?"

"உடம்பில் அடிபடாதவரைதான் யானை அடங்கி நடக்கும். கோட்டையிலிருந்து நாம் பொழியும் அம்புமழை அதன் உடலில் தைத்துவிட்டால் வேதனையில் அவை தம் படைவீரர்களையே மிதித்துத் துவைக்கத் தலைப்பட்டு விடும்."

---

[23] ஆரைவாய்மொழிக்கு வடக்கே அமைந்துள்ள மலைத்தொடர்.

"நாடுவாழியாரே! சோழனுடைய போர் ஒன்றையாவது நேரில் நின்று கவனித்திருக்கிறீர்களா?" சட்டென்று சம்மந்தமில்லாமல் விக்கிரமரிடமிருந்து புறப்பட்ட அந்தக் கேள்வி வள்ளுவனாரைத் துணுக்குற வைத்தது.

"இல்லை."

"நான் கவனித்திருக்கிறேன். சோழவீரனோடு வீரனாக நின்று சளுக்கனுடன் சமர் செய்திருக்கிறேன். அந்த அனுபவத்தில் சொல்கிறேன். அவனைக் குறைத்து மதிப்பிடுதல் பெருந்தவறு!"

"நான் செய்துள்ள கோட்டைப் பாதுகாவல் ஏற்பாடுகள் அனைத்திற்கும் மேலாக வேறு என்னதான் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்??" - தவிர்க்க முடியாமல் வள்ளுவனாரின் குரலில் எரிச்சல் தலை காட்டியது.

"பரபரவென்று அங்குமிங்கும் அலைவதை விடுத்து மனதை ஒருமுகப்படுத்திச் சிந்திக்க வேண்டும். கண்ணில் புலப்படும் காட்சிகளை மீறி நாம் கவனிக்கத்தவறும் விஷயம் ஏதாவது இருக்கிறதா? நாம் யோசிப்பதற்கு நேர் மாறாகக் காரியங்கள் நடப்பதற்கான சாத்தியங்கள் - மாற்று வழிகள் உள்ளனவா? என்றெல்லாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்."

வள்ளுவனார் பதில் பேசாமல் அவரை முறைத்துக் கொண்டிருக்க, வரகுணர் கவலையின்றித் தொடர்ந்தார்.

"அதைத்தான் காலை முதல் இந்தக் கணம் வரை நான் செய்து கொண்டிருந்தேன்."

நாடாழ்வாரின் முகத்தில் ஈயாடவில்லை.

* * * * * * * *

தாமிரவருணி ஆற்றங்கரையில் பாண்டிப் படைகள் புறப்படுவதற்குத் தயாராக அணிவகுத்து நின்றன. அரையன் மானாபரணரிடமிருந்து ஒரேயொரு சமிக்ஞை - ஒரே ஒரு கண் ஜாடை வரவேண்டியதுதான். அடுத்த நொடியே அவை புறப்பட்டுவிடும்.

படைகள் நிற்குமிடத்திலிருந்து சிறிது தூரம் விலகி நின்று அவர்களைக் கவனித்துக்கொண்டிருந்த பாண்டிய

இளவலின் கண்களில் ஆச்சரியம் மிச்சமிருந்தது. அவருக்கு அருகில் நின்றிருந்த பாண்டித்தேவர் அமரபுஜங்கர் அமைதி பொங்கும் முகத்துடன் காணப்பட்டார்.

"திடீரென்று இன்றே படைகளைக் கிளம்பச் சொல்வீர்களேன்று நான் எதிர்பார்க்கவேயில்லை சிற்றப்பா! வள்ளுவனாருக்கு ஓலையனுப்பும்போதுகூட நீங்கள் அதில் வேறுமாதிரியாக அல்லவா எழுதியிருந்தீர்கள்?"

"ஒரு அரசன் தன்னைச்சுற்றி இருப்பவர்கள் அனைவரின் நடவடிக்கைகளையும் யூகிக்கலாமேயன்றி அவனது நடவடிக்கைகள் என்ன என்பதை ஒருவரும் யூகிக்கவே கூடாது. அப்படி அடுத்தவர்கள் யூகிப்பதற்கு அவன் ஒருபோதும் இடம் கொடவே கூடாது. இவன் என்ன செய்யப்போகிறானோ? எவ்வாறு செயல்படப் போகிறானோ? என்று எதிராளி கடைசி வரை யோசித்த படியே இருக்கவேண்டும். அந்த நிச்சயமற்ற தன்மையே நமது பலம்."

"ஆனால் வள்ளுவனார் எதிராளியல்லவே?"

"இல்லைதான். ஆனால் அவர் பாண்டியருமல்ல என்பதைக் கவனத்தில் கொள். சந்தர்ப்பம் அமைந்தால் இன்று சோழராதிக்கத்தை எந்த அளவிற்கு வெறுக்கிறாரோ அதே முனைப்புடன் நாளை நமது ஆதிக்கத்தையும் எதிர்ப்பார். இந்தப் போரில் அவர் நம்மை ஊக்குவிப்பதற்கான ஒரே காரணம் இதனால் தமக்கு ஏதேனும் ஆதாயம் கிட்டும் என்பதால்தான்."

"பின் நாம் ஏன் அவரது வலைக்குள் சென்று விழ வேண்டும்? பேசாமல் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கலாமே?"

"அது நடவாது. நாளை இந்த மண்ணில் சோழன் காலூன்றி விட்டானெனில் பல காலங்களுக்கு நம்மால் தலையெடுக்க இயலாது. அதனால் அவனை எதிர்த்தே ஆகவேண்டிய கட்டாயம் நமக்கு. மேலும் பாண்டி நாட்டுப் படை என்று ஒன்று உயிரோடு - ஜீவனோடு - மானத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்க இது ஒன்றுதான் வழி. இப்போரில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றோமானால் பாண்டி மக்களின் உற்சாகமும் நம்பிக்கையும் பெரிதும் குறையும். பாண்டியர் படைகளைக் கலைத்து ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டுக் காட்டில்

சுகபோக ஜீவனம் நடத்துகிறார் என்று பேச்சு எழுந்தாலும் ஆச்சரியமில்லை."

"ஆனால் ஆதாயமே இல்லாத போரில் கலந்துகொண்டு உதிரத்தைச் சிந்துவதிலும் பயனில்லையே?"

"உண்மை. அதனால்தான் நமது பக்கத்திலிருந்து உயிர்ச் சேதம் அதிகம் இருக்கக்கூடாது என்பதில் நான் உறுதியாக நிற்கிறேன்."

"அது எப்படிச் சிற்றப்பா சாத்தியமாகும்? நமது ஒப்பந்தப்படி வள்ளுவ நாட்டுப் படைகள் கோட்டை அரணுக்கு உள்பக்கம் நின்று பாதுகாவலுடன் சண்டையிடப் போகின்றன. நாமோ அரணுக்கு வெளியில் சோழர்களுடன் நேருக்கு நேராக நின்று மோதப் போகிறோம். யானையும் குதிரைகளும் நம்மைத்தான் முதலில் பந்தாடப் போகின்றன!"

"ம்ஹூம். நீ ஒட்டுமொத்த விவகாரத்தையும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். வள்ளுவனாருடனான நமது ஒப்பந்தம் என்னவெனில் சோழர் படைகள் ஆரைவாய் மொழிக் கோட்டையைத் தாக்க முற்பட்டுச் சோர்ந்து வலுவிழந்து கிடக்கும் நிலையில் மறுபக்கத்திலிருந்து தாக்க வேண்டும் என்பதுதான். கோட்டை தாக்கப்படுவதற்கு முன்பாக எவ்வாறேனும் நாம் மறைந்துள்ளதைச் சோழர்கள் கண்டறிந்துவிட்டால் உடனடியாக மகேந்திரகிரிக் காடுகளுக்குள் நாம் பின்வாங்கத் துவங்கி விடுவோம்."

"கோட்டையை விட்டுவிட்டுச் சோழர்கள் நம்மைப் பின்தொடர்ந்து தாக்க முற்பட்டுவிட்டால்?"

"ம்... நான் கூறப்போவதைப் பரம இரகசியமாக வைத்துக்கொள். வள்ளுவனாருக்குக் கூடத் தெரியாத ஏற்பாடு இது. சோழர்கள் ஒருவேளை காட்டில் கால்பதித்து விட்டால் நூற்றுக்கணக்கான இரகசியப் பொறிகள் அவர்களைத் தாக்கும். புதைகுழிகள் யானைகளையும் புரவிகளையும் காவு கொள்ளும். புதர்களிலிருந்தும் செடி கொடிகளிலிருந்தும் அம்பு மழை பொழியும். அவர்கள் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை."

ஆச்சரியத்தில் இளவலின் வாய் பிளந்தது. "இந்த ஏற்பாடுகளையெல்லாம் எப்போது செய்தீர்கள்?"

"அவற்றை நான் செய்யவில்லை மாறா. மகேந்திர கிரியின் பழங்குடி மக்கள் செய்து வைத்திருக்கிறார்கள். தீவிர சாக்த உபாசகர்களான அக்குடியினர் பாண்டிய இராஜ வம்சத்தின் ஒரு கிளையினர் ஆவார்கள். முன்னொரு காலத்தில் நமது பாண்டி இளவரசனொருவன் தங்கள் குலப்பெண்ணைக் காப்பாற்றித் திருமணம் செய்து கொண்டதற்குப் பிரதிபலனாக இன்றுவரை நமக்கு அவர்கள் விசுவாசமாக இருந்து வருகிறார்கள். நமது வீரர்கள் அம்பு முனைகளில் தடவிக்கொள்ளும் மூலிகை விஷம் அவர்கள் இரகசியமாக அனுப்பி வைப்பதுதான். இரண்டு மூன்று நாட்கள் முன்னதாகச் சென்று அந்தப் பகுதியை நாம் நன்றாக அறிந்துகொண்டால்தான் முட்பொறிகளிலிருந்து நாமே தப்பிக்க முடியும்! அதனால்தான் இன்றைய அவசரப் புறப்பாடு."

"வள்ளுவனாருக்கு இந்தப் பழங்குடிகள் பற்றித் தெரியாதா?"

"தெரியும். ஆனால் அவர்களை நாகரீகமற்ற பழங்காலக் கும்பலாக அவர் நினைக்கிறார். அவர்களது பாண்டி நாட்டு விசுவாசம் பரம இரகசியமான ஒன்று. பாண்டிய இராஜகுலத்தவரைத் தவிரப் பிறர் அறியாதது."

"காலை உள்ளே வைத்தால் இழுத்துக் கொண்டே செல்லும் புதைகுழியைப் போல இந்தப் போரின் பின்புலத்தில் எத்தனையெத்தனை அபூர்வ இரகசியங்கள்?"

"இரகசியம் நமது பக்கத்தில்தான் என்றில்லை. சோழர் பக்கத்திலும் அது அளவிற்கதிகமாகவே உள்ளது."

"என்ன சொல்கிறீர்கள்?"

"சோழப்படைகளைத் தற்போது வழிநடத்தி வருவது இராஜராஜ மாராயன். நான் அந்தப் பொறுப்பு படை நடத்திச் செல்வதில் பழுத்த அனுபவம் வாய்ந்த பல்லவராயரிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர் பார்த்தேன்."

"அதுதான் பல்லவராயருக்குச் சிறிது நாட்களாக உடல்நிலை சரியில்லையென்று செய்திகள் வந்தனவே?"

"அதனை நம்மால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லையே?"

"அதனாலென்ன?"

"அதனாலென்ன? ஒன்றுமில்லைதான். என்றாலும் பல்லவராயருக்கு உடம்பு முடியவில்லை என்பதைத்தான் நம்ப முடியவில்லை."

"பேசாமல் ஆரைவாய்மொழியை விட்டுவிட்டுக் காவல் குறைவாக இருக்கும் தஞ்சாபுரிக்குப் படையெடுத்துச் சென்றால் என்ன?" - புன்னகையுடன் வினவினார் இளவல்.

"தலைநகருக்குத்தான் அந்த அமண்குடியான் கிருஷ்ணன் இராமன் காவலாக நிற்கிறானாமே? அந்த காசிப்பண்டிதனிடம் சொல்லம்பு பட்டுச் சாவதைவிட ஆரல்வாய்மொழிக் களத்தில் வில்லம்பு தைத்துச் சாவது சிறந்ததல்லவா?"

பாண்டியர் ஒரு கணம் தன் மார்பில் அம்பு தைப்பதையும் அடுத்த கணம் தலை சாய்வதையும் அபிநயித்துக் காட்டினார். கொல்லென்று அந்த இடத்திலிருந்து சிரிப்பு புறப்படவும் தூசிபறக்கப் பாண்டிப் படைகள் தாமிரவருணி ஆற்றங்கரையிலிருந்து கிளம்புவதற்கும் சரியாக இருந்தது.

* * * * * * * *

மாராயர் திட்டமிட்டபடியே மறுநாள் இருள் பிரியாத அதிகாலை வேளையில் சோழப்படைகள் உற்சாகமாக ஆலவாயன் நகரான மதுரையம்பதியை விட்டு கிளம்பி விட்டன. முதலில் தரைப்படை மற்றும் தூசிப்படை, பின்னர் கைக்கோளப்படைகள், இடையில் பேரரசர் முதலிய முக்கியஸ்தர்களின் இரதங்கள், அதற்குப்பின் புரவிப்படை மற்றும் ஆனையாட்கள் படை என்கிற முறைமையில் படைகள் வரிசையாக அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தன.

பேரரசரின் இரதத்தைச் சுற்றிக் கட்டுக்காவல் அதிகமாக இருந்ததனால் அதனை ஒருவரும் கூர்மையாகக் கவனிக்க வில்லை. அப்படிக் கவனித்திருந்தால் அந்த இரதத்தில் சாரதி மட்டுமே அமர்ந்திருக்கிறான் என்னும் உண்மை அந்த இருளிலும் புலனாகியிருக்கும். உண்மையில் அருள்மொழி வர்மர் இரதங்களின் பின்புறம் கைக்கோள வீரர்களில் ஒருவராக அவர்களையொத்த ஆயுதம் தரித்து ஆரவாரமின்றித் தமது புரவியில் வந்து கொண்டிருந்தார். படைகள் கிளம்புமுன் அதிகாலை வேளையில்

மைதானத்தில் ஏற்பட்ட சிறு குழப்பம்தான் அதற்குக் காரணம்.

அரசரின் இரதத்தில் பூட்டப்படுவதற்காகக் கொண்டு வரப்பட்ட நான்கு ஜாதிப்புரவிகளில் ஒன்று ஏனோ இரதத்தில் பூட்டப்படுவதை பலவந்தமாக மறுத்தலித்து விட்டது. வழக்கமாக உற்சாகத்துடன் மிகுந்த ஒத்துழைப்பை நல்கும் அந்தப் பிராணி அன்று வித்தியாசமாக நடந்து கொள்வதைப் பேரரசர் வியப்புடன் கவனித்தார். புரவியை அதிகம் வற்புறுத்த வேண்டாமென்று ஆணையிட்டு விட்டுப் புரவியிலேறிக் கணத்தில் வீரரோடு வீரராகக் கலந்து விட்டார்.

இதனால் மாராயருக்குத்தான் பெரிய சங்கடமாகி விட்டது. வழக்கமாக அருள்மொழிவர்மருடன் உற்சாகமாகப் பேசியபடி பேரரசரின் இரதத்தில் பயணப்படுபவர், அன்று தனியாகத் தமது இரதத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டியதாகிவிட்டது. ஹ்ஹ்ம்.. எல்லாம் விதி.. என்று நொந்து போயிருந்தவர், தற்செயலாகத் தமது மெய்ப்பையைச் சோதனை செய்ய முதல் நாளிரவு வைத்தியர் அனுப்பியிருந்த முறி அகப்பட்டது.

அடடா.. நேற்றே வந்த ஓலையாயிற்றே? என்று துணுக்குற்றுப் படித்தவர் ஏக உற்சாகத்தை அடைந்தார். என்ன? ஐங்கரனுக்கு நினைவு திரும்பிக்கொண்டிருக்கிறதா? அப்படியானால்.. அந்தத் தானைத்தலைவர் இரகசியம் ஒரு வழியாகத் தெரியப் போகிறதா?

தானைத் தலைவர் ஒரு...

தானைத் தலைவர் ஒரு...

என்ன ஒரு????

"பொறு மாராயா. பொறு. திரை விலகும் நேரம் நெருங்கி விட்டது. அதோ! கிழக்கு இன்னும் ஓரிரு நாழிகைகளில் விடியப் போகிறது" என்று தனக்குத்தானே மொழிந்து கொண்டார் அவர்.

21. துருப்புச் சீட்டு



பலபலவென்று கிழக்கு விடியத் துவங்கிய வேளையில் மதுரையம்பதியைத் தாண்டிக் தெற்கே செல்லும் இராஜபாட்டையில் கணிசமான தூரத்தைக் கடந்திருந்தது சோழர்படை. இன்னும் ஓரிரு நாழிகைகளுக்குள் ஏதாவது சிற்றூர் கண்ணுக்குத் தட்டுப்பட்டால் அங்கே சிறிது நேரம் தங்கி இளைபாறிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தார் மாராயர்.

ஆனால் சோதனையாக அவர்கள் சென்ற வழியில் நீண்ட நேரத்திற்கு எந்தச் சிற்றூரும் கண்ணுக்குத் தட்டுப் படவேயில்லை. சோழர் படை வரப்போகிறது என்பது தெரிந்தவுடன் பாண்டி நாட்டுக் கிராமங்களும் சிற்றூர்களும் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டு விட்டனவா என்ன? இனியும் தாமதிப்பதற்கில்லை. ஊர் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி. படைகளை நிறுத்தி இளைப்பாறிக் கொள்ள வேண்டியதுதான் என்று அவர் பொறுமையிழந்து முடிவு செய்துவிட்ட நேரத்தில் நல்லவேளையாக ஊரகப் பகுதியொன்றும் அதனையொட்டி ஓடும் சிறு வாய்க்காலும் தட்டுப்பட்டன.

வாய்க்காலின் கரைப் பகுதியை ஒட்டி நின்று சிறிது நேரம் புரவிகளுடன் இளைப்பாறிக் கொள்ளுமாறு படையின் நாயகங்களுக்கு ஆணையிட்ட மாராயர், ஒரு கணம் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்து ஒருவரும் தம்மைக் கவனிக்கவில்லை என்பதை நிச்சயம் செய்து கொண்டார். தமது புரவியை மட்டும் திருப்பிக் கொண்டவர், படைகள் அணிவகுத்து வந்த பாதையிலேயே சிறிது நேரம் பின்னோக்கிச் சென்று இரணவைத்தியர் குழுவின் பிரயாண வண்டிகளை அடைய முற்பட்டார்.

துரதிருஷ்டவசமாகக் கண்ணுக் கெட்டிய தூரம் வரை வைத்தியர் குழுவைக் காணமுடியவில்லை. மாராயர் ஆணை பிறப்பிக்கும்வரை காத்திருக்காமல் இடையிலேயே பாதை யோரமாக வேறொரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அங்கே அவர்கள் நிம்மதியாக இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். வைத்தியர் அடிக்கடித் தமது

பரிவாரத்திற்கு நங்கூரம் பாய்ச்சுபவர் என்கிற உண்மை தெரிந்தவராதால் மாராயர் அதிக வியப்புக்குள்ளாகவில்லை.

அவர்களைத் தேடிக் கொண்டு அதிக தூரம் பின் சென்றோமானால் படைகள் முன் செல்வது மேலும் தாமதப்பட்டுவிடும். அது நல்லதல்ல. ஆகவே நண்பகல் நேரத்தில் எங்காவது படைகளைத் தண்டூன்றி விட்டு அவர்களைப் பிடித்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட வேண்டியதுதான். மாராயா! ஆனாலும் அந்தத் தானைத் தலைவர் விவகாரம் உன்னை ஏகத்துக்கு இழுத்தடிக்கிறது. இருக்கட்டும். இருக்கட்டும். அந்த விவகாரமாயிற்று. நீயாயிற்று. ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்.

இவ்வாறு பெரிதும் சிந்தனை வயப்பட்டு நின்றவர், தமக்கருகில் பேரரசர் சப்தம் செய்யாமல் வந்து நிற்பதைச் சற்று தாமதமாகத்தான் உணர்ந்தார்.

"என்ன.. அதிகாலை வேளையிலேயே பலத்த சிந்தனை போலிருக்கிறது?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை பேரரசே!"

"படைத்தலைவர்களை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி ஆணை பிறப்பிட்டுவிட்டு நீர் மட்டும் விறுவிறுவென்று ஏகப் பரபரப்புடன் புரவியைப் பின்னால் செலுத்திக் கொண்டு செல்வதைக் கண்டேனே? ஏதேனும் விசேஷங்கள் உண்டா?"

தம்மை ஒருவரும் கவனிக்கவில்லையென்று நினைத்தது பெரும் பிசகு என்று நினைத்துக் கொண்டார் மாராயர். இதோ! வழக்கத்திற்கு மாறான எதையும் கவனிக்கத் தவறாத இந்தக் கழுகுக்கண்கள் நமது புரவிப் பாய்ச்சலையும் கவனித்து விட்டன. இதனை மறைக்க மேலும் மேலும் பொய்களை அடுக்கவேண்டி வரும். அது நமக்கு ஒத்து வராது. உண்மையை ஒப்புக்கொண்டு விடுவதே சிலாக்கியமானது.

"அது... நேற்றிரவு.."

"வைத்தியரிடமிருந்து நல்ல தெய்தி ஏதாவது வந்ததாக்கும்?"

"அட! எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

"நேற்றிரவு கூத்து முடியும் தருவாயில் இரணவைத்தியர் குழுவைச் சேர்ந்த பணியாளனொருவன் நீர் இருக்குமிடத்தை விசாரித்துக் கொண்டிருந்தான். அத்தனை நேரம் கழித்து வைத்தியர் செய்தி அனுப்புகிறாரெனில் அது ஐங்கரன் சம்மந்தப்பட்ட விவகாரமாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்தேன்."

"தாங்கள் யூகித்தது முற்றிலும் சரி" என்று சரண்டைந்த மாராயர், ஐங்கரனைச் சந்திப்பதற்காகவே நீண்ட நேரமாகக் காத்திருப்பதைத் தெரிவித்தார்.

"அடடா! அந்தத் தானைத்தலைவர் விவகாரம் தங்களை இன்னுமா பிடித்து வாட்டிக்கொண்டிருக்கிறது? நான்தான் அதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று அப்போதே கூறினேனே?"

இந்த முறை மனம் திறந்து நேரடியாக பேசி விடுவது நல்லது என்கிற முடிவிற்கு வந்தார் மாராயர். அருள்மொழி வர்மருக்கு இந்த விவகாரத்தில் தன்னைவிட அதிகத் தெளிவுள்ளது. அதில் சந்தேகமில்லை. மனதிற்குள் வைத்து மருகிக் கொண்டிருப்பதைவிட உடைத்துப் பேசிவிடுவது நல்லது.

"அரசே! என்னுடைய பத்து வருட ஒற்றர்படை அனுபவத்திற்கே பெரியதொரு சவாலாக அமைந்த விவகாரம் அது. இதுவரை என்னுடைய தலைசிறந்த ஒற்றர்கள் பத்து பேரையாவது அந்த விவகாரத்தில் ஈடுபடுத்தியிருப்பேன். ஆனால் இதுவரை அவர்களால் உருப்படியாக ஒன்றையும் கண்டறிய முடியவில்லை. கிடைத்த ஒரே துப்பு ஐங்கரன் கண்டறிந்ததுதான். ஆனால் அதனையும் அறியவொட்டாமல் ஈசன் சோதித்துக் கொண்டிருக்கிறான். இந்நிலையில் அதனைப்பற்றிக் கவலை கொள்ளாமல் இருப்பது எவ்வாறு?"

"ம்... உமது மனசஞ்சலம் புரிகிறது எனக்கு. ஆகத் தானைத்தலைவர் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் வரை உமக்கு நிம்மதி கிடையாது. அல்லவா?"

பதில் கூறாமல் மௌனமாகத் தலையாட்டினார் மாராயர்.

"சரி. இந்தப் போரில் உமது முழுமையான கவனம் விலகாதிருக்கும் பொருட்டு எனக்குத் தெரிந்த உண்மைகளை உம்முடன் பகிர்ந்து கொள்கிறேன். இப்படி அமருங்கள்.

முதலில் ஐங்கரன் கண்டறிந்த அந்த இரகசியச் செய்தி. சற்றே அருகில் வாருங்கள்..."

அருள்மொழிவர்மரை மாராயர் நெருங்கிவர, அவரது காதில் அந்தப் பரமரகசியம் ஓதப்பட்டது. அடுத்த கணம் மாராயரின் முகம் எல்லையற்ற ஆச்சரியத்தையும் பயங்கரத்தையும் வேறுபல உணர்ச்சிகளையும் ஒருங்கே பிரதிபலித்தது.

"நி.. நி.. நிஜமாகவா பேரரசே? "

மௌனமாகத் திரும்பி மெல்லச் சிரித்தார் அருள்மொழி. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று கூறுவார்கள் தென்னக அரசியலைப் பொறுத்த வரை குறிப்பாகப் பாண்டியர்களைப் பொறுத்த வரை அவரன்றி ஓர் அணுவும் அசையாது என்பதுதான் உண்மை. அவரது செல்வாக்கு அத்தனை வலிமையானது. சொல்லப்போனால் இந்தக் காந்தளூர் விவகாரத்தில் நாமே அவரது மனோ ரதத்தின்படிதானே நடந்து கொண்டிருக்கிறோம்?"

"என்ன? நாம் அவரது மனோரதப்படி நடந்து கொண்டிருக்கிறோமா? என்ன சொல்கிறீர்கள்?"

"ஆம். நடந்து முடிந்த சம்பவங்களைச் சற்றே யோசித்துப் பாருங்கள். அண்ணன் ஆதித்தர் படுகொலையில் நம்மால் உடையார்குடி இரவிநீலி குடும்பத்தாரை நேரடியாகச் சம்மந்தப்படுத்த முடிந்ததே தவிர அவர்களுக்குப் பின்னணியில் நின்று செயல்பட்டவர்கள் யார் யார் என்பதை முதலில் கண்டுபிடிக்கவே முடிய வில்லை. எப்படியெல்லாமோ விசாரித்தும் இரவிதாஸனும் சோமனும் தமது குடும்பத்தினரைத் தவிர வேறெவரும் இந்த விவகாரத்தில் ஈடுபடவில்லை என்றுதான் கடைசிவரை சாதித்தார்கள். ஆனால் அவர்கள் அம்புகள் மட்டுமே. எய்தவர் வேறெவரோ என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. குறிப்பாக அவர்களது சேரநாட்டுப் பின்புலம் மற்றும் வலியசாலைக் குடும்ப உறவுகள் என்னுள் பல சந்தேகங்களைத் தோற்றுவித்தன. ஆனால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் அவர்களை உயிரோடு விட்டேன்.

நான் நினைத்ததைப்போல் அவர்கள் நேராகக் காந்தளூருக்குச் செல்லவில்லை. எச்சரிக்கையாக மலை நாட்டின் வடபகுதிக்குச் சென்றுவிட்டார்கள். அதற்குப்பின்

அந்த விவகாரத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அப்போதுதான் மர்மமான முறையில் ஒரு ஓலை எனக்கு வந்து சேர்ந்தது. மதுரையின் மல்லிகார்ஜுன மடத்தை ஆதித்தர் படுகொலைத் திட்டம் உருவான இடமாக அது அடையாளம் காட்டியது!"

"அந்த ஓலையை அனுப்பியது யார் என்பது தெரியவில்லை என்றுதானே அப்போது குறிப்பிட்டீர்கள்?"

"ஆம். அதனை எழுதியவர் தம்மை இன்னாரென்று அறிவித்துக் கொள்ளவில்லை. ஆனால் அந்தத் தகவல் உண்மைதான் என்பதைப் பின்னால் உறுதிப்படுத்திக் கொண்டேன். ஒருவருக்கும் தெரியாத பரம இரகசியமான அந்தச் செய்தியை எனக்கு யார் அனுப்பியிருப்பார்கள் எனும் கேள்வி என்னைக் குடைந்து கொண்டேயிருந்தது. அதற்குப் பிறகு நடந்த மதுரைப் படையெடுப்பையும் நாம் வரும் முன்பே மடம் முழுமையாக அழிக்கப்பட்டதையும் நீங்கள் அறிவீர்கள். அங்கே கிருஷ்ணன் இராமனால் கண்டெடுக்கப்பட்ட ஓலைத்துணுக்கு.."

"ஞாபகத்தில் உள்ளது. அதில் மூன்று வாசகங்கள் இருந்தன."

"ஆம். ஆனால் அந்த வாசகங்கள் எத்தனை பயங்கரமானவை எத்தனை பொருள் பொதிந்தவை என்பது எனக்கு மட்டும்தான் புரிந்தது. உங்களில் எவரும் அதன் முக்கியத்துவத்தை உணரவேயில்லை!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"பாதி எரிக்கப்பட்ட அந்த ஓலையின் இரண்டாவது வாசகம் தங்களுக்கு ஞாபகம் உள்ளதா?"

"ஏதோ பூரணையில் உத்திரட்டாதி நடக்கும் நாளில் என்று எழுதியிருந்ததாக ஞாபகம்."

அருள்மொழிவர்மர் மெல்லத் தலையைக் குனிந்து கொண்டார். ஒரு கணம் எல்லையற்ற மனவேதனை அவரது முகத்தில் படிந்தது. அவரது கண்கள் சில கணங்களுக்கு மூடியிருந்தன. "என்னுடைய தமையனார் மக நட்சத்திரத்தில் சிம்ம ராசியில் பிறந்தவர். அந்த ஓலை குறிப்பிடும் பௌர்ணமி உத்திரட்டாதியின் போதுதான் அவருக்குச் சந்திராஷ்டமம். அன்றுதான் அவர் படுகொலை செய்யப்

பட்டார்! அதனை நீங்கள் எவரும் தொடர்புபடுத்திப் பார்க்கவேயில்லை."

திடுக்கிட்டுப்போய் அருள்மொழிவர்மரை நோக்கினார் மாராயர்.

"மாராயரே! அந்த ஓலை பட்டதிரி தம் கைப்பட எழுதியது. அவரை ஆதித்தர் கொலையுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தும் மிக முக்கியமான ஆவணம் அது. அந்த ஓலைத்துணுக்கு மட்டும் எனக்குக் கிடைத்திராவிட்டால் இத்தனை உறுதியுடன் நாம் காந்தளூர்ச் சாலையை நோக்கிப் படையெடுத்திருக்கவே முடியாது. அது எனக்கே சாத்தியப்பட்டிருக்காது. சேரமான் பெருமாளும் இந்த விவகாரத்தில் இத்தனை தூரம் ஒதுங்கி நின்றிருக்க முடியாது. பிஷு ஆனந்தர் மூலமாகப் பெருமாளுக்கு நானனுப்பியிருந்த ஓலையில் பட்டதிரியை ஆதித்தர் கொலையுடன் சம்மந்தப்படுத்தும் அசைக்க முடியாத ஆதாரம் என்னிடம் உள்ளது என்கிற ஒரே ஒரு விஷயத்தைத்தான் மிக முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தேன். அதனால்தான் அவரால் நமது படையெடுப்பிற்கு எதிராக ஒன்று குறை ஆயிரத்தவரை நேருக்கு நேர் நிறுத்தமுடியாமல் போனது. ஆக அந்த ஓலைதான் நம்முடைய முக்கியமான துருப்புச் சீட்டு. இது பட்டதிரிக்கோ நாடு வாழிகளுக்கோ மற்றவர்களுக்கோ தெரியாது!"

"எப்படி அத்தனை உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"இந்த ஆதாரம் என்னிடமிருப்பது தெரிந்திருந்தால் பெருமாளை இந்தப் போரில் ஈடுபடச் சொல்லித் தொடர்ந்து தூது அனுப்பிக் கொண்டிருக்க மாட்டார் பட்டதிரி. தம்மைச் சந்தித்த பிஷு ஆனந்ததேரரிடம் இது பற்றிப் பிரத்யேகமாகக் குறிப்பிட்டிருக்கிறார் பெருமாள்."

"மன்னிக்க வேண்டும் அரசே! இந்த விவகாரங்களுக்கு நடுவே தானைத்தலைவர் எங்கே எவ்வாறு சம்மந்தப் படுகிறார்? அது விளங்கவில்லையே? அந்த முதல் ஓலையை அனுப்பியது.. ஒரு வேளை.."

"ஆம். அவர்தான் அந்த ஓலையை அனுப்பியிருந்திருக்க வேண்டும். நாம் செல்லுமுன் மடத்தை எரித்ததும் அவராகத் தான் இருக்க வேண்டும்."

"மிக முக்கியமான அந்த ஓலை மட்டும் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டதா என்ன?"

"ம்ஹூம்! அதுவும் அவரது கைவண்ணம்தான்."

"என்ன? கொலைக்கான முக்கிய ஆதாரத்தை அவர் வேண்டுமென்றே அங்கே விட்டுவிட்டார்கள் என்கிறீர்களா? எதற்காக?"

"எதற்காகவெனில் நான் கண்மூடித்தனமாக பட்டதிரியிடம் கோபம் கொண்டு காந்தளூர்ச் சாலையின் மீது படையெடுக்க வேண்டும். ஆரைவாய்மொழியில் எனக்கெதிராக விக்கிரமாதித்ய வரகுணன் நின்று ஜெயிக்க வேண்டும். தென்மலை நாட்டுப் பகுதிகள் அவன் கட்டுப் பாட்டிற்குள் வரவேண்டும்."

பிரமை பிடித்தவராகச் செயலற்றுப்போய் அருள்மொழிவர்மரின் முகத்தை நோக்கி நின்றார் தளபதியார்.

"ஆகத் தானைத்தலைவரின் மனோரதத்தின்படிதான் நாமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது இப்போது புரிகிறதல்லவா?"

"புரிகிறது."

"ஆனால் அவரது துல்லியமான திட்டங்களையும் மீறி நாமே எதிர்பாராத வேறு சில காரியங்கள் நடந்தன என்பதை நீங்கள் நன்றாகவே அறிவீர்கள். தெய்வம் உரிய நேரத்தில் ஆச்சாரியர் மஹாகாசியப தேரரின் வடிவில் நம்மை ஆட்கொண்டது. அவரல்லவா ஆனந்தரின் வருகையை நமக்கு அறிவித்தார்? அவரல்லவா கலமறுக்கும் போட்டிகள் பற்றி நமக்கு விளக்கிக் கூறினார்? உரிய நேரத்தில் அவருடைய ஆலோசனைகள் மட்டும் இல்லாமல் போயிருக்குமானால் இந்தப் படையெடுப்பு முற்றிலும் வேறு விதமாகப் போயிருக்குமல்லவா? நாடு பிடிக்கும் ஆசையில் அருள்மொழிவர்மன் தேவையின்றித் தென்மலை நாட்டிற்குப் படையெடுக்கிறான் என்பதாக அது பார்க்கப் பட்டிருக்குமல்லவா? சேரமான் பெருமாளின் ஒன்று குறை ஆயிரத்தவர் படைகள் வள்ளுவ நாடு வாழியாருடன் சேர்ந்து கொள்வதற்குக்கூட வழி ஏற்பட்டிருக்கும் அல்லவா?

தெய்வம் நம்மை ஒரு போதும் கைவிட்டுவிடவில்லை மாராயரே. அதுதான் முக்கியம். அந்த ஈசன் நமக்கொரு வழி காட்டுவான். கிளம்புவோம், வாருங்கள்!"

தெளிவான முகத்துடன் சிரித்தபடி தனது உறுதியான கரங்களைப் பேரரசர் நீட்ட, அதனைப் பற்றிக்கொண்டு எழுந்தார் மாராயர்.

22. பெருஞ்சாலைப் பிதாமகர்



திருமூல சாக்கியரைச் சந்தித்துவிட்டு வந்த மறுநாள் விடியற்காலை வேளையில் குளித்துவிட்டுச் சந்தனம் குங்குமம் தரித்து ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் களரியில் அமைந்திருந்த குருதாரையின் முன்பாகத் தமது இரு சீடர்களுடன் கைகூப்பி நின்றார் தம்புராட்டியார். பன்னெடுங் காலமாக அந்தப் புனித மண்ணில் நடமாடிய அத்தனை பெருஞ்சாலை ஆசான்களும் அந்தக் கணம் அவரது மனக்கண்ணில் தோன்றினார்கள்.

சாலையைத் தோற்றுவித்த முதல் ஆசானாகக் கருதப்படும் ஸ்ரீமாற நம்பூதிரி. அவருக்குப் பின்வந்த ஸ்ரீவிக்கிரம நம்பூதிரி. அவரைத் தொடர்ந்து வரகுண நம்பூதிரி, நாராயண நம்பூதிரி, நரசிம்ம நம்பூதிரி. அகண்ட வானில் தனித்து மின்னும் தாரகைகளைப் போல் சங்கிராம உலகில் இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி நட்சத்திரங்கள். ஒவ்வொருவரும் இந்தச் சாலையின் மேன்மைக்காக உதிரம் சிந்தி உழைத்தவர்கள். மகாத்மாக்கள். இந்த மூத்தோர் வரிசையில் அடுத்ததாக வருபவர்தான் சாலையின் முதுபெரும் ஆசானாக மிகவும் புகழ்பெற்று விளங்கிய பலராம நம்பூதிரி.

பலராம நம்பூதிரி!

மூழிக்குளத்து குருவின் பெயரனாகக் கோட்டைத்தளி வீட்டில் பிறந்து இருபத்து நான்கு வருடங்கள் மலைநாட்டின் சதுர்ச் சாலைகளிலும்[24] சகலவிதமான பயிற்சிகளையும் கசடறக் கற்று இறுதியாக இந்த மண்ணில் அடைக்கலமான பலராம நம்பூதிரி. ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலையின் ஆச்சாரிய பரம்பரையில் சற்றே பின்னவராக வந்தாலும் சாலையின் முதல் மூன்று முக்கிய

---

[24] நான்கு சாலைகளிலும்.

ஆசான்களுடன் இணைக்கப்பட்டு 'நான்கு பிதாமகர்களுள்' ஒருவராகப் போற்றப்படும் பலராம நம்பூதிரி.

இப் பழம்பெரும் ஆச்சாரியாரைப் பற்றிய பல கதைகளைச் சிறு வயதில் தம்புராட்டியார் நாஞ்சில் நாட்டு ஆசானின் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கிறார். அவர் கல்வியில் கரைகண்டவராம். கலைகளின் உச்சத்தைத் தொட்டவராம். நாட்டியமும் ஓவியமும் அவருக்கு நன்றாக வருமாம். என்றாலும் அவரது மேதமை முழு வீச்சில் வெளிப்பட்டது சங்கிராமக் கலையான களரியில்தானாம்.

அவரது காலத்தில் அவரால் நேரடியாக வடிவமைக்கப்பட்ட பல நுண்ணியப் பிரயோகங்களைச் சரிவரக் கைக்கொள்ள முடியாமல் மாணவர்கள் சிரமப் பட்டார்களாம். அவர்களுக்கு உதவியாக இருக்கட்டு மென்றுதான் 'அப்யாச கர்மணம்' என்கிற பெயரில் முதன் முதலில் பயிற்சி ஏடுகளை எழுத ஆரம்பித்தாராம். அவை பின்னாளில் மிகப் பிரபலமாகிச் சாலையில் பயிற்சி செய்யத் துவங்கும் மாணவர்கள் மனனம் செய்யும் முதற்பாடமாக விளங்கினவாம். பலராம ஆசானைத் தொடர்ந்து பலப்பல ஆச்சாரியார்களும் தத்தம் அனுபவங்களை எழுதத் தொடங்க, நாளடைவில் அவையே பூர்வானுபவக் கிரந்தங்களாகத் தொகுக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாகப் பயிற்றுவிக்கப்பட்டனவாம்.

துரதிருஷ்டவசமாக ஏறக்குறைய நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பல்வேறு போர்களினால் பாதிக்கப்பட்டுச் சாலை சிரமதசையை அனுபவித்தபோது இந்தச் சங்கிராமக் கிரந்தங்களை பவழப்பாறைப் பெட்டியில் வைத்து எவரோ மண்ணுக்கடியில் பத்திரப் படுத்தியிருக்க வேண்டும். பின்னாளில் எப்போதாவது கண்டறியப் பட்டாலும் இந்தப் பெருஞ்சாலையுடன் தொடர்புடைய மாணவர்களால் மட்டுமே அவை புரிந்துகொள்ளப் படவேண்டும் என்ற நோக்கத்துடன் அவற்றைத் திறக்கும் திறவுகோல் சூத்திரங்களாகப் பண்டைய துதிப்பாடலைப் பொறித்திருக்க வேண்டும். அத்தகைய கிடைப்பதற்கரிய பொக்கிஷம்தான் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. உள்ளே சிறைப்பட்டிருக்கும் பழைய பனையோலைக் கிரந்தங்களின் நிலை என்னவோ? அந்தக் கழிக்குடி கன்னியா பகவதியே அறிவாள்.

ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலையின் மூத்த ஆச்சாரியர்களே! நீங்கள் அரும்பாடுபட்டு எழுதிவைத்த கிரந்தங்களைப் பூரணமாகப் புரிந்து கொள்ளவும் அனுதினம் அனுசந்திக்கவும்[25] உங்களின் அருளை வேண்டி யாசித்து நிற்கிறோம். கடின உழைப்பினாலும் நுண்ணறிவினாலும் எத்தனையோ பிரயோகங்களை கண்டறிந்து உலகிற்கு ஈன்ற பிதாமகர்களே! எங்களின் வணக்கங்களை நீங்கள் ஏற்று ஆசீர்வதிக்க வேண்டும். ஓம் சாந்தி.

மூன்று முறை நெற்றி நிலம்தொடப் பணிந்து எழுந்தார் அவர். அவரைத் தொடர்ந்து நண்பர்களும் குருதாரையின் மண்ணை ஸ்பரிசித்தார்கள். சாலைக்கு வெகு தொலைவில் தட்ஷிணத்தின் தென்முனையான கழிக்குடியின் கடற் கரையில் சட்டென்று ஒரு பேரலை உருவாகி அவர்களை ஆசீர்வதிப்பதைப்போல் வான்வரை எழுந்து நின்றது. அடுத்த கணமே உடல் மடக்கி ஹூம்.. என்றொரு சப்தத்துடன் சமுத்திரத்தில் ஒடுங்கி நின்றது. குருதாரையில் சூட்சும வடிவில் ஆவிர்பவித்து நின்ற அத்தனை ஆத்மாக்களும் அவர்களை ஆர்வத்துடன் நோக்கி நிற்பது போன்றதொரு பிரமை தம்புராட்டியாருக்கு உண்டானது. நடுங்கும் கரங்களுடன் பவழப்பாறைப் பெட்டியைத் தூக்கினார் அவர்.

"உன்னிகளா! துதிப்பாடலை மனதிற்குள் மனனம் செய்தவாறு மிச்சமிருக்கும் எழுத்துக்களை ஒவ்வொன்றாக அழுத்துங்கள்.." - இரவு முழுவதும் உறங்கவிடாமல் தமது உள் மனதில் புரண்டு கொண்டேயிருந்த அந்தத் துதிப்பாடலை மீண்டுமொருமுறை நிதானமாக வாய்விட்டுக் கூறலானார் தம்புராட்டியார்.

நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ பரசிவஹ

ரஷேத் ஜகத் ஸ்வதா

ரஷேத் வாரிதி மேகலாம்

ஸ்வதயிதா ஸ்ரீவல்லபோ மேதினீம்..

நிதானமாகச் சுருதி பிசகாமல் காற்றில் எழுந்த மந்திரச் சொற்கள் களரி முழுவதும் வியாபித்தன. நண்பர்கள் கரம்

---

[25] பயிற்சி செய்தல்.

குவித்துக் கண்மூடி அவற்றைத் திரும்பத் திரும்ப மனதிற்குள் மனனம் செய்தார்கள்.

நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ பரசிவஹ...

மனதில் திரிமூர்த்தி வடிவமாகிய ஸ்தாணு அக்கினி ஜ்வாலையாய் வானுக்கும் பூமிக்குமாய் கம்பீரமாக உயர்ந்து நின்றது. அறிய முடியாத அதன் முடியிலிருந்து ஒரே ஒரு புஷ்பம் மட்டும் விலகிக் கீழ்நோக்கிப் பறந்து வந்து களரி மண்ணைத் தொட்டது.

மூழிக்குள குரோஹோ பௌத்ரஹ

ஸ்ரீகிருஷ்ண தனுஜோ மஹான்

தஸ்ய இயம் பலராமஸ்ய புஸ்திகா

அப்யாஸ–கர்மணஹ.

ஸ்ரீவல்லப மஹாசாலோ குரோஹோ....

துதிப்பாடலைப் பாடியபடி தம்புராட்டியார் பெட்டியை முன் நீட்ட, மிச்சமிருக்கும் ஸ்லோகத்தின் இரு வார்த்தைகளையும் பெட்டியின் தங்க முலாமிட்ட எழுத்துக்களை ஒவ்வொன்றாக அழுத்தி நண்பர்கள் பூர்த்தி செய்தார்கள்.

த.. ன்.. வி.. ப்.. பி.. ர.. ஜா.. ப.. தே...

கடைசி எழுத்து அழுத்தப்பட்டு வாக்கியம் பூர்த்தியான அடுத்த கணத்தில் பெட்டிக்குள் ஒரு பழங்கால இயந்திர சாகசம் நிகழ்வது தெரிந்தது.

பெட்டி ஓரிரு கணங்களுக்கு மௌனமாக இருந்தது. பின் பளிச்சென்று திறந்தது.

* * * * * * * *

அனந்தபுரம் காந்தளூர் மகாதேவர் அம்பலத்தின் தங்க ஸ்துபம் சாயுங்காலச் சூரியனின் செந்நிற ஒளியில் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அம்பலத்தின் முன் விரிந்த திடலில் வழிதவறிவிட்ட மடையான் பறவைகள் இரண்டு படபடவென்று தம் இறக்கைகளை அடித்துக்கொண்டு திசைதெரியாமல் தவித்தன. மலை நாட்டுப் பெருமக்கள் சிலர் உடலெங்கிலும் சந்தனமும் திருநீரும் தரித்து மகாதேவரின் சாயரட்சைப் பூசனைக்காக அம்பலத்தின் வாயிலில் கூடி நின்றார்கள்.

திடலில் கால்மடக்கி அமர்ந்திருந்த ஆச்சாரியார் திருநாராயண பட்டதிரி, இந்தக் காட்சிகள் எதிலும் கவனம் செலுத்தாமல் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டவராகக் காணப்பட்டார். அவரது இணைபிரியாத் துணைகளான தம்பியர் இருவரும் அவரது சிந்தனைகளில் குறுக்கிட விரும்பாதவர்களாய் திடலின் வெண்மணலை அளாவியபடி வெவ்வேறு திசைகளில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

நீண்ட நேரம் கழித்து "ஹூம்!" என்றொரு ஹூங்காரப் பெருமூச்சு பட்டதிரியிடமிருந்து கிளம்பியது. "பெருமாளின் போக்கையும் மெத்தனத்தையும் என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை!"

"ஏன் அண்ணா அப்படிக் கூறுகிறீர்கள்? நீங்கள் அனுப்பியிருந்த ஓலைக்குத் தக்கபடி பதில் ஓலைதான் வந்து விட்டதே?"

"அதில் உருப்படியாக ஒன்றுமே இல்லை தம்பி. தென்மலை நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை நாம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். தாங்கள் அனுப்பிய எச்சரிக்கைகள் நாமும் முன்னரே அறிந்தவைதாம். உரிய நேரத்தில் ஆவன செய்வோம் என்று பட்டும் படாமலுமல்லவா பதிலளித்திருக்கிறார் பெருமாள்?"

"ஒரு வேளை இந்த விவகாரத்தில் அவரைக் கலந்தாலோசிக்காமல் வள்ளுவ நாடுவாழியார் தனித்துச் சில முடிவுகள் எடுத்ததை அவர் விரும்பவில்லையா என்ன?"

"அவர் விரும்பினாலென்ன? விரும்பாவிட்டாலென்ன? தமது கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதியை அன்னியரொருவர் தாக்க முற்படும்போது உரிய பாதுகாவல் ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும் உரிமை இந்த மண்ணின் ஒவ்வொரு நாடுவாழிக்கும் உண்டுதானே? இத்தனைக்கும் இந்த விவகாரத்தில் நேரடியாக ஈடுபடும்படி பலமுறை வள்ளுவனார் மகோதகைக்கே சென்று பெருமாளை வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் அதற்குப் பலனேதும் விளையவில்லை. இறுதி முயற்சியாகத்தான் நானே பல விபரங்களை நீண்ட முறியில் எழுதியனுப்பினேன். அதற்கும்கூட உரிய மரியாதை கிட்டவில்லையெனில் என்னவென்று சொல்வது? யாரை நோவது? மலைநாட்டின் தலையெழுத்து அவ்வளவுதான் என்று நினைத்துக்கொண்டு வாளாயிருந்துவிட வேண்டியதுதான்!"

"அண்ணா! வள்ளுவனாரின் திட்டப்படி சோழர்கள் ஆரைவாய்மொழியிலேயே முறியடிக்கப்பட்டுவிட்டால் மிகவும் நல்லது. ஆனால் ஒருவேளை அவ்வாறு நேராமல் கணவாயை அவர்கள் எப்படியாவது தாண்டிவிட்டால்?"

"வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல அவர்கள் நேராக இங்குதான் வருவார்கள் தம்பி. அனந்தபுரத்திற்கு வந்து நமது சாலையைச் சுற்றி நின்று அதனைத் தரை மட்டமாக்குவார்கள். இங்கே பயின்றுகொண்டிருக்கும் அத்தனை சட்டர்களையும் ஈவிரக்கமின்றி அங்கம் அங்கமாக வெட்டி எறிவார்கள்!"

பட்டதிரியின் அனல் பறக்கும் சொற்களால் அச்சுதன் நம்பூதிரியின் கண்கள் செக்கர்நிற வானத்தைப் போல் சிவந்தன. செவிகள் விடைத்து நின்றன. அவரது மேனி உணர்ச்சி வசப்பட்டு மெல்ல நடுங்கத் துவங்கி விட்டது. ஆனால் அவருக்கு மிக அருகில் அமர்ந்திருந்த வாமனரின் முகத்திலோ எந்தவிதமான மாற்றங்களும் விளையவில்லை. மௌனமாகச் சலனங்கள் எதுவுமின்றி நிலத்தை நோக்கி அமர்ந்திருந்தார் அவர்.

"நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தழைத்து வந்த பண்டைய பெருஞ்சாலை நமது காலத்தில் அழிந்தொழியப் போவதை நாம் நமது கண்களால் காணப்போகிறோமா அண்ணா?" என்று வினவினார் அச்சுதர் தழுதழுக்கும் குரலில்.

"இல்லை தம்பி. அத்தனை தைரியம் என் மனதில் இல்லை. அத்தகையதொரு துர்பாக்கியமான சூழல் ஏற்பட்டுவிட்டதெனில் காந்தளூர்க் களரியின் குருதாரையில் வைத்து வணங்கப்படும் வாளையோ வேலையோ என்மீது வீசியெறிந்து என்னைக் கொன்று விடுவீர்களாக. இதுவே நீங்கள் எனக்குச் செய்யும் இறுதிக் கைம்மாறாக இருக்கும். சோழனின் கரங்களால் மடிவதை நான் ஒருபோதும் விரும்பவில்லை. அவ்வாறு அன்னியர் கரங்களால் என் உயிர் பறிக்கப்பட்டால் என் ஆன்மா ஒருபோதும் சாந்தி அடையாது."

"ஐயோ அண்ணா! ஏன் இத்தனை அமங்கலமாகப் பேசுகிறீர்கள்? அவ்வாறு ஒருபோதும் நேராது. கால காலமாக நம்மைக் காத்துவரும் மகாதேவர் நம்மை ஒரு போதும் கைவிட மாட்டார்."

"வேண்டுமென்றே நான் அமங்கலமாகப் பேசவில்லை தம்பி. என் மனதில் தோன்றியதைச் சொன்னேன். என் இறுதிக்காலம் நெருங்கிவிட்டதென்று உள்மனது சொல்லிக் கொண்டேயிருக்கிறது. அதன் எச்சரிக்கையை அலட்சியப் படுத்தினேனானால் நமது அண்ணணாரைப் போலவே மரணப்படுக்கையில் நானும் வருந்த வேண்டிய நிலைமை ஏற்படும். அதனை நான் ஒரு போதும் விரும்பவில்லை.

ஆகையால் உங்களிருவருக்கும் இதுவரை நான் போதித்திராத அத்தனை இரகசியப் பிரயோகங்களையும் வரப்போகும் துவாதசி திதியிலிருந்து கற்றுத்தருவதென்று முடிவு செய்து விட்டேன். பயிற்சிகளின் உச்சக்கட்டமாக நரசிம்மப் பிரயோகமும் அதன் உத்தம, மத்திம, அதம கதிகளும் கற்றுத் தரப்படும். இவை அனைத்திலும் நன்கு தேர்ச்சிபெற்று விட்டீர்களானால் அடுத்த இரு திங்களில் நடைபெறப் போகும் மலைநாட்டின் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளும் மற்ற சாலை மாணவர்களை நீங்கள் மிக எளிதாக வென்று விடலாம். போட்டிகளின் முடிவில் உங்களிருவரையும் காந்தளூர்ச் சாலையின் அடுத்த ஆச்சாரியர்களாக நியமனம் செய்யும் அறிவிப்பையும் வெளியிட இருக்கிறேன்..." - படபடவென்று பொரிந்து தள்ளிக்கொண்டே சென்ற பட்டதிரியின் கரங்களை ஆதூரத்துடன் இறுக்கப் பற்றி அவரை மேற்கொண்டு பேசவிடாமல் நிறுத்த முயன்றார் வாமனர்.

"அண்ணா! அண்ணா! எங்களைப் பேசவிடாமல் நீங்களே ஏதேதோ சொல்லிக்கொண்டே செல்கிறீர்களே... சற்று பொறுங்கள். நிலைமை இன்னும் அத்தனை மோசமான தூரத்திற்குச் சென்று விடவில்லை. அப்படிச் செல்வதற்கு நாமும் விடமாட்டோம்."

"என்ன சொல்கிறாய் வாமனா?"

"சோழர்கள் நம்மைக் குறிவைத்துத் தென்மலை நாட்டிற்குப் படையெடுப்பதென்னவோ உண்மைதான். ஆனால் அவர்களின் இறுதி நோக்கம் நம்மையோ நமது சாலையையோ முற்றாக அழித்தொழிப்பது அல்ல என்றுதான் என் சிற்றறிவுக்குத் தோன்றுகிறது. அதனால் அவர்கள் அடையக்கூடிய ஆதாயம் எதுவும் கிடையாது. மலைநாட்டு மக்களின் கடும் எதிர்ப்பையும் பெருமாளின் கோபத்தையும்தான் அது சம்பாதித்துத் தரும் என்பதை அருள்மொழி நன்றாகவே அறிவார். ஆகவே, பலரும்

நினைப்பதைப்போல இந்தப் படையெடுப்பின் நோக்கம் சாலையை அடியோடு அழித்தொழிப்பதல்ல!"

உறுதியோடு பேசிக்கொண்டே செல்லும் வாமனரை சற்று வியப்புடன் ஏறிட்டு நோக்கினார் பட்டதிரி. உனக்கு இப்படியெல்லாம்கூட யோசிக்கத் தெரியுமா என்ன? என்பது போலிருந்தது அவர் பார்வை.

23. அப்யாச கர்மணம்



ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலைக் களரியின் குருதாரையில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பவழப்பாறைப் பெட்டி திறந்து கொண்ட மறுகணம் அதிலிருந்து மெல்லிய புகையாக தூசும் தும்பும் புறப்பட்டன. அத்துடன் அதிலிருந்து ஒரு பிரத்யேக மணம் கிளம்பி களரி முழுவதையும் வியாபித்து நின்றது. அதனை நறுமணம் என்றோ துர்வாசம் என்றோ கூறுவதற்கில்லை. ஏதோ மூலிகைகள் கலந்த ஒரு விதமான மலைநாட்டு வாசமாகவே தெரிந்தது.

பெட்டியினுள் மிகவும் நைந்துபோய் ஒரு பழைய பனையோலைக் கட்டு காணப்பட்டது. அதனை இறுக்கச் சுற்றியிருந்த நூல் அற்று விட்டிருந்ததால் ஓலைகள் பெட்டியெங்கிலும் சிதறிக் கிடந்தன. அவ்வோலைகளுள் சில காலமாற்றத்தால் பொடிப்பொடியாய் துகளாகி விட்டிருக்க, மற்றவை ஓரளவிற்கு நல்ல நிலைமையில் காணப்பட்டன. எல்லா ஓலைகளிலும் ஆங்காங்கே செந்நிற வண்ணம் திட்டுத் திட்டாய்ப் படிந்து உறைந்திருந்தது. நல்ல நிலைமையில் காணப்பட்ட ஓலைகளில் அந்த வண்ணம் அளவிற்கதிகமாகத் தீட்டப்பட்டிருப்பதை நண்பர்கள் கண்டார்கள்.

இருவரும் ஒன்றுமே பேசாமல் நீண்ட நேரமாக மௌனமாய் நிற்பதைக் கண்ட தம்புராட்டியார் ஒரு கட்டத்தில் பொறுக்க மாட்டாமல் "உன்னிகளா! பெட்டியினுள் அப்படி என்னதான் இருக்கிறது என்பதைக் கூறுவீர்களா ?" என்று வினவினார்.

"நீங்கள் எதிர்பார்த்ததைப்போல ஏதோ பழைய பனையோலைக் கிரந்தம்தான் உள்ளே இருக்கிறது. ஆனால் ஓலைகளில் ஒரு சில மட்டும்தான் நல்ல நிலைமையில்

காணப்படுகின்றன. மற்றவை பொடிப் பொடியாய் உதிர்ந்து விழுந்து கொண்டிருக்கின்றன. எல்லா ஓலைகளிலும் ஆங்காங்கே ஏதோ செவ்வண்ணம் படிந்து கிடக்கிறது."

"தாயே! பகவதி.." என்று வானத்தை நோக்கி ஒரு முறை தொழுத தம்புராட்டியார் "உன்னிகளா! அந்தச் செந்திரவம்தான் ஓலைகளைப் பாதுகாக்கும் பிரத்யேக மூலிகைத் தைலம். கொஞ்சம் பொறுங்கள். ஓலைகளை உடனடியாக வெளியே எடுக்க வேண்டாம். உங்களில் ஒருவர் வேளக்காரி சம்பங்கியிடம் சென்று ஓலைகளைப் பாதுகாக்கும் திரிபல[26] மூலிகைத் தைலத்தை நான் கேட்டதாகச் சொல்லி உடனடியாக வாங்கி வாருங்கள். அவசரம்!"

மூலிகைத் தைலம் வரவழைக்கப்பட்டு அதனை நல்ல நிலைமையில் இருந்த ஓலைகளில் ஒவ்வொன்றாகத் தடவித் தனித்தனியே பிரித்து வைத்தார் தம்புராட்டியார். அந்தத் தைலம் மெல்ல மெல்ல ஓலைக்குள் இறங்க, ஓலையில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் புலப்படத் துவங்கின.

"என்ன.. எழுத்துக்கள் தெரியத் துவங்குகின்றவா?"

"ஆமாம்.."

"எங்கே? ஏதாவது ஒரு ஓலையை எடுத்துப் படி?"

இருப்பதிலேயே நல்ல ஓலையாக ஒன்றை எடுத்து அதனை எழுத்துக்கூட்டிப் படிக்கத் துவங்கினார் இளையவர். ஆமாம். இத்தனை காலம் பயிற்சி பெற்றிருந்தாலும் இன்னும் நண்பர்களால் சம்ஸ்கிருதத்தை எழுத்துக் கூட்டித்தான் படிக்க முடிந்தது. சரளமான படிப்பிற்கு இனிமேல்தான் முன்னேற வேண்டும்.

அ..ஸ்..தி... கே..ர..ள.. தேசஸ்ய

ஸ்வர்ண கும்பாயிதா பூ

நாஞ்சிலிதி சுவிக்யாதா

ஸம்ருத்த ஸஸ்ய சோபினீ..[27]

---

[26] த்ரிபலம் என்றால் மூன்று பலங்கள். இந்த இடத்தில் மூன்று மூலிகைகள் கொண்ட தைலம் என்று பொருள்படும்.

[27] ஓலைகளின் சம்ஸ்க்ருத மூலபாடங்கள் பின்னிணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

"மஹஂம். இடையிலிருந்து படிக்கத் துவங்கியிருக்கிறாய் போலிருக்கிறது. அஸ்தி என்றால் அந்த அது போன்ற என்று அர்த்தம். இது முதல் ஓலை அல்ல. நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ என்று எதிலாவது எழுதியிருக்கிறதா என்று பார். அப்படியிருந்தால் அதுதான் முதல் ஓலையாக இருக்கும்."

"நீங்கள்தான் குருஸ்துதியை எவரும் எழுதி வைக்க மாட்டார்கள். மனனம் மட்டும்தான் செய்வார்கள் என்று கூறினீர்களே?" என்று வினவினார் மழபாடியார்.

"ம்... அன்று நான் சொன்னதை நீ இன்னமும் ஞாபகம் வைத்திருக்காயா? நல்லது. அது உண்மைதான். குருஸ்துதி ஒருக்காலும் முழுவதுமாக எழுதி வைக்கப்பட மாட்டாது. என்றாலும் அதன் முதல் நான்கு வரிகள் பெருஞ்சாலை சம்மந்தப்பட்ட அனைத்து ஓலைகளிலும் முதல் ஸ்லோகமாக அமைந்திருக்கும். எதற்காகவெனில், ஒரு ஓலைக்கட்டைப் பார்த்த மாத்திரத்தில் அது இன்ன சாலையைச் சேர்ந்த கிரந்தம் என்பதைத் தெரியப் படுத்துவதற்காகத்தான். நான் நினைப்பது மட்டும் சரியாக இருந்தால் திருமூல சாக்கியர் தொடர்ந்து இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டிருந்த நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ என்பதுதான் நமது பெருஞ்சாலை ஸ்துதியின் முதல் வாக்கியம். பொதுவாகவே அனைத்து சாலைகளின் குருஸ்துதிகளும் இவ்வாறு பிரபஞ்சத்தை ஆளும் ஈஸ்வரனைத் துதித்த படிதான் துவங்கும். உதாரணமாகக் காந்தளூர்ச் சாலையில் ஸ்துதி..." - பேசிக்கொண்டே சென்ற தம்புராட்டியாரை மணியனாரின் உற்சாகக் கூக்குரல் இடை மறித்தது.

"இதோ கிடைத்து விட்டதம்மா!"

"என்ன கிடைத்தது?"

"துதிப்பாடலின் முதல் நான்கு அடிகளைத் தாங்கிய ஓலை. ஆனால் சிறிது சிதைந்து விட்டது. முதல் வரியைக் காணவில்லை. அதனால்தான் இதனைக் கண்டுபிடிப்பது சிரமமாகி விட்டது."

"எங்கே - ஓலையைப் படி பார்ப்போம்?"

"ரஷேத் வாரிதி மேகலாம்.. ஸ்வதயிதா. அதன்பிறகு ஒரு பெரிய ஓட்டை. ஸ்ரீவல்லபோ மேதினீம் என்பதைக் காண வில்லை.."

"தொடர்ந்து படி..."

"பாயாத்... ஒரு ஓட்டை... அதற்குப்பின்

பூதலம்... ஸ்ருதி முகஹ

யோகீஸ்வரௌகம் ஸதா..

திச்யாஸூஹூ ஸூரநாயகாஹா

குவலயே சக்ராதயோ மங்கலம்.."

"ஆஹா... அற்புதம்! ஒரே ஒரு வார்த்தை மட்டும் விட்டுப் போயிருக்கிறது. தக்ஷிண பூதலம் என்று வந்தால் சரியாக இருக்கும்."

"இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"எல்லையில்லாது விரிந்து பரவும் இந்தப் பிரபஞ்சத்தை அனைத்திற்கும் ஈஸ்வரனாக விளங்கும் பரமசிவன் காக்கட்டும். கடலைத் தனது இடையணியாகக் கொண்ட நிலமகளை, அவளது காதலனான திருமகள் கேள்வன் காக்கட்டும். யோகியர்களின் உறைவிடமான தட்ஷிண தேசத்தை வேத எண்ணிக்கையிலான முகமுடைவன் அல்லது வேதத்தை முகத்திலுடையவன் - சுருக்கமாக பிரம்மன் - காக்கட்டும். இந்திரன் முதலான தேவர்கள் உலகில் மங்களத்தை அருளட்டும்."

"நீங்கள் கூறியதுபோல் இது ஏதோ வாழ்த்துப் பாடலின் முதல் நான்கு அடிகளைப் போலத்தான் தெரிகின்றன."

"அடுத்தடுத்த ஓலைகளெல்லாம் முறை தவறிச் சிதறிக் கிடக்கின்றன. இவற்றை ஒழுக்காக அடுக்கினா லொழிய மேற்கொண்டு படிப்பது சிரமம்."

"உண்மைதான். முதலில் நல்ல நிலையில் இருக்கும் ஓலைகளைத் தனியாகப் பிரித்து வரிசைக்கிரமமாக அடுக்கி வைப்போம். அவற்றைப் படிப்பதைப் பற்றிப் பின்னர் யோசிப்போம்."

இவ்வாறாகத் தம்புராட்டியார் உத்தரவிட்டு விட்டதனால், காலைப் பொழுது முழுவதும் ஒவ்வொரு ஓலையாகப் படித்துப் பிரித்து சரிபார்த்து மூலிகைத் தலம் தடவித் தொகுத்து வைப்பதற்கே சரியாக இருந்தது. நண்பகல் உணவிற்குப் பின் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு விட்டு முன்மாலை நேரத்தில் விளக்கேற்றிய

பின்புதான் மீண்டும் களரியில் அவர்களால் உட்கார முடிந்தது. வழிபாடுகளை முடித்துக் கொண்டு மூவரும் ஓலைகளைச் சுற்றி அமர்ந்தார்கள்.

"உன்னி! அடுத்தடுத்த ஓலைகளாகத் தொடர்ந்து படித்துக் கொண்டே செல். நான் உடனுக்குடன் பொருள் கூறி வருகிறேன்."

ஆஸ்தே லோகே ப்ரதித–விபவஹ
கேரளாக்யஹ ஸுதேசஹ
பாதஹ பூதஹ பரசு–பலதோ
ஜாமதக்ன்யேன பூர்வம்
ரக்ஷேயுஹு தம் சிகரி–லஸிதம்
ஸர்ப–முக்யாஹா வரேண்யாஹா
பாதாலௌகாஹா பரிவ்ருதி–கணாஹா
நாகராஜஸ்ய திவ்யாஹா

"உலகில் புகழ்பெற்ற செழிப்புடையதான நன்னாடு கேரள நாடு. அது ஜமதக்னியின் மகனால் தன் பரசுவின் பலம் கொண்டு காக்கப்பட்டு புனிதமாக்கப்பட்டது. மலைகளோடு திகழும் அந்த தேசத்தை நாகராஜனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பாதாளத்தில் வசிப்பவர்களும் சிறந்த நாகங்களும் தெய்வ சக்தி கொண்டோருமான மேலோர் காக்கட்டும்!"

அஸ்தி கேரளதேசஸ்ய
ஸ்வர்ண–கும்பாயிதா புரீ
நாஞ்சில் இதி ஸுவிக்யாதா
ஸம்ருத்த–ஸஸ்ய–சோபினீ
தாம் ரக்ஷேத் கன்யகா
தேவீ நித்ய–கன்யா மஹேச்வரீ
யா ஸ்திதா வார்தி–மாலாயாஹா
மத்ய–பூஷேவ சங்கரீ

"அந்தக் கேரள தேசத்திற்கே பொற்குடத்தைப் போன்றதாக நாஞ்சில் என்று புகழ்பெற்ற நாடு திகழ்கிறது. அது செழித்த பயிர்களால் அழகாகத் திகழ்வது. அந்த நாஞ்சில் நாட்டை நித்யகன்னியும் மஹேஸ்வரியுமான

கன்யாகுமாரி தேவி காக்கட்டும். அவள் கடல்களாகிய மாலைக்கு நடுவில் மணி போல் திகழ்பவள். மங்களத்தை அளிப்பவள்."

ராஷ்ட்ரே அஸ்மின் நிர்மிதா
சாலா ஸ்ரீவல்லப–கராம்புஜாத்
ப்ரத்னாசார்ய–ஸஹாயேன
தனுர்வேத–விசக்ஷணைஹி
தாம் மஹாசாலிகாம் ரக்ஷேத்
குஹநாதஹ ஸதா புவி
தன்வி–லோக–ப்ரதிஷ்டாத்ரீம்
சிவா–முகாப்ஜ–பாஸ்கரஹ

"அந்த நாட்டில் ஸ்ரீவல்லபனின் கைத்தாமரையால் பழம் பெரும் ஆசிரியர்களின் உதவியோடு தனுர்வேத நிபுணர்களைக் கொண்டு சாலை ஒன்று உருவாக்கப்பட்டது. வில்லாளி உலகை உருவாக்குவதான அந்தப் பெருஞ் சாலையை பார்வதியின் முகத்தாமரைக்குக் கதிரவனான குஹநாதன்[28] காக்கட்டும்."

கௌண்டின்ய–கோத்ரஜஹ தீமான்
கோட்டைத்தளி–க்ருஹாச்ரிதஹ
மூளிக்குள–குரோஹோ பௌத்ரஹ
ஸ்ரீக்ருஷ்ண–தனுஜோ மஹான்

"உன்னிகளா! மிக முக்கியமான ஸ்லோகம் இது. சாக்கியர் பலராம நம்பூதிரியின் வீடும் கோத்திரமும் கேட்டாரே.. ஞாபகம் இருக்கிறதா? அது இங்கே குறிப்பிடப் படுகிறது பாருங்கள்! கௌண்டின்ய கோத்திரத்தில் பிறந்தவரும் கோட்டைத்தளி என்னும் வீட்டைச் சார்ந்தவரும் மூழிக்குல குருவின் பெயரனும் ஸ்ரீ கிருஷ்ணனின் மகனும் அறிவாளியும் பெருமை வாய்ந்தவனும் ஆன... மேலே படி!"

தஸ்ய இயம் பலராமஸ்ய

---

[28] ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை குஹநாதேஸ்வரம் திருக்கோயிலுடன் இணைந்த ஒன்றாகும்.

புஸ்திகா அப்யாஸ–கர்மணஹ
ஸ்ரீவல்லப–மஹாசாலா–குரோஹோ
தன்வி–ப்ரஜாபதேஹே

"இந்தப் பெட்டியைத் தயாரித்த மஹானுபாவர்கள் இந்தப் பாடலிலிருந்துதான் அந்த ஸ்லோகத்தை எடுத்துள்ளார்கள். ஆக இது பலராம நம்பூதிரின் அப்யாஸ கர்மணம் அதாவது பயிற்சி ஏடு என்பது ஐயந்திரிபர நிரூபணமாகி விட்டது."

ஸ்ரீகுஹஸ்ய க்ருபா–புஞ்ஜாத்
த்ரிம்சத்–வத்ஸர–கர்மணஹ
தனுர்வேத–ஸதாப்யாஸ
அர்பிதாத்மனோ குரோஹோ ப்ரதிஹி
தாம் இமாம் த்ரஷ்டும்
அர்ஹந்தி சாலாசார்யாஹ விசக்ஷணாஹா
கூட–தந்த்ர–ஜுஷாம் வித்யாம்
தேவபூஜாம் நதோ யதா

"ஸ்ரீகுஹனின் அதாவது குமரப் பெருமானின் கருணைத் தொகுதியாலும் முப்பது வருட பயிற்சியினாலும் தனுர்வேதப் பயிற்சிக்காக எப்போதும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்த குருவின் பிரதி இது. அப்படிப்பட்ட இரகசிய தந்திரங்கள் நிறைந்த இந்த வித்தை நூலை தெய்வ பூஜையைப் பார்க்கத் தகுந்த பக்தனைப் போல சாலையின் கைதேர்ந்த ஆசிரியர்கள் மட்டும் காணத் தக்கவராவர்."

அன்யே க்ருஹ்ணந்தி சேத் ஏனாம்
ப்ரார்ப்பயந்து ஜவாத் புனஹ
ஸ்ரீவல்லப–மஹாசாலா
ஆசார்யேப்யோ ஹித–காங்க்ஷிணஹ
அன்யதா ஜ்ஞாதும் இச்சந்தஹ
கூடவித்யாம் வினா அர்ஹதாம்
லபந்தே திவ்ய–கோ–ஹத்யா–பாபம்
வேணீ–த்ரயே நராஹா

"சாலா மாணவர்களைத் தவிர்த்த வேறு எவராவது இவ்வோலைகளைக் கண்டெடுத்தால் அவர்கள் நல்லதையே விரும்பினால் உடனேயே ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் ஆசிரியர்களிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். அவ்வாறின்றி அருகதையின்றி இந்த இரகசியத்தை அறிய விரும்பும் மனிதர்கள் திரிவேணி சங்கமத்தில் தெய்வப் பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள். உன்னிகளா! நான் முன்பே கூறினேனல்லவா? இந்தச் சாலையின் மாணவர்களைத் தவிர வேறு எவரும் இந்த ஓலைகளைப் படிப்பதற்கில்லை. அவர்கள் நெருங்கிய பந்துக்களாக இருந்தாலும் சரி. உடன் பிறந்தவர்களானாலும் சரி."

சொல்லி வைத்தாற்போல் அந்தக் கணத்தில் பிஷு களரியின் வாயிலுக்குள் நுழைந்தார்.

"அக்கா! இடையூறுக்கு மன்னிக்க வேண்டும். ஒரு அவசரச் செய்தி. இவர்களிருரையும் உடனடியாக கழிக்குடிக் கடற்கரைக்கு அனுப்பி வைக்கும்படி சோழ இராஜாங்கத்தின் முத்திரையிட்ட உத்தரவு வந்துள்ளது. இதோ பார்!"

பிஷு நுழைந்ததைக் கருத்தில் கொள்ளாமல் ஓலைகளின் மீதே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த மணியனாரின் கண்கள் அவரையுமறியாமல் மிகப் பின்னால் அமைந்திருந்த ஒரு ஓலையில் பதிந்தன. தம்மை அத்தனை தூரம் ஈர்த்த அந்த ஓலையை நோக்கி அவருடைய கரங்கள் இயல்பாக நீண்டன.

"என்ன கழிக்குடிக் கடற்கரைக்கா? இந்த நேரத்திலா? அப்படியென்ன அங்கே குடி முழுகப் போகிறதாம்?" என்று வினவினார் தம்புராட்டியார். அவரது குரலில் இருந்த எரிச்சல் பிஷுவிற்குப் புரிந்தது. சுற்றிலும் இறைந்து கிடந்த ஓலைகள் அவருக்கு பல செய்திகளைச் சொல்லின. என்றாலும் அவற்றைப் பற்றி பிரஸ்தாபிப்பதற்குரிய நேரம் அதுவல்ல என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

"தெரியவில்லையக்கா. ஆனால் உடனடியாகக் கிளம்பச் சொல்லி கண்டிப்பாக உத்தரவாகியிருக்கிறது. ஓலை உன் பெயருக்கு வந்திருந்தாலும் உன்னால் படிக்க முடியாது என்பதனால் உன் சார்பில் நான் படித்தேன். ஓலையிலுள்ள முத்திரை பல்லவராயருடையது என்பதாகத் தெரிகிறது. உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. இந்த ஓலையைக் கொண்டு வந்த ஊழியன் நம் நண்பர்களைக் கையோடு

கூட்டிக்கொண்டு போகத் தயாராக நிற்கிறான். அவ்வாறு அவனுக்கு உத்தரவாகியிருக்கிறது. கூடவே இரு புரவிகளையும் கொண்டு வந்துள்ளான். இவர்கள் இருவரையும் உடனடியாக அனுப்பி வைப்பது நல்லது."

"என்னடா உதயா இது? வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்த கதையாக அல்லவா இருக்கிறது?"

நடைபெற்றுக் கொண்டிருந்த உரையாடல்களை சிறிதும் இலட்சியம் செய்யாமல் ஓலையிலேயே கவனத்தைச் செலுத்தி அதனைப் படிக்க முயன்று கொண்டிருந்த மணியனாரின் கண்கள் ஏக அதிர்ச்சியைக் காட்டின.

"அம்மா! அம்மா! இது - இந்த ஸ்லோகம்..."

"ஒன்றும் வேண்டாமடா. நீங்கள் இருவரும் உடனடியாகக் கழிக்குடிக்குக் கிளம்ப வேண்டுமென்று இராஜாங்க உத்தரவு வந்துள்ளதாம். கிளம்புங்கள். மீதமிருக்கும் ஸ்லோகங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்!" - தம்புராட்டியாரின் குரலில் ஏமாற்றமும் கோபமும் சரிவிகிதத்தில் கலந்திருந்தன.

"அதற்கில்லையம்மா, இந்த ஸ்லோகத்தின் துவக்கத்தைக் கவனியுங்கள். அத.. "

"ஒன்றும் வேண்டாமென்றுதான் சொல்கிறேனே? மீறிப் படித்தால் என்ன அர்த்தம்? கிளம்புங்கள்! "

தம்புராட்டியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு மனமேயில்லாமல் இருவரும் கிளம்பினார்கள். அவர்களின் தலையைப் பிடித்து உச்சி முகந்தார் தம்புராட்டியார். அவர் கண்கள் கலங்கி விட்டன.

"ஜெயவிஜயிபவ! ஏதோ ஆபத்தான பணிக்காகப் போகிறீர்கள் என்று உள்மனது சொல்கிறது. எந்நேரமும் எச்சரிக்கையாக இருங்கள். உங்களுக்காக இங்கே ஒரு கிழவி காத்துக் கொண்டிருப்பாள் என்பதை மறக்க வேண்டாம்!"

மழபாடியாரின் கண்கள் கலங்கின. ஒன்றும் சொல்லாமல் வெளியேறினார் அவர். மணியனாரின் இதயமோ இன்னமும் ஓலைகளிலேயே இருந்தது. இறுதியாகப் படித்த அந்த வரிகள் மனதை ஏராளமாகத் தொந்தரவு செய்தன.

அது நரஸிம்ஹப் பிரயோகோ நிரூப்யதே..

அந்த வாக்கியத்திற்கு என்ன பொருள்?

24. அரசியல் சதுரங்கம்



மதுரையிலிருந்து படைகள் கிளம்பிய அதிகாலை நேரம் முதலே பலதேவனின் மனம் ஒரு நிலையில் இல்லை. எந்தக் கணத்திலும் ஒரு அதிர்ச்சிகரமான செய்தி வீரர்களிடையே பரவும். படையெடுப்பு உடனடியாகக் கைவிடப்படும் என்று அவன் எதிர்பார்த்தான். புரவிகளைப் பராமரிக்கும் ஊழியர்களில் ஒருவன் என்பதால் புரவிப் படைகளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பெரியதொரு வில் வண்டியில் மற்ற ஊழியர்களுடன் சேர்ந்து நெருக்கமாக அமர்ந்து கொண்டு பயணம் செய்ய வேண்டியிருந்தது. அதனால் முன்னே சென்று கொண்டிருக்கும் படைகளிடையே ஏதேனும் குழப்பங்கள் ஏற்படுகின்றனவா அல்லது வதந்திகள் பரவுகின்றனவா என்பதை அறியக்கூடவில்லை. குறைந்த பட்சம் 'பேரரசருக்கு திடீரென்று உடம்பு முடியாமல் போய்விட்டது. படைகளை இங்கேயே நிறுத்தச்சொல்லி மாராயர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்' என்றுகூடச் செய்தி வந்தால் போதும். பாதி வெற்றிதான்.

ஆனால் அவ்வாறு எதுவும் நேராமல் படைகள் ஜாம் ஜாமென்று பயணம் செய்து நாம் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்ட ஊரகப் பகுதியை அடைந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் நிலைகொள்ளாத மனத்துடன் எப்படியாவது முக்கியஸ்தர்கள் பயணப்படும் இரதங்களைப் பார்வையிட்டுவிட வேண்டுமென்று தவியாய்த் தவித்தான் பலதேவன். காரியம் இத்தனை நேரம் நடந்து முடிந்திருக்க வேண்டுமே? பேரரசர் தமது வழக்கத்தை அத்தனை சீக்கிரம் மாற்றிக்கொள்ள மாட்டாரே? அவருக்காகவே சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட பிரத்யேக இரதமாயிற்றே அது?

ஒரு வேளை... காரியங்கள் அனைத்தும் நல்லபடியாய் நடந்தேறி அதனை வெளியில் சொல்லாமல் இந்தப் பாழாய்ப்போன மாராயன் மென்று முழுங்கிக் கொண்டிருக்கிறானா? இருக்கும். இருந்தாலும் இருக்கும்.

இந்த சோழ சேனாதிபதிகளை ஒரு போதும் நம்ப முடியாது. படை வீரர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என்பதற்காக அவர்கள் எதையும் செய்வார்கள்.

முக்கியஸ்தர்கள் பயணப்படும் இரதங்களை அவன் அந்த நேரத்தில் நெருங்குவதென்பது முடிகிற காரியமாக இல்லை. ஏனெனில் தண்டூன்றும் பகுதிகள் பாண்டிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்தவை என்பதால் இரதங்களைச் சுற்றிலும் எந்நேரமும் பலத்த காவல் போடப்பட்டிருந்தது. அவற்றை மீறிக்கொண்டு புரவிகளைப் பராமரிக்கும் கடைநிலை ஊழியனொருவன் இரதங்களை நெருங்குவது பலத்த சந்தேகத்தைக் கிளப்பும்.

ஊரகப் பகுதியில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் புரவிகளுக்கு நீர் காட்டும் சாக்கில் சற்று தூரத்தில் நிறுத்தப் பட்டிருந்த இரதங்களைப் பார்வையிட முயன்றான். பெரிதாக ஒன்றும் கண்களுக்குத் தென்படவில்லை. குறுகிய நேரத்திற்குள் பல புரவிகளுக்கு நீர்காட்ட வேண்டியிருந்ததால் அவனால் நிதானமாக நோட்டமிட்டுக் கொண்டிருக்கவும் முடியவில்லை. தனது பராமரிப்பி லிருக்கும் புரவிகளுக்கு அவன் ஒரு வழியாக நீர்காட்டி முடிப்பதற்கும் படைகள் கிளம்ப உத்தரவாவதற்கும் சரியாக இருந்தது. கடைசியில் அவனுக்கென்று கணநேரம் கூட ஓய்வு கிடைக்கவில்லை. "இருக்கட்டும்.. இருக்கட்டும்.. எல்லாவற்றுக்குமாக ஒரு முடிவு கட்டி விடுகிறேன்.." என்று மனதிற்குள் கறுவிக் கொண்டான்.

பலதேவனின் துரோகம் நிறைந்த சிந்தனைகளுக்குப் பின்னால் பலகினமானதொரு மனமும் குறுக்கு வழியில் விரைவாக முன்னேறிவிடும் ஆசையும் இருந்தன. தொண்டை மண்டலத்தில் மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவன் அவன். உடன் பிறந்தவர்களோடு சேர்த்து மொத்தம் பன்னிரண்டு பேர். அதனால் அவனைக் கவனிப்பதற்கு நாதியில்லை. எப்படியெல்லாமோ வளர்ந்து எங்கெங்கோ அலைந்து திரிந்து ஒரு வழியாகத் திருமணம் குழந்தை குட்டி என்று நிலைபெறுவதற்குள் பிராயம் நாற்பத்தைந்தைக் கடந்துவிட்டது. இனி?

மிஞ்சிப்போனால் ஐம்பது அல்லது ஐம்பத்தைந்தில் புரவி லாயத்தின் தலைவனாகலாம். அதன் பிறகு? வெற்றிலையும் பாக்கையும் சக்கையாகக் கடித்து மென்று கொண்டு திருபுவனமாதேவிப் பேரங்காடிக்கருகில்

அவனைப் போல் தலைநரைத்துக் கூடியிருக்கும் மற்ற கிழவர்களுடன் சேர்ந்து கொண்டு அன்றாடம் பழங்கதைகளைப் பேசிக்கொண்டு திரிய வேண்டியதுதான்.

தப்பித் தவறிப் பெரிய மனிதர்களின் பார்வை அவன் மீது பட்டால் தள்ளாத வயதில் 'இராஜராஜப் பெரு வழியன்' என்று பட்டம் கிடைக்கும். சபைக்கு நடுவில் தம்மைப் போலப் பட்டம் பெறும் நூறு நூற்றைம்பது கிழங்களுடன் தானும் நின்றுகொண்டு பல்லை இளித்தபடி மாராயனிடமோ பல்லவராயனிடமோ செப்புப் பட்டயத்தை வாங்கிக் கொண்டு இல்லத்தில் மாட்டி வைத்து அன்றாடம் அதனைப் பார்த்துப் பூரிக்க வேண்டியதுதான்.

இதற்காகவா தொண்டை மண்டலத்திலிருந்து கால்நடையாகப் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்தோம்? இதற்காகவா ஒவ்வொரு பெரிய மனிதன் வீட்டு வாயிலிலும் கால்கடுக்க நின்றபடி காத்துக் கொண்டிருந்தோம்? இதற்காகவா இரவிதாஸப் பஞ்சவன் பிரம்மாதிராஜனின் நாற்றம் பிடித்த அழுக்குக் கொட்டடியில் சாணம் தெளித்து புரவிக் கழிவுகள் பெருக்கி புல்லும் கொள்ளும் இட்டு இரவு பகலாக உழைத்தோம்? நாம் வந்து சேர்ந்த ஒரு திங்களில் புரவிகள் அப்போது வந்திறங்கியதைப்போல் புத்தம் புதியதாய்க் காட்சியளிக்கின்றன என்று பிரம்மாதிராஜர் சொன்னாரே? ஹூம்... அவர் மட்டும் தொடர்ந்து பதவியில் இருந்திருந்தால் நாம் இன்றிருக்கக் கூடிய நிலையே வேறல்லவா?

இருக்கட்டும். இப்போது நமக்குக் கிட்டியிருப்பது ஒரு நல்ல வாய்ப்பு. ஆபத்துக்கள் அதிகமிருந்தாலும் இதுதான் கடைசி வாய்ப்பு. இதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல்...

அதற்கு மேல் பலதேவனால் யோசிக்க முடியவில்லை. பேராசை பிடித்த அவனது கண்கள் களைப்பில் சொருகிக் கொண்டன.

* * * * * * * *

சோழர்படைகள் நிதானமாக ஆனால் உறுதியாகத் தென்பாண்டி நாட்டைக் கடந்து கொண்டிருந்த அந்த சமயத்தில் -

அவசரமாக வந்து சேர்ந்த இராஜாங்க உத்தரவு ஓலையினால் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையிலிருந்து புறப்பட்ட நண்பர்களிருவரும் கழிக்குடிக் கடற்கரைக்குப் புரவிகளில் பயணப்பட்டுக் கொண்டிருந்த அந்தப் பொழுதில் -

காந்தளூர் மகாதேவர் அம்பலத்திற்கெதிரே விரிந்த வெண்மணல் திடலில் பட்டதிரி தம் தம்பியருடன் தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டிருந்த அந்தக் கணத்தில் -

பாண்டி தேசத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட விசுவாசம் மிக்க வீரர்களைக் கொண்ட தரைப்படைகள் மிகுந்த சிரமத்துடன் பொதியமலைக் காடுகளையொட்டிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தன.

இராஜகம்பீரப் புரவியொன்றில் அமர்ந்தபடி படைகளைச் செலுத்திக்கொண்டு முன்சென்ற பாண்டியர் அமரபுஜங்கர் நெடுஞ்செழியரின் முகம் வழக்கமான பொலிவை இழந்து சற்றே இருள் மண்டிக் காணப்பட்டது. அவரது முடிச்சிட்ட புருவங்களும் எங்கும் நிலை கொள்ளாமல் தவித்த பார்வையும் அவரது மனம் ஒரு நிலையில் இல்லை என்பதைக் கூறாமல் கூறின. அவருக்குப் பின் சற்றே இடைவெளி விட்டுப் பாண்டிய இளவலும் அரையன் மானாபரணரும் தத்தம் புரவிகளில் அவரைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தார்கள்.

பல நாழிகை நேரம் நீண்ட மௌனத்தை ஒரு வழியாகக் கலைக்க முற்பட்டார் சடையமாறர். "கழிக்குடியின் ஒற்றர்கள் அனுப்பிய முறி வந்து சேர்ந்ததிலிருந்தே சிற்றப்பாவின் முகம் சரியாக இல்லையே?"

"ஆமாம். ஆனால் அவரது வீர வதனத்தில் சற்று குழப்பம் தெரிகிறதே தவிரக் கவலை படியவில்லை என்பதைக் கண்டீர்களல்லவா? அதனால் கவலையுற வேண்டாம். ஏதோ எதிர்பாராத செய்திகள் ஓலையில் வந்துள்ளன. அவ்வளவுதான்..."

"குழப்ப இரேகைகளுக்கும் கவலை இரேகைகளுக்கும் என்ன பெரிய வித்தியாசம் அமைச்சரே? என்னால் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லையே?"

இளவலின் கேள்வி மானாபரணரின் முகத்தில் மெல்லிய முறுவலைத் தோற்றுவித்தது. "அது மனிதர்க்கு மனிதர் மாறுபடும் இளவரசே! உதாரணமாகப் பாண்டியரைப்

பொறுத்தவரை கவலையுடன் கூடிய சிந்தனை என்றால் அவரது உடல் இறும்புபோல் இறுகிவிடும். முகம் தீவிர இறுக்கம் காட்டும். உடலில் இயல்பான அசைவுகள் இரா. அதற்கு மாறாக உடலில் பல பாகங்களும் அசைவுக்குள்ளாகி முகம் மட்டும் தீவிர சிந்தனையைக் காட்டி நிற்கிறதென்றால்..."

"அதற்குக் குழப்பங்களுடன் கூடிய சிந்தனை என்று பெயரா?" என்றபடி தனது புரவியைத் திருப்பி அவர்களுடன் இணைந்து கொண்டார் பாண்டியர். "கவலையோ, குழப்பமோ.. நீங்களிருவரும் என்னுடன் தோள்கொடுத்து நிற்கும்வரை எனக்கு எந்தத் துன்பமுமில்லை."

"என்ன செய்தி சிற்றப்பா வந்திருக்கிறது?"

"சோழநாட்டு வீரர்களிருவர் கழிக்குடியின் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் தங்கி அந்தச் சாலையை நிர்வகித்து வரும் பெண்மணியிடம் கடந்த பல வாரங்களாகத் களரிப் பயிற்சி கற்று வருகிறார்களாம்."

"என்ன? பெருஞ்சாலையை ஒரு பெண்மணி நிர்வகித்து வருகிறாரா? ஆச்சரியமாக இருக்கிறதே?"

"கழிக்குடிக்கு அடிக்கடி சென்று வரும் எனக்கு இது முன்னரே தெரிந்த விஷயம்தான். ஆனால் என்னை ஆச்சரியப்படுத்திய விஷயம் என்னவெனில் அவர் பழைய மாளிகைப்புரத்து வீட்டைச் சேர்ந்தவர் என்பதுதான். அந்தச் செய்தி நான் அறியாதது."

"மாளிகைப்புரத்து வீடா? அந்த வீட்டைச் சேர்ந்த பிஷுதான் சோணாட்டின் தூதராகப் பெருமாளைச் சந்தித்தார் என்று முன்பு நீங்கள் குறிப்பிட்டீர்களல்லவா?"

"அதேதான். அந்தத் தகவலை நீ இன்னும் மறக்காமல் நினைவில் வைத்துள்ளது மகிழ்ச்சி. நான் மட்டும் நேரில் இப்போது கழிக்குடிக்குச் சென்று விசாரிக்க முடியுமானால்..."

"ஏன்? நீங்கள் எதற்காகக் கழிக்குடிக்குச் செல்ல வேண்டும்?"

"சடையா! இந்த விவகாரம் துவங்கிய நாள் முதல் சோழன் தெளிவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனது உள்நோக்கங்கள் என்ன என்பதை நம்மில்

ஒருவராலும் சரிவரக் கணிக்க முடியவில்லை. அதனால் நாமனைவருமே குழப்பத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோமோ என்று பிரமை உண்டாகின்றது."

"என்ன சிற்றப்பா சொல்ல வருகிறீர்கள்?"

"கழிக்குடியில் பயிற்சி பெற்றுவரும் இளைஞர்கள் இருவரும் முன்பு ஓலைகளை எடுத்துச் சென்ற வீரர்களாகத்தான் இருக்க வேண்டும். அதில் சந்தேகமேயில்லை."

"சோழநாட்டு வீரர்களுக்கு எதற்காகக் களரிப்பயிற்சி?"

"தெரியவில்லை. நடக்க இருக்கும் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இருக்ககலாம். இருக்கலாம் என்று சொல்வானேன்? அப்படித்தான் இருக்க வேண்டும்!"

"என்ன? மலைநாட்டின் கலமறுக்கும் போட்டிகளில் சோழ வீரர்களா? சாலைகளில் பயிலும் சட்டர்களுக்கு மட்டுமான போட்டியல்லவா அது?"

"ஆமாம். அதனால்தான் கழிக்குடியில் பயிற்சி நடக்கின்றது. அவ்வீரர்கள் சோழநாட்டுப் படை வீரர்களாகப் போட்டிகளில் கலந்து கொள்ளப் போவதில்லை. அவ்வாறு கலந்து கொள்ளவும் முடியாது. ஆனால் கழிக்குடி ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் மாணவர்களாக அவர்கள் பங்கு பெறலாம். அப்போது அவர்களை மறுத்தலிக்கவியலாது!"

"சரி. அப்படிக் கலந்து கொள்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அதற்கும் நீங்கள் குறிப்பிட்ட அந்த மாளிகைப்புரத்து வீட்டிற்கும் ஏதோ சம்மந்தம் உள்ளதாகவே இருக்கட்டும். அதற்கும் சோழனின் படையெடுப்பிற்கும் என்ன தொடர்பு?"

"நாம் நினைத்ததைப்போல் சோழனின் ஓலை நாடுவாழிக்கோ திருநாராயண பட்டதிரிக்கோ அனுப்பப் படவேயில்லை என்பதைக் கருத்தில் கொள். ஆக அது நம்மைக் குழப்புவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு. கழிக்குடிக்குச் சென்று கொண்டிருந்த இரு வீரர்களிடம் தவறான ஓலைகளைக் கொடுத்து நம்மை திசைதிருப்பி இருக்கிறான் சோழன்!"

"சரி. நீங்கள் சொல்கிறபடி அந்த ஓலைகள் பொய்யானவையாகவே இருக்கட்டும். ஆனால் சோழப்படை தென்பாண்டி நாட்டிற்குப் படையெடுத்து வந்து கொண்டிருப்பதென்னவோ நிஜம்தானே?"

"நிஜம்தான். ஆனால் சோழர்களின் இந்தப் படையெடுப்பின் நோக்கம் நாஞ்சில் நாட்டுப் பகுதிகளை ஆக்கிரமிப்பதுதானா? என்று நான் தற்போது சந்தேகப்படுகிறேன். குறிப்பாக அந்த இரு சோழ வீரர்கள் காந்தளூரின் கலமறுக்கும் போட்டிகளுக்காகப் பிரத்யேகப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் பட்சத்தில் இந்த ஓட்டு மொத்த விவகாரத்தையும் வேறொரு நோக்கில் காண வேண்டியது அவசியமாகின்றது. சே! இந்தக் கழிக்குடிப் பெருஞ்சாலைச் செய்தி மட்டும் எனக்கு சற்று முன்பே தெரிந்திருந்தால்..."

"என்ன சொல்ல வருகிறீர்கள் சிற்றப்பா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே? சோழன் இத்தனை தூரம் வேலை மெனக்கெட்டுப் படையெடுத்து வருவதற்கும் காந்தளூரின் கலமறுக்கும் போட்டிகளுக்கும் என்ன சம்மந்தம்?"

அரசியல் அனுபவத்தில் பழம் தின்று கொட்டை போட்டவரான பாண்டியர் அமரபுஜங்கதேவர் சடையரை நோக்கி மெல்லச் சிரித்தார்.

"சடையா! மலைநாட்டின் அரசியல் பின்புலத்தையும் கடந்த இருநூறு வருடமாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களையும் தெளிவாகப் புரிந்து கொண்டாலன்றித் தற்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதனை அனுமானிக் இயலாது. சொல்லப் போனால் அருள்மொழிவர்மனுக்கு என்னை விட மலைநாட்டு அரசியல் முறைமையில் அனுபவம் குறைவுதான். அப்படியிருந்தும் காரியங்கள் இத்தனை கன கச்சிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவெனில் அவனுக்குப் பின்னணியில் மிகுந்த அனுபவம் வாய்ந்த யாரோ ஒருவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது உறுதியாகின்றது."

அரையன் மானாபரணர் மெல்லச் செருமிக் கொண்டார். "பல நாட்களுக்கு முன்னர் நாகை பதரதிட்ட விஹாரையின் ஆச்சாரியரான மஹாகாசியப தேரரின் பூர்வோத்திரங்களை விசாரித்து அறியச் சொல்லி

தானைத்தலைவர் ஓலை அனுப்பியிருந்தது ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு வேளை..."

"என்ன? அப்படியா ஓலையனுப்பியிருந்தார்? இதனை ஏன் முன்பே என்னிடம் கூறவில்லை?" - பாண்டியரின் குரலில் கடுகடுப்பு ஏறியிருந்தது.

"அது.. மற்ற விவகாரங்களுக்கிடையே அதற்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கத் தோன்றவில்லை. அந்தப் பிஷுதான் சோழனைப் பின்னணியிலிருந்து இயக்குகிறார் என்கிறீர்களா?"

"தெரியவில்லை. வயது முதிர்ந்த அந்த பௌத்த பிஷுவிற்கும் காந்தளூர்ச் சாலைக்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. எது எப்படியோ, இந்த விவகாரத்தில் அருள்மொழிவர்மனை இயக்கிக் கொண்டிருக்கும் சூத்திரதாரி காந்தளூர் பற்றியும் மலைநாட்டைப் பற்றியும் தலைகீழாக அறிந்தவர். அதில் சந்தேகமில்லை. தானைத் தலைவர் பிஷுவைப் பற்றி விசாரிக்கச் சொன்னால் அதில் விவகாரம் இல்லாமலிராது!"

"இப்போது வேண்டுமானால் நமது ஒற்றர்களை விட்டு..."

"ம்ஹும். அதற்கெல்லாம் காலம் கடந்து விட்டது. சிந்திக்கும் வேளை முடிந்து செயலாற்ற வேண்டிய வேளையில் நிற்கிறோம்."

"நீங்கள் முன்னர் கூற வந்ததைக் கூறி முடியுங்கள் சிற்றப்பா. எனக்கு ஏற்கனவே தலை சுற்றத் துவங்கி விட்டது..." என்றார் பாண்டிய இளவல்.

"சரி. சொல்கிறேன். நான் முன்பு குறிப்பிட்ட அந்தச் சோழ வீரர்களிருவரும் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு ஜெயித்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்."

"காந்தளூர் வலியசாலைக் குடும்பத்து வீரர்களை ஒரு போதும் அந்தப் போட்டிகளில் ஜெயிக்க முடியாது என்று கூறுகிறார்களே?"

"அது முற்றிலும் உண்மைதான். கடந்த பல நூறு வருடப் பாரம்பரியம் அந்தச் சாலைக்கும் குடும்பத்துக்கும் உண்டு. இருந்தாலும் எப்படியோ சோழ வீரர்கள் ஜெயித்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்."

"சரி, ஜெயித்து விட்டால்?"

"அவ்விருவரும் மலைநாட்டின் நான்கு சாலைகளுக்கும் கலநாயகங்கள் ஆகி விடுவார்கள். அதுமட்டுமல்லாமல் திருநாராயண பட்டதிரிக்குப் பிறகு காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியராக நியமிக்கப்படும் தகுதியையும் அவர்கள் பெற்று விடுவார்கள்."

"சரி, இதனால் சோழனுக்கு என்ன பயன்?"

"சடையா! மலையாட்டின் நான்கு சாலைகள்தாம் அந்த பூமியின் புழங்கும் தனுர்வேதத்திற்கும் போர்ப் பயிற்சிக்கும் முதுகெலும்பாக விளங்குபவை. அவை சோழர் வசம் போவதென்பதும் சோழவீரர்கள் காந்தளூரின் ஆச்சாரியர்கள் ஆவதென்பதும் சாதாரண விஷயங்களே அல்ல. இதனால் காந்தளூர் வலியசாலைக் குடும்பத்தின் ஒட்டுமொத்த அதிகாரமும் பறிபோகும். தற்போது நான்கு சாலைகளுமே காந்தளூர் மரியாதையை ஒட்டித்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனால் இதன் தாக்கங்கள் மலைநாட்டில் மிக அதிகம்..."

"எல்லாம் சரி. இதற்கும் படையெடுப்பிற்கும் என்ன சம்மந்தம்?"

"சோழ வீரர்கள் கலமறுக்கும் போட்டிகளில் வெற்றி பெற்றுவிடும் பட்சத்தில் காந்தளூரில் மிகப்பெரிய கலவரம் உருவாகப்போவது திண்ணம். அந்த வீரர்களின் உயிருக்கே உத்தரவாதமில்லை. அவ்வீரர்களை எதிர்த்துக் காந்தளூரின் சட்டர்கள் ஆயுதமேந்திப் போரிட முன்வந்தால் - சோழர் தலைமையை ஏற்கப் பிடிக்காமல் மற்ற மலைநாட்டுச் சாலைகளும் அவர்களுடன் இணைந்து கொண்டால் - அந்தப் போராட்டத்தை எதிர்கொள்ள மிகப்பெரிய படை தேவை.

ஏறத்தாழ அறுபது எழுபது வருடங்களுக்கு முன் இதே போன்றதொரு போட்டியில் சோழர்கள் கலந்துகொண்டு கடைசிக் கட்டத்தில் தோல்வியைச் சந்தித்திருக்கிறார்கள் என்று பெரிய தந்தையார் சுந்தர பாண்டியர் என்னிடம் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார். அந்த வெற்றி நேர்மையான முறையில் பெறப்பட்டதல்ல என்றுகூட அவர் குறிப்பிட்டதாக ஞாபகம். அதனால் வலுவான அரசியல் பலமில்லாமல் போட்டிகளில் கலந்து கொள்வது

முட்டாள்தனம். அதற்காகவே இந்தப் படையெடுப்பு என்கிறேன் நான்!"

"இந்தப் படையெடுப்பின் முக்கிய நோக்கமே காந்தளூர்ச் சாலையில் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகும் இரண்டே இரண்டு வீரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதுதான் என்கிறீர்களா? வேடிக்கையாக இருக்கிறதே?"

"சாலையின் முக்கியத்துவத்தையும் கலமறுக்கும் போட்டிகளில் நடைபெறும் அரசியலையும் அறியாததால் உனக்கு இது வேடிக்கையாய் உள்ளது. நானும் இந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே படையெடுப்பு நிகழ்கிறது என்று சொல்லவில்லை. இதுவும் ஒரு காரணம். இதுதான் முக்கியமான காரணம். இல்லையேல் இந்தத் தருணத்தில் படையெடுத்து வரவேண்டிய அவசியமே இல்லை!"

"சிற்றப்பா! நீங்கள் கூறுவதை ஏற்றுக்கொண்டால் வரப் போகும் கலமறுக்கும் போட்டிகளில் அந்த வீரர்கள் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்கிற நிர்பந்தம் ஏற்படுகிறதே? ஒரு வேளை அவர்கள் தோற்றுவிட்டால் இத்தனை பெரிய படையெடுப்பு கேலிக்கூத்தாகவல்லவா முடியும்?"

"ம்ஹூம். கலமறுக்கும் போட்டிகள் என்பது சோழனின் பல உபாயங்களுள் ஒன்று. அவ்வளவுதான். ஒரு வேளை போட்டிகளில் அந்த வீரர்கள் தோற்றுவிட்டாலும் வேறு ஏதேனும் சிக்கலை ஏற்படுத்திக் காந்தளூர்ச் சாலையைப் பட்டதிரியின் பிடியிலிருந்து வலியசாலைக் குடும்பத்திலிருந்தும் விடுவிக்காமல் ஓயமாட்டான் அருள்மொழி. அந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டாலும் வலுவான படை பலத்தின் உதவி நிச்சயம் தேவைப்படும்."

"அப்படியென்ன பட்டதிரி மீதும் வலியசாலைக் குடும்பத்தின் மீதும் அருள்மொழிக்குப் பகை? ஆதித்தர் கொலை விவகாரமா?"

"ஆமாம். ஆதித்த சோழர் கொலையில் வலியசாலைக் குடும்பத்தினருக்கு நேரடி சம்மந்தமிருக்கிறது... " என்று ஏதோ சொல்லத் துவங்கிய பாண்டியர் பின் வாக்கியத்தைப் பூர்த்தி செய்யாமல் மௌனத்தில் ஆழ்ந்தார்.

"அப்படியானால் வெளிப்படையாக இந்தக் காரணத்தைக் கூறிவிட்டு நேரே காந்தளூருக்குச் செல்ல வேண்டியதுதானே? எதற்காகத் தேவையில்லாமல்

ஆரைவாய்மொழிக் கணவாயையும் நாஞ்சில் நாட்டையும் தாக்க முயல வேண்டும்?"

"அவன் இந்தப் பகுதிகளைத் தாக்கப்போவதாக ஒரு போதும் சொல்லவில்லையே? வள்ளுவ நாடாழ்வாரல்லவா தொடர்ந்து அவ்வாறு கற்பிதம் செய்து கொண்டிருக்கிறார்?"

"என்ன சிற்றப்பா இப்படிச் சொல்கிறீர்கள்?"

"சரி. உனக்குப் புரியும்படி தெளிவாகவே சொல்கிறேன். சோழனின் இலக்கு என்ன? காந்தளூர்ச் சாலை. வலியசாலைக் குடும்பம். பட்டதிரி. இம்மூன்றும்தான். இவற்றை வழிக்குக் கொண்டுவர படை பலம் ஆள் அம்பு சேனை என்று எல்லாம் தேவை. ஆகவே அவற்றைத் தன்னுடன் கொண்டு வருகிறான். நாஞ்சில் நாட்டையோ ஆரைவாய்மொழியையோ தாக்குவது அவனது முக்கியக் குறிக்கோளே அல்ல என்று வைத்துக்கொள். ஆனால் இந்தப் பகுதிகளின் வழியே அவன் காந்தளூருக்குப் பயணப்பட வேண்டுயிருக்கிறது.

இந்நாட்டுப்பகுதிகள் வள்ளுவ நாட்டைச் சேர்ந்தவை. ஆக வள்ளுவ நாடாழ்வார் ஒன்று சோழனைத் தன் பகுதிகளின் வழியே செல்ல அனுமதிக்க வேண்டும். அல்லது அதனை அனுமதிக்காமல் படைகளை எதிர்க்க வேண்டும். நாடாழ்வாருக்கு இதில் குழப்பங்களில்லை. ஏனெனில் பரம்பரை பரம்பரையாக மலை நாட்டின் சாலைகளுக்கும் வள்ளுவ நாட்டிற்கும் தொடர்புகள் உண்டு. தமது நாட்டின் வழியாகச் சோழன் படை நடத்திச் சென்று காந்தளூரைத் தாக்குவதை வள்ளுவனார் அனுமதிப்பது நடவாத காரியம். ஆகவே அவர் எதிர்க்கிறார்.

இதற்கிடையே தென்மலைநாட்டு நாடுவாழிகளை அணி திரட்ட நினைக்கும் நமது தானைத்தலைவர் வரகுணரை முன்னிறுத்தி சோழர்படைகளை எதிர்க்க முனைகிறார். இந்தப் போரில் சோழன் தோற்றுவிட்டால் அவரைப் பரந்துபட்ட அளவில் புதிய ஆய்வேளாகப் பல நாடுவாழிகளும் ஏற்கும் சூழல் உருவாகும் என்பது அவர் எதிர்பார்ப்பு. புரிகிறதா? இத்தனை சிக்கலான அரசியல் சதுரங்கத்தின் நடுவேதான் நாமும் நமது பங்கை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்."

"இரண்டு வீரர்கள் கழிக்குடியில் களரிப்பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் வைத்து இத்தனை பெரிய யூகங்களைச் செய்கிறீர்களே சிற்றப்பா? இவை அனைத்துமே தவறாக இருக்கலாமல்லவா? சோழனின் பிரதான நோக்கமே ஆய்வேள் நாட்டுப்பகுதிகளை ஆக்கிரமிப்பதாக இருக்கலாம் அல்லவா?"

இந்தக் கேள்விக்கு பதில் கூறாமல் கலகலவென்று சிரித்தார் பாண்டியர். "சடையா! விவகாரத்தைப் புரிந்து கொண்டு வெகு அழகாக என்னையே மடக்குகிறாய். உண்மைதான். இவை என்னுடைய கற்பனைகளாகவும் யூகங்களுமாகவே இருக்கலாம். இந்தச் சிக்கல் எப்படியெல்லாம் வளரப் போகிறதென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்."

திடீரென்று பாண்டியரின் புரவி எதனையோ கண்டு பயந்து 'பீளீ..ஹி..ஹி...' என்று முன்னங்கால்களைக் தூக்கிக் கொண்டு கனைத்தது. அதனைத் தட்டிக்கொடுத்துச் சமாதானப்படுத்தி அடர்ந்த காட்டு வழியில் செலுத்திக் கொண்டு போவதற்கு நெடுஞ்செழியர் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டியதாகி விட்டது.

25. பயந்தான் பலதேவன்



நேரம் செல்லச் செல்ல பலதேவனின் பொறுமை காணாமற் போகத் துவங்கியது. வில்வண்டியில் அமர்ந்தபடி மெல்லிய குரலில் தனக்குத்தானே முணுமுகுத்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவனது சகாக்கள் அவனைக் கேலி பேசத் தொடங்கினார்கள். அது நிலைமையை இன்னும் மோசமாக்கியது. பல்லைக் கடித்துக் கொண்டு உரிய தருணத்திற்காகக் காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்திருந்த வாய்ப்புக் கிடைப்பதற்கான சூழல் பின்மாலை நேரத்தில்தான் உருவானது. இருள் கவியத் துவங்கி விட்ட அந்த நேரத்தில் தென்பாண்டி நாட்டில் ஆள் அரவம் அதிகமற்ற காட்டுப்பிரதேசத்தில் சோழர் படை தண்டூன்றியிருந்தது. நாள் முழுவதும் சுந்தர பாண்டியன் பெருவழியில் பயணப்பட்டிருந்ததால் அனைவருக்கும் களைப்பு அதிகமாகவே இருந்தது. ஆயிற்று.

இதே சீரான வேகத்தில் தொடர்ந்து சென்றால் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் ஆரைவாய்மொழிக் கணவாய் கண்களுக்குத் தென்பட்டு விடும்.

படைகள் தண்டூன்றிய ஒரு நாழிகை நேரத்தில் உணவு தயாரிக்கும் பணி ஒரு புறம் துரிதமாகத் துவங்கி விட்டிருக்க, மறுபுறம் வீரசோழன் நாடகப்படையின் கூத்துக்கான ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. புரவி இலாய ஊழியர்கள் கருமமே கண்ணானவர்களாய் தத்தம் படைகளுக்குரிய புரவிகளின் சேணங்களை ஒரு புறம் கழற்றி வைத்துவிட்டுச் சற்று தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த சிற்றாற்றுக்கு அவற்றை ஓட்டிச் சென்று நீர்காட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்டாற்று நீர் பெரிதும் குளிர்ந்திருந்ததாலோ என்னவோ நீர் பருகிய சில வினாடிகளில் பல புரவிகள் பற்கள் கிடுகிடுக்கத் தலையை அப்புறமும் இப்புறமும் வேகமாக ஆட்டிச் சிலிர்த்துக் கொண்டன.

சேனையில் பல நூறு புரவிகள் இருந்தனவாதலின் தலைக்குப் பத்துப் பத்து புரவிகளாகத்தான் நீர் காட்ட முடிந்தது. 'இரதங்களில் பூட்டியிருக்கும் புரவிகளுக்கு யாரப்பா நீர் காட்டப் போவது?' என்று எவரோ குரல் கொடுக்க, 'நான் போகிறேன்!' என்று முந்திக்கொண்டு குரல் கொடுத்தான் பலதேவன். அவனது சக ஊழியர்கள் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினார்கள்.

ஏனெனில் அந்தப் புரவிகள் அனைத்தையும் ஒன்றாக கூட்டிக்கொண்டு வந்து நீர் காட்ட முடியாது. பெரிய பெரிய இராஜாங்க உத்யோகஸ்தர்களின் இரதங்களில் பூட்டப்பெறும் அருகதை மிக்க ஜாதிப் புரவிகளல்லவா? அவற்றுக்குரிய மரியாதையே தனி! அவற்றைத் தனித்தனியே அவிழ்த்து வந்து நீர்காட்டி உடலைச் சுத்தமாகக் கழுவிச் சேணமிட்டு அனுப்ப வேண்டும். நச்சுப்பிடித்த வேலை.

சுற்றும் முற்றும் மலங்க மலங்க விழித்தபடி இரதங்களை மெல்ல நெருங்கினான் தேவன். கட்டுக்காவல் அதிகமாக இல்லை. ஒரே ஒரு மெய்க்காவல் வீரன் மட்டும் இரதங்களுக்கருகில் அசட்டையாக நின்று கொண்டிருந்தான். நல்லவேளை. அந்த வீரனும் பழக்கமானவன்தான்.

"என்ன பலதேவா? புரவிகளை நீ அவிழ்த்துக்கொண்டு போகிறாயா அல்லது நானே அவிழ்த்து விடட்டுமா?"

"உனக்கெதற்கப்பா வீண் சிரமம்? அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். வேறு ஏதேனும் விசேஷங்கள் உண்டா.." என்று அவன் வாயைப் பிடுங்க முயன்றான் தேவன். 'பேரரசரின் உடல்நிலை சரியில்லை' அல்லது 'காலை முதல் அவரது தலையே தென்படவில்லை' என்பதாக செய்தி ஏதேனும் வீரர்களிடையே பரவியுள்ளதா என்பதை அறியப் பரபரத்தது அவன் மனம்.

"விசேஷங்களென்ன.. நாளை மாலைக்குள் நெல்வேலியைத்[29] தாண்டிவிடலாமென்று வீரர்கள் பேசிக் கொள்கிறார்கள். கொஞ்சம் பொறு. நீர் கழித்துவிட்டு வருகிறேன்."

கடவுளே! நாளை மாலைக்குள் நெல்வேலியைத் தாண்டி விடுவார்களா? அப்படியெனில் அவகாசம் அதிகமில்லையே? உடனடியாக வேலையை முடித்தாக வேண்டும் போலிருக்கிறதே? அதுவும் கண்ணும் கண்ணும் வைத்தாற்போல... நடக்கிற காரியமா?

உடனடியாக அவனை மற்றொரு கவலை பீடித்தது. ஒரு வேளை அவனுக்கு இடப்பட்டிருக்கும் இரகசியப் பணியை அவன் குறித்த நேரத்திற்குள் முடிக்கத் தவறும் பட்சத்தில் என்ன நடக்கும்?

தலை தப்பாது! என்றுதான் தோன்றியது. அவனுக்கு ஆணை பிறப்பித்துள்ள கூட்டத்தின் ஈவிரக்கமற்ற ஆவேச மனோநிலையை அவன் நன்றாக அறிவான். சொன்ன வேலையைக் கச்சிதமாகச் செய்து முடிக்கவில்லையெனில் பைராகியின் குறுவாள் சிறிதும் தயக்கமில்லாமல் அவனது நெஞ்சில் 'பளிச்' சென்று இறங்கிவிடும்.

பலதேவனுக்கு உடல் முழுவதும் வியர்வை துளிர்த்தது. பயத்தில் உடல் நடுங்கத் துவங்கியது. பலப்பல வருடங்களுக்கு முன்னால் நடந்த ஒரு கோர நிகழ்ச்சி அவனது ஞாபகத்தில் நிழலாடியது. உடல் முழுவதும் தீக்காயங்களுடன் விழிகள் பிதுங்கி பிரம்மாதிராஜரின் மாளிகைக்கு வெளியே குற்றுயிரும் குலையுயிருமாய் மயங்கிக் கிடந்த அந்த மெய்க்காவல் வீரனின் முகம் அவன் மனத்திரையில் நிழலாடியது.

---

[29] கல்வெட்டுக்களில் திருநெல்வேலி இவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அடேய் பலதேவா! உடனடியாக இவனை எங்காவது கண்காணாத இடத்திற்குச் சென்று புதைத்துவிட்டு வா!"

"இ... இவனையா..? இவன் இன்னும் உயிரோடு..."

"சொன்னதைச் செய்!"

ஒற்றை வாக்கியத்தில் அந்தக் கட்டளை முடிக்கப்பட்டு விட்டது. மேற்கொண்டு எதுவும் பேசாதே என்று அர்த்தம். அம்மாளிகையில் பல கட்டளைகளும் அவ்வாறுதான் வந்து சேரும். கேள்வி கேட்காமல் உத்தரவுகளை மட்டும் நிறைவேற்றக் கொண்டிருக்க வேண்டும். இன்னொரு அடியாளின் உதவியுடன் தூக்கமாட்டாமல் அவனைத் தூக்கிக்கொண்டு... தஞ்சைப் புறம்படிக்கு வெளியே வெகுதூரம் சென்று குழி தோண்டிப் புதைத்து...

புதைப்பதற்கு முன்னால் அவன் முணுமுணுத்த சில பயங்கர வாசகங்கள் பலதேவனின் நினைவுக்கு வந்தன.

"கொன்று விட்டார்கள்! இளவரசரைத் துடிக்கத் துடிக்கக் கொன்று விட்டார்கள்! அவரைக் கொன்றது..."

திடீரென்று அந்த அடிபட்ட அந்த வீரனின் முகம் காரிருளைப் பிளந்துகொண்டு பலதேவனுக்கு முன்னால் முளைத்தது. 'அடேய் பலதேவா...! என்னை ஞாபகம் இருக்கிறதா??'

கிணற்றுக்குள்ளிருந்து எழுவதைப்போல் இருளுக்கு நடுவே திடீரென்று எழுந்த அந்த ஆழமான குரல் தெளிவாகக் கேட்டது. ஆம். இது அவன் குரலேதான். பலப்பல இரவுகளில் பலப்பல வடிவங்களில் வந்து தன்னை வாட்டி வதைத்த அந்த மெய்க்காவல் வீரனின் குரலேதான் இது.

"நீ..? நீ... எப்படி இங்கே வந்தாய்? உன்னைப் புதைத்த இடத்தில்... புதைத்த இடத்தில்... இந்நேரம் புல் மண்டிப் போயிருக்க வேண்டுமே?"

"ஆமாமடா ஆமாம். நீ என்னைப் புதைத்த இடம் புல் மண்டித்தான் போய்விட்டது. உன்னால் அகால மரணமடைந்த நான் இளவரசருடன் வீரசொர்க்கத்திற்குச் செல்ல முடியாமல் பேயாய் பிசாசாய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறேன்..."

"ஐயையோ! உன்னை நான் கொல்லவில்லை. அவர்கள் தான் உன்னைக் குற்றுயிரும் குலையுயிறுமாய் என்னிடம் கொடுத்து..."

"அவர்களையும் அழிப்பேனடா! நிச்சயம் அவர்களையும் அழிப்பேன். அதற்கு ஒரு அச்சாரமாக அவர்களின் அடியாளான உன்னை அழிக்கப் போகிறேன். குற்றுயிராய்க் கிடந்த என்னை உயிரோடு புதைத்தாயல்லவா? அதற்காக முதலில் உன்னைக் கொல்லப் போகிறேன். கதறக்கதற உன் குரல்வளையை நெரிக்கப் போகிறேன். அருகில் வா!"

பலதேவன் அவனிடமிருந்து தப்பித்து விலகியோட முயல.. அதே சமயம் எங்கிருந்தோ வேறொரு குரல் அவனை அழைத்தது.

"பலதேவா! எங்கே சென்றுவிட்டாய்?"

"என்னிடமிருந்து தப்பிக்கலாமென்று பார்க்கிறாயா? உன்னை..." - மெய்க்காவலனின் முகம் அவனை நோக்கி வேகமாக முன்னேறி வர..

"பலதேவா! என்ன ஆயிற்று உனக்கு??? எதற்காக இங்கே நின்று கொண்டு தனியே பேசிக்கொண்டிருக்கிறாய்? ஏன் இப்படி உடம்பெல்லாம் வியர்வை பொங்கி வழிகிறது உனக்கு? இருளில் எதையாவது கண்டு பயந்துவிட்டாயா என்ன? பலதேவா! அடேய்.. பலதேவா!"

சிறுநீர் கழித்துவிட்டு வந்த மாறன் என்ற அந்த வீரன் பிரமை பிடித்தவனைப்போல் நின்றுகொண்டிருந்தவனைத் தொட்டு உலுக்கியபின்தான் பலதேவனுக்குச் சுய நினைவே வந்தது.

"என்ன ஆயிற்று உனக்கு? புரவிகளை இன்னமும் கூட சேணத்திலிருந்தே அவிழ்க்கவில்லை போலிருக்கிறது? கெட்டது குடி. அங்கே உணவுக்காக அனைவரும் குழுமியிருக்கிறார்கள். சீக்கிரம் வந்து சேர்!"

பலதேவன் மிகுந்த சிரமத்தின் பேரில் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான். சேச்சே! இந்த இருளும் தனிமையும் கொஞ்ச நேரத்தில் தம்மை எத்தனை தூரம் கலவரப்படுத்திவிட்டன? எதற்காகத் தேவையில்லாத பழைய விஷயங்களையெல்லாம் கிளற வேண்டும்? வந்த வேலையைக் கவனிப்போம். வெற்றி நமதே!

"வந்து விடுகிறேன் மாறா. நீ முன்னால் செல். நான் சிறிது நேரத்தில் வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்று கூறி அந்த மெய்க்காவல் வீரனை அனுப்பி வைத்துவிட்டுச் சுற்றிலும் ஒருவரும் தம்மைக் கவனிக்கவில்லையென்பதை நிச்சயம் செய்து கொண்டு மெல்லப் பேரரசரின் இரதத்தை அணுகினான் பலதேவன்.

சற்று தூரத்திலிருந்து வைத்த கண் வாங்காமல் அவனையே முறைத்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தது பேரரசரின் பஞ்ச லட்ஷணப் புரவி.

* * * * * * * *

ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையிலிருந்து குமரியம் பெருந்துறைக்குச் செல்லும் மண் சாலையில் அந்த முன் மாலை நேரத்தில் மூன்று புரவிகள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்தபடி சென்று கொண்டிருந்தன. முதற் புரவியில் காவல் வீரனைப் போல் தெரிந்த ஒருவனும் அவனுக்குப் பின்னால் நமது நண்பர்களிருவரும் தத்தம் புரவிகளில் காணப்பட்டனர். பெருச்சாலைக்கு வந்து சேர்ந்த அன்று தரித்திருந்த அதே ஆபரணங்களையும் ஆயுதங்களையும் இருவரும் தரித்திருந்தார்கள்.

பரமன் மழபாடியாரின் வலது கரம் அவரது பாட்டனாரான குருகாடி செல்லக்கிழாரின் நீண்ட குத்தீட்டியைக் கம்பீரமாகப் பற்றியிருந்தது. கடந்த பல நாட்களாகக் களரியின் குருதாரைக்கருகில் வைக்கப்பட்டு வணங்கப்பட்டதாலோ என்னவோ அந்த ஆயுதம் எண்ணை பூச்சுடனும் புதுப் பொலிவுடன் காட்சியளித்தது. அவரது இடக் கரம் புரவியின் சேணத்தைப் பற்றியிருக்க, இடையில் நீண்ட வாள் உறைக்குள் தொங்கிக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் பலப்பல வெற்றிகளையும் அவருக்கு அள்ளித் தரப்போகும் அந்த ஆசி மிகுந்த வீர வாள் வழக்கமாகத் தயாரிக்கப்படும் வாட்களைவிடச் சிறிதளவு நீளமாகவும் கனமாகவும் தயாரிக்கப்பட்டிருந்து. அதனைக் கையாள்வது எளிதல்ல என்றாலும் அதுதான் மழபாடியாரின் இணை பிரியாத் துணை.

மழபாடியாருக்கும் சிறிதும் குறைவில்லாத கம்பீரத்துடனும் எழிலுடனும் காணப்பட்டார் இளையவர் கம்பன் மணியனார். மழபாடியாரினும் சற்றே சிவந்த மேனியரான அவர்தம் தலையில் தரித்திருந்த செந்நிறத்

தலைப்பாகை அவரது தோற்றத்திற்கு மிகுந்த வனப்பையும் கம்பீரத்தையும் அளித்தது. அவரது வலக்கை புரவியின் சேணத்தைப் பற்றியிருக்க, இடக்கரம் இடைக்கச்சில் சொருகப்பட்டிருந்த வாளின் கைப்பிடியை அவ்வப்போது தொட்டுத் தடவிக் கொண்டிருந்தது.

பெருஞ்சாலையைத் தாண்டிச் சிறிது தூரம் வந்ததும் தமது புரவியின் வேகத்தை மட்டுப்படுத்தி மழபாடியாரோடு இணைந்து கொண்டார் மணியர்.

"நாம் இருவரும் திடீரென்று புறப்பட்டுவிட்டதில் தம்புராட்டியாருக்கு ஏக வருத்தம்!"

"இருக்காதா என்ன? எத்தனை நாட்கள் கழித்துக் கிடைத்திருக்கிறது ஒரு அரும்பெரும் பொக்கிஷம்? அதனை முழுவதும் அனுபவிக்க முடியாமல் இப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டு விட்டதே? ஆனால் ஒன்றுதான் எனக்குப் புரியவில்ல. பிஷு ஆனந்த தேரர் நமக்கு இம்மாதிரியான ஒரு அழைப்பு வரும் என்பதை முன்னரே எதிர் பார்த்திருப்பார் போலிருக்கிறது. என்னதான் முயன்று குரலில் பரபரப்பைக் காட்ட முயன்றாலும் அவரது வதனத்தில் எந்தவிதமான மாறுதலும் இல்லை என்பதைக் கவனித்தீர்களா?"

"நானெங்கே பிஷுவைக் கவனித்தேன்? ஓலைகளையல்லவா கவனித்துக் கொண்டிருந்தேன்? அதிலும் கடைசியில் அகப்பட்ட ஒரு ஓலையில் இருந்த வரிகள் என் கவனத்தை முழுவதுமாக திசை திருப்பி விட்டன. அந்த வரிகளைத்தான் தம்புராட்டியாரிடமும் சொல்லிக்காட்ட முயன்றேன். ஆனால் நான் சொல்வதை உள்வாங்கிக் கொள்ளும் மனநிலையில் அவர் இல்லை."

"நாம் படித்தவை பெரும்பாலும் அறிமுக ஸ்லோகங்கள் மட்டும்தானே? அதிலென்ன அப்படியொரு சுவாரஸ்யம் உங்களுக்கு ?"

"இல்லை. நான் பல ஓலைகளை விட்டுவிட்டு இடையிலிருந்து ஒரு ஓலையை எடுத்தேன்."

"அதில் அப்படி என்னதான் எழுதியிருந்தது?"

"அத ந்ருஸிம்ஹப் ப்ரயோகோ நிரூப்யதே என்று எழுதியிருந்தது. அதன் அடுத்தவரியைப் படிக்க முடியவில்லை..."

"அடடா.. என்னவொரு துரதிருஷ்டம்! நரசிம்ஹப் பிரயோகத்தைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பையா இழந்து விட்டோம்?

"ஆமாம். அப்படித்தான் தோன்றுகிறது. அதற்கடுத்த ஓலையைப் படிப்பதற்குள் தம்புராட்டியார் நம்மைத் துரத்தி விட்டுவிட்டார். மனதிற்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. மழபாடியாரே! இந்த விவகாரம் நாகையில் தொடங்கிய நாள் முதல் இந்தக் கணம் வரை நாமிருவரும் எத்தனையெத்தனை சிக்கல்களை எத்தனையெத்தனை விசித்திரமான அனுபவங்களை எதிர்கொண்டு விட்டோம்? நடந்த சம்பவங்களனைத்தும் ஏதோ காதையில் வருவது போலல்லவா நிகழ்ந்து கொண்டிருக்கின்றன?"

"உண்மைதான். திடீரென்று நம்மைக் கழிக்குடிக்கு வரச் சொல்லி ஓலை வரும் என்பதை நான் சற்றும் எதிர் பார்க்கவில்லை. பெருஞ்சாலையிலிருந்து நேராகக் காந்தளூருக்குத்தான் செல்வோம் என்றுதான் எண்ணியிருந்தேன்."

"அதிலும் இது ஏதோ பிரத்யேக அழைப்பல்ல. சோழ இராஜாங்கத்தின் நேரடி உத்தரவு என்பதைக் கவனித்தீர்களல்லவா? சோழ முத்திரையுடன் கூடிய இந்த ஓலையை யார் அனுப்பியிருப்பார்கள்? நம்மை வழி நடத்திக் கொண்டு முன்னால் செல்லும் அந்த வீரரைக் கேட்போமா?"

"ஏற்கனவே முயற்சித்து விட்டேன். நமது எல்லாக் கேள்விகளுக்கும் கழிக்குடிக் கடற்கரையில் பதில் கிடைக்கும் என்பதைத்தான் அவர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதிகப்படியாக ஒரு வார்த்தை கூடப் பேச அவருக்கு அனுமதியில்லை போலும்."

"அந்த முத்திரை இராஜராஜப் பல்லவராயருடையதா என்ன?"

"தெரியவில்லை. அவருடைய முத்திரையில் குவளாலபுரத்து அரண்மனை இடம் பெற்றிருக்கும்."

"இன்னும் சற்று நேரம் பொறுத்திருந்தால் ஓலை அனுப்பியவர் யார் என்பது தெரிந்து போகிறது!"

ஆளரவம் அதிகமின்றி அமைதியாகக் காணப்பட்ட கழிக்குடிக் கடற்கரையில் அவர்கள் முற்றிலும் எதிர்பாராத சில ஆச்சரியங்கள் காத்திருந்தன.

26. ஐந்தறிவும் ஆறறிவும்



"என்ன ஆயிற்று உனக்கு? எதற்காக இப்படி முரண்டு செய்கிறாய்? ம்...?"

பிடறியை அன்புடன் அழுத்தமாகத் தடவியபடி தன்னிடம் பேச்சுக் கொடுத்த பேரரசரை அந்த வெண்ணிறப் புரவி வாஞ்சையுடன் ஒரு முறை முகர்ந்து பார்த்தது. 'புஸ்... புஸ்...'சென்று வெளிப் பட்ட மூச்சுக்காற்றால் அதன் நாசி விடைத்து விடைத்து அடங்கியது. கண்களிலிருந்து மெல்லியதாக நீர் வடிந்து கொண்டிருந்தது. கால்கள் நிலையின்றி அங்குமிங்கும் தவித்துக் கொண்டிருந்தன. காதுகள் எச்சரிக்கையுடன் குத்திட்டு நீண்டிருந்தன. வால் இடைவிடாமல் வலமும் இடமுமாக ஆடியது.

கம்பநாட்டாழ்வார் வர்ணிக்கும் புரவிகளைப்போல்[30] நூல்வருந்தகையதாய் நுனிக்கும் நோன்மையுடனும் சால்பெரும் செவ்வியுடனும் ஜாதிக்குதிரைகளுக்கே உரிய இலட்சணங்களாகச் சொல்லப்படும் ஐந்து சுழிகளும்[31] அமையப்பெற்று மிகுந்த கம்பீரத்தோடும் வனப்போடும் காட்சியளித்த அந்த இராஜபோகப் புரவி 'என் பேச்சைக் கேள். தயவு செய்து அந்த இரதத்தில் மட்டும் என்னைப் பூட்டி விடாதே!' என்று தனது எஜமானனைக் கெஞ்சாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது.

அந்த விடிகாலை நேரத்தில் பொழுது முழுவதுமாகப் புலர்வதற்கு முன்பாகப் படைகளைக் கிளப்பிவிட வேண்டும் என்று முடிவு செய்து அனைவரும் ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில்தான் பேரரசரின் புரவி முரண்டு பிடிக்கத் துவங்கியது. முதல் நாளைப் போலவே அன்றும் அந்தப் புரவியை ஒருவராலும் இரதத்தில் வைத்துப் பூட்ட

---

[30] கம்ப இராமாயணம். பா எண். 1230.
[31] நெற்றியில் ஒன்று. முழங்கால்களின் கீழ் நான்கு.

முடியவில்லை. கனைத்தும் கால்மாறி நின்றும் ஓடியும் இழுத்தும் கடித்தும் தன்னுடைய பலத்த எதிர்ப்பைப் பதிவு செய்த அந்தப் பிராணியின் மீது சாட்டையை வீசும் உரிமை பேரரசரைத் தவிர வேறொருவருக்கும் கிடையாதாகையால் அதன் அட்டகாசத்தை திருமெய்க்காவல் வீரர்கள் மிகுந்த பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்கள்.

செய்தி அருள்மொழிவர்மரின் காதுகளைச் சென்றடைய, அவரே நேரில் வந்துவிட்டார். அந்தப் புரவியின் மீது அவருக்குச் சொல்லவொண்ணாத பாசம் இருந்தது. இரதத்தின் சேணத்தை அருகில் கொண்டுவரும் போதெல்லாம் அதன் அவஸ்தை அதிகரிப்பதை உணர்ந்தவர், உடனடியாக மாராயருக்குச் சொல்லியனுப்பினார். அடுத்த சில நிமிடங்களில் அடித்துப் பிடித்துக்கொண்டு வந்து சேர்ந்தார் மாராயர்.

"என்ன? என்ன ஆயிற்று அரசே?"

"நேற்று நடந்ததைப் போலவே இன்றும் அதே சிக்கல். நமது புரவியை இரதத்தில் வைத்துப் பூட்ட முடியவில்லை. விடாமல் முரண்டு பிடிக்கிறது!"

"அப்போது இன்றைக்கும் புரவிப் பிரயாணம்தானா?"

"இல்லை. இந்தச் சிக்கலை இங்கேயே இப்பொழுதே தீர்த்துக்கொண்டு விடுவது நல்லதென்று நினைக்கிறேன். மேற்கொண்டு வளரவிடுவது நல்லதல்ல. நீங்கள் என்னுடைய கொடியை உயர்த்திப் பிடித்தபடி கோஷங்களை எழுப்பிக் கொண்டு முன்செல்லுங்கள். நமது படைவீரர்கள் நானும் உங்களுடன் பயணப்படுவதாகவே எண்ணிக்கொள்ளட்டும்.

நான் இங்கேயே சிறிது நேரம் தங்கி வெளிச்சம் வந்ததும் இந்த விவகாரம் என்னவென்பதை கவனித்து விட்டு நமது படைகளுக்குப் பின்னால் வரும் வைத்தியர் பட்டாளத்துடன் சேர்ந்து வருகிறேன். திருமெய்க்காப்புப் படை வீரர்கள் இருபது பேர் மட்டும் என்னுடன் பாதுகாவலாக இங்கு இருக்கட்டும்."

"இந்தப் பாண்டிநாட்டுப் பிரதேசத்தில் அத்துவானக் காட்டுவெளியில் தங்களை வெறும் இருபது பேருடன் விட்டுவிட்டுச் செல்வது அத்தனை சிலாக்கியமானதாகத் தோன்றவில்லையே?"

"நீங்களாகக் கூறினாலொழிய நான் பின்தங்கி வரப் போவதை ஒருவரும் அறியப் போவதில்லை. மீறிப்போய் ஏதாவது ஆபத்தென்றால் ஒரு சங்கை முழங்கச் செய்கிறேன். உடனடியாக ஒரு படையைத் திருப்பி அனுப்புங்கள்!"

"ஒரு புரவி சண்டித்தனம் செய்கிறது என்பதற்காகத் தாங்களே இத்தனை தூரம் மெனக்கெட வேண்டுமா?" என்று தாங்க மாட்டாமல் வினவினார் மாராயர். சாட்டையால் நான்கு இழுப்பு இழுத்தால் வாயை மூடிக் கொண்டு படிந்துவிட்டுப் போகிறது கழுதை! என்று தோன்றியது அவருக்கு.

"பிரச்சனை புரவியில் அல்ல என்று தோன்றுகிறது. என் புரவியை நான் நன்றாக அறிவேன். இது வேறு சிக்கல். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உடனடியாகக் கிளம்புங்கள். தாமதம் வேண்டாம்."

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் மனமேயில்லாமல் மாராயர் படைகளை நடத்திக் கொண்டு செல்ல, அந்தப் பிரதேசம் மீண்டும் எல்லையற்ற அமைதியில் உறைந்து போயிற்று. பேரரசருடன் உடன்நின்ற படைவீரர்கள் அவரது கட்டளைக்காகக் காத்து நின்றார்கள்.

கிழக்கு வானில் வெளிச்சம் பரவும் வரை கண்மூடி மௌனத்தில் ஆழ்ந்திருந்த அருள்மொழிவர்மர் சட்டென்று எழுந்து நின்றார்.

"வீரர்களே! இந்த இரதத்தில் பூட்டப்பட்டுள்ள மற்ற இரு புரவிகளையும் சேணத்திலிருந்து அவிழ்த்து விடுங்கள்."

அவ்வாறே புரவிகள் அவிழ்க்கப்பட்டன.

"உங்களில் இரதப் பரீட்ஷையில்[32] சிறந்தவர்கள் யார் யார்?"

நான்கைந்து வீரர்கள் முன்வந்தார்கள்.

"நீங்கள் நால்வரும் இரதத்தின் அடிக்கட்டைகளைச் சோதியுங்கள். வண்டியின் அச்சுக்களையும் ஆரங்களையும் நன்கு சோதியுங்கள். இண்டு இடுக்கு விடாமல் இரத்தின் அத்தனை பாகங்களையும் சோதித்தறியுங்கள்!"

---

[32] ஆய கலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்றாக விளங்கியது இரதப்பரீட்சை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்க்காவல் வீரர்கள் உடனடியாக வேலையில் இறங்கினார்கள். பல நிமிட நேர சோதனைக்குப்பின் அவர்களது முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

"எல்லாமே நன்றாகத்தான் இருக்கின்றன பிரபோ!"

"அப்போது இரத்தின் மேலேறி நின்றுதான் சோதனை செய்ய வேண்டும்!"

அரசரின் கட்டளையைக் கேட்ட வீரர்களின் முகத்தில் கலவரம் படிந்தது. ஏனெனில் பேரரசரின் இரதத்தில் கால் பதித்து ஏறும் உரிமை அவரைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது.

"தயங்காதீர்கள். உடனடியாக உங்களில் ஒருவன் மட்டும் இரதத்தில் ஏறி நின்று சோதனை செய்யுங்கள்!"

திருமெய்க்காப்பு வீரர்களில் ஒருவன் மிகுந்த தயக்கத்துடனும் பணிவுடனும் தட்டுத் தடுமாறி ஏற முயல்வதைக் கண்டவர், அவனை உற்சாகப்படுத்தி ஏறச் செய்தார். அடுத்த பல நிமிடங்கள் அந்த சோதனையில் கழிந்தன.

"இரதத்தின் மேற்பகுதியும் நன்றாகத்தான் இருக்கிறது பிரபோ!"

அருள்மொழிவர்மரின் முகம் ஆழ்ந்த சிந்தனைக்கான அறிகுறியைக் காட்டி நின்றது. கிழக்கு வானில் சூரியன் மெல்ல உதயமாகிக் கொண்டிருந்தான். பளீரென்ற அவனது ஒளிக்கிரணங்கள் இரதத்தின் மேல் நேராக விழுந்தன. இரதத்தில் தங்க முலாம் பூசப்பெற்றிருந்த பல பாகங்கள் அந்த ஒளியில் தகதகவென்று பளபளத்தன.

"சரி. கீழே இறங்கு."

அவன் இரதத்திலிருந்து கீழிறங்கும்போது தன்னைப் போல் அதன் இருபுறங்களிலும் அமைந்திருந்த சிறு பக்கத் தூண்களைப் பிடித்துக் கொண்டு இறங்காமல் நேராகத் தொப்பென்று குதித்தபடி கீழே இறங்கியதைக் கவனித்தார் அவர். இரதத்தில் ஏறும்போதும் இவ்வாறு தாவியபடிதான் மேலேறினான் என்பது அவரது நினைவிற்கு வந்தது. தாம் வழக்கமாகக் கரங்களைப் பதிக்கும் இடத்தை ஒரு மரியாதை நிமித்தம் தொடவில்லை போலும்.

மெய்க்காவல் வீரன் இறங்கியதும் இரதத்தின் அருகில் ஒரு முறை வந்து நின்றார். இரதத்தின் சகல பாகங்களையும் அவரது கூரிய கண்கள் நிதானமாக நோட்டமிட்டன. ஆழ்ந்த பெருமூச்சொன்று அவரது நாசியிலிருந்து வெளிப் பட்டது.

* * * * * * * *

படைகள் காட்டுப் பகுதியிலிருந்து கிளம்பிவிட்ட அந்த விடியல் நேரத்தில் வில்வண்டியில் கண்களிரண்டையும் மூடியபடி பயணப்பட்டுக் கொண்டிருந்த பலதேவனின் மனக்கண்களில் ஒரு மரஉருளை காட்சியளித்துக் கொண்டிருந்தது. நன்கு கடைந்த தேக்கு மரத்தாலான பளபளப்பான பெரிய உருளை அது. அதில் நிரந்தரமாகப் பதிந்திருக்கும் பேரரசரின் கைரேகைகள்...

அவன் பணிபுரிந்து கொண்டிருந்த வீரசோழன் புரவி இலாயத்திற்குப் பேரரசரின் இரதத்தை மெய்க்காவலர்கள் அவ்வப்போது ஓட்டி வருவதுண்டு. நல்ல ஜாதிக் குதிரைகளுடன் மற்ற புரவிகளைக் கூட்டி அவற்றுக்குப் பிறக்கும் குட்டிகளை சிறு பிராயம் முதல் போருக்காகத் தயார் செய்வார்கள். அம்மாதிரியான சில சந்தர்ப்பங்களில் பலதேவன் அந்த இரதத்தை மிக அருகாமையில் நின்று கவனித்திருக்கிறான். அதன் சகல பாகங்களும் அவன் மனதில் நிரந்தரமாகப் பதிந்து விட்டன. அந்தப் பரிச்சயத்தைக் கொண்டுதான் ஒரு பயங்கரத் திட்டம் அவனால் தீட்டப்பட்டது. ஒருவருக்கும் இன்னமும் தெரியாத இரகசியத் திட்டம்.

பைராகியார் கடந்த பௌர்ணமியன்று அவனை இரகசியமாகச் சந்தித்தபோது அவனிடம் ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டார்.

'பலதேவா! அருள்மொழிவர்மன் நாஞ்சில் நாட்டு எல்லையை ஒரு போதும் தொட்டுவிடக் கூடாது. அதற்குமுன் அவன் பரலோகத்திற்குப் பயணப்பட்டுவிட வேண்டும். இந்த வேலையைக் கச்சிதமாகச் செய்து முடிக்கும் நிலைமையில் உள்ளவன் நீ ஒருவன்தான்!'

ஐங்கரனின் பகல்நேரக் கனவுகளில் அவ்வப்போது தானும் ஒரு பெருந்தனக்காரனாக வளர்வது போலவும் ஆள் அம்பு சேனைகளுடன் அதிகாரம் செலுத்தியபடி மாட

மாளிகையில் பெண்டு பிள்ளைகள் புடைசூழ வலம் வருவது போலவும் காட்சிகள் தோன்றுவதுண்டு. அந்தக் கனவு நனவாக இது ஒரு அருமையான வாய்ப்பு. ஆபத்து அதிகம்தான். மாட்டிக் கொண்டால் உயிருக்கே உத்திரவாதமில்லை. என்றாலும் இந்த அரிய வாய்ப்பைத் தவற விடுவதற்கில்லை.

இரவு பகலாக யோசித்து யோசித்து அந்தத் திட்டத்தைத் தீட்டினான். ஒருவருடனும் கலந்தாலோசிக்க வில்லை. இரண்டாவது மனிதருக்கு இந்த விவகாரத்தில் தான் ஈடுபட்டிருப்பது தெரிந்தாலே ஆபத்து. எப்படியாவது விஷயம் வெளியில் கசிந்துவிடும்.

தஞ்சையில் அந்தப் பணியைச் செய்து முடிக்க நினைப்பது சிலாக்கியமானதல்ல என்பது அவனுக்கு விரைவில் புரிந்தது. அரண்மனையின் வாயிலில் திருமெய்க்காப்பு வீரர்களின் பாதுகாவலில் நிறுத்தப் பட்டிருக்கும் பேரரசரின் இரதத்தை அவன் நெருங்குவ தென்பதே இயலாத காரியம். அவர்களாகப் பார்த்து இரதத்தை புரவி இலாயத்திற்கு ஓட்டிக்கொண்டு வந்தால் தான் உண்டு. அப்படியே வந்தாலும் இரதத்திற்கருகில் குறைந்த பட்சம் ஒரு வீரனாவது காவலுக்கு நின்று கொண்டிருப்பான்.

ம்ஹூம்!

தஞ்சையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முயல்வது பைத்தியக்காரத்தனம். அதனால் படைகளுடன் கிளம்பிச் சென்று, வழியில் கண்ணும் கண்ணும் வைத்தாற் போல் காரியத்தை முடித்தால்தான் உண்டு. ஆகத் தெற்கு நோக்கிச் செல்லும் படைகளுடன் சேர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

பார்க்க வேண்டிய மனிதர்களைப் பார்த்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தான். சோழர் படைகள் வெளி தேசத்திற்குப் பயணப்படும்போது புரவிகளைப் பார்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு இலாயத்திலிருந்துமே ஆட்கள் செல்வது வழக்கம்தான் என்பதால் அது ஒரு பெரிய காரியமாக இல்லை.

படைகள் தஞ்சையிலிருந்து கிளம்பிய நாள் முதல் அவனே வலுவில் முன்வந்து இரதங்களையும் அவற்றில் பூட்டியிருந்த புரவிகளையும் பார்த்துக் கொண்டான்.

ஒவ்வொரு நாள் மாலையும் முதுகு ஒடிகிற வேலை. என்றாலும் கவனித்துத்தான் ஆக வேண்டும்.

மதுரையில் படைகள் தண்டூன்றியிருந்த அன்று இரவு வீரர்கள் அனைவரும் வீரசோழ நாடகப்படையின் கூத்தைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்த வேளையில்தான் அவனால் தனது திட்டத்தைச் செயல்படுத்த முடிந்தது. இனி மிச்சமிருக்கும் காரியங்களும் ஜெயமாகும்வரை பொறுமை காக்க வேண்டியது அவசியம். மடத்தனமாக 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்பதைப்போல் நாமே மாட்டிக் கொள்ளக் கூடாது. சொல்லப்போனால் இனி இரதங்களின் பக்கமே தலை வைத்துப் படுக்கக்கூடாது என்றுதான் தோன்றுகிறது.

நேற்று முழுவதும் ஏனோ அரசர் இரதத்தில் பயணப் பட்டதாகத் தெரியவில்லை. என்ன காரணமென்று தெரியவில்லை. ஆனால் தொடர்ந்து இத்தனை தூரம் புரவியில் பயணிப்பதை அவர் விரும்ப மாட்டார். இன்று நிச்சயம் இரதத்தில் அவர் ஆரோகணித்தேயாக வேண்டும். அப்படி அவர் இரதத்தில் ஏற முற்படும்போது...

பொறு. பொறுமைதான் வாழ்க்கையில் மிக அத்தியாவசியமான குணம். பொறுத்தவர் பூமியாள்வார்.

* * * * * * * *

அருள்மொழிவர்மர் மிகுந்த எச்சரிக்கையுடன் அந்தக் காட்டு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த தனது இரத்தை அளவுக்கு மீறிய நிதானத்துடன் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். சற்றே உயர்ந்து காணப்பட்ட அந்த இரதத்தின் பின்புறம் அவர் ஏறுவதற்கு வசதியாக மூன்று மரப்படிகள் கொண்டதொரு சிறிய மடக்கு ஏணி கீழ்ப்புறம் இணைக்கப்பட்டிருந்தது. அந்த ஏணியை மெய்க்காவல் வீரனொருவன் விரித்து வைத்தான்.

இரதத்தில் ஏற முற்பட்ட அவரது வீரக்கழல் அணிந்த இடது பாதம் முதல் படியில் பதிந்தது. அடுத்த படியில் ஏறுமுன் இரதத்தின் கடைந்த தேக்குமரப் பிடி கொண்ட தூண் உருளைகளை நோக்கி அவரது கரம் இயல்பாக நீண்டது. அவ்வாறு நீண்ட கரம் உருளைகளில் பதியாமல் அப்படியே தயங்கி நின்றுவிட்டது.

அந்த இரதம் அவரது உயரதசமானங்களைக் கருத்தில் கொண்டு அவருக்காகவே தச்சர்களால் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்ததால் அவரது கையளவிற்கு அந்த உருளைகள் சரிவர அமைக்கப்பட்டிருந்தன. அவரது கரங்கள் அடிக்கடி உராய்ந்ததினால் அந்த உருளைகளில் குறிப்பிட்ட சில இடங்களில் வண்ணப்பூச்சு சற்றே அழிந்து காணப்படும். அப்படி வண்ணமழிந்துபோன உருளையின் இடங்களில்தான் அவரது விரல்கள் இயல்பாகப் படியும். ஆனால் இன்றோ?

படியில் வைத்திருந்த காலை உடனடியாகத் திரும்ப மீட்டுக் கொண்டவர் அருகிலிருந்த திருமெய்க்காவல் வீரனை நோக்கித் திரும்பினார்.

"இந்த இரதத்தின் பாதுகாவல் உங்கள் படையின் பொறுப்பில்தானே உள்ளது?"

"ஆமாம் பிரபோ!"

"இந்த இரதத்தைக் கடந்த இரு நாட்களில் வேறு எவராவது கையாண்டார்களா?"

"???"

"இந்த இரதத்தில் வேறு எவராவது ஏறினார்களா என்று கேட்கிறேன்!" என்று கோபம் தொனிக்காத ஆனால் கண்டிப்பான குரலில் மீண்டும் வினவினார் பேரரசர்.

"இல்லை பிரபோ! இரதத்தில் ஏறுவதற்கு ஒருவருக்கும் அனுமதியில்லை."

"பின் இந்தத் தூண் உருளைகள் இத்தனை தூரம் திரும்பி நிற்பது எங்ஙனம்? எத்தனை தூரம் பயணித்தாலும் இவை திரும்ப மாட்டா. தற்போது இதனைத் திருப்பி வைத்திருப்பது... ஆஹா! கொஞ்சம் பொறு.."

பரபரப்புடன் இரதத்தைப் பக்கவாட்டில் அணுகி அந்த உருளையின் பின்புறத்தைச் சோதித்தவர், அங்கே சிறிய நெருஞ்சி முள்ளின் அளவுக்குக் கூர்மையாக ஏதோ நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

"இங்கே வா! உன்னுடைய தலைப்பாகையை அவிழ்த்துக் கரத்தில் கட்டிக்கொள். பின் இந்த உருளையைத் திருப்பித் திருப்பிக் கழற்று! கவனம். உருளையின்

கூர்மையான மேல் பகுதியை மட்டும் பிடித்துக்கொள். கீழ்ப்பகுதிக்கு வராதே..."

உருளை முழுவதுமாகக் கழற்றப்பட, அதில் ஒரு சிறிய ஆணியின் கூரியமுனை அழுத்தமாகச் சொருகப் பட்டிருப்பது தெரிந்தது. அப்படி நீட்டிக் கொண்டிருக்கும் சிறுமுனையில் கருமையாக ஏதோ தடவப்பட்டிருந்தது.

"மிகக் கடுமையான மலைநாட்டு மூலிகை விஷம். இன்னொரு பக்கம் இருக்கும் உருளையையும் கழற்று!"

பேயறைந்த முகத்துடன் அந்த மெய்க்காவற்படை வீரன் மற்றொரு உருளையைக் கழற்ற, அதிலும் விஷம் தடவப்பட்ட கூரிய ஆணி.

சரேலென்று திரும்பிப் பேரரசர் அந்தக் காவற்படை வீரனைப் பார்த்த பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன. கடமையுணர்வு மிக்க அந்த வீரனின் கண்களில் இயல்பாக நீர் திரண்டது. "அரசே!" என்று தழுதழுத்தபடி மண்டியிட்டு ஏதோ கூற முயன்றான் அவன்.

"ஒன்றும் கூறத் தேவையில்லை. விடியற்காலை வேளையில் படைகளுடன் கிளம்பும் அவசரத்தில் இந்த ஆணி என் கரங்களைக் கீறியிருந்தால் நிச்சயம் அதனைப் பொருட்படுத்தியிருக்கத் தோன்றாது. ஒரே நாழிகையில் விஷம் உதிரத்தின் வழியாக உடலில் பரவிவிடும். பிறகு..."

"பிரபோ..!" என்று காலில் வீழ்ந்தான் அந்த வீரன். அவனைத் தொடந்து அந்த ஒட்டுமொத்த மெய்க்காவற் படையும் முழங்கால் மடக்கித் தரை தொட்டுத் தலை வணங்கி நின்றது. தாம் ஏற்றுக் கொண்ட கடமையிலிருந்து தவறிவிட்ட பெருவருத்தம் அந்த வீரர்களின் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது.

குனிந்து நின்ற வீர முகங்களைப் பேரரசர் அமைதியாக நோக்கி நின்றார். வார்த்தைகளால் ஒரு போதும் வெளிப்படுத்தவே முடியாத சில உணர்வுகளை அங்கே அவர் தமது கனத்த மௌனத்தால் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

"பிரபோ.. இந்தப் பழிக்காக... நாங்கள்..." - அந்த மெய்க்காவல் வீரர்களில் ஒருவன் குற்றத்தை ஏற்றுக் கொண்டு குத்துவாளை வயிற்றில் சொருகிக் கொள்ளத் தயாராக நின்றான்.

"ஒன்றும் செய்ய வேண்டாம். வீரர்களே! எச்சரிக்கை. இங்கு நடந்த சம்பவங்கள் எதுவும் என் அனுமதியில்லாமல் வெளியில் ஒருவருடைய காதுகளுக்கும் செல்லக்கூடாது. இது எமது கண்டிப்பான உத்தரவு! நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். இரதத்தை இன்றிரவு சற்று அஜாக்கிரதையாக விடுங்கள். ஒரே ஒரு வீரனை மட்டும் காவலுக்கு வையுங்கள். அவனையும் சற்று அசட்டையுடன் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு..."

"புரிந்து கொண்டோம் பிரபு. எமது படைக்கு ஏற்பட்டு விட்ட இந்தக் களங்கம் எமது கரங்களாலேயே துடைக்கப் படும். இது தங்களின் மேல் ஆணை!"

பேரரசரின் பாதங்களுக்கருகில் அந்த வீரன் மண்ணை ஓங்கி அறைந்தான். அதனைப் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக மற்ற வீரர்களும் மண்ணைத் தங்களின் வலக் கரத்தால் ஓங்கி அறைந்தார்கள்.

"இந்த உருளைகளில் உள்ள ஆணியை நீக்கிவிட்டு மீண்டும் சொருகி விடுங்கள். நண்பகல் நேரத்தில் நாம் நமது படைகளுடன் இணைந்து கொள்வோம்."

நடந்த சம்பவங்கள் அனைத்தையும் மௌனமாக நோட்டமிட்டுக் கொண்டிருந்த அரசரின் இராஜபோகப் புரவி திடீரென்று கால்களை உயர்த்தி நின்று 'பிளீ... ஹிஹி..' என்று உற்சாகமாகக் கனைத்தது. பெரியதொரு ஆபத்திலிருந்து தனது எஜமானனைக் காப்பாற்றிவிட்ட சந்தோஷம் அதன் குரலில் தெளிவாகத் தெரிந்தது. அதனைத் தட்டிக்கொடுத்து ஒரே தாவலில் அதன் சேணத்தைப் பிடித்தபடி மேலேறினார் அருள்மொழிவர்மர்.

சற்று தொலைவில் வைத்தியர் குழாத்தின் வண்டிகள் அவர்களை நெருங்கிக் கொண்டிருப்பதை வானில் எழுந்த புழுதி அறிவித்தது.

27. காரியம் முடிந்தது



அடிக்கப்போகும் பெரும்புயலுக்கு முன் தோன்றும் அமைதியைப் போல் ஆரைவாய்மொழிக் கோட்டை அந்த முன் மாலை நேரத்தில் பேரமைதியில் உறைந்து கிடந்தது. காற்று அதிகமின்றி மரங்களும் செடிகொடிகளும் இதரத் தாவரங்களும் கூட ஏதோ மந்திரம் போட்டாற்போல் அசைவற்றுக் காணப்பட்டன. இரை தேடி நீண்ட நேரமாக வானில் அலைந்து திரிந்து கொண்டிருந்த பருந்தொன்று, பூமியில் ஊர்ந்து கொண்டிருந்த ஏதோ ஜந்துவைக் கண்டுவிட்ட சந்தோஷத்தில் இறக்கைகளைக் குறுக்கிக் கொண்டு சரேலென்று பூமியை நோக்கிப் பாய்ந்தது.

பகவதியம்மன் பெருவாயிலின் உச்சியில் நின்றபடி இந்தக் காட்சிகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்த விக்கிரமாதித்ய வரகுணர் பார்வையை வேறு திசையில் திருப்பினார். கோட்டைக்குள் போருக்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. இன்னும் இரண்டே நாட்களில் எதிரிகளின் படைகள் ஆரைவாய்மொழியை அடைந்துவிடும் என்று ஒற்றர்கள் செய்தியனுப்பியிருந்ததால் வரப்போகும் படைகளை எதிர் நோக்கி நாஞ்சில் நாட்டின் காவல் வீரர்கள் அனைவரும் தங்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

கோட்டையின் மீதமைந்திருந்த பல்வேறு சாளரங்களிலும் நடமாட்டங்கள் அதிகரித்திருந்தன. ஒவ்வொரு சாளரத்திலும் குறைந்த பட்சம் நான்கு வீரர்களைக் கொண்ட ஒரு குழுமம் நிறுத்தப்பட்டிருந்தது. கோட்டையின் பிரதான நுழைவாயிலான பகவதியம்மன் பெருவாயிலின் இருமருங்கிலும் அமைந்திருந்த எட்டு சாளரங்களில் மட்டும் அதிகப்படியான வீரர்கள் காணப் பட்டார்கள். அவ்வீரர்களில் பெரும்பாலானோர் தத்தம் வில்லுடன் திகழ்வதைப் பார்த்தால் அவர்கள் வள்ளுவ நாடாழ்வாரின் வில்லியர் படையைச் சேர்ந்த வீரர்கள் என்பது தெளிவாகும்.

ஒவ்வொரு சாளரத்திற்கருகிலும் அம்புகள் மலை போலக் குவித்து வைக்கப்பட்டிருந்தன. கோட்டையைச் சோழர்படை நெருங்க நெருங்க வில்லியர்தம் விற்களிலிருந்து அம்பு மழை பொழியத் துவங்கும் போலும்.

பெரிய சாளரங்களினருகே எண்ணைக் கொப்பரைகளும் அவற்றினருகே காய்ந்த விறகுகளும் சுள்ளிகளும்கூட அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்நாளில் அம்புகளின் நுனியில் துணியைச் சுற்றி எண்ணையில் முக்கியெடுத்து நெருப்புப் பற்ற வைத்து அந்நெருப்புக் கங்குகளை அம்புகளாக எதிரிப்படையின் யானைகளின் மீது எறிவார்கள். தீப்புண்ணினால் பாதிக்கப்பட்ட யானைகள் அலறியடித்துப் பல்வேறு திசைகளிலும் பாய்ந்தோடி தத்தம் படை வீரர்களையே சர்வ நாசம் செய்யும்.

கோட்டையின் இருபுறங்களிலும் அடர்ந்து வளர்ந்திருந்த மலைக்காடுகள் வெளிப்பார்வைக்கு அமைதியாகத் தெரிந்தாலும் அக்காட்டினுள்ளும் போருக்கான ஆயத்தங்கள் வேகமாக நடைபெற்றுக் கொண்டுதானிருந்தன. காடுகளினூடே ஆங்காங்கே இரகசிய மறைவிடங்களில் வீரர்கள் தங்கும் கூடாரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. சிற்சில இடங்களில் உருட்டி விடுவதற்குத் தயாராகப் பெரும்பாறைகள் மேலேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. உருண்டு வரும் பாறைகள் மரம் செடி கொடிகளால் தடைபடாது வேகத்துடன் கீழே மோதுவதற்கு ஏற்றவாறு மலைப்பாதைகள் செப்பனிடப் பட்டுக்கொண்டிருந்தன. மரங்களின் அடர்த்தி குறைவாக இருக்கிறதே என்று அந்த இடங்களில் எதிரிப்படைகள் முன்னேறத் துவங்கினால் அவர்களின் கதி அதோ கதிதான் என்பது பாறைகளின் அளவைப் பார்த்தாலே தெரிகிறது.

சுருக்கமாகச் சொல்வதானால் எப்பேர்ப்பட்ட கடுந் தாக்குதலையும் சமாளிக்கும் வலிமையையும் திண்மையையும் ஆரைவாய்மொழிக் கோட்டை அன்று ஒருங்கே பிரதிபலித்தது.

தம்மைச் சுற்றிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த இத்தகைய ஏற்பாடுகளால் திருப்தி அடைந்திருந்த வரகுணர் போருக்குப் பின் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்களைப் பற்றி நினைக்கலானார். இந்தப் போரில் அவர்கள் வெற்றியடைந்தால் சந்தேகமேயில்லாமல் அந்தப் பெருமை ஆரைவாய்மொழிக் கோட்டைக்கும் வள்ளுவனாருக்கும்

தான் போய்ச்சேரும். அதுவே நியாயமும் கூட. இத்தனை பெரிய கோட்டையும் அதனைச் சுற்றி இருபுறங்களிலும் எழும் இயற்கையான மலைச்சிகரங்களும் வள்ளுவனாரின் வீரர்களும் இல்லையேல் மலைநாடு சோழனுக்கு இரையாவதை ஒருவராலும் தடுக்க முடியாது.

இந்த வெற்றியை மெல்ல மெல்லத் நாம் நமதாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு மற்ற நாடுவாழிகளின் துணை மிக அவசியம். முக்கியமாக முதலில் புறத்தாய நாடுவாழியை நம் பக்கம் இழுக்க வேண்டும். பின் மெல்ல மெல்ல ஒவ்வொருவராகச் சேர்த்து வேணாடு வரை சென்றுவிட வேண்டும். முந்தைய ஆய்நாட்டில் வேணாடு கடைசிவரை சேரவேயில்லை. அதனை எப்பாடுபட்டாவது இம்முறை இணைத்துவிட வேண்டும்.

இவையனைத்தும் நடந்துவிட்டால் சேரமான் பெருமாள் தமக்கு நிகரான ஒரு ஆசனத்தில் தம்மை எதிர்கொண்டழைத்தாக வேண்டும். அதற்குப்பின் சேரமானுடன் ஒப்பந்தம் பேசலாம்.

எம்முடன் நீர் இணைந்து கொள்ளும். மலைநாட்டின் இரு பெரும் வேந்தர்கள் தனித்து இயங்குவது எதிரிகளுக்குத்தான் சாதகமாய் முடிந்திருக்கிறது. இனியும் அந்த நிலைமை வரவேண்டாம். நமது நட்பை உறுதி செய்யும் விதமாக உமது பெண்ணை கேரள இளவரசியாரை நாம் திருமணம் செய்து கொள்கிறோம். இருவருமாகச் சேர்ந்து சோழநாட்டை முழுங்குவோம். தஞ்சையும் நாகையும் குடந்தையும் உறந்தையும் எமக்கு அத்துப்படி. அவர்களின் ஆயுதங்கள், தாவடிகள், கொட்டாரங்கள், போர் முறைகள், வீரர்கள் என்று அனைத்தும் எமக்குத் துல்லியமாகத் தெரியும்.

அந்தப் போரை நாமே முன்னின்று நடத்துகிறோம். வெற்றியை உம்முடன் பகிர்ந்து கொள்கிறோம். எமக்குத் துணையாக உமது ஒன்றுகுறை ஆயிரத்தவர் படைகளையும் நான்கு சாலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களையும் அனுப்பி வையும். மறுமுனையிலிருந்து பாண்டிப்படைகளும் அவர்களுக்குத் துணையாக இலங்கைப் படைகளும் வந்து சேரும். அதனைத் தானைத் தலைவர் கவனித்துக் கொள்வார்.

சோழநாட்டை சர்வநாசம் செய்து தொண்டை மண்டலம் வரை முன்னேறுவோம். சோணாடு

கொண்டருளிய ஆய்வேள் என்கிற பட்டப்பெயருடன் பழையாறையில் நாம் மீண்டும் பட்டாபிஷேகம் செய்து கொள்வோம். அப்படி நடந்தால் அந்த வைபவத்திற்குத் தாமே நேரில் வருவதாகத் தலைவர் தெரிவித்திருக்கிறார். அவரது கரங்களாலேயே பண்டைய சோழ மகுடம் எமது தலையில் வைக்கப்படும்.

வரகுணரின் கண்களுக்கெதிரே அந்தக் காட்சி மானசீகமாய் விரிந்தது. அந்தணர்களும் கிரமவித்தர்களும் தில்லை மூவாயிரவர்களும் கூடிநின்று சுருதி பிசகாமல் மந்திரங்கள் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வழிவழியாகச் சோழ மன்னர்களின் தலைகளை மட்டுமே அலங்கரித்துவந்த அந்தப் பண்டைய மகுடம் வரகுணரின் தலை மீது தானைத் தலைவரின் திருக்கரங்களால் மெல்ல அழுத்தப்படுகிறது. கங்கை யமுனை காவிரி என்று சகலவிதமான புண்ணிய நீர்த்தங்களிலிருந்தும் தருவிக்கப்பட்ட புனித நீரால் அவருக்கு மகுடாபிஷேகம் நடைபெறுகிறது. காதைக் கிழித்துவிடுவதுபோல் வாழ்த்தொலிகளும் ஜெய கோஷங்களும் நாற்புறங்களிலும் வானளாவ எழுகின்றன.

'சோணாடு கொண்டருளிய ஆய்வேள்... வாழ்க! வாழ்க!'

'சோழனின் குலமழித்த செவ்வேள்... வாழ்க! வாழ்க!'

'மாகோதைக் கோன் சேரமான் பெருமாளின் மருகர்.. வாழ்க! வாழ்க!'

வரகுணரின் தலை அவரையுமறியாமல் மெல்லச் சிலிர்த்துக் கொண்டது.

* * * * * * * *

விக்கிரமாதித்ய வரகுணர் இவ்வாறு தமது மனக்கண்களில் விரிந்த காட்சிகளில் மூழ்கியிருந்த அதே நேரத்தில் உற்சாகத்தின் உச்சியில் மிதந்து கொண்டிருந்தான் அவரது கையாளனான வீரசோழப் புரவி இலாயத்தின் களிழியன் பலதேவன். அடிக்கடி அவனது முகத்தில் ஒரு பெருமுறுவல் விரிந்து விரிந்து அடங்கியது.

நாம் சந்தேகப்பட்டது முற்றிலும் சரி. காரியம் கனகச்சிதமாக நடந்து முடிந்து விட்டது. எப்போது என்பது தெரியவில்லை. இன்று காலையில் நடந்திருக்கலாம். அல்லது நேற்றே முடிந்து விட்டதோ என்னவோ யார் கண்டது?

துராக்கிருகமான அந்தச் செய்தி படைவீரர்களிடையே பரவி கலவரம் உருவாகாமலிருக்கும் பொருட்டே மாராயன் ஏதோ மாய்மாலம் காட்டிக் கொண்டிருக்கிறான். பேரரசரின் கொடியை உயர்த்திப் பிடித்தபடி அவருக்கே உரிய கோஷங்களை எழுப்பிக்கொண்டு சென்றால் ஆயிற்றா? அவர் எங்கே? அவரது இரதம் எங்கே? மற்றவர்கள் கவனிக்காவிட்டாலும் நான் அதனைக் கவனித்து விட்டேன் மாராயா! அரசர் உன்னுடன் சர்வநிச்சயமாகப் பயணப்படவில்லை.

இன்னும் எத்தனை நேரம் இவ்வாறு வீரர்களை ஏமாற்ற முடியுமென்று நினைக்கிறாய்? இன்று இரவோ நாளை காலையோ சோழ வீரர்கள் பேரரசரின் தலை எங்குமே தென்படவில்லை என்பதை கவனித்துவிட மாட்டார்களா? அப்படியே அவர்கள் கவனிக்காவிட்டாலும் நானே ஒரு வதந்தியைக் கிளப்பிவிட மாட்டேனா?

அடிக்கடி அவனது காதுகளில் கேட்கும் பைராகியின் குரல் மீண்டும் ஒருமுறை ஒலித்தது.

"பலதேவா! இந்த ஆபத்தான காரியத்தைக் கண்ணும் கண்ணும் வைத்தாற் போல் நிறைவேற்றுவதற்கு ஒரு உபாயம் சொல்லித் தருகிறேன். இந்தா! இந்தக் குப்பியை பத்திரமாக வைத்துக்கொள். இதில் இருப்பது மிகக் கொடிய மலைநாட்டு மூலிகை விஷம். இதனை மட்டும் சரியாகப் பயன்படுத்தினாயானால் ஒருவரிடமும் அகப்பட்டுக் கொள்ளாமல் காரியத்தைக் கச்சிதமாக முடிக்கலாம். இந்த விஷத்தின் சிறு துளி மனித இரத்தத்திலோ உணவிலோ கலந்தாலே போதுமானது. மற்றதை அது பார்த்துக் கொள்ளும். உடலெங்கிலும் முதலில் மெல்லிய நடுக்கு ஜுரம் தோன்றும். பின் தலையில் நீர் கட்டிக் கொள்ளும். இருமலும் சளியும் மிகும். மூட்டுக்களில் இடைவிடாத வலி ஏற்படும். தலைமயிர் மெல்ல உதிரத் துவங்கும். இந்த வியாதி எந்தப் பச்சிலை மருத்துவத்திற்கும் பணியாது.

உதிரத்தத்தில் விஷம் கலந்த மூன்றாம் நாள் மரணம் சம்பவிக்கும். ஆனால் கடைசிவரை உடலில் விஷம் பரவியிருப்பதை ஒருவராலும் கண்டறிய முடியாது. இறந்த பிறகுகூட உடல் நீலம் பாரிக்காது. வைத்தியத்தில் எப்பேர்பட்ட கொம்பனாக இருந்தாலும் உயிரைக் காப்பாற்ற முடியாது போகும். கடைசிவரை ஏதோ விஷ ஜுரம் கண்டு இறந்து விட்டதாகத்தான் அனைவரும்

நினைத்துக் கொள்வார்களே தவிர ஒருவருக்கும் சந்தேகம் தோன்றாது."

அந்த விஷம் தன்னுடைய வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டது. நடுக்கு ஜுரம் ஏற்பட்டு விட்டதால்தான் பேரரசரால் படைகளுடன் சேர்ந்து வரமுடியவில்லை போலும். மீண்டும் சோழநாட்டிற்கே அவரைக் கொண்டு சென்று விட்டார்களா என்ன? அல்லது படைகளுக்குப் பின்னால் வந்து கொண்டிருக்கும் வைத்தியர் பட்டாளத்துடன் நிதானமாக அழைத்து வந்து கொண்டிருக்கிறார்களா? ஆம். அப்படித்தான் இருக்க வேண்டும். என்றாலும் நிச்சயப்படுத்திக் கொண்டு விடுவது நல்லது.

அன்று மாலை படைகள் நெல்வேலியின் புறம்படிப் பகுதிகளில் தண்டுன்றியதும் ஒருவரும் கவனியாத சமயத்தில் மெல்ல நழுவினான் தேவன். வைத்தியர் குழாம் சோழர் படைகள் தண்டுன்றியிருந்த இடத்திலிருந்து கணிசமான தூரத்தில் முகாமிட்டிருந்தது. வேகவேகமாக ஓடியும் நடந்தும் மூச்சிறைக்க அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

முகாமின் ஒரு ஓரத்தில் பேரரசரின் இரதமும் அவற்றில் பூட்டப்பட்டிருந்த புரவிகளும்தான் முதலில் அவன் கண்களுக்குத் தட்டுப்பட்டன. ஆக நாம் சந்தேகித்தது முற்றிலும் சரி! காரியம் கனகச்சிதமாக நிறைவேறி விட்டது. பலதேவா! நீ பெருந்தனக்காரனாகப் போகிறாயடா.. உன் அதிகாரத்தின் கீழ் தஞ்சையின் அத்தனை புரவி லாயங்களும் வரப்போகின்றன. நீ காலால் இட்ட பணியைத் தலையால் செய்து முடிப்பதற்குச் சேவகர்களும் வேளக்காரப் பெண்டுகளும் வந்து சேரப் போகிறார்கள். இனி உன் அதிகாரத்தைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது.

மிதமிஞ்சிய மகிழ்ச்சியாலும் பயத்தாலும் ஒரு பந்து வயிற்றிலிருந்து மேலெழும்பித் தொண்டையை அடைத்துக் கொண்டது. காரியம் முடிந்து விட்டது! காரியம் முடிந்து விட்டது! என்று அவனது பேராசை பிடித்த மனது பலமுறை குதூகலித்து அடங்கியது.

பொறு. பொறு. நிதானம். இந்தக் கட்டத்தில் மாட்டிக் கொண்டால் நம்மை விட முட்டாள் இந்த உலகத்திலேயே ஒருவனும் கிடையாது. இங்கே இன்னும் ஒருவரும் நம்மைக் கவனித்ததாகத் தெரியவில்லை. இரதத்திற்கருகிலும் ஒருவரையும் காணவில்லை. இருள் மண்டத்

துவங்கிவிட்டது. இப்படியே சப்தம் செய்யாமல் திரும்பி விடுவோமா? அல்லது ஏதாவது வேலை வெட்டி செய்வதைப்போல் சிறிது நேரம் போக்குக்காட்டி விட்டுப் பின்னர் திரும்புவோமா?

அவன் கடக்க வேண்டிய தூரம் மனதில் வந்து பயமுறுத்தியது. மீண்டும் ஒருமுறை மூச்சிறைக்க ஓடவேண்டுமானால் சிறிது நேரமாவது ஓய்வு தேவை. இந்த அவகாசத்தில் ஒன்றும் செய்யாமல் வெறுமனே நின்று கொண்டிருப்பதற்கு பதிலாக இரதத்தை அணுகிப் புரவிகளைச் சேணத்திலிருந்து அவிழ்க்கப் பார்ப்போம் என்று எண்ணியவன் இரதத்தை நெருங்கினான்.

அவன் அப்பகுதியை நெருங்கி வரவர, அங்கே மற்ற புரவிகளுடன் நின்றுகொண்டிருந்த பேரரசரின் வெண்புரவி மங்கிக் கொண்டிருக்கும் சிறு வெளிச்சத்திலும் அவனைக் கவனித்து விட்டது. மீண்டும் அந்தச் சண்டாளனா இரதத்தை நெருங்கி வருகிறான்? என்று நினைத்து வெகுண்ட அந்தப் பிராணி, காதுகள் விடைக்கக் கால்கள் இரண்டையும் பெரிதாக முன்தூக்கி ஒரு பெரிய கனைப்புக்குத் தயாரானது.

அதனைக் கண்ட பலதேவனின் சப்தநாடியும் ஒடுங்கி விட்டது. இழவெடுத்த சனியன்! இந்த வேளையில்கூட நம்மை அடையாளம் கண்டுகொண்டு விட்டது. தேவையில்லாமல் கனைத்து ஊரைக் கூட்டுகிறது. இரதத்தை நெருங்குவது இயலாத காரியம். அட, இதென்ன? வைத்தியர் குழாத்தின் வண்டிகளுக்கிடையே இத்தனை பெரிய கூட்டு வண்டி? ஓ! இதில்தான் ஒரு வேளை சோழனைப் படுக்கப் போட்டிருக்கிறார்களா என்ன?

ஒருவருக்கும் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காகத் திருமெய்க்காப்புப் படை வீரர்களைக்கூட அருகில் வைத்துக் கொள்ளவில்லை போலும். பேசாமல் இப்படியே திரும்பி விடலாமா? இல்லை கூட்டு வண்டிக்குள் ஒரே ஒரு முறை எட்டிப் பார்த்து உள்ளே சோழன் ஜுரத்தில் அனத்திக் கொண்டிருப்பதை நிச்சயம் செய்துகொண்டு விடலாமா?

தவிர்க்கமுடியாததொரு ஆர்வம் உந்தித் தள்ள, ஆபத்தானது என்று அறிந்தும் அந்தப் பெரிய வண்டியை மெள்ள நெருங்கினான் தேவன். வண்டியை நெருங்க நெருங்க உள்ளே சில பேச்சுக்குரல்கள் கேட்கத்துவங்கின. அருள்மொழியின் குரல் போலத்தான் தெரிகிறது. ஆனால்

நாம் எதிர்பார்த்ததைப்போல் ஜுரவேக உளறல்களாகத் தெரியவில்லையே? என்னதான் நடந்து கொண்டிருக்கிறது? இன்னும் சற்று நெருங்கி அவனது பேச்சை ஒட்டுக்கேட்க வேண்டியதுதான். சுற்றிலும் இருள் அடர்த்தியாகச் சூழ்ந்து கொண்டிருந்த நம்பிக்கையிலும் ஆள் அரவம் அதிகமில்லாத தைரியத்திலும் மெல்ல அடி மேல் அடி வைத்து வண்டியை அடைந்தான்.

"உமது சேவைக்கு சோழ இராஜாங்கமும் தனிப்பட்ட முறையில் நாமும் பெருங்கடமைப்பட்டிருக்கிறோம். நீர் கண்டறிந்திருக்கும் செய்திகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை!" - அருள்மொழிவர்மரின் மெல்லிய ஆனால் உறுதியான குரல்.

"நான் என்னுடைய கடமையைத்தான் செய்தேன் அரசே! இன்னொரு முக்கிய விஷயம்.." - இது எவன் குரல் என்பது தெரியவில்லையே?

தான் நினைத்ததெல்லாம் தவறோ என்கிற ஐயம் முதன்முதலாக அவன் மனதில் உதித்தது. மேற்கொண்டு அங்கே நோட்டமிட்டுக் கொண்டிருப்பது ஆபத்து என்று அவனது உள்ளுணர்விற்குப் புரிய அவசர அவசரமாக அந்த இடத்திலிருந்து விலக முயன்ற அந்தக் கணத்தில்..

அதுவரை மிகப் பொறுமையுடன் சற்று தூரத்திலிருந்து அவனது நடவடிக்கைகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த திருமெய்க்காவல் ஊழியர்கள் ஏக காலத்தில் நாலாதிசைகளிலிருந்தும் அவனை நோக்கிப் பாய்ந்தார்கள். அவர்கள் கண்களில் எல்லையில்லாத கோபம் தெறித்துக் கொண்டிருந்தது.

28. பிரம்ம முகூர்த்தம்



பிரம்ம முகூர்த்தம் என்றழைக்கப்படும் விடியற்காலை நேரத்திற்கேயுரிய பிரத்யேக அமைதியுடன் துலங்கியது காந்தளூர்க் களரி. வெளியே திரண்டிருந்த அடர்த்தியான இருளைக் களரியின் தென் மேற்கு மூலையில் பூத்தாரையின் தட்டுக்களில் ஏற்றப்பட்டிருந்த சிறு வெண்கல விளக்குகள் தமது மெல்லிய மஞ்சள் நிற வெளிச்சத்தால் செவ்வனே விரட்டிக்

கொண்டிருந்தன. விளக்குகளில் விடப்பட்டிருந்த தூய்மையான பசுநெய்யின் மணம் களரியெங்கிலும் மென்மையாக வியாபித்து நின்றது. தீபங்களின் நடுவே ஆங்காங்கே செவ்வரளி, சரக்கொன்றை, கருடார்த்தம், இருவாட்சி முதலிய புஷ்பங்களும் சிவபெருமானுக்கு உகந்ததாகக் கருதப்படும் வில்வபத்ரங்களும் பாங்குற அமைக்கப்பட்டிருந்தன.

பூத்தாரைக்கு வடக்கே பல்வேறு விதமான ஆயுதங்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. கேடயம், உருமி, சுவட்டி, குறுவாள், பெருவாள், சுழல்வாள், கம்பு என்று விதவிதமான வகைகளில் காணப்பட்ட அவ்வாயுதங்கள் அனைத்திலும் புத்தம் புதியதாகச் சந்தனமும் குங்குமமும் இடப்பட்டிருந்தன. தூய்மை மிகுந்த துளு நாட்டுச் சந்தன மரங்களை அவற்றுக்குரிய கல்லில் அரைத்து அரைத்து உருவாக்கியிருந்தமையால் அச்சந்தனப் பொட்டுக்களிலிருந்து கனமானதோர் நறுமணம் பரவி பசுநெய்க்குப் போட்டியாக களரியை நிறைத்து நின்றது.

ஆயுதங்களுக்கு அடுத்தபடியாகக் காணப்பட்ட குருதாரையின் எதிரே ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி நெற்றியில் சந்தனம் தரித்த நிலையில் பட்டதிரியும் அவரது தம்பியரும் அர்த்த பத்மாசனத்தில் அருகருகே அமர்ந்திருந்தார்கள். அவர்களின் நீட்டிய கரங்கள் சின் முத்திரையுடன் முழங்கால்களில் படிந்திருந்தன. கண்கள் மூடியிருக்க, மூச்சு சீராக உள்மடங்கிச் சென்று வெளியே வந்து கொண்டிருந்தது. அவர்களின் இதழ்கள் காந்தளூர்ச் சாலைக்கேயுரிய பிரத்யேகமான குருஸ்துதியை முணு முணுத்துக் கொண்டிருந்தன.

சாலையின் மாணவர்களாலும் ஆசான்களாலும் அனவரதமும் பாராயணம் செய்யப்பட்ட அந்தப் பிரபலமான துதி அவதார புருஷனான பரசுராமனிலிருந்து துவங்கியது. மலைநாட்டின் நான்கு சாலைகளுக்கும் பூர்வ பிதாமகர் அவரேயல்லவா?

பகவான் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரமாக பூமியில் ஜனித்தவரும் கங்கைக்கரையில் ஆங்காரமெடுத்துத் திரிந்த வடபுலத்துச் ஷத்திரியர்களைக் இருபத்தியொரு முறை கொன்றழித்தவரும் அவர்தம் செந்நிற உதிரத்தினால் நிரம்பியிருந்த சிகண்டி தீர்த்தத்தில் நின்று மஹா தபஸ்வியான ஜமதக்னிக்குப் பித்ரு தர்ப்பணம் செய்தவரும்

தன்னுடைய வலிமை மிகுந்த பரசுவினால் கடலிலிருந்து பிரம்ம ஷேத்திரமான மலைநாட்டை வெளிக்கொண்டு வந்தவரும் அந்நிலத்தில் அறுபத்துநான்கு கிராம ஷேத்திரங்களை உருவாக்கியவரும் அவற்றின் பரிபாலனத்திற்காக நான்கு தனுர்வேத சாலா நிறுவனங்களை ஸ்தாபித்தவருமான ஸ்ரீ பார்க்கவ இராமனைத் தியானம் செய்கிறோம். அவரது வலிமையும் தியானமும் எம்முள் இறங்குவதாக.

அந்தப் பெருமை மிகுந்த பார்கவனின் கரங்களால் மூத்த வாள் பெற்று முதல் ஆச்சாரியராக நியமனம் செய்யப் பட்டவரும் நைமிசாரண்ய வனம் வரை சென்று இராமனிடம் மந்திரோபதேசங்கள் பெற்றவரும் அறுபத்தி நான்கு கலைகளும் நிகரற்றுத் திகழ்தவரும் காந்தளூர் அம்பலத்தில் குடிகொண்டிருக்கும் மகாதேவரின் பூரண அருளுக்குப் பாத்திரமானவரும் வலிமை மிகுந்த காந்தளூர்ச் சாலையின் ஸ்தாபகருமான ஸ்ரீ திரிவிக்கிரம நம்பூதிரியைத் தியானம் செய்கிறோம். அவரது கூர்மதியும் தெளிந்த ஞானமும் தோள்வலிமையும் எம்மில் நிலைப்பதாக.

திரிவிக்கிரம நம்பூதிரியின் பெயரனும் வில்வித்தையில் நிகரற்றவரும் காந்தளூர் மரியாதை என்றழைக்கப்படும் விதி முறைகளை உருவாக்கியவரும் அம்மரியாதையை நான்கு சாலைகளிலும் நடைமுறைப்படுத்தியவரும் வித்யா விசேஷம் என்ற பெயரில் கலமறுக்கும் போட்டிகளை வருடாந்திரத் திருநாளாக நடத்தியவரும் விவேகம் நிறைந்தவருமான அநிருத்த நம்பூதிரியைத் தியானம் செய்கிறோம். அவரது செயல்திட்பமும் மன உறுதியும் எம்மில் நிலைபெறுவதாக.

இவ்வாறு அநிருத்தரைத் தொடர்ந்து பிரமோதூதர், வாமனர், பிரத்யும்னர், காலகாலர் என்று காந்தளூரின் பண்டைய ஆச்சாரியார்கள் இருபத்தியோருபேர் அந்தத் துதிப்பாடலில் வரிசையாக வந்து போனார்கள். ஒவ்வொருவரையும் துதிசெய்யும் நேரத்தில் அவரை மனதில் வரித்து சாஷ்டாங்கமாக எட்டு அங்கங்களும் தரையில் பட நமஸ்காரம் செய்து கொண்டிருந்தார் ஆச்சாரியரான திருநாராயண பட்டதிரி.

இறுதியாக வந்து நின்றவர் அவரது தந்தையாரான பத்மநாபர். துதிப்பாடலில் இவரது பெயரே கிடையாதே? எதற்காக வந்தார்? அவருக்கருகில் சங்கர்ஷண நம்பூதிரி

எனும் இயற்பெயர் கொண்ட மூத்தவரும் தெரிகிறாரே? இருவரின் பார்வையிலும் விரோதம் தெரிகிறதே?

"பண்டைய காந்தளூர் குருமார்களின் வரிசையில் நானும் இடம் பெற்றிருக்க வேண்டுமடா நாராயணா! ஆனால் நீ விளைவித்த அனர்த்தத்தால் நான் அந்தத் தகுதியை இழந்தேன்."

எடுத்தவுடன் கைகளை நீட்டி ஆங்காரத்துடன் குற்றப்பத்திரிக்கை படித்தார் மூத்தவர்.

"நீங்கள் இருவருமே நமது குடும்பத்திற்குப் பெரியதொரு அனர்த்தத்தை விளைவித்து விட்டீர்கள். அவனை மட்டும் குற்றவாளியாக்கி என்ன பயன்? அந்த மாளிகைப்புரத்து வீட்டுக்காரியை முட்டாள்தனமாக சாலைக்குள் விட்டது மல்லாமல் அவளுக்கு வித்தையும் கற்றுக் கொடுத்தது நாராயணன் செய்த பெருந்தவறு. அவளை நான் அன்றே சம்ஹரித்திருப்பேன். அவ்வாறு நடக்கவொட்டாமல் நீ காப்பாற்றினாயல்லவா? அது உன் தவறு!"

கரத்தில் தாம் பிடித்திருந்த நீண்ட தடியை முன்னும் பின்னும் ஆட்டியபடி முன்குடுமி குலுங்கப் பேசிய பத்மநாபரை ஆச்சரியத்தோடு பார்த்தார் பட்டதிரி. மனிதர்கள் இறந்த பின்புகூட இத்தனை ஆசாபாசங்களோடு திகழ்வார்களா என்ன?

"நமது இருவரின் பிரச்சனைகளையும் பிறகு வைத்துக் கொள்வோம். இவனைப் பார்த்தீர்களா? இவனது முகம் இந்த அதிகாலை நேரத்திலும் எத்தனை வெளிறிப் போயிருக்கிறது என்பதைக் கவனித்தீர்களா?"

"கவனித்தேனடா சங்கர்ஷணா! அனந்தபுரத்துச் சந்தையில் பழுக்காமல் சூம்பிப்போன சில பரங்கிக்காய்கள் வந்து சேரும். அந்தக் காய்களைப் போன்றே காட்சியளிக்கிறது இவன் முகம்! ஹா! ஹா! ஹா!!"

வதனத்தில் தோன்றும் சகலவிதமான உணர்ச்சிகளுக்கும் கறிகாய்களை வைத்தே உபமானம் கூறும் தந்தையாரின் நீண்ட கரங்கள் தமது முகத்தைச் சுட்டிக்காட்டிப் பேசுவதைக் கண்ட பட்டதிரியின் புருவங்கள் அடக்க முடியாத கோபத்தில் நெறிபட்டன.

"அச்சன்! இந்த அதிகாலை நேரத்தில் தம்பியர் இருவரையும் அழைத்துக் கொண்டு களரியில் இவன் எதற்காக் கூடியிருக்கிறானென்று தெரியுமா?"

"தெரியுமடா! நன்றாகத் தெரியும். இன்றிலிருந்து ஒரு மண்டல காலத்திற்கு இவன் இளையவனுக்கும் கிறியவனுக்கும் இரகசியப் பிரயோகங்கள் பலவற்றையும் போதிக்கப் போகிறானாம். குருமார்கள் தமது மரணப் படுக்கையில் மட்டுமே பகிர்ந்து கொள்ளும் பல பிரத்யேக விஷயங்களை இவன் இப்போதே பகிர்ந்துகொள்ளப் போகிறானாம். என்ன தலைபோகிற அவசரம் வந்துவிட்டது இவனுக்கு?? சங்கர்ஷணா! ஆனாலும் நீ இவனை ஏகத்துக்கு பயமுறுத்தி விட்டாய்."

"அச்சன்! தேவையில்லாமல் நான் இவனைப் பயமுறுத்தவில்லை. மரணப்படுக்கையில் நான் கூறிய வார்த்தைகளை நீரூபிக்கும் வண்ணம் நேற்று பாண்டி ஒற்றர்களிடமிருந்து முறி ஓலை வந்ததிலிருந்துதானே இவன் இவ்வாறு வெளிறிப்போய்க் கிடக்கிறான்? அதுவரை நான் சொன்ன வார்த்தைகளை இவன் ஒரு பொருட்டாகவே கருதவில்லையே? இவனுக்கு என்றைக்கு என் மீது மரியாதை இருந்திருக்கிறது?"

"ஐயோ அண்ணா! அவ்வாறெல்லாம் ஒருபோதும் இல்லை.." என்று இடையில் குறுக்கிட்டு ஏதோ கூறவந்த பட்டதிரியை இருவரும் சடுதியில் புறக்கணித்தார்கள்.

"ஏனடா சங்கர்ஷணா! அந்தக் குருட்டுக் கிழவி வழியில் போகிற இரண்டு சோழவீரர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு ஏதோ வித்தை கற்றுக்கொடுக்கிறாள் என்பதற்காகவா இவன் இத்தனை தூரம் பயப்படுகிறான்?"

"அது.. அச்சன்.. வந்து.."

"என்னடா மென்று முழுங்குகிறாய்? எதுவாக இருந்தாலும் சொல்லித் தொலை!"

"அது.. இவனுக்குத் தெரியாத சில இரகசியங்களை நான் அவளுக்குச் சொல்லி விட்டேனோ என்று இவன் பயப்படுகிறான்."

"அது மட்டும் உண்மையாக இருந்தால்.." - பற்களை நறநறவென்று கடித்தார் பத்மநாபர். ஏற்கனவே கோபத்தினால் பயங்கரமாச் சிவந்திருந்த அவரது முகம்

மேலும் சிவந்தது. முகம் வலிப்பு வந்தது போல் கோணிக் கொண்டது.

"அண்ணா!"

இடையில் குறுக்கிடும் இந்தக் குரல் யாருடையது?

"அடேய்!" என்று பத்மநாபர் மூத்தவர் மீது பாய, அதே கணத்தில் யாரோ அவருடைய தோள்களில் கையை வைத்து மெல்ல உலுக்க.. சட்டென்று நனவுலகிற்குப் பிடித்துத் தள்ளப்பட்டார் பட்டதிரி. அவரது கண்கள் திறந்தன. பயத்தில் அவருடைய மேனி இன்னமும் நடுங்கிக் கொண்டிருந்தது. வியர்வை முத்து முத்தாக மேனி யெங்கிலும் திரண்டிருந்தது.

"அண்ணா! என்ன இது? என்ன ஆயிற்று உங்களுக்கு?"

"ஒ- ஒன்றுமில்லை.. ஒன்றுமில்லை.." என்று சமாளித்துக் கொண்டார் பட்டதிரி. குருஸ்துதியைச் சொல்லிக் கொண்டே ஏதோ கனவுலகிற்குச் சென்றுவிட்டோமா என்ன? அல்லது சித்தப்பிரமை பிடித்து விட்டதால் ஏதேதோ காட்சிகளெல்லாம் தோன்றி மறைகின்றனவா?

"அண்ணா! நேற்று அந்த முறி வந்து சேர்ந்ததிலிருந்தே தங்களின் முகம் சரியாக இல்லையே? எதற்காக இத்தனை மனக்கிலேசம்?"

"தெரியவில்லையடா வாமனா! ஏதோ மனம் இனம்புரியாத சஞ்சலத்திற்குள்ளாகியிருக்கிறது. இத்தனை நாட்களாக நான் மறந்திருந்த மூத்தவரின் கடைசி வாசகங்கள் மீண்டும் மனதைப் பிடித்துத் திருகத் துவங்கி விட்டன. அப்படி என்ன பாழாய்ப் போன இரகசியங்களை அவர் சொல்ல முற்பட்டாரோ என்று கிடந்து அல்லாடுகிறது என் மனம்.."

மனம் திறந்து தம்முடைய இயலாமையை வெளிப் படையாக ஒப்புக்கொள்ளும் தமையனைக் கண்டு வியந்து நின்றார் வாமனர். மூத்தவர் இறந்த நாளிலிருந்தே படிப் படியாக பட்டதிரியின் இயல்பான முறுக்கும் கம்பீரமும் எதற்கும் பணியாத வித்யா கர்வமும் மெல்ல மெல்ல இளகிக் குறைந்து வருவதை அவர் அவதானித்துக் கொண்டுதான் இருந்தார்.

"உனக்குத் தெரியாதது அவளுக்குத் தெரியும் என்றார் அவர். அப்படி எனக்குத் தெரியாமல் அவளுக்கு மட்டும்

அவர் தெரிவித்த அந்த இரகசியம் என்ன? அதற்கும் ஆசான் இரவிநீலிக்கும் என்ன தொடர்பு? ஒரு வேளை.. தமது மரணப்படுக்கையில் ஆசான் சொல்லிக்கொடுத்த ஏதோ இரகசியத்தை அவர் தம்புராட்டிக்குச் சொல்லிக் கொடுத்து விட்டாரா என்ன? அப்படியெனில் இந்நேரம் அது என் காதுகளில் அரசல் புரசலாகவாவது வந்து சேர்ந்திருக்க வேண்டுமே? அப்படி எதுவும் விழவில்லையே? கடைசியாக அவர் எழுதிக்காட்ட முயன்ற விவகாரம் என்ன? இரவிநீலீயின் பிரயோகங்களுக்கும் அதற்கும் என்ன சம்மந்தம்?"

"அண்ணா! இந்த விவகாரங்களை நாம் மூன்று பேரும் சேர்ந்து பலமுறை விவாதித்து விட்டோம். இன்று வரை எந்தப் பிடியும் கிட்டவில்லை. நாங்களே நேரில் சென்று தம்புராட்டியாரைப் பார்த்து மன்னிப்புக் கேட்டு விட்டு வருகிறோம் என்று கூறியதையும் நீங்கள் அப்போது மறுத்தளித்து விட்டீர்கள். இப்போது என்னவென்றால் இரண்டு சோழநாட்டு வீரர்களுக்கு அவர் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறார் என்கிற செய்தி வந்து சேர்ந்திருகிறது!"

"அவளுக்கு என்ன திமிர் பார்த்தாயா? நான் கற்றுக் கொடுத்த வித்தையை என் தம்பியர்களான உங்களுக்கு எதிராகவே ஏவி விட முயன்று கொண்டிருக்கிறாளா என்ன? விட்டுவிடுவானா இந்த பட்டதிரி? அந்தச் சோழநாட்டுச் சிறுவர்கள் மட்டும் இங்கே வரட்டும். காந்தளூர் மண்ணிலிருந்து அவர்களை ஓட ஓட விரட்டுகிறேனா இல்லையா பார்!"

தம்புராட்டியார் மீதான தமது இயலாமை, மூத்தவர் மீதான கோபம், தங்களின் மீதான பாசம், மலைநாட்டைச் சூழ்ந்திருக்கும் அரசியல் சூழல்கள் இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து பட்டதிரியின் மனதை நாலாபுறங்களிலும் புரட்டிப் போட்டு அலைக்கழிப்பதை உணர்ந்தார் வாமனர். வயதாகிவிட்ட காரணத்தினாலோ என்னவோ முன்பு போல் முரட்டுக் கோபத்துடன் அனைத்தையும் அணுக முடியவில்லை போலும்.

"அண்ணா! மேற்கொண்டு இவற்றைப் பற்றி விவாதம் வேண்டாம். வந்த காரியத்தைக் கவனிப்போம்."

"நீ சொல்வதுதான் சரி. குருதாரையிலிருக்கும் ஓலைக்கட்டுகளில் இரவிநீலி ஆச்சாரியரின் கிரந்தத்தை எடு! மனதை வித்தையில் திருப்புவோம்..."

அச்சுதன் ஓலைக்கட்டைச் சுற்றியிருந்த கயிற்றைப் பிரித்து அந்த கிரந்தத்தை வாசிக்கத் துவங்க, பட்டதிரியின் மனம் அதில் சிறிது சிறிதாகத் தோய்ந்தது.

"ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இரண்டு சரீரங்கள் உண்டு. ஒன்று ஸ்தூல சரீரம். இன்னொன்று சூட்சும சரீரம். ஸ்தூல சரீரம் கண்களால் உணரப்படுவது. அதனை அனைவரும் பார்க்கலாம். ஆனால் சூட்சும சரீரமானது மனதால் மட்டுமே உணரப்படுவது. கடுமையான பயிற்சிகளின் வழி மட்டுமே அதனை உணரவும் பேணவும் முடியும். ஸ்தூல சரீரத்தின் ஆற்றல்களுக்கு எல்லையுண்டு. ஆனால் சூட்சும சரீரத்தின் ஆற்றல்களுக்கு எல்லையே யில்லை. ஏனெனில் சூட்சும சரீரத்தின் மூலம் நாம் பிரபஞ்சத்தின் எல்லையற்ற ஆற்றலுடன் நேரடித் தொடர்பில் இருக்கிறோம்..."

ஒவ்வொரு சுலோகமும் நிதானமாக விளக்கொளியில் படிக்கப்பட கண்களை மூடியபடி அவற்றுக்கு மிக விளக்கமாகப் பொருள் கூறினார் பட்டதிரி. ஆண்டுகள் பல கடந்து விட்டாலும் ஆச்சாரியர் இரவிநீலி அந்த அனுபவப் படிகளின் வழியே அவர்களுடன் கம்பீரமாக உரையாடிக் கொண்டிருந்தார். இடைவிடாத கடுமையான பயிற்சியின் மூலம் அவர் பெற்ற ஞானம் வார்த்தைகளின் வடிவில் அவர்களை வந்தடைந்து கொண்டிருந்தன. அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அடர்ந்தவை. ஆழமானவை. காடு போலப் பல்வேறு இரகசியங்களையும் தன்னுள் புதைத்து வைத்திருப்பவை என்பது வாமனருக்குப் புரிந்தது.

29. தூது ஓலை



முன் மாலை நேரத்தில் ஆரைவாய் மொழித் தொடர்களின் மேற்திசை செக்கர் நிறத்தில் சிவந்து கிடந்தது. சில இடங்களில் வெளிறியும் வேறு இடங்களில் அடர்ந்தும் தெரிந்த செவ்வானம் பசுமையான மலை முகடுகளின் பின் ஒல்காப் பேரெழிலுடன் திகழ்ந்தது. ஆதவனின் மஞ்சளும் செந்நிறமும் கலந்த ஒளிபட்டுக் கோட்டையின் மாடங்கள் தகதகத்தன.

கோட்டையின் கிழக்கே பகவதியம்மன் பெருவாயிலின் உச்சியில் அமைந்திருந்த காவல் அரண்கள் ஒன்றின்மேல் நின்றபடி நொடிக்கொருமுறை கிழக்கு திசையைப் பார்த்துக் கொண்டிருந்த காவல் வீரனின் கண்கள் எதையோ கண்டுவிட்டன போலும் மெல்லச் சுருங்கின. அங்கிருந்து மிக மிகத் தொலைவு என்று வர்ணிக்கத் தக்கதோர் இடத்திலிருந்து கிளம்பிய மெல்லிய மண் புழுதி அவன் கண்களுக்குப் புலனானது. சந்தேகமே வேண்டாம் என்று நினைத்தவன், தன்னுடன் உடன்காவல் ஏற்றிருந்த வீரனையும் கூட்டிக்கொண்டு வந்து அந்தக் காட்சியைக் காண்பிக்க, அவன் அதனை உறுதி செய்தான். அவசர அவசரமாக இருவரும் தத்தம் எக்காளங்களில் உதடுகளைப் பொருத்தி ஓசையெழுப்பினார்கள்.

அமைதியுடன் காணப்பட்ட அந்தப் பிராந்தியத்தை அந்தப் பேரோசை ஒரு உலுக்கு உலுக்கிற்று. அன்றொரு நாள் காலை நேரத்தில் பட்டாபிஷேக வைபவத்தின் போதும் இதே வாத்தியம்தான் முழங்கப்பட்டது. இன்றும் அதேதான் முழங்கப்படுகிறது. ஆனால் இரண்டிற்கும் எத்தனை பெரிய வித்தியாசம்? அன்று ஒரே மூச்சில் பூம்... என்று தொடர்ச்சியான நீண்ட பெரிய சப்தமாக அது எழுந்தது. இன்றோ பப்பர.. பரபர.. பூம்! பப்பர.. பரபர.. பூம்! என்று இடைவெளி விட்டுவிட்டுப் பலமுறை ஊதப் பெறுகிறது. இதுதான் எதிரிப்படைகள் நெருங்கி விட்டதை அறிவிக்கும் சப்தம் போலும்.

பெருவாயிலின் எக்காளத்தைப் பின்பற்றிக் கோட்டையின் பல்வேறு இடங்களிலிருந்தும் அதனைச் சுற்றியிருந்த மலை முகடுகளிலிருந்தும் கொம்பும் எக்காளமும் தொடர்ச்சியாகப் பலமுறை முழங்கின. அச்சப்தங்களைத் தொடர்ந்து கோட்டையின் பல்வேறு காவல் அரண்களிலும் யுத்தகாலம் வந்துவிட்டதைக் குறிப்பிடும் சின்னத்தை ஏந்திய வள்ளுவநாட்டுக் கொடி மளமளவென கொடிக்கம்பின் மேலேற்றப்பட்டது. மலைகளின் மேல் சஞ்சரித்துக் கொண்டிருந்த ஊதற்காற்று அக்கொடிகளின் மீது உரசிச் செல்ல, அவை சடபடவென்று அடித்துக்கொண்டன. வந்துவிட்டான்! சோழன் நம் வாயிலுக்கே வந்து விட்டான்! அபாயம்! அபாயம்! என்று தமக்கே உரிய நயன பாஷையில் அவை அனைவரையும் எச்சரித்துக் கொண்டிருந்தன.

மலைமுகடுகளின் உச்சியில் அமைந்திருந்த பெரும் பாறை அரண்மனையின் படிகளிலிருந்து பரபரவென்று கீழிறங்கிய வள்ளுவ நாடாழ்வார் ஒரு புரவியிலேறிப் பகவதியம்மன் பெருவாயிலின் உச்சியை அடைந்தார். அவர் வருவதற்குள் சோழர்படைகள் நெருங்கி வந்து விட்டதால் கிழக்கிலிருந்து எழும் புழுதியும் புழுதிக்கிடையில் சில உருவங்களும் நன்றாகவே தெரிந்தன.

வள்ளுவர் தமது அனுபவம் வாய்ந்த கண்களை இடுக்கிக் கொண்டு உற்றுப் பார்த்ததில் முதலில் வந்து கொண்டிருப்பது புரவிப்படை என்பது புலனாயிற்று. அவற்றுக்குப் பின் யானைப்படைகளும் தரைப் படைகளும் ஒன்றையொன்று பின்பற்றி நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்தன. புரவிப்படைக்கும் யானைப்படைகளுக்கும் இடையில் பல்வேறு இரதங்களும் ஊர்ந்து கொண்டிருந்தன. அந்த இரதங்களுள் மிக உயரமாகத் தெரிந்த இரதத்தின் கலசத்திற்கருகில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பில் பாயும் வேங்கைக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

கோட்டையிலிருந்து ஏறக்குறைய மூன்று கல் தொலைவில் படைகள் நிறுத்தப்பட்டன. இம்முறை சோழர் பக்கத்திலிருந்து கொம்பும் எக்காளமும் சங்கும் ஊதப்பெற்றன. அந்த வாத்தியங்களிலிருந்து ஓசையெழுந்த அதேநேரத்தில் சோழர் படையிலிருந்த பல்வேறு சைன்யங்களின் வீரர்களும் தத்தம் பிரத்யேகக் கொடிகளை உயர்த்திப் பிடித்தனர். எறும்பியூர் உத்தமச் சோழத் தெரிஞ்ச கைக்கோளர் படையின் செங்கொடி, உடையார்குடி வீரநாராயணப் படையின் வெண்கொடி, ஒற்றியூர்க் குமரன் படைகளின் கருநிறக்கொடி, பழுவூர் இரணமுக இராமன் படையின் பச்சை நிறக் கொடி, திருநாவலூர் கோதண்ட இராமன் படையின் நீலக்கொடி, திருநல்லம் கண்டராதித்த வில்லியர் படையின் பசுமஞ்சள் நிறக்கொடி என்று வெவ்வேறு வண்ணங்களில் வெவ்வேறு உருவங்களுடனும் வடிவங்களுடனும் திகழ்ந்த அக்கொடிகள் ஒருசேர எழுந்து நின்று காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டன.

புரவிகள் கிளப்பிய மெல்லிய மண்புழுதிக்கிடையே முன்மாலை நேரப் பின்னணியில் இரத கஜ துரக பதாதிகளுடன் அங்கு கூடியிருந்த சோழப் பெருஞ் சேனையின் நீள அகலங்களைக் காணும் எவருக்குமே உடலெங்கிலும் மயிற்க்கூச்செறியும். கண்கள் விரிய மனதில்

ஒருவித அச்சத்தைத் தேக்கியபடிதான் அக் காட்சியைக் காணவே முடியும்.

ஆனால் களங்கள் பல கண்டு உடலெங்கிலும் வீரத் தழும்புகளை ஏற்றிருந்த வள்ளுவனாருக்கு அவ்வாறெல்லாம் உணர்வுகள் ஏற்படவில்லை. மாறாகத் தனது பழுத்த அனுபவத்தின் துணையுடன் வந்திருக்கும் சேனையின் மொத்த பலத்தை நிதானமாக அவர் அனுமானிக்க முற்பட்டார்.

புரவிப்படை வீரர்கள் மூவாயிரம் பேர் இருக்கலாம். அவர்களுக்குப் பின்னால் இரதங்கள். ஆனையாட்கள் படை ஆயிரத்திற்குமேல் இருக்காது. அதற்குப் பின்னால் ஈட்டியையும் கம்பையும் வாளையும் வேலையும் சுமந்து நிற்கும் தரைப்படை வீரர்கள் ஐயாயிரம்பேர் தேறுவார்களா? ஆக மொத்தம் இந்தச் சேனையின் பலம் ஏழாயிரம் அல்லது எட்டாயிரம் வீரர்களைத் தாண்டாது.

நல்லது. நாடாழ்வார் குறைந்த பட்சம் பத்தாயிரம் சோழ வீரர்களையாவது எதிர்பார்த்தார். இன்னும் ஓரிரு நாட்களில் மேலும் சில படைகள் தாமதமாக வந்து சேர்ந்து கொள்கின்றன என்று வைத்துக் கொண்டாலும் நிலைமை அத்தனை மோசமில்லை. கோட்டையும் காவலும் அவர் பக்கமிருக்கிறன. இப்போதைய கையிருப்பைக் கொண்டு ஓரிரு மாத முற்றுகையைக் கூடச் சமாளித்து விடலாம் என்றுதான் தோன்றியது.

திருப்தியுடன் தனது அங்கவஸ்திரத்தை ஒருமுறை உதறித் தோள்களில் அணிந்துகொண்டவர் மளமளவென்று காவற் தலைவனுக்கு உரிய கட்டளைகளைப் பிறப்பித்தார். அவற்றில் முக்கியமானது என்னவெனில் சோழர்களின் பக்கத்திலிருந்து யுத்தகாலச் செய்திகளை சுமந்து வரும் தூதர்கள் எவரேனும் வருவார்களெனில் அவர்களை உரிய துணையுடன் நேரடியாக அவரிடமே அனுப்பி வைத்து விடவேண்டும். தவறிப் போய்க்கூட அவர்களை வரகுணரிடம் அனுப்பிவிடக் கூடாது என்பதுதான் அதில் மறைந்திருந்த செய்தி. அதனைக் காவற்தலைவன் நன்கு உணர்ந்து கொண்டதற்கு அறிகுறியாக் கண்களை ஒரு கணம் அழுத்தமாக மூடித் தலையை கீழே அசைத்தான்.

* * * * * * * *

தூதர்கள் பற்றிய வள்ளுவனாரின் எதிர்பார்ப்பு மறுநாள் பொழுது புலர்ந்து ஒரு முகூர்த்த நேரம் கழிந்தபின் நிறைவேறியது. கோட்டை வாயிலுக்கு வடக்கே அமைந்திருந்த நிலப்பகுதியில் தண்டுன்றியிருந்த சோழர் படையிலிருந்து அந்தக் காலை நேரத்தில் இரண்டு புரவிகள் விருட்டென்று புறப்பட்டு பகவதியம்மன் பெருவாயிலை நோக்கிப் பறந்து வந்தன. முன் புரவியிலிருந்த வீரன் புலிச் சின்னத்துடன் கூடிய வெண்கொடியை உயர்த்திப் பிடித்திருந்தான்.

வாயுவேக மனோவேகமாகச் செலுத்தப்பட்டு வந்த அப்புரவிகள் கோட்டையின் கிழக்கு வாயிலுக்குச் சிறிது தூரத்திற்கு முன் காவல் வீரர்களால் ஈட்டி முனையில் நிறுத்தப்பட்டன. எதிரிப் பக்கத்திலிருந்து வெண்கொடியை ஏந்தி வருவோர் தூதுவர்களாக அல்லது செய்து கொண்டு வருபவர்களாக மட்டுமே இருக்க முடியும் எனும் மரபை அவர்கள் நன்கு அறிந்திருந்தாலும் நிறுத்தி விசாரிக்க வேண்டிய கடமை அவர்களுக்கிருந்தது.

"யாரைய்யா நீங்கள்? எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்?"

கொடியைப் பிடித்திருந்தவன் சற்றே விலகிக் கொள்ள, அதற்குப் பின்னால் முக்கிய அரசாங்க ஊழியனைப்போல் தெரிந்த ஒருவன் பதிலளித்தான். "சோணாட்டுப் பேரரசர் இராஜராஜ இராஜகேசரிவர்மர் அனுப்பியுள்ள முக்கியமான செய்தியைச் சுமந்து வரும் ஊழியர் நாங்கள்."

"ஓ! அப்படியா? அடையாளத்திற்கு ஏதேனும் முத்திரை உண்டா?"

"இதோ! பேரரசரின் முத்திரை மோதிரம்!"

அவன் தனது வலது கரத்தை நீட்ட, மோதிர விரலில் அணியப்பட்டிருந்த மிகப்பெரிய முத்திரை மோதிரம் தெரிந்தது. பின்கால்கள் மடக்கி அமர்ந்தபடி இடப்புறம் திரும்பி நிற்கும் புலி. மேலே வெண்கொற்றக்குடை. சாமரங்கள். இரு புறங்களிலும் குத்துவிளக்கு. ஆம். அது சோழ இராஜாங்க முத்திரையேதான்.

"சரி, என்னுடன் வாருங்கள்..."

முதல் நாளிரவே கோட்டைக் காவற் தலைவன் தெளிவான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்ததால் அவர்களை

எங்கே அழைத்துச் செல்லவேண்டுமென்பது வழிமறித்த வீரனுக்குத் தெரிந்திருந்தது. விறுவிறுவென்று கோட்டையின் திட்டிவாசல் வழியாகக் கூட்டிச் சென்றவன் அடுத்த இரண்டு நாழிகை நேரத்தில் பெரும்பாறை அரண்மனையின் திருமாமணியம்பலத்தில் தமது சிம்மாசனத்தில் இருப்புக் கொள்ளாமல் அமர்ந்திருந்த வள்ளுவ நாடுவாழியாரின் முன் அவர்களை நிறுத்தினான்.

"என்ன? யாரிவர்கள்?"

அவர்கள் இருவரும் இடுப்பு வளைத்துக் கரம் குவித்து அவரை வணங்கினார்கள். அந்த அரசாங்க ஊழியன் சற்று முன்வந்து ஓலையை மரியாதையுடன் நீட்டினான். "நாட்டுடைத் தலைவருக்கு அநேக தண்டங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பம் செய்து கொள்கிறோம். சோறுடைத்த சோழநாட்டின் பேரரசர் இராஜராஜ இராஜகேசரிவர்மர் தங்களுக்குச் சோழநாட்டின் அன்பையும் நல்லெண்ணத்தையும் மரியாதையையும் தெரிவித்து இந்தச் செய்தியை அனுப்பியிருக்கிறார். இதற்குத் தாங்கள் பதிலளிக்க விரும்பினால் இரண்டு நாட்களுக்குள் உரிய ஆட்களை வெண்கொடியுடன் சோழ சைனியம் தண்டுன்றியுள்ள இடத்திற்கு அனுப்பும்படி தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்."

"ஆகட்டும்!" என்றபடி அதனை வாங்கிக்கொண்ட வள்ளுவனார் அவர்களைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய் விட்டு விட்டு வரும்படி காவலனுக்குச் சைகை செய்தார்.

வள்ளுவனாரிடம் விடைபெற்று அந்தச் சோழ ஊழியர்கள் இருவரும் கோட்டைக்காவல் வீரனைப் பின் தொடர்ந்து நகரத் துவங்குவதற்கும், விக்கிரமாதித்ய வரகுணர் அவசர அவசரமாகத் திருமாமணியம்பலத்திற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

அவரது கண்களில் அளவற்ற கோபம் தெரிந்தது.

30. சோழர் பாசறை



சோழர்கள் அனுப்பிய ஓலை தூக்கிகள் கோட்டைக்குள் நுழைந்த செய்தி சற்று தாமதமாகத்தான் வரகுணரின் காதுகளில் சென்று விழுந்தது. ஓலை முதலில் தன் பார்வைக்கு அளிக்கப்படாமல் வள்ளுவ நாடாழ்வாருக்கு அளிக்கப்பட்டதை அவர் சிறிதும் இரசிக்கவில்ல. என்றாலும் அதனை வெளிக்காட்டிக்கொள்ளத் தகுந்த நேரம் அதுவல்ல என்பதால் பெரிதும் அவர் முயன்று பொறுமையை வரவழைத்துக்கொண்டார்.

"சோழனிடமிருந்து செய்தி வந்திருக்கிறதா என்ன?"

"ஆமாம். இப்போது வெளியேறியவர்கள் ஓலை கொண்டு வந்தவர்கள்தான். இதற்கு பதிலளிக்க விரும்பினால் இன்னும் இரண்டு நாட்களில் ஓலை அனுப்பும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

"ஓலையில் என்ன செய்தி?"

"இந்தாருங்கள். நீங்களே படித்துப் பார்க்கலாம்!" என்றபடி ஓலையை நீட்டினார் வள்ளுவனார். அவரது குரலில் அதிக உற்சாகமில்லை.

ஓலையின் மீது கண்களை ஓட்டினார் வரகுணர். அது வள்ளுவ நாடுவாழியாருக்கு நேரடியாக எழுதப்பட்டிருந்தது அவரது சினத்தை மேலும் அதிகப்படுத்தியது. ஆரைவாய் மொழிக் கோட்டையின் மீதான தனது மேலாண்மையை சோழன் முழுவதுமாகப் புறக்கணிக்கிறானா என்ன? இருக்கட்டும். இருக்கட்டும். தகுந்த நேரத்தில் அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்!

அன்பும் ஆற்றலும் பொருந்திய வள்ளுவநாட்டின் நாடுவாழியாருக்கு சோழர்கோன் இராஜராஜ இராஜகேசரிவர்மன் எழுதிக்கொள்வது. இந்த ஓலை சோழநாட்டு மக்களின் நலலெண்ணத்தோடும் நன்மதிப்போடும் வணக்கங்களோடும் தங்களுக்கு எழுதப்படுகிறது.

இன்னும் ஒரு திங்களில் அனந்தபுரத்தில் நடைபெறப் போகும் மலைநாட்டுச் சாலைகளுக்கிடையேயான காந்தளூர்க் கலமறுக்கும் போட்டிகளில் நாம் நமது பக்கத்து வீரர்களுடன்

கலந்து கொள்ள இருக்கிறோம். போட்டிகளின் தன்மை கருதியும் வேறு சில முக்கியக் காரணங்களுக்காகவும் நாம் நமது சேனையின் பலத்துடன் அங்கே செல்ல வேண்டியிருக்கிறது.

காந்தளூருக்குச் செல்ல வேண்டிய நமது படைகளைத் தங்கள் நாட்டுப்பகுதிகளின் வழியே நடத்திச் செல்ல உத்தேசித்துள்ளோம். இதற்குத் தங்களின் இசைவு கிடைக்குமானால் அமைதியாக வள்ளுவநாட்டு மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புமின்றி படைகளை நடத்திச் செல்வோமென்று சோழர்களின் சார்பில் உறுதியளிக்கிறோம். இந்தப் பகுதிகளின் மேல் தங்களது மேலாண்மை தொடர இது வழிவகுக்கும்.

நமது சேனை வள்ளுவநாட்டின் வழியே செல்லத் தாங்கள் ஒத்துழைக்க மறுக்கும் பட்சத்தில் நாம் நமது சேனையின் துணை கொண்டு இக்கோட்டையை உறுதியாகக் கடப்போம்.

தங்களின் நல்ல முடிவை இரண்டு தினங்களில் எதிர்பார்க்கிறேன்.

கோ இராஜகேசரிவர்மன்.

மிகுந்த அரசியல் விவேகத்துடன் எழுதப்பட்டிருந்த அந்த ஓலையைப் படித்த விக்கிரமாதித்ய வரகுணரின் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. ஆனாலும் வள்ளுவனாருக்கு முன்பாக அதனை அவர் வெளிக்காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

"என்ன? ஓலை குழப்பம் கொடுக்கிறதா?" என்று வினவினார் வள்ளுவ நாடாழ்வார்.

"ஒரு குழப்பமுமில்லை. கலமறுக்கும் போட்டிகளுக்கும் இவனுக்கும் என்ன சம்மந்தம்? அதற்கு இத்தனை பெரிய படை எதற்கு? எல்லாம் வீண் சாகசங்கள்! எத்தனை தைரியமாக நமது கோட்டையைக் கடந்து செல்வோம் என்று எழுதியிருக்கிறான் பார்த்தீர்களா? முடிந்தால் கடந்து செல்லட்டும். அதையும் பார்த்து விடுவோம்!"

'நமது கோட்டை' என்று ஆண்டாண்டு காலமாகத் தமது பரம்பரையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஆரைவாய்மொழிக் கோட்டையை வரகுணர் சொந்தம் கொண்டாடுவதை வள்ளுவர் கவனித்துக் கொண்டார். ஆய்வேளே! உமது கோட்டை விழிஞம் கடற்கரையில் பாழடைந்து கிடக்கிறது. முடிந்தால் அதனைச் சொந்தம் கொண்டாடிக் கொள்ளும்.

"வாள்முனையில் சந்திப்போம் என்று சோழனுக்கு ஓலையனுப்புங்கள். ஆரைவாய்மொழிக்கோட்டை வெல்லட்டும்! சோழன் அழியட்டும்!" என்று முழங்கினார் வரகுணர்.

வள்ளுவனார் ஒன்றும் சொல்லாமல் விடைபெற்றுக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்றார். அவரது மேடான நெற்றியில் சிந்தனைக் கோடுகள் அழுத்தமாகப் பதிந்திருந்தன.

வேறெவரையும் விட இந்தப் போரினால் விக்கிரமரும் அவரைப் பின்னணியிலிருந்து இயக்கும் தானைத் தலைவரும் பாண்டியர்களும் அடையப் போகும் ஆதாயங்களே அதிகம் என்பது நாடுவாழியாருக்கு நன்றாகப் புரிந்திருந்தது. அதனால் ஆரைவாய்மொழிக்கோட்டை வெல்லட்டும்! சோழன் அழியட்டும்! என்று பல்வேறு வீரமுழக்கங்களை யோசிக்காமல் எழுப்பலாம். பிரச்சனையில்லை.

ஆனால் அவரது நிலைமை வேறு. ஒரு வேளை இந்த முற்றுகை சோழர்களுக்குச் சாதகமாக முடிந்துவிட்டால்? எப்படியாவது முட்டி மோதி இந்தக் கோட்டையைச் சோழப்படை கடந்து வள்ளுவநாட்டிற்கு வந்துவிட்டால்? வேறெவரையும்விட அவருக்குத்தான் இழப்பு அதிகம். அதன் பிறகு இப்பகுதிகள் சோழர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். ஒரு வேளை அவர்களுக்கு அடங்கிய குறுநிலத் தலைவனாக சிற்றரசராக மிச்சமிருக்கும் காலத்தைக் கழிக்கலாம். ஆனால் அவருக்கோ அவரது படை வீரர்களுக்கோ முந்தைய மரியாதையோ அதிகாரமோ இருக்காது. முக்கியப் பதவிகளில் சோழர்கள் அமர்ந்து கொள்வார்கள். அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அங்கே ஒன்றும் நடவாது.

ஓலையில் இதனைக் குறிப்பிடும் மறைமுக எச்சரிக்கை உள்ளடங்கி இருப்பதை வள்ளுவனார் கவனித்தார். அதாவது சோழர் படைகளை அவர் அனுமதிக்கும் பட்சத்தில் இப்பகுதியின் மீதான அவரது மேலாண்மை சோழர்களால் அங்கீகரிக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதற்கு உண்மையான அர்த்தம் என்னவெனில் ஒருவேளை அவர் எதிர்த்து நின்று தோற்று விடும் பட்சத்தில் அது பறிபோய்விடும் என்பதே!

ஓலையில் கேட்டுக்கொண்டிருப்பதைப்போல் சோழர் படைகளை அவரால் தமது நாட்டின் வழி அனுமதிக்க முடியுமா? அது ஒரு போதும் நடவாத காரியம்.

ஒருவேளை வாக்குக் கொடுத்தபடி வள்ளுவ நாட்டைச் சோழர் படை அமைதியாகக் கடக்கிறதென்று வைத்துக் கொண்டாலும் அதற்குப்பின் என்ன நடக்கும் என்பது யாருக்குத் தெரியும்? இத்தனை பெரிய படையுடன் பாண்டி நாட்டைக் கடந்து வள்ளுவ நாட்டைக் கடந்து புறத்தாய நாட்டைக் கடந்து மலைநாட்டின் தென்பகுதியை அடையும் சோழன் அனந்த புரத்தில் நடக்கப் போகும் கலமறுக்கும் போட்டிகளைப் பார்த்துவிட்டு வாயில் விரலை வைத்துக் கொண்டு நல்ல பிள்ளையாய் வந்த வழியே திரும்பப்போய் விடுவானா என்ன? கேட்பதற்கே வேடிக்கையாகவல்லவா இருக்கிறது?

சரி, தென்மலைநாடு எக்கேடு கெட்டுப்போனால் என்ன? நமது பகுதியை மட்டும் சோழனிடமிருந்து காப்பாற்றிக்கொள்வோமே என்றும் அவரால் இருந்து விடமுடியாது. பலப்பல காலமாக இப்பகுதிகள் ஒன்றையொன்று சார்ந்து - ஒன்றுடன் ஒன்று உறவு கொண்டாடியே வளர்ந்து வந்துள்ளன. அவரது வயதையும் அனுபவத்தையும் கருதி அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள இதரத் தென்மலைநாட்டு நாடுவாழிகளின் நலனையும் அவர் கருத்தில் கொண்டாக வேண்டும். அவரது வீரர்கள் பலருக்கும் மலை நாட்டில் உறவுகளும் நில புலன்களும் உள்ளன. மேலும் அவரது வீரர்களை காந்தளூர்ச் சட்டர்கள் பலமுறை பயிற்றுவித்துள்ளார்கள். அதனையெல்லாம் புறந்தள்ளிவிட்டுத் தன்னிச்சையாய்த் தனது நாடு தனது மக்கள் என்று மட்டும் சிந்திக்க முடியாது.

சோழன் தன் சேனையின் வலிமையுடன் இந்தக் கோட்டையைக் கடக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறான். அதையும் ஒரு கை பார்த்துவிடுவோம். ஆரைவாய்மொழிக் கோட்டையின் அமைப்பை அவன் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. கோட்டையைக் கடக்க வொட்டாமல் தடுத்துவிட்டால் நாடுவாழிகளுக்கு மத்தியில் அவருடைய மரியாதையும் செல்வாக்கும் பன்மடங்கு அதிகரித்துவிடும். அதன் பிறகு மகோதகைப் பெருமாளின் துணையுடன் இந்த வரகுணனையும் பாண்டியர்களையும் சமாளித்துக்கொள்ள வேண்டியதுதான். அதுவரை

இவர்களைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டுதானாக வேண்டும்.

ஹூம்! என்றொரு செருமல் அவரிடமிருந்து வெளிப்பட்டது. 'உமது கோரிக்கையை ஏற்பதற்கில்லை. முடிந்தால் எம்மை மீறிக் கோட்டைக்காவலைக் கடந்து செல்ல முயற்சி செய்யுங்கள்' என்று சுருக்கமாகப் பதிலனுப்ப முடிவு செய்தார்.

* * * * * * * *

வள்ளுவனாருக்கு ஓலை வந்து சேர்ந்த மறுநாள் பிற்பகல் வேளையில் சோழர்கள் தண்டுன்றியிருந்த கூடாரங்களின் நடுவே அமைக்கப்பட்டிருந்த பாசறையில் ஒரு அதிமுக்கியமான மந்திராலோசனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சேனாபதி இராஜராஜ மாராயருடனும் வேறு சில முக்கிய மாதண்ட - சாமந்த நாயகர்களுடனும் அந்தக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார் அருள்மொழி வர்மர்.

இரண்டு நாழிகைகளுக்கும் மேலாக நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டத்தின் விவாதங்கள் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தன. ஆரைவாய்மொழிக் கோட்டையின் அமைப்பைப் பற்றியும் அங்கு வள்ளுவனார் செய்திருக்கும் பலவிதமான முன்னேற்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறிய சேனாபதியார் அவற்றைச் சமாளித்துக் கோட்டையைக் கடப்பதற்கான தமது திட்டங்களையும் வியூகங்களையும் விரிவாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

அத்திட்டங்களைத் தத்தம் படைவீரர்களின் துணையுடன் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலிருந்த சேனானி நாயகங்கள் அவற்றின் சாத்தியக் கூறுகளையும் சாதக பாதகங்களையும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். இருபக்கத்து விவாதங்களையும் மிகவும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த அருள்மொழிவர்மர் தேவைப்படும் நேரங்களில் மட்டும் தலையிட்டுத் தமது கருத்துக்களையும் முடிவுகளையும் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

"ஆக, வள்ளுவனாரிடமிருந்து சாதகமான பதில் வராத பட்சத்தில் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் நாம் கோட்டையைத் தாக்கத் துவங்குவோம்!" என்று முடித்தார் சேனாதிபதி இராஜராஜ மாராயர்.

"நாம் இங்கு வந்து சேர்ந்து இன்றுடன் இரண்டு நாட்கள் கழிந்து விட்டன சேனாதிபதியாரே. எதிரிகளுக்கு நாம் கொடுத்திருந்த தவணை இன்று மாலையுடன் முடிவடைகிறது. நாளையே தாக்குதலைத் துவங்கி விடலாமே? இத்தனை வலுவான வியூகம் அமைத்த பிறகு கோட்டையைத் தாக்குதலைத் தொடங்குவதில் ஏன் தாமதம்?" - இரணமுக இராமன் படைத்தலைவரிடமிருந்து கிளம்பியது இந்தக் கேள்வி.

இதற்கு மாராயர் பதில்கூறத் துவங்க, அவரை இடைமறித்தார் அருள்மொழிவர்மர். "அதில் ஏதாவது பிரச்சனை உள்ளதா? படைகளுக்கு வேண்டிய அளவிற்கு உணவுப்பொருட்கள் கையிருப்பில் உள்ளனவல்லவா?"

"உணவுப்பொருட்களுக்கும் இதர சாமக் கிரியைகளுக்கும் குறைவில்லை. வீரர்கள்தாம் படையெடுப்பை உடனடியாகத் துவங்கிவிட வேண்டுமென்று பரபரக்கின்றனர்."

"சரி. அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்கு அவர்களுக்குச் சில வேலைகள் உள்ளன. அவற்றில் அவர்கள் கவனம் செல்லட்டும்.

வீரர்களில் ஒரு பிரிவினரை அருகில் அமைந்துள்ள காடுகளிலிருந்து நீண்ட மரங்களாகத் தேர்ந்தெடுத்து வெட்டி அவற்றின் நடுத்தண்டுகளை யானைகளின் மூலம் கொண்டுவரச் சொல்லுங்கள். ஆரைவாய்மொழிக் கோட்டை வாயிலை ஆனையாட்கள் படை இடித்துத் தள்ளுவதற்கு அந்த மரங்கள் உபயோகப்படும் என்று கூறுங்கள். குறைந்தது இருபது இருபத்தைந்து மரங்கள் இவ்விதம் தயாராகட்டும்.

வேறொரு பிரிவினரை மரங்களைச் செதுக்கிப் பெரிய கவண்கல் எறியும் யந்திரப்பொறிகளைக் கட்டச் சொல்லுங்கள். அவற்றில் பொருத்தி எறிவதற்கு வேண்டிய மர உருளைகளையும் செதுக்கச் சொல்லுங்கள். குறைந்தது நான்கு அல்லது ஐந்து பொறிகள் தேவை. இவ்விரண்டு பணிகளும் செவ்வனே நடைபெற்று முடிந்தால்தான் கோட்டையின் முற்றுகை துவங்கும் என்று கூறிவிடுங்கள். கூட்டம் கலையட்டும்!" - வலது கரத்தை உயர்த்தினார் அருள்மொழிவர்மர். மேற்கொண்டு அது பற்றிய விவாதங்களை அவர் விரும்பவில்லை என்பது அதன் அர்த்தம்.

"உத்தரவு பேரரசே!" என்று கூறிவிட்டுக் கலைந்து சென்ற சேனானி நாயகங்களின் முகத்தில் குழப்பம் மிச்சமிருந்தது. படையெடுப்பைத் தாமதிப்பது ஏன் என்று கேட்டால் அதற்குப் பதிலளிக்காமல் வீரர்களுக்கு அதிகப்படியான வேலைகளைக் கொடுத்துவிட்டாரே பேரரசர்? எனும் கேள்வி அவர்களின் மனதில் தொக்கி நின்றது. என்றாலும் கூட்டம் கலைந்து செல்லட்டும் என்று அவரே உத்தரவிட்டுவிட்டபின் மேற்கொண்டு பேசுவது உசிதமல்ல என்பதால் அவர்கள் உடனடியாகத் தத்தம் முகாம்களுக்குத் திரும்பினார்கள்.

நாயகங்கள் பாசறையைவிட்டு அகன்றபின் மாராயரை நோக்கி மெதுவாகப் புன்னகை பூத்தார் அருள்மொழிவர்மர்.

"என்ன? ஒருவழியாக அவர்களைச் சமாளித்து விட்டேனா?"

"இல்லை. அவர்களின் முகத்தில் இன்னமும் கேள்விகள் தொக்கி நிற்கின்றன. இன்றிரவுக்குள் எவரேனும் தனியாக வந்து சந்தித்து அதே கேள்விகளை மீண்டும் எழுப்பக் கூடும்."

"அவர்களது பரபரப்பு எனக்குப் புரிகிறது. என்றாலும் வேறு வழியில்லை என்பது உங்களுக்குத் தெரியுமே?" என்று பேரரசர் கண்களைச் சிமிட்டினார்.

"நாம் நினைப்பதைப்போல் காரியங்கள் நடைபெற வேண்டுமே என்று கவலையாக இருக்கிறது. இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வீரர்களைச் சமாளித்துவிடலாம். அதற்கு மேலும் தாமதம் ஏற்பட்டால்..."

"ஏற்படாது. கவலை வேண்டாம். அதோ பாருங்கள்! வெண்கொடி ஏந்திய புரவியொன்று வெகுதூரத்தில் நம்மை நோக்கி வருவது தெரிகிறது. அநேகமாக நாடாழ்வாரின் தூதர்கள்தாம் வந்து கொண்டிருக்கிறார்களென்று நினைக்கிறேன். என்ன செய்தி வருகிறதென்று பார்ப்போம்."

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் அந்தத் தூதுவர்கள் பாசறைக்கு வந்து சேர்ந்தார்கள். திருமெய்க்காவல் வீரர்கள் அவர்களை உரிய முறையில் பரிசோதித்துவிட்டு அவர்களைப் பாசறைக்குள் அனுமதித்தார்கள். பாசறையில் அருள்மொழிவர்மரையும் மாராயரையும் தவிர வேறெவரும் இல்லை.

மரப்பட்டை நிறத்தில் மெய்ப்பை தரித்து இடையில் வெண்பட்டுக் கச்சை கட்டியிருந்த அந்தத் தூதுவர்கள் இருவரும் பேரரசரின் முன் ஒரு காலை மடித்து மண்டியிட்டு நிலம் தொட்டார்கள்.

"சோழச் சக்ரவர்த்திகள் சமூகத்துக்கு வணக்கம். ஆரைவாய்மொழிக் கோட்டையின் அதிபதியும் வள்ளுவ நாட்டின் தலைவருமான நாடுவாழியார் சோழர்களுக்கும் தங்களுக்கும் தமது அன்பைத் தெரிவித்து இந்த ஓலையைக் கொடுத்தனுப்பினார்."

ஓலை பணிவுடன் நீட்டப்பட்டது.

"நல்லது. வாய்மொழியாக ஏதேனும் செய்திகள் உள்ளனவா?"

ஓலை கொடுத்தனுப்பும் தூதரிடம் எழுத்தில் பகிரங்கமாகக் குறிப்பிடமுடியாத சில செய்திகளைச் சொல்லியனுப்பும் பழக்கம் அக்காலத்தில் உண்டென்பதால் அருள்மொழிவர்மரிடமிருந்து அந்தக் கேள்வி எழுந்தது.

தூதுவன் நாற்புறங்களிலும் தன் கண்களை மெல்லச் சுழல விட்டான். பின் மெல்லிய குரலில் "ஆரைவாய் மொழிக்கோட்டை இதனைவிட பலம் மிகுந்த பல தாக்குதல்களைப் பலகாலம் சமாளித்திருக்கிறதென்றும் தங்களின் தற்போதைய சேனாபலத்தைக் கொண்டு அதனைக் கைப்பற்ற முடியாதென்றும் அவ்விதம் முயன்றால் சோழர்களின் பக்கமே சேதாரம் அதிகமாக இருக்கு மென்றும் நாடுவாழியார் தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்."

"அதனை நாம் நன்றாக அறிவோம். வேறு ஏதாவது?"

"சோழர்களுக்கும் மலைநாட்டிற்கும் நூற்றாண்டு காலமாக நிலவி வரும் நட்புறவைக் கருத்தில் கொண்டு கோட்டை முற்றுகையைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார்."

"நல்லது. தூதுவர்களே! மிகுந்த சிந்தனைக்குப் பிறகே இந்தப் படையெடுப்பு இந்த முறையில் நம்மால் துவங்கப் பட்டது. தமக்குக் கொடுக்கப்பட்ட கௌரவமான வாய்ப்பை நாடுவாழியாரும் அவரைச் சூழ்ந்துள்ள சக்திகளும் இழந்து விட்டார்கள் என்று அவரிடம் சென்று கூறுங்கள். இனி இந்தப் பகுதியில் இரத்த ஆறு ஓடப்போவதை ஒருவராலும்

தடுக்க முடியாதென்று தோன்றுகிறது. நீங்கள் சென்று வரலாம். யாரங்கே? இவர்களைப் பத்திரமாக அழைத்துச் சென்று கோட்டைப் பகுதியில் விட்டு விடுங்கள்!"

அவர்கள் இருவரும் மீண்டும் ஒரு முறை மண்டியிட்டு வணங்கி விட்டு அவ்விடம் அகன்றார்கள். அவர்கள் மறைந்த மறுகணம் பேரரசரின் முகத்தில் ஒரு கடுமையும் உறுதியும் பரவி நின்றன. "மாராயரே! உடனடியாகச் செய்தி அனுப்பியாக வேண்டும். யாரங்கே? திருமந்திர ஓலை நாயகத்தை பாசறைக்கு வரச்சொல்!"

விறுவிறுவென்று தமது உத்தரவுகளைப் பேரரசர் பிறப்பிக்க, அவற்றை மிகச் சிறிய பனையோலைகளில் எழுத்தாணியின் உதவியுடன் ஓலைநாயகம் எழுதி முடித்தார். பின் அந்த ஓலைகள் வளைத்துச் சுருளாக மடிக்கப்பட்டு அவற்றில் அரசாங்க இலச்சனைகள் இடப்பட்டன. அடுத்த அரை நாழிகை நேரத்தில் பாசறை வாயிலிலிருந்து ஏழெட்டு புறாக்கள் தத்தம் கூண்டுகளிலிருந்து விடுதலையாகி வானில் சந்தோஷமாய்ச் சிறகடித்துப் பறந்தன. போர்க்காலங்களில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு விரைவாகச் செய்தி அனுப்புவதற்காகவே பழக்கப்படுத்தப்பட்டிருந்த அந்தப் புறாக்கள், தமது அலகுகளின் கீழ் அரசாங்க முடங்கல்களைச்[33] சுமந்த வண்ணம் மேற்திசையில் பறந்து மறைவதைப் பேரரசரும் மாராயரும் கண்கொட்டாமல் பார்த்தபடி நின்றார்கள்.

31. சேரர் கோட்டை



யுத்தகாலத்திலும் சமாதான காலத்திலும் புறாக்களின் மூலம் செய்திகள் பறிமாறிக் கொள்வதென்பது அக்காலத்தைய பழக்க வழக்கங்களுள் ஒன்று. இதற்காகவே புறாக்களைப் பிரத்யேகமாகப் பழக்குவார்கள். தலைநகரில் உயரம் அதிகமான மாளிகைகளோ கோட்டைச் சாளரங்களோ இவற்றுக்காக ஒதுக்கப்படும்.

[33] வளைந்து சுருளாக மடிக்கப்பட்ட ஓலைகள்.

இவற்றைப் புறா மாடங்கள் என்று குறிக்கலாம்[34].

இப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் புறாக்களை சிறு குஞ்சுகளாக இருக்கும்போதே இம்மாடங்களில் கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். இந்த இடமே தனது இல்லம். இங்கு வேளை தவறாமல் உணவு கிடைக்கும் எனும் எண்ணம் அவற்றின் மனதில் நன்றாகப் பதியும். தகுந்த காலம் வந்ததும் அவற்றைக் கூண்டிலிட்டுக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ப் பறக்க விடுவார்கள். பழக்கம் காரணமாகவும் தமக்கே உரிய நுண்ணுணர்வுகளின் காரணமாகவும் அவை எப்படியோ தாம் பிறந்து வளர்ந்த மாடத்தைக் கண்டுபிடித்து வந்து சேரும்.

சிறிது நாட்கள் சென்றபின் கோட்டையின் புறம் படியிலிருந்தும் பின்னர் கோட்டையைச் சுற்றியுள்ள வயல்களிலிருந்தும் பறக்க விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூரத்தை அதிகரிப்பார்கள். இவ்வாறு பழக்கப்படுத்தப்படும் புறாக்கள் நாளடைவில் நூறு கல் தொலைவைக் கூடக் கடந்து வந்துவிடும். ஆக நாட்டின் பல பகுதிகளிலிருந்து தலைநகருக்குச் செய்தியனுப்ப வழி கிடைத்துவிடும்.

இவ்வாறு பழக்கப்பட்ட செய்திப் புறாக்களின் பணி போர்க் காலங்களில் இன்றியமையாத முக்கியப் பணியாகிவிடும். யுத்தகால அவசரச் செய்திகளை மிக விரைவாக ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்ப புறா விடு தூதே மிகச்சிறந்த வழி. இந்த வழிமுறை முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் வரைகூடப் பின்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவில் சில புறாக்களுக்கு வீர விருதுகள் கூடக் கொடுக்கப்பட்டனவாம்!

சில வேளைகளில் வித்தியாசமான இடங்கள் புறா மாடங்களாகச் செயல்படுவதுண்டு. உதாரணமாகக் கடல் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்கள் பயிற்றுவிக்கும் சில வகைப் புறாக்களின் மாடங்கள் மிகப்பெரிய கலங்களின் உச்சியில் அமைந்திருக்கும். துறைமுகங்களிலிருந்து கடலில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கலங்களுக்குச் செய்தியனுப்ப விழைவோர் இவ்வகைப் புறாக்களைப் பயன்படுத்துவர். சற்றே சிரமமான பணி என்பதால் இதற்குச் சிறப்புப் பயிற்சி

[34] பின்னாளில் திப்பு சுல்தான் ஒரு பெரிய மினாரட்டின் உச்சியில் இது போன்றதொரு புறா மாடத்தை உருவாக்கியிருந்தது தெரிய வருகிறது.

தேவை. கூடியிருக்கும் பல கலங்களுள் தமது மாடத்திற்குரிய கலத்தைப் புறாக்கள் கண்டுபிடிக்க ஏதுவாகக் கலங்களின் உச்சியில் கொடிக்கம்புகளையோ சிற்பங்களையோ பதிப்பதுண்டு.

அருள்மொழிவர்மர் வானில் பறக்கவிட்ட புறாக்கள் மேற்குக் கடற்கரைப் புரவி வாணிபத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்களால் பலகாலம் பயிற்றுவிக்கப்பட்டவை. அவை இரவோடிரவாகத் தமக்குப் பழக்கமான கடற்கரைப் பகுதிகளுக்குப் பறந்து சென்று கரையோரத்தில் அலைந்து திரிந்து தத்தமக்குரிய கலன்களைக் கண்டுபிடித்து அவற்றில் அமைந்திருந்த மாடங்களில் நேராகச் சென்று அமர்ந்து கொண்டன.

கலங்களில் அவற்றின் வருகை உடனடியாக உய்த்துணரப்பட்டது. அவை சுமந்து வந்த செய்திகள் உரியவர்களால் அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் படித்தறியப் பட்டன. இருள் சூழ்ந்த அந்தப் பின்னிரவு நேரத்தில் அக்கலங்களிலிருந்து மூன்று நெருப்புக் கங்குகள் விசைவிற்கள் மூலம் வானில் ஒன்றன்பின் ஒன்றாகச் செலுத்தப்பட்டன.

* * * * * * * *

இரவின் மூன்றாம் ஜாமம் முடிந்து நான்காம் ஜாமம் துவங்கி விட்டதால் மேற்கு வானில் நட்சத்திரங்கள் சற்றே இடம் மாறி அமர்ந்து கொள்வதைக் காண முடிந்தது. அந்த விடியல் நேர இருளில் விழிஞம் துறைமுகம் போக்குவரத்து அதிகமின்றி ஆழமான அமைதியில் உறங்கிக் கொண்டிருந்தது. கடலலைகளின் மெல்லிய இரைச்சலையும் கடல் நாரைகளின் அசந்தர்ப்பமான அறை கூவல்களையும் தவிர அங்கே வேறு சப்தங்கள் எழவில்லை.

இராக்காலச் சுங்கப் பணியை ஏற்றியிருந்த கடற்கரைக் காவலர்கள் ஓரிடத்தில் குளிருக்கு இதமாக நெருப்பை மூட்டி அதனைச் சுற்றியமர்ந்து நிதானமாகப் பிழியருந்திக் கொண்டிருந்தார்கள். ஓரிருவர் மணலில் ஆடு புலி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள். புலி ஆடுகளை பாய்ந்து விழுங்க முயல, ஆடுகள் அங்குமிங்கும் ஓடித் தப்பித்துக் கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில் சற்று தூரத்தில் அமைந்திருந்த சுங்கச் சாவடியிலிருந்து ஒரு முதிய காவலன் அவர்கள் கூடியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். வயதைப் பொருட்படுத்தாத அவனுடைய அனுபவம் வாய்ந்த கண்கள் இருளின் ஆழத்தைக் கிழித்துக்கொண்டு அங்குமிங்கும் துழாவின.

"அடேய் சோமா! நேற்றிரவு கடலில் ஏதோ நெருப்புப் பந்துகள் பறந்து சென்று விழுந்ததைப் போன்றதொரு வெளிச்சம் தெரிந்ததே. அது என்ன ஏதென்று விழிஞத்து வணிகர்களிடம் விசாரித்தாயா?."

"விசாரித்தேன். விசாரித்தேன். ஒருவனுக்கும் ஒன்றும் தெரியவில்லை. விடிந்த பிறகுதான் என்ன ஏதென்று பார்க்க வேண்டும்!"

"என்ன? விழிஞத்து வணிகர்களுக்கு இது பற்றி ஒன்றுமே தெரியவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே? அவர்களுக்குத் தெரியாமல் இந்தப் பகுதிகளில் ஒன்றுமே நடவாதே?"

"ஏதாவது அராபியக் கலம் இருளில் திசை தெரியாமல் வழிதவறிப் போயிருக்கும். வெளிச்சத்திற்காக நெருப்புக் கங்குகளை வானில் எறிந்திருப்பார்கள்."

"ம்ஹூம். அவ்வாறு வெளிச்சத்திற்காக வானில் நெருப்பை எறியும் பழக்கம் அராபியரிடம் கிடையாது. இது வேறு ஏதோ விவகாரம். அட! கடலில் ஏதோ மெல்லிய வெளிச்சப் பொட்டுகள் தெரிகின்றனவே? இந்த நேரத்தில் யாரது இந்தப் பக்கம் கலத்தை ஓட்டிக்கொண்டு வருவது?"

"என்ன? இந்த விடியல் நேரத்தில் கடலில் போக்குவரத்தா?"

அங்கிருந்து இரண்டு மூன்று பேர் உடனடியாக எழுந்து நின்று ஆழ்கடலை உற்று நோக்கத் தலைப்பட்டார்கள்.

"வருவது ஒரு கலமில்லை. இரண்டு.. இல்லை மூன்று கலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றன."

"மூன்றுமே பெரிய கலங்களா?" என்று ஆர்வத்துடன் விழிகள் விரிய வினவினான் அவர்களின் இளையவன் ஒருவன். நல்ல சரக்குகள் நிறைந்த கலமாக இருந்தால் வணிகர்களை ஒரு வழி பார்த்து விடலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

"மூன்றில் ஒன்று பெரிய கலம் என்பது தெரிகிறது. மற்ற இரு கலங்களையும் சரிவரப் பார்க்க முடியவில்லை. இன்னும் நெருங்கி வந்தால்தான் தெரியும். அவற்றின் போக்கை வைத்துப் பார்த்தால் அவை நமது பகுதிக்குத்தான் வந்து கொண்டிருக்கின்றனவா இல்லை கடந்து செல்கின்றனவா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. வருடத்தின் இந்தப் பருவத்தில் நமது வணிகர்கள் எவரும் கடலுக்குள் செல்வது வழக்கமில்லையே? காற்று திசை மாறி வீசும் காலகட்டமாயிற்றே இது? நிச்சயம் இவை வழி தவறிய கலங்களாகத்தான் இருக்க வேண்டும்."

"எதற்கும் எச்சரிக்கையாக இருப்போம். காலம் கெட்டுக் கிடக்கிறது. அனைவரும் எழுந்து கடற்கரையெங்கிலும் நின்று கொள்ளுங்கள். சோமா! கோட்டைக்குள் சென்று காவலர்களை எழுப்பு. தூங்கி வழிந்து கொண்டிருக்கப் போகிறார்கள்!"

சட்டென்று மந்திரம் போட்டாற்போல அந்தக் கடற்கரை விழித்துக் கொண்டது. சுங்கக் காவலர்கள் தத்தம் வேல்களைப் பிடித்தபடி கரையெங்கிலும் பரவி நின்றார்கள். அப்பகுதியில் சிறு படகுகளையும் கட்டு மரங்களையும் ஓட்டிப் பிழைத்துக் கொண்டிருந்த மீனவர் சிலர் கலங்கள் வந்து நிற்பதைக் கவனித்துவிட்டு கடலுக்குள் செல்லத் தலைப்பட்டனர். சரக்குகளை இறக்குவதற்குப் படகுகள் தேவைப்படலாம் அல்லவா?

சிறிது நேரத்தில் சாரி சாரியாகச் சிறு படகுகள் கடற்கரையை நோக்கிப் படையெடுத்து வரலாயின. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை சுங்கக்காவலர்கள் உணர்ந்து சுதாரித்துக் கொள்வதற்குள் நூறு நூற்றம்பது வீரர்கள் படகுகளிலிருந்து முழங்காலளவு கடல் நீரில் இறங்கிக் கரையை நோக்கி நடக்கத் துவங்கிவிட்டார்கள்.

"ஓ... ஓ!"வென்னு கூச்சலிட்டபடி காவலர்கள் ஓட்டம் பிடிக்கத் துவங்குவதற்கும் படகில் வந்து சேர்ந்த வீரர்கள் கடற்கரை மணலில் கால் பதிப்பதற்கும் சரியாக இருந்தது.

கருநீல வானில் இருள் மடிந்து வெளிச்சம் பரவத் துவங்கியிருந்ததால் அவர்களது உருவங்கள் மெல்லப் புலனாயின. தலையில் தலைப்பாகை தரித்து மார்பில் கவசம் தரித்து முதுகில் அம்பறாத் துணியை இறுக்க முடிந்து கையில் வாள்களுடனும் வேல்களுடனும் நீண்டிருந்த

கட்டிகளுடனும் இந்த நேரத்தில் விழிஞும் கடற்கரைக்கு வந்திறங்கியிருக்கும் இந்த வீரர்கள் யார்?

வந்திறங்கிய வீரர்களுள் ஒருவன் தனக்குப் பின்னால் நின்ற முதியவரை மரியாதையுடன் நோக்கி "ஐயா! அவர்களை வேண்டுமானால் துரத்திப்பிடிக்கலாமா?" என்று வினவினான்.

"வேண்டாம். அவர்கள் சுங்கச்சாவடியின் காவலர்கள் தாம். ஊருக்குள் சென்று சேதி சொல்லட்டும்! சோழர் படை தென்மேற்குக் கடற்கரையெங்கிலும் கால் பதித்துவிட்ட செய்தியை அனைவரும் தெரிந்து கொள்ளட்டும்! ஹூம்.."

கடற்கரையில் நிதானமாக இரு கால்களையும் ஊன்றி நின்று இடையில் கரங்களைப் பொருத்திக் கடற்காற்றை உள்ளிழுத்தபடி கம்பீரமாக மொழிந்தார் சோழ சைனியத்தின் முதுபெரும் சேனாதிபதியான இராஜராஜப் பல்லவராயர். அவருடைய அடியையொற்றிப் படகிலிருந்து கீழிறங்கிய நமது நண்பர்கள் கம்பன் மணியனாரும் பரமன் மழபாடியாரும் அவருக்குப் பின்னால் நின்று கொண்டு கடற்கரைப் பகுதிகளை நோட்டமிட்டார்கள். இருவரும் இதரப் போர்வீரர்களைப் போலவே கவசங்களுடனும் ஆயுதங்களுடனும் காணப்பட்டார்கள்.

"மணியா! நீ சைனியத்தின் ஒரு பகுதி வீரர்களுடன் கடற்கரையின் வலது கோடியில் சென்று நின்றுகொள். பரமா.. நீ மற்றொரு பகுதியுடன் இடது கோடிக்குச் சென்று விழிஞும் கோட்டைக்குள் நுழைய முயற்சிசெய். கவனம்! அவர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட வில்வீரர்கள் உண்டு. அதனால் கோட்டையின் பின்பக்கம் வழியாக நுழைய இயலுமா என்று பார். முடிந்தவரை சேதங்களைக் கட்டுப்படுத்தி நிதானமாக உள்ளே செல். அவசரமில்லை. கடற்கரையில் நாம் எதிர்பார்த்த அளவிற்கு உடனடியாக எதிர்ப்பு இல்லாவிட்டாலும் இன்னும் சற்று நேரத்தில் வேணாடுடையவருடைய படைகள் இங்கே வந்து சேருமென எதிர்பார்க்கிறேன். மீதமிருக்கும் வீரர்களைத் திரட்டி வைத்துக் கடற்கரையை நானே கவனித்துக் கொள்கிறேன்!"

படகுகளில் மேலும் மேலும் சோழ வீரர்கள் வந்திறங்க, அவர்களுக்கு உடனடியாக உரிய கட்டளைகள் இடப்பட்டன.

* * * * * * * *

எழுபது எண்பது வீரர்கள் சேர்ந்தவுடன் கோட்டையை நோக்கி விறுவிறுவென்று நடக்கத் துவங்கினார் மழபாடியார். ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு அந்த ஈர மணலில் கால்பதித்து நடப்பது சிரமமாகத்தான் இருந்தது. என்றாலும் சளைக்காமல் முடிந்தவரை முயன்று வேகமாகக் கோட்டையை நெருங்கினார். இன்னும் அறுபது எழுபது தப்படிகளில் கோட்டையை அடைந்து விடலாம் என்று அவர் நினைத்திருக்க, எதிர்பாராததொரு தருணத்தில்...

"சர்ர்..ர்..ர்..."

எங்கிருந்தோ சீறிப்பாய்ந்து வந்த நீண்ட அம்பு ஒன்று அவருக்கருகில் நடந்து வந்து கொண்டிருந்த வீரனின் தோள்களை உரசிக்கொண்டு போய் மணலில் ஆழமாகப் புதைந்து நின்றது. அதனைக் கண்ட மழபாடியாரின் முகத்தில் உடனடியாக ஒரு கடுகடுப்பு ஏறியது.

அது ஒரு விதமான எச்சரிக்கை. மேலும் நெருங்கினால் கோட்டையிலிருந்து அம்பு மழை பொழியும் என்பதற்கான எச்சரிக்கை. இத்தனை பெரிய அம்பு இவ்வளவு தூரம் விசையோடு பறந்து வருகிறதென்றால்.. உள்ளே வில்லியர் மட்டுமல்ல, பேரம்புகள் செலுத்தும் விற்பொறிகளும் உள்ளன என்பது பொருள். சேர நாட்டு வீரர்களின் முக்கியப் பலமே இந்த வில்வீரர்களும் விற்பொறிகளும்தாம். அதனால்தானே 'வில்லவன்' என்று தங்களை அவர்கள் கர்வத்துடன் அழைத்துக் கொள்கிறார்கள்?

மேற்கொண்டு இவ்விதம் முன்னேறுவது ஆபத்து. வியூகத்தைச் சற்றே மாற்றியமைத்துக் கொண்டால்தான் இழப்புக்கள் அதிகமின்றி மேற்கொண்டு முன்னேற முடியும். என்ன செய்யலாம்? எவ்வாறு தாக்கினால் உள்ளிருக்கும் வீரர்களை விரைவில் வீழ்த்தலாம்?

பரபரப்பாகச் சிந்திக்க முற்பட்டவர், தற்செயலாக வானத்தைப் பார்த்தார். பின் கோட்டையையும் பார்த்தார். அவரது முகத்திலிருந்த கடுகடுப்பு மறைந்து மெல்லிய முறுவல் தோன்றி மறைந்தது.

* * * * * * * *

விழிஞத்தின் கடற்கரையில் இயற்கையாகவே மண் மேடிட்டிருந்த மேட்டுப்பாங்கானதொரு பகுதியில் கட்டப் பட்டிருந்ததால் ஆய்வேளிர் கோட்டையின்மேல் நின்று கொண்டிருந்த வேணாட்டு வீரர்களால் பல கல் தொலைவிற்குக் கடலையும் கரையையும் கண்காணிக்க முடிந்தது. அங்கிருந்து மிக எளிதாக எதிரிகளை நோக்கி அம்பெய்யவும் முடிந்தது.

கோட்டையில் அளவில் பெரிய அம்புகளைச் செலுத்துவதற்கென்று மூன்று பழைய விற்பொறிகள்[35] இருந்தன. அவை கோட்டையின் மூன்று வாயில்களின் மேலும் முறையாகப் பொருத்தப்பட்டிருந்தன. முதலிரண்டு பொறிகளும் நன்முறையில் இயங்கிக் கொண்டிருக்க கடலை நோக்கியவாறு அமைக்கப்பட்டிருந்த மூன்றாவது பொறி பல காலத்திற்கு முன் பாண்டியர் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபரின் படையெடுப்பின்போது உடைத்தழிக்கப்பட்டிருந்தது.

இம்மாதிரியான பொறிகளின் மூலம் அம்புகள் செலுத்த மூன்று பேர் ஒரே சமயத்தில் செயல்பட்டாக வேண்டும். அம்பை விசை நுனியில் பொருத்த ஒருவன். விசையை வளைத்துக் குறி பார்க்க இன்னொருவன். விசையை பிடித்து இயக்க வேறொருவன். இந்த மூன்று பேரும் சரியாக இணைந்து செயல்பட்டால் அம்பு ஒன்று அல்லது ஒன்றரை கல் தொலைவில் அமைந்துள்ள இலக்கைக் கூடச் சென்று தாக்கிவிடும்.

ஒரு காலத்தில் இந்தப் பொறிகள் கடல் வழியே படையெடுத்து வரும் கலங்களைத் தாக்குவதற்குப் பயன்பட்டன. எரியும் நெருப்புக் கங்குகளை அம்புகளின் மூலம் செலுத்தி கலங்களின் பாய்மரங்களில் நெருப்பைப் பற்றவைத்து விடுவார்கள். இம்முறையில் முக்கியமான பாண்டிநாட்டுக் கலங்கள் பல மூழ்கடிக்கப் பட்டதினால்தான் மேற்கு வாயில் விற்பொறி பாண்டிய வீரர்களால் குறிவைத்துத் தாக்கி அழிக்கப்பட்டது.

ஆனால் இவ்வாறு பொறிகள் மூலம் செலுத்தப்படும் அம்புகளின் தூரம் அதிகமாக அதிகமாக அவற்றின் விசை இயல்பாகவே குறைந்துவிடும். குறியும் துல்லியமாக

---

[35] பண்டைய காலத்திலிருந்தே கிரேக்கர்களும் ரோமர்களும் Ballista என்றழைக்கப்பட்ட இவ்வகை விற்பொறிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இருக்காது. ஆதலால் எதிரிகள் கோட்டைக்கு அருகில் வரும்வரை நெருங்க விட்டுவிட்டு அதற்குப் பின் முழு வேகத்தில் தாக்கத் துவங்குவதுதான் வீரர்களின் வழக்கம்.

ஆனால் அன்று காலை கோட்டைக் காவலை ஏற்றிருந்த வேணாட்டு வீரனுக்கு வேறொரு பிரச்சனை இருந்தது. சோழர் படைகளை அவர்கள் விழிஞத்தில் எதிர்பாராததால் உரிய முறையில் தாக்குதலுக்குத் தயாராகவில்லை. கோட்டைக்குள் அவனையும் சேர்த்து மொத்தம் நாற்பது அல்லது நாற்பத்தி ஐந்து வீரர்களே இருந்தார்கள். அந்தச் சிறு படையை வைத்துக்கொண்டு அதிக நேரம் சமாளிப்பதென்பது இயலாத காரியம். இரவு முடிந்து வானில் வெளிச்சம் பரவத் துவங்கிவிட்டது. எதிரிகள் நெருங்கி வந்துவிட்டால் இவர்களின் படை பலம் என்ன என்பது ஒருவாறு அனுமானிக்கப்பட்டுவிடும். அதற்குப்பின் தைரியமாக அவர்கள் முன்னேறத் துவங்கி விடுவார்கள். அது நல்லதல்ல.

ஆகவே கோட்டைக்குள் அதிகப் படைகள் இருப்பதைப்போல் பாவித்து அவர்களை நெருங்க வொட்டாமல் செய்வது தான் அவனுக்கிருக்கும் ஒரே வழி. இதனை உத்தேசித்தே விற்பொறிகளின் மூலம் எச்சரிக்கை அம்பு விடுக்க உத்தரவிட்டான் அவன். இன்னும் ஓரிரு நாழிகைகளில் வேணாடுடைய படைகள் செய்தியறிந்து கடற்கரைக்கு ஓடி வந்துவிடும். அதுவரை முற்றுகையை ஒருவாறு சமாளித்தாக வேண்டும்.

விழிஞத்தின் கோட்டைக்கு மூன்று வாயில்கள் உண்டு என்பதை முன்னர் குறிப்பிட்டோம். அவற்றுள் பிரதான நுழைவாயிலான கருநந்தன் திருவாயில் கிழக்கு முகமாக அமைந்திருக்க, அதற்கு நேரெதிரே கடலை நோக்கியபடி அகளங்கன் திருவாயில் அமைந்திருந்தது. இரண்டிற்கும் இடையில் அளவில் சிறியதான வடக்கன் திருவாயில் வடபுலத்தை நோக்கியவாறு காட்சியளித்தது.


பரமன் மழபாடியார் தலைமையில் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்த சோழர்படை, வடக்கன் திருவாயிலைக் குறிவைத்து முன்னேறிக் கொண்டிருந்த போதுதான் சீறிப் பாய்ந்த அம்பினால் தாக்கி நிறுத்தப் பட்டார்கள். அந்த அம்பு வடக்கன் திருவாயிலின் உச்சியில் அமைந்திருந்த விற்பொறியின் மூலம் வீரர்களால் எய்யப்பட்டிருந்தது.

அந்த எச்சரிக்கைக்கு உடனடியாக ஒரு மரியாதை கிடைத்ததைப் போலத்தான் தெரிந்தது. ஏனெனில் அதுவரை கோட்டையை நோக்கி வேகவேகமாக முன்னேறிக் கொண்டிருந்த சோழர்படை உடனடியாக ஆணியடித்தாற் போல் நின்று விட்டதைக் காவலன் கண்டான். இது நல்லது. மேற்கொண்டு முன்னேறாமல் அவர்கள் கடற்கரையில் நின்று யோசித்துத் தாமசம் செய்வது மிகவும் நல்லது. சோழ வீரர்கள் அவர்களின் தலைவனைப் போலக் காணப்பட்ட ஒருவனைச் சூழ்ந்து கொண்டு அக்கறையுடன் அவன் சொல்வதைக் கேட்கலானார்கள். அட, பார்ப்பதற்கு மிகவும் இளைமையாகத் தெரிகிறானே? இவனா கோட்டையைப் பிடிக்கப் போகிறான்?

அவர்கள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாகக் கோட்டையின் பல பக்கங்களிலும் பிரிந்து பரவி நின்றார்கள். காவலனால் அவர்களின் வியூகத்தைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. சோழ வீரர்கள் தொடர்ந்து முன்னேறப்போவதை எதிர்பார்த்து வேணாட்டு வீரர்கள் அனைவரும் கருநந்தன் திருவாயிலுக்கும் வடக்கன் வாயிலுக்குமிடையே வரிசையாகத் தத்தம் விற்களில் அம்புகள் பொருத்திப் போராடுவதற்குத் தயாராக நின்றார்கள்.

ஆனால் அடுத்த அரை நாழிகை நேரத்திற்கு ஒன்றுமே நடக்கவில்லை. கோட்டையைச் சுற்றி நின்று கொண்டிருந்த சோழ வீரர்கள் எதற்காகவோ காத்திருப்பதைப்போல் தெரிந்தது. ஆனால் எதற்காக என்பது புரியவில்லை.

சிறிது நேரத்தில் கிழக்கு வானில் அடர்ந்து வளர்ந்திருந்த தென்னை மரங்களின் பின் கதிரவன் உதயமானான். பளீரென்று பரவிய அவனது கிரணங்கள் அத்திசையை நோக்கியவாறு அமைந்திருந்த கருநந்தன் திருவாயிலின் மேல் நேராகச் சென்று விழுந்தன. அவ்வளவு தான்! அந்தத் தருணத்திற்காகவே காத்திருந்தவர்கள் போல் "ஹோ!" வென்ற பேரிரைச்சலுடன் சோழ வீரர்கள் கேடயத்தை முன் பிடித்தபடி வரிசையாகக் கிழக்கு வாயிலை நோக்கிப் பாயலானார்கள்.



படம் – கோட்டையும் படையெடுப்பும்.

சர்.. சர்..ரென்று அம்புகள் அவர்களை நோக்கிப் பறந்து வந்தன. ஆனால் அவற்றில் பல குறி தவறிச் சென்று மணலில் புதைந்தன. ஆதவனின் கிரணங்கள் பார்வையை மறைத்ததால் வேணாட்டு வில்லியரின் பலம் பாதியாகக் குறைந்து போயிருந்தது. அந்த வாய்ப்பை மழபாடியார் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். வாயிலை அடைந்து விடும் அவசரத்தில் ஓடி வந்த வீரர்களின் தோள்களையும் கால்களையும் ஒரு சில அம்புகள் துளைக்கத்தான் செய்தன. என்றாலும் அவர்கள் சோர்ந்துவிடாமல் ஒருவித வெறியோடு முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு ஓடிய வீரர்களின் நடுவே மழபாடியாரும் உற்சாகக் கூச்சலிட்டபடி முன்னேறிக் கொண்டிருந்தார்.

இவ்வாறாக வேணாட்டு வீரர்களின் கவனம் முழுவதுமாகக் கருநந்தன் திருவாயிலில் குவிந்திருந்த வேளையில் மழபாடியாரின் மற்றொரு சிறு படை பிரிந்து சென்று வடக்கன் வாயிலைத் தாக்கியது. அளவில் சிறிய அந்த வாயில் தாக்குதலைத் தாங்க முடியாமல் வழிவிட, சிறிது நேரத்தில் சோழர் படை கோட்டைக்குள் புகுந்தது.

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் அந்த வீர விளையாட்டு ஒரு முடிவுக்கு வந்தது. சேரரின் ஆய்வேள் கோட்டை மழபாடியாருக்குப் பணிந்தது. கோட்டைக்குள் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. வேணாட்டு வீரர்கள் முப்பது பேர் கோட்டைக்குள் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். மற்றவர்கள் உடலெங்கிலும் வெட்டுக் காயங்களுடன் ஆங்காங்கே அலறிக் கொண்டிருந்தார்கள். சோழ வீரர்கள் பலரது உடல்களிலும் கூட உதிரம் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

தோள்களிலும் முகத்திலும் காயங்களுடன் வெற்றி வீரராக வடக்கன் வாயிலுக்கு மேல் ஏறி நின்றார் மழபாடியார். கதிரவனின் கிரணங்கள் பெருமிதம் பொங்கும் அவரது முகத்தில் வந்து விழுந்தன. சற்று தூரத்திலிருந்து இராஜராஜப் பல்லவரையரும் அவருக்குப் பின்னால் வெகு தொலைவில் நின்று கொண்டிருந்த இளையவரும் அவரை நோக்கிக் கையாட்டுவது தெரிந்தது. அவரும் பதிலுக்குக் கரங்களை ஆட்டினார்.

உடலெங்கிலும் பலத்த சோர்வு படர்ந்திருந்தது. வெட்டுக் காயங்களின் மேல் கடலின் உப்புக்காற்று உரசிச் சென்றதால் தாங்கமுடியாத எரிச்சல் ஏற்பட்டது. ஆனால்

அந்த எரிச்சலையும் சோர்வையும் மீறி ஒரு விதமான பெருமிதமும் உற்சாகமும் மனதில் நிறைந்திருந்தன. வாழ்நாளில் அவர் பெற்ற முதல் வெற்றி அது. சிறு வெற்றிதான். ஆனால் முக்கியமான வெற்றி. இந்தக் கோட்டை அவர்களுக்கு முக்கியம். இன்னும் சற்று நேரத்தில் அவர்கள் எதிர்கொள்ளப்போகும் வேணாட்டவர் படைகளைச் சமாளிக்க இந்தக் கோட்டையும் அதன் தளவாடங்களும் அவர்களின் வசத்தில் இருப்பது மிகவும் அவசியம்.

வடக்கன் வாயிலின் இரு பக்கங்கிலும் அமைந்திருந்த உயரமான காவல் அரண்களின் மீது அவரது கண்கள் பதிந்தன. நாலே எட்டில் படிகளில் கால்வைத்து ஏறி அரணை அடைந்து நாற்புறங்களிலும் பார்வையைப் படர விட்டார். அந்த இடத்திலிருந்து வெகுதூரத்திற்குப் பார்வையைச் செலுத்த முடிந்தது. மேற்திசைக் கடலில் அவர்களைச் சுமந்து வந்திருந்த கலங்கள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. கடற்கரையில் சோழ வீரர்கள் உற்சாகமாக அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். கடற்கரையின் வடக்கே கம்பன் மணியனார் தமது படைவீரர்களுடன் ஓரிடத்தில் நின்று எதிரிப்படைகளின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

கடற்கரையைத் தாண்டி விழிஞத்திலிருந்து அனந்தபுரத்திற்குச் செல்லும் சகடப் பெருவழியில் அவரது கண்கள் பதிந்தன. வடக்கே வெகு தொலைவில் பெரியதொரு புழுதிப் படலம் குப்பென்று எழுந்து கொண்டிருந்தது தெரிந்தது. வேணாட்டவர் படைகள் அதற்குள் கிளம்பி வந்து கொண்டிருக்கின்றனவா என்ன?

32. வேள் நாட்டு வீரர்கள்



மழபாடியாரின் வீர தீர சாகசங்களைக் கண்ணிமைக்காமல் நீண்ட நேரமாகக் கவனித்துக் கொண்டிருந்தார் கம்பன் மணியனார். கோட்டையை நோக்கிச் சோழவீரர்கள் சிரமத்துடன் முன்னேறிக் கொண்டிருந்த சமயத்தில் நாமும் நமது வீரர்களுடன் சென்று உதவினால் என்ன? என்கிற எண்ணம் தோன்றவே நான்கைந்து வீரர்களுடன் முன்னேறத் துவங்கினார். ஆனால் அவரது

நடவடிக்கைகள் கடற்கரையின் மத்தியப் பகுதியில் நின்றபடி நடப்பவற்றைக் கண்காணித்துக் கொண்டிருந்த பல்லவ ராயரால் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டன.

'கொஞ்சம் பொறு. தேவைப்பட்டால் நாம் சென்று உதவலாம். ஆனால் இப்போதைக்கு நம் உதவியின்றியே அவன் முன்னேறட்டும்' என்று குறிப்பிடுவதைப்போல் கையால் சைகை செய்தார் பல்லவராயர்.

அவருடைய எண்ணங்கள் மணியனாருக்கும் புரிந்தன. மழபாடியாருக்கு இதுவே முதற் போர். கன்னிப் போர். அவரது முழு முயற்சியால் இந்தக் கோட்டையைப் பிடிப்பதே அவருக்கு மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தரும். நமது உதவி கிடைத்தால் இன்னமும்கூட எளிதாகக் கோட்டையைக் கைப்பற்றி விடலாம்தான். ஆனால் அந்த வெற்றி மழபாடியாருடைய முழுவெற்றியாக இருக்காது. அதனால்தான் ராயர் அவ்வாறு முடிவெடுத்திருக்கிறார் போலும்.

சேனாபதியாரின் கணக்கு பிசகவில்லை என்பதை அடுத்த அரை நாழிகை நேர முற்றுகை நிரூபித்தது. வெற்றி வீரராக மழபாடியார் வடக்கன் வாயிலின் உச்சியில் ஏறி நின்றபோது அவரை நோக்கிப் பெருமிதம் பொங்கக் கையை ஆட்டினார் இளையவர். சாதித்து விட்டாயடா எனதருமைத் தோழா! உன் வீரம் வாழ்க. உன் வாளும் வேலும் வெல்க.

அடுத்த சில நொடிகளிலேயே மழபாடியார் வாயிலின் காவல் அரண்களில் மீதேறுவதும் அங்கிருந்து நான்கு திசைகளையும் திரும்பித் திரும்பிப் பார்ப்பதும் தெரிந்தது. சுற்றிச் சுழன்ற அவரது கண்கள் வடக்கே பதிந்தன. அதற்கடுத்தபடியாக விறுவிறுவென்று அவர் கீழே இறங்கி வீரனொருவன் மூலம் ஏதோ செய்தி சொல்லியனுப்புவது தெரிந்தது. அந்தச் செய்தி பல்லவராயருக்கே செல்லும் என்பதால் தாமும் ராயருடன் இருந்தாகவேண்டும் என்பதை உணர்ந்தவர், உடனடியாக அவரை நோக்கி நடக்கலானார்.

சில நிமிடங்களில் செய்தியைச் சுமந்து வந்த அந்த வீரன் பல்லவராயரை நெருங்கி விட்டான்.

"மூத்த சேனாபதியாருக்கு மழபாடியாரிடமிருந்து அவசரச் செய்தி. வேணாடுடைய படைகள் அனந்த புரத்திலிருந்து விழிஞம் நோக்கிப் படையெடுத்து வந்து

கொண்டிருக்கின்றன. புழுதி அதிகமாக எழுவதைப் பார்த்தால் புரவிப் படைதான் வந்து கொண்டிருப்பது என்பது நிச்சயமாகின்றது. மேற்கொண்டு என்ன செய்வது என்று மழபாடியார் தங்களை விசாரித்து வரச் சொன்னார்."

பல்லவராயரும் இளையவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். என்ன செய்வது என்கிற கேள்வி இருவர் மனதிலும் ஒரு சேர எழுந்தது. புரவிப்படைகளின் வேகம் கடற்கரை மணலில் மட்டுப்படும் என்றாலும் அதனைத் தரைப்படையைக் கொண்டு தடுக்க முயல்வது உசிதமானதல்ல. சேதாரம் அதிகமாக இருக்கும். புரவிகளில் ஆரோகணித்தபடி வேணாட்டு வீரர்கள் அம்பு மழை பொழியத் துவங்கி விடுவார்கள். அதனால் கோட்டைக்குள் புகுந்துகொண்டு உள்ளிருந்தபடி எதிர்கொள்வது நல்லது.

ஆனால் அதில் வேறொரு பிரச்சனை இருந்தது. படையெடுத்து வரும் வேணாட்டு வீரர்கள் கோட்டை சோழர்கள் வசமாகி விட்டதைப் புரிந்துகொண்டு உடனடியாகக் கோட்டையைத் தாக்காமல் மேற்கொண்டு சைனியம் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துப் பின்வாங்கி விட்டால்? அதுவும் நல்லதல்ல. வரப்போகும் படைகளிடமிருந்து புரவிகளை அபகரித்தே ஆகவேண்டும். இல்லையேல் வேறு பல சிக்கல்கள் உருவாகிவிடும்.

களங்கள் பல கண்டு யுத்த தந்திரங்களில் பழுத்த அனுபவம் வாய்ந்தவரான பல்லவராயர் சிறிது நேரம் சுற்றும் முற்றும் பார்த்தார்.

"படைகள் அனந்தபுரத்திலிருந்து வருவதால் கடற்கரையின் வடபகுதியிலிருந்துதானே உள்ளே நுழையும்?"

"ஆம். சகடப் பெருவழி அங்குதான் கடற்கரையைச் சந்திக்கிறது."

"சரி. அப்போது இப்படிச் செய்தால் என்ன?"

* * * * * * * *

அடுத்த ஒன்றரை நாழிகை நேரத்தில் வேணாடு டையவரான கோவர்தன மார்த்தாண்டரின் கரைக்காவற் படை தங்களின் கண்ணுக்குக் கண்ணான ஆய்வேள்

கோட்டையை எப்பாடு பட்டாகிலும் காப்பாற்றிவிட வேண்டுமென்கிற முனைப்புடன் அவசர அவசரமாகக் கடற்கரைக்குள் நுழைந்தது. நூறு நூற்றைம்பது வீரர்களைக் கொண்டிருந்த அந்தப் புரவிப்படை, கடற்கரைக் காவலை ஏற்றிருந்த பிரிவுகளுள் ஒன்று.

சோழர் படைகள் ஆரைவாய்மொழியில் குவித்து வைக்கப்பட்டிருந்ததால் வள்ளுவனாருக்குத் தமது உதவி ஒரு வேளை தேவைப்படலாம் என்றெண்ணிய கோவர்தனர், ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விழிஞத்தின் கரைக் காவற்படைகளுள் இரு பெரும் பிரிவினரை புறத்தாய நாட்டின் எல்லைக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் இடம் மாற்றியிருந்தார். அந்த நடவடிக்கைதான் தற்போது கரைக்காவல் படையின் பலத்தைக் கணிசமாகக் குறைத்து விட்டிருந்தது. விழிஞத்தில் சோழர்களின் தாக்குதல் நடக்கும் என்பதை எவர்தான் எதிர்பார்த்தார்கள்?

கோட்டைக்குள் நமது வீரர்கள் அதிகம் பேர் இல்லை. என்றாலும் விற்பொறிகளையும் அம்புகளையும் வைத்துக் கொண்டு ஒருவாறு படையெடுப்பைச் சமாளித்துக் கொண்டிருப்பார்கள். நாமும் அவர்களுடன் சேர்ந்து கொண்டால் சோழர்களை விரட்டிவிடலாம் என்கிற எண்ணம்தான் அதிவேகமாக விரைந்து கொண்டிருந்த வேணாட்டு வீரர்கள் பலருக்கும் இருந்த்து.

வந்த வேகத்தில் பெருவழியிலிருந்து பிரிந்து கடற்கரைக்குள் சடசடவென்று உள்ளே நுழைந்தவர்கள் அப்பகுதி ஆள் அரவமற்றுத் துடைத்துப் போட்டாற்போல் காணப்பட்டதைக் கண்டு பெரிதும் குழப்பமடைந்தார்கள். சற்று தூரத்தில் கோட்டையின் காவல் அரண்களிலும் மாடங்களிலும் நடமாட்டங்கள் தெரிந்தன. அடடா.. என்ன இது? வடக்கன் வாயிலின் மீது புலிக்கொடியல்லவா பறந்து கொண்டிருக்கிறது? அனர்த்தம்..! அனர்த்தம்..!

"சேச்சே.. அதற்குள்ளாகவா வீழ்ந்துவிட்டது நமது கோட்டை? என்னவொரு துரதிருஷ்டம்! நமது கடற்கரைக் காவற்படையை இங்கிருந்து நகர்த்த வேண்டாமென்று படித்துப் படித்துப் பலமுறை கூறினேன். நாடுடையவர் கேட்டால்தானே?"

"நடந்துபோனதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. இப்போது என்ன செய்வது?"

"கோட்டையை நெருங்கிப் பார்ப்போம். படையெடுத்து வந்திருக்கும் எதிரிகளின் எண்ணிக்கை நூறு வீரர்களுக்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில் கோட்டையை மீட்க முயற்சிப்பது நல்லது."

"கோட்டைக்குள்ளிருந்த நமது ஆட்களின் நிலை என்ன என்பது தெரியவில்லையே? அத்தனை பேரும் முட்டாள் தனமாக உள்ளே மாட்டிக்கொண்டு விட்டார்களா? அல்லது சுரங்கப்பாதை வழியாகத் வெளியே தப்பியோடி விட்டார்களா?"

"தெரியவில்லை. எதற்கும் கோட்டையை சற்று நெருங்கிப் பார்ப்பது நல்லது."

"கடற்கரையில் ஒரு ஆள்கூடத் தென்படவில்லையே? ஆச்சரியமாக இருக்கிறதே.. ஆனால் மணலிலோ ஏராளமான பாதச்சுவடுகள் தெரிகின்றன!" என்று வியந்தான் ஒரு இளைய படைவீரன்.

"அவை நமது வணிகர்கள் மற்றும் சுங்கக்காவலர்களின் சுவடுகளாகக் கூட இருக்கலாமல்லவா?"

"அடேய்! உங்களது சுவடு ஆராய்ச்சியையெல்லாம் பின்னால் வைத்துக் கொள்ளுங்கள். தற்போது அதற்கெல்லாம் அவகாசமில்லை. கோட்டையை நெருங்கும் வழியைப் பார்ப்போம்!" என்று அவசரப்படுத்தினான் அவர்களில் பிராயம் முதிர்ந்த மூத்த வீரனொருவன். அவன் கட்டளைப்படி புரவிகள் கோட்டையை நோக்கிச் செலுத்தப்பட்டன.

"எச்சரிக்கை! அதிகம் நெருங்கிச்செல்ல வேண்டாம். நமது விற்பொறியினால் நாமே தாக்கப்படுவோம்."

அந்த இளைய வீரன் மணலில் பதிந்திருந்த சுவடுகளிலிருந்து கண்களை எடுக்க மனமேயில்லாமல் அவர்களைப் பின் தொடரலானான்.

"இவை.. இந்தச் சுவடுகள்..."

"உஸ்..! மணலைப் பார்த்தது போதும். கழுத்தை நிமிர்த்திக் கோட்டையைப் பார்! சாளரங்களில் தெரியும் நடமாட்டங்களை அவதானித்துக் கொள். நம்மால் அந்தக் கோட்டையின் வடக்குத் திருவாயிலையோ கிழக்குத் திருவாயிலையோ தாக்கிப் பிடிக்க முடியுமா என்று யோசி."

"அடேய்! கடலில் மொத்தம் நான்கு கலங்களுக்கு மேல் தெரியவில்லை அல்லவா?"

"ஆம். மொத்தம் நான்குதான் தெரிகின்றன."

"கலங்கள் ஒவ்வொன்றிலும் அதிகபட்சமாக ஐம்பது அறுபது வீரர்கள் பயணப்பட்டிருக்கலாம் என்று வைத்துக் கொண்டால் இங்கே வந்திறங்கியிருக்கும் சோழர் படையின் மொத்த எண்ணிக்கை இருநூறு வீரர்களைத் தாண்டாது போலிருக்கிறதே?"

"அந்த இருநூறு பேருமா கோட்டைக்குள் புகுந்து கொண்டு விட்டார்கள்? அத்தனை நடமாட்டங்கள் தெரியவில்லையே?"

"தெரியவில்லைதான். நம்மை ஏமாற்றி அருகில் வரவழைப்பதற்காகவே அவர்களில் பலரும் கோட்டைக்குள் பதுங்கியிருக்கலாம்."

"எதற்கும் எச்சரிக்கையாக இங்கேயே நின்றுவிடுவது நல்லதல்லவா?"

"இல்லை.. இன்னும் சற்று நெருங்கித்தானாக வேண்டும். அவர்களில் பலத்தை துணிந்து அனுமானித்தால்தால்தான் மேற்கொண்டு நம்மால் செயலாற்றவே முடியும்."

அவர்கள் மெல்ல மெல்லக் கோட்டையை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

* * * * * * * *

வேணாட்டு வீரர்களின் அணுகுமுறை கோட்டைக்கு உள்ளிருந்து துல்லியமாகக் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"அவர்கள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறார்கள் அல்லவா?"

"ஆம். ஆனால் மிக மெதுவாக எச்சரிக்கையுடன் நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது நமக்கு உதவாது. இன்னமும் அவர்கள் நெருங்கிவர வேண்டும். அப்போது தான் நினைத்த காரியம் சித்திக்கும்."

"சரி. அப்போது வியூகத்தை மாற்ற வேண்டியதுதான்!"

மளமளவென்று கோட்டையெங்கிலும் கட்டளைகள் பறந்தன. விற்பொறிகளிலிருந்தும் மாடங்களிலிருந்தும் வீரர்கள் மறைந்து போனார்கள். சில நிமிடங்களில் கோட்டையின் மேற்தளங்கள் முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டன. வீரர்கள் அனைவரும் தத்தம் ஆயுதங்களுடனும் கேடயங்களுடனும் கருநந்தன் திருவாயில் மற்றும் வடக்கன் திருவாயில் வழியாக மளமளவென்று வெளிப்படலானார்கள்.

* * * * * * * *

"என்ன இது? கோட்டையை நாம் நெருங்க மாட்டோம் என்கிற எண்ணத்தில் நம்மைப் பிடிக்க ஓடி வருகிறார்களா என்ன?"

"அப்படித்தான் தோன்றுகிறது. உடனடியாகப் புரவிகளைத் திருப்பிக்கொண்டு ஓட்டம்பிடிக்க வேண்டியது தான்!"

"சீச்சி! கோழையைப்போல் பேசுகிறாயே? அவர்கள் எத்தனைபேர் கோட்டையிலிருந்து வெளிவருகிறார்கள் என்று சற்று நிதானித்துப் பார்ப்போம். கோட்டையிலிருந்து நாம் வெகுதூரம் விலகி நிற்பதால் விற்பொறிகளின் அம்புகளால் நம்மைத் தீண்ட முடியாது. மணல் வெளியில் நாம் நிற்கும் இந்த இடம் வரை அவர்களை வரவழைக்க முடிந்தால்..."

"கோட்டையிலிருந்து இத்தனை தூரம் விலகி வருவதற்கு அவர்களென்ன முட்டாள்களா?"

"அப்படித்தான் தோன்றுகிறது. அதோ பார்! அவர்கள் வியூகம் அமைத்துக்கொண்டு நம்மை நோக்கி வருவதை..."

"நாமும் சற்று நெருங்கிப் போகலாமா?"

"இல்லை. இங்கேயே நிற்போம். அவர்கள் இத்தனை தூரம் நெருங்கி வருகிறார்களாவென்று பார்ப்போம்."

இவ்வாறாகத் தங்களின் கண்களுக்கு முன்னால் நடந்து கொண்டிருந்த காட்சிகளில் அவர்களின் கவனம் பூரணமாகச் சென்றுவிட்டதால் பின்னால் உருவாகிக் கொண்டிருந்த பூகம்பத்தை அவர்கள் மிகத் தாமதமாகவே உணர்ந்தார்கள்.

"அடேய்! இதென்ன? பின்புறம் சற்றுத் திரும்பிப் பார்!"

"நாசம் ! நாசம்! இந்த வீரர்கள் திடீரென்று எப்படி முளைத்தார்கள்?"

"கடற்கரையோரம் வளர்ந்து நிற்கும் தென்னந்தோப்பில் மறைந்து நின்றிருக்கலாமோ?"

"இதைத்தான் நான் முதலிலிருந்து சொல்லிக் கொண்டிருந்தேன். மணலின் கணிசமான சுவடுகள் தென்னந் தோப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.." - அந்த இளைய வீரன் மீண்டும் புலம்பினான்.

"உஸ்.. மேற்கொண்டு பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. நாம் இரண்டு பிரிவாகப் பிரிந்து இரண்டு பக்கங்களிலும் தாக்க வரும் படையை..."

அவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து யார் எந்தப் பக்கம் செல்வது என்கிற குழப்பத்துடன் அலைபாய்ந்து ஒரு வழியாகத் தங்களை நேர்படுத்திக் கொண்டு முன்னேறத் துவங்குவதற்குள் சோழர்படை இரு பக்கங்களிலும் மூர்க்கமாகத் தாக்கத் துவங்கியது. புரவிகளில் வசதியாக அமர்ந்திருந்தாலும் முனைப்பாக எதிர்த்தாக்குதல் தொடுக்க முடியாமல் வேணாட்டவரின் படை தடுமாறியது. அந்தத் தடுமாற்றத்தை இளையவரும் சேனாபதியாரும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பின்னாளில் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் விதந்தோதப்பட்டு அதன் வழி தென்னக சரித்திரத்தில் அழியாத இடத்தைப் பெறப்போகும் அந்த எழுச்சி மிக்க விழிஞும் முற்றுகை, வேகவேகமாக ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருந்தது.

* * * * * * * *

"ஐயா.. ஆபத்து! பேராபத்து! சோழர்கள்... சோழர்கள்..."

வாயுவேக மனோவேகமாகப் புரவியைச் செலுத்திக் கொண்டு வந்திருந்த அந்த வீரனின் உடல், பொங்கி வழிந்து கொண்டிருந்த வியர்வையில் தெப்பமாக நனைந்திருந்தது. "ஹூம்... ஹூம்.." என்று இடைவிடாமல் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

"என்ன..? சோழர்களுக்கு என்ன?"

வந்திருந்தவன் வேணாடு உடையவரின் நம்பிக்கைக்குரிய ஊழியன் என்பதை உடனடியாக உணர்ந்தார் வள்ளுவ நாடுவாழியார்.

"சோழர்கள்... இன்று காலை விழிஞம் கடற்கரையைத் தாக்கிக் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்கள்!"

திடுக்கிட்டுப் போனார் வள்ளுவர். கடைசியில் அங்கு சுற்றி இங்கு சுற்றி வேணாட்டிலா கையை வைத்திருக்கிறான் சோழன்? அப்படியெனில் ஆரைவாய்மொழிக் கோட்டை முற்றுகையெல்லாம் வெறும் நாடகமா? என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?

அந்த வீரனை ஆசுவாசப்படுத்தி மெல்ல விசாரித்ததில் அவன் ஒரு வழியாகத் தனக்குத் தெரிந்த செய்திகளைப் புகன்றான். விடியற்காலை வேளையில் மூன்று-நான்கு பெரிய மரக்கலங்களில் சோழர்படை விழிஞத்தில் வந்து இறங்கியிருக்கிறது. படைகளுக்குத் தலைமையேற்றிருந்தவர் சோழ சைனிய சேனாதிபதி இராஜராஜப் பல்லவராயர். அவருடன் இளைஞர்கள் இருவர் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். முதலில் விழிஞம் கோட்டை தாக்குதலுக்குள்ளானது. அதிலிருந்த முப்பது நாற்பது வீரர்களும் அகப்பட்டுக் கொண்டார்கள். செய்தியறிந்து வேணாட்டின் படைகள் விழிஞத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. நிலைமையின் அவசரம் கருதி கோவர்தன மார்த்தாண்டர் உடனடியாக வள்ளுவனாருக்குச் செய்தியனுப்பியிருக்கிறார்.

விழிஞத்தைத் தவிர மேற்குக் கடற்கரையின் வேறு சில பரதவர் கிராமங்களிலும் படைகள் வந்திறங்கியிருப்பதாக வதந்தி. இன்னும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. விழிஞத்தில் மட்டும் குறைந்தது முன்னூறு அல்லது நானூறு வீரர்கள் இதுவரை வந்திறங்கியிருக்கக்கூடும். மேற்கொண்டு படைகள் வரப்போகின்றனவா என்பது தெரியவில்லை. முடிந்தால் வள்ளுவனார் தமது படையினரில் ஒரு பகுதியை உடனடியாக வேணாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியது அவசியம்.

தமக்கும் பாண்டி ஒற்றர்களுக்கும் தானைத்தலைவரின் ஆட்களுக்கும் தெரியாமல் இத்தனை பெரிய சோழர்படை திரட்டப்பட்டது எப்படி? கலமேறியது எப்படி? சப்தம் செய்யாமல் மேற்குக் கடற்கரைக்கு வந்ததெப்படி?

விக்கித்துப் போனார் வள்ளுவ நாடாழ்வார். உடனடியாக அவரைப் பெருங்கவலையொன்று சூழ்ந்தது. ஆரைவாய்மொழிக் கோட்டையின் கிழக்கு வாயிற் பகுதிகள் எத்தனைக்கெத்தனை பலம் வாய்ந்தவையோ அத்தனைக் கத்தனை மேற்குவாயிற் பகுதிகள் பலகீனமானவை. கிழக்கில் கோட்டைக்குச் சாதகமாக அமைந்திருக்கும் மலைத் தொடர்களே மேற்கில் பாதகமாக அமைந்திருக்கும். எதிரிப் படைகள் கிழக்கிலிருந்து தாக்காமல் மேற்கிலிருந்து தாக்கினால் நிலைமையை சமாளிப்பது மிகவும் கடினமாகி விடும்.

வேணாட்டில் கால் பதித்திருக்கும் சோழர்படைகள் அங்கேயே தண்டூன்றிவிடப் போகின்றனவா? அல்லது மேற்கொண்டு முன்னேறி நாஞ்சில் நாடுவரை வரப் போகின்றனவா? தெரியவில்லை. ஒரு வேளை அவர்கள் அப்படி முன்னேறி வந்துவிட்டால்? கடவுளே! மத்தளத்திற்கு இரண்டு பக்கங்களிலும் இடி என்பதைப்போல் நாஞ்சில் நாடு இரண்டு பக்கங்களிலும் அகப்பட்டுக் கொண்டுவிடும். அவ்வாறு நடக்க விடக்கூடாது.

உதவி கோரி ஊழியனை அனுப்பியிருக்கும் கோவர்தனருக்கு என்ன பதில் சொல்லி அனுப்புவது? நானே பலமான சிக்கலிலிருக்கிறேன். இந்த நிலைமையில் உனக்கு எப்படி உதவுவது என்றா? அவரது ஒட்டுமொத்தக் கோபமும் பாண்டி நாட்டு ஒற்றர்கள் மீதும் தமது ஒற்றர்கள் மீதும் எல்லாம் தெரிந்தவரைப்போல் வளைய வந்து கொண்டிருக்கும் விக்கிரமாதித்ய வரகுணரின் மீதும் திரும்பியது. எல்லாம் அவர்களை நம்பியதால் வந்த வினையல்லவா?

எழுத்தில் வடிக்க முடியாத நாஞ்சில் நாட்டு வசைகளால் அவர்களின் பிறப்பையும் குலத்தையும் அவர் திட்டித் தீர்த்தார்.

* * * * * * * *

நாடுவாழியாரின் மனதில் பொங்கிய பல கேள்விகள் நமது வாசகர்களின் மனதிலும் எழுவது இயல்பே. ஆதலின் அவற்றுக்கு சுருக்கமாக விடையளிக்கிறோம்.

முன்பொரு நாள் நாகையில் நானாதேசி வணிகர்களை அருள்மொழிவர்மர் நேரில் சந்தித்து அவர்களின் கீழ்த்திசை

வாணிபத்திற்குத் துணையாகச் சோழப்படை வீரர்களை வாணிபக்கலங்களில் ஏற்றி அனுப்புவதாகக் கூறினாரல்லவா? அன்றுதான் மேற்திசைக் கடல்வழிப் படையெடுப்பிற்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சோழப் படையினருள் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் சிலர் நாகையிலும் இராமேஸ்வரத்திலும் நானாதேசி வணிகர்களின் காவற்படை வீரர்களாக மெல்ல மெல்ல அவதாரமெடுத்தார்கள்.

கீழ்த்திசை வாணிபத்திற்குப் புறப்பட வேண்டிய தேசிக் கலங்கள் உரிய காலத்திற்கு முன்னரே புறப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டது. இலங்கையின் சில பகுதிகளிக்குச் சென்று வணிகச் சரக்குகளை ஏற்றி இறக்கியாக வேண்டுமென்பதால் கூடுதல் அவகாசம் தேவை என்று அதற்கொரு காரணமும் கூறப்பட்டது.

நட்சத்திரங்களும் கிரகங்களும் கூடியிருந்த நல்லதொரு நாளில் நாகையிலிருந்து நானாதேசி வணிகக்கலங்கள் கிளம்பின. அன்று நாகைத் துறைமுகத்தில் குறைந்த அளவிலான சோழ வீரர்களே கலங்களில் ஏறிக் கொண்டார்கள். ஒற்றர்களின் கவனத்தைக் கவர வேண்டாம் என்கிற எச்சரிக்கையுணர்வே அதற்குக் காரணம். வணிகர்களின் காவல் வீரர்களைப் போன்றே உடை உடுத்திக் கொண்டு அவர்களின் சரக்கு மூட்டைகளை ஏற்றி இறக்கிக்கொண்டு சாதாரண கூலிக்காரர்களைப்போல் நடமாடிக் கொண்டிருந்த சோழவீரர்களை ஒருவரும் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

கலங்கள் இராமேஸ்வரத்திற்குத் சற்று தொலைவில் நிறுத்தப்பட, அந்தத் தீவிற்கருகே பெயர் தெரியாத ஒரு சிறிய பரதவர் கிராமத்திலிருந்து பெரியதொரு சோழப்படை படகுகளில் கலங்களைச் சென்றடைந்தது. அந்தச் சம்பவத்தின் காரணமாகவோ என்னவோ அந்தக் கிராமத்திற்குச் சேரன் கோட்டை எனும் பெயரே[36] நிலைத்து விட்டது.

---

[36] ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்னும் அந்தப் பண்டைய மீனவக் கிராமம் இன்று வரை சேரன் கோட்டை எனகிற அதே பெயரில்தான் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னரே செய்துகொண்ட ஏற்பாட்டின்படி கலங்கள் இலங்கைக்குச் சென்று சரக்குகளை ஏற்றிக் கொண்டன. ஆனால் அங்கேயே தங்கி விடாமல் அந்த நாவலந்தீவைச் சுற்றிக்கொண்டு நேராகக் கழிக்குடிக் கடற்கரைக்கு இரண்டு கடற்காத தூரத்தில் கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டன.

நடுக்கடலில் ஒருவரின் பார்வைக்கும் அகப்படாமல் நின்றிருந்த அந்த கலங்களொன்றில்தான் பல்லவராயர் பயணப்பட்டுக் கொண்டிருந்தார். நண்பர்களிருவரையும் அவரது ஊழியன் அந்தக் கலத்திற்குக்தான் கொண்டு வந்து சேர்த்தான். படைகள் கிளம்பலாம் என்கிற சோழப் பேரரசரின் உத்தரவு புறாக்கள் மூலம் அவர்களுக்குக் கிடைத்ததும் படையெடுப்பு உற்சாகமாகத் துவங்கி விட்டது.

33. குருதேவர் வருகை



கார்கால மேகங்கள் கூடி நின்ற மாலை வேளையில் கழிக்குடியிப் பெருஞ்சாலை களையிழந்துபோய் ஏதோ ஒரு மோன அமைதியில் உறைந்திருந்தது. இளமை மிகுந்த நண்பர்களின் இருப்பால் அந்தச் சூழலில் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த உற்சாகமும் உல்லாசமும் அடியோடு காணாமற்போய் அந்த வளாகமெங்கிலும் வெறுமையும் தனிமையுமே படர்ந்திருந்தன.

குழிக்களரியில் தமது வழக்கமான மாலைநேர வழிபாடுகளை நடத்துவதற்காகத் தம்புராட்டியார் குருதாரையின் முன் அமர்ந்திருந்தார். கழிவிரக்கத்தில் தோய்ந்துபோய்ச் செயலற்றுக் காணப்பட்டது அவரது முகம்.

"அவர்கள் வரமாட்டார்கள். இனி ஒரு போதும் அவர்கள் இந்தப் பக்கமாக வரமாட்டார்கள். அப்படி ஒரு வேளை தப்பித்தவறி வர நினைத்தாலும் அந்தப் பாழாய்ப் போன கிழட்டு சேனாபதி அவர்களை வர விடமாட்டான். இன்னும் ஏன் பைத்தியம் போல அவர்களையே நினைத்து மருகிக் கொண்டிருக்கிறாய்? எழுந்து போய் வேலையைப் பாரடி!"

"அதெப்படி வராமல் போகமுடியும்? இன்னும் காந்தளூரின் கலமறுக்கும் போட்டிகள் நடைபெற்று முடிய வில்லையே?"

"பைத்தியக்காரி! இனியும் அந்தப் போட்டிகளெல்லாம் நடைபெறும் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உதயன் சொன்னதைக் கேள்விப் பட்டாயல்லவா? சேரநாடே சோழனுக்கும் அவனது படைகளுக்கும் அடிமைப்படப் போகிறதடி! இந்த இலட்சணத்தில் கலமறுப்பும் போட்டியும் தான் ஒரு கேடா?"

"போட்டிகள் நடைபெறாது என்று வைத்துக் கொண்டாலும் இன்னமும் அவர்கள் பயிற்சிகளைச் சரிவரக் முடிக்கவில்லையே? கற்றுக் கொள்ளவேண்டியவே இன்னும் நிறைய உள்ளனவே? அத்துடன் அந்த அப்பியாச கர்மண ஓலைகள்..."

"ஹி.. ஹி... ஹி... ஹி..." என்று அந்தக் குரல் கெக்கலித்துச் சிரித்தது. "அடியேய் குருட்டுக் கிழவி! உன்னையும் உன் பயிற்சிகளையும் இனியும் ஒரு பொருட்டாக அவர்கள் மதிப்பார்கள் என்றா நினைக்கிறாய்?? சரியான அப்பாவியாக இருக்கிறாயே? நாடு பிடிக்கும் ஆசையில் இத்தனை தூரம் படையெடுப்பு நடத்திக்கொண்டு வந்திருப்பவர்களுக்கு நீயும் உன் பாழடைந்த சாலையுமா கண்ணுக்குத் தெரியப் போகிறீர்கள்? போ! போய் வேலையைப் பார். அவர்களை அடியோடு மறந்துவிடு. அதுதான் உனக்கு நல்லது."

"யார் வந்தாலும் சரி. வராவிட்டாலும் சரி. நான் உயிரோடு இருக்கும் வரைக்கும் இந்தச் சாலையும் உயிர்ப்போடு இருக்கும்!"

"போ! போய் உன்னுடைய சாலையையும் களரியையும் நீயே கட்டிக்கொண்டு அழு!"

இவ்வாறாகத் தனக்குத்தானே பலவிதமாகப் பேசிக்கொண்டு குழப்பத்திலும் கோபத்திலும் நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தார் தம்புராட்டியார். பயிற்சிகளிலோ வழிபாட்டிலோ அவரது மனம் பதிய மறுத்தது. காதுகளில் எந்நேரமும் இளைஞர்களின் குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. உன்னிகளா! உன்னிகளா! என்று இதயம் இடைவிடாமல் அரற்றிற்று.

அவர்கள் மட்டும் இங்கே இருந்திருந்தால்.. இந்நேரம் சந்திநேரப் பயிற்சிகள் துவங்கிவிட்டிருக்குமல்லவா? 'சளாங்!

சளாங்!' என்று வாளுடன் வாள் மோதும் சப்தங்களாலும் வேலுடன் கேடயம் மோதும் சப்தங்களாலும் இந்தக் களரியே நிறைந்து போயிருக்கு மல்லவா? 'ஹூம்! ஹூம்!' என்று பெருமூச்சு விட்டபடி அவர்களுக்கு இணையாகத் தாமும் வரிந்து கட்டிக் கொண்டு வாளும் கையுமாய்க் களத்தில் நின்றிருப்போமல்லவா?

அந்த சந்தோஷங்களையெல்லாம் பாழாய்ப்போன ஒரு ஓலை வந்து பறித்துக்கொண்டு போய்விட்டது. இனி அவர்கள் வருவார்களா? அவ்வாறு வருவதற்கு அனுமதி கிடைக்குமா? அப்படியே வந்தாலும் எத்தனை நாட்கள் தங்குவார்கள்? முன்பு போல் பயிற்சிகள் நடைபெறுமா? அந்தச் சோழநாட்டுச் சேனாபதிக் கிழவனுக்கு இங்கு நடந்து கொண்டிருக்கும் தனுர் வித்தைகளின் மேன்மை புரியுமா? களரியும் சாலையும் சங்கிராம இலக்கணங்களும் அப்யாச கர்மணமும் அரசாங்கத்திற்கு ஒரு பொருட்டா?

அட, அவனுக்குப் புரியவில்லையென்றாலும் இந்த அருள்மொழிவர்மன் அவனிடம் ஒரு வார்த்தை சொல்லி வைத்திருக்கலாமல்லவா? 'இந்த இரண்டு வீரர்களையும் பயிற்சி முடியும்வரை ஒருக்காலும் தொந்தரவு செய்யக் கூடாது. இது எமது கண்டிப்பான உத்தரவு!' என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் எந்தக் கொம்பனால் இவர்களைக் கூட்டிக்கொண்டு சென்றிருக்க முடியும்?

அவரது கோபம் சேனாபதியாரிலிருந்து மெல்ல அருள்மொழிவர்மர் மீதே திரும்பியது. எல்லாம் அவனால் வந்த வினை! என்று பேரரசரை வாயார வைதார் தம்புராட்டியார். தாமுண்டு தமது வேலையுண்டு என்று இருந்தவளை இந்த தேவையில்லாத விவகாரத்தில் இழுத்து விட்டவன் அவனேல்லவா?

அவனுடைய ஒரு சொல்லுக்கு மரியாதை கொடுத்துத்தானே அவர்கள் இருவரையும் இரவு பகலாகப் பழக்கினோம்? வேலை முடிந்தவுடன் இந்தக் கிழவி வேண்டாதவளாகி விட்டாளா? அப்படிக்கூட நினைக்க முடியாதே? வேலை இன்னும் முடியவேயில்லையே? சொல்லப்போனால் இப்போதுதானே துவங்கியிருக்கிறது?

அருள்மொழிவர்மர் தமக்கு எழுதியிருந்த ஓலையின் வரிகள் அவரது மனதில் ஒரு முறை வந்து போயின. மறக்கவே முடியாத வாசகங்கள் அவை.

பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாளிகைப்புரத்துத் தம்புராட்டியார் சமூகத்திற்குத் தங்களின் பெயரன் முறையுள்ள அருள்மொழிவர்மன் மிகுந்த அன்புடனும் வணக்கங்களுடன் எழுதிக் கொள்வது.

தமது அன்புத்தம்பியாரான பிஷு ஆனந்த தேரருடன் நமது சோணாட்டு வீரர்கள் இருவரை அனுப்பியுள்ளோம். இவ்விரு வரையும் தாங்கள் தங்களது ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் மாணவர்களாக அங்கீகரித்து அவர்களுக்குச் சகல விதமான தனுர் வேத வித்தைகளையும் நுணுக்கங்களையும் கற்பித்து அன்னையாயும் ஆசானாயும் இருந்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விருவரையும் நடக்க இருக்கும் காந்தளூர்க் கலமறுக்கும் போட்டிகளில் களமிறக்க உத்தேசித்துள்ளோம். இம் முடிவிற்கான காரணங்கள் பல. அவற்றை இச்சிறு ஓலையில் எழுத்துவிப்பது அசாத்தியமானது என்பதால எழுத முயல வில்லை. கூர்மதியும் நுண்ணறிவும் மிக்கத தாங்களே அதனை ஓருவாறு யூகித்தறியலாம்.

நமது இரு குடும்பங்களுமே வழிவழியாய் இராஜரீக உறவு பூண்டவை. வெவ்வேறு வகையில் காந்தளூர்ச் சாலையாலும் வலியசாலைக் குடும்பத்தாராலும் கடுமையாகப் பாதிக்கப் பட்டவை. நடந்து முடிந்த சம்பவங்கள் பலவற்றுக்கும் கணக்குத் தீர்க்க வேண்டியிருக்கிறது. அவற்றை அப்படியே விட்டு வைப்பது சோணாட்டின் எதிர்காலத்துக்கு ஆபத்து என்றே எண்ணுகிறோம்.

இப்பணிக்காக நாம் குறிப்பாக இந்த இரண்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்ததற்கும் தகுந்த காரணங்கள் உள. அவற்றைச் சமயம் வரும்போது தெரிவிக்கிறோம். காரியங்கள் நினைத்தவாறு கைகூடிவந்தால் தங்களை அடுத்த மூன்று திங்களில் நாமே நேரில் சந்திப்போம். அவ்வாறு சந்திக்கும்போது செயற்கரிய தங்களது திருப்பணியை உத்தேசித்து அரிய பரிசு ஒன்றையும் தங்களுக்குத் தர உத்தேசித்துள்ளோம். ஈசன் திருவுளம் இரங்கட்டும்.

நமச்சிவாயம்.

இராஜகேசரி அருள்மொழிவர்மன்.

அவனது ஓலையை மதித்து அதன்படி நடந்துகொண்ட நாம்தான் இப்போது பைத்தியக்காரியாய் நிற்கிறோம். இந்தத் தனிமையும் அழுகையும்தான் நமக்கு ஆயுள் பரியந்தம் விதிக்கப்பட்ட சாபம் போலும். அவற்றிலிருந்து தப்ப முடியாது.

களரியின் வாயிலில் ஏதோ அரவம் கேட்டது. நிதானமான பாதச்சுவடுகளின் ஒலியை வைத்து வந்து

கொண்டிருப்பது உதயன்தான் என்பதை அவதானித்தார் தம்புராட்டியார்.

உள்ளே நுழைந்த பிஷு தம்புராட்டியார் குருதாரையின் முன் அமர்ந்திருப்பதைக் கண்டு ஒரு பெருமூச்சுடன் களரியின் ஓரமாகச் சென்று நிற்பது தெரிந்தது. வழிபாடுகள் முடியும்வரை காத்திருக்க முடிவு செய்திருக்கிறான் போலும்.

"என்னடா உதயா? என்ன சங்கதி?"

"ஒன்றும் அவசரமில்லையக்கா. நீங்கள் வழிபாட்டை முதலில் முடியுங்கள்."

"மனம் எதிலும் பதிய மறுக்கிறதடா. குருஸ்துதியின் ஒரு வரிகூட இன்னமும் சொல்லி முடிக்கவில்லை. மனம் பதியாமல் வெறும் வாய் வார்த்தையாகச் சொல்லி முடிப்பதற்கும் மனம் வர மாட்டேன் என்கிறது."

பிஷுவின் கண்கள் பெருத்த சங்கடத்துடன் ஒரு முறை மூடித் திறந்தன. ஒன்றும் பேசத் தோன்றாமல் அவர் மௌனமாக நின்றார்.

"நீ சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லி முடி. நான் அநேகமாக இன்றும் வழிபாட்டை இத்தோடு முடித்துக் கொள்வேன் என்று நினைக்கிறேன்."

"சோழப் படைகள் நானாதேசி வணிகர்களின் கலங்களில் சேர நாட்டின் தென்மேற்குக் கடற்கரையின் பல பகுதிகளில் கால்பதித்து விட்டன அக்கா. இந்த எதிர்பாராத தாக்குதலினால் நாடுவாழிகள் நிலைகுலைந்து போயுள்ளனர்."

"அவர்களுக்கு நன்றாக வேண்டுமடா! நன்றாக வேண்டும். அத்தனை பேரும் நமது குடும்பத்தின் வயிற்றெறிச்சலை கொட்டிக் கொண்டவர்கள்தான். அது சரி, திடுதிப்பென்று எப்படி ஒருவருக்கும் தெரியாமல் சோழப் படைகள் மேற்குக் கடற்கரையில் வந்து முளைத்தன?"

"அத்தனை கலங்களும் இலங்கைக்குச் செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டுத் தீவைச் சுற்றிக்கொண்டு இங்கே வந்து விட்டன. அதனால் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை."

தம்புராட்டியாரின் முகத்தில் அவரது உள்ளக்கசப்பை மீறி ஒரு முறுவல் விரிந்தது. "இவர்களுக்கு இதுவும்

வேண்டும். இன்னமும் வேண்டும்! அப்போதுதான் புத்தி வரும்."

"படைகளுக்குத் தலைமை தாங்கி வந்திருப்பவர் சோழ சேனாபதி இராஜராஜப் பல்லவராயர். நமது நண்பர்களிருவரும் அவரது உத்தரவின் பேரில் அந்தக் கலத்திற்குத்தான் சென்றிருக்கிறார்கள். இருவரிடமும் விழிஞம் ஆய்வேள் கோட்டையைத் தாக்கும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார் சேனாபதியார்."

"என்ன.. அப்படியா? ஆய்வேள் கோட்டைத் தாக்குதலை உன்னிகளா முன்னின்று நடத்துகிறார்கள்?" என்று ஆர்வத்துடன் வினவினார் தம்புராட்டியார். எத்தனை தூரம் அவரது அன்புள்ளம் அந்த இருவரிடத்தும் பிணைந்து கிடக்கிறதென்பதை அந்த ஒரு கேள்வி தெள்ளத் தெளிவாக உணர்த்திற்று.

"ஆம் அக்கா. அந்தத் தாக்குதலைப் பல்லவராயரே நடத்தியிருக்கலாமென்றாலும் நண்பர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதற்காகவே அவர்களை இங்கிருந்து அழைத்துப் போயிருக்கிறார். இதற்காக அவர் உன்னிடம் பிரத்யேகமாக வருத்தம் தெரிவிக்கச் சொன்னாராம்."

தம்புராட்டியாரின் முகவாட்டம் கணநேரம் காணாமல் போனது. "நல்ல காரியத்திற்காகத்தானே அழைத்துப் போயிருக்கிறார்? இதில் நான் வருத்தப்படுவதற்கென்ன? அது சரி, இந்த சங்கதிகளெல்லாம் உனக்கெப்படித் தெரிந்தன?"

"சோழப்படைகள் கழிக்குடியிலும் இறங்கியிருக்கின்றன அக்கா. அப்படைகளுடன் சேர்ந்து வந்துள்ள ஒரு சோழ நாட்டுப் பெரியவர் கழிக்குடியிலிருந்து இந்தச் செய்திகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு ஓலையனுப்பி இருக்கிறார். அது மட்டுமல்ல. நாளை நமது பெருஞ்சாலைக்கு அவரே நேரில் வரப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார்."

"என்ன? இங்கே வரப்போகிறாரா? இந்தப் பெருஞ் சாலையையும் ஒரு பொருட்டாக எண்ணும் அந்த வினோத சோணாட்டு பெரியவர் யாரடா உதயா? எனக்குத் தெரிந்தவர்தானா..?"

தம்புராட்டியாரின் குரலில் பழைய உற்சாகம் தென்படத் துவங்கியது. சோழ சைனிய சேனாதிபதியாரே

தம்மிடம் வருத்தம் தெரிவிக்கச் சொன்னது அவரது உஷ்ணத்தைப் பூரணமாகத் தணித்துவிட்டது.

"உனக்குத் தெரிந்தவர்தான். ஆனால் நீ அவரைப் பார்த்திருக்க மாட்டாய். நான் அவரை இங்கே கழிக்குடியில் கனவிலும் எதிர்பார்க்கவில்லை!"

"யாரவர்?"

"என்னுடைய குருநாதர். நாகை பதரதிட்ட விஹாரையின் தலைமை ஆச்சாரியர். குரு மஹா காசியப தேரர்."

ஆச்சரியத்தில் பிளந்த தம்புராட்டியாரின் வாய் மூடுவதற்குச் சில கணங்கள் ஆயின. "என்ன? ஆச்சாரியரா? அவர் பௌத்த மாநாட்டிற்காகக் கீழ்த்திசை நாடுகளுக்குப் பயணப்படுவதாகவல்லவா சொல்லிக் கொண்டிருந்தாய்?"

"ஆமாம். நாகையில் எனக்கு அவ்வாறுதான் தெரிவிக்கப் பட்டது. இலங்கையிலிருந்து காம்போஜம் செல்லும் சைலேந்திர விஜயத்தில் அவர் இந்நேரம் பயணப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென நினைத்தேன். இந்தப் பிராயத்தில் அவர் எவ்வாறு நானாதேசிக் கலங்களில் பயணம் செய்தார்? எதற்காக் கழிக்குடிக்கு வந்து இறங்கினார்? என்ன காரணத்திற்காக இங்கே வருகிறார்? ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது."

பௌத்த உலகில் பெரிதும் மதிக்கப்படும் தமது குருநாதரான ஆச்சாரியரை அந்த வேளையில் அந்தச் சூழலில் பிஷு சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பது அவரது குரலில் வெளிப்படையாகத் தெரிந்தது. எந்தச் சமயத்திலும் நிதானத்தைக் கைவிடாமல் ஒரே மனநிலையில் இருக்கும் அவரையே இந்தக் குரு விஜயம் குழப்பி விட்டுவிட்டது.

ஆறுதலுடன் அவரது தோள்களில் தமது கங்கணங்கள் அணிந்த கரங்களைப் பதித்தார் தம்புராட்டியார். "நாளை அவரே நேரில் வருகிறாரல்லவா? அப்போது தெரிந்து கொண்டுவிட்டால் போகிறது?"

பிஷுவை அந்த வார்த்தைகள் தேற்றியதாகத் தெரியவில்லை. நிம்மதியின்றி இரவைக் கழிக்கப் போகிறான் உதயன் என்று நினைத்துக் கொண்டார் தம்புராட்டியார்..

* * * * * * * *

மறுநாள் காலை ஒரு எளிய பல்லக்கு பெருஞ்சாலை வளாகத்துள் நுழைந்தது. பல்லக்குத் தூக்கிகளைத் தவிர இரண்டு காவலர்கள் அந்தப் பல்லக்கின் முன்னும் பின்னும் காவலாக வந்து கொண்டிருந்தார்கள்.

'பௌத்த சாஸ்த்ர இரத்னாகர' அதாவது 'பௌத்த சாத்திரங்களில் கடல் போன்ற ஞானமுடையவர்' என்கிற மிகப் பொருத்தமான பட்டம் பெற்றவரும் கீழ்த்திசை நாடுகளெங்கிலும் பரவியிருந்த பௌத்தத்தின் தலைசிறந்த ஆச்சாரியர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டவரும் எளிமையும் சாந்தமும் உண்மையும் ஞானமும் ஒன்று திரண்டு மனித உருவெடுத்து வந்தாற்போல் காணப்பட்டவருமான ஆச்சாரியர் மஹாகாசியப தேரர் தமது மெலிந்த உடலைப் போர்த்தியிருந்த காவி வஸ்திரத்தைத் தோளில் சாற்றியபடி பல்லக்கிலிருந்து வெளிப்பட்டார்.

மரக்குறடுகள் தரித்த அவரது பாதங்கள் சாலை நிலத்தில் பட்ட மறுகணம் அந்த மண் சிலிர்த்துக் கொண்டது. அந்தச் சிலிர்ப்பு ஒரு மெல்லிய அசைவாகச் செடி கொடிகளின் வழி வெளிப்பட்டது. தூரத்தே மருந்துவாழ் மலையிலிருந்து ஒரு அக்காவ் குருவி 'க்கூவ்! க்கூவ்!' என்று கூவியது. ஆச்சாரியாரை வரவேற்பதற்காக நின்று கொண்டிருந்த தம்புராட்டியாரின் உள்ளத்திலும் அந்தச் சிலிர்ப்பு கணநேரம் தோன்றி மறைந்தது. இனந் தெரியாத ஒரு மகிழ்ச்சி உள்ளத்தில் பொங்கியது.

குருநாதர் பல்லக்கிலிருந்து வெளிப்பட்ட மறுகணம் அந்த மண்தரையில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து வணங்கினார் பிஷு.

"புத்த பகவான் தனது பெருங்கருணையை உங்களுக்கு வழங்கட்டும்! புத்தம் சரணம் கச்சாமி..." என்று தமது அமைதியான புன்சிரிப்புடன் ஆசீர்வதித்து அவரைத் தூக்கி நிறுத்திய ஆச்சாரியர் தமது கண்களுக்கு முன்னால் விரிந்த காட்சியின் அழகில் கருத்தை இழந்து நின்றார்.

மரகதப் பர்வதமென பசும்பட்டாடை தரித்து கம்பீரமாக எழுந்து நின்ற மருந்துவாழ் மலையும் அதன் ப்சுமையான அடிவாரமும் அதன் பின்னணியில் எழுந்த இரு மரக் கட்டுமானங்களும் அவரது முதிர்ந்து சுருங்கிய கண்களுக்குப் புலனாயின.

'வருடங்கள் பல கழிந்து விட்டாலும் இன்னும் இந்த இடம் மட்டும் மாறவேயில்லை' என்று அவரது உதடுகள் அவருக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்லிய குரலில் முணுமுணுத்தன.

பிஷுவின் தோள்களைப் பிடித்தவாறு மெல்ல நடந்து பெருஞ்சாலை வளாகத்தை அடைந்தார் குரு. அங்கே உரிய ஆசனத்தில் அவர் அமர, சிறிது நேரம் சிரம பரிகாரத்தில் கழிந்தது.

"தாயே! தங்களைச் சந்தித்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனந்தன் தங்களைப் பற்றி என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறான். புத்த பெருமானின் பெருங் கருணையினால் தங்களை நேரில் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது" என்று மிதமான குரலில் தெரிவித்தார் குரு.

"அடடா! அபச்சாரமான வார்த்தைகளைக் கூறுகின்றீர்களே? இந்தப் பெருஞ்சாலை வளாகத்திற்குப் பெரியவரான தாங்களே நேரில் வருகை தந்திருப்பதல்லவா எங்களின் பாக்கியம்?"

"ஆனந்தர் என்னைக் கண்டால் மிகவும் சந்தோஷப்படுவார் என்று எண்ணினேன். ஆனால் அதற்கு நேர்மாறாகவல்லவா அவரது திருமுகம் காட்சியளிக்கிறது?" என்றார் குரு மாறாத புன்னகையுடன். பிஷு சட்டென்று தலையைக் குனிந்து கொண்டார்.

"அது.. தாங்களை அவன் இங்கே இந்தச் சமயத்தில் எதிர்பார்க்கவில்லை" என்றார் தம்புராட்டியார் ஆச்சாரியரை சமாதானம் செய்யும் குரலில்.

"என்னுடைய வருத்தம் அதுவல்ல. இத்தனை மூத்த பிராயத்தில் தாங்கள் இத்தனை தூரம் அதுவும் வசதிகள் அதிகமில்லாத வணிகக்கலத்தில் பிரயாணம் செய்துதான் ஆகவேண்டுமா? என்றுதான் வருத்தப்படுகிறேன். நாகையில் பார்த்ததற்குத் தற்போது பலகீனமாகத் தெரிகிறீர்கள்."

"ஓ! அதுவா உங்களுடைய வருத்தம்? புத்தபகவானின் கருணையினால் நான் நன்றாகத்தான் இருக்கிறேன். நீண்ட நாள் கடற்பயணம் என் உடலுக்கு ஒத்துக்கொள்ளாதுதான். ஆனால் பௌத்த மாநாட்டிற்காகக் காம்போஜத்திற்கே செல்ல ஒப்புக்கொள்ளவில்லையா? அதைவிடவா இந்தப் பிரயாணம் பெரிது?"

"அப்போது தங்களின் காம்போஜப் பயணம் என்னவாயிற்று?"

"உங்களுக்குச் செய்தியே வரவில்லையா? காம்போஜத்தின் அரசியல் சூழல்கள் சீர்கெட்டுப் போய்விட்டபடியால் மாநாடு அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது. என்ன செய்வது? மனிதர்களுக்கு வாழ்வறங்களைப் போதிக்கும் நம்மைப் போன்ற மத ஸ்தாபனங்கள்கூட அரசியல் சூழ்நிலைகளைப் பார்த்துக் கொண்டுதான் செயல் படவேண்டி வருகிறது. போகட்டும். என்னுடைய பயணக் களைப்பையும் மனக்களைப்பையும் நீக்கும் மிகச் சிறந்த சூழல் இது என்பதால்தான் நானே நேரில் வந்தேன். நீங்கள் அனுமதித்தால் இங்கேயே சிறிது காலம் தங்கி.."

"அடடா! தேரரே.. மீண்டும் அபச்சாரமான வார்த்தைகள் கூறி மனதைப் புண்படுத்துகிறீர்களே? தாங்கள் தங்குவதற்கு எங்களின் அனுமதி வேண்டுமா என்ன? கட்டளையிட்டால் அடிபணிகிறோம்.." என்றார் தம்புராட்டியார்.

"நான் இங்கே தங்கப்போகும் செய்தி உங்களுடன் இருக்கட்டும். வெளியில் இதனைப் பற்றி அதிகம் பிரஸ்தாபிக்க வேண்டாம். அது வேண்டாத வதந்திகளை உருவாக்கும். உங்கள் வேலையாட்களிடமும் சொல்லி வைத்து விடுங்கள்."

"தங்கள் சித்தம்போல் ஆகட்டும்."

ஆச்சாரியார் பெருஞ்சாலையில் தங்கப்போவதன் மகிழ்ச்சி பிஷுவின் முகத்திலும் வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் அதில் சில குழப்ப இரேகைகளும் காணப்பட்டன.

"ஆச்சாரிய! தங்களுக்கு இந்த இடத்தைப் பற்றியும் சாலையைப் பற்றியும் முன்பே தெரியுமா? நான் இது பற்றித் தங்களிடம் அதிகம் பிரஸ்தாபித்ததில்லையே?"

ஆனந்தரின் கேள்விக்கு பதிலாக ஆச்சாரியரின் முகத்தில் பெருமுறுவலொன்று விரிந்தது. தவிர்க்கவேண்டிய கேள்விகளை ஆச்சாரியர் அவ்வாறுதான் எதிர்கொள்வார் என்பது ஆனந்தருக்குத் தெரிந்திருந்ததாகையால் மேற் கொண்டு எதையும் பேசத் துணியவில்லை.

"இவருடைய கண்பார்வைக்கான சிகிச்சை துவங்கி விட்டதா? அதில் ஏதாவது பயன் கிடைத்ததா?" என்று ஆர்வத்துடன் வினவினார் குரு.

"இன்னும் துவங்கவில்லை. எனக்கு வைத்தியமே வேண்டாம். இப்படியே வாழ்நாள் முழுவதும் இருந்து விட்டுப் போகிறேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார் அக்கா!" என்றார் பிஷு தயங்காமல். இந்த விஷயத்தில் அக்காளிடம் அவர் கொண்டிருந்த அதிருப்தி மிக வெளிப்படையாகவே தெரிந்தது.

"அம்மா! ஆனந்தரின் வைத்தியத்தை நீங்கள் ஏன் மறுத்தலிக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள இயலுமா?" என்றார் குரு மென்மையாக. அவர் அந்தக் கேள்வியைக் கேட்ட முறையே மிகவும் பண்பாக அமைந்திருந்தமையால் தம்புராட்டியாரால் வழக்கம்போல எடுத்தெறிந்தவாறு பதில் சொல்ல இயலவில்லை. ஏனோ அந்த குருவின் பேரில் அளவு கடந்த மரியாதை ஏற்பட்டது.

"இத்தனை காலம் கழித்துக் கண்பார்வை கிடைத்து நானென்ன செய்யப் போகிறேன்?" என்றார் மெல்லிய குரலில்.

"தாங்கள் மிகவும் புத்திசாலித்தனமான பெண்மணி என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிகிறது. தாங்கள் இவ்வாறு மனம் தளர்ந்து பேசக்கூடாது. புத்தபகவானின் கருணையால் இனிமேல்தான் தங்களுக்குப் புதிய வாழ்க்கை ஆரம்பிக்கப் போகிறது. புதிய பொறுப்புக்கள் வந்து சேரப் போகின்றன. அவற்றை எதிர் கொள்ளத் தங்களுக்குக் கண்பார்வை சீரடைவது அவசியம்."

அந்த முதிய ஆச்சாரியாரின் பேச்சை ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டார் தம்புராட்டியார். குறிப்பாகப் 'புதிய பொறுப்புக்கள் வந்து சேரப் போகின்றன' என்று குறிப்பிட்டபோது அவர் கொடுத்த அழுத்தம். எல்லாம் அறிந்தவரைப்போல் பேசும் இவர் வெறும் பௌத்தத் துறவி மட்டும்தானா? என்கிற கேள்வி முதன் முறையாகத் மனதில் எழுந்தது. அவரது மன ஓட்டங்களைக் கவனித்து விட்டாலும் கவனியாதவர் போல் ஆச்சாரியர் தொடர்ந்து பேசிக்கொண்டு சென்றார்.

"தாங்கள் இந்த சிகிச்சையை மேற்கொள்வது வேறொரு வகையிலும் முக்கியமாகிறது. ஆனந்தரின் பௌத்த வைத்திய

முறைகள் இப்பகுதியில் பிரபலமடைய வேண்டுமென்று கருதுகிறோம். தகுந்த ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் இப்பகுதியில் அவருடைய தலைமையில் பௌத்த தரும ஆதூலர் சாலை ஒன்றை நிறுவ வேண்டுமென்பதிலும் நான் மிக ஆர்வமாக இருக்கிறேன். மனப்பிணியைப் போக்குவதைப்போல் மக்களின் உடற்பிணியைப் போக்குவதும் மிகச்சிறந்த தருமங்களில் ஒன்று. இவற்றுக்கெல்லாம் ஒரு முன்னோடியாத்தான் தங்களின் பார்வை வைத்தியத்தைக் கருதுகிறோம். ஆனந்தர் கடந்த பல வருடங்களில் பௌத்த வைத்திய சாத்திரத்தில் கரை காணாத பயிற்சி அடைந்திருக்கிறார்!"

"என்ன? உதயன் பௌத்த மருத்துவத்தில் அத்தனை தேர்ச்சி பெற்றிருக்கிறானா?" என்று வினவினார் தம்புராட்டியார். அத்தனை பெரிய ஆச்சாரியார் தமது தம்பியைப் புகழ்வதை மேலும் கேட்கவேண்டுமென்கிற ஆவல் அவரிடம் எழுந்தது.

"ஆனந்தர் தங்களிடம் இதனைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை போலிருக்கிறது. காம்போஜமெங்கிலும் இவரது புகழ் பரவியிருக்கிறது. அங்கிருந்து நமது விஹாரைக்கு வரும் தேரர்களில் இவரைப் பற்றிப் பிரஸ்தாபிக்காதவர்களே கிடையாது. சீன நுண்ணூசி வைத்தியத்தில்[37] இவர் முறைப்படி தேர்ச்சியடைந்து அதில் பல மாறுதல்களைப் புகுத்தியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். தென்னாட்டு வைத்திய சாஸ்திர முறைகளையும் சீன மருத்துவத்தையும் இணைத்துப் புதிய பல சாதனைகளை அங்கே நிகழ்த்தியிருக்கிறார். இவர் கண்டறிந்துள்ள மருத்துவ முறைகளைக் கேள்விப்பட்டபின்தான் இங்கே ஒரு பௌத்த ஆதுலர் சாலையை உருவாக்கும் எண்ணமே எனக்கு உதித்தது.." என்றார் குரு.

"இத்தனை தூரம் தாங்கள் கூறும்போது நான் எவ்வாறு மறுப்புத் தெரிவிப்பது? தங்களின் சித்தம்போல் நடக்கட்டும்."

அதனைக் கேட்ட ஆனந்தரின் முகத்தில் மகிழ்ச்சி பட்ட வர்தனமாகத் தெரிந்தது. தாம் பலமுறை வைத்த வேண்டுகோளை இலட்சியம் செய்யாமல் நிராகரித்தவர்

---

[37] Acupuncture

ஆச்சாரியாரின் வார்த்தைகளுக்கு மட்டும் கட்டுப்பட்டு வைத்தியத்தை ஏற்க முன் வந்தது எவ்வாறு? என்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆச்சாரியர் மேற்கொண்டு எதுவும் கூறாமல் ஆதரவுடன் பிஷுவின் தோள்களில் தட்டிக் கொடுத்துவிட்டு ஆசனத்திலிருந்து எழுந்திருக்க முற்பட்டார்.

* * * * * * * *

அன்று மாலை ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை இழந்து விட்ட உற்சாகத்தை ஓரளவு மீட்டுக்கொண்டு விட்டது போல் தெரிந்தது. மங்கிக்கொண்டிருந்த வெளிச்சத்தின் நடுவே குழிக்களரியெங்கிலும் ஏற்றப் பட்டிருந்த நெய் விளக்குகள் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

இரண்டு நாட்களாகக் களரி வந்தனத்தை முறைப்படி செய்யாத குற்றத்தை நிவர்த்தி செய்ய முற்பட்டிருந்தார் தம்புராட்டியார். ஆயுதங்களுக்குத் தாமே எண்ணை தடவிப் பூக்களும் சாற்றினார். சிதறிக்கிடந்த கிரந்த ஓலைகளைத் திரட்டிக் குருதாரைக்கருகில் வைத்தார். சிறிது நேரம் வாள் சுழற்றினால் என்ன? என்கிற எண்ணம் தோன்றவே இடையாடையை வரிந்து கட்டிக்கொண்டு வாளையும் கேடயத்தையும் வைத்துக் கொண்டு விர்.. விர்..ரென்று சுழற்றலானார்.

சிறிது நேரத்தில் களரி வாயிலில் சப்தங்கள் கேட்டன. பிஷுவும் ஆச்சாரியரும் களரிக்கு வந்து கொண்டிருப்பது தெரிந்தது. வாள் சுழற்சியை நிறுத்திக்கொண்டு மரியாதையாக அடங்கி நின்றார். எதற்காக ஆச்சாரியாரிடம் இத்தனை பயபக்தி ஏற்படுகிறது? என்பது அவருக்கே சரிவர விளங்கவில்லை.

"ஏனம்மா நிறுத்திவிட்டாய்? உன்னுடைய சுழற்சியைப் பார்ப்பதற்காகவல்லவா இங்கு வந்தேன்?"

"அது.. வந்து.. ஆச்சாரியர் முன்னால் வாள் சுழற்றுவது மரியாதைக் குறைவாக இருக்குமென்று.."

"உன்னுடைய நாஞ்சில் நாட்டு ஆசான் முன்னால் வித்தையைச் செய்து காண்பிப்பதை மரியாதைக் குறைவென்று நினைப்பாயா என்ன? அவ்வாறு நினைத்துக் கொள்ளேன்?"

தம்முடைய ஆசானைப் பற்றி இவருக்கெப்படித் தெரிந்தது? என்று திடுக்கிட்டுப் போனார் தம்புராட்டியார். இந்தச் சாலையும் அதன் மனிதர்களும் ஆச்சாரியாருக்கு முன்பே பரிச்சயமானவை என்ன? எனும் கேள்வி அவரது மனதில் எழுந்தது.

மேற்கொண்டு சில சுழற்சிகள் செய்து காண்பித்தவர் விரைவிலேயே அவற்றை முடித்துக் கொண்டார். யார் இந்த ஆச்சாரியர்? இவருக்கும் நமது பெருஞ்சாலைக்கும் உள்ள தொடர்பு என்ன? அதை நாமே அறியமுடியாமல் போனது எங்ஙனம்? என்று ஒன்றன் பின் ஒன்றாகப் பல கேள்விகள் புறப்பட்டு அவரது மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

களரியின் உட்பகுதிக்குள் நுழைந்த ஆச்சாரியர் குருதாரைக்கு முன்னால் உரிமையுடன் சென்று பணிவுடன் கரம் கூப்பி வணங்குவதை பிஷு ஆச்சரியத்துடன் கவனித்தார். புத்த பகவானின் திருவுருவத்தைத் தவிர மற்றவற்றை வணங்க மாட்டாரே தேரர்? இத்தனை காலத்தில் நாமே ஒரு நாள் கூட குருதாரையில் நின்று வழிபாடு நிகழ்த்தியதில்லையே? சாலை மாணவர்களுக்கே கிடைக்கும் பிரத்யேக உரிமையல்லவா அது? நல்லவேளை! அக்காள் இதனைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் ஏதேனும் சிக்கல் உருவாகியிருக்கும்.

சில கணங்கள் கண்மூடி தியானத்திலிருந்த ஆச்சாரியர் மெதுவாகக் கண்களைத் திறந்தார். குருதாரைக்கு அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த பழைய பூர்வானுபவக் கிரந்த ஓலைகளில் அவரது கண்கள் பதிந்தன.

"இதென்ன? இந்த ஓலைகள் இவ்வாறு சிதறிக் கிடக்கின்றனவே? இவற்றை நான் ஒழுங்குபடுத்தலாமா?" என்று கேட்டவாறு குனிந்து அவற்றைத் திரட்டத் துவங்கினார்.

ஆச்சாரியாரின் செய்கையைச் சற்றும் எதிர்பாராத பிஷு துணுக்குற்றுப் போனார். தம்புராட்டியார் என்ன நினைத்துக் கொள்வாரோ? ஆச்சாரியாரை ஏதாவது மரியாதைக் குறைவாகப் பேசிவிடுவாரோ? என்று பதைபதைத்தது அவரது மனம். அக்காள் குறுக்கிடும் முன் தாம் குறுக்கிட்டுவிடுவது நல்லது என்று தோன்றியது.

"ஆச்சாரிய! மன்னிக்க வேண்டும். அவை இந்தச் சாலைக்கே உரிய பிரத்யேகமான இரகசியக் கிரந்தங்கள்.

சாலையைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் அவற்றைத் தீண்ட முடியும். தவறாக எண்ண வேண்டாம்..."

"அப்படியென்றால் தாங்கள்தான் அவற்றைத் தீண்டக் கூடாது!" என்று கண்சிமிட்டிய ஆச்சாரியர், தொடர்ந்து பூர்வானுபவக் கிரந்த ஓலைகளை ஒழுங்குபடுத்தும் பணியைத் தொடரலானார். பிஷுவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஆச்சாரியாரின் செய்கைகள் வினோதமாக இருந்தன.

அனைத்தையும் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்த தம்புராட்டியார் எதிர்பாராத காரியம் ஒன்று செய்தார். சடாரென்று ஆச்சாரியாரின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார்.

"ஆச்சாரியரே! நான் அன்றாடும் குருதாரையில் வைத்து வழிபடும் பண்டைய சாலை குருக்களின் வடிவமாகவே தங்களைக் காண்கிறேன். தாங்கள் இங்கு வந்திறங்கிய கணம் முதல் தங்களுக்கும் இந்த சாலைக்கும் ஏதோ நீண்ட நெடிய சம்மந்தம் உள்ளதென்று என் உள்மனம் கூறிக்கொண்டே யிருக்கிறது. அதனை மெய்ப்பிப்பது போலவே தங்களின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. இனியும் மறைக்க வேண்டாம். தாங்கள் யார் என்பதையும் எதற்காக இங்கே வந்துள்ளீர்கள் என்பதையும் தயைகூர்ந்து தெரிவியுங்கள்."

மெதுவாக அவரை எழுப்பினார் குரு.

"நீ மிகவும் புத்திசாலித்தனமும் உள்ளுணர்வும் நிரம்பிய பெண்மணியம்மா. புத்தபகவானின் பூரணமான கருணா விலாசம் உனக்குச் சித்தியாகட்டும். இதோ! இப்படி குருதாரைக்கருகில் அமர்ந்து கொள்ளுங்கள். இனி நான் கூறப்போகும் செய்திகள் பரம இரகசியமானவை. எனது பூர்வாசிரமம் சம்மந்தப்பட்டவை. இவை தகவிலார் காதுகளில் சென்று விழுந்தால் அனேக அனர்த்தங்கள் ஏற்படலாம். ஆகையால் நான் பகிர்ந்துகொள்ளப்போகும் செய்திகள் என் அனுமதியின்றி இந்தக் களரி வாயிலுக்கு வெளியே செல்லக்கூடாது என்கிற உறுதிமொழியை உங்களிடம் எதிர்பார்க்கிறேன்."

"தங்களின் சித்தம் போலவே நடந்து கொள்வோம்."

குரு ஒரு புன்னகையுடன் தன்னுடைய மெலிந்த உடலை மடக்கி மெல்ல அமர்ந்து கொண்டார். அவரது கண்கள் மூடின. நாசியிலிருந்து ஒரு ஆழ்ந்த பெருமூச்சு

வெளிப்பட்டது. தம்புராட்டியாரும் பிஷுவும் தாரையின் எதிரில் அமர்ந்து ஆச்சாரியாரின் முகவதனத்தை ஆவலுடன் நோக்கி நின்றார்கள்.

களரியெங்கிலும் ஏற்றப்பட்டிருந்த நெய் விளக்குகள் தமது சுடர்களின் ஓயாத ஆட்டத்தை நிறுத்திக்கொண்டு ஆச்சாரியாரின் சொற்களைக் கேட்க ஆயத்தமாயின. குருதாரைக்கருகில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல்வேறு ஆயுதங்களும் சுவடிகளும் கூட அவரையே வைத்த கண் வாங்காமல் நோக்கி நின்றன.

அண்ட பகிரண்டங்களும் அசையாது நின்றன.

34. சரஸ்வதி பண்டாரம்



"இந்தச் சாலைக்கும் எனக்குமான தொடர்பு எனது பூர்வாசிரமம் சம்மந்தப்பட்டது. ஆதலின் அதிகம் பேருக்குத் தெரியாத என்னுடைய பூர்வீக வரலாற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

காவிரி பாயும் சோழநாட்டில் முத்தரைய மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஊர்களுள் ஒன்றான உத்தமதானபுரத்தில்[38] நான் பிறந்தேன். எனது தந்தையார் ஆதித்ய சோழரின் அரசவையில் புரவுவரித் திணைக்களத்தின்[39] கீழ் சில கூற்றங்களுக்குக் கணக்காயராக இருந்தார். பூஸ்திதிகளுக்கும்[40] சொத்து சுகங்களுக்கும் குறைவில்லை. ஆகவே என்னையும் எனக்குப் பின் பிறந்த சகோதரனையும் எங்களின் பெற்றோர் அன்புடன் வளர்த்து வந்தனர்.

எனது குடும்பம் தேராவாத பௌத்தத்தைச் சார்ந்தது. ஆதலின் சிறு வயது முதலே மும்மணிகள், எண்வழிப்

---

[38] உத்தமதானி என்கிற சிறப்புப் பெயரை முத்தரைய மன்னரான கோ இளங்கோ முத்தரையர் தரித்திருந்தார். அவரது பெயரால் விளங்கும் இவ்வூரில்தான் தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படும் பெருமைக்குரிய தமிழறிஞர் திரு. உ.வே.சுவாமிநாத அய்யர் பின்னாளில் பிறந்தார்.

[39] நாட்டின் வெவ்வேறு ஊர்களில் வருடாந்திர விளைச்சலையும் அதற்கான இறை (வரி) முதலியவற்றையும் தீர்மானிக்கும் அதிகாரி.

[40] நிலபுலன்கள்.

பாதை முதலான பௌத்த தத்துவங்களும் தர்மசக்கரப் பிரவர்த்தனமும் மூன்று சரணங்களும் எனக்குப் பரிச்சயமானவையாக இருந்தன. நாகை பௌத்தர்களின் புண்ணிய பூமியாதலின் அவ்வூருக்கு நாங்கள் அவ்வப்போது குடும்பத்துடன் விஜயம் செய்வது வழக்கம். ஆகவே அங்கிருந்த ஆச்சாரியார்களும் குருமார்களும் எனக்கு நன்கு பழக்கமானார்கள்.

இத்தனை வலிமையான பௌத்தப் பின்னணி இருந்தும் சிறுவயது முதலே என் மனது சங்கிராமப் பயிற்சிகளில்தான் இயல்பாகச் சென்றது. கத்தி சுழற்றுதல், வாள் பயிற்சி, கம்புச் சண்டை, மல்யுத்தம், சிலம்பம் முதலான பல வீர விளையாட்டுக்கள் இயல்பாகவே கைவந்தன. மென்மையான உள்ளமும் நடவடிக்கைகளும் கொண்ட எனது தந்தையாரால் அவற்றை இரசிக்க முடியவில்லை என்றாலும் எனது இயல்பான ஆற்றல்களை ஒடுக்குவதும் நல்லதல்ல என்பது அவருக்குப் புரிந்ததால் கல்வியைத் தவிர இவ்வகைப் பயிற்சிகளிலும் ஈடுபட அனுமதித்தார்.

நாளாவட்டத்தில் நான் கல்வியில் படுமோசமாகப் பின் தங்கிப்போய் இவ்விதமான போர்ப்பயிற்சிகளில் முழு நாட்டமுடையவனானேன். என்னுடைய கீர்த்தி எப்படியோ அரண்மனையை எட்டி விட்டது. ஆகவே அடுத்த கட்டப் பயிற்சிக்காகத் தஞ்சைக்கு வரச்சொல்லி விட்டார்கள். தந்தையாருக்கு ஒரு பக்கம் பெருமிதமாகவும் மறுபக்கம் வருத்தமாகவும் இருந்தது. புத்த பகவானின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு என்னையும் தம்முடன் தஞ்சைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள்.

அரண்மனையில் மற்ற வீரர்களுடனும் இராஜகுலத்து இளைஞர்களுடனும் இணைந்துகொண்டு சங்கிராமப் பயிற்சிகளில் உற்சாகமாக ஈடுபடலானேன். விரைவிலேயே பட்டத்து இளவரசரான பராந்தக சோழரின் அன்புக்கும் நட்புக்கும் பாத்திரமானேன்.

அப்போதுதான் அவருக்கும் சேர இளவரசியாரான கோக்கிழானடிகளுக்கும் திருமணம் நிச்சயமாகி இருந்தது. பிராயத்தில் சிறியவனாக இருந்தாலும் என்னிடம் அதிகம் அன்பு பாராட்டி என்னையும் ஒரு மாப்பிள்ளைத் தோழனாக அங்கீகரித்த பராந்தகர் திருமணத்திற்கு அழைத்துச் சென்றார். அந்தத் திருமணத்திற்காகச் செல்லும் போதுதான் பராந்தகரின் அத்யந்த நண்பராகவும்

ஒருவகையில் வழிகாட்டியாகவும் விளங்கிய குருவாடி செல்வக்கிழார்[41] எனக்குப் பழக்கமானார்... ”

மஹாகுருவின் பூர்வ வரலாற்றில் திடீரென்று குருகாடிக் கிழாரின் பெயர் குறிப்பிடப்படுவதை தம்புராட்டியாரும் பிஷுவும் ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டார்கள். புரியாத பல விஷயங்கள் அவர்களுக்குப் புரியலாயின. தம்முடைய இளமைப் பருவத்தைப் பராந்தக சோழரின் காலத்திற்கே கொண்டு செல்கிறாரெனில் ஆச்சாரியாரின் தற்போதைய பிராயம் எண்பது எண்பத்தைந்திற்கும் மேற்பட்டது என்பதுபோல் தோன்றுகிறதே?

உடன்பிறப்புக்களின் மாறிவரும் முகபாவங்களை கவனித்து விட்டாலும் கவனிக்காதவர்போல் காட்டிக் கொண்ட குரு தொடர்ந்து தம்முடைய வரலாற்றைக் கூறிச் சென்றார்.

“நண்பர்கள் விஷயத்தில் பராந்தகர் பிரத்யேக அபிப் பிராயங்கள் கொண்டவராக இருந்தார். அவரது அன்புக்காவும் நட்புக்காகவும் பல்வேறு சிற்றரசுகளின் இளவரசர்கள் அவரைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் பிராயத்தில் முதிர்ந்த கிழாரையும் பிராயத்தில் சிறியவனான என்னையும் நெருங்கிய தோழர்களாக அங்கீகரித்தது பல்வேறு மட்டங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. சோழப் பெருமானடிகளே[42] இதனை அதிகம் இரசிக்கவில்லை. என்றாலும் பராந்தரின் பிடிவாதத்தை இந்த விஷயத்தில் யாராலும் மாற்ற முடியவில்லை.

அனைவரும் திருமணத்திற்காக மகோதையபுரத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு நடந்த பல சம்பவங்களை என்னினும் நீங்கள் நன்றாக அறிவீர்களென்று நம்புகிறேன். பராந்தகருக்கும் மாளிகைப்புரத்து வீட்டின் இளவரசியாருக்கும் முகிழ்த்த காதலால் அவர்கள் இருவரைத் தவிர நானும் கிழாரும்கூட பல்வேறு

[41] குருவாடி செல்வக் கிழார் என்பதன் திரிபே குருகாடி செல்லக்கிழார் ஆகும். படிப்பறிவில் சிறந்தவரான குரு கிழாரின் பெயரை இவ்வாறு திரிக்காமல் குறிப்பிடுகிறார் எனக் கொள்க.

[42] ஆதித்த சோழர் பல்வேறு கல்வெட்டுக்களில் ‘சோழப்பெருமானடிகள்’ என்றே குறிப்பிடப்பட்டுள்ளார்.

திக்கல்களுக்கு உள்ளானோம். குறிப்பாக எங்களால் கடுமையான அதிருப்திக்கு உள்ளாகியிருந்த பல்வேறு சிற்றரசுக் குடும்பங்களும் இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு எங்களுக்கெதிராகப் பலவிதமான வதந்திகளையும் சோழர் தரப்பில் பரப்பி வந்தார்கள்.

ஒரு கட்டத்தில் நாங்களிருவரும்தான் கோக்கிழா னடிகளுக்கு எதிராக மாளிகைப்புரத்து இளவரசியாரை நிறுத்தினோம். அவ்வாறு செய்வதன் மூலம் பராந்தகரின் அரண்மனையில் நிரந்தர ஆதிக்கம் செலுத்தத் திட்டமிட்டோம் என்றெல்லாம் கூடச் செய்திகள் உலாவத் தொடங்கிவிட்டன. பராந்தகர் எங்களின் பக்கம் உறுதியாக நின்று விட்டதால் பெருமானடிகளாலோ மற்றவர்களாலோ ஒன்றும் செய்ய முடியவில்லை. சேர சோழ உறவை வளர்ப்பதற்காகத் தொடங்கப்பட்ட திருமண உறவு இவ்வாறாகப் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு அதிருப்தியாளர்களை உருவாக்கியதுதான் மிச்சம். இந்தத் திருமணத்திற்குப் பிறகுதான் பெருமாளின் பார்வை பாண்டியர்களின் பக்கம் திரும்பியதென்றால் மிகையில்லை.

சோழர்களை மட்டம் தட்ட நினைத்த சேரர்கள் விதிமுறைகளை மீறிக் காந்தளூர்க் கலமறுக்கும் போட்டிகளுக்காக சோணாட்டு வீரர்களுக்கு வலுவில் அழைப்பு வைத்தார்கள். அழைப்பை நிராகரித்தால் சோழரின் வீரம் பற்றிய கேள்வி எழும் என்பதால் பராந்தகரும் அதற்குச் சம்மதித்தார். இப்படிப்பட்டதொரு தருணத்திற்காகவே காத்திருந்த சிற்றரசர்கள் பலர் எங்களிருவரையும் சோழநாட்டின் சிறந்த வீரர்களாக அங்கீகரித்து எங்களையே போட்டிக்குத் தேர்வு செய்யுமாறு பராந்தகருக்கு அழுத்தம் கொடுக்கலானார்கள். பராந்தகர் அவர்களின் தேர்வை மறுக்க முடியாமல் எங்களையும் இழக்க விரும்பாமல் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்து வந்தார்.

இந்நிலையில் ஒருநாள் குருவாடிக் கிழார் என்னைத் தனிமையில் சந்தித்தார்.

‘வருவது வரட்டும். போட்டிகளில் சோழ நாட்டின் சார்பாக நாமிருவருமே கலந்து கொள்வோம். நமது நண்பனுக்காக இதைக்கூடவா செய்யக்கூடாது?’ என்று வினவினார். மத்திய வயதைக் கடந்துவிட்ட அவரே தம்முடைய பிராயத்தைப் பொருட்படுத்தாமல் இந்த

ஆபத்தான முயற்சியில் பங்குபெற முன்வரும்போது நான் பின்வாங்குவது சரியல்ல என்று தோன்றியதால் அந்த ஏற்பாட்டிற்கு நானும் ஒப்புக்கொண்டேன். ஆனால் ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடக்கப்போகிறது என்று மனதிற்குத் தோன்றிக்கொண்டேயிருந்தது. புத்த பகவானின் சரண கமலாலயங்களில் முடிவை விட்டுவிட்டுப் போட்டிகளில் மனதைச் செலுத்தலானேன்.

விவகாரம் முற்றிவிட்டதைக் கண்டு அன்றைய மாளிகைப்புரத்து வீட்டின் தம்புரான் தவித்துப் போனார். பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு எங்களிருவருக்கும் இந்த ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலையில் நாஞ்சில் நாட்டு ஆசான் மூலம் பயிற்சி கொடுப்பதென்று தீர்மானமாயிற்று. நல்லதொரு நாளில் நாங்களிருவரும் இந்தச் சாலைக்கு வந்து சேர்ந்தோம்."

தேரரின் நம்பமுடியாத பூர்வாசிரம வரலாற்றைத் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார் தம்புராட்டியார். அவருக்கெதிரே அமர்ந்திருப்பது வெறும் பௌத்த ஆச்சாரியார் மட்டுமல்ல. நாஞ்சில் நாட்டு ஆசானால் நேரடியாகப் பயிற்றுவிக்கப்பட்ட தலை சிறந்த மாணவருள் ஒருவர்! ஒரு வகையில் இவரும் தமக்கு ஆசான் முறைதான் ஆக வேண்டும். இந்த வயதான பிராயத்தில் சிரமம் பாராமல் இத்தனை தூரம் நேரில் சாலைக்கு வந்திருக்கிறாரென்றால்.. இந்தச் சாலை அவரது மனதில் எத்தகைய முக்கிய இடத்தை வகித்திருக்க வேண்டும்? இதனைக் கண்ணாரப் பார்ப்பதற்கு நாமும்தான் எத்தனை கொடுத்து வைத்திருக்க வேண்டும்?

காந்தளூர்ப் போட்டிகளில் சோழர்கள் கலந்து கொண்ட கதை பிரஸ்தாபிக்கப்படும் போதெல்லாம் குருகாடிக் கிழாரின் பெயர் மட்டும்தான் உச்சரிக்கப்படும். அவருடன் கூட வந்த இளைஞன் யார்? என்று தம்புராட்டியார் நாஞ்சில் நாட்டு ஆசானையும் மூத்த தம்புரானையும் பாட்டியாரையும் வேறு பலரையும் பல்வேறு விதமாக விசாரித்திருக்கிறார். ஏனோ அந்தக் கேள்வியை அவர்கள் அனைவரும் சொல்லிவைத்தாற்போல் தவிர்த்தே வந்தார்கள்.

ஆசான் மட்டும் ஒரு முறை தொந்தரவு பொறுக்க முடியாமல் 'அவன் போட்டி முடிந்ததும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய் விட்டான். போதுமா? அவனைப் பற்றி எதற்காகத் துருவித் துருவி ஆராய்ந்து

கொண்டிருக்கிறாய்? அனாவசியமான விஷயங்களில் மனதைச் சிதறவிடாமல் வித்தையில் கவனத்தைச் செலுத்து!' என்று கூறி அடக்கிவிட்டார். இத்தனை காலம் கழித்து ஏறக்குறைய அந்தக் கேள்வியைத் தாம் மறந்தே போய் விட்ட இந்தத் தருணத்தில் விடை தானே முன்வந்து வெளிப்படுத்திக் கொள்கிறது! எல்லாவற்றுக்கும் காலம் என்று ஒன்று கனிந்து வரவேண்டும் போலும்.

"எங்களை நேரில் பார்த்த நாஞ்சில் நாட்டு ஆசானுக்கு மிச்சமிருந்த சிறிதளவு நம்பிக்கையும் காணாமல் போய் விட்டது. இவர்களையா பயிற்றுவிக்கச் சொல்கிறீர்கள்? என்று தம்புரானிடம் வெளிப்படையாகவே கேட்டுவிட்டார். பிறகு பலவிதமான சமாதானங்கள் சொல்லி ஒருவழியாக அவரைச் சம்மதிக்க வைத்தார்கள்.

ஆனால் பயிற்சிகள் தொடங்கிய சில நாட்களிலேயே ஆசான் எங்களிப் பற்றிய எண்ணத்தை மாற்றிக்கொண்டார். வித்தையில் கிழாரும் நானும் காட்டிய வேகமும் சிரத்தையும் அவரை வெகுவாகக் கவர்ந்தன. அது மட்டுமல்ல. இடைவிடாத பயிற்சிகளால் நன்கு பதப்பட்டிருந்த எங்களின் உடல் ஆசான் கொடுக்கும் உத்தரவுகளுக்கேற்ப வளைந்து நெளிந்து குழைந்து சொன்னதையெல்லாம் செய்தது. குறிப்பாகக் கிழாரின் வயதுக்கு மீறிய பயிற்சிகளை ஆசான் மிகவும் இரசித்தார்.

சாலையின் விடுதிகள் அப்போது மாணவர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்ததாகையால் நாங்கள் கழிக்குடியில் கன்னியாபடாரியார் திருக்கோயிலினருகே அமைந்திருந்த சத்திரமொன்றில் தங்கிக்கொண்டோம். ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் நாங்கள் பயிற்சி பெறும் விஷயத்தைத் தம்புரான் இரகசியமாக வைக்கக் கருதியதால் சோழ நாட்டுச் சிறு வணிகர்களாகவே நாங்கள் அறியப் பட்டோம். வீரத்திலும் விவேகத்திலும் சிறந்தவரான செல்வக் கிழாருடன் கழிக்குடியில் நான் கழித்த அந்த நாட்கள்தான் எத்தனை இனியவை! ஏதோ நேற்று நடந்தவைபோல் அந்நாட்களின் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நிகழ்வும் என் கண்களின் முன் இப்போதும் நிழலாடுகின்றன.

தினமும் அதிகாலையிலேயே துயிலொழுந்துவிட்டுக் கடலில் குளித்துவிட்டு யோக அப்பியாசங்களில் ஈடுபடுவோம். பின் உடனடியாகப் பெருஞ்சாலைக்குப்

பயணம். முற்பகல் நேரம் வரை மெய் உழிச்சலிலும் வர்மாப்பியாசத்திலும் அங்க களரியிலும் நேரம் செல்லும். பின் மதிய உணவு மற்றும் ஓய்வு. மாலையில் ஆயுதக் களரியைப் பயின்றுவிட்டு இரவு முதல் ஜாமம் முடியும் நேரத்தில் கழிக்குடிக்கு வந்து சேர்வோம்.

முதல் கட்டத்தில் சாலையின் இதர மாணவர்களுடன் எங்களைப் பயிற்சியில் ஈடுபடுத்திய ஆசான் எங்களின் ஆற்றலையும் அக்கறையையும் கவனித்துவிட்டு விரைவிலேயே பிரத்யேகப் பயிற்சிகள் கொடுக்கத் துவங்கினார். சாலையின் பல காலம் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே பயிற்றுவிக்கப்படும் இரகசிய வர்மப் பிரயோகங்கள் பலவும் எங்களுக்கு மனப்பாட மாயின. அக்காலத்தில் தெற்கன் முறைக் களரியில் இப்பெருஞ்சாலை பிரசித்தி பெற்று விளங்கியதாகையால் அங்க களரியில் மட்டும் அதிகப்படியான பயிற்சிகள் பயிற்றுவிக்கப்பட்டன.

இந்நிலையில் ஒருநாள் ஆசான் எங்களைத் தனியே கூப்பிட்டனுப்பினார்.

"நீங்களிருவரும் பயிற்சிகளில் சிரத்தையாகவே ஈடுபட்டு வருகிறீர்கள். ஆனால் கலமறுக்கும் போட்டிகளில் வெற்றிபெற வேண்டுமெனில் இந்த அங்க களரிப் பயிற்சிகள் மட்டும் போதா. வேறு சில விஷயங்களிலும் நீங்கள் ஞானஸ்தர்களாக வேண்டும்."

"வேறு விஷயங்கள் என்றால்?"

"முதலாவது ஆயுதக்களரி. அதில் உங்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகள் போதாது. தெற்கன் முறையில் நாம் சிறந்து விளங்குவதால் ஆயுதப் பயன்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் கலமறுக்கும் போட்டிகளில் வடக்கன் முறையில் பயிற்றுவிக்கப்பட்ட வீரர்களையும் நீங்கள் எதிர்கொள்ள வேண்டுமென்பதால் ஆயுதக் களரி அவசியமாகின்றது."

"சரி, அவ்வாறே செய்கிறோம்."

"அது அவ்வளவு எளிதல்ல. நமது சாலையில் ஆயுதக் களரியில் சிறந்த ஆசான்கள் ஒருவரும் கிடையாது. இதில் நானும் அடக்கம். என்றாலும் வேறு வழியில்லை. இருப்பதைக் கொண்டு முன்னேற வேண்டியதுதான்."

"சரி."

"இரண்டாவது விஷயம் சற்றே சிக்கலானது. நான் சொல்லப்போவதைக் கவனமாகக் கேளுங்கள். கலமறுக்கும் போட்டிகளில் சில பிரத்யேகமான பிரயோகங்களைப் பயன்படுத்தும் உரிமை அதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு உள்ளது. தேவைப்பட்டால் மட்டுமே அவற்றைப் பயன்படுத்தப்படவேண்டும் என்கிற விதி இருந்தாலும் மாணவர்கள் அவற்றைக் கடைபிடிப்பதில்லை. அவற்றுக்கு 'விசேஷப் பிரயோகங்கள்' என்று பெயர். அவற்றை நீங்கள் முறையாக எதிர்கொள்ளச் சிறப்புப் பயிற்சிகள் எடுத்தாக வேண்டும். குறைந்த பட்சம் விசேஷப் பிரயோகங்கள் என்பன யாவை, அவற்றை எதிர்கொள்ளும் முறை என்ன என்பதைப் பற்றிய அடிப்படை ஞானமாவது உங்களுக்கு வேண்டும்."

"???"

"கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைத்து சட்டன்களும் எதிர்கொள்ளும் சிக்கல்தான் இது. உதாரணமாகக் கடந்த ஓரிரு வாரங்களில் நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்த சில இரகசியப் பிரயோகங்கள் இந்தச் சாலைக்கு மட்டுமே உரியவை என்று குறிப்பிட்டேனல்லவா? அவற்றைப் பற்றிய முறையான ஞானம் மற்ற சாலை மாணவர்களுக்குக் கிடையாது. போட்டிகளில் அவற்றை நீங்கள் பிரயோகித்தீர்களானால் அதனை அவர்கள் எதிர்கொள்வது எவ்வாறு?

இதற்காகக் பூர்வானுபவப் படி என்றழைக்கப்படும் கிரந்தத்தைப் பயன்படுத்துவார்கள். சாலையின் பண்டைய ஆச்சாரியார்கள் வருடாவருடம் நடக்கும் கலமறுக்கும் போட்டிகளில் தாங்கள் கவனித்த விசேஷப் பிரயோகங்கள் பற்றிய அனைத்துக் குறிப்புக்களையும் அதில் எழுதி வைத்திருப்பார்கள். சில வேளைகளில் அந்தப் பிரயோகங்களை எதிர்கொள்ள மற்ற மாணவர்கள் உபயோகித்த பதில் தாக்குதல் முறைகளைப் பற்றிய குறிப்புக்களையும்கூட எழுதிவைப்பதுண்டு.

இந்தக் குறிப்புக்கள் போட்டிகளில் பங்குபெறப்போகும் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும். இவற்றைக் கொண்டுதான் விசேஷப் பிரயோகங்களை எதிர்கொள்ளத் தக்க பயிற்சி எடுத்துக் கொள்வார்கள். குறிப்பாகக்

காந்தளூரில் பேணப்பட்டுவரும் பூர்வானுபவப் படிகள் மிகவும் விசேஷமானவை என்று கேள்வி."

"நமது சாலைக்கும் அத்தகைய கிரந்தங்கள் உள்ளன அல்லவா?"

"நிச்சயம் உள்ளன. ஆனால் எங்கே உள்ளன என்பதுதான் தெரியவில்லை! முன்னொரு காலகட்டத்தில் நமது சரஸ்வதி பண்டாரம் கடற்கரைக்கருகில் அமைந்துள்ள குஹநாதேஸ்வரம் திருக்கோயிலுக்கருகில் செயல்பட்டு வந்தது. அந்தக் கால கட்டத்தில் ஆய்வேள் நாட்டைப் பாண்டியர் பலமுறை படையெடுத்து வந்து தாக்கியதில் அந்தப் பண்டாரமும் பாதிப்படைந்தது. அந்தச் சிரமமான காலத்தில் கிரந்த ஓலைகளைக் காப்பாற்ற முனைந்தவர் எவரோ ஓலைக்கட்டுகளை இரகசிய இடத்தில் கொண்டுபோய் மறைத்துவைத்து விட்டார்கள். கால வெள்ளத்தில் அது காணாமலே போய்விட்டது. நானும் அவற்றைக் கண்டறிய பல வழிகளில் முயன்று விட்டேன். இன்னும் வெற்றி கிட்டவில்லை. எதற்கும் நீங்களும் ஒரு முறை முயன்று பாருங்கள்."

இதனைக் கேட்ட எங்களிருவருக்கும் ஏற்பட்ட ஏமாற்றம் எத்தகையதாக இருந்திருக்குமென்று நீங்களே ஊகித்துக்கொள்ள வேண்டியதுதான். எப்பாடு பட்டாகிலும் அந்த ஓலைக்கட்டுகளை கண்டறிந்து ஆசானிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டும் என்கிற மனவுறுதி எங்களின் மனதில் எழுந்தது. என்றாலும் அதனை வெளிப்படுத்திக் கொள்ளும் சமயம் அதுவல்லவென்பதால் அமைதியாக விடைபெற்றுத் திரும்பி விட்டோம்.

பூர்வானுபவப் படிகள் கழிக்குடியில்தான் எங்கோ மறைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றியது. பலரையும் இது தொடர்பாக விசாரிக்கலானோம். சோழ நாட்டுச் சிறு வணிகர்கள் என்று சொல்லிக்கொண்டு சத்திரத்தில் தங்கியிருக்கும் இருவர் தங்களுக்குச் சம்மந்தமேயில்லாத விவகாரங்களைத் தோண்டித் துருவிக் கொண்டிருப்பது எப்படியோ புறத்தாய நாடுவாழியின் காதுகளை எட்டிவிட்டது. உடனடியாக அவர் எங்களைச் சுற்றி ஒற்றர்களை ஏவிவிட்டு விட்டார். எங்களின் அத்தனை நடமாட்டங்களும் கண்காணிக்கப் பட்டன. பேச்சுக்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன. நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு மத்தியில் நாங்கள் எங்களின் தேடுதலைத் தொடர்ந்தோம்."

குருதேவரின் பூர்வாசிரம வரலாற்றை அக்கறையுடன் கேட்டுக்கொண்டு வந்தார் பிஷு. ஆச்சாரியாருடன் மிக நெருக்கமாகப் பல காலமாகப் பழகி வரும் துறவிகளில் அவரும் ஒருவர். அப்படியிருந்தும் தேரர் தம்முடைய பூர்வகதையை ஏன் முன்னரே பகிர்ந்து கொள்ளவில்லை என்கிற வருத்தம் அவருக்கு மனதின் ஒரு ஓரத்தில் எழுந்தது.

அந்த வருத்தத்தை வளரவிடுவது நல்லதல்ல. அது தமக்கும் ஆச்சாரியாருக்குமிடையே நிலவிவரும் சீரிய உறவைப் பாதிக்கும் என்பதும் அவருக்குப் புரிந்தது. காலகாலமாகப் தாம் பயின்று வரும் பௌத்த விவேகத்தின் உதவியுடன் அந்த வருத்தத்தை அவர் களைந்தெறிய முற்பட்டார்.

ஒருவர் நம் மீது அன்பு செலுத்துகிறார். பிரியத்துடன் நடந்து கொள்கிறார் என்கிற ஒரே காரணத்திற்காக அவர் தமது அந்தரங்களையெல்லாம் நம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று நினைப்பது பேதமையல்லால் வேறென்ன? ஒவ்வொரு மனிதனின் அடியாழத்திற்குள்ளும் அவன் வெளிப்படுத்த முடியாத அல்லது வெளியிட விரும்பாத பல செய்திகள் மறைந்திருக்கலாம். அவற்றைத் தகுந்த சமயத்தில் தகுந்த மனிதர்களிடம் பகிர்ந்து கொள்வதும் பகிர்ந்து கொள்ளாததும் அவரவர் விருப்பம். இதற்கும் அவர்கள் மற்றவர்கள் மீது செலுத்தும் அன்பிற்கும் சம்மந்தமில்லை.

அந்தரங்கங்களை மறைத்து வைப்பதினால் அன்பு மாசடைந்து விடுவதில்லை. இரண்டுக்கும் சம்மந்தமே யில்லை. ஒவ்வோரு உண்மைக்கும் ஒவ்வொரு சத்தியத்திற்கும் இடம் பொருள் ஏவல் எல்லாமே உண்டு. மகத்தான சத்தியங்களை மண்ணில் போட்டுப் புதைத்தாலும் அவை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் எழுந்து வரத்தான் செய்யும். அதுதான் அவற்றின் பலம். பொய்க்கு ஒரு போதும் அந்தச் சக்தி கிடையாது. சத்யம் வத! தர்மம் சர! என்று இந்து வேதங்கள் முழங்குவது இதனால்தானே?

இத்தகைய எண்ணங்கள் பிஷுவின் மனதை ஆக்கிரமித்ததால் இயல்பாகவே அவரது கவனம் ஆச்சாரியாரின் பேச்சிலிருந்து வழுவியது. அதனைக் கவனித்து விட்டார் குரு.

"என்ன ஆனந்தரே? ஏற்கனவே தங்களுக்குத் தெரிந்த பல செய்திகளை என் பூர்வகதை என்கிற பெயரில் மீண்டும் கூறித் தங்களை அலுப்புக்குள்ளாக்கி வருகிறேனா என்ன?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை ஆச்சாரிய" என்று மென்மையாக மறுத்தார் பிஷு.

"தாங்கள் கூறி வரும் செய்திகள் அரசல் புரசலாக நாங்களும் கேள்விப்பட்டவைதான். ஆனால் அவற்றில் தாங்கள் நேரடியாகச் சம்மந்தப்பட்டிருக்கிறீர்கள் என்பது நாங்கள் அறியாத உண்மை. நடந்த சம்பவங்களைத் தங்களின் திருவாக்கால் கேட்பதை ஒரு பாக்கியமாகவே நினைக்கிறோம். ஆகவே தயவு செய்து தங்களின் பூர்வ கதையைத் தொடரவேண்டும்!" என்று இறைஞ்சினார் தம்புராட்டியார்.

தேரர் தமக்கு அருகிலிருந்த நீர்ப்பாத்திரத்திலிருந்து குளிர்ந்த நீரை எடுத்துத் தொண்டையை நனைத்துக் கொண்டார். அவரது முகத்தில் பழைய அமைதியும் சாந்தியும் மீண்டும் குடியேறின.

"அன்பர்களே! நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நமது முந்தைய பல பிறவிகளில் செய்த பாப புண்ணியங்களின் தொகுப்பு என்பது கீழைத் தத்துவ தரிசனங்களுள் ஒன்று. புத்த பகவான் மிக ஆழமான தியான நிலையில் இந்த தரிசனங்களின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொண்டார்.

மனதை எத்தனை தூரம் தூய்மைப்படுத்தினாலும் எள்ளளவும் சலனமில்லாமல் வைத்துக்கொண்டாலும் நமது முற்பிறவிகளின் கர்மவினையானது முற்றிலும் ஒழிந்து போய் விடுவதில்லை. ஆழ்மனதில் அது எங்கோ ஒளிந்து கொண்டுதானிருக்கிறது. அறிய முடியாமல் இருந்தாலும் அது நமது இருப்பின் ஒரு பகுதியாகவே எப்போதும் உள்ளது. இவற்றை 'சமஸ்காரங்கள்' என்று குறிப்பிடுவார்கள்.

ஆழ்ந்த தியானத்தில் மனம் ஈடுபட ஈடுபட இந்த சமஸ்காரங்களின் தன்மையையும் செயல்பாட்டையும் நாம் புரிந்து கொள்கிறோம். அப்போதும் அவற்றை நாம் முழுமையாக அழித்து விடுவதில்லை. அழிக்க முடிவதில்லை. அவற்றைப் புரிந்து கொள்கிறோம். கடந்து செல்கிறோம். அவ்வாறு செய்வதன் மூலம் அவற்றிலிருந்து விடுதலை

ஆகிறோம். அவ்வளவே. இதுதான் சாக்கியமுனியான பகவான் கௌதம புத்தரின் மகத்தான தரிசனம். உலகிற்கு அவரளித்த மாபெரும் ஞானக்கொடை இதுவே.

எனது பூர்வாசிரமக் கர்மங்களின் விளைவாகவே நான் இப்போது இங்கே வந்து அமர்ந்திருக்கிறேன். அதே கர்ம வினையின் தொடர்ச்சியாகவே நீங்களும் என் முன் அமர்ந்திருக்கிறீர்கள். நாம் இங்கே இப்போது பழங் கதைகளைப் பேசிக்கொண்டிருப்பதும் இதே கர்மவினைகள் தருதியே. துவங்கப்பட்ட அனைத்தும் முடிவிற்கு வந்தாக வேண்டும். அதுவே தர்மசக்கரமாக உருவகிக்கப்படும் வாழ்க்கைத் தத்துவத்தின் சுழற்சி. விதி. அல்லவா?"

மென்மையும் கம்பீரமும் நிறைந்த குரலில் தமது பௌத்த ஞான ஒளியை களரியெங்கிலும் பரவவிட்டார் ஆச்சாரியர். அந்தக் களரி தன்னுடைய இயல்பை முழுவதுமாக இழந்து ஏதோ சேதியத்தைப்போல் அந்தக் கணத்தில் காட்சியளித்தது.

"மீண்டும் எனது பூர்வகதைக்கே திரும்புகிறேன். பூர்வானுபவப் படிகள் இருக்குமிடத்தை எவ்வாறேனும் கண்டறிந்து விடவேண்டும் என்று நானும் கிழாரும் பெரிதும் முயன்றோம் என்று குறிப்பிட்டேனல்லவா? அந்த முயற்சிக்கு இறுதியில் வெற்றி கிட்டியது. அந்த ஓலைக்கட்டுகள் இருக்குமிடத்தை நாங்கள் ஏறக்குறையக் கண்டறிந்து விட்டோம்!"

தேரரின் இந்த வார்த்தைகளால் திடுக்கிட்டுப்போனார் தம்புராட்டியார். "என்ன சொல்கிறீர்கள் ஆச்சாரியரே? ஓலைக்கட்டுகள் இருக்குமிடத்தைக் கண்டறிந்து விட்டீர்களா? அவற்றை ஆசானிடம் சேர்ப்பிக்க முடிந்ததா?"

"அவ்வாறு நடந்திருந்தால் எத்தனையோ துன்பங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். எத்தனையோ மனிதர்களின் வாழ்க்கை வேறு திசையில் திரும்பியிருக்கும். இத்தனை வருடங்கள் கழித்து இந்தப் பிராயத்தில் நான் கழிக்குடிவரை பயணம் மேற்கொண்டிருக்கவும் வேண்டியிக்காதம்மா! புத்த பகவானின் கருணை வேறாக இருந்தது. சம்பவங்கள் நாங்கள் முற்றிலும் எதிர்பாராத கோணத்தில் திசை திரும்பின.." என்று கூறிய ஆச்சாரியர் தொடர்ந்து தமது கதையைச் சொல்லிக் கொண்டு போனார்.

35. அருவிக்கரை



ஆரைவாய்மொழிக் கோட்டைக்கு வடக்கே பசேலென்று செழித்து வளர்ந்திருந்த மகேந்திரகிரி மலைக்காடுகளின் அடிவாரத்தில் செடிகொடிகளை விலக்கிய படி சிரமத்துடன் முன்னேறிக் கொண்டி ருந்தான் பாண்டி நாட்டு வீரனொருவன். குறவனைப் போன்று ஆடை அணி மணிகள் தரித்திருந்தாலும் அவனது திண்மை மிகுந்த தோள்களும் பாண்டி வீரர்களுக்கே உரிய கூரிய கழுகுப் பார்வையும் கொண்டல் வண்ண மேனியும் அவனது பின்புலத்தை மறைக்காமல் காட்டிக்கொடுத்தன.

கழிக்குடியிலிருந்து முதல் நாளிரவு புறப்பட்டிருந்த அந்த வீரன் ஆரைவாய்மொழியைச் சூழ்ந்திருந்த சோழப் படைகளின் கண்களுக்குத் தென்படாமல் மகேந்திரகிரிக்கு வந்து சேர்வதற்குள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி விட்டான். ஆனால் அந்த சிரமங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்துவிட்டது மகேந்திர மலையேற்றம். இத்தனை அடர்த்தியான காடுகளின் நடுவே பாண்டியர் எவ்வாறு வீரர்களை நடத்தி அழைத்துக் கொண்டு வந்தார்? என்று வியந்தது அவன் மனம்.

மலைக்காட்டில் அவன் கால் வைத்த கணம் முதல் அவனது அசைவுகள் அக்கானகத்தின் பழங்குடி மக்களால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மரங்கள் கொடிகள் மேலிருந்தும் பாறைகளின் பின்புறத்திலிருந்தும் இதர மறைவான இடங்களிலிருந்தும் அவனது நடமாட்டங் களைத் தொடர்ந்து கொண்டிருந்தவர்கள், உரியதொரு இடத்தில் அவனைச் சுற்றி வளைத்தார்கள்.

"அடேய்! யார் நீ? இந்த மலைக்காட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"நான் பாண்டி வீரன். மலை மீது தண்டுன்றியிருக்கும் பாண்டியருக்கு அவசரச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்."

"ஆதாரம் ஏதாவது?"

அவன் அதற்கு பதில் கூறாமல் இரண்டு கயல் மீன்களும் அதற்கருகில் ஒரு செங்கோலும்

பொறிக்கப்பட்டிருந்த சிறு முத்திரை மோதிரத்தைக் காட்டினான்.

"சரி, இப்படி வா. நீ தவறான பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறாய். இந்த திசையில் சென்றாயானால் பாண்டியரைச் சந்திப்பதற்கு பதிலாகப் புலிகளையும் யானைகளையும்தான் சந்திப்பாய். நாம் சற்றே சுற்றி வளைத்துக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. எங்களின் பின்னே வா! வழியைத் தவறவிட்டுவிடாதே..."

மேற்கொண்டு ஒரு சொல் கூடப் பேசாமல் அந்தப் பழங்குடிகள் விறுவிறுவென்று வழிகாட்டிக் கொண்டு செல்ல, அந்தப் பாண்டி வீரன் மிகுந்த சிரமத்துடன் அவர்களைப் பின்தொடரலானான். சில யுகங்கள் என்று சொல்லத்தக்க இரண்டு இரண்டரை நாழிகை நேரம் கழிந்தபின் மலையுச்சியில் 'சோ'வென்கிற மெல்லிய அருவியின் சப்தம் அவனுக்குக் கேட்டது. அருவியின் அருகில் பெரும் பாறைகளின் மேல் தண்டூன்றியிருந்த பாண்டிப் படைகள் அவன் கண்களுக்குத் தென்படலாயின.

அடுத்த சில நிமிடங்களில் அவன் பாண்டியரின் முன் நிறுத்தப்பட்டான்.

"ஆஹா! நமது குலசேகரனா? வரவேண்டும், வரவேண்டும்! நிதானம்.. நிதானம்.."

வியர்வைக் குளியலுக்கு நடுவே மூச்சிறைக்க தட்டுத் தடுமாறியபடி வந்து சேர்ந்தவனை ஒரு பாறையில் அமர வைத்தார் அமரபுஜங்கர். அவருக்கருகே சடையமாறரும் தென்னவன் உத்தர மந்திரியாரும் காணப்பட்டார்கள்.

"கயற்கொடி வெல்க! பாண்டியருக்கு அவசரச் செய்தி. சோழப்படைகளின் ஒரு பிரிவு கடல் மார்க்கமாக வந்து மலைநாட்டின் மேற்குக் கடற்கரையின் பல இடங்களிலும் வந்து இறங்கியிருக்கின்றன. கழிக்குடி, குளச்சல், முட்டம், பெரிய காவிளை, தேங்காய்ப்பட்டினம், விழிஞம்..."

அந்த வாக்கியத்தைப் அவனால் பூர்த்தி செய்ய முடியவில்லை. அதுவரை சிரமப்பட்டுச் சேமித்து வைத்திருந்த சக்தியின் கடைசித் துளியும் செலவழிந்து போக அப்படியே மயங்கிச் சரிந்து விழுந்தான் குலசேகரன்.

"யாரங்கே! இவனை அருவிக்குக் கொண்டு சென்று இளைப்பு ஆற்றி மீண்டும் எம்மிடம் கொண்டு வாருங்கள்."

உடனடியாகத் தென்னம்பிழியுடன் ஓடிவந்த பாண்டி நாட்டு வீரனொருவன், அவனது வாயில் சிறிதளவு மது புகட்டிக் கைத்தாங்கலாகத் தூக்கி அருவிக்கரைக்குக் கொண்டு சென்றான். இருவரும் விலகிச் செல்லுவரை இயல்பாகக் காணப்பட்ட பாண்டியரின் முகம் அடுத்த கணமே பாறை போல இறுகிவிட்டது.

"சடையா! இரண்டு நாட்களாக ஏன் இன்னும் சோழர்கள் முற்றுகையைத் துவங்கவில்லை? ஏன் இன்னும் சோழர்கள் கோட்டையைத் தாக்கவில்லை? என்று நூறு முறை என்னிடம் வினவிக் கொண்டிருந்தாயல்லவா.. அதற்கான பதில் இப்போது கிடைத்து விட்டது. நம் கவனம் முழுவதையும் கிழக்கில் திருப்பி விட்டுவிட்டுச் சப்தம் செய்யாமல் மேற்குக் கடற்கரையில் மலைநாட்டுக்குள் புகுந்து விட்டான் சோழன். இது நமக்கு மோசமான செய்தி. நாடுவாழிகள் இனித் தாக்குப்பிடிப்பது சிரமம்தான்."

அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த இளவலும் மந்திரியாரும் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் விக்கித்துப் போய்ப் பாண்டியரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சே! அந்த மலையனூரனைத் தஞ்சையிலிருந்து வெளியேற விட்டதே தவறு. அவன் இருந்தவரை அரண்மனையின் செய்திகள் தங்குதடையில்லாமல் நமக்குக் கிடைத்து வந்தன. அவன் அங்கிருந்து வெளிப்படும்படி தானைத்தலைவர் முடிவெடுத்திருக்கவே கூடாது! அவசரப் பட்டுவிட்டார்."

"இனி என்ன செய்வது சிற்றப்பா?"

"விவகாரம் நமது கைமீறிப் போய்விட்டது. சடையா! சோழர் படை வந்திறங்கியுள்ள இடங்கள் அனைத்துமே மேற்குக் கடற்கரை வாணிபத்தில் ஈடுபட்டுள்ள மலைநாட்டு குதிரைச் செட்டிகளின் முக்கியப் பட்டினங்கள். அந்த இடங்களிலெல்லாம் புரவிகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்துத்தான் அவர்கள் அங்கே வந்திறங்கியிருக்க வேண்டும். உரியபடி புரவிகள் கிடைத்துவிட்டால் நேராக ஆரைவாய்மொழிக்கு வந்து சேர்வார்கள். கோட்டை மேற்கிலும் கிழக்கிலுமாய் ஏக காலத்தில் தாக்கப்பெறும்.

இத்தனை பெரிய கடல்வழிப் படையெடுப்பிற்கான ஏற்பாடு எப்படி நமது ஒற்றர்களுக்குத் தெரியாமல்

போயிற்று? வழக்கத்துக்கு மாறாகப் பெரிய சதி ஏதோ நடந்திருக்கிறது. ஆபத்தான சூத்திரதாரி ஒருவன் இதில் சம்மந்தப்பட்டிருக்கிறான். அருள்மொழிவர்மனாலோ அவனது உடன்கூட்டத்தாராலோ இத்தனை சூட்சுமமாகச் சிந்திக்கவே முடியாது. அதனை இத்தனை தூரம் இரகசியமாக வைத்துக்கொள்ளவும் முடியாது!"

"அப்படியானால்.. இங்கே திரண்டிருக்கும் நமது படைகள்..." - பாண்டிய இளவலின் கண்களில் முத்து முத்தாக நீர்த்துளிகள் திரள்வதைக் கவனித்த தேவரின் கரங்கள் இளவலின் தோள்களில் இயல்பாகப் படிந்தன.

"வருத்தப்படாதே மாறா! காலம் இன்று நமக்கு எதிராக இருக்கிறது. இந்தப் போரில் எப்படியெல்லாம் உனது வீரத்தையும் விவேகத்தையும் காட்ட உத்தேசித்திருந்தாய் அதற்காக எப்படியெல்லாம் உன்னை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தாய் என்பதை நான் நன்கறிவேன். இந்த விஷயத்தில் உன்னுடைய ஏமாற்றத்தை விட என்னுடைய ஏமாற்றம் பெரிது. ஆனால், இளவலே! இடத்தையும் காலத்தையும் அறிந்து செயல்படாத ஒருவன் வாழ்க்கையில் முன்னேற முடியாது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் 'ஞாலங்கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்' என்று குறிப்பிட்டிருப்பதை அறிவாயல்லவா?

இன்று இடம் காலம் இரண்டுமே நமக்கு ஆதரவாக இல்லை. சோழர்கள் கிழக்கிலும் மேற்கிலுமாக ஆரைவாய்மொழிக் கோட்டையை ஒரு சேரச் தாக்க இருக்கும் தருணத்தில் நாம் நமது பாண்டிப் படைகளைக் களத்திலிறக்குவது தற்கொலைக்குச் சமமானது. அதனால் பொறுமையாக அருவிப்பாறை உச்சியிலிருந்து நடப்பவற்றைத் தொடர்ந்து கவனித்து வருவோம். யார் கண்டது? நாளையே சூழ்நிலைகள் மாறலாம். சோழர்களின் திட்டத்தில் சறுக்கல்கள் ஏற்படலாம். போர்க்களத்தின் நிலைமை கணத்திற்குக் கணம் மாறும் தன்மை கொண்டது. ஆதலால் எதையும் அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

குலசேகரன் கூறியதை வைத்துப் பார்க்கும்போது குறைந்த பட்சம் ஈராயிரம் சோழ வீரர்களாவது கடல்வழி வந்து இறங்கியிருப்பார்களென்று தோன்றுகிறது. அவர்கள் இந்த சமயத்தில் எத்தனை முயன்றாலும் ஆயிரம் புரவிகளுக்கு மேல் சம்பாதிப்பது இயலாத காரியம். பார்ப்போம். அவர்கள் நாளை மாலைக்குள் ஆரைவாய்

மொழிக்கு வந்து சேர்ந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

நெடுஞ்செழியர் பேசிக்கொண்டிருந்த அந்தக் கணத்தில் மேற்திசையிலிருந்து புறப்பட்ட சோழர் படை வள்ளுவ நாட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

* * * * * * * *

ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் ஆச்சாரியர் மஹா காசியப தேரர் நம்பமுடியாத திருப்பங்கள் நிறைந்த தன்னுடைய பூர்வ வரலாற்றைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு சென்றார்.

"ஒவ்வொரு நாளும் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து கடலில் நீராடிவிட்டு பகவதியம்மன் திருமுன்னில் உஷத்கால தரிசனத்தை முடித்துக்கொண்டு ஆதவன் கிழக்கில் எழும் நேரம் கடற்கரையில் சில யோக அப்பியாசங்களில் ஈடுபடுவோம் என்பதை முன்னர் குறிப்பிட்டேனல்லவா? அப்படி நாங்கள் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கும் போதெல்லாம் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருக்கும் பரதவச்[43] சிறுவர்கள் சிலர் எங்களை வேடிக்கை பார்ப்பதற்காகத் திரள்வது வழக்கம். முதலில் அது ஒரு தொல்லையாகத் தென்பட்டாலும் விரைவில் பழகிவிட்டது. சிறுவர்களும் நாளடைவில் எங்களின்பால் கவனத்தை இழந்து விளையாட்டிற்குத் திரும்பி விட்டார்கள்.

ஆனால் அவர்களில் ஒருவன் மட்டும் தொடர்ந்து எங்களைக் கவனித்து வந்தான். பார்வைக்கு அவன் மற்ற சிறுவர்களைப்போல் தெரியவில்லை. என்றாலும் எந்நேரமும் கடற்கரையிலேயே காலம் கழித்து வந்தானாகையால் அவனையும் அவர்களுள் ஒருவனாகவே நாங்கள் எண்ணினோம்.

சில நாட்களில் அவனும் எங்களுடன் விளையாட்டாகப் பயிற்சிகள் செய்ய ஆரம்பித்தான். கிழாருக்கு இது மிகப் பெரிய எரிச்சலை ஏற்படுத்தியது. நான்தான் அவரைப் பொறுமையாக இருக்கும்படி வற்புறுத்தி வந்தேன். இத்தகைய பிராயத்திலிருக்கும் சிறுவர்களிடம் ஒரு

[43] மீனவர்.

விஷயத்தைச் செய்யாதே என்று சொன்னால் அப்போதுதான் அவர்கள் அதில் அதிகப் படியான உற்சாகத்துடன் ஈடுபடுவார்கள் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவனை முழுமையாகப் புறக்கணிக்க முடிவு செய்தோம்.

சாலையிலோ பயிற்சிகள் நாளுக்கு நாள் கடுமையாகிக் கொண்டிருந்தன. யோக அப்பியாசங்களுடன் சில களரிப் பயிற்சிகளையும் அதிகாலை வேளையில் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அவற்றையும் சிறுவன் பார்த்துப் பார்த்துச் செய்யத் துவங்கினான். எங்களிருவருக்கும் சிரமமாகத் தெரியும் பயிற்சிகளைக்கூட அவன் அனாயசமாகச் செய்துவிடுவான். ஒரு கட்டத்தில் ஆசானிடம் சொல்லி அவனையும் சாலையிலேயே சேர்த்து விட்டால் என்ன? என்றுகூடத் தோன்றியது.

இந்நிலையில் ஒருநாள் அதிகாலை நாங்களிருவரும் பகவதியம்மன் தரிசனத்தைச் சற்றே காலதாமதமாக முடித்துக் கொண்டு கடற்கரைக்கு வந்து சேர்ந்தோம். அங்கே எங்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. நாங்கள் வழக்கமாகப் பயிற்சிகள் அப்யசிக்கும் இடத்தில் கடலை நோக்கி நின்றபடி கண்களை மூடிக் கரங்களைக் குவித்துக் கம்பீரமாகக் களரிவந்தனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான் சிறுவன். அட, இதையெல்லாம்கூட நம்மைப் பார்த்துத் தெரிந்துகொண்டு விட்டானா? என்று இருவருமே துணுக்குற்றோம்.

உள்ளூர மெச்சியபடி சப்தம் செய்யாமல் அவனை நெருங்கிய நாங்கள் அவன் மெல்ல முணுமுணுத்துக் கொண்டிருந்த மந்திரங்களைக் கேட்டுப் பேரதிர்ச்சிக் குள்ளானோம்! அது ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் மாணவர்களுக்கு மட்டுமே போதிக்கப்படும் பிரத்யேகமான குருஸ்துதி! அவற்றை நாங்கள் மனதாரச் சொல்வோமே தவிர ஒரு நாளும் வாய்விட்டுச் சொன்னதில்லை. அந்த ஸ்லோகம் அவனுக்கு எப்படித் தெரிந்தது? அவன் சாதாரண பரதவச் சிறுவனல்ல. நாங்கள்தான் அவனைத் தவறாக எடைபோட்டிருக்கிறோம் என்பதை அப்போதுதான் உணர்ந்தோம்.

மெல்ல அவனை விசாரித்ததில் அவனது குடும்பம் புறத்தாய நாட்டில் கூத்துக்கட்டும் புகழ்பெற்ற சாக்கியர் குடும்பங்களுள் ஒன்று என்பது தெரிந்தது..."

'சாக்கியர்' என்கிற வார்த்தையை கேட்டதும் தம்புராட்டியாரை ஏக காலத்தில் ஆயிரம் மின்னல்கள் தாக்கின. சாக்கியர் குடும்பமா? ஒரு வேளை.. நாலாம் வெளியின் கூத்துக் கட்டும் சாக்கியர் குடும்பமாக இருக்குமோ? அப்படியானால்... அந்தச் சிறுவன்...???

"சாக்கியர் குடும்பத்தின் மிகப்பெரிய மாளிகையொன்று கழிக்குடியின் கடற்கரையில் அமைந்துள்ளது என்பதையும் அதில் அவன் தனது பாட்டியாருடன் தங்கியிருப்பதையும் தெரிந்து கொண்டோம். அது மட்டுமல்ல. அன்றாடம் அவன் கடற்கரைக்கு வருவதும்கூட எங்களை உத்தேசித்துத் தான்! இதரச் சிறுவர்களுடன் விளையாடுவதற்கல்ல என்று கூறியது எங்களை மேலும் வியப்பில் ஆழ்த்தியது.

அவனது பின்புலத்தைத் துருவித்துருவி விசாரித்தும் அதிக விபரங்கள் கிடைக்கவில்லை. சாக்கியர்களுக்கும் களரிப்பயிற்சிக்கும் என்ன விதமான சம்மந்தம் இருக்க முடியுமென்று இருவருக்குமே குழப்பமாக இருந்தது. அவன் முணுமுணுத்துக் கொண்டிருந்த ஸ்லோகத்தைப் பற்றிக் கேட்டதில் அதனைத் தமது தந்தையார் அன்றாடம் ஆடற்பயிற்சி மேற்கொள்ளுமுன் உச்சரிப்பது வழக்கமென்றான். வேடிக்கை என்னவென்றால் அது ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் துதிப்பாடல் என்கிற விபரமே அவனுக்கு தெரியவில்லை!

இதற்குள் பொழுது நன்றாக விடிந்துவிட்டதால் கடற் கரையில் கூட்டம் சேரத் துவங்கிவிட்டது. எங்களைச் சுற்றிலும் ஒற்றர்களின் நடமாட்டம் இருக்கக்கூடும் என்கிற சந்தேகம் ஏற்பட்டதால் மேற்கொண்டு அவனை விசாரிக்காமல் பயிற்சியில் ஈடுபடலானோம். சில நாட்கள் கழித்து சாக்கியரின் மாளிகைக்கு இரகசியமாகச் சென்று அவரது குடும்பத்திற்கும் சாலைக்குமான தொடர்பை விசாரித்தறிவது என்று முடிவு செய்தோம்.

நாங்கள் சந்தேகித்தபடி எங்களுக்கும் சிறுவனுக்குமான உரையாடலை கவனித்துவிட்ட நாடுவாழியின் கையாளொருவன் அந்தச் சிறுவனைக் கூப்பிட்டுத் தனியே விசாரித்திருக்கிறான். அவன் மிரட்டி விசாரித்த முறை பிடிக்காததால் சிறுவன் எங்களிடம் சொன்ன விபரங்களை மாற்றிச்சொல்லி அவனைக் குழப்பிவிட்டு விட்டான். அதன் பிறகு நாங்கள் சிறுவனுடன் அதிகப் பேச்சுவார்த்தை

வைத்துக் கொள்ளவில்லை. எங்களுடன் ஒவ்வொரு நாளும் பயிற்சி செய்வதை மட்டும் அனுமதித்தோம்.

சில நாட்கள் கழித்துக் கடற்கரையில் எவரும் எங்களைக் கவனிக்காத தருணத்தில் நானும் கிழாரும் சாக்கியரின் மாளிகைக்குச் சென்றோம். அங்கே அந்தச் சிறுவனின் தாய்வழிப் பாட்டியார் தனியே வசித்து வந்தார். அவரிடம் விசாரித்ததில் சாக்கியர் குடும்பத்திற்கும் சாலைக்கும் ஒரு காலத்தில் நிலவி வந்த நெருக்கம் ஓரளவிற்குத் தெளிவாயிற்று.

கழிக்குடியில் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை முதன்முதலில் துவக்கப்பட்டபோது அது சாக்கியர் குடும்பத்திற்குச் சொந்தமான நிலத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பின்னால் மருந்துவாழ் மலையடிவாரத்திற்கு இடம் பெயர்ந்து விட்டாலும் சாக்கியர் குடும்பத்தார் தொடர்ந்து சாலையாசான்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்திருக்கிறார்கள். தமது குடும்பத்துப் பிள்ளைகளை சிறு பிராயத்தில் சாலைப் பயிற்சிக்கு அனுப்பும் பழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் உடல் நன்கு பக்குவமடைந்து ஆடலுக்கு ஏற்றதாக ஆகுமென்று அவர்கள் நினைத்தார்களாம்.

பேச்சுவாக்கில் அந்த முதிய பெண்மணி கூறிய வேறொரு விபரம்தான் எங்களின் கவனத்தை மிகவும் கவர்ந்தது. அது என்னவெனில், சாலை முதன்முதலில் துவங்கப்பட்டபொழுது சாக்கியர் குடும்பத்தாருக்குத் தமது நன்றியைத் தெரிவிக்கும் முகமாக ஆசான் ஸ்ரீமாற நம்பூதிரி அவர்களுக்குச் 'சரஸ்வதி கங்காணியார்' எனும் பட்டப்பெயரைச் சூட்டி அதனைச் செப்புப் பட்டயத்திலும் வடித்துக் கொடுத்துள்ளார். வழிவழியாக அந்தப் பெயரை அவர்களும் சூட்டி வந்துள்ளனர். அந்தப் பட்டயத்தின் அர்த்தமோ முக்கியத்துவமோ அந்த முதிய பெண்மணிக்குத் தெரியவில்லை. ஆனால் கேட்ட மாத்திரத்தில் அது என்னவென்பது எங்களிருவருக்கும் விளங்கிவிட்டது. உனக்கு அது விளங்குகிறதா அம்மா?"

உதடுகளில் கேள்வியுடன் முகத்தில் ஒரு முறுவலுடன் பேச்சை நிறுத்திக் கொண்டு தம்புராட்டியாரைத் தமது சிறிய கண்களால் உற்று நோக்கினார் ஆச்சாரியர்.

சரஸ்வதி கங்காணியார்! சரஸ்வதியைக் கண்காணிப்பவர் என்று பொருள்படும் பட்டம். சரஸ்வதி

என்பவள் யார்? அறிவுத் திருமகள். ஞானத்தின் செல்வி. அறிவுத் திருமகளைக் கண்காணிப்பவரெனில்..

"சரஸ்வதி கங்காணியார் என்றால் சரஸ்வதி பண்டாரத்தின் கண்காணிப்பாளர்கள் என்று பொருள்!" என்றார் தம்புராட்டியார் தயக்கமின்றி.

"மிகவும் சரியாகச் சொன்னாயம்மா. ஆக அந்தக் குடும்பத்தார் பொறுப்பில்தான் சாலையின் ஸ்ரீ பண்டாரம் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும். போர்க்காலங்களில் சாலை நேரடியாகத் தாக்கப்படும் வாய்ப்புள்ளதால் ஆசான் ஸ்ரீமாற நம்பூதிரி சாலையின் பண்டைய கிரந்தங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இம்மாதிரியான ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும் என்பது எங்களுக்குப் புரிந்தது. இந்தப் பணியை மேற்கொள்வதற்காக அவர்களுக்குச் சிறு நிவந்தமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

முப்பது வருடங்களுக்கு முன் சாலையின் ஆசானுக்கும் சாக்கியர் குடும்பத்தாருக்கும் ஏதோ மனஸ்தாபம் ஏற்படவே இருவருக்குமான தொடர்பு மெல்ல அறுந்துவிட்டது. அத்துடன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த நிவந்தமும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதனால்தான் அந்தச் சிறுவனால் சாலையில் முறையாகச் சேர்ந்து களரி அப்யசிக்க முடியவில்லை. கடற்கரையில் நாங்களிருவரும் பயிற்சி செய்வதை மூதாட்டியார் கவனித்துவிட்டு அந்தச் சிறுவனை எங்களிடம் அனுப்பியுள்ளார்.

நாஞ்சில் ஆசானுக்கு இந்தக் குடும்பத்தைப் பற்றிய விபரங்கள் தெரிந்திருக்குமா? அப்படியிருந்தால் சரஸ்வதி பண்டாரத்தை இவர்கள் மூலம் கண்டறிய அவர் ஏன் முயற்சியெடுக்கவில்லை? ஒருவேளை இதன் பொருட்டுத் தான் சாலைக்கும் சாக்கியர் குடும்பத்தாருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்குமா? என்று பல கேள்விகள் எங்களின் மனதைக் குடைந்துகொண்டிருந்தன.

பல்வேறு யோசனைகளுக்குப் பின் நேரடியாக இது பற்றி ஆசானிடமே கேட்டுவிடுவது என்று முடிவு செய்து அவரைத் தனிமையில் சந்தித்தோம். நாங்கள் கண்டறிந்த செய்திகள் முதலில் அவருக்குச் சிறிதளவு உற்சாகத்தை ஏற்படுத்தினாலும் சிறிது நேரத்திலேயே பெரும் கவலையை உண்டாக்கிவிட்டன.

'மிகவும் சிரமப்பட்டு விபரங்கள் சேகரித்திருக்கிறீர்கள். மிக்க நன்றி. ஆனால் இந்த விஷயத்தை இத்தோடு மறந்து விடுங்கள். அதுதான் அனைவருக்கும் நல்லது. சாலையில் கிடைக்கும் இதரக் கிரந்தங்களைக் கொண்டு போட்டிகளை எதிர்கொள்வோம். பூர்வானுபவக் கிரந்தங்களை இனியும் தேட வேண்டாம்!' என்றார் அவர்.

'என்ன ஆசானே இப்படிச் சொல்லிவிட்டீர்கள்? அந்த ஓலைகள் கிடைத்தால் சாலை மாணவர்களுக்குப் பேர்காலத்தில் மிகவும் உபயோகமாக இருக்குமல்லவா?'

'அது நமது கையில் கிடைத்தால் மிகுந்த உபயோகமாகத்தான் இருக்கும். ஆனால் அதற்கு நேர் மாறாக நமது எதிரிகளின் கையில் கிடைத்துவிட்டால்? சொல்ல முடியாத பேரழிவை ஏற்படுத்தும். அதற்கு பதிலாக அந்த ஓலைகள் வெளிப்படாமல் எங்கோ மறைந்திருப்பதே நல்லது.'

'என்ன சொல்கிறீர்கள் ஆசானே? நமது சாலையின் ஓலைகள் எதிரிகளின் கைகளுக்குச் செல்வதாவது?'

'நண்பர்களே! நீங்கள் குறிப்பிட்டதைப்போல நமது சரஸ்வதி பண்டார ஓலைகள் அந்தச் சாக்கியர் குடும்பத்திடமே இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். ஆனால் அவற்றை அந்தக் குடும்பத்தார் நம்மிடம் கொடுக்கப்போவதில்லை. புறத்தாய நாடுவாழியின் மூலம் அவை நேராகக் காந்தளூருக்குத்தான் சென்று சேரும். அதனால் நமக்குப் பல்வேறு அனர்த்தங்கள் விளையுமென்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை.'

'நமக்குரிய ஓலைகளை நம்மிடம் கொடுக்காமல் அவர்கள் நாடுவாழியாருக்குக் கொடுப்பானேன்?'

'சாக்கியர் குடும்பத்தாருக்கும் நாடுவாழிக்கும் உள்ள நெருக்கம் நாடறிந்த செய்தி. இருவருக்குமே இன்று நாம் வேண்டாதவர்களாக நிற்கிறோம். ஒரு காலத்தில் ஆய்வேள் மன்னர்களின் ஆதரவில் நமது சாலை திகழ்ந்தபோது புறத்தாய நாடுவாழிகளும் நம் பக்கம் நின்றார்கள். ஆய்வேளிர் பலம்குன்றிப் போனபின் உருவான அரசியல் சூழலில் நாடுவாழிகள் அனைவரும் வள்ளுவ நாடாழ்வார் தலைமையில் ஒன்றாகத் திரண்டு காந்தளூர்ச் சாலையின் பக்கம் சாய்ந்து விட்டார்கள். அதனால் அவர்களுக்குக் கிடைக்கும் அரசியல் ஆதாயங்கள் அதிகம்.

காந்தளூர் வீரர்களுக்கு எதிராக உங்களுக்கு நான் பயிற்சியளிப்பது புறத்தாய நாடுவாழியாரைக் கோபத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. இந்த முயற்சியைக் கைவிட்டு விடும்படி மத்தியஸ்தர்கள் மூலம் எனக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்தார். நான் அதற்குப் பிடி கொடுக்கவில்லை. இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் நமது பூர்வானுபவக் கிரந்தங்கள் சாக்கியர் குடும்பத்தின் பாதுகாப்பில் இருக்கின்றன என்கிற செய்தி அவரது காதுகளில் சென்று விழுந்தால் என்ன நடக்குமென்பதை சற்றே யோசித்துப் பாருங்கள்.'

ஆசானின் கவலைகள் எங்களுக்குப் புரிந்தன. வருத்தத்துடன் தலைகுனிந்து நின்றோம். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத கதையாக சாக்கியர் குடும்பத்தின் பிடியில் அந்தப் பொக்கிஷம் அகப்பட்டுக் கொண்டது. இத்தனை விளக்கமாகக் கூறியும் ஒரு வேளை நாங்கள் எங்களின் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தால் என்ன செய்வது என்று நினைத்த ஆசான் எங்களிடம் ஒரு சத்தியத்தை வாங்கிக் கொண்டார்.

'நண்பர்களே! புறத்தாய நாடுவாழியின் ஆதிக்கம் இந்தப் பகுதியில் நிலவும்வரை நமது ஓலைகள் வெளிப்படுவது நல்லதல்ல என்பதுதான் எனது உறுதியான கருத்து. நீங்களிருவரும் நான் கற்றுக்கொடுத்த வித்தையின் பெயரால் ஒரு சத்தியத்தை எனக்குச் செய்து தரவேண்டும். என்னிடம் பகிர்ந்து கொண்ட இந்த இரகசியத்தை நீங்கள் என் அனுமதியின்றி ஒருக்காலும் வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. என்றாவது ஒரு நாள் இந்தப் பகுதி புறத்தாய நாடுவாழியின் பிடியிலிருந்து நழுவிச் செல்லும். அப்போது அந்த ஓலைகள் தம்மைத்தாமே வெளிப்படுத்திக் கொள்ளும்!' என்று ஆசான் அந்த விவகாரத்திற்கு அத்துடன் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

புறத்தாய நாடுவாழியின் பிடியிலிருந்து இந்தப் பகுதியை விடுவிக்க இத்தனை காலமாகிவிட்டது. இதற்காகவே அருள் மொழியின் முற்றுகையைச் சிறிது மாற்றியமைக்கவும் வேண்டியதாகி விட்டது. ஹூம்!" என்றொரு நீண்ட பெருமூச்சுடன் நிறுத்தினார் ஆச்சாரியர்.

"அந்தச் சிறுவனின் பெயரைத் தாங்கள் குறிப்பிடவே யில்லையே?"

"ஓ? அவன் பெயரா? அது... ம்... திருமூலன் என்று குறிப்பிட்டதாக ஞாபகம்."

திருமூல சாக்கியர்! நாம் நினைத்தது முற்றிலும் சரி. திருமூல சாக்கியரின் குடும்பம்தான் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் சரஸ்வதி பண்டாரக் கண்காணியாளர்! தெய்வமே! இது நமக்கு முன்னரே தெரியாமல் போயிற்றே.

தம்புராட்டியாரின் பனித்த விழிகள் ஒரு கணம் இறுக மூடிக் கொண்டன. தம் வாழ்வில் விடை காணவே முடியாது என்று நினைத்த பலப்பல கேள்விகளுக்கும் விடையளிப்பதற்காகவே இறைவன் ஆச்சாரியரை இத்தனை தூரம் அனுப்பியிருக்கிறானோ? என்று தோன்றியது.

இரவு முதல் ஜாமம் முடிந்து இரண்டாம் ஜாமம் துவங்கிவிட்ட அந்த அகால நேரத்தில் சாலையின் வாயிலில் ஒருவன் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அவன் மூலம் வெண்பரிசாரத்திலிருந்து ஒரு துக்கச் செய்தி சொல்லியனுப்பப்பட்டிருந்தது. திருமூல சாக்கியர் அன்று மதியம் இறைவனடி சேர்ந்திருந்தார்.

36. கோட்டை முற்றுகை



அழகிய காலை நேரத்தின் முதற் பொழுதில் கிழக்கு வானம் வழக்கத்தை மீறிய எழிலுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அதன் வண்ணச் சேர்க்கைகள் ஒரு தேர்ந்த ஓவியனின் கற்பனைகளை விடப் புதுமையாக அமைந்திருந்தன. மெல்லிய நீலத்தின் பின்னணியில் சரேலென்று ஒரு மஞ்சள் நிறத் தீற்றலும் அதனைத் தொடர்ந்து பல்வேறு அடர்த்தியான செந்நிறத் தீற்றல்களும் குறுக்கே சென்றன. ஆங்காங்கே சில மெல்லிய மேகங்கள் பஞ்சு பஞ்சாகப் பறந்து கொண்டிருந்தன. மகேந்திரகிரியின் உச்சியிலிருந்து விரிந்த அந்தக் காட்சியைப் பௌராணிகர்களின் மொழியில் சொல்ல வேண்டுமானால் 'ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனால்கூட வர்ணிப்பது இயலாத காரியம்'.

கிழக்கு வானுக்கு நேர்க்கீழே ஒரு மலைப்பாம்பைப் போல் நீண்டு வளைந்த மதிலையுடைய ஆரைவாய்மொழிக்

கோட்டையின் கிழக்கு வாயிலுக்கெதிரே சோழப் பெரும் படைகள் அலைகடலெனத் திரண்டிருந்தன. வெவ்வேறு சைனியங்களாகப் பிரிந்து நின்ற அப்படைகளுள் முதல் வரிசையில் ஐம்பது அல்லது அறுபது யானைகளைக் கொண்ட யானையாட்கள் படை[44] அணிவகுத்து நின்றிருந்தது. கணவாயைச் சூழ்ந்திருந்த பசுங்குன்றங்களுக்கு இணையாகக் கருங்குன்றங்கள் போலும் காட்சியளித்த அம்மாபெரும் கஜங்கள் தமது பேராற்றலை ஒடுக்கிக் கொண்டு கால்மாறி ஆடிக்கொண்டிருந்தன. யானைகளின் அம்பாரிகளில் ஆயுதமேந்திய சோழ வீரர்கள் 'நின்றும் இருந்தும்' காணப்பட்டார்கள். கோட்டையின் வாயிலைத் தகர்ப்பதற்கு வலிமை வாய்ந்த விலங்குகளின் உதவி தேவை என்பதால்தான் யானைப்படை முதல் வரிசையில் இடம் பெற்றுள்ளது போலும்.

யானையாட்கள் படைக்குப் பின்னால் ஆயிரக் கணக்கான புரவி வீரர்களின் வரிசை நீண்டிருந்தது. அவ்வீரர்கள் தத்தம் கரங்களில் வாள், வேல், ஈட்டி, கேடயம், மழு முதலான பல்வேறு ஆயுதங்களையும் ஏந்தியிருந்தார்கள். சில வீரர்கள் நீண்ட விற்களைத் தத்தம் தோள்களில் பொருத்தியிருந்தார்கள். அவர்கள்தாம் புகழ் பெற்ற சோழ வில்லியர் படையைச் சேர்ந்த வீரர்கள். அவர்களுள் விற்களை இடது தோள்களில் தாங்கியிருந்த வீரர்கள் சேனையின் வலப்புறத்திலும் வலது தோள்களில் வில்லேந்தியிருந்த வீரர்கள் இடப்புறத்திலுமாக இடம் மாறி நிற்பது வித்தியாசமான காட்சியாகத் தெரிந்தது. ஆனால் எதற்காக என்பதுதான் புரியவில்லை. 'நித்த வினோதர்' என்று பின்னாளில் பட்டப்பெயர் சூடப்போகும் பெருந்தகையின் படைகளல்லவா இவை? அதனால் தான் இத்தகைய வினோதங்களுக்குக் குறைவில்லை போலும்.

புரவிப்படைகளுக்கு மத்தியில் நடுநாயகமாகப் பேரரசரின் இரதமும் அதற்கருகில் சேனாபதியாரின் இரதமும் காணப்பட்டன. இருவருமே கவசங்களும் ஆயுதங்களும் தரித்துக் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள்.

---

[44] சோழர் காலத்தில் இவ்வாறுதான் யானைப்படைகளைக் குறிப்பிட்டார்கள்.

பேரரசர் அருள்மொழிவர்மரின் முகம் சொல்லில் வடிக்கவொண்ணாத வீரக்களையுடன் திகழ்ந்தது. அவரது நெற்றியைத் திருநீறும் செந்நிற வீரத்திலகமும் அழகு செய்தன. கண்கள் அசாத்தியமான கூர்மையுடன் கோட்டையின் சாளரங்களைக் கவனித்துக் கொண்டிருந்தன. முகம் முழுவதும் ஒரு இறுக்கம் பரவிக் கிடந்தது. அதற்குச் சம்மந்தமேயில்லாமல் உதட்டோரத்தில் ஒரு அலட்சியப் புன்னகை பரவியிருந்தது. உறுதியான கரங்களில் நீண்ட வில். ஒன்றொருநாள் திரிபுர அசுரர்களின் கோட்டையைத் தாக்குவதற்காகப் 'பினாகம்' எனும் வில்லேந்தி வந்த சிவபெருமான்தான் மானுட வடிவெடுத்துப் பூமிக்கு வந்து விட்டாரோ எனும்படியான அச்சத்தைக் கிளப்பும் வீரப் பொலிவுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார் சோழர் படைகளின் நாயகர்.

அவரது கம்பீரமான தோற்றத்தில் பண்டைய சோணாட்டுப் பேரரசர்களான கரிகாலரையும் சிபியையும் மனுநீதிச் சோழரையும் மாந்தாதாவையும் கோச்செங்கட் சோழரையும் ஒற்றியூரரையும் விஜயாலையரையும் ஆதித்தரையும் பராந்தகரையும் இராஜாதித்தரையும் ஒருங்கே தரிசித்துப் பூரித்துப் போகிறோம்.

புரவிப்படைகளுக்குப் பின் எண்ணிலடங்காத காலாட் படைகள் காணப்பட்டன. அவர்கள் தத்தம் கரங்களில் ஏந்தியிருந்த எண்ணை பூசிய வாட்களும் வேல்களும் ஆதவனின் கிரணங்கள் பட்டுத் தகதகத்தன.

ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்டிருந்த அம்மாபெரும் படை ஒரே ஒருவரின் கண்பார்வைக்காக ஒரே ஒரு மனிதரின் கையசைவுக்காக ஒரே ஒரு உத்தரவுக்காகப் பொறுமையுடன் ஒரு நாழிகை நேரமாகக் காத்துக் கொண்டிருந்தது. அவர்கள் நின்றிருந்த நிலையில் - ஆயுதங்களைப் பிடித்திருந்த வகையில் - அடுத்து நிற்கும் வீரனிடம் பேச்சுக்கொடுக்காமல் களத்தில் முழுமையாகக் கவனத்தைக் குவித்திருந்த முறைமையில் - ஆற்றொழுக்காக ஒரு பேரொழுக்கம் படிந்திருந்தது. வருடக்கணக்காகச் சோழ தேசத்தின் கடகங்களில் மேற்கொண்ட கடுமையான பயிற்சிகளின் விளைவாகத் தோன்றிய கட்டுப்பாடு அது.

அங்கு நின்ற ஒவ்வொரு வீரனுக்கும் தாய் தந்தையர் இருந்தார்கள். மனைவி மக்கள் இருந்தார்கள். உற்றார் உறவினர் நண்பர் சுற்றம் என்று எல்லாம் இருந்தன. ஆனால்

அந்த உறவுகளையெல்லாம் மீறிய வேறொரு உணர்வு வேறொரு உணர்ச்சி அந்தக் களத்தில் அவர்களை ஆட்கொண்டிருந்தது. சிறு வயதிலிருந்தே சோழதேசத்தின் தாய்மார்கள் பாலுடனும் நீருடனும் சேர்த்துப் பிசைந்து ஊட்டி வளர்த்த உறவு அது. அந்த உறவு அவர்களின் இரத்தத்தோடு இரத்தமாக சதையோடு சதையாக எலும்போடு எலும்பாக அனைத்து நாடி நரம்புகளிலும் ஊடுருவி நின்றது.

இது எம் தேசம். சோழதேசம். இது எம் மக்கள். இவன் எம் தலைவன். எம் தேசத்துக்காக நாம் எதையும் கொடுப்போம். உடல் அழிந்து உயிர் பிரிந்தாலும் மீண்டும் அதே சோழ தேசத்தில் செடியாய்க் கொடியாய் மரமாய்த் தளிராய் மீண்டும் மீண்டும் பிறப்போம்! என்று அந்த வீரன் ஒவ்வோருவனும் தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தான்.

படைகள் அனைத்திற்கும் முன்னால் சோழரின் மிகப் பெரிய புலிக்கொடி பறந்துகொண்டிருந்தது. செம்பட்டுத் துணியில் மஞ்சள் வண்ணப் புலியொன்று இடமிருந்து வலமாக அதில் பாய்ந்து கொண்டிருந்தது. தனியனாக நின்று கொண்டிருந்த புரவி வீரனொருவன் தன் கரங்களில் நீண்டிருந்த பெருங்கழியின் உச்சியில் அதனைக் கட்டி வைத்திருந்தான். எல்லையில்லாத வேகத்துடன் வீசிக் கொண்டிருந்த பெருங்காற்றுக்கு[45] மத்தியில் கொடிக்கழியை நிமிர்த்திப் பிடிப்பதே சிரமமாக இருந்தது.

கோட்டையின் நடமாட்டங்களை வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருந்த பேரரசரின் வலது கரம் சிறிது நேரத்தில் அவரது தலைக்கு மேல் மெல்ல உயர்ந்தது. 'படையெடுப்புத் துவங்கட்டும்!' என்பதற்கான இறுதி உத்தரவு அது.

அவரது இரதத்தின் சாரதி உடனடியாகப் பெருஞ் சங்கமொன்றைத் தனது இதழில் பொருத்தி 'பூம்!' என்றொரு பேரோசை எழுப்பினான். அதனைக் கேட்ட மறுகணம் கொடிவீரனின் கரங்களிலிருந்த புலிக்கொடி வலதும் இடதுமாக அசைக்கப்பட்டது. அவ்வளவுதான்!

---

[45] இன்றும்கூட இப்பகுதியில் காற்றோட்டம் மிக அதிகம்தான். தமிழகத்தின் மிகப் பெரிய காற்றாடி மின் உற்பத்தி நிலையம் இங்குள்ள முக்கடல் பகுதிதான்!

பூமியே அதிர்ந்து போகும்படி அங்கே 'ஹோ!' வென்றொரு பேரிரைச்சல் எழுந்தது. அந்த ஒரு கணத்திற்காகவே காத்திருந்தவர்கள் போல் ஆயிரக் கணக்கான வீரர்கள் 'வெற்றிவேல்! வீரவேல்!' என்று பெருங்கூச்சலிட்டபடி கோட்டையை நோக்கி முன்னேறத் துவங்கினார்கள்.

'குப்'பென்று அந்தப் பகுதி முழுவதிலும் பெரும் புழுதிப்படலம் உண்டாகிக் கண்களை மறைத்தது. அந்தப் புழுதிப்புயலுக்கு நடுவே முதல் வரிசையில் நின்றிருந்த யானைகள் தமது பெருத்த சரீரத்தைத் தூக்கிக் கொண்டு வேகவேகமாக பகவதியம்மன் பெருவாயிலைக் குறிவைத்து முன்னேறுவதைக் காணமுடிந்தது.

* * * * * * * *

கிழக்குவாயிற் பக்கத்திலிருந்து சோழப்படைகள் எழுப்பிய பெருங்கூச்சலையும் அதனைத் தொடர்ந்து வானளாவ எழுந்த புழுதிப்படலத்தையும் கோட்டையின் மேற்கு வாயிலுக்கு தெற்கே சிறிது தூரத்தில் திரண்டு நின்ற சோழர்படைகள் கண்டன. கேட்டன. அந்தப் படைகளுக்குத் தலைமையேற்றிருந்த இராஜராஜப் பல்லவராயர் உடனடியாகத் தமக்கு இரு புறங்களிலும் நின்றிருந்த கம்பன் மணியனாருக்கும் பரமன் மழபாடியாருக்கும் கைகளால் ஜாடை காட்டினார். அடுத்த சில நிமிடங்களில் அந்தப் படையின் வீரர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து நின்றார்கள்.

முதல் சைனியம் மணியனாரின் தலைமையில் கோட்டையின் மேற்குவாயிலை நோக்கித் தாமதிக்காமல் பாய்ந்தது. ஏறக்குறைய ஐந்நூறு அறுநூறு வீரர்களைக் கொண்டிருந்த அந்த சைனியத்தில் முந்நூறு பேர் மட்டும் புரவிகளில் அமர்ந்திருந்தார்கள். மீதமிருந்த காலாட்படை வீரர்கள் அந்தப் புரவி வீரர்களையொட்டிக் கோட்டையின் மேற்கு வாயிலின் மீது குறிவைத்துப் பாய்ந்தோடினார்கள். அந்த சைனியத்தின் அடர்த்தி மிகவும் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருந்தது. அதாவது இரண்டு புரவி வீரர்களுக்கிடையில் விடப்பட்டிருந்த இடைவெளி மிகவும் குறுகியதாகவே காணப்பட்டது.

முதல் சைனியம் கிளம்பிச்சென்ற சில கணங்களில் இரண்டாவது சைனியம் பரமன் மழபாடியாரின் தலைமையில் சிறிதே பின்தங்கிப் புறப்பட்டது.

முதலாவதாகச் சென்ற சைனியத்திற்கு நேர்மாறாக இந்தப் படையின் புரவி வீரர்களுக்கிடையே நல்லதொரு இடைவெளி காணப்பட்டது. இச்சைனியத்தில் காலாட் படை வீரர்களே இல்லை என்பதோடு ஒவ்வோரு புரவியிலும் வீரர்கள் இரண்டிரண்டு பேராக அமர்ந்திருந்தார்கள்.

மீதமிருந்த நூறு நூற்றைம்பது வீரர்களுடன் கடைசியாகக் கிளம்பிய பல்லவராயர் மிதமான கதியில் கோட்டையை நோக்கிப் படைகளைச் செலுத்தலானார். இந்தச் சைனியம் இரண்டிரண்டு புரவிகளைக் கொண்ட நீண்ட வரிசையில் முன்னேறிற்று.

மூன்று சைனியங்களும் கோட்டை வாயிலை நெருங்க நெருங்கத்தான் அந்த வித்தியாசமான வியூகங்களுக்கான காரணம் புரிந்தது.

முதலாவது சைனியம் மேற்கு வாயிலின் பெருங் கதவங்களைக் குறிவைத்துத் தாக்கும் ஒரே முனைப்பில் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆகவேதான் அதற்குத் திரட்சியான வலிமை தேவைப்பட்டது. அவர்களின் குறிக்கோள் அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் குறைந்த பட்சம் கோட்டையின் திட்டிவாசற் கதவையாவது உடைத்துத் திறந்து உள்ளே புகுந்துவிட வேண்டும் என்பதுதான்.

இரண்டாவதாகத் தொடர்ந்த மழபாடியாரின் படை முதல் சைனியத்தின் வீரர்களுக்குப் பின்னால் அவர்களைச் சுற்றி ஒரு வளையம் போல் தன்னை அமைத்துக் கொண்டது. அந்த சைனியத்தின் ஒவ்வொரு புரவியிலும் இரண்டு வீரர்கள் இருந்தார்கள் என்று கூறினோமல்லவா? அவர்களில் ஒருவன் வலங்கையன். அதாவது வலது கரத்தில் வில்லேந்துபவன். அவனால் கோட்டையின் தென்புலத்தை நோக்கி இயல்பாக அம்பெய்ய முடிந்தது. அவனுடன் அமர்ந்து கொண்டிருந்த இரண்டாமவன் இடங்கையன். அவனால் கோட்டையின் வடபுலத்தை வலிமையுடன் தாக்க முடிந்தது. இருவரும் கோட்டை வாயிலின் இரு புலங்களையும் குறிவைத்துத் தாக்கலானார்கள். இவ்வாறாகச் சீரான அம்பு மழை மேற்கு வாயிலின் இருமருங்கிலும் பொழிந்தது. இம்மாதிரியான இடங்கை வலங்கை அமைப்பை நாம் கிழக்கு வாயிலில் திரண்டு நின்ற சோழ வில்லியர் படையினரிடமும் கண்டோம். ஆனால் அதற்கான காரணம் இப்போதல்லவா புரிகிறது!

வள்ளுவநாட்டு வீரர்கள் வில்வித்தையில் சோழர்களினும் சிறந்தவர்கள்தாம். ஆனால் இம்மாதிரியான வலங்கை இடங்கை வழித்தாக்குதல்களை[46] அவர்கள் அதற்கு முன் கண்டதில்லை. ஆகவே அவற்றைச் சமாளிப்பது கடினமாக இருந்தது. மேலும் அவர்களில் கணிசமானோர் கோட்டையின் முக்கிய வாயிலான பகவதியம்மன் பெருவாயிலைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருந்ததால் படைப்பலமும் சொல்லிக் கொள்ளும் படியாக இல்லை. அவர்களின் நிலைமை மெல்ல மெல்ல மோசமாகிக் கொண்டிருந்தது.

வாயிற்தாக்குதலை இவ்வாறு முதல் இரு சைனியங்களும் மேற்கொள்ள, மூன்றாவது சைனியம் கோட்டையின் ஏதாவது ஒரு பலகீனமான - பாதுகாவல் குறைவான பகுதியைக் கண்டறிந்து அங்கே சங்கிலிகள் கோர்த்துச் சாளரங்களின் வழி கோட்டையின் மீதேற வழிபார்த்தபடி முன்னேறிக் கொண்டிருந்தது. அதற்காகவே சிறப்புப் பயிற்சி பெற்ற வீரர்களைக் கொண்டிருந்த படை அது. அவர்களில் இருபது முப்பது பேர் முதலில் மேலேறி விட்டாலும்கூடப் போதும். கோட்டையின் பாடு திண்டாட்ட மாகிவிடும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

* * * * * * * *

பகவதியம்மன் பெருவாயிலை நோக்கிப் பாய்ந்தோடிய ஆனையாட்கள் படை வள்ளுவநாட்டு வீரர்களின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாயிற்று. கோட்டை வாயிலின் மேலிருந்து வெவ்வேறு விதமான அம்புகளும் ஈட்டிகளும் யானைகளின் மீதும் யானைகளின் அம்பாரிகளில் வீற்றிருந்த வீரர்கள் மீதும் வரிசையாகப் பாய்ந்து வந்தன. வீரர்கள் தமது கேடயங்களைக் கொண்டு அவற்றை எதிர்கொள்ளக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

அம்புகள் தாக்கிப் பல வீரர்கள் அப்படி அப்படியே 'சொத்' சொத்'தென்று யானைகளின் மேலிருந்து கீழே

---

[46] வலங்கை – இடங்கைப் பிரிவினைகள் முதன்முதலில் இராஜராஜர் காலத்தில்தான் தோன்றின என்பது கல்வெட்டுக்களின் வழி நிரூபிக்கப்பட்டுள்ளது. இது பின்னாளில் ஜாதிப்பிரிவுகளாக மாறியது.

வீழ்ந்தார்கள். அவர்களை மறந்துவிட்டுத்தான் முன்னேற வேண்டியிருந்தது. யானைகளில் உடல்களில் அம்புகளும் ஈட்டிகளும் பாய்ந்ததால் பெருத்த காயங்கள் ஏற்பட்டன. அவற்றைத் தட்டிக்கொடுத்து முன்செலுத்திக் கொண்டிருந்த பாகர்களும் சமயத்தில் ஈட்டிகளுக்கும் அம்புகளுக்கும் இரையானார்கள்.

இவற்றை எதிர்கொண்டுதானாக வேண்டும். எத்தனை முன்னேற்பாடுகள் செய்தாலும் ஒரு கட்டத்தில் இவ்விதமான நேருக்கு நேர்த் தாக்குதலை சந்தித்துத்தானாக வேண்டும். இழப்புக்களை தைரியத்துடன் ஏற்றுக்கொண்டு தானாக வேண்டும். இதுவே போர்களின் அடிப்படை விதி.

இத்தகைய வலிமையான தாக்குதலைக் கிழக்கு வாயிற்பக்கம் செலுத்தி வள்ளுவநாட்டு வீரர்களின் முழு கவனத்தையும் இங்கே தக்கவைத்துக் கொண்டால்தான் மேற்குவாயிற்பக்கம் திரண்டிருக்கும் சிறிய படையால் கோட்டைக்குள் ஊடுருவ முடியும். அவர்கள் கோட்டைக்குள் புகுந்தால்தான் மேற்கொண்டு ஆரைவாய் மொழிக்கோட்டையை வசப்படுத்துவது பற்றி சிந்திக்கவே முடியும். ஏனெனில் கிழக்கு வாயில் அத்தனை பலம் வாய்ந்தது.

இந்தச் சிக்கலை வள்ளுவ நாட்டாரும் நன்றாகப் புரிந்து வைத்திருந்தார்கள் என்றுதான் தோன்றியது. அதனால்தான் கோட்டைக்கு வெளியே இருபுறங்களிலும் நீண்டிருந்த மலைச்சரிவுகளிலிருந்து பாறைகளை உருட்டி விடுவதற்காக இரகசிய மறைவிடங்களில் காத்திருந்த வீரர்களனைவரையும் மேற்கு வாயிலைப் பாதுகாக்க அனுப்பி விட்டார்கள். அதனால்தான் பாறைகள் உருண்டு வந்து தாக்கும் பேராபத்திலிருந்து சோழர்களின் யானைகளும் படைகளும் தப்பித்தன.

யானையாட்கள் படைகளுக்குப் பின்னால் அணிவகுத்து வந்த வில்லியர் படை கோட்டை வாயிலைச் சுற்றிலும் நின்றுகொண்டு வள்ளுவ நாட்டு வீரர்களின் அம்புகளுக்கு உரிய பதில் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் எண்ணைக் கொப்பரையில் முனைகள் தோய்ந்த தீயம்புகள் அவர்களைத் தாக்கத் துவங்கவே புரவிப்படைகள் பின்வாங்கிச் செல்ல பெரும் கேடயங்கள் தாங்கிய காலாட்படையை முன்னிறுத்த வேண்டியதாயிற்று.

* * * * * * * *

கிழக்கு வாயிற்பக்கம் இத்தனை தாக்குதல்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் இளையவரின் படைகள் மேற்கு வாயிலைக் குறிவைத்து முன்னேறிக் கொண்டிருந்தன. திட்டி வாயிலை நெருங்க நெருங்க எண்ணற்ற அம்புகளும் ஈட்டிகளும் அவர்களை நாலாபுறங்களிலிருந்தும் தாக்கின. மழபாடியாரின் இடங்கை-வலங்கை வில்லிகள் அவற்றைச் சமாளிக்க மிகுந்த முனைப்புடன் எதிர்த்தாக்குதல் நிகழ்த்த வேண்டியிருந்தது. நல்லவேளையாகக் கிழக்கு வாயிலைப்போல் மேற்கு வாயிலில் தீயெறி அம்புகளுக்கான ஏற்பாடுகள் செய்யப் படவில்லை. சாளரங்களும் அத்தனை உயரத்தில் இல்லை. ஆகவே சீரான முயற்சியில் மணியனாரால் மெல்ல மெல்ல வாயிற் கதவங்களை நெருங்க முடிந்தது.

மேற்கு வாயில் வீரர்கள் அனைவரும் இந்த இரு சைனியங்களையும் சமாளிக்கும் முயற்சியில் முழுவதுமாக ஈடுபட்டிருந்ததால் பல்லவராயரால் அதிக எதிர்ப்புக்களின்றி கோட்டையின் தெற்குப் பகுதியை அடைய முடிந்தது. அங்கு வாயில்கள் எதுவுமில்லை. இரண்டு சாளரங்களும் அதனை யொட்டி வளர்ந்திருந்த அடர்த்தியான காட்டு மரங்களுமே கண்களுக்குத் தெரிந்தன.

ஏறுவதற்கு வசதியாகப் பெருத்த அடிப்பாகங்களைக் கொண்டிருந்த அந்த மரங்களின் மீதேறி வேகவேகமாகக் கோட்டையின் சாளரங்களுக்குள் நுழைய முற்பட்ட சோழ வீரர்களை அவசர அவசரமாகத் தடுத்து நிறுத்தினார் படையோடு வந்திருந்த முதிய வீரர் ஒருவர்.

'அவசரப் படாதீர்கள்! இத்தகைய எளிமையான அமைப்பு உங்களுக்கு எந்தவிதமான சந்தேகத்தையும் கொடுக்கவில்லையா? இரண்டே இரண்டு சாளரங்கள். அவற்றை அடைவதற்கு ஏதுவாக வளைந்த கிளைகளுடன் முதிர்ந்து வளர்ந்து நிற்கும் மரங்கள். நிச்சயம் இங்கே ஏதோ ஆபத்து இருக்கிறது!'

அவரது எச்சரிக்கைக்கு உடனடியாக ஒரு மரியாதை கிடைத்தது. வீரர்கள் மரங்களில் ஏறும் முயற்சியை விட்டுவிட்டு அந்தப் பகுதியை ஆராயலானார்கள். அந்தக் காட்டு மரங்களின் மீது மெலிதாகப் படர்ந்திருந்த ஒரு கொடி அவர்களின் கவனத்தைக் கவர்ந்தது. மரங்களினூடே

கவனத்தைக் கவராத வகையில் அனாயசமாகப் படர்ந்திருந்த அந்தத் தாவரம் கோட்டையின் சுவர்களையும் கணிசமாக ஆக்கிரமித்திருந்தது. அந்தக் கொடியின் இலைகள் அந்த முதிய வீரரால் பரிசோதிக்கப்பட்டன.

'இது தென்பாண்டிப் பகுதிகளில் மட்டுமே வளரும் ஒரு விதமான முரட்டுக் கொடி. இதன் இலைகள் உடலில் பட்டால் கடுமையான அரிப்பையும் தடிப்பையும் ஏற்படுத்தும். ஆகவே மரங்களில் மீதேறிக் கோட்டையை அடையும் முயற்சியைக் கைவிட்டு விடுங்கள். கோட்டைச் சுவர்களின் மீது படர்ந்துள்ள கொடிகளை விலக்கிவிட்டு ஏற முயற்சி செய்வோம்.'

தெற்குப் பகுதியின் சாளரங்களிலிருந்து நடப்பவற்றை ஆர்வத்துடன் கவனித்து வந்த இரண்டு வள்ளுவநாட்டுக் காவல் வீரர்கள் சோழ வீரர்கள் மரங்களில் ஏறாமல் கூடி நின்று ஆலோசனை செய்வதை பயத்துடன் கவனித்தார்கள். அந்த முதிய வீரனை இங்கிருந்தபடியே அம்பெய்து கொன்றுவிடலாமா? என்றுகூடத் தோன்றியது. ஆனால் அது சேனையின் கோபத்தைப் பன்மடங்கு பெருக்கிவிடும். உள்ளே நுழைந்தால் தங்களை அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்தெறிந்து விடுவார்கள் எனும் பயம் அந்தக் கொடிய யோசனையைத் தடுத்தாட்கொண்டது.

அங்கிருந்த காட்டுப்பகுதியிலிருந்து நீண்ட கழிகள் சேகரிக்கப்படுவதையும் அவற்றின் உதவியுடன் சோழவீரர்கள் கோட்டைச் சுவர்களில் வளர்ந்திருந்த கொடிகளை எச்சரிக்கையுடன் விலக்கிவிட்டு மேலேறுவதையும் காவலர்கள் கண்டார்கள். இனியும் தாமதிப்பதில் பயனில்லை. சுவர்களில் ஏறிக்கொண்டிருந்த வீரர்களை நோக்கி அவசர அவசரமாகத் தங்களின் ஈட்டியை எறிந்தவர்கள், கோட்டைக் காவற் தலைவனுக்குச் செய்தி சொல்வதற்காகத் தலைதெறிக்க ஓடினார்கள்.

ஆனால் கிழக்கு வாயில் மேற்கு வாயில் ஆகிய இரு பகுதிகளிலுமே உக்கிரமான எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டிருந்த வள்ளுவநாட்டுப் படைகளால் உடனடியாகத் தென்பகுதிக்கு வரமுடியவில்லை. அதனால் பல்லவராயரின் சிறியபடை அதிக எதிர்ப்பின்றிக் கோட்டைக்குள் நுழைந்தது.

உடனடியாக அவர்கள் அந்த இடத்தை விட்டுக் கலைந்தாக வேண்டும். எங்கு செல்வது? கிழக்கு

வாயிலுக்கோ மேற்கு வாயிலுக்கோ சென்றால் அங்கே போரிட்டுக்கொண்டிருக்கும் படைகளை நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டியிருக்கும். அது நல்லதல்ல. அவர்களின் பலம் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. ஆகவே வேறு ஏதாவது உபாயம் செய்து கோட்டைக்குள் குழப்பத்தை விளைவிக்க வேண்டியதுதான்.

ஏதாவது பெரிய மாளிகை அல்லது செங்கல் கட்டிடம் கண்களுக்குத் தட்டுப்படுகிறதா என்று அவர்களின் கண்கள் துழாவின. தன பண்டாரம் அல்லது தானியப் பண்டாரம் கண்களுக்குத் தென்பட்டால்..

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் ஆரைவாய்மொழிக் கோட்டையின் மிக முக்கிய தானியக் கொட்டாரம் நிப்பிடித்துக் கொண்டது.

* * * * * * * *

கவனம் சிதறாமல் ஒரே முனைப்புடன் மூன்று நாழிகைகள் நேரமாகத் தங்களைத் தாக்கிக்கொண்டிருந்த பகவதியம்மன் பெருவாயிற் காவல் வீரர்கள் சட்டென்று ஏதோ குழப்பத்திற்கு உள்ளாகி அங்குமிங்கும் பரபரப்பாக ஓடுவதைச் சோழவீரர்கள் கண்டார்கள். அதற்கான காரணம் புரியவில்லை. என்றாலும் அதுதான் தருணம் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது. இந்த வாய்ப்பைத் தவறவிடுதல் நல்லதல்ல.

மிச்சமிருந்த பலத்தையெல்லாம் ஒன்றுதிரட்டிக் கொண்டு யானையாட்கள் படைகளும் புரவிப்படைகளும் ஒரே மூச்சாகக் கிழக்கு வாயிலைக் குறிவைத்துத் தாக்கின. ஐந்தாறு யானைகள் ஒரு சேரத் தாக்கியும் வைரம் பாய்ந்த கருங்காலி மரக்கட்டைகளால் செய்யப்பட்டிருந்த அந்த வாயிற்கதவங்களைப் பிளக்கவே முடியவில்லை. ஆனால் கதவங்கள் தாக்கப்பட்ட வேகத்தில் அந்த வாயிலுக்குமேல் இரு புறங்களிலும் அமைக்கப்பட்டிருந்த சாளரங்கள் எதிர்பாராத விதமாக கலகலத்து வீழ்ந்தன. அதில் வசதியாக நின்றபடி அம்பெய்து கொண்டிருந்த வள்ளுவநாட்டு வில்லிகள் நிலைதடுமாறிக் கீழே விழுந்தார்கள்!

'அய்யோ! அம்மா!' என்ற வேதனைக் கூக்குரல்கள் கோட்டைக் கதவத்தின் பின்புறத்திலிருந்து எழுந்தன.

மேற்கொண்டு முழு மூச்சாக யானைகளை கொண்டு தாக்கினால் கிழக்குவாயிற் கதவங்களைப் பிளந்து விடலாம்தான். ஆனால் முன்னால் நிற்கும் யானைகள் அனைத்தும் அந்தக் கதவங்களுக்குப் பின்னால் சொருகி வைக்கப்பட்டிருக்கும் ஈட்டிகளால் தாக்குறும். ஏற்கனவே உடலெங்கிலும் இரத்த காயங்களைத் தாங்கி நிற்கும் அவற்றால் மேற்கொண்டு வலிதாங்க முடியாமல் போகலாம். அவற்றுக்குக் கோபம் வந்துவிட்டால் பின்னால் திரும்பிச் சோழப் படைகளையே பதம் பார்த்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சட்டென்று வியூகத்தை மாற்றினார் சேனாபதியார். அதுவரை கோட்டையை முட்டிமோதிக் கொண்டிருந்த யானைகள் சற்றே அமைதியாகிப் பின்வாங்க காலாட் படையின் குறிப்பிட்ட சில வீரர்கள் சடசடவென முன்வந்து தத்தம் இடுப்புகளில தரித்திருந்த பெரும் தாம்புக்கயிறுகளை கோட்டையின் உச்சியை நோக்கி வீசினார்கள். கோட்டை வாயிலின் மீது அமைந்திருந்த இரு பெரும் சாளரங்கள் வீழ்ந்துவிட்டமையால் வாயிலின் இரு பக்கச் சாளரங்களிலும் நின்றபடிதான் வள்ளுவனாரின் படைகள் பதில் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தன.

அந்தப் படைகளின் அம்புமழையை நிறுத்த வேண்டுமானால் வில்லியர் படைகள் இன்னும் உயரத்தில் நின்றாக வேண்டும் என்பது போரின் சகலவிதமான முன்னேற்றங்களையும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த அருள்மொழித்தேவருக்குப் புரிந்தது. அவரது கட்டளை மின்னல் வேகத்தில் நேரடியாக வில்லியர் தலைவனிடம் சென்று சேர்ந்தது. அதனைப் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக அவன் பேரரசரை நோக்கிச் சிரம் தாழ்த்தினான்.

அடுத்த சில கணங்களில் புரவிகளில் நின்று கொண்டிருந்த வில்லி வீரர்கள் சடசடவென்று அவற்றிலிருந்து கீழே இறங்கி தமக்கு முன்னால் நின்று கொண்டிருந்த யானைகளின்மேல் ஏறலானார்கள். அவர்கள் மேலே ஏறுவதற்கு யானையாட்கள் படை உதவி செய்தது. யானைகளின் முதுகுகளில் அமர்ந்திருந்த வீரர்களின் தோள்களில் வில்லிகள் வசதியாக அமர்ந்துகொண்டு வில்லை வளைத்துக் குறிபார்க்கலானார்கள்.

தாம் நிற்கும் மதிலின் உயரத்திற்குச் சமமாக ஏறி நிற்கும் வில்லியரைத் தாக்குவதா? அல்லது கோட்டையின் மீது கயிறுகளை வீசி ஏற முயன்று கொண்டிருக்கும் வீரர்களைத் தாக்குவதா? என்கிற குழப்பத்தில் இரு சாராரையும் மாறி மாறி வள்ளுவநாட்டு வீரர்கள் தாக்க, இரு பக்கங்களிலுமே அவர்களால் ஒருமுகப்படுத்தப்பட்ட தாக்குதலை மேற்கொள்ள முடியவில்லை.

கோட்டையினுள் ஏற்பட்டிருந்த இனம் புரியாத குழப்பம் மேலும் மேலும் பெரிதாகிக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் திடீரென்று எங்கிருந்தோ இராட்சத நெருப்புக் கங்குகள் வானளாவ எழுந்தன. ஓ! எதோ முக்கியமானதொரு இடத்தில் தீப்பற்றிக் கொண்டு விட்டதுபோல் தெரிகிறதே? இது மேற்கு வாயில் வழியாக உள்ளே நுழைந்துவிட்ட சோழப்படைகளின் கை வண்ணமா? அல்லது வேறு ஏதோ அஜாக்கிரதையினால் தீப்பற்றிக் கொண்டுவிட்டதா? எப்படி இருந்தாலும் சரி. பற்றிக்கொண்டுவிட்ட பெருந்தீ அணைக்கப்படும் நிலையில் இல்லை என்பது மட்டும் நிச்சம்.

விடாமல் முயற்சி செய்த தன் பலனாக ஒரு கட்டத்தில் காலாட்படை வீரர்கள் கோட்டை மதிலின் உச்சியில் ஏறி நின்றார்கள். சடசடவென்று அம்புகள் அவர்களைக் குறி வைத்துத் தாக்கின. ஆனால் அதற்குள் ஓரிருவர் கோட்டைக்குள் குதித்து விட்டார்கள்.

அதற்குப் பின் ஒரே களேபரமாகிவிட்டது!

வரிசையாகப் பல வீரர்கள் அதே வழியைப் பின்பற்றிக் கோட்டைக்குள் குதிக்க, அவர்களின் தாம்புக்கயிற்றை எப்பாடுபட்டேனும் அறுத்து விடவேண்டும் என்கிற முனைப்புடன் வள்ளுவநாட்டு வீரர்கள் நெருங்கி வர, யானைகளின் மீது நின்றபடி வில்லியரின் அம்புகள் அவர்களைச் சல்லடையாய்த் தாக்க...

அடுத்த அரை நாழிகை நேரத்தில் பகவதியம்மன் பெருவாயிலின் கோட்டைக் கதவங்கள் சோழர் தாக்குதலுக்குப் பணிந்து தமது வாயைத் திறந்து கொண்டன.

அதற்காகவே மிகுந்த பொறுமையுடன் காத்திருந்த பேரரசரின் இரதம் ஆவேசத்துடன் கோட்டையை நோக்கிப் பாய்ந்தது. அவரைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான

சோழவீரர்கள் வெல்லவே முடியாதென்று கருதப்பட்ட அந்தக் கோட்டைக்குள் வேகவேகமாகக் கால் பதித்தார்கள்.

* * * * * * * *

ஆரைவாய்மொழிக் கோட்டையினுள் அமைந்திருந்த பெரும்பாறை அரண்மனையின் உச்சியில் அமைந்திருந்த மாடத்தில் நின்றபடி நடப்பவற்றை கவனித்து அவ்வப்போது கோட்டைக் காவற் தலைவனுக்கு உத்தரவுகள் வழங்கிக் கொண்டிருந்த வள்ளுவ நாடுவாழியார் சோகம், பெருமிதம், வருத்தம், மகிழ்ச்சி என்று பல்வேறு உணர்வுகளுக்கும் ஆளாகிக் கொண்டிருந்தார்.

வள்ளுவநாட்டு வீரர்களின் வீரமும் துணிவும் கோட்டையின் பலமும் அவருக்குப் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தன. அவர் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே அந்தக் கோட்டையின் பலம் அமைந்திருந்தது. மேற்குவாயிற் பக்கத் தாக்குதல் மட்டும் நடைபெறாமல் இருந்திருந்தால் மேற்குக் கடற்கரைப் பக்கம் சோழர்கள் இறங்கப் போவதை முன்பே கணித்துப் புறத்தாய நாடுவாழியும் வேணாட்டவரும் அவர்களை உரியமுறையில் எதிர்கொண்டிருந்தால்...

இந்தப் போர் நிச்சயம் அவர்களுக்குச் சாதகமாகத் திரும்பியிருக்கும். சோழன் கடுமையான இழப்பைச் சந்தித்துத் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு சொந்த நாட்டிற்குத் திரும்பியிருப்பான்.

ஆனால் விதியை மாற்ற யாரால் முடியும்?

எத்தனையெத்தனையோ ஒற்றர்களைக் கொண்ட பாண்டி நாட்டவரால் இத்தனை பெரிய கடல்வழிப் படையெடுப்பைக் கண்டறிய முடியவில்லை என்பதுதானே நிஜம்? சேரமான் பெருமாளுக்கும்கூட இந்த விஷயம் தெரியாது போலிருக்கிறதே? அவருக்குத் தெரிந்திருந்தால் அவரது அரண்மனையில் உள்ள நமது ஆட்கள் மூலமாகச் செய்தி நம்மையெட்டியிருக்குமே? கண்ணும் கண்ணும் வைத்தாற்போலச் செயல்பட்டுக் கழுத்தறுத்து விட்டான் சோழன்.

இனி என்ன நடக்கும்?

இந்த முற்றுகையைத் தகர்த்து சோழன் ஆரைவாய் மொழிக்குள் நுழைந்துவிட்டாலும் தம்மை வள்ளுவ நாட்டு அரியாசனத்திலிருந்து இம்மியளவும் அகற்றி விடமுடியாது என்பது நிச்சயம். அது அவனது நோக்கமும் அல்ல. ஆனால் இனி நாம் அவனுக்கு அடங்கி நடந்தாக வேண்டும். அவனுக்கு எதிராக நடப்பதென்பது இயலாது. இந்த வயதான காலத்தின் வீணாய்ப்போன விக்கிரமாதித்யனையும் கூர் மழுங்கி நிற்கும் பாண்டியர்களையும் செயல் படாத சோம்பேறியாகிவிட்ட பெருமாளையும் நம்புவதற்கு இவனை நம்பிவிடலாம்தான்.

என்ன, பழைய மரியாதைகள் அவருக்குக் கிடைக்காது. நாடுவாழிகளின் தலைவன் எனும் பட்டத்தையும் துறந்து விட வேண்டியதுதான். சோழனுடைய பல்வேறு குறுநிலத் தலைவன்களில் நானும் ஒருவன். அவன் பெண்டு பிள்ளைக்கு நமது பெண்டு பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்து - வருடாந்திரக் கப்பம் கட்டி -அவன் கேட்கும்போதெல்லாம் நமது படைகளையும் தானியங்களையும் அனுப்பிவைத்து...

எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்காவது ஓடிப்போய் விட்டால் என்ன? என்று ஒரு எண்ணம் வந்துவிட்டுப் போனது.

சேச்சே! நமது பரம்பரையின் மாண்பு எத்தகையது! நாளையே சூழ்நிலை மாறலாம். வடக்கே வேங்கி நாட்டில் ஏதாவது குழப்பமென்று கேள்வி. தொண்டை மண்டலத்தை எவனாவது தாக்கினால் சோழனின் முழுக்கவனமும் அங்கு சென்றுவிடும். மீண்டும் நமது ஆதிக்கத்தை மெல்ல மெல்ல நிலைநாட்டிக் கொள்ளலாம்.

அடக்கடவுளே! அங்கே நாம் காண்பதென்ன? கோட்டையின் தென்மாளிகைக்குள் அமைந்துள்ள தானியக் கொட்டாரத்தில் தீப்பற்றிக்கொண்டு விட்டது போலிருக்கிறதே?

அடடா.. நமது வீரர்களின் கவனம் இதனால் அளவுக்கு மீறிக் கலைந்து கொண்டிருக்கிறது. தானியங்கள் தீக்கிரையாகி விட்டால் உணவுத் தேவையை எவ்வாறு சமாளிப்பது என்கிற பதற்றத்தில் வாயிற்காவலை விட்டுவிட்டுப் பல வீரர்கள் தீயை அணைக்க ஓடிவருவது முட்டாள்தனம். அடேய்! யாரங்கே? தானியங்கள்

எக்கேடாவது கெட்டுப் போகட்டும்! வாயிற் காவலை விட்டு விடவேண்டாமென்று சொல்.

அவர் உத்தரவிட்டுக் கொண்டிருக்கும்போதே 'சடார்!. சடார்..!' என்று பெருவாயிலின் பக்கம் பெருத்த சப்தங்கள் கேட்டன. செங்கல்லும் கருங்கல்லும் மாறி மாறிச் சரிந்து விழ அந்த இடத்திலிருந்து பெருத்த மண்புழுதி கிளம்பியது.

ஆஹா! என்ன அனர்த்தம்! பெருவாயிலின் முன்பக்கச் சாளரங்கள் இரண்டும் தகர்ந்துவிட்டனபோல் தெரிகிறதே? அவை வில் வீரர்களுக்கு மிக முக்கியமானவையாயிற்றே? அந்த இடத்தில் நின்றால்தானே எதிரிப்படைகளை சரமாரியாகத் தாக்கமுடியும்? மிகுந்த வலிமை வாய்ந்த அந்த சாளரங்கள் தகர்ந்தது எவ்வாறு?

"ஐயா!" - வாயிலில் ஒருவன் வந்து நின்றான்.

"என்ன?"

"விக்கிரமாதித்ய வரகுண மகராசர்....." - அவன் சற்றுத் தயங்கி நின்றாற்போலத் தெரிந்தது.

"விக்கிரமாதித்யருக்கு என்ன?"

"ம்... இரகசியக் காட்டுச்சுரங்கப் பாதை வழியாக அவர் வெளியேறிக் கொண்டிருப்பதைக் காவற்தலைவர் தங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்!"

மிக வறட்சியான புன்னகை வள்ளுவனாரின் முகத்தில் வந்து படிந்தது. 'கேட்டிலும் உண்டோர் உறுதி' என்பது இதுதான் போலும்.

"அவனால் வேறென்ன செய்ய முடியும்? ஓடட்டும்! வள்ளுவ நாட்டைப் பிடித்திருந்த பேய் விலகி ஓடட்டும்! ஹா! ஹா! ஹா!"- பேய்ச்சிரிப்புடன் தமக்கு பதிலளித்த வள்ளுவனாரின் நிலையைக் கண்டு பயந்தே போனான் அந்தக் காவலன்.

37. வரவேற்பு



காட்டின் இருளில் உருவான தூய்மையான நீரை மகேந்திரமலையின் உச்சியிலிருந்து அந்த அருவி 'சோ'வென்று ஒரு தாய்மையின் பரிவுடன் வழியவிட்டுக் கொண்டிருந்தது. இடையில் பாறைகளும் செடிகொடிகளும் குறுக்கிட்டதால் அதன் நீர்த்தாரைகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து வழிந்து கொண்டிருந்தன. சற்று தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அந்த மலைச்சிகரமே ஏதோ துக்க சாகரத்தில் மூழ்கிப்போய் இடையறாமல் அழுது கொண்டிருப்பது போன்ற தோற்றத்தைக் கொடுத்தது.

அருவிக்கரையில் கூடியிருந்த பாண்டிப்படைகளின் முகத்தில் வருத்தமும் துக்கமும் எழுதி ஒட்டியிருந்தன. ஆரைவாய்மொழிப் போரில் கலந்துகொண்டு சோழர்களை எதிர்த்து நின்று அந்த முயற்சியில் அவர்களனைவரும் ஒட்டு மொத்தமாக அழிந்தொழிந்திருந்தாலும்கூட அத்தனை பெரிய துக்கம் ஏற்பட்டிருக்காது என்றுதான் தோன்றியது.

சூழ்ந்து நின்ற படைகளின் நடுவே அமரபுஜங்கரும் அவருக்கெதிரில் பாண்டிய இளவலும் அரையன் மானாபரணரும் காணப்பட்டனர். இளவலின் முகம் பாண்டிப் படைவீரர்களைக் காட்டிலும் அதிக துக்கத்தில் மூழ்கியிருந்தது. அவரது கரங்களைப் பற்றித் தேறுதல் கூறும் மனநிலையில் மந்திரியார் தெரிந்தார். ஆனால் பாண்டித் தேவரான அமரபுஜங்கரின் முகம் ஆழ்ந்த வருத்தத்திற் கிடையிலும் ஒரு விதமான மனவுறுதியையும் எதற்கும் அஞ்சாத திண்மையையும் காட்டி நின்றது. இம்மூவருக்கும் அருகில் மகேந்திரகிரியின் பழங்குடி மக்கள் பலரும் கூட்டமாய்க் கூடி நின்றார்கள்.

சற்று நேரத்தில் பாண்டித்தேவர் எழுந்து அருகிலிருந்த பாறையொன்றில் மேல் ஏறி நின்று தம்முடைய இரு கரங்களையும் மேலே உயர்த்தினார். அதுவரை அருவிநீருக்குப் போட்டியாக அங்கு சலசலவென்று எழுந்து கொண்டிருந்த பேச்சுக் குரல்கள் அந்த உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நின்றன. அருவி மட்டும் 'உன்னுடைய

கட்டளைக்கு நான் எதற்காகக் கீழ்ப்படிய வேண்டும்?' என்று கூறாமல் கூறியபடி தன்னுடைய நீரோட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு மெல்லிய செருமலுக்குப் பிறகு கம்பீரமான குரலில் பேசத் துவங்கினார் நெடுஞ்செழியர்.

"அன்னை அங்கயற்கண்ணி அமர்ந்து அருள் பாலிக்கும் பெருமை மிகுந்த பாண்டி நாட்டில் பிறந்த வீராதி வீரர்களே!

கடந்த பல நாட்களாக நம்மை அன்புடன் ஆதரித்து வந்த இந்த மலைச் சிகரங்களையும் இவற்றில் காலகாலமாக வாழ்ந்து வரும் பழங்குடி மக்களையும் பிரிந்து நாம் நமது சொந்த ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் செல்ல இருக்கிறோம். அதற்கு முன் உங்களனைவருடனும் ஓரிரு வார்த்தைகள் பேச வேண்டுமென்று தோன்றியதால் அருவிக்கரைக்கு வரச் சொன்னேன்.

எங்களின் ஒரே ஒரு வாய் வார்த்தைக்கு - ஒரே ஒரு உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நீங்களனைவரும் சில காலங்களுக்கு முன் தாமிரபரணி நதிக்கரையில் திரண்டீர்கள். நம்பிக்கையுடன் இரவு பகலாக உழைத்தீர்கள். குடும்பத்தாரையும் சுற்றத்தாரையும் விட்டுவிட்டுச் சரியான உணவோ உடையோ இன்றிப் பலகாலம் சிரமப்பட்டீர்கள். கிராமங்களிலும் சிற்றூர்களிலும் அலைந்து திரிந்து பழைய ஆயுதங்கள் சேகரித்தீர்கள். அவற்றை உருக்கி உருக்கிப் புதிய ஆயுதங்கள் செய்து கொண்டீர்கள். மிகுந்த சிரமத்துடன் காட்டு வழியில் நடந்து வந்து எதிரிகளைச் சின்னா பின்னமாக்கிவிடும் வேகத்துடன் இங்கே திரண்டீர்கள். உங்களின் இந்த அன்புக்கும் நம்பிக்கைக்கும் என்ன கைமாறு செய்வது என்று திகைத்துப்போய் நிற்கிறேன். இன்றுடன் வீடு திரும்பப் போகும் உங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு நம்மிடம் ஒரே ஒரு பாண்டி மாடை கூட மிச்சமில்லை என்கிற உண்மை மனதைப் பிசைகிறது.

எது நடக்கக்கூடாது என்று நினைத்தோமோ அது நடந்து விட்டது. எவராலும் வெற்றிகொள்ளவியலாது என்று கருதப்பட்ட ஆரைவாய்மொழிக்கோட்டை நேற்று சோழர் படைகளிடம் வீழ்ந்து விட்டது. அத்துடன் வள்ளுவ நாடும் அவர்களுக்கு அடிமைப்பட்டுவிட்டது. இன்றோ நாளையோ புறத்தாய நாடும் வீழ்ந்து விடலாம் என்று

கேள்விப்படுகிறேன். வேணாட்டின் நிலையும் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை.

இந்தப் போரில் கலந்து கொள்ளாமலே நாம் ஒரு வகையில் தோற்று விட்டோம். இது எதனால்? என்று உங்களில் பலருக்கும் கேள்விகள் எழலாம். இத்தனை தூரம் படை திரட்டிக்கொண்டு வந்தது இத்தனை முயற்சியுடன் வாள்களையும் வேல்களையும் ஈட்டிகளையும் கம்புகளையும் தயாரித்துக்கொண்டு வந்தது வெறும் கையுடன் திரும்புவதற்கா? இப்படிக் கோழைகளாய் நாடு திரும்புவதற்கு பதில் போரில் கலந்து கொண்டு முடிந்தவரை எதிரிகளைப் பரலோகத்திற்கு அனுப்பிவிட்டு நாமும் ஒட்டு மொத்தமாக வீரசொர்க்கம் எய்தியிருக்கலாமே? என்று வினவலாம். வீரத்தழும்புகளும் காயங்களுமின்றிக் களத்திலிருந்து திரும்பச் செல்லும் நாம் இனி எவ்வாறு நம் பிள்ளை பெண்டுகள் முகத்தில் விழிப்பது? என்று நீங்கள் ஐயுறலாம்.

பாண்டி மண்டலத்தின் வீராதி வீரர்களே! மிகுந்த யோசனைக்குப் பிறகே இந்தப் போரில் கலந்துகொள்ள வேண்டாம் என்கிற முடிவை நாம் எடுத்தோம். இதனால் உங்களுக்கு மட்டுமல்லாது எமக்கும் பாண்டிய குலத்திற்கும்கூட மிகக் கொடிய பழிச்சொல்லும் அவப்பெயரும் ஏற்படும் என்பதும் நாம் அறிந்ததே. சோழனின் அரசவைப் புலவர்கள் பட்டயங்களிலும் பாட்டுக்களிலும் நம்மைக் கேலி பேசுவார்கள். 'இராஜ ராஜனை எதிர்க்க வந்த அமரபுஜங்கன் நெடுஞ்செழியன் சோழப் படைகளின் ஆர்பரிப்பைக் கண்டு பயந்து போய் எங்கோ காடுகளிலும் மேடுகளிலும் ஒளிந்து கொண்டான். சோழவேந்தன் ஆரைவாய்மொழிக்கோட்டை தனக்கே உரியதென தண்டாட்கொண்டான்' என்றெல்லாம் கற்பனைகளுக்கு ஏற்றார்போல் எழுதி வைப்பார்கள்[47]. தட்ஷிண தேசத்தின் பிற்காலச் சந்ததியரும் அதுவே உண்மையென்று நம்பினாலும் நம்புவார்கள்.

ஆனாலும் இந்தச் சிரமமான முடிவை நாம் எடுத்தோம். ஏனெனில் நீங்களும் நாமும் உயிர் பிழைத்திருப்பது முக்கியம். போரில் முழுமூச்சாகக் கலந்துகொண்டு

---

[47] பாண்டியரின் கூற்று பின்னாளில் உண்மையாகிப் போனதைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் வழி அறியலாம்.

நாமனைவரும் நேற்றோடு வீரசொர்க்கம் புகுந்திருந்தால் பாண்டிநாடு இனி எழுந்திருக்கவே முடியாத மோன நிலைக்குச் சென்றிருக்கும். பாண்டி மண்டலம் என்பதே ஒரு பண்டைய வரலாறாக எங்கோ எப்பொழுதோ வாழ்ந்து மறைந்த மக்கள் தொகையாக மண்ணோடு மண்ணாக மறைந்து போயிருக்கும்.

இன்று நீங்களும் நாமும் பிழைத்திருப்பதால் பாண்டி மண்டலமும் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது. நிலப்பரப்பாக இல்லாவிடினும் ஒரு உயிர்ப்பரப்பாக இன்று நாம் பாண்டி மண்டலத்தைக் காணுகின்றோம். உங்களின் கண்களில் தெறிக்கும் ஒளியில் உங்களின் மனதில் குடிகொண்டிருக்கும் வீரத்தில் உங்கள் உடலில் ஓடிக்கொண்டிருக்கும் உதிரத்தில்.. பாண்டி இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த உயிர்ப்பரப்பிலிருந்துதான் நாளை நமது இனமும் உயிர்த்தெழும்.

பாண்டி மறவர்களே! இந்த இடத்திலிருந்து கலைந்து செல்லுகையில் மனதில் சில முடிவுகளுடன் செல்லுங்கள். இந்தப் பாண்டி மண்டலத்தைப் பற்றிய சில கனவுகளுடன் சில எதிர்பார்ப்புக்களுடன் திரும்பச் செல்லுங்கள்.

இன்று தோற்று விட்டாலும் நாளை நிச்சயம் வெற்றி பெறுவோம் என்கிற நம்பிக்கையுடன் கலைந்து செல்லுங்கள். பாண்டி மண்டலத்தின் வீரமும் விவேகமும் உங்களின் உடலில் ஓடும் உதிரத்துடன் கலந்து நிற்கிறது. அதனை எவராலும் அழிக்க முடியாது என்கிற உறுதியுடன் கலைந்து செல்லுங்கள். ஆண்டாண்டு காலமாக நமது முப்பாட்டனும் பாட்டனும் வாழ்ந்து மறைந்த நமது பூர்வீக தேசத்தை வேறெவரும் சொந்தம் கொண்டாட முடியாது. அதற்கான உரிமை வெறு எவருக்குமே கிடையாது என்கிற புரிதலுடன் கலைந்து செல்லுங்கள். பாண்டி நாட்டில் உதித்து இந்த மண்ணுக்காக வீழ்ந்து மடிந்த எண்ணற்ற வீரர்களின் ஆவி எந்நேரமும் நமக்குப் பின்புலமாகச் செயல்படும் என்கிற எண்ணத்துடன் கலைந்து செல்லுங்கள்.

இந்த நம்பிக்கைகளை நாற்றுகளாக்கிப் பத்திரமாக உங்களின் இல்லங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். உங்களின் பெண்டு பிள்ளைகளின் மனதில் இவற்றை நீங்கள் வளர்த்து வரவேண்டும். பாண்டி மண்டலத்தின் பண்டைய மரபையும் மாண்பையும் பற்றி அவர்களிடம் எந்நேரமும் பேசிக்கொண்டிருக்க வேண்டும். தமது இனத்தைப் பற்றிய

பெருமித உணர்வு ஓர் ஒளியாக.. நெருப்புக்கீற்றாக.. நம்பிக்கையாக.. அவர்கள் மனதில் அழிந்து விடாமல் எந்நேரமும் இருந்து வரவேண்டும். அந்த ஒளியிலிருந்துதான் நமது தேசம் மீண்டும் உயிர்த்தெழும். முன்னிலும் பலத்துடன் முன்னிலும் திண்மையுடன் முன்னைக் காட்டிலும் அதிக விவேகத்துடன் பாண்டி மண்டலம் மீண்டும் உயிர்த்தெழும்.

வீரர்களே! மானுட இனம் தோன்றிய நாள் முதல் நாமும் இருந்து வருகிறோம். மானுட இனம் அழியும் நாளில்தான் நாமும் அழிவோம். வாழ்க பாண்டி மண்டலம்! வளர்க அதன் புகழ்!"

பாண்டி வீரர்கள் அனைவரும் ஏதோ மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்களைப்போல் அசையாமல் விலகாமல் நிலையாகி நின்றார்கள். அவர்களின் கண்களில் திரண்டு நின்ற நீர் முத்துக்கள்தாம் அவர்களை மனிதர்களாகவே அடையாளம் காட்டின. அவர்களுக்கு விடைகொடுக்கும் நோக்கில் பாண்டித்தேவர் தமது கரங்களைக் கூப்பி நின்றார். அந்த நிலையில்கூட அவரது கம்பீரமான தோற்றத்தில் சிறிதளவுகூடத் தளர்வோ தொய்வோ காணப்படவில்லை என்பதைச் சடையமாறர் ஆச்சரியத்துடன் கவனித்தார்.

* * * * * * * *

ஆரைவாய்மொழிக்கோட்டை சோழரின் தாக்குதலுக்கு உள்ளான நான்காம் நாள் மாலை நேரத்தில் கழிக்குடியின் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை எல்லையற்ற கோலாகலங்களால் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. சாலையின் பிரதான நுழைவாயிலைப் பெரும் மாவிலைத் தோரணங்களும் வாழைமரங்களும் பூப்பந்தல்களும் அலங்கரித்தன. எப்போதும் அமைதியின் உறைவிடமாகத் தோன்றும் சாலை வளாகத்தினுள் ஏராளமான சோழவீரர்கள் விறுவிறுப்பாக அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் தென்படும் பிரகாசமும் பேச்சில் வெளிப்படும் குதூகலமும் அந்த வளாகத்தையே உற்சாக வெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தனவெனில் மிகையில்லை. வளாகத்தின் பெருமதிலைச் சுற்றிலும் காவல் வீரர்களின் நடமாட்டமும் கணிசமாகத் தெரிந்தது.

வளாகத்தின் மத்தியில் அமைந்திருந்த இரு கட்டிடங்களுக்கும் எங்கிருந்தோ ஒரு புதிய காம்பீர்யமும்

மிடுக்கும் வந்துவிட்டாற்போல் தெரிந்தது. அவசர அவசரமாக சுவர்களெங்கிலும் அடிக்கப்பட்டிருந்த வண்ணங்கள் இன்னும் முழுமையாகக் காயாததால் ஆங்காங்கே வெளிறியும் ஆங்காங்கே அடர்ந்தும் தெரிந்தன. தென்மேற்கே அமைந்திருந்த களரிவளாகம் மட்டும் அதிக மாற்றங்களுக்கு உட்படாமல் தனக்கேயுரிய எளிமையுடனும் மோனத்துடனும் காட்சியளித்தது. உற்சாக மிகுதியில் வீரர்கள் எவராவது களரிக்குள் நுழைந்துவிடப் போகிறார்கள் என்கிற அச்சத்தினாலோ என்னவோ அந்தக் களரியின் நாற்புறங்களிலும் பிரத்யேகக் காவல் வீரர்கள் தெரிந்தார்கள்.

சிறிது நேரத்தில் அந்தி வானில் ஆதவன் மறையத் துவங்கி விட்டதால் வளாகமெங்கிலும் செந்நிற அகல் விளக்குகளில் நெய்த்தீபங்கள் ஏற்றப்பட்டன. முக்கிய இடங்களில் நெய்ப்பந்தங்களும் சொருகி வைக்கப்பட்டன. ஏற்கனவே மிகுந்த பொலிவுடன் திகழ்ந்துகொண்டிருந்த அந்த வளாகம் விளக்குகளுக்கும் மலர்களுக்கும் மத்தியில் மேலும் அழகுபெற்றுப் பாங்குறக் காட்சியளிக்கலாயிற்று. இத்தனை தடபுடல்களுக்கு மத்தியில் தம்புராட்டியாரையும் பிஷு ஆனந்த தேரரையும் எங்குபோய்த் தேடுவது?

சட்டென்று ஒரு பரபரப்பு வளாகத்தின் வாயிலில் தோன்றியது. பெருஞ்சாலையைக் கழிக்குடியோடு இணைக்கும் பெருவழியில் சற்று தூரத்தில் பெரியதொரு ஊர்வலம் சாலையை நோக்கி வந்து கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணம் என்பதை ஊகிக்க முடிந்தது. 'வந்து கொண்டிருக்கிறார்கள்.. பேரரசரும் மற்றவர்களும் சாலையை நெருங்கிவிட்டார்கள்!' என்று அலறியபடி ஒருவன் செய்தி சொல்வதற்காக கட்டிடங்களை நோக்கி ஓடினான்.

அதுவரை அங்குமிங்கும் அசட்டையாகத் திரிந்து கொண்டிருந்த வீரர்கள் சட்டென்று ஒரு ஒழுங்கிற்கு வந்து சாலை நுழைவாயிலிலிருந்து கட்டிடங்களை நோக்கிச் செல்லும் சிறிய பாதையின் இருமருங்கிலும் அடர்த்தியாக நின்று கொண்டார்கள். அடுத்த சில நிமிடங்களில் பிஷு ஆனந்தரும் தம்புராட்டியாரும் கட்டிடங்களிலிருந்து வெளிப்பட்டார்கள்.

தம்புராட்டியார் தூய வெண்பட்டுத் தரித்துத் தலையில் ஜாதிமல்லி மலர்களினாலான பூச்சரங்கள் சூடி நெற்றியில் சந்தனமும் குங்குமமும் துலங்க கழுத்திலும் கரங்களிலும்

எளிய நகைகள் அணிந்து அழகே உருவெடுத்து வந்தாற்போல் காணப்பட்டார். முதுமை அவரது பேரழகைக் குலைக்காமல் பெரியதொரு சோபையைக் கொடுத்திருந்தது. பார்வையில்லாவிட்டாலும் அவரது அகன்ற மைதீட்டிய விழிகள் அவரை ஏதோ மாய ஓவியன் வரைந்த அப்ஸரஸ்ஸாகவும் தேவகன்னிகையாகவுமே அடையாளம் காட்டின. சேர தேசத்திற்கேயுரிய செழுமையையும் வளமையையும் அவரது தேகம் எடுப்பாக வெளிப்படுத்தி நின்றது. சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால் பார்த்த மாத்திரத்தில் 'இவரும் இராஜகுலத்தில் பிறந்த மாதரசிதான்' என்று எவரும் புரிந்து கொண்டுவிடும் வண்ணம் அவரது தோற்றம் அமைந்திருந்தது.

அவரைக் கைத்தாங்கலாக அழைத்து வந்த பிஷுவின் முகம் வழக்கமாகக் காணப்படும் அமைதியையும் சாந்தியையும் தவிர ஒருவிதமான பெருமிதத்தையும் திருப்தியையும் காட்டி நின்றது. மிகக் கடினமான கடல் யாத்திரையை மேற்கொண்டு காம்போஜ தேசத்திலிருந்து புறப்பட்டு வந்ததற்கான முழுப்பலனையும் அவர் அன்று அனுபவித்துக் கொண்டிருந்தார் என்று கூற வேண்டும்.

இருவருக்கும் பின்னால் கழிக்குடியின் வேதியர் சிலர் பூரணகும்ப மரியாதைகளைத் தாங்கி நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களனைவருக்கும் பின்னால் அமைதியே உருவாக ஆச்சாரியர் மஹாகாசியப தேரர் அடிமேல் அடி வைத்து நடந்து வந்து கொண்டிருந்தார். அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆரவார தடபுடல்களுக்கும் தனக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்பதைப்போல அவரது தோற்றமும் நடையும் அமைந்திருந்தன. அவரது முகவதனத்தில் படர்ந்திருந்த மெல்லிய முறுவல் அவரது எண்ண ஓட்டங்களைப் பிரதிபலித்தது.

சிறிது நேரத்தில் பெருவழியில் வந்துகொண்டிருந்த ஊர்வலம் சாலையின் வாயிலை நெருங்கி விட்டது. ஊர்வலத்தில் நடுநாயகமாகத் தனது பஞ்சலட்ஷணப் புரவியைச் செலுத்திக் கொண்டு வந்த அருள்மொழிவர்மர் மிக நிதானமாகப் புரவியிலிருந்து கீழிறங்கினார்.

சில நாழிகைகளுக்கு முன்னர்தான் கழிக்குடிக் கடற்கரையில் கன்னியாபட்டாரியார் திருக்கோயிலிலும்

அதற்கருகில் அமைந்திருந்த குஹநாதேஸ்வரம் திருக்கோயிலிலும் அவரது வருகையையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு வழிபாடுகளை முடித்துக் கொண்டிருந்தார். ஆகையால் அவரது மேனியெங்கிலும் திருநீறும் இதர திருச் சின்னங்களும் தெரிந்தன.

செவிகளை தேவியின் திருப்பாதங்களில் வைத்து அர்ச்சிக்கப்பட்ட மலர்கள் அலங்கரித்தன. மார்பில் நீண்ட ருத்திராட்ச மாலையும் கண்டிகையும் அவர் எந்நேரமும் அணிந்திருக்கும் முத்துமாலையும் தவழ்ந்து கொண்டிருந்தன. நீண்ட தலைமுடி உச்சியில் கொண்டையாகக் கட்டப் படாமல் பின் கழுத்திற்குக் கீழ் குடுமியாக முடியப்பட்டு அப்புறமும் இப்புறமும் ஆடி அசைந்து கொண்டிருந்தது. உற்று நோக்கினால் அந்தக் குடுமியின் நுனியில் குஹநாதேஸ்வரம் திருக்கோயிலின் வயதான சிவாச்சாரியார் தமது நடுங்கும் கரங்களால் அளித்த ஒரே ஒரு வில்வபத்ரம் முடியப்பட்டிருந்தது. பொன்னாடையொன்று அவரது இடது தோளில் அனாயசமாகப் புரண்டு கொண்டிருந்தது.

பண்டைய ஆய்வேளிர் நாட்டுப் பகுதிகளான வள்ளுவ நாட்டையும் புறத்தாய நாட்டையும் மூன்றே நாட்களில் தனது வீரமிகு தண்டேவி[48] ஒருங்கே ஆட்கொண்ட அந்த நாயகர் அந்த வெற்றியின் செருக்கு லவலேசமும் தென்படாமல் அவருக்கேயுரிய இயல்பான அமைதியுடனும் கம்பிரத்துடனும் சிவசௌலப்யத்துடனும் மெல்ல நடந்து சென்று பெருஞ்சாலையின் திருவாயிலை அடைந்தார்.

வாயிலுக்கருகில் சௌந்தர்ய தேவதையே உருவெடுத்து வந்தாற்போல் நின்று கொண்டிருந்த மாளிகைப்புரத்து தேவியாரையும் பிஷு ஆனந்தரையும் அவரது கண்கள் சந்தித்தன. பிஷு மெல்லிய குரலில் தம்புராட்டியாரிடம் அரசரின் வருகையைத் தெரிவிக்க, அவர் தனது இரு கரங்களையும் கூப்பி முகமன் கூறினார். பதிலுக்கு அரசரின் கரங்களும் புன்னகையுடன் குவிந்தன. பிஷுவின் பின்னால் நின்று கொண்டிருந்த வேதியர்கள் வேதமந்திரங்களை ஓதியபடி பூரண கும்பத்தை அவருக்கு அளிப்பதற்காக முன்வந்தார்கள்.

---

[48] தண்டு ஏவி – அதாவது படைகளை ஏவி.

அந்தக் கும்பத்தைப் பெறுவதற்காக ஓரிரு அடிகள் முன் நகர்ந்த பேரரசர் அப்போதுதான் ஆச்சாரியர் மஹா காரியப தேரர் அவர்களுக்குப் பின்புறம் அமைதியாக நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார். ஒரு சிறிய பதற்றம் அவரது கண்களில் பரவிற்று. அவரைச் சூழ்ந்து நின்ற அவரது சைனியத்தையும் சேனாபதியாரையும் பல்லவராயரையும் தம்புராட்டியாரையும் பிஷுவையும் சாலை வளாகத்தையும்.. ஏன், இந்த ஒட்டுமொத்த உலகத்தையுமே அவர் அந்தக் கணத்தில் மறந்தார். கரங்கள் பொன்னாடையை உடனடியாகக் களைந்து இடுப்பில் கச்சாகத் தரித்தன. கும்பத்துடன் நின்று கொண்டிருந்த வேதியர்களைச் சற்று பொறுக்கும்படி சைகை செய்துவிட்டு விடுவிடுவென்று நடந்து சென்று யோசிக்காமல் ஆச்சாரியரின் பாதங்களைப் பணிந்தார்.

தனது நீண்ட வாழ்வில் சகலவிதமான மேடு பள்ளங்களையும் தரிசித்து இடைவிடாத தியானத்தினால் உலகாயதத்தின் அத்தனை பந்தங்களையும் பற்றுதல்களையும் துறந்து நின்ற ஆச்சாரியரையே அந்தச் செய்கை துணுக்குற வைத்தது. அந்தக் கணத்தில் அவர் கண்களிலிருந்து சோழப்பேரரசர் மறைந்து போக, பலப்பல ஆண்டுகளுக்கு முன் தம்மிடம் ஒரு நாள் தமிழிலக்கணங்களையும் பௌத்தத் தத்துவங்களையும் பயிலுவதற்காக வந்து சேர்ந்த இருபது இருபத்தைந்து வயது பிராயமுள்ள இளைஞன் கண்களுக்குத் தெரிந்தான். அன்றும் இதே போலத்தான் யோசிக்காமல் யார் என்ன வென்று தாம் விசாரிப்பதற்குள் சரேலென்று கால்களில் வீழ்ந்தான். இன்று காலமும் சூழலும் எப்படியெல்லாமோ மாறிவிட்டன. இருந்தாலும் அதே பணிவு. அதே வணக்கம். உங்களுக்கும் எனக்குமிடையிலான குரு-சிஷ்ய உறவில் எந்த மாற்றமுமில்லை. நான் ஒரு நாட்டின் மன்னன்தான். சோழப் பேரரசன்தான். ஆனால் உங்களின்முன் நான் வெறும் சீடன் மட்டுமே என்று கூறாமல் கூறுவதைப்போல..

தங்களைப் பொறுக்கச் சொல்லிவிட்டுப் பேரரசர் எங்கு சென்று கொண்டிருக்கிறார் என்று வியந்துகொண்டிருந்த வேதியர்கள் அவரது இந்தச் செயலால் மெய்சிலிர்த்துப் போனார்கள். அவர்களுள் முதியவர்கள் சிலர் அவரது செயலை வாழ்த்தும் வண்ணம் கரங்களை உயர்த்தி ஆசி கூறினார்கள். மந்திரங்கள் முன்னிலும் கம்பீரமாக முழங்கப் பட்டன. ஆச்சாரியரிடமிருந்து மீண்டு வந்த பேரரசர்

அவர்களின் கும்ப மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு சாலை வளாகத்திற்குள் நுழைந்தார்.

'பேரரசர் இராஜராஜ சோழர்.. வாழ்க! வாழ்க!'

'புறத்தாய நாடுகொண்ட பெருவேள்.. வாழ்க வாழ்க!'

என்று பலவிதமான கோஷங்களைச் சோழவீரர்கள் எழுப்பினார்கள்.

பேரரசரின் தலை மறைவதற்காகவே ஊர்வலத்தின் நடுவில் காத்திருந்த நண்பர்களிருவரும் உடனடியாகத் தம்புராட்டியாரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

'உன்னிகளா! எப்படி இருக்கிறீர்கள்? இரண்டு வாரங்களுக்கும் மேலாகி விட்டனவே உங்களைப் பிரிந்து?' என்று கூறியபடி அவர்களைக் கட்டித்தழுவி உச்சி முகர்ந்தார் தம்புராட்டியார். அந்தக் கணத்தில் இளைஞர்களிருவரும் நிஜமாகவே அவரது குழந்தைகளாகவே தோன்றினார்கள்.

'அம்மா! நீங்கள் இந்த அலங்காரங்களுடன் எத்தனை அழகாயிருக்கிறீர்கள்? இந்தக் கொண்டையும் மலர்களும் நகைகளும் உங்களுக்கு எத்தனை பாந்தமாகப் பொருந்து கின்றன? இனி இவ்வாறுதான் தினமும் தாங்கள் காட்சியளிக்க வேண்டும்' என்றார் இளையவர்.

உடனடியாகத் தம்புராட்டியாரைப் பெரியதொரு வெட்கம் சூழ்ந்து கொண்டது. 'போடா பைத்தியக்காரா! ஏதோ உதயன் வற்புறுத்தினானே என்பதற்காக வயதைப் பார்க்காமல் இத்தனை அலங்காரங்களுடன் வந்து நிற்கிறேன்! தினமும் இவ்வாறு அலங்கரித்துக் கொண்டு நின்றால்.. கழிக்குடியே கைகொட்டிச் சிரிக்கும்!' என்றார் வெடுக்கென்று.

ஆனால் அந்த வார்த்தைகளுக்கு நேர்மாறான முகபாவத்தை அவரது பெண்மை கனிந்த முகம் காட்டிக் கொண்டு நின்றது. 'இத்தனை வயதிலும் நான் அழகாகவா இருக்கிறேன்? இந்த அலங்காரங்களெல்லாம் நிஜமாகவே எனக்குப் பாந்தமாகத்தான் இருக்கின்றனவா என்ன? தினமுமே இவ்வாறு அலங்கரித்துக் கொள்ளலாம் என்றா சொல்கிறாய்?' என்றெல்லாம் அவரது நீண்ட கரிய விழிகள் அவர்களை வினவாமல் வினவிக் கொண்டிருந்தன.

'அம்மா! விழிஞம் கடற்கரையில் வேணாட்டவரை துவம்சம் செய்துவிட்டோம். ஆரைவாய்மொழிக் கோட்டையில் இவர் மேற்கு வாயிலைத் தாக்கிய விதத்தை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். அப்படியே பூரித்துப் போயிருப்பீர்கள்!'

'உன்னிகளா! நீங்களிருவரும் களத்தில் நிகழ்த்திய வீரதீர சாகசங்களை ஏற்கனவே கேள்விப்பட்டேன். என் பெயரைக் காப்பாற்றி விட்டீர்கள். உள்ளே சென்று விபரங்களைப் பேசுவோம். வாருங்கள்.'

38. இராஜராஜப் பெருஞ்சாலை



பெருஞ்சாலை மரியாதைகளை ஏற்றுக் கொண்டு வளாகத்திற்குள் நுழைந்த பேரரசரின் பரிவாரங்களும் இதர இராஜாங்க முக்கியஸ்தர்களும் அங்கே வனையப்பட்டிருந்த பந்தல்களின் கீழ் அமர்ந்துகொள்ள, அருள்மொழிவர்மரும் ஆச்சாரியரும் முதலில் தென்பட்ட கட்டிடத்தினுள் நுழைந்தார்கள். அவர்களைப் பின்பற்றி பிஷுவும் தம்புராட்டியாரும் உள்ளே நுழைய, தம்புராட்டியாரின் பின்னால் வந்து கொண்டிருந்த நண்பர்களிருவரும் தயக்கத்துடன் வாயிலிலேயே நின்றுவிட்டார்கள். பேரரசர் தம்புராட்டியாருடன் அந்தரங்கமாகத் தங்களைப் பற்றிப் பேச விரும்புவார் என்று அவர்கள் புத்திசாலித்தனமாக யூகித்திருந்ததுதான் அதற்குக் காரணம்.

கட்டிடத்தினுள் ஆங்காங்கே மாக்கோலங்கள் வரையப்பட்டு வரிசையாகப் பலாமனைகள் இடப் பட்டிருந்தன. அனைவரும் மனைகளில் அமர்ந்து நீர் பருகி சிரமபரிகாரங்கள் செய்து கொண்டபின் சேடிப்பெண் சம்பங்கியின் காதுகளில் தம்புராட்டியார் எதையோ ஓத, சிறிது நேரத்தில் தொன்னைகளில் அனைவருக்கும் தேங்காய்ப் பாயசம் வழங்கப்பட்டது. நல்ல மலை நாட்டுத் தேங்காய்ப் பாலில் பாகு கரைத்து ஏலக்காய், குங்குமப்பூ முதலான வாசனாதி திரவியங்களுடன் அளவாகக் காய்ச்சப் பட்டிருந்த அதன் சுவை அனைவரையும் சொக்க வைத்தது.

"ஏறக்குறைய இரண்டு திங்களுக்குப் பிறகு இன்றுதான் சற்று ஆசுவாசமாக உணர்கிறேன். பாயசம் பிரமாதம்! எனது அக்கனின் கைப்பக்குவத்தை ஞாபகப்படுத்திவிட்டீர்கள்" என்று புன்னகையுடன் பேச்சைத் துவக்கினார் பேரரசர்.

உடனடியாகத் தம்புராட்டியாரைப் பெரிதாக ஒரு வெட்கம் சூழ்ந்து கொண்டது. பேச்சே எழவில்லை. புன்னகையோடு அவர் தலையைக் குனிந்து கொண்டார்.

"உங்களுக்குச் சோழதேசம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறதம்மா. நான் அனுப்பிய ஓலையை மதித்து எங்கள் வீரர்களிருவரையும் நீங்கள் உயிரைக் கொடுத்துப் பயிற்றுவித்திருக்கிறீர்கள். உங்களின் உழைப்பு வீண் போகாது" என்றார் பேரரசர் மீண்டும். எப்படியாவது தம்புராட்டியாரைப் பேச வைத்துவிட வேண்டும் என்று அவர் உறுதி செய்துவிட்டார் போலும்.

"நானொன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லை. எனக்குத் தெரிந்ததைக் கற்பித்தேன். உன்னிகள் அதனை நன்றாகப் பிடித்துக் கொண்டு விட்டார்கள்."

"தங்களைப் பற்றி எனக்கு எடுத்துரைத்து எமது வீரர்களை உங்களிடம் பயிற்சிக்கு அனுப்பும்படி யோசனை கூறியது ஆச்சாரியர்தாம். தேரரே! கடந்த பல திங்களுக்கு முன் ஒரு நாள் முன்னிரவு நேரம் பதரதிட்ட விஹாரையில் தங்களுடன் நிகழ்த்திய ஆலோசனை எனது மனதில் நிழலாடுகிறது. வேறெவருக்கும் தோன்றாத ஒரு புது வழியை அன்று நீங்கள் எமக்குக் காட்டினீர்கள். தங்களின் எச்சரிக்கைகள் எத்தனை உண்மையானவை, தங்களின் வழிகாட்டுதல்கள் எத்தனை பொருள் பொதிந்தவை என்பதை இன்று நான் முழுமனதாக உணர்கிறேன்!" என்று ஆச்சாரியரை நோக்கித் திரும்பியபடி கூறினார் பேரரசர்.

"அருள்மொழி! இது இவ்வாறுதான் நடைபெற வேண்டுமென்று புத்தபகவான் திருவுள்ளம் கொண்டு விட்டார். அதற்காக உன்னையும் என்னையும் மற்றவர் களையும் உபயோகப்படுத்திக் கொண்டார். அவ்வளவே."

"ஆச்சாரிய! இந்தச் சாலை முன்புபோல் மேன்மையான நிலையை அடையவேண்டுமானால் அதற்குப் பழையபடி சாலாபோகம் தேவை. அதற்காக இந்தப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நிவந்தமாக அளிக்க முடிவு செய்திருக்கிறேன். நாளை திருமந்திர ஓலைநாயகம் மூலம் இதற்கான

ஸ்ரீமுகத்தை அனுப்பி வைக்கிறேன். ஏறக்குறையப் பத்து வேலி[49] நிலங்கள் சாலைக்குச் சாஸனமாக எழுதித் தரப்படும்."

பத்து வேலி நிலங்களா? சாலைக்கு நிவந்தமாகவா? தம்புராட்டியாரால் தமது காதுகளை நம்பவே முடிய வில்லை. இத்தனை வருட காலங்களில் ஒரே ஒரு பொற்காசு கூடப் புறத்தாய நாடுவாழியிடமிருந்து பெயர்ந்ததில்லை. சொல்லப்போனால் சாலைக்கென்று விடப்பட்டிருந்த பழைய நிலங்களைக்கூடக் கோயிலின் பெயரைச் சொல்லி அவர் அபகரித்துக்கொண்டு விட்டார்.

ஆனால் இந்தப் பகுதி சோழர்களின் வசமான மறுகணமே இத்தனை பெரிய நிவந்தம் சாலைக்குக் கிடைத்திருக்கிறது. அருள்மொழிக்குத்தான் ஏத்தனை பெரிய மனது! செயற்கரிய தங்களது திருப்பணியை உத்தேசித்து அரிய பரிசு ஒன்றைத் தங்களுக்குத் தர உத்தேசித்துள்ளோம் என்று ஓலையில் எழுதியிருந்தான். சொன்னபடி செய்து முடித்தும் விட்டான். இவனையா தவறாக நினைத்தோம்?

"உனக்கு மிகவும் பெரிய மனது அருள்மொழி. நீ நீடுழி வாழ்வாய்!" என்று வாழ்த்தினார் ஆச்சாரியர்.

"என் மனதிலுள்ளதைத் தாங்கள் கூறிவிட்டீர்கள். இது மிகப் பெரிய உதவி பேரரசே! இதனை ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை ஒரு போதும் மறவாது" என்று கரங்களைக் கூப்பியபடி மொழிந்தார் தம்புராட்டியார். அவரது குரல் தழுதழுத்தது.

"இத்தனை நிகழ்வுகளுக்குப் பிறகும் இந்தச் சாலையைப் பண்டைய ஆய்வேள் அரசரின் பெயரால் அழைப்பது சரியாக இராது என்று தோன்றுகிறது. இதனை ஸ்ரீ இராஜராஜப் பெருஞ்சாலை என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்!" என்றார் அதுவரை மௌனம் காத்து வந்த பிஷு ஆனந்த தேரர்.

"ஆஹா! அருமையான யோசனை. தம்மை ஆதரிக்கும் பேரரசர்கள் அல்லது திருக்கோயில்களின் பெயரைச்

---

[49] குழி, வேலி முதலான நில அளவைகளை இன்றுவரை காவிரிப் பகுதி விவசாயிகள் உபயோகித்து வருகின்றனர். ஒரு வேலி என்பது 2000 குழி (288000 சதுர அடி).

சூட்டிக் கொள்வதுதான் சாலை மரபு. இராஜராஜப் பெருஞ்சாலை[50] என்கிற பெயரே கம்பீரமாக இருக்கிறது!" என்றார் ஆச்சாரியர் உற்சாகத்துடன்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் குருதேவா. சாலை பழைய பெயரோடே இருந்துவிட்டுப் போகட்டும்" என்று குறிப்பிட்ட அருள்மொழிவர்மர் பேச்சை வேறு திசையில் மாற்ற விரும்பி "நமது வீரர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் பயிற்சிகள் தற்போது எத்தனை தூரம் வளர்ந்திருக்கின்றன? இன்னும் கலமறுக்கும் போட்டிக்கு ஒரு திங்கள்தானே உள்ளது? அதற்குள் மீதமிருக்கும் பயிற்சிகளை முடித்துவிட முடியுமா? போட்டிகளில் பங்குபெறக் காந்தளூரிலிருந்து அழைப்பிதழ் வந்து விட்டதா?" என்று வினவினார். அவர் முகத்திலிருந்த முறுவல் மறைந்து ஒரு கூர்மையும் முனைப்பும் குடிகொண்டன.

"நானளித்த பயிற்சிகளில் இதுவரை இருவரும் நன்முறையில் முன்னேறியிருக்கிறார்கள். ஆனால் கலமறுக்கும் போட்டிகளில் வெற்றிபெற வேண்டுமானால் மேலும் சில கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டாக வேண்டும். அடுத்த ஒரு திங்கள் கவனம் சிதறாமல் அவர்கள் இங்கே களரி அப்யசித்தால்தான் அது சாத்தியமாகும். நான் கொடுக்கும் பயிற்சிகளைத் தவிர காம்போஜ தேசத்து பௌத்தத் தற்காப்புப் பயிற்சிகளையும் உதயன் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று ஆச்சாரியர் அபிப்பிராயப்படுகிறார். அவன் அதற்கு இன்னமும் ஒப்புக் கொள்ளவில்லை. இத்தனைக்கும் மத்தியில் சில புதிய சிக்கல்களும் முளைத்துள்ளன. அவற்றையும் தீர்க்க வேண்டியதாயிருக்கிறது" என்று துவங்கிய தம்புராட்டியார் சாலை மண்ணில் புதையுண்டு கிடந்த பலராம நம்பூதிரியின் அப்யாச கர்மண ஓலைகள் பற்றியும் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் சரஸ்வதி பண்டாரம் பற்றியும் திருமூல சாக்கியர் பற்றியும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

"ஆக நீங்கள் கூறுவதை வைத்துப் பார்த்தால் நமது வீரர்கள் எத்தனை தூரம் சிரமப்பட்டுப் பயிற்சி எடுத்தாலும் அந்த நரசிம்மப் பிரயோகம் எனும் மாபெரும் ஆயுதத்தை

---

[50] கன்னியாகுமரியில் குஹநாதேஸ்வரம் திருக்கோயிலில் அமைந்துள்ள இராஜேந்திர சோழரின் கல்வெட்டுக்கள் இராஜராஜப் பெருஞ்சாலையைக் குறிப்பிடுகின்றன.

எதிர்கொள்ளும் வழியறியாமல் கலமறுக்கும் போட்டிகளில் ஜெயிக்க முடியாது என்று கூறவருகிறீர்கள். அல்லவா?"

"அப்படித்தான் கூறவேண்டும்."

"சாலையில் கிடைத்த ஓலைகளை இன்னமும் படித்துக் கொண்டிருப்பதாகக் கூறினீர்களே? அந்த ஓலைகளில் இதற்கான மாற்றுப் பிரயோகம் இருக்க வாய்ப்புள்ளதா?"

தம்புராட்டியாரின் முகத்தில் சோகக்களை பரவியது. "ஆச்சாரியாரும் நானும் கிடைத்த ஓலைகளில் படிக்கக் கூடிய நிலையிலிருந்த அனைத்தையும் படித்தறிந்து விட்டோம். அந்தப் பிரயோகத்தைப் பற்றி மிகவும் விரிவாகச் சொல்லிச் செல்கிறார் குரு. பண்டைய காலத்திலிருந்தே அதற்கு மிகுந்த முக்கியத்துவம் இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது. ஆனால் துரதிருஷ்டவசமாக அந்தப் பிரயோகத்தை எதிர்கொள்வது பற்றி அவர் உரைத்துள்ள சுலோகங்களின் ஏடுகள் கறையான்களுக்குப் பெரிதும் இரையாகி விட்டன. அவற்றின் துவக்கப் பகுதியும் ஓரிரு வரிகளும்தான் மிச்சமிருக்கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் இரண்டு நாட்களாகத் தவித்துக் கொண்டிருக்கிறோம்."

அவரது மனதில் கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த நிகழ்வுகள் வந்து போயின. அவரும் ஆச்சாரியருமாக பல மணி நேரங்களைச் செலவிட்டு அரும்பாடுபட்டு ஏடுகளின் பிரதிகளை வரிசைப்படுத்திப் படித்தார்கள். நரசிம்ஹப் பிரயோகத்தை 'ந்ருஸிம்ஹ ஆகர்ஷணம்' என்று குறிப்பிட்டு ஆசான் பலராம நம்பூதிரி அந்தப் பகுதியை மிகவும் விளக்கமாகவே எழுதியிருந்தார். அந்த சுலோகங்களின் முதல் வரிகளைத்தான் போருக்குக் கிளம்புவதற்குச் சற்று முன்னால் இளையவர் கம்பன் மணியனார் கண்ணுற்றார் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

"நரசிம்மப் பிரயோகம் பற்றி அப்படி என்னதான் அந்த ஓலைகளில் எழுதியிருந்தது?" என்று வினவினார் பேரரசர்.

அந்தக் கேள்வி தம்புராட்டியாரைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது. சாலையின் மாணவர்களைத் தவிர வேறெவரிடமும் அப்யாச கர்மண ஓலைகளின் இரகசியங்களைத் தெரிவிக்கக்கூடாது என்கிற பண்டைய மரபு அவரது நாவைக் கட்டிப்போட்டது. தன் மீதும் சாலையின் மீதும் இத்தனை அன்புடன் நடந்து கொள்ளும்

பேரரசர் தம்மைத் தவறாக நினைத்துக் கொள்வாரோ என்று அச்சமும் ஏற்பட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போய்க் கண்களில் நீர் முட்டச் சிலையாகி நின்று விட்டார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட ஆச்சாரியர் மஹா காசியபர் கம்பீரமான குரலில் கீழ்க்கண்டவாறு மொழிந்தார்.

"தாயே! உன்னுடைய தயக்கம் எனக்குப் புரிகிறது. நான் சொல்லப்போகும் வார்த்தைகளை மிகவும் கவனத்துடன் செவிமடுப்பாயாக.

ஒவ்வொரு மரபும் ஒவ்வொரு சட்ட திட்டங்களும் குறிப்பிட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட சூழலில் வாழும் மனிதர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டவை. காலச் சுழற்சியில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப அவையும் சில - பல மாறுதல்களுக்கு உட்பட்டவையே. மூல நோக்கங்களைச் சிதைக்காமல் காலத்திற்கேற்றவாறு மாற்றங்களை ஏற்படுத்தும் உரிமையை நமது மூதாதையர்கள் நமக்கு அளித்துவிட்டே சென்றிருக்கிறார்கள். ஆனால் நாம் தான் அவற்றைச் சரிவர உபயோகிப்பதில்லை. மாற்றங்கள் மரபுகளுக்கு எதிரானவை என்று நாமே எண்ணிக் கொள்கிறோம். ஆனால் காலமாற்றங்களுக்கு உட்படுத்தப் படாத எந்த சட்ட திட்டங்களும் மரபுகளும் நாளடைவில் இறுகிப்போய் விலங்காக மாறி விடுவதையும் நாமே காண்கிறோம் அல்லவா?

அப்பியாச கர்மணங்களைச் சாலையின் மாணவர்களைத் தவிர வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்கிற பண்டைய மரபை இன்றைய நிலையில் நீ கையாள முடியாது. கையாளவும் கூடாது. அப்போது நிலவிய சூழலே வேறு. இப்போது நிலவும் சூழலே வேறு.

இந்தச் சாலையின் மீது அக்கறையும் அன்பும் கொண்ட இரண்டு உண்மையான மனிதர்களுடன் இன்று நீயும் நானும் அமர்ந்திருக்கிறோம். நாமிருவருக்கும் இந்தச் சாலையின் மீது எத்தனை உரிமை உள்ளதோ அதே அளவிற்குத் தார்மீக உரிமை இவ்விருவருக்கும் கூட உள்ளது. அருள்மொழியின் உதவியால்தான் நாளை இந்தச் சாலை தலையெடுத்தாக வேண்டும் என்பதையும் உனக்கு நினைவூட்டுகிறேன். ஆகவே தயங்காமல் குருவின் அப்யாச கர்மணச் செய்திகளை

இவர்களுடன் நீ தயங்காமல் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதுதான் முறை என்று நான் நினைக்கிறேன்."

ஆச்சாரியாரின் வார்த்தைகளிலிருந்த உண்மையும் அக்கறையும் தம்புராட்டியாரின் மனதைத் தொட்டன. அவரது முகத்தில் அதுவரை தென்பட்ட தயக்கத்தின் சாயைகள் மறைந்தன.

"உரிய நேரத்தில் தங்களின் வழிகாட்டுதலைப் பெற நான் மிகவும் பாக்கியம் செய்திருக்கிறேன். இதோ! உள்ளே சென்று ஓலைக்கட்டுகளை எடுத்து வருகிறேன். அருள்கூர்ந்து தாங்களே அவற்றைப் படித்துப் பொருள் கூற வேண்டும்" என்று சம்பங்கியின் உதவியுடன் உள்ளே சென்ற தம்புராட்டியார் ஓலைகள் சகிதம் திரும்ப வந்து சேர்ந்தார்.

அடுத்த சில நிமிடங்களில் அந்த அறையில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த விளக்குகளிலேயே மிகவும் உயரமான குத்து விளக்கொன்றின் அருகில் அமர்ந்துகொண்டு ஆச்சாரியார் ஓலைகளைப் படிக்கலானார்.

அத நரஸிம்ஹ–ப்ரயோகோ நிரூப்யதே

"இனி நரசிம்மப் பிரயோகமானது விளக்கப்படும்."

ப்ரஹ்லாதாய புரா ஸமஸ்தஜகதாம்
மாயேச்சயோஹ்ரா ஸங்க்ரஹாத்
ப்ரஹ்லாதாய நதாய ச அதிதிஸுத–
ஆஹ்லாதாய தேவோ ஹரிஹி
பேதும் தைத்யபதிம் ஹிரண்யகசிபும்
ஸ்தம்போதரம் பஞ்ஜயன்
யஹ சக்ரே ப்ரவிதிம் நருஸிம்ஹ–க்ருதிதோ
ஸோயம் ததா கீர்த்யதே

"முன்பு எல்லா உலகத்தின் பெருமகிழ்ச்சிக்காகவும் தனது பக்தனான ப்ரஹ்லாதனிற்காகவும் அதிதியின் மகன்களான தேவர்களின் ஆனந்தத்திற்காகவும் தேவனான ஹரி அவுணர் தலைவனான ஹிரண்யகசிபுவைப் பிளக்க தன் மாயா மற்றும் இச்சா சக்திகளைக் கலந்து நருஸிம்ஹ வடிவோடு தூணின் வயிற்றைப் பிளந்தார். அவருடைய பெயராலேயே இந்தப் பிரயோகம் வழங்கப்படுகிறது."

ஸோயம் பார்கவராமேண
த்ரிவிக்ரமவராய ச போதிதோ
ஹரிரூபேண ப்ரயோகோ ஹிதகாங்க்ஷயா
தேனாபி தீமதா ஸோயம்
ருக்மாங்கதாய பாஸ்வதே
சுனதாயாபி சத்ருக்ன
நாமகேப்யஹ ச போதிதஹ

"ஹரியின் அவதாரமான பரசுராமனால் இந்தப் பிரயோகம் நன்மையை வேண்டும் த்ரிவிக்ரமன் என்னும் சிறந்தவருக்குப் போதிக்கப்பட்டது. அறிவாளியான அவரால் இந்த பிரயோகம் ஒளியுடைய ருக்மாங்கதனுக்கும் சுனதன் மற்றும் சத்ருக்னன் என்னும் பெயருடையோருக்கும் போதிக்கப்பட்டது."

தே அபி சிஷ்யவரேண்யாஹா
ச ஸ்வசிஷ்யேப்யஹ ததுஹு முதா
ப்ராணாபாயாதி–காலேஷு
யத்னரக்ஷயம் ப்ரயோகம்

"சிறந்த சீடர்களான அவர்கள் தங்கள் உயிர் நீங்கும் வேளையில் பெருமுயற்சியோடு காக்கப்படவேண்டிய இந்தப் பிரயோகத்தை தங்களின் சீடர்களுக்கு அளித்தனர்."

ஸந்தி அத்ர நியமாஹா கேசித்
ப்ரயோகே கூட–கர்மணி
ப்ராணாபாயாதி–காலேஷு
ப்ரயோக்தவ்யோ மனீஷிணா

"மிகவும் இரகசியமான இந்த பிரயோகத்தில் சில நியமங்கள் உள்ளன. அறிவாளியான ஒருவன் தன் உயிருக்கு ஆபத்து நேரும் காலத்தில் மட்டுமே இதனைப் பயன்படுத்த வேண்டும்."

ஏவம் ஸந்ததி–ரக்ஷார்த்தம்
ப்ரயோஜ்யோ சாஸ்த்ர–ஜ்ஞானினா
அன்யதா ஸந்ததி–நாசாய
கல்ப்யதே சேதம் அம்ஹஸே

"அவ்வாறே சாத்திரமறிந்த ஒருவன் தன் சந்ததியைக் காப்பாற்ற (அதாவது தனக்குப் பிறந்த குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற) இதனைப் பின்பற்றலாம். இல்லையெனில் இது சந்ததியை அழிக்கும். பாவத்திற்கும் வழிவகுக்கும்."

தஸ்ய அநுபமயோகஸ்ய
நிஷ்க்ருதி: நேஹ வித்யதே
ததாபி கஸ்சன யோகோபி
ஸந்த்ருஷ்டோ ஹி மஹாத்மனா

"இணையற்ற இந்தப் பிரயோகத்திற்கு எதிரான செயல் இல்லை. ஆயினும் ஒரு மஹாத்மாவினால் ஒரு எதிர் பிரயோகம் கண்டறியப்பட்டது."

மூளிக்குளஸமாஹ்வேன
தீமதா தன்வினா புரா
நிருஸிம்ஹாகர்ஷணாக்யஸ்ய
ப்ரயோகஸ்ய சமஹ புனஹ

"முழிக்குளத்தின் பெயருடைய அறிவார்ந்த வில்லாளியினால் (அதாவது மூழிக்குளத்து ஆசானால்) முன்பு நரஸிம்ஹாகர்ஷணம் என்னும் பிரயோகத்தை அடக்கும் முறை கண்டறியப்பட்டது."

ஓலைகளிலிருந்து கண்களை மீட்டுக்கொண்ட ஆச்சாரியார் நிமிர்ந்து பேரரசரைப் பார்த்தார்.

"அவ்வளவுதான் அருள்மொழி. இதற்குப் பிறகு எத்தனை தேடியும் இதன் தொடர்ச்சி கிடைக்கவில்லை."

"நான் எத்தனை துரதிருஷ்டசாலி என்பது இதிலிருந்தே தெரிகிறதல்லவா?" என்றார் தம்புராட்டியார்.

அருள்மொழிவர்மரின் கண்கள் ஒரு முறை மூடின. புருவங்கள் முடிச்சிட்டன. நாசியிலிருந்து பெருமூச்சொன்று ஆழமாக உள்ளிழுக்கப்பட்டு நுரையீரல்களை நிறைத்தது. முகத்தில் எல்லையற்ற சாந்தியும் அமைதியும் படிவதைக் காணமுடிந்தது. கண்கள் அந்த அறை முழுவதும் படிந்திருந்த இருளை மீறி ஏதோ ஒரு தீட்ஷிண்யத்துடன் ஒளிர்ந்தன.

"இது தங்களின் அதிருஷ்டம் அல்லது துரதிருஷ்டம் சம்மந்தப்பட்ட விஷயமல்ல என்றுதான் என் சிற்றறிவிற்குத் தோன்றுகிறதம்மா! இறைவன் நமக்கெதிரே தெரியும் ஒரு சாளரத்தை அடைக்கிறான் என்றால் எங்கோ வேறொரு இடத்தில் அதனைவிடப் பெரிய சாரளமொன்றைத் திறந்து வைத்திருக்கிறான் என்றுதான் அர்த்தம். காரண காரியமற்று இந்த உலகில் எதுவுமே நடப்பதில்லை. சற்று யோசித்துப் பார்த்தால் இந்தப் பண்டைய கிரந்தங்கள் தங்கள் கரங்களுக்குக் கிடைத்ததே ஒரு மிகப் பெரிய அதிசயம்தானே? குறைந்தபட்சம் அந்த பயங்கரத் தாக்குதலுக்கு ஒரு மாற்றுப் பிரயோகம் நிச்சயம் ஒன்றுண்டு என்பதும் அது மூழிக்குளத்து குருவினால் முன்னாளில் கண்டறியப்பட்டது என்கிற உறுதியான தகவலும் இதிலிருந்து கிடைக்கிறதல்லவா?" என்று வினவினார் பேரரசர்.

தம்புராட்டியாரைப் பளிச்சென்று அந்த வார்த்தைகள் தாக்கின. உள்ளுக்குள் ஒரு திரை விலக்கப்பட்டது போல் தோன்றிற்று.

காரண காரியமற்று இந்த உலகில் எதுவுமே நடப்ப தில்லை. இதனை எத்தனையோ முறை எத்தனையோ பேர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் இன்று இந்தக் கணத்தில் அருள்மொழியின் வாய் வார்த்தையாக அது வெளிப்படும்போது ஏனோ நேரடியாக மனதைத் தைக்கிறது. அந்த வாக்கியத்தின் முழுப் பொருளையும் அவன் உணர்ந்து சொல்வதினால் ஏற்படும் விளைவா இது? அல்லது அந்த வார்த்தைகளின் பொருளை உணரும் தகுதியும் மனமும் இன்று தான் நமக்கு வாய்த்துள்ளதா?

அதுவரைத் தன்னைச் சபிக்கப்பட்டவராகவும் துயரங்களை அனுபவிப்பதற்காகவே பிறப்பெடுத்தவராகவும் நினைத்துக் கொண்டிருந்த தம்புராட்டியார் வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் அந்தக் கணத்தில் வேறு கோணத்திலிருந்து பார்க்கத் துவங்கினார்.

உலகில் காரண காரியமற்று எதுவுமே நடைபெறுவதில்லை.

மாளிகைப்புரத்து வீட்டின் மானத்தைக் காக்கப் போகிறேன் என்று கோபாவேசத்துடன் வீட்டை விட்டு ஒருவரிடமும் சொல்லாமல் வெளியேறியது.. வெள்ளாட்டியாக வேடம் பூண்டு காந்தளூரில் வித்தை கற்றது.. குரு

தட்சணையாக அதற்குத் தம்மையே விலையாகத் தந்தது.. வேஷம் வெளிப்பட்டது.. தம்மை நம்பித் தம் வயிற்றில் உதித்த ஜீவனை இழந்தது.. இந்தச் சாலையே கதியென்று கிடந்தது.. வாழ்வின் அந்திம காலத்தில் வந்து சேர்ந்த இரண்டு குழந்தைகளுக்கு வித்தை கற்பித்தது..

இவை எதுவுமே காரண காரியமற்று நடைபெறவில்லை.

நிதானமாக யோசித்துப் பார்த்தால் போராட்டங்கள் நிறைந்த இந்த வாழ்க்கைதான் நமது மன இயல்புக்கேற்றது என்று தோன்றுகிறது. ஏதோ ஒரு நாடுவாழியின் பெயர் தெரியாத தம்புராட்டியர்களில் ஒருத்தியாக அவனது அந்தப்புரத்தில் தலை முதல் கால் வரை அலங்காரம் செய்து கொண்டு அவனுக்காக அன்றாடம் காத்து நிற்கும் பதுமைகளோடு பதுமையாக நாம் நிம்மதியாகவா காலம் கழித்திருப்போம்? சீச்சி! இதெல்லாம் ஒரு வாழ்க்கையா என்று வெறுப்புற்று வெளியில் ஓடிப்போயிருக்க மாட்டோமா?

இன்று எனக்கு என்ன குறை? நம்மைச் சுற்றிலும் அன்புடனும் ஆதரவுடனும் எத்தனை மனிதர்கள்? நமக்கென்று குடும்பம் இல்லைதான். ஆனால் குடும்பம் மட்டும்தான் வாழ்க்கையா? இதோ! வாழ்வையே துறந்து புத்தபெருமானின் பாதாரவிந்தங்களைச் சரணாகதியாக அடைந்த ஆச்சாரியரும் உதயனும் குடும்பத்தைத் துறந்து பொருளற்ற வாழ்வையா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்?

ரேணுகா! இன்று முதல் உன் புலம்பலை விட்டொழித்துவிடு. இறைவன் உன் மனப்போக்குக்கு ஏற்ற வாழ்க்கையைத்தான் கொடுத்திருக்கிறான். ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் பண்டைய ஆசான்களுள் ஒருவராக நீயும் ஒரு நாள் நினைக்கப்படுவாய். வணங்கப்படுவாய். எந்த நாடுவாழியின் பட்டத்தரசிக்கு இந்த மரியாதை கிடைக்கும்? அருள்மொழி உன்னிலும் பிராயத்தில் இளையவன்தான். ஆனால் இன்றைக்கு அவன்தான் உனது கண்களைத் திறந்துவைத்தான். இவன் வெற்றி பெறவேண்டும். உன்னிகள் இந்தப் போட்டிகளில் ஜெயித்தேயாக வேண்டும். அதற்காக உன் உயிரையே கொடுக்கலாம். தவறில்லை.

இத்தனை எண்ணங்களும் மனதை அலைக்கழிக்க மௌனமாகவேயிருந்தார் தம்புராட்டியார். பேரரசர் மேற்கொண்டு பேசிக்கொண்டு சென்ற வாக்கியங்கள் ஏதோ அந்தகாரத்திலிருந்து எழுவதைப்போல் தோன்றின..

"பிராணாபாயம் நேரும் சந்தர்ப்பங்களைத் தவிர வேறு எப்போதும் இந்தப் பிரயோகத்தைப் பயன்படுத்தக்கூடாது என்பதை ஆசான் பலராம நம்பூதிரி எத்தனை அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்! இது எத்தனை முக்கியமான செய்தி? இது எனக்களிக்கும் நம்பிக்கையும் மன எழுச்சியும்தான் எத்தகையன!" என்று வியந்தார் அருள்மொழிவர்மர்.

மஹாகாசியப தேவரின் முகம் ஒரு கணம் மிகவும் இறுக்கமாயிற்று.

"மிகவும் சரியாகச் சொன்னாய் அருள் மொழி! அந்த சுலோகங்களின் மிக முக்கியச் செய்தி மிக முக்கியமான சாராம்சம் அதுவே" என்று கூறிக் கணநேரம் தனது பேச்சை நிறுத்திக் கொண்டவர், ஒரு பெருமூச்சு விட்டுத் தொடர்ந்தார்.

"அந்நாளில் ஆசான் இரவிநீலிக்கு இந்தப் பிரயோகத்தின் பல விபரங்கள் தெளிவாகக் கூறப்பட வில்லை. அனைவரும் வற்புறுத்தியதன் காரணமாக அவர் இதனைப் போட்டிகளின்போது பயன்படுத்த வேண்டிய துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டது. பின்னாளில் அதற்காக மிகவும் வருந்தினார் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் நாராயண பட்டதிரியின் கதையே வேறு. அவர் இந்தப் பிரயோகத்தின் சகல நுணுக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் தெளிவாக அறிந்தவர். இருந்தும்..."

தம்புராட்டியாருக்கு எங்கோ பளீரென்று ஒரு மின்னல் மின்னியது. தலை விறுவிறுவென்று சுழன்றது. கேட்கக் கூடாத செய்தி ஏதோ ஒன்று காதுகளில் வந்து விழப்போகிறது என்று அவரது உள்ளுணர்வுகள் அனைத்தும் அவரை எச்சரித்தன.

"இருந்தும்?"

"இருந்தும் அதனை என் அண்ணனார் மீது பிரயோகித்து அவரது உயிரை மிகவும் கோழைத்தனமாக மிகக் கேவலமாகப் பறித்தார்!" என்று மெல்லிய குரலில் அந்த பயங்கர வாக்கியத்தை முடித்தார் அருள்மொழிவர்மர்.

39. பழங்கணக்கு



அருள்மொழிவர்மரின் உதடுகளிலிருந்து வேதனையுடனும் கோபத்துடனும் வெளிவந்த வாக்கியத்தால் அந்த அறையில் உடனடியாக ஒருவித அதிர்ச்சியும் மிரட்சியும் பரவின. தம்புராட்டியாரின் இதயத்தில் படீரென்று ஏதோ ஒரு நாளம் அறுந்து போனது போன்ற வேதனை உண்டாயிற்று.

அவரா? கடைசியில் இளவரசரின் உயிரைக் குடித்த கொடியவர் அவர்தானா? இது நிஜமா? நம்பவே முடிய வில்லையே? இத்தனை கேவலமான செயலை அவரால் புரியமுடியுமா? தாயே! அத்தனை கொடிய பாவத்தைப் புரிந்தவருக்கா நான் என்னையே கொடுத்தேன்? அவரின் வாரிசையா நான் வயிற்றில் சுமந்தேன்? ஐயோ!

"அரசே! நிஜமாகவா! அடடா.. என்ன துர்பாக்கியம்..!" என்ற பிஷு ஆனந்தரும்மிரண்டு போனார்.

"ஆமாம். இமைகள் மூடாமல் கண்கள் வான் நோக்கி வெறித்துக் கொண்டிருக்க, உடலில் எந்த விதமான காயமுமின்றிக் கொடூரமாக மரணித்துக் கிடந்தார் அண்ணனார். அவரது முகம் மஞ்சள் நிறத்தில் வெளிறி விட்டிருந்தது[51]. கைகளும் கால்களும் ஒரு விதமாக முறுக்கேறிக் கிடந்தன. எத்தனையோ முயற்சி செய்தும் அவற்றை விலக்க முடியவில்லை.

அது ஒரு விதமான மலைநாட்டு வர்மக்கட்டு என்பது மட்டும் புரிந்தது. அப்போது பரமனின் பாட்டனாரான குருகாடி செல்லக்கிழார் ஜீவித்திருந்தார். சோணாட்டில் இவ்விதமான மலைநாட்டு மர்மஸ்தானத் தாக்குதல்களைப் பற்றி நன்றாக அறிந்த ஒரே மனிதர் அவர்தான் என்பதால் வேறு வழியின்றி இரகசியமாக அவரை வரவழைத்தோம். பெருமுயற்சி செய்து உடலை நேராக்கிய கிழார் எனது அக்கன் குந்தவையாரிடம் கண்ணீருடன் மொழிந்த

---

51 'மரணமது ஆகுமுன்னே மஞ்சள் முகம் வான்பார்த்து மயக்கம தாய்' – படு வர்மத் திரட்டு (ஓலைச்சுவடி நூல்), செய்யுள் எண்.5.

வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்தபடி இருக்கின்றன.

"இது மிகக் கொடிய மரணம் தாயே! மிகக் கொடிய மரணம். இது என்னை வீழ்த்திய அதே காந்தளூர்த் தாக்குதல் போலத்தான் தெரிகிறது. ஆனால் அதம கதியில் முழு வேகத்தில் திலர்த்த வர்மத்தின்மேல் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. இதன் வலியை நான் பல காலம் முன்பு உணர்ந்திருக்கிறேன். ஆதித்தனைப் போன்ற பெருவீரனுக்கு இவ்வாறு மரணம் சம்பவித்திருக்கக் கூடாது. சேவூர்ப் போர்க் களத்தில் சுற்றிச் சுழன்றபோது அவன் எதிரிகளிடம் குத்துப்பட்டுச் செத்திருக்கலாம். வீர பாண்டியனைத் துரத்திக்கொண்டு ஓடியபோது பாண்டிய ஆபத்துதவிகளால் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் தான் எவ்வாறு தாக்கப்படுகிறோம் என்பது கூடத் தெரியாமல்.. எதிர்த்தாக்குதல் எப்படிப் புரிவது என்று திகைத்துப் போய் நிற்கும் அந்தக் கணத்தில் பிரயோகத்தின் முழுத் தாக்குதலையும் உள்வாங்கிக் கொண்டு உடலின் உறுப்புக்கள் அனைத்தையும் வேதனை அழுத்த மடிந்து போவது ஒரு வீரனுக்குத் தகாது தாயே! தகாது. இவனது ஆன்மா சாந்தியடைவது கடினம். நெஞ்சில் வாளால் பல முறை கீறிவிட்டு இந்த மாவீரனின் உடலைச் சிதையில் ஏற்றுங்கள்."

அருள்மொழிவர்மரின் கண்கள் வேதனை மிக்க அந்தப் பழைய சம்பவங்களின் துன்பத்தைத் தாங்கமாட்டாமல் இறுக்க மூடிக் கொண்டன.

"அருள்மொழி! தம்புராட்டியாரும் ஆனந்தரும் இந்த விவகாரத்தை அடியிலிருந்து முடிவரை அறிந்தேயாக வேண்டும் என்பதால்தான் அந்தப் பேச்சையே எடுத்தேன். பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து உன்னை வேதனைப் படுத்துவது என் நோக்கமல்ல. என்றாலும் உனக்குச் சிரமமாக இருந்தால்.." என்றார் ஆச்சாரியர் ஆதுரத்துடன்.

"ஆச்சாரிய! பழைய சம்பவங்களின் வேதனை என்னை அழுத்துகின்றனதான். ஆனால் காலப்போக்கில் அவற்றை எதிர்கொள்ளப் பழகிக்கொண்டு விட்டேன். மேலும் துயரத்தில் மரணித்த எனது அண்ணனாரின் ஆன்மாவைப் பூரணமாகச் சாந்தி செய்யக்கூடியதொரு காரியத்தில் மாளிகைப்புரத்துத் தம்புராட்டியாரும் ஆனந்தரும் பரிபூரணமாக ஈடுபட்டுள்ளார்கள். அவற்றைப் பற்றிய

முழுத்தகவல்களையும் வேறு எவர் மூலமோ தெரிந்து கொள்வதைவிட நானே என்னுடைய வாய் மொழியாகக் கூறுவதுதான் முறை. ஆகவே அவற்றைத் தொடர்ந்து கூறிச் செல்கிறேன்.

அண்ணனாரின் இறுதிச் சடங்குகள் நடந்து முடிந்த பிறகு இரண்டு மூன்று திங்களில் மதுராந்தகரை யுவராஜாவாக அறிவிக்க வேண்டிய நெருக்கடி தந்தையாருக்கு ஏற்பட்டது. ஏற்கனவே பெரிதும் புண்பட்டுப் போயிருந்த அவரது உள்ளத்தை மேலும் வேதனைக்குள்ளாக்க விரும்பாத நான் அவரது அனைத்து முடிவுகளுக்கும் மகிழ்ச்சியுடன் கட்டுப்படுவேன் என்று கூறி ஒதுங்கி நின்று விட்டேன். நான் அவ்வாறு இராஜ்ஜியத்தை அலட்சியமாக விட்டுக்கொடுத்திருக்கக் கூடாதென்று பலரும் வற்புறுத்தினார்கள். ஆனால் நான் அவற்றைச் செவிமடுக்கவில்லை.

இரவிதாஸனும் அவனது ஆட்களுமாகச் சேர்ந்து சதி செய்து ஏதோ வர்மத் தாக்குதல் புரிந்து அண்ணனாரின் உயிரைக் குடித்து விட்டார்கள் என்றுதான் பலகாலம் எனது குடும்பத்தார் எண்ணிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக எனது அக்கன் குந்தவையார் இதனை நினைத்துப் பலமுறை வருத்தப்பட்டிருக்கிறார். ஆனால் கிழாரின் வார்த்தைகள் என்னை உறுத்திக்கொண்டேயிருந்தன. பட்டத்து இளவரசரான ஆதித்தரை அவரது திருமெய்க் காவல் வீரர்களை மீறிக்கொண்டு இரவிதாஸனாலோ அவனது கூட்டாளிகளாலோ அத்தனை எளிதாக நெருங்கியிருக்கவே முடியாது. ஆறடி உயரமும் ஆஜானுபாகுவான தோற்றமும் கொண்ட பெருவீரரான அவரை கத்தியின்றி இரத்தமின்றி வீழ்த்துவதற்கு நாங்கள் அறியாத வேறு ஏதோ ஒரு பயங்கர வழிமுறை கையாளப்பட்டிருக்க வேண்டுமென்று எனக்குள் தோன்றிக் கொண்டேயிருந்தது.

உடையார்குடியிலிருந்து விரட்டப்பட்ட பிறகு இரவிதாஸன் தனது சொந்த கிராமத்திற்குச் சென்று விட்டான். ஆனால் அவன் தம்பி பரமேஸ்வரன் மட்டும் சம்மந்தமேயில்லாமல் சில காலம் காந்தளூர்ச் சாலையில் சென்று தங்கியிருந்தான் என்று எனக்குச் செய்தி கிடைத்தது. அப்போதுதான் இவர்களுக்கும் திருநாராயண பட்டதிரிக்கும் ஏதோ ஒரு பெரிய தொடர்பு இருந்திருக்கலாம் என்பது எனக்குப் புரிந்தது. இரவிதாஸன் கூட்டத்தார் மிகவும் சாமர்த்தியமாகக் கொலையின்

ஒட்டுமொத்தப் பழியையும் தாங்களே ஏற்றுக்கொண்டு உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்று தோன்றியது. இந்தக் கட்டத்தில்தான் நம்பூதிரியைக் கொலையில் சம்மந்தப்படுத்தும் முக்கிய ஆவணமொன்று கிடைத்தது. அண்ணனாரின் கொலையில் அவருக்கிருந்த நேரடிப் பங்கும் புரிந்தது.

விஷயத்தைக் கேள்விப்பட்ட சேனாபதியாரும் பல்லவ ராயரும் நமது படைகளைக் கொண்டு ஒட்டுமொத்தச் சாலையையும் சர்வ நாசம் செய்து காந்தளூரில் இருக்கும் அனைவரையும் வெட்டி வீசிவிட வேண்டுமென்று ஆவேசப் பட்டார்கள். நானும் அத்தகைய கடுங்கோபத்தில்தான் இருந்தேன்.

அவ்வாறான கண்மூடித்தனமான தாக்குதல் நடைபெற வேண்டுமென்றுதான் நமது எதிரிகள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். குறிப்பாகப் பாண்டியர்களும் நாடுவாழிகளும் அதனை வெகுவாக எதிர்பார்த்து நமக்கெதிராக ஆரைவாய்மொழியில் படைகளையும் ஆயுதங்களையும் மெல்ல மெல்லக் குவிக்கலானார்கள். தென்மலைநாட்டிற்குள் நில மார்க்கமாக நுழைவதற்கு ஆரைவாய்மொழியை விட்டால் வேறு வழிகள் கிடையாது. ஆக வலிமை வாய்ந்த அந்தக் கோட்டையில் நமது படைகளை எதிர்கொள்வதே சிறந்த பலனைத் தருமென்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

நம்பூதிரியேகூட நமது நேரடியான தாக்குதலையே விரும்பினார். வாளையும் வேலையும் ஏந்திக் கொண்டு படைகளுடன் காந்தளூருக்குப் போயிருந்தால் முதல் மனிதராக முன்னின்று அவர் களத்தில் சந்தோஷமாக உயிரையேகூட விட்டிருப்பார். ஆனால்..”

“ஆனால்?”

“அதற்குப்பின் என்ன ஆகியிருக்கும்? அண்ணனாரின் கொலை விவகாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு பட்டதிரி காந்தளூரின் கதாநாயகனாக மலை நாட்டில் முன்னிறுத்தப் பட்டிருப்பார். நம்பூதிரிக்கும் எனக்குமான பிரச்சனை சோழநாட்டிற்கும் மலை நாட்டிற்கு மிடையே பெரும் போராக உருவெடுத்திருக்கும். நாடுவாழிகள் அனைவரும் சேரமான் பெருமாளுடன் ஓரணியாகத் திரண்டு நின்று ஒரே முனைப்புடன் நம்மை எதிர்த்திருப்பார்கள். அப்போதும் நாம் வெற்றி பெற்றிருக்கலாம்தான். ஆனால் இரண்டு

பக்கங்களிலும் எண்ணிலடங்காத சேதங்கள் ஏற்பட்டிருக்கும். இரு மண்டலத்து மக்களுக்குமிடையில் பிரிக்கப்பெரிய கசப்புணர்வு உருவாகியிருக்கும். அந்தக் கசப்புணர்வைத் தூண்டி விட்டுச் சேர - சோழ எல்லைப் பகுதிகளில் சிறு போர்களையும் பூசல்களையும் பாண்டியர்கள் தொடர்ந்து நடத்திக்கொண்டே யிருப்பார்கள். என்னால் வேறு எங்கும் எதிலும் கவனம் செலுத்தவே முடியாத நிலை உருவாகியிருக்கும். சுருக்கமாகச் சொல்வதானால் இந்தப் பழிவாங்கும் நடவடிக்கையால் நான் வேறு பலவற்றையும் இழந்திருப்பேன்.”

“அவ்வாறான நேரடித் தாக்குதலில் ஈடுபட வேண்டாமென்று தங்களுக்கு அறிவுறுத்தியவர் யார்..?”

“வேறு யார்? மாறாத அமைதியுடன் இங்கே அமர்ந்திருக்கும் ஆச்சாரியர்தான். காந்தளூர் விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய உறுதியான முடிவை எடுப்பதற்கு முன்னதாக ஆச்சாரியாரின் ஆலோசனையைப் பெறவேண்டுமென்று நான் நினைத்தேன். காந்தளூர் பற்றியும் மலைநாட்டுச் சாலை மரபுகள் பற்றியும் இவருக்கிருக்கும் ஞானம் வேறு எவருக்கும் கிடையாது என்பது எனக்குத் தெரியும். எனக்கிருந்த அத்தனை கோபத்திற்கு மத்தியிலும் இவருடைய ஆலோசனையைப் பெறவேண்டுமென்று நான் நினைத்ததே இறைவன் திருவுள்ளம்தான் என்று இப்போது தோன்றுகிறது.

ஆச்சாரியர்தான் இந்த விவகாரத்தை வேறு வகையில் கையாளும்படி ஆலோசனை கூறினார். மலைநாட்டைப் பற்றி அவருக்கிருந்த பூர்வஞானத்தால் இந்தப் பிரச்சனையை முற்றிலும் வேறுவிதமான கண்ணோட்டத்தில் இவரால் அணுக முடிந்தது. மேலும் எங்கள் அனைவரின் கண்களையும் மறைத்த கண்மூடித்தனமான கோபம் இவருக்கில்லாததால் இவரது பார்வையும் தெளிவாக இருந்தது.

காந்தளூர்ச் சாலையின் பின்புலம் பற்றியும் அதன் தலைமையை மலைநாட்டில் நிலைநிறுத்தும் கலமறுக்கும் போட்டிகள் பற்றியும் அதன் அரசியல் தாக்கங்கள் பற்றியும் எங்களுக்குப் புரியும் வகையில் அன்று விரிவாக எடுத்துரைத்தார் ஆச்சாரியர். காந்தளூருக்கும் சோழர்களுக்குமான பிரச்சனை இன்று நேற்று துவங்கிய ஒன்றல்ல. மூன்று தலைமுறைகளுக்கு முன்பே அதற்கான

விதை ஊன்றப்பட்டுவிட்டது என்பதை அன்றுதான் தெளிவாக அறிந்தோம்.

வலியசாலைக் குடும்பத்தின் பிடியிலிருந்து காந்தளூரை விடுவித்து அவர்களைக் கலமறுக்கச்[52] சரியான வழி மலைநாட்டுச் சாலைகளுக்கிடையிலான கலமறுக்கும் போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்டு ஜெயித்துச் சோழ வீரர்களைக் கலநாயகங்கள் ஆக்குவதே. அதுதான் அவர்களுக்குச் சரியான படிப்பினையாக இருக்கும். அந்த வழிமுறையைக் கையாளவில்லையென்றால் நம்பூதிரியின் எல்லையற்ற அகங்காரத்தையும் காந்தளூர்ச் சாலையின் மீது வலியசாலைக் குடும்பத்தாருக்கு இருக்கும் இரும்புப் பிடியையும் வேறு வகைகளில் உடைக்கவே முடியாது! என்றார் ஆச்சாரியர்.

சுருக்கமாகச் சொன்னால் நம்பூதிரியைக் கொன்று சாலையை அழித்து விடுவது எளிது. ஆனால் நம்பூதிரியை வென்று சாலையை அவரிடமிருந்து மீட்டெடுப்பது கடினம். ஆனால் அதுவே நீடித்த பலன்களைக் கொடுக்கும் என்பது எங்களுக்குப் புரிந்தது. நீண்ட வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு ஆச்சாரியாரின் யோசனையை ஏற்பதென்று முடிவு செய்தோம். கலமறுக்கும் போட்டிகளில் பங்கு பெறப்போகும் நமது வீரர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதற்காக பிஷு ஆனந்தரின் மூலம் தங்களின் உதவியை நாடுவதென்றும் முடிவானது.

சரி. பாண்டியர்களின் உதவியுடன் தென்மலைநாட்டில் வள்ளுவ நாடுவாழியார் நமக்கெதிராகக் குவித்து வைத்திருக்கும் படைகளை என்ன செய்வது? நாம் அவர்களைச் சரிவரக் கையாளாவிட்டால் நாளை அவர்கள் சோழநாட்டின் எல்லையோரப் பகுதிகளில் புகுந்து தொல்லைகள் விளைவிக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? மேலும் நாடுவாழிப் படைகளின் ஆதரவு இத்தனை பலமாக இருக்கும்போது காந்தளூரில் கலமறுக்கும் போட்டிகள் நியாயமான முறையில் நடக்குமா என்பதே சந்தேகமாயிற்றே?

---

[52] கலமறுத்தல் என்பதற்குப் பல அர்த்தங்கள் உண்டு. இந்த இடத்தில் நிர்ணயம் செய்து – வில்லங்கம் தீர்த்து என்கிற அர்த்தத்தில் அருள்மொழி வர்மர் இந்தச் சொல்லை உபயோகிக்கிறார் என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஆகவே போட்டிகள் துவங்குமுன் சோழர் படைகள் தென்மலை நாட்டிற்கு அணிவகுத்து வரவேண்டியது அவசியம் என்று தோன்றியது. நாடுவாழிகள் நம்முடன் ஒத்துழைக்கும் பட்சத்தில் கலமறுக்கும் போட்டிகளில் மட்டும் பங்கெடுத்துக் கொண்டு விட்டு அனைவரும் நாடு திரும்பிவிடலாம்தான். ஆனால் அது நடவாத காரியம். அவர்கள் ஒருபோதும் அதனை விரும்பப் போவதில்லை. ஆகவே ஆரைவாய்மொழிக் கோட்டையைத் தாக்கி நாடுவாழியாரின் படைகளை வீழ்த்திவிட்டு உள்ளே புக வேண்டியது அவசியமாகின்றது. அப்போதுதான் சோழர்களின் பலம் அவர்களுக்குப் புரியும். இடைவிடாமல் நம்மை எதிர்க்க முயலும் பாண்டியர்களுக்கும் இது ஒரு பாடமாக அமையும் என்று எண்ணினோம்.

ஆரைவாய்மொழிப் படையெடுப்பை ஒட்டுமொத்த மலைநாட்டுக்கு எதிரான படையெடுப்பாகப் பெருமாள் நினைத்துவிடக் கூடாது என்பதற்காகவே ஆனந்த தேரரை நமது தூதராக அவரிடம் அனுப்பினேன். தென்மலைநாட்டு நாடுவாழிகள் அவருக்குக் கப்பம் கட்டுவதில்லை. அவருக்கு அடங்கி நடப்பதில்லை என்பதால் அவர்களைப் பாதுகாக்க ஆயிரத்தவர் படைகளை அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கில்லை என்பது எனக்குத் தெரியும். மேலும் இது போன்ற படையெடுப்பு நிகழ்ந்தால்தான் தம்முடைய பெருமையை நாடுவாழிகள் உணர்வார்கள் என்றும் பெருமாள் நினைத்திருந்தார். இவ்வாறாக அவர் நாடுவாழிகளுக்கு ஆதரவாகச் செயல்பட மாட்டார் என்பதை ஆனந்தரின் மூலம் உறுதி செய்து கொண்டேன்.

ஆனால் இராட்சத பலத்துடன் வளர்ந்து நிற்கும் ஆரைவாய்மொழிக் கோட்டையை வீழ்த்துவது எங்ஙனம்? எவரும் எளிதில் புக முடியாத அந்தக் கோட்டையின் வலிமையே நாடுவாழிகளின் முக்கிய ஆயுதமல்லவா? நமது படைகளின் ஒரு பகுதி மேற்குக் கடற்கரை வழி வந்து கோட்டை பலவீனமாக இருக்கும் மேற்குப் புறத்திலிருந்து தாக்கினாலொழியக் கோட்டையை வீழ்த்துவது கடினம் என்பது புரிந்தது. ஆகவே அதற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்தோம்.

இந்தப் படையெடுப்பு வெற்றிபெற வேண்டுமாயின் எதிரிகளுக்கு நமது திட்டங்கள் சிறிதும் வெளிப்பட்டு விடக் கூடாது என்பதால் மிகச்சிலரைத் தவிர வேறு எவருக்கும் இந்த விபரங்களைத் தெரிவிக்கவில்லை. மேலும் எதிரிகளைத்

திசை திருப்பத் தவறான ஓலைகளை நமது வீரர்களிடம் கொடுத்தனுப்பி அவை உரியவர்களைச் சென்று சேரும்படியும் பார்த்துக் கொண்டோம். இதில் நமது வீரர்களிருவருக்கும் சிறிது வருத்தம்கூட ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. என்ன செய்வது? போர் என்று வந்து விட்டால் இப்படிப்பட்ட சில வேலைகளையும் செய்துதான் தீரவேண்டியிருக்கிறது."

கணநேரம் இடைவெளி விட்டு நிறுத்தினார் அருள்மொழிவர்மர். அது ஒரு வேண்டாத வேலை என்றுதான் அப்போதே அவருக்குத் தோன்றியது. இப்போதும் அதேதான் தோன்றுகிறது. ஆச்சாரியார் இந்த ஒரு விஷயத்தில் எதிரிகளை மிகவும் குறைவாக எடை போட்டு விட்டார். அந்த ஓலைகளின் நம்பகத்தன்மை நிச்சயம் கேள்விக்குறியாகியிருக்கும். தேவையற்ற சந்தேகங்களையும் அது கிளப்பியிருக்கும். அந்த ஓலைகளில் எழுதியிருந்த அதே செய்தியை உக்கிராணத்து அறையின் வேளக்காரன் மூலம் அவர்களின் நம்பிக்கைக்குரிய கையாளனான பலதேவனின் காதுகளில் சென்று சேர்ப்பித்ததனால்தான் அவர்களால் நமது நேரடிப் படை யெடுப்பை அத்தனை தூரம் உறுதியாக நம்ப முடிந்தது அல்லவா?

இந்தப் படையெடுப்புக்குப் பின் எத்தனையெத்தனை சம்பவங்கள்! எத்தனை காரண காரணங்கள்! எத்தனை மனிதர்கள் இதன் நீரோட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! எத்தனை துரோகங்களையும் தியாகங்களையும் இது பார்த்து விட்டது! உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்யும் பலதேவன் ஒரு புறம். உயிரையும் பொருட்படுத்தாமல் ஒருவரும் நெருங்கவே முடியாத தானைத் தலைவரின் அடையாளத்தை ஏறக்குறையக் கண்டுபிடித்துவிட்ட ஐங்கரன் இன்னொரு புறம்.

நாளை சோழ சாம்ராஜ்ஜியத்தின் கீர்த்தியைப் பாட்டிலும் ஏட்டிலும் எழுதிவைக்கப்போகும் புலவர்களுக் கெல்லாம் இங்கு நடந்த நிகழ்வுகளும் இதில் சம்மந்தப் பட்டிருக்கும் மனிதர்களின் வாழ்க்கையும் தெரியுமா? அப்படியே தெரிந்தாலும் அதனை அவர்கள் ஏட்டில் எழுதத் துணிவார்களா? ஏதோ அருள்மொழிவர்மன் தென்மலை நாட்டிற்குப் போய்ப் போர் தொடுத்தான். பாண்டியனை வென்று போரில் ஜெயித்தான் என்பதை மட்டும்தானே எழுதுவார்கள்? அதனை மட்டும்தானே

சாசனங்களிலும் கல்லிலும் வெட்டுவிப்பார்கள்? மற்றபடி இங்கு நடந்த சம்பவங்களையும் சங்கதிகளையும் பிற்காலத்தில் யாரறிவார்கள்?

இப்படி ஏராளமான எண்ணங்கள் அலைக்கழித்ததால் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தவர் தலையைச் சிலுப்பிக் கொண்டு நிகழ்காலத்திற்கு வந்து சேர்ந்தார்.

"போகட்டும். ஈசனின் அருளால் நினைத்திருந்த காரியங்கள் அனைத்தும் அதிக இடர்பாடுகளின்றி நடந்து முடிந்தன. கடும் முயற்சிக்குப் பிறகு ஆரைவாய்மொழிக் கோட்டையைத் தகர்த்து விட்டோம். மிச்சமிருந்த வள்ளுவநாட்டு வீரர்கள் மலையனூரனுடன் மலைக் காடுகளுக்குள் தப்பியோடி விட்டார்கள். அவர்கள் பாண்டிய வீரர்களுடன் திரும்பி வந்து கோட்டையைத் தாக்கும் அபாயம் இருப்பதால் நமது சேனையில் ஒரு பகுதியுடன் மாராயர் ஆரைவாய்மொழியிலேயே தங்கி விட்டார். மிச்சமிருந்த சைனிய வீரர்களைத் திரட்டிக் கொண்டு நான் மட்டும் புறத்தாய நாட்டுக்குள் புகுந்தேன். இந்தப் பகுதி மெல்ல மெல்ல நமது வசமாகிக் கொண்டிருக்கிறது. வேள்நாட்டார் சற்று துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறார். அவரையும் சமாளித்து விடலாம்.

ஆக என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்து முடித்து விட்டேன். இனி அனைத்தும் உங்களின் கரங்களில்தான் உள்ளது தேவியாரே!"

தனது மிக நீண்ட பேச்சை முடித்துக் கொண்டதற்கு அறிகுறியாக அருகிலிருந்த குவளையின் நீரால் தொண்டையை நனைத்துக் கொண்டார் அருள்மொழி வர்மர்.

தம்புராட்டியாருக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அருள்மொழிக்கு இராஜராஜன் என்று நில்லை மூவாயிரவர் பெயர் வைத்தது வெறும் இடுகுறிப் பெயரல்ல. காரணப் பெயர் என்றே தோன்றியது. பேரரசர் பேசி முடித்து விட்டாலும் அவரது வெண்கலக் குரல் இன்னமும் அந்த அறை முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

40. வாழ்வெனும் களரி



அருள்மொழிவர்மர் தமது படை மற்றும் பரிவாரங்களுடன் பெருஞ்சாலைக்கு வந்து சேர்ந்த மறுநாள் காலை. பொழுது புலர்ந்து ஓரிரு நாழிகைகள் கழிந்துவிட்ட அந்த நேரத்தில் சாலையின் குழிக்களரியில் தம்புராட்டியாரும் நண்பர்களும் பழைய படி களரிப் பயிற்சிக்குரிய உடுப்புகளுடன் கரங்களில் வாள் கேடயங்களுடன் நின்றார்கள். அவர்களிடமிருந்து சற்று தூரத்தில் பார்வையாளர்களாகப் பேரரசரும் ஆச்சாரியரும் பிஷுவும் ஆவலுடன் அவர்களை நோக்கியபடி நின்றிருந்தார்கள்.

பேரரசருக்குப் புறத்தாய நாட்டில் கவனிக்க வேண்டிய அலுவல்கள் பல இருந்ததால் அவர் அன்று காலையே விடைபெற்றுச் செல்ல உத்தேசித்திருந்தார். ஆனால் தாம் சொல்லிக் கொடுத்த வித்தைகளை அவருக்கு முன் நண்பர்கள் செய்து காண்பிக்க வேண்டுமென்று தம்புராட்டியார் மிகவும் விரும்பியதால் தமது புறப்பாட்டை அவர் ஓரிரு நாழிகைகள் ஒத்திப்போட வேண்டியதாயிற்று. பரிவாரங்களுக்குக் காலை உணவாக வெண்பொங்கலைத்[53] தயாரித்தளிக்க சாலை வளாகத்திலேயே உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன.

குருதாரையில் களரி வந்தனத்தை மூவரும் முடித்துக் கொண்டார்கள். தாரையின் ஒரு ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த பவழப்பாறைப் பெட்டி கம்பன் மணியனாரின் கவனத்தைக் கவர்ந்தது. அந்த பலராம நம்பூதிரி நரசிம்மப் பிரயோகத்தைப் பற்றி அப்படி என்னதான் அதில் எழுதியிருந்தாரோ? தெரிந்து கொள்வதற்குள் போர்க்களத்திற்குக் கிளம்பிச் செல்ல வேண்டியதாகி விட்டது. போகட்டும். அரசரும்

[53] பண்டைய தமிழர்கள் காலை வேளைகளைக் காபியோடு துவங்காமல் பொங்கலோடு துவங்கினார்கள் என்பதைத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் 'என் சரித்திரம்' கொண்டு தெளியலாம்.

பரிவாரங்களும் புறப்பட்டுச் சென்றபின் முதல் வேலையாக மிச்சமிருக்கும் ஓலைகளைப் படித்தறிந்து விடுவோம்.

மழபாடியாருக்குக் கவனம் முழுவதும் அவர் பிடித்திருந்த வாள் மற்றும் கேடயத்திலேயே இருந்தது. பேரரசருக்கு முன் ஒழுங்காகப் பிரயோகங்களைச் செய்து காண்பிக்க வேண்டுமே என்கிற கவலை அவரைப் பீடித்திருந்தது. சிறிது நேரம் கவனம் பிசகினாலும் எதிராளியின் நீண்ட வாள் அவரது மேனியைப் பதம் பார்த்துவிடும்.

முதலில் இருவரும் களரியைச் சிறிது நேரம் சுற்றிச் சுற்றி வந்து ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். பேரரசர் தங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்கிற பிரக்ஞை சிறிதுமின்றி அனாயசமாகவும் அலட்சியமாகவும் வாள் சுழற்றிக் கொண்டிருந்தார் இளையவர். மழபாடியாரோ அதற்கு நேர் மாறாக மிகுந்த எச்சரிக்கையுணர்வுடனும் பொறுப்புடனும் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இதனால் அவரது வழக்கமான வேகம் முதலில் சிறிதளவு தடைபட்டது. ஆனால் நேரம் செல்லச் செல்ல அந்த வித்தை அவரை உள்ளிழுத்துக் கொண்டது. காலம் நேரம் சூழல் ஆகிய அனைத்தையும் மறந்து பயிற்சியில் ஒன்றினார் மழபாடியார். அந்த ஒன்றுதலுக்காகவே காத்திருந்தவர் போலும் இளையவரின் வாள் அவரை நோக்கி வேகவேகமாகப் பாய்ந்தது.

'சளார்! சளார்!' 'மளார்! மளார்!' என்று பழையபடி அந்தக் களரியிலிருந்து எழுந்த ஆயுதங்களின் ஓசைகள் தம்புராட்டியாரின் காதுகளின் இனிமையாக வந்து விழுந்தன. ஆர்வத்துடனும் பெருமிதத்துடனும் அவர் அதனை உள்வாங்கிக்கொண்டார். இடையாடையை வரிந்து கட்டிக்கொண்டு தாமும் களத்தில் இறங்கி அவர்களுடன் வாள்சுழற்ற வேண்டுமென்று அவரது கரங்கள் பரபரத்தன. ஆனால் அது சரியாக இராது. பேரரசர் தமது சுழற்சியைப் பார்ப்பதைவிட அவரது வீரர்களின் திறமையைக் கண்டு இரசிப்பதையே பெரிதும் விரும்புவார் என்கிற எண்ணம் தோன்றியதால் சிரமப்பட்டுப் பொறுமையை வரவழைத்துக் கொண்டார்.

நேரம் செல்லச் செல்ல சண்டையின் வேகம் அதிகப்பட்டது. வாளும் கேடயமும் முட்டிக்கொண்ட வேகத்தில் சிலீர் சிலீரென்று தீப்பொறிகள் எழுந்தன. கஜ

வடிவு, சிம்ஹ வடிவு, மயூர வடிவு, குக்கூக வடிவு என்று பலப்பல அடவுகளும் வடிவுகளுமெடுத்து ஒருவையொருவர் சுற்றிச் சுழன்று வந்து மோதிக்கொண்டது முடிந்துபோய் இப்போது இருவரும் வேகவேகமாக ஓடிவந்து அந்தரவானில் தாக்கிக்கொள்ளலானார்கள். களரியின் உத்தரத்திலிருந்து ஐந்தாறு அடிகள் கீழே எல்லையற்ற பேராற்றலுடன் அவர்கள் மோதிக் கொள்வதைப் பேரரசர் வியப்புடன் கவனித்தார். தம்புராட்டியாரின் கடுமையான பயிற்சிகளின் பயனை அந்த இரண்டு வீரர்களும் அற்புதமாக அந்த நேரத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். உடலிலிருந்து வியர்வை பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தாலும் அவர்களது ஆற்றல் குறையவேயில்லை. அத்தனை சுழற்சிக்கிடையிலும் அவர்களின் மூச்சு சீராகக் கையாளப்பட்டதும் உடலின் வெப்பம் உரிய முறையில் வெளியேற்றப்பட்டதும்தான் அதற்குக் காரணம் என்பது அவருக்குப் புரிந்தது.

இருவருமே ஒருவருக்கொருவர் சளைக்காமல் வாள் சுழற்றியதால் ஒருவரால் இன்னொருவரை வீழ்த்தவே முடிய வில்லை. ஆயுதக்களரி இவ்வாறு இடைவெளியின்றி நீண்டு கொண்டிருப்பதைக் கண்ட தம்புராட்டியாரே ஒரு கட்டத்தில் தலையிட்டு அவர்களின் மோதலை நிறுத்த வேண்டியதாயிற்று. உடலில் வியர்வை ஆறாக வழிந்தோட அமைதியுடன் நின்று கொண்டிருந்தவர்களை மெல்ல நெருங்கிய அருள்மொழிவர்மர் இருவரையும் ஆரத்தழுவி மகிழ்ந்தார்.

நண்பர்கள் ஒரு கணம் திகைப்புற்றுப் போனார்கள். ஒரு பேரரசன் தனக்கு அடங்கிய தனது கீழ் பணிபுரியும் வீரர்களை அத்தனை தூரம் நெருங்கி வந்து தழுவிக் கொள்வதென்பது சாதாரண செயலே அல்ல! அவர்களுக்குத் தேவலோகமே மண்ணில் இறங்கி வந்துவிட்டது போன்ற தொரு பிரமை உண்டாயிற்று.

"அற்புதம்! அபாரம்! வீரர்களே.. இத்தனை நுட்பமான வாட்சுழற்சியைச் சமீப காலங்களில் நான் வேறெங்கும் பார்த்ததேயில்லை. மாளிகைப்புரத்துத் தேவியார் அவர்களே! தங்களுக்கு நாமும் சோழதேசமும் பட்டிருக்கும் நன்றிக்கடனை எவ்வாறு தீர்க்கப்போகிறேன் என்று திகைப்பேற்படுகிறது."

"அரசே! இந்தப் பெருமைக்குரியவர்கள் இவர்கள் இருவருமேயன்றி நானல்ல. தாங்கள் எனக்களித்த வாய்ப்பிற்காக நான்தான் நன்றிசெலுத்த வேண்டியவள் ஆகின்றேன்" என்று தம்புராட்டியார் அடக்கத்துடன். உள்ளூர அவருக்கு உச்சி குளிர்ந்துதான் போயிற்று. உண்மைகள் நல்லபடியாக அவரது பெயரைக் காப்பாற்றி விட்டார்கள்.

"இவர்களிருவருக்கும் இத்தனை நுட்பமாக வித்தை கற்றுக் கொடுத்த தங்களின் வாள் சுழற்சி எவ்வாறிருக்கும் என்பதைக் காண மிகவும் ஆவலாக இருக்கிறேன்" என்றார் அருள்மொழிவர்மர். அவ்வளவுதான்! அதற்காகவே காத்திருந்தவர்போல் இடையாடையை வரிந்து கட்டிக் கொண்டு களரி மண்ணில் கால்பதித்த தம்புராட்டியார் மூலையில் சாற்றி வைக்கப்பட்டிருந்த நீண்ட வாளைப் பிடித்துக்கொண்டு நண்பர்களுடன் சேர்ந்து வாள் சுழற்றலானார்.

பார்வைக் குறைவுடையவர் என்கிற எண்ணத்தைச் சிறிதும் ஏற்படுத்தாமல் அந்த இளைஞர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சுழன்ற தேவியாரின் தோற்றம் அருள்மொழிவர்மரை வெகுவாகக் கவர்ந்தது. நேற்றுமாலை சர்வாலங்கார பூஷிதையாக மாளிகைப்புரத்து வீட்டின் பேரரசியாக அடக்கத்துடன் காட்சியளித்தவர் இன்று அந்தத் தோற்றத்திற்கு முற்றிலும் மாறாக முக்கடல்களின் சங்கமத்தில் கோயில் கொண்டுள்ள கன்னியாபகவதி தேவியே மனித உருவெடுத்து வந்துவிட்டாற்போல் கையில் வாளெடுத்துச் சுழன்றது அவருக்கு பிரமிப்பை ஏற்படுத்தியது.

புறக்கண்களால் பார்ப்பது மட்டுமே பார்வை என்று நம்புவது எத்தனை பெரிய அறியாமை! அகத்தால் உணர்வால் பார்க்கும் பார்வையல்லவா உண்மையான பார்வை? சொல்லப் போனால் புறப்பார்வை அகப் பார்வையை ஏறக்குறைய மறைத்து விடுகிறது அல்லவா? புறப்பார்வை மறைந்த பின்தான் அகப்பார்வை முழுவதுமாக விழித்துக்கொள்கிறது போலும். விளக்கை அணைத்தபின் சாளரத்தின் வழி வந்து கொண்டிருக்கும் நிலா வெளிச்சம் தெரியத் துவங்குவதைப்போல.

ஒருவருக்குள் அகப்பார்வை விழித்துக் கொண்டபின் உடலின் ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு வகையான

பார்வையைப் பெற்று விடுகின்றன. காதுகள் நுண்ணிய சப்தங்களைக் கவனிக்கத் துவங்குகின்றன. நாசிகள் முன்னிலும் கூர்மையாகின்றன. பாதங்கள் பூமியின் ஸ்பரிசத்தை மெல்லிய அதிர்வுகளை நிலத்தின் மேடு பள்ளங்களை முதன்முறையாக உள்வாங்கிக் கொள்கின்றன. கரங்கள் காற்றை உணரத் துவங்குகின்றன. இவ்வாறு புலன்களின் வழியே மூளைக்குச் சென்று சேரும் நுண்ணிய உணர்வுகள் ஒருவரைச் சுற்றியுள்ள புறஉலகைப் பற்றிய துல்லியமான சித்திரத்தை உருவாக்கிக் காட்டுகின்றன. பார்வையின் எல்லையைக் கடந்த நிலையில் அந்த உலகம் பரிணமிக்கத் துவங்குகிறது. மெய்யே கண்ணாகுக! என்கிற களரியாசான்களின் தத்துவம் இதுவே.

ஒரு வழியாகத் தமது சுழற்சியைத் தம்புராட்டியார் முடித்துக்கொண்டதும் அவரை உரிய முறையில் பாராட்டிய பேரரசர் தொண்டையைச் செருமிக் கொண்டார்.

"திருச்சிவீந்திரத்திற்கு உடனடியாகக் கிளம்பிச் செல்ல வேண்டிய எனக்கு மிகவும் தாமதமாகி விட்டது. என்றாலும் நீங்கள் மூவரும் இத்தனை தூரம் பயிற்சிகளைச் செய்து காண்பித்தபின் இதனைக் கூறாமல் இருக்க முடியவில்லை. நமது சேனையில் ஆச்சாரியார் மஹாகாசியப தேரரால் பயிற்றுவிக்கப்பட்ட வீரரொருவர் நம்முடன் சாலைக்கு வந்திருக்கிறார். அவருடன் நமது வீரர்கள் மோதினால் நன்றாக இருக்குமே என்று யோசிக்கிறேன்."

பேரரசர் எங்கோ எதற்கோ அடி போடுகிறார் என்பது அனைவருக்குமே புரிந்தது.

"அதற்கென்ன? தாராளமாக. அவரை உடனடியாக வரச் சொல்லுங்கள்.." என்றார் தம்புராட்டியார்.

"அவருக்கு வாள் பயிற்சிகளைவிட அங்கைப் பயிற்சி முறைகளில்தான் நிரம்பத் தேர்ச்சியுண்டு. ஆக ஆயுதங்களை உபயோகிக்காமல் மோதவேண்டும். சம்மதமா?"

"நிச்சயமாக. இவர்களிருவருக்கும் அங்கைப் பயிற்சி முறைகளிலும் பூரணப் பயிற்சியுண்டு."

"ஆச்சாரிய! இதில் தங்களுக்குச் சம்மதம்தானே?" என்று கேட்டுத் தேரருக்கு மட்டும் தெரியும் வண்ணம் கண்களைச் சிமிட்டினார் அருள்மொழிவர்மர்.

அதுவரை நடந்த நிகழ்வுகளனைத்தையும் மாறாத புன்னகையுடன் கவனித்து வந்த ஆச்சாரியரின் தீர்க்கமான பார்வை அருள்மொழிவர்மரின் முகத்தில் படிந்தது. 'உனக்கு வித்தை கற்றுத் தந்த ஆசிரியனிடமே விளையாடிப் பார்க்கிறாயா?' என்று கூறாமல் கூறியது அந்தப் பார்வை.

"அவரது பெயரென்ன? அழைத்து வர ஆள் அனுப்புகிறேன்.." என்று பரபரத்தார் தம்புராட்டியார். அருள்மொழிவர்மரே குறிப்பிட்டுச் சொல்கிறாரென்றால் அவர் பெருவீரராகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அத்தகைய சிறந்த வீரருடன் உன்னிகள் மோதினால் அவர்களுக்கும் அது நல்லதொரு அனுபவமாக இருக்கும். தோற்றுப்போனால் கூடப் பாதகமில்லை.

"அந்தச் சிரமமே தங்களுக்கு வேண்டாம்! அந்த வீரர் இங்கே நம்முடனேதான் இருக்கிறார்.." என்று மொழிந்தார் ஆச்சாரியர். அனைவரும் அவரை வியப்புடன் நோக்கினார்கள்.

பேரரசர் நிதானமாகத் தாம் அணிந்திருந்த அணிமணிகள் அனைத்தையும் ஒவ்வொன்றாகக் கழற்றி ஒரு ஓரமாக வைக்கலானார். வேட்டியை இறுக்கிப் பின்னால் கட்டிக் கொண்டார். தோளை அலங்கரித்த பீதாம்பரத்தை இடைக்கச்சாக இறுக்க முடிந்து கொண்டார். நல்ல கட்டான தேகத்தைக் கொண்ட அவரது திருமேனி கடுமையான அங்கைப் போருக்குத் ஏற்றதாகவே தெரிந்தது.

என்ன! நமது பேரரசருடனா மோதப்போகிறோம்? என்று நண்பர்களிருவரும் மிரண்டு போனார்கள். இவருக்கு எதற்காக இந்த வீண் வேலை? ஏதோ வீரர்களின் வாள் சுழற்சியைக் கண்டு திருப்தியடைந்தோமா அடுத்த வேலைப் பார்க்கக் கிளம்பிச் சென்றோமா என்றில்லாமல் அவர்களுடன் மோதப்போகிறேன் என்று களமிறங்குவது எத்தனை பேதமை? அரசே! உங்களுக்குக் கீழே ஊழியம் செய்யும் வீரர்கள் நாங்கள். உங்களின் மேல் எங்களுக்கிருக்கும் மரியாதை கொஞ்ச நஞ்சமல்ல. நீங்கள் கொடுத்த உண்டி எடுத்து வளர்ந்த உயிர் இது. உங்களைத் தாக்குவதற்கு எங்களுக்கு மனம் வருமா? நீங்கள் எங்களுக் கெதிராக வாள் பிடிப்பது முறையா? என்றெல்லாம் குமைந்தது அவர்கள் மனம்.

தம்புராட்டியாரின் முகத்திலும் மெல்லிய கலவரம் படிந்தது. அவசரமாகக் கிளம்பும் நேரத்தில் எதற்காக இந்தத்

தேவையில்லாத வீண் விளையாட்டு? உன்னிகளால் இவரை மனதார எதிர்க்க முடியுமா? அவர்களின் ஆற்றலை முழுமையாக இவருக்கெதிராகப் பிரயோகிக்க முடியுமா? இருவரில் ஒருவருக்குப் படாத இடத்தில் பட்டுவிட்டால் என்ன செய்வது? போட்டிகள் துவங்குவதற்கு இன்னும் ஒரு திங்கள்தான் மீதமிருக்கிறது. இந்த முப்பது நாட்களில் இன்னும் ஏராளமான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதில் ஒரு நாளைத் தவறவிட்டால் கூடச் சிக்கல்தான்.. தேவி! இதென்ன சோதனை?

நிதானமாக நடந்து வந்த அருள்மொழிவர்மர் அவர்களுக்கருகில் வந்து நின்றுகொண்டார்.

"வீரர்களே! உங்களின் எதிரில் நிற்கும் நான் யார்?"

"தாங்களா! தாங்கள் சோணாட்டுப் பேரரசர் அருள்மொழிவர்மர். தற்போது பாண்டி மண்டலத்திற்கும் தென்மலை நாட்டிற்கும் அதிபதியும் தாங்களே."

"நல்லது. அந்தப் பதவிகளை நான் தற்காலிகமாகத் துறந்து விட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்போது நான் உங்களுக்கெதிராகக் களத்தில் நிற்கும் ஒரு எதிராளி மட்டுமே. உங்களால் என்னை எதிர்த்து முழு மனதாகப் போரிட முடியுமா என்கிற சந்தேகம் எழுந்ததால்தான் தலைபோகிற காரியங்களையெல்லாம் விட்டுவிட்டு உங்களை எதிர்க்கக் களத்தில் இறங்கினேன்."

நண்பர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். என்ன பதில் கூறுவதென்று இருவருக்குமே தெரியவில்லை. இவரை எதற்காக நாம் எதிர்க்கவேண்டும்?

"வீரர்களே! நமது கண்ணெதிரே தெரியும் இந்தக் களரிமண் வெறும் களமல்ல. இதுதான் வாழ்க்கை. இந்தக் களத்தில் சில நேரங்களில் நமக்கு மிகவும் பிரியமான வர்களுடன் மிக நெருங்கிய பந்துக்களுடன் நமது நண்பர்களுடன் நமது சகோதரர்களுடன் நமது மனைவி மக்களுடன் ஏன், நம்மைப் பெற்ற தாய் தந்தையர்களுடனும் நமக்கு வித்தை கற்றுத் தந்த ஆசானுடனும்கூட மோத வேண்டியிருக்கிறது.

ஆனால் வீரனுக்கு வீரமொன்றே அழகு. அவன் உணர்வுகளுக்கு ஆட்படக்கூடாது. கண்ணனின் கீதை திரண்டு நிற்கும் ஆயிரக்கணக்கான சேனானி வீரர்களுக்கிடையே பார்த்தனுக்குப் படிப்பிக்கப்பட்டது

என்று கூறுகிறோம். அங்கு குருக்ஷேத்திரமாக உருவகிக்கப் படுவது உண்மையில் நமது வாழ்வின் போராட்டமே! வில்லுடன் யாரை எதிர்ப்பது எவ்வாறு எதிர்ப்பது என்று அங்கு வியந்துபோய் மயங்கி நிற்பது நாமே!"

பேரரசரின் சொற்கள் தம்புராட்டியாரை நேரடியாகத் தைத்தன. வாழ்வில் அவர் எதிர்கொண்ட ஒவ்வொரு போராட்டமும் ஞாபகத்திற்கு வந்தன. தர்மத்தின் சோதரியாய்.. அர்ஜுனனாய்.. வீரமிகு வில்லேந்திக் களத்தில் முன்னின்றது தெரிந்தது.

"நாமெல்லோரும் அர்ஜுனர்கள் என்றால் நமக்குச் சாரதியாய் அமர்ந்து வழிகாட்டும் அந்தக் கண்ணன் யார்? என்கிற கேள்வி இயல்பாகவே எழுகிறது. நமது கண்ணன் யார்? ஒன்றுமறியாத அப்பாவியாய் நமக்குச் சேவகம் செய்து கொண்டு வேளை வரும்போது விஸ்வரூபமெடுத்து நிற்கும் அந்தக் கண்ணன் யார்?"

களரி முழுவதிலும் அந்தக் கேள்வி உள்வாங்கப்பட்டு எதிரொலிக்கப்பட்டது. 'யார்? யார்? அந்தக் கண்ணன் யார்?' என்று நாற்புறங்களிலிருந்தும் சப்தங்களெழுந்தன.

"நமது அந்தராத்மாவில் எப்போதும் குடிகொண்டி ருக்கும் உள்ளுணர்வாகிய இறையுணர்வே அந்தக் கண்ணன். அவனே நமது இரதங்களின் சாரதி. காடுகளும் மேடுகளும் குண்டுகளும் குழிகளும் நிறைந்த நமது வாழ்க்கையில் இரதத்தைச் சாய்த்து விடாமல் ஓட்டிச் செல்லும் சாரதி அவனே. நமது கரங்களிலிருக்கும் வில்லினை வீசியெறிந்து விட்டு ஒன்றும் வேண்டாம் என்று தளர்ந்து போய் உட்காரும் நேரங்களிலெல்லாம் ஞான வார்த்தைகள் கூறி நம்மை நிமிர்ந்து எழ வைப்பவனும் அவனே. அவனது வார்த்தைகளைப் புறக்கணிக்கும் போதெல்லாம் நாம் ஆபத்துக்களில் அகப்பட்டுக் கொள்கிறோம்.

ஆகவே அவனது வார்த்தைகளை எந்நேரமும் நினைவில் வையுங்கள். களத்தில் நிற்கும் தூயவீரனுக்குப் பற்றுதல் எதுவுமில்லை. அவனுக்குச் சொந்த பந்தங்களில்லை. உற்றார் உறவினர் எவருமில்லை. அவன் எவரையும் ஆள்பவனில்லை. எவருக்கும் அடிமைப் பட்டவனுமில்லை. அவன் சகல உறவுகளையும் கடந்து விட்டவன். சகல உணர்வுகளைத் துறந்து விட்டவன். ஞானி. அவன் தனது கடமையைச் செய்வதற்காக மட்டுமே களத்தில் நிற்கிறான். வீரனுக்கு வீரமே தர்மம். மறமே

அவனது அறம்!" என்று முழங்கிய அருள்மொழிவர்மர், மேலும் தொடர்ந்தார்.

"கலமறுக்கும் போட்டிகளில் வித்தையில் உங்களை ஜெயிக்க முடியாதென்று கண்டுகொண்டு விட்டால் உங்கள் உணர்வுகளுடனும் ஆசாபாசங்களுடனும் போராடத் துவங்குவார்கள். அப்படிப்பட்ட சூழல் நேரும்போது என் வார்த்தைகளை நீங்கள் நினைவிற்குக் கொண்டு வர வேண்டும். வீரனுக்கு வீரமே தர்மம். மறமே அறம்!"

"மறமே அறம்.. மறமே அறம்..." என்று அந்த வார்த்தைகளை நண்பர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்துக் கொண்டார்கள்.

"இப்போது கூறுங்கள். உங்களின் எதிரில் நிற்கும் நான் யார்?"

"ஒரு எதிராளி. களத்தில் எங்களை எதிர்த்து நிற்கும் எதிராளி மட்டுமே.." என்றார் மழபாடியார் முன்வந்து.

"மிகச் சரியான பதில். உங்களின் எதிராளியை எதிர்கொள்ள முதலில் நீங்களே முன் வாருங்கள்" என்று முஷ்டியை மடக்கினார் பேரரசர்.

உடனடியாக அங்கே ஒரு துவந்த யுத்தம் தொடங்கியது. ஆயுதங்களின் உதவியின்றி ஒருவரையொருவர் அசாதாரணமாகத் தாக்கி வீழ்த்த முற்பட்ட அந்தக் காட்சியை வர்ணிப்பது மிகவும் கடினம். சொல்லப்போனால் அங்கு நிகழ்ந்ததை யுத்தமென்றோ சண்டையென்றோ அழைப்பதே கூடத் தவறு எனலாம். ஒரு கழைக்கூத்தாடியின் கவனத்துடன் ஒரு வாச்சிய மாராயனின்[54] தாளமானத்துடன் ஒரு தேர்ந்த தலைக்கோலியின்[55] இராஸ பாவத்துடன் ஒரு பெருந்தச்சனின் நுட்ப அனுமானங்களுடன் அங்கே ஒரு பெரும் கலை நிகழ்ச்சி அரங்கேறிக் கொண்டிருந்தது என்றுதான் கூற வேண்டும்.

தமக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்த அத்தனை அடிமுறை வழிகளையும் உபயோகித்து அருள்மொழி வர்மரை விதவிதமாகத் தாக்கிக் கொண்டிருந்தார் மழபாடியார். இடக்கரத்தால் எதிராளியின் மணிக்கட்டை

---

[54] சோழர்காலச் சங்கீதக் கலைஞர்கள்.
[55] சோழர்கால நடனப் பெண்டிர்.

அசையவிடாமல் செய்துவிட்டு வலக்கலத்தால் தோளில் தாக்குவது, இரண்டு கரங்களையுமே பிடித்துக் கொண்டு காலால் இடறச் செய்வது, கழுத்தைக் கட்டிக் கொண்டு விலா எலும்புகளை உடைப்பது என்று கடுமையான பல அடி முறைகள் அங்கே கையாளப்பட்டன. ஆனால் அத்தனை ஆபத்தான தாக்குதல்களிலிருந்தும் தம்மைத் தற்காத்துக் கொள்வது எப்படி என்பது அருள்மொழி வர்மருக்கும் தெரிந்துதானிருந்தது. விபரம் புரியாமல் களத்தில் அவர் இறங்கவில்லை என்பது நிச்சயம்.

தமது அடிமுறைகளினால் பேரரசரை வீழ்த்தவே முடிய வில்லை என்பதைக் கண்டுகொண்ட மழபாடியார் அந்தரத்தில் ஒரு ஹுங்காரத்துடன் மேலெழும்பி வானிலிருந்து கீழிறங்கி அவர் மீது மோத முயன்றார். ம்ஹும். அதற்கும் பலனில்லை. கருடாசனத்தில் ஒரு காலை மடக்கி மற்றொரு காலை முன் வைத்து வலிமையுடன் அவ்வாறான தாக்குதல்கள் எதிர்கொள்ளப் பட்டன.

கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மழபாடியாருக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே புரியத் துவங்கியது. பேரரசர் கையாண்ட தற்காப்புப் பயிற்சிகள் அவர் அறிந்த அடிமுறைகளே அல்ல. இவை முற்றிலும் வேறு வகையான வழிமுறைகள். இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் இவை பௌத்தத் தற்காப்புப் பயிற்சிகள் போன்று தெரிகின்றன. இவற்றில் தற்காப்பே பிரதானம். எதிர்த் தாக்குதலுக்கு அத்தனை முக்கியத்துவமில்லை. அதனால்தான் தாம் எத்தனையோ முறை தாக்கியும் பேரரசர் தம்மைத் திரும்பத்தாக்க முயலவில்லை. இது இப்படியே தொடர்ந்தால் சக்தி முழுவதும் விரயமாகிக் கீழே மயங்கி விழுந்துவிட நேரும்.

உடனடியாக அவர் தாக்குதலின் வேகத்தைக் குறைத்துக் கொண்டார். அந்த முடிவு அருள்மொழிவர்மரின் வேகத்தையும் குறைத்தது. மெல்ல விலகி நின்று ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

"பரவாயில்லை. நன்றாகவே மோதுகிறீர். ஆனால் என்னை ஏன் வீழ்த்த முடியவில்லையென்பது புரிகிறதா?"

"தெளிவாகப் புரியவில்லை. என்றாலும் தாங்கள் ஏதோ ஒரு வகையான பௌத்தத் தற்காப்புப் பயிற்சிகளை மேற் கொண்டு என்னுடைய அடிமுறைகளை எதிர்கொண்டது போல் தெரிந்தது."

"பிரமாதம்! மிகச் சரியாகச் சொல்லிவிட்டீர். இது பல்லவ நாட்டிலிருந்து சீனதேசத்திற்குச் சென்று அங்கே வளர்ந்த ஒரு வகைத் தற்காப்புப் பயிற்சி. சிறு வயதில் நாகை விஹாரையில் பயிலும்போது ஆச்சாரியர் எனக்குக் கற்றுக் கொடுத்தது. இவ்வகைப் பயிற்சிகளில் தாக்குதலை விடத் தற்காப்புக்கே முக்கியத்துவம் அதிகம். காலகாலமாக இவை பௌத்த பிஷுக்களால் வளர்த்தெடுக்கப்பட்டவை. தற்போது கீழ்த்திசை நாடுகள் அனைத்திலும் பயிற்றுவிக்கப்படுபவை. இந்த நேரத்தில் இவ்விதமான தற்காப்பை மேற்கொண்டு உம்மை நான் எதிர் கொண்ட காரணம் என்ன என்பதையும் ஊகிக்க முடிகிறதா?"

"அது.. வந்து..."

"அந்தக் கேள்விக்கான பதிலை நான் கூறுகிறேன்...." என்று முன் வந்தார் அது வரை மௌனத்தில் ஆழ்ந்திருந்த பிஷு ஆனந்த தேரர். "பௌத்தத் தற்காப்புப் பயிற்சி முறைகளில் தேர்ந்த ஒருவரால் சாலை மாணவர்களின் அனைத்து விதமான தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும் என்பதை இங்கு நிரூபிக்க முயன்றீர்கள். சரிதானா?"

"சரிதான்."

"பேரரசே! நான் காம்போஜ தேசத்துத் தற்காப்புப் பயிற்சிகளை இவர்களிருவருக்கும் கற்றுத்தரவேண்டுமென்று ஆச்சாரியாரைப் போலவே தாங்களும் விரும்புகிறீர்கள் அல்லவா? அதற்காகத்தானே இந்த விளையாட்டு?" என்றார் பிஷு நேரடியாக.

நண்பர்களிருவருக்கும் அருள்மொழிவர்மரின் எண்ணங்கள் பிடிபட்டன. பௌத்த தேரர்கள் தம்மைச் சேர்ந்த துறவிகளுக்கு மட்டுமே இவ்விதமான பயிற்சிகளைச் சொல்லிக் கொடுப்பது வழக்கம் என்பது ஞாபகத்திற்கு வந்தது.

"தேரரே! கலமறுக்கும் போட்டிகளில் தற்காப்பு எனும் அம்சத்தில் இவர்களை மற்ற அனைவரையும் விடத் தலைசிறந்து விளங்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதற்குப் பௌத்தப் பயிற்சிகள் பேருதவியாக இருக்கும். காந்தளூர் வலியசாலையினர் இந்த இரண்டு வீரர்களுக்கெதிராக பயங்கர வர்மப் பிரயோகங்களைப் பிரயோகிக்கும் பட்சத்தில் இவர்கள் குறைந்த பட்சம் தங்களைத் தற்காத்துக்

கொள்ளவாவது பயின்றிருக்க வேண்டும். உரிய முறையில் எதிர்த்தாக்குதல் நிகழ்த்தாவிட்டாலும் பாதகமில்லை. இவ்விதமான பயிற்சிகளை பயிற்றுவிக்கக்கூடிய நிலையிலிருப்பவர் தற்போது தாங்கள் ஒருவர்தான். பிராயத்தில் முதிர்ந்து நிற்கும் ஆச்சாரியரிடம் என்னால் இந்தக் கோரிக்கையை வைக்கவே முடியாது."

"எனது அக்காளைப்போல நானும் எனது மரபின் சில கட்டளைகளை மீறவேண்டியதுதான் காலத்தின் கட்டாயம் போலும். கருணைக் கடலாகிய சாக்கியமுனி எனது பிழைகளைப் பொறுப்பாராக!" என்று தமது சம்மதத்தை அரைகுறை மனதுடன் தெரிவித்தார் பிஷு.

"நண்பரே! இந்த உதவியைச் சோழநாடு ஒருபோதும் மறவாது. நல்லது. நான் தற்போது விடைபெற்றுக் கொள்கிறேன். விரைவில் சந்திப்போம்." என்றுகூறி அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டார் பேரரசர்.

41. பிரயோக திலகம்



சித்திரை மாதத்து வெய்யிலில் நாள் முழுவதும் காய்த்து கிடந்ததாலோ என்னவோ அடித்துக் கொண்டிருந்த அந்தி நேரக் காற்றுக்கு சிறிதும் அசைந்து கொடுக்காமல் விறைப்புடன் நின்றது அந்தச் செங்கொடி. அதன் நாற்புறங்களிலும் வெவ்வேறு வண்ணங்களில் நான்கு விதமான இலச்சனைகளை மலைநாட்டுச் சைத்திரிகர்கள் அழகுறத் தீட்டியிருந்தார்கள்.

அனந்தபுரத்தின் காந்தளூர்ச் சாலை வளாகத்தில் அமைந்திருந்த மாபெரும் மணல் மைதானத்திற்கு நடுவே அந்தக் கொடி ஏற்றப்பட்டிருந்ததால் அந்த இலச்சினைகள் மலைநாட்டின் புகழ்பெற்ற நான்கு சாலைகளையும் குறிப்பனவாகவே கருதவேண்டியுள்ளது. மைதானத்தின் நாற்புறங்களிலும் நான்கு கலங்களாகப் பிரிந்து நின்ற காந்தளூரின் சட்டர்கள் வழக்கம் போல அந்தி நேரப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

மைதானத்தின் வடமேற்கே அமைந்திருந்த மணியம்பலத்தின் வாயிலில் இரண்டு இளம் சட்டர்கள்

காவலுக்கு நின்றார்கள். சாலையின் மூத்த ஆசான்கள் அந்தரங்க ஆலோசனைகளில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில் அம்பலத்திற்கு இவ்வாறு காவலிடுவது மரபு என்பது அனைவருக்குமே தெரிந்திருந்ததால் ஒருவரும் அந்தப் பக்கம் செல்லத் துணியவில்லை.

தினமும் பலவகையான தூபதீபங்களுடன் ஜெக ஜோதியாகக் காட்சியளிக்கும் மணியம்பலம் அன்று ஏனோ களையிழந்து காணப்பட்டது. அம்பலத்தின் நடுவே ஏற்றி வைக்கப்பட்டிருந்த இரண்டு பெரிய நெய்விளக்குளையும் வாயிலில் தொங்கிக்கொண்டிருந்த சரவிளக்குகளையும் தவிர வேறு தீபங்களை அங்கே காணமுடியவில்லை. சாம்பிராணியும் அகிற்புகையும் கமழும் இடங்களில் மெல்லிய இருளும் மௌனமுமே குடிகொண்டிருந்தன.

விளக்குகளுக்கருகே அமர்ந்து எங்கோ விட்டத்தை வெறித்து நோக்கிக்கொண்டிருந்த பட்டதிரியின் முகம் எல்லையில்லாத மனக்கிலேசத்தைக் காட்டி நின்றது. சிரமப்பட்டுத் தனது எண்ணங்களை மறைத்துக் கொள்ள முயன்றாலும் அதில் அவருக்கு வெற்றி கிட்டவில்லை. அவருக்குச் சிறிது தொலைவில் அச்சுதரும் வாமனரும் நெருக்கமாக அமர்ந்திருந்தார்கள்.

கவலை தோய்ந்த மென்குரலில் தமது பேச்சைத் துவக்கினார் மூத்தவர்.

"சோதரர்களே! நாடுவாழிகளின் ஒற்றுமையின்மையி னாலும் சேரமான் பெருமாளின் புரிந்து கொள்ளமுடியாத அலட்சியத்தினாலும் பாண்டியர்களின் பலகீனத்தாலும் தென்மலைநாட்டில் கால் பதித்து விட்டான் சோழன். அசைக்கவே முடியாததென்று கருதப்பட்ட ஆரைவாய் மொழிக் கோட்டை அசைந்து விட்டது. விழிஞம் வீழ்ந்தது. புறத்தாய நாடும் அடிமைப்பட்டுவிட்டது.

இவையெல்லாவற்றையும்விட நமக்குக் கவலையளிக்கும் செய்தி யாதெனில் சோழன் இந்தப் படையெடுப்பிற்காகக் கூறியுள்ள காரணம்தான். சோழனின் உண்மையான நோக்கம் புலிக்கொடியைத் தென்மலை நாட்டில் பறக்க விடுவதில்லையாம். நாடுவாழிகளை அடிமைப்படுத்துவதும் இல்லையாம். பாண்டியர்களை வெற்றிகொள்வதுகூட இல்லையாம். அவனது ஒரே இலக்கு பழம்பெரும் கல்வி நிறுவனமான நமது காந்தளூர்ச் சாலை தானான்! இந்தக் காந்தளூரைக் கைப்பற்றுவதற்காகத்தான் இத்தனை தூரம்

படையெடுத்து வந்திருக்கிறானாம். எப்படி இருக்கிறது கதை?"

"இவ்வாறெல்லாம் சோழனின் படையெடுப்பிற்கு உள் நோக்கம் கற்பிப்பது யார் அண்ணா?"

"வேறு யார்? வள்ளுவ நாடுவாழிதான்! அருள்மொழிவர்மன் ஒரு ஓலையில் தெளிவாக இதனைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறானாம்."

அச்சுதன் நம்பூதிரியின் முகம் சிவந்து கொண்டிருந்தது.

"அப்படியெனில் இந்நேரம் அனந்தபுரத்தைத் தாக்குவதற்காகச் சோழர்படை திரண்டு வந்திருக்க வேண்டுமே?"

"உண்மை. அதைத்தான் நானும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் விஷயம் நாம் எதிர்பாராத வேறொரு திசையில் திரும்பிக் கொண்டிருப்பதுபோல் காண்கிறது. இதோ பாருங்கள்! ஒரு நாழிகை நேரத்திற்கு முன் கழிக்குடியின் 'இராஜராஜப் பெருஞ்சாலையிலிருந்து' எனக்கு வந்து சேர்ந்திருக்கும் ஓலையை!"

"என்ன? இராஜராஜப் பெருஞ்சாலையா? கழிக்குடியிலா? திடீரென்று எங்கிருந்து முளைத்தது அது?"

"பழைய ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையைத்தான் வெட்கமேயில்லாமல் அப்படிப் பெயர் மாற்றியிருக்கி றார்களென்று தோன்றுகிறது. அதனை விட்டுவிடுவோம். ஓலையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? மலைநாட்டின் நான்கு சாலைகளும் கூடி நடத்தவிருக்கும் கலமறுக்கும் போட்டிகளில் சோழநாட்டின் சார்பில் இரண்டு வீரர்கள் கலந்து கொள்வார்களாம். அத்துடன் இந்தப் போட்டிகளை நேரில் காண்பதற்காக அருள்மொழி வர்மன் தனது படை பரிவாரங்களுடன் இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் காந்தளூருக்கு வரப் போகிறானாம்."

"என்ன? போட்டிகளைக் காண அருள்மொழிவர்மர் நேரில் வரப்போகிறாரா? எதற்காக?"

"உனக்குப் புரியவில்லையா வாமனா? பல காலங்களுக்கு முன் நமது தந்தையார் காந்தளூரின் ஆசானாக இருந்தபோது இரண்டு சோழ வீரர்கள் போரில் கலந்து கொண்டு தோற்றார்களல்லவா? அந்தப் போட்டிகளின் போது சேரமான் பெருமாளான விஜயராகவர் தமது படை

பரிவாரங்களுடன் நேரில் இங்கே எழுந்தருளியிருந்தார். அதற்குப் பழிவாங்குவதற்காகவே அருள்மொழிவர்மனும் நேரில் வரத் திட்டமிட்டிருக்கிறான் போலும். இந்தத் தகவல்களையெல்லாம் எழுதிப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி கேட்டிருப்பது யார் தெரியுமா? மஹாகனம் பொருந்திய மாட்சிமை தங்கிய மாளிகைப் புரத்து வீட்டின் தம்புராட்டியார் ஸ்ரீ ஸ்ரீ ரேணுகாதேவி அம்மையார்!"

சகோதரர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சங்கடம் நிறைந்ததொரு அமைதி களரியில் பரவிய நின்றது. அண்ணியாரா அவர்களுக்கெதிராக அருள்மொழிவர்மனுடன் சேர்ந்து கொண்டிருக்கிறார்? என்ன சோதனை இது?

"தம்பிகளா! உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வது எப்படி என்பதைச் சோழனிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். என்னிடமிருந்து வித்தை கற்றுக் கொண்டவளை எனக்கு எதிராகவே திருப்புகிறான் பார்த்தீர்களா? இது எத்தனை பெரிய குருத்துரோகம்? இதற்கு அவளும் உடன்படுகிறாள் பாருங்கள். அதைச் சொல்ல வேண்டும்!" - நம்பூதிரியின் வாயிலிருந்து மிகுந்த கசப்புடனும் காழ்ப்புடனும் வார்த்தைகள் வெளிப்பட்டன.

"ஒன்றுமே புரியவில்லையே அண்ணா? சோழர்களின் இலக்கு நமது காந்தளூர்ச் சாலைதான் என்றால் நேரடியாகப் படைகளை ஏவிவிட வேண்டியதுதானே? அதனை விட்டுவிட்டுத் தலையைச் சுற்றி மூக்கத் தொடும் வழியாகக் கலமறுக்குப் போட்டிகளில் எதற்காகக் கலந்துகொள்ள வேண்டும்?"

"நீ நினைப்பதைப் போலவே நானும் நினைத்து ஏமாந்தேன். தம்பிகளா! அருள்மொழி நாம் நினைப்பதை விட மிக நிதானமாக மிகவும் புத்திசாலித்தனமாகக் காய்களை நகர்த்துகிறான். ஆரைவாய்மொழியின் மீதும் புறத்தாய நாட்டின் மீதும் யோசிக்காமல் படைகளை ஏவிவிட்டவன் காந்தளூர் என்றதும் தயங்குகிறான். நிதானிக்கிறான். விழிஞம் வரை வந்து விட்டவன் அனந்த புரத்திற்குள் மட்டும் நுழையவில்லை. காந்தளூரைத் தாக்கவில்லை. ஏன் தெரியுமோ?"

"தெரியவில்லையே அண்ணா?"

"தாக்கப்பட்டிருக்கும் பகுதிகளெல்லாம் பண்டைய ஆய்வேள் நாட்டைச் சேர்ந்தவை. ஆய்வேள் வம்சம் மறைந்தபின் பெருமாள் அரசருக்குத் திறைகொடுத்து அவருக்கு அடங்கிய நாடுகளாக அவை தங்களை அறிவித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்! அப்படி நடந்திருந்தால் ஆரைவாய்மொழித் தாக்குதலின்போது நாடுவாழிப் படைகளைத் தவிர பெருமாளின் பெரும் சேனையான ஒன்றுகுறை ஆயிரத்தவர் படையும் சோழர்களை எதிர்த்திருக்கும். மலைநாட்டிற்குள் நுழைவதே சோழர்களுக்குப் பெரும் பிரச்சனையாக ஆகியிருக்கும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக அவ்வாறு நடக்கவில்லை. தென்மலைநாட்டு நாடுவாழிகள் வள்ளுவ நாடாழ்வார் தலைமையில் பாண்டியர்களுடன் கைகோர்த்துக்கொண்டு தனித்து நின்று விட்டார்கள். ஆரைவாய்மொழிக் கோட்டையின் மீது அவர்கள் கொண்டிருந்த அதீத நம்பிக்கைதான் அதற்குக் காரணம். இத்தனை வலிமையான கோட்டை இருக்கும்போது எங்கோ இருக்கும் சேரமானுக்கு எதற்காக நாம் வீணே திறைசெலுத்த வேண்டும் என்கிற மெத்தனம் அவர்களின் மனதில் இருந்தது என்பதுதான் உண்மை.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பெருமாள் இவர்களின் தலையைத் தட்டி வைக்கும் வாய்ப்பைப் பொறுமையாக எதிர்நோக்கியிருந்தார் என்று தோன்றுகிறது. சோழனின் படையெடுப்பு அவருக்கு அந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறது. பார்த்தாயா? என்னுடைய பாதுகாவலை ஏற்காமல் துள்ளித் திரிந்தால் என்ன கதி ஏற்படும் என்பது இப்பொழுதாவது புரிந்ததா? என்று நிச்சயம் மகோதயபுரம் கொக்கரித்திருக்கும். தென்மலை நாட்டின் வீழ்ச்சி இதர நாடுவாழிகளிடையே நடுக்கத்தைத் தோற்றுவித்திருப்பது நிச்சயம். தலைக்குத் தலை மனம்போன போக்கில் நடந்து கொண்டிருந்தவர்கள் இனியாவது பெருமாளுக்கு உரிய மரியாதை கொடுத்து அடங்கி நடந்து கொள்வார்கள்."

"எல்லாம் சரி அண்ணா. ஆனால் அதற்காக அன்னியர்களை இத்தனை தூரம் உள்ளே புகவிடுவதா?"

"அதுதான் பெருமாளின் அரசியல். மேலும் சோழர்களை அவர் வேற்று மனிதர்களாகக் கருதவேண்டிய அவசியமுமில்லை. இருவருக்கும் முற்காலங்களில் கொள்வினை கொடுப்பினை இருந்திருக்கிறது. நாளையே

சோழ இளவரசி யாரையாவது பெருமாளின் பெயரனுக்குக் கட்டி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடந்த ஐம்பது அறுபது ஆண்டுகளில் ஒருவரையொருவர் மதித்தே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.."

"சரி. அப்படியே வைத்துக் கொள்வோம். இத்தனைக்கும் பிறகு நமது காந்தளூரையும் போகிற போக்கில் சாய்த்துவிட்டுப் போகவேண்டியதுதானே? அதனை விட்டுவிட்டுக் கலமறுக்கும் போட்டிகளில் எதற்காக மூக்கை நுழைக்க வேண்டும்?"

"கொஞ்சம் யோசித்துப் பார்! நாடுவாழிகளைப் போல் தன்னிச்சையாக நாம் ஒரு போதும் செயல்பட்டதில்லை. பெருமாளின் மேலாண்மையைத் தொன்றுதொட்டு ஏற்றுக் கொண்டிருக்கிறோம். சாலைக்கு வந்து கொண்டிருக்கும் சாலாபோகத்தின் ஒரு பகுதி பெருமாளரசர்கள் அளிக்கும் நிவந்தம்தான். மலைநாட்டின் முதற்பெரும் சாலையான நம் மீது ஒரு தாக்குதல் நிகழ்த்தப்பட்டால் அதில் பெருமாள் தலையிட்டே ஆக வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். அதனை இருவருமே விரும்பவில்லையென்று தோன்றுகிறது."

"சரிதான்."

"ஆனால் மலைநாட்டின் சாலைகளுக்கிடையிலான கலமறுக்கும் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்வது என்பது முற்றிலும் வேறானது. இதில் சோழர்கள் கலந்து கொள்ள விரும்பினால் அதில் பெருமாளோ மற்றவர்களோ தலையிட வேண்டிய அவசியமேயில்லை."

"புரிகிறது. கலமறுக்கும் போட்டிகளில் வெற்றி பெற்றுக் கல நாயகங்களாகி நமது கரங்களிலிருந்து காந்தளூர்ச் சாலையைப் பறிக்கப் போகிறார்களா? அதையும் பார்த்து விடுவோமண்ணா!"

"என்னுடைய வியப்பு என்னவெனில் இத்தனை தைரியமாகக் களத்தில் நம்மைச் சந்திக்கும் தைரியம் ரேணுகாவிற்கு எப்படி ஏற்பட்டது? சென்ற போட்டிகளில் நாம் கொடுத்த அடியில் இனி அவள் ஜென்ம ஜென்மாந்திரத்திற்கும் எழுந்திருக்கவே மாட்டாள் என்றல்லவா நினைத்தோம்? மீண்டு வந்துவிட்டாளே? ஈடு இணையற்ற வீரர்களான நமது சட்டர்களையும்

உங்களையும் களரியில் சந்திக்கும் தைரியம் இரண்டு சோணாட்டு வீரர்களுக்கு எப்படி வந்தது? யார் அவர்கள்?"

"யாராய் இருந்தால் என்ன அண்ணா? நமது கரங்களில் வித்தை இருக்கிறது. மனதில் எவரையும் சந்திக்கும் தைரியம் இருக்கிறது. மூத்த ஆசான்களின் ஆசீர்வாதம் இருக்கிறது. வெல்லவே முடியாத வலியசாலைப் பாரம்பரியம் இருக்கிறது. பின் கவலை எதற்கு? வருபவர்களின் கை கால்களை முடமாக்கி வீட்டிற்கு அனுப்புவோம்!"

கர்வத்துடன் பேசிக் கொண்டு செல்லும் அச்சுதனை ஒரு ஆச்சரியத்துடன் கவனித்துக்கொண்டார் வாமனன் நம்பூதிரி.

ஒரு பேரரசன். வலிமையான படைபலத்துடன் தென்மலை நாட்டை அடிமைப்படுத்தியவன். ஒரே கணத்தில் தங்களை அடித்து நொறுக்காமல் சமதளத்தில் சம பலத்தில் நின்று நேருக்கு நேர் மோத விழைகிறானென்றால்.. அதற்குப் பின்னால் எத்தனை சிந்தனைகள் இருந்திருக்கும்? எத்தனை முன்னெச்சரிக்கைகள் - எத்தனை ஏற்பாடுகள் - எத்தனை ஆலோசனைகள் இருந்திருக்கும்? எதைப்பற்றியும் சிந்திக்காமல் வெறும் வறட்டு கர்வத்துடன் பேசிக் கொண்டு செல்கிறானே அச்சுதன்? இறுமாப்பு என்பது ஒருவரின் கண்களை இப்படி அடியோடு மறைத்துவிடுமா என்ன?

"சரியாகச் சொன்னாய் அச்சுதா! இனி நமக்கிருக்கும் ஒரே அஸ்திரம் நமது வித்தைதான். காலகாலமாக இந்த வித்தைதான் நம்மை - நமது குடும்பத்தைக் காப்பாற்றியது. இனியும் அதுதான் காப்பாற்றப் போகிறதென்று தோன்றுகிறது. இன்று திதியும் யோகமும் மிகச் சிறப்பாக இருக்கின்றன என்பதால்தான் உங்களிருவரையும் இங்கே வரச்சொன்னேன். இன்றே பிரயோகங்களில் சிறந்ததான நிருஸிம்மாகர்ஷணத்தை உங்களுக்குக் கற்றுக் கொடுக்கத் துவங்குகிறேன். அப்போதுதான் என் மனம் சிறிதளவாவது சாந்தியடையும்.."

"என்ன? நிருஸிம்மாகர்ஷணமா? அதனைக் கற்றுக் கொள்வதற்கான பிராயமோ தகுதியோ எங்களுக்கில்லையே அண்ணா? வர்மப் பிரயோகங்களை தொடர்ந்து இருபது வருடங்கள் அனுஷ்டிக்கும் ஒருவருக்குத்தான் அதனைக் கற்றுக்கொள்ளும் அருகதை ஏற்படுகிறது என்று ஆச்சாரியார் இரவிநீலி அழுத்தந்திருத்தமாக எழுதி வைத்திருக்கிறாரே?"

அதுவரை நிலைதவறாமல் பேசிக்கொண்டிருந்த பட்டதிரியை அந்த வார்த்தைகள் சூடேற்றின.

"வாமனா! பழைய மரபுகளைப் பற்றி எனக்கே பாடம் சொல்லிக் கொடுக்கிறாயா? எதிரி நம்மை வீழ்த்தி விடுவதற்காகப் படை பரிவாரங்களுடன் வேகமாக வந்து கொண்டிருக்கும் நேரமிது. களத்தில் வேறு வழிவகைகளில் அவனை வெல்ல முடியவில்லையானால் என்ன செய்வாய்? தோற்றுப்போய் நீதான் காந்தளூரின் கலநாயகம். இந்தச் சாலையை இனி நீயே வைத்துக் கொள்! என்று தூக்கிக் கொடுப்பாயா? என்ன பிதற்றல் இது? பண்டொரு நாள் உன்னைப் போலவே ஆசான் இரவிநீலியும் நமது தந்தையாரிடம் பிடிவாதம் பிடித்தார். ஆனால் கடைசியில் என்ன ஆயிற்று? போட்டியில் அவர் தோற்றுவிடும் நிலை ஏற்பட்டு விட்டது. கடைசியில் நிருஸிம்ஹாகர்ஷணம்தான் அவரைக் காப்பாற்றியது என்பதைத் தெரிந்துகொள்."

"ஆனால் அதே ஆச்சாரியர்தான் பின்னாளில் தாம் எழுதிய கிரந்தங்களில் எத்தனையோ முன்னெச்சரிக்கை வாசகங்களை எழுதி வைத்திருக்கிறாரண்ணா. அவரது கிரந்தங்களை நாம் தொடர்ச்சியாகப் பல நாட்களாகப் படித்து வருகிறோம். தேவையில்லாமல் ஒரு வரிகூட அவர் எழுதுவதில்லை என்பதுதான் என் எண்ணம்."

தோளுக்கு மேல் வளர்ந்து நின்று இன்று தன்னை எதிர்த்துப் பேசவும் துணிந்துவிட்ட சோதரனை ஒரு முறை தீர்க்கமாகப் பார்த்தார் பட்டதிரி. 'இராஜப் பிரயோகம்' 'பிரயோக திலகம்' 'வர்மாணி ராஜம்' 'சங்கிராமப் பிரகாசம்' என்று பல்வேறு அடைமொழிகளால் சிறப்பிக்கப்படும் நிருஸிம்மாகர்ஷணத்தைத் துளியேனும் கற்றுக்கொண்டு விடமாட்டோமா என்று தவிக்கும் சட்டர்களைத்தான் அவர் வாழ்வில் இதுவரை கண்டிருக்கிறார். ஆனால் இங்கே ஒருவன் அதனைக் கற்றுக்கொள்ள மாட்டேனென்று தீவிரமாக மறுத்தலித்துக் கொண்டிருக்கிறான்! இருபது வருட வர்மப் பயிற்சிக்குப் பின்தான் அதனைக் கற்றுக் கொள்வேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான். இருபது வருடங்களுக்குப் பின் உங்களுக்கு இந்தப் பிரயோகத்தைச் சொல்லிக் கொடுக்க யார் இருக்கப் போகிறார்கள்? நிச்சயம் நானிருக்க மாட்டேனடா தம்பி. இது ஏன் உனக்குப் புரிய மாட்டேன் என்கிறது?

"வாமனா!"

"சொல்லுங்கள் அண்ணா."

"இந்தக் கலமறுக்கும் போட்டிகளில் நீங்களிருவரும் வெற்றி பெற்றுக் கலநாயகங்களாகி விட்டீர்களானால் அத்துடன் எனது கடமை முடிந்து விட்டதாகக் கருதுவேன் என்பதை முன்னரே தெரிவித்திருக்கிறேன். சாலையின் ஆசான்களாக உங்களை அறிவித்துவிட்டு வாரணாசி, பிரயாகை, வதரி என்று தீர்த்தயாத்திரைக்குக் கிளம்பி விடுவதுதான் எனது திட்டம். இனியும் இந்தச் சாலையின் ஆசானாக என்னால் நீடித்திருக்க முடியாது. அதற்கான தகுதியை நான் என்றோ இழந்துவிட்டேன்..." - பட்டதிரியின் குரல் தழுதழுத்தது. கண்கள் கலங்கியிருந்தன.

"வாழ்வில் மிகக் கொடிய பாவங்களைப் புரிந்து அவற்றுக்கான தண்டனையைக் கூடச் சரிவர அனுபவிக்கக் கொடுத்து வைக்காத சண்டாளன் நான். என்னுடைய கருவை வயிற்றில் ஏந்தி என் வீட்டு வாசலில் நின்று வாழ்க்கைப் பிச்சை கேட்ட பெண்ணையே மறுத்தலித்த கொடியவன் நான். அவளது வயிற்றில் வளர்ந்து வந்த சிசுவின் மரணத்திற்குத் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டியவனும் நானே. அந்தத் தீராத பாவத்திற்குக் கடைசிவரை பிராயச்சித்தம் தேடித்தான் ஆகவேண்டும். பாரத வர்ஷத்தின் அத்தனை புண்ணிய நதிகளிலும் நீராடி நீராடி அந்தப் பாவத்தின் கறையைச் சிறிது சிறிதாகக் கழுவ முயன்றுதான் ஆகவேண்டும்."

"அண்ணா.."

"ஆகவே இந்தச் சாலையை உங்களிருவரிடமும் ஒப்படைத்துவிட்டுக் கிளம்பி விடுவது என்கிற முடிவில் நிர்மானமாக இருக்கிறேன். அப்படிக் கிளம்புமுன் எனக்குத் தெரிந்த அத்தனை வித்தைகளையும் உங்களிருவருக்கும் கற்றுக்கொடுத்து விட்டேனானால் மரணத்திற்குப் பின் எனது ஆத்மா சாந்தியடையும். எனக்காக நீங்கள் செய்யக்கூடிய ஒரே கைமாறு மறுக்காமல் நான் கற்றுக் கொடுக்கப்போகும் விசேஷப் பிரயோகங்களை எதிர்ப்பேச்சு பேசாமல் கற்றுக் கொள்வதுதான்!" - தம்பியரை நோக்கிக் கரம் குவித்தார் பட்டதிரி.

அண்ணனின் உணர்ச்சிப்பிரவாகத்தைத் தாங்க மாட்டாமல் வாமனரின் கண்கள் குளமாயின. உள்ளே வார்த்தைகளில் வடிக்க முடியாத எண்ணற்ற எண்ணங்கள் வந்து போயின. குழவிப் பருவத்திலிருந்து தங்களை வளர்த்து

ஆளாக்கி தங்களுக்காகத் தமது குடும்ப வாழ்க்கையையே தியாகம் செய்து விட்டவர் தமையன் என்கிற எண்ணம் விஸ்வரூபமெடுத்து நின்றது.

தமையன். நினைவு தெரிந்த நாள் முதலாகத் தமது ஐயன் இவரே. அன்னை இவரே. தந்தையும் இவரே. வித்தை கற்றுக்கொடுத்த ஆசான் இவரே. தங்களிருவரின் வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் திசைகாட்டி நெறிப்படுத்திய தெய்வமும் இவரே. மாத்ரு தேவோ பவ. பித்ரு தேவோ பவ. ஆச்சார்ய தேவோ பவ. தேவனே! உம்மை வணங்குகிறேன். உமக்காக நான் மிகவும் மதிக்கும் ஆச்சாரியன் இரவிநீலியின் வார்த்தைகளை மீற விழைகிறேன். சகலத்தையும் அறிந்த பரம்பொருள் வாழ்வில் மனமறிந்து எந்தப் பாவத்தையும் செய்தறியாத இந்தப் பிராமணனை மன்னிக்கட்டும். ஈஸ்வரோ ரக்ஷது.

"அண்ணா! இதற்கு மேலும் ஏதாவது சொல்லி உங்களின் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. உங்களின் விருப்பம் போலச் செய்யுங்கள்."

பட்டதிரியின் முகத்திலிருந்த கிலேசம் மறைந்தது. ஒரு உற்சாகத்துடன் மடியிலிருந்த ஓலைக்கட்டைப் பிரித்து வைத்துக் கொண்டார்.

"வேளை சுபவேளையாக இருக்கிறது. அதனால் இப்பொழுதே பிரயோகாரம்பத்தைத் துவக்கிவிடுவது உத்தமம். இது தொடர்பான சில முக்கியப் பாடங்களை மட்டும் இன்று கற்றுக் கொள்ளுங்கள். நாளை உஷத் காலத்தில் இந்தப் பிரயோகத்தின் செய்முறைப் பயிற்சியை சொல்லித்தருகிறேன். கரம் கூப்பி மனதில் யோக நரஸிம்ஹமூர்த்தியைத் தியானம் செய்யுங்கள்."

மெல்லிய அகிற்புகை மூட்டத்திற்கு நடுவே இராஜகளை பொருந்திய சிம்மத்தின் ஒளிவீசும் திருமுகம் தென்பட்டத் துவங்கியது. சகலவிதமான சாமுத்ரிகா லட்ஷணங்களும் பொருந்திய கேசரி. கானக ராஜன்.

சிம்மத்தின் கண்கள் மூடியிருந்தன. நாலாதிசைகளிலும் பிடறி மயிர் சிலிர்த்துக் கொண்டிருந்தது. மெல்ல வீசிக் கொண்டிருந்த காற்றில் அந்த மயிரின் நுனி அவ்வப்போது மேலெழும்பியது. உச்சந்தலையில் தங்கத்தினால் வேலைப் பாடுகள் செய்யப்பட்ட கரண்ட மகுடம் அழுந்த இருத்தப்

பட்டிருந்தது. மகுடத்தின் மத்தியில் அளவில் பெரிய பச்சைநிற மரகதக்கல் ஜொலித்தது.



சோழர்கால நரசிம்மர், சாலைக்கோட்டச் சிற்பம், புள்ளமங்கை திருவாலந்துறையார் திருக்கோயில், முற்சோழர் காலம்.

திருமேனியின் அங்கங்கள் எண்ணைப் பூச்சில் பளபளத்தன. தோள்களில் வாகுவலயங்கள் மின்னின. கரங்களில் இரத்தின கங்கண கேயுரங்கள் பளபளத்தன. கழுத்தில் சரப்பளி கண்டிகை என்று பலவிதமான திருவாபரணங்கள். வயிற்றிலிருந்து நெஞ்சு பிரியுமிடத்தில் உதரபந்தம். தோளிலிருந்து நிவிதமாக கீழிறங்கும் வஸ்த்ர யக்ஞோபவீதம். பிருஷ்டத்தை பூமியில் இருத்திக் கால்களை சுறுக்கே மடித்து அதன் மீது யோகப்பட்டம் சுற்றி அசைவே இல்லாமல் ஸ்திரமானதொரு இருப்பு. முழங்கால்களில் படிந்திருக்கும் கரங்கள். சின்முத்திரையில் முடியும் விரல்கள். விரல் நுனிகளை மீறி வளர்ந்திருக்கும் நீண்ட கூரிய நகங்கள்.

அங்கண்ஞாலமஞ்ச ஆங்கோர் ஆளரியாய்த் துண்பிளந்து அவுணன் உடல் கிழித்து உதிரத்தை சொட்டு விடாமல் நக்கிக் குடித்துக் குடலை மாலையாய்த் தரித்த ஆவேசம் மிக்க அரி, அங்கே தனக்குள் அமிழ்ந்து ஆழமாதொரு தியான மண்டலத்தில் இருப்பது பார்த்த

மாத்திரத்தில் புரிந்தது. தீவிரமான அதன் தியானத்தைக் கலைப்பதற்குப் பெரிதும் அச்சமேற்பட்டது. கலைத்து விட்டால் பேரழிவு நிச்சயம்.

பட்டதிரியின் வாயிலிருந்து மிக நீண்ட ஆழமானதொரு ஓங்காரம் புறப்பட்டு மணியம்பலமெங்கிலும் பரவியது.

"ஓம்.."

தம்பியர் இருவரும் அந்த நாதத்தில் கவனத்தை ஒருமுகப்படுத்தினார்கள். மனதில் சலனங்கள் மறைந்தன. சிம்மத்தின் முகம் முன்னிலும் தெளிவாகத் தெரிந்தது. அதன் வெப்பம் மிகுந்த மூச்சுக்காற்று அம்பலமெங்கிலும் படிவதை உணர முடிந்தது.

உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்

ஜ்வாலாந்தம் சர்வதோமுகம்


நிருஸிம்ஹம் பீஷாணம் பத்ரம்

ம்ருத்யுர் ம்ருத்யும் நமாம்யஹம்.

விடாமல் சாளரத்திலிருந்து வீசிக்கொண்டிருந்த காற்று சட்டென நின்று போனது. தீபங்களின் ஒளிநாவுகள் தமது அசைவுகளை நிறுத்திக்கொண்டன. அம்பலத்தில் உஷ்ணம் மிகுந்தது. பட்டதிரி ஓலைக்கட்டைப் பிரித்து வாசிக்கத் துவங்கினார்.

"பிரஹ்லாதத்தின் பிரியத்திற்குப் பாத்திரமானவரும் ஒளி பொருந்திய முகத்தை உடையவரும் உக்கிரமும் வீரமும் பொருந்திய மஹாவிஷ்ணுவின் அம்சமானவருமான ஸ்ரீ நிருஸிம்ஹ மூர்த்தியை தியானித்து நிருஸிம்மாகர்ஷணம் என்று வர்ணிக்கப்படும் பிரயோகத்தின் இலட்ஷணங்களை வர்ணிக்கிறேன்.

மானுட தேகத்தில் எலும்புகள் தசைகள் நரம்புகளின் சந்திப்புக்களில் பிராணனின் உறைவிடங்களாக உயிர்நிலை ஓட்டங்கள் உறைந்திருக்கும் நூற்றியெட்டு இடங்களே வர்மங்கள் என்பதை அறிவீர்களாக. இவற்றுள் உச்சந்தலையிலிருந்து கழுத்து வரையிலான உத்ரபாகத்தில் இருபத்து மூன்று வர்மங்களும் கழுத்திலிருந்து இடுப்புவரை உள்ள மத்யபாகத்தில் முப்பத்தி மூன்று வர்மங்களும் இடுப்புக்குக் கீழுள்ள மூலஸ்தானத்தில் எட்டும் மூல ஸ்தானத்திற்குக் கீழுள்ள தட்ஷிணபாகத்தில் நாற்பத்து நான்கு வர்மங்களும் அமைந்துள்ளன.



மனித உடலில் படுவர்மஸ்தானங்கள் அமைந்துள்ள இடங்கள்.

இந்நூற்றியெட்டு வர்மங்களையும் மெய் தீண்டுதல் நோக்கல் ஊதல் ஸ்வீகரித்தல் என்று பல்வேறு வகைகளாலும் தூண்டலாம்.

இத்தூண்டுதல்களுள் படுவர்மங்கள் பன்னிரண்டாகும். அவை (1) திலர்தம், (2) கொழுந்து, (3) நுனி, (4) வாடை, (5) நாடி, (6) சங்கு, (7) வாயு, (8) ருத்ரன், (9) ஹரி, (10) பிரம்மன், (11) வருணன், (12) லிங்கம் என்பனவாம். இவற்றைச் சாத்திய அசாத்தியப் பிரவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் திலர்தமே மிக முக்கியமானது. புருவங்களுக்கு மத்தியில் நெல்லிடைக் கீழாக சூட்சுமமாய் அமைந்துள்ளது.

உயிர்நிலை ஓட்டத்திற்குக் காரணமான நாடிகளை இயக்கும் தசவாயுக்கள் பத்தாம். அவை பிராணன், அபாணன், உதாணன், வியாணன், சமாணன், நாகன், சடர்மன், தனஞ்செயன், கிரிகரன், தேவதத்தன் என்பனவாம். இவற்றுள் தனஞ்செயன் நரம்பு மண்டலம் மற்றும் மூளையையும் பிராணன் இருதயம் மற்றும் நுரையீரலையும் அபானன் தொப்புளுக்குக் கீழமைந்துள்ள வயிற்று பாகங்களையும் விரைப்பையையும் இயக்கும்.

வர்மஸ்தானங்களின் வழி இம்மூன்று வாயுக்களையும் தீண்டி நாடியோட்டங்களை விகாரமைடையச் செய்வதே ந்ருஸிம்மப்பிரயோகத்தின் இலக்காகும். இதனை உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று வகைகளில் கையாளலாம்."

ஏடுகளிலிருந்து பார்வையை மீட்டுக்கொண்ட பட்டதிரி சற்றே நிமிர்ந்து தம்பியர் இருவரையும் நோக்கினார்.

"எந்த ஓலைக்கட்டை எடுத்துப் படிக்கத் துவங்கினாலும் மாணவர்களுக்கு அடிப்படை விஷயங்கள் எளிதாகப் புரியவேண்டும் என்பதற்காக அந்தப் பிரயோகத்துடன் தொடர்புடைய வர்மஸ்தானங்கள், வாயுக்கள், நாடிகள் முதலியவற்றைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைப்பது வழக்கம். அந்த முறையைத்தான் இங்கே ஆச்சாரியார் இரவிநீலி கையாண்டுள்ளார். இதில் நீங்கள் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்திகள் இரண்டு.

முதலாவது, தசவாயுக்களுள் மூன்று வாயுக்கள் பற்றி மட்டும் விளக்கி அவற்றை விகாரமடையச் செய்வதே இதன் நோக்கம் என்று அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது. இதுதான் இப்பிரயோகத்தினைப் பற்றிய மிக முக்கியமான

முதல் குறிப்பு. தீண்டப்படும் வாயு, தீண்டுதலுக்குக் கையாளப்பட்ட முறை, தீண்டுதலின் உக்கிரம் ஆகியவற்றைப் பொறுத்து இந்தப் பிரயோகம் பல்வேறு விளைவுகளை எதிராளியிடம் ஏற்படுத்தும்.

இரண்டாவது, இந்தப் பிரயோகத்தினை இவர் உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று வகையாகப் பிரித்திருப்பது. இதனை ஆச்சாரியார் தமது வாழ்நாளில் செய்த தனிப்பெரும் சாதனை என்றே கூறவேண்டும். இந்த ஒன்றே அவரை மற்ற ஆசான்களிடமிருந்து விலக்கி மிகப்பெரிய உயரத்தில் வைக்கிறது.

நமது சாலையின் முதல் ஆச்சாரியரான திரிவிக்ரம நம்பூதிரியின் காலத்திலிருந்து நாம் இந்தப் பிரயோகத்தை அறிந்து வைத்திருக்கிறோம். ஆனால் இடைக்காலங்களில் இது பற்றிய முழுமையான ஞானத்தை இழந்துவிட்டோம். அதாவது இந்தப் பெரும் ஆகர்ஷண சக்தியை உருவாக்கத் தெரிந்து வைத்திருந்த நமக்கு இதனை முழுமையாகக் கட்டுப்படுத்தத் தெரியவில்லை. ந்ருஸிம்மாகர்ஷணத்தின் பெரும் பிரச்சனை இதுதான். இதனை உருவாக்கி விட்டீர்களானால் பின் பிரயோகித்தே ஆகவேண்டும். மற்ற பிரயோகங்களைப் போன்று இதன் சக்தியை திசைதிருப்பிச் செயலிழக்கச் செய்ய முடியாது என்பதை நன்றாக உணருங்கள். ஆகவே இந்த ஆகர்ஷணத்தை ஆவாஹிக்கும் முன்னால் ஒருவன் மிக நிதானமாக ஒரு கணம் யோசனை செய்து இது தேவை தானா என்பதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அவசரப்பட்டோ ஆத்திரப்பட்டோ ந்ருஸிம்ஹத்தை ஆவாஹித்துவிட்டால் அது விரும்பத்தகாத பல விளைவுகளை ஏற்படுத்தும்!"

இருளைக் கிழித்துக் கொண்டு ஒரு முகம் கணநேரம் பட்டதிரியின் மனக்கண்களில் தோன்றி மறைந்தது. அவரது இரவுகளிலும் கனவுகளிலும் தனித்திருக்கும் நேரங்களிலும் தோன்றி அவரைப் பார்வையாலேயே வதைக்கும் அதே கோரமுகம். பயமும் ஆத்திரமும் கோபமும் நிறைந்த சோழ இளவரசனின் முகம். ஆவேசம் மிக்க அந்தக் கண்களின் கூர்மையைத் தாங்கமாட்டாமல் தமது இமைகளை இறுக்க மூடிக்கொண்டார் பட்டதிரி. சிவ சிவா! என்று அவரது உதடுகள் ஒரு முறை உச்சரித்துக் கொண்டன.

"ஒரு முறை உருவாக்கப்பட்டுவிட்ட ந்ருஸிம்மா கர்ஷணத்தின் சக்தியைப் பின்னால் திசை திருப்பவே

முடியாது என்பதைக் கண்டு கொண்ட ஆச்சாரியார், அதனை வெவ்வேறு வழிகளிலும் ஆராயலானார். பல வருடங்கள் பல சட்டர்களுடன் கலந்தாலோசித்து உழைத்து இறுதியில் அவர் அதனைப் பற்றிய நுட்பமானதொரு சூட்சுமத்தைக் கண்டறிந்தார். அது என்னவெனில், அந்தச் சக்தியைப் பிரயோகிக்கும் வழிமுறைகளை மாற்றுவதன் மூலம் அதன் தாக்கத்தைக் குறைக்கலாம் என்பதுதான். அவைதான் உத்தமம் மத்திமம் அதமம் எனும் மூன்று வகைப் பிரிவுகளாக உருவாயின. நான் சொல்லிக்கொண்டு வருவது புரிகிறதா?"

நன்றாகப் புரிந்தது என்றனர் தம்பியர். அந்தப் பிரயோகத்தைக் கட்டுப்படுத்தியே தீரவேண்டும் என்கிற மிகப் பெரிய உந்துதலும் அதற்காகப் பல வருடங்கள் கடுமையாக உழைக்கும் முனைப்பும் ஆச்சாரியாருக்கு ஏன் ஏற்பட்டது என்பதையும்கூட வாமனரால் ஊகிக்க முடிந்தது. தவறான வேளையில் தவறான எதிராளிக்கு எதிராக அதனை உபயோகித்து பின்னர் அதற்காக வாழ்நாள் முழுக்க வருந்திய ஒரு பேராசானின் உண்மையான தேடல் அது. இன்னொரு முறை இம்மாதிரியான விபத்து எவருக்கும் எதன்பொருட்டும் நேர்ந்துவிடக்கூடாது என்கிற முனைப்பே அவரைச் செலுத்தியிருக்க வேண்டும்.

மீண்டும் ஓலைக்கட்டுகளுக்குள் அமிழ்ந்தார் பட்டதிரி.

"நிருஸிம்மாகர்ஷணத்தைத் திலர்தவர்மத்தின் வழி பிரயோகிப்பதன் மூலம் தலையின் தனஞ்செய வாயுவையும் ருத்ரவர்மத்தின் வழி பிராண வாயுவையும் லிங்கவர்மத்தின் வழி அபானனையும் விகாரமடையச் செய்யலாம். இம்மூன்றுமே எதிராளியின் உயிரை மாய்க்கும் வல்லமை பெற்றவை என்பதைத் தெரிந்து கொள்வீர்களாக. தனஞ்செயன் பூரண விகாரமடைந்தால் மூளையின் நரம்புகள் செயலிழந்து ஒரு நாழிகை நேரத்தில் உயிர் பிரியும். பிராணன் முழுவிகாரமுற்றால் இருதயமும் வயிறும் செயலிழந்து ஒரே நாளில் உயிர் பிரியும். அபானனின் முழு விகாரத்தால் விரைப்பைகள் மலக்குடம் பாதிக்கப்பட்டு ஒரு பட்சம் கழித்து உயிர் மெல்லப் பிரியும்."

"விகாரம் என்று குறிப்பிடாமல் பூரணவிகாரம் - முழு விகாரம் என்றெல்லாம் அடைமொழிகளுடன் குறிப்பிட வேண்டிய காரணம் என்ன அண்ணா?"

"முக்கியமான விஷயத்தைக் கவனித்துவிட்டாய். ஆச்சாரியார் தேவையின்றி ஒரு எழுத்துகூட எழுதுவது கிடையாது. முழுவிகாரம் என்பது ஒரு மாத்திரை[56] நேரப் பிரயோகத்தால் ஏற்படும் விளைவு என்று புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மாத்திரைக்கும் குறைவான கால அளவை உபயோகித்தால் குறை விகாரம் ஏற்படும். அதாவது எதிராளியின் உயிருக்குப் பாதிப்பு ஏற்படாமல் அங்கஹீனம் ஏற்படும் என்பது பொருள்!"

"ஆஹா! இத்தனை நுட்பங்களா இதில்?"

"மேலும் கேள். பிரயோகிக்கப்பட்டவர் உடலில் நிருஸிம்மாகர்ஷணம் தலையிலிருந்து தரை நோக்கிப் பாயும் தன்மையுடைய அதோமுக சக்தி[57]. அதாவது தலையிலிருந்து இருதயத்திற்கும் இருதயத்திலிருந்து வயிற்றுக்கும் வயிற்றிலிருந்து விரைகளுக்கும் விரைகளிலிருந்து கை கால்களுக்கும் பாய்ந்து வலதுகால் பெருவிரல் வழியாக வெளியேறி பூமியில் பாயும். பூமியின் சமநிலை இதனால் குலையும். நதிகள் பாதிக்கப்படும். சுற்றுப் புறங்களில் வசிக்கும் மிருகங்கள் சிறிது நேரம் மன உளைச்சலுக்கு உள்ளாகும்."

அதற்குமேல் கேட்பதற்கு ஒன்றுமேயில்லையென்று வாமனருக்குத் தோன்றியது. ஒரு பிரயோகம் பூமியின் இருக்கும் உயிர்களின் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைப் பற்றியெல்லாம் யோசிக்கும் ஒருவன்கூட இங்கே இருந்திருக்கிறானா? அவனது வாரிசுகளா நாம்? பிரமிப்பாக இருந்தது. பயிற்சி காலங்களில் நினைத்தபோதெல்லாம் வானுக்கும் பூமிக்குமாய் பிரயோகங்களை திசைதிருப்பி விட்டது நினைவிற்கு வந்து வருத்தியது.

புகைமூட்டம் சற்று விலக, நரசிம்மத்திற்கு முன்னால் கை கட்டி வாய்பொத்திப் பணிவுடன் அமர்ந்திருந்தார் ஆச்சாரியார் இரவிநீலி. ஓ ஆச்சாரிய! ஸ்தூல வடிவில் உம்மைப் பார்ப்பதற்குக் கொடுத்து வைக்காவிடினும் சூட்சும வடிவில் உமது இருப்பை இங்கே இப்போது உணர்கிறேன்.

---

[56] ஒலி உச்சரிக்கப்படும் காலம். 'இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை' என்று நன்னூல் மாத்திரைக்கு இலக்கணம் கூறும்.

[57] இதற்கு நேர்மாறாக, மேல்நோக்கிப்பாயும் சக்தியை ஊர்த்துவமுக சக்தி என்று குறிப்பிடலாம்.

உமது பாதங்களைப் பணிகிறேன். பெரியவரான நீர் இந்த எளியேனை ஆசீர்வதிக்க வேண்டும்.

இரவிநீலீயின் பார்வை அவரை நோக்கித் திரும்பி பாதாதி கேசத்தை ஊடுருவி நின்றது. இந்தப் பிரயோகத்தைக் கற்றுக்கொள்ளத் தகுதியானவன்தானா நீ? என்கிற கேள்வி அதில் பொதிந்திருந்தது.

"ந்ருஸிம்மாகர்ஷணத்தை உருவாக்கும் ஆக்ர்ஷண வடிவு மந்திரத்தை[58] குரு மூலம் உபதேசம் பெற்று ந்ருஸிம்ஹமூர்த்தியைத்[59] தியானித்து அரை மண்டல காலம் அதாவது இருபத்தியொரு நாட்கள் இருபத்தியொராயிரம் முறை விடாமல் ஜெபித்து உரிய பயிற்சிகளை மேற்கொண்டு வர உடலின் வியானன் விழித்துக்கொண்டு இந்தப் பிரயோகம் வசப்படும். பிராணாபாயம் நேரும் காலங்களைத் தவிர இதனை வேறு சந்தர்ப்பங்களில் உபயோகித்தால் இதனை அனுசந்திப்பவர்க்கும் அவர்களின் சந்ததிகளுக்கும் தீராப்பாவம் ஏற்படும். பார்க்கவ இராமனின் சாபத்திற்கும் அவர்கள் ஆளாவார்கள்!" என்று கூறியபடி ஓலைக்கட்டை மூடி வைத்தார் பட்டதிரி.

இருபத்தியொரு நாட்கள் மந்திரம் ஜெபிக்க வேண்டுமா? என்று சகோதரர்கள் விக்கித்துப் போய் நின்றார்கள். ஏனெனில் கலமறுக்கும் போட்டிகள் துவங்குவதற்கு அன்றிலிருந்து சரியாக இருபத்தியொரு நாட்களே மிச்சமிருந்தன. அண்ணனின் அவசரத்திற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாமோ?

"ஆச்சாரியாரின் தனிஸ்லோகங்கள் முடிந்தன. நாளை பிரம்ம முகூர்த்தத்தில் உங்களிருவருக்கும் வடிவு மந்திரமும் பிரயோக உபதேசமும் செய்ய உத்தேசித்திருக்கிறேன்" என்று கூறியபடி ஆசனத்திலிருந்து எழுந்தார் பட்டதிரி.

---

[58] Vadivu Mantrams are specific to particular Kalarippayattu poses – full power is attained when a practitioner is accomplished in the particular mantram associated with that pose. [Zarrilli, P. 2001:144]

[59] One master learned Vadivu Mantram particular to four of the eight poses he practices including (1) *Ganapathimantram* (2) ***Narasimhamantram*** (3) *Asua rudamantram* (4) *Varahamantram*. [Zarrilli, P. 2001:144-145]

42. கூர்ம பீடம்



கழிக்குடியிலிருந்து திருச்சிவீந்திரம் வழியாகக் கோட்டாறு நோக்கிச் செல்லும் பெருவழியில் விரைந்து கொண்டிருந்தது ஒரு சிறிய இரதம். சோழப்பேரரசரின் உத்தரவின் பேரில் தம்புராட்டியாரின் உபயோகத்திற்காக சிவீந்திரத்தின் பெருந் தச்சர்கள் பிரத்யேகமாக உருவாக்கியிருந்த அந்த இரதத்தை இரண்டு புரவிகள் அனாயசமாக இழுத்துக் கொண்டு சென்றன. இரதத்தில் தம்புராட்டியாரும் பிஷு ஆனந்த தேரரும் அருகருகே அமர்ந்திருக்க, அவர்களின் இரு புறங்களிலும் நமது நண்பர்களிருவரும் நின்று கொண்டு இரதத்தின் முன்பக்கத் தூண்களைப் பிடித்தபடி பயணம் செய்து கொண்டிருந்தார்கள். இரதத்திற்கு முன்னும் பின்னும் காவலாகச் சோழப் புரவிவீரர்கள் நால்வர் தத்தம் புரவிகளைச் செலுத்திக் கொண்டு சென்றார்கள்.

ஆச்சாரியர் மஹாகாசியப தேரர் தமது பூர்வகதையைச் சொல்லி முடித்த நாளிலிருந்தே வெண்பரிசாரத்திற்குச் சென்று திருமூல சாக்கியரின் குடும்பத்தைத் துக்கம் விசாரிக்க வேண்டுமென்று கருதியிருந்தார் தம்புராட்டியார். ஆனால் அது அத்தனை எளிதாக நடைபெறுகிற காரியமாக இல்லை. ஆரைவாய்மொழிக்கோட்டை வீழ்ந்தபின் அந்தப் பகுதிகளை சோழப் படைகள் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கத் துவங்கிவிட்டதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகக் கோட்டாறு நகரிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் கலகங்களும் கோஷங்களும் தீவைப்பு முதலான சம்பவங்களும் ஆங்காங்கே அரங்கேறிக் கொண்டிருந்தன. அது வள்ளுவநாட்டு வீரர்களின் கைவண்ணம் என்று ஒரு சாராரும் இல்லையில்லை, தப்பிச் சென்று விட்ட விக்கிரமாதித்ய வரகுணரின் சாகசம் என்று மற்றொரு சாராரும் ஒருவரையொருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருந்தனர்.

பொதுமக்களைக் கடுமையான இன்னல்களுக்கு ஆளாக்கிய இந்த விஷமங்களைக் கண்டு வெருண்டுபோன அருள்மொழிவர்மர் அந்தப் பகுதிகளில் காவலைக் கடுமையாக்கினார். கோட்டாறு நகரிலிருந்து கழிக்குடிக்குச்

செல்லும் பெருவழியில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டது. தேவையில்லாமல் முன்மாலை அல்லது இரவு நேரங்களில் வீதிகளில் சுற்றிக்கொண்டிருந்த இளைஞர்கள் சோழர் காவற்படை வீரர்களால் துருவித்துருவி விசாரிக்கப் பட்டார்கள். சந்தேகத்திற்குரியவர்கள் கோட்டாற்றில் அமைந்திருந்த சிறிய காராக்கிருகத்தில் அடைக்கவும் பட்டார்கள்.

இத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகளால் நகர்ப்புறப் பகுதிகளில் நிலவிவந்த வழக்கமான போக்குவரத்து பெருமளவிற்குக் குறைந்து போனது. வேலைக்கு உரிய ஆட்கள் கிடைக்காமையால் மலைநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டிருந்த மிளகு சந்தன வணிகர்கள், எண்ணை வாணிபத்தில் ஈடுபட்டிருந்த சங்கரப் பாடியார்கள், குதிரைச்செட்டிகள், திரைலோக்கிய வாணியர்கள் முதலானோர் கடுமையான அதிருப்திக்கு ஆளானார்கள். ஆனால் அந்தப் பகுதிகள் தமது முழுக் கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை அத்தகைய நடவடிக்கைகள் தொடரும் என்று பேரரசர் உறுதிபடச் சொல்லிவிட்டதால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இத்தகைய கலவரமான சூழலில் தம்முடைய பயணத்தை மேற்கொள்வதா வேண்டாமா என்று தயங்கித் தயங்கிப் பத்து நாட்களைக் கழித்து விட்டார் தம்புராட்டியார். இறுதியில் இதற்கு மேலும் தாமதிக்க முடியாது என்கிற நிலை ஏற்பட்டு விட்டதால் பேரரசருக்குச் செய்தியனுப்ப, அவர் பல்லவராயர் மூலம் ஒரு இரதத்தையும் காவலுக்குச் சில வீரர்களையும் அனுப்பி வைத்தார். முடிந்தவரை இரவில் கோட்டாறு வழியே பயணிப்பதைத் தவிர்க்குமாறும் தேவைப்பட்டால் வெண்பரிசாரத்திலேயே தங்கிவிட்டு மறுநாள் காலை சாலைக்குத் திரும்புமாறும் வாய்மொழியாகச் சொல்லியனுப்பியிருந்தார் பல்லவராயர். இத்தகைய சூழலில் தம்புராட்டியார் தனியே பயணிப்பதை விரும்பாத நண்பர்களும் பிஷுவும் பயிற்சிகளை ஒருநாள் ஒதுக்கி வைத்து விட்டு அவருடன் இணைந்து கொண்டார்கள்.

கோட்டாறின் வழக்கமான நடமாட்டங்கள் பெரிதும் குறைந்து விட்டதால் இந்த முறை கோட்டையைச் சுற்றிக் கொண்டு செல்லாமல் நகரின் வழியாகவே பயணிக்க முடிந்தது. இதனால் கணிசமான பயணநேரம் மிச்சமாயிற்று. நகரில் தமக்குப் பழக்கமான பல இடங்களில் இரதத்தை

நிறுத்தச் செய்து அந்த இடங்களுடனான தமது இளமைக்கால நினைவுகளையும் தொடர்புகளையும் பகிர்ந்து கொண்டார் தம்புராட்டியார். பார்வை பழுதாகி விட்டாலும் உற்சாகம் குன்றாமல் பல்வேறு செய்திகளையும் அவர் விவரித்த பாங்கு நண்பர்களைக் கண்கலங்கச் செய்தது. நகரின் மையப்பகுதியில் அமைந்திருந்த நாகராஜன் திருக்கோயிலில் பழைய நேர்த்திக்கடன்கள் சிலவற்றைச் செய்துமுடிக்க வேண்டுமென்று அவர் விரும்பவே கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்வது என்று முடிவாயிற்று.

திருக்கோயிலில் அவர்கள் நுழைந்த நேரம் நாகராஜருக்கு நான்கு நாழிகள் அமுதுப்படி செய்விக்கும் உச்சிச்சந்தி வேளை என்பதால் அதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. தம்புராட்டி யாரை முதலில் ஒருவரும் கவனிக்கவில்லை. தமக்குத் தெரிந்த தளிப்பெண்டிடம் அவர் தமது வருகையைத் தெரிவிக்க, அடுத்த சில நிமிடங்களில் தடதடவென்று திருக்கோயிலின் மூலப்பருதையாருள்[60] ஒருவர் அவர்களை நோக்கி விரைந்தோடி வந்தார்.

"மாளிகைப்புரத்துத் தம்புராட்டியாரா? வரவேண்டும். வரவேண்டும். தாங்கள் வரப்போவதைப் பற்றி ஒரு வார்த்தை முன்னரே சொல்லியனுப்பியிருக்கக்கூடாதா? நானே முன்னின்று தங்களை வரவேற்றிருப்பேனே? நாகராஜருக்கு அமுதுப்படி செய்விக்கும் நல்ல நேரத்தில் வந்திருக்கிறீர்கள். வாருங்கள், நேராகச் சன்னிதிக்குச் சென்று விடுவோம்.."

கோட்டாற்றின் மாறிவரும் அரசியல் சூழல்களை அந்தப் பெரியவரின் பேச்சு தெளிவாகப் பிரதிபலித்ததை நன்கு உணர்ந்து கொண்டார் தம்புராட்டியார். சிறுவயது முதல் எத்தனையோ முறை அந்தத் திருக்கோயிலுக்கு விஜயம் செய்திருக்கிறார். அப்போதெல்லாம் கிடைக்காத உபசாரங்களும் வரவேற்புக்களும் இப்போது மட்டும் கிடைப்பதற்குக் காரணமென்ன?

இந்தப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கும் சோழப் பேரரசருக்குத் தான் மிகவும் வேண்டப்பட்டவள் எனும் செய்தி எப்படியோ நகருக்குள் பரவியிருக்க வேண்டும்.

---

[60] திருக்கோயில் நிர்வாக சபையார்.

மாளிகைப்புரத்து வீட்டிற்கும் சோழ இராஜ குடும்பத்திற்குமான நெருங்கிய உறவின் பின்னணியில் அது புரிந்துகொள்ளப் பட்டிருக்கவேண்டும். அட, சோழர்களா? நமது மாளிகைப்புரத்து வீட்டில் பெண்ணெடுத்தவர்கள் ஆயிற்றே அவர்கள்? நமக்கு மாப்பிள்ளை வீட்டு முறை ஆகவேண்டுமே? என்றெல்லாம் பேச்சுக்கள் எழுந்திருக்க வேண்டும்.

இதற்கே இத்தனை மரியாதையென்றால் நாளை பேரரசர் கொடுத்திருக்கும் சாலாபோக நிவந்தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டால் என்ன செய்வார்கள்? கீழே மண்ணில் வீழ்ந்து புரள்வார்களோ? சீச்சி.. இந்த மனிதர்களால் நினைத்த நேரத்தில் ஒருவரைத் தோள்களில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடவும் முடிகிறது. வேறொரு நேரத்தில் குப்புறத் தள்ளிக் கால்களால் எட்டி உதைக்கவும் முடிகிறது. உண்மையான தகுதியைப் புரிந்துகொண்டு நடப்பவர்கள் இங்கே எவருமேயில்லை.

கருவறைக்கு முன்னால் அமைந்திருந்த கொடிபீடத்தில் அமைந்திருந்த ஆமை உருவத்தைச் சுட்டிக்காட்டிச் சில வார்த்தைகள் கூறினார் தம்புராட்டியார்.

"உன்னிகளா! இந்தத் திருக்கோயில் மிகவும் விசேஷமானது. இங்கே கருவறையில் தேவியருடன் எழுந்தருளியிருப்பது ஐந்தலை அரவாகிய அனந்தன். ஆதிசேஷன். பகவான் கிருஷ்ணனாக உலகில் அவதரித்த போது அவருடைய இணையான பலதேவனாக அவதரித்த வெள்ளை நாகர் இவரே. இவருக்குரிய வாகனம் கூர்மம் என்பதால்தான் துவஜபீடத்தில் அது சித்தரிக்கப் பட்டுள்ளது. மாளிகைப்புரத்து வீட்டு இலச்சினைகளில் கூர்மத்தைக் காட்டுவதுண்டு. காலகாலமாக இந்த நாகதேவர்தான் எங்கள் வீட்டுக் குலதெய்வம். இவரை மனதார வழிபட்டுக் கொள்ளுங்கள். இவரது அருள் இருந்தால் நீங்கள் போட்டிகளில் வெற்றி பெறுவது நிச்சயம்."

கருவறையில் நாகராஜர்[61] தமது தேவியர் இருவருடன் காட்சியளித்தார். சமபாத ஸ்தானகத்தில் நின்ற திருக்கோலம்.

[61] இன்றைய தேதியில் இத்திருவுருவம் அனந்த கிருஷ்ணனாக அடையாளப் படுத்தப்பட்டாலும் இது ஆதிசேஷனின் திருவுருவமே என்கிறார் திரு.எஸ். இராமசந்திரன். பார்க்க இவரது 'நாகராஜாவும் நாகரமமனும்' எனும் கட்டுரை.

கரண்ட மகுடமணிந்த தலைக்குமேல் படமெடுத்து நிற்கும் ஐந்து நாகத்தலைகள். ஒரு கரம் அபயஹஸ்தம் காட்ட மற்றொன்று கடியவலம்பிதமாக இடது தொடையில் நிறுத்தப்பட்டிருந்தது. இடையாடைகள் தரியாமல் திகம்பரமாக நாற்திசைகளையே ஆடையாய்த் தரித்துப் புன்னகையுடன் தரிசனம் தந்தார் தேவர்.

"பல காலங்களுக்கு முன் இந்தத் திருக்கோயில் வளாகத்தில் கிடைத்த பெரிய மரகத லிங்கமொன்று மாளிகைப்புரத்து வீட்டில் வைத்துப் பரம்பரை பரம்பரையாகப் பூஜிக்கப்பட்டது. எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்னால் உருவானதொரு சிரமமான சூழ்நிலையில் துரதிருஷ்டவசமாக அதனை இழந்து விட்டோம். அதன் பிறகுதான் நமது வீட்டின் நிலை கொஞ்சம் கொஞ்சமாகச் ஷீணிக்கத் துவங்கியது என்பார்கள். குலதெய்வ வழிபாடு மிகவும் முக்கியம். அதில் குறைகள் வைக்கக்கூடாது. உன்னிகளா! அதனால் தான் கலமறுக்கும் போட்டிகளுக்கு முன் இந்த நேர்த்திக் கடனை மிச்சம் வைக்காமல் முடிக்க நினைத்தேன். மனம் நிறைந்து விட்டது. இனி நாகராஜன்தான் உங்களுக்குத் துணை." என்றபடி அர்ச்சகர் காட்டிய தீபத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டார் தம்புராட்டியார்.

சன்னிதியிலிருந்து வெளியே வரும்போது கம்பன் மணியனாரின் கரங்களைப் பிடித்து ஒரு ஓரத்திற்கு இழுத்துச் சென்றார் மழபாடியார். "என்ன? திருக்கோயிலில் நுழைந்ததிலிருந்து உங்களின் முகமே சரியில்லையே? உடம்பு ஏதாவது செய்கிறதா என்ன?"

"உடம்பிற்கு ஒன்றுமில்லை."

"பின்னால் என்ன? உங்கள் மனம் வருந்தும்படி யாரும் எதுவும் பேசிவிடவில்லையே?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இது - இதனை எப்படி விளக்குவதென்றே தெரியவில்லை. இந்தத் திருக்கோயில் வளாகத்தில் கால் வைத்த உடனேயே ஏதோ ஒரு பெரிய துக்கம் எழும்பித் தொண்டையை அடைத்துக்கொண்டு விட்டது. இத்தனை பெரிய துக்கத்தை நான் எனது

வாழ்நாளில் அனுபவித்ததேயில்லை. இந்தத் திருக் கோயிலுக்கு நான் வருவது இதுவே முதல் முறை. என்றாலும் எதற்காக இவ்வாறு தோன்றுகிறது என்பது எனக்கே புரியவில்லை!"

தம்முடன் பேசிக்கொண்டிருப்பது இளையவர்தானா? அல்லது வேறு எவரோ மனிதரா? என்று ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார் மழபாடியார். இப்படியெல்லாம் பேசக்கூடியவரில்லையே இவர்?

"சாதாரணமாக இம்மாதிரியான உணர்வுகளை நான் உடனடியாகப் புறக்கணித்துவிடுவேன். அவற்றில் அதிக கவனம் செலுத்த மாட்டேன். அதிகம் யோசித்தால் குழப்பமே மிஞ்சும் என்பதுதான் அதற்குக் காரணம். ஆனால் புறக்கணித்துவிடவே முடியாத ஒரு மாபெரும் உணர்வு நாகராஜர் சன்னிதியில் என்னைச் சூழ்ந்திருந்தது. குறிப்பாக அந்த ஆமைச்சின்னம் பொறிக்கப்பட்ட பீடத்திற்கு முன்னால் நிற்கையில் - இது ஏனென்று எனக்கே தெரியவில்லை.." - மணியனாரின் கண்களில் இயல்பாக நீர் முத்துக்கள் திரண்டிருந்தன.

நண்பரின் தோள்களை ஆதரவுடன் பற்றிக்கொண்டார் மழபாடியார். "வருத்தப்படாதீர்கள்! இது மிகவும் நல்ல அறிகுறி. உங்கள் புறவுலகத்தைத் தாண்டி அது கொடுக்கும் உணர்வுகளைத் தாண்டி நுட்பமொனதொரு அகவுலகில் பிரவேசித்து விட்டீர்கள். இது ஒரு அற்புதமான மனமாற்றம். புற உலகத்திற்கும் புறக் கண்களுக்கும் புலப்படாத மாபெரும் ஞானமே உள்ளுணர்வாக ஆழ்மனதில் உதிக்கிறது. தர்க்கரீதியாக எளிதில் புரிந்து கொள்ள முடியாத இவற்றுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு.

இன்றைக்கு உங்களின் மனதில் தோன்றிய துக்கத்திற்கு நிச்சயம் ஏதோ ஒரு பெரிய காரணம் இருக்க வேண்டும். காலம் அதனை உரிய நேரத்தில் காட்டிக் கொடுக்கும் என்று உறுதி கொள்ளுங்கள். அதற்கான ஒரு வெள்ளோட்டம்தான் இன்றைய அனுபவம். இந்த விசேஷ அனுபவத்தை மட்டும் மனதில் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். துக்கத்தை விட்டு விடுங்கள்."

மழபாடியாரின் வாயிலிருந்து தன்னிச்சையாக வெளிப்பட்ட அந்த வார்த்தைகளை என்னவென்று சொல்வது! அவற்றைத் திருவாசகங்கள் என்றே கூறலாம்.

அந்த வாக்கியங்களுள் அத்தனை அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

தொண்டை மண்டலத்தின் சேனானி நாயமாக அனைவராலும் அறியப்பட்ட இளையவர் கம்பன் மணியனாருக்கும் கோட்டாற்று தெய்வமான நாகராஜன் திருமுன்பில் அமைந்திருந்த கூர்ம முத்திரை பொறிக்கப் பட்ட துவஜ பீடத்திற்கும் ஒரு மிக நெருங்கிய மிக நுட்பமான மிக இரகசியமான தொடர்பு இருக்கத்தான் செய்தது! அதனை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவதற்காகக் காலமும் மிக மிக ஆவலுடன் காத்திருந்தது.

* * * * * * * *

வழிபாடுகளெல்லாம் முடிந்தபின் மதிய நேர உணவையும் திருக்கோயிலிலேயே முடித்துக் கொண்டு முன்மாலை நேரத்தில்தான் அவர்களால் கோட்டாற்றின் பிடாகையாக அமைந்திருந்த வெண்பரிசாரத்தை அடைய முடிந்தது. பரஞ்சோதியாரின் பெண் மாணிக்கம் அவர்களைப் பழைய உற்சாகத்துடன் வரவேற்க முயன்றாலும் அவளால் தனது துக்கத்தை மறைத்துக் கொள்ள முடியவில்லை. பிராயத்தில் முதிர்ந்த தம்பு ராட்டியார் அவளது தோள்களில் தமது கரங்களைப் பதித்த மறுகணமே அவரைக் கட்டிக்கொண்டு 'கோ'வென்று ஒரு நாழிகை நேரம் அழுது தீர்த்தாள் மாணிக்கம்.

சென்ற முறை சரிவரச் சந்தித்துப் பேசமுடியாத திருமூல சாக்கியரின் ஒரே மகனான ஸ்ரீகிருஷ்ண சாக்கியரை இந்த முறை நிதானமாகச் சந்திக்க முடிந்தது. மத்தியப் பிராயத்திலிருந்த அவருக்குத் தமது குடும்ப சீதனமாகக் கிடைத்த கலை ஞானமும் அடக்கமும் நிரம்பவே வாய்த்திருந்தன.

"அச்சனுக்குத் தாங்கள் நேரில் வந்து அளவளாவியது மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்ததம்மா! நினைவு திரும்பும் நேரங்களிலெல்லாம் தங்களைப் பற்றிப் பேசாமல் இருக்க மாட்டார். கடைசி நாள்வரை உங்கள் நினைப்புத்தான்.." என்ற சாக்கியரின் கண்களில் ஈரம் படிந்தது.

"ஜீவியவிந்தராக அவரைச் சந்திக்க முடிந்தது எங்களின் பாக்கியம் என்றுதான் கூறவேண்டும்" என்றார்

தம்புராட்டியார். அவரது மனமும் கனத்திருந்தது. திருமூல சாக்கியர் மட்டும் இப்போது உயிருடன் இருந்திருந்தால், நிச்சயம் சரஸ்வதி பண்டாரம் இருக்குமிடத்தைக் கண்டறிந்திருக்கலாம் என்றுதான் தோன்றியது. இவரிடம் இது பற்றிக் கேட்டுப் பார்க்கலாமா? ஏதாவது கூடுதல் விபரங்கள் இவருக்குத் தெரிந்திருக்குமா?

"உயிர் பிரிவதற்குச் சில நாழிகை நேரங்களுக்கு முன்னால் அச்சனுக்கு சுயநினைவு முழுவதுமாகத் திரும்பி விட்டது. எங்களுடன் மிகவும் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போதும்கூட உங்களைப் பற்றிக் குறிப்பிட்டார். எங்கள் வீட்டுப் பூஜையறையில் வைத்துப் பூஜிக்கப்படும் ஒரு பொருளை உங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறினார்."

தம்புராட்டியாருக்குள் மின்னல் மின்னிற்று. தெய்வம் சோதிக்கிறது. ஆனால் கைவிடுவதில்லை.

"அச்சனின் உடல்நிலையில் தெரிந்த முன்னேற்றத்தைப் பார்த்து வெண்பரிசார வைத்தியம் முழுவதுமாகப் பலித்து விட்டது என்றே நாங்கள் நம்பினோம். ஆனால் கடைசியில் அது வேறுவிதமாக முடிந்தது."

"நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது."

மாணிக்கம்! அதனைக் கொண்டு வருகிறாயா?" என்று உள்ளறையை நோக்கிக் குரல் கொடுத்தார் சாக்கியர்.

"இதோ!"

அடுத்த சில கணங்களில் தமது கரங்களில் வைக்கப்பட்ட அந்த வினோதமான பொருளைத் தம்புராட்டியார் தடவிப் பார்த்தார். ஏதோ ஒரு பெரிய தயிர் கடையும் மத்தைப் போன்று தெரிந்தது. அதன் உருண்ட தலையில் ஒரு சக்கரத்தில் இருப்பதைப் போன்ற கூர்மையான பற்கள் வடிக்கப்பட்டிருந்தன.

"இது என்ன?"

"எனக்குத் தெரியாதம்மா. நினைவு தெரிந்த நாள் முதல் இது எங்கள் வீட்டுப் பூஜையறையில் வைத்துப் பூஜிக்கப்படுவதை அறிவேன். ஆனால் இது என்ன என்பதை அறிந்ததில்லை. அச்சன் எதற்காக இதனைத் தங்களிடம் கொடுக்கச் சொன்னார் என்பதும் எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது."

"வேறு ஏதாவது கூறினாரா?"

"பெரிதாக ஒன்றுமில்லை. அன்று நீங்களெல்லோரும் திரமம் பாராமல் கோயிலுக்கு வந்திருந்து நான் கட்டிய கூத்தைப் பார்த்தது அவருக்குப் மிகப்பெரிய மகிழ்ச்சியை அளித்தது. ஓரிரு முறை அதனைக் குறிப்பிட்டுச் சிலாகித்தார்."

"தங்களின் கூத்தும் ஆடலும் அன்று மிகப் பிரமாதமாக அமைந்திருந்தன. குறிப்பாக இறுதிக்கட்டக் காட்சிகள் மிகவும் பிரமாதம்! நாங்களனைவருமே அதனைப் பற்றி வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தோம்." என்றார் மழபாடியார் முந்திக் கொண்டு. ஒரு கணம் கழிந்தபின் அல்வாறு பெரியவர்களின் பேச்சில் குறுக்கிட்டது தவறோ என்கிற நினைப்புத் தோன்றவே அடக்கத்துடன் பின் வாங்கினார்.

"நீங்கள் அதனை இரசித்தது மிகவும் மகிழ்ச்சி!"

"வேறு ஏதாவது. இது சம்மந்தமாகக் கூறினாரா?" என்று அந்த வினோதப் பொருளை மீண்டும் சுட்டிக்காட்டி வினவினார் தம்புராட்டியார். அவரது குரலில் ஏமாற்றம் பகிரங்கமாகவே வெளிப்பட்டது.

"பெரிதாக வேறொன்றுமில்லை. முடிந்தால் சங்கர்ஷணனை இவர்கள் சந்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். உங்களுக்குப் பார்த்திவசேகரபுரம் சாலையின் பிரதான ஆசானாக விளங்கும் சங்கர்ஷண நம்பூதிரியைத் தெரியுமோ? அச்சனின் பழைய நண்பர் அவர். பலகாலமாக இருவருக்கும் தொடர்பில்லை. என்றாலும் அவரது பெயரை எதற்காகக் குறிப்பிட்டாரென்று தெரிய வில்லை."

தம்புராட்டியார் விக்கித்துப் போனார். மூத்தவர் என்று அனைவராலும் அழைக்கப்பட்ட சங்கர்ஷண நம்பூதிரி மிகவும் முடியாமல் கிடக்கிறாரென்று செய்தி வரவே அவரைப் போய் சந்தித்துவிட்டு வந்ததும் அங்கே அடக்க முடியாத கோபத்துடன் பல வார்த்தைகள் பேசிவிட்டு வந்ததும் நினைவுக்கு வந்தன. திருமூல சாக்கியருக்கு அவரைத் தெரிந்திருக்கிறதா என்ன?

"அவர் சில காலங்களுக்கு முன் தவறிப்போய் விட்டாரே! நீங்கள் கேள்விப்படவில்லையா?"

"அது எனக்குத் தெரியும். ஆனால் அச்சனுக்குத் தெரியாது. மெல்லிய அதிர்ச்சிகளைக்கூட அவரால் தாங்கிக் கொள்ள முடியாதென்று வைத்தியர் கூறிவிட்டதால் அவரிடமிருந்து அந்தச் செய்தியை மறைத்து விட்டோம்."

சாக்கியருக்கும் நமக்கும் ஏழாம் பொருத்தம் போலும் என்று நினைத்துக் கொண்டார் தம்புராட்டியார். ஒவ்வொரு முறை இங்கு வந்து போகும் போதும் ஏராளமான குழப்பங்களே மிஞ்சுகின்றன.

"இந்தப் பொருளை நாங்கள் எடுத்துக்கொள்ளலாமா?"

"தாராளமாக. இது என்னவென்பதே எங்களுக்குத் தெரியவில்லை. எப்படி எங்களின் குடும்பத்தாரின் கைகளில் வந்து சேர்ந்தது என்பதிலும் தெளிவில்லை. எவ்வாறு பூஜையறையில் வைத்து வழிபடத்தக்க பொருளாக இதனைக் கருதினார்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஏதோ ஒரு முக்கியக் காரணத்தினால்தான் அச்சன் இதனை உங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லியிருக்கவேண்டும். இதற்கும் தங்களுக்கும் என்ன தொடர்பு என்பதைத் தாங்கள்தான் இனிக் கண்டறிய வேண்டும்."

கிருஷ்ண சாக்கியரிடமும் மாணிக்கத்திடமும் விடை பெற்றுக் கொண்டு மனதில் பல கேள்விகளுடன் அவர்கள் வெண் பரிசாரத்திலிருந்து புறப்பட்டார்கள்.

43. காலன் வந்தான்!



கால்களில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டு இந்தக் காலம்தான் எத்தனை வேகமாக ஓடுகிறது? என்று வியப்பாக இருக்கிறது. அதன் இடைவிடாத ஓட்டத்திற்கு நம்மால் ஈடுகொடுத்து ஓடவே முடியாது போலிருக்கிறதே?

இதோ! நேற்றுத்தான் நமது நண்பர்கள் இருவருடனும் கடற்கரைப் பட்டினமான நாகையிலிருந்து கிளம்பியதுபோல் தோன்றுகிறது. ஆனால் அதற்குள் எத்தனை தூரங்கள் கடந்து வந்து விட்டோம்? எத்தனையெத்தனை புதிய இடங்களுக்குப் பயணப்பட்டு விட்டோம்? தொண்டி, கொற்கை, திருக்குருகூர், ஆரைவாய் மொழி, கழிக்குடி, மருந்துவாழ்மலை, திருக்கொட்டாறு,

திருச்சிவீந்திரம், வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம், திருவெண் பரிசாரம்.. அப்பப்பா!

இந்த நீண்ட நெடிய பயணம் நமக்கு எத்தனை அதிசயிக்கத்தக்க மனிதர்களை அறிமுகப்படுத்திவிட்டது?

ஒன்றுமறியாத காம்போஜ தேசத்துப் புத்தத் துறவியாக அறிமுகமாகிப் பின்னால் பிரமிக்கத்தக்க பரிமாணங்கள் காட்டிய பிஷு ஆனந்த தேரர்..

மர்மமாகத் திடுதிப்பென்று தோன்றிக் கடைசியில் மர்மமாகவே மறைந்தும் போய்விட்ட அசுவ வைத்தியர் தேவநாக பண்டிதர்..

பார்வை பறிபோய் விட்ட நிலையிலும் கொண்ட குறிக்கோளில் பின்வாங்க மாட்டேன் என்று உறுதியுடன் வாளேந்தி நிற்கும் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியார்..

மயக்க நிலையிலும் பண்டைய சாலையின் குருஸ்துதியை முணு முணுத்துக் கொண்டிருந்த திருமூல சாக்கியர்..

பிரம்மாண்டமான சோழ சைனியத்தைச் சற்றுமேயில்லாமல் மேற்குக் கடற்கரைக்குக் கொண்டு வந்து சேர்த்த சேனாபதி பல்லவராயர்..

இனி ஒரு போதும் சந்திக்கவே மாட்டோம் என்கிற நினைப்பை நாகையில் ஏற்படுத்திவிட்டு இறுதியில் சற்றும் எதிர்பாராத விதமாகக் கழிக்குடிக்கு வந்து இன்ப அதிர்ச்சியளித்த ஆச்சாரியர் மஹா காசியப தேரர்..

நடந்த முடிந்த சம்பவங்களனைத்தும் ஒரு கணம் நின்று நினைத்துப் பார்த்தால் கதைகளிலும் காவியங்களிலும் வரும் கற்பனைச் சம்பவங்கள் போலல்லவா தோன்றுகின்றன? இதனால்தான் ஒட்டுமொத்த வாழ்வையும் 'பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே..' என்று பின்னாளில் பட்டினத்தடிகள் பாடி வைத்தாரோ?

எப்படியோ, இந்த நீண்ட பயணத்தின் இறுதிக் கட்டத்தை ஒரு வழியாக எட்டிவிட்டோமென்றுதான் தோன்றுகிறது. ஸ்ரீகிருஷ்ண சாக்கியரைத் தம்புராட்டியாரும் நண்பர்களும் சந்தித்து விட்டு வந்து இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன. இந்தக் காலகட்டத்தில் நண்பர்களிருவரும் கருமமே கண்ணாயினாராகப் பயிற்சிகளில் மனமொன்றி

ஈடுபட்டிருந்தார்கள். தம்புராட்டியாரின் கடுமையான மெய் உழிச்சல் அவர்களின் உடலை நன்கு பதப்படுத்தி விட்டிருந்ததால் பிஷுவின் பௌத்தத் தற்காப்புப் பயிற்சிகளை மேற்கொள்வது அத்தனை சிரமமான காரியமாக இல்லை. சிறுகாலை வேளைகளில் தம்புராட்டியாருடன் அங்க களரி, உச்சியம் பொழுதுச் சந்தி நேரத்தில் சிறிது ஓய்வு, மாலை நேரங்களில் ஆயுதக்களரி மற்றும் பௌத்தப் பயிற்சிகள், இரவில் பண்டைய கிரந்தங்கள் வாசிப்பு என்று அவர்களின் மூன்று பொழுதுகளும் முழுவதுமாக ஆக்கிரமிக்கப் பட்டிருந்தன.

பெருஞ்சாலையின் நிலை இப்படி இருந்ததென்றால் அருள்மொழிவர்மரின் நிலையோ இதனினும் கடுமையாக இருந்தது. ஆரைவாய்மொழிக்கும் கழிக்குடிக்கும் முட்டத்துக்கும் இதர ஆய்வேள் நாட்டுப் பகுதிகளுக்கும் அவர் மாறி மாறிப் பறந்துகொண்டிருந்தார். காலகாலமாக நாடுவாழிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொண்டிருந்த நாஞ்சில் நாட்டின் நிர்வாக அமைப்புக்களும் கிராமசபை ஸ்தாபனங்களும் வணிகக் கூட்டமைப்புக்களும் எங்கிருந்தோ வந்த சோழர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொள்வதில் பெருத்த தயக்கங்கள் காட்டின. ஓரளவிற்கு அவர்கள் இறங்கிவர ஆயத்தமாகும் போதெல்லாம் நாடுவாழிகளின் ஆட்கள் எவராவது உள்ளே புகுந்து குட்டையைக் குழப்பிக் கொண்டிருந்தார்கள்.

எங்கிருந்தோ புறப்பட்டு வந்திருக்கும் அன்னியர்களை நம்பி எங்களைப் பகைத்துக் கொண்டீர்களானால் உங்களுக்குத்தான் சிரமம். சோழர்களால் இங்கே நீண்ட நாட்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது. இன்றில்லா விட்டாலும் நாளை அவர்கள் மீண்டும் தஞ்சைக்குத் திரும்பிச் சென்றுதான் ஆகவேண்டும். அதன் பிறகு இந்தப் பகுதிகள் மீண்டும் எங்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடும். ஆகவே பார்த்து நடந்து கொள்ளுங்கள்! என்று பகிரங்க எச்சரிக்கைகளை விடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தகைய நடவடிக்கைகள் அருள்மொழிவர்மரைக் கோபத்துக்குள்ளாக்கின. நாடுவாழிகள் ஒரு போதும் தமக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ள மாட்டார்கள் என்பது அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. தாம் இந்தப் பகுதியிலிருந்த அகன்ற மறுகணம் அத்தனை விவகாரங்களும் பழைய நிலைக்குத் திரும்பிவிடும். முன்னிலும் தீவிரமாகப் பாண்டியர்கள் இந்தப் பகுதிகளை

ஆக்கிரமிப்பார்கள். நாடுவாழிகளுக்கும் தமக்குமான பகையை ஊதி ஊதிப் பெரிதாக வளர்த்து விடுவார்கள். சில வருடங்களில் ஆரைவாய்மொழிக்கோட்டை முன்னிலும் ஆபத்தான முறையில் வளர்ந்து நிற்கும். அது தமக்கோ சோணாட்டிற்கோ நல்லதல்ல. ஆகவே இந்தப் பகுதிகளிலிருந்து உடனடியாக அகன்று போகாமல் மெல்ல மெல்ல இவற்றைச் நமது முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது அவசியம் என்கிற தீர்மானத்திற்கு வந்தார். இது தொடர்பாகப் பல நடவடிக்கைகளை அவர் எடுக்க நேர்ந்தது.

நாஞ்சில் நாட்டுப் பகுதிகளின் நில அமைப்பு, நீர் நிலைகள், மக்களின் விவசாயம், வாணிபம், திருக் கோயில்கள், திருவிழாக்கள் என்று சகலவிதமான விபரங்களையும் அருள்மொழிவர்மரின் அணுக்கச் சேவகர்கள் சேகரித்தார்கள். அப்பகுதிகளில் மிகுந்த நிலபுலன்களுடன் திகழ்ந்த அத்தனை திருக்கோயில்களுக்கும் தலையர் மடங்களுக்கும் இதர தர்மஸ்தாபனங்களுக்கும் சோழ நாட்டார் தளியதிகாரியாக நியமிக்கப்பட்டார்கள். இதற்காகவே அனுபவம்மிக்க நிர்வாகியரை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்க நேர்ந்தது.

அந்தப் பகுதிகளிலிருந்த முக்கியத் திருக்கோயில்களுக்கு இராஜராஜர் பெயரால் நிவந்தங்களும் தானங்களும் தாராளமாக வழங்கப்பட்டன. குறிப்பாக குஹநாதேஸ்வரம் திருக்கோயில் இறைவனுக்குக் பல நகைகள் பேரரசரால் நேரடியாகவே வழங்கப் பட்டன. அந்தத் திருக்கோயிலின் பெயரே இராஜராஜேஸ்வரம்[62] என்று வழங்கப்படலாயிற்று.

வாணிபக் குழுக்களுடன் பலமுறை பேச்சு நடத்தி அவர்களின் நிறைகுறைகள் கேட்டறியப்பட்டன. வாணியஞ் சாவடிகளில் சோழ அதிகாரிகள் நிரந்தரமாக அமர்ந்தார்கள். மலைநாட்டிலிருந்து பாண்டிநாட்டிற்கும் இதரக் கடற்கரைப் பட்டினங்களுக்கும் செல்லும் சகடப் பெருவழிகளிலும் இராஜபாட்டைகளிலும் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டது.

---

[62] முதலாம் இராஜராஜரின் பெயரால் அழைக்கப்பட்ட மிகச்சில திருக்கோயில்களுள் குஹநாதேஸ்வரமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

பல காலமாகத் தூர்வாரப்படாமலிருந்த நீர் நிலைகள் தூர்வாரப்பட்டன. மதகுகள் சீர்செய்யப்பட்டன. ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டன. காலகாலமாக விவசாயத்தில் ஈடு பட்டிருந்தாலும் அத்துணை அக்கறையாக நீர்நிலைகளைப் பேணும் மரபு அதுவரை நாஞ்சில் நாட்டில் இருந்ததில்லை. இத்தனை பராமரிப்பு இருந்தால் வருடத்திற்கு மூன்று போகம்கூட எடுத்துவிடலாம் போலிருக்கிறதே? என்று பொதுமக்கள் மகிழ்ந்து போனார்கள்.

திண்டில் ஒய்யாரமாக அமர்ந்து வெற்றிலையைக் குதப்பியபடி ஊர்க்கதைகளைப் பேசிக்கொண்டிருக்கும் நாடு வாழிகளுக்கும் ஓயாமல் பயணப்பட்டு அனைவரையும் வேலை வாங்கிக் கொண்டிருக்கும் சோழப்பேரரசருக்குமான வேறுபாடுகள் அவர்களுக்கு மெல்ல மெல்லப் புரிந்தன. அவரது கவர்ச்சிகரமான தோற்றமும் ஆதரவான அணுகுமுறையும் அனைவரையும் மதித்து நடக்கும் பண்பும் மக்களிடையே மரியாதையைத் தோற்றுவிக்கலாயிற்று. இத்தனை வேகமாகப் பம்பரம் போன்று சுழலும் நிர்வாகியரையோ அதிகாரிகளையோ நாஞ்சில் நாடு அதுவரை கண்டதில்லை. அந்நியர்கள்தாம். என்றாலும் ஒன்றும் செய்யாமல் வருடாவருடம் திறை[63] மட்டும் வாங்கிக்கொண்டு செல்லும் நாடுவாழிகளுக்கு இந்தச் சோழர்கள் எத்தனையோ மேல் போலிருக்கிறதே? என்பன போன்ற பேச்சுக்கள் எழலாயின.

இத்தகைய மனமாற்றங்கள் நாடுவாழிகளின் வயிற்றில் புளியைக் கரைத்தன என்பதைச் சொல்லவேண்டியதே யில்லை. இதெல்லாம் உங்களை மயக்க அவர்கள் செய்யும் மாய்மாலம்! பார்த்துக்கொண்டேயிருங்கள். உங்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு ஒட்டுமொத்தக் கூட்டமும் சோணாட்டுக்குத் திரும்பப் போவதை! என்று அவர்கள் ஒரு புறம் தொண்டை வறளக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது பெரும்பாலானோரிடம் எடுபடவில்லை.

அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த வேணாட்டார் ஒரு முடிவுக்கு வந்தார். சோழர்களைத் தாம் எதிர்க்கப் போவதில்லையென்றும் அவர்கள் தாராளமாக அனந்த புரத்தின் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளலா

---

[63] வரி.

மென்றும் ஓலையனுப்பினார். இதனால் அருள்மொழி வர்மருக்கும் ஒரு பெரிய தலைவலி தீர்ந்தது போலிருந்தது.

போட்டிகள் துவங்குவதற்கு ஒரு வாரம் முன்னர் நல்ல நாளில் சோழர் படை பரிவாரங்கள் கழிக்குடியிலிருந்து கிளம்பலாயின. அவர்களின் வருகை மலையாள நாட்டினரால் கர்வத்துடனும் சந்தேகத்துடனும் பயத்துடனும் எதிர்நோக்கப்பட்டது.

* * * * * * * *

காந்தளூர்ச்சாலையின் திருமாமணியம்பலத்தின் மேற்குச் சுவரில் நரசிம்மர் திருவுருவம் தீட்டப்பட்டிருந்த ஓவிய மொன்று மாட்டி வைக்கப்பட்டு அதன் மேல் பூமாலை சாற்றப்பட்டிருந்தது. இரத்தச் சிவப்பு நிறம் கொண்ட இருவாட்சி மலர்களையும் வெண்ணிற ஜாதி மலர்களையும் இடையிடையே கரும் பச்சை நிறம் கொண்ட துளசி பத்ரங்களையும் நெருக்கமாகக் கட்டி உருவாக்கப் பட்டிருந்த அந்த மாலை, அந்திமாலை நேரத்து மெல்லிய ஒளியில் கம்பீரமாக இறைவன் திருவுருவை அலங்கரித்துக் கொண்டிருந்தது. துளசி பத்ரங்களிலிருந்தும் ஜாதிமல்லி மலர்களிலிருந்தும் எழுந்த நறுமணம் அம்பலமெங்கிலும் பரவி நின்றது. மூர்த்தியின் முன்னால் பெரிய வெள்ளிக் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு அளவான வெளிச்சத்தை அறையெங்கிலும் படரவிட்டுக் கொண்டிருந்தது.

இறைவன் திருவுருவத்திற்கெதிரே பத்மாசனத்தில் அமர்ந்து கண்கள் மூடி சந்திவேளை மந்திர ஜெபத்தில் ஈடுபட்டிருந்த உடன்பிறப்புக்கள் இருவரையும் ஒருமுறை கூர்ந்து அவதானித்தார் பட்டதிரி. அவர்களின் உடல்களில் ஏற்படத்துவங்கியிருந்த குறிப்பிடத்தகுந்த மாறுதல்கள் அவருக்குப் பெருத்த திருப்தியளித்தன. மந்திரஜெபம் நேர்மையாகவும் தீவிரமாகவும் நடந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான மறைமுக சாட்சி அது.

'நரஸிம்மாகர்ஷண மந்திரத்தை அனுதினம் உச்சாடனம் செய்து வர, உடலெங்கிலும் ஒரு பளபளப்பு உண்டாகும். கேசத்தின் நீளம் கூடும். நாசிகள் விடைக்கும். நகங்கள் கூர்மையாகும். கண்களில் செவ்வரி படரும். குரல் ஆழமாகும். பேச்சு குறையும். உடலின் எடை கூடும். நடை நிதானப்படும். பசி அதிகரிக்கும். கால்களின் ஆடுதசைகள் உறுதிப்படும்..' என்று பண்டைய குருமார்கள் வர்ணிக்கும்

அத்தனை மாறுதல்களும் அவர்களிடத்தே உருவாகிக் கொண்டிப்பதைக் காண முடிந்தது.

குறிப்பாக அச்சுதன் நம்பூதிரியின் உடலில் மாறுதல்கள் மிகத் தீவிரமாக வெளிப்பட்டதை அவர் கவனித்தார். அவனது தாடையில் படிந்திருந்த மயிர் ஜெபத்தின் அதிர்வுகளால் ஒரு சிம்மத்தின் பிடரி மயிரைப்போல் சிலிர்த்துக் குத்திட்டு நின்றது. உடன்பிறந்த சகோதரன் என்பதையும் மீறி அந்தக் கோலத்தில் அவனைப் பார்ப்பதற்கே அச்சமேற்பட்டது. எவன் வேண்டுமானாலும் இங்கே வரட்டுமடா! எத்தனை ஆள் அம்பு சேனைகளை வேண்டுமானாலும் துணைக்குக் கூட்டிக் கொண்டு வரட்டும்! நரசிம்மத்தின் துணை இருக்கும் வரை இவர்களை எவராலும் நெருங்கவே முடியாது என்று தொடை தட்டி உரக்கக் கூவவேண்டுமென்று தோன்றியது.

இது போதும். இந்தப் பிறவிக்கு இது போதும். எத்தனையோ நல்லது கெட்டது பார்த்தாயிற்று. இனியும் சம்சார பந்தம் நமக்குத் தேவையில்லை. இல்லறசுகம் நமக்கு விதிக்கப்பட்டதல்ல. அதனை அனுபவிப்பதற்காக நாம் பிறப்பெடுக்கவில்லை. நாம் இங்கே வந்த காரணம் வேறு. அது நிறைவடைந்துவிட்டது. இதோ! கண்ணின் மணிகளைப்போல் காந்தளூருக்கு அடுத்த ஆசான்கள் இருவரை உருவாக்கியாயிற்று. இனி இவர்கள் பார்த்துக் கொள்வார்கள். நாம் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. அனைத்தையும் துறந்துவிட்டு வனப்பிரஸ்தனாகிக் கானகத்திற்குச் சென்றுவிட வேண்டியதுதான்.

சப்தம் செய்யாமல் முறியிலிருந்து கிளம்ப எத்தனித்தவரின் பார்வை தற்செயலாக அம்பலத்தின் வடகிழக்கு மூலையில் படிய, அங்கே இருள் அதிகமாக மண்டியிருந்த மூலையில்.. ஒரு ஓரத்தில்....

பட்டதிரியின் முன்நெற்றியில் சரசரவென்று வியர்வைத் துளிகள் அரும்பி அவர் தரித்திருந்த சந்தனப்பொட்டை ஈரமாக்கின. இருளின் மூலையில் இரண்டு கண்கள் மட்டும் பளபளத்தபடி மூடித் திறந்து கொண்டிருப்பதைக் அவர் கண்டார். யாரது? என்று குரல் கொடுப்பதற்கு அச்சமாக இருந்தது.

"ப... ட்... ட... தி... ரி..!."

மிக மெல்லியதாக மிகக் கரகரப்பாக முறியெங்கிலும் எதிரொலித்துப் பரவும் அந்தக் குரல்.? இதயத்தின் நாளங்களை ஊடுருவி அடிவயிற்றில் கத்தி போல் பாயும் அந்தக் குரல்? பட்டதிரிக்கு மயிர்க்கூச்செறிந்தது. வந்திருப்பது அவனா?

"ஏய், யார்? யார்.. நீ?"

"நிஜமாகவே என்னைத் தெரியவில்லையா பட்டதிரி?"

அது ஓரிரு அடிகள் முன் நகர்ந்து வர, குத்துவிளக்கின் வெளிச்சம் அதன் மீது உத்தேசமாகப் படிய நிழலோவியமாக விரிந்த காட்சியைக் கண்டு திடுக்கிட்டுப் போனார் பட்டதிரி. அவனேதான்!

"நீ.. நீயா? நீ எதற்காக இங்கே வந்தாய்? இறந்து போய்ப் பிரேதமாகத் திரியும் உனக்கு தெய்வம் எழுந்தருளியிருக்கும் இந்த முறிக்குள் நுழைய என்ன தைரியம் இருக்க வேண்டும்?"

"ஹா! ஹா! ஹா! ஹா!..." - அந்த உருவம் அவரைக் காட்டிப் பழிப்பதுபோல் சிரித்தது.

"வாழ்வில் படுபயங்கரப் பாவங்களைச் செய்த நீயே தைரியமாக இங்கே அமர்ந்திருக்கும்போது உன் மனதைச் சதாசர்வகாலமும் ஆக்கிரமித்திருக்கும் நான் இங்கே வரக் கூடாதா என்ன?.. ம்??"

பட்டதிரிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவரது விழிகள் குத்திட்டு இருளை வெறித்தன.

"இதோ பார்! என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள். எனது தம்பியரை விட்டுவிடு. இந்தப் போட்டிகள் முடிந்ததும் கண்காணாத தூரத்திற்கு விலகிப் போய் விடுகிறேன் என்று உனக்குத்தான் முன்பே வாக்குறுதி கொடுத்திருக்கிறேனே? இப்போது எதற்காக வந்தாய்?"

"நீ கொடுத்த மற்றொரு வாக்கை மீறிவிட்டாயே பட்டதிரி? அதனால்தானே வந்தேன்!"

"என்ன.. என்ன வாக்கு?"

"ஹா! ஹா! ஹா! ஹா!..."

அதன் சிரிப்பில் அம்பலத்தின் நாற்சிசைகளும் குலுங்கின. பட்டதிரியின் நாவு மிதமிஞ்சிய பயத்தால் மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டு விட்டது.

"மறந்து விட்டாயா? நீ எனக்குக் கொடுத்த இன்னொரு வாக்கை நிஜமாகவே மறந்துபோய் விட்டாயா?"

"அது.."

"இந்த பயங்கரப் பிரயோகத்தை வாழ்நாளில் இனி எவருக்குமே கற்றுக்கொடுக்க மாட்டேன். இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்! என்று இருளில் கை வீசி என்னிடம் வாக்குக் கொடுத்தாயே? அதனை மறந்துபோய் விட்டாயா?"

"அது.. வந்து... என்னுடைய தம்பியர் இந்தப் போட்டிகளில் வெற்றி பெற வேண்டுமென்றால் இந்தப்.. பிரயோகம்... அவசியமென்று.."

"அதாவது.. உன் தம்பியர் எப்படியாவது வெற்றி பெற வேண்டும். அதற்காக எனக்குக் கொடுத்த சத்தியத்தை மீறத் துணிந்து விட்டாய். அப்படித்தானே?"

பட்டதிரி இருளை நோக்கிக் கைகூப்பினார்.

"இதோ பார்! வாழ்நாள் முழுவதும் நான் உன்னிடம் அனுபவித்த சித்திரவதைகள் போதும். அவர்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். அவர்களை விட்டுவிடு. எங்களின் குலத்திற்கேயுரிய மிக அற்புதமான பிரயோகம் இது. இதனை நான் இவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவில்லையென்றால் என்னுடன் அழிந்துவிடும். அதனால்தான்.."

"இதையெல்லாம் எனக்கு வாக்குக் கொடுப்பதற்குமுன் யோசித்திருக்க வேண்டும் பட்டதிரி. இப்போது நிலைமை கைமீறிப் போய்விட்டது. உன்னைப் பழிவாங்குவதென்று முடிவு செய்து விட்டேன்."

"?...??"

"பட்டதிரி!.."

சட்டென்று அந்த உருவம் அவருக்கு மிக அருகில் வந்துவிட்டது. அதன் வெப்பம் மிகுந்த மூச்சுக்காற்று அவரது முகத்தில் பட்டது. பயத்தில் உடல் கிடுகிடுவென்று நடுங்கத் துவங்கிவிட்டது.

"பட்டதிரி..! காலன் காந்தளூர்ச் சாலைக்குள் நுழைந்து விட்டான். அவனை நான்தான் அனுப்பி வைத்தேன்."

"அருள்மொழிவர்மன் இன்று காலைதானே கழிக்குடி யிலிருந்து கிளம்பியதாகச் செய்தி வந்தது?"

"ஹா! ஹா! ஹா! ஹா!..." - மீண்டும் ஒரு கோரச் சிரிப்பு. "அருள்மொழியைத்தான் காலனாக அனுப்புவேனென்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறாயா?" - காற்றாக இருந்த அதன் கரங்கள் அவரது குரல்வளையைப் பிடித்தன.

"அஹ்.. அஹ்.. என்னை விட்டு.. விடு!" - பூமியிலிருந்து ஒரங்குலத்திற்கு மேல் தொங்கிக்கொண்டிருந்த பட்டதிரிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

"சென்று பார்! காந்தளூருக்குக் காலனாக வந்திருப்பவன் யார் என்பதை வெளியில் சென்று அறிந்து கொள்!"

குரல்வளை திடீரென்று விடுவிக்கப்பட, அடுத்த கணம் பூமியில் வீழ்ந்தார். தோள்களிலிருந்த அங்கவஸ்திரம் நழுவிக் கீழே விழுந்தது. அதனைப் பொறுக்கிக் கொண்டு நிமிர்வதற்குள் உருவம் சட்டென்று மறைந்து விட்டது.

எச்சிலைத் தொண்டைக்குள் செலுத்தி ஒரு நிதானத்திற்கு வர முயன்றார் பட்டதிரி. அவரது மேனியில் ஏற்பட்டிருந்த நடுக்கம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருந்தது. அதற்கு மேலும் அங்கிருப்பது ஆபத்து என்று தோன்றியது. பேசாமல் மடைப்பள்ளிக்குச் செல்வோம். அங்கே ஆட்களின் நடமாட்டம் மிகுதியாக இருக்கும்.

சப்தம் செய்யாமல் எழுந்தவர் வாயிலை நோக்கி விரைந்தார்.

பட்டதிரியைப் பயமுறுத்திய அந்த உருவம் எது? அது அவராகவே உருவகித்துக் கொண்ட கற்பனையின் பருவுருவமா? அல்லது ஆழ்மன பிம்பங்களால் உருவாக்கப்படும் காட்சியா? என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. ஆனால் 'காலன் காந்தளூருக்குள் நுழைந்து விட்டான்' என்று அது கூறியது மட்டும் உண்மை.

அந்தி சாய்ந்துவிட்ட அந்த முன்னிரவு நேரத்தில் காந்தளூர்ச் சாலை வளாகத்துள் எவருக்கும் தெரியாமல் வேற்றுருவமொன்று பிரவேசித்து விட்டிருந்தது. வளாகத்தின்

நடமாட்டங்களிருந்து தப்பி அப்புறமும் இப்புறமும் திரும்பிப் பார்த்தபடி முன்னேறிய அந்த உருவம், நேராகத் திருமாமணியம்பலத்தின் பின்கட்டுக்குச் சென்று சாரளத்திற் கருகில் நின்றுகொண்டு தலையை மட்டும் நீட்டி எச்சரிக்கையுடன் உள்ளே எட்டிப் பார்த்தது.

44. பலமா? சுமையா?



ஏறக்குறைய மூன்று நாழிகை நேரமாகப் பத்மாசனத்தில் அமர்ந்தபடி நிருஸிம்ஹ தியானத்திலும் மந்திர ஜெபத்திலும் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த வாமனர் ஒரு வழியாக அதனை முடித்துக் கொண்டு கண்களை மெல்லத் திறந்தார். எதிரே அச்சுதன் இன்னமும் ஜெபத்தில் மூழ்கியிருப்பது தெரிந்தது. தம்மைவிட மெதுவாக மந்திர உச்சாடனம் செய்து கொண்டிருக்கிறான் போலும். அதனால்தான் தினமுமே ஓரிரு நாழிகைகள் அதிகப்படியாக அமரும்படி ஆகிவிடுகிறது. மூத்தவரும் இங்குதானே அமர்ந்திருந்தார்? எப்போது எழுந்து சென்றார்?

மடங்கியிருந்த கால்களைப் பிரித்து எழுகையில் அவரது பார்வை தமது பாதங்களில் பதிந்தது. அதுவரை சீராக ஒரு அளவுக்கு மேல் வளராத வலது பெருவிரல் நகம் சற்றே அசாதாரணமான வேகத்தில் மெல்லியதாய் முன்புறம் மடிந்து மிகக் கூர்மையாக வளர்ந்து கொண்டிருந்தது. உற்றுக் கவனிக்கையில் மற்ற நகங்களும் கூர்மை பெற்று வளையத் துவங்கியிருந்தன. ஆடுதசை நரம்புகள் புடைக்க மிக வித்தியாசமான பலத்துடன் காட்சியளித்தது. 'அதோ மனுஷ்ய: அதோ பசுஹு[64]' என்று ஆதியாசான்கள் குறிப்பிட்டவாறு பாதி மனிதனும் பாதி மிருகமுமாய்த் தாம் மெல்ல மெல்ல உருமாறிக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர் ஏற்கனவே உணர்ந்திருந்தார். அவருக்குப் பெருத்த மனவருத்தம் ஏற்பட்டது.

இது ஒரு சுமை. மிகப்பெரிய சுமை என்று தோன்றிற்று. இத்தனை பெரிய அசாதாரணமான அமானுஷ்யமான

[64] பசு என்பதற்கு சம்ஸ்கிருதத்தில் மிருகம் என்று பொருள்.

சக்தியென்பது மனிதனுக்கானதல்ல. தெய்வங்களுக்கானது. கொடிய அரக்கனை சம்ஹரிப்பதற்காகப் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இந்த சக்தியை அந்த தெய்வமே ஒரு முறைக்கு மேல் பிரயோகிக்கவில்லை. இதனைப் போய் ஒரு வரமாகத் தமது மூதாதையர் பெற்று வந்திருக்கிறார்களே?

வரமா இது? சாபம். மிகக் கொடிய சாபம். வழிவழியாய் இதனை அப்யசித்து.. காலப் போக்கில் ஒரு வீட்டாருக்கு மட்டும் உரிய பிரத்யேக இரகசியமாக இதனைக் குறுக்கி... சிவ சிவா!

தன்னிலும் முனைப்புடனும் ஒருமையுடனும் ஜெபத்தில் தோய்ந்திருக்கும் அச்சுதனின் முகத்தை ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்தார். முகத்திலிருந்து தனியே பிரிந்து சிம்மத்தின் பிடரி மயிர்போல் சிலிர்த்து நிற்கும் தாடை ரோமங்கள்... தறிகெட்டு வளர்ந்து நிற்கும் விரிசடை... எலும்புகள் துருத்திக் கொண்டு தெரிய புடைத்து நிற்கும் புஜங்கள்.. சின் முத்திரையில் முடிந்தாலும் ஓரங்குலத்துக்கு மேல் வளைந்து நிற்கும் கூரிய விரல் நகங்கள்..

அந்தக் கணத்தில் அவரைப் பெருங்கவலையொன்று பீடித்தது. இந்தப் பிரயோகத்தை அப்யசிக்கும் தகுதி தமக்கு இல்லை என்று கொண்டால் இவனுக்கு அறவே இல்லை என்று கூறவேண்டும். அச்சுதன் இரண்டும் கெட்டான் சிறுவனின் மனநிலை கொண்டவன். இந்தச் சக்தியைக் கையாள்வதற்குரிய பொறுப்புணர்வோ தகுதியோ சிறிதுமற்றவன். மென்மேலும் தன்னைப் பலமுள்ளவனாக வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதில் மட்டும்தான் இவனுக்கு என்றுமே அக்கறை இருந்து வந்துள்ளது. இந்த அசாதாரண மிருகபலம் இவனை மேலும் பொறுப்பற்றவனாக்கும். எதை வேண்டுமானாலும் செய்யலாம். யாரை வேண்டுமானாலும் வீழ்த்தலாம் என்கிற மிதமிஞ்சிய தன்னம்பிக்கையைக் கொடுக்கும். இவனுக்கு நரசிம்ம மந்திரத்தை உபதேசித்தது மூத்தவர் செய்த பெருந்தவறு.

ஒரு கணம் அச்சுதனின் முகம் பட்டதிரியின் முகமாக அவருக்கு மாறித் தெரிந்தது. ஏறக்குறைய மூப்பது முப்பத்தைந்து வருடங்களுக்குமுன் மூத்தவரும் இப்படித்தான் இருந்திருப்பார் என்று தோன்றியது. அச்சுதனைத் தனது பிரதிபிம்பமாகவே அவர் காண்கிறார். அச்சுதனும் அவரைப் பொறுத்தவரை அவரது சொல்லைத்

தட்டாத செல்லப்பிள்ளையாகவே நடந்து கொண்டிருக்கிறான்.

அச்சுதனின் இன்னொரு பக்கத்தை மூத்தவர் பார்த்ததில்லை. அல்லது பார்க்க விரும்பவில்லை. அல்லது இவனைப் போன்றே அவருக்கும் இன்னொரு இருண்ட முகம் இருக்கிறதோ என்னவோ? அதனால் தான் இவனை ஏற்றுக்கொள்வதும் அவருக்கு எளிதாக இருக்கிறதோ?

ஆனால் தாம் வேறு. தமது வார்ப்பு வேறு. தமது சிந்தனைகள் வேறானவை. இவர்கள் இருவருக்குமே வாய்க்காத ஒரு நிதானம் ஒரு விவேகம் தமக்கு வாய்த்திருக்கிறது. நான் ஆச்சாரியார் இரவிநீலியின் உதிரம். அவரின் ஒரு துளி. அவரது பரம்பரையில் அவரது அம்சத்தில் பிறந்த ஷத்ரிய பிராமணன். சத்தியத்திலும் தர்மத்திலும் முழு நம்பிக்கை கொண்டவன். முறை தவறி வாழ்வில் எதையுமே செய்தறியாத அந்தணன். எனது வாக்கில் ஒளியிருக்கிறது. நடையில் நேர்மையிருக்கிறது. மனதில் உண்மையிருக்கிறது.

இப்போதிருக்கும் நிலைமையில் நான் என்ன செய்ய வேண்டும்?

முதலில் அச்சுதனை இந்தத் தீவிர உபாசனையிலிருந்து விடுவிக்க வேண்டும். அந்தப் பெருஞ்சக்தியை இவன் போட்டிகளில் பிரயோகிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதெல்லாம் முடிகிற காரியமா என்ன? இல்லைதான். என்றாலும் மூத்தவருடன் பேசிப் பார்க்கலாம். கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுப் பார்க்கலாம். இந்த நிலைமையில் மந்திரத்தை அச்சுதன் உபாசிப்பது அவனுக்கோ நமக்கோ நல்லதல்ல. பின்னாளில் தகுந்த பக்குவம் வந்தவுடன் நானே மீண்டும் அவனுக்கு மந்திரோபதேசம் செய்து வைக்கிறேன் என்று கூறிப் பார்க்கலாம். ஒரு முயற்சி. அவ்வளவுதான்.

இடது கரத்தைத் தரையில் ஊன்றிப் பாதங்களை அழுந்தப் பதித்து மேலே எழுந்தார். உடலின் கூடியிருக்கும் எடை அவருக்குத் தள்ளாட்டத்தைக் கொடுத்தது. அடி வயிற்றில் அகோரமான பசியை உணர முடிந்தது. இதுநாள்வரை அவர் அனுபவித்திராத புதுவிதமான பசி. ஏதாவது ஒரு உயிரைப் பறித்து அதன் உதிரத்தையும் மாமிசத்தையும் கீறிக் கிழித்துப் புசிக்க வேண்டும் என்கிற மாதிரியான உணர்வுகளை எழுப்பும் பசி.

அவர்கள் மந்திர உச்சாடனம் செய்யத் துவங்கிய நாளிலிருந்தே சாலையின் மடைப்பள்ளியில் அவர்களுக்கென்று சாத்வீகமான[65] உணவைத் தயாரிக்கச் சொல்லிவிட்டார் மூத்தவர். நரசிம்ம ஜெபத்தைச் செய்து வரும் காலத்தில் சற்று இராஜஸமான உணவை உண்டாலும் ஆபத்து என்கிறார்கள். அதனால் தினமும் உப்புச் சப்பில்லாத பக்குவ உணவுதான்.

இந்தத் தண்டனைகளை இன்னமும் ஒரு அயனம் அதாவது ஆறு மாதங்களுக்கு அனுபவித்தாக வேண்டும். அதற்குப்பின் மெல்ல இதன் சுமை குறையுமாம். உடலும் பழையபடி மாறிவிடுமாம். அந்தக் கால கட்டத்தில் திருமணம் செய்து கொண்டு இல்லற சுகத்திலும் ஈடுபடுவது நல்லதாம். அதுதான் இந்த அமானுஷ்யமான சக்தியை முழுவதுமாக ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருமாம். உக்கிர நரசிம்மத்தை லக்ஷ்மி நரசிம்மமாகும் வழி. தொடையில் நிருவை ஏந்திக் கம்பீரமாக வீற்றிருந்தபடி அனைவருக்கும் அருள் பாலிக்கும் நிலை. இந்த ஒரு காரணத்திற்காகத்தான் நான் திருமணம் செய்து கொள்வதற்கே ஒப்புக்கொண்டேன் என்று மூத்தவர் குறிப்பிட்டது நினைவிற்கு வந்தது.

ஒரு நீண்ட பெருமூச்சு அவரது நாசியிலிருந்து வெளிப் பட்டது. எதிரே தெரிந்த நரசிம்மர் திருவுருவத்தை உடலின் எட்டு அங்கங்களும் நிலத்தில்படுமாறு வீழ்ந்து வணங்கினார். எழுந்தார். மெல்ல அவ்விடம் விட்டு அகன்றார்.

அவர் எழுந்து செல்வதைக் கண்கொட்டாமல் சாளரத்தின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த அந்த மர்ம உருவம், உள்ளே நுழைவதா வேண்டாமா என்று யோசித்தபடி தயங்கித் தயங்கி வெளியில் நின்றது.

மணியம்பலத்தில் மேலும் இருள் கூடியது.

* * * * * * * *

வாமனர் வெளியேறிச் சென்று ஒன்றரை நாழிகைகள் கழிந்த பின்தான் அச்சுதனால் ஜெபத்தை முடிக்க முடிந்தது.

---

[65] உணவு வகைகளை சாத்வீகம், இராஜஸம், தாமஸம் என்று மூவகையாகப் பிரிப்பது மரபு.

மெல்லக் கண்களைத் திறந்து கரங்கள் இரண்டையும் நீட்டி ஒரு முறை சுழற்றிக் கொண்டான். மடிந்திருந்த இரண்டு கால்களும் முற்றிலுமாக மரத்துப்போய் விட்டிருந்தன. பத்மாசனத்தைப் பிரிப்பதற்கே சிரமமாக இருந்தது.

தள்ளாடியபடி எழுந்து அருகிலிருந்த மூங்கில் தூணைப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் நின்றான். உடலின் இரத்தம் பரபரவென்று கால்களில் பாய்வதை உணர முடிந்தது. கண்களுக்கெதிரே மெல்லிய விளக்கொளியில் நரசிம்ம மூர்த்தியின் திருவுருவம் தெரிந்தது. இன்னும் சில நாட்களில் நானும் உன்னைப் போல் ஆகிவிடுவேன்! என்று அதனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினான்.

இது எத்தனை அற்புதமான சக்தி? இதனைக் கண்டறிந்தது நிச்சயம் தெய்வமாகத்தான் இருக்க வேண்டும். பார்க்கவ இராமன் 'எது வேண்டுமானாலும் கேள்' என்று வரம் கொடுத்தபோது இந்தப் பிரயோகத்தைக் கற்றுக் கொடுங்கள் என்று யாசித்த திரிவிக்கிர நம்பூதிரிதான் எத்தனை மகத்தான மனிதர்? வேறு எதை வேண்டுமானாலும் கேட்டிருக்கலாம். பொன்னோ மணியோ பொருளோ நிலமோ எதை வேண்டுமானாலும் யாசித்திருக்கலாம். நிச்சயம் கிடைத்திருக்கும். அவை அனைத்தையும் உதறிவிட்டு இப்படிப்பட்டதொரு அமானுஷ்யமான சக்தியை உருவாக்கும் இரகசியத்தை யாசிக்க வேண்டுமென்று அவருக்கு எப்படித்தான் தோன்றிற்றோ! அவர் மிகவும் புத்திசாலிதான்.

பார்கவ இராமனிடமே நேரடியாக மந்திரோபதேசம் பெற்று நிருஸிம்மாகர்ஷணத்தை ஒரு மண்டல காலம் தீவிரமாக அனுஷ்டித்து முழு விலங்காக மாறி நைமிசாரண்ய வனமெங்கிலும் கானக இராஜனாய் திரிவிக்கிரம நம்பூதிரி வேட்டைக்கு அலைந்து திரிவதையும் மார்பில் அறைந்து கொண்டு 'வாருங்களடா என்னுடன் மோதுவதற்கு!' என்று காட்டின் அத்தனை விலங்குகளையும் திமிருடன் சண்டைக்கு அழைப்பதையும் அவனால் கற்பனை செய்ய முடிந்தது.

வாமனன் ஒரு முழுமூடன்! இப்படிப்பட்ட சக்தியையா மறுத்தலிப்பது? நல்லவேளை. அவனது முயற்சி பலிக்கவில்லை. ஏதோ பழங்கதைகளைப் பேசி ஒரு வழியாக அவனையும் சம்மதிக்க வைத்துவிட்டார் மூத்தவர். கற்றுக் கொள்ள உனக்கு விருப்பமில்லையென்றால் வெளியில்

செல்! என்று முகத்தில் அறைந்தாற்போலக் கூறி வெளியேற்றி விட்டு தமக்கு மட்டும் இந்த மந்திரத்தைக் கற்றுக் கொடுத்திருந்தால் இன்னமும் நன்றாக இருந்திருக்கும். எப்போதும் அவரது சொல்லுக்கு எதிர்ப் பேச்சு பேசிக்கொண்டிருக்கும் வாமனனுக்கு அது தகுந்த பாடமாகவும் இருந்திருக்கும். ஏனோ செய்யவில்லை.

விளக்கொளியில் பளபளப்புடன் திமிறி நிற்கும் புஜங்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அப்பா! இத்தனை வலிமையை வாழ்வில் அனுபவித்ததில்லை. ஒரே ஒரு அறை போதும். எதிராளி சுருண்டுவிடுவான். இன்னும் ஒரு வாரம். ஒரே ஒரு வாரம். அதன் பிறகு...

"அச்சுதா!"

அம்பலத்தின் இருளைக் கிழித்துக்கொண்டு எழுந்த மெல்லிய அழைப்பொலி அவனைத் திடுக்கிட வைத்தது. என்ன, எதிரில் அமர்ந்திருக்கும் நரசிம்மமா நம்முடன் பேசுகிறது என்று அதிர்ச்சி ஏற்பட்டது. அத்தனை தீவிரமாகவா நாம் அப்யசித்துக் கொண்டிருக்கிறோம்?

"அச்சுதா! இங்கே பார்.. நான்தான்."

நல்லவேளை. பேசுவது நரசிம்மமில்லை. பின்கட்டுச் சாளரத்திலிருந்துதான் குரல் எழுகிறது. யாரது இந்த நேரத்தில்?

"நான்தான் என்றல்.. யாரது?"

"அச்சுதா! நான்தான் மலையனூரன்."

என்ன மலையனூரரா? இந்த வேளையிலா? எதற்காக வந்திருக்கிறார்?

"வாயில் வழியாக உள்ளே வாருங்களேன்? ஏன் இத்தனை ஒளிவு மறைவு?"

"காலம் கெட்டுக் கிடக்கிறது. நான் வந்திருப்பது இங்கிருக்கும் வேறு எவருக்குமே தெரியக்கூடாது. உன்னை மட்டும் தனியே சந்திக்கலாமென்று வந்தேன். வேறு எவரும் நான் சொல்லப்போவதைப் புரிந்து கொள்வார்களென்று தோன்றவில்லை."

ஒரு நீண்ட போர்வையை முக்காடாகப் போர்த்திக் கொண்டு உள்ளே நுழைந்தார் மலையனூரன். முறியின் பரவியிருந்த குறைவான விளக்கு வெளிச்சத்தில் அவரது

தோற்றம் படுபயங்கரமாகக் காட்சியளித்தது. முகத்தில் பல நாள் தாடி மீசை. நெற்றியிலும் கன்னங்களிலும் இரத்த காயங்கள். குழி விழுந்த கண்கள். சாப்பிட்டு எத்தனை நாட்கள் ஆயிற்றோ!

"ஐயோ! எத்தனை அலங்கோலமாகக் காட்சியளிக்கிறீர்கள்? முதலில் இங்கே அமர்ந்து சிறிது நேரம் இளைப்பாறுங்கள். உணவு எடுத்துக்கொண்டு வரவா?"

"ஒன்றும் வேண்டாம். நான் அதிக நேரம் இங்கிருப்பது ஆபத்து. பல்வேறு சிரமங்களையும் மீறி நான் இங்கே வந்தது உன்னைச் சந்தித்து முக்கியமானதொரு செய்தியைச் சொல்வதற்குத்தான்."

"என்னை எதற்காகச் சந்திக்க வேண்டும்? மூத்தவரைச் சந்திக்க வேண்டியதுதானே?"

"இல்லை. அவருக்கு நான் கூறப்போவது புரியுமென்று தோன்றவில்லை. ஆனால் நீ புரிந்துகொள்வாயென்ற நம்பிக்கை இருக்கிறது."

அச்சுதன் அவரை ஏற இறங்கப் பார்த்தான். மூத்தவருக்குக் கூடத் தெரியாத இரகசியம் தமக்குத் தெரியப் போகிறதா என்ன? பலே பலே! அச்சுதா.. நீ இன்னமும் உன்னைச் சிறுபிள்ளையாகவே எண்ணிக்கொண்டிருக்கிறாய். அதனால்தான் தமையன்களின் வாலைப் பிடித்தபடி எந்நேரமும் சுற்றிக்கொண்டிருக்கிறாய். அது தவறு. உன்னைத் தனியே கவனிப்பதற்கும் மதிப்பதற்கும்கூட ஆட்கள் இருக்கிறார்கள். உன்னிடம் மட்டும் பேச வேண்டுமென்று உன்னைத் தேடி வருகிறார்கள். காலம் மாறிக் கொண்டிருக்கிறது.

ஆனால் படுமோசமான கோலத்தில் அகால நேரத்தில் எவருக்கும் தெரியாமல் வந்து சேர்ந்திருக்கும் இவரை எவ்வாறு நம்புவது? எதையாவது சொல்லித் தம்மை ஏமாற்றுவதே இவனது நோக்கமாக இருந்தால்? எதற்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏதாவது விஷமம் செய்யத் துணிந்தால் பளீரென்று கன்னத்தில் அறைந்து ஒரே கணத்தில் சம்ஹரித்துவிட வேண்டியதுதான்!

"குடிப்பதற்குச் சிறிது நீர் கிடைக்குமா?" என்றார் மலையனூரர் பரிதாபமாக. அவருடைய நிலை அச்சுதரின் மனதைப் பிழிந்தது. சிறிது காலத்திற்குமுன் இராஜாதி

இராஜனாகப் பட்டமேற்றவரின் நிலை இப்படியா ஆக வேண்டும்?

"இந்தாருங்கள்."

அவர் மடமடவென்று குவளை நீரையும் வெறியுடன் குடித்து முடித்தார்.

"அச்சுதா! எனக்கு அதிக அவகாசமில்லை. சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டுக் கிளம்பி விடுகிறேன். கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்வதென்று சொல்லிக் கொண்டு சோழன் இங்கே படைகளுடன் வந்து கொண்டிருக்கிறானல்லவா? உண்மையில் அவனது நிஜ நோக்கம் வேறு!"

"?"

"போட்டிகள் மட்டும்தான் நோக்கமெனில் அவன் தனியே வரவேண்டியதுதானே? கூடவே இரத-கஜ-துரக-பதாதிகள் எதற்கு? ஆள் அம்பு சேனைகள் எதற்கு?"

நியாயமான கேள்வியென்று தோன்றியது. மலையனூரன் அவரது பதிலை எதிர்பாராமல் மேற்கொண்டு பேசிக் கொண்டு சென்றார்.

"போட்டிகளில் கலந்துகொள்ளப் போவது இரண்டு சோழ வீரர்கள் என்கிறார்கள். கூடவே அருள்மொழிவர்மன் வரட்டும். தன்னுடன் பத்து பதினைந்து சேவகர்களையும் வேண்டுமானால் கூட்டிக்கொண்டு வரட்டும். ஆயிரக் கணக்கான வீரர்களுக்கு இங்கே என்ன வேலை?"

"அத்தனை பெரிய சைனியமா வந்து கொண்டிருக்கிறது?"

"நேரில் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் அச்சுதா! அதனைக் கண்டு விட்டுத்தான் வாயுவேக மனோவேகமாக அனந்தபுரத்திற்குக் கிளம்பி வந்தேன்."

"சோழனின் உத்தேசம்தான் என்ன?"

"வேறென்ன? கலமறுக்கும் போட்டிகளுக்காகக் காந்தளூரில் கூடியிருக்கும் நான்கு சாலைகளின் ஆசான்களையும் சட்டர்களையும் ஒரே இடத்தில் வைத்துத் தீர்த்துக் கட்டுவதுதான்! மலைநாட்டின் நான்கு போர்ப் பயிற்சி மையங்களையும் ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்ட இதனினும் சிறந்த வழி கிடையாது."

அச்சுதனின் மண்டை குழம்பியது. அவசர புத்தியையும் ஆத்திரத்தையும் இயல்பாகவே கைவரப்பெற்றிருந்த அந்த இளைஞர், இந்தத் தகவலால் மேலும் உஷ்ணமடைந்தார். தமக்குக் கிடைத்திருக்கும் நரசிம்மாகர்ஷணத்தின் சக்தியுடன் சோழசேனையை இப்போதே எதிர்கொண்டு அனைவரையும் துவம்சம் செய்துவிட்டு வரலாமா என்று உடனடியாக ஒரு ஆவேசம் தோன்றி மறைந்தது. இல்லை. இப்போது அவசரப்பட்டால் காரியம் கெட்டுவிடும். இன்னும் ஜெபம் முடிவதற்கு ஏழு நாட்கள் உள்ளன. அது முடியட்டும். அதன் பிறகு வைத்துக் கொள்வோம்.

"நீங்கள் கூறுவதைப்போல் அது அத்தனை சுலபமான காரியமல்ல. ஒவ்வொரு சட்டனையும் பட்டனையும் வெட்டி வீழ்த்துமுன் சோழர்கள் தங்கள் பக்கத்திலிருந்து நான்கு உயிர்களையாவது காவு கொடுத்தாக வேண்டும்.."

"சுலபமில்லைதான். ஆனால் தந்திரமாக வேலை செய்தால் அதனை நிறைவேற்றிவிடலாம். கலமறுக்கும் போட்டிகளில் ஏதேனும் குழப்பத்தை விளைவித்து அந்தச் சந்தர்ப்பத்தில் சோழ வீரர்களை சாலைக்குள் வரச் செய்து அவன் அதனை சாதிக்க முயலலாம்."

"வேணாடுடையவருக்கு இது தெரியுமா?"

"நன்றாகத் தெரியும். அவரையும் சந்தித்து விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். இந்த ஆபத்து அவருக்குப் புரிந்தாலும் சோழர்களை எதிர்க்கும் மனோநிலையில் தற்போது அவர் இல்லை. வள்ளுவ நாடுவாழியின் தலைமையிலான பாண்டிக் கூட்டணியில் முழுவதுமாக நம்பிக்கையிழந்து விட்டார். பெருமாளுக்கு அவரச அவசரமாக ஓலையனுப்புவதைத் தவிர அவரால் வேறொன்றும் செய்யமுடியவில்லை. பெருமாளும் என்ன செய்வாரோ தெரியாது. அதற்குள் நிலைமை கைமீறிப்போய் விட்டால்? ஆபத்து. அதனால்தான் உன்னைச் சந்தித்து எச்சரித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

"சரி. இம்மாதிரியான விவகாரங்களை எப்போதும் கையாள்பவர் மூத்தவரேயல்லவா? அவரை விட்டுவிட்டு என்னிடம் தனிமையில் இந்தப் பிரச்சனையைப் பேசுவானேன்?"

அச்சுதனின் தோள்களில் தமது கரங்களை வாஞ்சையுடன் பதித்தார் மலையனூரர்.

"எங்களின் காலம் முடிந்து விட்டது அச்சுதா. முடிந்து விட்டது. இனி மேற்கொண்டு நடக்கப்போகும் பணிகளை அடுத்த தலைமுறையைச் சேர்ந்த நீங்கள்தான் முன்னின்று நடத்தியாக வேண்டும். மூத்த நம்பூதிரி எல்லாவற்றையும் உங்களிருவரிடமும் ஒப்படைத்துவிட்டுச் சாலையிலிருந்து வெளியேறிவிடும் விரக்தியான மனோநிலையில் இருக்கிறார். அவரிடம் இதையெல்லாம் கூறினால் மேலும் வருத்தம்தான் மிஞ்சும். இந்தச் சாலையைக் காக்க வேண்டிய பொறுப்பும் திறமையும் இனி உங்களிருவருக்கும் மட்டுமே உள்ளது. அதனை உணர்ந்ததால்தான் உன்னிடம் வந்தேன்."

இவன் கூறுவது உண்மையாக இருக்கும் பட்சத்தில் ஒருவருக்கும் தெரியாமல் சோழருக்கெதிராக ஒரு வியூகம் அமைப்பதே சரியான வழியாக இருக்குமென்று அச்சுதனுக்குத் தோன்றியது. ஒருவருக்கும் தெரியாமல் கண்ணும் கண்ணும் வைத்தாற்போல ஒரு வியூகம். சோழர்கள் தாக்குதலைத் துவக்கும் பட்சத்தில் சட்டென்று உயிர்பெற ஆயத்தமாக இருக்கும்படியான ஒரு வியூகம்.

இதனை வாமனனுடன் கலந்தாலோசிப்பது உசிதம்தானா? ம்ஹூம். மலையனூரன் கொடுக்கும் தகவல் உண்மையானதென்று எவ்வாறு நம்புவது? சோழன் இப்படியெல்லாம் முறைகெட்டு நடக்கக்கூடியவனில்லயே? என்று ஆயிரம் கேள்விகள் கேட்டு அவனும் குழம்பி நம்மையும் குழப்பி இந்த முயற்சியையே நீர்த்துப்போகச் செய்து விடுவான். ஆக இந்த முயற்சியை நாமே மேற்கொள்ள வேண்டியதுதான்.

"மலையனூரரே! நீங்கள் சொல்லும் தகவல்களை இன்னமும் என்னால் முழுமையாக நம்பமுடியவில்லை. அதே சமயம் இப்படிப்பட்ட கேடுகெட்டதொரு குறிக்கொளுடன் சோழன் காந்தளூருக்குப் படையெடுத்து வருவது ஒரு வேளை உண்மையாக இருந்து விட்டால் அதனை எதிர்கொள்ள உரிய முறையில் ஏற்பாடுகளைச் செய்து வைப்பதுதான் புத்திசாலித்தனமென்று என் மனதிற்குப் படுகிறது. இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் எதுவுமின்றிப் போட்டிகள் நல்லமுறையில் நடந்து முடிந்து விட்டால் அனைவருக்குமே நல்லது. ஆனால் இடையே சோழர்கள் தங்களின் விஷமங்களைக் காட்ட முயன்றால் அதற்குத் தகுந்த பதிலடி கொடுத்துத்தான் ஆகவேண்டும்."

"இத்தனை இளைய பிராயத்தில் உனக்கிருக்கும் பக்குவம் எனக்குப் பிரமிப்பூட்டுகிறது! உனது முயற்சிக்கு என்னாலான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்த நிலைமையிலும் எனக்கு விசுவாசமாக இருக்கும் வள்ளுவநாட்டு வீரர்கள் சிலர் உண்டு."

"அப்படியெனில் நான் கூறப்போவதைக் கேளுங்கள். காந்தளூரில் மொத்தம் நான்கு கலங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு என் கட்டுப்பாட்டிலும் இரண்டு வாமனரின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இந்த நான்கு கலங்களிலும் என் சொல்லைக் கேட்டு நடக்கக்கூடிய நூறு நூற்றியிருபது சட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் தனியே சந்திக்கிறேன்.." என்று துவங்கி மெல்ல மெல்லத் தனது வியூகத்தை வகுக்கலானார் அச்சுதன் நம்பூதிரி.

அடுத்த அரை நாழிகை நேரத்தில் தாம் வந்த வேலை செவ்வனே நிறைவேறிவிட்டதை உணர்ந்தார் மலையனூரன். அடுத்த தலைமுறையின் மனதில் பகை எனும் தீப்பொறியை விதைத்தாயிற்று. இனி அது பற்றிக்கொண்டு எரிவதற்கான சூழலை உருவாக்க வேண்டும். பின் பலப்பல காலங்களுக்கும் அது நின்று நிதானமாக எரியும். அவ்வப்போது நெருப்புக் கங்குகளைத் தூண்டிவிட்டு.. சில விறகுத் துண்டங்கள் சேர்த்து.. புகை மண்டும்போதெல்லாம் தணல் அணைந்து போய் விடாமல் பார்த்துக் கொண்டால் மட்டும் போதுமானது.

அருள்மொழி! என்னுடைய தாய்நாட்டிலிருந்து என்னையே விரட்டியடித்தாய் அல்லவா? என்னுடைய அரசியல் வாழ்வைச் சூனியமாக்கிவிட்டாய் அல்லவா? உன்னை நான் எப்படி விரட்டுகிறேன் பார்! காந்தளூரிலிருந்து அழியாத கறையுடன் உன்னையும் உன் சுற்றத்தையும் ஓட ஓட விரட்டுகிறேன் பார்! என்று வான் பார்த்துக் கொக்கரித்தது அவர் மனம்.

காந்தளூர் மகாதேவர் அம்பலத்தில் சாயரட்சைப் பூஜையை முடித்துக்கொண்டு கருவறையின் கதவுகளை மூட முற்பட்ட மேல்சாந்தி, லிங்கத் திருவுருவிற்கு முன்னால் ஏற்றப்பட்டிருந்த நெய் விளக்குகள் காரணமேயின்றிச் சிலிர்த்துக் கொள்வதை உணர்ந்தார்.

பெருத்த கவலையடைந்தார்.

45. மஹாசாலை ஆசான்கள்



கழிக்குடி வளாகம் அந்த அதிகாலை நேரத்தில் வழக்கத்திற்கு மாறாக அதிகப் படியான நடமாட்டங்களுடன் காணப் பட்டது. வளாகத்தின் பெருவாயிலுக்கு முன்னால் தம்புராட்டியாரின் இரதமும் அதனையொட்டி இரு புரவி வண்டிகளும் அனந்தபுரத்திற்குப் புறப்படுவதற்கு ஆயத்த மாகிக் கொண்டிருந்தன. அவற்றில் பூட்டப் பட வேண்டிய நான்கு புரவிகளையும் சோழ தேசத்து வீரர்களிருவர் சாலையின் பின்கட்டில் அமைந்திருந்த குதிரைக் கொட்டிலிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

புல்லும் கொள்ளும் உண்டு நீண்ட நேரம் நின்று கொண்டே உறங்கி நல்ல ஓய்வைப் பெற்றிருந்ததால் அந்தப் புரவிகள் நான்குமே பிரயாணத்திற்கு உகந்தவையாகக் காட்சியளித்தன. இரதத்திற்கருகில் காத்திருந்த இரதசாரதி, அவற்றுள் இரண்டைத் தேர்வு செய்து இரதத்தின் முன்புறம் பூட்ட முற்பட்டான். மீதமிருந்த இரு புரவிகளையும் வண்டிக்காரர்கள் தத்தம் வண்டிகளில் பூட்டிக் கடிவாளமிட்டார்கள்.

"கிளம்புவதற்கு இன்னும் சற்று நேரமாகுமல்லவா?" என்று வண்டிக்காரன் புரவிகளை அழைத்து வந்த வீரர்களை வினவினான்.

"அப்படித்தான் தெரிகிறது. அனைவரும் களரியில் வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குள் உள்ளேயிருக்கும் மூன்று பெரிய பெட்டிகளை நான் எடுத்துக்கொண்டு வந்து வண்டிகளில் ஏற்றியாக வேண்டும். எதற்காகக் கேட்கிறாய்?"

"பெரிதாக ஒன்றுமில்லையப்பா. தளிகையறைக்குச் சென்று சம்பங்கியிடம் பழைய வெற்றிலைகள் கிடைத்தால் வாங்கிக்கொண்டு வந்து விடலாமே என்று பார்த்தேன். வாய் நமநமக்கிறது" என்று தலையைச் சொறிந்தபடி காவிப் பற்களைக் காட்டிச் சிரித்தான் வண்டிக்காரன்.

"சரி, போய்விட்டு வா. அப்படியே எனக்கும் கொஞ்சம் வெற்றிலையும் பாக்கையும் பொட்டலமாக வாங்கி மடித்துக் கட்டிக்கொண்டு வந்துவிடு. சுண்ணம் வேண்டாம்! அவள் கொடுக்கும் காரச் சுண்ணத்தை நாக்கில் வைத்தால் நாவு பொத்துக் கொண்டு விடுகிறது."

"நல்லது. ஒரே நிமிடத்தில் ஓடிவந்து விடுகிறேன். அதுவரை வண்டிகளைப் பார்த்துக்கொள்.." என்றபடி தலைப்பாகையை அவிழ்த்துவிட்டுச் சாலைக்குள் ஓடினான் வண்டிக்காரன். வெற்றிலை கிடைக்கப்போகும் மகிழ்ச்சி அவனது ஓட்டத்தில் உற்சாகத் துள்ளலாக வெளிப்பட்டது.

இத்தகைய புறப்பாடு தடபுடல்களால் சிறிதும் பாதிக்கப் படாமல் வளாகத்தின் மூலையில் அமைந்திருந்த குழிக்களரி அமைதியுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. களரியினுள் குத்து விளக்கேற்றப்பட்டுப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த குருதாரைக்கு முன்னால் அர்த்த பத்மாசனத்தில் தனியே அமர்ந்திருந்தார் தம்புராட்டியார். நீராடிவிட்டுப் புத்தாடைகள் புனைந்து அணிகலன்களுடன் காட்சியளித்த அவரது திருமேனியிலிருந்து சந்தனமும் குங்குமமும் கலந்த ஒருவித நறுமணம் எழுந்து களரியெங்கிலும் பரவிப் படிந்திருந்தது. அவரது திருமுகம் வர்ணனைகளுக்கு அப்பாற்பட்டதொரு பெருஞ் சோபையுடன் திகழ்ந்தது. கரங்கள் அஞ்சலி ஹஸ்தத்தில் குவிந்திருந்தன. கண்கள் மூடியிருந்தன. அதரங்கள் குருஸ்துதியை மெல்ல முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

சலனங்கள் எதுவுமற்ற ஆழ்கடலைப்போல் பேரமைதியில் உறைந்திருந்த அவரது மனத்திரையாகிய நீலவானில் பஞ்சு பஞ்சாய் வெண்மேகங்கள் திரண்டன. அம்மேகக்கூட்டங்களுக்கிடையே சாலையின் பண்டைய ஆசான்கள் ஒவ்வொருவராக சூட்சும ரூபத்தில் ஆவிர்பவிக்கலானார்கள்.

முதல் வரிசையில் நான்கு பேர். அதற்கடுத்த வரிசையில் ஆறு பேர். அதற்கடுத்த வரிசையில் பத்து பேர். அதற்கடுத்த வரிசையில் பதினான்கு பேர். அதற்கடுத்த வரிசையில் இருபத்தியாறு பேர் என்று அந்தக் கூட்டம் நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டேயிருந்தது. சுற்றிலும் திரண்டு நின்ற வெண் மேகங்களின் அலைச்சலுக்குப் போட்டியாக அவர்களின் தோள்களில் புரண்டு கொண்டிருந்த வெண்

பட்டு அங்கவஸ்திரங்கள் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன.

விழிகளில் கூர்மையுடன் கரங்களில் வெவ்வேறு ஆயுதங்களுடன் முடிந்து கட்டிய முன்குடுமியுடன் நெற்றியில் திருநீறும் சந்தனமும் துலங்க நீலவானின் பின்னணியில் நூற்றுக்கணக்கான பேராசான்கள் ஒருங்கே கூடி நின்ற அந்தக் காட்சியை பிரமித்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார் தம்புராட்டியார். அவர்கள் அனைவருமே தம்மை ஒரு வித எதிர்பார்ப்புடனும் புன்னகையுடனும் கூர்ந்து நோக்கி நிற்பதைக் கண்டு துணுக்குற்றது அவர் மனம். அவரது குவிந்திருந்த கரங்கள் மேலும் உயர்ந்தன.

பேராசான்களே! பெருஞ்சாலைப் பிதாமகர்களே! இந்த நிறுவனத்தை ஸ்தாபிதம் செய்த மகாத்மாக்களே! உங்களை வணங்குகிறேன். உம்மைவிடப் பிராயத்திலும் அனுபவத்திலும் வித்தையிலும் மிகச் சிறியவளாகிய நான், எனது இருபத்தியிரண்டு வருடப் பயிற்சிகளையும் முயற்சிகளையும் இந்தக் கணத்தில் உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன். எம்மை ஆசீர்வதிப்பீர்களாக. எமது முயற்சிகளுக்குத் துணை நிற்பீர்களாக.

உங்களின் ஞானமாகிய ஜீவசக்தி இந்தக் கணத்தில் எங்களின் மேல் இறங்கட்டும். உங்களின் விவேகமாகிய பேராற்றில் எங்களின் இதயங்கள் நனையட்டும். உங்களின் வித்தையாகிய பெருநெருப்பு அக்கினியாய் ஜ்வாலையாய் எங்களைச் சூழ்ந்துகொள்ளட்டும். காலகாலமாக இந்த மண்ணைக் காத்து வந்த புனிதர்களே! உங்களின் தாள் பணிகிறோம். எமது முயற்சிகளை வாழ்த்துங்கள். உங்களின் நல்லாசிகளை எம்முடன் அனுப்பி வையுங்கள். எங்களின் தவறுகளையும் பிழைகளையும் பொறுத்து இந்தப் போட்டிகளில் எம்மை வெற்றிபெறச் செய்யுங்கள். ஓம்...

உதடுகளால் உச்சரிக்கப்படாமல் மனதின் அடியாழத்தி லிருந்து மௌனமாய்ப் பேரொலியாய் எழுந்த அந்தப் பிரணவாகாரமும் பிரார்த்தனையும் பெருத்த ரீங்காரத்துடன் அகில உலகையும் சுற்றி வந்தன. கூடி நின்ற ஆசான்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மெல்லிய குரலில் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

முதல் வரிசையில் நின்ற நால்வருள் இடப்பக்க ஓரத்தில் நின்றிருந்தவர் பிராயத்தில் இளையவராகத் தெரிந்தார். மற்ற மூவரும் தம்புராட்டியாரைச் சுட்டிக்காட்டி எதையோ கூற,

அந்த இளைய ஆசான் தமது மார்பில் கையை வைத்து ஏதோ மறுமொழி புகன்று கொண்டிருந்தார். அந்த நால்வரும்தான் பெருஞ்சாலையை நிர்மாணித்த முதல் நான்கு பிதாமகர்களாகப் போற்றப்படும் ஸ்ரீமாற நம்பூதிரி, ஸ்ரீவிக்கிரம நம்பூதிரி, வரகுண நம்பூதிரி மற்றும் பலராம நம்பூதிரியாக இருக்க வேண்டுமென்று தோன்றியது. 'மஹாசாலோ பிதாமகஹ' என்று அத்தனை சுவடிளும் மிகுந்த மரியாதையுடன் குறிப்பிடும் பேராசான்கள் இவர்கள்தானா?

அவர்களின் ஆலோசனை அடுத்த சில கணங்களில் ஒரு முடிவுக்கு வர, அந்த இளையபிராயத்தவர் நிதானமாகத் தம்புராட்டியாரை நோக்கி நடந்து வரலானார். ஆஜானுபாகுவான உருவம். ஆறடிக்கும் மேற்பட்ட உயரம். அள்ளி முடியப்பட்டிருந்த முன்குடுமி. முகத்தில் மெல்லிய தாடி மீசை. வலது கரத்தில் நீண்ட வில். முதுகில் அம்பறாத் துணி. தோள்களிலிருந்து கீழிறங்கி நிவிதமாக வலப்புறம் பிரம்ம முடிச்சிடப்பட்டிருந்த வஸ்திர யக்ஞோப வீதம்.

சிம்மத்தையொத்த கம்பீரத்துடன் அடிமேல் அடி வைத்து அவர் நிதானமாக நடந்து வரும் அழகை விழிமூடாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாமென்று தோன்றியது. அருகில் வந்ததும் அவரது இடமார்பில் கலப்பைச் சின்னம் பெரிதாகப் பச்சை குத்தப் பட்டிருந்ததைக் கவனிக்க முடிந்தது. கலப்பை? எதற்காகக் கலப்பை? ஓ! இது கோட்டைத்தளி வீட்டின் சின்னம். மாளிகைப்புரத்து வீட்டிற்குக் கூர்மத்தைப் போலக் கோட்டைத்தளி வீட்டிற்குக் கலப்பைதான் சின்னம். ஆகச் சந்தேகமேயில்லை. இவர் சாட்சாத் பலராம நம்பூதிரியே தான்! கோட்டைத்தளி கிருகார்சிதனும் மூழிக்குளத்து குருவின் பௌத்திரனும் ஸ்ரீகிருஷ்ண நம்பூதிரியின் புத்திரனுமான பேராசான் பலராம நம்பூதிரி. கல்வியில் கரை கண்டவர். வித்தையில் நிகரற்றவர் என்று ஒருவர் விடாமல் போற்றும் பலராம நம்பூதிரி. தெய்வமே..

தம்புராட்டியாருக்கு வியர்க்கத் தொடங்கியது. இனியும் அமர்ந்திருப்பது மரியாதையல்ல. எழுந்து நின்று சாஷ்டாங்கமாக வணங்குவதுதான் முறை என்று தோன்றியது. கரங்களை ஊன்றி எழுந்திருக்க முற்படுவதற்குள் சரேலென்று கண்ணிமைக்கும் நேரத்தில் அருகில் நெருங்கி வந்து நின்று விட்டார் அந்த மனிதர்.

அவரை ஏறெடுத்துப் பார்ப்பதற்கே அச்சமாக இருந்தது. தலைகுனிந்து பாதங்களையாவது தரிசிக்கலாமென்றால் அவை மேகப்பொதிகளுக்குள் மறைந்திருந்தன.

ஆசானின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை அரும்பியது. வலக்கரத்தில் பிடித்திருந்த வில்லினை அவர் தோள்களில் மாட்டிக் கொண்டார். நிதானமாகத் தம்புராட்டியாரை நெருங்கி வந்து தமது ருத்திராட்ச கங்கணங்கள் தரித்த திருக்கரங்கள் இரண்டையும் உச்சந்தலையில் அழுத்தமாகப் பதித்தார்.

அவ்வளவுதான்! சிலீரென்று ஏதோ ஒரு பெருஞ்சக்தி தலையில் இறங்கிப் பரபரவென்று உடலெங்கிலும் பாய்ந்து பரவிற்று. குருதாரையின் இருமருங்கிலும் ஏற்றப்பட்டிருந்த விளக்கின் தீபச்சுடர்கள் நடுநடுங்கின. களரியிலிருந்து மெல்லிய அதிர்வுகள் சரேலென்று வெளிக்கிளம்பி நாற்திசைகளிலும் பாய்ந்து பரவின. சுற்றுவட்டாரங்களில் முளைத்திருந்த செடிகொடிகள் காற்றேயில்லாமல் படபடத்துக் கொண்டன. களரிக்கு மேல் உச்சிவானில் பறந்து கொண்டிருந்த புள்ளினங்கள் கணநேரம் ஏதோ தாக்குதலுக்குள்ளாகிப் பயந்து நடுங்கிப் பாதை மாறின.

சாலையில் தத்தம் முறிகளில் பிரயாணத்திற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த நண்பர்களின் நெற்றிப் பொட்டில் ஒரு கணம் சுரீரென்று வலி தோன்றி மறைந்தது. எங்கிருந்தோ ஏராளமான அதிர்வுகள் புருவ மத்தியின் வழியாக வெறியோடு உள்ளே பாய்ந்து ஓடுங்குவதைப்போல் தோன்றியது.

அடுத்த கணமே தமது கரங்களைத் தம்புராட்டியாரின் தலையிலிருந்து பலராம ஆசான் மீட்டுக் கொள்ள, ஒன்றும் நடவாததுபோல் அனைத்தும் இயல்புக்கு வந்தன. மெல்ல எழுந்து நின்று ஆசானை வணங்கி நின்றார் தம்புராட்டியார். உடல் மிகவும் இலேசாகி ஒரு பறவையின் சிறகைப்போல் காற்றில் மிதந்து கொண்டிருந்தது. தாமும் அந்த மேக உலகிற்குச் சென்று விட்டோமா என்ன?

"ரேணுகா!" - அப்பா! எத்தனை ஆழமான அமைதியான அழகான கனமான குரல்?

"ஆசானே.."

"ரேணுகா! நான் சொல்லப்போவதை மிகக் கவனமாகக் கேள். காந்தளூரில் உங்களுக்கெதிராகப் பலவிதமான

ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள சட்டன்களை எதிர்கொள்வது உங்களுக்கு அத்தனை எளிதாக இருக்கப் போவதில்லை."

"..."

"குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் ஒரு மனித மிருகம் உங்களைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்குவதையே நோக்கமாகக் கொண்டு முழு வேகத்தில் ஆயத்தமாகி வருகிறது. அதனை எதிர்கொள்வது மிகக் கடினம்."

"....."

"ஆனால் உங்களுக்குப் பின் உங்கள் முயற்சிகளுக்குப் பின் நாங்கள் அனைவரும் துணையிருப்போம். எங்களின் ஜீவசக்தி இப்போது உங்கள் உடலில் பாய்ந்துவிட்டது. அது உங்களைக் காப்பாற்றும். அது உங்களுக்கு வழிகாட்டும். ஆகவே என்ன நடந்தாலும் கலங்காதே. எந்த நிலையிலும் நிதானத்தைக் கைவிடாதே. உன்னுடைய தன்னம்பிக்கைதான் உன் சீடர்களின் பலம். நீ நம்பிக்கையிழந்து விட்டாயானால் அவர்கள் தோற்பது நிச்சயம்.. புரிகிறதா?"

"புரிகிறது ஆசானே. எந்நிலையிலும் எந்நேரத்திலும் நம்பிக்கையைக் கைவிடேன்."

"இன்னுமொரு செய்தி" - அவர் மேலும் நெருங்கி வந்து வாஞ்சையுடன் தோளில் வலக்கரத்தைப் பதித்தார்.

"இந்தப் போட்டிகளின் முடிவுகள் உனக்கு அத்தனை எளிதாக இருக்கப்போவதில்லை. எதையும் எதிர்கொள்ள ஆயத்தமாக இரு!"

எதையும் எதிர்கொள்ள ஆயத்தமாக வேண்டுமா? எதை?

அடுத்த கணம் நம்பூதிரி பளிச்சென்று மறைந்து போனார். மேகக் கூட்டங்கள் மறைந்தன. கூடிநின்ற ஆசான் கூட்டமும் மறைந்து போனது. தம்புராட்டியார் தமது கனவுலகிலிருந்து நனவுலகிற்கு வந்து சேர்ந்தார்.

களரியில் பழையபடி அமைதி சூழ்ந்தது.

* * * * * * * *

அடுத்த இரண்டு இரண்டரை நாழிகை நேரத்தில் கோட்டாற்றிலிருந்து அனந்தபுரத்திற்குச் செல்லும் சகடப் பெருவழியில் தம்புராட்டியாரின் இரதமும் புரவி வண்டிகளும் மிதமான வேகத்தில் பயணப்பட்டுக் கொண்டிருந்தன. கோட்டாற்றிலிருந்து அனந்தபுரம் பத்துப் பன்னிரண்டு காத தூரங்கள் தொலைவில் அமைந்திருந்ததால் அவர்கள் சென்று கொண்டிருந்த வேகத்தில் மாலை அல்லது முன்னிரவு நேரத்தில்தான் காந்தளூரைச் சென்றடைய முடியும்.

இரதத்திற்கு நடுவே மரப்பலகைகளால் அமைக்கப் பட்டிருந்த ஆசனத்தில் தம்புராட்டியாரும் அவருக்கு இரு பக்கங்களிலும் நமது நண்பர்களும் அமர்ந்திருந்தார்கள். ஆச்சாரியர் மஹாகாசியப தேரரால் அவர்களுடன் பிரயாணத்தில் இணைந்துகொள்ள முடியவில்லை. திடீரென்று அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே அவரைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை பிஷு ஆனந்த தேரர் ஏற்றுக்கொண்டிருந்தார். ஆகவே துறவிகள் இருவரையும் சாலையிலேயே விட்டுவிட்டுக் கிளம்ப வேண்டியிருந்தது.

களீரென்று காலைப் பொழுதின் கிரணங்கள் அந்தச் சகடப் பெருவழியில் உஷ்ணத்தைக் கிளப்பிக் கொண்டிருக்க, அதனைப் பொருட்படுத்தாமல் இரதத்தை இழுத்துக் கொண்டிருந்த புரவிகளிரண்டும் குளம்புகளணிந்த பாதங்களுடன் 'டகக் டகக்' என்று துள்ளிக் குதித்தபடி பாதையை உற்சாகமாகக் கடந்து கொண்டிருந்தன. வேணாட்டையும் நாஞ்சில் நாட்டையும் இணைக்கும் முக்கியப் பெருவழியான அந்தப் பாதையில் அந்த நேரத்தில் கணிசமான போக்குவரத்து தென்பட்டது. வியாபார நிமித்தமாகவும் அரசாங்கப் பணி காரணமாகவும் சொந்த அலுவல்களின் பாற்பட்டும் பிரயாணத்தை மேற்கொண்டிருந்த பல்வேறு மனிதர்கள் அதில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். நண்பர்கள் ஆரோகணித்திருந்ததைப் போன்ற இரதங்களை அவ்வளவாகப் பார்க்க முடியா விட்டாலும் ஒற்றைக் குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்த அலுவலர்களையும் பல்லக்கில் ஏறிச் சொகுசாகச் சென்றுகொண்டிருந்த பொருந்தனத்துப் பெண்டிரையும் வயது முதிர்ந்த வணிகர்கள் பலரையும் அடிக்கடி எதிர்கொள்ள நேர்ந்தது. பெருவழியின் இருமருங்கிலும் செழித்து வளர்ந்திருந்த புன்னை, ஆலம்,

வேலம், புளி, தென்ன முதலான பெருமரங்கள் பிரயாணிகள் அனைவருக்கும் வஞ்சனையில்லாமல் நிழலை வழங்கிக் கதிரவனின் கொடுமையிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருந்தன.

போக்குவரத்து மிகுதிப்பட்டிருந்தாலும் அந்தப் பெரு வழி நமக்கு அத்தனை அன்னியமானதாகத் தெரியவில்லை. ஏனெனில் சில காலங்களுக்கு முன் இதே பெருவழியில் காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியரான திருநாராயண பட்டதிரியுடனும் அவரது இளவல்களுடனும் பயணப் பட்டிருக்கிறோம்.

என்ன, நாம் போய்க் கொண்டிருக்கும் திசைதான் தலைகீழாகத் திரும்பி விட்டது. அப்போது காந்தளூரிலிருந்து கிளம்பிக் கோட்டாறு வழியாக விக்கிரமாதித்ய வரகுணரின் பட்டாபிஷேக வைபவத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ஆரைவாய் மொழிக் கோட்டைக்குச் சென்று கொண்டிருந்தோம். இப்போது அதற்கு நேரெதிர் திசையில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோம். யோசித்துப் பார்த்தால் நடை பெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்களும் கூட ஆரைவாய் மொழியிலிருந்து காந்தளூருக்கு ஒட்டுமொத்தமாகத் திசை மாறி விட்டனதாம். அந்த மாற்றம்தான் நமது பிரயாணத்தில் பிரதிபலிக்கிறது.

பெருவழியில் விரிந்த உற்சாகக் காட்சிகளால் அதிகம் கவரப்படாமல் இரதத்தில் அமர்ந்திருந்த பிரயாணிகள் மூவரும் வெவ்வேறு வகையான எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதனால் பிரயாணம் தொடங்கியது முதலே அவர்களுக்கிடையில் பெரிதாக எந்த உரையாடலும் நடைபெறவில்லை.

தம்புராட்டியாரின் மனோநிலை இன்னதென்று அனுமானிக்க முடியாமல் ஒருவிதமான அமைதியின்மையில் ஆழ்ந்திருந்தது. களரியில் வழிபாட்டில் அமர்ந்திருந்த நேரத்தில் அவரது மனதில் தோன்றி மறைந்த காட்சிகளை உறுதியாக வகைப்படுத்த முடியவில்லை. அவை உள்மனதிலிருந்து எழுந்த எச்சரிக்கைகள் என்று எடுத்துக் கொள்வதா? அல்லது வெறும் கற்பனையில் விரிந்த காட்சிகள் என்று விலக்கி விடுவதா?

எது எப்படியோ, நமக்கு வேளை வந்து விட்டது. இதோ அதோ என்று இருபது வருடங்களாக எதிர்பார்த்துக்

கொண்டிருந்த அந்த வேளை வந்தே விட்டது. முதுமையைப் பாராமல் முடிந்தவரை உயிரைக் கொடுத்து இவர்களுக்கு வித்தை கற்பித்தாகி விட்டது. இனி நடக்கவேண்டியவற்றை ஒரு மௌனசாட்சியாக விலகி நின்று வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்.

மனதில் குறையென்று படுவது ஒன்றே ஒன்றுதான். அந்தச் சரஸ்வதி பண்டார விவகாரம். அது மட்டும் கிடைத்திருந்தால் எத்தனையோ நன்றாக இருந்திருக்கும். நமக்கு அத்தனை கொடுப்பனையில்லை. அந்த வினோதமான தயிர்கடையும் மத்துப் போன்ற பொருள் என்னவென்பதை சாக்கியர் தமது பிள்ளையிடமாவது ஒரு வார்த்தை தெரியப்படுத்தியிருக்கலாம். அதனைச் செய்ய வில்லை. ஒரு வேளை அவருக்கே அது என்னவென்பது தெரியுமோ தெரியாதோ! தாயே பகவதி.. நீ என்ன மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாயோ தெரியவில்லை. அந்தப் பெருஞ்சாலையின் பண்டாரம் இவளது கைகளுக்குக் கிடைக்கக்கூடாது. அந்தப் பொக்கிஷத்திற்கு இவள் அருகதையுள்ளவள் அல்ல என்று நீயாக முடிவு செய்து விட்டால் அதனை நான் ஏற்றுக்கொண்டுதானே ஆக வேண்டும்?

ஒரு வேளை அந்தப் பண்டாரம் மட்டும் உரிய நேரத்தில் கிட்டியிருந்தால்? பல்வேறு இரகசியப் பிரயோகங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கலாமோ? அவற்றையெல்லாம் படித்து பிள்ளைகள் இருவருக்கும் அவசர அவசரமாகக் கற்பித்து அவர்கள் அதனைப் பயின்று..

ம்ஹூம். சாத்தியமேயல்ல. ஒரே ஒரு பிரயோகத்தைச் சரிவரப் புரிந்துகொண்டு அதனைச் செயல்முறைக்குக் கொண்டுவருவதற்கே பலகாலம் பிடிக்கும். இந்த இலட்சணத்தில் பல்வேறு பிரயோகங்களைப் பற்றிய ஞானம் ஒருசேரக் கிட்டினால் குழப்பம்தான் மிஞ்சியிருக்கும்.

ஆகவே ஒருவகையில் பண்டாரம் கிடைக்காமல் போனதே நல்லது. இதுவரை நாம் சொல்லிக் கொடுத்தவற்றை இவர்கள் நன்கு ஞாபகம் வைத்துக் கொண்டு உரிய நேரத்தில் உபயோகப்படுத்தினாலே போதுமானது என்று கூறலாமா?

ம்ஹூம். இல்லை. நாம் கற்றுக்கொடுத்த வித்தை போதுமானதே அல்ல. அதனை வைத்துக் கொண்டு

பரவூர்க்காரர்களைச் சமாளிக்கலாம். ஏன், திருவல்லவாழ் சட்டர்களையும்கூட வெற்றி கண்டு விடலாம் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் மூழிக்குளத்தாரை எதிர்ப்பது கடினம். மிகப் பெரிய தனுர்வேத பாரம்பரியம் அவர்களுடையது. அவர்களை ஒரு வேளை சமாளித்து வெற்றி கொண்டாலும் காந்தளூர் என்றொரு மிகப்பெரிய பூதம் அடுத்ததாக இருக்கிறது. அதிலும் இந்த முறை அவர் தமது தம்பியர் இருவரையும் நேரடியாகக் களமிறக்கப் போகிறார் என்று பேச்சு அடிபடுகிறது. பிறந்த நாளிலிருந்து பிரயோகங்களை அப்யசித்து வரும் அவர்களிருவரையும் எதிர்ப்பதென்பது இயலாத காரியம்!

வாயில் கட்டை விரலைச் சூப்பியபடி சின்னஞ் சிறார்களாகப் பல காலங்களுக்கு முன் பட்டதிரியின் தம்பியர் இருவரும் காந்தளூரில் சுற்றித் திரிந்தது அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது. காந்தளூரில் வெள்ளாட்டியாகப் பணிபுரிந்த காலத்தில் தாம் அவர்களைத் தனிக் கரிசனத்துடன் கவனித்துக் கொண்டதும் அவர்களும் தம் மீது அன்பு பாராட்டியதும் நினைவிற்கு வந்தன.

காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும் பல்கூடச் சரிவரத் துலக்காமல் இருவரும் தம்புராட்டியாரைக் காண வேண்டுமென்று மடைப்பள்ளிக்கு ஓடிவந்து விடுவார்கள். பல்வேறு அலுவல்களுக்குமிடையில் அவர்களுக்குத் தேவையான பால், வெல்லக் கட்டி, கஞ்சி, பலகாரங்கள் என்று அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்து கொடுப்பார் தம்புராட்டியார். அவ்வப்போது ஒழிந்த நேரங்களில் அவர்களுடன் விளையாடுவதும் உண்டு. இந்த அன்றாடச் சடங்குகளை ஓரக்கண்களால் கவனித்து இரசித்தபடி மடைப்பள்ளியைக் கடப்பார் பட்டதிரி.

இன்று காலம் மாறிவிட்டது. அந்தச் சிறுவர்கள் இருவரும் தோளுக்குமேல் வளர்ந்து நிற்கிறார்கள். தமக்குத் தெரிந்த வித்தைகள் அனைத்தையும் அவர் பார்த்துப் பார்த்துச் சொல்லிக் கொடுத்திருப்பார். பல்வேறு இரகசியப் பிரயோகங்களும் இந்நேரம் அத்துப்படியாகப் பழகி யிருக்கும். அப்படிப்பட்ட தலை சிறந்த வித்யார்த்திகளை உன்னிகள் எதிர்த்து நின்று ஜெயித்தாக வேண்டும். அது சாத்தியம்தானா? அல்லது ஏதாவது பகல்கனவு கண்டு கொண்டிருக்கிறோமா? தெரியவில்லை.

"ரேணுகா! உங்களுக்குப் பின் உங்கள் முயற்சிகளுக்குப் பின் நாங்கள் அனைவரும் துணையிருப்போம். எங்களின் ஜீவசக்தி இப்போது உங்களின் உடலில் பாய்ந்துவிட்டது. அது உங்களைக் காப்பாற்றும். அது உங்களுக்கு வழிகாட்டும். ஆகவே என்ன நடந்தாலும் கலங்காதே!"

காலையில் கேட்ட பலராம நம்பூதிரியின் கட்டைக் குரல் மீண்டுமொருமுறை உள்மனதில் ஓங்கி ஒலித்தது. என்ன நடந்தாலும் கவலைப்படுவதற்கில்லை. கடமையை மட்டும் செய்யவேண்டியது. அதன் பலன் என்னவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்.

"இந்தப் போட்டிகளின் முடிவுகள் உனக்கு அத்தனை எளிதாக இருக்கப்போவதில்லை. எதையும் எதிர்கொள்ளத் ஆயத்தமாக இரு!"

ஆயத்தமாக வேண்டியதுதான். நடக்கப்போவது எதுவானால் அதனைச் சந்திக்க மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். வேறு வழியில்லை.

"உன்னிகளா.."

"அம்மா.."

"பயமாக இருக்கிறதா?"

"இல்லை!" - பளிச்சென்று பதில் கூறினார் கம்பன் மணியனார்.

ஆனால் மழபாடியாரால் அப்படியொரு பதிலை உடனடியாகக் கொடுக்க முடியவில்லை. அவரைப் பல்வேறு யோசனைகளும் சூழ்ந்திருந்தன.

"பயமாக இல்லையென்றால் மிகவும் நல்லது. என்ன பரமா? உனக்கு மனதில் பயம் மிச்சமுள்ளதா?"

"பயமெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் ஒரு தயக்கம் ஒரு யோசனை மனதை ஆக்கிரமித்துள்ளது. அது இன்னவென்று தெளிவாகப் புலப்படவில்லை."

"நல்லது. இங்கிருந்து காந்தளூரைச் சென்று சேர்வதற்குள் அந்த யோசனைகளையெல்லாம் முடித்துக் கொண்டுவிடு. சாலையில் களத்தில் நிற்கும்போது உங்களுக்கு வித்தையைத் தவிர வேறெதுவும் மனதில் இருக்கக் கூடாது."

"சரியம்மா."

"இனிக் கலமறுக்கும் போட்டிகள் தொடர்பாக நான் கூறப்போகும் சில மரபுகளையும் விதிகளையும் கவனமாகக் கேளுங்கள். சந்தேகங்களிருந்தால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று துவங்கிய தம்புராட்டியார், காந்தளூரில் போட்டிகள் எவ்வாறு ஆரம்பமாகும், என்னென்ன விதமான சோதனைகளையெல்லாம் சட்டர்கள் எதிர்கொள்ள நேரும், எவர் எவ்விதம் எதிராளியுடன் பொருதுவர் என்று தமக்குத் தெரிந்த பல்வேறு செய்திகளையும் விரிவாக விளக்கிக் கொண்டு போனார்.

46. ஆதியாய் உறைந்த அனந்தம்



இருளும் கருமையும் அடர்ந்து தெரிந்த அந்த மாபெரும் கருவறைக்கு மூன்று திருவாசல்கள் இருந்தன. மூன்று வாசல்களுக்குப் பின்னாலும் குத்து விளக்குகள் வரிசையாக ஏற்றப் பட்டிருந்தன. விளக்குகளின் சுடர் நாவுகளிலிருந்து புறப்பட்ட மஞ்சள் நிற ஒளி அளவான வெளிச்சத்தைக் கருவறை யெங்கிலும் படரவிட்டிருந்தது. கண்களை உறுத்தாத அந்த மெல்லிய ஒளியில் ஒரு பெருத்த திருவுருவம் கால்நீட்டிப் படுத்திருந்தது தெரிந்தது.

சிரத்தை நீண்ட கீரீட மகுடம் அலங்கரித்திருக்க, அதன் முகம் வான் நோக்கிப் பார்த்திருந்தது. நீண்டு விடைத்த நாசி. அறிதுயில் என்று ஆழ்வார்கள் குறிப்பிடும் யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும் கண்கள். உதடுகளில் நிரந்தரப் பட்டுவிட்ட நித்ய புன்னகை. விளக்கொளியில் பளபளக்கும் சதைப்பிடிப்பான கன்னங்கள். அளவான தெளிவான முகவாய். மார்பில் விதவிதமான அணிகலன்கள். குறுக்கே பட்டையாக ஓடிய யக்ஞோபவீதம்.

அதன் வலது கரம் நீண்டு ஏறக்குறைய அடியவர்களைத் தொட்டுவிடும் தூரத்திற்கு நெருங்கி வந்து அப்படியே முதல் வாயிலுக்கருகில் முடிந்தது. கூரான நகங்கள். ஒவ்வொரு விரலிலும் தங்க மோதிரம். மணிக்கட்டில் பெருத்த வளையல்கள். தொங்கிக் கொண்டிருந்த கரங்களுக்குக் கீழ் அளவிற் சிறிய லிங்க உரு.

முதல் வாயிலினருகில் நின்று கரங்கள் குவித்து அந்தக் கரிய திருவுருவை கண்ணாரக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த சோழப் பேரரசருக்குக் கருவறையிலிருந்து கண்களை மீட்டுக் கொள்வதே இயலாத காரியமாக இருந்தது.

ஆதி அந்தமில்லாத பிரபஞ்சப் பெருவெளி அங்கே பெருநாகமாக உருவகிக்கப்பட்டு ஐந்தலைகளுடன் படுக்கை விரித்திருந்தது. அந்த நாகத்திற்கு மிகவும் பொருள் பொதிந்த ஒரு பெயருண்டு.

அனந்தன்.

அந்தமில்லாதவன். அதாவது முடிவற்றவன்.

முடிவற்ற ஒன்றின்மேல் எப்படி நித்திரை கொள்வது? என்று அவருக்குள் கேள்வி எழுந்தது. விழிப்புணர்வை இழந்துவிடாமல் அதே சமயத்தில் முழு ஓய்வுடன் அனந்தத்தில் சாய்ந்து கொள்வது எதற்காக? அப்படிச் சாய்ந்து கொள்வதால் என்ன நிகழும்?

ஒரு மாபெரும் உருவாக்கம் அதிலிருந்து நிகழலாம். வானம் பூமி சூரியன் சந்திரன் கிரகங்கள் கோள்கள் எரி நட்சத்திரங்கள் வாயுக்கள் அமிலங்கள் என்று அத்தனையும் கொண்ட பிரம்மாண்டமான பிரபஞ்சமே அத்தகைய இருப்பிலிருந்து எழலாம்.

அந்த மகத்தான படைப்பெழுச்சியே ஒரு தாமரை மலராக உருவகிக்கப்பட்டிருந்தது. எல்லையற்ற ஆழமான கருநீல நீர்த்தடாகத்தின் உந்தியிலிருந்து எழும் மெல்லிய தண்டின் மேல் விரிந்து சிரிக்கும் தாமரை. அந்தத் தாமரையின் மீதுதான் உருவாக்கத்தின் கடவுளாக உருவகிக்கப்பட்ட பிரம்மன் அமர்ந்திருந்தான். மாமுது தாதை என்று பண்டைய இலக்கியங்களில் மரியாதையோடு குறிப்பிடப்பட்ட அதே பிரம்மன்.

அதாவது கருவறையில் காட்டப்பட்டிருப்பது உருவாக்கத்தின் உருவாக்கம். படைப்பெழுச்சியின் எழுச்சி. இதரப் படைப்புக்களை உருவாக்கும் ஆக்கசக்தி எதிலிருந்து உருவானதோ அதுவே அங்கு இறையாய்க் கருவாய் திருவுருவாய்ப் படுத்திருந்தது. வணக்கத்திற்குரியதாக தெய்வமாக வழிபாட்டிலிருந்தது.

உருவாக்கப்பட்டவை அனைத்துமே ஒரு நாள் அழிந்தாக வேண்டும் என்பது உண்மையானால் அத்தகைய உருவாக்கத்திற்கும் அழிவிற்கும் பின்னால் ஏதோ ஒன்று இருந்துதானே ஆகவேண்டும்? அந்த ஒன்றே இது. அழிவற்றது. முடிவற்றது. எல்லையற்றது.

எது அழிவிற்கு அப்பாற்பட்ட ஒன்றோ அது முடிவற்ற ஒன்றின் மீதுதான் கிடந்தாக வேண்டும். அதுவே அனந்தன். அதுவே ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷன்.

எது எல்லையற்றதோ அதனை வணங்குகிறேன்.

எது முடிவற்றதோ அதனை வணங்குகிறேன்.

எது பிறப்பற்றதோ அதனை வணங்குகிறேன்.

இவ்வாறு வெவ்வேறு விதங்களில் அருள்மொழி வர்மரின் ஆழ்மனதிலிருந்து புறப்பட்ட பிரார்த்தனைகள் அனந்தபுரத்துத் தேவனின் காலடிகளைச் சென்றடைந்து கொண்டிருந்தன. அந்தப் பரவச நிமிடங்களில் அவர் தன்னை முழுவதுமாக மறந்து விட்டார் என்று கூறலாம். அவருடன் வந்திருந்த முக்கியப் பரிவாரங்களும் அவர்களை எதிர்கொண்டழைத்து வந்த வேணாடுடையவரும் பல நிமிடங்களுக்கு முன்னரே முதல் வாயிலைக் கடந்து நடுவாயிலுக்குச் சென்று சாந்தியிடம் தீர்த்தமும் சடாரியும் பெற்றுக்கொண்டு அவருக்காக நீண்ட நேரமாகப் பொறுமையுடன் காத்திருந்தார்கள். ஒரு வழியாக அருள்மொழிவர்மர் பிராத்தனைகளை முடித்துக் கொண்டு பிரகாரத்திற்குத் திரும்பி வருவதற்குள் இரண்டு நாழிகைகள் கழிந்து விட்டன.

"அரசே! தரிசனத்தை முடித்துக்கொள்வதற்கு நீண்ட நேரமாகிவிட்டது. நமக்கு இன்றைக்குப் பல அலுவல்கள் உள்ளன. உடனடியாகக் கிளம்பியாக வேண்டும்" என்று கால்களில் வெந்நீரை ஊற்றிக்கொண்டு பரபரத்தார் மாராயர். ஆனால் அது அத்தனை எளிதாக முடிகிற காரியமாக இல்லை. வேணாடுடையவரின் வற்புறுத்தலின் பேரில் அனைவரும் திருக்கோயில் பிரசாதங்களை உண்டு பல்வேறு மரியாதைகளையும் பெற்றுக் கொண்டு இன்னுமொரு நாழிகையை முழுமையாகக் கோயில் வளாகத்தில் கழித்துவிட்டுத்தான் கிளம்ப முடிந்தது.

திருக்கோயில் குளத்திற்கருகில் அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வேணாட்டார் அரண்மனைக்குத்

திரும்பி விட்டார். அவரது தலை மறைந்த பிறகுதான் சோழப் பரிவாரங்களால் ஓரளவிற்கு இயல்பான நிலைக்குத் திரும்ப முடிந்தது.

"வேணாட்டார் இங்கு வந்து நம்மைச் சந்திப்பாரென்று நான் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை!" என்றார் பல்லவ ராயர்.

"நானும் எதிர்பார்க்கவில்லைதான். ஆனால் மரியாதை நிமித்தம் நிகழ்ந்த இந்தச் சந்திப்பு இத்திருக்கோயில் வளாகத்தில் நிகழ்ந்தது எனக்கு மகிழ்ச்சியே."

"தாங்களிருவரும் பெரிதாகப் பேசிக்கொண்டதுபோல் தெரியவில்லையே?"

"பேசிக்கொள்ளவில்லைதான். என்றாலும் ஒரு மரியாதையும் நட்புறவும் அவரது கண்களில் தெரிந்தன. ஆகையால் நானும் அத்தகைய உணர்வுகளைப் பிரதிபலித்தேன்."

"எனக்கென்னவோ அவரது பார்வையில் பலத்த சந்தேகங்கள் தாம் தெரிந்தன. கலமறுக்கும் போட்டிகள் முடிந்தவுடன் நீங்கள் ஊருக்குக் கிளம்பவில்லையென்றால் நடப்பதே வேறு என்கிற எச்சரிக்கையை அவற்றில் தெளிவாகக் கண்டேன்."

"ஹா! ஹா! ஹா!" என்று தமது பெருஞ்சிரிப்பை அதற்கு பதிலாக வழங்கினார் பேரரசர். "மாராயரே! எனது அனுபவமற்ற கண்களுக்குச் சிறிதும் தட்டுப்படாத வேணாட்டாரின் நுண்ணிய உணர்வுகளை எப்படியோ கண்டறிந்துவிட்டீர்கள்! இதற்குத்தான் பழுத்த அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களை ஒரு அரசன் அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள்" என்று கூறி மீண்டும் சிரித்தார். தம்மை இவர் பாராட்டுகிறாரா? அல்லது பாராட்டுவதைப்போல் குத்திக்காட்டுகிறாரா? என்று குழம்பி நின்றார் மாராயர்.

"எனது சிற்றறிவுக்கு எட்டியவரை வேணாட்டார் மிகவும் பலகீனமாகவே தெரிந்தார். கோவர்தன மார்த்தாண்டரை நான் பலகாலங்களுக்கு முன் சந்தித்திருக்கிறேன். இப்போது பிராயம் முதிர்ந்துவிட்டது. அதனால் தளர்ந்து காணப்படுகிறார். மேலும் இவரைப் பார்க்கும்போது சேரமான் பெருமாளின் பூரண ஆசிகள் இன்னும் கிட்டியபாடில்லை என்றே தோன்றுகிறது.

அதனால்தான் நம்மைப் பகைத்துக் கொள்ளாமல் நட்புக் கரம் நீட்டவேண்டுமென்று நினைக்கிறார்.." என்றார் பல்லவ ராயர் குறுக்கிட்டு. அவரது வலது கரம் இயல்பாக உயர்ந்து தனது வெளுத்த மீசையை ஒரு முறை வருடிக்கொண்டது.

"ஏறக்குறைய என்னுடைய அனுமானமும் பல்லவ ராயரின் கருத்தை ஒட்டியே இருக்கிறது. பெருமாளின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி நிற்பதை வேணாட்டார் விரும்பவில்லை. அதே சமயத்தில் ஒன்று குறை ஆயிரத்தவர் படையும் பாதுகாவலும் அவருக்குத் தேவையாயிருக்கின்றது. இவ்விரண்டும் கிட்டாதவரை நம்மை முழுமையாகப் பகைத்துக்கொள்வது நல்லதல்ல என்பதை அவர் அறிவார்."

"நிஜமாகவே நாம் போட்டிகள் முடிந்ததும் வேணாட்டிலிருந்து கிளம்பிவிடப்போகிறோமா? உயிரைப் பணயம் வைத்து நமது வீரர்கள் கைப்பற்றிய விழிஞம் கோட்டையை மீண்டும் அவர்களுக்கே தாரைவார்த்து விடப்போகிறோமா?"

"இல்லை. போட்டிகள் முடிந்ததும் இது பற்றி வேணாட்டாரிடம் பேசலாமென்றிருக்கிறேன். விழிஞத்தின் ஆய்வேள் கோட்டை நமக்குத் தேவையாயிருக்கிறது. ஆனால் அனந்தபுரத்தையோ இதர வேணாட்டுப் பகுதிகளையோ நாம் ஆக்கிரமிக்க வேண்டியதில்லை. அவை வேண்டுமானால் மார்த்தாண்டரின் கட்டுப்பாட்டிலேயே இருந்துவிட்டுப் போகட்டும்."

"இத்தனை பெரிய நிலப்பரப்பை அனாயசமாகத் தானம் செய்துவிட்டு விழிஞத்தை மட்டும் தக்கவைத்துக் கொள்வானேன்? அங்கே அப்படி என்னதான் இருக்கிறது?"

"வாணிபம் இருக்கிறது மாராயரே! பொன்னும் மணியும் கொட்டிக் கொழிக்கும் மேற்குக் கடற்கரை வாணிபம் இருக்கிறது. விழிஞத்திலிருந்து கோட்டாற்றுக்குச் செல்லும் பெருவழியை நமது முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால்தான் இந்தப் பகுதியில் மேற்குக் கடற்கரை வாணிபத்தை மீண்டும் தழைக்கச் செய்ய முடியும். அது தழைத்தால்தான் மலைமண்டலத்து வணிகர்களால் நாஞ்சில் நாட்டின் வழியாகத் தென்பாண்டி நாட்டிற்குத் தமது சாத்துக்களைச் சிரமமின்றிக் கொண்டு வர இயலும். அப்படிச் சீரானதொரு வணிகவழி அமைந்துவிட்டால் கொங்கு நாட்டின் வழியாக மகோதயபுரத்திற்குச் செல்லும்

வடபாதையின் முக்கியத்துவம் கணிசமாகக் குறைந்து விடும். அது நமக்குப் பல வகைகளிலும் பயன்தரும்."

"வாணிபம் வாணிபமென்று அளவுக்கதிகமான சலுகைகளைக் கொடுத்து வணிகர்களைக் கெடுத்து வைத்திருக்கிறீர்கள்!" என்றார் மாராயர் குற்றம் சாட்டும் தொனியில்.

"நாம் இந்த மலைமண்டலத்தில் கால்பதித்து நிற்பதே அவர்களின் உதவியால்தானே? அவர்கள் தங்களின் பெருங்கலன்களைக் கொடுத்து உதவியால்தானே கண்ணும் கண்ணும் வைத்தாற்போல் மேற்குக் கடற்கரையில் நுழைய முடிந்தது? மாராயரே! நாம் ஒருபுறம் அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்துக் கொண்டிருந்தாலும் மறுபுறம் அவர்களிடமிருந்தும் பல உதவிகளையும் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறோம். இதுவும் ஒருவகை வாணிபம் தான்!" என்றார் பேரரசர் கண்களைச் சிமிட்டியபடி. ஓரிரு கணங்களுக்கு அங்கே அமைதி நீடித்தது.

"பெருஞ்சாலையிலிருந்து நமது பரிவாரங்கள் இந்நேரம் கிளம்பியிருக்குமல்லவா?" என்று வினவினார் பல்லவராயர் பேச்சை மாற்ற விரும்பி.

"நிச்சயம் கிளம்பியிருக்கவேண்டும். பொழுது சாயும் நேரத்தில் அவர்களை இங்கே எதிர்பார்க்கிறேன்."

"அவர்கள் தங்குவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமா?"

"தேவையில்லை. காந்தளூர்ச் சாலை வளாகத்திலேயே அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது."

"அது பத்திரமானதுதானா? அங்கேதான் அவர்கள் தங்கியாக வேண்டுமா?" - எச்சரிக்கை மிகுந்த குரலில் வினவினார் மாராயர்.

"கவலைப்படுவதற்குக் காரணங்களில்லை. என்றாலும் பட்டதிரியிடம் சொல்லிச் சோழவீரர்கள் சிலரை அவர்களின் குடியிருப்புக்குக் காவலாக வைக்கப் போகிறேன்."

"இத்தனை தூரம் சிரமப்பட்டுக் கிளம்பி வந்திருக்கிறோமே? அதற்குரிய பலன் கிடைக்குமா? அந்த இளைஞர்கள் இருவரும் ஒரு வேளை போட்டிகளில் தோற்றுவிட்டார்களானால்..."

"ஒருபோதும் தோற்கமாட்டார்கள். அது நிச்சயம்!"

"எப்படி அத்தனை உறுதியாகக் கூறுகிறீர்கள்?"

"ஏதோ என் உள்மனதிற்குப் படுகிறது. அவ்வளவுதான்."

"உங்கள் உள்ளுணர்வின்மேல் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை ஆச்சரியப்படுத்துகிறது. எனக்கென்னவோ அது அத்தனை எளிதான காரியமாகத் தெரியவில்லை.."

"நானும் அது எளிமையான காரியமென்று சொல்ல வில்லையே? அவர்கள் தோற்கமாட்டார்கள் என்று மட்டும்தானே சொன்னேன்?"

மாராயர் சட்டென்று தலையைத் திருப்பி பேரரசரை முறைத்தார்.

"என்னதான் நடக்கப்போகிறது என்கிறீர்கள்?"

"எது விதிப்படி நடக்கவேண்டுமோ அதுவே நடக்கும். ஊழ் வலிது என்கிறேன். வள்ளுவப் பெருந்தகை ஊழ் பற்றி என்ன சொல்லியிருக்கிறாரென்றால்..."

"ஐயையோ! தற்சமயம் வள்ளுவத்தையெல்லாம் காது கொடுத்துக் கேட்கும் மனோநிலையில் நான் இல்லை. என்னை விட்டுவிடுங்கள்!"

கொல்லென்ற சிரிப்புச் சப்தம் அங்கு எழுந்தது. ஆனால் அந்தச் சிரிப்பு முடிந்த மறுகணமே அருள்மொழிவர்மரின் முகத்தில் இறுக்கமொன்று படிந்தது.

"மாராயரே! மலையனூரன் இருக்குமிடத்தை உமது ஆட்களால் கண்டறிய முடிந்ததா?"

"இன்னமும் இல்லை. அவனைத்தான் நாலா புறங்களிலும் தேடிக்கொண்டிருக்கிறோம்."

"இது நல்லதல்ல. இத்தனை நாட்களுக்கு அவனை வெளியில் விட்டு வைத்ததே தவறு. ஆரைவாய்மொழிக் கோட்டை முற்றுகை முடிந்த கையோடு அவனை மகேந்திர கிரிக்காடுகளில் பிடித்திருக்க வேண்டும். விட்டு விட்டீர்கள்!"

"என்ன செய்வது? கோட்டை பிடிபட்டதும் நமது ஆட்கள் கொண்டாட்டங்களில் இறங்கிவிட்டார்கள். ஓரிரு நாட்கள் கழித்து அவர்கள் சுயநினைவிற்கு வந்தபிறகுதான் தேடலைத் துவங்கவே முடிந்தது. அதற்குள் அவன் அந்தப் பகுதியிலிருந்து தப்பியோடி விட்டான்!"

"மாராயரே! நான் பட்டதிரியையோ அவரது தம்பிகளையோ கண்டு அஞ்சவில்லை. வள்ளுவனாரும் வேணாட்டாரும் நமக்கு ஒரு பிரச்சனையே அல்ல. அவர்களை சமாளிப்பது எளிது. ஆனால் மலையனூரனை அப்படி விட்டுவிட முடியாது. மற்றவர்களுக்கெல்லாம் நாம் பகையெடுத்து வந்ததினால் மட்டும்தான் பகை. இவனுக்கும் நமக்குமோ குலப்பகை! ஜென்மப் பகை. நமது நிழலைக்கூட வெறுத்து ஒதுக்குபவன் அவன். அவனை உடனடியாகப் பிடிக்காவிட்டால் பல்வேறு தொல்லைகளும் வந்து சேருமென்பது நிச்சயம்."

"?"

"கலமறுக்கும் போட்டிகளில் நமது வீரர்கள் வெற்றி பெறுவது அத்தனை எளிதாக இருக்குமென்று தோன்ற வில்லையென்று சற்றுமுன் குறிப்பிட்டீர்களல்லவா? அது உண்மைதான். ஏனெனில் காந்தளூரில் இந்த மலையனூரன் எண்ணற்ற குழப்பங்களை விளைவிக்க வாய்ப்பிருக்கிறது. அவனுக்கு உதவக்கூடிய நண்பர்கள் அங்கே இருக்கிறார்கள். மிகுந்த எச்சரிக்கையோடு இல்லா விட்டால் அத்தனையும் அனர்த்தமாக முடிந்துவிடும்."

"புரிந்தது. இப்போதே காந்தளூரில் நமது குடியிருப்புக்களில் காவலை அதிகப்படுத்துகிறேன்."

"அது மட்டும் போதாது. அவனை கையும் மெய்யுமாகப் பிடித்தாக வேண்டும். அதில் முழுக்கவனத்தையும் செலுத்துங்கள்!"

"உத்தரவு."

அருள்மொழிவர்மரின் எச்சரிக்கைகள் எத்தனை தூரம் உண்மையானவை என்பதை அந்நேரம் அனந்தபுரத்துச் சகடப் பெருவழியில் நிகழ்ந்த சில நிகழ்வுகள் நிரூபித்துக் கொண்டிருந்தன.

* * * * * * * *

தம்புராட்டியாரின் இரதம் பகல்பொழுது முழுவதும் பயணப்பட்டு முன்மாலை நேரத்தில் அனந்தபுரத்தின் தெற்கெல்லைப் பகுதியான விழிஞம் கடற்கரையைத் தொட்டுக் கொண்டிருந்தது. இரதத்தின் சாரதி அனுபவம் வாய்ந்தவனாதலால் அவசரப்படாமல் நிதானமாக

இரதத்தைச் செலுத்திக்கொண்டு வந்து விட்டான். இன்னும் இரண்டு மூன்று நாழிகை நேரத்தில் நகருக்குள் புகுந்துவிடலாம் என்றே தோன்றியது.

கடற்கரையையொட்டிய பகுதியில் தென்னை மரங்கள் நீண்டு வளர்ந்திருந்தன. அனந்தபுரத்துச் சகடப்பெருவழி அந்தத் தோப்பை ஊடறுத்துக்கொண்டு சென்றதால் இரதமும் தென்னந்தோப்பிற்குள் நுழைந்தது. அடுத்த கணமே மாலை வெளிச்சம் முற்றிலும் காணாமற்போக, அடர்த்தியான நிழல் இரதத்தின் மீது கவிந்தது.

இரண்டு மூன்று நாழிகைகளுக்கு முன்னரே இளையவரும் தம்புராட்டியாரும் இரதத்தின் பின்புறம் சாய்ந்தபடி உறங்கத் தொடங்கிவிட்டதால் கடற்கரைக் காட்சிகளை மழபாடியார் தனியாகத்தான் இரசித்து வந்தார். அந்தக் கடற்கரை அவரது வாழ்வில் மறக்க முடியாத முக்கியமான இடத்தைப் பெற்றுவிட்டது.

இங்குதானே சில நாட்களுக்கு முன் எவரும் எதிர்பாராத முறையில் கடற்கரைத் தாக்குதல் நிகழ்ந்தது? அந்தத் தாக்குதலில் அவர்கள் வெற்றி பெற்றதினாலல்லவா ஆரைவாய்மொழிக் கோட்டையை மேற்குப்புறமாகச் சுற்றி வளைத்துத் தாக்க முடிந்தது? அந்த மேற்கு வாயிற்தாக்குதல் மட்டும் நடை பெறவில்லையேல்.. அதனால் வள்ளுவநாட்டு வீரர்களின் கவனம் சிதறவில்லையேல்... கோட்டை முற்றுகையே இன்னும் பலப்பல நாட்களுக்கு நீடித்திருக்கும் என்று எத்தனை முறை மாராயரும் பல்லவராயரும் குறிப்பிட்டு விட்டார்கள்? ஆக, ஆரைவாய்மொழிக் கோட்டையில் நமது படைகள் பெற்ற வெற்றிக்கு இந்த விழிஞம் வெற்றியே அடித்தளம் அமைத்தது. அத்தகைய வெற்றியில் நம்மாலும் ஒரு சிறு பங்கை ஆற்ற முடிந்தது பெரும் பேறு!

இத்தகைய நினைவுகளில் ஆழ்ந்திருந்தவர் பெருவழி சடாரென்று இடப்புறமாக வளைந்து திரும்புவதையும் அதற்கேற்றவாறு சாரதி புரவிகளின் வேகத்தை மட்டுப்படுத்தித் திரும்புவதையும் கண்டார். அந்த இடத்தில் பெருவழியையொட்டி ஒரு பெரிய ஏரி அமைந்திருந்தது. ஏரியின் கிழக்குக்கரையோரமாகவே பெருவழி சிறிது தூரத்திற்கு நீண்டது.

இரதம் பாதையில் திரும்பி ஓடத்துவங்கிய சில கணங்களிலேயே பெருவழியின் மறுமுனையில் ஒரு இரதம்

எதிர்திசையில் தங்களை நோக்கிப் புழுதிபறக்கப் பயணித்துக் கொண்டு வருவதை மழபாடியார் கவனித்து விட்டார். அதுபோன்ற சில வணிகர்களின் இரதங்கள் அந்தப் பாதையில் ஊர்ந்து செல்வதைக் காலை முதலே கவனித்து வந்ததனால் முதலில் பெரிதாக கவனத்தைக் கவரவில்லை.

ஓரிரு கணங்கள் கழிந்த பிறகுதான் அந்த இரதத்தின் வேகம் சற்று அசாதாரணமானதோ என்கிற சந்தேகம் தோன்றியது. இரதத்தைச் சுற்றிப் படர்ந்த குப்பென்ற மண்புழுதியும் அமைதியைக் கிழித்துக்கொண்டு எழுந்த 'ஹிஹி' என்ற புரவிகளின் வேதனைக் கூக்குரலும் அந்தச் சந்தேகத்தை உறுதிப்படுத்தின. இத்தனை கண்மூடித்தனமான வேகத்தில் இங்கே வரவேண்டிய அவசியமே இல்லையே? எதற்காக இப்படித் தறிகெட்டு இரதத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்?

அவர் அமர்ந்திருந்த இரதத்தின் சாரதியும் எதிர்த்திசையில் தெரிந்த காட்சிகளை எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். எவனோ மலை நாட்டவன் மிகவும் பொறுப்பற்ற முறையில் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறான். புதியவனாக இருக்கக்கூடும். அல்லது இரதத்தில் பூட்டப்பட்டிருக்கும் புரவிகள் புதியவையாக இருந்து அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கக்கூடும் என்று மட்டும்தான் அவனுக்குத் தோன்றியது.

அடுத்த சில கணங்கள் கழிந்தபிறகும் அந்த இரதத்தின் வேகம் குறைக்கப்படாமல் ஆவேசமாகத் தங்களை நோக்கியே குறிவைத்துப் பாய்ந்தோடி வருவதைக் கண்டு திடுக்கிட்டார் மழபாடியார். அவரது உள்ளுணர்வு விழித்துக் கொண்டது. இது ஏதோ அசாதாரணமான நிகழ்வு. இரதம் தங்களைக் குறிவைத்துத்தான் வந்து கொண்டிருக்கிறது என்று தோன்றியது. அது வந்துகொண்டிருக்கும் வேகத்தில் தங்களின் மீது மோதினால் என்ன ஆகும்? சந்தேகமேயில்லாமல் இரதம் சுக்கு நூறாகச் சிதறிப்போய் ஏரியின் மீது கவிழ்ந்துவிடும்!

கணத்தில் இரதத்தின் சாரதி அமர்ந்திருக்கும் இடத்திற்குப் பாய்ந்து சென்றவர் அவன் கரங்களிலிருந்து கடிவாளங்களை வாங்கிக் கொண்டார். சாரதிக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது புரியவில்லை. என்றாலும் மழபாடியாரின் கண்கள் எதிர்திசையையே வெறித்து

நோக்கிக்கொண்டிருப்பதால் இரதத்தின் வேகம்தான் அவரை அவ்வாறு செயல்பட வைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். கடிவாளத்தைக் கொடுத்துவிட்டுப் புரவிகளின் பிருஷ்டத்தைத் தட்டிக்கொடுத்து உற்சாகப் படுத்தினான்.

அடுத்த சில கணங்களில் அவர்களின் இரதமும் வேகம் பிடிக்கலாயிற்று. என்றாலும் எதிரே பாய்ந்து வந்து கொண்டிருக்கும் இரதத்தின் வேகத்தை அவர்கள் எட்டுவதற்கு இன்னும் சிறிது நேரமாவது ஆகும். அதற்குள் இரண்டு இரதங்களும் சந்தித்துக்கொண்டுவிடும். அதிக அவகாசமில்லை.. ஏதேனும் செய்தாகவேண்டும்!

என்ன தோன்றிற்றோ - ஒரே கணத்தில் புரவிகளின் கடிவாளங்களை அவர் இழுத்துப் பிடிக்க, அது பாதையின் வலப்புறம் திரும்ப வேண்டிய சமிக்ஜை என்று புரிந்துகொண்டு அந்த புத்திசாலிப்புரவிகள் யோசிக்காமல் வேகவேகமாக வலப்புறம் திரும்ப முற்பட, அங்கு பாதையேயில்லாமல் வெறும் தென்னைமரங்கள் மட்டும் வளர்ந்திருப்பதைக் கண்டு திகைத்துப்போய் தமது வேகத்தைக் குறைத்துக் கொண்டு முன்னங் கால்களை மட்டும் தூக்கி எழுப்பித் தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்க..

அதற்குள் வெகு வேகமாக எதிர்த்திசையில் பாய்ந்து வந்த இரதத்தின் புரவிகள், பாதையின் குறுக்கே தமது இனத்தைச் சேர்ந்த இரு ஜீவன்கள் பரிதவித்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு குழம்பி அவற்றின் மீது மோதாமலிருக்கும் பொருட்டுப் பாதையின் இடப்புறத்தில் பாய்ந்து, அவை வந்த வேகத்தில் கட்டுப்பாட்டை இழந்து பாதையிலிருந்து விலகி ஏரிக்கரையில் வளர்ந்திருந்த நாணல் புதற்கள் கால்களை வைத்து சிக்கிக்கொள்ள..

அத்தனை சம்பவங்களும் சில கணங்களில் நடந்து முடிந்து விட்டன. அந்தக் கடைசிக் கணங்களில் மிருகவேகத்துடன் இரதத்தைச் செலுத்திக் கொண்டு வந்தவன் இரதத்திலிருந்து குதித்து எதிர்த்திசையில் ஓடி மறைவதைக் கவனித்தார் மழபாடியார். ஆகச் சந்தேகமேயில்லை! அது அவர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்தான். பாவம்! செலுத்தியவன் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டுவிட, அந்தப் பரிதாபமான ஜீவன்கள் நாணற்புதரில் கால்கள் சிக்கிக்கொண்டுவிட்ட

வேதனையில் பெரிதாகக் குரலெழுப்பிக் கனைத்துக் கொண்டிருந்தன.

மழபாடியார் இரதசாரதி அமர்ந்திருக்கும் இடத்திற்குத் தாவிக் குதித்த கணத்தில் ஏற்பட்ட குலுக்கலில் உறக்கம் கலைந்து விட்ட இளையவர் ஒரு திடுக்கிடலுடன் நடந்த சம்பவங்களைக் கவனித்து வந்தார். எதிர்த்திசையில் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வந்தவன் அவர்கள் மீது மோதுவதற்கும் ஆயத்தமாவதை அவரால் நன்றாகவே கவனிக்க முடிந்தது. சண்டாளன்! முகத்தை முக்காடிட்டு மூடிக்கொண்டல்லவா வருகிறான்?

மழபாடியார் புரவிகளை வலப்புறம் திருப்ப முற்பட்ட அந்தக் கணங்களில் அவன் திடுக்கிட்டுக் குழம்புவதையும் இரதத்திலிருந்து எப்படியேனும் குதித்துத் தப்பிப்பதற்கு ஆயத்தமாவதையும் காணமுடிந்தது. எப்பாடுபட்டாவது தங்களின் மீது மோதிவிடவேண்டும். அது முடியாவிட்டால் அகப்பட்டுக்கொள்ளாமல் அங்கிருந்து தப்பித்துப் போய் விடவேண்டும் என்பதே அவனது நோக்கமாக இருந்தது என்பதை அனுமானிக்க முடிந்தது. ஆகவே இவன் ஒரு கைக்கூலி. யாருடைய கைக்கூலி? தெரியவில்லை.

தம்புராட்டியாரும் இளையவரைப்போல் விழித்துக் கொண்டு விட்டார்தான். என்றாலும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அனுமானிக்க முடியவில்லை. இரதம் ஒரு பேரிரைச்சலுடன் வலதுபுறம் திரும்பிச் சிறிது தூரம் ஓடி நிற்பதை மட்டும் உணர முடிந்தது.

எதிர்பாராத இந்தத் தாக்குதலிலிருந்து இரதம் குடை சாய்ந்து விடாமல் புரவிகளையும் காப்பாற்றிவிட்ட திருப்தியில் இரதத்திலிருந்து இறங்கினார் மழபாடியார். அந்தச் சில நிமிடங்களுக்குள் அவரது மேனியில் வியர்வை பொங்கிப் பெருக்கெடுத்து விட்டது. கீழே இறங்கி ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குச் சில நிமிடங்களானது. அதற்குள் புரவிகளை இரதத்திலிருந்து பிரித்து விட்ட சாரதி அவற்றைத் தட்டிக் கொடுத்துச் சமாதானம் செய்யலானான். நல்ல ஜாதிப் புரவிகளான அவற்றின் மேனி நடந்து முடிந்த சம்பவங்களின் அதிர்ச்சியால் இன்னமும் நடுங்கிக் கொண்டிருந்தன.

மழபாடியார் இளையவரையும் அழைத்துக்கொண்டு ஏரிக்கரைக்குச் சென்று தங்களைத் தாக்க வந்த இரதத்தை ஆராயலானார். அந்தக் கடைசி நிமிடங்களில் தங்களைக்

காப்பாற்றிய புரவிகளின் மீது அவருக்குக் கரிசனம் பிறந்தது. அவற்றை அங்கேயே விட்டுவிட்டுச் செல்ல அவருக்கு மனமில்லை. இரதத்திலிருந்து அவற்றைப் பிரித்து நாணற்புதற்களை வாளால் வெட்டி வீழ்த்தி அவற்றின் கால்களை விடுவித்தார். ஒரு சில நிமிடங்களுக்கு மரண அவஸ்தையை அனுபவித்துக் கொண்டிருந்த அந்த வாயில்லா ஜீவன்கள் விடுதலை பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து அங்கிருந்து ஓட்டமெடுக்க ஆயத்தமாயின. அவற்றின் கடிவாளத்தைப் பிடித்திழுத்து அவற்றைச் சமாதானப்படுத்தி இருவரும் ஒரு நிலையில் நிறுத்தினார்கள்.

"எதற்காக இவற்றை இழுத்து நிறுத்துகிறீர்கள்? ஓடிப்போய் விடட்டுமே?"

"இல்லை. இவைகளை அனந்தபுரத்திற்குக் கொண்டு செல்வோம். முடிந்தால் மாராயர் இவை எந்தப் புரவி லாயத்திலிருந்து பெறப்பட்ட புரவிகள் என்பதைக் கண்டறியட்டும்."

"இன்னும் காந்தளூருக்குள் நுழையவேயில்லை. அதற்குள் இப்படியொரு தாக்குதலா?"

"ஆம். நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. இன்னும் என்ன சோதனைகளையெல்லாம் எதிர்கொள்ளப் போகிறோமோ தெரியவில்லை. இதனைப் பற்றித் தம்புராட்டியாரிடம் அதிகம் பிரஸ்தாபிக்க வேண்டாம். அவர் பெரிதும் கவலையடைவார்கள்."

ஆனால் அவர்கள் மீண்டும் இரதத்தை நெருங்குவதற்குள் சாரதி ஆதியோடந்தமாக நடந்த சம்பவங்களனைத்தையும் தம்புராட்டியாரிடம் விளக்கிக் கூறியிருந்தான். எந்தத் தகவலையும் மிச்சம் விட்டு வைக்கவில்லை!

"உன்னிகளா? என்ன நடந்தது? தெய்வமே! எல்லையைத் தொடும்போதே இத்தனை அச்சான்னியமாக நடக்கிறதே? இன்னும் என்னவெல்லாம் காத்திருக்கிறதோ?" என்று அவர்கள் நெருங்கி வந்ததும் புலம்பத் தொடங்கிவிட்டார் தம்புராட்டியார். அவரை ஒருவழியாகச் சமாதானப்படுத்திப் புதிதாய்க் கைப்பற்றப்பட்ட இரு புரவிகளிலும் அவர்கள் ஏறிக்கொள்ளத் தனியே தம்புராட்டியாரை மட்டும் இரதத்தில் வைத்துக் காந்தளூருக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

இருள் சூழ்ந்த முன்னிரவு நேரத்தில் அவர்கள் சாலை வளாகத்தை அடைந்தார்கள்.

47. கொடியேற்றம்



மறுநாள் காலை பொழுது புலரும் நேரத்தில் காந்தளூர்ச் சாலை வளாகமும் அதன் சுற்றுப்புறங்களும் விழாக்கோலம் பூண்டிருந்தன. வளாகத்தின் கணிசமான பகுதியை ஆக்கிரமித்திருந்த பயிற்சி மைதானத்தைச் சுற்றிலும் மாவிலைத் தோரணங்களும் தென்னங்குருத்துத் தோரணங்களும் புஷ்பத் தோரணங்களும் குறுக்கும் நெடுக்குமாய்க் கட்டப் பட்டிருந்தன. வீசிக்கொண்டிருந்த காலைக் காற்றில் அவை அசைந்தாடும் அழகு கண்கொள்ளாக் காட்சியாய் அமைந்திருந்தது.

முதல் நாள் துவக்கவிழா நிகழ்ச்சிகளுள் 'துவிஜாரோஹணம்' என்றழைக்கப்பட்ட கொடியேற்ற நிகழ்வு முக்கியமானது என்பதால் மைதானத்தின் நடுவே நடப்பட்டிருந்த கொடிக் கம்பம் புதிய வண்ணங்களுடனும் மலர் அலங்காரங்களுடனும் பொலிந்து கொண்டிருந்தது.

சாலையின் முக்கிய நுழைவாயிலான கிழக்குப் பெரு வாயிலைப் பெரும் குலைகளுடன் கூடிய இரண்டு வாழை மரங்கள் இரு புறங்களிலும் அணிசெய்தன. நுழைவாயிலை இணைக்கும் மகரதோரணத்தின் கீழ் முல்லை மல்லி முதலான மலர்களால் தொடுக்கப்பட்டிருந்த பூமாலைகள் சரம் சரமாகத் தொங்கிக்கொண்டிருந்தன. அந்தப் பூமாலைகளின் நுனியில் இணைக்கப்பட்டிருந்த பெருத்த அளவிலான தாமரைப்பூக்கள் வாயிலுக்குள் நுழைவோரின் திரங்களைச் செல்லமாக வருடிக்கொடுத்துக் கொண்டிருந்தன.

கிழக்கு வாயிலிலிருந்து காந்தளூர் மகாதேவர் திருக்கோயில்வரை நீளும் நீண்ட பாதையில் ஆங்காங்கே பல தென்னம்பந்தல்கள் வனையப்பட்டிருந்தன. அவற்றுள் பல சாலைக்கும் மகாதேவர் அம்பலத்திற்கும் வருகை தரப்போகும் பொதுமக்களின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட

தண்ணீர்ப் பந்தல்களாகவும் நீர்மோர்ப் பந்தல்களாகவும் திகழ்ந்தன.

கலமறுக்கும் போட்டிகளையொட்டி மகாதேவர் அம்பலத்தில் பத்து நாட்களுக்கு முன்பிலிருந்தே விசேஷ வழிபாடுகளும் ஆராதனைகளும் பலவிதமான கலை நிகழ்ச்சிகளும் ஆரம்பமாகிவிட்டிருந்தன. இதற்காகவே மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து புகழ்பெற்ற நிருத்தமாணிகளும் உவச்சப் பெருமக்களும்[66] கூத்துக் கலைஞர்களும் அனந்தபுரத்திற்குப் பிரத்யேகமாகத் தருவிக்கப்பட்டிருந்தார்கள். தினமும் மாலை நேரங்களில் சந்தியாநேரப் பூஜைகள் முடிந்ததும் அம்பலத்தின் திருக் கொட்டாரத்திற்கருகில்[67] அமைந்திருந்த பெருமேடையில் வரிசையாகப் பல்வேறு நாடகங்கள் நடத்தி முடிக்கப் பட்டன. அவற்றுள் வெள்ளிநேழி[68] கிருஷ்ணன் கோயிலைச் சேர்ந்த பாலகோபால சாக்கியர் குழுவினர் கட்டிய 'திரௌபதி சுயம்வரம்' எனும் கூத்துத்தான் சிறப்பாக அமைந்திருந்ததென்று கேள்வி.

இத்தனை வைபவ தடபுடல்களுக்கிடையே சாலையில் நடைபெறப்போகும் கலமறுக்கும் போட்டிகள் பற்றியும் யார் அந்த வருடப் போட்டிகளில் வெற்றி பெற்றுக் கல நாயகங்களாக முடி சூடப்போகிறார் என்பது பற்றியும் பேச்சுக்கள் எழாமலில்லை. 'இந்த வருடம் நிச்சயம் மூழிக்குளத்துச் சாலை வெற்றி பெற்று விடும்!' என்று ஒரு சிலரும் 'இல்லையில்லை, நமது காந்தளூரை அடித்துக்கொள்ள மலைநாட்டில் ஆட்களே கிடையாது. இலட்சுமணப் பெருமாளை[69] மகாதேவர் இந்த முறையும் வென்று விடுவார்' என்று வேறு சிலரும் மனம் போன போக்கில் பேசித் திரிந்தார்கள்.

---

[66] இசைக்கலைஞர்கள்.
[67] களஞ்சியம்.
[68] பின்னாளில் இவ்வூர் பலப்பல புகழ்பெற்ற கதக்களிக் கலைஞர்களையும் தோற்றுவித்தது குறிப்பிடத்தக்கது.
[69] மூழிக்குளத்தில் அமைந்திருந்த சாலை அங்கிருந்த இலட்சுமணப் பெருமாள் திருக்கோயிலுடன் இணைந்திருந்தது. சென்ற நூற்றாண்டில் இத்திருக்கோயிலில் ஒரு முக்கிய வட்டெழுத்துச் சாசனம் கண்டறியப் பட்டது. 'மூழிக்குளத்துக் கச்சம்' என்று வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப் படும் இச்சாசனம் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் கேரளத் திருக் கோயில் நிர்வாகங்கள் கேரளத்தில் எவ்விதம் நடைபெற்றன என்பதை விளக்கும் அரிய ஆவணமாகக் கருதப்படுகிறது.

தஞ்சையிலிருந்து கிளம்பி வந்திருக்கும் சோழர் படையைச் சேர்ந்த வீரர்களிருவர் கழிக்குடிப் பெருஞ்சாலை சார்பில் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்கிற செய்தி எப்படியோ வெளியில் கசிந்து விட்டிருந்தது. எங்கிருந்தோ வந்த அன்னியர்கள் நமது மலை நாட்டுச் சாலைகளின் ஆகச்சிறந்த சட்டர்களைச் ஜெயித்து விடுவார்களா என்ன? அதையும் தான் பார்த்து விடுவோமே! என்று அவர்கள் பகிரங்கமாகவே மார்தட்டிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறாகப் பல்வேறு தரப்பினரும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்த வைபவம் துவங்கப்போகும் இனிய நன்னாள் வழக்கத்தைவிடச் சிறிது நேரத்திற்கு முன்னதாகவே புலரத்துவங்கி விட்டிருந்தது. சாலையின் உக்கிராண அறையில் பணிபுரிந்து கொண்டிருந்த வெள்ளாட்டிகள் அதிகாலையிலேயே துயிலெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வளாகத்தின் முக்கிய இடங்களில் தரைமெழுகிச் சாணமிட்டு மளமளவென்று கம்பிக் கோலங்களையும் புள்ளிக் கோலங்களையும் வரையத் துவங்கியிருந்தார்கள்.

அடர்ந்த பசுமை நிறத்தைப் பெற்றிருந்த சாணத் தரையில் அவர்களது நீண்ட வளைக்கரங்கள் அனாயசமாகக் குறுக்கும் நெடுக்குமாக ஓடி சித்திர விசித்திரமான பல சிங்காரக் கோலங்களைத் தீட்டி முடித்தன. கோலங்கள் ஒரு வடிவத்திற்கு வந்ததும் நாற் புறங்களிலும் பசுஞ்சாணக் குண்டுகள் உருட்டி வைக்கப் பட்டு அவற்றில் பரங்கிப் பூக்களும் பூசணிப் பூக்களும் சொருகி வைக்கப்பட்டன. அக்கோலங்களின் அழகைக் கவனியாமல் பணிமுடிக்கும் அவசரத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து சென்று அவற்றின் மீது காலை வைத்து சாணத்தை அப்பிக் கொண்ட சட்டர்கள், வெள்ளாட்டிகளின் அர்ச்சனைகளை வாங்கிக் கட்டிக் கொள்ள நேர்ந்தது.

இவ்வாறாக ஒட்டுமொத்தக் காந்தளூர் வளாகமும் சுறுசுறுப்பாகப் போட்டிகள் துவங்கப்போகும் பரபரப்பில் மூழ்கியிருக்க, அந்த நிகழ்வுகளினால் சிறிதும் பாதிக்கப் படாதவர்களாக நண்பர்களிருவரும் சாலையின் வடமேற்கு மூலையில் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த முறியொன்றில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

புதிய இடமாதலால் அவர்களும் தம்மைப் போலவே உறக்கம் வராமல் கருக்கலில் துயிலெழுந்து வைபவத்திற்கு ஆயத்தமாகியிருப்பார்கள் என்கிற நம்பிக்கையில் நிதானமாக அங்கு வந்து சேர்ந்த தம்புராட்டியார், முறியையே உலுக்கிக் கொண்டிருந்த குறட்டை கச்சேரியைக் கேட்டுக் கடுங் கோபம் கொண்டார்.

'அடுத்த ஓரிரு நாழிகைகளில் கொடியேற்ற வைபவம் துவங்கிவிடும்! இன்னுமா உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று உச்சஸ்தாயியில் அவர் போட்ட அதட்டலில் இருவரும் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்து நீராடி அவசர அவசரமாகப் புத்தாடைகள் தரித்துக்கொண்டு மைதானத்திற்கு விரைந்தார்கள்.

சாலையின் காலை உணவான பயத்தங்கஞ்சி உக்கிராண அறையிலிருந்து குடம் குடமாக மைதானத்திற்கு அப்போதுதான் வந்து சேர்ந்திருந்தது. தாமதமாக வந்தாலும் சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்து விட்டோம் போலிருக்கிறதே? என்று இருவருக்கும் தோன்றியது. நல்ல முற்றிய வெல்லத்தில் ஏலக்காய் முதலான வாசனைப் பொருட்கள் சேர்த்து நெய்மணம் கமழ வந்திறங்கிய அந்தக் கஞ்சியை மூன்று நான்கு தொன்னைகளில் வாங்கிக் கபளீகரம் செய்து முடித்ததும்தான் அவர்களுக்கு நிம்மதி ஏற்பட்டது.

* * * * * * * *

அடுத்த ஓரிரு நாழிகைகளில் கலமறுக்கும் வைபவத்திற்காக மலைமண்டலத்தின் பல்வேறு நாட்டுப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த மூத்த களரியாசான்களும் சட்டர்களும் கூட்டங்கூட்டமாக வளாகத்தில் குழுமினார்கள். அவர்களில் பலரும் சாலை வளாகத்தில் தங்காமல் அனந்தபுரத்தில் தங்களுக்கென்று பிரத்யேகமாய் அமைந்திருந்த பல்வேறு மடங்களிலும் விடுதிகளிலும் கோயில்களிலும்தான் தங்கிக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்காகவே சில தனிக்கட்டளைகள் அந்நாளில் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

காலைப்பொழுதின் முதல் முகூர்த்தம் முடிந்து இரண்டாவது முகூர்த்தம் ஆரம்பமாகும் வேளையில் மங்களகரமான தனுர்லக்னத்தில் காந்தளூரின் குழிக்களரியில் குரு பூஜையுடன் கலமறுக்கும் விழா ஆரம்பமாயிற்று.

அந்தக் குருபூஜையானது மலைநாட்டின் நான்கு சாலைகளையும் நிர்வகிக்கும் தலைமையாசான்கள் காந்தளூர்க் களரியில் ஒன்றாகக் கூடிப் பரசுராமனின் கரங்களால் மூத்த வாள் பெற்ற முதல் நம்பூதிரி குருமார்கள் நால்வருக்கும் எடுக்கும் பிரத்யேகப் பூஜையாகக் கருதப் பட்டது. இருபது வருடங்களுக்கு ஒருமுறையே வந்து போகும் அந்தச் சிறப்பான வைபவத்தின் போதுதான் காந்தளூர்க் களரியின் தாரையில் வைத்து வணக்கப்படும் பிரத்யேகப் பிரம்புப் பெட்டி திறந்து வைக்கப்படுமென்றும் அந்தப் பெட்டியினுள் நான்கு குருமார்களையும் குறிக்கும் நான்கு சிறிய மரகத லிங்கங்கள் உள்ளனவென்றும் பேசிக் கொண்டார்கள். லிங்கங்களினுள் ஆன்ம உருவில் ஆவிர் பவித்திருக்கும் குருக்கள் நால்வரும் பூஜைகளின் போது சூட்சும சரீரத்துடன் வெளியில் வந்து வளாகத்தில் எழுந்தருளிக் கலமறுக்கும் போட்டிகளைக் கண்டு களித்து சாலை மாணவர்களை ஆசீர்வதிப்பதாக ஐதீகம். போட்டிகள் நிறைவடையும் நாளில் மீண்டும் அவர்களை லிங்கங்களினுள் கொண்டு சென்று சேர்ப்பதற்கென்றும் பிரத்யேகச் சடங்கு செய்யப்படுமாம்.

தலைமையாசான்களைத் தவிர வேறு யாராவது அந்த லிங்கங்களைக் கண்ணுற்றால் அவர்களின் கண்பார்வை அவிந்துவிடுமென்று நம்பிக்கை நிலவியதால் அவர்களைத் தவிர வேறு எவரும் பூஜையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஆகவே குருபூஜை முடியும் வரை களரியின் வாயிலில் நூற்றுக்கணக்கான சட்டர்கள் பொறுமையுடன் காத்து நிற்க வேண்டிவந்தது. வாயிலின் ஓரத்தில் தம்புராட்டியாருடன் நின்றிருந்த நண்பர்களிருவரும் எப்போதடா இந்தச் சடங்கு முடியும்? என்றபடி இருப்புக் கொள்ளாமல் கால் மாறி மாறி நின்று நெளிந்து கொண்டிருந்தார்கள்.

இரண்டு யுகாந்திரங்கள் என்று சொல்லத்தக்க இரண்டு நாழிகைகள் கழிந்தபின் பெருத்த மணி சப்தம் களரியி லிருந்து எழுந்தது. குருபூஜை நல்லபடியாக நடந்து முடிந்து விட்டதைக் குறிப்பிடும் சங்கேதம் அது என்பதால் கூடி நின்ற மாணவர்களிடையே சலசலப்பு தோன்றியது. சில நிமிடங்கள் கழிந்தபின் அளவில் பெரிய தீபக்காலொன்றை இரு கரங்களிலும் ஏந்தியபடி காந்தளூர்ச் சாலையின் தலைமை ஆசானான திருநாராயண பட்டதிரி வாயிலிலிருந்து வெளிப்பட்டார். அவரைப் பின்பற்றி நடந்து

வந்த மூழிக்குளத்து ஆசான் மாவிலைகள் சொருகப்பட்ட வெள்ளிக்குடத்தை கரங்களில் ஏந்தியிருந்தார். அவருக் கடுத்தபடியாக வந்த திருவல்லவாய் ஆசானின் கரங்களில் சாம்பிராணிப் புகை கமழ்ந்து கொண்டிருந்த தூபக்காலும் அதற்கும் பின்னால் பரவூர்க்காரரின் கரங்களில் நந்தி முத்திரையுடன் கூடிய வெண்கல மணியும் தெரிந்தன.

பட்டதிரி ஒரிரு அடிகள் முன்சென்று தீபக்காலைத் தலைக்குமேல் உயர்த்திப் பிடிக்க, அதற்காகவே காத்திருந்தது போல் நாற்புறங்களிலும் "ஹோ!" வென்ற பெருஞ்சப்தமும் "ஹர ஹர மஹாதேவா!" என்ற அறைகூவலும் எழுந்தன. களரியின் மேற்கு மூலையில் நின்றுகொண்டிருந்த பஞ்ச வாத்திய இசைக் கலைஞர்கள் தத்தம் இசைக்கருவிகளை இசைக்கத் துவங்கலானார்கள். ஒரு புறம் திமிலும் மத்தளமும் தூம் தூம்மென்று ஒலியெழுப்ப, மறுபுறம் அவற்றுக்கிணையாக இலைத்தாளமும் இடக்கையும்[70] இயைந்து ஒலிக்கலாயின. இடையிடையே கம்பீரமாகக் கொம்போசையும் எழுந்தது.

இசைக்கச்சேரிக்கு நடுவே தூபக்காலை ஏந்தியபடி நின்று நிதானித்த பட்டதிரியின் பார்வை, வாயிலின் ஓரத்தில் அமைதியாக நின்றுகொண்டிருந்த தம்புராட்டியார் மீது படிந்தது. வெண்பட்டு வஸ்திரம் தரித்துத் தலையை அள்ளிச்சொருகி அதில் ஒரே ஒரு புஷ்பத்தை மட்டும் அனாயசமாகச் சொருகிக்கொண்டு முதிய தேவதையைப் போல் நிலைகுத்திய விழிகளுடன் நின்று கொண்டிருந்த அவரைக் கண்டதும் பட்டதிரியின் மேனி முழுவதும் படபடப்பு வந்து போயிற்று.

இந்த வயதிலும் இத்தனை அழகாக இருந்து தொலைக்கிறாளே இவள்? என்கிற எண்ணம்தான் உடனடியாக ஏற்பட்டது. நம்மிடம் ஒரு சுமையாக - ஒரு இறுக்கமாக வெளிப்படும் முதுமை இவளிடம் மட்டும் எப்படி இத்தனை அழகாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது? பார்த்த மாத்திரத்தில் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த இராஜகுலப் பெண்மணி இவள் என்பது தெரிந்து போகிறதே? அடக் கடவுளே! இவளை

[70] ஒரு காலத்தில் தமிழகத்தின் பல திருக்கோயில்களில் ஓங்கி ஒலித்த இடக்கையும் இலைத்தாளமும் இன்றளவிலும் கேரளத்தில் புழக்கத்திலிருப்பது கவனிக்கத்தக்கது.

நேரில் பார்த்ததும் மனது இத்தனை தூரமா குழைந்துபோக வேண்டும்? மற்ற விஷயங்களில் துளியும் சலனமடை யாதவனான இந்த பட்டதிரி இவளைப் பொறுத்தவரை மட்டும் இத்தனை பலகீனனாக ஆகிப்போவது ஏனோ?

தம்புராட்டியாரையொட்டி அவருக்கு அருகில் உரிமையுடன் நின்றிருந்த இரு இளைஞர்கள் தம்மைக் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருப்பதை அவரது கண்கள் கவனிக்கத் தவறவில்லை. இவர்கள்தான் போட்டிகளில் கலந்து கொள்ள வந்திருக்கும் சோணாட்டார்களா? இருக்கட்டும், இருக்கட்டும். இவர்களைப் பிற்பாடு கவனித்துக் கொள்வோம் என்று கருவியபடி பார்வையை மீட்டுக் கொள்ள முயன்றவரின் கண்கள் தற்செயலாகக் கம்பன் மணியனாரின் திருமுகத்தைக் கூர்ந்து நோக்கின. இளையவரின் பார்வையிலிருந்த ஊடுருவல் அவரை ஏதோ தொந்தரவுக்கு உள்ளாக்கிற்று. அடிவயிற்றிலிருந்து இனம் புரியாத உணர்வொன்று மேலெழும்பித் தொண்டைக் குழியை அடைத்துக் கொண்டு நின்றது. பிரமை பிடித்தவர்போல் இளையவரையே சில வினாடிகள் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றவர், அவருக்குப் பின்னால் நின்றிருந்த மூழிக்குளத்தார் 'ம்ஹூம்!' என்று குரலெடுத்துக் கனைக்க, தமது எண்ணங்களிலிருந்து விடுபட்டுக் கொடிமரத்தை நோக்கி நடக்க முற்பட்டார்.

எவரோ 'வழி வழி!' என்று குரலெடுத்துக் கூவினார்கள்.

கூடி நின்ற கூட்டத்திற்கு மத்தியில் ஒரு பிளவு ஏற்பட்டது. அந்தப் பிளவிற்குள் கால்பதித்த பட்டதிரியும் இதர ஆசான்களும் சில நிமிடங்களில் கொடிமரத்தின் பீடத்தை அடைந்தார்கள்.

நல்லவேளையாக தீபக்காலில் கற்பூரம் இன்னமும் அணைந்துபோய் விடாமல் எரிந்துகொண்டிருந்தது. பீடத்தின் நாற்புறங்களிலும் செதுக்கப்பட்டிருந்த நான்கு சாலைகளின் முத்திரைகளுக்கும் ஆரத்தி காட்டிய பட்டதிரி, தீபக்காலின் நெருப்புக்கங்கை கொடிமரத்திற்கு முன் சாய்த்தார். மேற்கொண்டு கற்பூரக் கட்டிகளும் இதர வாசனாதிப் பொருட்களும் அதில் மளமளவென்று வீசப்பட்டன. தீபம் பன்மடங்கு பிரகாசத்துடன் சுடர் விட்டு எரியலாயிற்று.

ஆசான்களுள் மிக மூத்தவராகக் கருதப்பட்ட மூழிக் குளத்தார் கொடிமரத்தை அணுகிக் கொடியை இறுக்கப்

பற்றியிருந்த கயிற்றை விலக்கிப் பரபரவென்று இழுக்க, அந்த செவ்வண்ணக் கொடி உச்சிக்கு ஏறிற்று. சுழன்றடித்துக் கொண்டிருந்த கடற்காற்று கொடியை ஏகத்துக்கு அலைக்கழிக்க, சட படவென்ற சப்தத்துடன் அந்தக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. கொடியில் தங்க நிறத்தில் பொறிக்கப்பட்டிருந்த சாலை முத்திரைகளின் மீதும் கதிரவனின் கிரணங்கள் பளிச்சென்று விழுந்தன.

பஞ்ச வாத்தியங்களை இசைக்கலைஞர்கள் உச்சகதியில் முழங்கினார்கள். அரோ! அரோ! வென்று நாற்புறங்களிலும் பெருத்த ஆர்பரிப்பு எழுந்தது. குறித்த நாளில் குறித்த சுபமுகூர்த்த வேளையில் காந்தளூர்ச் சாலையின் கலமறுக்கும் போட்டிகள் நல்லபடியாகத் துவங்கி விட்டதை உலகிற்கு அறிவிக்கும்படியாக 'பூம்..' என்ற பெருத்த சங்கொலி மணியம்பலத்தின் மண்டபத்திலிருந்து கம்பீரமாக எழுந்தது.

48. நால்வைகைத் திறன்கள்



கொடியேற்ற வைபவம் நடந்து முடிந்த பின் ஆசான்களுள் மூத்தவரான மூழிக் குளத்தார் மைதானத்தில் கூடியிருந்த கூட்டத்தை அமைதிப்படுத்திவிட்டு உரத்த குரலில் கீழ்க்கண்டவாறு மொழிந்தார்:

"இந்த வருடக் கலமறுக்கும் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்வதற்காக மலை மண்டலத்தின் நான்கு சாலைகளிலிருந்தும் பல சட்டர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மேலும் பார்த்திவசேகரபுரத்துச் சாலையிலிருந்தும் கழிக்குடி ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையிலிருந்தும் இரண்டிரண்டு சாத்திரர்கள்[71] போட்டிகளில் கலந்துகொள்ள விழைந்திருக்கி றார்கள். ஆகவே இவர்கள் அனைவருக்குமிடையே தகுதிச் சுற்றுக்கள் நடத்திச் சாலைக்கு இரண்டு சட்டர்களாகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்திருக்கிறோம்.

இச்சுற்றுக்களில் மாணவர்களின் பல்வேறு தகுதிகளும் குணாதிசயங்களும் சோதனை செய்யப்படும்.

---

[71] சட்டர்களைச் சாத்திரர் என்றும் குறிப்பிடுவதுண்டு.

இச்சோதனைகளில் தேறுபவர்கள் மட்டுமே அடுத்த கட்டப் போட்டிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

ஒரு சாலையைச் சேர்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட சாத்திரர் தகுதிச் சுற்றுக்களில் தேர்ச்சி பெற்றால் அவர்கள் அனைவருக்கும் அடுத்தகட்டப் போட்டிகளில் பங்கு பெறும் வாய்ப்பை வழங்க முடிவு செய்திருக்கிறோம். அதே போல ஒரு சாலையைச் சேர்ந்த சட்டர்கள் ஒருவரும் தேர்வாகா விட்டால் அவர்கள் மேற்கொண்டு போட்டிகளில் கலந்து கொள்ளவியலாது.

தகுதிச் சுற்றுக்களில் கலந்து கொள்ள விழையும் சாத்திரர்கள் மட்டும் துவிஜபீடத்திற்கருகே வந்து நில்லுங்கள். மற்றவர்கள் இப்போதைக்குக் கலைந்து செல்லலாம். நண்பகலுக்குப் பின் தேர்வுகள் ஆரம்பமாகும்."

நாற்புறங்களிலும் சளசளவென்று பேச்சுக்குரல்கள் எழுந்தன. கூடி நின்ற சட்டர்களும் பொதுமக்களும் ஏதேதோ பேசியபடி கலைந்து செல்ல முற்பட, அந்த ஜன சமுத்திரத்தை விலக்கிக்கொண்டு தகுதிச் சுற்றுக்களில் கலந்து கொள்ள விழைந்த சட்டர்கள் துவிஜபீடத்தைக் குறிவைத்து முன்னேறினார்கள்.

அடுத்த சில நிமிடங்களில் அங்கே பத்திருபது தலைகள் மட்டும் மிஞ்சின. எண்ணிப் பார்த்ததில் மூழிக்குளத்தி லிருந்து ஐந்து சட்டர்களும் திருவல்லவாய் மற்றும் பரவூரிலிருந்து தலா மூன்று சட்டர்களும் காந்தளூர், பார்த்திவசேகரபுரம் மற்றும் கழிக்குடியிலிருந்து தலா இரண்டிரண்டு சட்டர்களும் வந்திருந்தார்கள்.

அனைவருக்கும் கொடுங்கோளூர் பகவதியம்மன் திருக்கோயிலில் வைத்து மந்திரிக்கப்பட்ட பிரத்யேகத் தாமிரத் தகட்டினாலான தாயத்து கொடுக்கப்பட்டது. போட்டிகள் முடியும்வரை தாயத்தை ஒவ்வொருவரும் தத்தம் வலது தோள்களில் கட்டியிருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

தங்களுடன் போட்டியிடப்போகும் சாத்திரர்கள் இவர்கள்தானா? என்கிற எதிர்பார்ப்புடனும் கேள்வியுடனும் அங்கே கூடிநின்ற இளைஞர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சிலரின் கண்களில் நட்பு தெரிந்தது. சிலரின் கண்களில் அசூயையும் பொறாமையும் தெரிந்தது. சிலரின் பார்வையிலோ தற்பெருமையும்

அகம்பாவமும் விரவிக் கிடந்தன. எவன் வந்தால் எனக்கென்ன? என்னை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது! என்கிற எண்ணம் போலும்.

தம்புராட்டியாருடன் நின்று கொண்டிருந்த நண்பர்கள் இருவருக்கும் அந்தச் சூழலும் மனிதர்களும் அவர்தம் நடத்தைகளும் வித்தியாசமாகத் தெரிந்தன. அவர்களுக்கு மலைமண்டலத்துச் சாலைச்சூழலும் சட்டர்களும் பட்டர்களும் சம்பிரதாயங்களும் இன்னமும் முழுமையாகப் பழக்கமாகவில்லை. இறுக்கி முடியப்பட்ட கொண்டையுடன் மார்புக்குக் குறுக்கே தடித்த முறுகிய யக்ஞோபவீதம் ஓட வஸ்திரங்களை இறுக்கக் கட்டிக் கொண்டு உரத்த குரலில் பேசித்திரிந்த அந்த மனிதர்கள்[72] அவர்களின் கண்களுக்கு வித்தியாசமானவர்களாகத் தெரிந்தார்கள்.

குறிப்பாகக் காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியருக்கு மிக அருகில் நின்று அவருடன் அடிக்கடி காதோரமாகப் பேசிக்கொண்டிருக்கும் அந்த இரண்டு ஆஜானுபாகுவான இளைஞர்கள் யார்? அவர்களின் தோற்றம் ஆச்சாரியரின் தோற்றத்தை ஒட்டியே அமைந்திருந்தது. அவரைப் போன்றே நீண்ட கூர்மையான நாசி. அளவில் சிறிய கண்கள். தடித்த முடிச்சிட்ட புருவங்கள். சதைப்பிடிப்பான கன்னங்கள். பெரிய உதடுகள். கட்டான உடல். ஐந்தடிக்கும் மேற்பட்ட உயரம். பட்டதிரிக்கு இல்லாத சுருண்ட மயிர்களினாலான முரட்டுத் தாடி அவர்களுக்கு இருந்தது. இவர்கள்தாம் பட்டதிரியின் தம்பியர்களான வாமனன் மற்றும் அச்சுதன் நம்பூதிரியாக இருக்குமோ?

அந்த இரண்டு இளைஞர்களும் இப்போது நண்பர்களின் பக்கம் திரும்பி இருவரையும் கூர்மையாக நோட்டமிடலானார்கள். ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் அவர்தம் முகபாவங்கள் வெவ்வேறு உணர்வுகளைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

ஆச்சாரியாருக்கு வலப்புறமாக நின்றிருந்த இளைஞர் சிநேக பாவத்துடன் உதடுகளில் முறுவல் தோன்ற

---

[72] இராஜஸ்தானத்தைச் சேர்ந்த உத்யோத்தனசூரி என்ற கவி எழுதிய குவல்யமாலா எனும் பத்தாம் நூற்றாண்டு ஜைன காவியம் சாலைச் சட்டர்களின் உருவங்களையும் நடத்தைகளையும் பற்றிய அக்காலச் சித்திரத்தை அளிப்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களைப் பார்த்து மெலிதாகச் சிரித்தார். அவரது கண்களில் இயல்பான அமைதியும் ஆழமும் படிந்திருந்தன.

அதற்கு நேர் மாறாக, இடப்புறம் நின்றிருந்த இளைஞர் நண்பர்களிருவரையும் பார்த்த பார்வையில் அலட்சியம் எழுதி ஒட்டியிருந்தது. ஹ! நீங்களிருவரும்தான் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வந்திருக்கும் சோழ இளைஞர்களா? என்ன தைரியம் உங்களுக்கு? உங்களை என்ன செய்கிறேன் பார்! என்று அவரது பார்வை கூறாமல் கூறியது.

வலப்புறத்தவர் தங்களைச் சுட்டிக்காட்டி பட்டதிரியின் காதுகளில் ஏதோ ஓதுவதையும் பட்டதிரி அதற்கு மறுப்புத் தெரிவித்துத் தலையை ஆட்டுவதையும் காணமுடிந்தது. என்றாலும் அந்த இளைஞர் பிடிவாதமாக ஏதோ கூறிவிட்டு அவர்களை நோக்கி நடந்து வந்தார். நெருங்கி வந்து நின்று நிமிர்ந்த தலையுடன் அவர்களிருவருக்கும் முகமன் கூறினார்.

"நமஸ்காரங்கள்! என் பெயர் வாமனன் நம்பூதிரி. காந்தளூர் ஆச்சாரியாரின் சகோதரன் நான்."

நண்பர்களும் பதில் முகமன் கூறித் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

தம்புராட்டியாரை நெருங்கிய வாமனர், குனிந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

"யாரது?"

"அம்மா! நான்தான் வாமனன்."

"வாமனனா? நன்றாக இருக்கிறாயா உன்னி?" தம்புராட்டியாருக்கு உலகத்தில் உள்ள அனைத்து இளைஞர்களுமே குழந்தைகள்தான் போலும்.

"மிக நன்றாக இருக்கிறேனம்மா. தங்களையும் இந்த இரு இளைஞர்களையும் இங்கே பார்ப்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியாயிருக்கிறது. வளாகத்தில் தங்களுக்கு வசதிகள் உரியவாறு உள்ளனவா? வடமேற்கிலுள்ள முறிகளில்தானே அனைவரும் தங்கியிருக்கிறீர்கள்? அங்கே காற்று நன்றாக வரும் என்பதால்தான் அந்த முறிகளை உங்களுக்கு ஒதுக்கச் சொன்னேன். வேறு ஏதேனும் வசதிக் குறைவுகள் இருந்தால் தயவுசெய்து தெரிவியுங்கள். தயங்க வேண்டாம்."

வாமனர் தங்களுடன் நின்று நிதானமாகப் பேசிக் கொண்டிருப்பதை சற்று தூரத்திலிருந்து அச்சுதன் நம்பூதிரி அசூயையுடன் கவனிப்பதையும் பட்டதிரியின் காதுகளில் எதையோ ஓதுவதையும் மழபாடியாரின் கண்கள் குறித்துக் கொண்டன. கடுகடுப்பான முகத்துடன் அவர்களை ஏறிட்டு நோக்கிய பட்டதிரி, தாங்கள் கண்காணிக்கப்படுவதைக் கவனித்துவிட்டுத் தலையை வேறுபுறம் திருப்பிக் கொண்டார்.

கூடிநின்ற சட்டர்களின் பெயர்களை கேட்டறிந்து அவற்றைப் பதிவு செய்துகொண்ட மூழிக்குளத்து ஆசான் "தகுதிச் சுற்றில் கலந்துகொள்ளப் போகும் சட்டர்கள் நண்பகல் உணவுக்குப் பின் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மைதானத்திற்கு வந்து சேருங்கள். தகுதிச் சுற்றுக்களின் முதல் அங்கமாக வளரிக்கலமும் ஆயுதப் பயட்டும் அங்கே நடைபெறும்!" என்று அறிவித்தார்.

* * * * * * * *

கலமறுக்கும் போட்டிகளின் இன்றியமையாத முதல் அங்கமாகத் திகழ்ந்த தகுதிச் சுற்றுக்களின் நோக்கம், பின்னால் இரண்டிரண்டு பேராக பொருந்தப்போகும் சட்டர்கள் ஒருவரையொருவர் எதிர்கொள்ளும் குறைந்த பட்ச உடல்வலிமையுடனும் மனவலிமையுடன் திகழ்கிறார்களா என்பதைக் கணித்தறிவதேயாகும்.

வலிமை குறைவான சட்டன், பலம் மிகுந்த எதிராளியுடன் நேருக்குநேர் மோதும்போது அவனது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடலாம். அல்லது அங்கஹீனம் ஏற்படலாம். அத்தகைய அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டு, முதலிலேயே சட்டர்களின் உடல் பலத்தையும் மனோபலத்தையும் ஒருங்கே சோதித்தறிவது முக்கியமானதாகக் கருதப்பட்டது.

தகுதிச் சுற்றுகள் பெரும்பாலும் நான்கு அங்கங்களைக் கொண்டிருக்கும். இந்நான்கு அங்கங்களும் சட்டர்களின் நால்வகைத் திறன்களைச் சோதித்தறிபவையாக அமைந்திருக்கும்.

அவையாவன:

- விரைவாக எதிர்ச்செயல் புரியும் திறன்(Reflex)

- ஆயுதங்களைக் கையாளும் திறன்(Weapon Handling)
- மூச்சு மற்றும் பிராணசக்தியையும் திறம்படக் கையாளும் திறன் (Prana & Breath Handling)
- உடலின் தாங்குதிறனையும் அயர்வெல்லையையும் நீட்டிக்கும் திறன்(Extending Strength & Stamina)

இந்நால்வகைத் திறன்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் கருதப்பட்டன. ஆகவே பெரும்பாலும் இதே வரிசையில்தான் சோதனைகளையும் மேற்கொள்வது வழக்கம்.

உதாரணமாக ஒரு சட்டனிடம் விரைவாக எதிர்ச் செயல்புரியும் திறன் இருந்தால்தான் அவனது மற்ற திறன்களைச் சோதிக்க முற்படுவார்கள். முதல் சோதனையிலேயே அவன் தோற்றுவிட்டால் மற்ற திறன்களுக்குள் செல்லவேண்டிய அவசியமேயில்லை என்று கருதப்பட்டது. அதேபோல் பிராணனைத் திறம்படக் கையாளத் தெரியாத ஒருவனிடம் தாங்குதிறனை எதிர்பார்ப்பதில் பயனில்லை.

நால்வகைத் திறன்களையும் குறிப்பிட்ட வருடப் போட்டிகளில் எவ்விதமான சோதனைகள் நடத்திக் கணித்தறியலாம் என்பதை அந்தந்த வருடப் போட்டிகளுக்குத் தலைமையேற்கும் மூத்த ஆசான் இதர ஆசாரியர்களுடன் கலந்தாலோசித்து முடிவு செய்வார்.

* * * * * * * *

காந்தளூரின் அந்த வருடப் போட்டிகளை முன்னின்று நடத்திய மூழிக்குளத்து ஆசான் தகுதிச் சுற்றுக்களின் முதல் இரண்டு அங்கங்களாக வளரிவீச்சும் வாள்பயட்டும் நடைபெறும் என்று அறிவித்ததைக் கேட்ட தம்புராட்டியாருக்கு அவைஇரண்டும் எதிர்விசை புரியும் திறனையும் ஆயுதங்களைக் கையாளும் திறனையும் கணித்தறியும் சோதனைகளாகவே தெரிந்தன. நண்பகல் உணவை முடித்துக்கொண்டு முறியில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த தருணத்தில் அந்த இரண்டு சோதனைகளைப் பற்றிய சில நுணுக்கங்களை அவர் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள முற்பட்டார்.

"உன்னிகளா! வளரி வீச்சு என்று குறிப்பிடப்படுவது நீங்கள் நினைப்பதைப்போல் சாதாரண வளரி வீசுதலாக இராது. வேறு ஏதாவது நுணுக்கங்களை அதில் புகுத்தி யிருப்பார்கள். இது ஒருவரது உடல் எத்தனை வேகமாக எத்தனை அனிச்சையாக எதிர்ச்செயலாற்றுகிறது என்பதைக் கணித்தறிவதற்காக நடத்தப்படும் சோதனை.

உலகம் நம்மைச் சுற்றி இயங்கிக்கொண்டே இருக்கிறது. சூழ்ந்திருக்கும் காற்றில் உயிரோட்டம் நிறைந்திருக்கிறது. அந்த உயிரோட்டத்தின் ஒரு அங்கமாகத் தான் நமது உடலும் இருக்கிறது. உடல் என்பது தனித் தீவல்ல. பிரபஞ்ச இயக்கத்தின் இன்றியமையாத ஒரு பகுதி. அது அந்த இயக்கத்தோடு எந்நேரமும் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்கிறது.

ஆனால் மானுட மனம் பெரும்பாலும் அந்த இணைப்பை உணர்வதில்லை. ஏனெனில் அது அகந்தையால்[73] ஆனது. அகந்தை உடலைத் தனிமைப் படுத்துகிறது. துண்டாடுகிறது. பிரபஞ்சப் பேரியக்கத்தி லிருந்து நமது உடலை அது பிரித்து விடுகிறது. அல்லது பிரித்திருப்பதைப் போன்ற பாவனையைக் கொடுக்கிறது.

சாலைப்பயிற்சிகளும் யோகப்பயிற்சிகளும் அந்த இணைப்பை மீண்டும் மீட்டெடுக்க முயற்சி செய்கின்றன. அம்முயற்சிகள் அனைத்துமே மனதைத் தள்ளிநிற்கச் சொல்லும் பயிற்சிகள் தாம். மனம் குறுக்கிடாமல் இருந்தால் உடல் தானாகவே பிரபஞ்சப் பேரியக்கத்தோடு இணைந்து கொள்ளும். அந்த இணைப்புக் கிடைத்துவிட்டால் பார்வை முன்புறம் மட்டுமல்ல.. நாற்புறங்களிலும் கிடைக்கும். மெய்யே கண்ணாகுக! என்று நாம் திரும்பத் திரும்பக் கூறுவதற்குக் காரணம் இந்த அகவிழி எந்நேரமும் எப்போதும் விழிப்புணர்வுடன் சுற்றிச் சுழன்றுகொண்டே யிருக்கவேண்டும் என்பதற்காகத்தான். உறங்கும்போதுகூட உடல் ஒரு வித ஆயத்த நிலையிலேயே இருக்க வேண்டும். புரிகிறதா?"

---

[73] Ego.

அந்தக் கடைசி வாக்கியத்தில் அத்தனை செய்திகளுமே அடங்கியிருந்தன. உடல் ஆயத்த நிலையில் எந்நேரமும் இருப்பது. அது என்ன என்பதை நண்பர்கள் கடுமையான பயிற்சிகளின் மூலம் அறிந்திருந்தார்கள். அந்த அறிதலின் காரணமாகத்தான் தம்புராட்டியார் கூறமுற்பட்டது என்ன என்பது முழுமையாகப் புரிந்தது.

ஒரு வகையில் மனிதனைவிட மிருகங்கள் இவ்விதமான எதிர்ச்செயலாற்றும் திறனை மழுங்கிவிடாமல் கூர்மையாக வைத்துக்கொண்டிருக்கின்றன. எந்நேரமும் தாம் தாக்கப் படலாம், எந்தக் கணத்திலும் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்கிற நிலைமை காட்டில் எப்போதும் நிலவுவதால் அங்கு அது அத்தியாவசியத் திறனாகவே ஆகிவிடுகிறது.

மனிதனின் உலகத்தில் அத்தகைய அபாயங்களில்லை. அதனால் அவனுடைய நுண்ணிய உணர்வுகள் காலப்போக்கில் மங்கி மறைந்துவிட்டன. அதனை மீட்டெடுக்க வேண்டுமானால் மனதைத் தள்ளி வைத்தாக வேண்டும்.

மனதைத் தள்ளிவைத்தல்.

இதனைச் சொல்வது எளிது. செய்வது சிரமம். எந்நேரமும் எப்போதும் இருப்பை ஆக்கிரமித்தபடியிருக்கும் மனதைத் தள்ளி நிற்கச் சொல்வது மிகவும் சிரமம். அதற்குப் பயிற்சி தேவை. உடலின் மீதான மனதின் இறுக்கமான பிடியை தளர்த்த நீண்ட பொறுமையான பயிற்சிகள் தேவை.

"என்ன உன்னிகளா.. ஒன்றும் கூறாமல் நிற்கிறீர்கள்? சொல்வது புரிகிறதல்லவா?"

"மிக நன்றாகப் புரிகிறதம்மா."

மணியனாரின் குரலில் தெரிந்த தெளிவும் உறுதியும் தம்புராட்டியாரை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. சீரான ஒழுங்கோடு மேற்கொண்ட பயிற்சிகளின் விளைவாக முகிழ்த்த தன்னம்பிக்கை அது. எதிர்ச்செயலாற்றும் திறனை இருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே தாம் கொடுத்த சில பிரத்யேகப் பயிற்சிகள் அவருக்கு ஞாபகம் வந்தன. பரவாயில்லை! கற்றுக்கொடுக்கப்பட்டதை உன்னிகள் நல்லபடியாக உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அந்த ஆழமான புரிதலினால்தான் இத்தனை உறுதியான பதிலாக வெளிப்படுகிறது. இதற்கு மேல் வளரி வீச்சைப் பற்றிப் பேசவேண்டிய

அவசியமேயில்லை. அதனை எதிர்கொள்ள இவர்கள் ஆயத்தமாகவே இருக்கிறார்கள்.

"அடுத்ததாக ஆயுதப்பயட்டு பற்றிச் சில வார்த்தைகள். ஆயுதம் என்பது என்ன?"

சாலைப்பயிற்சிகளை மேற்கொள்வதற்கு முன் ஆயுதங்கள் என்பவை தாக்குதலுக்கும் தற்காப்புக்குமான கருவிகள் என்பதாக மட்டுமே தெரிந்தன. அவற்றை எப்படிப் பிடித்துக் கொள்வது, எப்படிக் கையாள்வது, எந்த முறையில் ஆயுதத்தைப் பிரயோகித்தால் சரியானபடி தாக்குதல் நேரும் என்பன போன்றவற்றில்தான் முழுக் கவனமும் சென்றது.

இப்போது அப்படியல்ல. ஆயுதம் என்பதைப் பற்றிய புரிதல் இப்போது மாறிவிட்டது.

"ஆயுதம் என்பது நமது உடலில் ஒரு அங்கம். வாள் என்பது நீட்டிக்கப்பட்ட வலக்கரம். கேடயம் என்பது தாக்குதலை எதிர்கொள்ளும் தன்மையுடன் கூடிய இடக்கரம். ஆக ஆயுதம் என்று தனியே எதுவுமேயில்லை."


ஆயுதம் வேறு உடல் வேறு என்கிற பிரிவினை அற்றுவிட்டது. எந்த ஆயுதத்தை ஏந்திப் பிடித்தாலும் சில நொடிகளில் அது உடலின் இன்றியமையாத அங்கமாக மாறிவிடுகிறது. வாள் வேறு வலக்கரம் வேறல்ல. கேடயம் வேறு இடக்கரம் வேறல்ல. ஆகவே ஆயுதங்களைக் கையாள்வது என்கிற பிரக்ஞையே எழுவதில்லை. கரங்களையும் கால்களையும் எத்தனை இயல்பாக உபயோகிக்கிறோமோ அத்தனை இயல்பாக ஆயுதங்களையும் உபயோகிக்க வேண்டியது.

அது மட்டுமல்ல. ஆயுதங்கள் உடலின் ஒரு அங்கமாக மாறமுடியுமென்றால் உடலின் அங்கங்களும் ஆயுதங்களாக மாறிவிடமுடியுமல்லவா? அதனால்தான் ஆயுதம் என்று ஒன்று தனியே இல்லை!

"பிரமாதம்! பிரமாதம்! அவ்வளவுதான். நீங்கள் தகுதிச் சுற்றுக்களை எதிர்கொள்ள முழுமையாக ஆயத்தமாகி விட்டீர்கள். வாருங்கள், கிளம்புவோம்!"

நடக்கப்போகும் சுற்றுக்களில் சில சட்டர்களையாவது கழித்துக் கட்டவேண்டும் என்கிற முனைப்புடன் காந்தளூர்

மைதானம் ஒரு உக்கிரமான வளரி வீச்சை எதிர்பார்த்துக் காத்திருந்தது.



வளரிக்கலமும் வளரி வீசும் முறைமையும்.

பரவூரிலிருந்து வந்திருந்த அந்தச் சட்டன் தன்னை நாற்புறங்களிலும் சூழ்ந்து நின்ற சட்டர்களை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொண்டான். அவர்கள் வட்ட வடிவில் அவனிடமிருந்து ஏறக்குறைய இருபது இருபத்தைந்தடி தொலைவில் நின்று கொண்டிருந்தார்கள். வட்டத்தின் மையத்தில் சட்டன் நின்றான்.

அனைவரும் இடமிருந்து வலமாக மெல்ல மெல்ல அவனைச் சுற்றி நடக்கலானார்கள். அவ்வாறு நடக்கும்போது வட்டப்பாதையின் அளவு மாறிவிடக் கூடாது என்பதற்காக வெண்ணிறத்தில் அரிசி மாவினால் ஒரு வகையான வட்டம் வரையப்பட்டிருந்தது. இந்த வட்டம் கலம்[74] என்றழைக்கப்பட்டது. வளரிக்கலத்தின் குறிப்பிட்ட ஸ்தானங்களை ஒட்டியே சட்டர்கள் நடந்து கொண்டிருந்ததால் அவர்களுக்கும் சட்டனுக்குமிடையிலான தூரம் மாறாமல் இருந்தது.

நடுவில் நின்றுகொண்டிருந்த சட்டன், அவர்கள் அவ்வாறு சுழன்று வரும்போது எத்தனைபேர் தனக்குப் பின்னால் செல்கிறார்கள், எத்தனை பேர் தனக்கு வலப்புறம் இருக்கிறார்கள், எத்தனை பேர் இடப்புறம் போகிறார்கள் என்பதையெல்லாம் கணித்துக் கொண்டான்.

'டாங்!'

தமக்கருகில் இருந்த மணியை மூழிக்குளத்தார் அடிக்க, அடுத்த கணமே இடமிருந்து வலமாகச் சுழன்று கொண்டிருந்தவர்கள் சட்டென்று திசைமாறி வலமிருந்து இடமாகச் சுழலத் துவங்கினார்கள். வேகமும் அதிகப் படுத்தப்பட்டது. சட்டன் மறுபடியும் தன்னைச் சுற்றி நிற்பவர்களின் இடங்களைக் குறித்துக் கொண்டான்.

'டாங்!'

மீண்டும் மணியோசை.

அடுத்த கணம் வட்டப்பாதையில் நின்று கொண்டிருந்த சட்டர்கள் அனைவரும் தங்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த இளம் மாணவர்களின் கரங்களிலிருந்து நான்கைந்து வளரிகளை[75] எடுத்துக் கொண்டார்கள். இந்த வளரிகள் போர்வீரர்கள் உபயோகிக்கும் வளரிகளைவிட அளவில் சிறியவையாக இருந்தன. அதிக கனமில்லாத

---

[74] Its (Central Style Kalarippayattu) distinctive techniuqes are performed within floor drawings known as *Kalam*. [Zarrilli, P. 2001:103]

[75] வளரி அல்லது வளைத்தடி என்பது அந்நாளில் பரவலான பயன்பாட்டில் இருந்த ஒரு வகையான வளைந்த ஆயுதம். மரத்தால் செய்யப்பட்டிருக்கும். வெளிநாடுகளில் இதனை பூமராங் என்று குறிப்பிடுவார்கள். ஆனால் பூமராங் வடிவத்திற்கும் வளரியின் வடிவத்திற்கும் சிற்சில வேறுபாடுகளுண்டு.

மரத்தினால் செய்யப்பட்டிருந்தன. காற்றில் அவற்றின் வேகம் கூடுதலாக இருந்தது.

வட்டப்பாதையில் நகர்ந்தபடி அவர்கள் ஒவ்வொருவராக நடுவில் நின்றிருந்த சட்டனை நோக்கி வளரி வீச முற்பட்டார்கள். நாற்புறங்களிலிருந்தும் சுழன்று சுழன்று பறந்து வந்து தன்னைத் தாக்கும் வளரிவீச்சிலிருந்து அந்தச் சட்டன் துள்ளியும் குதித்தும் குனிந்தும் வளைந்தும் தப்பித்துக் கொண்டிருந்தான்.

அவனைச் சுற்றிலும் வரையப் பட்டிருந்த மூன்றடிச் சதுரக் கலத்திற்கு வெளியே அவனது கால்கள் படக்கூடாது என்கிற விதி இருந்தது. அதனால் எத்தனை ஆவேசமாகத் துள்ளினாலும் கால்களை வெளியே வைத்துவிடாமல் எச்சரிக்கையாகச் சதுரத்திற்குள்ளேயே குதித்துக் கொண்டிருந்தான். வளரி வீச்சின் வேகத்தையும் திசையையும் அவன் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கணித்து அதற்கேற்றபடி தனது உடலை வளைத்து நெளித்து அதிலிருந்து தப்பிக்க வேண்டியிருந்தது.

சில நிமிடங்கள் இவ்வாறு கழிந்ததும் மூழிக் குளத்தார் மீண்டும் எழுந்தார். "கண் கட்டு!" என்று அறிவித்தார்.

அடுத்த நொடியே எவனோவொருவன் கரங்களில் கறுப்புத் துணியுடன் மளமளவென்று ஓடிவந்து சட்டனை நெருங்கி அவனது கண்களை இறுக்கக் கட்டி விட்டான். சட்டனின் பாடு இப்போது தர்மசங்கடமாகி விட்டது. என்றாலும் எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு வலக்கரத்தை உயர்த்திக் கையை அசைத்தான்.

மீண்டும் வளரி வீச்சு துவங்கியது.

இந்த முறை அசையாமல் வட்டப்பாதையிலேயே ஸ்திரமாக நின்றுவிட்ட சட்டர்கள் மிக நிதானமாகத் தங்களின் வீச்சைத் துவங்கினர். ஒரு வளரி வீசப்பட்டு அது கீழே விழும்வரை காத்திருந்து விட்டு அதற்குப் பிறகே அடுத்த வளரி வீசப்பட்டது.

கண்களிரண்டும் கட்டப்பட்டு விட்டதால் நடுவில் நின்ற சட்டன் இப்போது தனது காதுகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனை உணர்ந்தோ என்னவோ அந்தப் போட்டிகளைப் பார்ப்பதற்காக மைதானத்தின் நாற்புறங்களிலும் கூடி நின்ற கூட்டம் அப்படியே அமைதியில் உறைந்துபோய் நின்றுவிட்டது.

காற்றில் வளரி பறந்து வரும் ஓசையையும் அவ்வப்போது வெகு தூரத்திலிருந்து குரல்கொடுத்துக் கொண்டிருந்த புள்ளினங்களின் சப்தங்களையும் தவிர வேறு ஓசைகளே அங்கு எழவில்லை.

"விர்.ர்ர்ர்.."

காற்றில் சுழன்றபடி பறந்து வரும் வளரியின் திசையையும் வேகத்தையும் அதன் ஒலியைக் கொண்டே அவதானித்து, அதற்கேற்றபடி ஷணநேரத்திற்குள் தனது உடலை வளைத்தும் நெளித்தும் அந்தச் சட்டன் அற்புதமாகத் தன்னைத் தற்காத்துக் கொண்டான்.

சில கணங்களில் அவனைச் சுற்றி நின்ற சட்டர்கள் மெல்ல மெல்ல வட்டப்பாதையில் நகர்ந்தபடி வளரி வீச்சைத் தொடர முற்பட்டார்கள். இது சட்டனின் கணிப்பைப் பெரிய சவாலுக்குள்ளாக்கியது. இப்போது அவனது அசைவுகளில் தள்ளாட்டம் தெரிந்தது.

"விர்.. ர்..."

வலப்புறத்திலிருந்து எதிர்பாராத வேகத்தில் சுழன்று வந்த ஒரு வளரியின் வீச்சை அவன் அவதானித்து அதிலிருந்து தப்பிக்க முற்படுவதற்குள் அது அவனது தோள்களைத் தாக்கிவிட்டது. நல்லவேளையாக வளரியின் அளவும் கனமும் அத்தனை பலமாக இல்லையாதலால் அவனுக்குப் பெரிதாக அடிபடவில்லை.

"ஒன்று!" என்று அறிவித்தார் மூழிக்குளத்தார்.

மீண்டும் நாற்திசைகளிலிருந்தும் நகர்ந்தபடியே தாக்குதல்கள் தொடர்ந்தன. மீண்டும் துள்ளல். ஆனால் அவனால் அதிக நேரத்திற்குச் சமாளிக்க முடியவில்லை. அடுத்தடுத்து பலமுறை தலையிலும் பிடரியிலும் தோள்களிலும் தாக்கப்பட, அவனுக்கான வாய்ப்பு அத்துடன் முடிந்துவிட்டது என்பதை மணியோசை அறிவித்தது.

'டாங்!'

அவன் சற்றே ஏமாற்றத்துடன் வட்டத்தை விட்டு வெளியில் வந்தான். முதற் போட்டியாளனாகக் களமிறங்காமல் இரண்டாவது அல்லது மூன்றாவதாக களமிறங்கியிருந்தால் இன்னமும் நன்றாகச் செய்திருக்கலாம் என்று தோன்றியது. என்ன செய்வது? விதி!

"பரவூர் சாமவேத சரணத்தைச் சேர்ந்த ஜனகனின் முறை முடிந்தது. வாங்கிய அடிகள் மொத்தம் எட்டு!" என்று அறிவித்தார் ஆசான். அந்தத் தகவல் ஒரு ஓலையில் எழுத்தாணியால் குறித்துக் கொள்ளப்பட்டது

பரவூர் ஜனகனைத் தொடர்ந்து திருவல்லவாய் கௌசிக பட்டனும் மூழிக்குளத்து சோமேஸ்வரனும் பார்த்திவ சேகரபுரத்து சார்ங்கனும் வளரிவீச்சைத் திறம்பட எதிர் கொண்டார்கள்.

"அடுத்தாகக் கழிக்குடிப் பெருஞ்சாலையிலிருந்து சோழ வீரர் பரமன் மழபாடி!" என்கிற அறிவிப்பு கேட்டது.

49. மெய்யே கண்ணாகுக



தமது பெயர் அறிவிக்கப்படுவதைக் கேட்ட மழபாடியார் குனிந்து அருகில் நின்று கொண்டிருந்த தம்புராட்டியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

"சாலையாசான்களின் திருவருள் உன்னுடன் நிலைக்கட்டும். வெற்றியுடன் திரும்பு!"

மைதானத்தில் அவரது உறுதியான கால்கள் பதிந்து சில நிமிடங்களில் அவரை வளரிக்கலத்தின் மையத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தன. அங்கு வரையப்பட்டிருந்த சதுரத்திற்குள் அவரது தட்டையான பாதங்கள் அழுந்தப்பதிந்து நின்றன. வலதுகால் சற்றே முன் வைக்கப்பட்டது. இடதுபாதம் பின்னால் அழுந்த நிறுத்தப்பட்டது. ஒரு உதறலின் மூலம் கரங்களின் இறுக்கத்தை விடுவித்துக்கொண்டவர் தலைநிமிர்ந்து பார்த்தார்.

கூடி நின்ற நூற்றுக்கணக்கான சட்டர்களின் பார்வை அவரைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது தெரிந்தது. நீதான் சோழநாட்டிலிருந்து புறப்பட்டு வந்திருக்கும் சட்டனா? என்ன பெரிதாக வித்தை கற்றுக்கொண்டுவிட்டாய் நீ? எங்களை எதிர்க்குமளவிற்கு உன்னிடம் சரக்கு உள்ளதா? அதையும் பார்த்து விடுவோம்.

அத்தனை அலட்சியப் பார்வைகளையும் சடுதியில் புறக்கணித்தார். இப்போது கைகளில் வளரியுடன் அவரைச்

சூழ்ந்து நின்ற சட்டன்கள் மட்டும் கண்களுக்குத் தெரிந்தார்கள். இடப்புறம் அறுவர். வலப்புறம் அறுவர். ஆக மொத்தம் பன்னிருவர்.

அடுத்த கணம் அவர்களும் பார்வையிலிருந்து மறைந்து விட, அவர்தம் கரங்களில் பிடித்திருந்த வளரிகளில் மட்டும் கவனம் குவிக்கப்பட்டது. அவற்றின் வடிவத்தில் மனம் நிலைகொண்டது. கனம் குறைவான மரத்தினால் செதுக்கப் பட்டிருந்த வளரிகள் அவை என்பது அவற்றின் வெளிறிய நிறத்தால் தெரிந்தது. ஆகவே அவை காற்றினால் அதிகம் அலைக்கழிக்கப்படும் வாய்ப்பு அதிகம். அவற்றின் திசை எதிர்பாராமல் மாறும். வேகம் கூடும். அல்லது குறையும்.

காற்று இப்போது எந்த திசையில் வீசிக் கொண்டிருக்கிறது? முன்மாலை நேரமாதலால் கடலை நோக்கி மேற்கு திசையில் வீசிக் கொண்டிருக்கிறது. அதாவது நமக்கு வலப் பக்கத்திலிருந்து வீசப்படும் வளரிகளுக்குக் காற்றின் விசை கிடைக்கும். ஆகவே அவற்றின் வேகம் அதிகப்படும். இடப் பக்கத்திலிருந்து வீசப்படும் வளரிகள் எதிர்திசையில் பயணப்படுவதால் அவற்றின் வேகம் சற்று குறையும். நல்லது. வளரிகள் வீசப்படட்டும். நமது அனுமானத்தைச் சரிபார்த்து விடலாம்.

'டாங்!'

சட்டர்கள் மெல்ல அப்பிரதட்ஷிணமாக கலப் பாதையில் நகர ஆரம்பித்தார்கள்.

"விர்ர்ர்ர்.."

முதல் வளரி அவரை நோக்கி இடப்புறத்திலிருந்து சுழன்று வந்தது. அவர் அனுமானித்திருந்ததை விட அதன் வேகம் அதிகமாக இருந்தது. ஆக அவற்றின் கனம் தாம் கணித்திருந்த அளவிற்குக் குறைவானதல்ல. சடாலென்று வலப்புறம் தலையைத் திருப்பி அதன் தாக்குதலிலிருந்து தப்பித்தார். காற்றைக் கிழித்துக்கொண்டு அது பறந்து வந்த ஒலியையும் வேகத்தையும் மட்டும் குறித்துக் கொண்டார்.

"விர்ர்ர்ர்.."

அடுத்த வளரி வலப்புறத்திலிருந்து வீசப்பட்டது. இந்த முறை அவரது கணிப்பு சரியாக இருந்தது. காற்று நிச்சயம்

வளரியின் வேகத்தைக் கூட்டுகிறது. ஆனால் தாம் நினைத்த அளவிற்கு அல்ல.

"விர்ர்ர்ர்.."

அடுத்த வீச்சு அவர் எதிர்பார்த்ததைப் போலவே மீண்டும் இடப்புறத்திலிருந்துதான் எழுந்தது. ஆனால் வட்டப்பாதையில் சட்டர்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார்களாகையால் வளரி வீசப்பட்ட இடத்தை அவரால் துல்லியமாகக் கணிக்க முடியவில்லை. ஆகவே அவர்களின் சுழற்சிக்கு ஏற்ப அவரும் அவரது உடலைத் திரும்பியாக வேண்டும். இல்லையேல் வளரி வீசப்படும் இடத்தைச் சரிவரக் கணிக்க முடியாது.

"விர்ர்ர்ர்.."

இப்போது அவரும் சட்டர்களின் வேகத்திற்கு இணையாகக் கால்களை மாற்றி மாற்றி வைத்து உடலைத் திருப்பி நிற்கப் பழகிக் கொண்டார். அவர்கள் வட்டப்பாதையில் நடந்த வேகத்திற்கு இணையாக அவரது உடலும் சுழல ஆரம்பித்தது.

"விர்ர்ர்ர்.."

இப்போது வளரியின் வேகம், திசை ஆகிய இரண்டையும் சரியாகக் கணிக்க முடிந்தது. இனி மிச்சமிருப்பது ஒரே ஒரு வேலைதான். பறந்து வந்து தம்மைத் தாக்கும் வளரியுடன் ஒன்றாக ஐக்கியமாகி விடவேண்டும். வளரி வேறு உடல் வேறல்ல. பறந்து வரும் வளரியும் இடைப்படும் காற்றும் நமது உடலும் ஒன்றே. ஒரே இயக்கத்தின் மூன்று பரிமாணங்கள் அவை. ஆகவே வளரி புறப்படத்துவங்கிய மறு நொடியே உடலுக்கு ஒரு சமிக்ஞை கிடைத்தாக வேண்டும். ஆழ்மனம் அதனை உணர்ந்தாக வேண்டும். அது கண்கள் மூடப்பட்டால்தான் சாத்தியமாகும்.

'டாங்!'

மூழிக்குளத்தார் மணியை அடிக்க, மழபாடியாரின் கண்கள் கட்டப்பட்டன. உலகம் கணநேரம் இருண்டது. ஆனால் உடனே விழித்துக்கொண்டது. ஏனெனில் அவ்வாறு கண்களைக் கட்டிக்கொண்டு ஆயுதங்களைச் சுழற்றும் முறைமையை கழிக்குடியில் ஒரு தினப்படிப் பயிற்சியாகவே அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

'கண்களால் காணாமல் மெய்யால் காண்பது என்பது இதுதான். உங்களின் ஒட்டுமொத்த உடலும் பார்வையைப் பெறட்டும். மெய்யே கண்களாகட்டும்!'

சூழ்ந்திருந்த இருளுக்கு நடுவே வெளிச்சக் கீற்றாய்த் தம்புராட்டியாரின் குரல் ஒரு முறை ஒலித்து ஓய்ந்தது.

'மெய்யே கண்களாகட்டும்!'

சுற்றிலும் வீசிக்கொண்டிருந்த காற்று வேகம் பிடித்தது. அந்த வேகத்தை உடல் இப்போது முன்னிலும் நுண்மையாக உணர்ந்தது.

'மெய்யே கண்களாகட்டும்!'

காற்று வேறு நான் வேறல்ல. காற்றின் இயக்கத்தில் நானும் ஒரு பகுதி. என்னைச் சூழ்ந்து நிற்கும் விளியின் ஒரு துளி அசைக்கப்பட்டாலும் அதனை நான் உணர்வேன். அதன் அதிர்வுகளோடு எனது உடல் இணைந்திருக்கிறது. நான் வேறு பிரபஞ்சம் வேறல்ல. நானே விளி. நானே காற்று. நானே பிரபஞ்சம்!

'டாங்!'

மணியோசை கேட்க, அடுத்த நொடி அவரைக் குறி வைத்து ஒரு வளரி வீசப்பட்டது.

"விர்ர்ர்ர்.."

அவரது புலன்கள் மிகத் துல்லியமாக மிக நுண்மையாக அந்த வளரியின் வேகத்தையும் திசையையும் கணித்தன. அவரது உச்சந்தலையை நேராகக் குறிவைத்து வளரி வீசப்பட்டிருந்தது தெரிந்தது. கால்களை மடக்கித் தலையைக் குனிந்து கொள்ள, அது தலைக்கு மேல் ஓரடி உயரத்தில் கடந்து சென்றது.

"விர்ர்ர்ர்.."

அடுத்த தாக்குதல் இடப்புறத்திலிருந்து வந்தது. அதற்கடுத்தது வலப்புறத்திலிருந்து. மாறி மாறிப் பறந்து வந்து தாக்கிக்கொண்டிருந்த வளரிகளில் அகப்படாமல் அவரது உடல் வளைந்தும் நெளிந்தும் குனிந்தும் குதித்தும் எம்பியும் தப்பித்துக் கொண்டிருந்தது. வட்டப்பாதையில் நடந்து கொண்டிருந்த சட்டர்களுக்கு இணையாக அவரது உடலும் இயல்பாகத் திரும்பிக் கொண்டிருந்தது.

கண்களை மூடியிருந்தபோது அவரது உடல் எத்தனை விரைவாக எதிர்ச்செயல் புரிந்ததோ எத்தனை இயல்பாக வளரிகளிடமிருந்து தன்னைத் தற்காத்துக் கொண்டதோ அதனினும் விரைவாக, அதனினும் இயல்பாக அவரது உடல் வளைந்து நெளிந்து சுழல்வதை மூழிக்குளத்து ஆசான் ஒரு ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டார். அவரது முகத்தில் திருப்தியான ஒரு புன்னகை அரும்பியது. இந்த முறை சோழ வீரர்களின் வடிவில் காந்தளூர்ச் சட்டன்களுக்குப் பெருஞ் சோதனை காத்திருக்கிறது என்று அவருக்குத் தோன்றியது.

* * * * * * * *

கலமறுக்கும் போட்டிகள் துவங்கிய நாளின் காலைப் பொழுதிலிருந்தே அச்சுதன் நம்பூதிரியின் மனம் ஒரு நிலையில் இல்லை. அதற்கு முந்தையநாள் மாலைதான் அவரும் வாமனரும் நரசிம்மப் பிரயோகத்திற்கான இருபத்தியொருநாள் ஜபத்தையும் பயிற்சிகளையும் முடித்துக் கொண்டு அதற்குரிய பிரத்யேக பூஜைகளையும் விதிப்படி செய்து முடித்திருந்தார்கள். இப்போது நரசிம்மப் பிரயோகம் அவர்களுக்கு முழுவதுமாகக் கைவந்து விட்டதாக ஐதீகம். அதற்கான அறிகுறிகள் பலமாகவே தெரிந்தன.

முதலில் அவரது கண்பார்வையில் ஏற்பட்டிருந்த மாற்றம். அதனை எப்படி வகைப்படுத்துவதென்றே தெரியவில்லை. அவரது கண்கள் இயல்பான தூரத்தை மீறி வெகுதூரத்திற்குப் பார்க்கும் திறனைப் பெற்றுவிட்டவை போல் தெரிந்தன. நூறு நூற்றியிருபது அடி தொலைவில் எவராவது வந்துகொண்டிருந்தால்கூட வருபவர் யாரென்று தெளிவாகத் தெரிந்தது.

ஆனால் அவரது உலகம் இப்போது முழுக்க முழுக்க அசைவுகளால் மட்டுமே ஆகிப்போயிருந்தது. அசைந்து கொண்டிருக்கும் உயிர்கள் அசைந்து கொண்டிருக்கும் பொருட்கள் ஆகியவை மட்டுமே பார்வையிலும் கவனத்திலும் பதிந்தன. அசையாதவற்றை விழிகள் புறந் தள்ளின. ஆகவே படிப்பதும், எழுதுவதும்.. ஏன், உணவு உட்கொள்வதும் கூடச் சிரமமான காரியங்களாகி விட்டன.

இரண்டாவதாக அவருள் கிளைத்திருந்த அபரிமிதமான உதிர தாகம். இரத்தம்! இரத்தம்! என்று சதா ஏங்கித் தவிக்கத் தொடங்கியிருந்த மனது. குடங் குடமாகத் தண்ணீரை மொண்டு குடித்தாலும் அசுர தாகம் அடங்க

மறுத்தது. உதிரம்தான் வேண்டும்! உதிரம்தான் வேண்டும்! என்று நீண்ட நாவு தாகத்துடன் தவித்தது. அந்தத் தவிப்பு அளவுக்கதிகமாக எழும்போதெல்லாம் காந்தளூர் மகாதேவர் திருக்கோயிலின் பூஜாதீர்த்தத்தையோ அனந்த பத்மநாபர் திருக்கோயிலிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த துளசி தீர்த்தத்தையோ வாயில் விட்டுக்கொண்டால் சிறிதளவு தாகசாந்தி ஏற்பட்டது. ஆனால் சிறிது நேரத்திலேயே மீண்டும் பழையபடி நமைச்சல். குறுகுறுப்பு. தாகம்.

தன்னை இத்தனை தூரத்திற்கு அலைக்கழிக்கும் அந்த அமானுஷ்யமான சக்தி வாமனரைப் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை என்பது அவருக்குப் பெருத்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒரு வேளை இதெல்லாம் வெறும் பிரமையாக இருக்குமோ? இந்தப் பிரயோகத்தைக் கற்றுக்கொண்டுவிட்ட வேகத்தில் நாமாகச் சில கற்பனைகளையும் காட்சிகளையும் உருவகித்துக் கொள்கிறோமோ? கண்டும் காணாமல் இருந்து விட்டால் உடல் பழைய நிலைக்கு இயல்பாகத் திரும்பி விடுமோ?

மூத்தவரிடம் இது பற்றி அந்தரங்கமாகக் கேட்டதில் 'ஒவ்வொரு உடலும் வெவ்வேறு வகையானது. நரசிம்மாகர்ஷணம் ஒருவரது உடலில் ஏற்படுத்தக்கூடிய மாறுதல்களும் அவ்விதமே உடலுக்கு உடல் வேறுபடும். பலகீனமான மனதுடனும் பித்தம் அதிகமான உடலுடனும் இருப்பவர்களை அது படாதபாடுபடுத்தும். எக்கச்சக்கமாக அலைக்கழிக்குமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே எச்சரிக்கையுடன் இரு. மறந்தும் பக்குவ உணவைத் தவிர வேறெதிலும் கைவைத்துவிடாதே!' என்று உபதேசம் செய்தார். ஏற்கனவே அதிருப்தியிலிருந்த அச்சுதனை இந்தப் பதில் மேலும் சங்கடப்படுத்தியது. என்னதான் கூறவருகிறார் மூத்தவர்? என்கிற கோபமேற்பட்டது.

நரசிம்மப்பிரயோகம் உனக்கு முழுவதுமாகக் கைவந்து விட்டது. நீ சாதித்து விட்டாயடா அச்சுதா! என்று மார்போடு கட்டியணைக்காமல் ஏதோ எச்சரிக்கை விடுப்பது போலல்லவா பேசுகிறார்? பக்குவ உணவைத் தவிர வேறு எதையுமே உண்ணக்கூடாதாமே? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? வாமனனுக்கு என்னைவிட மனோபலம் அதிகம் என்கிறாரா? இந்தப் பிரயோகத்தையே துச்சமாக மதித்து வேண்டாம் என்று மறுத்தலித்தவன் அவன்! அவன்

என்னைவிட உயர்வானவனாகிவிட்டானா என்ன? என்ன கதை இது?

இது மனோபலம் சம்மந்தப்பட்ட விஷயமல்ல. நரசிம்மம் வாமனனைவிட என்னுள் பூரணமாக இறங்கியிருக்க வேண்டும். அதனால்தான் என் மீது ஆதிக்கம் செலுத்தத் துவங்கியிருக்கிறது. அதற்கு என்னைப் பிடித்திருக்கிறது. என்னுடைய அதிதீவிரமான ஜெபத்தால் நரசிம்மம் மகிழ்ந்திருக்கிறது. அதனால்தான் என்னுடலில் அது தன் முழுப்பரிமாணத்துடனும் ஆவிர்பவித்திருக்கிறது. அதற்காக இந்த அவஸ்தைகளை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பேன். இந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்வேன். நரசிம்மாகர்ஷணம் என்னில் நிலைபெறட்டும். அதன் துணையுடன் நான் உலகையே வெல்வேன்! நான்தான் நிம்மம்! நரசிம்மம்!

இருளில் ஆங்காரத்துடன் கர்ஜித்தபடி மார்பில் ஆவேசமாகப் பலமுறை அறைந்துகொண்டார் அந்த இளைஞர். அந்த நினைப்பு அவருக்கு ஆறுதலை அளித்தது. அவரது இயலாமை மறைத்தது. வாமனனை விடத் தான் எந்த வகையிலும் தாழ்ந்தவனல்ல. உயர்ந்தவன் என்கிற எண்ணத்தைக் கொடுத்தது.

இத்தகைய அலைக்கழிப்புக்களுடன் கலமறுக்கும் போட்டிகள் துவங்கிய மைதானத்திற்கு அன்று காலை வந்து சேர்ந்தவர், தம்புராட்டியாருடன் நின்று கொண்டிருந்த சோழநாட்டு இளைஞர்கள் இருவரையும் கண்டார். உடனடியாக அவருக்குள் ஒரு இனம்புரியாத பீதி பரவியது. அவர்களது சிரித்த முகமும் தன்னம்பிக்கை மிகுந்த நடமாட்டங்களும் அவருள் பயத்தை விளைவித்தன. அதனை மறைத்துக் கொள்ள அவர்களுக்கெதிரான வன்மம் தேவைப்பட்டது. 'இவர்களிருவரும் நம்மையும் நமது சாலையையும் நமது குடும்பத்தையும் மலைமண்டலத்துப் பாரம்பரியத்தையும் அடியோடு நாசம் செய்ய வந்தவர்கள். ஆகவே இவர்களை எவ்வாறேனும் அழித்தொழிப்பதே நமது கடமை' என்று திரும்பத் திரும்பத் தனக்குள் சொல்லிக் கொள்ள வேண்டியிருந்தது.

ஒரு வகையில் இது பண்டைய நாளில் பட்டதிரி கையாண்ட அதே அணுகுமுறை. எப்படிச் சோழர்களின் பேரில் வன்மத்தை வளர்த்துக்கொள்வதன் மூலம் தம்புராட்டியாருக்குத் தாம் இழைத்த அநீதியை அவர்

மறைத்துக் கொள்ள முற்பட்டாரோ அதைப் போலவே சோழவன்மத்தின் கைக்கொண்டு தமது மனதில் தோன்றிய பயத்தை ஒடுக்க முயன்றார் அவரது அருமைத் தம்பி அச்சுதன் நம்பூதிரி. இருவரும் ஒரே வகையான வார்ப்பு. வளர்ப்பு. ஆகவே இருவரது வழிமுறைகளும்கூட ஒன்றாகவே அமைந்திருந்தன.

தகுதிச் சுற்றுக்களுக்கான முதற்சோதனையில் பங்கெடுப்பதற்காக மழபாடியார் வளரிக்கலத்திற்குள் புகுந்த போது அவருக்கு உள்ளூர இறுதி எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தார் அச்சுதன்.

"அடேய்! இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதையே புரிந்துகொள்ளாமல் நெஞ்சு நிமிர்த்திக் கலமறுக்கும் மைதானத்திற்குள் நுழைந்துவிட்டாய். இதுதான் உயிர் பிழைப்பதற்கான கடைசி வாய்ப்பு. இப்படியே தப்பித்து ஓடிப்போய்விடு. அதுதான் உனக்கும் நல்லது எனக்கும் நல்லது. தவறிப்போய் முன்னேறி நேருக்கு நேர் என்னுடன் மோத முயன்றாயானால் உனது குரல்வளையைக் கடித்துக் குதறிவிடுவேன். எனக்குள் இருக்கும் வெறியில் உன் உதிரத்தைச் சொட்டு விடாமல் நக்கிக் குடித்து விடுவேன். ஜாக்கிரதை!"

காற்றில் விடப்பட்ட அவரது எச்சரிக்கைகளைச் சிறிதும் பொருட்படுத்ததாமல் அந்த சோழநாட்டு வீரர் வளரி வட்டத்திற்குள் வந்து நிற்க, நாலாபுறங்களிலிருந்தும் வளரிகள் பறந்து பறந்து வந்து தாக்க, அதனை அவர் எதிர்கொண்டவிதம் அச்சுதனுக்கு மேலும் கலவரமூட்டியது. அவரை மேற்கொண்டு முன்னேற விடுவது ஆபத்து என்று தோன்றியது.

சில நாட்களுக்கு முன் இரண்டாவது முறையாக அவரைச் சந்தித்த மலையனூரன் தாம் செய்திருக்கும் சில இரகசிய ஏற்பாடுகளை விவரித்துவிட்டு இறுதியாகக் கூறிய வார்த்தைகள் அவரது நினைவில் வந்து போயின.

"அச்சுதா! அவர்கள் இந்தக் காந்தளூர் மண்ணையே மிதித்து விடாமல் இருக்கும்படி சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். மீறிப்போய் அவர்கள் இங்கே வந்து விட்டால், அவர்களைப் போட்டிகளில் முன்னேற விட்டு விடாதே. களையை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும். அதனை வளரவிடுவது ஆபத்து. இந்தப் பாடத்தை நான் மிகத் தாமதமாகத்தான் கற்றுக்

கொண்டிருக்கிறேன். நான் செய்த தவறை நீயும் செய்து விடாதே. களையை முளையிலேயே கிள்ளி எறி."

ஆம். அவர் கூறியதுதான் சரி. இவனை மேற்கொண்டு முன்னேறவிடுவது ஆபத்து.

வளரி வீசிக்கொண்டிருந்த இளைஞர்களுக்குப் பின்னால் நின்றபடி வளரிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்த சிறு மாணவர்களை அவர் கவனித்தார். குறிப்பாக இடதுபுற ஓரத்தில் நெடிசலாக நின்றுகொண்டிருந்த சிறுவன் மீது அவரது கண்கள் நிலைத்தன. அவனும் அவரைக் கவனித்தான். இருவரின் கண்களும் சந்தேக பாஷையில் பேசிக்கொண்டன. அவரது கட்டளையைப் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக அவன் கண்களை ஒரு முறை மூடித் திறந்தான்.

அனைவரது கவனமும் மழபாடியார் மீதே நிலைத்திருக்கிறது என்பதை உறுதி செய்து கொண்ட அந்தச் சிறுவன், அடுத்ததாகக் கொடுக்கவேண்டிய வளரியை கண்ணிமைக்கும் நேரத்திற்குள் இடுப்பில் சொருகி வைத்துக்கொண்டு இடைக்கச்சிலிருந்து மற்றொரு வளரியை எடுத்து வட்டப்பாதையில் நின்றுகொண்டிருந்த சட்டனிடம் கொடுத்துவிட்டான்.

அந்தப் புதிய வளரி வித்தியாசமான வடிவத்தில் அமைந்திருந்தது. அதன் கனமும் அதிகமாக இருந்தது. வளரியைப் பெற்றுக்கொண்ட சட்டன் அதன் வடிவ வேறுபாட்டை உணர்வதற்குள் அவனது முறை வந்துவிட, தன்னிச்சையாய் அவனது கரங்கள் அதனை வீசின.

"விர்ர்ர்ர்.."

மிக ஆவேசமாக நெற்றிப்பொட்டைக் குறி வைத்துப் பறந்து வந்துகொண்டிருந்த அந்த எடை கூடிய வளரியை மழபாடியாரால் சமாளித்திருக்கவே முடியாது என்பது நிச்சயம். அது தாக்கியிருந்தால் பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும் என்பதும் உறுதி.

ஆனால் வளரி வீசப்பட்ட மறு கணமே வேறொன்று நிகழ்ந்தது.

"விஷ்..ஷ்.."

திடீரென்று எங்கிருந்தோ மணலுடன் புறப்பட்டு வந்த பெருங்காற்று வளரியின் மீது ஆவேசமாக மோதி அதன்

திசையைத் திருப்பியது. வளரி மழபாடியாரை மறந்து அவரிடமிருந்து விலகிப் பயணித்து வட்டப்பாதையில் எதிர் திசையில் நின்றிருந்த வேறொரு சட்டனின் மீது ஆவேசமாகப் பாய்ந்தது! அந்த எதிர்பாராத தாக்குதலால் அவன் நிலைகுலைந்து போய் 'அம்மா!' என்று அலறியபடி கீழே விழுந்தான்.

"என்ன.. என்ன ஆயிற்று??"

"அடடா - இது பெருவளரியாயிற்றே?? இது எப்படி இங்கே வந்தது? இதனை வீசியது யார்?"

"இவன்தான்!"

"நானில்லை. அவன்தான்!"

"இல்ல. நானில்லை. அவன்தான்!"

"இந்த வளரி இங்கு வரவே கூடாதே? எப்படி வந்தது? யாருடைய வேலை இது? ஹூம்?? "

ஏகப்பட்ட குழப்பக் குரல்களுக்கிடையே 'டாங்!' என்று மணி சப்தம் எழுவதையும் மூழிக்குளத்தார் ஓங்கிய குரலில் சட்டர்களை ஏதேதோ கேள்விகள் கேட்டு மிரட்டுவதையும் மழபாடியார் உணர்ந்தார். எவரோ ஓடிவந்து அவரது கண் கட்டை அவிழ்த்து விட்டார்கள்.

அங்கு ஏற்பட்டிருந்த குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட அந்தச் சிறுவன் விட்டால் போதுமென்று கூட்டத்திலிருந்து தப்பித்து வெளியே ஓடினான்.

50. வியானன் விழிப்பு



மேற்கு வானம் சிவந்து சிவந்து செக்கர் நிறத்தில் குளித்துக் கொண்டிருந்தது. அந்தி வேளையாதலால் சந்தியா வந்தனம் செய்யும் பொறுப்பு அங்கிருந்த சட்டர்கள் பலருக்கும் இருந்தது. அதனால் வளரிவீச்சு இரண்டு நாழிகை நேரத்திற்கு நிறுத்தி வைக்கப் பட்டது. சோதிக்கப்பட வேண்டியவர்கள் இன்னும் நான்கு பேர் இருந்தார்கள்.

மைதானத்திலிருந்து கலைந்த சட்டர்கள் அனைவரும் சாலையின் வடகிழக்கு மூலையில் அமைந்திருந்த குளத்தைச் சுற்றித் திரண்டார்கள். அத்தனை கூட்டத்திற்கும் மத்தியில் சந்திநேரச் சடங்குகளைச் செய்யப் பிரியப்படாத வாமனர் மட்டும் அவர்களிடமிருந்து பிரிந்து சென்று காந்தளூர் மகாதேவர் அம்பலத்தின் திருக்குளத்திற்குச் சென்று சேர்ந்தார்.

மாலை வேளைகளில் அங்கே எவரும் வருவதில்லை. ஆதலால் திருக்குளம் மிகுந்த அமைதியுடன் திகழ்ந்தது. சலனங்களின்றித் திகழ்ந்த நீரில் ஆங்காங்கே தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கின. மொட்டுக்கள் இன்னும் மலராமல் அப்படியே கூம்பி நின்று அவரை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தன.

படிகளில் மளமளவென்று கால் வைத்து இறங்கி நீர்த்துறையை அடைந்தவர், குளத்திலிருந்த குளிர்ந்த நீரை வாரி வாரி முகமெங்கிலும் வேகமாக அடித்துக் கொண்டார். கைகளையும் கால்களையும் சுத்தமாக கழுவிக் கொண்டார். நிமிர்ந்து நின்று வானத்தைப் பார்த்தார். அவரது வழக்கமான சந்தி நேரத்தைவிட இன்று தாமதமாகி விட்டதுதான். பரவாயில்லை. இன்னமும் சூரியன் முழுவதுமாக மறைந்துவிடவில்லை. ஜெபத்தைத் துவங்கி விடுவோம். கதிரவனையும் அவனது ஓஜஸையும் காயத்ரி தேவியையும் தியானிப்போம்.

குளத்து நீரை எட்டிப் பார்க்க, அதில் தெரிந்த அவரது பிம்பம் அவரைப் பார்த்துச் சிரித்தது. அவரும் அதனைக் கண்டு சிரித்தார். சில நாட்களுக்கு முன் அதே திருக் குளத்தில் தெரிந்த ஒரு பயங்கர பிம்பம் அவரது நினைவிற்கு வந்ததனால் உண்டான் சிரிப்பு அது. இப்போது அந்த பயமெல்லாம் இல்லை. மாயை தெளிந்து விட்டது. உண்மை புரிந்து விட்டது. அதனால் அஞ்ஞானத்தை நினைத்துச் சிரிக்கத் தோன்றியது.

மூத்தவரே உணரத் தவறிவிட்ட முக்கியமானதொரு உண்மையை அவர் இரண்டு மூன்று நாட்களுக்கு முன் உணர்ந்திருந்தார். நரசிம்மப் பிரயோக அனுஷ்டானமும் ஜெபமும் ஒருவரது உடலில் ஏற்படுத்தக்கூடிய பலவித மாறுதல்களை பண்டைய ஆசான்கள் பலரும் பல்வேறு விதங்களில் விளக்கியிருந்தார்கள். உடலில் பளபளப்பு உண்டாகும். கேசத்தின் நீளம் கூடும். நகங்கள் வளையும்

அல்லது கூர்மையாகும். உடலின் எடை கூடும் என்று ஏகப்பட்ட வர்ணனைகள். ஆனால் அந்தச் சக்தியை, அந்தப் பிரயோகத்தை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராயும் இரவிநீலி ஆச்சாரியார் மட்டும் அவற்றைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை!

இது ஆச்சரியமாயிருந்தது. பல்லிடுக்கில் அகப்பட்டுக் கொண்ட துணுக்கைப்போல அது வாமனரின் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. ஏன் கூறவில்லை? ஆச்சாரியர் ஏனிந்த உடல் மாறுதல்களைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை?

ஆசானின் வார்த்தைகள் மட்டுமல்ல. மௌனங்களும் பொருள் பொதிந்தவை என்பதை அவரது அனுபவம் உணர்த்தியிருந்தது. ஆக இதனைப்பற்றி அவர் ஒன்றும் கூறாமல் விட்டதற்கு ஏதேனும் தகுந்த காரணம் இருந்தேயாக வேண்டும். என்ன அது?

சாலையில் கற்றுத்தரப்படும் அனைத்துப் பிரயோகங்களும் மனித உடலில் உள்ள நரம்புகளையும் நரம்புகளின் வழி ஓடிக்கொண்டிருக்கும் உயிர்நிலை ஓட்டங்கள் (அதாவது கலைகள்[76]) ஒடுங்கும் இடங்களான மர்மஸ்தானங்களையும் உடலை இயக்கும் தசவாயுக்களையும் வைத்துக்கொண்டு விளையாடும் சித்து விளையாட்டுக்களே. நரசிம்மப்பிரயோகமும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை ஆச்சாரியார் தெளிவாகப் பிரயோக லட்ஷணத்தில் தெரிவித்துவிடுகிறார். பின் ஏன் உடலில் இத்தனை மாறுதல்கள்?

இந்த மாறுதல்களை மற்றவர்கள் இந்நேரம் கவனித்திருக்க வேண்டுமே? வாமனனின் உருவம் ஏன் இத்தனை கோரமாக மாறிவிட்டது என்று ஒருவராவது துணிந்து கேட்டிருக்க வேண்டுமே? பிராயத்தில் சிறிய மாணவர்கள் அவரைக் கண்டால் ஓடி ஒளிந்து கொண்டிருக்க வேண்டுமே? அப்படி எதுவுமே நடக்கவில்லையே? அனைவரும் இயல்பாகத்தானே பழகி வருகிறார்கள்?

ஆக இந்த மாற்றங்களை நான் மட்டுமே உணர்கிறேன். இவை புறவுலகில் புறவுடலில் தோன்றியிருக்கும் மாற்றங்கள்

[76] Nerve Currents.

அல்ல. இவை அகத்தோற்றங்கள். மனத்தோற்றங்கள். காட்சிப் பிழைகள் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

ஏன் இத்தகைய மனத்தோற்றங்கள் ஏற்பட வேண்டும்? எதற்காக நாமே நரசிம்மமாக மாறிவிட்டதைப் போன்ற உணர்வுகள் ஏற்படவேண்டும்? எதற்காகப் பக்குவ உணவை உண்ணச் சொல்லி இரவிநீலி உட்பட அனைவரும் வற்புறுத்த வேண்டும்?

நிதானமும் நுண்ணுணர்வும் மிகுந்த அந்த அந்தண இளைஞர் ஒவ்வொரு கேள்வியாகக் காலை வைத்து முன்னேறினார். ஒவ்வொரு நாளும் பயிற்சிகளை அப்யசிக்கும்போது உடலில் ஏற்படும் நிலை தடுமாற்றத்தை கவனிக்கப் பழகினார். தன்னுடைய உடலையும் மனதையும் விட்டு விலகி ஒரு சாட்சியாக நின்று அவதானித்தார். ஆச்சாரியாரின் தனிஸ்லோகங்களை மீண்டும் மீண்டும் வாசித்தார். அவருக்கு மெல்ல ஒரு உண்மை புரியலாயிற்று.

'நரசிம்மாகர்ஷணத்தை உருவாக்கும் ஆகர்ஷண தியானமந்திரத்தை குரு மூலம் உபதேசம் பெற்று நரசிம்ஹ மூர்த்தியைத் தியானித்து அரை மண்டல காலம் அதாவது இருபத்தியொரு நாட்கள் இருபத்தியொராயிரம் முறை விடாமல் ஜெபித்து உரிய பயிற்சிகளை மேற்கொண்டு வர, உடலின் வியானன் விழித்துக்கொண்டு இந்தப் பிரயோகம் வசப்படும்.' - இதுதான் இரவிநீலியின் வாக்கு.

'உடலின் வியானன் விழித்துக் கொள்ளும்' - இந்த வார்த்தைகளுக்குள்தான் இருக்கிறது சூட்சுமம்!

உடலுக்குள் இயங்கும் தசவாயுக்களுள் வியானனும் ஒன்று. நரம்புகளின் வழி ஐம்புலன்களிலிருந்தும் உணர்வுகளை மூளைக்குக் கொண்டு செல்லும் வாயு அது. அந்த வாயு நரசிம்மப் பிரயோகப் பயிற்சிகள், ஜெபங்கள், தியானங்கள் மூச்சுப்பயிற்சிகள் முதலியவற்றால் 'விழித்துக் கொள்கிறது' என்று கூறுகிறார் ஆச்சாரியர். அதாவது நரம்புகள் மூலம் மூளைக்குச் செல்லும் தகவல்களில் ஏதோ ஒருவகையான மாற்றங்கள் உருவாகின்றன.

உதாரணமாகப் பார்வை மாற்றம். வெகு தூரத்திலிருக்கும் காட்சிகள் இப்போது தெளிவாகத் தெரிவதுபோல் தோன்றுகிறது. இது எதனால்? நமது கண்கள் முன்னிலும் தெளிவாகப் பார்க்கும் பார்வையைப் பெற்றுவிட்டவா என்ன? கிடையவே கிடையாது. விழிகள்

பார்க்கும் பார்வையிலோ அதில் பதியும் காட்சிகளிலோ மாற்றமே நிகழவில்லை. அது சாத்தியமும் இல்லை.

ஆனால் பார்வையில் பதியும் காட்சிகளிலிருந்து தேவையான தகவல்களை அனுப்பும் நரம்புகளில் ஏதோ ஒரு மாற்றம் அல்லது பாதிப்பு ஏற்பட்டிருக்கக்கலாம். அதனால் பார்வை மாறியிருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தலாம். ஆனால் உண்மையில் மாற்றம் பார்வையில் இல்லை. பார்வையிலிருந்து தகவல்களை மூளைக்கனுப்பும் முறையில்தான். இப்படி ஒவ்வொரு அமானுஷ்யமான மாற்றத்தையும் விளக்கிக் கொண்டே போகலாம்.

ஆச்சாரியார் இதனைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை?

ஏனெனில் பண்டைய ஆசான்கள் கணிக்கத் தவறிய இந்த ஒரு விஷயத்தை அவர் கண்டறிந்திருக்க வேண்டும். அதனைப் பற்றி வெளிப்படையாக கூறுவதற்குச் சில தயக்கங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் சூட்சுமமாக வியானனின் விழிப்பைப் பற்றிப் பேசுகிறார். இரவிநீலியைத் தவிர வேறெவரும் இந்த வியானவாயுவின் விழிப்பைப் பற்றிக் குறிப்பிடுவதேயில்லை.

ஆக வியானவாயுவின் போக்கில் ஏற்படும் மாற்றங்களே இவை. இவற்றைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. சற்றே விலகி நின்று கவனித்தால் மட்டுமே போதுமானது.

அடுத்ததாக இன்னொரு கேள்வி எழுந்தது.

பிரயோகத்தைக் கற்றுக்கொண்ட ஆறு திங்களில் திருமணம் செய்து கொள்வது நலம் பயக்கும் என்பதைப் பண்டைய ஆசான்களைப் பின்பற்றி இரவிநீலியும் குறிப்பிட்டிருந்தார். இது எதற்காக? எந்தக் காரணத்தினால் இந்த மரபு ஏற்பட்டிருக்க வேண்டும்?

இந்தக் கேள்விக்கான பதில் தேடி மீண்டும் நரம்புகளுக் குள்ளும் வாயுக்களுக்குள்ளும் கலைகளுக்குள்ளும் செல்ல வேண்டிவந்தது.

காமத்தில் ஈடுபடும் ஒருவருக்கு அவரது சகலவிதமான கலைகளும் ஒன்றுபடும் தருணம் ஒன்றுண்டு. கலைகள் ஒன்றாவதால்தான் காமம் ருசிக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ சகலவிதமான ஜீவராசிகளும் அதில் ஈடுபடும் காரணம் அதுவே. உடலின் கலைகள் ஒன்றுவதினால்தான் உயிர் பிறக்கிறது. உருவாக்கம் நிகழ்கிறது. அந்த ஒன்றுதல்

இந்தப் பிரயோக மாற்றங்களை ஒரு சமத்திற்குக் கொண்டு வரும் போலிருக்கிறது. நாமும் திருமணம் செய்து கொண்டு காமத்தைப் பூரணமாக அனுபவித்தாலன்றி மேற்கொண்டு இதனை உணர முடியாது. தெளிவடைய முடியாது. வெறும் யூகங்கள் மட்டுமே செய்யலாம். இருக்கட்டும்.

இந்தப் புரிதல் நமக்கு நகைப்பை ஏற்படுத்துகிறது. ஆனால் நமது சகோதரன் இதனைப் புரிந்துகொள்வானா? மாட்டான். அவன் இந்த மாற்றங்களை ஒரு கர்வத்துடனும் பெருமிதத்துடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அவனிடம் இந்த உண்மைகளையெல்லாம் சொன்னால் சோர்ந்துபோய் விடுவான். அல்லது மறுத்தலிப்பான். உனக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை என்று நம்மையே ஏசினாலும் ஏசுவான்.

மூத்தவருக்கு இந்த வியானனின் விழிப்பு புரிபட வில்லையா? அல்லது நம்மிடம் தெரிந்ததுபோல் காட்டிக் கொள்ளவில்லையா? எது எப்படியோ - இப்போதைக்கு இந்த உண்மையை வெளியிடுவதற்கில்லை. மனதோடு வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

கமண்டலத்தில் நீரை அள்ளி அருகில் வைத்துக் கொண்டார். ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மடக்கிக் கட்டை விரலால் நாசித்துவாரத்தை மூடினார். முதுகுத்தண்டின் இருபுறங்களிலும் பரபரவென்று ஓடிக்கொண்டிருந்த இடகலை பிங்கலை நாடிகளின் ஓட்டத்தில் கவனத்தைச் செலுத்தினார்.

தனக்குள் அமிழ்ந்தார்.

* * * * * * * *

முன்னிரவு நேரத்தில் அமைதியின் மடியில் வழக்கமாகப் படுத்துறங்கி விடும் காந்தளூர்ச் சாலை வளாகம், அன்றிரவு வழக்கத்திற்கு மாறாகப் போக்குவரத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. மைதானத்தின் நாற்புறங்களிலும் தீப்பந்தங்களும் பெருவிளக்குகளும் நந்தா விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. பகல் முழுவதும் வளரிக் கலமறுக்கும் வைபவங்களை அரங்கேற்றிக் களித்த மைதானம், அன்றைய இரவுநேர நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் எதிர்நோக்கி யிருந்தது.

வழக்கமாகப் பகல் நேரங்களில் மட்டுமே நடைபெறும் போட்டிகளை அந்த வருடம் இரவு நேரங்களிலும் நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. ஏனெனில் கொடியேற்ற வைபவம் துவங்கிய நாளிலிருந்து மூன்றாம் நாள் மாலைக்குள் போட்டிகளை நடத்தி முடித்தாக வேண்டும். மூன்றாம்நாள் மாலை சந்திவேளையில் காந்தளூர் மகாதேவர் திருக்கோயிலிலிருந்து எழும் பூஜாமணி சப்தத்துடன் கலமறுக்கும் போட்டிகள் நிறைவடைந்துவிடும். அதற்குப்பின் எக்காரணம் கொண்டும் போட்டிகளை நீட்டிக்கலாகாது என்கிற மரபு காலகாலமாகப் பின்பற்றப் பட்டு வந்தது

அந்த வருடப் போட்டிகளில் வழக்கத்திற்கதிகமான எண்ணிக்கையில் சட்டர்கள் பங்குபெற முன்வந்திருந்ததால் தகுதிச்சுற்றுக்களை ஒரு நாளுக்கும் மேலாக நீட்டிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருந்தது. எல்லாவற்றையும் கருத்தில் கொண்ட ஆசான்கள் போட்டிகளை இரவு முதல் ஜாமம்வரை நீட்டிக்க முடிவு செய்திருந்தனர். அவர்களின் உத்தரவுப்படிதான் தீப்பந்தங்களும் நெய் விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன.

பின்மாலை நேரத்தில் தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் நடந்த சுற்றுக்களில் மேற்கொண்டு ஐந்து சட்டர்கள் வளரி வீச்சை எதிர் கொண்டார்கள். அவர்களுள் வாமனரும் அச்சுதனும் கம்பன் மணியனாரும் அடக்கம்.

காந்தளூர் ஆச்சாரியாரின் தம்பியர் இருவரும் வளரிக் கலத்தில் நின்று வீச்சை எதிர்கொண்ட விதம் பிரமிக்கச் செய்வதாக இருந்தது. அவர்களின் உடல் மனித உடல்தானா? அல்லது வேறு ஏதாவது மிருகம் உள்ளே புகுந்துகொண்டு விட்டதா? என்று பார்ப்போர் வியக்கும் வண்ணம் சரேல் சரெலென்று வளைந்தும் நெளிந்தும் அவர்கள் தம்மைத் தாக்க வரும் வளரிகளை அனாயசமாக எதிர்கொண்டார்கள்.

சரிதான். இந்த வருடப் போட்டிகளிலும் காந்தளூர்ச் சட்டர்கள்தாம் கலநாயகங்களாகத் தேர்ச்சிபெறப் போகிறார்கள் போலிருக்கிறதே? மற்றவர்கள் அனைவரும் வெறும் கரங்களுடன் ஊருக்குப் போய்ச்சேர வேண்டியது தானா? ஐயோ பாவம்! என்கிற மாதிரியான பேச்சுக்கள் உடனடியாகச் சட்டர்கள் மத்தியில் அடிபடத் தொடங்கி விட்டன.

மழபாடியாருக்கும் மணியனாருக்கும்கூட சிறிதளவு மனச்சோர்வு ஏற்பட்டுவிட்டது. நாம் எத்தனை நாட்கள் பயின்றாலும் எத்தனைதூரம் மெனக்கெட்டு முயன்றாலும் அவர்களுக்கு இணையாக வரமுடியாது போலிருக்கிறதே? உடலையும் மனதையும் வருத்திக்கொண்டு மேற்கொண்ட பயிற்சிகளனைத்தும் வீண்தானா? நம்மீது முழு நம்பிக்கை வைத்துக் களத்தில் இறக்கியிருக்கும் பேரரசரின் முகத்தில் எவ்வாறு விழிப்பது? என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

நடந்த நிகழ்வுகளனைத்தையும் நண்பர்களின் மூலம் கேட்டறிந்த தம்புராட்டியார் சிறிதும் மனம் கலங்காமல் அவர்களைத் தேற்றினார். பெருஞ்சாலைப் பிதாமகரான பலராம நம்பூதிரியின் வார்த்தைகள் அவரது மனதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"உன்னிகளா! காந்தளூர்ச் சட்டர்கள் இருவரையும் எதிர்கொள்வது நமக்கு எளிதாக இருக்கப் போவதில்லை. சிறு பிராயத்திலிருந்தே இவ்வாறான போட்டிகளுக்காக அவர்களின் உடலும் மனமும் ஆயத்தமாக்கப் பட்டிருக்கின்றன. அதனால் அவர்களின் உடல்வாகும் எதிர்விசை புரியும் திறனும் நன்றாக அமைந்திருப்பதில் வியப்பேதுமில்லை.

ஆனால் இந்தப் பயிற்சிகளை கடந்த சில மாதங்களாக மட்டுமே மேற்கொண்டிருக்கும் நீங்களிருவரும் அவர்களுக்கு இணையாக வளரிவீச்சைத் திறமையுடன் எதிர் கொண்டீர்கள் என்பது எத்தனை அற்புதமானது? நல்ல முயற்சிகள் என்றுமே அவற்றுக்குரிய பலனை நிச்சயம் தரும். அதனை யாராலும் தடுக்கமுடியாது. அதனால் மனதைத் தளரவிடாதீர்கள். நமது ஆசான்களின் ஆன்மா நம்மோடு துணைவருகிறது என்பதை மறவாதீர்கள். நம்பிக்கை இழக்கும் தருணங்களிலெல்லாம் அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்களின் ஜீவசக்தி உங்களை வழி நடத்தும்."

ஆசான்களைத் தவிர வேறொரு முக்கிய ஆன்மாவும் அவர்களுக்குத் துணையாக அங்கே வந்திருக்கிறது என்று மழபாடியார் தனக்குள் சொல்லிக் கொண்டார். ஆம். பலப்பல நாட்களுக்குப்பின் குருகாடி செல்லக்கிழாரின் சூட்சுமமான இருப்பைக் காந்தளூர் வளாகத்தில் அவர் பரிபூரணமாக உணரத்தொடங்கியிருந்தார். புருவத்திற்கு

மத்தியில் மீண்டும் மெல்லிய வலியேற்படத் துவங்கி யிருந்தது. உள்ளுக்குள் கிழவரின் சிரிப்பொலி கேட்டது.

குறிப்பாகக் கலத்திற்குள் நின்றபடி கண்கட்டுடன் வளரி வீச்சுக்களை அவர் எதிர் கொண்டிருக்கும்போது நடந்த அந்த நிகழ்வு. அதனை என்னவென்று சொல்வது?

வேண்டுமென்றோ தவறுதலாகவோ பெருவளரியை எவரோ தம்மீது எடுத்து வீச, அது உச்சந்தலையைக் குறி வைத்து அதி வேகமாகச் சுழன்று வர, அதன் வேகத்தைக் கணித்து நிதானிப்பதற்குள் -

எவரோ தமக்கருகில் நின்று வாய் குவித்துக் காற்றில் ஊதுவதைப்போல் தெரிந்தது. அடுத்த ஷணமே பெரும் காற்றுக்குவியல் மணலுடன் கிளம்பி அந்த ஆவேச வளரியுடன் மோதி அதனை திசை திருப்பி..

அது மட்டும் தமது நெற்றியைத் தாக்கியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? நிச்சயம் அத்துடன் போட்டிகளிலிருந்து விலகிக்கொள்ளவேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கும். அவ்வாறு ஆகாமல் தடுத்தது யார்? அந்தப் பேய்க்காற்றைக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் உருவாக்கியது யார்? அது வெறும் தற்செயலானது அல்லவே?

ஆக, நமக்குத் துணைசெய்ய ஏதோ ஒன்று நம்முடன் வந்திருக்கிறது. அது நம்மை வழி நடத்தட்டும். நம்மைக் காக்கட்டும். நாம் நமது கடமைகளை மட்டும் செய்வோம். பிரதிபலனை எதிர்பாரவேண்டாம். வெற்றி தோல்வி குறித்துக் கவலைப்பட வேண்டாம். எதனைக் கண்டும் அஞ்ச வேண்டாம். எதன் பொருட்டும் கலக்கமடைய வேண்டாம். நடப்பது நடக்கட்டும். நாம் வெறும் கருவி. நம்மை இயக்கிக் கொண்டிருப்பது வேறு யாரோ...

அன்றைய இரவுப் போட்டிகளின் முடிவில் பதிமூன்று சட்டர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டார்கள். பதினேழு என்றிருந்த எண்ணிக்கை பதிமூன்றாகக் குறைந்திருந்தது. அடுத்த நாள் காலை சட்டர்களின் ஆயுதங்களைக் கையாளும் திறனைச் சோதிக்கும் வகையில் 'சுழல்வாள் பயட்டு' நடைபெறும் என்று மூழிக்குளத்தார் அறிவித்தார்.

'சுழல்வாள் பயட்டு' என்கிற வார்த்தையைக் கேட்டதும் அங்கிருந்த சட்டர்கள் விக்கித்துப் போனார்கள். அவர்களில் சிலருக்குத் தலை சுழன்றது.

51. மரண எச்சரிக்கை!



உருமி என்றும் சுட்டுவாள் என்றும் சுழல் வாள்[77] என்றும் வெவ்வேறு பெயர்களால் அறியப்பட்ட அந்த ஆயுதம், அந்நாளில் பரவலான புழக்கத்திலிருந்த பயங்கர ஆயுதங்களுள் ஒன்று. அதன் உடற்பகுதி நன்கு வளையும் தன்மையுடன் கூடிய உலோகத்தினால் பட்டையாக அடித்துச் செய்யப்பட்டிருக்கும். பட்டையின் இரு புறங்களையும் அடியிலிருந்து நுனிவரை நன்றாகக் கூர்தீட்டி விடுவார்கள்.

அவற்றின் நீளம் நான்கடியிலிருந்து ஏழடிவரை அமைந்திருக்கலாம். அகலம் பெரும்பாலும் மூன்றங்குலங்களைத் தாண்டாது. வீசுவோர் பிடித்துக் கொள்ள ஏதுவாக வாளின் முனையில் உறுதியான கைப்பிடி அமைந்திருக்கும். அது மரத்தாலோ உலோகத்தாலோ செய்யப்படும்.

அம்மாதிரியான வாட்களை எதிரிகளின்மீது நேரடியாகப் பாய்ச்சமுடியாது. நாற்புறங்களிலும் வேகமாகச் சுழற்றியபடி வீசி அதன் கூரிய முனைகளைக் கொண்டுதான் தாக்க வேண்டும். அதாவது விறுவிறுப்பான இயக்கத்தின் மூலம் மட்டுமே முழுமைபெறும் ஆயுதங்களுள் அதுவுமொன்று.

எதிரிகள் நாற்புறங்களிலும் சூழ்ந்திருக்க அவர்கள் அனைவரையுமே ஒருசேரத் தாக்கும் வல்லமையை சுழல்வாள் ஒருவருக்கு அளிக்கிறது. அதுதான் மற்ற ஆயுதங்களுக்கும் சுழல்வாளுக்குமுள்ள முக்கிய வேறுபாடு.

உபயோகத்தில் இல்லாத காலங்களில் அதனைக் கைக்கு அடக்கமாக வட்டவடிவில் இறுக்கமாகச் சுருட்டி வைத்துக் கொண்டு விடுவார்கள். அப்படித்தான் வைத்தாக வேண்டும். அவ்வாறு சுருட்டியே வைக்கப்படுவதினால்தான் அதற்குச் சுட்டுவாள் என்று பெயர்.

---

[77] Coiled Sword.

அந்த இயல்பால்தான் சுழல்வாள் வேறொரு வகையில் கையாள ஆபத்தான ஆயுதமாக வடிவெடுக்கிறது. எப்படியெனில், அதனை வீசுபவன் ஒரு வீச்சு வீசிவிட்டுக் கண நேரம் நிதானித்தாலும் அடுத்த நொடியே அது எல்லையில்லாத வேகத்துடன் மீண்டும் கைப்பிடியை நோக்கிச் சுருள முயலும். அந்த வேகத்தையும் சுழற்சியையும் சுருள்வாளைப் பிடித்திருப்பவன் கையாண்டாக வேண்டும். இல்லையேல் வீசுபவன் கரங்களையே அது பதம் பார்த்து விடும். அதனால் திறமையும் அனுபவமும் மிகுந்த மாணவர்களுக்கே அந்நாளில் சுட்டுவாளைக் கையாளும் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆயுதப்பயிற்சிகளின் உச்சமாகச் சுட்டுவாள் பயட்டைச் சாலைகளில் பயிலும் சட்டர்கள் கருதுவதுண்டு.

அப்படிப்பட்ட பயங்கர 'மகத்துவங்கள்' நிறைந்த சுழல்வாள் பயட்டு கலமறுக்கும் போட்டிகளின் அடுத்த அங்கமாக நடைபெறும் ஆசான் அறிவித்ததைக் கேட்டு சட்டர்களின் தலை சுழன்றதற்கும் ஒரு காரணம் இருந்தது. அவர்கள் அனைவருமே அனுபவம் மிகுந்த மாணவர்கள்தாம். சுழல்வாளைத் திறம்படக் கையாளும் பயிற்சியும் அவர்களுக்கு நிரம்பவே உண்டு. ஆனால் கலமறுக்கும் போட்டிகளின் பிரச்சனை வேறு. அங்கே சுழல்வாளைக் கையாண்டால் மட்டும் போதாது. அதனைக் குறிப்பிட்ட முறையில் குறிப்பிட்ட வகையில் குறிப்பிட்ட எல்லைக்குள் கையாண்டாக வேண்டும். அது என்ன எல்லை என்ன வரைமுறை என்பதெல்லாம் விடிந்தால்தான் தெரியும்!

* * * * * * * *

தமது பிரத்யேக முறியில் விரிக்கப்பட்டிருந்த கோரைப் பாயில் உறக்கம் வராமல் அப்புறமும் இப்புறமும் புரண்டு படுத்துக்கொண்டிருந்தார் பட்டதிரி. தலைக்குத் தாங்கலாக வைத்துக்கொண்டிருந்த இலவம் பஞ்சுத் தலையணையை மாற்றி மாற்றி வைத்துக்கொண்டு பார்த்தார். கண்களைத் திறக்காமல் இறுக்க மூடிக்கொண்டு நீண்ட நேரம் இருந்து பார்த்தார். ம்ஹூம். என்ன செய்தாலும் உறக்கம் வரவில்லை.

அன்று காலையிலிருந்தே ஒன்றன்பின் ஒன்றாகப் பல வேலைகள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. அதனால் உடல் எல்லையில்லாத சோர்வுடன் இருந்தது. நாளை காலை முதல் முகூர்த்தத்திலேயே சுட்டுவாள் பயட்டைத் துவக்கியாக வேண்டும். ஆதலால் எத்தனை சீக்கிரம் உறங்கி விடுகிறோமோ அத்தனைக்கத்தனை நல்லது என்று திரும்பத் திரும்பத் தனக்குள் சொல்லிக்கொண்டார். அதற்கும் பெரிதாகப் பலனில்லை.

உறக்கம் அத்தனை பிடிவாதமாக வர மறுத்ததற்குக் காரணம் அவரது ஆழ்மனதை ஒரு எண்ணம் வாட்டி வதைத்துக் கொண்டிருந்ததுதான். ஒரே ஒரு எண்ணம். கண்ணை மூடினாலும் திறந்தாலும் அந்த ஒரு எண்ணத்தைச் சுற்றியே அவரது நினைப்பு அமைந்திருந்தது.

அவரது அருமைத் தம்பி அச்சுதனின் வித்தியாசமான நடவடிக்கைகள்தான் அவரது கவலைகள் அனைத்திற்கும் காரணமாக அமைந்திருந்தன. தமக்குத் தெரியாமல் அவன் ஏதோ ஒரு ஆபத்தான இரகசியமான காரியமொன்றில் சில நாட்களாக அவன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான் என்று அவருக்குத் தோன்றியது. அது என்ன காரியம்? அதில் யாருடன் அவன் சேர்ந்து கொண்டிருக்கிறான்? எதற்காக நம்மிடம் கூடச் சொல்லாமல் அத்தனை இரகசியமாக ஈடுபட்டிருக்கிறான்? அவருக்கிருந்த பல பணிகளுக்கிடையே அவற்றைத் தெளிவாக அனுமானிக்க முடியவில்லை. வாமனனிடம் அது பற்றி மனம்விட்டுப் பேசலாமா வேண்டாமா என்று அவருக்குள் பெரியதொரு பட்டிமன்றமே நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சில நாட்களுக்கு முன் நிகழ்ந்த சிறு சம்பவம் அது.

சந்திவேளையில் திருமாமணியம்பலத்தில் நரசிம்மப் பிரயோக ஜெபத்தில் ஈடுபட்டிருந்த அச்சுதன், நீண்ட நேரமாகியும் மடைப்பள்ளிக்கு வராததால் என்னவென்று பார்ப்பதற்காக பட்டதிரி அம்பலத்திற்குச் சென்றார். அம்பலத்தை நெருங்கும்போது உள்ளே அவனுடன் யாரோ மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருப்பதுபோல் தெரிந்தது. இந்த நேரத்தில் இத்தனை அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருப்பது யாராக இருக்கும்? என்கிற கேள்வியுடன் அவர் மூடியிருந்த கதவைத் திறக்க, ஏறக்குறைய அதே நேரத்தில் பின்சாளரத்தின் வழியே யாரோ வெளியே குதிப்பதைப்போல் தோன்றியது. ஆனால் பின்பகுதிகளில் இருள் மண்டியிருந்ததால் அதனை நிச்சயப்படுத்திக்கொள்ள முடியவில்லை. பேச்சுக்குரல்கள் கேட்டதென்னவோ உண்மை. அதனை மறுப்பதற்கில்லை.

அச்சுதனிடம் விசாரித்ததில் யாருமே இங்கு வரவில்லையே அண்ணா? இந்த நேரத்தில் இந்த இடத்திற்கு என்னைத் தேடி யார் வரப்போகிறார்கள்? என்று மழுப்பி விட்டான். அவனது கண்களின் ஓரத்தில் பொய்மை எழுதி ஒட்டியிருந்தது.

சிறு பிராயம் முதல் அவனை வளர்த்து வந்தவரான பட்டதிரிக்கு அந்தப் பொய்மையைக் கண்டறிவது பெரிய காரியமாக இல்லை. தன்னிடமே மறைக்குமளவிற்கு வளர்ந்துவிட்டானா இவன்? இருக்கட்டும், இருக்கட்டும். மேற்கொண்டு துருவித் துருவி விசாரிப்பது சரியாக இராது. அதனால் உண்மையும் வெளிப்படாது என்று தோன்றியதால் அத்துடன் அந்த நிகழ்ச்சியை மறந்துவிட முயன்றார். ஆனால் அது முடிகிற காரியமாக இல்லை. முறியில் கேட்ட கபடம் நிறைந்த அந்தக் குரல் உள்ளூர அவரைச் சங்கடத்திற்குள்ளாக்கிக் கொண்டேயிருந்தது.

அதற்கடுத்த நிகழ்வு மறுநாள் நிகழ்ந்தது. தனது கலத்தைச் சேர்ந்த சட்டர்களை குறிப்பாக சில இளம் பிராயத்தவர்களை அச்சுதன் சாலைவளாகத்தின் வடமேற்கு மூலையில் பிரத்யேகமாகச் சந்தித்து எதைப்பற்றியோ இரகசியமாகப் பேசிக்கொண்டிப்பதை அவர் கவனித்து விட்டார். இந்த முறையாவது தம்மை விசாரிக்கும்படி வைத்துக்கொள்ளாமல் தானாக முன்வந்து நடந்ததைக் கூறுவான் என்று நம்பினார். ம்ஹூம். அதிலும் அவருக்குத் தோல்விதான்.

சாலையின் ஆச்சாரியன் என்கிற முறையில் அங்கு நடக்கும் அனைத்தும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டாக வேண்டும். ஆனால் அச்சுதன் மேற்கொண்டு எந்த விபரங்களையும் தெரிவிக்காததோடு அவருடன் பிரத்யேகமாகப் பேசுவதையும்கூட நிறுத்திவிட்டான். தனிமையில் இருவரும் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் நேர்ந்தால் கூட ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி அவரிடம் விலகிச் செல்வதிலேயே அவன் குறியாக இருந்தான். எங்கே தனியாக மாட்டிக்கொண்டுவிட்டால் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைந்து விடுவோமோ என்கிற பயம் போலும்..

எல்லவாவற்றுக்கும் மேலாக நரசிம்மப் பிரயோக ஜெபம் அவனது மனப்போக்கில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம். அல்லது மமதை. அது அத்தனை ஆரோக்கிய மானதாக அவருக்குத் தெரியவில்லை. அளவுக்கு மீறினால்

அமுதமும் நஞ்சாகி விடும் என்று தோன்றியது. அளவற்ற சக்தியை அளிக்கும் அந்தப் பிரயோகத்தை அவனுக்கு உபதேசித்தது தவறோ? அந்தப் பிரயோகத்தை அப்யசிக்கும் வலிமை அல்லது தகுதி அவனுக்கு இல்லையோ? என்று அவருள் கேள்விகள் எழுந்தன.

'தகுதியில்லாத ஒருவருக்கு இந்தப் பிரயோகத்தை உபதேசித்தாயானால் அதனால் பெரும் அனர்த்தங்கள் ஏற்படும்!'

மரணப்படுக்கையில் ஆசான் இரவிநீலி ஆள்காட்டி விரலை உயர்த்தி அவரது கண்களை நேருக்கு நேர் பார்த்தபடி எச்சரிக்கை விடுப்பதைப்போல் கூறிய வார்த்தைகள் மனதில் வந்து போயின. அவைதாம் அவர் பட்டதிரியிடம் பேசிய கடைசி வார்த்தைகள். அதன் பிறகு வெளியே போகச் சொல்லிவிட்டார்.

பிற்காலத்தில் தகுதியில்லாத எவனுக்கோ நாராயணன் நரசிம்மப்பிரயோகத்தைக் கற்றுக்கொடுக்கப் போகிறான் என்கிற பயம் அவருக்குள் அப்போதே தோன்றிவிட்டது. தீர்க்கதரிசிதான் அவர்! அதனால்தான் கூடியிருந்த அனைவரையும் விட்டுவிட்டுத் தம்மை மட்டும் கண்ணோடு கண் நோக்கி அந்த வார்த்தைகளைக் கடுமையாக மொழிந்தார். அப்போது அவர் மீது எல்லையில்லாத கோபம் வந்தது. தகுதியில்லாத எவனுக்கு நான் இதைக் கற்றுத்தந்துவிடப் போகிறேன்? ஆசான் எதற்காக இத்தனை தூரம் என்னை வெறுக்க வேண்டும்? அப்படி நான் அவருக்கு என்ன துரோகம் செய்துவிட்டேன்? என்றெல்லாம் தோன்றியது.

ஆனால் இப்போது அவரது எச்சரிக்கைகள் எத்தனை தூரம் உண்மையாகிவிட்டன என்பது புரிகிறது. அவசரப்பட்டுவிட்டோமோ? இன்னும் சற்று காலம் கழித்து. இன்னமும் சற்று வயதானபின் பிரயோகத்தை உபதேசித்திருக்கலாமோ?

ம்ஹூம்! அது நடவாத காரியம்.

காந்தளூரைச் சுற்றித் தற்போது உருவாகியிருக்கும் பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் அந்தப் பிரயோகத்தை அவரால் தமது உடன்பிறப்புக்களுக்கு உபதேசிக்காமல் இருப்பதென்பது இயலாத காரியம். நாளை போட்டிகள் முடிவடைந்தபின் என்னவெல்லாம் நடக்குமோ

- யார் கண்டார்கள்? தமக்கு ஏதாவது ஆகுமுன் அந்த அரிய குலதனத்தை வலிய சாலையின் பொக்கிஷத்தை உரியபடி அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பது அவரது தார்மீகக் கடமை யல்லவா? ஒரு வேளை கலமறுக்கும் போட்டிகளின் போது இருவரில் ஒருவருக்கு ஏதாவது நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது? அதனைச் சமாளிக்க நரசிம்மப்பிரயோகம் அவர்களுக்குப் பேருதவியாக இருக்குமல்லவா?

அனைத்தையும் கருத்தில் கொண்டுதான் அவர் பிரயோக உபதேசத்திற்கான நாள் குறித்தார். கலமறுக்கும் போட்டிகள் துவங்குவதற்குச் சரியாக இருபத்தியொரு நாட்களுக்குமுன் இருவரும் வடிவு உபதேசம் பெற்றனர்.

எல்லாமே நல்லபடியாகத்தான் நடைபெற்றுவந்தன. கடந்த சில நாட்கள் வரை. அதன் பிறகு அனைத்தும் மாறத் துவங்கி விட்டன. அச்சுதனின் போக்கில் எல்லையில்லாத மாற்றங்கள் தென்பட ஆரம்பித்துவிட்டன. என்ன நடந்திருக்கும்? யார் அவனது மனதைக் கலைத்திருப்பார்கள்?

அவன் தனது மாற்றங்களை அவரிடமே பெருமையுடன் விவரித்துக்கொண்டு போக, கோபத்தில் பகிரங்கமாகவே எச்சரிக்கவேண்டி வந்தது.

'அச்சுதா! நிருஸிம்மாகர்ஷணம் ஏற்படுத்தக்கூடிய மாறுதல்கள் உடலுக்கு உடல் வேறுபடும். பலகீனமான மனதுடன் இருப்பவர்களை அது படாதபாடுபடுத்தும். எக்கச்சக்கமாக அலைக்கழிக்கும். ஆகவே மிகுந்த எச்சரிக்கையுடன் இரு. மறந்தும் பத்திய உணவைத் தவிர வேறெதிலும் கைவைத்து விடாதே.'

தமது வார்த்தைகளை அவன் தவறாகப் புரிந்து கொண்டான். தம் மீதே கோபப்பட்டான் என்று தோன்றியது. அவருடன் அதுபற்றி மேற்கொண்டு பேசுவதையே நிறுத்திக்கொண்டு விட்டான். இத்தனை காலம் பழகியபின் தாம் அவன் மீது கொண்டுள்ள அதீத அக்கறை கூடவா அவனுக்குப் புரியாமல் போய்விட்டது?

கலமறுக்கும் போட்டிகள் துவங்கிய அன்று காலை அவர் போட்டிகளுக்காக வந்துள்ள சோழவீரர்களை கவனித்தார். அந்த இருவரில் ஒருவனை (அதாவது

இளையவரை) அவருக்கு உள்ளூரப் பிடித்திருந்தது. இன்னொருவனைச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அந்த இரண்டாமவன் வளரிக்கலத்திற்குள் வந்து நின்ற போது தற்செயலாக அச்சுதனைக் கவனித்தவர், இளம் சட்டன் ஒருவனுக்கு அவன் கண்களால் சைகை செய்வதையும் அதனைத் தொடர்ந்து பெருவளரி வீசப் படுவதையும் கவனித்துவிட்டார். அவருடைய வருத்தம் பன்மடங்காகி விட்டது.

இத்தனை பிரம்மாண்டமான சக்தியை ஆவாஹனம் செய்யச் சொல்லித்தந்த பின்னும் தன்னம்பிக்கையின்றிக் குறுக்குவழியில் போட்டிகளில் வெல்ல முயல்கிறானே அச்சுதன்? இதையெல்லாம் யார் அவனுக்குக் கற்றுக் கொடுத்திருப்பார்கள்? நம்மைத் தவிர வேறு எவராவது சிறுவன் செய்த வேலையைக் கவனித்துவிட்டுக் கையும் மெய்யுமாகப் பிடித்திருந்தால் அவன் ஆதியோடந்தமாக அனைத்தையும் உளறிக்கொட்டியிருக்க மாட்டானா? அதற்குப் பிறகு கலமறுக்கும் போட்டிகளிலிருந்தே அச்சுதனைத் தள்ளிவைத்திருக்க மாட்டார்களா? அம்மாதிரியான அவமானங்களெல்லாம் இவனுக்குத் தேவைதானா?

இவ்வாறு உறக்கம் வராமல் அச்சுதனைப் பற்றிய பல்வேறு கவலைகளிலும் பட்டதிரி மூழ்கிவிட்டிருக்க, ஏறக்குறைய அதே சமயத்தில் வளாகத்திற்கு வெளியே அச்சுதனின் முறிக்குப் பின்புறம் அமைந்திருந்த ஒதுக்குப்புறமான இடமொன்றில் ஒரு பயங்கர காரியம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பட்டதிரிக்குத் தெரியாமல் - காந்தளூர்ச் சாலையில் இருந்த வேறு ஒருவருக்கும் தெரியாமல் - இரகசியமாக ஒவ்வொரு இரவிலும் அந்தக் காரியம் தொடர்ந்து சில நாட்களாக நடைபெற்று வந்தது.

அன்றைய இரவிலும் தடைபடாமல் நடந்தேறிக் கொண்டிருந்த அந்தக் காரியம்தான் அச்சுதனின் மனமாற்றங்களுக்குக் காரணம் என்பதை துரதிருஷ்டவசமாக அங்கிருந்த யாருமே அறியவில்லை.

* * * * * * * *

மறுநாள் பொழுது புலரும் முன்னரே காந்தளூர்க் களரியில் சிறப்பு வழிபாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

அன்றைய வழிபாடுகளில் நான்கு சாலையாசான்களைத் தவிரப் போட்டிகளில் மேற்கொண்டு கலந்துகொள்ளப் போகும் சட்டர்கள் பதின்மூவரும் தம்புராட்டியாருக்கும் பார்த்திவசேகரபுரத்துச் சாலையாசானும் கலந்து கொண்டார்கள்.

முதல்நாள் நடைபெற்ற போட்டிகளின் விபரங்களும் அன்றைக்கு நடைபெறப்போகும் சுற்றுக்களின் விபரங்களும் குருதாரையில் வைக்கப்பட்டிருந்த லிங்கப்பெட்டிகளின் முன்பில் சுருக்கமாக விளக்கப்பட்டன. வளரிக்கலத்தில் தேர்ச்சிபெற்ற சட்டர்கள் ஒவ்வொருவராக குருதாரைக்கு வரவழைக்கப்பட்டு குருநாதர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்கள்.

முதலாசான்கள் நால்வரையும் மனதில் வரித்து மூடியிருந்த லிங்கப்பெட்டியை பல்வேறு மலர்கள் தூவி வழிபட்டு நிலத்தில் வீழ்ந்து வணங்கிய சட்டர்களுக்கு மூத்தோரின் ஆசிகளை தெரிவிக்கும் வகையில் வலது தோளில் இரண்டாவது தாயத்து கட்டப்பட்டது. அது வெள்ளியினாலான தாயத்தாக அமைந்திருந்தது.

வழிபாடுகளெல்லாம் முடிந்தபிறகு ஆசான்கள் நால்வரும் களரியின் பூத்தாரையில் எழுந்தருளியிருந்த தெய்வங்கள் அதிதேவதைகள் முதலியவற்றுக்குரிய பூஜைகளைச் செய்துமுடித்தார்கள். முதலில் கணபதிக்கு உரியதான விக்னேஸ்வர பூஜை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தேவி பூஜை, விஷ்ணு பூஜை, காளி பூஜை, வாகீசபூஜை என்று பல்வேறு பூஜைகளும் நிதானமாக நடத்தி முடிக்கப்பட்டன. ஒவ்வொரு தெய்வத்தைத் தொழும் போதும் அவ்வத் தெய்வங்களுக்குரிய பூக்களும் இலைகளும் அர்ச்சிக்கப்பட்டன. வழிபாடுகளை நடத்தி முடித்து தூப தீபாராதனைகளெல்லாம் காட்டி முடிப்பதற்கும் பொழுது புலர்வதற்கும் சரியாக இருந்தது.

"அனைவரும் கஞ்சியருந்திவிட்டு மைதானத்தின் வட புலத்திற்கு வந்து சேருங்கள். இன்னும் ஒரு நாழிகை நேரத்தில் சுழல்வாள் பயட்டு ஆரம்பமாகப் போகிறது!" என்று அறிவித்தார் ஆசான்.

52. சுழல்வாள் பயட்டு




காந்தளூர்ச் சாலை மைதானம் கலத்திற் கொன்றாக நாற்பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது என்பதை முன்னர் கண்டோம். அந்த நான்கு பகுதிகளுள் தென்மேற்கு மூலையில் குழிக்களரியின் அருகே அமைந்திருந்த பகுதியில்தான் கலமறுக்கும் போட்டிகளின் முதல் அங்கமான வளரி வீச்சு நடைபெற்று முடிந்திருந்தது. ஆகையால், சுழல்வாள் பயட்டுக் களமாக திருமாமணியம்பலத்திற்கு அருகே அமைந்திருந்த மைதானத்தின் வடமேற்குப் பகுதி தேர்வு செய்யப்பட்டிருந்தது. அன்றைய வாள்பயட்டுக்கான கலத்தை (Pattern) தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டர்கள் சிலர் விடியற்காலையிலேயே வரைந்து முடித்திருந்தார்கள்.

வளரிக்கலம் வட்ட வடிவத்தில் அமைந்திருந்ததென்றால் வாள்பயட்டுக் கலமோ அறுகோணக் கேத்திரத்தை[78] அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்டிருந்தது. கோணங்களில் ஆங்காங்கே சிறுவட்டங்கள் வரையப் பட்டிருந்தன. அறுகோணம் சுழன்று சுழன்று சிறிதாகி இறுதியில் வட்ட வடிவில் முடிந்தது.

கலத்தின் வடிவம் அங்கிருந்த சட்டர்கள் பலருக்கும் பரிச்சயமானதாக இல்லை என்பதை அவர்களின் கவலை தோய்ந்த பார்வைகளும் முணுமுணுப்பாக வெளிப்பட்ட பேச்சுக்குரல்களும் கோடிட்டுக் காட்டின. ஒருவரின் வாள் பயட்டுத் திறனைத் தெரிந்துகொள்ள இத்தனை சிக்கலான கலம் தேவையேயில்லை! மூழிக்குளத்தார் தேவையில்லாமல் தருதிச்சுற்றுக்களைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பதாக அவர்களின் பேச்சு அமைந்திருந்தது.

---

[78] Hexagonal Geometry.



சுழல்வாள் கலம்

வேடிக்கை என்னவென்றால் மூழிக்குளத்துச் சாலையிலிருந்து வந்திருந்த சட்டர்களுக்கே அந்தக் கலத்தின் வடிவம் புதிதாக இருந்தது என்பதுதான். பயிற்சிகளின் போதெல்லாம் கிழவர் இந்தக் கலத்தைப் பற்றி மூச்சே விட்டதில்லையே? இப்போது மட்டும் இந்தக் கலம் எங்கிருந்து முளைத்தது? சே! கிழவர் இத்தனை தூரம் நம்மை மோசம் செய்திருக்க வேண்டாம்.. இதனை எவ்வாறு சமாளிப்பது? என்றெல்லாம் அவர்கள் தங்களின் ஆசானைப் பிரத்யேகமாக அர்ச்சித்துக் கொண்டிருந்தார்கள்.

அறுகோணக் கலத்தின் அமைப்பைத் தாங்கள் புரிந்து கொண்டபடி சுருக்கமாக நண்பர்கள் விளக்க, தம்புராட்டியாருக்கு உடனே அது விளங்கிவிட்டது.

"உன்னிகளா! இது ஒரு பழைய விதமான சோதனா முறை. தற்போது வழக்கொழிந்துவிட்டது. இதனை எதற்காகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது தெரியவில்லை.

இந்தக் கலம் சற்றுக் கடினமானது. எச்சரிக்கையுடன் செயல்படாவிட்டால் கரம் வெட்டுப்பட்டு விடும்."

"நாங்கள் என்ன செய்யவேண்டும்?"

"எக்காரணம் கொண்டும் தலையைக் குனிந்து தரையைப் பார்க்காமல் இருக்க வேண்டும்."

"என்ன? என்ன கூற வருகிறீர்கள்?"

தம்புராட்டியார் அந்தக் கேள்விக்கு பதில் கூற முற்படும் போது 'டாங்!' என்று மணி சப்தம் கேட்டது.

"சுழல்வாள் பயட்டுக் கலத்தில் முதலாவதாகக் கழிக்குடிப் பெருஞ்சாலையைச் சேர்ந்த கம்பன் மணியன்" என்று அறிவித்தார் மூழிக்குளத்து ஆசான்.

இளையவருக்குச் சுருக்கென்றது. அடடா! முதலாவதாக நமது பெயரை அறிவித்து விட்டார்களே? மற்றவர்களெல்லாம் அந்தக் கலத்தை எவ்விதம் அணுகுகிறார்கள், என்னென்ன தவறுகளையெல்லாம் செய்கிறார்கள் என்பதையெல்லாம் கவனித்துப் புரிந்து கொண்டு உரியபடி ஆயத்தப்படுத்திக்கொள்ள முடியாமல் போய்விட்டதே? இத்தனை சீக்கிரம் மாட்டிக்கொள்வோ மென்று எதிர்பார்க்கவில்லையே? தம்புராட்டியார் கலத்தைப் பற்றி ஏதோ முக்கியமான தகவலைக் கூறவந்தார். அந்த விபரத்தைக்கூடத் தெரிந்துகொள்ள அவகாசம் இருக்காது போலிருக்கிறதே? ஆண்டவா! என்ன சோதனை இது?

அறிவிப்பைக் கேட்ட பிறகும் நண்பர் இம்மியும் நகராமல் தயங்கியபடி நிற்பதைக் கண்ட மழபாடியார் "உங்களின் பெயர்தான் முதலில் அறிவிக்கப்பட்டுள்ளது. உடனே கிளம்புங்கள். வெற்றியுடன் திரும்புங்கள்!" என்று காதோரம் கிசுகிசுத்தார்.

வேறு வழியில்லை. கிளம்பித்தான் ஆகவேண்டும்.

இளையவர் குனிந்து அருகில் நின்றிருந்த தம்புராட்டியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். அவரது புஜங்கள் இரண்டையும் தம்புராட்டியாரின் உறுதியான கரங்கள் இறுக்கப் பற்றின.

"உன்னி! பயப்படாதே. நான் கூறியதை மட்டும் மனதில் கொள். எக்காரணம் கொண்டும் குனியாதே. தரையைப்

பார்க்காதே. கலத்தின் வடிவத்தை கண்களில் ஏற்றாமல் மனதில் ஏற்று. வெற்றி நிச்சயம்!"

* * * * * * * *

கழிக்குடிப் பெருஞ்சாலையைச் சேர்ந்த இளைஞர் நிதானமாக நடந்து சுழல்வாள் கலத்திற்கருகில் வருவதையும் அங்கு வரையப்பட்டிருந்த வடிவத்தை உற்று நோக்குவதையும் சட்டர்களனைவரும் கவனித்தார்கள். சோழ நாட்டான் நன்றாக மாட்டிக் கொண்டுவிட்டான். அவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்! என்றுதான் அவர்களுக்குத் தோன்றியது.

மூழிக்குளத்தார் முன்வந்து கம்பீரமான குரலில் கீழ்க்கண்டவாறு மொழிந்தார்:

"சட்டர்களே! இது ஒரு பழைய கலம். தற்போது இது பயன்பாட்டில் இல்லை. இதன் வடிவம் சுழல்வாளைப் போலவே சுழன்று சுழன்று அமைந்திருப்பதைக் கவனியுங்கள். இதனைச் சுருள்வாள் கலம் என்றே அக்காலத்தில் பெயரிட்டு அழைப்பார்கள். கையாள்வதற்குக் கடினமான இக்கலத்தை நாங்கள் தேர்ந்தெடுக்கக் காரணம் இதனை விரைவாக நடத்தி முடித்துவிடலாம் என்பதே. இந்த விரோதி வருடப் போட்டிகளில் அதிகப்படியான எண்ணிக்கையில் சட்டர்கள் கலந்துகொள்வதால் ஏற்பட்டுள்ள நேர நெருக்கடியை இவ்வாறெல்லாம் சமாளிக்கவேண்டியுள்ளது. எப்படியும் இன்றைய இரவு முதல் ஜாமத்திற்குள் தகுதிச் சுற்றுக்களை முடித்தாக வேண்டும்.

இனிக் கலத்தைப் பற்றி நான் கூறப்போகும் சில விதிமுறைகளை கவனமாக உள்வாங்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் கரங்களில் கொடுக்கப்படும் சுழல்வாளை விடாமல் சுழற்றியபடி அறுகோணங்களின் மையத்திலிருக்கும் வட்டத்தை அடைவதுதான் உங்கள் குறிக்கோள். அந்த மையத்தைக் கலத்தில் வரையப் பட்டிருக்கும் வடிவங்களின் வழியாக மட்டுமே சென்றடைய வேண்டும். கலத்தின் கோடுகள் மீது கால்வைத்து நடக்கலாம். ஆனால் நிற்கக்கூடாது. நிதானிக்கக்கூடாது. அதே போல் வட்டங்களின் மீது எத்தனை நேரம் வேண்டுமானாலும் நிற்கலாம். ஆனால் நடக்கக்கூடாது.

கலப்பாதையிலிருந்து விலகினாலோ கோடுகளில் மீது சில கணங்களுக்கு மேல் நின்று நிதானித்தாலோ வட்டங்கின் மீது நடந்தாலோ முறை முடிந்ததாகக் கருதப்படும். ஆகவே எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

சுழல்வாளை நீண்ட நேரத்திற்கு விடாமல் சுழற்றிக் கொண்டேயிருக்க முடியாது. ஆகையால் நேரம் பற்றிய விழிப்புணர்வும் முக்கியம்.

போட்டியைத் துவக்குமுன் கலத்தை ஒரு முறை சுற்றி வந்து அதன் வடிவத்தைப் பரிச்சயப்படுத்திக் கொள்ளலாம். அதற்கு வாய்ப்பு வழங்கப்படும். இப்போது கம்பன் மணியனின் முறை துவங்குகிறது. சட்டரே! நீங்கள் கலத்தை வாள் பிடிக்காமல் ஒரு முறை சுற்றி வரலாம். மற்றவர்கள் கலத்திலிருந்து ஆறு அல்லது ஏழு அடி விலகி நில்லுங்கள்."

'டாங்!'

மணி இன்னொரு முறை அடித்து ஓய்ந்தது.

மணியனார் மேலும் நான்கு தப்படிகள் நடந்து சென்று அந்தக் கலத்திற்கு மிக அருகில் நின்றார். அருகில் வந்து பார்க்கும்போதுதான் அது எத்தனை பெரிய கலம் என்பதே புரிந்தது. குறிப்பாக அதன் முதல் அறுகோணம் மிகப் பெரியது. அதன் ஒவ்வொரு பக்கமும் ஆறு அல்லது ஏழடி இருக்கும்.

அவர் முதல் வட்டத்திலிருந்து இரண்டாவது வட்டத்திற்கு நடந்து பார்த்தார். மிகுந்த எச்சரிக்கையுடன் நடக்கவேண்டி வந்தது. சற்று கவனம் பிசகினாலும் பாதங்கள் கோடுகளைவிட்டு வெளியில் பதிந்தன. மிகச் சிக்கலான கலம் என்பதில் சந்தேகமேயில்லை. இதனை எப்படிச் சமாளிப்பது?

தம்புராட்டியாரோ எக்காரணம் கொண்டும் குனியாதே தரையைப் பார்க்காதே என்றல்லவா கூறியிருக்கிறார்? குனிந்து தரையைப் பார்க்காமல் பாதையில் நடப்பது சாத்தியமேயில்லையே? எதற்காக அவ்வாறு கூறினார் என்பது விளங்கவில்லயே?

'டாங்!'

மணி சப்தம் அவரது போட்டி நேரம் துவங்கி விட்டதை அறிவித்தது. எவரோ ஓடிவந்து ஒரு நீண்ட சுழல் வாளின் கைப்பிடியை மணியனாரின் கரங்களில் திணித்து

விட்டுச் சென்றார்கள். நன்கு சுருட்டி வைக்கப்பட்டிருந்த அந்த ஆயுதம் ஒரு ஆவேசமாக வீச்சிற்கு ஆயத்தமாகவே இருந்தது.

* * * * * * * *

நண்பரின் செயல்பாடுகளை மழபாடியார் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தார். அறு கோணத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு நடந்து செல்வதும் கலத்தை உற்றுப்பார்த்தபடி சுற்றிச் சுற்றி வருவதையும் கவனித்தார். என்னதான் செய்து கொண்டிருக்கிறார் நமது நண்பர்? தம்புராட்டியார் எக்காரணம் கொண்டும் குனியவே கூடாது என்று தெளிவாகக் கட்டளையிட்டிருக்க இவரோ குனிந்த தலை நிமிராமலல்லவா கலத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? தரையைப் பார்க்காமல் கலத்தைக் கடப்பது சாத்தியமல்ல என்று நினைக்கிறாரா?

ஒரு கட்டத்தில் மணியனார் கலத்தைச் சுற்றி வருவதை நிறுத்திவிட்டு ஒரு வட்டத்திலிருந்து அடுத்த வட்டத்திற்குத் தாவிக்கொண்டிருந்தார். எதற்காக இந்தக் குரங்கு வேலை? ஏன் இப்படி நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார் இளையவர்?

'டாங்!'

அவ்வளவுதான். மணியனாரின் கதை இத்துடன் முடிந்தது என்றுதான் மழபாடியாருக்குத் தோன்றியது.

* * * * * * * *

இளையவர் கலத்தின் முதல்வட்டத்தில் வந்து நேராக நின்றார். தலையைத் திருப்பிக் கலத்தின் வடிவத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டார். சுழல்வாளை மெல்லச் சுழற்றத் துவங்கினார். தம்புராட்டியார் இறுதியாகக் கூறிய வார்த்தைகளைத் தவிர அவரது மனதில் அப்போது வேறு எண்ணங்களே இல்லை.

'எக்காரணம் கொண்டும் குனியாதே. தரையை நோக்காதே!'

சுழல்வாளைப் பிடித்த மறுகணமே ஏன் தரையைப் பார்க்கக்கூடாது என்பது விளங்கிவிட்டது. ஒருவன் தனது

கவனம் முழுவதையும் சுழல்வாளின் சுழற்சியில் செலுத்தினா லன்றி அதனைக் கையாளவே முடியாது. தவறிப்போய்க் கூட மேலே வரையப்பட்டிருக்கும் கலத்தின் கோடுகளிலோ மற்ற விஷயங்களிலோ கவனம் பிசகினால் நிச்சயம் கரங்களில் வெட்டு விழுந்துவிடும்.

ஆகவே கலத்தின் முக்கியமான சூட்சுமம் அதனைக் குனிந்து பார்க்காமல் இருப்பதில்தான் இருக்கிறது. அதனால்தான் குனியாதே. கலத்தைப் பார்க்காதே என்று தம்புராட்டியார் வற்புறுத்திக் கூறியிருக்கவேண்டும்.

ஆனால் மூழிக்குளத்தார் கோடுகளிலிருந்து கால்களை விலக்கக்கூடாது என்றாரே? கவனம் பிசகாமல் நடந்தாலன்றி அந்தக் கோடுகளிலிருந்து கால்கள் பிழறாமல் நடப்பதென்பது சாத்தியமல்லவே?

ஆக இரண்டில் ஏதோவொன்றில் ஒரு முரண் இருக்கிறது. ஏதோ ஒரு விஷயம் மறைக்கப்பட்டிருக்கிறது. அல்லது தெளிவுபடுத்தப்படாமல் இருக்கிறது. என்ன அது?

மீண்டும் ஆசான் கூறிய வார்த்தைகளை ஒரு முறை நினைத்துப் பார்ப்போம். 'சுழல்வாளை விடாமல் சுழற்றியபடி கலத்தின் அறு கோண மையத்திலிருக்கும் வட்டத்தை அடைவதுதான் உங்களுக்கு வைக்கப்படும் குறிக்கோள்.'

சரி. இது புரிகிறது.

'மையத்தைக் கலத்தில் வரையப்பட்டிருக்கும் வடிவங்களின் வழியாக மட்டுமே சென்றடைய வேண்டும். அவற்றுள் கோடுகளின் மீது கால்வைத்து நடக்கலாம். நிற்கக் கூடாது. வட்டங்களின் மீது நிற்கலாம். நடக்கக்கூடாது.'

கலத்தில் வரையப்பட்டிருக்கும் வடிவங்களின் வழியாக..

கலத்தில் வரையப்பட்டிருக்கும் வடிவங்களின் வழியாக..

ஒக்கிரம் யோகி! அதிக அவகாசமில்லை.

'வட்டங்கள் மற்றும் கோடுகளின் வழியாக' என்று கூறாமல் 'கலத்தில் வரையப்பட்டிருக்கும் வடிவங்களின் வழியாக' என்று பொதுப்படையாகக் கூறுவானேன்?

ஒரு வேளை..

கூரிய நுண்ணறிவும் மதிநுட்பமும் வாய்த்திருந்த அந்த இளைஞர் கோடுகளைப் புறக்கணித்து வட்டங்களை மட்டும் கொண்டிருந்த ஒரு கலத்தை மனதுள் உருவகித்தார். அது சம்மந்தமில்லாமல் வேறொரு வடிவமாகக் காட்சியளித்தது! கோடுகளினால் உருவாகும் வடிவத்தின் மையத்தை அடைவதற்கு ஒரே ஒரு பாதை மட்டும்தான் உண்டு. ஆனால் வட்டங்களினால் மட்டுமான கலத்தை உருவகித்தால் மையத்தை அடைவதற்குப் பல பாதைகள் உருவாகிவிடும். அந்தப் பாதைகளுள் அவருக்குத் தேவைப்படும் பாதை எது?


நிமிர்ந்த தலையுடன் சுழல்வாளைச் சுழற்றிக் கொண்டிருந்த அவருக்கு அந்த நேரத்தில் கண்களுக்குத் தென்பட்டது ஒரே ஒரு வட்டம் மட்டும்தான். அவர் நின்றிருந்த அறுகோணத்திற்கு அடுத்ததாக வரையப் பட்டிருந்த சிறிய அறுகோணத்தில் ஏறக்குறைய ஆறடி தொலைவில் தெரிந்த ஒரே வட்டம்.

'கோடுகளில் நடக்கலாம். நிற்கக்கூடாது. வட்டங்களில் நிற்கலாம். நடக்கக்கூடாது!'

அப்படியென்றால் பக்கவாட்டில் தெரியும் அ[illegible] வட்டத்தை எவ்வாறு அடைவது? அதற்கு ஒரே வழிதா[illegible] உள்ளது.

'ஹூம்!' என்று மூச்சடக்கி ஒரே தாவலில் அவர் அந்த வட்டத்திற்குள் குதிப்பதைச் சட்டர்கள் அதிர்ச்சியுடன் கவனித்தார்கள். 'ஹோ!'வென்று நாற்புறங்களிலும் கோஷங்கள் எழுந்தன. ஆஹா! கோட்டுப்பாதையில் கால் வைத்து நடக்க முயலாமல் பாதையிலிருந்து விலகி எங்கோ பக்கவாட்டில் குதித்துவிட்டானே இவன்? கதை இத்துடன் முடிந்தது! மூழிக்குளத்தார் மணியை உடனடியாக அடிக்கச் போகிறார். 'சோழநாட்டான் முறைமுடிந்தது என்று' அவர்களுக்குத் தோன்றியது.

ஆனால் வட்டத்திற்குள் குதித்துப் பல கணங்கள் ஆகியும் மணி சப்தம் கேட்கவில்லை. மூழிக்குளத்தாரும் மற்ற ஆசான்களும் ஒரு மெல்லிய ஆச்சரியத்துடன் அந்த இளைஞரைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி யானால் அவன் அவ்வாறு குதித்தது சரியா என்ன?



மணியனாருக்கு இப்போது தன்னம்பிக்கை மிகுந்தது. தாமதிக்காமல் கண்களுக்குத் தட்டுப்பட்ட அடுத்த பக்க வாட்டு வட்டத்திற்குள் குதித்தார். இப்போது இறுதியாக அவர் அடைய வேண்டிய வட்டம் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் சற்றே தொலைவில் அமைந்திருந்தது. தாவிக் குதிக்கக்கூடிய தொலைவில் இல்லை. இது எதனால்?

சுழல்வாளை விடாமல் சுழற்றிக் கொண்டிருந்ததனால் மணிக்கட்டில் மெல்லிய வலி ஏற்படத் துவங்கியது. இன்னும் அதிக நேரத்திற்குத் தாக்குப்பிடிக்க முடியாது. எங்கேனும் குதித்தேயாக வேண்டும்.

அவர் உத்தேசமாகக் குறிவைத்து மையத்திலிருந்த வட்டத்தை நோக்கிக் குதித்தார். ம்ஹூம். அவரால் மைய வட்டத்தை அடைய முடியவில்லை. அதற்குச் சற்று வெளியில் அமைந்திருந்த பெரிய வட்டத்திற்குள்தான் குதிக்க முடிந்தது.

'டாங்!'

அடுத்த கணமே மணி சப்தம் கேட்டது. அவ்வளவுதான். அவரது முறை முடிந்து விட்டது. சில நிமிடங்களுக்குள் அவரது வாள்பயட்டுச் சுற்றே முடிந்து விட்டது. தேறினோமா? இல்லையா?

சுழற்சியைக் குறைத்து தாம் குதித்த இடத்தைக் குனிந்து பார்த்தார். அப்போதுதான் கலத்தின் மையத்தில் இருந்தது வட்டமேயல்ல. வட்டம் போன்று வரையப்பட்டிருந்த எண்கோணம் என்பது தெரிந்தது. ஆக மையத்திலிருக்கும் வட்டமென்றால் அது பெரிய வட்டம் மட்டும்தான். ஆகவே அவர் குதித்தது சரி!

அவர் நிமிர்ந்து பார்க்க, மெல்லிய புன்னகையுடன் மூழிக்குளத்து ஆசான் கலத்தைச் சுட்டிக் காட்டி மற்றவர்களுக்கு ஏதோ கூறிக்கொண்டிருப்பது தெரிந்தது.

53. பிராணப்பியாசம்



பொழுது விடிந்து சில நாழிகைகள் கழிந்து விட்டிருந்த அந்த நேரத்தில் விழிஞத்தின் கடற்கரை மெல்லிய காற்றோட்டத்துடன் காட்சியளித்தது. கதிரவன் வானில் மேலேறத் தொடங்கி விட்டதால் கடற்கரை மணலில் சூடு பரவத் தொடங்கியிருந்தது. அந்தச் சூட்டைப் பொருட்படுத்தாமல் குறடுகள் தரித்த பாதங்களை மணலில் பதித்தபடி கடலை நோக்கி முன்னேறிய சோழப்பேரரசர் அருள்மொழி வர்மர், கடலும் கரையும் சந்திக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவரது வருகையைக் கவனித்துவிட்ட அனுபவம் வாய்ந்த சில முதிய கடலலைகள் வேலை மெனக்கெட்டுப் புறப்பட்டு வந்து அவரது பாதங்களை நனைத்துவிட்டுச் சென்றன. என்ன இருந்தாலும் பெரிய மனிதரல்லவா? இவரைப் பரிச்சயம் செய்து வைத்துக்கொண்டால் இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் பயன்படும் என்கிற எண்ணம் போலும்.

அவரைப் பின்பற்றி நடந்துவந்த திருமெய்க்காவல் வீரர்கள் நால்வர் அவரது எண்ணங்களை அறிந்தவர்களாக விலகி நின்று கொண்டார்கள். கடலலைகள் விடாமல்

பாதங்களை நனைத்துக் கொண்டிருக்க, ஈர மணலில் கால்களைப் புதைத்து நின்றபடி கரங்களைக் கட்டிக்கொண்டு நாற்புறங்களிலும் பார்வையைச் சுழலவிட்டார் பேரரசர்.

கடலில் தென்பட்ட அலைகளைப் போலவே அவரது உள்ளக்கடலிலும் பல்வேறுவிதமான எண்ண அலைகள் நாலாபுறங்களிலும் சுழன்றடித்துக் கொண்டிருந்தன. மனம் ஒரு நிலையில் இல்லை. அதனை வெளிப்படுத்தும் விதமாக ஒரு பெருமூச்சு அவரது நாசியிலிருந்து வெளிப்பட்டது.

அவரது அமைதியின்மைக்கான முதல் காரணம் மலையனூரன் விவகாரம். மாராயரின் ஆட்களால் அவன் எங்கிருக்கிறான், என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை இம்மியளவும் கண்டறிய முடியவில்லை. கழிக்குடியிலும் கோட்டாறிலும் ஆரைவாய்மொழியிலும் ஆட்களை அனுப்பி ஆனவரை தேடியாயிற்று. இன்னும் ஒரு துப்பும் கிடைத்தபாடில்லை. அனந்தபுரத்திலோ காந்தளூரிலோ அவனுக்கு ஆதரவு கொடுக்கக்கூடியவர்கள் எவருமில்லை என்று மாராயர் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார். என்றாலும் சந்தேகமாக இருக்கிறது. அவன் இங்குதான் எங்கோ இருக்கவேண்டும். இருக்கட்டும்.

அடுத்ததாகக் கலமறுக்கும் போட்டிகள். அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும் காந்தளூர்ச் சாலை வளாகம். அங்கு சோழ வீரர்களுக்கெதிராக உருவாகி வரும் சூழல். அதனை மீறிப் போட்டிகளில் ஜெயித்தாக வேண்டிய நெருக்கடி. எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களைக் குறிவைத்துத் தாக்குவதற்காகக் காத்திருக்கும் அந்த பயங்கரப் பிரயோகம்!

நேற்று காலை போட்டிகள் துவங்குமுன் சாலை வளாகத்திற்குச் செல்வதற்காக ஆர்வத்துடன் ஆயத்தமாகிக் கொண்டிருந்தவரைப் பல்லவராயரும் மாராயருமாகச் சேர்ந்து தடுத்தாட்கொண்டு விட்டார்கள். முதல் நாளன்று தகுதிச் சுற்றுக்கள் மட்டும்தான் நடைபெறுமாம். அவற்றில் தேறினால்தான் மேற்கொண்டு ஒருவரோடொருவர் மோதும் போட்டிகளில் கலந்து கொள்ள முடியுமாம்.

"தகுதிச் சுற்றுக்களில் நமது வீரர்கள் முதலில் தேறி வரட்டும். அதன் பிறகு நாம் செல்வதுதானே மரியாதையாக இருக்கும்? மேலும் இன்று பகல் முழுவதும் நான்கு சாலையாசான்களும் சேர்ந்து செய்யும் பல்வேறு வைதிகச்

சடங்குகளும் பூஜைகளும் உள்ளன என்று கூறுகிறார்கள். அந்தச் சடங்குகளில் சாலையாசான்களைத் தவிர வேறு எவரும் கலந்து கொள்ள அனுமதியில்லை என்று கேள்வி. சோழமண்டலத்துப் பேரரசரான தாங்கள் அந்த வைபவங்களெல்லாம் நடந்து முடியும்வரை என்ன செய்து கொண்டிருப்பீர்கள்? மைதானத்திலேயே கால்கடுக்க நின்று கொண்டிருப்பீர்களா? அது தங்களுக்கு மரியாதையாக இருக்குமா?" என்று பல்வேறு விதங்களில் பயந்தும் நயந்தும் பேசி அவரைக் கிளம்பவிடாமல் தடுத்து விட்டார்கள்.

வேறு பல விஷயங்களிலும் கடுமையான அபிப்பிராய பேதங்களை வெளிப்படுத்தும் அந்த இரண்டு பெரிய மனிதர்களும் இந்த விவகாரத்தில் மட்டும் கருத்தொருமித்து நிற்பது எப்படி? என்பதை அருள்மொழிவர்மரால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. வெறுத்துப்போய் அன்றைய போட்டி நிலவரங்களை உடனுக்குடன் தமக்குத் தெரிவிக்கும்படி மாராயரிடம் கூறிவிட்டுத் தனியே விழிஞம் கோட்டைக்கு மெய்க்காவலர்களுடன் கிளம்பி வந்து விட்டார்.

அவர் நினைத்ததைப் போலவே கடற்கரைக் கோட்டையின் ஏகாந்தச் சூழலும் தனிமையும் அலைபாயும் மனதிற்கு ஆறுதலாக அமைந்திருந்தன. தவிர்க்கவே முடியாமல் தஞ்சையும் அரண்மனையும் அக்கனும் பெண்டுகளும் குழந்தைகளும் மனதில் ஒவ்வொருவராய் வந்து போனார்கள். அந்தத் தனிமையான சூழலில் பிரிவாற்றாமை ஒரு பெருவேதனையாய் மனதில் விரிந்தது.

பாவம்! அவர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு கணமும் தம்மைத்தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். 'அப்பா எப்போது திரும்பி வருவார்? வரும்போது எனக்கு என்ன கொண்டு வருவார்?' என்று குழந்தைகள் பெரியவர்களைத் துளைத்தெடுத்திருப்பார்கள். அதற்கு உரியபடி பதில் சொல்லத்தெரியாமல் தேவியர்கள் திகைத்திருப்பார்கள்.

பேசாமல் தந்தியையும் பஞ்சவன் மாதேவியை இந்தப் படையெடுப்பிற்குக் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமோ? பெண்டுகளைப் போர்க்களங்களுக்குக் கூட்டிக்கொண்டு வரக்கூடாது என்று எவன் சொன்னது? ஆனானப்பட்ட தசரத மஹாராஜாவே தன்னுடைய பெண்டாகிய கைகேசியைத் தேர்ச்சாரதியாக்கிக் கொள்ளவில்லையா?

இந்த ஏகாந்தச் சூழலில் தேவியர் இருவரும் நம்முடன் இருந்தால் எத்தனை பெரிய பேச்சுத் துணையாய் இருந்திருக்கும்? என்று பல்வேறு யோசனைகளும் தோன்றி மறைந்தன.

அவர் நாள் முழுவதும் எதிர்பார்த்திருந்த செய்திகள் அன்றிரவு அவர் படுக்கச் செல்வதற்கு முன் வந்து சேர்ந்தன. அந்த வருடப் போட்டிகளில் பங்கு பெறுவதற்குப் பல்வேறு சட்டர்களும் முன்வந்திருப்பதால் தகுதிச் சுற்றுக்கள் இரண்டு நாட்களுக்கு நடைபெறப் போகின்றனவாம். சுற்றுக்களில் தேறிவரும் சட்டர்கள்தாம் மூன்றாம் நாள் நேருக்கு நேர் மோதப்போகிறார்களாம். ஆகவே 'நேரடியாக மூன்றாம் நாள் போட்டிகளில் நாமனைவரும் கலந்து கொள்வதுதான் நமது தகுதிக்கும் மரபுக்கும் முறையாக இருக்கும்' என்று மாராயர் தம்முடைய மேலான கருத்தை வெளியிட்டிருந்தார்.

அன்று நடைபெற்ற வளரிவீச்சில் சோழவீரர்கள் இருவருமே நன்முறையில் தேறிவிட்டார்கள் என்பதுதான் அந்த ஓலையிலிருந்த ஒரே மகிழ்ச்சியான செய்தி. மழபாடியார் கலந்துகொண்ட சுற்றில் தவறுதலாக எவரோ பெருவளரியை எடுத்து வீசிவிட்டதாகவும் போட்டிகளை முன்னின்று நடத்தும் மூழிக்குளத்து ஆசான் அதற்காகக் காந்தளூர்ச் சட்டர்களை கடுமையாகக் கடிந்து கொண்டதாவும் இனி இத்தகைய அசம்பாவிதங்கள் நேரக் கூடாதென்று அனைவரையும் எச்சரித்ததாகவும் எழுதி மாராயர் ஓலையை முடித்திருந்தார்.

அந்தக் கடைசிவரிகள்தாம் அருள்மொழிவர்மரைக் கவலைக்குள்ளாக்கின. காந்தளூரில் போட்டிகள் நியாயமான முறையில் நடைபெறவில்லையோ? அதற்கான சூழல் அங்கு இல்லையோ? என்கிற எண்ணம் மெல்லியதாக எழுந்தது. யோசிக்க யோசிக்க அந்த எண்ணம் ஆலவிருட்சமாக விரிந்தது.

ஒரு பக்கம் மலையனூரனின் மாய மறைவு.

இன்னொரு பக்கம் சோழவீரர்கள் வந்துகொண்டிருந்த இரதத்தின்மீது விழிஞம் இராஜபாட்டையில் நடைபெற்ற மர்மத் தாக்குதல்.

இப்போது காந்தளூர்ச்சாலையின் எதிர்பாராத விபத்து.

இந்த மூன்று சம்பவங்களுக்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும். இருந்தேயாக வேண்டும்!

மலையனூரனுக்குக் காந்தளூர்ச் சாலையில் நெருக்கமான தொடர்பு இருந்தாலன்றி அவனால் அங்கே தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்க முடியாது. அந்தத் தொடர்பு பட்டதிரியுடையதா? அல்லது வேறு யாராவது அவனுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்களா? அவனது இறுதி நோக்கம்தான் என்ன?

போட்டிகள் நியாயமாக நடைபெறவில்லையேல் அவர் எடுத்த அத்தனை முயற்சிகளும் வீணாகி விடும். அதன் பிறகு ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களை அவரால் நினைத்தே பார்க்க முடியவில்லை. தவிர்க்க முடியாமல் இரண்டு பக்கங்களிலும் கடுமையான உயிர்ச் சேதம் ஏற்படும். காந்தளூர்ச்சாலை வளாகமே தரைமட்டமாக்கப்பட்டுவிடும். அவ்வளவுதான். அதற்குமேல் ஒன்றும் சொல்வதற்கில்லை.

இத்தகைய சூழலில் தாம் செய்யக்கூடியது என்ன? பெரிதாக ஒன்றுமில்லை. போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் காரணமில்லாமல் சோழ வீரர்களைச் சாலைக்குள் குவிக்க முடியாது. அப்படியே குவித்தாலும் அதனால் பெரிதாகப் பயன் ஏற்பட்டுவிடாது.

இன்று நடந்ததைப் போன்ற அசம்பாவிதங்கள் தங்கள் கட்டுப்பாட்டிலிருக்கும் வளாகத்திற்குள் நடைபெறுவதை அவர்களும் விரும்பப்போவதில்லை. அது அவர்களுக்கும் சாலை மரபுக்கு மிகப்பெரிய அவப்பெயரை உண்டாக்கும். குறிப்பாகச் சோழவீரர்கள் இருவருக்கும் ஏதாவது நேர்ந்தால் அதன் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்குமென்பதை நாம் சொல்லி அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. அதற்காகத்தானே ஆள் அம்பு சேனையுடன் இத்தனை தூரம் வந்திருக்கிறோம்?

அதனால்தான் மூழிக்குளத்து ஆசான் அனைவரையும் கடுமையாக எச்சரித்திருக்கிறார். எதற்கும் நமது கைப்பட முறி எழுதி மூழிக்குளத்தாருக்கு அனுப்பி வைப்போம். இன்னும் ஒரே ஒரு நாள்தான். அது மட்டும் நன்றாகக் கழிந்து விட்டால் மூன்றாம் நாள் போட்டிகளைக் காண நாமே நேரில் செல்லப்போகிறோமே?

ஓலை கொண்டு வந்தவனிடம் மாராயருக்கு ஒரு பதில் ஓலையும் மூழிக்குளத்தாருக்குத் தனி ஓலையும் எழுதிக்

கொடுத்துவிட்டு அவர் படுக்கச்செல்வதற்கு நீண்ட நேரமாகி விட்டது.

* * * * * * * *

மறுநாள் காலை காந்தளூர் மைதானத்தில் துவங்கிய சுழல்வாள் பயட்டு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மணியனார் வாள்பயட்டை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு வெளியேறிவிட, அவருக்கு அடுத்தபடியாகக் களமிறங்கியவன் திருவல்லவாயிலிருந்து வந்திருந்த ஒரு சட்டன். அவனுக்குக் கலத்தையோ மணியனாரின் வழிமுறைகளையோ முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. கழிக்குடிச் சாலையிலிருந்து வந்திருக்கும் சோணாட்டான்தானே! என்ன பெரிதாகச் சாதித்துவிடப் போகிறான்? என்கிற அலட்சிய மனோபாவத்துடன் இளையவரின் வாள்பயட்டைக் கவனித்து வந்ததினால் அவரது பக்கவாட்டுப் பாய்ச்சல்களுக்கான காரணங்களை அவன் சரிவர உள்வாங்கிக் கொள்ளவில்லை.

வாள்பயட்டுக் கலமோ மிகப்பெரியதாக வரையப் பட்டிருந்தது. அதன் வடிவத்தையோ அதில் அமைந்திருந்த வட்டங்களையோ நெருங்கி வந்து பார்த்தாலன்றித் தெளிவாகப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்ததாக வரப்போகும் முறை தன்னுடைய முறை என்பதையும் அவன் சிறிதும் எதிர்பாராதவனாக இருந்தான்.

மூழிக்குளத்தார் பெயரை அறிவிப்பதைக் கேட்டு ஒரு விதக் குழப்பத்துடன் கலத்திற்கு வந்து சேர்ந்தவன் அதன் முழு அமைப்பைக் கண்டு திகைத்துப் போனான். அதன் வடிவத்தை நிதானமாகப் புரிந்து கொள்வதற்குள் சுழல்வாள் கரத்தில் திணிக்கப்பட்டுவிட்டது. அதனைச் சுழற்றத் துவங்கியதும் நிலைமை முன்னிலும் மோசமாகிவிட்டது. தலையைக் குனிந்து கலவடிவத்தை நோக்கக்கூடாது என்கிற முக்கியமான பாடத்தை அவனுக்கு எடுத்துச் சொல்வாரில்லை. ஆகவே நேர்க்கோட்டில் காலை வைக்க முயன்று அதிலிருந்து பிழறி வெகு விரைவிலேயே வெளியேற்றப்பட்டு விட்டான்.

அவன் அத்தனை சீக்கிரம் வெளியேற்றப்படுவான் என்பதை எவருமே எதிர்பார்க்கவில்லை! அதனால் அவனுக்கடுத்தபடியாக வந்த இரண்டு சட்டர்களும்கூட தவியாய்த் தவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

திருவல்லவாய்ச் சட்டனின் அவசர வெளியேற்றம் கூடியிருந்த இதரச் சட்டர்களின் மத்தியில் சலசலப்பைத் தோற்றுவித்தது. அவர்கள் தங்களின் அகங்காரங்களைத் தனியே ஒதுக்கி வைத்துவிட்டு மணியனாரை அவசர அவசரமாக நெருங்கி வந்து அவர் கலத்தைக் கையாண்ட விதத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முற்பட்டார்கள். இளையவரும் தயங்காமல் தமது வழிமுறைகளை அவர்களுக்கு விளக்கினார்.

மலைநாட்டின் புகழ்பெற்ற சாலைகளைச் சேர்ந்த சட்டர்கள் தமது மாணாக்கனை அணுகி யோசனை கேட்பதையும் அவரும் அதற்குத் தயங்காமல் பதில் சொல்வதையும் தம்புராட்டியார் பூரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார். தன்னம்பிக்கை இருப்பவனால் மட்டும் தான் தன்னுடைய பிரத்யேக வழிமுறைகளை தைரியமாக மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயைப்போல் அவர்கள் கழிக்குடிக்கு வந்து சேர்ந்த நாளன்று அடைந்த மகிழ்ச்சியைவிட அதிகப்படியான பூரிப்பை அவர் அப்போது அனுபவித்துக்கொண்டிருந்தார்.

ஏறக்குறைய ஒரு முகூர்த்த நேரத்திற்குத் தொடர்ந்து நடந்த வாள்பயட்டுக் கலம் ஒரு வழியாக முடிவுக்கு வந்தது. அதில் பங்குபெற்ற பதின்மூவரில் மூன்று சட்டர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தேர்ச்சிபெற்றார்கள்.

முன்மாலை நேரத்தில் பிராணாப்பியாசமும் குடந்தூக்கலும் நடைபெறும் என்கிற அறிவிப்புடன் வாள் பயட்டு ஒரு முடிவுக்கு வந்தது.

* * * * * * * *

"அம்மா! பிராணாப்பியாசம் என்றால் என்ன?"

"உடலை இயக்கும் தசவாயுக்களுள் மிக முக்கியமானது பிராணன் என்பதை அறிவீர்கள். அந்தப் பிராணனை - அதனை உடலுக்குள் கொண்டு செல்லும் மூச்சை - ஒரு சட்டன் எவ்வாறு கையாள்கிறான்? எத்தனை தூரம்

அதனைத் தனது உடலுக்குள் தக்க வைத்துக் கொள்கிறான்? என்பனவற்றையெல்லாம் சோதிக்கும் முயற்சியே பிராண அப்பியாசம் அல்லது பிராணாப்பியாசம் எனப்படும்."

"எவ்வாறு அதனைச் சோதிப்பார்கள்?"

"பெரும்பாலும் தண்ணீருக்குள்தான் அந்தச் சோதனைகள் நடைபெறும்."

தம்புராட்டியார் கூறியது முற்றிலும் சரி. அந்தச் சோதனைகள் காந்தளூர்ச் சாலையின் திருக்குளத்தில்தான் நடைபெற்றன.

* * * * * * * *

முன்மாலை நேரத்தில் காந்தளூர்த் திருக்குளத்தைச் சுற்றி ஆசான்களும் சட்டர்களும் கூடி நின்றார்கள். வழக்கம்போல மூழிக்குளத்தார் முன்வந்து போட்டிக்கான விதிகளைப் புகன்றார்.

"சட்டர்களே! திருக்குளத்தின் மும்முனைகளில் மூன்று சட்டர்களை நிறுத்தியிருக்கிறோம். அடையாளத்திற்காக சிறு கொடியும் அவர்களின் கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் குளத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு நீந்திச்சென்று கொடியின் அடிப்பாகத்தைத் தொட்டுவிட்டு வரவேண்டும். அப்படி நீந்திச் செல்லும்போது எத்தனை முறை தலை நீரை விட்டு வெளியே உயர்கிறது என்பது கணக்கில் கொள்ளப்படும். அடிக்கடி மூச்சை வெளியிலிருந்து இழுத்துக் கொள்பவனுக்குப் பிராணனைக் கையாளத் தெரியவில்லை என்று பொருள். அவன் போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவான். புரிகிறதா?"

புரிகிறது என்பதற்கு அடையாளமாகச் சட்டர்கள் தலையசைத்தார்கள்.

"குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சட்டன் மட்டுமே நீந்திக் கொண்டிருப்பான். அவனது முறை முடிந்ததும்தான் அடுத்த சட்டன் குளத்திற்குள் புகமுடியும். ஆகவே எத்தனை விரைவாக நீந்த முடியுமோ அத்தனை விரைவாக நீந்தி வாருங்கள்."

நண்பர்களுக்கு அருகில் நின்ற தம்புராட்டியார் அவர்களின் தோள்களில் தமது இரு கரங்களையும் பதித்தார்.

"அவர் சொல்வதைக் கேட்டு விரைவில் நீந்தி முடிக்க முயலாதீர்கள்."

"ஏன்?"

"விரைவில் நீந்தி முடிக்க முயன்றீர்களானால் தலையை அடிக்கடி வெளியே உயர்த்தி மூச்சை இழுத்துக்கொள்ள வேண்டிவரும். அது நல்லதல்ல. இந்தப் போட்டிகள் உங்களது மூச்சுத்திறனைப் பரீட்சிப்பதற்காக நடக்கின்றனவேயொழிய நீச்சல் திறனை பரீட்சிப்பதற்காக அல்ல!"

துரதிருஷ்டவசமாகக் குளத்திற்குள் முதலாவதாகப் புகுந்த சட்டன் அந்த உண்மையை உணரவில்லை. அவன் வேகவேகமாக நீந்த முயன்று கடைசியில் வெளியேற்றப் பட்டான்.

அவனது அனுபவத்தைக் கண்ட மற்ற சட்டர்கள் சுதாரித்து விட்டார்கள். மிகுந்த நிதானத்துடன் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு நீந்திச் சென்றார்கள். உடலின் சக்தி மிதமான வேகத்தில் செலவழிக்கப்பட்டதால் பிராணனை அதிக நேரத்திற்குத் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது.

இத்தகைய நிதானமான செயல்பாட்டினால் பிராணாப் பியாசம் முடிவதற்கு மிகுந்த நேரமாகிவிட்டது. இரண்டு நாழிகைகளுக்குள் முடியவேண்டிய போட்டி நான்கு நாழிகைகளுக்கும் மேலாகத் தொடர்ந்தது. அத்தனை சட்டர்களும் ஒருவழியாகத் தங்களின் முறைகளை முடித்துக் கொள்வதற்குள் சுற்றிலும் இருள் சூழ்ந்து விட்டது. போட்டியில் பங்குபெற்ற பத்து சட்டர்களில் இருவரைத் தவிர எண்மர் தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

இதர ஆசான்களுடன் கூடி நிலைமையை ஆலோசித்தார் மூழிக்குளத்தார். அத்தனை தாமதமாகக் குடந்துக்கலைத் தொடங்கினால் மறுநாள் போட்டிகளைத் துவக்குவதற்குக் காலதாமதமாகிவிடும் என்பதால் அந்த எண்மரையுமே அடுத்தநாள் போட்டிகளில் பங்குபெற வைத்துவிடுவது என்று முடிவானது.

இறுதிச் சுற்றுகள் நடைபெறப் போகும் கடைசி நாளை எதிர்நோக்கியபடி சட்டர்கள் கலைந்து சென்றார்கள்.

54. நள்ளிரவில்



சட்டென்று படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தார் வாமனன் நம்பூதிரி. உடலெங்கிலும் வியர்வை முத்து முத்தாகத் திரண்டிருந்தது. ஏதோ மிக மோசமான கனவு. சே! உறக்கம் கலைந்துவிட்டது.

இரவு இரண்டாம் ஜாமம் கழிந்திருக்குமா? சாளரத்தின் வழியாக திசையையும் இருப்பையும் கவனித்தார். ஆம். நிலவு உச்சிக்கு ஏறிவிட்டது. இரண்டாம் ஜாமம் கழிந்து மூன்றாம் ஜாமம் துவங்கியிருக்க வேண்டும்.

தாகம் அபரிமிதமாக இருந்தது. எழுந்து மூலையில் வைக்கப்பட்டிருந்த பானைநீரை முகந்து குடித்தார். ம்ஹூம். அடங்கவில்லை. திருக்கோயில் தீர்த்தம் தேவை. வெள்ளிச் சொம்பு எங்கே போய்விட்டது?

'தொப்!'

எங்கிருந்தோ ஒரு சப்தம் தெளிவாகக் கேட்டது. கூர்ந்து கவனித்தபோது அவரது அறைக்கு மேற்கே அமைந்திருந்த அச்சுதனின் முறியிலிருந்துதான் சப்தம் வந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அவருக்கு இப்போது உறக்கம் முழுவதுமாகக் கலைந்து போய்ச் சகலபுலன்களும் விழித்துக்கொண்டன. என்ன சப்தம்? ஏதேனும் பூனை வந்திருக்குமா? புறக்கணித்து விட்டு மீண்டும் படுக்கையில் படுத்துவிடுவோமா? உடல் ஏகப்பட்ட அசதியில் இருக்கிறதே?

இல்லை. அந்தச் சப்தத்தைப் புறக்கணிக்காதே. என்னவென்று போய்ப்பார் என்று உள்ளுக்குள்ளிருந்து குரல் கேட்டது. அது என்னவென்று தெரிந்து கொள்ளாமல் நிம்மதியாக உறங்கமுடியுமென்று தோன்றவில்லை.

சிரமப்பட்டு எழுந்தார். அதென்னவோ படுக்கையிலிருந்து எழும்போது மட்டும் உடலுக்கு ஏகப்பட்ட எடை எப்படியோ கூடிவிடுகிறது! கை

கால்களை இழுத்து மூச்சைப் பலமாக உள்வாங்கி நன்றாகச் சுவாசித்துக் கொண்டார். நுரையீரலில் பிராணன் நிரம்ப நிரம்ப, ஒரு புத்துணர்ச்சி ஆட்கொண்டது. சப்தம் செய்யாமல் அறையின் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து நின்றார்.

அவரது தலையைக் கண்டவுடன் நிலவு மேகக் கூட்டங்களுக்குள் மறைந்துகொண்டு விட்டது. சுற்றிலும் இருள் அடர்ந்து தெரிந்தது. வளாகத்தைச் சுற்றி வளர்ந்திருந்த மரம் செடிகொடிகளில் வசித்து வந்த இரவுக் கோழிகளும் சிறுபூச்சிகளும் மண்டூகங்களும் 'கர்..ர்.ரக்' 'கர்.. ர்.. ரக்' என்று விடாமல் சப்தமெழுப்பிக் கொண்டிருந்தன.

மேற்கே தெரிந்த அச்சுதனின் முறியைக் கவனித்தார். வளாகத்தின் மதிலுக்கு வெளியே வளர்ந்திருந்த பெரிய மருத மரத்தின் நிழல் அங்கே மிகுதியாகப் படர்ந்திருந்ததால் அந்தப் பகுதியே இருளோகத்தில் மூழ்கியிருந்தது.

முறியை முன்புறமாக அணுகுவோமா? வேண்டாம். பின்புறமாக அணுகுவோம். அவனது அறைக்குப் பின்னால் பெரிய கதவுண்டு. முறியைப் பின்பக்கமாகத் திறந்து கொண்டு புழக்கடை வழியாக வளாகத்தின் தெற்குமதிலைத் தாண்டி வெளியே செல்வதற்கான கதவு அது.

சப்தம் செய்யாமல் அடிமேல் அடிவைத்து நடந்து அந்தப் பகுதியை அடைந்தார். கிழக்குச் சுவருக்குப் பக்கத்தில் ஒடுங்கி நின்று தென்பகுதியைக் கவனித்தார். விடுதியின் பின்புறக் கதவு திறந்திருக்க அதற்கருகில் எவனோ ஈட்டியுடன் நின்று கொண்டிருந்தான். காவலுக்கு நிற்பவனைப் போல! அப்படியானால் அறைக்குள் வேறு எவராவது நுழைந்திருக்கிறார்களா? இந்த அகால நேரத்தில் உரிமையுடன் அச்சுதனின் பிரத்யேக முறிக்குள் நுழைபவர்கள் யார்? அவர்களுக்கு எதற்காகக் காவல்?

நமது சம்சயம் சரிதான். உள்ளே ஏதோ வில்லங்கம் நடந்து கொண்டிருக்கிறது. எழுந்து வந்தது நல்லதாகப் போயிற்று.

அறைக்குள் நடப்பதை எவ்வாறு கவனிப்பது?

அவர் நின்றிருந்த கிழக்குப் பகுதியில் சாளரங்களில்லை. ஆனால் முறியைச் சுற்றிக்கொண்டு வந்தால் மேற்குப் பகுதியில் சாளரம் உண்டு. அங்கே சென்று என்னவென்று பார்க்க வேண்டியதுதான்.

சப்தம் செய்யாமல் மேற்குச் சாளரத்திற்கருகில் வந்து நின்று முறிக்குள் எட்டிப் பார்த்தார். கண்கள் சூழ்ந்திருந்த இருளுக்குப் பழகிவிட்டிருந்தன. அதனால் அறைக்குள் இருந்த உருவங்கள் நிழலோவியங்களாகத் தெரிந்தன.

உள்ளே அச்சுதன் படுத்திருப்பதும் ஒரு ஆஜானு பாகுவான உருவம் அவனை நெருங்கிக் கொண்டிருப்பதும் தெரிந்தது. ஏதேனும் விபரீதம் நேரப்போகிறதா? வாயிற்காவலுக்கு நிற்பவனின் மென்னியை முறித்துப் போட்டுவிட்டு உள்ளே நுழைவோமா? இல்லை. அவசரப்படவேண்டாம். சற்று பொறுப்போம்.

உள்ளே நுழைந்த உருவம் அச்சுதனுக்கு அருகில் வந்து அவனை எழுப்பியது.

"அச்சுதா! எழுந்திரு. நான்தான் வந்திருக்கிறேன்!"

இந்தக் குரல்? இந்தக் குரலை எங்கோ கேட்டிருக்கிறோமே?

உறக்கம் முழுவதும் கலையாமலே அச்சுதன் எழுந்திருக்க முற்பட்டான். "யாரது?"

"நான்தான் அச்சுதா. பயப்படாதே..."

"தாகம்! மிகுந்த தாகமாக இருக்கிறது!"

"இந்தா! உன்னுடைய தாகத்தைத் தீர்க்கும் அருமருந்து. திருப்தியாகக் குடி!"

"இங்கே வேண்டாம். தீட்டாகிவிடும். வெளியே செல்வோம்!"

அச்சுதன் சிரமப்பட்டு எழுந்திருக்க, அவனைக் கைத்தாங்காகத் தாங்கிக்கொண்டது அந்த உருவம். இருவரும் தள்ளாடியபடி நடந்து வளாக மதிலின் திட்டி வாசல் வழி வெளியே சென்றார்கள். புழக்கடைக் கதவுக்கருகில் காவலுக்கு நின்றவனும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றான்.

நல்லதொரு இடைவெளிக்குப் பிறகு அவர்களைப் பின்தொடர்ந்த வாமனர், திட்டிவாயில் வழியாகத் தலையை எட்டிப் பார்த்தார். அச்சுதனும் அந்த இன்னொருவனும் மருதமரத்தின் வேர்களில் வசதியாக அமர்ந்துகொள்ள மூன்றாமவன் காவலாக நின்றுகொண்டான்.

"இந்தா அச்சுதா! உனக்காகவே சிரமப்பட்டு எடுத்துக் கொண்டு வந்தேன்."

தனது தோள்பையிலிருந்து பெரிய பித்தளைக் குடுவையில் அந்த உருவம் எதையோ கொடுப்பதையும் அதை அச்சுதன் ஏறக்குறைய ஒரு வெறியுடன் வாங்கிக் குடிப்பதையும் கண்டு வாமனர் அதிர்ச்சியடைந்தார். பக்குவ உணவையும் தீர்த்தத்தையும் தவிர வேறு எதையுமே அருந்தக் கூடாதே? என்ன செய்துகொண்டிருக்கிறான் இவன்?

"அச்சுதா! நாளை மிக முக்கியமான நாள். நமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டிய நாள். மறந்து விடாதே!"

"இன்னும்.. இன்னும் வேண்டும்! தயவுசெய்து கொடுக்கிறீர்களா?"

"இந்தா! குடி. நாளையோடு அவர்கள் விதி முடிந்து விடவேண்டும். தெரிந்ததா? அவர்களை உயிருடன் விட்டாயானால் உங்களின் அனைவரின் உயிருக்கும் ஆபத்து!"

ஏதேதோ துர்போதனைகள் செய்தபடி அந்த உருவம் குடுவையைக் கொடுப்பதையும் அதனை வாங்கிக் குடித்தபடி அச்சுதன் அவன் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டுவதையும் வாமனர் கண்டார். அவருக்கு இரத்தம் கொதித்தது. அப்படியே பாய்ந்து சென்று அந்த உருவத்தின் மென்னியை முறித்துப்போட்டு விடலாமா என்று தோன்றியது.

இல்லை. விஷயம் விபரீதமாகிவிட்டது. இப்போது அவசரப்படுவதால் ஒரு பயனும் விளையப்போவதில்லை. நிதானமாக யோசித்துச் செயலாற்ற வேண்டும். அந்தக் குடுவையிலிருப்பது நிச்சயம் ஏதோ மிருகத்தின் உதிரம்தான். அதில் சந்தேகமில்லை. அச்சுதனின் அமானுஷ்யமான தாகத்தை எவனோவொருவன் தவறான முறையில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.

நமது உடன்பிறந்தவனுக்கு எங்கே போயிற்று புத்தி? இப்படியா உடலையும் மனதையும் ஒருவன் ஒருசேரக் கெடுத்துக் கொள்வான்?

உடனடியாக மூத்தவரை சென்று பார்த்தாக வேண்டும். வேறு வழியேயில்லை. அவரைக் கலந்தாலோசிக்காமல்

நாமாகச் செயல்பட முடியாது. அது அனர்த்தமாக முடியலாம்.

"அச்சுதா! நான் கிளம்புகிறேன். நான் கூறியவற்றை மறந்துவிடாதே."

"இன்னும்.. இன்னும் வேண்டும். தாகம் அடங்கவில்லை!"

"எடுத்து வந்ததைக் கொடுத்து விட்டேன். உன்னுடைய முறியில் ஏதோ தீர்த்தமோ என்னவோ வைத்திருப்பாயே? அதனைச் சென்று அருந்து. தாகம் அடங்கும். நான் வருகிறேன்."

அச்சுதன் மீண்டும் முறியை நோக்கி வருவதற்குள் வாமனர் சப்தம் செய்யாமல் அந்த இடத்திலிருந்து கிளம்பினார்.

* * * * * * * *

புள்ளினங்கள் இடைவிடாமல் 'கீச் கீச்' சென்று சப்தமெழுப்பிக் கொண்டிருந்தன. இன்னமும் பொழுது முழுவதுமாக விடிந்து விடவில்லை. என்றாலும் கிழக்கு வானில் மெல்லிய வெளிச்சம் தோன்றத் துவங்கி விட்டதால் அவையும் குரலெழுப்பத் தொடங்கி விட்டன. மிகுதியான பசி.

வழக்கமாக அந்த நேரத்தில் சுறுசுறுப்பாக எழுந்து காலைக்கடன்களையும் ஸ்நானத்தையும் முடித்துக்கொண்டு திருக்கோயிலுக்குக் கிளம்பிவிடும் பட்டதிரி, அன்று படுக்கையிலிருந்து எழுந்திருக்கத் தோன்றாமல் மேலே தெரிந்த உத்திரத்தை வெற்றுப்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். இரவு முழுவதும் உறங்காததால் உடல் அசதியிலிருந்தது. கண்கள் நெருப்பாக எரிந்தன. ஆனால் உடலின் அசதியைவிட அதிகப்படியான சோர்வை அவரது மனம் அடைந்திருந்தது. அதனால்தான் எழுந்திருக்கத் தோன்றவில்லை.

முதல் நாளிரவு அரைகுரைத் தூக்கத்திலிருந்த அவரை எழுப்பி வாமனன் கூறிய செய்திகள் நிலைகுலைய வைத்திருந்தன. அதற்குப் பிறகு அவரது மனம் முற்றிலுமாக நிம்மதியை இழந்துவிட்டது.

ஒரு வகையில் இதனை அவரது முழுத்தோல்வி என்று குறிப்பிட்டாக வேண்டும். எவனைச் சிறு வயது முதல் தோள்களில் தூக்கிச் சுமந்து வளர்த்து வந்தாரோ - எவனைத் தனது அடுத்த வாரிசாக உருவாக்க நினைத்தாரோ - எவனுக்கு அதிகப்படியான அன்பையும் அக்கறையும் செலுத்தி வளர்த்தாரோ - அவன் முழுவதுமாகத் தவறி விட்டான். பாதை மாறிவிட்டான். அதற்கு அவர்தான் தார்மீகப் பொறுப்பேற்றாக வேண்டும்.

எங்கு தவறு நேர்ந்து விட்டது? எது சரி எது தவறு என்பதில் அவனுக்கு எப்படிக் குழப்பம் நேர்ந்துவிட்டது?

ஒரு வேளை தாம் முன்பு செய்த சில பாவங்கள்தாம் அவனை இந்த வழியில் போகத் தூண்டிவிட்டதா?

சில நாட்களுக்கு முன் அம்பலத்தின் இருளில் எதிரொலித்த வார்த்தைகள் மீண்டும் ஒரு முறை அவரது நினைவுக்கு வந்தன. 'காலன் இன்று காந்தளூர்ச் சாலையில் கால் பதித்து விட்டான் பட்டதிரி!'

அந்தக் காலன் யார் என்பது தெரிந்துவிட்டது. நிச்சயம் அது மலையனூரனாகத்தான் இருக்கவேண்டும். தன்னைச் சந்திக்காமல் இளையவனைச் சந்தித்து அவனது மனதைக் கெடுக்க அவனுக்கு என்ன துணிச்சல்? என்ன தைரியம் இருக்க வேண்டும்? அவனது மென்னியைப் பிடித்துக் கழுத்தைத் திருகிப்போட்டால்கூட நமது கோபம் அடங்காது போலிருக்கிறதே?

ஒரு வகையில் இது அவனது அண்ணன்மார்களின் குணம்தான். நினைத்த காரியத்தை நிறைவேற்ற எந்த வழி வகைகளை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கும் சாதுர்யம். அதனை நிறைவேற்றக்கூடிய ஈவிரக்கமில்லாத மனத்திட்பம். இறுதியில் அதனை நியாயமென்று சாதிக்கக்கூடிய வாக்கு வல்லமை. சீச்சீ! இவர்கள் ஆச்சாரியார் இரவிநீலியின் புதல்வர்கள் என்கிற ஸ்தானத்திற்குச் சிறிதும் அருகதை இல்லாதவர்கள்!

ஒரு காலத்தில் நாம் அவர்களது வலையில் வீழ்ந்தோம். அவர்களின் கைப்பாவையானோம். அதனால் வாழ்நாள் முழுவதும் நிம்மதியைத் தொலைத்துவிட்டு அனாதையாக நின்றோம். இன்று நமது உடன்பிறந்தவன் அவர்களின் வலையில் வீழ்ந்துவிட்டான். சாக்கடையில் கால்பதித்து விட்டான்.

அச்சுதனைப் பொறுத்தவரையில் வாமனன் கூறியதுதான் சரி. நமது கணிப்பு தவறானது என்பதைக் காலம் நிரூபித்து விட்டது. அவன் நரசிம்மப்பிரயோகத்தை அப்யசிக்கச் சிறிதும் தகுதியில்லாதவன். அதற்கான மனோபலம் இல்லாதவன். அவனுக்கு அதனை உபதேசித்தது நாம் செய்த பெருந்தவறு. திருத்திக் கொள்ளவே முடியாத தவறு. அதற்காக வாழ்நாள் முழுக்க வருந்திக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

இன்று என்ன நடக்கும்? தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் எட்டு சட்டர்களும் இரண்டிரண்டு பேராக மோதுவார்கள். அவர்களில் நால்வர் தேறுவார்கள். நால்வரிலிருந்து இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். அந்த இருவரில் ஒருவர் இறுதியில் வெற்றிபெறுவார்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் - கலநாயகமாக வெற்றி பெறப்போகும் ஒருவர் - வாமனனாக இருக்க வேண்டும் என்று முதல்முறையாக அவருக்குத் தோன்றியது. நிச்சயம் அச்சுதனாக இருக்கக்கூடாது. அவ்வாறு அவன் கலநாயகமாகத் தேர்வாகிவிட்டால் பின்னால் காந்தளூரில் மலையனூரனின் ஆதிக்கம்தான் நிலைபெறும். அது இந்தச் சாலைக்கோ மலையாட்டிற்கோ ஏன், அச்சுதனுக்கே கூட நல்லதல்ல.

இந்த அசம்பாவிதங்களெல்லாம் நடக்காமல் எவ்வாறு தடுப்பது? அச்சுதனைப் போட்டிகளிலிருந்து எவ்வாறு விலக்கி வைப்பது? இதுதான் அவர் முன் விசுவரூபமெடுத்து நின்ற ஒரே கேள்வி. அதற்கான பதில் அவருக்குத் தெரியவில்லை. அந்தப் பதில் தெரியாமல் எழுந்திருப்பதற்குத் தோன்றவில்லை.

மிகவும் வருத்தமாக இருந்தது. பாரமாக இருந்தது. தோற்றுவிட்டோம் என்று தோன்றியது.

* * * * * * * *

"உன்னிகளா!"

"அம்மா.."

"இன்றுதான் கலமறுக்கும் போட்டிகளின் கடைசி நாள். இன்றுதான் உங்களுக்கு உண்மையான சோதனை காத்திருக்கிறது."

"... ..."

"இதுவரை நான் சொல்லிக்கொடுத்த வித்தைகளையும் பயிற்றுவித்த பயட்டுக்களையும் உரியபடி உபயோகித்துத் தகுதிச்சுற்றுக்களில் நல்ல முறையில் முன்னேறி வந்தீர்கள். ஆனால் இன்று நடைபெறப்போகும் நேருக்குநேர் மோதலில் வெற்றிபெற வேண்டுமானால் அவை மட்டும் போதா.."

"... .."

"இன்று உங்களுக்குள் இருக்கும் சுத்தமான வீரம் முழுவதுமாக வெளியில் வந்தாக வேண்டும். எல்லையற்ற ஆற்றல் உங்களது மேனியில் பாய்ந்தோட வேண்டும். அது குருவருள் இருந்தால்தான் சாத்தியப்படும். அதனால் நமது சாலையாசான்களை நினைத்து அவர்களின் வழிகாட்டுதல்களை யாசித்து நீங்கள் நாழிகைப் பொழுது தியானத்தில் அமரவேண்டுமென்று நினைக்கிறேன்."

"சரி அம்மா."

"ஸ்நானத்தை முடித்துக்கொண்டு எனது முறிக்கு வந்து சேருங்கள். அங்கே நான் கிழக்கு முகமாக தியானத்தில் அமர்ந்திருப்பேன். என்முன்னே நீங்கள் வந்து அமர்ந்து கொள்ளுங்கள். ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டாம். கண்களை மூடி நமது பழைய ஆசான்களை தியானியுங்கள். சாலையை ஸ்தாபிதம் செய்த ஸ்ரீமாற நம்பூதிரியிலிருந்து துவங்கி ஒவ்வொரு ஆசானையும் மனதில் வரித்து அவர்களை வணங்குங்கள். ஸ்ரீ விக்கிரம நம்பூதிரி, வரகுண நம்பூதிரி, நாராயண நம்பூதிரி, நரசிம்ம நம்பூதிரி, பலராம நம்பூதிரி என்று ஒவ்வொருவரையும் தனித்தனியே சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குங்கள். அவர்களின் ஆன்ம பலத்தையும் வழிகாட்டுதலையும் யாசியுங்கள்."

"சரி அம்மா!"

"ஒரு ஆசானது பெயரை மனதில் உச்சரித்தவுடன் ஏதோ ஒரு உருவம் மனதில் தோன்றும். அதுதான் அவரது உருவம் என்று நம்புங்கள். பூவுலகில் அவர்கள் எந்த உருவத்தில் தெரிந்தார்கள் என்பது முக்கியமேயல்ல. அவர்களை நாம் ஆன்ம வடிவில் தரிசிக்கிறோம். அதனால் அவர்களின் தோற்றம் முக்கியமல்ல. அவர்கள் மட்டும்தான் முக்கியம். சரியா?"

"சரி."

சட்டென்று அவர்களைத் தொட்டுத் தடவி உச்சி முகந்து அவர்களின் கரங்களைப் பிடித்துக் கொண்டார் தம்புராட்டியார். அவரது கண்கள் கலங்கியிருந்தன.

"உன்னிகளா! எத்தனையோ முயன்றும் நரசிம்மப் பிரயோக இலட்ஷணத்தையோ அதற்கான எதிர்ப் பிரயோகத்தையோ நம்மால் கண்டறிய முடியவில்லை. இன்று அதனை நேருக்குநேர் காணப்போகிறீர்கள். அந்தப் பயங்கரத் தாக்குதலை எதிர்கொள்ளப் போகிறீர்கள். இதில் உங்களுக்கு என்னவேண்டுமானாலும் நேரலாம். பிராணாபாயமே நேரலாம்! உங்களுக்கு ஏதாவது ஒன்று நேர்ந்துவிட்டால் அதனை என்னால் ஒருபோதும் தாங்க முடியாது.

அதனால் நமது பண்டைய ஆசான்களிடம் இதுபற்றிப் பிரத்யேகமாக விண்ணப்பிக்க வேண்டும். குறிப்பாக கோட்டைத்தளி கிருகார்சிதனான பலராம நம்பூதிரியிடம் இதனை நீங்கள் ஒரு ஆத்மார்த்தமான வேண்டுகோளாகவே வைக்க வேண்டும். நரசிம்மத்தை எதிர்கொள்ளும் ஆற்றலையும் பக்குவத்தையும் என் உடலுக்கும் மனதிற்கும் கொடு! என்று உள்ளமுருக இறைஞ்சி நிற்க வேண்டும். அவர்களின் ஆன்ம பலத்தை நம்பித்தான் இன்று உங்களிருவரையும் களத்திற்கு அனுப்புகிறேன்."

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் இருவருமாகத் தம்புராட்டியாரின் முறிக்குச் சென்று சேர்ந்தார்கள். முன்பு குறிப்பிட்டதைப் போலவே தம்புராட்டியார் ஆழ்ந்த தியானத்திலிருந்தார். அவரது முகம் எல்லையற்ற அமைதியில் உறைந்திருந்தது.

இருவரும் முடிந்தவரையில் சப்தம் செய்யாமல் கால்களை மடித்து அமர்ந்தார்கள். கரங்களை முழங்கால்களில் இருத்தினார்கள். விரல்களில் சின்முத்திரை காட்டித் தங்களுக்குள் அமிழ்ந்தார்கள்.

"ஓ பிதாமகர்களே! நீங்கள் ஸ்தாபிதம் செய்த சாலையைச் சேர்ந்த மாணவர்களான நாங்கள் இன்று உங்களின் ஆசிகளையும் வழிகாட்டுதல்களையும் யாசித்து உங்களின் அடிபணிகிறோம். தனுர்வேத வித்தைக்காக வாழ்வையே அர்பணித்துக்கொண்ட தூயவர்களான நீங்கள் எங்களின் வேண்டுகோளை ஏற்று இந்த முறிக்கு எழுந்தருள

வேண்டும். எங்களின் மனப்பூர்வமான வணக்கங்களை ஏற்று எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்."

அந்த வேண்டுதல் அந்த முறியைத் தாண்டி காந்தளூரின் பிரம்மாண்டமான வளாகத்தைத் தாண்டி மரம் செடிகொடிகளைத் தாண்டி... கடலைத் தாண்டி மலைகளைத் தாண்டி... எல்லையற்று விரிந்த கிழக்கு வானத்தைத் தாண்டி எங்கோ பிரபஞ்சத்தைச் சென்று அடைந்தது. தொலைவில்.. மிகத் தொலைவில்.. நட்சத்திரக் கூட்டத்தில் ஏதோ ஒன்று அசைந்தது.

"தன்னுடைய பெருங்கருணையினால் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை என்கிற மஹாசாலையை ஸ்தாபிதம் செய்தவரும் அந்த சாலையின் நெறிமுறைகளை வகுத்தவரும் மூத்த பிதாமகர்கள் நால்வருள் ஒருவருமான ஸ்ரீமாற நம்பூதிரியை தியானம் செய்கிறேன்."

தமது மனக்கண்களின் முன் ஒரு வயதான உருவம் வந்து நிற்பதை மழபாடியார் உணர்ந்தார். அதனை நிமிர்ந்து பார்க்க முயலாமல் குனிந்து பாதங்களைத் தொட முற்பட்டார். அந்தப் பாதங்களில் மெல்லிய மணல் துகள் துகளாகப் படிந்திருந்தன. கழிக்குடிக் கடற்கரையின் மணல் அது என்பது தெரிந்தது.

பெரியவரின் பாதங்களைத் தீண்டியதும் ஏதோ ஒன்று பரபரவென்று கரங்களுக்கும் கரங்களிலிருந்து இதயத்திற்கும் இதயத்திலிருந்து அடிவயிற்றுக்கும் அடிவயிற்றிலிருந்து உடலின் அத்தனை நாடி நரம்புகளுக்கும் சரேலென்று பாய்ந்து பரவுவது தெரிந்தது. கணநேரம் உடல் எம்பிக் குதித்து அடங்கியது.

பெரியவர் ஒரு புன்னகையுடன் விலகி நின்று கொண்டார்.

"இடைவிடாத உழைப்பின் உருவமானவரும் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை என்கிற மஹாசாலையின் பதினாறு மூலவிதிகளை நிர்ணயம் செய்தவரும் ஸ்ரீமாற நம்பூதிரியால் ஆச்சாரியார் பட்டம்கட்டப் பெற்றவருமான ஸ்ரீவிக்ரம நம்பூதிரியை தியானம் செய்கிறேன்."

ஆச்சாரியர்கள் ஒவ்வொருவரையும் தமது மனதில் வரித்து அவர்களின் பாதம் பணிய ஏதோ ஒன்று உள்ளே இறங்கிக்கொண்டே இருந்தது.

கடைசியாக வந்து நின்றது ஆசான் பலராம நம்பூதிரி. அவரது பாதங்கள் தட்டையாக மிக உறுதியாக மண்ணில் அழுப்பதிந்து நின்றன. அவை வயதான பாதங்களாக இல்லாமல் இளையவையாகத் தோற்றமளித்தன.

ஏனோ அவரை மட்டும் நிமிர்ந்து பார்க்க வேண்டுமென்று தோன்றியது. மெல்லத் தலையை நிமிர்த்தினார். நிமிர்ந்தவர் அப்படியே பிரமித்துப்போய் நின்றார். என்ன கம்பீரமான ஆகிருதி..! எத்தனை கூர்மையான கண்கள்! எத்தனை இளமையான தோற்றம்!

பலராம நம்பூதிரி சற்றே விலகிக்கொள்ள - அவருக்குப் பின்னால் நிற்பது யார்?

அந்த நிழலுருவம் மெல்ல மெல்ல ஒளி பெற்றது. மிகக் கம்பீரமான குருகாடிக் கிழாரின் தோற்றம் கண்களுக்குப் புலனாகத் தொடங்கியது. பாட்டனா?

ஐயா! நலமாக இருக்கிறீரா? நீண்ட நாட்களாக உம்மைக் காணவில்லையே?

கிழார் நெருங்கி வந்து குனிந்து அவரது தோள்களைப் பற்றினார்.

"பரமா!"

"பாட்டா!"

"மிகப் பிரமாதமாகத் தேறி வந்துவிட்டாய்! உன்னுடைய உழைப்பு உன்னை இத்தனை தூரத்திற்குக் கொண்டு வந்து விட்டது. அன்றொரு நாள் உனக்கும் ஒரு காலம் வரும். அதுவரை பொறுத்திரு என்று கூறினேனே.. ஞாபகம் இருக்கிறதா?"

"நன்றாக ஞாபகம் இருக்கிறது."

"அந்தக் காலம் வந்து விட்டது. இந்த நாள் உன்னுடைய நாள். இன்று முழுவதும் நானும் ஆசான்களும் உனக்குத் துணையிருப்போம். உன்னில் கலந்திருப்போம். உன் நாடிகளிலும் நரம்புகளிலும் பரவியிருப்போம். எங்களின் ஆன்மசக்தி உன்னுள் இன்று உதிரமாக ஓடும். உன்னுடைய அங்க அசைவுகளாக எங்களையே நாங்கள் வெளிப்படுத்திக்கொள்வோம். அதனால் அஞ்சாதே. என்ன நடந்தாலும் துளியும் கலங்காதே! புரிகிறதா?"

"புரிகிறது."

அவர் நெருங்கி வந்து மழபாடியாரின் மேல் நெற்றியில் ஒரு முத்தத்தைப் பதித்தார்.

"சரி, கிளம்பு!"

அவர் விலகிச் செல்வதற்குமுன் அவரது காலடியில் வீழ்ந்து பாதங்களைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

"போதும். எழுந்திரு!"

தலையை நிமிர்த்திப் பார்க்க காற்றில் அவர் மறைந்து போனார்.

55. வாட்கள் மோதின!



"இரவிகுல கேசரி..!"

"சோழ மார்த்தாண்டர்..!"

"சோழேந்திர சிம்மர்..!"

"நிகரிலிச் சோழர்..!"

"நித்தவினோதர்!"

"சோழமண்டலத்துப் பேரரசர் இராஜராஜ சோழர் பராக்..! பராக்..! பராக்..!"

காந்தளூர்ச் சாலை வளாகத்தின் அலங்கரிக்கப்பட்ட கிழக்கு வாயிலின் இருபுறங்களிலும் நின்றபடி அந்தக் கட்டியக்காரர்கள் உரத்த குரலில் சோழப்பேரரசரின் வருகையை அறிவிப்பதைக் காந்தளூர்ச் சட்டர்கள் வினோதமாகப் பார்த்தார்கள். சாதாரணமாக அந்த வளாகத்திற்குள் அரசாங்க அலுவலர்கள் கால்பதிப்பதில்லை. பட்டதிரியை அவ்வப்போது சந்திக்கவரும் நாடுவாழிகள் கூட வளாகத்திற்கு வெளியில்தான் சந்திப்பை வைத்துக் கொள்வார்களே தவிர சாலைக்குள் பெரும்பாலும் நுழைந்ததில்லை. அதனால் அத்தனை பரிவாரங்களுடன் ஒரு பேரரசர் தங்களின் வளாகத்திற்கு வருவதை அவர்கள் மரியாதையுடனும் வியப்புடனும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சில நிமிடங்களில் வளாகத்திற்குள் வலது காலை எடுத்து வைத்த அருள்மொழிவர்மரை மூழிக்குளத்து

ஆசானும் அவருக்குப் பின்னால் வேண்டா வெறுப்பாக நின்றிருந்த திருநாராயண பட்டதிரியும் பூரணகும்ப மரியாதையுடன் எதிர்கொண்டழைத்தார்கள். என்னதான் வேற்று நாட்டவராக இருந்தாலும் ஒரு மண்டலத்திற்கே அதிபதியல்லவா? அதற்குரிய மரியாதையைக் கொடுத்தேயாக வேண்டுமல்லவா?

பேரரசரைப் பின்பற்றி பல்லவராயரும் மாராயரும் வளாகத்திற்குள் நுழைந்தார்கள். மூழிக்குளத்தார் தன்னை முதலில் அறிமுகம் செய்து கொண்டு தமக்குப் பின்னால் நின்றிருந்த இதர ஆசான்களையும் ஒவ்வொருவராக அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

"இவர் பரவூர்ச் சாலையின் தலைமை ஆச்சாரியர். கீழ்த்தளி வீட்டைச் சேர்ந்த கோவர்தன நம்பூதிரி!"

"இவர் திருவல்லவாய்ச் சாலையின் ஆச்சாரியர். பத்து இல்லத்து வீட்டைச் சேர்ந்த சோமேஸ்வர நம்பூதிரி!"

"இவர்தான் காந்தளூர்ச் சாலையின் தலைமை ஆச்சாரியார். வலியசாலை வீட்டைச் சேர்ந்த திருநாராயண பட்டதிரி!"

கரங்களைக் குவித்தபடி நின்ற பேரரசரின் கண்கள் தன்னை ஊடுருவதை பட்டதிரி உணர்ந்தார். அவரும் தலையை நிமிர்த்திப் பார்த்தார். நீண்ட புருவங்களுக்குக் கீழே தெரிந்த பெரிய கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தார். அவரது முதுகுத் தண்டில் சிலீர் என்றொரு பயம் ஓடியது.

இந்த முகம் வேறு முகம். பலப்பல காலங்களுக்கு முன் சோழநாட்டில் சந்தித்த பால்வடியும் பாலக முகம் அல்ல இது. வேறு முகம். உறுதியையும் தைரியத்தையும் செயல்திறனையும் மனத்திட்பத்தையும் கம்பீரமாய் ஒருங்கே பிரதிபலிக்கும் முகம். ஒரு பேரரசனுக்குரிய சகலவிதமான சாமுத்திரிகா இலட்சணங்களும் பொருந்தியிருக்கும் முகம்.

அந்தக் கண்கள்? அவரை ஊடுருவி அவருள் புகுந்து இதயத்தின் அடியாழத்தைத் துளைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கண்கள்..?? சோழ இராஜ குடும்பத்திற்கேயுரிய அந்தப் பெரிய கண்கள்..??

'பட்டதிரி! எத்தனை காலம்தான் என்னிடமிருந்து ஓடி ஒளிந்து கொள்வாய்? இன்று உன்னுடைய கோட்டைக்

குள்ளாகவே கால்பதித்து விட்டேன் பார்த்தாயா? வன்முறை இல்லாமல் வளாகத்தில் பொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல் கலமறுக்கும் போட்டிகள் என்கிற வியாஜ்ஜியத்தை வைத்துக்கொண்டு உள்ளே நுழைந்து விட்டேன் பார்த்தாயா? என்னைப் பரம வைரியாகக் கருதும் உன்னையே பூரணகும்பமேந்தி எதிர்கொண்டழைக்க வைத்துவிட்டேன் பார்த்தாயா?' என்றெல்லாம் வினவும் அந்தக் கண்கள்...

பட்டதிரி இமைகளை அழுத்தமாக ஒரு முறை மூடிக் கொண்டார். தலையைக் குனிந்து கொண்டார். இறைவனையும் ஆசான்களையும் தவிர வேறு எவருக்கும் எப்போதும் எந்நேரத்திலும் தலைகுனிந்து பழக்கப்படாதவர் தனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த அந்த இளைஞரின் பார்வையைத் தாங்கமாட்டாமல் குனிந்து கொண்டார். தம்மால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன் என்கிற குற்றஉணர்வு அவருள் குமைந்து கொண்டிருந்தது.

பேரரசர் ஒன்றும் பேசாமல் ஆசான்களை வணங்கிவிட்டு வளாகத்திற்குள் கால்பதித்தார். சற்று தூரத்தில் அவரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நிற்கும் இளைஞர்களின் மீதும் அவர்களையொட்டி நின்றிருந்த தம்புராட்டியார் மீதும் அவரது கண்கள் பதிந்தன. அவர்களை அருகில் வரச் சொல்லிச் சைகை காட்டினார்.

இளைஞர்கள் அருகில் வந்து அவரது பாதம் பணிய முற்பட்டார்கள். அவர்களை அப்படியே தடுத்து நிறுத்திக் கட்டியணைத்துக் கொண்டார்.

"வரவேண்டும் வரவேண்டும் சக்ரவர்த்திகளே! தங்களின் வருகையை எதிர் பார்த்து இரண்டு நாட்களாக ஆவலுடன் காத்திருக்கிறோம்."

ஒரு பொருள் பொதிந்த பார்வையை பேரரசர் அருகில் நின்றிருந்த மாராயரின் மேல் பதியவிட்டார். பார்த்தீர்களா? நமது வரவை வீரர்கள் இரண்டு நாட்களாகவே எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் பார்த்தீர்களா?

மாராயருக்கு அந்தப் பார்வையும் செய்தியும் புதிதல்ல. அதனால் வளாகத்தைப் பார்வையிடுபவர்போல் முகத்தை வேறு புறம் திருப்பி வைத்துக் கொண்டார்.

"நண்பர்களே! தளிக்குளத்து இறைவனின் அருள் உங்களின் மேல் பரிபூரணமாக நிலைக்கட்டும். அவரது அருளால் நீங்கள் நினைத்ததைச் சாதிப்பீர்கள். நமச்சிவாயம்!"

அவர் கரங்களை நீட்ட அருகில் நின்றிருந்த மெய்க்காவல் வீரன் திருநீற்றுப் பொக்கணத்தை[79] நீட்டினான்.

கணநேரம் கண்களை மூடி லிங்க உருவை அவர் மனதில் வரவழைத்துக் கொண்டார். பொன்னாலான நாகத்தின் கீழ் நீண்டிருந்த சுயம்பு லிங்கம் அவரது கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. லிங்கத்தின் தலைக்குமேல் சொட்டுச் சொட்டாக நீர் இறங்கிக் கொண்டிருந்தது. அந்த நீர்த்தாரையினால் லிங்கம் பளபளப்பாக ஈரமாக புத்துணர்ச்சியுடன் தெரிந்தது.

'இறையே! இவர்களோடு இரும். இவர்களுக்கு வலிமையைத் தாரும். வெற்றியைத் தாரும்.'

பொக்கணத்திலிருந்த திருநீறை அள்ளி எடுத்துத் தமது கரங்களாலேயே நெற்றியில் பேரரசர் பூசிவிடுவதைக் கண்டு நண்பர்களுக்குப் புல்லரித்தது. அவரது கரங்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

"தாங்களைப் பேரரசராகப் பெற்றது எங்களின் பாக்கியம். தங்களுக்காக உயிரையும் தருவோம்!"

அந்த வாக்கியம் அவரைக் கலவரப்படுத்தியது. ஆனாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் உள்ளே நுழைந்தார்.

"தங்களுக்காக உயிரையும் தருவோம்!"

இரண்டு இளைஞர்கள். இன்னமும் திருமண மாகாதவர்கள். இல்லற சுகத்தை அனுபவிக்காதவர்கள். வாழ்வைக் கடகங்களிலும் போர்முனைகளிலும் மட்டுமே கழித்தவர்கள். அவரது ஒரே கட்டளையை ஏற்றுத் தங்களைக் கடுமையான சாலைப் பயிற்சிகளுக்கு உட்படுத்திக் கொண்டவர்கள். தமக்காக உயிரையும் கொடுக்கிறேன்

---

[79] திருநீற்றுப் பை.

என்கிறார்கள். வெறும் வாய்வார்த்தை அல்ல அது. இதயத்திலிருந்து வெளிப்பட்ட உண்மையான வார்த்தைகள்.

அவர்களின் வாக்கு பலித்துவிடுமோ? களத்தில் அவர்களின் இன்னுயிர் பறிக்கப்பட்டு விடுமோ? அல்லது அதனினும் கொடுமையாக கை கால்கள் முடமாக்கப்பட்டு விடுமோ? நரம்புகள் இழுத்துக்கொண்டு வாய் கோணிக் கொண்டு முகம் வெளிறிப்போய் மஞ்சள் பாய்ந்து இருவரின் வாழ்வும் வீணாகி விடுமோ? கலமறுக்கும் போட்டிகளில் பங்கு பெற்றால் இத்தகைய பின்விளைவுகளைச் சந்தித்துத்தானே ஆக வேண்டும்? என்று தமது முதுகுக்குப் பின்னால் பட்டதிரியும் மற்றவர்களும் கொக்கரிக்கப் போகிறார்களோ? எம் சிவமே! இதையெல்லாம் மௌன சாட்சியாய்ப் பார்த்துக்கொண்டு நீர் சும்மா இருப்பீரோ?

வாழ்வில் எத்தனையோ இன்ப துன்பங்களைப் பார்த்து எத்தனையெத்தனையோ மேடுபள்ளங்களைக் கடந்து வந்தவரான சோழப்பேரரசர் அந்த இரு இளைஞர்களையும் நினைத்துக் கண்கலங்கி வானை இறைஞ்சி நின்றார்.

வானில் மேகங்களுக்கிடையே வெளிச்சக் கீற்று தெரிந்தது. அவர் அதனை முறைத்துப் பார்க்க, சில நொடிகளில் மேகம் விலகியது. காலைக் கதிரவனின் வெளிச்சம் நாலாபுறங்களிலிருந்தும் பூமியைத் தாக்கிற்று. அந்தக் கணத்தில் அருள்மொழிவர்மருக்கு வானிலிருந்து சிவத்தின் குரல் தெளிவாகக் கேட்டது.

'நாமிருக்கிறோம்! அஞ்சற்க.'

அவரது முகத்தில் படிந்த சஞ்சல இரேகைகள் உடனடியாக மறைந்தன. சிவத்தின் பலத்தின் மேல் அறத்தின் மேல் நியாயத்தின் மேல் உண்மையின் மேல் அவர் முழுமையாக இதய பூர்வமாக நம்பிக்கை வைத்தார். சிவம் இவர்களைக் காக்கும்! எனும் அசைக்க முடியாத நம்பிக்கை அவருள் எழுந்தது. அத்தகைய நம்பிக்கை ஒன்றுதான் அவரைப் பலகாலமாகச் செலுத்திக் கொண்டிருக்கும் ஒரே சக்தி.

நம்பிக்கையின் பலம் மிகப் பெரியது.

அது வானை அசைக்கும்.

பூமியைப் புரட்டிப் போடும்.

கோள்களை இடம் மாற்றும்.

கண்ணுக்குத் தென்படாத பிரபஞ்ச சக்தியைத் தூண்டி மண்ணுக்குக் கொண்டு வரும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.

* * * * * * * *

முதலிரண்டு நாட்களைப் போலவே அன்றைய கலமறுக்கும் போட்டிகளும் சில சடங்குகளுடனும் பூஜைகளுடனும் களரியில் துவங்கின. இறுதிப் போட்டிகளுக்காகத் தேர்வாகியிருந்த எட்டு சட்டர்களுடன் சாலையாசான்கள் அந்தச் சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

எட்டு பேரின் தோள்களிலும் தங்கத்தினாலான தாயத்து கட்டப்பட்டது. அதில் லிங்கபூஜை செய்து மந்திரிக்கப்பட்ட திருநீறு அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறினார்கள்.

சட்டர்கள் இந்த முறை தனித்தனியே லிங்கங்களுக்குப் பூஜைசெய்து வழிபடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் மூத்த பிதாமகர்களின் நல்லாசிகளைக் கோரி மனதார வழிபட்டு நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து வணங்கினார்கள்.

அடுத்ததாக இந்தச் சாலைகளும் சாலைப் பாரம்பரியமும் இனி வரும் காலங்களில் செழித்துச் சிறக்க வேண்டும் என்பதற்காக காந்தளூர் மகாதேவர் திருக் கோயிலிலிருந்து வந்திருந்த வைதீகர்களைக் கொண்டு ஹோமம் துவங்கப்பட்டது. குருதாரையின் விளக்கிலிருந்து எடுக்கப்பட்ட நெருப்பை நான்கு சாலையாசன்களும் ஒன்றாகச் சேர்ந்து ஹோமகுண்டத்தில் வார்த்தார்கள். அந்த ஹோமம் ஒரு புறம் நடந்துகொண்டிருக்கும் போதே முதல் நாள் செய்யப்பட்ட விக்னேஸ பூஜை முதலான பூஜைகள் களரியின் அதிதேவதைகளுக்குச் செய்து முடிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாயின.

* * * * * * * *

கொடிமரத்தின் கீழ் நூற்றுக்கணக்கான சட்டர்களும் சோழப்பரிவாரங்களும் பொதுமக்களும் கூடியிருக்க, மூன்றாம் நாள் போட்டிகள் முறையாகத் துவங்கிவிட்டதை மூழிக்குளத்து ஆசான் அறிவித்தார்.

"கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வந்த கலமறுக்கும் போட்டிகள் இன்று சந்தி வேளையுடன் நிறைவுபெற இருக்கின்றன. இதுவரை அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நடந்து முடிந்துள்ள போட்டிகளை இன்றும் நல்லபடியாக நடத்தி வைக்குமாறு நமது மூத்த பிதாமகர்கள் நால்வரையும் மனதார வணங்கி வேண்டிக்கொள்வோமாக!

இந்த விரோதி வருடப் போட்டிகளில் எட்டு சட்டர்கள் இறுதிச்சுற்றுக்குத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் இத்தனை பேர் இறுதிச் சுற்றுக்குத் தேர்வாவது இதுவே முதல் முறை. இத்தனை சட்டர்களைப் பங்குபெற அனுமதித்தால் மூன்று நாட்களுக்குள் போட்டிகளை நடத்தி முடிப்பது இயலாத காரியமாகி விடுகிறது. இன்று கூட முதல் சுற்றின் நான்கு மோதல்களையும் ஒரே நேரத்தில் நடத்தியாக வேண்டிய நேர நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனை நீங்கள் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த கலமறுக்கும் போட்டிகள் நடக்கும்போது நான் அனேகமாக உயிரோடிருக்க மாட்டேன். (இந்த வார்த்தைகளைக் கூறும்போது ஆசானின் குரல் தழுதழுத்தது). அதனால் அடுத்த போட்டிகளை நடத்தப் போகும் சட்டர்கள் இதனைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

போட்டிகளில் பங்குபெறும் சோழ வீரர்களை ஊக்குவிப்பதற்காக சோழப்பேரரசர் அருள்மொழிவர்மர் இங்கு நேரில் எழுந்தருளி நம்மைப் பெரிதும் கௌரவப் படுத்தியுள்ளார். மலைநாட்டின் நான்கு சாலைகளின் சார்பிலும் அவருக்கு நமது மனமார்ந்த நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டிகள் துவங்கப்போவதால் மைதானத்தில் கூடியுள்ள அனைவரும் அதிலிருந்து விலகிச் சுற்றி நின்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மைதானத்தின் நான்கு பகுதிகளில் சட்டர்கள் இரண்டிரண்டு பேராக மோதப்போகிறார்கள். யார் யாருடன் மோதப்போகிறார்கள் என்பதைக் குடவோலை முறையில் இப்போது தேர்வு செய்ய இருக்கிறோம். போட்டிகளில் பங்குபெறப்போகும் சட்டர்கள் அனைவருக்கும் நமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்!"

இந்தச் சிறிய சொற்பொழிவைத் தொடர்ந்து ஒரு சிறுமி கொடிமரத்திற்கருகே வரவழைக்கப்பட்டாள். அங்கிருந்த பித்தளைக் குடத்தில் அவள் தனது வலது கரத்தை உள்ளே விட்டு முதல் ஓலையை வெளியிலெடுத்தாள்.

"முதல் பெயர் மூழிக்குளத்து தலவகார சரணத்தைச் சேர்ந்த கௌசிக பட்டன். அவனுடன் மோதப்போவது யாரென்று பார்ப்போம். அடுத்த ஓலையை எடு அம்மா."

அந்தப் பெண் இந்த முறை குடத்தைச் சற்றே துழாவி இருந்த ஓலைகளைக் கலைத்து இரண்டாவது பெயரைத் தேர்வு செய்தது.

"இரண்டாவது பெயர் காந்தளூர் தைத்திரிய சரணத்தைச் சேர்ந்த வாமனன் நம்பூதிரி. கௌசிகனும் வாமனனும் மைதானத்தின் முதல் பகுதியில் மோதுவார்கள். அடுத்த ஓலை அம்மா!"

அவள் ஒவ்வொரு முறியாக அடுத்தடுத்து எடுத்துக் கொடுக்க, அதிலிருந்த பெயர்கள் வாசிக்கப்பட்டன. யார் யாருடன் மோதப் போகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்தது. பரவூர் விஷ்ணுகாந்தனுடன் பரமன் மழபாடியாரும் பார்த்திவசேகரபுரத்து சோமேஸ்வரனுடன் கம்பன் மணியனாரும் மூழிக்குளத்து பிரம்மானந்தனுடன் அச்சுதனும் மோதுவதற்குத் தேர்வானார்கள்.

மைதானத்தில் கூடியிருந்த அத்தனை பேரும் விலகி மைதானத்தைச் சுற்றி நின்று கொண்டார்கள்.

இந்த மோதலில் சட்டர்கள் தத்தம் வாட்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஆசான் கூறிவிட்டதால் மழபாடியார் தன்னுடைய பிரியத்திற்குகந்த வாளையும் கேடயத்தையும் எடுத்துக் கொண்டார்.

எட்டு பேரும் தத்தம் ஆசான்களை வணங்கிவிட்டு மைதானத்தின் நாற்புறங்களிலும் கூடினார்கள்.

"டாங்!"

மணி சப்தம் எழுந்தது.

* * * * * * * *

மைதானத்தின் தென்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த விதானத்தின் கீழ் தனக்கென்று கொடுக்கப்பட்டிருந்த

ஆசனத்தில் அமர்ந்து பேரரசர் நடப்பவற்றைக் கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்கருகில் அமைந்திருந்த ஆசனங்களில் மாராயரும் பல்லவராயரும் ஒரு புறம் அமர்ந்திருக்க மறுபுறம் தம்புராட்டியார் இருப்புக் கொள்ளாமல் அமர்ந்திருந்தார். அவர்களுக்கு நேரெதிரே மைதானத்தின் வடபுறத்தில் சாலையாசான்கள் நால்வரும் அருகருகே ஆசனமிட்டு அமர்ந்திருந்தார்கள்.

நல்லவேளையாக வானில் உச்சி வெய்யில் முழுவதுமாக ஏறிவிடவில்லையாதலால் காற்றில் சிறிதளவு குளிர்ச்சி மிச்சமிருந்தது.

மூழிக்குளத்தார் முதல் மணியடித்தவுடன் சட்டர்கள் தத்தம் ஆயுதங்களுடன் மைதானத்தின் நான்கு பகுதிகளுக்கும் பிரிந்துசென்று நின்றுகொண்டார்கள். மைதானத்தின் தென்மேற்குப் பகுதியில் நின்றிருந்த மழபாடியார் தமது வாளை ஒரு முறை சுழற்றிப் பார்த்துக் கொண்டார். சற்றே கனமான அந்த வீரவாள் 'விர்.. விர்..' ரென்று காற்றில் எழுப்பிய ஒலி அவருக்குத் திருப்திகரமாகவே இருந்தது. தலையைத் திருப்பி மணியனார் எங்கிருக்கிறார் என்று பார்த்ததில் அவர் மைதானத்தின் வட கிழக்குப் பகுதிக்குச் சென்று நிற்பது தெரிந்தது. அவரை நோக்கி வாள்பிடித்த கரத்தை உயர்த்தினார் மழபாடியார். அவரும் பதிலுக்குக் கரத்தை உயர்த்துவது தெரிந்தது. நண்பா! வெற்றி நமதே!

தென்புற விதானத்தை நோக்கி அடுத்ததாகத் திரும்பியவர் பேரரசரையும் தம்புராட்டியாரையும் வணங்கும் பாவனையில் மெல்லத் தலைகுனிந்தார். அருள்மொழிவர்மர் வலது கரத்தை உயர்த்தி ஆசிகூறுவது தெரிந்தது. இது போதும். ஏழேழு ஜென்மங்களுக்கும் இது போதும்.

"டாங்..!"

இரண்டாவது மணி சப்தத்தில் அவரது எண்ணமெல்லாம் எதிரில் நின்றிருந்தவன் மீது குவிந்தது. அவன் பிடித்திருந்த வாளின் மீது குவிந்தது. அதன் சுழற்சியில் குவிந்தது. அந்த வாளைத் தவிர அதன் 'விர் விர்'ரென்ற சுழற்சியைத் தவிர சகலமும் மறக்கப்பட்டது.

* * * * * * * *

"டாங்..! டாங்..!"

"டணார்! டணார்!"

வளாகத்தின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்த மைதானத்தின் நாற்புறங்களிலிருந்தும் இடி போன்று சப்தங்கள் எழும்பலாயின. வாளுடன் வாள் மோதியதில் தீப்பொறிகள் பறந்தன. அசாதாரணமான வேகத்துடன் வீசப்பட்ட வாளைக் கேடயம் தடுக்க, அதிலிருந்தும் நெருப்புப் பொறிகள் கிளம்பின.

ஒருவரையொருவர் சுற்றிச்சுற்றி வந்த சட்டர்கள், ஒரு கட்டத்தில் ஆக்ரோஷமாக வாளால் தாக்கிக் கொண்டார்கள். வாள்வீச்சு தமக்குச் சாதகமான பக்கத்திலிருந்து வரும்போது அதனை வாளினாலேயே எதிர் கொண்டார்கள். வீச்சு சாதகமில்லாமல் போனால் அதனைக் கேடயத்தால் தடுத்தார்கள். மாறி மாறி வாளுடன் வாளும் வாளுடன் கேடயமும் மோதிக்கொண்டன. ஒரு சில சமயங்களில் கேடயத்துடன் கேடயம் மோதும் சந்தர்ப்பங்களும் வாய்த்தன. அவ்வாறு மோதுவதினால் ஏற்படும் சப்தம் 'கிணீர்!' என்று வித்தியாசமாக எழுந்தது.

மைதானத்தின் நாற்புறங்களிலுமே உக்கிரமான வாள் வீச்சு தொடங்கி விட்டதால் எதைப்பார்ப்பது எதை விடுப்பது என்று கூடியிருந்தவர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டது. ஒரு கணம் மைதானத்தின் வடமேற்குப் பகுதியில் விறுவிறுப்பு கூடுவது போலிருக்கும். சரி, அந்த வீச்சை விடாது கவனிப்போம் என்று பார்த்தால் அடுத்த கணமே மறுபுறத்தில் உக்கிரமான தாக்குதல் தொடங்கி விடும்.

அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வாள்வீச்சுக்களில் கலந்து கொண்ட சட்டர்கள் எண்மருமே நேர்த்தியான பயிற்சி கொண்ட வீரர்களாதலால் அவர்கள் ஒவ்வொருவரின் வீச்சும் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. துரதிருஷ்டவசமாக இரண்டு கண்களை மட்டுமே இறைவன் கொடுத்திருப்பதால் தவிர்க்க முடியாமல் ஏதேனும் ஒரு மோதலை மட்டுமே கூடியிருந்தவர்களால் காணமுடிந்தது.

அருள்மொழிவர்மருக்கே ஒரு கட்டத்தில் அந்த அவஸ்தை ஏற்பட்டுவிட்டது. கடைசியில் ஆனது ஆகட்டுமென்று அவர் மழபாடியாரின் மீது மட்டும் கவனம் வைக்கலானார். மிகப்பெரிய சப்தங்கள் எழுந்தாலொழிய மைதானத்தில் வடகிழக்குப் பகுதியில் மணியனார் மோதிக் கொண்டிருந்த இடத்தைக் கவனிக்கவில்லை.

தாளவாத்தியக் கலைஞர்களுக்கென்று சீரான தாளமானமும் இலயமும் இருப்பதைப்போல வாள்வீச்சிலும் ஒவ்வொருவருக்கென்று தனிப்பட்ட தாளக்கட்டும் இலயமும் உண்டு. வீச்சின் வேகத்தாலும் ஒரு வீச்சுக்கும் இன்னொரு வீச்சுக்குமிடையே விடப்படும் இடைவெளியினாலும் உண்டாகும் ஒரு விதமான ஒழுங்கு அது. இந்த வீச்சு இலயம் ஒவ்வொருவருக்கும் பிரத்யேகமானதாக அமைந்திருக்கும்.

ஆனால் மோதல் என்று வந்துவிட்டால் மோதிக் கொண்டிருக்கும் இரண்டு வீரர்களுமே ஒரு கட்டத்தில் ஒரே விதமான இலயத்திற்கு வந்து ஒருமித்தாக வேண்டும். இல்லையேல் ஒருவர் மட்டும் தாக்கிக்கொண்டிருக்க மற்றவர் தன்னைத் தற்காத்துக் கொள்ளும் நிலையிலேயே வைத்துக் கொள்ள நேரும். திறமை மிகுந்த வாள்வீரர்கள் அந்த நிலையை விரும்புவதில்லை. அவர்கள் எப்படியாவது தங்களின் வீச்சுடன் அடுத்தவர் வீச்சை இணைத்துக் கொள்ளவே முயல்வார்கள். எதிராளியின் வீச்சுடன் தமது வீச்சு சரியானபடி பொருந்த வேண்டுமென்று நினைப்பார்கள். அவன் வாள்வீசும் நேரத்தில்தான் தாமும் வாள்வீசியாக வேண்டும். அதே சமயத்தில் அவனுடைய வீச்சைவிட நமது வீச்சு அதிவேகமாக இருக்க வேண்டுமென்று முயற்சிப்பார்கள்.

மோதிக்கொண்டிருக்கும் இருவரும் ஒரு கட்டத்தில் தத்தம் வாள்வீச்சுடன் மனம் ஒருமித்து இணையும்போது அவர்களின் இலயமும் இயல்பாக ஒன்றுகூடும். செயற்கையாக அதனை உருவாக்க முயன்றால் இருவரில் ஒருவருக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டுவிடும்.

காந்தளூர் மைதானத்தில் அன்று வாள்வீசிக் கொண்டிருந்த நான்கு ஜோடிகளுமே சீரான ஒருமித்த இலயத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. அதனால் நேரம் செல்லச் செல்லத் தாக்குதலின் வேகமும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

இப்படித் தொடர்ந்து இடைவிடாமல் வாள்வீசிக் கொண்டேயிருக்க முடியாது. இருவரில் ஒருவருக்கு அயற்சி ஏற்பட்டேயாகவேண்டும். அயற்சி ஏற்பட்டுவிட்டால் அதன் காரணமாக வாள் பிடித்திருக்கும் மணிக்கட்டில் உறுதி குறையும். கவனம் சிதறும். இந்த இரண்டில் ஒன்று நிகழ்ந்தாலும் எதிராளி அதனைப் பயன்படுத்திக்

கொள்வான். ஆகவே அவ்விதமான அயற்சி ஏற்படும் வரை காத்திராமல் அதற்கு முன்னதாகவே மோதலில் ஜெயித்து விடவேண்டுமென்கிற முனைப்புடன் அந்த எட்டு வீரர்களும் வாள்சுழற்றிக் கொண்டிருந்தனர்.

நேரம் செல்லச்செல்ல மழபாடியார் ஒரு களைப்பை உணர்ந்தார். உடலெங்கிலும் வியர்வை முத்து முத்தாகத் திரண்டிருந்தது. கண்கள் கணநேரம் இருட்டிக் கொண்டு வந்தன. தலை சுழன்றது. நல்லவேளையாக அந்த நேரத்தில் எதிர்த்தாக்குதல் நடைபெறவில்லை. அப்படி நடைபெற்றிருந்தால் அவரது வாள் வானத்தில் பறந்திருக்கும்.

அவருடன் மோதிக்கொண்டிருந்த பரவூர் விஷ்ணு காந்தனுக்கும் களைப்பு அதிகமாகத்தான் இருந்தது. அவனது உடலிலும் வியர்வை அளவுக்கதிகமாக வழிந்தோடிக் கொண்டிருந்தது. அதிக நேரம் தன்னால் தாக்குப்பிடிக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு அவனும் முனைப்புடன் போராடிக்கொண்டிருந்தான்.

கூர்மையாக அவனைக் கவனித்தபடி வாள்வீசிக் கொண்டிருந்த மழபாடியார் ஒரு கட்டத்தில் மிகப்பெரிய வியர்வைத் துளியொன்று அவனது நெற்றியில் திரள்வதைக் கவனித்தார். மூன்று நான்கு துளிகள் ஒன்று சேர்ந்து பெரியதாகத் திரண்டு அவனது புருவமாகிய மேட்டில் ஏறிக் கண்களில் விழ, அந்தக் கணத்தில் அவன் கண்களை மூட -

இதுதான் சமயம். இதுதான் ஒரே வாய்ப்பு.

"டணார்!"

தமது உடலில் மிச்சமிருந்த சக்தியையெல்லாம் ஒன்று திரட்டிக் கணத்திற்கும் குறைவான கால இடைவெளியில் மிகப்பெரிய ஹுங்காரத்துடன் வானில் எழும்பித் தமது வாளை ஆக்ரோஷத்துடன் வீச, அவன் சுதாரித்துக்கொண்டு அந்தத் தாக்குதலைச் சமாளிக்க நேரமில்லாமல் போக...

அடுத்த கணமே அவனது வாள் காற்றில் பறந்தது!

சுற்றிலும் "ஹோ!"வென்று பெருஞ்சப்தம் கேட்டது.

மழபாடியாரால் அதற்கு மேல் நிற்பதற்கும் சக்தியில்லாமல் போகவே அப்படியே நிலத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டார்.

* * * * * * * *

"மஹாஜனங்களே! இங்கு நடைபெற்ற உன்னதமான வாள்வீச்சில் பங்கு பெற்ற அனைவருக்கும் நமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்தனை உக்கிரமான வீச்சைப் பார்த்துப் பலகாலங்களாகின்றன. போராடிய வீரர்களைப் பார்த்தபோது நமது பண்டைய ஆசான்களே இந்த வீரர்களின் வடிவில் மீண்டும் ஜனித்து வந்துவிட்டார்களோ என்கிற எண்ணமேற்பட்டது. வீச்சுக்கள் அத்தனை சிறப்பாக அமைந்திருந்தன. சூட்சும வடிவில் இங்கு ஆவிர்பவித்திருக்கும் நமது ஆசான்கள் அனைவரின் ஆசிகளும் இவர்களுக்குப் பரிபூரணமாகக் கிடைத்திருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

வாள்பயட்டில் கலந்துகொண்ட நான்கு ஜோடிகளின் வீச்சு முறைகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்ததை இங்கு குழுமியிருக்கும் மற்ற சட்டர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். இதெல்லாம் உங்களுக்கு ஒரு பாடம்.

போட்டியிட்ட எண்மரில் நால்வர் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களுள் இருவர் காந்தளூர்ச் சாலையைச் சேர்ந்தவர்கள். மற்ற இருவர் கழிக்குடிச் சாலையைச் சேர்ந்தவர்கள். அனைவருக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்த சுற்றுக்களைத் துவங்கு முன்பாகப் போட்டியிட்ட சட்டர்களுக்குச் சிறிது நேரம் ஓய்வு தேவை என்பதால் போட்டிகள் மூன்று நாழிகைகள் கழித்து ஆரம்பமாகும்."

"டாங்!"

மூழிக்குளத்து ஆசான் பேசி முடித்ததும் அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்று கைதட்டிக் கரகோஷம் செய்து வெற்றி பெற்ற சட்டர்களுக்குத் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மிகுந்த களைப்புடன் மைதானத்தில் இருந்த நண்பர்களைச் சோழ வீரர்களின் உதவியுடன் விடுதிக்குக் கொண்டு வந்து சேர்த்தார் தம்புராட்டியார். தண்ணீரில் எலுமிச்சைச்சாற்றைப் பிழிந்து கொடுத்து இருவரையும் குடிக்கச் செய்தார். வாள்பயட்டில் இருவருக்கும் பெரிதாக

உடலில் காயங்கள் ஏற்படவில்லை என்பது அவருக்கு ஆறுதலாக இருந்தது.

அடுத்ததாக நடைபெற இருந்த சுற்றுக்களில் இருவருக்கும் பெருஞ்சோதனை காத்திருந்தது என்பதை அப்போது அவர் அறியவில்லை.

56. குருக்ஷேத்திரம்



"அரசே!"

"சொல்லுங்கள்."

"பட்டதிரியின் தம்பியர் இருவரும் வாள் சுழற்றும் முறையைக் கவனித்தீர்களா?"

"இல்லை. எனது கவனம் முழுவதும் பரமனின் மீதே நிலைத்து விட்டது. எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"அது.. எப்படிச் சொல்லுவதென்றே தெரியவில்லை. அவர்கள் உடலின் இயக்கமே சற்று அசாதாரணமானதாக அபரிமிதமான வேகம் கொண்டதாகத் தோன்றியது."

கவலை தோய்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்த பல்லவராயரை அருள்மொழிவர்மர் ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்தார்.

"தாங்கள் கூறவருவதை விளக்கமாகச் சொல்வீர்களா?"

"இத்துணை சிறப்பான வாள்சுழற்சியையும் மோதலையும் நான் எனது வாழ்நாளில் கண்டதில்லை. மாறி மாறி மைதானத்தின் நாற்புறங்களிலும் எனது கவனத்தைச் செலுத்தி நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அதில் இருவரின் வேகம் மட்டும் அசாதாரணமாக இருந்தது போல் தோன்றியது. குறிப்பாக் காந்தளூர் பட்டதிரியின் இளையதம்பி ஒருவித அமானுஷ்யமான ஆவேசத்துடன் போரிட்டான்.

அத்தனை நேரம் இடைவிடாமல் வாள் சுழற்றியதற்கு அவன் மேனியிலிருந்து வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஓடவில்லை. சொல்லப்போனால் அவனது நெற்றியில் நீர்த்துளிகள் திரளவேயில்லை. உடலெங்கிலும் மெல்லிய ஈரம்

படிந்திருந்ததுடன் சரி. சுழற்சிகள் முடிந்ததும் நமது வீரர்கள் இருவரும் நிலத்தில் அமர்ந்துகொண்டு விட்டார்கள். அத்தனை தூரம் அவர்களின் சக்தி உறிஞ்சப்பட்டிருந்தது. ஆனால் பட்டதிரியின் தம்பியர்களோ ஒன்றுமே நடவாதது போல் வாளைச் சுமந்துகொண்டு கம்பீர நடைநடந்து மைதானத்திலிருந்து வெளியேறினார்கள். இத்தகைய அபரிமிதமான சக்தி அவர்களுக்கு எப்படிக் கிடைக்கிறது? இத்தனை சக்தி மிகுந்தவர்களுடன் நமது வீரர்கள் மோதினால் அவர்களால் ஜெயிக்க முடியுமா?"

அருள்மொழிவர்மரின் முகம் மிகுந்த சிந்தனையைக் காட்டியது. மைதானத்தில் பட்டதிரியின் தம்பியர் இருவரும் வந்து நின்றபோதே அவர்களை முழுவதுமாக அவதானித்திருந்தார். குறிப்பாகப் பல்லவராயர் குறிப்பிடும் அந்த இளையவன்.. அவன் நின்றிருந்த அசாதாரணமான தோரணை.. ஓரிடத்திலும் நிலைபெறாமல் அங்குமிங்கும் அலைந்த பார்வை.. முரட்டுத்தனமாக முகம் முழுவதையும் ஆக்கிரமித்திருந்த கருத்த மயிர்.. உஸ்.. உஸ்..ஸென்ற நீண்ட மூச்சுக்கள்.. அவன் பெயர் அச்சுதன் என்றுதானே குறிப்பிட்டார்கள்?

அச்சுதன் ஏதோ இடைவிடாத சஞ்சலத்தில் அல்லது கோபத்தில் இருந்ததுபோல் தோன்றியது. யார் மீது கோபம்? இந்த ஒட்டு மொத்த உலகத்தின் மீதா?

அவன் இயல்பாக இல்லை. அசாதாரணமான வேகத்துடன் இருக்கிறான். அமானுஷ்யமான சக்தியைப் பிரதிபலிக்கிறான். ஆனால் நிம்மதியின்றிக் காணப்படுகிறான். அச்சத்துடன் அலைந்து கொண்டிருக்கிறான். அப்படி என்ன அச்சம்? தெரியவில்லை.

பட்டதிரியின் இன்னொரு தம்பியும் இதே வேகத்துடனும் சக்தியுடனும்தான் காணப்படுகிறான். ஆனால் சஞ்சலத்தில் இல்லை. அவனது விழிகள் நிலைகொள்ளாமல் தவிக்கவில்லை. உதடுகளில் எப்போதும் மெல்லிய புன்னகை இருக்கிறது. நடையில் தைரியம் இருக்கிறது. உலகத்தைப் பார்க்கும் பார்வையில் நட்பு இருக்கிறது. அவனிடத்தில் எந்தச் சிக்கலும் இல்லை என்பது பார்த்த மாத்திரத்தில் புரிந்து போகிறது.

ஆக, இளையவன்தான் ஏதோ சிக்கலில் இருக்கிறான். பட்டதிரியும் அவனைத்தான் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரது கண்களில் கவலை

படிந்திருப்பதைக் காலையிலேயே கவனித்திருந்தார். தமது வருகைதான் அதற்குக் காரணம் என்று முதலில் தோன்றியது. ஆனால் இப்போது அப்படித் தோன்றவில்லை. இங்கு வேறு ஏதோ கண்ணுக்குத் தெரியாத சிக்கல்கள் உருவாகியுள்ளன. அது என்னவென்று தெரியவில்லை.

"மாராயர் எங்கே?"

"தம்புராட்டியாரைப் பின்தொடர்ந்து சென்றார். அவர்கள் தங்கியிருக்கும் விடுதியின் பக்கம் சென்றிருப்பார் என்று தோன்றுகிறது."

"அவர் வந்ததும் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள். நான் வளாகத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்."

பட்டதிரியைத் தனிமையில் சந்தித்துப் பேசினால் என்ன? என்று திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. அந்த யோசனையை சிரமப்பட்டுப் புறக்கணித்தார். அதற்கு இது சரியான தருணமல்ல. இன்னமும் சற்றுப் பொறுமையுடன் இருந்தாக வேண்டும் என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

இவ்வாறு அருள்மொழிவர்மர் யோசித்துக் கொண்டிருந்த அதே வேளையில் பட்டதிரிக்கும் சோழப் பேரரசரைப் பிரத்யேகமாகச் சந்தித்தால் என்ன? என்று தோன்றியது. காந்தளூரில் உருவாகியிருந்த நிலைமை எங்கோ எப்படியோ அவரது கைமீறிப் போய்க் கொண்டிருப்பதாக எண்ணம் ஏற்பட்டது. ஆனால் அருள்மொழி நம்மைச் சந்திக்க ஒப்புக்கொள்ள வேண்டுமே? பரமவரியாகக் கருதும் நம்மை அவன் தனிமையில் சந்திக்க ஒப்புக்கொள்ளவில்லையென்றால் அவமானம் நமக்குத்தான் அல்லவா?

அவரும் அந்த யோசனையை சிரமப்பட்டுத்தான் நிராகரித்தார். போட்டிகள் நல்லபடியாக முடியட்டும். அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைத்தார்.

அந்த இருவரின் சந்திப்பு மட்டும் உரிய நேரத்தில் நிகழ்ந்திருக்குமானால்...

ஒருவருக்கும் தெரியாமல் வேணாட்டின் எல்லைக்கு வெளியே இரகசியமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு பெரும் காரியம் கணிக்கப்பட்டிருக்கலாம்.

காந்தலூர்ச் சாலைக்கு நேரவிருந்த பயங்கர அபாயம் தடுக்கப்பட்டிருக்கலாம்.

இந்தக் கதையையும் நாம் வேறு மாதிரியாக எழுதும்படி நேர்ந்திருக்கலாம்.

ஆனால் விதியென்று ஒன்று இருக்கிறதே?

அதனால் அந்தச் சந்திப்பு நடைபெறவேயில்லை. ஏதோ ஒரு தயக்கத்தினால் ஏதோ ஒரு குழப்பத்தினால் இருவருமே அன்று காலை ஒருவரையொருவர் சந்திக்க முயலவேயில்லை.

மேற்குக் கடற்கரைக்கு வெகுதூரத்தில் - கடலில் - ஒரு புயல் வேகவேகமாக மையம் கொள்ளத் துவங்கியிருந்தது.

* * * * * * * *

அடுத்த மூன்றரை நாழிகை நேரத்தில் மீண்டும் கொடிமரத்தினருகே அனைவரும் கூடினார்கள். இந்த முறை ஆசான்களுக்கருகே தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு சட்டர்கள் மட்டுமே தெரிந்தார்கள்.

உடல் முழுவதும் வியர்வை அபரிமிதமாகப் பெருக்கெடுத்திருந்ததால் நண்பர்களிருவரும் இரண்டாவது முறையாக ஸ்நானம் செய்து மீண்டும் உடைகளை மாற்றிக்கொண்டு வந்திருந்தார்கள். அதனால் இழந்துவிட்ட புத்துணர்ச்சியை ஓரளவிற்கு மீட்டுக்கொள்ள முடிந்தது.

மூழிக்குளத்தார் "ம்ஹூம்" என்று தொண்டையைச் செருமிக் கொண்டார்.

"கலமறுக்கும் போட்டிகளின் அடுத்த சுற்றுக்கள் ஆரம்பமாக இருக்கின்றன. குடவோலைக் குடம் எங்கே? யாராவது களரியிலிருந்து எடுத்து வாருங்கள்."

வேறு ஏதோ சிந்தனைகளில் அதுவரை தன்னை இழந்திருந்த பட்டதிரிக்குச் சொரேல் என்றது. என்ன? குடவோலையா? குடவோலை எதற்கு? இருப்பதோ நான்கு பேர் மட்டும்தானே?

அவர் மூழிக்குளத்தாரின் காதுகளுக்கருகே ஏதோ அவசர அவசரமாகச் சொல்வதையும் அதனை மறுத்து மூழிக்குளத்தார் தலையை அப்புறமும் இப்புறமும் ஆட்டுவதையும் அனைவருமே கவனித்தார்கள். பட்டதிரியின் முகத்தில் பெரும் அதிருப்தி பரவியது. சே! கிழவன்

இத்தனை தூரம் பிடிவாதம் பிடிக்கிறானே? இந்த விவகாரத்தை முன்னரே கணிக்கத் தவறிவிட்டோமே?

குடம் எடுத்துக்கொண்டு வரப்பட, அதில் உள்ள மற்ற பெயர்களை எடுத்துவிட்டு நால்வரின் பெயர்கள் கொண்ட முறிகளை மட்டும் விட்டுவிட்டார் ஆசான். சென்ற முறை சட்டர்களைத் தேர்ந்தெடுத்த சிறுமி எங்கோ மறைந்து விட்டதால் இந்த முறை சிரமப்பட்டு ஒரு சிறுவனைத் தேற்றிக்கொண்டு வந்தார்கள். அந்தப் பாலகன் அனைவரையும் பார்த்துத் திருதிருவென்று விழித்துக் கொண்டு நின்றான்.

"என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? குடத்தில் கையை விட்டு ஒரே ஒரு முறியை மட்டும் எடு!"

அவனுக்கு என்ன தோன்றியதோ - ஓ!வென்று பெருங் குரலெடுத்து அழத்துவங்கிவிட்டான். கூட்டத்தில் நின்றிருந்த அவனது அன்னை ஓடோடி வந்து அவனை அணைத்துக் கொண்டு ஆசானை வெட்டிவிடுவதுபோல் ஒரு பார்வை பார்த்தாள். அப்புறம் அவனைச் சமாதானப்படுத்தி உக்கிராண அறையிலிருந்து ஒரு வெல்லக்கட்டியைக் கையூட்டாகக் கொடுத்து ஏகக் களேபரங்களெல்லாம் நடந்து முடிந்தபின் ஒரு வழியாக முதல் பெயர் தேர்வு செய்தான்.

"முதல் பெயர் - கழிக்குடிப் பெருஞ்சாலையைச் சேர்ந்த பரமன் மழபாடி. அடுத்த ஓலையை எடு அப்பா!" - இம்முறை மூழிக்குளத்தார் மிகவும் பவ்யமாக அந்தச் சிறுவனை வேண்டிக் கொண்டார்.

"அடுத்த பெயர் - கழிக்குடிப் பெருஞ்சாலையைச் சேர்ந்த கம்பன் மணியன்!"

அங்கு நின்றிருந்த சட்டர்கள் நால்வருக்கும் தலை சுழன்றது. என்ன? இளையவர் மழபாடியாருடன் மோதியாக வேண்டுமா? அப்படியெனில்? வாமனன் அச்சுதனுடன் இன்னொரு புறம் மோதியாகவேண்டும் என்றுதானே அர்த்தமாகிறது? இதென்ன கூத்து?

பட்டதிரியின் முகம் அஷ்டகோணல்களை அடைந்திருந்தது. மூழிக்குளத்துக் கிழவன் சரியான தருணம் பார்த்து நம்மைக் கழுத்தறுத்து விட்டான்! நாம் எது நடக்கக்கூடாது என்று நினைத்தோமோ அது நடந்து விட்டது.

"என்ன? என்னையே பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்?" என்று வினவினார் மூழிக்குளத்தார்.

"அது.. ஆசானே! ஒரே சாலையைச் சேர்ந்த இருவருமா இப்போது மோதியாக வேண்டும்?"

"உத்தரவு அப்படித்தானே வந்திருக்கிறது?" - ஆசானின் குரலில் கடுமை ஏறியிருந்தது. இந்த வேண்டாத விவாதம் இப்போது எதற்கு? என்கிற அர்த்தம் அதில் பொதிந்திருந்தது.

குடவோலையிலிருந்து சிறுவர்கள் தேர்ந்தெடுக்கும் பெயர்களை தெய்வத்தின் உத்தரவாகவே கருதும் பழக்கம் அந்நாளில் இருந்தது. அந்த உத்தரவு எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி. அதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

"அதற்கில்லை ஆசானே! ஒரே சாலையைச் சேர்ந்த இரண்டு சட்டர்கள் எப்படி ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு..."

"அதெல்லாம் ஒரு பிரச்சனையே அல்ல. வந்திருக்கும் உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவர்களின் கடமை. இதில் விவாதத்திற்கு இடமேயில்லை. சட்டர்களே! இந்தச் சுற்றில் உங்களுக்கான ஆயுதங்களை நீங்களே களரியிலிருந்து தேர்வுசெய்து கொள்ளலாம். ஆனால் மரத்தினாலான ஆயுதங்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும். உலோக ஆயுதங்களை இனியும் பயன்படுத்தக்கூடாது."

மழபாடியாரும் மணியனாரும் ஒருவரையொருவர் மிகுந்த சங்கடத்துடன் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் இருவரில் ஒருவரே இறுதிச் சுற்றுக்குச் செல்லப் போகிறார்கள்! அதிலும் ஒருவரை இன்னொருவர் வீழ்த்தி விட்டு. ஆண்டவா! இதென்ன சோதனை?

"நீங்கள் களரிக்குச் செல்லலாம்."

"டாங்!"

நண்பர்கள் இருவரும் முன்செல்ல அவர்களைப் பட்டதிரியின் தம்பியர் இருவரும் பின்தொடர்ந்தார்கள். இந்த நால்வருடனும் காந்தளூர்ச் சட்டர்கள் இருவரும் சேர்ந்து நடந்து வந்தார்கள்.

களரியில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஹோமம் சிறிது நேரத்துக்கு முன்னரே முடிவுற்றிருந்ததால் அங்கே பெரும்

புகைமூட்டம் சூழ்ந்திருந்தது. பூத்தாரைக்கருகில் ஆயுதங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் மரத்தினாலான ஆயுதங்களை மட்டும் தேர்வு செய்தாக வேண்டும்.

எதற்காக மர ஆயுதங்கள் மட்டுமே என்று கூறுகிறார்கள்? ஏனெனில் இனி நடைபெறப்போகும் சுற்றுக்கள் உக்கிரமானவை. அவற்றில் உலோக ஆயுதங்களைப் பயன்படுத்தினால் போட்டியாளர்களுக்குக் கடுமையான காயங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு. அல்லது அதைவிட ஆபத்தான அசம்பாவிதங்கள்கூட ஏற்படலாம். அதனைத் தவிர்க்கும் பொருட்டே அந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

சரீரவடி[80] என்றழைக்கப்படும் நீண்ட மூங்கில் கம்பைக் கரங்களில் எடுத்துக்கொண்ட மழபாடியார் இளையவரைப் பொருள் பொதிந்த பார்வை பார்த்தார். அவர்கள் இருவருக்குமே அந்த நீண்ட தடியைச் சுழற்றுவதில் ஆர்வம் அதிகம். கழிக்குடியில் பல நாட்கள் இந்தத் தடி சுழற்றுதல் நாழிகைக் கணக்கில் நீண்டிருக்கின்றன. தம்புராட்டியாரே தலையிட்டுப் போதும். நிறுத்திவிட்டு வேறு ஏதாவது பயிலுங்கள் என்று சொன்னதுண்டு.

அப்போது அது வெறும் பயிற்சி. விளையாட்டு. இப்போது நிலைமை அப்படியல்ல. இருவரில் ஒருவரே இந்தச் சுற்றுக்களில் தேர்ச்சி பெறுவார். தர்மசங்கடமான நிலைமை.

மழபாடியாரைப் பின்பற்றி இளையவரும் அதே போன்ற தடியை எடுத்துக்கொண்டார்.

அவர்களுக்கு அடுத்தபடியாக வந்த அச்சுடன் ஓட்டம்[81] என்றழைக்கப்பட்ட பயங்கர வளைந்த கொம்பு போன்ற ஆயுதத்தைத் தேர்ந்தெடுத்தது வாமனருக்கு அதிர்ச்சியாக இருந்தது. சரீரவடியின் தாக்குதல்கள் அத்தனை ஆபத்தானவை அல்ல. ஆனால் ஓட்டம் அப்படியல்ல. படாத இடத்தில் பட்டுவிட்டால் ஆபத்து.

---

[80] ஆளுயரத்திற்கு அமைந்திருப்பதால் இந்தப் பெயர். இப்போது இதனைக் கெட்டுக்கரி என்றழைக்கிறார்கள்.

[81] இப்போது ஒட்டா என்றழைக்கப்படுகிறது.

தம்மோடு உடன்பிறந்தவனுடன் போராடப் போகிறோமே என்கிற மனக்கிலேசம் இவனுக்குச் சிறிதுகூட இல்லையோ? என்று தோன்றியது. ஆனது ஆகட்டுமென்று வாமனரும் அதே போன்ற ஆயுதத்தை எடுத்துக் கொண்டார்.

* * * * * * * *

ஆயுதங்களுடன் திரும்பிய சட்டர்களைக் காந்தளூர் மைதானம் ஆஹாகாரத்துடன் எதிர்கொண்டது. பட்டதிரியின் தம்பியர் இருவரும் மணியம்பலத்திற்கு அருகில் அமைந்திருந்த வடமேற்குப் பகுதிக்குச் செல்ல, நண்பர்களிருவரும் தென்மேற்குப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

தம்முடன் நடந்து வரும் கம்பன் மணியனாரைப் பார்க்கையில் மழபாடியாருக்குக் குழப்பமாக இருந்தது. என்ன இருந்தாலும் அவர் தொண்டை மண்டலத்தின் சேனானி நாயகம். தாமோ சோழ சைனியத்தின் கடைநிலை ஊழியன். வெறும் தரைப்படை வீரன் மட்டுமே. ஆனால் ஒரு நாள்கூட மணியனார் தம்மை மரியாதைக் குறைவாக நடத்தியதில்லை. தமக்குச் சமமானவனாக உற்ற நண்பனாகவே நடத்தியிருக்கிறார். அத்தகையவருடன் இத்தனை பெரிய போட்டிகளில் மோதி ஜெயிக்கப் போகிறோமா? அவரது நட்புக்கு நாம் காட்டும் நன்றி இதுதானா? பேசாமல் தடியைச் சுழற்றுவதுபோல் போக்குக் காண்பித்துவிட்டு அவருக்காக இந்தப் போட்டியை விட்டுக் கொடுத்து விடுவதுதான் சரியாக இருக்குமா?

ஆனால் அப்படிச் செய்வது அறமாகுமா? என்று அடுத்த கேள்வி கூடவே எழுந்தது. மகத்தான கலமறுக்கும் போட்டிகளில் பண்டைய ஆசான்கள் ஆன்மவடிவில் எழுந்தருளியிருக்கும் இந்தப் புனிதக்களத்தில் அவ்வாறு பொய்யாக நடந்துகொள்வது நெறியாகுமா? நியாயமாகுமா?

கழிக்குடிப் பெருஞ்சாலையில் அன்றொருநாள் அருள்மொழிவர்மர் மொழிந்த ஆப்தவாக்கியங்கள் தவிர்க்கவே முடியாமல் அவரது நினைவிற்கு வந்தன.

"வீரர்களே! நமது கண்ணெதிரே தெரியும் இந்தக் களரி மண் வெறும் களமல்ல. இதுதான் வாழ்க்கை. இந்தக் களத்தில் சில நேரங்களில் நமக்கு மிகவும்

பிரியமானவர்களுடன் மிக நெருங்கிய பந்துக்களுடன் நமது நண்பர்களுடன் நமது சகோதரர்களுடன் நமக்கு வித்தை கற்றுத் தந்த ஆசானுடனும்கூட சமயத்தில் மோத வேண்டியிருக்கிறது!"

எதனை மனதில் வைத்துக்கொண்டு அன்று அப்படிச் சொன்னாரோ? அந்த நிலைமை இப்போது வந்து விட்டது.

"களத்தில் நிற்கும் தூயவீரனுக்குப் பற்றுதல் எதுவுமில்லை. அவனுக்குச் சொந்த பந்தங்களில்லை. உற்றார் உறவினர் எவருமில்லை. அவன் எவரையும் ஆள்பவனில்லை. எவருக்கும் அடிமைப்பட்டவனுமில்லை. அவன் சகல உறவுகளையும் கடந்து விட்டவன். சகல உணர்வுகளைத் துறந்து விட்டவன். ஞானி. அவன் தனது கடமையைச் செய்வதற்காக மட்டுமே களத்தில் நிற்கிறான். வீரனுக்கு வீரமே தர்மம். மறமே அவனது அறம்!"

ஆம். சுத்த வீரனுக்கு வீரம் மட்டுமே தர்மம். மறமே அறம்.

தம்முடன் நடந்து வந்துகொண்டிருந்த மணியனாரின் தோள்களில் கரங்களைப் பதித்தார் மழபாடியார். இரத்தினச் சுருக்கமாக அவரது எண்ணங்களை இரண்டே வரிகளில் வெளிப்படுத்தினார்.

"களத்தில் என்னை எதிர்ப்பதில் உங்களுக்கு எந்தத் தயக்கமும் வேண்டாம். நினைவில் கொள்ளுங்கள். சுத்த வீரனுக்கு வீரம் மட்டுமே தர்மம். மறமே அறம்!"

தமது வீரர்கள் இருவரும் களத்தை நோக்கிக் கம்பீரமாக நடந்து செல்வதையும் களத்தை நெருங்கும் வேளையில் மழபாடியார் தமது நண்பரின் தோள்களில் கரத்தைப் பதித்து ஏதோ கூறுவதையும் பேரரசர் கண்டார். அவருக்கும் கழிக்குடி நினைவுகள் மனதில் வந்து மோதின.

அவரது வதனத்தில் மெல்லிய புன்னகை மலர்ந்தது.

* * * * * * * *

சரீரவடி பொதுவாக அத்தனை ஆபத்தான ஆயுதமாகக் கருதப்படுவதில்லை. சொல்லப்போனால் ஆயுதப்பயட்டில் ஈடுபடும் மாணவர்கள் முதன்முதலில் பயிலத் துவங்கும் ஆயுதங்களுள் அதுவுமொன்று.

ஆனால் அன்று காந்தளூர்க் களத்தில் மணியனாரும் மழபாடியாரும் மோதிக் கொண்டதைப் பார்த்தவர்கள் சரீரவடியைப் பற்றிய தங்களது எண்ணங்களை முழுமையாக மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். "படார்!" "படார்!" என்று அந்த நீண்ட தடிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்ட வேகமும் ஒருவரையொருவர் தாக்குவதில் அவர்கள் காட்டிய முனைப்பும் பிரமிக்கத்தக்கதாக இருந்தன.

தடித்தாக்குதல்களில் முதலில் ஒருவர் மற்றவரைத் தாக்க முயல அவர் தம்மைத் தற்காத்துக் கொள்ள முயற்சிப்பார். சிறிது நேரம் கழிந்ததும் அந்த இரண்டாமவர் முதல்வரைத் தாக்க முயற்சிக்க, அதே தற்காப்பு கடைபிடிக்கப்படும். சண்டை சூடேறியபின் இருவருமே ஒருவரையொருவர் படீர்! படீரென்று அடித்துத் தாக்கிக்கொள்வார்கள்.

ஆனால் அன்றைய களத்திலோ சண்டை துவங்கிய சில கணங்களிலேயே ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் நிலை தோன்றிவிட்டது. அத்தகைய கம்பு சுழற்றும் பயிற்சிகளை அவர்கள் கழிக்குடியில் பலகாலம் பயின்றதனாலும் ஒருவரின் வேகத்தை மற்றவர் நன்றாகப் புரிந்து வைத்திருந்ததனாலும் அது சாத்தியமாயிற்று.

சரீரவடியின் இரண்டு பக்கங்களையும் முழுமையாக உபயோகித்து மழபாடியார் இளையவரை ஆவேசமாகத் தாக்கிக்கொண்டிருக்க, இளையவரோ பெரும்பாலும் தடியின் இடப்புறத்தால் தம்மைத் தற்காத்துக்கொண்டு வலப்புற முனையால் மிகுந்த வேகத்துடன் நண்பரைத் தாக்கிக் கொண்டிருந்தார். இருவருமே மைதானத்தின் மணலும் மண்ணும் தடிநுனியில் படாதவண்ணம் பார்த்துக்கொண்டார்கள். அப்படிப் பட்டுவிட்டால் குப்பென்று புழுதி கிளம்பி மற்றவர்களின் கண்களை மறைக்கும் என்பதுதான் அதற்குக் காரணம். ஆகவே அவர்களின் மோதல் தீவிரமாக நடைபெற்றாலும் ஒரு எல்லைக்குள் ஒரு மரியாதையுடன் நடந்து கொண்டிருந்தது.

* * * * * * * *

இதற்கு நேர்மாறாக மைதானத்தின் வடமேற்குப் பகுதியில் அச்சுதனுக்கும் வாமனருக்கும் நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தமோ மிகுந்த உக்கிரத்துடனும் ஈவிரக்கமற்ற தன்மையுடனும் நடந்தேறிக்கொண்டிருந்தது.

மிகுந்த ஆண்மையும் பொறுப்புணர்வும் நிதானமும் நிரம்பிய இளைஞரான வாமனன் நம்பூதிரி அந்தக் களத்தில் பெருத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டார். அச்சுதனின் மிகுந்த கண்களைப் பார்க்கும்போதெல்லாம் அவரது உள்ளம் கோபப்படாமல் வருத்தத்தில் ஆழ்ந்தது. சின்னஞ்சிறு பிராயம் முதல் தம்முடன் வளர்ந்து வந்தவன் தமக்கெதிராகவே ஆயுதமேந்தி இத்தனை ஆவேசமாகத் தன்னைத் தாக்க முற்பட்டு விட்டானே? சந்தர்ப்பம் இத்தனை இக்கட்டாக அமைந்துவிட்டதே என்று அவன் வருத்தப்படுவதைப்போல் தெரியவில்லையே? கடைசியில் இப்படியா இந்தப் போட்டிகள் முடியவேண்டும்?

வாமனரின் எண்ணவோட்டங்களுக்கு நேர்மாறாக அச்சுதனின் எண்ணங்கள் அமைந்திருந்தன. நரசிம்மத்தையா மறுத்தலித்தாய்? அந்த அற்புதமான பிரயோகத்தையா உதாசீனப்படுத்தினாய்? அதன் சக்தி என்ன என்பதை இப்போது உனக்குப் பிரத்யட்சமாகக் காண்பிக்கிறேன் பார்! அதன் பிரம்மாண்டமான விஸ்வரூபத்தை இங்கே இந்தக் களத்தில் வரவழைத்துக் காட்டுகிறேன் பார்! நரசிம்மம் எனது உடலில் பரிபூரணமாக ஆவிர்பவிப்பதைக் கண்டு பொறாமைப்பட்ட மூத்தவருக்கும் இதன் உண்மையான வேகத்தைக் காட்டுகிறேன் பார்! என்றெல்லாம் அவரது மனம் கருவிக் கொண்டிருந்தது.

இருவருமே ஆபத்தான ஆயுத்தினால் ஒருவரை யொருவர் பாய்ந்து பாய்ந்து தாக்கிக் கொண்டார்கள். சமயத்தில் அவர்களின் பாய்ச்சல் ஆறு ஏழு அடிக்குமேல் செல்வதைக் கூட்டம் பயத்துடன் கவனித்துக் கொண்டிருந்தது.

* * * * * * * *

தமது கரங்களின் சக்தி குறைந்து வருவதை மழபாடியார் அவதானித்தார். எதிர்த்தாக்குதலை நிறுத்திக் கொண்டு சற்று நேரம் தற்காப்பில் மட்டும் கவனம் செலுத்தினார். மணியனாரின் வீச்சில் வேகம் குறையவேயில்லை. படீர்! படீரென்று அவரது கம்பு ஆவேசமாக அவரை நோக்கிப் பறந்து வந்து தாக்கிக் கொண்டிருந்தது. இப்படியே தொடர்ந்து தாக்க விட்டுக் கொண்டிருப்பது ஆபத்து என்று தோன்றியது.

மிச்சமிருக்கும் உடலின் பலமனைத்தையும் திரட்டி ஒரு மிகப்பெரிய தாக்குதல் நடத்தியாகவேண்டும். ஒரே ஒரு அடி. ஒரே ஒரு தாக்குதல். ஆனால் அது சரியான தருணத்தில் நடைபெற வேண்டும். துல்லியமாக நடைபெற வேண்டும். அப்போதுதான் அதற்குப் பலனுண்டு.

அந்தத் தருணம் எப்போது வரும்? தமது எதிராளியின் கவனம் சிதறினால் வரும்.

ஆனால் ஐம்புலன்களையும் ஒன்று குவித்து மனம் சிதறாமல் தம்மைத் தாக்கிக் கொண்டிருக்கும் நமது நண்பன் அதற்குச் சிறிதும் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறானே?

மழபாடியாரின் எண்ணங்களை மணியனாரும் யூகித்து விட்டார். எத்தனை முறை கழிக்குடியில் இவ்வாறு போரிட்டிருப்போம்? நண்பா! உம்மை எமக்கு நன்றாகத் தெரியும். நீர் எதிர்பார்க்கும் சந்தர்ப்பத்தை நாம் கொடுப்பதாக இல்லை.

மழபாடியாருக்குத் திடீரென்று இப்படிச் செய்தால் என்ன? என்றொரு எண்ணம் தோன்றியது. இதுவரை அம்மாதிரி அவர் கழிக்குடிப் பயிற்சிகளின் போது செயல்பட்டதில்லை. ஆனால் சிறு வயதில் பலமுறை தமது சொந்த ஊரான குருகாடியில் அதனைச் செய்திருக்கிறார். ஒரு வகையில் பைத்தியக்காரத்தனம்தான். மயிரிழை பிசகி விட்டால்கூட ஆபத்து. ஆனால் வேறு வழியில்லை. செய்துதான் ஆகவேண்டும்.

மணியனாரின் அடுத்த தாக்குதலை தடியைக் கொண்டு தடுத்தவர் அப்படியே அந்தத் தடியை மண்ணில் ஊன்றி ஒரே கணத்தில் ஆகாயத்தில் மேலேழும்பினார்! இளையவர் இந்த எதிர்பாராத செயலால் அதிர்ச்சியுற்றுத் தம்மைத் தற்காத்துக் கொள்ள விலகி நிற்க முயல.. மழபாடியாரின் வலது கால் அதற்குள் அவரது தோள்களைத் தாக்க.. அந்தத் தாக்குதலின் வேகத்தினால் தடுமாறி இளையவர் கீழே விழ..

சமாளித்துக்கொண்டு எழுவதற்குள் அவரது சரீரவடி காற்றில் பறந்தது!

கம்பன் மணியனாருக்கு ஒரு கணம் தாங்கமுடியாத பெருங்கோபம் எழுந்தது. ஆனால் அடுத்த கணமே மழபாடியார் ஓடிவந்து தம்மைக் கட்டிக்கொண்டதைக் கண்டதும் அந்தக் கோபம் சற்று குறைந்தது. என்ன தவறு? மழபாடியார் செய்ததில் என்ன தவறு இருக்க முடியும்?

சரீரவடித் தாக்குதலில் தேவைப்பட்டால் கால்களை உபயோகித்தும் தாக்கலாம் என்றொரு விதி இருக்கிறதே? என்ன, கழிக்குடியில் அவர் அவ்வாறு செய்ததில்லை. அதனால் இந்தத் தாக்குதலைத் தாம் எதிர்பார்க்கவில்லை. இப்படித் தடியை ஊன்றி வானில் பறக்கும் சாகசம் தம்மால் செய்யக்கூடிய வித்தையுமல்ல.

தோற்றுவிட்டோம்.

உற்ற நண்பன் தன்னுடைய அபரிமிதமான திறமையால் தம்மை வீழ்த்திவிட்டான். மிகுந்த கசப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் இதனை விழுங்கித்தான் ஆகவேண்டும். கலமறுக்கும் போட்டிகளில் இனிக் கம்பன் மணியன் கிடையாது.

எத்தனை முயன்றும் கண்களில் நீர் திரள்வதைத் தடுக்க முடியவில்லை. மகத்தான போட்டிகளில் கடைசிச் சுற்றுக்கு முன்பாகத் தோற்றுவிட்டோமே! என்கிற வருத்தம் அவரது உள்ளத்தில் படர்ந்தது.

ஆனால் அடுத்த கணமே அந்த எண்ணத்தை மற்றொரு எண்ணம் ஆக்கிரமித்தது. அதனை நினைத்தவுடன் அவரது உடல் மயிர்க்கூச்செறிந்தது.

இப்போது மழபாடியார் பட்டதிரியின் சகோதரர்களுள் ஒருவனை எதிர்கொண்டாக வேண்டும். அதாவது நரசிம்மப் பிரயோகத் தாக்குதலை நேருக்கு நேர் சந்தித்தாகவேண்டும்! ஆண்டவா! நம்மை வெற்றி கொண்டதன் மூலம் நண்பன் தமது உயிரையே அல்லவா பணயம் வைத்து விட்டான்?

இப்போது அவரது கண்களில் திரண்ட நீர் நண்பனுக்காகத் திரண்டது. அவன் எதிர்கொள்ளப்போகும் ஆபத்தை நினைத்து அவரது அடிவயிறு கலங்கியது. தம்மை நோக்கிப் பேரரசர் வருவதைக் கவனித்துவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டார் இளையவர்.

சற்று தூரத்திலிருந்து 'அம்மா!' என்றொரு பெருங்குரல் எழுந்தது. ஒரு கொடூரமான தாக்குதலில் வாமனன் நம்பூதிரி வீழ்த்தப்பட்டிருந்தார்.

57. காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி



வானில் மேகக் கூட்டங்கள் கூடின. கலைந்தன. பின் மீண்டும் கூடின. கதிரவன் எங்கோ காணாமற்போயிருந்தான். காற்றில் புழுக்கம் தெரிந்தது. தென்மேற்குக் கடலில் சிறு புயல் உருவாகியிருந்தது. அந்தப் புயல் மேலும் வீரியமடைந்து கரையைத் தாக்குமா? அல்லது அப்படியே பலமிழந்து போய்க் கடலோடு கடலாக அவிந்து அடங்கிவிடுமா? தெரியவில்லை.

தம்புராட்டியாரின் முறியில் சோழப்பேரரசர் தமது அணுக்கமான சுற்றத்துடன் வீற்றிருந்தார். அவருக்கெதிரே நண்பர்களிருவரும் எந்த உணர்ச்சிகளையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மௌனமாக நின்றிருந்தார்கள். தம்புராட்டியாரின் முகத்தில் கவலை எழுதி ஒட்டியிருந்தது.

மெல்லிய குரலில் நிதானமாகப் பேசத்துவங்கினார் அருள்மொழிவர்மர்.

"நண்பர்களே! இந்தப் போட்டிகளை இதுவரை நீங்களிருவரும் எதிர்கொண்ட விதம் மகத்தானது. இத்தனை தீவிரமான மோதலை எனது வாழ்நாளில் சிலமுறைதான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக இன்று நிகழ்ந்த இரண்டு சுற்றுக்களிலும் உங்களின் திறமை அபாரமாக வெளிப்பட்டது. தம்புராட்டியாரின் இடைவிடாத சீரிய பயிற்சிகளும் அவற்றை நீங்கள் ஒருமுகமாக மேற்கொண்ட விதமும்தான் உங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. ஆறு மாத காலத்தில் இரண்டு மகத்தான சோழ வீரர்களை கூர்தீட்டிச் செம்மைப்படுத்தியமைக்காக நானும் நமது தேசத்தவர்களும் மாளிகைப்புரத்து தேவியாருக்குப் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

வீரர்களே! வாழ்வில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருவது சகஜம். அதுதான் வாழ்க்கை. இரண்டையும் நாம் பற்றுதலின்றி ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நான் பல நாட்களுக்கு முன்பு கூறியதுபோல சுத்தமான வீரனுக்குப் பற்றுதல்கள் எதுவும் இருக்கக்கூடாது. தான் அடையும் வெற்றி தோல்வியைப் பற்றிய எண்ணங்களும் அதில் அடக்கம்தான்.

இன்னும் வேறுவிதமாக யோசித்துப் பார்த்தால் வெற்றி என்பதும் தோல்வி என்பதும் ஒருவித மாயையே. நமது வெற்றியை நாம் தீர்மானிப்பதில்லை. நமது எதிராளிதான் தீர்மானிக்கிறான். அவன் நம்மைவிட பலத்தில் குறைந்தவனாக இருக்கும்போது நாம் வெற்றியடைகிறோம். அவன் நம்மைவிட பலசாலியாக இருக்கும்போது நாம் தோல்வியைத் தழுவுகிறோம். ஆக நாம் யாருடன் மோதுகிறோம் என்பதே நமது வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கிறது. அதாவது நமது திறமை வெற்றியைத் தீர்மானிக்காமல் நாம் யாருடன் மோதுகிறோமோ அவரது திறமைதான் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கிறது.

சிறு பிராயத்தில் எனக்கு சங்கிராமப் பயிற்சிகளை அளித்த எனது முப்பாட்டனார் பராந்தகச் சோழர் இந்த ஒரு விஷயத்தை திரும்பத் திரும்பச் சொல்லி எனது மனதில் பதியவைத்தார். வாழ்நாள் முழுக்க வெற்றிகளையும் தோல்விகளையும் மாறிமாறிச் சந்தித்ததால் ஒரு நிலையான மனப்பக்குவத்தை அவர் அடைந்திருந்தார். அதன் மூலம்தான் இந்த மகத்தான தரிசனம் அவருக்குப் புரிபட்டது.

ஆகவே வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிப்பது நீங்களல்ல. உங்கள் எதிராளி மட்டுமே. ஆகவே ஒருவன் தான் அடையும் வெற்றியினால் மமதை கொள்வதோ தோல்வியினால் துவண்டு போவதோ அழகல்ல. ஒரு வகையில் அந்த வெற்றி தோல்வி அவன் சம்பாதித்ததல்ல. அது அவனது எதிராளி வழங்கிய பரிசு. அவ்வளவே.

ஆனால் களத்தில் அவன் தன்னுடைய திறமைகளை முழுமையாக வெளிப்படுத்துவது அவனது கரங்களில்தான் இருக்கிறது. அதனை அவன் செவ்வனே செய்தால் போதுமானது. பற்றுதல் தேவையில்லை. பலாபலன்கள் பற்றிய எண்ணங்கள் தேவையில்லை. நான் கூறுவது சரியென்று தோன்றுகிறதா?"

அருள்மொழிவர்மர் பேசத்துவங்குவதற்கு முன்னரே மழபாடியார் அந்த மனோநிலைக்கு ஏறக்குறைய வந்து சேர்ந்திருந்தார். மனிதனின் அத்தனை முயற்சிகளும் முடிவடையும் கணம் ஒன்றுண்டு. அந்தக் கணம் வந்து விட்டது. இனி நடப்பவை எவையும் அவரது கையில் இல்லை.

களத்தில் தன்னுடைய முயற்சிகளனைத்தையும் அவர் வெளிக்காட்டலாம். பயிற்றுவிக்கப்பட்டவை அனைத்தையும் உபயோகித்து எதிராளியைத் தாக்கலாம். அல்லது தற்காத்துக் கொள்ளலாம்.

ஆனால் தமக்குத் தெரியாத முற்றிலும் பரிச்சயமில்லாத மனிதசக்திகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று எதிரில் வந்து நிற்கும்போது ஒருவன் செய்யக்கூடியது என்ன? ஒன்றுமில்லை. நினைக்கவே சிரமமாக இருக்கிறது. ஆனால் அதுதான் உண்மை. உண்மையிலேயே செய்யக்கூடியது பெரிதாக ஒன்றுமேயில்லை.

ஒரே ஒரு ஆசை. ஒரே ஒரு நம்பிக்கை மிச்சமிருந்தது. நிதானமும் ஒழுங்கும் நிறைந்தவராகக் காணப்பட்ட பட்டதிரியின் மூத்த தம்பி ஒரு வேளை வெற்றிபெற்றுத் தம்முடன் மோதவருவாரோ எனும் ஆசை மனதின் மூலையில் இருந்தது. இப்போது அந்த வாய்ப்பும் இல்லை என்பது தெரிந்துவிட்டது. ஆவேசமும் மூர்க்கமும் நிறைந்த இளைய சகோதரனுடன்தான் அவர் மோதியாக வேண்டும். அவனது கண்களில் நிரந்தர வெறி தெரிகிறது. அசைவுகளில் ஸ்திரமின்மையும் ஆவேசமும் தெரிகின்றன. அவனது பலம் இயற்கைக்கு மீறியதாக அமானுஷ்யமானதாக இருப்பதாக சட்டர்களின் மத்தியில் பேச்சு நிலவுகிறது. அப்படிப் பட்டவனுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. நிச்சயம் இது விதிதான். சந்தேகமேயில்லை.

என்ன நடக்கும்? பலப்பல வருடங்களுக்கு முன் இதே களத்தில் தமது பாட்டனுக்கு நேர்ந்த அதே கதிதான் தமக்கும் நேரப்போகிறதோ? நாமும் அவரைப்போல் கைகளும் கால்களும் முடமாகி மிச்சமிருக்கும் வாழ்நாளைத் துன்பத்துடன் கழிக்கப்போகிறோமோ?

அல்லது நமது உயிரே பறிபோகப்போகின்றதா? அப்படிப் போய்விட்டால் அதுவும் நல்லதுதான். கைகால்கள் முடமாகி இல்லத்தில் கிடப்பதைவிட உயிர் போய்விடுவது

பேரரசர் கூறுவதைப்போல இது நமது கைகளில் இல்லை. இது நமக்கு அப்பாற்பட்டது. நமது புரிதலை மீறியது.

தம்புராட்டியாரும் எவ்வளவோ முயன்றார். அந்தப் பிரயோகத்தைப் பற்றிய சூத்திரத்தையும் அதன் எதிர்ப்

பிரயோகத்தையும் கண்டறிய ஆனமட்டும் முயன்றார். முடியவில்லை. விதி குறுக்கே வந்து நின்று விட்டது.

எல்லா பிரயோகங்களுக்கும் ஒரு எதிர்விதி இருப்பதுபோல் நரசிம்மத்திற்கும் ஒரு எதிர்ப்பிரயோகம் இருக்கிறது என்பது பலராம நம்பூதிரியின் அப்யாச கர்மண ஓலைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அந்த வாசகங்கள் தெளிவாக மனதில் பதிந்திருக்கின்றன. ஏனெனில் அந்தக் கடைசி வரிகளை அவரும் இளையவருமாகத் திரும்பத் திரும்பப் பலமுறை படித்துப் பார்த்திருந்தார்கள்.

தஸ்ய அநுபமயோகஸ்ய
நிஷ்க்ருதி: நேஹ வித்யதே
ததாபி கஸ்சன யோகோபி
ஸந்த்ருஷ்டோ ஹி மஹாத்மனா

"இணையற்ற இந்தப் பிரயோகத்திற்கு எதிரான செயல் இல்லை. ஆயினும் ஒரு மஹாத்மாவினால் ஒரு எதிர் பிரயோகம் கண்டறியப்பட்டது."

மூளிக்குளஸமாஹ்வேன
தீமதா தன்வினா புரா
ந்ருஸிம்ஹாகர்ஷணாக்யஸ்ய
ப்ரயோகஸ்ய சமஹ புனஹ

"முழிக்குளத்தின் பெயருடைய அறிவார்ந்த வில்லாளியினால் முன்பு நரஸிம்ஹாகர்ஷணம் என்னும் பிரயோகத்தை அடக்கும் முறை கண்டறியப்பட்டது."

அடக்கும் முறை. வெல்லும் முறை அல்ல! அடக்கும் முறை.

'அடக்கும் முறை' என்று குறிப்பிடப்படுவது என்ன? தெரியவில்லை. முதலில் நரசிம்மாகர்ஷணம் என்று குறிப்பிடப்படும் மூலசக்தி எது என்பதைப் புரிந்து கொண்டால்தானே அதனை அடக்கும் முறையைப் புரிந்து கொள்ள முடியும்?

இறைவனோடு நேரடியாகத் தொடர்புபடுத்தப் பட்டாலும் இதுவும் ஒருவகையான வர்மப் பிரயோகமாகத்தான் இருக்கவேண்டும். அதில் சந்தேகமில்லை.

ஆனால் உடலின் எந்த வர்மம் தாக்கப்படும் எவ்வாறு தாக்கப்படும் என்பதைப் பற்றிய அடிப்படை ஞானம் வேண்டும். அதன் பிறகுதான் அதனை அடக்குவதற்குள் செல்ல முடியும்.

உடலின் வர்மஸ்தானங்களை குறிப்பிட்ட விதங்களில் மட்டும்தான் தாக்கமுடியும். அதனைத் தூண்டுதல் என்பார்கள். மெய் தீண்டுதல் முதல் வகை. மிக அடிப்படையானது. அதற்கடுத்ததாக திருஷ்டி அல்லது நோக்கல். பிறகு ஊதல். அதன் பிறகு மெய்தீண்டாக் கால வர்மம்!

சட்டென்று ஒரு இயலாமை அவரைச் சூழ்ந்து கொண்டது. அது இயலாமைதான். எதையும் சிந்திக்க முடியாமல் எந்த விதத்திலும் செயலாற்ற முடியாமல் நிற்கும் நிலையை வேறெப்படிச் சொல்வது? அவரை அவராகக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. வேறு யாராவதுதான் காப்பாற்றியாக வேண்டும். அப்படி யாராவது இருக்கிறார்களா என்ன?

உச்சி வானில் திரண்டு நின்ற மேகங்கள் நிலை கொள்ளாமல் அங்குமிங்குமாய்த் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தன.

* * * * * * * *

கொடிமரத்தினருகே மூழிக்குளத்து ஆசான் வந்து நின்றார். அவரது கரங்களில் பெரிய தீபக்கால் இருந்தது. எவரோ திருமாமணியம்பலத்திலிருந்த மணியை சப்தித்தார்கள். "டாங்! டாங்!"கென்று அதன் பேரோசை நாலாபுறங்களிலும் பரவியது.

தீபக்காலுடன் மூன்று முறை கொடிமரத்தின் பீடத்தைச் சுற்றிவந்த ஆசான் அதனை உயர்த்திப் பிடித்தார். சட்டர்கள் அனைவரும் தலைக்கு மேல் கரம் குவித்தார்கள்.

ஆசானின் கண்கள் இறுக்க மூடின. பின் திறந்தன. தீபக்காலைத் தமது தலைக்கு மேல் உயர்த்தி ஏதோ மந்திரங்களை முணுமுணுத்தவர் அதனை அருகிலிருந்த சட்டனிடன் அளித்தார். அதனை அவன் பயபக்தியுடன் வாங்கி வளாகத்தைச் சுற்றி நடக்க ஆரம்பித்தான்.

ஆசானின் கரங்கள் உயர, சுற்றிலும் அமைதி படர்ந்தது.

"மஹாஜனங்களே! கலமறுக்கும் போட்டிகள் நன்முறையில் நிறைவேறி இறுதிக்கட்டத்திற்கு வந்து நிற்கின்றன. வானில் மேகங்கள் திரண்டு நிற்பதால் சற்று முன்னதாகவே போட்டிகளைத் துவங்கிவிட்டோம். ஒரு வேளை மழைபிடித்துக் கொண்டுவிட்டால் களரிக்குள் போட்டிகள் தொடர்ந்து நடைபெறும்.

இந்தச் சுற்றில் காந்தளூர்ச் சாலையின் அச்சுதன் நம்பூதிரியுடன் கழிக்குடிப் பெருஞ்சாலையின் பரமன் மழபாடி மோதப்போகிறார். இதில் தேர்ச்சி பெறும் சட்டனே அடுத்த இருபது வருடங்களுக்கு நான்கு சாலைகளுக்கும் கலநாயகமாகத் திகழ்வார். சாலை நாயகத்திற்குரிய சகல உரிமங்களும் பரிவட்டத்துடன் போட்டிகளின் முடிவில் அவருக்கு வழங்கப்படும்.

பண்டைய ஆசான்களின் பூரண அருளால் இதுவரை எந்தவித அசம்பாவிதங்களுமின்றிப் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இதுவரை போட்டிகளில் கலந்துகொண்ட சட்டர்கள் ஒருவரையொருவர் மதித்து அவர்களின் திறனை அங்கீகரித்து நடந்து கொண்டுள்ளனர். தற்போது நடைபெறப் போகும் இறுதிச்சுற்றிலும் அவ்வாறே இந்த இரண்டு சட்டர்களும் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்."

ஓரிரு கணங்கள் இடைவெளிவிட்ட ஆசான் அச்சுதனை ஒரு பொருள் பொதிந்த பார்வை பார்த்தார்.

"இந்தச் சுற்றில் ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் அங்கைப்போர் மூலமாகவே ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ள வேண்டும். மெய் தீண்டும்போது கவனமாக எச்சரிக்கையுடனும் பக்குவத்துடனும் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். சட்டர்கள் இருவரும் களத்திற்குச் செல்லலாம்!"

* * * * * * * *

தொம் தொம்மென்று அகங்காரத்துடன் கால்களைப் பூமியில் பதித்தபடி களத்தை நோக்கிக் கர்வத்துடன் நடக்கும் அச்சுதனைப் பட்டதிரி கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு மரியாதைக்காகக்கூட அவரிடம் வந்து ஆசிகோரவில்லை. உடன் பிறந்தவனை வீழ்த்திவிட்ட வருத்தமும் அவனிடத்தில் கிஞ்சித்தும்

தென்படவில்லை. எதோ ஒரு மமதை அவன் கண்களை முழுவதுமாக மறைத்துவிட்டதுபோல் தெரிந்தது.

அந்த மமதை யாரால் வந்தது?

தம்மால் வந்தது. தாம் கற்றுக் கொடுத்த வித்தையால் வந்தது.

ஒரு வேளை.. இப்படித்தான் நாமும் இளம் வயதில் இதே போன்ற மமதையுடனும் ஆணவத்துடனும் திகழ்ந்தோமோ? நாம் இன்று அனுபவிக்கும் இதே வருத்தத்தைத்தான் அன்று ஆச்சாரியர் இரவிநீலியும் அனுபவித்தாரோ?

மரணப்படுக்கையில் ஆசான் தெரிவிக்கும் சொற்களை ஒருவன் தனது வாழ்நாள் முழுக்க சதாசர்வகாலமும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அதைத்தான் தனது ஆப்த வாக்கியமாக அணுக்க மந்திரமாக வைத்திருக்க வேண்டுமென்கிற மரபு சாலைகளில் பயிலும் சின்னஞ்சிறிய பாலகனுக்குக்கூட மனப்பாடமாகத் தெரியுமே? ஆனால் இத்தனை பெரிய நிறுவனத்தின் ஆச்சாரியன் என்று சொல்லிக்கொள்கிற நானே எனது ஆசானின் இறுதி வார்த்தைகளை மனதில் கொள்ளவில்லையே? அதனைப் பொருட்படுத்தவில்லையே? அதற்குரிய முக்கியத்துவத்தை அளிக்கவில்லையே?

பிராயம் முதிர்ந்துவிட்டாலும் கம்பீரம் குறையாமல் மரணப்படுக்கையில் படுத்திருந்த இரவிநீலியின் முகம் அவருக்குக் காட்சியளித்தது. ஆசான் தமது வலது கரத்தின் ஆள்காட்டி விரலை உயர்த்தினார். அவரை நேருக்கு நேர் பார்த்தார். நெருப்புக் குழம்புபோன்ற அந்த விழிகளின் ஒளியை நேருக்கு நேர் பார்க்கவே முடியவில்லை! பட்டதிரி கண்களை மூடிக்கொண்டு தலையைக் குனிந்து கொண்டார்.

'நீங்களனைவரும் ஒன்றை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நான் கற்றுக்கொடுத்த வித்தைகளையும் பிரயோகங்களையும் தகுதியில்லாத சட்டர்களுக்கோ மற்றவர்களுக்கோ உபதேசித்தீர்களானால் அதனால் பெரும் அனர்த்தங்கள் ஏற்படும்!'

ஆசானே! மன்னித்துவிடுங்கள். பந்தமும் பாசமும் எனது கண்களை மறைத்துவிட்டன. என் கரங்களினால் வளர்ந்தவன்தானே? என்னை மீறி என்ன செய்துவிடப் போகிறான்? என்று நினைத்து ஏமாந்து விட்டேன்.

தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டவன் குழந்தையல்ல. தோழன் என்கிற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் போனேன். இந்தப் பழி பாவம் என்னை மட்டும் சேரட்டும். இதனால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு நான் மட்டுமே விலை கொடுத்தாக வேண்டும். நீங்கள் கொடுக்க வேண்டிய தண்டனையை எனக்குக் கொடுங்கள். மனப்பூர்வமாக அதனை ஏற்றுக்கொள்கிறேன்.

ஆசானுக்கருகில் மூத்தவர் வந்து நின்றார். அவரது முகத்தில் வருத்தம் எழுதி ஒட்டியிருந்தது. 'எத்தனையோ எச்சரித்தேனேயடா நாராயணா! நான் சொல்ல வந்ததைக் கடைசிவரை புரிந்து கொள்ளாமல் போனாயே?'

விதி அண்ணா! அதுதான் எனக்கு விதிக்கப்பட்டிருக்கும் விதி. அதனை நீங்கள் குறுக்கிட்டுத் தடுத்துவிடமுடியுமா என்ன? எனது தவறுகளுக்கான தண்டனையை நான் ஏற்கத்தானே வேண்டும்? அதற்கான விலையை நான் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? அதுதானே நியாயம்?

'விலையை நீ மட்டும் கொடுத்தால் பரவாயில்லையடா..'

ஐயோ! என்ன அண்ணா சொல்கிறீர்கள்? அப்படியென்றால்??

களத்தைக் கவனிக்காமல் மைதானத்தைக் கவனிக்காமல் எங்கோ அடிவானத்தை வெற்றுப்பார்வை பார்த்துக் கொண்டு எதையோ இடைவிடாமல் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பட்டதிரியை அருள்மொழிவர்மரின் கூரிய கண்கள் கவனித்து விட்டன. ஏதோ வில்லங்கம் நடந்து கொண்டிருக்கிறது என்கிற அவரது எண்ணம் உறுதிப் பட்டது. காலையிலேயே பட்டதிரியைச் சந்தித்துப் பேசியிருக்க வேண்டும். அல்லது அதற்கு ஒரு முயற்சியாவது செய்திருக்க வேண்டும். பழைய பகை ஒரு புறம் கிடக்கட்டும். இங்கு ஏதோ ஒன்று பட்டதிரியின் கைமீறிப் போய்க் கொண்டிருக்கிறது. அது என்னவென்று தெரியவில்லை. ஆனால் அது நமக்கும் கவலையளிக்கிறது. அவருக்கும் தெரியாமல் நமக்கும் தெரியாமல் எங்கோ ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்பது எவருக்கும் நல்லதல்ல. காலம் கடந்து விட்டது. இனி வேறு வழியில்லை. போட்டிகள் முடியும்வரை பொறுத்திருக்க வேண்டியது தான். அதற்குள் அசம்பாவிதங்கள் ஒன்றும் நடவாமலிருக்க வேண்டும்.

அருள்மொழிவர்மர் நினைத்தது முற்றிலும் சரி. அந்த வில்லங்கம் மலையனூரனான விக்கிரமாதித்ய வரகுணரின் தலைமையில் திரண்டு நின்ற நூறு நூற்றியிருபது வள்ளுவ நாட்டு வீரர்களின் உருவில் காந்தளூரை நோக்கி வேக வேகமாகப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தது.

* * * * * * * *

தம்முடைய பாதங்கள் தீண்டப்படுவதை தம்புராட்டியார் உணர்ந்தார். அவரது கரங்கள் 'உன்னி!' என்றபடி நீண்டன. தலைநிமிர்ந்த மழபாடியாரின் கன்னங்களின் அவரது கரங்கள் பதிந்தன. எத்தனை கட்டுப்படுத்திக்கொள்ள முயன்றாலும் கண்களில் நீர் திரள்வதைத் தடுக்க முடியவில்லை.

'அம்மா!'

அம்மா!

தாய்மை என்றொரு உணர்வு தனக்குள்ளும் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவே இறைவன் அனுப்பி வைத்த இரு ஜீவன்கள். அதில் ஒன்று தன்னைத்தானே பலி கொடுப்பதற்காகப் போகின்றது. அதனைத் தடுக்கத் திராணியில்லாதவளாக நிற்கிறேன்.

தெய்வமே! இந்தக் குழந்தையைக் காவு கொள்வதற்கு பதிலாக என்னை எடுத்துக்கொள்ளேன்? நான் இந்த உலகத்தில் இருந்து இனிமேல் பெரிதாக ஒன்றும் சாதிக்கப் போவதில்லை. கற்றுக்கொடுக்கவேண்டிய அனைத்து வித்தைகளையும் இந்த இருவருக்கும் கற்றுக்கொடுத்து விட்டேன். இப்போது கிளம்புவதில் நிஜமாகவே எனக்கு நெல்முனையளவும் வருத்தமில்லை. என்னுடைய உயிரை எடுத்துக்கொள். இவனை விட்டுவிடு.

ஆசான்களே! நீங்கள் இவனுடன் இருங்கள். இவனை ஆசீர்வதியுங்கள். உங்களுடன் நானும் இணைந்து கொள்கிறேன். இவர்கள் வாழ்வு முழுவதும் வழிகாட்டும் தேவதையாக நானும் வருகிறேன். தயவுசெய்து என்னை எடுத்துக்கொள்ளுங்கள்! இவனை விட்டுவிடுங்கள்.

உள்ளம் நெகிழ கண்களிலிருந்த நீர் கரகரவென்று வழிய மழபாடியார் விலகிச் செல்வதை அவர் உணர்ந்தார்.

வானில் பளீரென்று ஒரு மின்னல் மின்னிக் கடலில் இறங்கியது. நாற்புறங்களிலும் இருள் படிந்தது.

* * * * * * * *

அச்சுதனுக்கு வெறி தலைமுழுவதும் வியாபித்திருந்தது. கண்கள் இரத்தச் சிவப்பாகச் சிவந்திருந்தன. மனம் இடும் கட்டளைகளை இனிமேலும் உடல் கேட்டுக்கொண்டிருக்கப் போவதில்லை என்று தோன்றியது. நேற்றிரவு அளவுக் கதிகமாக உதிரம் குடித்து விட்டோமோ? தெரியவில்லை. ஆனால் கட்டுப்பாட்டை இழந்தாயிற்று. காலை முதலே ஏதோ ஒரு எல்லையற்ற சக்தி மின்னல்போல் உள்ளே பாய்ந்து கொண்டிருப்பதை கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. தானே தன்னை மீறி நடந்துகொள்ளும் விசித்திரமான நிலை!

இப்போது இதைப்பற்றியெல்லாம் மண்டையை உடைத்துக்கொண்டு யோசித்துக் கொண்டிருக்க முடியாது. போட்டிகளில் ஜெயித்தாக வேண்டும். ஜெயித்தேயாக வேண்டும்!

அன்று காலை முதல் நடந்த ஒவ்வொரு சுற்றிலும் எதிராளி அவனுக்குப் பணிந்து அவனது எல்லையற்ற சக்தியைத் தாங்கமுடியாமல் விழும்போது ஒருவிதமான மகிழ்ச்சியை உள்ளம் அனுபவித்தது. அடுத்த உயிர் துன்பமடையும்போது வலியால் கதறும் போது இரத்தம் சிந்தி 'அம்மா!' என்று அலறும்போது.. மனதில் கிளுகிளுப்பும் பரவசமும் படர்ந்தன. குறிப்பாக வாமனனைத் தோளுக்கருகில் அந்த வளைந்த ஆயுதத்தின் முனையினால் ஆக்ரோஷமாகக் குத்தியபோது ஏற்பட்ட ஆனந்தம்.. ஆஹா!

இது தவறான மனப்போக்கு என்று உள்ளத்தின் ஓரத்தில் ஒரு ஒற்றைக்குரல் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதன் குரலை கவனிக்க முடியாதபடி 'தாக்கு! கொல்! கிழி! உதிரத்தை உறிஞ்சு!' என்று ஏராளமான கட்டளைகளை யாரோ இடைவிடாமல் பிறப்பித்துக்கொண்டே இருந்தார்கள். அவற்றை மீறவே முடியவில்லை.

தனக்குள்ளிருந்த மனிதன் செத்துப்போய் ஏதோ ஒரு மிருகம் புகுந்து ஆக்கிரமித்துவிட்டதை அவன் உணர்ந்தான். பக்குவப்பட்ட உணவைத் தவிர வேறு எதையும் தொட்டிருக்கவே கூடாது. அதிலும் அந்த அசுர தாகத்தைக்

கட்டுப்படுத்த முடியாமல் மலையனூரனிடம் சொல்ல அவன் ஏதோ நன்மை செய்வதாய் நினைத்துக்கொண்டு அன்றாடம் பச்சை இரத்தம் கொண்டுவந்து கொடுக்க அது எந்த இழவெடுத்த மிருகத்தின் இரத்தமோ! குறிப்பாக நேற்று கொண்டு வந்து கொடுத்தது முன்பு கொண்டு வந்தவற்றைவிட மிகவும் ருசியாக இருக்க, அதனை வாங்கி மொண்டு மொண்டு குடித்து...

விஷயம் கைமீறிப் போய்விட்டது. இனிக் கவலைப்பட்டுப் பயனில்லை. போட்டிகள் நல்லபடியாக முடியட்டும். கையோடு திருமணத்தைச் செய்து கொள்வோம். இந்தச் சக்தியை ஒரு கட்டுக்குள் கொணர்வோம். எவள் மனைவியாக வாய்க்கப்போகிறாளோ அவளுடன் இரவு-பகல் வித்தியாசமின்றி வெறியுடன் கூடுவோம். பிள்ளை குட்டிகள் பெற்றுக்கொண்டு காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியனாய் நான்கு சாலைகளுக்கும் கலநாயகமாய் கர்வத்துடன் பவனி வருவோம். இத்தனை காலமாய் அண்ணன் வகித்து வந்த ஆச்சாரியன் ஸ்தானத்தை இனி நாம் வகிப்போம்.

நான் வீதியில் சென்றால் அனைவரும் பணிவார்கள். ஆசான்கள் நான் வந்து நின்றால் எழுந்து நிற்பார்கள். சட்டன்கள் என்னைக் கண்டால் சாஷ்டாங்கமாக சேவிப்பார்கள். நான் சிம்மம்! நரசிம்மம்! தூணைப் பிளக்குமளவிற்கு வலிமையுடையவன் நான்! என்னை எதிர்த்தால் என்ன ஆகுமென்பதை இதோ! இந்தச் சோழ வீரனுக்குக் காண்பிக்கிறேன். பாருங்கள்! சிம்மத்திடம் சிக்கும் இரை எப்படித் தன்னுடைய பிராணனை விடும் என்பதை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். இதன்பிறகாவது நான்தான் இவர்களுள் தலைசிறந்தவன் என்பதை ஆமோதியுங்கள்!

'பளீர்...!'

வானில் பலத்த இடி சப்தம் கேட்டது.

முதலில் ஓரிரு நீர்ச் சொட்டுக்கள் 'சட்' 'சட்'டென்று மண்ணில் விழுந்தன. சில கணங்களில் அந்தச் சொட்டுக்கள் தாரைகளாப் பெரிதாகி விட்டன.

மழை பிடித்துக்கொண்டுவிட்டது என்பதை உணர்ந்த மூழிக்குளத்து ஆசான் 'போட்டிகளில் பங்குகொள்ளும் சட்டர்களும் ஆசான்களும் களரிக்கு வாருங்கள்! சோழப் பேரரசரும் அணுக்கப்பரிவாரங்களும் களரிக்கு வரலாம். மற்ற சட்டர்களும் பொதுமக்களும் விடுதியோரங்களில் ஒதுங்கிக் கொள்ளுங்கள்!' என்று உரத்த குரலில் அறிவித்து விட்டுக் களரியை நோக்கி அவசர நடை நடந்தார்.

அவர் நகர்ந்து சென்ற மறுகணமே வானம் பொத்துக் கொண்டதுபோல் கொட்டத் துவங்கியது. வந்திருந்த பொதுமக்கள் பலருக்கும் அனந்தபுரத்து அடைமழை பழக்கமான ஒன்றாததால் கையோடு கொண்டு வந்திருந்த பனையோலைக் குடைகளைத் தலைக்குமேல் பிடித்துக் கொண்டார்கள். குடையில்லாத சட்டர்கள் மட்டும் களரிக்கு அருகில் அமைந்திருந்த விடுதிகளில் இடம் பிடித்துவிடும் நோக்கத்துடன் தென்மேற்கு திசையைக் குறிவைத்து ஓடினார்கள்.

* * * * * * *

வெளியே 'சோ'வென்று அடைமழை கொட்டிக் கொண்டிருக்க, களரிக்குள் நனைந்தபடி வந்து சேர்ந்த ஆசான்களும் சட்டர்களும் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். களரியின் பூத்தாரைக்கருகிலும் குருதாரைக்கருகிலும் ஏற்றிவைக்கப்பட்டிருந்த குத்து விளக்குகள் அர்த்தம் மிக்க மௌனத்தோடு அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தன.

களரிக் களத்தில் காலையில் நடத்த ஹோமத்தினால் பல்வேறு பொருட்களும் சிதறிக்கிடந்தன. அவை அவசர அவசரமாக அப்புறப்படுத்தப்பட்டன. நாற்புறங்களிலும் தீபங்கள் ஏற்றப்பட்டன. களரிக்குழியைச் சுற்றி அமைந்திருந்த பார்வையாளர் பகுதியில் சோழப்பேரரசரும் பரிவாரங்களும் குறிப்பிட்ட அளவிலான சட்டர்கள் மற்றும் பொதுமக்களுடன் நின்று கொண்டார்கள்.

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் அந்த ஒட்டுமொத்த இடமும் ஒழுங்கிற்கு வந்தது. களரிக்குழியின் நான்கு மூலைகளிலும் ஆசான்கள் நின்றுகொள்ள, குழியின் நடுவே நின்றிருந்த அச்சுதனும் மழபாடியாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'சடால்!'

பூமியையே இரண்டாகப் பிளந்து விடுவதைப் போன்றதொரு இடிசப்தம்.

* * * * * * * *

களரிக்குள் புகுந்ததிலிருந்தே அச்சுதனின் மனம் நிதானமிழந்து தவித்துக்கொண்டிருந்தது. வெளியே வானம் பார்த்து நின்ற மைதானத்தில் அவனுள் பொங்கிய மிதமிஞ்சிய தன்னம்பிக்கை வெளிச்சம் குறைந்த களரிக்குள் நுழைந்ததும் காணாமற் போய்விட்டது. களரியின் ஓரத்தில் அமைந்திருந்த குருதாரையின் மூங்கிற்பெட்டியிலிருந்து பண்டைய ஆசான்கள் நால்வரும் எழுந்து நின்று அவனை முறைத்துப் பார்ப்பதுபோல் பிரமை ஏற்பட்டது. என்ன பார்க்கிறீர்கள்? என்று வாய்விட்டு அதட்டவேண்டுமென்று தோன்றியது.

எதிரில் ஏகப்பட்ட நிதானத்தோடு நின்ற மழபாடியாரை அவனது கண்கள் கண்டன. உடனடியாக ஒரு கோபம் மனதுள் பொங்கியது. இவன் எதிரி. இவன் நமது எதிரி.

"அச்சுதா! நாளையோடு அவர்கள் விதி முடிந்துவிட வேண்டும். தெரிந்ததா? அவர்களை உயிருடன் விட்டாயானால் உங்களனைவரின் உயிருக்கும் ஆபத்து!" - உள்ளிருந்து சம்மந்தமேயில்லாமல் ஒலிக்கும் மலையனூரனின் குரல்.

ஆம். இவனை உயிரோடு விட்டால் அனைவருக்கும் ஆபத்து. அனைவருக்கும் ஆபத்து. இவனைக் கொல்ல வேண்டும். இவனது கழுத்தைத் திருகி உதிரம் குடிக்க வேண்டும்.

அச்சுதன் மழபாடியாரையே முறைத்துப் பார்த்தபடி ஆங்காரமாக மார்பை அறைந்து கொண்டான். 'ஹும்! ஹும்!' என்று பலமாக மூச்சுவிட்டான். மணி சப்தம் கேட்கும்வரை காத்திருக்கப் பொறுமையில்லாமல் நிலத்தைக் கால்களால் ஆங்காரமாக உதைத்துக் கொண்டிருந்தான்.

அவனது விசித்திரமான நடவடிக்கைகளை பட்டதிரி மட்டுமல்லாமல் இதர ஆசான்களும் கவலையோடு கவனித்தார்கள். இவனுக்கு ஏதோ நேர்ந்துவிட்டது என்பது அனைவருக்குமே புரிந்தது. ஆனால் என்னவென்பது தெரியவில்லை.

குண்டூசி விழும் சப்தம்கூடத் துல்லியமாகக் கேட்குமளவிற்கு களரியில் நிசப்தம் நிலவியது. அந்த

நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு ஆசானின் கரங்களிலிருந்த மணி மெலிதாகச் சப்தமெழுப்பியது.

'டாங்!'

அடுத்த கணமே பத்திருபது அடிகள் தொலைவில் நின்றிருந்த அச்சுதன் ஒரு அசாத்தியமான வேகத்துடன் 'ஹும்!' என்று பெரிதாகச் சப்தமெழுப்பியபடி மழபாடியாரின் மேல் பாய்ந்தான். அப்பாவியாக காட்டில் நின்றிருக்கும் ஒரு இளமானின் மீது புதர்களில் பதுங்கிப் பதுங்கி வரும் சிங்கம் எத்தனை ஆக்ரோஷமாகப் பாயுமோ அத்தனை ஆக்ரோஷமாக அவனது பாய்ச்சல் அமைந்திருந்தது.

* * * * * * * *

மைதானத்திற்குள் வரும்போதே மழபாடியாரின் உடலும் உள்ளமும் அமைதிக்கு வந்திருந்தன. என்ன நடந்தாலும் சரி. இனி அதற்கும் நமக்கும் சம்மந்தமில்லை என்கிற ஒரு விசித்திரமான தோரணை ஏற்பட்டது. அதாவது ஏதோ ஒரு நாடகம் நடந்து கொண்டிருப்பதைப் போலவும் அதில் தாம் ஒரு பாத்திரமாக இயங்கிக் கொண்டிருப்பதைப் போலவும் தோன்றத் துவங்கியிருந்தது.

மைதானத்தில் அச்சுதன் நின்றிருந்த தோரணையையும் அவன் உடல்வாகையும் பார்த்தபோது இவனுடன் நேருக்கு நேர் மோதுவது அசாத்தியம் என்பது தெரிந்துவிட்டது. இவன் இங்கே மனிதனாக வரவில்லை. பாதி மிருகமாக வந்திருக்கிறான். இவனை எதிர்ப்பது இயலாத காரியம். முடிந்தவரையில் தம்மையும் தமது உயிரையும் தற்காத்துக் கொள்வது மட்டும்தான் அவரால் செய்யக்கூடிய ஒரே காரியம்.

எதிர்க்கப்போவதில்லை என்கிற முடிவு நிம்மதியைக் கொடுத்தது. மழை பிடித்துக்கொள்வதையும் அவரை யாரோ களரிக்கு அழைத்துச் செல்வதையும் ஒரு சாட்சியைப்போல நின்று கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் களரிக்குள் நுழைந்ததும் அனுபவங்கள் மாறத் துவங்கின. கண்ணுக்குத் தென்படாமல் சில உருவங்கள் களரியில் நடமாடிக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது. உடல் மிகவும் களைத்துள்ளதால் நமக்கு ஏற்படும் மனப்பிரமையா? அல்லது நிஜமாகவே யாராவது...

தன்னை அசுயையுடன் வெறித்து நோக்கும் அச்சுதனை அவர் நிதானமாகத்தான் பார்த்தார். இந்த மேடையில் எனக்கொரு பாத்திரமென்றால் இவனுக்குமொரு பாத்திரம். நான் நடித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை ஓரளவிற்காவது உணர்ந்திருக்கிறேன். ஆனால் இவன் உணரவேயில்லை. தனது வேடத்திற்குள் பூரணமாகக் கலந்து நிற்கிறான்.

ஆசான் கரங்களிலிருந்த மணி சப்தித்தவுடன் அவரும் அவனைச் சந்திக்க ஆயத்தமானார். உடல் சிறகுபோல் லேசானதாக மாறிவிட்டதுபோல் தோன்றியது.

* * * * * * * *

மழபாடியாரின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவரை எடுத்த எடுப்பிலேயே வீழ்த்தி அதிர்ச்சியில் ஆழ்த்திவிட வேண்டும். மனதில் பயத்தை விதைத்துவிட வேண்டும் என்கிற முனைப்புடன் வானில் பாய்ந்த அச்சுதன் அடுத்த கணம் விளக்கு வெளிச்சத்தில் எதிரில் தெரிந்த உருவத்தைக் கண்டு திடுக்கிட்டான்!

மைதானத்தில் தெரிந்த சோழவீரனின் முகம் இப்போது திடீரென்று மிகவும் முதிர்ந்திருந்தது. மீசை நரைத்துப்போய் விட்டிருந்தது. முகத்தில் முதுமை கோடுகளாகப் பரவியிருக்க உடல் மட்டும் வஜ்ரம் போல் கட்டாகக் காட்சியளித்தது. அந்த உருவத்தின் கண்கள் அவனைக் கடுங்கோபத்துடன் கூர்மையாக முறைத்துக் கொண்டிருந்தன.

ஆனது ஆகட்டுமென்று அந்த உருவத்தின்மேல் பாய்ந்தான்.

* * * * * * * *

மழபாடியார் இடது கரத்தைத் தரையில் ஊன்றி ஒரு விதமாக வட்டமடித்துத் தன்மீது எல்லையில்லாத வேகத்துடன் பாய்ந்த அச்சுதனிடமிருந்து கண்ணிமைக்கும் நேரத்தில் விலகிக்கொண்டார். அது சாலைப்பயிற்சியில் கற்றுக்கொடுக்கப்படும் வித்தையல்ல. பௌத்தத் தற்காப்புப் பயிற்சி முறைகளுள் ஒன்று என்பது அங்கிருந்த எவருக்குமே புரியவில்லை.

ஆக்ரோஷத்தோடு பாய்ந்த சிம்மம் அதே வேகத்தில் மண்ணில் விழுந்து புரண்டது. எழுந்து நின்று மேனியில் படிந்திருந்த மண்ணைத் தட்டிக்கொண்டது. அதன் கண்கள் கோவைப்பழமாகச் சிவந்திருந்தன. எதிரே தெரியும் உருவத்தின் கழுத்தைப் பிடித்துத் திருகி அதன் உடலை நார் நாராகக் கிழித்தெறிய வேண்டுமென்கிற ஆவேச மேற்பட்டது. சற்றும் நிதானிக்காமல் மீண்டும் பாயத் தோன்றியது. அடுத்த கணமே அச்சுதனின் உடல் மீண்டும் பூமியிலிருந்து வானத்திற்கு எகிறிற்று!

இந்த முறை மழபாடியார் சரேலென்று உடலை முன் வளைத்துக் குனிந்து கொள்ள, அவர் மீது மோத முடியாமல் அவரைத் தாண்டிப்போய் அச்சுதன் மீண்டும் கீழே விழுந்தான்! மிகுதியான எடை காரணமாக சமாளித்துக் கொண்டு எழுவது சிரமமாக இருந்தது. அப்படி எழுந்திருக்கும்போது 'சொடேல்!' என்று கழுத்துக்கருகில் கூர்மையான வெட்டு விழுந்தது.

வெறும் அங்கைத் தாக்குதல்தான். ஆனாலும் உறுதியாக கரங்களால் இரும்புபோல் இறங்கிய வெட்டாதலால் ஏகத்துக்கு வலித்தது. "ஆ..!" வென்று வலியில் அலறியபடி திரும்பினான் அச்சுதன்.

நல்லவேளை. இப்போது எதிரில் அந்தப் பழைய இளைஞன்தான் தெரிந்தான். கிழவன் மறைந்துவிட்டான்!

மற்றவர்களிடம் பயனளித்த திடீர்ப் பாய்ச்சல்கள் இவனிடம் பலிக்கவில்லையென்பதை அச்சுதன் உணர்ந்தான். மெல்ல நடந்து அவரை நெருங்கினான். இருவருக்கும் ஒரு உக்கிரமான துவந்த யுத்தம் தொடங்கியது.

நெருங்கி வந்து மழபாடியாரின் மணிக்கட்டை இறுக்கிப் பிடிக்க 'ஆ!'வென்று அலறினார் மழபாடியார். அசுரப்பிடி அது! உடனடியாக விலகாவிட்டால் கை உடைந்துவிடும்.

அவர் கால்களால் அவனது முழங்காலை வலுவாக எத்தி அவனை வீழ்த்திவிட்டுத் தன்னை விடுவித்துக் கொண்டார். இனி இவனிடம் மாட்டிக்கொண்டால் அதோ கதிதான் என்பது தெரிந்தது. ஆக இவனை நம்மால் தாக்கவே முடியாது. அது இயலாத காரியம். இவனது மர்மஸ்தானங்களை தாக்குவதற்குள் அவன் நமது கரத்தையோ காலையோ பிடித்துவிட்டால் நமது கதி

அவ்வளவுதான். ஆகத் தற்காப்பு ஒன்று மட்டுமே பலனளிக்கும். அதிலும் இவனுக்குச் சிறிதும் பரிச்சயமில்லாத பௌத்தத் தற்காப்பு!

அன்றொருநாள் அருள்மொழிவர்மர் தமக்குப் பிடி கொடுக்காமல் நழுவியதைப்போல் மழபாடியாரும் இப்போது அச்சுதனின் ஒவ்வொரு அடியிலிருந்தும் விலகி விலகித் தப்பித்துக் கொண்டிருந்தார். அச்சுதனின் தாக்குதல்களில் மிதமிஞ்சிய வேகமும் பலமும் இருந்தனவே யொழிய நுட்பம் இல்லை. உடலின் மர்ம ஸ்தானங்களைக் குறிவைத்துத் தீண்டுவதற்கு ஒரு நிதானம் வேண்டும். அது இவனிடம் இருப்பதுபோல் தெரியவில்லையே?

* * * * * * * *

தன்னுடைய ஆக்ரோஷமான தாக்குதல்களுக்குப் பெரிய அளவில் பலனேற்படவில்லை என்பதை அச்சுதனும் உணர்ந்தான். மிகவும் சிரமப்பட்டுத் தன்னை நிதானப் படுத்திக்கொள்ள முயன்றான். என்றாலும் உடல் தள்ளாடிக் கொண்டுதான் இருந்தது.

பாய்ச்சலை முதலில் நிறுத்தியாகவேண்டும். அதில் சக்தி விரயம்தான் ஏற்படுகிறது. பலன் அதிகமாக இல்லை. அருகே நெருங்கிச் சென்று அவனைத் தாக்கியவாறே அவனது உடலின் படுவர்மஸ்தானங்களை எவற்றையாவது தீண்ட முடியுமா என்று பார்ப்போம். ஒரு வாய்ப்புக் கிடைத்தாலும் கையையோ காலையோ முடக்கி விடலாம்.. அதற்குப்பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

இந்த முடிவுடன் அவன் மழபாடியாரை நெருங்கி இரண்டு கரங்களாலும் தாக்கத் துவங்கினான். நெற்றிப் பொட்டிலோ வயிற்றிலோ கைவைக்க முடியுமா என்று பார்த்தான். ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மட்டும் இறுக்கி நீட்டி வர்மஸ்தானத்திற்குள் பாய்ச்ச முடியுமா என்று பார்த்தான். இப்போது அவனுக்குள்ளிருந்த சிம்மம் அமைதியாகிவிட பலகாலமாகப் பயிற்சிகளை இதே களரியில் மேற்கொண்டிருந்த சாலையின் சட்டன் வெளிப்பட்டுக் கொண்டிருந்தான்.

* * * * * * * *

பாம்பின் கால் பாம்பறியும் என்பார்களல்லவா? அது போல அச்சுதனின் முடிவு மழபாடியாருக்கு நன்றாகவே புரிந்தது. அவன் ஐந்து விரல்களாலும் தாக்குவதைப்போல் போக்குக்காட்டிவிட்டு இரண்டு விரல்களை மட்டும் முன் நீட்டி மர்மஸ்தானங்களைத் தீண்டுவதற்கு முயற்சிப்பது தெரிந்தது. அந்த முயற்சியை அனுமதிப்பது ஆபத்து என்று தோன்றியது.

தம்புராட்டியார் இந்த வித்தையில் அச்சுதனைவிடப் பல மடங்கு தேர்ந்தவர். அவர் எத்தனை தந்திரமாக தாக்க முயன்றாலும் மழபாடியார் அதிலிருந்து தப்பித்து விடுவார். எனெனில் தப்பித்தவறி அந்தத் தீண்டுதலை அனுமதித்து விட்டால் வலியில் உயிர் போய்விடும்!

இவன் அவரளவிற்குத் திறமைசாலியல்ல. இவனை அத்தனை தூரம் தாக்கவிடுமளவிற்குத் தாம் ஏமாளியுமல்ல. முதல் முறை பொறுமையாக அவனது கரங்களின் போக்கை திசைமாற்றியவர், இரண்டாம் முறையும் அவன் இரண்டு விரல்களை நீட்டி அதே தீண்டலுக்கு முயற்சிக்க, அந்த விரங்களைத் தனது ஐந்து விரல்களாலும் பிடித்து ஒரே திருகாகத் திருகினார் மழபாடியார்.

'ஐயோ!' என்றொரு குரலுடன் கரம் மீட்டுக்கொள்ளப் பட்டது. இப்போது சிம்மம் மீண்டும் அச்சுதன் மனதை ஆக்கிரமித்தது.

* * * * * * * *

களரியில் அச்சுதனின் தாக்குதல்களைக் கடுமையான அதிருப்தியுடன் கவனித்துக்கொண்டிருந்தார் பட்டதிரி. அதில் நுணுக்கமோ அழகோ தெரியவில்லை. வெறும் வறட்சியான முரட்டுத் தாக்குதல்களாக மட்டுமே தெரிந்தன. அவற்றில் ஏராளமான சக்தி இருந்தது. ஆனால் துல்லியம் இல்லை. கவனம் இல்லை. முனைப்பு இல்லை. அதனால் இலக்கு சரியானபடி தாக்கப்படவேயில்லை.

அன்றைய முதல் இரண்டு சுற்றுக்களில் அவனது கரங்களில் ஆயுதங்கள் இருந்தன. அதனால் சக்தி முழுவதையும் ஆயுதங்களுக்குக் கொடுத்து அதன் மூலம் எதிராளியை வீழ்த்த முடிந்தது. ஆனால் அங்கைத் தாக்குதல்கள் அப்படியல்ல. நுணுக்கத்தைக் கைக்கொள்ளா விட்டால் வெற்றி கிடைக்காது.

அதிலும் அந்தச் சோழவீரன் சகலவிதமான மெய்ப்பாடுகளுக்கும் ஆயத்தமாகவே இருக்கிறான். கிழவி லேசுப்பட்டவளல்லவே? அவள் நம்மிடம் பயின்றபோதே இந்த மர்மஸ்தானத் தாக்குதல்களிலல்லவா பெரிதும் கவனத்தைச் செலுத்துவாள்? இத்தனை வருடங்களில் அதில் நன்கு தேர்ச்சியடைந்திருக்க மாட்டாளா? அதனைத் தமது மாணவர்களுக்கும் கற்றுக்கொடுத்திருக்க மாட்டாளா?

அச்சுதன் இதனையெல்லாம் புரிந்துகொண்டதைப் போல் தெரியவில்லை. தேவையில்லாமல் அளவுக்கு மீறிக் கோபப்படுகிறான். கோபம் கண்களை மறைக்கிறது. அறிவை மறைக்கிறது. சிந்திக்கும் சக்தியை மழுங்கடிக்கிறது.

கோபம்... அளவுக்கு மீறிய கோபம்...

அந்தக் கோபம்தான் பல காலங்களுக்கு முன் அவருக்கும் இருந்தது. அளவுக்கு மீறிய கட்டுக்கடங்காத கோபம். தன்னுடைய இயலாமையை ஏற்றுக்கொள்ள முடியாமல்.. அதனை மறைப்பதற்காக அவர் வளர்த்துக்கொண்ட எல்லையற்ற கோபம்...

கோபம் ஒரு நெருப்பு. அது தேவை. ஆனால் அதனைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அது எல்லாவற்றையும் பொசுக்கும். எல்லாவற்றையும் அழிக்கும். அதற்குப் பாகுபாடே கிடையாது. கோபம் என்கிற நெருப்பைப் பற்ற வைத்தவன் ஒரு நாள் அதே கோப நெருப்பாலேயே அழிவான் என்பதுதான் விதி.

'ப.. ட்.. ட.. தி.. ரி..'

வேண்டாம். இப்போது வராதே. இது களரி. இங்கு நடந்துகொண்டிருப்பது கலமறுக்கும் போட்டிகளின் இறுதிச்சுற்று. இதனை நான் கவனிக்க வேண்டும். ஓடிப் போ!

'கா..ல..ன்.. வந்து.. கொண்டிருக்கிறான் ப..ட்..ட..தி..ரி..!'

மிக மெல்லியதாக மிகவும் கரகரப்பாக ஒரு குரல் அவரது காதுகளுக்கருகில் தெளிவாகக் கேட்டது.

* * * * * * * *

எல்லையற்ற நிதானத்துடன் மழபாடியார் நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருந்தார்.

இதுவரை இரண்டு முறை அவருக்குக் கடுமையாக அடிபட்டு விட்டது. இடது தோளில் ஒரு முறை. வலது முழங்காலில் ஒரு முறை. இரண்டு இடங்களிலுமே வலி இன்னும் குறையவில்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

அச்சுதனுக்கும் அடிகள் விழுந்திருந்தன. கழுத்துக்கருகில் அவர் கொடுத்திருந்தது பலமான அடி. அதற்குப் பிறகு அவனால் கழுத்தை இயல்பாகத் திருப்பமுடியவில்லை என்று தோன்றியது. இடது தொடையிலும் ஒரு முறை பலமாகத் தாக்கியாயிற்று.

* * * * * * * *

சட்டென்று அச்சுதனுக்குக் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. உடலில் வியர்வை ஆறாகப் பெருகியிருந்தது. இது மோசமான அறிகுறி! கண்கள் இருட்டிக் கொண்டு வந்தால் உடலில் சக்தி அதிகமில்லை என்பது பொருள். இதனைப் புறக்கணித்தால் விரைவில் மயக்கத்திற்குக் கொண்டு சென்றுவிடும்.

அவனது கால்கள் நிற்க முடியாமல் தடுமாறின. சமாளித்துக்கொள்வதற்குள் தோளில் அடி விழுந்தது. பேய் அடி! சுரீர் என்று அந்த இடத்தில் கடுமையான வலியேற்பட்டது.

அந்த அடி அவனைக் கோபப்படுத்தியது. இந்தச் சண்டையை மேலும் வளர்த்துக்கொண்டு போவானேன்? என்று தோன்றியது. இவனை மற்ற விதங்களில் தாக்கி வீழ்த்த முடியவில்லை. வர்மஸ்தானங்களை அணுகவே விடமாட்டேன் என்கிறான். நமது பாய்ச்சல்களுக்கும் பயனில்லை. வேறு என்னதான் செய்வது?

இறுதி அஸ்திரத்தை எடுத்து ஏவிவிடவேண்டியதுதான்.

உடலில் நம்மிடம் மிச்சமிருக்கும் சக்தியை அதற்குப் பயன்படுத்திவிட வேண்டியதுதான். வேறு வழியேயில்லை.

இதுதான் நமக்கிருக்கும் ஒரே வாய்ப்பு. நரசிம்மா கர்ஷணம் என்கிற மகத்தான சக்தியின் பூரணமான வெளிப்பாட்டை மனித உடலில் பரிட்சை செய்து பார்க்க நமக்குக் கிடைத்திருக்கும் ஒரே வாய்ப்பு. அந்தச் சக்தி

தன்னிலிருந்து கிளம்பி இவனைத் தாக்க, அவன் துடிதுடித்துப்போய்ச் சுருண்டு விழுவதைக் காணவேண்டும்.

குரூரமான ஒரு தாகம் அவனுள் எழுந்தது.

'தாக்கு! தாக்கு! குத்திக் கிழி! உதிரம் உறிஞ்சு!' - மீண்டும் உள்ளிருந்து ஏராளமான குரல்கள் கேட்கத் துவங்கின.

அவன் தன்னை நிதானப்படுத்திக்கொண்டு யோசிப்பதற்குள் மேலும் இரண்டு அறைகள் விழுந்து அவனை இன்னமும் கோபப்படுத்தின.

அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

* * * * * * * *

அச்சுதன் சற்றே பின்வாங்கி நிதானிப்பதைப் பட்டதிரி கண்டார். அவருக்குள்ளிருந்த சகல புலன்களும் விழித்துக் கொண்டன. அவன் அந்தப் பிரயோகத்தை சோழ வீரனுக்கெதிராக உபயோகிக்க முடிவு செய்திருக்கிறான் என்பது அவருக்குப் புரிந்தது.

அது தவறு என்று தோன்றியது.

அதனைத் தடுக்கவேண்டுமென்று தோன்றியது.

வேண்டாமடா தம்பி! அது பிராணாபாயம் நேரும் காலங்களில் மட்டுமே பிரயோகிக்கப்படவேண்டிய ஒன்று! என்று குரலெடுத்துக் கூவவேண்டுமென்று தோன்றியது.

களரியில் கண்ணுக்குத்தெரியாமல் சூட்சும வடிவில் ஆவிர்பவித்திருக்கும் நூற்றுக்கணக்கான.. இல்லையில்லை. ஆயிரக்கணக்கான கண்கள் அவரைத் துளைத்தெடுப்பதைப் போல் பார்த்துக் கொண்டிருந்தன.

'நீதான் குற்றவாளி! நீதான் குற்றவாளி!'

ஆம். நான்தான் குற்றவாளி.

'புனிதம் மிக்க களரி மண்ணில் இப்போது நடக்கப் போகும் இந்தப் பாவகாரியத்துக்கு நீதான் பொறுப்பேற்க வேண்டும்! நீதான் பொறுப்பேற்க வேண்டும்!'

ஆம். நான்தான் பொறுப்பேற்க வேண்டும்.

'தம்பி!'

சம்மந்தமில்லாமல் எங்கிருந்தோ எழும் மூத்தவரின் குரல்...

'நாராயணா!'

அதற்குப் பின்னால் எழும் அச்சனின் குரல்...

'ப.. ட்.. ட.. தி.. ரி..'

ஆதித்தன் குரல்! பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலனின் பயங்கரக் குரல்...

களரியின் நாலாபுறங்களிலிருந்தும் எழுந்த அந்தக் குரல்கள் அவரைச் சுற்றி வளைத்தன.

* * * * * * * *

நரசிம்மப் பிரயோகத்திற்கென்று குறிப்பிட்ட வடிவும் சுவடும் இருந்தன. அந்த வடிவில் அச்சுதன் தன்னை நிறுத்திக்கொண்டான். வலதுகாலை முன்வைத்து இடது காலைப் பின்வைத்து வலது தோளைத் திருப்பி...

அவனது வாய் பிரயோக மந்திரங்களை உச்சரிக்கத் துவங்கின.

* * * * * * * *

விடாமல் தாக்கிக்கொண்டிருந்த அச்சுதன் சட்டென்று ஒரு நிதானத்திற்கு வந்து மழபாடியாரிடமிருந்து விலகி நின்று குறிப்பிட்ட வடிவில் நிற்பதை அருள்மொழிவர்மர் கவனித்தார். என்ன செய்ய முயல்கிறான் இவன்? எதற்காக விலகி நிற்கிறான்?

அவன் நிற்கும் நிலை...

* * * * * * * *

தன்னை இடைவிடாமல் தாக்கிக்கொண்டிருந்தவன் நிதானத்திற்கு வந்து தன்னிடமிருந்து விலகி நிற்பதை மழபாடியார் எச்சரிக்கையுடன் கவனித்தார். அவருக்கும் களைப்பு மிக அதிகமாக இருந்தது. வெளியே பெய்து கொண்டிருக்கும் மழையைப்போல் அவரது உடலிலிருந்தும் வியர்வை வெள்ளமாகப் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது.

அவன் குறிப்பிட்ட வடிவு நிலைக்கு வந்து வலது காலை முன்வைப்பதைக் கண்டதும் அவருக்கு ஏராளமான அதிர்ச்சி உண்டாயிற்று!

இது.. சிம்ஹ வடிவு நிலை அல்லவா?

அவரை ஒரு வித மயக்கம் சூழத்தொடங்கியது.

* * * * * * * *

வானிலிருந்து ஒரு சக்தி தனக்குள் மையம் கொள்வதை அச்சுதன் உணர்ந்தான். படுவேகமாகத் திகிரிபோல் சுழன்று கொண்டிருக்கும் சக்தி. உச்சரித்துக் கொண்டிருக்கும் மந்திரத்தின் வேகத்தைக் கூட்ட, திகிரியும் பலத்த வேகத்தில் சுழலத் துவங்கியது.

இனி இதனைப் பிரயோகிக்க வேண்டியதுதான்.

அவன் மழபாடியாரை ஒரே எட்டில் நெருங்கி வந்தான். இதில் அவரைத் தீண்டவேண்டிய அவசியமில்லை. இது மெய்தீண்டாத் தாக்குதல். ஆனால் குறி தவறக்கூடாது. நூலிழையளவும் பிசகக்கூடாது. எச்சரிக்கை!

அவன் சக்தி முழுவதையும் ஆள்காட்டி விரலுக்குக் கொண்டு வந்து மழபாடியாரின் புருவங்களுக்கு மத்தியில் அமைந்திருந்த திலர்த்தவர்மத்தின் மீது பாய்ச்சுவதற்காகக் கரங்களை உயர்த்தி ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் நீட்ட..

களரியில் ஏற்றப்பட்டிருந்த விளக்குகள் சூறைக்காற்றால் ஒரு பெரும் அலைக்கழிப்பை அனுபவிக்க..

கணநேரம் தனக்கெதிரே மீண்டும் அந்தக் கிழட்டு உருவம் நிற்பதைக் கவனித்தான் அச்சுதன்.

எல்லையில்லாத கோபத்துடன் அது இமைக்காமல் அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்தப் பார்வை குடலைப் பிரட்ட, உடல் பயத்தால் நடுங்கியது. விரல்களின் நுனியில் வெளிப்படுதற்கு ஆயத்தமாக ஏராளமான வேகத்துடன் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் நரசிம்மாகர்ஷண சக்தியை பூமியில் பாய்ச்சி விடலாமா என்று தோன்றியது.

ஆனால் அதற்குள் அவன் அந்தச் சக்தியின் மீதான கட்டுப்பாட்டை இழத்துவிட, எல்லையற்ற வேகத்துடன்

அது கிழவரின் திலர்த்தவர்மத்தை நோக்கிப் பாய்ந்தது. அப்படிப் பாயும்போது அவனது உடலிலிருந்த மிச்சமிருந்த சக்தி முழுவதும் சொட்டுவிடாமல் உறிஞ்சிக் குடிக்கப் பட்டது.

அவன் மயங்கிச் சரிந்த கடைசிக் கணங்களில் எதிரே நின்றிருந்த கிழட்டு உருவத்துக்கு நேர்ப்பின்புறம் களரி மூலையிலிருந்து பட்டதிரி அதிர்ச்சியுடன் தன்னைக் கண்ணிமைக்காமல் கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

'அண்ணா!' என்று அவனது வாய் முணுமுணுத்தது.

அடுத்த கணம் இருள் முற்றிலுமாக அவனைச் சூழ்ந்து கொண்டது.

* * * * * * * *

அச்சுதன் வலதுகாலை முன்வைத்து சிம்ஹவடிவு நிலையில் நிற்பதைக் கண்டதும் மழபாடியாருக்கு ஒரே ஒரு காட்சிதான் நினைவிற்கு வந்தது. மறக்கவே முடியாமல் மனதில் பதிந்திருக்கும் ஒரு காட்சி. வெண்பரிசாரத்தில் பல நாட்களுக்கு முன் அவர் பார்த்த பிரஹ்லாத தரிசனம் கூத்தில் இடம்பெற்ற இறுதிக் காட்சி.

நரசிம்மம் இரணியனைக் கிழித்துக் கொன்றுவிட்டது. ஆனாலும் அதன் வெறி அடங்கவில்லை. கோபம் தணியவில்லை. கண்களில் தென்படும் அனைத்தையும் கிழித்துக் கொன்று கொண்டிருந்தது. அதன் வெறியைத் தணிப்பதற்காக மேலிருந்து சிவம் இறங்க, அதன் விசித்திரமான தோற்றத்தைக் கண்டு சிம்மம் அதையும் வெறியுடன் தாக்க முற்பட..

அந்தக் காட்சியில் நரசிம்மமாக வேடம் கட்டியிருந்த கிருஷ்ண சாக்கியர் இதே போன்று சிம்ம வடிவு நிலையில் தான் நின்றார். இதேபோல்தான் வலதுகரத்தை எதிரில் தெரிந்த சிவத்தை நோக்கி உயர்த்தினார்.

அப்படியானால்?

அப்படியானால்?

அவரது உடல் அனிச்சையாகச் செயலாற்றத் துவங்கியது. கால்களுக்கு எங்கிருந்தோ அசுர பலம் வந்தன.

எம்பிக் குதிக்கவேண்டுமென்று தோன்றியது. அப்படி எம்பும்போது உடலை விறைப்பாக நேரே நீட்டி சுற்றிச் சுழன்று பறக்க வேண்டுமென்று தோன்றியது. ஏனெனில் அந்தக் கூத்திலும் நரசிம்மத்திற்கெதிரே நின்ற சிவம் அப்படித்தான் கணநேரம் எம்பிக் குதித்துச் சுழன்றது!

அச்சுதனிடமிருந்து முழுச்சக்தியும் வெளிப்பட்ட கணத்தில் அவர் கால்களை மடக்கி எம்ப முயல..

யாரோ அவரை அந்தரத்தில் தூக்கியடித்தார்கள்!

அவரது உடல் சுழன்றபடி பூமியிலிருந்து மேலே சென்றது. அப்படிச் சுழல்கையில் மடங்கியிருந்த கால்கள் தாமாகவே நீண்டுவிட்டன. காதுகளுக்கருகில் எவரோ ஒரு ஸ்லோகத்தை மெல்லிய குரலில் முணுமுணுப்பதுபோல் தோன்றியது.

நரஸிம்ஹாகர்ஷணம் ஸேதம் அனிரோதபலான்விதம்
தத்ரைவ வித்யதே தஸ்ய சாந்தி–ப்ரகாரகோ மஹான்

"நரஸிம்ஹாகர்ஷணம் என்னும் இது தடுக்கமுடியாத வலிமையோடு கூடியது. இதிலேதான் இதனை அடக்கும் பெருமுறையும் உள்ளது."

தாமேனாம் பத்ததிம் ஸூக்ஷ்மாம் ஆலம்ப்ய பரமேச்வர:
சரபாக்ருதினா பூர்வம் சமயாமாஸ கேசவம்

"இந்த ஸூக்ஷ்மமான முறையையே பரமேச்வரன் கையாண்டு சரப வடிவோடு முன்னர் கேசவனை அடக்கினார்."

பலராம நம்பூதிரியின் அப்யாச கர்மண ஓலைகளிலிருந்து காணாமற் போயிருந்த கடைசி அடிகள் அவை என்பதை உணரும் நிலையில் மழபாடியார் அப்போது இல்லை.

* * * * * * * *

அச்சத்திலும் குழப்பத்திலும் உறைந்துபோய் நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த பட்டதிரிக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று புரிந்துகொள்ள முடியவில்லை.

நரசிம்மாகர்ஷணத்தை ஆவாஹித்த அச்சுதன் வலது கரத்தை மேலுயர்த்தி இரண்டு விரல்களை மட்டும் நீட்டித் தெளிவாக எதிரே நின்ற வீரன் மீது பிரயோகிப்பது வரை அவருக்குப் புரிந்தது. ஆனால்

அதற்கு அடுத்த கணம்.. அந்தச் சோழ வீரன்.. கண்ணிமைக்கும் நேரத்தில் கால்களை ஊன்றி வானில் எழும்பி..

என்ன செய்து கொண்டிருக்கிறான்?

தமது வாழ்நாளில் நரசிம்மப் பிரயோகத்திற்கு எதிரான அப்படியொரு எதிரியக்கத்தை அவர் கண்டதேயில்லை! பிரமை பிடித்தவர்களாக ஒன்றும் செய்யத் தெரியாமல் சக்தி முழுவதையும் உள்வாங்கிச் சுருண்டு விழுந்தவர்களைத்தான் கண்டிருக்கிறார். ஆனால்.. ஆனால்.. இவன் என்னவோ செய்து கொண்டிருக்கிறானே? என்ன இது?

சட்டென்று பட்டதிரிக்கு மந்திரம் போட்டதுபோல் சகலமும் விளங்கிற்று. சகலமும்!

ஒரு கரத்திற்கு மேல் மறு கரத்தை வைத்து அதனைத் திருப்பிப் புரட்டிப் போட்டு ஆச்சாரியார் இரவிநீலி விளக்க முயன்றது இதைத்தான்! அண்ணனார் ஒரு ஹஸ்தமாகத் தமக்குப் பிடித்துக் காட்டியதும் இதைத்தான். அப்படியெனில்.. அவர் கூற வந்த அந்த வார்த்தை சரட அல்ல, சரப.. சரபம்! சரபப் பிரயோகம்!

உடல் முழுவதையும் பூமியிலிருந்து ஓரிரு அடிகள் உயர.. இதோ! அந்தச் சோழவீரனின் முகம் இப்போது வான் பார்க்கிறது. அவனது உச்சந்தலை அச்சுதனின் நீட்டப்பட்ட விரல்களுக்கு நேராக வந்து விட்டது.

பிரயோகங்கள் எல்லாமே சக்தியின் சொரூபங்கள். உருவகங்கள்.

நரசிம்மம் என்பது ஒருவிதமான பிரபஞ்ச சக்தியின் உருவகம்.

எனில் சரபம் என்பது வேறுவிதமான உருவகம்.

சரபம் நரசிம்மத்தை எதிர்க்கவில்லை. அதனுடன் நேருக்கு நேராகச் சண்டையிடவில்லை. ஆனால் அதன் கட்டுக்கடங்காத கோபத்தைக் குறைத்தது என்று

கூறப்படுகிறது. அதாவது அந்தச் சக்திக்கு எதிர்விசை கொடுக்காமல் அதனை திசைதிருப்பி விட்டுவிட்டது.

இரண்டுக்குமே சிம்மவடிவில் அமைந்த சிரம்.

சிம்ம வடிவ உடல்.

சரபம் நிருஸிம்மாகர்ஷணம் எனும் சக்தி முழுவதையும் உச்சந்தலை வழியாக உள்வாங்கிற்று. அதனைக் குறிக்கவே அதன் முகம் சிம்ம முகமாகக் காட்டப்படுகிறது.

அப்படி உள்ளே வாங்கப்பட்ட சக்தியை அது உடல் வழியே தடையின்றிச் செல்ல அனுமதித்தது. அதனைக் குறிக்கவே சிம்ம உடல்.

நரசிம்மாகர்ஷணம் என்பது என்ன?

திலர்த்த வர்மத்தின் வழி பிரயோகித்து உடலின் தனஞ்செய வாயுவை விகாரப்படுத்தும் ஒரு பிரயோகம். திலர்த்தத்தின் வழியே அந்த ஆகர்ஷணம் உள்வாங்கப் படாமல் உச்சந்தலை வழியாக உள்வாங்கப்பட்டால்.. என்ன ஆகும்?

உச்சந்தலையில் என்ன இருக்கிறது?

உடலின் நூற்றியெட்டு வர்மஸ்தானங்களுக்கும் தலைவனாக விளங்கும் தனஞ்செயவர்மம் இருக்கிறது! அப்படியானால் இந்த வீரன் திலர்த்தத்தின் வழி பிரயோக சக்தியை வாங்காமல் தனஞ்செய வர்மத்தின் வழியாக அதனை உள்வாங்கிக் கொண்டிருக்கிறான் என்று பொருள்.

அப்படி உள்வாங்கப்படும் பெருஞ்சக்தி என்ன செய்யும்? எங்கு பாயும்?

நிருஸிம்மாகர்ஷணம் என்பது அதோமுக சக்தி. அதாவது கீழ்நோக்கிப் பாயும் சக்தி. அதனால் அவனது உச்சந்தலையில் இறங்கியுள்ள ஆகர்ஷணம் மூளையிலிருந்து இருதயத்திற்கும் இருதயத்திலிருந்து அடிவயிற்றுக்கும் அடிவயிற்றிலிருந்து தொடைகளுக்கும் தொடைகளிலிருந்து முழங்காலுக்கும் முழங்காலிலிருந்து பாதங்களுக்கும்தான் பாய்ந்தாக வேண்டும்.

பாதங்களின் மூலம்தான் ஆகர்ஷணத்திற்கு பூமியுடன் இணைப்பு ஏற்படுகிறது. அந்த இணைப்பு ஏற்பட்டபின்தான் சக்தி பூரணமடைந்து ஒட்டுமொத்தமாக உடலில் பரவித் தாக்குதல் முழுமைபெற வேண்டும்.

ஆனால்... இவனது உடலோ அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கிறது!

அப்படியானால்.. அப்படியானால்..

ஆகர்ஷணத்திற்கு பூமியின் இணைப்பு கிடைக்காமல் போய்விடுமோ? ஆஹா! இது மிக முக்கியமானதாயிற்றே?

ஆக நிருஸிம்மாகர்ஷண சக்தி கீழ்நோக்கிப் பாயும் போது உடல் தரையைத் தொட்டுக் கொண்டிருக்கக் கூடாது என்பதுதான் மிகப்பெரிய இரகசியம்.

அது மட்டுமல்ல. வானில் எழும்பும் உடல் பூமியின் மட்டத்திற்குச் சமமாக இருந்தால்தான் அது பூமியின் மீது பாயாமல் இருக்கும். அதாவது ஏறக்குறைய பூமியின் மட்டத்திற்கு இணையாக உடலையும் எழுப்பியாக வேண்டும். இது எப்போது சாத்தியம்? உடலை உருட்டி உருட்டி மேலெழுப்பினால் மட்டும்தான் சாத்தியம். அதைத்தான் இந்த வீரன் செய்துகொண்டிருக்கிறான். அதனைத்தான் ஆச்சாரியரும் ஒரு கரத்தின் மேல் மறு கரத்தை வைத்துச் செய்து காட்டியிருக்கவேண்டும்.

உடல் பூமியில் இருக்கக்கூடாது என்பதனைச் சூட்சுமமாகக் குறிப்பிடுவதற்காகவே சரபத்தின் உடலில் விரிந்த சிறகுகள் காண்பிக்கப்படுகின்றன. அதாவது அது பறந்து கொண்டிருக்கிறது! மிகக் கனமான சிம்ம உடல். ஆனால் அதனைச் சுமந்துகொண்டு வானத்தில் எழுமளவிற்கு வலிமை படைத்த இரு சிறகுகள். ஆஹா! அற்புதம்! அற்புதம்!

மிக உன்னதமான எதிர்ப்பிரயோகத்தைப் புரிந்து கொண்டுவிட்ட மகிழ்ச்சியில் பட்டதிரி தன்னையே மறந்தார். அந்தரத்தில் சுழன்று கொண்டிருந்த வீரனின் வலதுகால் பெருவிரல் கணநேரம் தனது புருவ மத்திக்கு நெல்லிடைக் கீழாக அமைந்துள்ள திலர்த்த வர்மத்துக்கு வருவதை அவர் உணரவில்லை. சரபத்தின் உயர்ந்திருக்கும் வலது கால் எதனைக் குறிக்கிறது என்பதும் அவருக்குத் தெரியவில்லை.

மழபாடியாரின் உடலில் தங்க முடியாமல் அவ்வாறு தங்குவதற்குத் தேவையான இணைப்புக் கிடைக்காமல் அவரது வலதுகால் பெருவிரலின் வழியே வெளியேறிக் கொண்டிருந்த அந்தப் பெருஞ்சக்தி நேராகப் பட்டதிரியின் நெற்றிப் பொட்டில் பாய்ந்தது.

சுரீர்!

ஏதோ வாள் போன்ற ஒன்று தலையை ஆவேசத்துடன் தாக்க, அடுத்த கணமே அவருக்குக் கண்கள் சுழற்றிக் கொண்டு வந்தன. நின்ற இடத்தில் அப்படியே சுருண்டு விழுந்தார் பட்டதிரி.

* * * * * * * *

அன்று காந்தளூர்க் களரியில் மழபாடியார் நிகழ்த்திய சரபப் பிரயோகம் வெறும் தற்செயலானதொரு நிகழ்வல்ல. அதற்குப் பின்னால் ஒரு பெரும் கதையே இருந்தது.

தனது இளமைக்காலத்தை மூழிக்குளத்துச் சாலையில் கழித்த இரவிநீலிக்கு சரபப் பிரயோகம் பற்றிய சில பண்டைய குறிப்புக்கள் கிடைத்திருந்தன. ஏனெனில் மூழிக்குளத்துச் சாலையில்தான் அந்தப் பிரயோகமே கண்டறியப்பட்டிருந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் படித்த காலத்தில் அதனைப் பற்றிய விரிவான ஞானம் அழிந்துவிட்டிருந்தது. பரம்பரை பரம்பரையாகக் குரு வழி மூலமாக மட்டுமே கற்றுக்கொடுக்கப்பட்ட வித்தையாதலால் சில பிரயோகங்கள் நாளாவட்டத்தில் வழக்கொழிந்து போய்விடுவது இயல்பானதாகவே கருதப்பட்டது.

ஆகவே தமக்குக் கிடைத்த குறிப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு அதனை ஆராய்ந்தார் இரவிநீலி. அவரது வாழ்நாளில் அந்தப் பிரயோகத்தை முழுவதுமாக அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் தமது இறுதிக் காலத்தில் தமக்குத் தெரிந்தவற்றை சங்கர்ஷண பட்டதிரிக்குக் கற்றுக் கொடுத்து அதனை மேலும் ஆராய வேண்டும் என்று கட்டளையிட்டார்.

சங்கர்ஷணர் ஆனவரை முயன்றும் பெரிதாக அதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்நிலையில் தமது நண்பரான திருமூல சாக்கியர் கட்டிய பிரஹ்லாத தரிசனம் எனும் கூத்தை நீண்ட நாட்களுக்குப் பின் பார்த்தவர், அதன் கடைசிக் காட்சி அமைந்திருந்த விதத்தைக் கண்டு திடுக்கிட்டார். அதில் சரபம் நரசிம்மப் பிரயோகத்தைக் குறிப்பிட்ட விதத்தில் எதிர்கொண்டு நரசிம்மத்தை சாந்தப்படுத்தியது.

சாக்கியரும் சங்கர்ஷணரும் சேர்ந்து அதனைத் துருவித்துருவி ஆராய்ந்தார்கள். இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தார்கள்.

பல தலைமுறைகளுக்கு முன் மூழிக்குளத்திலிருந்து கழிக்குடிக்கு வந்து சேர்ந்த பலராம நம்பூதிரியின் மூலம் அந்தப் பிரயோகமும் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலைக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். அப்போது சாக்கியர் குடும்பத்திற்கும் சாலைக்கும் நிலவிய நெருங்கிய தொடர்பால் இரணிய வதம் என்கிற பரம்பரைக் கூத்துக்குள் எப்படியோ புகுத்தப்பட்டிருக்க வேண்டும்.

வழிவழியாகப் பயிற்றுவிக்கப்படும் கூத்துமுறை யாதலால் சாக்கியர் காலம் வரை அந்த அவிநயமும் நல்லபடியாக வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் அந்தக் காட்சியும் அவிநயமும் உண்மையில் எதைக் குறிப்பிடுகின்றன என்பதைச் சாக்கியர் குடும்பத்துப் பெரியவர்களே அதுவரை அறிந்திருக்கவில்லை. அந்தச் சூட்சுமத்தைத் தெரிந்து கொண்ட முதல் மனிதர் திருமூல சாக்கியர்தான்!

இத்தகைய முடிவுகளுக்கு வந்தபின் சங்கர்ஷண பட்டதிரி தமது நண்பரிடம் ஒரு சத்தியத்தை வாங்கிக் கொண்டார். அதாவது தாமாகக் குறிப்பிட்டுச் சொல்லும்வரை அவர்களிருவரும் கண்டறிந்துள்ள சரபப் பிரயோகத்தைப் பற்றி சாக்கியர் ஒருவரிடமும் மூச்சுவிடக் கூடாது. அது வெளியில் தெரிந்தால் அதனால் வேண்டாத பல விளைவுகள் ஏற்படலாம் என்று அவர் பயந்தார்.

கடைசியில் சங்கர்ஷணரால் தாம் கண்டறிந்த இரகசியத்தை ஒருவரிடமும் தெளிவாகச் சொல்ல முடியவில்லை! அதனைப் பூரணமாக அறிந்திருந்த சாக்கியரையோ அவர் செய்து கொடுத்திருந்த சத்தியம் தடுத்தது. அதனால்தான் பூடகமாக அந்த நாடகத்தைப் பார்க்கும்படி தம்மைச் சந்திக்க வந்திருந்த தம்புராட்டியாரை வற்புறுத்தினார் சாக்கியர். அதனால் ஏதேனும் நன்மை ஏற்படும் என்று அவருக்குத் தோன்றியது.

இவ்வாறாக அன்று காந்தளூர்க்களரியில் அரங்கேறிய சரபப் பிரயோகத்திற்குப் பின் பற்பல காலகட்டங்களில் நிகழ்ந்த தொடர்பற்ற பல சம்பவங்கள் காரணிகளாய் அமைந்திருந்தன.

ஆனால் ஒரு நீண்ட சங்கிலியின் கண்ணிகளைப்போல் இவற்றை இத்தனை துல்லியமாகப் பின்னிப் பிணைத்தது யார்? எனும் கேள்விக்கு நம்மால் உறுதியாக பதிலளிக்க முடியவில்லை. 'கடவுள்' என்றும் 'இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கி இயக்கும் பெருஞ்சக்தி' என்றும் 'ஒழுங்கின்மைக் கோட்போடு' (Chaos Theory) என்றும் அவரவர் நம்பிக்கைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப ஏதாவது ஒரு விளக்கத்தை நாமாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

* * * * * * * *

களரியிலிருந்த அனைவரும் மழபாடியாரையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருக்க, பட்டதிரி ஒரு விதமாக ஒடிந்து சரிவதை அருள்மொழிவர்மரின் கண்கள் எப்படியோ கவனித்து விட்டன. ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்பது அவருக்குப் புரிந்தது. ஒரு ஆவேசம் உந்தித்தள்ள, உடனடியாக எழுந்தவர் பட்டதிரியை நோக்கி ஓடி நாலே எட்டில் அவரை அடைந்துவிட்டார். கால்களை மடக்கித் தமது தொடைகளில் பட்டதிரியின் தலையை இருத்திக்கொண்டார்.

பட்டதிரியின் கண்கள் திறந்தன. எதிரே அருள்மொழிவர்மரின் வருத்தத்தில் தோய்ந்த முகம் விளக்கொளியில் தெரிந்தது. அதில் குரோதமில்லை. பகையில்லை. கோபமில்லை. வருத்தம் மட்டுமே தெரிந்தது.

ஆற்றல் மிக்க அந்த முகத்தை.. ஒளி பொருந்திய அந்த விழிகளை.. பட்டதிரி பல்லாண்டுகளாக அறிந்திருந்தார். வார்த்தைகளில் விவரிக்கவொண்ணாத பல எண்ணங்கள் அவரை ஆக்கிரமித்தன. சோழ மாளிகைகளில் 'அண்ணா!' 'அக்கா!' என்று சதாசர்வகாலமும் கூவியபடி துள்ளித்திரிந்த பாலகன் அவரது நினைவிற்கு வந்தான். அவரது கண்களில் ஈரம் கசிந்தது.

"அ-ரு-ள்..மொ..ழி!"

ஒருமையில் உரிமையுடன் தம்மை விளிக்கும் ஆச்சாரியரை வியப்புடன் கவனித்தார் அருள்மொழிவர்மர்.

"சொல்லுங்கள்!"

"அருள்மொழி! நான் வாழ்வில் பல்வேறு கொடிய பாவங்களைப் புரிந்திருக்கிறேன். எங்கே அந்த பாவச்சுமை அடுத்தடுத்த பிறவிகளிலும் என்னைத் தொடருமோ என்று பயந்தேன். நல்லவேளை! உன்னுடைய வீரனின் முயற்சியால் இந்தப் பிறவியிலேயே அதற்கு தண்டனை கிடைத்து விட்டது. அச்சுதன் செலுத்திய பிரயோகம் நேராக என் மீது பாய்ந்து விட்டது.

உனது வீரனின் சரபப் பிரயோகம் மிகப் பிரமாதம்! அவன் நன்றாக இருக்கட்டும். அவனுக்கு அதனை ரேணுகாதான் கற்றுக்கொடுத்திருக்க வேண்டும். என்னவிட வித்தையில் மேம்பட்டவளாகிவிட்டாள். அவளுக்கும் எனது ஆசிகளைக்கூறு.

எனக்கு அதிக அவகாசமில்லை. தலை இரண்டாக வெடித்துவிடும் போலிருக்கிறது. உடலின் அத்தனை நரம்புகளும் தேள் கொட்டியதைப்போல் கடுகடுக்கின்றன. இந்தப் பிரயோகம் எத்தனை கொடியது என்பதை இப்போது பூரணமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். எனது உயிர் பிரியுமுன் நான் உனக்குச் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு.."

"சொல்லுங்கள்!"

"உனது அண்ணனின் கொலை உண்மையில் ஒரு விபத்து அருள்மொழி. அவனைக் கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு நாங்கள் அவனைச் சந்திக்கச் செல்லவில்லை. அங்கு நடந்தது மிகவும் துரதிருஷ்ட வசமானது!"

"நாங்கள் என்றால்.. யார் யார்? எதற்காக அண்ணனைச் சந்திக்கச் சென்றீர்கள்? அங்கு என்னதான் நடந்தது?"

பட்டதிரியின் முகத்தில் பிரேதக்களை வந்து படிந்தது.

"அது உனக்கு மிகவும் கசப்பான உண்மையாக இருக்கும் அருள்மொழி. அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா?"

"ஆம். தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். எத்தனை கசப்பானதாக இருந்தாலும் உண்மையைத் தெரிந்து கொள்வது நல்லதென்று நினைக்கிறேன்."

"சற்றே அருகில் வா!"

இதற்குள் அவர்களைச் சுற்றிப் பெரிய கூட்டம் சேர்ந்து விடவே அனைவரையும் விலகியிருக்கச் சொல்லிவிட்டு பட்டதிரியின் வாய்க்கருகில் காதுகளைக் கொண்டு சென்றார் அருள்மொழிவர்மர்.

ஒருவருக்கும் கேட்காத வண்ணம் மிக மெல்லிய குரலில் பட்டதிரி அப்படி என்னதான் அவரிடம் கூறினாரோ! நமக்குத் தெரியாது. ஆனால் அவர் பேசப்பேச அருள்மொழிவர்மரின் முகத்தில் சொல்லவொண்ணாத துக்கம் வந்து படிந்தது. அவரது கண்கள் இறுக்க மூடிக் கொண்டன. வாய் "சிவ! சிவா!" என்று இடைவிடாமல் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

"அவ்வளவுதான். போதுமா?"

"ஆண்டவா!"

"இதற்காகத்தான்... அஹ்.. இதற்காகத்தான்.. இதனை... நீ தெரிந்துகொள்ள.. அஹ்.. வேண்டாமென்று..."

"ஆச்சாரியரே! நானும் உங்களிடம் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது அத்தனை கசப்பானதல்ல. இருங்கள்.."

பேரரசர் சற்று தூரத்தில் விலகி நின்றிருந்த கம்பன் மணியனாரைச் சைகையால் நெருங்கி வருமாறு அழைத்தார். அவர் அருகில் வந்ததும் அவரது முகத்தை பட்டதிரி நன்கு காணுமாறு அருகில் கொண்டு வந்து நிறுத்தினார்.

"இவர் இன்னாரென்று உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா?"

பட்டதிரிக்கு நாவு இழுத்துக்கொண்டது. உடம்பின் வெவ்வேறு நரம்புகளும் தமது இயல்பை இழக்கத் துவங்கியிருந்தன. திலர்த்த வர்மத்தின் வழியாக உள்வாங்கப் பட்டிருந்த அந்த பயங்கர சக்தி தன்னுடைய வேலையைப் பூரணமாகக் காட்டத் துவங்கியிருந்தது. அந்த நிலையிலும் கூர்மையாக மணியனாரின் இளைமை பொங்கும் திருமுகத்தை விளக்கொளியில் கண்டார். சற்றே வளைந்து தெரிந்த இளையவரின் இடது புருவத்தை அவரது கண்கள் ஊன்றிக் கவனித்தன.

"அருள்மொழி! இவன்.. இவன்..."

"ஆம்! நீங்கள் நினைப்பது முற்றிலும் சரி. இவர்தான்..."

அருள்மொழிவர்மர் பட்டதிரியின் காதுகளில் ஏதோ புகன்றார். அடுத்த கணம் எல்லையில்லாத பெருமகிழ்ச்சி பட்டதிரியின் முகத்தில் தெரிந்தது.

"அருள்மொழி! எனக்கு எத்தனை பெரிய உபகாரம் செய்து விட்டாய்? காந்தளூர் மகாதேவர் அருளினால் என் மனம்... எத்தனை.. பரிசுத்த.. அஹ்.. ஆகிவிட்டது..அஹ்.. அஹ்.. நீ.. நன்றாக... நீண்ட ஆயுளுடன்.. அஹ்.. அஹ்.."

அவரது கைகளும் கால்களும் இழுத்துக் கொண்டன. வாயில் நுரை தள்ளியது. 'நீர் கொண்டு வாருங்கள்!' என்று எவரோ அலறுவது கேட்டது. சில கணங்களில் அருள்மொழிவர்மரின் மடியில் பட்டதிரி மயங்கிச் சரிந்தார்.

அங்கிருந்த அனைவரின் கவனமும் பட்டதிரியின் மீதே படிந்திருக்க, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சட்டர்கள் மூவர் மயங்கிக் கிடந்த அச்சுதனைச் சப்தமில்லாமல் தூக்கிக்கொண்டு களரிக்கு வெளியே சென்று மறைந்தார்கள்.

58. இரத்தக்களரி



"அச்சுதா!"

தனது கன்னத்தில் யாரோ அடித்து எழுப்புவதை அச்சுதன் உணர்ந்தான்.

"அச்சுதா எழுந்திரு! பெரும் அசம்பாவிதம் நேர்ந்துவிட்டது!"

எத்தனையோ முயன்றும் கண்களைத் திறக்கவே முடியவில்லை. உடலின் ஜீவசக்தி சொட்டுவிடாமல் வடிந்துவிட்டது. மிச்சம் மீதி எதுவுமேயில்லை.

"எழுந்திரு அச்சுதா! உனது தமையனாரைச் சோழர்கள் கொன்று விட்டார்கள்!"

என்ன? தமையனாரைக் கொன்றுவிட்டார்களா?

அதிர்ச்சிமிக்க அந்தச் செய்தி எங்கிருந்தோ ஒரு சக்தியைக் மீட்டுக் கொடுக்க, மிகுந்த சிரமப்பட்டு இறுகிக் கிடக்கும் கண்களைத் திறந்தான் அச்சுதன். எதிரே

கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கும் மலையனூரனின் முகம் தெரிந்தது.

"என்ன?? என்ன ஆயிற்று??"

"உனது தமையனாரை சோழர்கள் எங்கோ தூக்கிச் சென்று வஞ்சகமாகக் கொன்றுவிட்டதாகப் பேசிக் கொள்கிறார்கள். இதோ! உன்னைத் தூக்கிக்கொண்டு வந்த உனது சரணத்து ஆட்களிடமே கேட்டுப்பார்!"

அச்சுதன் அருகில் நின்ற சட்டனைப் பார்க்க அவன் சுருக்கமாகத் தனக்குத் தெரிந்தவற்றைக் கூறினான்.

கலமறுக்கும் போட்டிகளின் கடைசிச்சுற்றில் அச்சுதன் நம்பூதிரியின் தாக்குதலிலிருந்து எப்படியோ தந்திரமாக அந்தச் சோழவீரன் தப்பித்து விட்டான். ஆனால் ஆச்சாரியாருக்கு பலத்த அடிபட்டு விட்டது. அந்த நிலையிலும் ஆச்சாரியாரைச் சோழன் பல கேள்விகள் கேட்டுத் துன்புறுத்தியிருக்கிறான். பதில் சொல்லாததால் அவரை வேறிடத்திற்குக் கொண்டு செல்ல ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

அதற்குள் சோழப்படையின் வீரர்கள் பலர் சாலை வளாகத்தில் திரண்டு ஆச்சாரியாரைக் காந்தளூர்ச் சட்டர்கள் நெருங்கவொட்டாமல் செய்து விட்டனர். ஒரு இரதம் வேகவேகமாகச் சாலையை விட்டு வெளியேறி யுள்ளது. அதில் ஆச்சாரியாரையும் கொண்டு சென்று விட்டதாகக் கேள்வி. அவர் எங்கே கொண்டு செல்லப்படுகிறார் என்பது பற்றி எவருக்கும் தகவல் சொல்லப்படவில்லை.

இத்தனை குழப்பங்களுக்குமிடையில் சோழ வீரனையே கலநாயகமாகத் தேர்வு செய்திருப்பதாக மூழிக்குளத்தார் அறிவித்திருக்கிறார். இது காந்தளூரின் சட்டர்கள் பலரையும் கடுங்கோபத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. ஏன்? எதற்கு? என்கிற கேள்விகளுக்கு மூழிக்குளத்தார் சரியாகப் பதில் சொல்லவில்லையாம். 'அச்சுதன் கடைசித் தாக்குதலுக்குப் பிறகு மயங்கி விழுந்து விட்டான். இவன்தான் அதனால் பாதிக்கப்படாமல் எழுந்து நின்றான்' என்று ஏதோ பொய்யான விளக்கங்கள் சொல்லப்பட்டனவாம்.

இதற்கிடையில் ஆச்சாரியாரைச் சோழன் களரியிலேயே கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டதாகவும் அது வெளியில் தெரியாமலிருப்பதற்காகவே அவரது உடலை வெளியே

கொண்டு சென்று விட்டதாகவும் பேச்சு அடிபடுகிறது. வாமனன் நம்பூதிரி எங்கிருக்கிறார் என்பது யாருக்கும் தெரியவில்லை! அது வேறு சந்தேகத்தை அதிகப்படுத்தி யிருக்கிறது.

மேற்கூறிய செய்திகளை அந்தச் சட்டன் மென்று முழுங்கிக் கூறி முடிக்க, அச்சுதனின் கோபம் அளவு கடந்தது. அப்போதே கிளம்பிச் சென்று சாலையை ஆக்கிரமித்திருக்கும் சோழர்படைகளை நிர்மூலம் செய்ய வேண்டுமென்று ஆவேசம் ஏற்பட்டது. அவனது கண்கள் கோவைப்பழமாகச் சிவந்திருந்தன.

"அச்சுதா! உனது கோபம் எனக்குப் புரிகிறது. இது போல் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படும் என்பதை முன்னரே எதிர்பார்த்தேன். அதற்காகத்தான் வள்ளுவ நாட்டிலிருந்து எனது வீரர்கள் இருநூறு பேரை.."

இதுபோல் இன்னொரு சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்காது என்பதை மலையனூரன் நன்றாகவே அறிந்திருந்தான். அதனால் கிடைத்த வாய்ப்பை முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதில் அவனுக்குப் பெரும் முனைப்பு இருந்தது.

* * * * * * * *

அந்தச் சட்டன் அச்சுதன் நம்பூரிதிரிக்கு விவரித்ததைப் போன்றதொரு வதந்தி காந்தளூரில் துரதிருஷ்டமாகப் பரவியிருந்தது உண்மையே. ஆனால் நிஜத்தில் என்ன நடந்த தென்பதைக் குறிப்பிட்ட சிலரே அறிந்திருந்தார்கள்.

நரசிம்மப் பிரயோகத்தினால் தாக்கப்பட்ட பட்டதிரி அருள்மொழிவர்மரின் மடியில் மயங்கிச் சரிந்தாரல்லவா? அதனைத் தொடர்ந்து மூழிக்குளத்தாரும் மற்ற ஆசான்களும் அங்கு வந்து அவருக்கு உடனடியாகச் சில முதலுதவிகளைச் செய்தார்கள். அவரது உடலின் அனைத்து நாடிநரம்புகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

இதே போன்ற நரம்படித் தாக்குதலினால் பல வருடங்களுக்கு முன் பாதிக்கப்பட்டு, பின் நாஞ்சில் ஆசானின் உதவியுடன் ஓரளவிற்கு உடல்நிலை தேறியிருந்த தம்புராட்டியார் கூழிக்குடியில் தம்மால் இதற்கு உழிச்சில் வைத்தியம் செய்ய முடியுமென்று உறுதியாகக் கூறவே

அணுக்கமான சிலருடன் பட்டதிரியைக் கழிக்குடிக்குக் கொண்டு செல்வதென்று முடிவாயிற்று.

இதற்கிடையே கலமறுக்கும் போட்டிகளின் முடிவுகளை அறிவித்தாக வேண்டிய நெருக்கடியிலிருந்த மூழிக்குளத்தார் இதர ஆசான்களுடன் கலந்தாலோசித்துப் பரமன் மழபாடியாரையே கலநாயகமாகத் தேர்ந்தெடுத்திருப்பதாக அறிவித்தார். களரியில் மழபாடியாருக்குப் பல்வேறு மரியாதைகளும் செய்யப்பட்டுப் பட்டயமும் அளிக்கப் பட்டது.

இந்தச் சம்பவங்களனைத்தும் கொட்டும் மழைக் கிடையே களரிக்குள் நடந்து முடிந்ததால் வெளியில் காத்திருந்த பலருக்கும் விபரங்கள் புரியவில்லை. களரியிலிருந்த சட்டர்கள் வெளியில் வந்து தெரிவித்த விபரங்களை அவர்கள் வதந்திகளாக உருமாற்றினார்கள். வலிமை வாய்ந்த காந்தளூர்ச் சட்டன் கலநாயகமாகத் தேர்ந்தெடுக்கப்படாததும் பட்டதிரி அசந்தர்ப்பமாக மயங்கி விழுந்ததும் அவர்களுக்குப் பலத்த சந்தேகங்களை எழுப்பி விட்டிருந்தன. அச்சுதனின் நரசிம்மப் பிரயோகத்தினால் தாக்கப்பட்டுத்தான் பட்டதிரி வீழ்ந்தார் என்கிற முக்கியமான உண்மை அங்கே மறைக்கப்பட்டது. அல்லது உருத்தெரியாமல் திரிக்கப்பட்டது.

அருள்மொழிவர்மருக்கு இந்த விபரங்கள் முழுவதுமாகப் புரியாவிட்டாலும் சாலையின் சூழல் தங்களுக்கெதிராக மாறிக்கொண்டிருப்பதை உணர்ந்து தமது படையின் ஒரு பகுதியை அங்கே வரவழைத்தார். சோழ வீரர்கள் வளாகத்தைச் சுற்றி நின்று கொண்டார்கள். இது சட்டர்களுக்கு மேலும் சந்தேகத்தை விளைவித்தது. மூழிக்குளத்தாரும் சோழர்களுமாகச் சேர்ந்து தமக்கெதிராக ஏதோ சதி செய்கிறார்கள். சாலையை அபகரிக்க நினைக்கிறார்கள் என்பதாகச் செய்தி பரவியது.

அன்றைய போட்டிகளில் பலத்த காயத்துடன் வீழ்த்தப்பட்ட வாமனர் மட்டும் அங்கு இருந்திருந்தால் இரு சாராருக்குமிடையில் ஒரு புரிதல் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவரால் எழுந்திருக்கவே முடியவில்லை. பட்டதிரிக்கு ஏற்பட்ட விபத்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவரது வருத்தம் எல்லை கடந்தது.

அச்சுதன் எங்கே சென்றுவிட்டான் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. எல்லா இடங்களில் தேடியும்

அவன் இருக்குமிடத்தைக் கண்டறிய முடியவில்லை. ஏற்கனவே பல்வேறு வதந்திகளும் உலவிக்கொண்டிருந்த வளாகத்தில் இது மேலும் அதிருப்தியைக் கிளப்பியது.

அச்சுதன் மாயமாக மறைந்துவிட்டது அருள்மொழிவர்மரையும் குழப்பத்தில் ஆழ்த்தியது. நடக்கக் கூடாத ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்பதை அவரது உள்ளுணர்வுகள் உணர்ந்தன.

படைவீரர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி உத்தரவிட்டுவிட்டு நிம்மதியின்றி இரவைக் கழித்தார் மாமன்னர்.

* * * * * * * *

மறுநாள் காலை காந்தளூர் வளாகத்தில் நடந்த சம்பவங்களை உச்சக்கட்ட துரதிருஷ்டம் என்றுதான் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு கல்விக்கூடத்தில் வன்முறை நிகழக்கூடாது இரத்தம் சிந்தக்கூடாது என்று அருள்மொழி வர்மர் நினைத்ததற்கு நேர்மாறான சூழல் அங்கு உருவானது. அவற்றை விரிவாக எழுதுவதற்கு நமது மனம் ஒப்பவில்லை. ஆதலால் மிகச் சுருக்கமாகவே விவரிக்கிறோம்.

அதிகாலை நேரத்தில் மலையனூரனின் வள்ளுவநாட்டு வீரர் படை சாலையைச் சுற்றி வளைத்தது. இருநூற்று சொச்சம் பேர்களை மட்டுமே கொண்டிருந்த படையென்றாலும் முற்றிலும் எதிர்பாராத தாக்குதல் என்பதால் சோழவீரர்கள் நிலைகுலைந்து போனார்கள். படையெடுத்து வந்த வள்ளுவநாட்டு வீரர்களுக்கு மத்தியில் அச்சுதனின் தலையும் தெரிந்ததால் காந்தளூர்ச் சட்டர்களில் ஒரு பகுதியினரும் சோழர்களுக்கெதிராகத் திரும்பினார்கள். தாங்கள் நினைத்ததைப் போலவே காந்தளூரைச் சோழர்கள் ஆக்கிரமிக்க முயன்றிருக்கிறார்கள். அதனைத் தடுக்கவே அச்சுதன் படையுடன் வந்திருக்கிறானென்று அவர்களுக்குத் தோன்றியது.

சோழ சைனியத்திற்கு எடுத்த எடுப்பில் பலத்த அடி ஏற்பட்டது. ஆனால் அவர்கள் துவண்டுவிடாமல் எதிர்த் தாக்குதல் தொடுக்க, சிறிது நேரத்தில் விழிஞத்திற்கு அருகே தண்டூன்றியிருந்த பெரும்படை அவர்களுக்குத் துணையாக வந்து சேர்ந்தது. இரண்டு சாராரும் சாலை வளாகத்தில் கொடூரமாக மோதிக்கொண்டார்கள்.

காந்தளூர் மைதானம் சோழவீரர்களின் உதிரத்தாலும் சட்டர்களின் உதிரத்தாலும் நனைந்தது. சில நாழிகைகள் மட்டுமே நீடித்த அந்த உக்கிரமான சண்டை ஒரு வழியாகச் சோழர்களின் கட்டுப்பாட்டிற்கு வந்தது. மலையனூரனின் படையில் பல வீரர்கள் உயிரை இழந்திருக்க, மற்றவர்கள் குற்றுயிரும் குலையுயிருமாய்ச் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். அடிபட்டிருந்த சோழ வீரர்களையும் வள்ளுவநாட்டு வீரர்களையும் விழிஞம் கோட்டைக்கு அப்புறப்படுத்தும் பணி இரண்டு நாழிகைகளுக்கு மேல் நீடித்தது.

இந்த வேண்டாத போராட்டத்தில் பல்லவராயருக்கும் அடிபட்டுவிட்டது என்பதுதான் அருள்மொழிவர்மரைப் பெருத்த வருத்தத்திற்குள்ளாக்கியது. அவரது தோளில் பலத்த வெட்டுக்காயம். அவருக்கும் உரியமுறையில் சிகிச்சையளித்து ஓய்வுக்காக விழிஞம் கோட்டைக்கு அனுப்பி வைத்தார் பேரரசர்.

59. அன்புப் பரிசு



கழிக்குடிப் பெருஞ்சாலையில் ஒரு முன் மாலை நேரம். களரியின் வாயிலில் சோழப்பேரரசர் அமைதியுடன் இடையில் கையூன்றி மருந்துவாழ்மலையை ஒன்றும் தோன்றாமல் வெறித்து நோக்கியபடி நின்றிருந்தார். அவரைச் சுற்றி நமது கதை மாந்தர்கள் பலரும் கூடியிருந்தார்கள்.

எங்கிருந்தோ புறப்பட்டு வந்த மெல்லிய வாடைக்காற்று சில்லென்று அனைவரின் மீதும் மோதிவிட்டுக் கடந்து சென்றது.

"அருள்மொழி!"

"ஆச்சாரிய?"

"களரிக்குள் செல்வோமா? வாடைக்காற்று எனது உடம்புக்கு ஒத்துக்கொள்வதில்லை."

"உடனே செல்வோம்."

மாலை நேரமாதலால் தீபங்கள் பூத்தாரையில் ஏற்றப்பட்டிருக்க அழகுடன் பொலிந்தது கழிக்குடிக் களரி.

"காந்தளூரிலிருந்து செய்திகள் ஏதேனும் உண்டா?"

"தாங்கள் வருவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்புதான் வாமனரின் முறி வந்து சேர்ந்தது. நிலைமை ஓரளவிற்குச் சீராகியிருக்கிறதாம். கலமறுக்கும் போட்டிகளுக்காக மற்ற சாலைகளிலிருந்து வந்திருந்த மாணவர்களும் ஆசான்களும் ஊர் திரும்பி விட்டார்களாம்.

நடந்த சம்பவங்களுக்காக மூழிக்குளத்தார் பெரிதும் வருந்தினாராம். சோழர்கள் எத்தனையோ நாகரீகமாக நடந்து கொண்டார்கள். ஆனால் நமது பக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் காரியத்தையே கெடுத்துவிட்டார்கள். காலாகாலத்திற்கும் இந்தப் பழியை நாம் சுமந்தாகவேண்டும் என்று கூறினாராம்.

சாலையின் சட்டர்களில் நூற்றியிருபதுக்கும் மேற்பட்டவர்கள் நம்முடன் மோதியிருப்பார்களாம். அவர்களில் நாற்பது பேர் துரதிருஷ்டவசமாக உயிர் துறந்து விட்டார்கள். எஞ்சியிருப்பவர்களுள் அங்கஹீனமானவர்கள் மட்டும் அறுபது சொச்சம் பேர். அவர்கள் மீண்டும் சாலைக்குத் திரும்ப முடியாதாதலால் சொந்த ஊருக்குச் சென்று சேர்க்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீதமுள்ளவர்களை கடுமையான எச்சரிக்கைக்குப் பின் சாலையில் மீண்டும் சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

மழபாடியார் தமது பணிகளுக்குப் பெரிதும் துணை புரிவதாகவும் அவரைச் சிறிது நாட்கள் அங்கேயே விட்டு விட்டு வந்தமைக்காகப் பெரிதும் நன்றி பாராட்டுவதாக எழுதி ஓலையை முடித்திருக்கிறார் வாமனர்!"

"மனிதன் எத்தனை முயன்றாலும் கர்மவினையைத் தடுக்க முடிவதில்லை பார்த்தாயா? அதைத்தான் விதி என்கிறோம்."

"போகட்டும். நான் கிளம்புவதற்கு முன் முடிக்க வேண்டிய பணி ஒன்றுள்ளது.." என்றபடி அமைதியாக ஓரத்தில் நின்றிருந்த தம்புராட்டியாரின் பக்கம் திரும்பினார் பேரரசர்.

"அம்மா! எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் என்னுடைய வேண்டுகோளை மதித்துத் தாங்கள் ஆற்றியிருக்கும் பணி மகத்தானது. தங்களது பணிக்காக அரிய பரிசு ஒன்றைத் தரப்போவதாக முதன்முதலில் எழுதியிருந்த ஓலையில் கூறியிருந்தேனே? ஞாபகம் உள்ளதா?"

"அரசே! தாங்கள்தான் பெருஞ்சாலைக்கு மிகப்பெரிய நிவந்தமளித்து அதன் எதிர்காலத்தை ஒளிபொருந்தியதாகச் செய்துவிட்டீர்களே? அதற்கு மேலாக எனக்கு என்ன வேண்டும்?"

"சாலாபோகமளித்தது என்னுடைய கடமையம்மா. பரிசல்ல. தங்களுக்காக நான் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் பரிசு அதைவிட மிகப் பெரியது. இதோ! இதுதான் அந்தப் பரிசு."

அருகில் நின்றிருந்த இளையவர் கம்பன் மணியனாரின் கரங்களிரண்டையும் பிடித்துத் தம்புராட்டியாரின் கரங்களில் திணித்தார் அருள்மொழிவர்மர்.

"என்ன? இதுவா எனக்களிக்கப்படும் பரிசு? இவனை இங்கேயே விட்டுவிட்டுச் செல்லப்போகிறீர்களா? சோழராஜாங்கப் பணிகளிலிருந்து இவனை விடுவித்துவிடப் போகிறீர்களா என்ன?" என்று ஆர்வத்துடன் வினவினார் தம்புராட்டியார். அப்படி மட்டும் நடந்துவிட்டால் எத்தனை நன்றாக இருக்கும் எனும் எண்ணம் அவரது குரலில் வெளிப்படையாகத் தெரிந்தது.

"அது முடியாதம்மா. இத்துணை சிறந்த சேனானி நாயகத்தை சோழதேசம் இழக்க முடியாது. வேண்டுமானால் இவரையும் மழபாடியாரையும் சில காலம் கழிக்குடியில் தங்கியிருக்க அனுமதி வழங்குகிறேன். சாலை விடுதிகளைச் சீரமைக்கும் பணியிலும் மாணவர்களைச் சேர்க்கும் பணியிலும் இருவரும் ஈடுபடட்டும். நான் கூற வந்தது வேறு. இவர்.. இவர் யாரென்று தெரியுமா?"

தம்புராட்டியாரின் வயிறு குழைந்தது. இனம்புரியாத உணர்வுகள் அடிவயிற்றில் தோன்றி மறைந்தன.

"தாங்கள் கூறவருவது என்னவென்று விளங்கவில்லையே?"

"தங்களின் கணவரான பட்டதிரி தமது நினைவைப் பூரணமாக இழக்குமுன் தெரிந்துகொண்ட ஒரு மகத்தான உண்மையை இப்போது நான் பகிரங்கமாக்குகிறேன். மணியனாரே! அங்கவஸ்திரத்தை விலக்கித் தங்களின் இடது தோளைக் காண்பியுங்கள்."

ஒன்றும் புரியாமல் இளையவர் தமது இளந்தோள்களை பேரரசருக்கு முன்பாக நீட்டினார்.

"இங்கே ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. இந்தச் சாளரத்திற்கருகில் வாருங்கள்! வெளிச்சம் உங்களின் தோள்களின் மீது நன்றாகப் படட்டும்."

கம்பன் மணியனார் அவ்விதமே நிற்க, அவரது தோள்கள் பேரரசரால் ஆராயப்பட்டன.

"இதோ தெரிகிறதே.. இது என்ன?"

"இந்தக் குறி சிறுவயது முதல் என் தோள்களில் இருக்கிறது பேரரசே. வெறும் மச்சம்."

"ம்ஹூம். இது மச்சமல்ல. முத்திரை! மிகச் சிறிய அளவிலான கூர்ம முத்திரை!"

தம்புராட்டியாருக்குத் தூக்கிவாரிப் போட்டது! என்ன? கூர்ம முத்திரையா? மாளிகைப்புரத்து வீட்டின் இராஜ குடும்பத்து வாரிசுகளுக்கு மட்டுமே பொறிக்கப்படும் கூர்ம முத்திரையா? குடும்பத்தின் பெண்டு பிள்ளைகளுக்கு வாரிசு பிறந்ததும் அவர்களின் குல தெய்வமான நாகராஜன் திருக்கோயிலின் பலிபீடத்திற்கு முன் பிரத்யேகச் சடங்குகள் நடந்து முடிந்தபிறகு பொறிக்கப்படும் கூர்ம முத்திரை இவன் தோள்களில் உள்ளதா? அப்படியானால்..

"அம்மா! இன்னுமா தெரியவில்லை? இவர்தான் உங்களுக்கும் பட்டதிரிக்கும் பிறந்த குழந்தை. இறந்தே பிறந்தது என்று கூறி உலகத்தின் கண்களை மறைத்த விசுவாசம் மிக்க உங்கள் மாளிகைப்புரத்து வீட்டு மருத்துவச்சியால் சோழ குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தை. உரிய பிராயம் வந்ததும் சூழ்நிலை சீரானதும் மூத்த தம்புரானின் கோபம் தணிந்ததும் மீண்டும் உங்களிடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்கிற நிபந்தனையுடன் எங்களின் பொறுப்பில் விடப்பட்ட குழந்தை. பல்லவராயரால் பத்திரமாக அவரது நண்பரின் வீட்டில் வளர்க்கப்பட்ட குழந்தை. அந்தக் குழந்தையை உங்களின் குலக்கொழுந்தை இதோ! இப்போது உங்களிடமே பத்திரமாக ஒப்படைத்து விட்டேன். சோழ குடும்பத்தின் கடமை முடிந்தது."

இளையவருக்கு ஒன்றுமே புரியவில்லை. தம்புராட்டியார்தாம் உண்மையில் அவரது அன்னையா? பட்டதிரிதான் அவரது தந்தையா? அப்படியானால், அன்போடும் ஆசையோடும் தன்னை வளர்த்து ஆளாக்கிய திருப்பழனத்து விக்கிரமசிங்க மூவேந்த வேளாருக்கும்

தமக்கும் சம்மந்தமே இல்லையா? அவரது பெண் வயிற்றில் நான் பிறக்கவில்லையா? அதனைத் தெரிந்து வைத்திருந்தும் அவர்கள் தம்மேல் இத்தனை அன்பைச் சொரிந்து வளர்த்தார்களா? இறைவா! என்ன கொடுமை இது?

தம்புராட்டியாருக்கும் அந்தச் செய்தி பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது என்பது தெரிந்தது. அவரால் ஒன்றுமே பேச முடியவில்லை.

"ஜீரணிப்பதற்கு மிகக் கடினமான விஷயம் இது என்பதை அறிவேன். எனினும் என்றாவது ஒரு நாள் இதனை வெளிப்படுத்தித்தான் ஆகவேண்டும். இதனால் இதுவரை மணியனாரை ஊட்டி வளர்த்த மூவேந்த வேளார் குடும்பத்திற்கும் இவருக்கும் இனிமேல் தொடர்பில்லை என்று அர்த்தமல்ல. மணியனாரே! இரண்டு குடும்பங்களுக்கும் நீங்கள் வாரிசாக இருங்கள். இருவருமே இனி உங்களை சொந்தம் கொண்டாடட்டும்!"

அருள்மொழிவர்மரின் கூற்றை ஆமோதிப்பதுபோல் பூத்தாரையின் விளக்குச் சுடர்கள் அங்குமிங்கும் அசைந்தன. கண்களில் நீருடன் இளையவரைக் கட்டிக்கொண்டார் தம்புராட்டியார்.

* * * * * * * *

மறுநாள் காலை இருபது இருபத்தைந்து சிறுவர்கள் கழிக்குடிப் பெருஞ்சாலையின் மைதானத்தில் திரண்டு நின்றார்கள். அந்தச் சாலையில் பயின்ற சட்டன் கலநாயகமாகத் தேர்ச்சி பெற்றதும் சோழப்பேரரசரின் நேரடி ஆதரவில் சாலை மீண்டிருப்பதும் ஊர்ப் பெருமக்களின் மனதைப் பெருமளவிற்கு பாதித்திருந்தன.

'எங்கிருந்தோ வந்த சோழர்கள் நமது ஊரில் அமைந்துள்ள சாலைக்கு மறுவாழ்வு கொடுத்திருக்கிறார்கள். உள்ளூர்க்காரர்களாகிய நாம் இன்னமும் அதனை ஆதரிக்காமலிருப்பது சரியல்ல!' என்கிற எண்ணம் அவர்களுக்குத் தோன்றியிருந்தது. சாலைக்குத் தங்களின் செல்வங்களை அவர்கள் பெருமையுடன் அனுப்பி வைத்தார்கள்.

சிறுவர்களுக்கு முன்னால் தம்புராட்டியாரும் இளையவரும் நின்றிருந்தார்கள். முதல்நாள் முதல்

பாடமாகச் சாலையின் துதிப்பாடலும் சில அடிப்படைப் பயிற்சிகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

"நிஸ்ஸீமம் நிகிலேஸ்வரஹ..."

சீராக இலயம் பிரியாமல் கூப்பிய கரங்களுடன் கூடி நின்ற சிறுவர்கள் தங்களின் மழலை மாறாக் குரலில் எழுப்பிய அந்தப் பிரார்த்தனை ஸ்ரீவல்லபப் பெருஞ் சாலையிலிருந்து.. அல்ல, அல்ல, ஸ்ரீ இராஜராஜப் பெருஞ்சாலையிலிருந்து மெல்ல மெல்ல மேலெழும்பி வானில் கலந்தது.

(சேரர் கோட்டை முற்றும்)

60. பின்கதை

'இராஜகேசரி' என்கிற வரலாற்றுப் புதினத்தின் முடிவில் அம்பலவாணர் கம்பன் அரையனாருக்கும் மதுர வாசகிக்கும் சோழர் படைத்தளபதி பரமன் மழபாடியாரான இருமுடிச் சோழர் விவரித்த சில அனுபவங்களையே 'சேரர் கோட்டை' எனும் வரலாற்றுப் புதினமாக விரித்து எழுதினோம்[82] என்பதை அன்புக்குரிய வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம். அந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியாகக் குருகாடியில்[83] மழபாடியார் இல்லத்தில் நிகழ்ந்த சில உரையாடல்களையும் நிகழ்வுகளையும் இந்த அத்தியாயத்தில் பகிர்ந்து கொள்கிறோம்.

* * * * * * * *

"ம்.. சொல்லுங்கள்! அப்புறம் என்ன நடந்து?" என்று உற்சாகப்படுத்தினார் அம்பலவாணர். மழபாடியார் கூறிய பழைய சரித்திரத்தில் அவரது உள்ளம் கடந்த பல நாட்களாக மூழ்கித் தோய்ந்து விட்டிருந்தது.

"அப்புறம் என்ன அப்புறம்? அவ்வளவுதான். கதை முடிந்தது!"

"என்ன? முடிந்துவிட்டதா? இன்னும் பல கேள்விகளுக்கு விடைகிடைத்த பாடில்லை. இப்போதுதான் நிகழ்ச்சிகள் நன்றாக சூடு பிடித்திருக்கின்றன என்றல்லவா நினைத்துக் கொண்டேன்?"

"நான்கு நாழிகை நேரமாகக் குடிக்கப் பச்சைத் தண்ணீர் கூட இல்லாமல் நா வறளப் பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருக்கிறானே? இவனுக்குச் சூடாகப் பானகம் வைத்துத் தருவோம்.. சுக்கு நீர் காய்ச்சித் தருவோம்.. அட, பானையிலிருந்து சிறிதளவு நீராவது எடுத்துக்கொண்டு வந்து தருவோம் என்று உங்களில் எவருக்குமே தோன்றாதா?" என்று வினவினார் மழபாடியார்.

---

[82] பார்க்க – 'இராஜகேசரி' எனும் தலைப்பில் இந்நாவலாசிரியர் எழுதிய புதினத்தின் இறுதி அத்தியாயம்.

[83] இன்றைய குருவாடி. தஞ்சை மாவட்டம்.

வெட்கத்துடன் விருட்டென்று எழுந்த மதுரா "மன்னிக்க வேண்டும். இப்போதே எடுத்து வருகிறேன்" என்று கூறியபடி தோட்டத்திலிருந்து எழுந்து மழபாடியாரின் இல்லத்திற்குள் ஓட்டமாக ஓடிச் சென்றாள். ஒரு இளம் மான்போல் துள்ளியபடி அவள் உள்ளே சென்று மறைவதை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் மழபாடியார்.

"அம்பலவாணரே! வேண்டுமென்றுதான் மதுராவை உள்ளே அனுப்பினேன். இராஜாங்கம் சம்மந்தப்பட்ட விஷயங்களைப் பகிரங்கமாக எல்லோர் முன்னிலையிலும் பேசிக்கொண்டிருக்க முடியாது. உமது கேள்விகள் என்ன? விரைவாகக் கேளுங்கள்."

"தானைத்தலைவர் தானைத்தலைவர் என்று ஒருவர் முதலில் வந்தாரே? அவர் யார் என்பதை நீங்கள் கடைசி வரை தெரிவிக்கவில்லையே?" என்று தமது முதல் அஸ்திரத்தை வீசினார் அம்பலவாணர். அவரது குரல் ஏமாற்றத்தில் தோய்ந்திருந்தது.

"ஹூம்.." என்றொரு நீண்ட பெருமூச்சு மழபாடியாரிடமிருந்து வெளிப்பட்டது.

"காந்தளூர்ச் சம்பவங்களெல்லாம் நடந்து முடிந்த போது எனக்கே அது யார் எவர் என்பது தெரியாது. பின்னாளில் மிகவும் தற்செயலாகத்தான் அவரைப் பற்றிய உண்மையைக் கண்டறிந்தேன். அது சோழ இராஜகுடும்பம் நேரடியாகச் சம்மந்தப்பட்டுள்ள இரகசியம். அதனைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ளும் உரிமை எனக்கில்லை. அடுத்தமுறை பேரரசரைச் சந்திக்கும்போது தாங்களே அதனைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதுதான்!"

பேரரசரிடம் அவரது தனிப்பட்ட குடும்ப விவகாரங்களைப் பற்றிப் பேசுவது நாகரீகமாயிராது என்பதால் அம்பலவாணர் தானைத்தலைவர் விவகாரத்தை மேற்கொண்டு கிளறமாட்டார் என்றுதான் மழபாடியார் எண்ணினார். பாவம்! அவரது நண்பரின் அப்பாவி மனதை அவர் சரிவரப் புரிந்து வைத்திருக்கவில்லை. அடுத்த முறை அரசரை நேரில் சந்திக்கும்போது இதனை மறக்காமல் கேட்டுவிட வேண்டுமென்று அம்பலவாணருக்குள் உறுதி பிறந்தது.

"சரி. தானைத்தலைவர் யாரென்பதைக் கூறமுடியா விட்டாலும் குறைந்த பட்சம் ஐங்கரன் அந்த பைராகியைப் பின் தொடர்ந்து சென்று தெரிந்துகொண்ட அந்த பயங்கர இரகசியம் என்னவென்பதையாவது தாங்கள் கூறலாம் அல்லவா? கடைசிவரை அதனைத் தெரிவிக்கவேயில்லையே? தானைத்தலைவர் ஒரு.. என்ன ஒரு?

"சரி. போனால் போகிறதென்று இது ஒன்றுக்கு மட்டும் பதிலளிக்கிறேன். இதற்குமேல் இந்த விவகாரத்தைக் கிளறக் கூடாது. இதுபற்றி மேற்கொண்டு ஒரு கேள்விகூடக் கேட்கக் கூடாது. சரிதானா? இதற்குத் தாங்கள் உறுதியளிக்கும் பட்சத்தில்.."

அந்த அதிபயங்கர தானைத்தலைவரைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் போவதற்கு இந்த ஒரு தகவலையாவது தெரிந்து கொள்வோமே என்கிற எண்ணத்தில் அம்பலவாணர் குடுகுடுப்பைக்காரனைப்போல் தலையை ஆட்டினார்.

"ஐங்கரன் கண்டறிந்த இரகசியம் இதுதான். தானைத்தலைவர் ஒரு பெண்!"

"என்ன? தானைத்தலைவர் ஒரு பெண்ணா?" - அம்பலவாணரின் திறந்தவாய் மூடுவதற்குச் சில கணங்கள் பிடித்தன.

"அப்படியானால்...?"

"அதனைப்பற்றி மேற்கொண்டு ஒரு கேள்விகூடக் கேட்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். வேறு ஏதேனும் கேள்விகள் இருந்தால் கேளுங்கள்! மதுரா விரைவில் வந்துவிடலாம்.."

அம்பலவாணருக்கு அந்த விவகாரத்திலிருந்து தம்மை மீட்டுக்கொள்வது அத்தனை எளிதாக இல்லை. அது அத்தனை பெரிய இராஜாங்க இரகசியமென்றால் தானைத் தலைவரைப் பற்றிக் கதையில் குறிப்பிட்டிருக்கவே வேண்டாமே? எதற்காக ஆவலைத் தூண்டிவிட்டு மேற்கொண்டு விபரங்கள் கேட்டால் குடும்ப இரகசியம் அது இது என்று கூறி இழுத்தடித்து..

இருக்கட்டும், இருக்கட்டும். பேரரசரிடம் நேரிலேயே இது பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டு விடுகிறேன். இவர் சொல்லாவிட்டால் என்ன? அவர் நிச்சயம் நம்மிடம் அதனைத் தெரிவித்து விடுவார்.

"மேற்கொண்டு எந்தக் கேள்விகளும் இல்லையானால்..."

"அட, எங்கே செல்கிறீர்கள்? உட்காருங்கள். இன்னும் பல கேள்விகள் மிச்சமிருக்கின்றன. இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு காந்தளூர்ச் சாலையில் என்னதான் நடந்தது? தாங்கள் சாலையின் கலநாயகமாகச் சில காலமாவது அங்கே இருந்தீர்களா?"

"இல்லை. என்னிலும் தகுதியும் ஆற்றலும் வாய்ந்த வாமனன் நம்பூதிரியை அடுத்த கலநாயகமாகவும் ஆச்சாரியாராகவும் அறிவிக்கவேண்டுமென்று நான்கு சாலையாசான்களிடமும் விண்ணப்பம் வைத்தோம். பல வாதப் பிரதிவாதங்களுக்குப்பின் அது ஏற்கப்பட்டது. இன்று வரை வாமனர்தான் சாலையைத் திறம்பட நடத்திக்கொண்டு வருகிறார்."

"வலியசாலைக் குடும்பத்தாரிடமிருந்து சாலையை மீட்க வேண்டுமென்பதற்காகத்தானே அத்தனை முயற்சிகளும் செய்தீர்கள்? மீண்டும் வாமனரிடமே சாலையை ஒப்படைப்பதால் என்ன பயன்?"

மழபாடியார் ஒரு புன்னகையுடன் அம்பலவாணரின் தோள்களில் கரங்களைப் பதித்தார். "என்றைக்கு நரசிம்மப்பிரயோகம் அனைவரின் முன்னிலையிலும் வலிமையாக எதிர்கொள்ளப்பட்டதோ. என்றைக்கு வலியசாலைச் சட்டர்கள் கலமறுக்கும் போட்டிகளில் தோற்கடிக்கப்பட்டார்களோ அன்றைக்கே அவர்களின் ஆதிக்கம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. மேலும் அந்தக் குடும்பத்தில் பட்டதிரியைப் போன்ற ஒரு சிலர்தாம் தவறான மனோபாவத்தைக் கொண்டிருந்தார்களே தவிர அனைவரும் அவ்வாறு செயல்படவில்லை. குறிப்பாக வாமனன் நம்பூதிரி மிகவும் பக்குவப்பட்ட மனிதர். ஆகவேதான் காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியராக அவரை அமர்த்தினோம்."

"அச்சுதன் என்ன ஆனார்? மலையனூரானைப் பற்றி ஏதேனும் தகவல்கள் உண்டா?"

"காந்தளூர் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இருவருமே எங்கோ மாயமாய் மறைந்துவிட்டனர். மலைநாட்டு வைத்தியர்கள் அச்சுதனுக்கு சிகிச்சை செய்து அவனைப் பிழைக்க வைத்து விட்டதாகக் கேள்வி.." என்று கூறிய மழபாடியாரின் மனம்

சிந்தனையில் ஆழ்ந்தது. அம்பலவாணரின் தொடுத்த அடுத்த வினா அவரது காதுகளில் விழவேயில்லை.

"மழபாடியாரே! என்ன சிந்தனை? காந்தளூர் ஆச்சாரியார் திருநாராயண பட்டதிரிக்குக் கழிக்குடியில் வைத்தியம் செய்யப்பட்டதா? அவர் உயிர் பிழைத்தாரா? என்று கேட்கிறேன்.."

"தம்புராட்டியாரின் வைத்தியத்தில் பட்டதிரி உயிர் பிழைத்துவிட்டார். ஆனால் அவருக்குச் சுயநினைவு திரும்பவேயில்லை. பாவம்! தம்புராட்டியார்தான் கடைசி வரை அவரைச் சாலையில் வைத்துக் காப்பாற்றினார். சில காலங்களுக்கு முன் பட்டதிரி சிவபதம் அடைந்து விட்டதாகத் தகவல் கிடைத்தது. தம்புராட்டியாருக்குத் தற்போது பிராயம் அதிகமாகி விட்டதால் நடமாட்டங்கள் மிகவும் குறைந்து விட்டன. சாலையின் நிர்வாகத்தை மணியனாரிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக ஓய்வில் இருக்கிறாரென்று கேள்விப்பட்டேன். அவ்வப்போது கழிக்குடிக்குச் சென்று அவர்களிருவரையும் சந்தித்துவிட்டு வருவதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கிறேன்."

"இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு கம்பன் மணியனாரும் தாங்களும் என்ன செய்தீர்கள்?"

"இருவருமாகச் சேர்ந்து பல படையெடுப்புக்களை நடத்தி முடித்தோம். குறிப்பாக ஈழமண்டலப் போர்! இடையில் மாளிகைப்புரத்து வீட்டின் ஒரு முக்கியமான பொக்கிஷத்தையும் மீட்டெடுத்தோம். பின்னர் பாகி ராஜ்ஜியப் படையெடுப்பிற்கு நான் தலைமை வகித்துச் சென்றேன்."

"என்ன? மாளிகைப்புரத்து வீட்டின் பொக்கிஷத்தை மீட்டெடுத்தீர்களா? அந்த வரலாற்றை எப்போது கூறப் போகிறீர்கள்?"

"அது இதைவிடப் பெரிய கதை! வேறொரு சமயம் கூறுகிறேன். அம்பலவாணரே! மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பெருந்தரத்து அதிகாரிகள் சிலர் தங்களைக் காண்பதற்காக இங்கே வரப்போகிறார்கள் என்று சொல்லியிருந்தேன் அல்லவா? அவர்களைச் சந்திக்கத் தாங்கள் ஆயத்தமாக வேண்டாமா?"

"அதெல்லாம் ஒரு பிரச்சனையே அல்ல. நான் பார்த்துக் கொள்கிறேன். தாங்கள் கூறிய கதையில் வேறு சில

சந்தேகங்கள் மிச்சமிருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வையுங்கள்."

"விடமாட்டீர்கள் போலிருக்கிறதே? அதோ! மதுரா வந்து விட்டாள். சிக்கலான கேள்விகளாகக் கேட்காமல் எளிதான கேள்விகளைக் கேளுங்கள்."

மதுரா விறுவிறுவென்று நடந்து வந்து கையிலிருந்த பானகத்தை மழபாடியாருக்கும் அம்பலவாணருக்கும் கொடுத்தாள். நன்கு முற்றிய வெல்லத்தில் இஞ்சி ஏலக்காய் முதலான பொருட்கள் சேர்த்து உருவாக்கப்பட்டிருந்த அந்தப் பானகம் அவசர அவசரமாகத் தயாரிக்கப் பட்டிருந்தாலும் மதுராவின் கைப்பக்குவத்தினால் நன்றாகவே வந்திருந்தது. இருவரும் சொட்டு விடாமல் நக்கிச் சுவைத்துக் குடித்து முடித்தார்கள்.

"பானகம் அற்புதம்!" என்றபடி நாவைச் சப்புக் கொட்டிக் கொண்டார் அம்பலவாணர்.

"நான் உக்கிராண அறைக்குள் சென்றிருந்த வேளையில் ஏதேனும் முக்கியமான விஷயங்களைப் பகிர்ந்து கொண்டீர்களா? அதனை எனக்கும் கூறுவீர்களா?"

அடடா! இந்தப் பெண்கள் இருக்கிறார்களே.. அவர்கள் பார்வைக்குத்தான் பரமசாதுவாகத் தோற்றமளிப்பார்கள். ஆனால் அவர்களை ஒரு போதும் நம்பிவிடுவதற்கில்லை! என்று மழபாடியாருக்குத் தோன்றியது.

"பெரிதாக ஒன்றுமில்லை. நான் கூறிய வரலாற்றில் சில சந்தேகங்கள் அம்பலவாணருக்கு இருந்தன. அவற்றைத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தேன். மேலும் ஏதேனும் கேள்விகள் உண்டா அம்பலவாணரே?"

"ஒரு சந்தேகம். பரசுராமனின் சாபம் காரணமாக நரசிம்மாகர்ஷணத்தை தவறான வழிகளில் பிரயோகிப்பவர் சந்ததி மறைந்துவிடும் என்று கூறினீர்களல்லவா? பின் எப்படி ஆச்சாரியர் இரவிநீலிக்கும் திருநாராயண பட்டதிரிக்கும் குழந்தைகள் பிறந்தார்கள்?"

"இந்தக் கேள்வியை நீங்கள் பரசுராமனிடம் அல்லவா கேட்கவேண்டும்? என்னிடம் கேட்டால் எப்படி?" என்று கூறிச் சிரித்தார் மழபாடியார்.

"இப்படி யோசித்துப் பாருங்களேன்? நரசிம்மப் பிரயோகத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் ஒருவரின்

சந்ததி அழியும் என்பதுதான் பார்க்கவ இராமனின் சாபம். ஆச்சாரியார் நீலியின் மூன்று புதல்வர்களுக்கும் குழந்தைகளில்லை. அதே போல பட்டதிரியின் தம்பியர் இருவருக்கும்கூடக் குழந்தைகள் பிறக்கவில்லை. சொல்லப் போனால் வாமனர் திருமணமே செய்து கொள்ளவில்லை."

"அப்படியானால்.. கம்பன் மணியனாருக்கும் குழந்தைகள் பிறக்கவில்லையா?"

"பிறந்தன. இரண்டு பெண்குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவரது அன்னையாரான தம்புராட்டியார் குடும்பம் மாளிகைப்புரத்து வீட்டைச் சேர்ந்தது என்பதை மனதில் கொள்ளுங்கள். அது தாய்வழிச் சொத்துரிமை பெறும் குடும்பம். அங்கு பெண்களுக்குத்தான் முக்கியத்துவம் அதிகம். அதனால் மணியனாருக்குப் பிறந்த குழந்தைகள் மாளிகைப்புரத்து வீட்டு வாரிசுகளாகக் கருதப் பட்டனவேயொழிய வலியசாலைக் குடும்ப வாரிசுகளாகக் கருதப்படவில்லை. அதனால் அவர் சாபத்திலிருந்து தப்பித்தார் என்று கொள்ள வேண்டியதுதான்!"

"ம்ஹூம். புரியவில்லை. இருந்தாலும் பரவாயில்லை. சாலையின் சரஸ்வதி பண்டாரத்தைப் பின்னால் உங்களால் மீட்க முடிந்ததா? சாக்கியர் கொடுத்த தயிர்கடையும் மத்துப் போன்ற பொருள் என்ன?"

"பண்டாரத்தை மீட்டுவிட்டோம். பகவதியம்மன் திருக்கோயிலில் ஒரு இரகசியப் பாதாள அறையில் அவை பாதுகாக்கப்பட்டிருந்தன. அந்தத் தயிர் கடையும் மத்துப் போன்ற பொருள்தான் அந்த அறையின் சாவி! துரதிருஷ்ட வசமாக அறைக்குள். நீர்க்கசிவு இருந்ததால் பல ஓலைகள் பழுதடைந்துவிட்டன. இருப்பவற்றை மீட்டு சாலைக்குக் கொண்டு சென்றோம்."

"இந்தக் கதையின் ஆரம்ப கட்டத்தில் தோன்றிய அமண்குடியாரைப் பின்னர் காணவேயில்லையே? அவருக்கு என்ன ஆயிற்று?"

"அரசரும் அவரது அத்தனை பரிவாரங்களும் தெற்கே வந்துவிட்டதால் தஞ்சையைப் பாதுகாப்பது யார்? அமண்குடியாரை அந்தப் பொறுப்பில் விட்டுவிட்டார்கள். உங்களின் கேள்வி நேரம் முடிந்தது. ஸ்நானம் செய்து விட்டுப் புத்தாடை உடுத்திக்கொள்ளுங்கள்."

"அப்படி யார்தான் இந்தச் சிறிய கிராமத்திற்கு வரப்போகிறார்கள்?"

"பேரரசரே நேரில் வரப்போகிறார்! போதுமா? அவருக்கு இந்தப் பகுதிகளில் சில பணிகள் உள்ளன. அவற்றை முடித்துக்கொண்டு அப்படியே நமது இல்லத்திற்கும் வருவதாகச் சொல்லியிருக்கிறார்."

சோழப் பேரரசரே நேரில் வரப்போகிறார் என்பதைக் கேட்டதும் அம்பலவாணருக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது. அவசர அவசரமாக எழுந்து நின்றார் அவர்! "அடடா! இதனைத் தாங்கள் முன்பே சொல்லியிருக்கலாமே?"

"அவரது வருகை தங்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியாக இருக்கட்டுமே என்று நினைத்தது என் தவறுதான். உடனடியாக ஆயத்தமாகுங்கள்."

* * * * * * * *

அன்று மாலை அந்த சிறிய கிராமம் அல்லோல கல்லோலப்பட்டது. பேரரசரின் வருகை முன்னரே தெரிவிக்கப்படாததால் ஊர்ச்சபைத் தலைவரும் மூலப் பருதையாரும் திக்குமுக்காடிப்போனார்கள். ஊரெங்கிலும் தோரணங்கள் கட்டப்பட்டன. மேள தாளங்கள் முழங்கப்பட்டன. தளிப்பெண்டுகள் அவசர அவசரமாகத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு அரசரை வரவேற்க முன்வந்தார்கள்.

புரவியில் தமது சிறிய பரிவாரங்களுடன் வந்த பேரரசர் ஊர்த்தலைவரையும் மக்களையும் சுருக்கமாகச் சந்தித்துப் பேசிவிட்டு அவர்களின் மரியாதைகளை ஏற்றுக்கொண்டு நேராக மழபாடியார் இல்லத்திற்கு வந்துவிட்டார். அங்கு உடல்நிலை தேறியிருந்த அம்பலவாணரைக் கண்டதும் அவரது கண்கள் பெரிதாக மலர்ந்தன.

"என்ன அம்பலவாணரே! எப்படி இருக்கிறீர்கள்?"

"ஈசன் அருளினாலும் தங்கள் தயையினாலும் மழபாடியார் மற்றும் மதுராவின் அன்பினாலும் ஒரு குறைவுமில்லாமல் இருக்கிறேன் ஐயா!"

"மழபாடியார் என்கிற பெயரை எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேன்.. அது யார் மதுரா?"

"அது.. அவள்.. ஆருர் அறநெறியைச் சேர்ந்த தலைக்கோலி. எனது பால்ய ஸ்நேகிதி!"

மதுரா என்கிற மதுரவாசகி சற்றே முன்வந்து அவரை வணங்கினாள்.

"ம்.. நன்று நன்று. உள்ளே செல்வோம்."

மழபாடியாரின் இல்லத்தில் சிறிய விருந்து நல்லபடியாக அரங்கேறி முடிந்தது. பேரரசர் கிளம்பும் நேரம் வந்தது.

"உங்களிருவரிடமும் சற்று தனியாகப் பேச வேண்டும்."

"இதோ! இங்கிருக்கும் அறைக்கு வாருங்கள்."

அறையிலிருந்த ஆசனத்தில் பேரரசர் அமர்ந்து கொள்ள அருகில் மழபாடியாரும் அம்பலவாணரும் நின்று கொண்டார்கள்.

"நீங்களிருவரும் எப்போது தஞ்சைக்கு வரப் போகிறீர்கள்?"

"இன்னமும் ஒரு வாரத்தில் இவரது வைத்தியம் முடிந்து விடும். பத்து நாட்களில் அங்கிருப்போம்."

அருள்மொழிவர்மரின் முகம் சற்றே இறுக்கமடைந்தது. தமது இடைக்கச்சிலிருந்து சிறிய பொருளை எடுத்து முன் நீட்டினார். அதனைக் கண்டதும் மழபாடியாரின் முகமும் அம்பலவாணரின் முகமும் ஒரு சேர மாறின.

"இது என்னவென்பது ஞாபகத்தில் இருக்கிறதல்லவா?"

"இதனை எப்படி மறக்க இயலும்?"

"இது எங்கிருந்து வந்துள்ளதென்பதை ஆட்கொண்ட வில்லியார் கண்டறிந்து விட்டார். இது சேரதேசத்தில் அதுவும் மகோதயபுரத்திலிருக்கும் பெருமாளின் வில்லியர் கூடத்திலிருந்து வந்துள்ளது என்பதற்கு நம்மிடம் அசைக்க முடியாத ஆதாரங்கள் கிடைத்துள்ளன."

நண்பர்கள் பிரமிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"மழபாடியாரே! இன்னும் பத்து நாட்களில் தாங்களும் அம்பலவாணரும் நமது தூதுவர்களாக மகோதயபுரத்திற்குச் செல்கிறீர்கள். பெருமாளைச் சந்தித்து அவரது பிரத்யேக விற்கூடத்திலிருந்து தஞ்சைவரை இது எப்படிப் பயணப்பட்டது என்பதைக் கண்டறிகிறீர்கள். இதன் ஆணிவேர் எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு அதனை வேரறுக்கிறீர்கள். இது நமது ஆக்ஞை!"

பேரரசரின் முகம் மிகுந்த கடுகடுப்பைக் காட்டி நின்றது.

"உத்தரவு."

"பெருமாள் இதற்குச் சரிவரப் பதில் கொடுக்காத பட்சத்தில் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும்."

"புரிகிறது.."

"அம்பலவாணரே! அடுத்த பத்து நாட்களில் ஒரு தூதுவருக்குரிய அத்தனை இலட்சணங்களையும் இவரிடம் கற்றுக் கொள்ளுங்கள். சேரதேசம் பற்றியும் அதன் மரபுகள் பற்றியும் விரிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். இங்கிருந்து மகோதயபுரத்திற்குப் பகிரங்கமாகச் செல்வதா இரகசியப் பயணம் மேற்கொள்வதா என்பதை இருவருமாகச் சேர்ந்து முடிவு செய்து கொள்ளுங்கள். நான் கிளம்புகிறேன்."

"தாங்கள் இத்தனை தூரம் நேரில் வந்ததற்கு மிக்க நன்றி!"

"எமக்கு இப்பகுதியில் சில பணிகளிருந்தன. அவற்றை முடித்துக் கொண்டு இங்கு வந்தேன். நமக்காக உயிரையே தியாகம் செய்ய முன்வந்த வீரரல்லவா இவர்? அதற்குரிய மரியாதையை நான் செய்ய வேண்டாமா?"

பேரரசரின் கரங்கள் இயல்பாகத் தமது கழுத்திலிருந்த பெரிய முத்து மாலையைக் கழற்றின. அடுத்த கணம் அது அம்பலவாணரின் கழுத்தை அணி செய்தது.

"அம்பலவாணரே! தங்களின் வீரசாகஸத்தைப் பற்றி அன்றாடம் அரண்மனையில் பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. தஞ்சைக்கு வந்ததும் அனைவரின் முன்னிலையிலும் உமக்கு 'இராஜகேசரி மூவேந்த வேளார்' எனும் பட்டம் கொடுத்துச் சிறப்பிக்க எண்ணியிருக்கிறோம். அதனைத் தவிர எம்மால் செய்யக்கூடியது வேறு ஏதேனும் உண்டா? தயங்காமல் கேளுங்கள்!"

பேரரசரை அம்பலவாணர் நெருங்கி அவரது காதுகளில் ஏதோ புகன்றார். அவ்வளவுதான்! அடுத்த கணம் 'ஹா! ஹா!ஹா!' என்று பெரிதாக எழுந்த சிரிப்பு சப்தத்தில் அந்த அறையே குலுங்கிப் போனது.

"என்ன மழபாடியாரே! ஓய்வு நேரத்தில் இவருடன் ஏதேதோ பழங்கதைகளையெல்லாம் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது? காந்தளூர்ச் சாலை விவகாரத்தை அத்தனை தூரம் சொல்லிவிட்டுத் தானைத் தலைவரைப் பற்றிய செய்தியை மட்டும் மறைப்பானேன்? அதையும் சொல்லிவிட்டுப் போகிறது!

அம்பலவாணரே! இவரிடம் இது போன்று இன்னும் பல பழங்கதைகள் உள்ளன. அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஒன்றையும் விட்டுவிடாதீர்கள்! இருவரும் விரைவில் தஞ்சைக்கு வந்து சேருங்கள்..." என்று சிரித்தபடியே அங்கிருந்து கிளம்பினார் சோழப் பேரரசர்.

ஏராளமான பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டுத் தன்னை ஒரு பொருட்டாக மதித்து அத்தனை தூரம் நேரில் வந்து பார்த்துவிட்டுச் செல்லும் அந்த அதிசய மனிதரை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார் அம்பலவாணர்.

* * * * * * * *

சோழப் பேரரசரின் உத்தரவின் பேரில் அவரது தூதுவர்களாக மகோதயபுரத்திற்குச் செல்லும் மழபாடியாரும் அம்பலவாணரும் அங்கே எதிர்கொள்ளும் அனுபவங்களின் பின்னணியில் இராஜகேசரி புதின வரிசையின் அடுத்த வரலாற்றுப் புதினமான உதயபானு மலரும்.

நன்றி.
கதாசிரியர்.

பின்னிணைப்பு 1 - மூலபாடம்

निस्सीमं निखिलेश्वरः परशिवः रक्षेज्जगत्सर्वदा
रक्षेद्वारिधिमेखलां स्वदयितां श्रीवल्लभो मेदिनीम्।
पायाद्दक्षिणभूतलं श्रुतिमुखः योगीश्वरौकं सदा
दिश्यासुः सुरनायकाः कुवलये शक्रादयो मङ्गलम्।।

आस्ते लोके प्रथितविभवः केरळाख्यस्सुदेशः
पातः पूतः परशुबलतो जामदग्न्येन पूर्वम्।
रक्षेयुस्तं शिखरिलसितं सर्पमुख्याः वरेण्याः
पातालौकाः परिवृतिगणाः नागराजस्य दिव्याः।।

अस्ति केरळदेशस्य स्वर्णकुम्भायिता पुरी।
नाञ्चिल्लिति सुविख्याता समृद्धसस्यशोभिनी।।
तां रक्षेत्कन्यका देवी नित्यकन्या महेश्वरी।
या स्थिता वार्धिमालायाः मध्यभूषेव शङ्करी।।

राष्ट्रेऽस्मिन्निर्मिता शाला श्रीवल्लभकराम्बुजात्।
प्रत्नाचार्यसहायेन धनुर्वेदविचक्षणैः।।
तां महाशालिकां रक्षेत् गुहनाथः सदा भुवि।
धन्विलोकप्रतिष्ठात्रीं शिवामुखाब्जभास्करः।।

कौण्डिन्यगोत्रजो धईमान् कोट्टैत्तळिगृहाश्रितः।
मूळिक्कुळगुरोः पौत्रः श्रीकृष्णतनुजो महान्।।
तस्येयं बलरामस्य पुस्तिकाभ्यासकर्मणः।
श्रीवल्लभमहाशालागुरोः धन्विप्रजापतेः।।

श्रीगुहस्य कृपापुञ्जात् त्रिंशद्वत्सरकर्मणः।
धनुर्वेदसदाभ्यासार्पितात्मनो गुरोः प्रतिः।।
तामिमां द्रष्टुमर्हन्ति शालाचार्याः विचक्षणाः।
गूढतन्त्रजुषां विद्यां देवपूजां नतो यथा।।

अन्ये गृहणन्ति चेदेनां प्रार्पयन्तु जवात्पुनः।
श्रीवल्लभमहाशालाचार्येभ्यो हितकाङ्क्षिणः।।

अन्यथा ज्ञातुमिच्छन्तः गूढविद्यां विनार्हताम्।
लभन्ते दिव्यगोहत्यापापं वेणीत्रये नराः।।

अथ वक्ष्ये धनुर्वेदं दिव्यशास्त्रमनुत्तमम्।
आत्ममनश्शरीराणाम् ऐकाग्र्यदायकं परम्।।
कायाभ्यासयुतं चापि शास्त्रवन्मोक्षदायकम्।
चित्तशुद्धिप्रदानेन जनिमृत्युगदापहम्।।

कालेन गच्छता सोयं द्विधा भक्तो विचक्षणैः।
उत्तरा पद्धतिश्चेति दक्षिणापद्धतिस्तथा।।
तत्र पूर्वा प्रयोगेण शस्त्रमूला निरूपिता।
द्वितीया मर्मस्थानेषु प्रयोगेण विभज्यते।।

गुरूणां कृपया चाहं पद्धत्योरुभयोरपि।
अभ्यासंकरणाद्भूयः प्राप्तो दक्षिणतां पराम्।।
पूर्वस्याः पद्धतेः श्रेष्ठा द्वितीयेति मतं मम्।
मर्मस्थानरहस्येन गूढतत्त्वा विराजते।।

अथ नरसिंहप्रयोगो निरूप्यते।

प्रह्लादाय पुरा समस्तजगतां मायेच्छयोः सङ्ग्रहात्
प्रह्लादाय नताय चादितिसुताऽऽह्लादाय देवो हरिः।
भेत्तुं दैत्यपतिं हिरण्यकशिपुं स्तम्भोदरं भञ्जयन्
यश्चक्रे प्रविधिं नृसिंहकृतितो सोयं तथा कीर्त्यते।।

सोऽयं भार्गवरामेण त्रिविक्रमवराय च।
बोधितो हरिरूपेण प्रयोगो हितकाङ्क्षया।।
तेनापि धीमता सोऽयं स्वमाङ्गदाय भास्वते।
शुनदायापि शत्रुघ्ननामकेभ्यश्च बोधितः।।
तेऽपि शिष्यवरेण्याश्च स्वशिष्येभ्यः ददुर्मुदा।
प्राणापायादिकालेषु यत्नरक्ष्यं प्रयोगकम्।।
सन्त्यत्र नियमाः केचित् प्रयोगे गूढकर्मणि।
प्राणापायादिकालेषु प्रयोक्तव्यो मनीषिणा।।

एवं सन्ततिरक्षार्थं प्रयोज्यो शास्त्रज्ञानिना।

अन्यथा सन्ततिनाशाय कल्प्यते चेदमंहसे।।
तस्यानुपमयोगस्य निष्कृतिर्नेह विद्यते।
तथापि कश्चन योगोपि सन्दृष्टो हि महात्मना।।

பின்னிணைப்பு 2 - வரலாற்றுச் சான்றுகள்

இந் நெடும்புதினம் புனைவதற்கு ஆதாரமாகத் திகழ்ந்த பல முதல்நிலைச் சான்றுகளுள் சிலவற்றை இப்பகுதியில் வரிசைப்படுத்திக் கொடுத்துள்ளோம். இச்சான்றுகளுள் முக்கியமானவை சோழர்காலச் செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுக்கள். இரண்டாம் நிலைச் சான்றுகளாக இலக்கியங்கள், நாட்டுப்புறப்பாடல்கள் (குறிப்பாக வடக்கன் பாட்டுகள்), பக்தி இலக்கியங்கள் என்று பலவற்றையும் குறிப்பிட்டாக வேண்டும். இவற்றைத் தவிர தற்போது நடைமுறையில் இருக்கும் பல வழக்கங்களையும் மரபுகளையும் செவிவழிச் செய்திகளையும்கூட புதினத்தின் ஆக்கத்தில் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்.

* * * * * * * *

செப்பேடு ஆதாரங்கள்

இராஜேந்திர சோழரின் ஆறாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் பல வரிகள் இப்புதினத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. குறிப்பிட்ட செப்பேடு வரிகளின் சுருக்கப்பட்ட பொருள் மட்டும் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் - பாகம் 3. பகுதி 3. எண். 205)

வரி. 46 - "தேவர்களாலும் அசுரர்களாலும் வழிபடப்படும் தாமரை மலர்ப் பாதங்களைக் கொண்ட அன்னை நிசும்பசூதனியின் ஆலயத்தை தஞ்சாபுரி நகரில் விஜயாலயன் ஸ்தாபிதம் செய்தான்."

வரி. 54 - "பராந்தகனின் மகன் இராஜாதித்யன் கிருஷ்ண ராஜனைப் போரில் வெற்றி கொண்டு சொர்க்கம் புகுந்தான்."

வரி. 61 - "(இரண்டாம் பராந்தகனின்) மகனாகக் கரங்களில் ஆயுதங்களையும் உடல் தழுவி நிற்கும் திருவையும் பெற்ற முராரியைப் (விஷ்ணுவைப்) போன்று தோன்றிய அருள்மொழிவர்மன் கரங்களில் சங்கு சக்கர இரேகைகளுடன் தோன்றினான்."

வரி. 63 - "இந்த அரசன் பிறந்ததைக் கண்டு நாக கன்னியர் 'எங்கள் கணவரின் (அதாவது ஆதிசேஷனின்) பூவுலகைச் சுமக்கும் பொறுப்பை இனி இந்த மன்னன் ஏற்றுக் கொள்வான்' என்று கொண்டாடினர்."

வரி. 67 - " (இரண்டாம்) பராந்தகனுக்குப் பிறகு அவனது மகன் ஆதித்யன் உலகை ஆண்டான். அழகில் மன்மதனைத் தோற்கடிப்பவனான ஆதித்யன் பாண்டிய அரசனைப் போரில் கொன்றான்."

வரி. 68 - "தனது வெற்றியின் தூணான பாண்டியனின் தலையை தலைநகரில் கொண்டு வந்து வைத்த ஆதித்யன், விண்ணுலகைப் பார்க்கும் ஆசையினால் உலகிலிருந்து மறைந்தான்."

வரி. 69 - "**சூழ்ந்து நிற்கும் கலியை விரட்ட வேண்டி** (சோழ ராஜ பதவியை ஏற்கும்படி) குடிமக்கள் அனைவரும் வேண்டிக் கேட்டுக் கொண்டாலும் இராஜ நடத்தையின் ஒழுங்கை முற்றும் அறிந்தவனான அருள்மொழிவர்மன் தனது சிற்றப்பா அந்தப் பதவிக்கு ஆசைப்படும்வரை அதனைத் தான் மனதாலும் தீண்டுவதில்லை என்று முடிவு செய்தான்."

வரி. 72 - "**கலியினால் ஏற்பட்ட கறையைத் துடைப்பதற் காகவே போலும்** அருள்மொழிவர்மன் சோழ அரசனாக முடிசூட்டப்பட்டான்."

வரி. 76 - "வளப்பமும், கம்பீரமும் கல்வியும் வலிமையும் வீரமும் ஒருங்கே உருவெடுத்து வந்தாற்போன்ற இந்த அரசன் (அருள்மொழிவர்மன்) அனைத்து பகுதிகளையும் வெற்றி கொள்ளும் தன்னுடைய திக்விஜயத்தைத் திரிசங்கு திசையிலிருந்து (தெற்கிலிருந்து) துவக்கினான்."

வரி. 78 - " (பாண்டிய அரசனான) அமரபுஜங்கனே தோற்றுவிட்டதால் மற்ற அரசர்கள் கவலையடைந்து பாம்புகளைப் போல் பொந்து புதர்களில் தம்முடைய உடலைக் குறுக்கிக்கொள்ளத் தலைப்பட்டனர்."

வரி. 79 - "சூரிய குலத்தின் ஆபரணமான இந்த அரசனின் (அருள்மொழிவர்மனின்) தண்டநாயகன், கடலையே அகழியாகக் கொண்டதும் மிகப்பெரிய கொத்தளங்களை உடையதும் எதிரிகள் புகமுடியாததுமான விழிஞம் கோட்டையைக் கைப்பற்றினான்."



திருவாலங்காட்டுச் செப்பேடுகளை இணைக்கும் வளையத்தில் பொறிக்கப்பட்டுள்ள சோழ இராஜ் முத்திரை.

கல்வெட்டு ஆதாரங்கள்

1. ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையான **ஸ்ரீ இராஜராஜப் பெருஞ்சாலையைக்** குறிப்பிடும் இராஜாதிராஜ சோழரின் 30ம் ஆட்சியாண்டு கன்னியாகுமரி குஹநாதேஸ்வரம் திருக்கோயில் கல்வெட்டு. (கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், தமிழகத் தொல்லியல் துறை).

2. கன்னியாகுமரி குஹநாதேஸ்வரம் திருக்கோயில் **இராஜராஜேஸ்வரம்** எனும் பெயரால் அழைக்கப் பட்டதைப் பதிவு செய்யும் இராஜேந்திர சோழரின் 31ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. முதலாம் இராஜராஜரின் பெயரால் அழைக்கப்பட்ட மிகச்சில திருக்கோயில்களுள் குஹநாதேஸ்வரமும் ஒன்று (கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், தமிழகத் தொல்லியல் துறை).

3. கன்னியாகுமரி கன்னியாபடாரியார் திருக்கோயிலில் பராந்தக சோழர் இரணிய கர்ப்பம் கொடுத்ததைக் குறிப்பிடும் வீரராஜேந்திரரின் 7ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. இந்த நீண்ட கல்வெட்டில் சோழ வம்சத்தின் பற்பல மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் வருவதால் மிக முக்கியமான சரித்திர ஆவணமாகக் கருதப்படுகிறது. (எபிக்ராபிக்கா இண்டிகா - தொகுதி 18)

4. **கம்பன் மணியனான விக்கிரம சிங்க மூவேந்த வேளாரைக்** குறிப்பிடும் இராஜராஜரின் 16ம் ஆட்சியாண்டு திருச்சிராப்பள்ளி கல்வெட்டு. (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பாகம் 17 - எண். 442). வேறு சில கல்வெட்டுக்களிலும்கூட கம்பன் மணியன் குறிப்பிடப்படுகிறார். இராஜராஜரின் ஈழப் படையெடுப்பின்போது அதில் கலந்துகொண்ட படைத்தலைவர்களுள் கம்பன் மணியனும் ஒருவர் என்று சி. இளங்கோ தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

5. **குருகாடிக் கிழான் பரமன் மழபாடியாரான மும்முடிச் சோழர்கோனின்** பாகிநாடு மற்றும் சிட்புலி நாடு வெற்றியைக் குறிப்பிடும் இராஜராஜரின் 6ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. இதில் கச்சிப்பட்டு (காஞ்சிபுரம்) ஜஞ்சந்தி துர்க்கா பட்டாரகியார் கோயிலில் தமது பெயரில் பத்து விளக்குகள் எரிக்கப்பட இராஜராஜர் நிவந்தம் கொடுத்துள்ளார். இந்த நிவந்தத்திற்காக வெற்றி பெற்ற பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட 900 ஆடுகளும் தானமாக வழங்கப்பட்டுள்ளன. அரசரின் ஆணைப்படி இந்த நிவந்தத்தை நிறைவேற்றியவர் அமைச்சர் கோன் வீதிவிடங்கனான வில்லவன் மூவேந்த வேளார் (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பாகம் 13 - எண். 149)

6. ஆதித்த சோழர் காலத்தில் ஸ்தாணு இரவிக்கும் அவருக்கும் ஏற்பட்ட அரசியல் உறவைக் குறிப்பிடும் திருநெய்த்தானம் கல்வெட்டு. இதில் இரண்டு பெருவேந்தர்களுமாகச் சேர்ந்து கங்கநாட்டைச் சேர்ந்த

விக்கியண்ணன் என்பவருக்குச் செம்பியன் தமிழ்வேள் எனும் பட்டமளித்துப் பலவித உரிமைகளும் கொடுத்துச் சிறப்பித்த செய்தி காணக் கிடைக்கிறது. ஆதித்த சோழர் காலத்தில் மலர்ந்த சேர சோழ உறவை உறுதிப்படுத்தும் மிக முக்கிய ஆதாரங்களுள் இதுவும் ஒன்று. (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பாகம் 3 - எண். 89)

7. இராஜாதித்தேஸ்வரம் திருக்கோயில் எழுப்பப் பட்டதைக் குறிப்பிடும் திருநாவலூர்க் கல்வெட்டு. இதில் இராஜாதித்தரின் தாயாகச் சேர இளவரசியார் கோக்கிழானடிகள் குறிப்பிடப்படுகிறார். (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பாகம் 7 - எண். 954-1010)

8. சோழர் காலத்தில் ஐப்பிசை (ஐப்பசி) மாதத்தில் அஸ்வினி நட்சத்திரத்தில் சாக்கைக் கூத்து நடைபெற்றதைக் குறிப்பிடும் கீழப்பழுவூர்க் கல்வெட்டு. (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் பாகம் 19 - எண். 171)

9. ஆதித்தரைக் கொலை செய்த துரோகிகளாக சோமன்..., இரவிதாஸன் பஞ்சவன் பிரம்மாதிராஜன், அவன் தம்பி பரமேஸ்வரனான இருமுடிச்சோழ பிரம்மாதிராஜன், அவன் தம்பி மலையனூரன் ஆகிய நால்வரையும் அடையாளப்படுத்தும் உடையார்குடி திருவனந்தீசுவரம் திருக்கோயில் கல்வெட்டு. முதலாம் இராஜராஜரின் இரண்டாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட இக்கல்வெட்டு ஒரு நில விற்பனை ஆவணமாகும். இதில் அரசரின் நேரடி ஆணை (ஸ்ரீமுகம்) மேற்கோளாகக் காட்டப்படுகிறது (எபிக்ராபிக்கா இண்டிகா - தொகுதி 21, எண். 27)

10. 'தண்டேவிச் சாலை கலமறுத்து அங்குள்ள மலை ஆளர் தலையறுத்து' என்று துவங்கும் முதலாம் இராஜராஜரின் புதிய மெய்க்கீர்த்தியுடன் வெட்டப்பட்டுள்ள செங்கம் நடுகல் கல்வெட்டு. இந்தக் கல்வெட்டின் முக்கியத்துவம் கருதி இதன் முழுப்பாடத்தையும் கொடுத்துள்ளோம்.

முதலாம் இராஜராஜரின் மெய்க்கீர்த்திகள்

முதலாம் இராஜராஜரின் மெய்க்கீர்த்திகள் மூன்று வகையாகக் காணப்படுகின்றன. இவை அகவற்பாவினால் அமைந்தவை. இவற்றுள் திருமகள் போல என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியே எட்டாம் ஆட்சியாண்டிலிருந்து பெருமளவு பயன்படுத்தப்பட்டது.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனங்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
தடிகைப் பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களரீழமண்டலமும்
இரட்டை பாடி எழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில் வளர் ஊழியுளெல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோ ராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராச ராச தேவர்...

செங்கம் கல்வெட்டு

செங்கம் ஏரிக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மெய்க்கீர்த்தி வடிவம் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது (கல்வெட்டுப் பாடம் முனைவர் சி. இளங்கோ அளித்துள்ளபடி).

1. ஸ்வஸ்திஸ்ரீ தண்டேவிச்
2. சாலையய் கலமறுத்து அங்குள்ள
3. மலைஆளர் தலை அறுத்து தக்க பா
4. டியய் தளமுக்காடும் தண்டார் துள

5. ம்ப பாடியொடும் மிக்க கங்கவ
6. ள நாடும் வேங்கைளிணி நாடு
7. ம் அது கொண்ட நித்தல
8. மு கோகன்(னா) கியனிருவ்வ
9. ன் அருமொழி தேவர்க் கொ
10. த்த பலத்தார் மும்முடிச்
11. சோழர்க்கு யிராஜ யிராஜ
12. கேசரி வர்மர்க்கு யாண்டு 14

இக்கல்வெட்டு கலமறுத்த சம்பவத்தையும் தலையறுத்த சம்பவத்தையும் தனித்தனியே பிரித்துக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. செங்கம் நடுகல்லைத் தவிர வேறு எங்குமே இந்த மெய்க்கீர்த்தி காணப்படாதது மிகவும் சிந்திக்கத்தக்கதாக இருக்கிறது. அதாவது மலையாளர் தலையறுத்த செய்தியை மன்னர் தமது மெய்க்கீர்த்தியில் பரவலாகப் பயன்படுத்த விரும்பவில்லை. காந்தளூரின் கலமறுத்த செய்தியை மட்டுமே அவர் குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதியுள்ளார் என்று பொருள் கொள்ள இது இடமளிக்கிறது.


'தண்டு ஏவி' என்றால் படைகளை ஏவி என்று பொருள். தமது படை வீரர்களை ஏவித்தான் அவர் காந்தளூர்ச் சாலையை கலமறுத்துள்ளார் என்பதும் இதனால் தெளிவாகும். 'வேலை அழித்ததும் சாலை கொண்டதும் தண்டுகொண்டல்லவோ?' என்கிறது கலிங்கத்துப்பரணி.



செங்கம் ஏரிக்கரை நடுகல். இதன் பின்புறம்தான் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இராஜராஜரின் மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. (நன்றி திரு. சி. இளங்கோ – புதிய பனுவல்)



உடையார்குடி திருவனந்தீசுவரம் திருக்கோயில் விமானத்தின் மேற்குப்புறச்சுவர்.



மேற்குச்சுவரின் வலப்புறம் காணப்படும் இரவிதாசன் கல்வெட்டு.

உடையார்குடிக் கல்வெட்டு

உடையார்குடி அனந்தீசுவரம் திருக்கோயில் விமானத்தின் தாங்குதளத்தில் மேற்குப்புறத்தில் வெட்டப் பட்டிருக்கும் கல்வெட்டின் பாடம். (நன்றி - முனைவர். குடவாயில் பாலசுப்பிரமணியன்)

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ராஜகேசரிவர்மர்க்கு யாண்டு 2 ஆவது வடகரை பிரமதேயம் ஸ்ரீவீரநாராயண சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம் பாண்டியனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று துரோகிகளான சோமன்..... தம்பி ரவிதாசனான பஞ்சவன் பிரம்மாதிராஜனும் இவன்றம்பி பரமேஸ்வரன் ஆன இருமுடிச் சோழ பிரம்மாதிராஜனும் இவர்கள் உடப்பிறந்த மலையனூரானும் இவர்கள் தம்பிமாரும் இவர்கள் மக்களிடும் இவர் பிரமாணிமார் பெற்றாளும் இ.....ராமத்தம் பேரப்பன் மாரிடும் இவர்கள் மக்களிடம் இவர்களுக்குப் பிள்ளை குடுத்த மாமன்மாரிடும் தாயோடுடப் பிறந்த மாமன் மாமன்மாரிடும் இவர்கள் உடபிறந்த பெண்களை வேட்டாரினவும் இவர்கள் மக்களை வேட்டாரினவும் ஆக இவ்வனைவர் (முடமை)யும் நம் ஆணைக்குரியவாறு கொட்டயூர் பிரம்ம ஸ்ரீராஜனும் புள்ளமங்கலத்து சந்திரசேகர பட்டனையும் பெறத்தந்தோம். தாங்களும் இவர்கள் கண்காணியோடும் இவர்கள் சொன்னவாறு நம் ஆணைக்குரியவாறு குடியோடு குடிபெறும் விலைக்கு விற்றுத்தலத்திடுக இவை குருகாடிக்கிழான் எழுத்து என்று இப்பரிசுவரஇ ஸ்ரீமுகத்தின் மேற்பட்ட மலையனூரான் ஆன பாப்பனச்சேரி ரேவதாச கிரமவித்தனும் இவன் மகனும் இவன்றாய் பெரிய நங்கைச்சாணியும் இம்மூவரிதும் ஆன நிலம் ஸ்ரீ வீரநாராயன சதுர்வேதி மங்கலத்து மிப்பிடாகை தேவமங்கலம் ஆன பட்டில நிலம் ஸ்ரீவீரநாராயண சதுர்வேதி மங்கலத்து சபையார் பக்கல் வெண்ணையூர் நாட்டு வெண்ணையூருடையான் நக்கன் அரவணையானான பல்லவ முத்தரைய மகன் பரதனான வியாழகஜமல்லப் பல்லவரையனேன் இந்நிலம் பழம்படி இரண்டே முக்காலே ஒருமாவும் அகமனை ஆறும் ஆக இந்நிலமும் இம்மனையும் நூற்றொருபத்திருகழஞ்சு பொன் குடுத்து விலைகொண் டிவ்வூர் திருவனந்தீஸ்வரத்து பட்டாரகர் கோயிலிலே இவ்வாட்டை மேஷநாயற்று நாயற்றுக்கிழமை பெற்ற

புரட்டாசி ஞான்று சந்திராதித்தவர் ஆழ்வார் கோயில் முன்பு மூவாயிரத்தரு நூற்றுவனான நிலையம்பலத்து தண்ணீர் அட்டும் பிராமணன் ஒருவனுக்கு நிசதம் படி நாழி நெல்லும் ஆட்டைவட்டம் ஒரு காகம் நிசதம் பதினைவர் பிராமணர் உண்பதற்கு ஆக பதினாறு இவறுள் ஐவர் சிவயோகிகள் உண்ணவும் வைத்தேன் அரையன் பரதன் ஆன வியாழகஜமல்ல பல்லவரையனேன் இதர்மம் ரஷிகின்ற மகாசபையார் ஸ்ரீபாதங்கள் என் தலை மேலன"

ஆய்வாளர் ஆ. பத்மாவதியின் கருத்து

தமிழகத் தொல்லியல் துறையில் ஆய்வாளராக இருந்து ஓய்வுபெற்ற முனைவர் ஆ. பத்மாவதி முதலாம் காந்தளூர்ச் சாலை படையெடுப்பைக் குறித்து வெளியிட்டுள்ள சில செய்திகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றை முனைவர் இளங்கோ தமது கட்டுரையில் மேற்கோள் காட்டியுள்ளார்.

'தமது முன்னோர்கள் பலமுறை சேர நாட்டையும் பாண்டிய நாட்டையும் வென்றும் அரசாள முடியாமற் போனதற்குக் காரணம் இந்தச் சாலையின் வலிமைதான். தம் தந்தையின் காலத்தில் தம் தமையன் இறப்பிற்கும் அவர்கள் நினைத்தபடி ஒரு அரசனைச் சோழ அரியணையில் அமர்த்தியதும் இந்தச் சாலையும் சாலைகளில் கற்று அதன்படி நடந்த உயர் அதிகாரிகளும்தான் என்பதால் காந்தளூர்ச் சாலையை வென்று அங்கு பயிற்சி பெற்ற அந்தண அதிகாரிகளையும் பிரம்மதேயங்களையும் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்து பேரரசனாக உயர்ந்தான் இராசராசன்.' - ஆ. பத்மாவதி, சோழர்காலச் சமயம், 2003 - பக். 16-17.

மேற்கோள் நூல்கள்

தமிழ் நூல்கள்

- பாண்டியர் செப்பேடுகள் பத்து - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1999.
- ஆர். பத்மாவதி: சோழர்காலச் சமயம், 2003.
- சி. இளங்கோ: காணக்கிடந்த கல்லும் கண்டுபிடிக்கப் படாத செய்தியும் (கட்டுரை), புதிய பனுவல், தொகுதி 02. எண் 01, 2010.
- நடன. காசிநாதன்: காந்தளூர்ச் சாலை(கட்டுரை), அருள்மொழி (ஆய்வுத் தொகுதி).
- குடவாயில் பாலசுப்பிரமணியன் : உடையார்குடிக் கல்வெட்டு - ஒரு மீள்பார்வை (கட்டுரை) (http://www.varalaaru.com/Default.asp?groupno=9)

ஆங்கில நூல்கள்

- K.A.Nilakanda Sastri: The Cholas, Madras University, Chennai.
- MGS Narayanan: Aspects of Aryanisation in Kerala, Trivandrum, 1973.
- MGS Narayanan: Historical Studies in Kerala, Dept of History, University of Calicut, 1976.
- T.A.Gopinatha Rao: Travancore Archaeological Series (Vol II)
- Phillip B. Zarrilli: When Body becomes all Eyes, Oxford University Press, 2001.
- South Indian Inscriptions - Volume II, Volume III

படித்து விட்டீர்களா?



இராஜகேசரி

சோழப் பேரரசர் முதலாம் இராஜராஜருக்கு எதிராகக் தீட்டப்படும் பயங்கர அரசியல் சதியில் ஓய்வு பெற்றுவிட்ட முன்னாள் படைவீரர் அம்பல வாணரும் படைத்தளபதி பரமன் மழபாடியாரும் தலையிட்டு கண்ணுக்குத் தெரியாத எதிரிகளுடன் முட்டி மோதும் மறக்க முடியாத சரித்திரப் புதினம். பலரது பாராட்டையும் பெற்ற கதாசிரியரின் முதல் சரித்திரப் புதினம். 360 பக்கங்கள். பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.



பைசாசம்

அமைதியான பாண்டிநாட்டுக் கிராமமொன்றில் கிளம்பும் பிசாசு விவகாரம் அந்தக் கிராமத்தை ஆட்டிப் படைப்பதையும் அந்தப் பேயைய் பற்றிய உண்மைகளைக் கண்டறிய முடியும் பாடிக்காவலன் திருவரங்கன் சந்திக்கும் மயிர்கூச்செறியும் அனுபவங்களையும் சுற்றிப் பின்னப்பட்ட சரித்திரத் திகில் கதை. 380 பக்கங்கள். பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.



மதுரகவி

தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் படியெடுக்கப் பட்டிருக்கும் பல்வேறு கல்வெட்டுக்களின் பின்னணியில் முத்தான பதிமூன்று சிறுகதைகள். கல்வெட்டுக்கள் நிரந்தரப்படுத்தியிருக்கும் நிஜ மனிதர்கள் உயிர் பெற்று உடல் பெற்று வாசகர்களுடன் உரையாடும் விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு. 250 பக்கங்கள். பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.



சேரர் கோட்டை (2 பாகங்கள்)

முதலாம் இராஜராஜரின் முதற்போரான சேரநாட்டுக் காந்தளூர்ச் சாலை கலமறுத்த சம்பவத்தின் பின்னணியில் ஒரு வித்தியாசமான விறுவிறுப்பான சரித்திரப் புதினம். கேரளத்தின் பண்டைய களரிக்கலையையும் பண்பாட்டையும் வலியுறுத்திப் பல நுண்ணிய தகவல்களுடன் உருவாக்கப்பட்ட ஒரு பெரும் படைப்பு. 1150 பக்கங்களை உள்ளடக்கிய இரண்டு பாகங்கள். கமலம் புக்ஸ் வெளியீடு.

அனைத்து புத்தகங்களையும் பெற - http://www.gokulseshadri.in

கி.பி. 988...

சோழப் பெருவேந்தராக முதலாம் இராஜராஜ சோழர் முடிசூடி மூன்றாண்டுகளே முடிவடைந்துள்ள நிலை. அதற்குள் சில அரசியல் சக்திகள் அணிதிரண்டு அவரை எதிர்க்க ஆயத்தமாகி வருகின்றன.

அந்தச் சக்திகளின் ஆணிவேர்.. காந்தளூர்ச்சாலை எனும் கல்வி நிறுவனம். சாத்திரங்கள் நுண்கலைகள் தவிரத் தற்காப்புப் பயிற்சி முறைகளையும் பயிற்றுவித்த பண்டைய பல்கலைக்கழகம்.

சோழநாட்டு வேந்தருக்கும் சேரநாட்டில் எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ள காந்தளூருக்கும் என்ன தொடர்பு? சாலையின் ஆச்சாரியாருக்கு இராஜராஜர் மேல் அப்படியென்ன பகை? இந்த இருவரின் விரோதத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் அரசியல் சக்திகள் யார் யார்?

எண்ணற்ற கேள்விகளை எழுப்பும் சரித்திரக் களத்தின் வழி நம்மைக் கைப்பிடித்து ஒரு வசீகர உலகிற்குள் அழைத்துச் செல்கிறார் கதாசிரியர். சோழர்கள், பாண்டியர்கள், வேளிர், சேரமான்கள், கேரளத்து நாடுவாழிகள் என்று அந்நாளைய அரசியல் சக்திகள் அனைவரும் முட்டி மோதும் இந்த விறுவிறுப்பான புதினத்தில் இதுவரை கண்டிராத வகையில் சேரதேசத்தின் பண்டைய களரிக் கலையும் பண்பாட்டுக் கூறுகளும் பாங்குற வெளிப்படுகின்றன.

பல்வேறு சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்கள் இப்படைப்பை வேறொரு தளத்தில் நிறுத்துகின்றன. இளமை துள்ளும் நடையில் கற்பனைச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ள இப்புதினம் தமிழுலகம் தவறவிட்டுவிட முடியாத தரமான ஆக்கம்.



கோகுல் சேஷாத்ரி [http://www,gokulseshadri.in]

பொறியியல் மற்றும் மேலாண்மையில் பட்டம் பெற்றுக் கணினி மென்பொருள் துறையில் பணியாற்றி வரும் இந்த இளைஞர், வரலாற்றில் ஆர்வம் கொண்டு முதுகலை மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பை முடித்துள்ளவர். இரண்டு வரலாற்றுப் புதினங்கள் (இராஜகேசரி, பைசாசம்), ஒரு பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு (மதுரகவி), எண்ணற்ற கட்டுரைகள் என்று பரந்து விரியும் இவரது படைப்புலகம் பரவலானதோர் வாசிப்புத் தளத்தை உருவாக்கித் தந்துள்ளது.

கி.பி. 988...

சோழப் பெருவேந்தராக முதலாம் இராஜராஜ சோழர் முடிசூடி மூன்றாண்டுகளே முடிவடைந்துள்ள நிலை. அதற்குள் சில அரசியல் சக்திகள் அணிதிரண்டு அவரை எதிர்க்க ஆயத்தமாகி வருகின்றன.

அந்தச் சக்திகளின் ஆணிவேர்.. காந்தளூர்ச்சாலை எனும் கல்வி நிறுவனம். சாத்திரங்கள் நுண்கலைகள் தவிரத் தற்காப்புப் பயிற்சி முறைகளையும் பயிற்றுவித்த பண்டைய பல்கலைக்கழகம்.

சோழநாட்டு வேந்தருக்கும் சேரநாட்டில் எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ள காந்தளூருக்கும் என்ன தொடர்பு? சாலையின் ஆச்சாரியாருக்கு இராஜராஜர் மேல் அப்படியென்ன பகை? இந்த இருவரின் விரோதத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் அரசியல் சக்திகள் யார் யார்?

எண்ணற்ற கேள்விகளை எழுப்பும் சரித்திரக் களத்தின் வழி நம்மைக் கைப்பிடித்து ஒரு வசீகர உலகிற்குள் அழைத்துச் செல்கிறார் கதாசிரியர். சோழர்கள், பாண்டியர்கள், வேளிர், சேரமான்கள், கேரளத்து நாடுவாழிகள் என்று அந்நாளைய அரசியல் சக்திகள் அனைவரும் முட்டி மோதும் இந்த விறுவிறுப்பான புதினத்தில் இதுவரை கண்டிராத வகையில் சேரதேசத்தின் பண்டைய களரிக் கலையும் பண்பாட்டுக் கூறுகளும் பாங்குற வெளிப்படுகின்றன.

பல்வேறு சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்கள் இப்படைப்பை வேறொரு தளத்தில் நிறுத்துகின்றன. இளமை துள்ளும் நடையில் கற்பனைச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ள இப்புதினம் தமிழுலகம் தவறவிட்டுவிட முடியாத தரமான ஆக்கம்.



கோகுல் சேஷாத்ரி [http://www.gokulseshadri.in]

பொறியியல் மற்றும் மேலாண்மையில் பட்டம் பெற்றுக் கணினி மென்பொருள் துறையில் பணியாற்றி வரும் இந்த இளைஞர், வரலாற்றில் ஆர்வம் கொண்டு முதுகலை மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பை முடித்துள்ளவர். இரண்டு வரலாற்றுப் புதினங்கள் (இராஜகேசரி, பைசாசம்), ஒரு பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு (மதுரகவி), எண்ணற்ற கட்டுரைகள் என்று பரந்து விரியும் இவரது படைப்புலகம் பரவலானதோர் வாசிப்புத் தளத்தை உருவாக்கித் தந்துள்ளது.

சேர் கோட்டை

பாகம்-2

கோகுல் சேஷாத்ரி